

ஹோ கான்-சி

# நவ சீனப் புரட்சியின் வரலாறு



நிங்சியா
சுய்யான்
காண்சு
மஞ்சள் நதி
சின்னிங்
சிங்காய்
ஹூன்னிங்
லான்ச்சோ
லியுப்பான் மலை
வூசிசென்
ஏனான்
யாங்சு (தையுவான்)
ஷான்சி
பீகிங்
டீன்சின்
ஹோப்பேய்
சின்னான்
ஷான்டுங்
மஞ்சள் நதி
கைஃபெங்
கியாங்சு
சியான்
ஷென்சி
லாசேகாவ்
மின்ஷான் மலை
Grasslands
மாவோயெர்க்காய்
காண்டுஜ
மாபெரும் பனிமலை
மாவோகுங்
செங்டு
ஹோனான்
அன்வெய்
நான்கிங்
ஷாங்காய்
ஹூப்பே
யாங்ட்சி நதி
ஹாங்கோ
ஊயின்யிங்
ஹாங்சோ
வூச்சாங்
சிகியாங்
சிகாங்
லூடிங்
செச்சுவான்
அன்சுன்சங்
நதி
சாங்ஷா
நான்சாங்
கியாங்சி
சுன்யீ
சின்ஷா நதி
வூக்கியாங்
நதி
ஹூன்னான்
சிங்காங் மலை
ஃபூச்சோ
பூக்கியன்
குவையாங்
குவைச்சோ
ஜூசின்
தைப்பே
குன்மிங்
யுன்னான்
குவாங்சி
குவாங்டுங்
தைவான்
பீரல் நதி
யாங்னிங்
காண்டன்
ஹைனான் தீவு
1934-ல் செஞ்சேனையின் புரட்சித் தளங்கள்
மத்திய செஞ்சேனையின் பாதை
இதர செஞ்சேனைப் பிரிவுகளின் பாதை
0 200 400 Km


# நீண்ட பயணப் பாதை

உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!

NORWAY
SIGNATURE
EELAN BOOKS

# நவ சீனப் புரட்சியின் வரலாறு

NAVA SEENA PURATCYIEN VARALARU
by HO KAN - CHIH

★

முதற் பதிப்பு
ஜூலை, 1985.

★

தமிழாக்கம்
அமரர் சு. பாலவிநாயகம்.

★

மேலுறை ஓவியம்
எஸ். ஜெய்குமார்.

★

அச்சாக்கம்
வெற்றி அச்சகம்,
91, டாக்டர் பெசன்ட் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

★

மேலட்டை அச்சாக்கம்
சிண்டிகேட் பிரிண்டர்ஸ்,
50, எலீஸ் சாலை,
சென்னை - 600 002.

★

பைண்டிங்
கிருஷ்ணா பைண்டிங் ஒர்க்ஸ்,
48, பந்தர் தெரு,
சென்னை - 600 001.

★

விலை
சாதாரணப் பதிப்பு : ரூ. 70 - 00
சிறப்புப் பதிப்பு : ரூ. 80 - 00

# நவ சீனப் புரட்சியின் வரலாறு

**(1919 — 1956)**

ஹோ கான் -சீ

SIGNATURE
NORWAY

**சென்னை புக்ஸ்**

*6, மேட்லி சாலை,*

*தி. நகர் சென்னை - 17.*

## பதிப்பாளர் குறிப்பு

"நவ சீனப் புரட்சியின் வரலாறு" எனும் இந்நூல் ஹோ கான்-சி என்பவரால் சீன மொழியில் எழுதப் பட்டது; பீகிங் பல்கலைக் கழக மேலை நாட்டு மொழிகள் துறையின் ஆங்கிலப் பிரிவினால் ஆங்கில மொழியாக்கம் செய்யப்பட்டது; 1959இல், பீகிங்கில் உள்ள அயல் மொழிகள் அச்சகத்தினால் ஆங்கில மொழியில் வெளியிடப்பட்டது; இந்த ஆங்கிலப் பதிப்பின் தமிழ் மொழியாக்கமே இந்நூல்.

## உள்ளடக்கம்


அத்தியாயம் ஒன்று 1

மே 4 - ஆம் தேதி இயக்கமும் சீனாவில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் உதயமும். (மே 1919—ஜூன் 1921)

1. அந்நிய முதலாளித்துவம் சீனாவில் ஊடுருவல். நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலிருந்து, சீனா ஒரு அரைக் காலனி மற்றும் அரை நிலப்பிரபுத்துவ சமுதாயமாக மாறுதலடைதல். பழைய வகைப்பட்ட ஜனநாயகப் புரட்சியும், அதன் தோல்வியும். 1
2. சீன இயந்திரத்தொழில் முதலாளித்துவத்தின் உதயமும் முதல் உலகயுத்த காலத்தில் அதன் கூடுதல் வளர்ச்சியும். சீன இயந்திரத்தொழில் பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சி. சீனத் தொழிலாளி வார்க்கத்தின் குணாம்சங்கள். ஆரம்ப காலத் தொழிலாளி வர்க்க இயக்கம். 10
3. சீனப்புரட்சியின் மீது அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியின் செல்வாக்கு. 20
4. தேசபக்த மே 4 ஆம் தேதி இயக்கம். ஜூன் 3 ஆம் தேதி இயக்கமும் போராட்டத்தில் சீனத் தொழிலாளிவர்க்கம் பங்கெடுத்தலும். புதிய கலாச்சார இயக்கமும் அதனுடைய அபிவிருத்தியும். சீனாவில் மார்க்சிய-லெனினியம் பரவுதல். 23
5. சீனத் தொலாளி வர்க்க இயக்கம் மார்க்சிய-லெனினியத்தோடு ஒருங்கிணைதல். தோழர் மாசே-துங்கின் ஆரம்ப கால புரட்சி நடவடிக்கைகள். 33

அத்தியாயம் இரண்டு 42

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்படுதல் சீனத் தொழிலாளி வர்க்கத்தின் வளர்ச்சி. (ஜூலை 1921—டிசம்பர் 1923).

1. 1921-க்கும் 1923-க்கும் இடையே சர்வதேச நிலைமை. வாஷிங்டன் மாநாடும் சீனாவைப் பங்கிடுவதைப் பற்றிய ஏகாதிபத்திய நாடுகளின் உடன்பாடும். 42
2. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் தேசிய மாநாட்டில், கட்சியின் ஸ்தாபன கோட்பாடுகள் அங்கீகரிக்கப்படுதல். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது தேசிய மாநாட்டில், கட்சியின் திட்டத்தையும் மற்றும் வழி 45

காட்டும் பாதையையும் நிர்ணயம் செய்தல்.
3. சீனத் தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சி. ஹூஅன் னானின் தொழிலாளி வர்க்க இயக்கம். பீகிங்-ஹாங் காங் ரயில்வே தொழிலாளிகளின் பெரிய அரசியல் வேலை நிறுத்தம். 56
4. ஒரு ஐக்கிய முன்னணியை அமைப்பதற்கான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அடிப்படையானப் போர்த் தந்திரக் கோட்பாடுகள். 71
சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் ஆரம்பக்காலம் பற்றிய சுருக்கமானத் தொகுப்புரை. 77

அத்தியாயம் மூன்று 80

புரட்சிகரமான ஐக்கிய முன்னணி அமைக்கப்படுதல். புரட்சி இயக்கத்தின் எழுச்சி. (ஜனவரி 1924—ஜூலை 1926)
1. 1924லிருந்து 1927 முடிய நிலவிய சர்வ தேசிய மற்றும் தேசிய நிலைமை. 80
2. கோமிங்டாங் கட்சியின் முதல் தேசியக் காங்கிரஸ். தொழிலாளி வர்க்க இயக்கமும் விவசாய இயக்கமும் புத்துயிர் பெறுதல். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 4-ஆவது தேசியக் காங்கிரஸ். தேசிய சட்டப் பேரவையைக் கூட்டுவதற்கான இயக்கம். 86
3. சீனத் தொழிலாளர்களின் ஜப்பானிய எதிர்ப்பு வேலை நிறுத்தங்கள். இரண்டாவது தேசிய தொழிலாளர் காங்கிரஸ். ஷாங்காயில் நடைபெற்ற மே 30-ஆம் தேதிய ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம். காண்டனிலும் ஹாங்காங்கிலும் நடைபெற்ற மாபெரும் வேலை நிறுத்தம். குவாங்டுங் புரட்சித் தளத்தை நிலை நாட்டுதல். விவசாய இயக்கத்தின் முன்னேற்றம். 98
4. புதிய ஜனநாயகப் புரட்சியின் அடிப்படைக் கருத்து களைப் பற்றி மாசே-துங் கூறியவை. டாய்சி-டாவோ வின் பிற்போக்குக் கோட்பாடுகள் புரட்சியின் தலை மையைத் தட்டிப் பறிப்பதற்கு சியாங்காய்-ஷேக்கின் வலதுசாரிகளின் சூழ்ச்சி. செங்டு-ஷியு வலதுசாரி சந்தர்ப்பவாதக் கும்பலினால், சியாங்காய்-ஷேக் கிற்கு கொடுக்கப்பட்ட சலுகைகள். 114

அத்தியாயம் நான்கு 130

வடக்கத்திய படையெடுப்பு. முதல் புரட்சிகரமான உள் நாட்டு யுத்தத்தில் நெருக்கடியான கட்டம். (ஜூலை 9162

—ஜூலை 1927)

1. வடக்கத்திய படையெடுப்பிற்கு முன்பு உள்நாட்டு நிலைமை. வடக்கத்திய படையெடுப்பு சேனை, யாங்ட்சி பள்ளத்தாக்கை நோக்கி அணிவகுப்பு. வடக்கத்திய படையெடுப்பு நடைபெற்ற சமயத்தில் வர்க்க உறவுகளில் புதிய மாற்றங்கள். 130

2. ஹூனனை மையமாகக் கொண்டு, நாடு தழுவிய விவசாயி இயக்கம், புரட்சியில் விவசாயிகளின் பாத்திரம் சம்பந்தமாக தோழர் மா சே-துங்கின் கொள்கை. 142

3. சீனப் புரட்சியில் ஏகாதிபத்தியத் தலையீடு தீவிர மடைதல், பிரிட்டிஷ் சலுகை பெற்ற பிரதேசங்களை மீட்பதற்காக ஊகான் மற்றும் கியூசியாங் தொழிலாளிகளின் மூன்று பேரெழுச்சிகள். நான்கிங் பிடிக்கப் படுவதும், நான்கிங்மீது ஆங்கிலோ அமெரிக்க குண்டு வீச்சு சம்பவமும். ஏப்ரல் 12ஆம் தேதி நடைபெற்ற சியாங்காய்-ஷேக்கின் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகள். 156

4. ஊகான் புரட்சி அரசாங்கம் இருந்த கால கட்டத்தில், தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் வளர்ந்து வந்த இயக்கம். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஐந்தாவது தேசிய மாநாடு. 168

5. எதிர்ப்புரட்சித் தாக்குதல் நடைபெற்ற சமயத்தில் ஊகானில் கோமிங்டாங்கின் ஊசலாட்டம். செங் டு-ஷியுவின் சரணாகதிப் பாதையில், புரட்சிக்கு உண்டாக்கப்பட்ட நாசம். வாங்சிங்-வெய் கும்பலால் கட்டிக் கொடுக்கப்படுதல். முதல் புரட்சிகரமான உள்நாட்டு யுத்தத்தின் தோல்வி. 176

முதல் புரட்சிகர உள்நாட்டு யுத்தம் பற்றிய சுருக்கமான தொகுப்புரை 187

**அத்தியாயம் ஐந்து** 191

**சீனப்புரட்சியின் தணிந்த அலை. புரட்சிகரமான தளங்களை நிலை நாட்டுதலும் அபிவிருத்தி செய்தலும்.** (ஆகஸ்ட் 1927—செப்டம்பர் 1931)

1. 1927இல் புரட்சி தோற்ற பிறகு நிலவிய அரசியல் நிலைமை. புரட்சியின் ஒரு தணிந்த நிலை. 191

2. முன்னேறுவதிலிருந்து பின்வாங்கிச் செல்வதற்கு, சீனப் புரட்சி மாறிச் செல்லுதல். கம்யூனிஸ்ட் கட்சிக் 201

குள் மூதல் ''இடதுசாரி''ப் பாதையைக் களை யெடுத்தல்.
3. சிங்காங் மலைகளில் புரட்சிதளம் நிறுவப்படுதல். 209
4. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆறாவது தேசியக் காங் கிரஸ். சீனாவின் சிவப்பு ஆட்சி எப்படி நீடித்து அபி விருத்தி அடைய முடியும் என்பது பற்றிய தோழர் மாசே-துங்கின் தத்துவம். 215
5. மத்திய தளத்தையும் மற்றும் இதர தளங்களையும் நிறுவுதல். கம்யூனிஸ்ட் கட்சியினால் இரண்டாவது ''இடது சாரி''ப் பாதை கலைந்தெடுக்கப்படுதல். சிவப்பு பிரதேசங்களில் விவசாயப் புரட்சியின் வழி காட்டும் பாதையும் மற்றும் விவசாயக் கொள்கையும். 225
6. செஞ்சேனையைக் கட்டுவதின் அடிப்படைக் கோட் பாடுகள். செஞ்சேனையின் யுத்த தந்திரம் மற்றும் போர் தந்திரம் ஆகியவற்றின் அடிப்படைக் கோட் பாடுகள் சியாங்காய்-ஷேக் பிற்போக்குக் கும்பலின் முதல் மூன்று சுற்றி வளைக்கும் இயக்கங்கள். சிவப்பு ஏரியாவில் நொறுக்கித் தள்ளப்பட்டன. சீனப் புரட்சியில் புதிய எழுச்சி. 239

**அத்தியாயம் ஆறு** **254**

**ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக இயக்கத்தின் எழுச்சி. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ''இடதுசாரி'' திரிபுகளைக் களைந் தெடுத்தல். போல்ஷ்வியமாக்கும் பாதையை உறுதியுடன் கடைப்பிடித்தல்.** (செப்டம்பர் 1931-டிசம்பர் 1935)

1. 1919இலிருந்து 1932 வரை சர்வதேச நிலைமையும், ஒரு புதிய யுத்த அபாயமும். 254
2. ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளால் வடக்கிழக்குச் சீனா ஆக்கிரமிக்கப்படுதல். நாடு முழுவதிலும் தேசிய ஜனநாயக இயக்கத்தின் எழுச்சி. 2[illegible]9
3. மூன்றாவது ''இடதுசாரி''ப் பாதை உருவதால். ''இடதுசாரி''ப் பாதையின்கீழ், புரட்சிக்குச் சாதக மானதொரு நிலைமையை இழத்தல். 265
4. புரட்சியின் தணிவான அலை இருந்த காலக் கட்டத் தில் ஜப்பானுக்கும் சியாங்காய்-ஷேக்கிற்கும் எதிரான போரட்டம். 270
5. மூன்றாவது ''இடதுசாரி''ப் பாதையின் திசை வழி யின் கீழ், ஐந்தாவது எதிர் சுற்றி வளைத்தல் இயக்க தின் தோல்வி. சீனத் தொழிலாளர்கள், விவசாயி 284

களின் செஞ்சேனையின் மாபெரும் யுத்த தந்திர மாற்றம்.

6. சுன்யீ மாநாடு ஜப்பானுக்கு எதிரான செஞ்சேனையின் வடகத்திய அணிவகுப்பில் சாங்குவா-டாவோவின் தவறான பாதைக்கு எதிர்ப்பு. நீண்ட பயணத்தில் செஞ்சேனையின் வெற்றி. 294

அத்தியாயம் ஏழு 302

ஜப்பானிய எதிர்ப்பு-ஜனநாயக இயக்கத்தின் புதிய எழுச்சி. உள்நாட்டு அமைதி நிலைநாட்டப்படுதல். (டிசம்பர் 1935—ஜூலை 1937)

1. 1933-லிருந்து 1935 வரையிலும் சர்வதேச நிலைமை. ஒரு புதிய ஏகாதிபத்திய யுத்தத்தின் ஆரம்பம். 302

2. சீன அதிகார வர்க்க முதலாளித்துவம் உருவாதல். கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்கள் காலனியாக்கப்படுதல். சீனாவில் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஜப்பானுக்குமிடையே போராட்டம். 306

3. வடசீனாவின் மீது ஜப்பானிய ஏகாதிபத்திய படையெடுப்பு. ஜப்பானை எதிர்த்துப் போராடுவது மற்றும் தேசத்தைப் பாதுகாப்பது பற்றிய சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரகடனம். ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்கான நாடு தழுவிய இயக்கத்தின் புதிய எழுச்சி. 314

4. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக்கமிட்டியின் டிசம்பர் மாநாடு. ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணியின் போர் தந்திரங்களைக் கட்சி ஏற்றல். 319

5. ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்கு சியாங்காய்-ஷேக்கை நிர்ப்பந்திக்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை. சியாங் சம்பவம், நிலைமையின் திரும்பு முனை. ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியின் ஆரம்பங்கள். வடகிழக்கு ஜப்பானிய எதிர்ப்பு நேச ராணுவத்தின் போராட்டம். 328

இரண்டாவது புரட்சிகரமான உள்நாட்டு யுத்தக் காலக் கட்டம் பற்றி சுருக்கமான தொகுப்புரை. 341

அத்தியாயம் எட்டு 345

ஜப்பானிய அக்கிரமிப்பிற்கு எதிர்ப்பு யுத்தம் நடைபெற்ற ஆரம்ப காலக் கட்டம். ஐக்கிய முன்னணிக்குள்ளும் மற்றும் ஜப்பானிய எதிர்ப்புத் தளங்களை நிலை நாட்டுவதிலும் பட்டாளி வர்க்கத்தின் சுதந்திரத்தையும் முன்கை எடுத்

தலையும் சீன கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.
(ஜூலை 1937-டிசம்பர் 1940)

1. 1937-லிருந்து 1939 வரை சர்வதேசிய நிலைமை. இரண்டாவது உலக யுத்த ஆரம்பம். 345
2. எதிர்ப்புப் போராட்டத்தின் தேசியயுத்தம் வெடித்தப் பிறகு ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணி அமைக்கப்படுதல். எதிர்ப்பு யுத்தத்தில் சீனாவிற்கு சோவியத் யூனியனின் ஆதரவு. 350
3. ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணிக்குள் சுயேச்சைத் தன்மை மற்றும் முன்கை எடுத்தல் சம்பந்தமாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை. எதிரியின் படை வரிசைகளுக்குப் பின்னால் கட்சி கொரில்லா யுத்தத்தை நடத்தி ஜப்பானிய எதிர்ப்பு தளங்களை நிலை நாட்டுகிறது. 355
4. துரிதமானதொரு வெற்றியில் நம்பிக்கைக் கொண்டவர்களிடமிருந்தும் தேசிய சரணாகதிவாதிகளிடமிருந்தும் முணுமுணுப்பு. சீன ஜப்பானிய யுத்தத்தின் அபிவிருத்தி சம்பந்தமாக மாசே-துங்கின் முன்னோக்கியப் பார்வை. 367
5. யுத்த தந்திர ரீதியான தேக்கத்தின் ஆரம்பக் கால கட்டத்தில் நடைபெற்ற எதிர்ப்பு யுத்தம், முதல் கம்யூனிஸ்ட் எதிர்ப்புப் பேரெழுச்சி. அதன் தோல்வி. சீனப் புரட்சியின் அடிப்படை விதிகள். ஒரு புதிய சீனாவை நிர்மாணிப்பதற்கான திட்டம். 376
6. ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியின் போர்த் தந்திரப் பாதையைப் பின்பற்றி செல்லுதல். இரண்டாவது கம்யூனிஸ்டு எதிர்ப்புப் பேரெழுச்சியும் அதன் தோல்வியும். 395

**அத்தியாயம் ஒன்பது** 411

**எதிர்ப்பு யுத்தத்தில் மிகமிகக் கடுமையான கட்டம். போராட்டத்தின் போக்கில் எதிரியின் படை வரிசைகளுக்குப் பின்னால் இருந்த ஜப்பானிய எதிர்ப்புத் தளங்களைக் கெட்டிப் படுத்தல்.** (ஜனவரி 1941—டிசம்பர் 1942)

1. இரண்டாவது உலக யுத்தத்தின் ஆரம்ப கால கட்டத்தில் பாசிஸ்டு முகாமின் குறுகியகால இராணுவ மேலாதிக்கம். மக்களின் எதிர்ப்பு யுத்தத்தின் மித மிஞ்சிய கடினமான சூழ்நிலைமைகள். 411
2. ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக ஆட்சியின் அடிப் 417

படைக் கொள்கை. கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை எடுக்கும் கொள்கை. விடுதலைப் பெற்ற ஏரியாக்களில் விரிவான உற்பத்தி இயக்கம்.

3. ஜப்பானிய எதிர்ப்பு அடித்தள ஏரியாக்களில் எதிரியை எதிர்த்துப் போராடுவதற்கான யுத்த தந்திரம். எதிரியினுடைய "முற்றுகையிடும்", "கிள்ளி எறியும்" மற்றும் "கிராமங்களை ஊடுருவிப் பார்க்கும்" இயக்கங்களுக்கு எதிரானப் போராட்டம் 437

4. எதிரிக்கு எதிரான போராட்டத்தில் ஊர்க்காவல் படை. 446

**அத்தியாயம் பத்து** 453

**விடுதலை பெற்ற ஏரியாக்கள் ஒரு பகுதியான முன்னேறித் தாக்குதலை ஆரம்பிக்கின்றன. எதிர்ப்பு யுத்தத்தில் இறுதி வெற்றி.** (ஜனவரி 1943—செப்டம்பர் 1945)

1. பாஸிஸ எதிர்ப்பு யுத்தத்தில் தற்பாதுகாப்பிலிருந்து முன்னேறித் தாக்குதலுக்குத் திருப்பம். எதிரி கைப்பற்றியிருந்த ஏரியாக்களில் மக்களின் ஜப்பானிய எதிர்ப்புப் போராட்டங்கள். விடுதலை பெற்ற ஏரியாக்களின் மீட்சியும் அபிவிருத்தியும். 453

2. சீன அதிகார வர்க்க முதலாளித்துவத்தின் ஊழல் மலிந்த பிற்போக்கு ஆட்சி. மூன்றாவது கம்யூனிஸ்ட் எதிர்ப்பு பேரெழுச்சி தடுத்து நிறுத்தப்பட்டது. நாடு முழுவதிலும் ஜனநாயக இயக்கத்தின் எழுச்சி. சீனாவின் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கத் தலையீடு. 461

3. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏழாவது தேசிய காங்கிரசினால் வரையறுக்கப்பட்டிருந்த ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் இறுதி வெற்றியைப் பெறுவதற்கான அடிப்படைக் கொள்கைகளும் யுத்தத்திற்கு பிறகு நிறைவேற்ற வேண்டிய அடிப்படை கடமைகளும். 473

4. எதிர்-முன்னேறித் தாக்குதலின் பிரதான சக்தியாக மக்களின் விடுதலை செய்யப்பட்ட ஏரியாக்கள். நட்புறவு மற்றும் கூட்டணி பற்றிய சீன-சோவியத் உடன்படிக்கை கையெழுத்தாதல் 478

5. சோவியத் யூனியன் ஜப்பான்மீது யுத்த பிரகடனம் செய்தல். விடுவிக்கப்பட்ட ஏரியாக்களில் இருந்து சீன ராணுவம் எதிர்-முன்னேறித் தாக்குதலை ஆரம்பித்தல். ஜப்பானுக்கு எதிரான எதிர்ப்பு யுத்தத்தின் 485

வெற்றிகரமான முடிவு.
ஜப்பானை எதிர்த்து நடத்திய எதிர்ப்பு யுத்தம் பற்றிய சுருக்கமான தொகுப்புகள். 488

**அத்தியாயம் பதினொன்று** **491**

**ஜப்பானியர்களின் சரணாகதிக்குப் பிறகு உள்நாட்டு சமாதானத்திற்காகவும் ஜனநாயகத்திற்காகவும் சீன மக்களின் போராட்டம்.** *(செப்டம்பர் 1945—ஜூன் 1946)*

1. இரண்டாவது உலக யுத்தத்திற்கு பிறகு சர்வதேச நிலைமை. 491
2. ஒரு புதிய உள்நாட்டு யுத்த பயமுறுத்தல். 498
3. சமாதானம், ஜனநாயகம், ஒருமைப்பாடு மற்றும் ஒன்று படுதலுக்கான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை. கோமிங்டாங்கிற்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையே பேச்சு வார்த்தைகள். யுத்த நிறுத்த உடன்பாடும் அரசியல் ஆலோசனை மாநாடும். 503
4. அமெரிக்க அரசாங்கத்தின் ஆதரவோடு கம்யூனிஸ்ட் எதிர்ப்பு உள்நாட்டு யுத்தத்திற்காக, கோமிங்டாங் பிற்போக்குவாதிகளின் தயாரிப்புகள். 512

**அத்தியாயம் பன்னிரண்டு** **525**

**மூன்றாவது புரட்சிகர உள்நாட்டு யுத்ததில் யுத்த தந்திர ரீதியான தற்பாதுகாப்பு. மக்கள் விடுதலை சேனையால் கோமிங்டாங்கின் ராணுவ முன்னேறித் தாக்குதல் முறியடிக்கப்படுதல்.** *(ஜூலை 1946—ஜூன் 1947)*

1. புரட்சியுத்தத்தின் அரசியல் கோட்பாடுகளும் ராணுவ கோட்பாடுகளும். 525
2. சுறுசுறுப்பான தற்பாதுகாப்பு யுத்த தந்திரத்தை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொள்ளுதல். கோமிங்டாங்கின் சர்வாம்ச ரீதியான தாக்குதல்களையும் குவிந்த தாக்குதல்களையும் மக்கள் விடுதலை சேனையால் முழுமையாக முறியடிக்கபடுதல். 535
3. கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்கள் மேலும் காலனிமயமாக்கப்படுதல். கோமிங்டாங் அரசியல் மோசடியின் சூன்னியத் தன்மை. 542
4. தேசபக்த ஜனநாயக இயக்கத்தின் எழுச்சி. 551

**அத்தியாயம் பதிமூன்று** **588**

**மூன்றாவது புரட்சிகர உள்நாட்டு யுத்தத்தில், யுத்த தந்திர ரீதியான முன்னேறித் தாக்குதல். மக்கள் புரட்சியின் நாடு தழுவிய வெற்றி.** *(ஜூலை 1947-அக்டோபர் 1949)*

1. நாடு தழுவிய யுத்த தந்திரரீதியான முன்னேறித் தாக்குதலின் ஆரம்பம். விடுவிக்கப்பட்ட ஏரியாக்களில் விவசாய சீர்திருத்தம். மக்கள் ஜனநாய ஐக்கிய முன்னணியை அமைத்தல். நாடு தழுவிய வெற்றிக்கு தலைமை தாங்கி செல்வதற்கான கட்சியின் செயல் திட்டம். 558

2. புதிதாக விடுவிக்கப்பட்ட ஏரியாக்கள் மற்றும் நகரங்கள் சம்பந்தமாக கட்சியின் கொள்கைகள். கட்சியின் கட்டுப்பாட்டைப் பலப்படுத்துவதும் கட்சி கமிட்டி முறையை உருப்படியானதொரு அடிப்படையின் மீது வைப்பதும். 574

3. லியா வோசி-சென்யான், யுவாய்-ஹை, பீகிங்-டியன்சின் ஆகிய மூன்று பெரிய இயக்கங்கள். நாடு முழுவதிலும் மக்கள் புரட்சியுத்தத்தின் அடிப்படையான வெற்றி. கட்சி தலைமை தாங்கும் மையத்தைக் கிராமப்புறத்தில் இருந்து நகரத்திற்கு மாற்றுதல். மக்கள் புரட்சியின் வெற்றிக்கு பிறகு சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் அடிப்படையான கொள்கை. 578

4. தொழிலாளி வர்க்கத்தினால் தல்லமை தாங்கப்பட்ட மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தின் கீழ், அரசு பற்றிய கட்சியின் தத்துவம். ன மக்கள் அரசியல் கலந்தாலோசனை மாநாட்டைக் கூட்டுவதும் பொதுவான திட்டத்தை உருவாக்குவதும், சீன மக்கள் குடியரசை நிறுவுதல். சீன புரட்சியின் வெற்றியின் உலக முக்கியத்துவம். 593

மூன்றாவது புரட்சிகர உள்நாட்டு யுத்தம் பற்றிய சுருக்கமான தொகுப்புரை 602

**அத்தியாயம் பதினான்கு** 605

**பூர்சுவா ஜனநாயகப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு தேசிய பொருளாதாரத்தின் மீட்சியும் மாற்றமும். (அக்டோபர் 1949—1952)**

1. சீன மக்கள் குடியரசு நிர்மாணிக்கப்பட்ட பிறகு சோஷலிச முகாமின் வளர்ந்து கொண்டிருக்கும் பலம். இரண்டு உலக சந்தைகளின் உதயம். 605

2. விடுதலைக்கு பிறகு ஆரம்ப ஆண்டுகளில் பொருளாதார நிலைமை. அரசின் நிதித்துறை வேலையிலும் பொருளாதார வேலையிலும் ஒன்றுபட்ட நிர்வாகத்தையும் தலைமையையும் அமலாக்குதல். அரசின்நிதி 612

கும், பெரும் அளவிலான இயந்திர உற்பத்திக்குமிடையே அது மாறிச் செல்லும் கட்டமாக இருந்தது. யாங்ட்ஸி நதிக்கு தெற்கேயுள்ள இப்படிப்பட்ட பொருளாதார ரீதியில் மிகவும் அபிவிருத்தி அடைந்துள்ள பிரதேசங்களில் அது பிரதானமாகத் தோன்றி வளர்ந்தமையால், அது நிலப்பிரபுத்துவ சீனாவில் ஒரு பொழுதுமே ஆதிக்கம் வகிக்கும் ஒரு உற்பத்திமுறையாக மாற வில்லை. அல்லது கைவினைத்தொழில் உற்பத்தித்துறை முழுவதி லுமே அது தலைமை தாங்கும் ஒரு நிலையைப் பெற்றிருந்த தாகவும் சொல்லமுடியாது; ஏனெனில், கைவினைத் தொழில் களில், பெரும் பிரிவுகள் இன்னும் உற்பத்தித் தொழிற்சாலைகளை அமைத்திருக்கவில்லை. ஆகவே, ஒட்டுமொத்தமாக, சீனத் தொழில்கள், அபினியுத்தம்[1] நடந்த சமயத்தில் இன்னும் உற்பத்திப் பெருக்க கால கட்டத்தை அடையவில்லை. எனினும் நிலவியிருந்த உற்பத்தி தொழிற்சாலைகள் தமக்குள்ளே முதலாளித்துவத்தின் கருவை உள்ளடக்கிக் கொண்டிருந்தன. அந்நிய முதலாளித்து வஊடுருவலினால் அதன் சுயேச்சையான அபி விருத்தி தடைபடாமலிருந்திருந்தால் சீனா இதர பலநாடுகளைப் போலவே தவிர்க்க முடியாதபடி—வளர்ச்சி மெதுவாக இருந்த போதிலும்—ஒரு முதலாளித்துவ சமுதாயமாக வளர்ந்திருக்கும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் சீனாவில் அந்நிய முதலாளித்துவ ஊடுருவலினால், சீன சமுதாயத்தின் நிலப் பிரத்துவ அமைப்பிற்குள்ளேயே சில முக்கியமான மாற்றங்கள் நடைபெற்றன; இந்தமாற்றங்கள் அதனை அரைக்காலனியாதிக்க மற்றும் அரைநிலப்பிரபுத்துவப் பாதையை மேற்கொள்ளும்படி நிர்ப்பந்தித்தன. இந்த முறையில், அதனுடைய சுயேச்சையான அபிவிருத்தி தடைபட்டது.

அந்நிய முதலாளித்துவத்தினால் சீனா ஊடுருவப்படும் நிகழ்ச் சிப் போக்கு, அந்நிய முதலாளித்துவத்தின் அபிவிருத்தியோடு இணக்கமுடையதாகவே இருந்தது. 1840 ஆம் ஆண்டுநடைபெற்ற அபினி யுத்தத்திலிருந்து 1894 ஆம் ஆண்டு நடைபெற்ற சீன-ஜப்பானிய யுத்தம்[2] வரையிலும், முதலாளித்துவ அரசுகள் சீனா வின் மீது ஆக்கிரமிப்பு யுத்தங்களை தொடர்ச்சியாக நடத்தின. இந்த யுத்தங்களில் தோற்கடிக்கப்பட்டதால், பல அசமத்துவ உடன்படிக்கைகளில் கையெழுத்திடும்படி சீனா நிர்பந்திக்கப் பட்டது; இந்த உடன்படிக்கைகளின்படி, பிரதேசங்களை விட்டுக் கொடுக்கும்படியும், போரில் தோற்றவர்கள் மீது கோரப்படும் இழப்பீட்டுத்தண்டத்தொகை கொடுக்கும்படியும் வர்த்தகத்துறை முகங்களைத் திறக்கும் படியும், சம்பிரதாய சுங்கவரி முறையை

ஒப்புக் கொள்ளும்படியும், ராஜதந்திர உறவு அதிகாரத்தை வழங்கும்படியும், மத ஊழியர்களின் நடவடிக்கைகளின் சுதந்திரத்திற்கு அங்கீகாரம் போன்றவற்றை வழங்கும்படியும் சீனாவுக்கு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இது சுதந்திரமான முதலாளித்துவப் போட்டியின் ஒரு காலகட்டமாக இருந்தது; இக்காலகட்டத்தில், சரக்குகளின் ஏற்றுமதியினால், பொருளாதார ஆக்கிரமிப்பு குணாதிசயப்படுத்தப்பட்டது. அசமத்துவ உடன்படிக்கைகள், முதலாளித்துவ அரசுகள் தங்கள் சரக்குகளை சீனாவில் கொட்டிக் குவிப்பதற்குச் சாதகமான நிலைமைகளை உண்டாக்கின.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், உலக முதலாளித்துவமானது ஏகாதிபத்தியம் மற்றும் ஏகபோக முதலாளித்துவ கட்டத்தை அடைந்து, சுதந்திரமான போட்டியின் இடத்தை எடுத்துக் கொண்ட பொழுது ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு புதிய குணாம்சங்களைக் காட்ட ஆரம்பித்தது; அதாவது, மூலதன ஏற்றுமதி படிப்படியான அதிகரிப்பு மற்றும் ஆக்கிரமிப்பின் மிக அதிகமான ஏகபோகத்தன்மை போன்ற இப்படிப்பட்ட குணாம்சங்களைக் காட்ட ஆரம்பித்தது. இது, சீனாவைப் பங்குபோடுவதற்கான அவர்களது போராட்டங்களில் ஏகாதிபத்திய அரசுகளுக்கிடையே மிக அதிகமான, கூர்மையான மோதலைத் தோற்றுவித்தது. இத்தகைய குணாம்சங்கள் 1894ஆம் ஆண்டில் சீன-ஜப்பானிய யுத்தம் நடைபெற்ற சமயத்திலும், 1900ம் ஆண்டில் எட்டு நாட்டு கூட்டு ராணுவத்தின் ஆக்கிரமிப்பு யுத்தம்[3] நடைபெற்ற சமயத்திலும் ஏராளமாக காணப்பட்டன. சீன-ஜப்பானிய யுத்தத்தைப் பின் தொடர்ந்து ஷிமேனோசேகி உடன்படிக்கைக்கு ஒப்புக்கொள்ளும்படி சீனா நிர்ப்பந்திக்கப்பட்டது. இந்த உடன்படிக்கையின்படி, சீனாவில் தொழிற்சாலைகளை அமைக்க ஜப்பானுக்கு விஷேச உரிமைகளை சீனா வழங்க வேண்டி வந்தது. அதற்குப்பின் தொழிற்சாலைகளை நடத்தவும், சுரங்கங்களைத் திறக்கவும், ரயில்வேக்களை நிர்மானிக்கவும் பாங்குகளை ஸ்தாபிக்கவும் அதிகமான அளவில் ஏகாதிபத்தியவாதிகள் சீனாவுக்கு வந்தார்கள்; இதன் மூலம், சீனாவின் இயந்திரத் தொழிலின் மீதும், வங்கித் தொழிலின் மீதும் ஏகாதிபத்தியவாதிகள் ஆதிக்கத்தைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். மேலும், சீனாவுக்குத் தொடர்ச்சியாக, பல அரசியல் தன்மை வாய்ந்த கடன்களைக் கொடுப்பதின் மூலம், அவர்கள் சீனாவின் நிதித்துறையின் மீதும், சீன அரசாங்கத்தின் மீதும் தங்களது செல்வாக்கைப் பெருக்க முடிந்தது. தங்களுடைய கூடுதலான ஆக்கிரமிப்பிற்கான தளங்களாக சீனாவில் ''செல்வாக்கு

மண்டலங்களை'' பங்கு போடுவதற்கான அவர்களது முயற்சிகள் அவர்களை பரஸ்பர மோதல்களுக்குள் வீசி எறிந்தன.

மக்களை தாங்கள் ஒடுக்குவதையும் சுரண்டுவதையும் தொடர்ந்து வைத்திருக்கும் பொருட்டு சீன பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவ ஆட்சியாளர்கள் ஏகாதிபத்தியவாதிகளுக்குத் தங்களை விற்பதற்கு மிகவும் விரும்பிக் கொண்டும் அவர்கள் நலன்களுக்கு சேவை செய்துக் கொண்டும் இருந்த சமயத்தில், ஏகாதிபத்திய வல்லரசுகள் சீனாவின் மீது தங்களுடைய ஆதிக்கத்தை வைத்துக் கொள்ளும் பொருட்டும் விஸ்தரிக்கும் பொருட்டும், சீனத்து பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவ ஆட்சியாளர்களைத் தங்களுடைய கைக்கூலிகளாக பலப்படுத்துவதற்கு தங்களால் இயன்ற அனைத்தையும் செய்தார்கள். முதலில், ஏகாதிபத்தியவாதிகள் டை-பிங் புரட்சியை[4] நசுக்குவதில் சிங் (மஞ்சு) அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்தார்கள்; பின்னர், 1911ஆம் ஆண்டு நடைபெற்ற புரட்சியின்[5] குரல்வளையை நெரிப்பதில் யு-வாங்-சிக்காயை[6] ஆதரித்தார்கள். ஏகாதிபத்திய நாடுகளின் முதலாளி வர்க்கத்திற்கும், சீனப் பிறபோக்குவாதிகளுக்கும் இடையே ஒரு கூட்டணி அமைக்கப்பட்டது. ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவோடு பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவ சுரண்டல் அமைப்பு அப்படியே இறுக்கமாக இருந்தது என்பது மட்டுமின்றி தரகு முதலாளித்துவத்தோடு[7] இணைந்து நின்று சீனாவின் பொருளாதார வாழ்க்கையில் மேலாதிக்கம் வகிக்கும் ஒரு பாத்திரத்தைத் தொடர்ந்து நீடித்து வந்தது.

1840ஆம் ஆண்டிற்குப் பிறகு அந்நிய முதலாளித்துவத்தினால் சீனாவில் ஏற்பட்ட ஊடுருவல் சீனாவின் மீது இருவகைப்பட்ட செல்வாக்கினை பிரயோகித்தது. முதலாவதாக, அது சீனாவின் இயற்கைப் பொருளாதாரத்தைச் சீர்குலைத்தது. மேலும் முதலாளித்துவத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் ஊக்குவித்து வேகப்படுத்திற்று; இந்த முறையில், அது சீனாவை ஒரு பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலிருந்து ஒரு அரை நிலப்பிரபுத்துவ சமுதாயமாக மாற்றிக் கொண்டிருந்தது. சரக்குகளைக் குவிப்பதின் மூலமாகவும், மூலப் பொருட்களை அபகரித்துக் கொண்டிருந்ததின் மூலமாகவும், முதலாளித்துவ நாடுகள் சீனாவில் இயற்கை பொருளாதாரத்தை, நிர்மூலமாக்கின; மேலும், சீன விவசாயிகளைச் சந்தையின் மீது சார்ந்து இருக்கும்படி செய்தன. இந்த முறையில் முதலாளித்துவத்திற்குத் தேவையான ஒரு சரக்குச் சந்தை (Commodity Market)) சீனாவில் நிர்மாணிக்கப்பட்டது. இடைக்காலத்தில், சந்தையிலிருந்து

கைவினைத் தொழில் பொருட்கள் இயந்திரப் பொருட்களால் விரட்டப்பட்டு, அவற்றோடு கூடவே கடுமையான கடன் சுமைகளும் மிதமிஞ்சிய லெவிகளும் வரிகளும் ஒன்று சேர்ந்து பரந்துபட்ட விவசாயி வெகு ஜனங்களையும், கைவினை தொழிலாளர்களையும் ஓட்டாண்டிகளாக்கின. இந்த முறையில் முதலாளித்துவத்திற்குத் தேவையான ஒரு தொழிலாளர் சந்தை உண்டாக்கப்பட்டது. ஒரு வார்த்தையில் சொல்வதானால், சீனாவில் ஏற்பட்ட ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு சீனாவின் சுயதேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய இயற்கை பொருளாதாரத்தை அழித்ததோடு மட்டுமின்றி, முதலாளித்துவத்தின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் தேவையான சில சாதகமான நிலைமைகளையும் உண்டாக்கிற்று.

பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவ சமுதாயம் சீரழிந்ததோடு, முதலாளித்துவத்தின் சில அம்சங்கள் தோன்றவும், அபிவிருத்தி அடையவும் ஆரம்பித்தன. சீனா இனியும் தூய்மையான சாதாரணமான ஒரு பத்தாம்பசலி நிலப்புரபுத்துவ சமுதாயம் அல்ல; அது ஒரு அரை நிலப்பிரபுத்துவ சமுதாயமாக மாறிவிட்டது.

இரண்டாவதாக, சீனாவை ஒரு காலனி நாடாக மாற்றுவது ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களின் எண்ணமாக இருந்தது. தங்களது ராணுவ, அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார சக்திகளின் மீது சார்ந்து நின்று, அவர்கள் சீனாவின் இராணுவ, அரசியல் விவகாரங்களையும் மற்றும் சீனப் பொருளாதாரத்தின் பிரதான தொடர்புகளையும்கூட கட்டுப்படுத்தினார்கள். சீனாவின் விவசாய பொருளாதாரத்தை அவர்கள் தங்களுடைய சேவைக்குப் பயன்படுத்தினார்கள். ஒரு பொழுதுமே பலமாக இருந்திராத சீனாவின் தேசிய தொழிலின் மீது அவர்கள் மிதமிஞ்சிய ஆதிக்கம் செலுத்தினார்கள். இந்த முறையில் சீனாவின் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை அவர்கள் தடுத்துக்கொண்டிருந்தார்கள். இதன் விளைவாக சீனப் பொருளாதாரம் அதன் சுயேச்சைத் தன்மையை இழந்தது; மேலும், சீனப் பொருளாதாரம் ஏகாதிபத்திய பொருளாதாரத்தின் ஒன்றிணைந்த ஒரு பகுதியாக மாறிற்று. மேலும் சீனா அதனுடைய தற்பாதுகாப்பு திறனையும், தேசிய சுதந்திரத்தையும்கூட இழந்தது. பெயரளவிற்கு மட்டுமே அதனுடைய ஆதிபத்திய உரிமையை வைத்துக்கொண்டு மற்றும் ஓரளவு சுதந்திரத்தையும் வைத்துக்கொண்டும் இருந்தது. சீனா, நடைமுறையில் ஒரு அரைக்காலனி அந்தஸ்திற்கு குறைக்கப்பட்டது.

அரைக்காலனி மற்றும் அரைநிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் ஏகாதிபத்தியத்திற்கும், சீன மக்களுக்கும் இடையே இருந்தமுரண்பாடுகளும், மற்றும் நிலப்புரபுத்துவத்திற்கும் மக்களின் வெகு ஜனங்களுக்குமிடையே இருந்த முரண்பாடுகளும் அடிப்படை முரண்பாடுகளாக இருந்தன; இவற்றில், முதலில் குறிப்பிட்ட முரண்பாடு பிரதான முரண்பாடாக இருந்தது. சீனாவை ஒரு அரைக்காலனி மற்றும் அரைநிலப்பிரபுத்துவ சமுதாயமாககுறுக்குவதற்கு பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவத்தோடு ஏகாதிபத்தியம் ஒத்துழைத்த நிகழ்ச்சிப்போக்கு, ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும், பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராகவும் நடைபெற்ற சீன மக்களின் தீர்மானகரமான போராட்டத்தின் நிகழ்ச்சிப் போக்கோடு இணைந்து நின்றது. 1840-ல் நடைபெற்ற அபினி யுத்தத்திலிருந்து 1949-ல் சீன மக்கள் குடியரசு நிறுவப்பட்டது வரையிலான 109 ஆண்டுகளில் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராகவும் ஒரு நீண்ட தொடர்ச்சியான புரட்சிகரமான போராட்டங்களை விட்டுக் கொடுக்காமலும், வீரமிக்க முறையிலும் சீன மக்கள் தொடர்ந்து நடத்தினார்கள். புரட்சி இரண்டு காலகட்டங்களில் நடைபெற்றது; ஒவ்வொரு கால கட்டத்திற்கும் அதற்கே உரித்தான வரலாற்று ரீதியான குணாம்சங்கள் உண்டு; 1919ஆம் ஆண்டு நடைபெற்ற மே 4ஆம் தேதி இயக்கத்திற்கு முன்பு எண்பது ஆண்டுகளில் நடைபெற்ற புரட்சி; இந்தப்புரட்சி பழைய ஜனநாயக வகைப்பட்ட புரட்சி; இந்தப் புரட்சி உலக முதலாளி வர்க்கத்தினால் தலைமை தாங்கப்பட்டது. மேலும் இந்தப்புரட்சி உலக முதலாளித்துவ புரட்சியின் ஒரு பகுதியாக அமைந்திருந்தது; ஆனால் மே 4ஆம் தேதி இயக்கத்திலிருந்து 1949ஆம் ஆண்டு வரைநடைபெற்ற புரட்சி புதிய ஜனநாயக வகைப்பட்ட புரட்சியாக இருந்தது; இப்புரட்சி தொழிலாளி வர்க்கத்தினால் தலைமை தாங்கப்பட்டது; இப்புரட்சி உலகப் பட்டாளிவர்க்கப் புரட்சியின் ஒரு பகுதியாக அமைந்திருந்தது.

பழைய ஜனநாயகப் புரட்சி கால கட்டத்தில், சீனமக்கள் அடிக்கடி புரட்சி போராட்டங்களை நடத்தினார்கள். அவற்றில் டை-பிங் விவசாயியுத்தமும் 1911ஆம் ஆண்டு நடைபெற்ற புரட்சியும் டாக்டர் சன்யாட்-சென் அவர்களால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட—குட்டி முதலாளித்துவ வர்க்கத்தாலும் முதலாளித்துவ வர்க்கத்தாலும் தலைமை தாங்கப்பட்ட—புரட்சிகள்; இப்புரட்சிகள் வீச்சிலும் செல்வாக்கிலும் மிகமிக முக்கியமான புரட்சிகள். இத்தகைய புரட்சிகரமான போராட்டங்கள்

பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவத்திற்கு பலத்த அடிகளைக் கொடுத்தன.

ஹங் ஷியு-சுஅன் என்ற டை-பிங் புரட்சியின் தலைவன் பை ஷங்டி ஹு என்ற ஆண்டவனை வழிபடுவதற்கான ஒரு கழகத்தை நிறுவி, மேற்கு நாடுகளைச் சேர்ந்த கிறிஸ்துவ மத நிறுவனங்களால் கொண்டு வரப்பட்ட கிறிஸ்துவ மதத்தைச் சுதந்திரம் மற்றும் சமத்துவம் பற்றிய விவசாயிகளின் லட்சியங்களுக்கு ஏற்ப ஏற்படுத்தினார்; இந்த முறையில் விவசாயிகளின் புரட்சியை கிறிஸ்துவமத போதனைகளுடன் ஒருங்கிணைத்தார். பை ஷங் டிஹூவின் மூலம், ஹங் ஷியு-சுஅன் வறுமையினால் பீடிக்கப்பட்ட விவசாயிகளையும், கைவினைத் தொழிலாளர்களையும் ஸ்தாபன ரீதியாகத் திரட்டி ஆயுதமேந்திய ஒரு பேரெழுச்சியை ஆரம்பித்தார். டை-பிங் புரட்சி (1851-64) 14 ஆண்டுகள் நீடித்தது; ஒரு சமயத்தில் அதனுடைய செல்வாக்கு 17 மாகாணங்களுக்குப் பரவியிருந்தது. டை-பிங் தலைவர்கள் நான் கிங்கில் ஒரு புரட்சி அரசாங்கத்தை நிறுவினார்கள். நிலப்பிரபுத்துவ கலாச்சாரத்தின் அடிப்படையான கருத்துக்களுக்கு அவர்கள் சவால் விட்டார்கள்; மேலும், அவர்கள் நிலப்பிரபுத்துவ நில அமைப்பை ஒழித்துகட்டும் விண்ணுலகஆட்சியின் விவசாயச் சட்டத்தை பிரகடனம் செய்தார்கள். ஆனால் புரட்சி தோல்வி அடைந்தது; இத்தோல்விக்குப் பிரதான காரணம், அப்புரட்சி இன்னும் முன்னேறிய தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில்லாத பழைய வகைப்பட்ட விவசாயிகளின் பேரெழுச்சியாக இருந்ததுதான். விவசாயிகள் நிலப்பிரபுத்துவ ஆட்சிக்கும், தேசிய ஒடுக்கு முறைக்கும் எதிர்ப்பானதொரு புரட்சிகரமான வர்க்கமாகும்.

ஆனால், சிறு உற்பத்தியாளர்களின் ஒரு வர்க்கம் என்ற முறையில், அது அதனுடைய பின் தங்கிய உற்பத்தி முறையினால் தடங்கல் செய்யப்பட்டிருக்கிறது; மேலும், சிதறிய நடவடிக்கைகள், பத்தாம்பசலிதனம், சுயநலம் ஆகியவற்றை நோக்கிச் செல்லும் போக்கு போன்ற இப்படிப்பட்ட சில குணாம்ச ரீதியான பலஹீனங்களையும் அதுவெளிப்படுத்துகிறது. நிலம் சமமாக ஒதுக்கப்படவேண்டும் என்றும், ஒவ்வொரு குடும்பமும் ஒரே எண்ணிக்கையிலான முசுக் கட்டை மரங்களையும், கோழிகளையும், பன்றிகளையும் மற்றும் சம பரப்பளவு உள்ளதையும் பெற்றிருக்க வேண்டும் என்றும் டை-பிங் நிலத்திட்டத் நிலத்தில் விதிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு விவசாயியும் உற்பத்தியில் சம அளவிலான உழைப்பைச் செலுத்த வேண்டுமென்றும்,

உற்பத்தி செய்யப்படும் பொருளில் சமபங்கினைப் பெறவேண்டும் என்றும் விதிக்கப்பட்டிருந்தது. இந்த முறையில், சிதறிக் கிடந்த விவசாய அடிப்படையிலும் மற்றும் சிறு விவசாயி பொருளாதார அடிப்படையிலும் ஒவ்வொரு விவசாயியும் எப்பொழுதுமே சம அளவிலான சொத்தினையே வைத்திருப் பான் என்று கற்பனை செய்யப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட தொரு திட்டம் நடைமுறைக்குள் கொண்டு வரப்பட்டருந்தால், விவசாயியின் எதிர்காலம் இன்னும் அநேகமாக இருண்டதாகவே இருந்திருக்கும்; ஏனெனில், உற்பத்தி சக்திகளை அபிவிருத்தி செய்வதற்குப்பதிலாக, இத்திட்டம் உற்பத்தி சக்திகளை ஒரு பின் தங்கிய சிறு விவசாய பொருளாதாரத்தின் உருவத்தில் ஒரு ஸ்தம்பித்த நிலையிலேயே வைத்திருக்கும். ஆகவே, அதனுடைய நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் புரட்சித் தன்மை இருந்த போதிலும், டை-பிங் நிலத்திட்டம், சமுதாய அபிவிருத்திக் கண்ணோட்டத் திலிருந்து பார்க்கும்பொழுது, கற்பனா ரீதியான விவசாய சோஷ லிசத்தின் கருத்துக்களால் இலேசாக வர்ணம் தீட்டப்பட்டிருந் தது. மேலும், டை-பிங் சேனை பிடித்திருந்த பிரதேசங்களில் எந்தவிதமான உறுதியான தளங்களைநிறுவவும் தவறி இருந்தது. நான்கிங்கில் ஒரு அரசாங்கத்தை நிறுவிய பிறகு, அதனுடைய தலைவர்கள் தொடர்ச்சியான பல ராணுவ, அரசியல் தவறு களைச் செய்தார்கள்; அவர்களுடைய தலைமைக் குழுவில் பிளவு மற்றும் இதர விவசாயிகளின் பேரெழுச்சிகளோடு நல்ல ஒத்து ழைப்பை நிலைநாட்டத் தவறியது போன்ற தவறுகளை அதனு டைய தலைவர்கள் செய்தார்கள். இதன் விளைவாக, எதிர்ப் புரட்சிவாதி சிங்கின் மன்னர் படைகள் மற்றும் அமெரிக்க, பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் கூட்டுத்தாக்குதலை எதிர்த்து நிற்க முடியாத நிலையில் அவர் கள் இருந்தார்கள்.

பூர்ஷுவா புரட்சிகர ஜனநாயகவாதிகளின் பிரதிநிதியான டாக்டர் சன் யாட்-சென் 1905ம் ஆண்டில் டுங் மெங் ஹுயூ (புரட்சிக்கழகம்) வை ஸ்தாபித்து, பூர்ஷுவா மற்றும் குட்டி முதலாளித்துவ வர்க்கங்களின் தலைமையின் கீழ் ஒரு ஜனநாயகப் புரட்சியை ஆரம்பித்தார். சிங் மன்னர் வம்சா வழியைத் தூக்கி எறிவதற்காகவும் மற்றும் பிரெஞ்சுப் புரட்சியிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட, ‘‘சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்’’ என்ற கோஷத்தின் கீழ் ஜனநாயகக் குடியரசை ஏற்படுத்துவதற் காகவும் கழகம் ஒரு திட்டத்தை முன் வைத்தது. ஜனநாயகப் புரட்சிப்பதாகையை உயர்த்திப் பிடித்துக் கொண்டு, கழகம்

சட்டத்திற்கு உட்பட்ட முடியாட்சியை ஆதரித்துப் பேசியவர்களை பகிரங்கமாக கண்டனம் செய்தது. 1905ம் ஆண்டிற்கும் 1911ம் ஆண்டிற்குமிடையே அது தொடர்ச்சியாகப் பல புரட்சிகரமான பேரெழுச்சிகளைத் தலைமை தாங்கி நடத்திற்று.

சிங் வம்சா வழியினரைத் தூக்கி எறிந்ததால், 1911ம் ஆண்டு நடை பெற்ற புரட்சி 2000 ஆண்டுகளுக்கும் அதிகமாக சீனாவை ஆண்டு கொண்டிருந்த நிலப்பிரபுத்துவ முடியாட்சிக்கு முடிவுகட்டி, சீனக் குடியரசு தோன்றவும் நான்கிங்கில் ஒரு தற்காலிகப் புரட்சி அரசாங்கம் அமைக்கவும் வழிவகுத்தது. ஆனால், சீக்கிரத்திலேயே, அரசு அதிகாரம் எதிர்ப்புரட்சிவாதி யூவான் ஷி-கையின் கரங்களுக்குள் சிக்கி விட்டது. ஆகவே. 1911ம் ஆண்டு நடை பெற்ற புரட்சி தோல்வியில் முடிவடைந்தது. அத்தோல்வியின் வேர் சீனப் பூர்ஷுவா வர்க்கத்தின் பலஹீனத்தில் அடங்கியுள்ளது. அது முற்றானதொரு ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவ எதிர்ப்புத் திட்டத்தை உருவாக்கி வைக்கவில்லை. ஆகவே, சீனாவின் மிகப் பெரிய மற்றும் மிகப் பலமான ஜனநாயக சக்தியான விவசாயிகளை சக்தி வாய்ந்த முறையில் அணிதிரட்டவும் அதனைப் போராட்டத்தில் ஈடுபடுத்தவும் அது தவறிவிட்டது. மேலும், டாக்டர் சன்யாட்-சென்னால் தலைமை தாங்கப்பட்ட, 1911ம்ஆண்டு நடைபெற்ற புரட்சி ஒரு உறுதியான அடித்தளத்தைப் பெறாமலிருந்தது; ஏனெனில், எந்த ஜனநாயகப் புரட்சியிலும் அடிப்படைப் பிரச்சினையான நிலப்பிரச்சினைக்கு அது தீர்வு காணத் தவறிவிட்டது. எனவே, ஊழல் மலிந்த சிங் அரசாங்கத்தை அது தூக்கி எறிந்து விட்டபோதிலும், வடக்கத்திய யுத்தப்பிரபு யூவான் ஷி கையினால் பிரதி நிதித்துவப் படுத்தப்பட்ட ஏகாதிபத்திய ஆதரவுடன் கூடிய நிலப்பிரபுத்துவ தரகர்களின் அரசாங்கத்தால் எதிர் நோக்கப்பட்டபொழுது, அது சக்தியற்றதாக ஆகிவிட்டது. சீனாவில், பூர்ஷுவா வர்க்கத்தினால் தலைமைதாங்கப்படும் ஒரு புரட்சி தோல்வி அடைவது திண்ணம்.

முதலாளித்துவமும் அதனுடைய தீமைகளும் சீனாவில் வளர்வதினின்றும தடுக்கப்பட முடியும் என்று சன்யாட்-சென் நினைத்தார். அவருடைய சொந்த வார்த்தைகளில் சொல்லுவதென்றால், ''அரசியல் புரட்சி மற்றும் சமுதாயப் புரட்சி ஆகிய இரண்டுமே ஒரே அடியில் நிறைவேற்றப்பட்டு விடும்'' அதாவது ஜனநாயகப் புரட்சியின் கடமைகளும், சோஷலிசப் புரட்சியின் கடமைகளும் ஏககாலத்தில் நிறைவேற்றப்பட முடியும் என்ப

நடத்தப்பட்டன அல்லது அவற்றின் கட்டுப்பாட்டில் வைக்கப் பட்டிருந்தன. சுரங்கத் தொழிலில், அந்நிய மூலதனம் ஏகபோக நிலையைப் பெற்றது. 1913ம் ஆண்டில், நாடு முழுவதிலும் நிலக்கரியின் மொத்த உற்பத்தி 12,879,770 டன்னை எட்டி யிருந்தது; இதில், 7,136,545 டன்கள் அல்லது 55.4 சதவீதம் ஏகாபத்தியவாதிகளின் ஏகபோக மூலதனத்தினால் கட்டுப் படுத்தப்பட்டிருந்தது. இரும்பு உற்பத்தியில், ஏகாதிபத்திய ஏக போகம் இன்னும் மிக அதிகமான சக்திவாய்ந்ததாக இருந்தது. 1911ம் ஆண்டில் மொத்த தேசிய உற்பத்தியான 459,7!1 டன் கள் முழுவதும் ஜப்பானிய மூலதனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது.

தனியாருக்குச் சொந்தமான தொழில்கள் படிப்படியாக அதிகரித்ததோடு, சீனாவின் தேசிய தொழில் துறை சில ஆரம்ப அபிவிருத்திகளை அடைந்தது. 1911ம் ஆண்டில், சீனாவில் தொழிற்சாலைகள் மற்றும் சுரங்கங்களின் மொத்த மூலதனம் 159, 654, 812 வெள்ளி டாலர்களை எட்டிப்பிடித்தது; இதில் தனியாருக்குச் சொந்தமான தொழிற்சாலைகள் மற்றும் சுரங்கங் களின் மூலதானம் 88, 552, 367 டாலர்களாக இருந்தது. அதா வது, மொத்த மூலதனத்தில் பாதியாகஇருந்தது.சீனாவின் தேசிய தொழில் துறையில் நிலக்கரி மற்றும் இரும்பு சுரங்கத் தொழிலும், பஞ்சாலைத்தொழிலும் ஆதிக்கம் செலுத்தின. இவ்விரு தொழில் பிரிவுகளிலும், சீனாவின் மூலதனத்தின் பங்கு பின்வருமாறு இருந்தது: சுரங்கம் மற்றும் உலோகத் தொழில் 41,315,992 டாலர்கள்; பஞ்சாலைகள் 40,778,689 டாலர்கள்.

சீன மற்றும் அந்நியருக்குச் சொந்தமான இந்தத்தொழிற் சாலைகளிலிருந்து, இயந்திரத் தொழிலாளர்களின் மற்றொரு அணி தோன்றியது.

முதல் உலகயுத்தம் வந்ததிலிருந்து, ஐரோப்பாவிலுள்ள ஏகாதிபத்திய அரசுகள் தங்களது ராணுவ நடவடிக்கைகளோடு சுறுசுறுப்பாக இருந்தமையால், சீனாவின்மீது தங்களது ஆக்கிர மிப்பை தற்காலிகமாக தளர்த்தி இருந்தன; இந்த முறையில் சீனாவின் தேசிய தொழிலும், வர்த்தகமும் அபிவிருத்தி அடைய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது.1914ஆம் ஆண்டில் பஞ்சாலைகளில் 544,780 ஆகஇருந்த கதிர்கள் 1919ஆம் ஆண்டில்658,748 கதிர் களாக உயர்ந்தன.மூலப்பொருளான பட்டின் ஏற்றுமதி1913ஆம் ஆண்டில் 70,150 டானி[9] லிருந்து, 1919ஆம் ஆண்டில் 118,028 டானாக அதிகரித்தது. ஷாங்கய் நகரிலிருந்து சீனப் பஞ்சாலை களில் கதிர்களின் எண்ணிக்கை 1914ஆம் ஆண்டில் 160,900

என்று இருந்ததிலிருந்து 1919ஆம் ஆண்டில் 216,236 ஆகஉயர்ந்தது. பட்டு உற்பத்தித் தொழிற்சாலைகளில் இருந்த ராட்டுகளின் எண்ணிக்கை 1914ஆம் ஆண்டில் 14,424 ஆக இருந்ததிலிருந்து 1919ஆம் ஆண்டில் 18,306 ஆக உயர்ந்தது. இந்த காலகட்டத்தில், பஞ்சாலைகளில் தூற்கப்பட்ட நூலின் ஒரு கட்டுக்கு கிடைத்தலாபம் 1914ஆம்ஆண்டில் 19.58 வெள்ளிடாலர்களாக இருந்ததிலிருந்து 1919ம் ஆண்டில் 70.56 டாலர்களாக அதிகரித்தது. அந்நிய வர்த்தகம் சம்பந்தப்பட்டமட்டில், இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளின் குறியீட்டு எண்ணை 1913ஆம் ஆண்டில் 100 என்று எடுத்துக் கொண்டால், 1919ஆம் ஆண்டில் இறக்குமதிகளின் குறியீட்டு எண் 156.4 ஆகவும், ஏற்றுமதிகளின் குறியீட்டு எண் 113.5 ஆகவும் இருந்தது.

ஏகாதிபத்தியவாதிகள் தற்காலிகமாக தங்களது ஆக்கிரமிப்பை தளர்த்திய பொழுதுமட்டுமே சீன தேசிய முதலாளித்துவம் வளர்வதற்குச் சந்தர்ப்பத்தைப் பெற்றது என்றால், சீனாவின் தேசியத் தொழில்கள் இயல்பாகவே அபிவிருத்தி குன்றியிருந்தன. 1920ஆம் ஆண்டில், சீனாவின் பஞ்சாலைகளிலிருந்த 1,550,840 கதிர்களின் மொத்த எண்ணிக்கையில், ஏகாதிபத்தியவாதிகள் 41.9 சதவீதத்தை சொந்தமாக வைத்திருந்தார்கள்; மேலும், நிலக்கரியின் மொத்த உற்பத்தியான 21,318,825 டன்களில், 50. 9 சதவீதம் ஏகாதிபத்தியவாதிகளின் உடமையாக இருந்தது. இரும்பின் மொத்த உற்பத்தி 258,868 டன்களாக இருந்தது; இந்த உற்பத்தி முழுவதும் ஜப்பானிய மூலதனத்தினால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

1915 ம் ஆண்டின் புள்ளி விவரங்களின்படி, சீனாவில் சுமார் ஒரு கோடி தொழிலாளர்கள் (கைவினைத் தொழிலாளர்கள் உள்பட)இருந்தார்கள்; அவர்களில் 6 லட்சத்துக்கு அதிகமானவர்கள் அல்லது 6 சதவீதம் பேர் தொழிற்சாலைகளில் பணியாற்றினார்கள். மிகப் பெரும்பாலான நவீன தொழிற்சாலைகள் சிறு தொழிற்சாலைகளாகவே இருந்தன. 1913ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டிருந்த 565 தொழிற்சாலைகளின் மூலதனத்தின் மொத்த தொகை 5 கோடி வெள்ளிடாலர்களாக இருந்தது. இத்தகைய தொழிற்சாலைகளில் 479 தொழிற்சாலைகள் ஒவ்வொன்றும் 100,000 டாலர்களுக்கும் குறைவான மூலதனத்தையே பெற்றிருந்தன; 66 தொழிற்சாலைகள், ஒவ்வொன்றும் 100,000 டாலரிலிருந்து 500,000 டாலர் வரை மூலதனத்தைப் பெற்றிருந்தன; 20 தொழிற்சாலைகள் மட்டுமே (4 சதவீதத்திற்

கும் குறைவான தொழிற்சாலைகள் மட்டுமே) ஒவ்வொன்றும் 500,000 டாலர்களுக்கும் அதிகமான மூலதனத்தைப் பெற்றிருந்தன.

பிரிட்டிஷ், பிரெஞ்சு மற்றும் ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகள் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த பொழுது, ஜப்பானிய ஏகாதிபத்திய வாதிகளும், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் சீனாவில் தங்களுடைய ஆக்கிரமிப்பைத் தீவிரப்படுத்துவதற்கு விரைந்தார்கள். யுத்தம் நடந்த சமயத்தில், பிரிட்டனும் பிரான்சும் தங்களது பிடிப்பைத் தற்காலிகமாகத் தளர்த்திய போதிலும், சீனாவில் அவர்களது வலிமை அப்படியேதான் இருந்தது; மேலும் யுத்தம் முடிந்த உடனேயே தங்களது ஆக்கிரமிப்பை மீண்டும் துவக்குவதிலும், தீவிரப்படுத்துவதிலும் அவர்கள் கொஞ்சநேரத்தைக் கூட வீணாக்கவில்லை.

சீனாவின் மீது நடத்திய ஏகாதிபத்தியப் பொருளாதார ஆக்கிரமிப்பின் குணாதிசயரீதியான அம்சங்கள் பின்வருமாறு:

முதலாவதாக அந்நிய முதலீடுகள் பெரும்பாலும் நேரடியான முதலீடுகளின் வடிவிலேயே இருந்தன. சீனாவில் அவர்கள் ஆரம்பித்த கம்பெனிகளின் மூலம், சீனாவின் இயந்திரத் தொழில் முழுவதையும் ஏகாதிபத்தியவாதிகள் கட்டுப்படுத்தினார்கள்; மேலும், அவர்களது தொழிற்சாலைகள் சீனமுதலாளிகள் நடத்திய தொழிற்சாலைகளைக் காட்டிலும் மிகவும் அதிகமாக இருந்தன. சீனாவின் இயந்திர தொழில் மூலம் பொருட்களை ஏகாதிபத்தியவாதிகள் கொள்ளை அடித்ததின் விளைவாக, சீனாவின் செல்வாதாரங்கள் பெரும் அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டன; மற்றும் சீனாவின் கன இயந்திரத் தொழில் மிகவும் பின்தங்கியதாகவே இருந்தது. 1919 ஆம் ஆண்டின் தேசீய உற்பத்தியில் இரும்புத்தாது 1,009,542 டன்களாக இருந்தது; அதில், 662,632 டன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இரும்பு உற்பத்தி 442,594 டன்களாக இருந்தது; ஆனால், இரும்பு இறக்குமதியின் அளவு 325,158 டன்களாக இருந்தது அல்லது உள்நாட்டு உற்பத்தியில் 70 சதவீதமாக இருந்தது.

இரண்டாவதாக, அந்நிய முதலீடுகள். அதன் தன்மையில் வியாபார ரீதியாகவே இருந்தன. 1914ம் ஆண்டில், அந்நிய தொழிற்சாலைகளின் மொத்த மூலதனம் 100 கோடி அமெரிக்க டாலர்களாக இருந்தது. இந்தத் தொகையில், 83.1 சதவீதம் வியாபாரத்தில் முதலீடு செய்யப்பட்டிருந்தது; இயந்திர தொழில் முதலீடுகள், அதாவது உற்பத்தித் தொழில்களிலும், சுரங்கத் தொழிலிலும் போடப்பட்டிருந்த முதலீடுகள் 16.9 சதவீதமாக

மட்டுமே அமைந்திருந்தன. அநேக தொழிற்சாலைகள் இறக்குமதி செய்யப்பட்ட உறுப்புகளை இணைக்கும் தொழிற்கூடங்களாகவும் பழுதுபார்க்கும் தொழிற்கூடங்களாகவும் இருந்தன. பெரும்பாலும் வர்த்தக மூலதனமாக அமைந்திருந்த அந்நிய முதலீடுகளின் ஊடுருவல் சீனாவின் இயற்கைப் பொருளாதாரத்தின் அஸ்திவாரத்தை உலுக்கி, முதலாளித்துவத்தின் அபிவிருத்தியை ஊக்குவித்தது; ஆனால் உண்மையில், சீனாவின் நவீன தொழில்களிடையே, பஞ்சாலைத் தொழில் மட்டுமே சிறிதளவிற்கு அபிவிருத்தி அடைந்திருந்தது.

மூன்றாவதாக, சீனா அந்த சமயத்தில், சில ஏகாதிபத்திய நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது; ஆனால் அவர்களுடைய பொருளாதார ஆக்கிரமிப்பின் அபிவிருத்தி சீரற்றதாக இருந்தது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில், சீனாவைக் கட்டுப்படுத்திய முக்கிய ஏகாதிபத்திய நாடுகளாக பிரிட்டன், ஜெர்மனி, ஜாரிஸ்ட் ரஷ்யா மற்றும் பிரான்ஸ் ஆகியவை இருந்தன. 20வது நூற்றாண்டின் ஆரம்பத்தில், அமெரிக்க மற்றும் ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் சீனாவில் தங்களுடைய ஆக்ரமிப்பைத் தீவிரப்படுத்தினார்கள்; அதன் விளைவாக, சீனா ஆறு அரசுகளின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. பிரிட்டன், ஜெர்மனி, ரஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய ஆறு அரசுகளின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. அக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு, சோவியத் யூனியன், சீனாவில் ஜாரிஸ்ட் ஆட்சி அனுபவித்த சகல சலுகைகளையும் ஒழித்தது; மற்றும் இரு நாடுகளுக்குமிடையே இருந்த சகல சமத்துவமற்ற உடன்படிக்கைகளையும் ரத்து செய்தது. யுத்தத்தில் ஏற்பட்ட தோல்வியின் காரணமாக, ஜெர்மனியும் நழுவி விட்டது. இந்த முறையில் முதலாவது உலகயுத்தத்திற்குப் பிறகு, பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு சீனா கொள்ளையடிக்கும் தளமாக மாறிற்று.

சீனாவில் முதலாளித்துவத்தின் அபிவிருத்தி, சீனத் தொழிலாளி வர்க்கத்தின் வளர்ச்சியோடு ஒன்றியிருந்தது. யுத்த காலத்தில், சீனத் தொழிலாளி வர்க்கம் அதனுடைய அணிகளை விரிவுபடுத்தி அதனுடைய பலத்தை அதிகரித்துக் கொண்டது. சீனாவில் ஏகாதிபத்தியவாதிகளால் நிறுவப்பட்ட தொழிற்சாலைகளுடன் பிறந்த சீன தேசிய முதலாளித்துவத்தின் பிறப்பிற்கு முந்திய காலத்திலேயே பிறந்த சீன தொழிலாளிவர்க்கம் தேசிய முதலாளிவர்க்கத்தைக் காட்டிலும் மிகவும் நீண்டதொரு வரலாற்றினையும், மிகவும்

அதிகமான பலத்தையும் கொண்டது என்பதில் பெருமை கொள் கிறது. ஏகாதிபத்தியவாதிகள் ஆக்கிரமிப்பு தனக்கு சவக்குழி தோண்டுகிறவர்களை உருவாக்கியது. அதாவது. சீனத் தொழிலாளிவர்க்கத்தைப் படைத்து நாளுக்கு நாள் அதனை மேலும் பலமடையச் செய்தது. சீனத் தொழிலாளிவர்க்கம் 20 லட்சம் பேர்கொண்ட பலமிக்கதொரு முன்னேறியவர்க்கமாக ஆயிற்று. மேலும் அரசியல் உணர்வோடு, போராடும் சித்தத் துடன் கூடிய பலமிக்கதொரு முன்னேறிய வர்க்கமாக பரிணமித் தது. மிக மிக முன்னேறிய பொருளாதார வடிவத்தோடு அதற் கிருந்த பிணைப்பு, அதனுடைய பலமான ஸ்தாபன உணர்வு மற்றும் தனியாருக்குச் சொந்தமான உற்பத்திச் சாதனங்கள் இல் லாமை போன்ற இப்படிப்பட்ட,பொதுவில் தொழிலாளி வர்க்கத் திற்குரிய, பிரதான, பலமான அம்சங்களை அது கொண்டிருந்தது. முன்னேறிய உற்பத்திப் பொருளாதார உருவத்தோடு அதற்கிருந்த பிணைப்பு அதற்கு முன்பு மாபெரும் வருங்காலத் தோடு கூடியதொரு வர்க்கமாக அதனைச் செய்தது.

உற்பத்தி, ஸ்தாபன ரீதியானதொரு முறையிலும் மற்றும் திட்டமிட்ட வழியிலும் நடைபெற்றுக் கொண்டிருந்த தொழிற் சாலைகளில் பணியாற்றிக்கொண்டும், மற்றும் எல்லா நடவடிக் கைகளும் இயந்திரத்தினால் வரம்பிற்குட்பட்டதாக்கப்பட்டும், பரஸ்பரம் சார்ந்து நிற்பதாகவும் உள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றிக் கொண்டுமிருந்த தொழிலாளி வர்க்கம் தன்னை மிக சுலபமாக ஸ்தாபனத்திற்கு வழங்கிக்கொண்டது. உற்பத்திச் சாதனங்களைப் பெற்றிராத, தங்களது உழைப்புச் சக்தியை விற்று தங்களது கூலியை மட்டுமே சார்ந்து வாழ்ந்து வருகிற கூலித் தொழிலாளர்களால் தொழிலாளி வர்க்கம் உண்டாக்கப்பட்டிருந்தது. இந்த அம்சமே தொழிலாளி வர்க் கத்தை எல்லா வர்க்கங்களிலும் மிகப் புரட்சிகரமான வர்க்க மாகச் செய்தது. இத்தகைய அடிப்படையான பலமான அம்சங் கள் உலகம் முழுவதிலுமுள்ள தொழிலாளி வர்க்கத்தினால் பகிர்ந்து கொள்ளப்பட்டிருந்தது.

சகல நாடுகளிலுமுள்ள தொழிலாளிகளுக்கும் பொதுவாக உள்ள குணாம்சங்களைத் தவிர, சீனத் தொழிலாளிவர்க்கம் அதற்கே உரித்தான சிறப்பான அம்சங்களையும் பெற்றிருந்தது

முதலாவதாக, ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் மற்றும் முதலாளித்துவம் ஆகியவற்றின் மூன்று விதமான ஒடுக்குமுறை யின் கீழ், சீனத் தொழிலாளி வர்க்கம் அவதிப்பட்டது. தொழிலாளர் காண்ட்ராக்ட் முறை[10], "அப்ரெண்டீஸ் முறை

கள்'' முதலியனவற்றில் காணப்பட்டது போல், நவீன தொழிற்சாலைகளில் கூட இன்னும் பலமாக நிலப்பிரபுத்துவச் சுரண்டல் வாடை வீசிக் கொண்டிருந்தது. வேலைநாள் மிதமிஞ்சிய அளவுக்கு நீண்டதாக இருந்தது; குறைந்த பட்சம் 10 மணி நேரமாகவும், சில இடங்களில் 16 மணி நேரமாகவும் கூட இருந்தது. கூலிகள் மிகவும் குறைவாக இருந்தன. நாள் ஒன்றுக்கு 20 அல்லது 30 பென் மட்டுமே கிடைத்தன. ஒரு தொழிலாளியையும் அவரது குடும்பத்தையும் உயிர்வாழச் செய்வதற்கு இதுபோதாது. தாய்மார்களும் குழந்தைகளும் சமமாக நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டியிருந்த போதிலும், அவர்களுக்கு மிகவும் குறைவான கூலிகளே கொடுக்கப்பட்டன. சம்பளம் கொடுப்பதில் அயல்நாட்டுத் தொழிலாளிகளுக்கும், சீனத் தொழிலாளிகளுக்குமிடையே மிகப்பெரியதொரு ஏற்றத்தாழ்வு இருந்தது; ஒரு அயல்நாட்டுத் தொழிலாளி (இங்கிலீஷ்), ஒரு சீனத் தொழிலாளி பெற்று வந்தது போல், ஏழு மடங்கு சம்பளம் பெற்று வந்தார். மனிதர்களைக் காட்டிலும், முதலாளிகள் தங்களுடைய இயந்திரங்களின் விஷயத்தில் மிக அதிகமான அக்கறையோடு இருந்தமையால், தொழிற்சாலைகளிலும், சுரங்கங்களிலும் எந்தவிதமான பாதுகாப்புச் சாதனங்களும் பொறுத்தப்படவில்லை. இதன் விளைவாக, விபத்துகள் மிகவும் அடிக்கடி நடந்தன; எண்ணற்ற தொழிலாளிகள் உயிரிழந்தனர், அல்லது அங்க ஊனமாக்கப்பட்டனர். தொழிலாளர் காப்பீட்டு நிதி இல்லாதிருந்தமையால், தேவைகளினாலும், வயது முதிர்ச்சியினாலும், நோயினாலும், மரணத்தாலும், அங்க ஊனங்களினாலும் தொழிலாளர்கள் இடைவிடாமல் அபாயத்திற்கு உள்ளாக்கப்பட்டனர். அவர்கள் சகல வகைப்பட்ட பேச்சுரிமை, கூட்டம் கூடும் உரிமை, சங்கம் வைக்கும் உரிமை, வேலை நிறுத்தம் செய்யும் உரிமை ஆகியவை பறிக்கப்பட்டிருந்தார்கள்; அவர்கள் எந்தவிதமான ஜனநாயக உரிமைகளையும் பெற்றிருக்கவில்லை. மூன்று விதமான ஒடுக்குமுறை மற்றும் சுரண்டலின் காரணமாக, இதர எந்த வர்க்கத்தினாலும் மிஞ்ச முடியாத அளவிற்கு புரட்சிப் போராட்டத்தில் முழுமைத் தன்மையையும், உறுதியையும் சீனத் தொழிலாளிவர்க்கம் பெற்றிருந்தது.

இரண்டாவதாக, சீனத் தொழிலாளி வர்க்கம் மிகவும் குவிந்ததாக இருந்தது. சீனத் தொழில்கள் குவிந்து கிடந்தமையால் இது உருவாக்கப்பட்டிருந்தது. வர்த்தக ரீதியில் பார்த்தால் தொழிலாளிகள் ரயில்வேக்களிலும், சுரங்கத் தொழிலிலும், கப்பல்

போக்குவரத்து தொழிலிலும், பஞ்சாலை மற்றும் கப்பல் கட்டும் தொழில்களிலும் ஒன்றிணைக்கப்பட்டு இருந்தார்கள். பூகோள ரீதியாகப் பிரித்துப் பார்த்தால், ஷாங்காய், டீன்ட்சின், சிங்டாவோ, வூகான்[12], காண்டன் போன்ற பெரு நகரங்களில் அவர்கள் குவிந்து கிடந்தார்கள். கடைசியாக, தொழிற்சாலைகள் என்ற முறையில் பார்த்தால், பெரும்பாலும் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் 500 பேருக்கு மேல் வேலை செய்யும் பெருந் தொழிற்சாலைகளில்தான், அவர்களில் பெரும்பாலோர் வேலை செய்து வந்தார்கள். 1919ஆம் ஆண்டில் பீகிங் அரசாங்கத்தின் விவசாயம் மற்றும் வர்த்தக அமைச்சகத்தினால் தயாரிக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி, ஒவ்வொரு தொழிற்சாலையிலும் 500க்கும்மேற்பட்ட தொழிலாளிகள் வேலை செய்த 144 தொழிற்சாலைகளும், ஒவ்வொரு தொழிற்சாலையிலும் 1000க்கும் அதிகமானதொழிலாளிகள் வேலை செய்த29 தொழிற்சாலைகளும் 13 மாகாணங்களில் இருந்தன. தொழிலாளி வர்க்கத்தின் குவியல் அதனுடைய வர்க்க உணர்வினை வெளிப்படுத்துவதையும், அவர்களுடைய போராட்டங்களில் தொழிலாளர்களின் அறிவையும், பலத்தையும் திரட்டவும் சாத்தியமாகச் செய்தது, இதன் விளைவாக சீனத்தொழிலாளி வர்க்கம் ஏராளமான போராடும் சக்தியைப் பெற்றிருந்தது. மேலும், சீனாவில் நகரங்கள் ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் குவிமையங்களாக இருந்ததால், தொழிலாளிகளின் போராட்டம் ஏகாதிபத்தியவாதிகளுக்கு நேரடியானதொரு அபாயமாக அமைந்திருந்தது.

மூன்றாவதாக, எண்ணிக்கையில் இருபது லட்சமாக இருந்த போதிலும், சீன இயந்திரத் தொழிலாளிகள், இதர உழைக்கும் மக்களிடையே அதாவது, ஒருகோடிக்கும் அதிகமான கைவினைத் தொழிலாளர்கள், கடைச் சிப்பந்திகளிடையேயும் மற்றும் கோடிக்கணக்கான விவசாயத்தொழிலாளிகள் மற்றும் ஏழை விவசாயிகளிடையேயும் இயல்பான நேசசக்திகளைப் பெற்றிருந்தார்கள். பெரும்பாலான தொழிலாளிகள் பூர்வோத்திரத்தில் ஓட்டாண்டிகளான விவசாயிகளாக இருந்தமையால், அவர்கள், விவசாயிகளோடு இயல்பான தொடர்புகளைக் கொண்டிருந்தார்கள். நகர்ப் புறங்களிலும் கிராமப் புறங்களிலுமிருந்த இத்தகைய பாட்டாளிகளும், அரைப் பட்டாளிகளும் நாட்டின் மக்கட் தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்களாக இருந்தார்கள்; மேலும், தொழிலாளி வர்க்கம் அதனுடைய புரட்சிப் போராட்டங்களை நடத்துவதற்கும் மற்றும் விவசாயிகளோடு ஒரு பலமான கூட்டணியை ஏற்

படுத்திக் கொள்வதற்கும் உறுதியானதொரு அடித்தளமாகவும் அமைந்திருந்தார்கள். சீனத்தொழிலாளி வர்க்கம் அதனுடைய போராட்டங்களை விட்டுக்கொடுக்காத சித்தத்தோடும், பரவலான பங்கெடுப்போடும் ஏன் நடத்திற்று என்பதனையும் மற்றும் ஏராளமாகக் குவிந்துகிடந்த போராடும் சக்தியினை அது வெளிப்படுத்திற்று என்பதனையும் சீனத் தொழிலாளிவர்க்கத்தின் மேற் கூறிய குணாதிசயங்கள் விளக்கிக் கூறுகின்றன. சீனத் தொழிலாளிவர்க்கம் மார்க்சிய-லெனியத்தோடு தொடர்பு கொண்டு அதனுடைய சொந்த அரசியல் கட்சியை—சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை—அமைத்த உடனேயே, கட்சியின் தலைமையின் கீழ் சீனப் புரட்சியில் அது தலைமை தாங்கும் வர்க்கமாக ஆயிற்று.

சீனத் தொழிலாளி வர்க்கம், 1919 ஆம் ஆண்டு நடைபெற்ற மாணவர் இயக்கத்திற்கு வெகுகாலத்திற்கு முன்பாகவே புரட்சிப் போராட்டங்களில் பங்கெடுத்திருந்தது; ஆனால், அப்பொழுது அது வகித்திருந்த பாத்திரம் பூர்ஷுவா வர்க்கத்தை பின்பற்றிச் செல்வதாக மட்டுமே இருந்தது; இன்னும், அதற்கே உரித்தான அரசியல் கோரிக்கைகளைப் பற்றி உணர்வு பெறாமலும், போராடுவதற்கான திட்டத்தைப் பற்றிய உணர்வு பெறாமலும், அது இருந்து வந்தது. ஒரு சில உதாரணங்களைச் சொல்லலாம்: 1906ம் ஆண்டில், அன்யூவான் நிலக்கரிச் சுரங்கத்தில் 6000 சுரங்கத் தொழிலாளர்கள் ஒரு பேரெழுச்சியில் பங்கெடுத்தார்கள்: இந்தப் பேரெழுச்சிக்கு பிங்சியாங்கில் (கியாங்சி மாகாணத்தில்), லியூயாங் மற்றும் லைலிங் (இவை இரண்டும் ஹுன்னான் மாகாணத்தில் உள்ளன) ஆகிய இடங்களில் டங்மெங்ஹுவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 1911ஆம் ஆண்டில் நடைபெற்ற புரட்சியில், சுங்கிங்-ஹாங்கவ் ரயில்வேயை நிர்மாணித்துக் கொண்டிருந்த தொழிலாளிகளும் பூர்ஷுவா இயக்கத்திற்குச் செவிமடுக்கும் முறையில் "ரயில்வேக்களை தேசியமயமாக்குவதற்கு" சிங் அரசாங்கம் செய்த முயற்சிக்கு எதிராக ஒரு பேரெழுச்சியை நடத்தினார்கள்.

மேலும், தங்களுடைய வாழ்க்கை நிலைமைகளின் அபிவிருத்திக்காக, தொழிலாளிகள் பல பொருளாதாரப்போராட்டங்களை நடத்தினார்கள்; தங்களுடைய அன்றாடப் பயணங்கள் அதிகரித்ததை எதிர்த்து பீகிங் தபால் தொழிலாளர்கள் 1913 ஆம் ஆண்டில் நடத்திய வேலைநிறுத்தம், மதிப்புக்குன்றிய நாணயத்தில் கூலிகள் பட்டுவாடா செய்யப்படுவதை எதிர்த்து ஹன்யாங் தளவாடசாலைத் தொழிலாளர்கள் நடத்திய வேலை நிறுத்தம்

மற்றும் கூலியை அதிகரிக்கக் கோரி ஒரு பகுதி தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்திற்கு ஆதரவாக ஷாங்காய் நகரத்தில் சீனவியாபாரிகள் நீராவிக் கப்பற்போக்குவரத்துக் கம்பெனி, மற்றும் பிரிட்டிஷ்காரர்களுக்குச் சொந்தமான பட்டர் பீல்டு மற்றும் ஸ்வைர், மற்றும் ஜார்டைன், மாத்திசன் அன் கோ ஆகியவற்றைச் சேர்ந்த தொழிலாளிகள் 1914ஆம் ஆண்டில் நடத்திய பொது வேலை நிறுத்தம் ஆகியவை இப்படிப்பட்ட வேலை நிறுத்தங்களாகும். மேலும், ஷாங்காய் நகரத்திலும் மற்ற இடங்களிலும் 1916ஆம் ஆண்டிலிருந்து 1919ஆம் ஆண்டு வரையிலும் கூலி உயர்வு கோரி எண்ணற்ற வேலை நிறுத்தங்கள் நடைபெற்றிருந்தன.

வெற்றி பெறும் பொருட்டு சாத்தியமான ஒவ்வொரு உருவத்திலும் தொழிலாளிகள் ஸ்தாபனங்களை அமைத்தார்கள். கி லாவோ ஹூ (சகோதரர் சங்கம்), லாவோ சுன் ஹூ (த்யாவோயிஸ்ட் சங்கம்), போன்ற இரகசிய சங்கங்களையும் மற்றும் பல தொழில் கில்டுகள் மற்றும் பிரதேச கில்டுகள் போன்ற ஸ்தபானங்களையும் தொழிலாளிகள் நிறுவினார்கள். ஆனால் இந்த ஸ்தாபனங்கள் தொழிலாளிகளை வெற்றியை நோக்கி அழைத்துச் செல்ல முடியவில்லை; ஏனெனில், அவை வழக்கமாகவே தரகர்களாலும், குண்டர்களாலும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

அதனுடைய பலத்தின்கம்பீரமான வளர்ச்சியின் காரணமாக, சீனத் தொழிலாளி வர்க்கம் நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார வாழ்க்கையில் அதிகரித்து வரும் முக்கியமானதொரு பாத்திரத்தை வகித்துக் கொண்டு வந்தது. ஏகாதிபத்திய மற்றும் நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறையும், சுரண்டலும் தீவிரமானதாலும், சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்தின் செல்வாக்கை, சீனத் தொழிலாளி வர்க்கம் கொண்டிருந்தாலும் அதன் அரசியல் உணர்வு துரிதமாக உயர்ந்தது.

### 3. சீனப்புரட்சியின் மீது அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியின் செல்வாக்கு.

1917ல் நடைபெற்ற அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சி சீன வரலாற்றிலும், உலக வரலாற்றிலும் அடிப்படையானதொரு மாற்றத்தைக் கொணடுவந்தது; சீனப் புரட்சியின் மீது ஆழமான பாதிப்பைக் கொண்டதாகவும், தீர்க்கமானதாகவும் இருந்தது.

(1) அவர்களுடைய விடுதலைக்கான போராட்டத்தில்,

அக்டோபர் புரட்சி சீனமக்களிடம் மகத்தான நம்பிக்கையை உண்டாக்கிற்று. ரஷ்ய பாட்டாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்பட்ட, ரஷ்ய மக்களால் பெறப்பட்ட வெற்றியிலிருந்தும் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் அவர்களது முதல் அரசு நிறுவப்பட்டதிலிருந்தும், சோவியத் ரஷ்யாவில் முன்பு ஒடுக்கப்பட்டிருந்த தேசிய இனங்கள் தற்போது அனுப விக்கும் சுதந்திரம் மற்றும் விடுதலையிலிருந்தும், ஜெர்மன்-ஆஸ்திரிய ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சியிலிருந்தும் இவ்விரு நாடுகளில் புரட்சி வெடித்ததிலிருந்தும், மற்றும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் பிரெஞ்சு ஏகாதிபத்தியமும் பலவீனமடைந்த திலிருந்தும், சீனமக்கள் தங்கள் நாட்டின் விடுதலைக்கான புதிய தொரு நம்பிக்கையைப் பார்த்தார்கள். ஜார், பிரபுக்கள், அதி கார வர்க்கத்தினர், ராணுவ ஆதிக்கம் மற்றும் முதலாளித்துவம் போன்ற சமுதாய முன்னேற்றத்திற்கான எல்லாத் தடங்கல் களையும் அகற்றிவிட்டு ரஷ்யப் பாட்டாளி வர்க்கம் ஏகாதி பத்திய உலக அமைப்பின் தவிர்க்க முடியாத அழிவினைப் பிரகடனம் செய்திருந்தது. அவர்களுடைய வெற்றி போராடு வதற்கான சீனமக்களின் சித்தத்திற்கு சக்திமிக்கதொரு ஊக்குவிப் பாக இருந்தது.

(2) மேற்கத்திய நாட்டுப் பாட்டாளி வர்க்கத்திற்கும் கிழக் கத்திய நாட்டு ஒடுக்கப்பட்ட மக்களுக்குமிடையே அக்டோபர் புரட்சி ஒரு பாலத்தை எழுப்பிற்று. இதனுடைய அர்த்தம் என்ன வென்றால், அக்டோபர் புரட்சிக்குப் பிறகு, உலகப் புரட்சியின் ஒரு பாசறை நிர்மாணிக்கப்பட்டது என்பதாகும்; அந்தப் பாசறை லெனினிசப் பதாகையின்கீழ் தேசவிடுதலை இயக் கங்களுக்கு நிபந்தனையற்ற உதவியைக் கொடுத்தது. சோஷ லிஸ்ட் சோவியத் யூனியனுடைய ஆதரவை வைத்துக்கொண்டு, அப்பொழுது காலனி நாடுகளில் நடைபெற்ற புரட்சி உலகப் பாட்டாளிவர்க்கப் புரட்சியின் பகுதியாக மாறிற்று. லெனினும் ரஷ்ய மக்களும் சீன மக்களை ஆர்வத்தோடு நேசித்தார்கள்; மற்றும், சீனப்புரட்சி ஆழம் காணமுடியாததொரு சக்தியைப் பெற்றிருப்பதாகக் கருதினார்கள். அவர்களது புரட்சிப் போராட் டத்தில் சீன மக்களிடம் ஆழ்ந்த அனுதாபம் கொண்டும், மற்றும் சர்வதேசியம் என்ற பாட்டாளி வர்க்கக் கோட்பாட்டிற்கு முழு இணக்கமான முறையிலும், சீன மக்களின் விடுதலை இயக்கத் திற்கு, விடுதலைப் போராட்ட காலகட்டம் முழுவதிலும் அவர் கள் இடைவிடாத ஆதரவை அளித்தார்கள். 1919ஆம் ஆண்டி லும் 1920ஆம் ஆண்டிலும், சீனா சம்பந்தமாக சோவியத்

அரசாங்கம் இரண்டு அறிக்கைகளை வெளியிட்டது; அவ்வறிக்கைகளில், ஜாரிஸ்ட் ரஷ்யாவினால், கைப்பற்றப்பட்ட சகல சலுகைகளையும் ஒழித்துக் கட்டுவதாகவும், மற்றும் சீனாவிலிருந்து ஜாரிஸ்ட் அதிகாரிகளை விலக்கும்படிக் கோருவதாகவும் பிரகடனம்செய்தது. இந்த முறையில், சீனாவில் சலுகைகள் கோரும் பாரம்பரியத்தை விட்டொழித்த முதல் அரசாக சோவியத் யூனியன் திகழ்ந்தது. சோவியத் அரசாங்கத்தினால் காட்டப்பட்ட உன்னதமான சர்வதேச உணர்வினை சீனமக்கள் உற்சாகமாக வரவேற்றனர். அக்டோபர் புரட்சியின் வெற்றியைப் பற்றி இளம் மாணவர்களும், பத்திரிக்கைகளும் தன்னெழுச்சியாக பிரச்சார வேலையை ஆரம்பித்தனர். உலக ராஜதந்திர உறவின் வரலாற்றில், சோவியத் அயல்நாட்டுக் கொள்கை ஒரு புதிய ஆரம்பத்தைக் குறித்தது என்பதை உணர்ந்து கொண்டு, புதிதாகப் பிறந்த சோவியத் அரசை, ''நீதி மற்றும் மனித குலத்தின் செல்லக் குழந்தை'' என்று சீன மக்கள் புகழ்ந்து பாராட்டினார்கள்; மற்றும், ரஷியத்தொழிலாளிகள், விவசாயிகள் மற்றும் சிப்பாய்களை, ''உலகத்திலுள்ள மிக மிக நேசிக்கத்தக்கவர்கள்'' என்றும் சீனமக்கள் புகழ்ந்து பாராட்டினார்கள். இந்த முறையில் தட்டி எழுப்பப்பட்டிருந்த சீன மக்கள், யுத்தப் பிரபுக்கள் மற்றும் அதிகார வர்க்கத்தினரின் பிற்போக்கு அரசாங்கத்திற்கு எதிராக விடாப்பிடியானதொரு போராட்டம் நடத்துவதற்குத் தங்களைத் தயாரித்துக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

*(3)* அக்டோபர் புரட்சி, மார்க்சிய - லெனினியத்தை சீன மக்களுக்கு கொண்டு வந்தது; மேலும், அவர்களுடைய சொந்த விடுதலைக்கான பாதையையும் அவர்களுக்குக் காட்டிற்று. ''அக்டோபர் புரட்சியின் குண்டு முழக்கங்கள் எங்களை மார்க்சிய லெனினியத்தின்பால் தட்டி எழுப்பிற்று.''[13] தங்களது நாட்டின் வருங்காலத்தைப் பார்க்கவும், மற்றும் பாட்டாளிவர்க்க உலகக் கண்ணோட்டத்தின் வெளிச்சத்தில் தங்களது பிரச்சினைகளைப் புனர் பரிசீலனை செய்வதற்கும் முற்போக்கான சீன அறிவு ஜீவிகளுக்கு இந்தப் பிரபஞ்சரீதியான உண்மை உதவி செய்தது. அவர்கள் மார்க்சிய-லெனினியத்தை தழுவ ஆரம்பித்தார்கள்; தொழிலாளி வர்க்க இயக்கத்தின் அடிப்படையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவினார்கள். ''சீனப் புரட்சியின் ஸ்துலமான நடைமுறையோடு ஒருங்கிணைத்துக் கொண்டதும், மார்க்சிய-லெனினியம் சீனப் புரட்சியை ஒரு புதிய பார்வையை மேற்கொள்ளும்படிச் செய்துள்ளது.''[14]

அக்டோபர் புரட்சியினால் கொண்டுவரப்பட்ட மார்க்சிய-லெனினியம் விடுதலையை நோக்கி முன்னேறுவதில் சீனமக்களின் விடுதலைப் பாதையை ஒளிரச் செய்தது. எனவே, அவர்கள் லெனினையும், ரஷ்ய போல்ஷ்விக் கட்சியையும் தங்களுடைய மாபெரும் ஆசிரியர்களாகவும் நண்பர்களாகவும் கருதுகிறார்கள். அவர்களுடைய போதனைகளிலிருந்துதான் இவர்கள் தங்களது சித்தாந்த பலத்தைப் பெறுகிறார்கள்.

**4. தேசபக்த மே 4ஆம்தேதி இயக்கம். ஜுன் 3ஆம் தேதி இயக்கமும் போராட்டத்தில் சீனத் தொழிலாளிவர்க்கம் பங்கெடுத்தலும். புதிய கலாச்சார இயக்கமும் அதனுடைய அபிவிருத்தியும். சீனாவில் மார்க்சிய—லெனினியம் பரவுதல்.**

மே 4ஆம் தேதி தேசபக்த இயக்கம் புதியதொரு புரட்சிப் புயல் வெடித்ததையும் முற்றும் சீனப்புரட்சி புதியதொரு கட்டத்திற்கு முன்னேறியதையும் குறித்தது.

1911 ஆம் ஆண்டில் நடைபெற்ற புரட்சி, தன்மையில் முதலாளித்துவ-ஜனநாயக ரீதியானதாக இருந்தது. பலமான தலைமை இல்லாமல் இருந்ததின் காரணமாகவும், மற்றும் இதர பல வீனங்களின் காரணமாகவும் புரட்சி சீன நிலப்பிரபுத்துவ சக்திகளுக்கும், அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கும், சில சந்து பொந்துகளை விட்டு வைத்திருந்தது. ஏகாதிபத்தியவாதிகள் யூவான் ஷி-ஹை யை புதிய ஆட்சியளராக ஆதரித்து, இந்த சூழ்ச்சிக்கார துரோகியை தங்களுடைய புதிய கருவியாகப் பயன் படுத்தினார்கள். தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, யுவான் சிங் அரசாங்கத்திற்கும் புரட்சிவாதிகளுக்கு மிடையே ஒரு பூதாகரமான இரட்டை விளையாட்டை விளையாடினான். சிங் சக்கரவர்த்தியை முடித்துறக்கும்படி நிர்ப்பந்திக்கவும், நான்துங்கில் உள்ள புரட்சிவாதிகளை ஒரு சமரசத்திற்கு ஒப்புக்கொள்ளும்படியும் அவன் நிர்ப்பந்தித்தான். ஏகாதிபத்திய வாதிகள் பகிரங்கமாகவோ அல்லது இரகசிரமாகவோ அவனுடைய சூழ்ச்சிகளை ஆதரித்தார்கள். மேலும், அவனை சீனப் பிற்போக்குவாதிகளின் தலைவனாக்கவும் ஏற்பாடு செய்தார்கள்.

1916ஆம் ஆண்டில், முடியாட்சியை மீண்டும் கொண்டு வருவதங்குச் செய்யப்பட்டதொரு சிதைந்து போன முயற்சி யுவான்ஷி-ஹையின் வீழ்ச்சிக்கு வழிநடத்திச் சென்றது. ஐரோப்

பாவிலுள்ள ஏகாதிபத்திய அரசுகள் அப்பொழுது தங்களுக்கிடையே யுத்தத்தில் மிகவும் சுறுசுறுப்பாக மூழ்கி இருந்தமையால்—சீனாவில் தலையிட முடியாத அளவிற்கு மூழ்கி இருந்தமையால்—ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் மற்றொரு வடக்கத்திய யுத்தப்பிரபுவான துவான் ஜீ ஜூவை தங்களுடைய கொத்தடிமைக்கைக் கூலிகளாக்க ஏற்பாடு செய்வதற்கு சந்தர்ப்பத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டார்கள். ஆகவே யுவானின் மரணத்திற்குப் பிறகு உடனடியாக துவான் ஜீ-ஜூ பீக்கிங் அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு வந்தான்.

யுவான்-ஷி-ஹை ஏகாதிபத்திய அரசுகளினால் அவர்களுடைய பொதுவான ஏஜண்டாக அங்கீகரிக்கப் பட்டிருந்தமையால், அவன் அதிகாரத்திற்கு வந்த உடனேயே சிங் அரசாங்கத்தினால் செய்யப்பட்டிருந்த சகல துரோகத்தனமான ஒப்பந்தங்களையும் நிறைவேற்றுவதற்கு ஒப்புதல் கொடுத்திருந்தான். 1913 ஆம் ஆண்டில், அமெரிக்காவினால் தலைமை தாங்கப்பட்டதொரு, ஆறு (6) அரசுகளின் நிதியின் கூட்டமைப்பு சீனாவின் புரட்சி இயக்கத்தை ஒடுக்குவதற்கு 25 மி்லியன் பவுண்டுகள் வரையிலும் பெரியதொரு கடனை வழங்கிற்று. நிதியின் கூட்டமைப்பு, சீனாவின்நிதித்துறையின் மீது நேரடியான மேற்பார்வையைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் கடன் வழங்கப்பட்டது. 1915ஆம் ஆண்டில், யுவான் ஷி-ஹையை "21 கோரிக்கைகளில்"[15] கையெழுத்திடும்படி ஜப்பான் நிர்பந்தித்தது. அப்படி செய்ததின் மூலம் சீனாவின் மீது ஒரு ஏகபோக நிலைமையைப் பெற்றுக் கொண்டது. யுவான் மரணத்திற்குப் பிறகு ஜப்பானிய ஆதரவு பெற்ற துவான்ஜீ-ஜூ அரசாங்கம் தொடர்ச்சியான பல கடன்களை ஜப்பானிடமிருந்து பெற்றது. எல்லாக் கடன்களும் சேர்ந்து 50 கோடி யென் வரை பெற்று இருந்தது. இந்தக் கடன்களைப் பெற்றதற்கு கைமாறாக மஞ்சூரியாவை[16] சுரண்டுவதற்கான உரிமையை ஜப்பானிற்கு சீனர் வழங்கிற்று. இதேபோல் மங்கோலியாவையும், சாந்துங்கையும் சுரண்டுவதற்கான உரிமையையும் வழங்கிற்று. மற்றும் சீன இராணுவத்தையும், போலீசையும் கட்டுப்படுத்துவதற்கும் சீனநாட்டின் உள்நாட்டு நிர்வாகத்தில் தலையிடுவதற்கும் உரிமையை வழங்கிற்று.

ஆனால் துவான்ஜீ-ஜூ அரசாங்கம் சோவியத் யூனியன் மீது ஜப்பானிய இராணுவ வெறியர்கள் தாக்கிய சமயத்தில் மிக வெறுக்கத்தக்க பாத்திரத்தை வகித்தது. அப்பொழுது அது

ஜப்பானுடைய தொங்குசதையாகச் செயல்பட்டது. சோவியத் எதிர்ப்பு யுத்தத்தின் விளைவாக, ஜப்பானிய படைகள் சீனாவிற்கும் அணிவகுத்துச் சென்று, சீனாவின் வடகிழக்கு மாகாணங்களின் மீதும் மற்றும் அந்நாட்டின் இராணுவ இயந்திரத்தின் மீதும் ஆதிக்கத்தைப் பெற்றது.

அமெரிக்காவிற்கும், ஜப்பானிற்கும் இடையே இருந்த மோதல் முதலாவது உலகயுத்தத்திற்குப் பிறகு மிகவும் கூர்மையாக வளர்ந்தது. சீனயுத்தப்பிரபுக்கள், அதிகாரவர்க்கத்தினர் மற்றும் தரகர்களுக்கிடையே புதிய ஏஜெண்டுகளைத் தேடுவதில் அவர்கள் ஒருவரோடு ஒருவர் போட்டிபோட்டுக்கொண்டார்கள். மேலும் அந்த ஏஜெண்டுகளை ஒருவர் மற்றொருவரை எதிர்த்து போராடுவதற்கு தங்களுடைய கருவிகளாகவும் பயன்படுத்தினார்கள். சர்வதேசத் துறையில், சீனாவில் ஜப்பானிய ஏகபோகத்தை பலவீனப் படுத்தும் நோக்கத்தோடும் தன்னுடைய பொருளாதார சக்தியின் வலிமையின் அடிப்படையில் நிதி உதவிக் கூட்டமைப்பில் தனக்கு ஒரு தலைமை தாங்கும் பாத்திரத்தைப் பெரும் நோக்குடனும் அமெரிக்க அரசாங்கம், பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகியவற்றைக் கொண்ட ஒரு சர்வதேச கூட்டமைப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று முன்மொழிந்தது.

இந்த நிதிக் கூட்டமைப்பு 1920 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. ஆனால் நான்கு நாடுகளுக்குமிடையே இருந்த முரண்பாடுகளின் காரணமாக, குறிப்பாக ஜப்பானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையே இருந்த முரண்பாடுகளின் காரணமாக, எந்த விதமான உடன்பாடுகளும் ஏற்படவே இல்லை.

முதல் உலக யுத்தம் ஜெர்மனிக்கும் ஆஸ்திரியாவிற்கும் தோல்வியில் முடிந்தது. வெர்ஸ்சேல்ஸ் சமதான மாநாடு 1919 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆம் தேதியன்று பாரிஸில் நடைபெற்றது. கொள்ளை அடித்ததைப் பங்கிட்டுக் கொள்வதற்காகவும், தோல்வியுற்ற நாடுகளின் எல்லைகளைத் திருத்தி அமைக்கும் நோக்கத்திற்காகவும் மற்றும் காலனிகளை மறு பங்கீடு செய்வதற்காகவும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் சூழ்ச்சியால் இந்த மாநாடு கூட்டப்பட்டது. பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் பக்கத்தில் நின்று சீனா போரிட்டமையால், சீனாவும் மாநாட்டில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தது. பொதுஜனக் கருத்தின் நிர்ப்பந்தத்தின்கீழ் சீனப்பிரதிநிதி கோஷ்டி மாநாட்டிற்கு ஒரு வேண்டுகோளை சமர்ப்பித்தது. அந்த வேண்டுகோளில், சீனாவில்

ஏகாதிபத்தியவாதிகளால் பெறப்பட்டிருந்த சலுகைகளை ஒழிக்க வேண்டும் என்று, யுவான்-ஷி-ஹைக்கும் ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளுக்குமிடையே செய்யப்பட்டிருந்த "21 கோரிக்கைகள்" பற்றிய ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வேண்டுமென்றும் மற்றும் யுத்தகாலத்தில் ஷாந்துங் மாகாணத்தில் ஜப்பானால் கைப்பற்றப்பட்டிருந்த ஜெர்மன் சலுகைகளை சீனாவிற்குத் திருப்பித் தர வேண்டுமென்றும் அது கூறிற்று.

இதற்கு முன்பு, அமெரிக்க குடியரசுத்தலைவர் உட்ரோ வில்சன் 1918 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், "14 அம்ச சமாதான நிபந்தனைகள்" என்று அழைக்கப்பட்ட பிரகடனத்தை விடுத்திருந்தார். அப்பிரகடனத்தில் காலனி மக்களின் கோரிக்கைகள் மதிக்கப்பட வேண்டுமென்றும் மற்றும் ஒவ்வொரு தேசத்தின் அரசியல் சுதந்திரமும் பிரதேச ஒருமைப்பாடும் அனைவராலும் உத்திரவாதம் செய்யப்பட வேண்டுமென்றும் போலித்தனமாகப் பிரகடனம் செய்திருந்தார். இது அமெரிக்காவின் "திறந்த கதவு" கொள்கைக்கும் ஜப்பானின் ஏகபோகக் கொள்கைக்குமிடையே இருந்த முரண்பாட்டைக் காட்டிற்று. ஷாந்துங்கிலுள்ள சகல ஜெர்மன் நலன்களும் ஜப்பானால் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று ஜப்பானிய பிரதிநிதி கோஷ்டி, மாநாட்டிற்கு அதனுடைய கோரிக்கையை சமர்ப்பித்த பொழுது இந்த முரண்பாடு பகிரங்கமாக வெளி வந்தது. ஜப்பானுடைய கோரிக்கைக்கு பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் ஆதரவு இருந்தமையால், எதிர்ப் புரட்சிவாத ஏகாதிபத்திய முன்னணியை நீடித்து வைத்திருக்கும் பொருட்டு, சீனாவின் நியாயமான கோரிக்கைகளை நிராகரித்து. ஜப்பானுடைய நியாயமற்றக் கோரிக்கையை ஆதரித்து, ஜப்பான் ஒரு சமரசம் செய்து கொண்டது. ஷான்தூங்கிலுள்ள சகல ஜெர்மன் நலன்களும் ஜப்பானிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று ஜெர்மனியோடு செய்து கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கையில் எழுதப்பட்டது. சீனாவில் அந்நிய அரசுகள் அனுபவித்து வந்த சலுகைகளை ஒழிப்பதற்காகவும் மற்றும், "21 கோரிக்கைகளை," ரத்துசெய்வதற்காகவும்சீனாமுன்வைத்த கோரிக்கைகளை, மாநாடு விவாதிப்பதற்குக் கூடசிரமம் எடுத்து கொள்ளவில்லை. இந்த முறையில், ஏகாதிபத்தியவாதிகளின் மூர்க்கத்தனமான அம்சங்களை பாரீஸ் மாநாடு வெளிப்படுத்திற்று. சீனாவின் நலன்களை நாசம் செய்வதற்கான பொதுவான தொரு முன்னணியை உருவாக்கும் அதே சமயத்தில் சீனாவைக் கொள்ளை அப்படிதற்கு ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்

கொள்ளும் ஏகாதிபத்தியவாதிகளின் மூர்க்கத்தனமான செயல்களையும் பாரீஸ் மாநாடு வெளிப்படுத்தியது.

சீனாவின் இராஜதந்திர தோல்வி சீன மக்களின் மாயையை நீக்கிற்று; குறிப்பாக, பாரிஸ் மாநாட்டின் மீது தங்களது நம்பிக்கைகளை வைத்திருந்த முற்போக்கான நபர்களும் மற்றும் அவர்களுடைய செல்வாக்கின் கீழ் இருந்த இளம் மாணவர்களும் பிரமைகளை விட்டொழித்தனர். தங்களுடைய சொந்த முயற்சிகளின் மீது சார்ந்து நிலைத்து இருப்பதினாலேயே தங்களுடைய நாட்டின் தலைவிதிகளைத் தாங்களே தீர்மானிக்க முடியும் என்று உணர ஆரம்பித்தார்கள்.

1919ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் தேதியன்று பீக்கிங் நகரத்து மாணவர்கள் ஒரு மாபெரும் தேசபக்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள், முன்னாளைய மன்னர் அரண்மனையின் முன்நுழைவாயிலான டியன்-அன்-மென் சதுக்கத்தின் முன்பு மூவாயிரம் (3000) மாணவர்கள் கூடினார்கள்; அங்கு கூட்டம் நடத்தியபிறகு மூன்று துரோகிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று கோரி அவர்கள் ஒரு அணிவகுப்பை நடத்தினார்கள். செய்திப் போக்குவரத்து மந்திரியான சாவோ ஜுலின், யுவான் ஷி-கை அரசாங்கத்தின் அயல் நாட்டு மந்திரி என்ற முறையில் "21 கோரிக்கை"களில் கையெழுத்திட்டிருந்தார். நிதிக் கூட்டமைப்பின் இயக்குனர் லூ சங்-யூ ஜப்பானுக்கு சீன அமைச்சராக பணியாற்றிய பொழுது "21 கோரிக்கைகள்" கையெழுத்திடப்பட்டது; அப்பொழுது சீனாவின் மந்திரியாக இருந்த சாங் சங்-ஷியாங் தொடர்ச்சியான பல உரிமைகளை ஜப்பானிக்கு விட்டிருந்தார். மாணவர்கள் சாவோ ஜுலின்னின் வீட்டை நொறுக்கிக் கொண்டிருந்த சமயத்தில், போலீஸ்காரர்களும் ஆயுதப் படையினரும் அவர்களைத் தடுப்பதற்கு அங்கு வந்து அந்த இடத்திலேயே முப்பதுக்கும் (30) அதிகமானவர்களைக் கைது செய்தார்கள். பீக்கிங் பல்கலைக்கழகத்தின் தலைவரான சாய் யுவான்-பெய்யை ராஜினாமா செய்யும்படி பீக்கிங் அரசாங்கம் நிர்ப்பந்தித்தது. உடனடியாக பீக்கிங் நகரத்து மாணவர்கள் ஒரு வேலை நிறுத்தத்தை நடத்தி தெருக்களில் தேச பக்தப் பிரச்சாரத்தை தொடர்ந்து நடத்தினார்கள். ஜுன் 3ஆம் தேதியன்று, ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளின் கட்டளையின்படி பீக்கிங் அரசாங்கம் பெரும் எண்ணிக்கையில் ஆயுதப் படைவீரர்களையும் போலீஸ்காரர்களையும் அனுப்பி முந்நூறுக்கும் (300) அதிகமான மாணவர்களைக் கைது செய்து (மறுநாள்

ஓராயிரம் (1000) பேர் கைது செய்யப்பட்டார்கள்) சகல தேச பக்த இயக்கங்களையும் தடை செய்தது.

துரோகத்தனமான அரசாங்கத்தின் இந்த வரம்பு மீறிய கொள்கையின் விளைவால் நாடு முழுவதிலும் மாணவர் இயக்கம் மிக அதிகமான வேகத்துடன் பரவுவதாக இருந்தது.

ஜூன் 3ஆம் தேதிக்குப் பிறகு, தேசபக்த இயக்கத்தின் மையம் பீக்கிங்கிலிருந்து ஷாங்காய் நகரத்திற்கு மாறிற்று; மாணவர்கள் இருந்த இடத்தில், தொழிலாளி வர்க்கம் இயக்கத்தின் பிரதான சக்தியாக முன்னணிக்கு வந்தது. ஜூன் 5 ஆம் தேதியிலிருந்து 11 ஆம் தேதி வரை ஷாங்காய் நகரத்திலுள்ள—சீனாவின் மிக மிகப்பெரிய இயந்திரத்தொழில் மற்றும் வியாபாரக் கேந்திரம்—பஞ்சாலை மற்றும் உலோகத் தொழில்கள் மற்றும் போக்குவரத்து பொதுஜன அத்தியாவசிய சேவைத் தொழில்கள் ஆகியவற்றில் பணியாற்றிய சுமார் எழுபது ஆயிரம் (70,000) தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தார்கள். இந்த வேலை நிறுத்தத்தில் ஜப்பானுக்குச் சொந்தமான பஞ்சாலைகளில் பணியாற்றிய தொழிலாளிகளும் மற்றும் அமெரிக்க, பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு நிறுவனங்களில் பணியாற்றிய தொழிலாளிகளும் சேர்ந்து இருந்தார்கள் என்ற விபரம் அதனுடைய ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையைக் காட்டிற்று. பீக்கிங்—முக்டன் இரயில்வேயிலுள்ள டாங் ஷாங் நகரத்தில், பீக்கிங்—ஹாங்காங் இரயில்வேயிலுள்ள ஜாங் சின்-டியன் நகரத்திலுள்ள தொழிலாளிகள் தேசபக்த அணி வகுப்புகளை நடத்தினார்கள்.

சீனாவின் வரலாற்றில் இது தொழிலாளிவர்க்கத்தின் முதல் ஏகாதிபத்திய எதிர்ப்பு வேலை நிறுத்தமாக இருந்தது. மே 4 ஆம் தேதி இயக்கத்தின் அணிகளில், தொழிலாளிவர்க்கம் மிகமிக சக்தி வாய்ந்த அணியாக இருந்தது. ஷாங்-ஹை நகரத்தில் (சீனாவின் மிகமிகமுக்கியமான இயந்திரத்தொழில் மற்றும் வர்த்தக நகரம்) சாங் சின்-டியன் மற்றும் டாங் ஷான் நகரங்களிலும் (இயந்திரத் தொழில் மற்றும் சுரங்கத் தொழில் ஆகியவற்றின் இரண்டு முக்கியமான கேந்திரங்கள்) மற்றும் ஷாங்காய்-நான் கிங் பாதை நெடுகிலும் (செய்திப் போக்குவரத்துகளுக்கான ஒரு முக்கியமான பாதை) வேலை நிறுத்தங்களால் யுத்தபிரபு அரசாங்கத்திற்கு அது பலமானதொரு அடியைக் கொடுத்தது. இந்த பிரிவு முன்னணிக்கு வந்தது, மே 4ஆம் தேதிய இயக்கத்தின் வெற்றிக்கு மிதமிஞ்சியதொரு முக்கியமான அம்சமாக அமைந்தது. அது மக்களை மனோதைரியத்தோடு தட்டி எழுப்பி, இதர

சமுதாயப் பகுதியினரையும் மக்களின் பலம் அதிகரித்து இருப்பதை உணரும்படிச் செய்தது.

சீன முதலாளி வர்க்கமும் தேசபக்த இயக்கத்தின் அணிகளில் சேர்ந்தது. மே 4 ஆம் தேதியஇயக்கம் வெடித்த பிறகு சீன உற்பத்திப் பொருள்களுக்குச் சந்தை விரிவடைந்ததினால், ஷாங்காய் நகரத்திலுள்ள முதலாளிவர்க்கம் மாணவர் இயக்கத்தின்பால் சாதகமானதொரு போக்கினைக் கையாண்டார்கள். தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களின் செல்வாக்கின் கீழ்இயந்திரத் தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் ஏககாலத்தில் ஜூன் 5 ஆம் தேதியன்று தங்கள் தொழில்களைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தார்கள். மேலும், அதற்குப் பிறகு உடனடியாக பக்கத்து நகரங்களிலும் நாட்டின் இதர பெரிய நகரங்களிலும் உள்ளவர்கள் இந்த நடவடிக்கையைப் பின் பற்றினார்கள். எனினும், ஷாங்காய் நகரத்திலுள்ள முதலாளிவர்க்கம் இயக்கத்தின் ஆரம்பத்திலேயே அதனுடைய பலவீனத்தை வெளிப்படுத்திற்று. அவர்கள், ''கலகம் செய்வதை'' எதிர்த்தார்கள்; மற்றும், ''நாகரீகமான எதிர்ப்பு'' என்று அவர்களால் கூறப்பட்ட எதிர்ப்புக்கு வக்காலத்து வாங்கிப் பேசினார்கள். அதாவது, தொழிலாளிகள், மாணவர்கள் மற்றும் வியபாரிகள் ஆகியோரின் எல்லா வேலை நிறுத்தங்களும் ''சட்டபூர்வமான'' முறையில் நடத்தப்பட வேண்டுமென்றும் மற்றும் ஏகாதிபத்திய வாதிகளினாலும் யுத்தப்பிரபு அரசாங்கத்தினாலும் அனுமதிக்கப்பட்ட வரம்பிற்குள் நிறுத்தப்பட வேண்டுமென்றும் வக்காலத்து வாங்கிப் பேசினார்கள்.

மே 4 ஆம் தேதி இயக்கம் பீக்கிங்கிலிருந்து நாடுமுழுவதற்கும் பரவி, தொழிலாளிகள்,மாணவர்கள்,வியாபாரிகள் மற்றும் இதர சமுதாயப் பகுதிகளையும் அரவணைக்கும் மிக விரிவானதொரு தேசபக்த வெகுஜன இயக்கமாக மாறிற்று.

தங்களுடைய போராட்டத்தில் சீன மக்களால் காட்டப்பட்ட மாபெரும் பலம், கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்கும்படி பிற்போக்கு அரசாங்கத்தை நிர்பந்தித்தது; மற்றும், துரோகத்தனமான அதிகாரிகளான சாவோ-ஜூலின், சாங் சங் சியாங் மற்றும் லூ சங் யு ஆகியோரை டிஸ்மிஸ் செய்யும் படியும் அது நிர்ப்பந்தித்தது. பாரீஸ் மாநாட்டுக்குச் சென்றிருந்த சீன பிரதிநிதிக் கோஷ்டியை வெர்சேல்ஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட மறுக்கும்படியும் அது நிர்பந்தித்தது. இந்த முறையில் மே நான்காம் தேதி நடைபெற்ற தேசபக்த இயக்கம் மகத்தானதொரு வெற்றியைப் பெற்றது.

மே 4ஆம் தேதி இயக்கம் நடைபெற்ற பொழுது நடந்த மாபெரும் தொழிலாளர்களின் அரசியல் வேலை நிறுத்தங்கள் சீன மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் வெற்றியைத் துரிதப்படுத்தின; மற்றும், சீனத் தொழிலாளிவர்க்கத்தின் மாபெரும் பலத்தை நிருபணமாக்கவும் ஆரம்பித்தன. தொழிலாளிவர்க்கத்தின் நலன்களுக்காக நிற்கக் கூடிய மற்றும் அதனுடைய போராட்டத்தில் எப்படித் தலைமை தாங்குவது என்பதைத் தெரிந்திருக்கக் கூடிய ஒரு அரசியல் கட்சியின் தேவை அப்பொழுது உணரப்பட்டது. சீனாவில் தொழிலாளிவர்க்க இயக்கத்தோடு மார்க்சிய-லெனினிய தத்துவத்தைத் துரிதமாக ஒருங்கிணைப்பதை இது வெளிப்படுத்திற்று மற்றும, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை ஸ்தாபிப்பதற்கான வர்க்க அடிப்படையாகவும் இது அமைந்தது.

இருபதாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில், மார்க்சிய-லெனினியம் தோன்றுவதற்கு முன்பாக சீனாவில் புரட்சிகரமான குட்டி முதலாளித்துவ மற்றும் முதலாளித்துவ புத்தி ஜீவிகள் ஜனநாயகக் கலாசாரத்தைப் பற்றி சக்தி வாய்ந்த முறையில் பிரச்சாரம் செய்திருந்தார்கள். அவர்கள் ஜனநாயகத்தை ஆதரித்துப் பேசினார்கள்; மற்றும், முடியாட்சியையும் யுத்தப் பிரபுத்துவத்தையும் எதிர்த்தார்கள். பழைய சம்பிரதாயங்கள் மற்றும் விளங்காத சொற்றொடர்கள், மடமை, குருட்டுத் தனமாகக் கீழ்ப்படிதல், வறட்டுத் தத்துவவாதம் மற்றும் நிலப்பிரபுத்துவ ஆளும் வர்க்கத்தின் நலன்களுக்குச் சேவை செய்த பண்டைய தார்மீக ஒழுங்கு ஆகியவற்றுக்கு எதிராக அவர்கள் விஞ்ஞானத்தை உயர்த்திப் பிடித்தார்கள். சித்தாந்த அரங்கில் நடைபெற்ற போராட்டம் மொழியிலும் இலக்கியத்திலும்—சித்தாந்த வெளிப்படுத்தலின் சாதனங்கள்—தவிர்க்க முடியாதபடி சீர்திருத்தங்களுக்கு வழி நடத்திச் சென்றன. இதன் விளைவாக, அவர்கள் சாஸ்திரீய பாணியில் எழுதுவதற்கு எதிராக தாய்மொழியில் எழுதுவதை ஆதரித்துப் பேசினார்கள்; பழைய இலக்கியத்தை எதிர்த்து புதிய இலக்கியத்திற்கு ஆதரவாகப் பேசினார்கள்.

ஜனநாயகக் கலாச்சாரத்தைப் போதிப்பதில் மிகமிகச் செல்வாக்கு வாய்ந்த சஞ்சிகைகளாக **புதிய இளைஞன்** மற்றும் **வாராந்திர விமர்சனம்** ஆகியவை இருந்தன. புதிய இளைஞன் 1915 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்விரு பத்திரிக்கைகளும் பழைய நிலப்பிரபுத்துவ சித்தாந்தத்தையும் வறட்டுத் தத்துவங்களையும் விட்டுக் கொடுக்காமல் தாக்கிவந்தன. ஜனநாயகக் கலாசாரத்தை ஆதரித்து நின்றவர்

களிடையே லீ டா சாவோ,[17] சென் டு ஷ்யு மற்றும் லூ சுன்[18] ஆகியோர் இருந்தார்கள்.

மே 4ஆம் தேதி இயக்கத்துக்கு முன்பு இருந்த ஜனநாயக கலாசார இயக்கம் பூர்ஷுவா கலாசார புரட்சியின் கட்டுக் கோப்புக்கு அப்பால் போகவில்லை என்றாலும், அதனுடைய புரட்சிகரமான உணர்வின் காரணமாகவும் மற்றும் போர்க்குணமிக்க மனோ தைரியத்தின் காரணமாகவும் அது பத்தாம்பசலி நிலப் பிரபுத்துவ சித்தாந்தத்திற்கு கடினமானதொரு அடியைக் கொடுத்தது; மற்றும், மார்க்சிய-லெனினியம் தோன்றுவதற்கு முன்பு புதிய கருத்துக்களைப் போதிப்பதில் கணிசமானதொரு பாத்திரத்தையும் அது வகித்தது.

சீனாவில் மார்க்சியத்தைத் தழுவிய முதல் நபர் லிடோ-சாவோதான். 1918ஆ-ம் ஆண்டின் இறுதியில், அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்காக அவர் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தார். ரஷ்யப் புரட்சியின் வெற்றி போல்ஷ்வியத்தின் வெற்றி என்றும் பாட்டாளி வர்க்க சோஷலிஸ்ட் புரட்சிக்கு வழிகாட்டிய தத்துவம்—மார்க்சிய-லெனினியம்—போல்ஷ்வியத்தைத் தவிர வேறெதுவுமல்ல வென்றும் அவர் முழு நம்பிக்கையோடு பிரகடனம் செய்தார். இது மகோன்னத முக்கியத்துவம் வாய்ந்த தொரு பிரகடனமாக இருந்தது.

முதல் உலக யுத்தத்தின் முடிவு, முதலாளித்துவத்தின் அழிவையும் தோல்வியையும், மற்றும் பொதுமக்களின் வெற்றியையும், ஜனநாயகத்தின் வெற்றியையும் பொதுமக்களின் புதிய ஜனநாயகத்தின் வெற்றியையும் பிரதிநிதித்துவப் படுத்தியது என்று லிடோ-சாவோ கூர்மையாகச் சுட்டிக்காட்டினார்.

மார்க்சிய பொருளாதாரத் தத்துவத்தையும், வரலாற்று பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தையும் அவர் விளக்கிக் கூறினார். வரலாறு பற்றிய பொருள் முதல்வாதக் கண்ணோட்டம், சமுதாய முன்னேற்றத்திற்காகப் போராடுவதற்கு மனிதனைத் தூண்டும் ஒரு வழிகாட்டும் சக்தியாக இருந்தது என்று அவர் கூறினார். மேலும் வரலாறு பற்றிய பொருள் முதல்வாதக் கண்ணோட்டம், செயலுக்கு வழிநடத்திச் செல்லும் போர்க்குணமிக்க உணர்வை மனிதனுக்குக் கொடுத்தது என்றும் அவர் கூறினார். லிடோ-சாவோ சீனத் தொழிலாளி வர்க்கம் விழிப்படைந்து வருவதை முன்கூட்டியே பார்த்து, தொழிலாளி வர்க்க இயக்கத்திற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்வதற்கு தனக்கும், இதர மார்க்சியவாதிகளுக்கும் உள்ள உறுதியைப் பிரகடனம் செய்தார்.

1918-ஆம் ஆண்டிலிருந்து 1919-ஆம் ஆண்டு வரையிலும் மார்க்சியம், சோவியத் யூனியன், சீனத் தொழிலாளி வர்க்க இயக்கம் ஆகியவற்றைக் கற்று உணரும் பலக் கட்டுரைகளை **புதிய இளைஞன்** தாங்கி வந்தது. அக்டோபர் புரட்சியின் செல்வாக்கின்கீழ், சீனாவிலுள்ள புரட்சிகரமான புத்திஜீவிகள் விழித்தெழ ஆரம்பித்தார்கள்; மற்றும், மார்க்சிய-லெனினியத்தைப் பரப்புதல் உணர்வு பூர்வமானதொரு இயக்கமாக மாறிற்று.

புதிய கலாச்சார இயக்கம், புத்திஜீவிகளின் மூன்று பிரிவுகளின் கலாச்சார ஐக்கிய முன்னணியின் புரட்சிகரமானதொரு இயக்கமாக ஆரம்பித்தது; கம்யூனிஸ்ட், குட்டி முதலாளித்துவ மற்றும் முதலாளித்துவ புத்திஜீவிகள் ஆகிய மூன்று பிரிவுகள் ஐக்கிய முன்னணிக்குள் பாட்டாளி வர்க்க சித்தாந்தமும், பூர்ஷுவா வர்க்க சித்தாந்தமும் ஒன்றுக்கொன்று விரோத குரோதமாக இருந்தன. **புதிய இளைஞன்** மற்றும் **வாராந்திர விமர்சனம்** ஆகியவற்றின் சோஷலிசப் போக்குகள் முதலாளி வர்க்கத்தின் அதிருப்தியைத் தட்டி எழுப்பின. பாட்டாளி வர்க்க கண்ணோட்டத்தின் செல்வாக்கு படிப்படியாக அதிகரித்ததனால் போராட்டம் கூர்மையாயிற்று. 1919-ஆம் ஆண்டு மே 4-ஆம் தேதிய இயக்கத்திற்குப் பிறகு, வெகு சீக்கிரத்திலேயே வலது சாரி பூர்ஷுவாக்களின் பிரதிநிதியான ஹூ ஷி "பிரச்சினைகளைப் பற்றி அதிகமாகவும் இஸம்களைப் பற்றிக் குறைவாகவும்" என்ற தலைப்பிட்டு ஒரு கட்டுரையைப் பிரசுரித்து, சீனாவில் மார்க்சிய-லெனினியம் போதிக்கப்படுவதைப் பகிரங்கமாக எதிர்த்துக்கொண்டிருந்தார்.

லி டோ-சாவோ சக்தி மிக்கதொரு எதிர்த் தாக்குதலை ஹூ ஷியின் மீது தொடுத்தார்; ஒரு 'இஸம்' என்பது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதற்கான ஒரு கருத்தோட்டம், ஒரு தத்துவம் மற்றும் ஒரு முறை என்றும், மற்றும் "இஸம்"களைப் பற்றி அறியாமலிருப்பது புறநிலை யதார்த்தத்தைப் பற்றிய விதிகளைப் பற்றிய அறியாமை என்று பொருள்படும் என்றும், மற்றும் இந்த விதிகளைப் புரிந்துகொள்ளாமல் எந்தப் "பிரச்சினைகளுக்கும்" தீர்வு காணுவதைப் பற்றி எவருமே நம்ப முடியாதென்றும் அவர் தெளிவாகச் சுட்டிக் காட்டினார். சீனாவின் பிரச்சினைக்கு அடிப்படையானதொரு தீர்வு தேவைப்பட்டது. "இந்த அடிப்படையான தீர்வு தனித்தனியான பிரச்சினைகளின் தீர்வுக்கு அவசியமான அடிப்படை நிலையாக உள்ளது." சீனாவின் அடிப்படையான பிரச்சினையைக் கற்று

உணர்ந்து, தீர்வு காணுவதற்கு மக்களுக்கு உதவி செய்யக்கூடிய 'இஸம்' மார்க்சிய-லெனினியத்தைத் தவிர வேறு எந்த 'இஸமு'ம் அல்ல; இந்த ஒரே சரியான 'இஸம்' தான் சீனப் புரட்சிக்கு வழிகாட்டியாகப் பயன்பட முடியும்.

பிரச்சினைகளைப் பற்றியும் மற்றும் "இஸம்"களைப் பற்றியும் ஹூஷி தெரிவித்த கருத்துக்களை எதிர்த்து லி கூறிய மறுப்புரை, பூர்ஷுவா சித்தாந்தத்திற்கு எதிராகப் பட்டாளி வர்க்க சித்தாந்தத்தினால் தொடுக்கப்பட்ட முதல் எதிர்த் தாக்குதலாக அமைந்தது. மார்க்சிய - லெனினியத்தைப் பற்றிய பூர்ஷுவாக்களின் திருத்தல்வாதத்தையும் அவதூறையும் அது கடுமையாகச் சாடிற்று; மேலும் ஏகாதிபத்திய கால கட்டத்தில் பிற்போக்கானதொரு தத்துவஞானமான காரியவாதத்தை யும் (Pragmatism) மற்றும் பூர்ஷுவா சீர்திருத்தவாதத்தையும் விமர்சித்து, சீனாவில் மார்க்சிய-லெனினியத்தின் செல்வாக்கை அது இந்த முறையில் விஸ்தரித்துக் கொண்டிருந்தது. இந்தக் கருத்து மோதலுக்குப் பிறகு ஹூஷியினால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட பூர்ஷுவாக்களின் வலதுசாரிப் பகுதி சமரசப் பாதையையும், சரணாகதிப்பாதையையும் பின்பற்ற ஆரம் பித்தது.

### 5. சீனத் தொழிலாளி வர்க்க இயக்கம் மார்க்சிய-லெனினியத்தோடு ஒருங்கிணைதல். தோழர் மாசே-துங்கின் ஆரம்ப கால புரட்சி நடவடிக்கைகள்.

மார்க்சிய-லெனினியத்தை கூடுதலாகப் போதிக்கும்பொருட் டும், தொழிலாளர்களிடையே பிரச்சாரத்தையும், ஸ்தாபன வேலையையும் தொடர்ந்து நடத்தும்பொருட்டும் சீனக் கம் யூனிஸ்ட்கள் 1918 ஆம் ஆண்டில் ஷாங்காய் நகரில் ஒரு மார்க் ஸிஸ்ட் கல்விக்கழகத்தை நிறுவினார்கள்; 1919 ஆம் ஆண்டில், மற்றொரு சங்கத்தை பீகிங்கில் நிறுவினார்கள். இந்த அடிப் படையின் மீது, நாடு முழுவதிலும் ஒன்றன்பின் ஒன்றாக பல்வேறு இடங்களில் கம்யூனிஸ்ட் மற்றும் சோஷலிஸ்ட் இளை ஞர் கழகக் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஒரு கம்யூனிஸ்ட் குழு 1920 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஷாங்காயில் நிறுவப்பட்டது; மற்றொரு குழு செப்டம்பரில் பீக்கிங்கில் நிறுவப்பட்டது; இன்னு மொரு குழு காண்டனில் அதே ஆண்டின் இறுதியில் நிறுவப் பட்டது; இந்த மூன்று நகரங்களும் அந்த நேரத்தில் சீனாவின் நன்கு வளர்ச்சி அடைந்த அரசியல், பொருளாதார, கலாச்சார

கேந்திரங்களாகத் திகழ்ந்து கொண்டிருந்தன. பின்னர் ஹுனான், ஹுப்பே மற்றும் ஷாண்டுங் மாகாணங்களிலும் டோக்கியோவிலும், பாரிஸிலும் படித்துவந்த சீன மாணவர்களிடையேயும் கம்யூனிஸ்ட் குழுக்கள் அமைக்கப்பட்டன.

மார்க்சிஸ்ட் ஆராய்ச்சிக் குழுக்கள் மற்றும் கம்யூனிஸ்ட் குழுக்கள் ஆகியவற்றின் தலைமையின்கீழ், நாடு தழுவியதொரு மார்க்சிய-லெனினியப் பிரச்சார இயக்கம் துவங்கப்பட்டது. புதிய இளைஞர் அச்சகம் கம்யூனிஸ்ட் தத்துவார்த்த நூல்களின்—மார்க்சும், ஏங்கல்சும் எழுதிய **கம்யூனிஸ்ட் அறிக்கை**, ஏங்கல்சால் எழுதப்பட்ட **விஞ்ஞான சோஷலிசமும், கற்பனா சோஷலிசமும்** போன்ற நூல்களின்—மொழி பெயர்ப்புகளை திட்டமிட்டதொரு முறையில் பிரசுரிக்க ஆரம்பித்தது. **வர்க்கப் போராட்டம்** மற்றும் **சோஷலிசத்தின் வரலாறு** போன்ற இப்படிப்பட்ட சோஷலிசத் தத்துவம் பற்றிய நூல்களையும் அது பிரசுரித்தது. 1920 ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் தேதியன்று **புதிய இளைஞன்** ஒரு விசேஷ மேதினமலரை வெளியிட்டது; அதில் உலகின் பல்வேறு நாடுகளிலுள்ள தொழிலாளிவர்க்க இயக்கம் பற்றிய கட்டுரைகள் வெளிவந்துள்ளன; அக்கட்டுரையில் ஷாங்காய் நகரில் ஹௌஷெங் பஞ்சாலையிலுள்ள ஹுனான் பெண் தொழிலாளர்களிடையே ஒரு விவாவதத்திற்கான கட்டுரையும் மற்றும் சீனாவின் பல்வேறு பகுதிகளிலுள்ள தொழிலாளிகளின் நிலைமைகளைப் பரிசீலித்த அறிக்கைகளும் அடங்கியிருந்தன. அந்தப் பத்திரிகையின் தொடர்ச்சியான இதழ்களில் ''ரஷியாவைப் பற்றிய ஆராய்ச்சிகள்' என்ற தலைப்பில் தொடர்ச்சியான கட்டுரைகளும் வெளிவந்தன ஷாங்காயில் கம்யூனிஸ்ட் குழு நிறுவப்பட்ட பிறகு, **புதிய இளைஞன்** அதனுடைய அதிகாரபூர்வமான பத்திரிகையாக மாறிற்று. 1920ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஷாங்காயிலிருந்த கம்யூனிஸ்ட் குழு **கம்யூனிஸ்ட் கட்சி** என்ற பெயரில் ஒரு மாதப் இதழைக் கொண்டு வந்தது; அதில், மார்க்சிய-லெனினியம், ரஷியப்புரட்சி, ரஷிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இதர நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள் பற்றிய கட்டுரைகள் வெளிவந்தன.

சீனக் கம்யூனிஸ்ட்டுகள் தொழிலாளர்களிடையே பிரச்சாரத்தையும் ஸ்தாபன வேலையையும் செய்து வந்தார்கள்.

பீக்கிங்குழு அதனுடைய நடவடிக்கைகளின் கேந்திரமாக பீக்கிங்-ஹாங்கவ் ரயில்வேயை வைத்துக் கொண்டு தொழிலாளர்களின் இரவுப் பள்ளிக்கூடங்களை நடத்திற்று; மற்றும், **தொழிலாளர் குரல்** என்றதொரு தொழிலாளர் இதழையும் நடத்திற்று. 1920-ஆம் ஆண்டு மே 1 ஆம் தேதியன்று சாங் சின்-டியன்

தொழிலாளர்கள் ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தி ஒரு தொழிற் சங்கத்தை நிறுவுறுவதற்கான முடிவை எடுத்தார்கள்; இது பின்னர் ''தொழிலாளர் கழகம்'' என்ற பெயரில் நிறுவப்பட்டது சாங் சின்-டியன் நடவடிக்கைகள் வட சீனாவின் இதர பகுதி களில் தொழிற்சங்க இயக்கத்தை வளர்த்தன.

ஷாங்காய் நகரத்தின் கம்யூனிஸ்ட் குழு மேற்குப் புறநகர்ப் பகுதியில் ஹிஷி யாவோ ஷாட்டுவை ஒரு ஆரம்ப இடமாக வைத்துக் கொண்டு தொழிலாளர்களின் பள்ளிக்கூடங்களை நடத்திற்று; மேலும், **தொழிலாளர் உலகம்** என்ற இதழையும் அது பிரசுரித்தது. தொழிலாளர்களை வாசகர்களாகக் கொண்ட அந்தப் பத்திரிக்கை எளிய, தெளிவான மற்றும் உணர்வைத் தட்டி எழுப்பும் மொழியில் கட்டுரைகளைத் தாங்கி வந்தது; மார்க்சின் பொருளாதார தத்துவத்தையும், சோஷலிசத்தையும் மக்களுக்குப் புரியக்கூடிய முறையில் விளக்கங்களை கொடுத் தது. ஸ்தபானரீதியான வேலைகளைத் தொடர்ந்து நடத்து வதற்கு கம்யூனிஸ்ட்டுகள் உழைக்கும் மக்களிடையே சென் றார்கள். எல்லாவற்றிற்கும் முதலாவதாக, **தொழிலாளர் உலகத்தின்** ஒரு விசேஷப் பகுதியில் ஒழுங்கான முறையில் தொழிலாளர்களின் கடிதங்கள் பிரசுரிக்கப்பட்டன; இந்த முறையில், தொழிலாளர்களிடையேயும் மற்றுப் தொழிலாளர் களுக்கும் கம்யூனிஸ்ட்டுகளுக்குமிடையேயும் பிணைப்புகள் நிறுவப்பட்டன. ஷாங்காய் கம்யூனிஸ்ட் குழுவின் தலைமையின் கீழ் இயந்திரத் தொழிலாளர்களின் தொழிற்சங்கம் நிறுவப் பட்டது. அது தொழிலாளி வர்க்க இயக்கத்தோடு மார்க்சிய-லெனினியத்தின் சேர்க்கையின் ஒரு விளை பொருளாகத் திகழ்ந்தது. பின்னர், அச்சுத்தொழிலாளர்கள் மற்றும் பஞ் சாலைத் தொழிலாளர்களின் தொழிற்சங்கங்களும் நிறுவப் பட்டன.

சாங் சின்-டியனும், ஷி யாவோ ஷாட்டும் அடித்தளங்களாக அமைந்தன; இந்த அடித்தளத்திலிருந்து சீனக் கம்யூஸ்ட்கள் தொழிற்சங்க இயக்கத்தை ஆரம்பித்தார்கள். பிறகு, தொழி லாளர் பள்ளிகளை நிறுவியதன் மூலமும், **உழை பாளரின் எதிரொலி** என்ற இதழைப் புதுப்பித்ததின் மூலமும், காண்டன் குழு அவர்களை பின் பற்றி நடந்தார்கள். ஹுனானிலும் மற்றுமிதர இடங்களிலுமிருந்த குழுக்களும் தொழிலாளர் களிடையே பிரச்சாரத்தையும், ஸ்தாபன வேலையையும் தொடர்ந்து நடத்தி வந்தன.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் சீனத் தொழிலாளி வர்க்கத்தைத் தட்டி எழுப்பி பலப்படுத்தின; இந்த முறையில் சித்தாந்த ரீதியான அடித்தளத்தையும், ஸ்தாபன ரீதியான அடித்தளத்தையும் தயார் செய்து கொண்டு மற்றும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை ஸ்தாபிப்பதற்கான அவசியமான ஊழியர் களை வளர்த்துக் கொண்டும் இருந்தது.

இந்தக் காலகட்டத்தில் தோழர் மாசே-துங் ஹுன்னானில் புரட்சிப் பணியாற்றிக் கொண்டிருந்தார். 1917ஆம் ஆண்டு ஹுன்னானில் முதல் மாநிலப் பள்ளியில் படித்து கொண்டிருந்த நேரத்தில் புதிய கலாச்சாரத்தைப் பரப்புவதற்கான ஒரு கழகத்தை, புதிய மக்கள் ஆராய்ச்சிக் கழகம் என்ற பெயர் கொண்ட ஒரு கழகத்தை, அவர் அமைத்தார். அடுத்த ஆண்டில் அவர் பீக்கிங்கிற்கு சென்று பீக்கிங் பல்கலைக்கழக நூல் நிலையத்தில் பணியாற்றினார். அரசியல் தத்துவங்களில் அவருக் கிருந்த குன்றாத அக்கறை, அவரை சீக்கிரத்திலேயே மார்க்சி யத்தை ஒப்புக்கொள்ளும்படி வழி நடத்திச் சென்றது. இந்த முறையில்,கம்யூனிசத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் இந்த இளம் புத்திஜீவியின் மனதிற்குள் புகுத்தப்பட்டன.

மா சே-துங் 1919 ஆம் ஆண்டில் ஹுன்னானுக்குத் திரும்பினார். மே 4 ஆம் தேதி இயக்கம் வெடித்தபிறகு, மாநிலத் தலைநகரான சாங்ஷானில் அவர் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்திற்கு சுறுசுறுப்பாகத் தலைமைத் தாங்கினார். **ஸியாங் சியாங் விமர்சனம்** என்ற இதழை அவர் ஆரம்பித்தார்; இந்தப் இதழ் ஏகாதிபத்தியத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும் மற்றும் யுத்தப் பிரபுத்துவத்தையும் எதிர்த்துக் கொண்டும், ஜனநாயகத்தையும் புதிய கலாச்சாரத்தையும் ஆதரித்துக் கொண்டும் இருந்தது. இவ்விதழின் செல்வாக்கு தென்சீனாவின் சகல மாகாணங்களுக்கும் பரவிற்று. அதே சமயத்தில், ஹுன்னானிலிருந்து யுத்தப்பிரபுக்களை வெளியேற்றுவதற்கு நடத்தப்பட்ட போராட்டத்தில் ஹுன்னானிலுள்ள மாணவர் களையும், புரட்சிகரமான புத்திஜீவிகளையும் சுறுசுறுப்பான தொரு பங்கெடுக்கும்படி செய்வதற்காக அணி திரட்டினார்.

1920ஆம் ஆண்டில் அவர் மார்க்சிஸ்ட் கல்விக் கழகத்தை ஆரம்பித்தார்; மற்றும், ஹுன்னானில் சோஷலிஸ்ட் இளைஞர் கழகத்தையும் அமைத்தார். இக்கழகம் அவரது தலைமையின் கீழ் தொழிலாளர் வர்க்க இயக்கத்தில் சுறுசுறுப்பாக செயல்பட்டு, அந்த இயக்கத்தை மார்க்சிய-லெனினியத்தோடு ஒன்று படுத்திற்று.

அவருடைய தலைமையின் காரணமாக, ஹுனானில் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளையை ஆரம்பிப்பதற்கான உறுதியான தொரு சித்தாந்த அடித்தளமும் ஸ்தாபன ரீதியான அடித்தளமும் போடப்பட்டு ஊழியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

## அடிக்குறிப்புகள்

1. 18 ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து பிரிட்டன் சீனாவிற்கு பெருமளவில் அபின் ஏற்றுமதி செய்தது. 19-ஆம் நூற்றாண்டியின் மத்தியில் தங்களுடைய தேசிய வாழ்க்கையின் மீது இந்த போதைப் பொருள் வியாபாரம் படுமோசமான விளைவை உண்டாக்கிற்று என்பதை சீனமக்கள் உணர்ந்தார்கள்; மேலும், தங்கள் நாட்டின் வெள்ளி சேமிப்புகளை போதை பொருள் எடுத்துச் சென்றதையும் சீனமக்கள் உணர்ந்தார்கள்; இதைத் தீவிரமாக ஆட்சேபித்தார்கள். தங்களுடைய வியாபாரத்தைப் பாதுகாப்பது என்ற சாக்கின் பேரில், 1840 ஆம் ஆண்டில் பிரிட்டன் சீனாவுக்கு எதிராக ஆயுதமேந்திய ஆக்கிரமிப்பை ஆரம்பித்தது; லின் சே-சூவின் தலைமையிலிருந்த சீனப் படைகள் எதிர்த்துப் போராடினார்கள்; மற்றும், காண்டன் நகரத்து மக்களும், ''பிரிட்டிஷ் படைகளை நசுக்குங்கள்'' என்ற இயக்கதில் தன்னெழுச்சியாகவே ஈடுபட்டார்கள். எனினும், 1842 ஆம் ஆண்டில், ஊழல் மலிந்த மஞ்சு ஆட்சி. பிரிட்டிஷாரோடு நான் கிங் உடன்படிக்கையில் கையெழுத்திட்டது; இந்த உடன்படிக்கையின் மூலம் மஞ்சு ஆட்சி நஷ்டஈடு கொடுக்கவும், ஹாங்காங்கை விட்டுக் கொடுக்கவும், பிரிட்டிஷ் வியாபாரத்திற்கு ஹாங்காய், பூச்சவ், அமாய், நிங்போ மற்றும் காண்டன் ஆகிய கடற்கரைத் துறைமுகங்களைத் திறந்து விடுவதற்கும் மற்றும் பிரிட்டனிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு சுங்கவரி வசூலிப்பதற்கு பிரிட்டனோடு கலந்து கூட்டாக நிர்ணயிப்பதற்கும் ஒப்புக் கொண்டது.
2. கொரியாவின் மீது ஜப்பானிய ஆக்கிரமிப்பின் விளைவாகவும் மற்றும் சீனாவின் தரைப்படைகள், கடற்படைகள் ஆகியவற்றிற்கு எதிராக ஜப்பானிய ஆத்திர மூட்டலின்

விளைவாகவும் யுத்தம் வெடித்தது. சீனாவின் ஆயுதப் படைகள் வீரம் செறிந்த முறையில் போராடிய போதிலும், அடுத்த ஆண்டில் சீனா தோற்கடிக்கப்பட்டது. மஞ்சு அரசாங்கத்தின் ஊழலின் காரணமாகவும், ஆக்கிரமிப்புக்கு எதிராக உறுதியாகப் போராடுவதற்குத் தயாரிப்பு இல்லாமையின் காரணமாகவும் சீனா தோற்கடிக்கப்பட்டது. இதன் விளைவாக, மஞ்சு அரசாங்கம் ஷிமனோ ஷேக்கியில் (பாக்கன்) படுமோசமானதொரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது; இந்த உடன்படிக்கையின் மூலம், தைவானையும் பெங்கு தீவுகளையும் ஐப்பானுக்கு விட்டுக் கொடுக்க மஞ்சு அரசாங்கம் ஒப்புக் கொண்டது; 200 மில்லியன் வெள்ளி டாயல்களை (ஒரு டாயல் என்பது சுமார் 1.33 அவுன்சு வெள்ளிக்குச் சமம்) நஷ்டஈடாகக் கொடுக்கவும், சீனாவில் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு ஐப்பானியர்களை அனுமதிக்கவும், ஷா சி, சுங் கிங், சூ செள மற்றும் ஹாங் செள ஆகியவற்றை ஒப்புக் கொள்ளப்பட்ட துறைமுகங்களாகக் கருதி அவற்றைத் திறந்து விடவும், கொரியாவை ஐப்பானுடைய கரங்களில் அதனுடைய அடிவருடி அரசாக வைக்கவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

3. 1900 ஆண்டில், வடசீனாவில் விவசாயிகள் மற்றும் கைவினைத் தொழிலாளர்களின்-யீ ஹோடுவான் ("பாக்ஸர்") இயக்கம்-ஒரு பரந்த தன்னெழுச்சியான வெகுஜன இயக்கம்-வெடித்தெழுந்தது. பத்தாம் பசலித்தனமான, மூடத்தனமான வழிபாடுகளை அடிப்படையாகக் கொண்டு தங்களை இரகசிய சங்கங்களாக அமைத்துக் கொண்டிருந்த இந்த விவசாயிகளும் கைவினைத் தொழிலாளர்களும் ஏகாதிபத்தியத்துக்கெதிராக ஆயுதமேந்திய ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். பிரிட்டன், ஐக்கிய நாடுகள், ஐப்பான், ஜெர்மனி, ஜாரிஸ்ட் ரஷ்யா, பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஆஸ்திரியா ஆகிய எட்டு ஏகாதிபத்திய அரசுகளின் கூட்டுப் படைகள் அந்த நேரத்தில் பீக்கிங்கையும் டீன் சின்னையும் ஆக்கிரமித்துக்கொண்டு அந்த இயக்கத்தை மிகமிகக் கொடூரமானதொரு முறையில் நசுக்கினார்கள். மஞ்சு அரசாங்கம் படுகேவலமாக 1901 ஆம் ஆண்டு உடன்படிக்கையில் கையெழுத்திடும்படி நிர்பந்திக்கப்பட்டது.

4. 7ஆம் பக்கம் பார்க்க.
5. 9ஆம் பக்கம் பார்க்க.
6. 9ஆம் பக்கம் பார்க்க.

7. தரகர்கள் அயல்நாட்டு வியாபார நிறுவனங்களில் வேலை பார்த்த சீன நிர்வாகிகள் அல்லது மூத்த ஊழியர்களாவர்; இவர்கள் ஏகாதிபத்தியத்தோடும் அந்நிய மூலதனத்தோடும் தங்களுக்கிருந்த நெருக்கமான பிணைப்பைப் பயன்படுத்திக் கொண்டு, சீன இயந்திரத் தொழிலிலும், வியாபாரத்திலும் தூண்களாக மாறினார்கள்.

8. அப்பொழுது ஷென்-யாங் (முக்டன்) இந்தப் பெயரால்தான் தெரிந்திருந்தது.

9. ஒரு டான் என்பது 50கிலோ கிராம்கள்.

10. தொழிலாளர் காண்டிராக்ட் அமைப்பின்கீழ், பிரதான மாகப் பஞ்சாலைத் தொழிலுக்காக, மூன்று முதல் ஐந்தாண்டுகள் வேலைசெய்வதற்காக நாட்டுப்புறத்திலிருந்து ஏஜெண்டுகள் பெண்களைச் சேர்ப்பது வழக்கம். காண்டிராக்ட் ஒப்பந்தம் கையெழுத்தானதும் பெண்ணின் குடும்பத்திற்கு ஒரு சிறு தொகை கொடுக்கப்பட்டது. காண்டிராக்ட் அமுலிலுள்ள காலம் முழுவதிலும் அந்தப் பெண் சகல சுதந்திரத்தையும் இழந்து நின்றாள். அவளுடைய உணவுச் செலவு மற்றும் தங்குமிடச் செலவு ஆகியவற்றுக்கு மேல் அவள் சம்பாதிக்கும் பணமெல்லாம் அந்த ஏஜண்டின் பைக்குள் போயிற்று. இந்த அமைப்பின் மற்றொரு உருவம் தொழிலாளர்-காண்டிராக்டர்களால் அல்லது காங்கி எஜமானர்களால் தொழிலாளிகளை வேலைக்கு அமர்த்திக்கொள்வதில் அடங்கியிருந்தது; இவர்கள் இப்படி வேலைக்கு அமர்த்தும் தொழிலாளர்களை முதலாளிகளுக்கு வாடகைக்கு விட்டு, இத்தொழிலாளிகளின் கூலிகளின் பெரியதொரு பங்கைத் தங்களுக்குக் கமிஷனாக எடுத்துக் கொண்டார்கள்.

11. இது இலவச உழைப்பைப் பெறும் ஒரு முறையாக இருந்தது; மேலும் வயது வந்தோர்களின் கூலி விகிதத்தை குறைவாக வைத்துக் கொண்டிருக்கும் ஒரு முறையாகவும் இருந்தது. "பயிற்சிக் காலகட்டத்தில் இது வழக்கமாக மூன்று முதல் ஐந்து ஆண்டுகளாக இருந்தது—அப்ரெண்டீஸ்(பயிற்சியாளர்கள்) அதனுடைய உணவு மற்றும் உடைச் செலவுகளைத் தவிர எந்த விதமான சம்பளத்தையும் பெறவில்லை. அவனுடைய பயிற்சி காலம் முடிவடையும்போது மிகவும் குறைவான கூலிகளை வாங்கிக்கொண்டு அவன் தன்னுடைய முதலாளிக்குத் தொடர்ந்து வேலை செய்யக் கடமைப்பட்டிருந்தான்.

அத்தியாயம் இரண்டு

# சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்படுதல் சீனத் தொழிலாளி வர்க்கத்தின் வளர்ச்சி

(ஜூலை 1921—டிசம்பர் 1923)

## 1. 1921-க்கும் 1923-க்கும் இடையே. சர்வதேச நிலைமை. வாஷிங்டன் மாநாடும் சீனாவைப் பங்கிடுவதைப் பற்றிய ஏகாதிபத்திய நாடுகளின் உடன்பாடும்.

முதல் உலக யுத்தத்தில் இருந்து அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஏராளமான லாபங்களைச் சம்பாதித்திருந்தது. முறையாக யுத்தத்தில் இருந்த நாடுகள் அநேகமாக களைத்துப்போய், யுத்தம் அதனுடைய கடைசி கட்டத்தில் இருந்த சமையத்தில் தான், அமெரிக்கா யுத்தத்தில் இறங்கியது; இந்த முறையில் இதர அரசுகளின்மீது தாவாவிற்கு இடமில்லாத அளவிற்கு இராணுவ மற்றும் பொருளாதார மேலாதிக்கத்தை அது பெற்றிருந்தது. யுத்தத்தில் பங்கு கொண்டிருந்த நாடுகளுக்கும், அமெரிக்காவிற்கும் இருந்த பெரும் அளவிலான ஆயுதங்களின் தேவை, விரிவானதொரு சந்தையை உருவாக்கி, யுத்த காலத்திலும் யுத்தத்திற்கு பிறகும் அமெரிக்க தொழிலின் விஸ்தரிப்பிற்கான பாதையைச் செப்பனிட்டிருந்தது. ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகள் தங்களது பொருளாதார பலத்திலும், மனித சக்தியிலும் ஏராளமான நஷ்டமடைந்திருந்தபொழுது, அமெரிக்கா மட்டுமே யுத்தத்தின் கோர விளைவுகளில் இருந்து தப்பித்திருந்தது. உண்மையில், இதர நாடுகளின் செல்வாதாரங்களை வற்ற வைத்திருந்தது. அந்த யுத்தத்தில் இருந்து, அமெரிக்கா மிகப் பெரும் லாபத்தைச் சம்பாதித்திருந்தது. யுத்தத்திற்குப் பிந்தைய அமெரிக்காவின் பொருளாதாரச் செழிப்பில் இது முக்கியமானதொரு அம்சமாக இருந்தது.

இதன் விளைவாக, ஏகாதிபத்திய நாடுகளின் சம்பந்தப் படுத்திப் பார்க்கும் பலத்தில், மகத்தானதொரு மாற்றம் ஏற்பட்டிருந்தது. 1913ஆம் ஆண்டில் முதலாளித்துவ உலகத்

தின் மொத்த உருக்கு உற்பத்தியில் அமெரிக்காவின் உருக்கு உற்பத்தி 40 சதவீதமாக இருந்தது. மேலும், அது மேல்நோக்கிச் சென்று 1929ஆம் ஆண்டில், அதனுடைய உற்பத்தி 50 சதவீதமாக உயர்ந்தது. இந்த முறையில், அமெரிக்கா சீக்கிரத்திலேயே தலையாயதொரு இயந்திரத் தொழில் அரசாக மாறி, முதலாளித்துவ உலகத்தின் எஜமானனாக ஆகிவிட்டது. அமெரிக்கா, யுத்த பிற்கால விஸ்தரிப்பின் பின்னால், பொருளாதார வலிமை இருந்தமையால், சீனா இயல்பாகவே பிரதானமானதொரு காலனிச் சந்தையாக ஆகியிருந்தது; இந்த நிலையில் அமெரிக்கா சீனாவைக் கொள்ளை அடிக்க ஆரம்பித்தது.

யுத்தத்திற்கு பிறகு கிழக்கில் ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையே இருந்த பிரதான முரண்பாடு, அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையே இருந்தது. பாரீஸ் சமாதான மாநாட்டில், சீனாவில் ஜப்பானுக்கு இருந்த ஏகபோக நிலையைப் பலஹீனப்படுத்துவதற்கு பதிலாக, அமெரிக்கா ஜப்பானுடைய விசேஷ உரிமைகளையும் நலன்களையும் அங்கீகரித்தது. இது இவ்விரு நாடுகளுக்கும் இடையே இருந்த முரண்பாட்டை தளரச் செய்யவில்லை; ஆனால், அதற்கு மாறாக, கூர்மை அடையச் செய்தது.

தூரக்கிழக்கில், யுத்தத்திற்கு பிந்தைய காலகட்டத்தில், பிரிட்டிஷ் சந்தைக்குள் ஜப்பானிய ஊடுருவல்கள், அங்கு பிரிட்டனின் விஸ்தரிப்புக்குத் தடையாக இருந்தது; இதனால் பிரிட்டனுக்கும் ஜப்பானுக்கும் இடையே இருந்த முரண்பாடுகூட தீவிரம் அடைந்தது.

சீனாவை மையமாகக் கொண்டு, சுற்றிலும் இருந்த சர்வதேச உறவுகள் அமெரிக்காவையும் பிரிட்டனையும் மிகவும் நெருங்கி வரும்படிச் செய்தன. இந்த முறையில் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகியவை ஒருபுறமும், ஜப்பான் மறுபுறமும் என ஒரு போராட்டம் ஆரம்பமாயிற்று.

இந்தப் போராட்டம் பிரதானமாக, ஆயுத தளவாடப் போட்டியில் பிரதிபலித்தது. மூன்று நாடுகளுமே தங்களது கடற்படைகளை விஸ்தரித்தன; குறிப்பாக, பசிபிக் மாக்கடலிலுள்ள தங்கள் கடற்படைகளை, புதியதொரு ஏகாதிபத்திய யுத்தத்திற்கு தயார் செய்வதற்காக விஸ்தரித்தார்கள்.

இந்தப் போராட்டம் சீனாவில் இருந்த யுத்த பிரபுக்களுக்கு இடையே நடந்த யுத்தங்களிலுங்கூட பிரதிபலித்திருந்தது. ஆக்கிரமிப்பிற்கான தனது சொந்த நிலையை விரிவுபடுத்தவும், கெட்டிப்படுத்தவும், ஒவ்வொரு ஏகாதிபத்திய அரசும் சீன

யுத்தப் பிரபுக்களுக்கு இடையே ஏஜெண்டுகளைப் பிடிக்க முயற்சித்தார்கள்; அதே சமயத்தில், சீன யுத்தப் பிரபுக்களும் தங்களுடைய சொந்த செல்வாக்கு மண்டலங்களை வைத்துக்கொள்ளவும், விரிவுபடுத்தவும் ஏகாதிபத்திய அரசுகளின்மீது சார்ந்து நிற்க விரும்பினார்கள். இந்த முறையில், வடக்கத்திய யுத்த பிரபுக்களின் ஒரு பிரிவு—யூ பெய்-பு, சோவோகுன் ஆகியோரால் தலைமை தாங்கப்பட்ட சிகிலி கும்பல்—பிரிட்டன் மற்றும் அமெரிக்காவின் கைக்கூலிகளாக மாறினார்கள். அதே காலத்தில், இதர கும்பல்கள்—டுவான் சீ-ஜீயினால் தலைமை தாங்கப்பட்ட அன்வெய் கும்பலும், சாங்சோ-லின்னால் தலைமைதாங்கப்பட்ட பெங்டியன் கும்பலும்—ஜப்பானின் ஆதிக்கத்தின்கீழ் விழுந்து விட்டன. பல்வேறு கும்பல்களைச் சேர்ந்த இத்தகைய யுத்த பிரபுக்கள் ஒருவரையொருவர் தாக்கி சதாகாலமும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தார்கள். 1920ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நடைபெற்ற சிகிலி—அன்வாய் யுத்தம், 1922ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற முதல் சிகிலி—பெங்டியன் யுத்தம் மற்றும் 1924ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற இரண்டாவது சிகிலி—பெங்டியன் யுத்தம் ஆகிய யுத்தங்கள் சீனாவில் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஜப்பானுக்குமிடையே நடைபெற்ற போராட்டங்களின் பிரதிபலிப்புகளாக மட்டுமே இருந்தன; பல்வேறு யுத்தப் பிரபுக்களின் கும்பல்களில் வெற்றி அல்லது தோல்வி, மூன்று ஏகாதிபத்திய அரசுகளின் சலுகைகள் மற்றும் நலன்கள் ஆகியவற்றின் குறுக்கத்தையோ அல்லது விஸ்தரிப்பையோ சுட்டிக்காட்டின.

ஜப்பானின்மீது நிர்பந்தம் உண்டாக்கும் பொருட்டு மற்றும் தூரக்கிழக்கில் ஜப்பானிய செல்வாக்கின்மீது சில கட்டுப்பாடுகளைத் திணிக்கும் பொருட்டும், அமெரிக்காவும் பிரிட்டனும் 1921ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வாஷிங்டன் மாநாட்டைக் கூட்டின. இம்மாநாட்டில் அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், பிரான்ஸ், இத்தாலி, சீனா, ஹாலந்து, போர்த்துக்கல், பெல்ஜியம் ஆகிய நாடுகள் பங்கு கொண்டன. ஆயுத தளவாடங்களின் விஷயங்களில், அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் கடற்படை கப்பல்களின் டன்னேஜை 5 : 5 : 3 என்ற விகிதத்தில் அது நிர்ணயம் செய்தது. ஒன்பது அரசு உடன்படிக்கை ஒன்றும் முடிவு செய்யப்பட்டது. அந்த உடன்படிக்கையில் சீன பிரச்சினை சம்பந்தமாக அபகீர்த்தி வாய்ந்த "திறந்த கதவு" கொள்கை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. சீனாவில் ஜப்பானுடைய விசேஷ உரிமைகளையும் நலன்களையும் அமெ

ரிக்காவும், பிரிட்டனும் அங்கீகரித்ததனால் மட்டுமே இந்த உடன்பாடு சாத்தியமாயிற்று. இந்த முறையில் ஒரு புதிய நிலைமைத் தோன்றிற்று. ஜப்பானால் சீனாவில் முழுக்க நடைபெற்ற வந்த ஆட்சி, ஏகாதிபத்திய அரசுகளால் சீனாவில் கூட்டு ஆதிக்கம் செலுத்தும் பழைய போக்கிற்கு இடம் கொடுத்தது; மேலும் சீனாவில் அமெரிக்க ஏகபோக ஆதிக்கத்திற்கான பாதையும் செப்பனிடப்பட்டது. வாஷிங்டன் மாநாடு ஏகாதிபத்திய அரசுகளால் சீனா பங்கு போடப்படுவதற்கான ஒரு மாநாடாக இருந்தது.

வாஷிங்டன் மாநாடு நடைபெற்ற அந்த சமயத்தில், **புதிய இளைஞன் கம்யூனிஸ்ட் கட்சி, முன்னணிப் படை** (இவை அனைத்தும் சீனக் கம்யூனிஸ்டுகளால் பிரசுரிக்கப்பட்டவை) ஆகிய பத்திரிக்கைகளில் வெளிவந்த விமர்சனங்கள் சீனப் பிரச்சினையைச் சுற்றிலும் மையம் கொண்டிருந்த யுத்தத்திற்கு பிந்தைய சர்வதேச உறவுகளில் தலைத்தூக்கி நிற்கும் குணாம்சங்களை அலசி ஆராய்ந்தன; இந்த மாநாட்டின் கொள்ளையைப் பங்குபோடும் தன்மையை அம்பலப்படுத்தின; மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளால் சீனாவைப் பங்குபோடும் அபாயத்தையும் அம்பலப்படுத்தின; மற்றும் ஜப்பானிய, பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் சீனாவை பங்குபோடும் அபாயத்தை அம்பலப்படுத்தின; மற்றும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் யுத்த பிரபு அரசாங்கத்திற்கு எதிராகவும் விட்டுக் கொடுக்காதவொரு போராட்டத்தை நடத்துவதில் சீன மக்களுக்கு முன்பு உள்ள அரசியல் கடமை 'ஒன்றுபடுவதுதான்' என்றும் சுட்டிக்காட்டிற்று.

## 2. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் முதல் தேசிய மாநாட்டில், கட்சியின் ஸ்தாபன கோட்பாடுகள் அங்கீகரிக்கப்படுதல். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது தேசிய மாநாட்டில் கட்சியின் திட்டத்தையும் மற்றும் வழிகாட்டும் பாதையையும் நிர்ணயம் செய்தல்.

1921ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1ஆம் தேதி அன்று, கம்யூனிஸ்ட் அகிலத்தின் உதவியோடு, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் தேசிய மாநாடு ஷாங்காய் நகரத்தில் நடைபெற்றது. பல்வேறு கம்யூனிஸ்ட் குழுக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த 12 பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். அவர்களில் மாசே-துங், குங்க்பி-உ, சென் டான்-சியூ மற்றும்

ஹோ ஷு-ஹெங் ஆகியோர் இருந்தனர். மொத்தம் அவர்கள் 57 கம்யூனிஸ்ட் உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள். முதல் தேசிய மாநாடு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு விதிகளை நிறைவேற்றிற்று. மற்றும் கட்சியின் தலைமை அமைப்பையும் தேர்ந்தெடுத்தது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி முறையாக நிறுவப்பட்டது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ருஷ்ய போல்ஷ்விக் கட்சியின் பாணியில் ஒரு புதுவகைப்பட்ட புரட்சிக் கட்சியாக நிறுவப்பட்டது. இப்படிப்பட்டதொரு கட்சி தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாகவும், வர்க்க உணர்வு பெற்ற படைப் பிரிவாகவும், மார்க்சிய-லெனினிய விஞ்ஞானத்தால் ஆயுதபாணியாக்கப்பட்டுள்ள ஒரு படைப்பிரிவாக உள்ளது. அது தொழிலாளி வர்க்கத்தின் ஸ்தாபன ரீதியாக அமைக்கப் பெற்றுள்ள ஒரு படை பிரிவாக உள்ளது; இப்படைப் பிரிவில், உறுப்பினர்கள் ஒன்றுபட்ட சித்தம், செயல் மற்றும் கட்டுப்பாட்டால் ஒன்றாக பிணைக்கப்பட்டு இருக்கிறார்கள். அது தொழிலாளி வர்க்கத்தின் சகல ஸ்தாபன உருவங்களிலும் மிக உயர்ந்த உருவமாகும், மேலும், எல்லாத் தொழிலாளி வர்க்க அமைப்புகளுக்கும் வழிகாட்டுவது, அதன் வேலையாகும்.

இப்படிப்பட்டதொரு கட்சியினை உருவாக்குவதற்கான அடிப்படையான நிபந்தனை என்னவென்றால், அதனுடைய உறுப்பினர்கள்மீது கண்டிப்பான தரத்தை வலியுறுத்துவது, அதனுடைய உறுப்பினர்களை உயர்ந்த ஒரு மட்டத்திற்கு உயர்த்துவது, தொழிலாளி வர்க்கம், பொதுவாக உழைக்கும் மக்கள் ஆகியோரிடையே உள்ள மிகமிக நேர்த்தியான, மிக மிக முன்னேறிய புரட்சிகரமான நபர்களைக் கட்சிக்குள் கொண்டுவருதல் என்பனவாகும்.

தொழிலாளி வர்க்கத்தின் ஒன்றுபட்டதொரு படைப் பிரிவாக இருப்பதற்கு, கட்சி, புரட்சிகரமான தத்துவங்களோடு, சமுதாயம் மற்றும் புரட்சி ஆகியவற்றின் வளர்ச்சி பற்றிய விதிகளின் அறிவோடும் தன்னை ஆயுதபாணியாக்கிக் கொள்ள வேண்டும். கட்சிக்குள் மார்க்சிய-லெனினியச் சித்தாந்த ஒற்றுமையை அது வலியுறுத்த வேண்டும்; மற்றும் வர்க்கப் போராட்டத்தின் மாறுபட்டுக் கொண்டிருக்கும் நிலைமைகளின்கீழ், மார்க்சிய—லெனினியத்தைப் பிரயோகிக்க வேண்டும். ஆகவே, அதனுடைய அணிகளுக்குள் பல்வேறுபட்ட சந்தர்ப்பவாதத்திற்கு எதிரான சமரசமற்றதொரு போராட்டத்தைக் கட்சி நடத்தவேண்டும்.

மேலே சொல்லப்பட்ட பாதையின் வழியாக கட்சியை உருவாக்குவதற்கான சாத்தியப்பாட்டிற்கு பல்வேறு காரணங்கள் இருந்தன. முதலாவதாக அது அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்கு பிறகு தோன்றி இருந்ததால் அது ரஷ்ய போல்ஷ்விக் கட்சியின்மீது தன்னை ஒரு மாதிரியாக அமைத்துக்கொள்ள முடிந்தது; மற்றும் கம்யூனிஸ்ட் அகிலத்தினால் உதவி செய்யப்படவும், வழிகாட்டப்படவும் முடிந்தது. இரண்டாவதாக, சீனா ஐரோப்பிய நாடுகளைப்போல் இல்லை; சமாதான பூர்வமான பாராளுமன்ற போராட்டங்களை தொடர்ந்து நடத்துவதற்கு அனுமதித்து, முதலாளித்துவத்தின் "அமைதியான" அபிவிருத்தியின் ஒரு கட்டத்தையும் பெற்றிருக்கவில்லை; அல்லது தொழிலாளர் கனத்தனமானக் கூட்டத்தையும் (Labour Aristocracy) அது பெற்று இருக்கவில்லை; அதாவது, சீர்திருத்தவாதத்தின் சமுதாய அடிப்படை சீனாவில் இருக்கவில்லை. இந்த முறையில், மிகவும் ஆரம்பத்தில் இருந்தே சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, ரஷ்ய போல்ஷ்விக் கட்சியின் பாரம் பரியத்தை ஆகர்ஷித்திருந்தது. எந்தவிதமான சமூக சீர்திருத்த வாதத்தாலும் பீடிக்கப்படாமல் இருந்தது. கட்சியின் தோற்றத்தின் மிகமிக தலைதூக்கி நிற்கும் குணாம்சமாக இது உள்ளது. முதல் தேசிய மாநாட்டின் சாதனை என்னவென்றால், அது கட்சியின் சரியான ஸ்தாபன கோட்பாடுகளுக்கான அஸ்திவாரத்தை போட்டதுஎன்பதுதான்.

ஆனால் அரைக்காலனிய சீனா, பெரும் அளவிலான குட்டி முதலாளித்துவ நாடாக இருந்தமையால் கட்சி உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் நகர்புற குட்டி முதலாளித்துவ வர்க்கத்திலிருந்தோ விவசாயிகளிடமிருந்தோ வந்தார்கள். ஆகவே குட்டி முதலாளித்துவக் கருத்துக்களை பல்வேறு அளவில் கட்சிக்குக் கொண்டு வந்திருப்பார்கள் என்பது தவிர்க்கமுடியாததாகும்; இந்த குட்டி முதலாளித்துவ கருத்துக்கள் 'இடதுசாரி' மற்றும் 'வலதுசாரி' சந்தர்ப்பவாதத்தின் சமுதாய தோற்றுவயாக இருந்தன. எனவே, சகல பாட்டாளி வர்க்கமற்ற கருத்துக்களையும் மார்க்சிய-லெனினியத்தால் மீண்டும் வார்த்து எடுப்பதும் மற்றும் கட்சி முழுவதின் பொதுவான சித்தாந்தத் தரத்தை உயர்த்துவதும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை நிர்மாணிப்பதில் மகோன்னதமான முக்கியத்துவம் உடையதொரு கடமையாக ஆயிற்று.

கட்சியின் முதல் தேசிய மாநாடு இரண்டு தவறான கருத்தோட்டங்களை எதிர்த்துப் போராடிற்று. ஒரு கருத்து, சட்டப்பூர்வமான மார்க்சியம் பற்றிய வலதுசாரிக் கருத்தோட்

டம்; இக்கருத்தோட்டம் புத்திஜீவிகள் மார்க்சியத்தைக் கற்று உணரக்கூடியதொரு கல்லூரியாகக் கட்சியை மாற்றுவதை குறிக்கோளாகக் கொண்டிருந்தது. சட்டபூர்வமான மார்க்சியவாதிகள் தொழிலாளி வர்க்க இயக்கத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு கண்டிப்பு மிகுந்ததொரு ஸ்தாபனத்தை ஏற்படுத்துவதற்கு பதிலாக, சீனாவில் உள்ள மார்க்சியவாதிகள் பள்ளிக்கூடங்களை நிறுவுவதிலும் செய்திப் பத்திரிக்கைகளைப் பிரசுரிப்பதிலும் பாராளுமன்ற போராட்டங்களில் பங்கு எடுப்பதிலும் பிரச்சாரப் பணியை தொடர்ந்து நடத்துவதிலும் கருத்தினைக் கொண்டு இருந்தனர். மற்றொன்று ''இடதுசாரி'' அதிதீவிரவாதிகளின் கருத்தோட்டமாகும். இக்கருத்தோட்டம் பாட்டாளி வர்க்க சர்வதேசியம்தான் கட்சியின் உடனடிக் குறிக்கோளாகும் மற்றும் முதலாளித்துவ ஜனநாயக இயக்கத்தில் கட்சி பங்கெடுப்பதையும், சட்டபூர்வமான நடவடிக்கைகளை நடத்துவதையும், கட்சிக்குள் புத்திஜீவிகளைச் சேர்ப்பதையும் எதிர்ப்பதை இது கருத்தோட்டமாகக் கொண்டிருந்தது.

சென்டு-ஷியு இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. சீனாவில் மார்க்சியம் அறிமுகம் ஆவதற்கு முன் ஒரு தீவிர ஜனநாயகவாதியாக இருந்த அவர் பின்னர், செல்வாக்கு மிக்கதொரு சோஷலிச பிரச்சாரகராகவும், கம்யூனிஸ்ட் கட்சியை ஸ்தாபிப்பதற்கு முன்கை எடுத்தவர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார். முதல் தேசிய மாநாட்டில், மத்தியக் கமிட்டியைத் தலைமை தாங்குவதற்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனினும், அவர் நல்லதொரு மார்க்சியவாதியல்ல. சீனாவில் அவர் மார்க்சிய சித்தாந்தத்தைப் பிரச்சாரம் செய்திருந்த போதிலும், அவரது மனோநிலையில் பூர்ஷ்வா கருத்து முதல் வாதத்தின் பெரியதொரு கூட்டுக் கலவையாக இருந்தது. உதாரணமாக, மார்க்சிய தத்துவ ஞானமும், பிற்போக்கான பூர்ஷ்வா தத்துவ ஞானமான காரிய வாதமும் (Pragmatism) நவீன காலத்தின் இரண்டு மிகமிக முக்கியமான சிந்தனை முறைகளாக இருந்தனவென்றும் மற்றும் தத்துவ ஞானத்தின் இத்தகைய இரு விரோத குரோத முரண்பாடுகளைக் கொண்ட சிந்தனை முறைகளும் ஒரு ஐக்கிய முன்னணியை உருவாக்க வேண்டும் என்றும் அவர் பிரேரேபித்தார். மார்க்சியம் சமுதாய நிகழ்ச்சிப் போக்குகளை மட்டுமே விளக்கிக் கூறமுடியும் என்றும், ஆனால் அதனுடைய சாராம்சத்தை விளக்கிக் கூறமுடியாது என்றும் கொண்டிருந்த அவரது அபிப்ராயம் அவர் அஞ்ஞான வாதச் சகதியில் இறங்கும்படிச் செய்தது. சீனாவில் அவர்

சோஷலிசக் கருத்துக்களைப் பரப்பினார் என்பது உண்மைதான்; ஆனால் அவரது அபிப்ராயத்தில், ஒரு சோஷலிசப் புரட்சிக்கு போவதற்கு சீனா எப்படி இருந்தது? சீனா சோஷலிச புரட்சியை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று அவர் முதலில் நினைத்தார்; அப்படி கூறியதன் மூலம் சீனப் புரட்சியின் பல்வேறு கட்டங்களைப் பற்றி அவர் குழம்பி இருந்தார் என்பதை அவர் காட்டிக்கொண்டார். பின்னர் சீனப்புரட்சி இரண்டு கட்டங்களின் வழியாகச் செல்லவேண்டும். பூர்ஷ்வா வர்க்கத்தின் தலைமையின்கீழ் ஜனநாயகப் புரட்சியின் வழியாகவும், மற்றும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் சோஷலிசபுரட்சியின் வழியாகவும் சீனப் புரட்சி செல்லவேண்டும் என்ற கருத்தோட்டத்திற்கு அவர் மாறினார்.

இத்தகைய அவரது தவறானக் கருத்தோட்டங்கள், 1924, 1927 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற புரட்சியின் பொழுது தவறானதொருக் கட்சிக்கொள்கையாக அபிவிருத்தி அடைந்தது. சீனப் புரட்சியின் நடைமுறையோடு மார்க்சிய - லெனினிய தத்துவத்தின் ஸ்திரமான மற்றும் நன்கு ஒருங்கிணையப் பெற்ற பார்வை முற்றிலும் அவருக்கு அப்பாற்பட்டதாக இருந்தது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் மிகவும் ஆரம்ப காலத்தில் இருந்தே, தோழர் மாசே-துங் புதிய வகைப்பட்டதொரு கட்சியைநிர்மாணிக்கும் பிரச்சினைக்குக் குறிப்பான கவனம் செலுத்திவந்தார்.

முதல் தேசிய மாநாட்டிற்கு பிறகு, தோழர் மாசே-துங் ஹுனானுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்; அந்த மாகாணத்தில் கட்சி செயலாளர் பொறுப்பை வகிப்பதற்காக அவர் அனுப்பி வைக்கப்பட்டார். மிகக் கடுமையானதொரு அலசி ஆராய்ந்து பார்க்கும் நிகழ்ச்சிப் போக்கின்மூலம், சோஷலிஸ்ட் இளைஞர் கழகத்திலும் மற்றும் நிலவி இருந்த புரட்சி ஸ்தாபனங்களிலும் உள்ள முன்னேறிய நபர்களை அவர் கட்சிக்குள் கொண்டு வந்ததோடு மட்டும் இன்றி தொழிலாளர் இயக்கத்தை விரிவாக்கிக் கொண்டிருந்த சமயத்தில் அவர் கட்சிக்குள் முன்னேறிய தொழிலாளர்களையும் இணைத்துக் கொண்டார்.

கட்சியின் சித்தாந்த பணிக்கு தோழர் மாசே-துங் மகத்தான கவனத்தை செலுத்தினார். கட்சி உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் கழகஉறுப்பினர்கள் ஆகியோரின் சித்தாந்தத் தரத்தையும், அரசியல் தரத்தையும் உயர்த்துவதற்கும் மற்றும் மார்க்சிய-லெனினிய பாண்டித்தியம் பெறுவதற்கு அவர்களுக்கு உதவி செய்யவும், மற்றும் வெகு ஜனங்களுக்கு இடையே கம்யூனிஸ்டுக்

கட்சியைத் தொடர்ந்து நடத்தவும் 1927ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில், சுயப்பயிற்சி பல்கலைக்கழகம், புதிய காலங்கள் என்ற இரண்டு மாத பத்திரிக்கைகளை அவர் ஆரம்பித்தார்.

சுயப்பயிற்சி பல்கலைக் கழகத்தின் செல்வாக்கு பீக்கிங், ஷாங்காய் மற்றும் இதர இடங்களையும் எட்டிப் பிடித்தது. நாட்டில் இருந்த பல முற்போக்கு செய்திப் பத்திரிக்கைகள் அதனை உயர்ந்த முறையில் சிபாரிசு செய்தன.

கட்சி நிர்மாணிக்கப்பட்ட பிறகு சீனப் புரட்சி தீவிரமான தொரு புதிய அம்சத்தை மேற்கொண்டது.

லெனினுடைய வழிக்காட்டுதலின் கீழ், தூரக்கிழக்கில் உள்ள பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் தேசிய புரட்சி அமைப்புகள் ஆகியவற்றின் முதல் மாநாட்டை 1922ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மாஸ்கோவில கம்யூனிஸ்ட் அகிலம் ஏற்பாடு செய்தது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி இந்த மாநாட்டிற்கு ஒரு பிரதிநிதிக் குழுவை அனுப்பிற்று.

இந்த மாநாடு வாஷிங்டன் மாநாட்டின் ஏகாதிபத்திய தன்மையை அம்பலப்படுத்திற்று. மேலும், சீனா மற்றும் கிழக்கில் உள்ள ஒடுக்கப்பட்ட இதர தேசங்களின் மிகமிகப் பெரிய எதிரி களாக ஏகாதிபத்தியத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் கட்டிக் காட்டிற்று. கிழக்கத்திய ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கும் மேற்கத் திய நாடுகளின் பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையே ஒரு கூட்டணி அமையவேண்டிய அவசியத்தை அது வலியுறுத்திற்று, ஆகவே, சீன மக்கள் மற்றும் இதர கிழக்கத்திய நாடுகளின் மக்களின் கடமை, ரஷ்ய பாட்டாளி வர்க்கத்தின் உதவியோடு ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு தேசிய ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுவதாக இருந்தது.

இந்த மாநாடு சீனக்கம்யூனிஸ்ட் கட்சிக்கு மாபெரும் முக்கியத்துவம் உடையதாக இருந்தது. கட்சி நிறுவப்பட்ட சமயத்தில், வரையறுத்துக் கூறப்பட்டிருந்தது போல் கட்சியின் இறுதி லட்சியம் சீனாவில் பொது உடமையை நிர்மாணிப்பதாக இருந்த போதிலும், இந்த லட்சியத்தை அடைவதற்கான பாதை தெளிவற்றதாக இருந்தது. எனினும் லெனினியத்தின் படி, அரைகாலனிய மற்றும் அரைநிலப்பிரபுத்துவ நாடுகள் ஒரு சோஷலிச சமுதாயத்தையும், பின்னர் பொதுவுடமைச் சமுதா யத்தையும், உருவாக்குவதற்கு உடனடியான கடமை, ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு புரட்சியை நிறைவேற்றுவதாக இருந்தது.

மாஸ்கோ மாநாட்டில் இருந்து திரும்பிய சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகள் கட்சியின் இரண்டாவது தேசிய மாநாட்டில் கலந்து கொண்டார்கள். இம்மாநாடு கட்சிக்கு ஒரு அதிகபட்ச திட்டத்தையும், ஒரு குறைந்தபட்ச திட்டத்தையும் வகுத்தது; இத்திட்டங்கள் காலனி நாடுகள், அரைக்காலனி நாடுகளில் நடைபெறும் புரட்சிகள் சம்மந்தமான லெனினிய தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

கட்சியின் இரண்டாவது தேசிய மாநாடு 1922 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஷாங்காயில் நடைபெற்றது. 123 கட்சி உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் 12 பிரதிநிதிகள் அந்த மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

மார்க்சிய-லெனினிய தத்துவங்களின் பிரயோகத்தினால், சீனப்புரட்சியின் திட்டங்கள் பற்றிய பிரச்சினையை மாநாடு சரியாக பரிசீலனைச் செய்தது. இந்த மாநாட்டினால்வெளியிடப் பட்ட அறிக்கை சீனப்புரட்சியின் பிரச்சினைகள் சம்மந்தமாக கட்சியின் கண்ணோட்டங்களையும் முடிவுகளையும் பிரதி நிதித்துவப் படுத்தின.

அது மூன்று பகுதிகளாக உள்ளது. முதலாளித்துவமும், ஏகாதிபத்தியமும் காலனி சந்தைகளின் மீது அவசியமாக சார்ந்திருப்பதை முதல் பகுதி சுட்டிக் காட்டுகிறது; 80 ஆண்டு களாக அந்நிய ஆக்கிரமிப்பினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த பிறகு, சீனா அவர்களுடைய மிகப் பெரிய பொதுவான காலனி யாக மாறி இருந்தது என்பதையும் அது மேலும் சுட்டிக்காட்டு கிறது. பாரீஸ் மாநாடு மற்றும் வாஷிங்டன் மாநாடு ஆகியவற்றின் தன்மையை அது அலசி ஆராய்கிறது; வாஷிங்டன் மாநாட்டிற்கு பிறகு சீனாவில் ஏகாதிபத்தியவாதிகளால் உருவாக்கப்பட்ட "கூட்டு ஆக்கிரமிப்பின்" புதிய நிலைமையை அது கவனத்துடன் அலசி ஆராய்ந்தது. பட்டாளி வர்க்கத்தை யும் ஒடுக்கப்பட்ட தேசங்களையும் கூட்டாக கொள்ளை அடிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்த எதிர்ப்புரட்சிகரமான ஏகாதிபத்திய முகாம், பட்டாளி வர்க்க புரட்சி மற்றும் தேசிய புரட்சியின் ஒற்றுமையால் உருவாக்கப்பட்டிருந்த புரட்சிகரமான முகாம் என இரண்டு விரோத குரோத முகாம்கள் யுத்தபிந்தைய கால உலகில் இருப்பதையும் அது சுட்டிக் காட்டியது. இந்தப் புரட்சிகரமான முகாம், ஏகாதிபத்தியத்தை அதனுடைய சவக் குழிக்குள் அனுப்புவதற்கு தீர்மானித்திருந்தது.

இரண்டாவது பகுதி, சீன சமுதாயத்தின் தன்மையையும் சீனப்புரட்சியின் தன்மையையும் மற்றும் அதனுடைய ஊக்குவிக்

கும் சக்திகளையும் அலசி ஆராய்கிறது. சீனா ஒரு அரைகாலனிய, அரை நிலப்பிரபுத்துவ சமுதாயமாக இருந்தது; இது ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு புரட்சியாலோ அல்லது ஒரு தேசிய ஜனநாயகப் புரட்சியாலோ எதிர் நோக்கப்பட்டிருந்தது. புரட்சியின் ஊக்குவிக்கும் சக்திகள் தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், குட்டி முதலாளிகள் ஆகியோரை உள்ளடக்கி இருந்தது. தேசிய முதலாளி வர்க்கமும் புரட்சிகரமான ஒரு சக்தியாக இருந்தது.

அறிக்கையின் மூன்றாவது பகுதியில், கட்சியின் அதிகபட்ச, குறைந்த பட்ச திட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. இவை மாநாட்டில் விவாதிக்கப்பட்ட மையப் பிரச்சனையாக இருந்தன. அறிக்கை இவ்வாறு பிரகடனம் செய்கிறது: "சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, சீனப்பட்டாளி வர்க்கத்தின் அரசியல் கட்சியாகும். வர்க்கப் போராட்டத்தின் மூலம் தொழிலாளி மற்றும் விவசாயிகளின் ஒரு அரசியல் சர்வாதிகாரத்தை சித்திபெற செய்வதற்காகவும், தனிச் சொத்துடைமை அமைப்பை ஒழிப்பதற்காகவும், படிப் படியாக பொது உடமை சமுதாயத்தை உருவாக்குவதற்காகவும் பட்டாளி வர்க்கத்தை ஸ்தாபன ரீதியாக திரட்டுவதே அதனுடைய குறிக்கோளாகும்." அதுதான் கட்சியின் அதிகபட்ச திட்டம். இந்த நாட்டில் ஒரு கம்யூனிஸ்ட் சமுதாயத்தை நிர்மானிப்பதன் மூலமே சீனமக்கள் முழுமையான விடுதலையைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையை அடிப்படையாக கொண்டிருந் தது, இந்தத் திட்டம். அக்காலத்து வரலாற்று நிலைமைகளில் சீனமக்கள் புரட்சியின் அடிப்படைக் கடமைகள் பின்வருமாறு இருந்தனவென்றும் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது : (1) உள் நாட்டுக் கலகத்தை விலக்கி, யுத்தபிரபுக்களைத் தூக்கி எறிந்து, உள்நாட்டு அமைதியை நிலை நிறுத்துதல்; (2) சர்வதேச ஏகாதிபத்திய ஆட்சியைத் தூக்கி எறிந்துவிட்டு, சீனமக்களின் முழுமையான சுதந்திரத்தைப் பெறுதல்; (3) சீனாவை உண்மையானதொரு ஜனநாயகக் குடியரசாக ஒன்று படுத்துதல். இவை கட்சியின் குறைந்தபட்ச திட்டமாக அமைந்தன. இந்த முறையில், சீனமக்களின் முன்பு உண்மையானதொரு புரட்சிகர மான ஜனநாயகத் திட்டம் கட்சியினால் வைக்கப்பட்டது.

"ஏகாதிபத்தியம் ஒழிக!", "யுத்தபிரபுக்கள் ஒழிக!", "ஜனநாயகக் குடியரசை நிர்ணயிப்போம்!" —இவை சீன ஜனநாயகப் புரட்சியின் கேந்திரமான கோஷங்களாக இருந்தன; இந்த புரட்சி, அபினி யுத்த காலத்தில் இருந்தே நடைபெறுகிறது. இப்புரட்சி ஏற்கனவே எண்ணற்ற போராட்டங்கள்மூலம் கடந்து

வந்துள்ளது. ஆனால் மே 4ஆம் தேதி இயக்கம் நடைபெறும் வரையிலும் அதனுடைய தலைவர்கள் எவருமே புரட்சியின் அடிப்படையான கடமை, ஏகாதிபத்தியத்தையும் நிலப்பிரப் பிரவுத்துவத்தையும் எதிர்ப்பது என்பதை தெளிவாக உணர வில்லை. கட்சியினுடைய அடிப்படையான அரசியல் பாதையாக வும், சீனமக்களின் விடுதலை இயக்கத்தின் அடிப்படை செயல் திட்டமாகவும் இத்தகைய கோஷங்கள் கட்சியின் இரண்டாவது தேசிய மாநாட்டினால் முதலில் முன்வைக்கப்பட்டன. சீனப் புரட்சியின் புத்திசாலித்தனமான தலைவனாகவும், புரட்சியை வெற்றி நோக்கி வழி நடத்தி செல்ல திறமை படைத்த ஸ்தாபன மாகவும் கட்சி தன்னை இந்த முறையில் நிர்வகித்துக் கொண்டது.

இந்த புரட்சிகரமான ஜனநாயகத் திட்டம் எந்த விதமான முதலாளித்துவ சீர்திருத்தவாத திட்டத்தில் இருந்தும் தீவிரமாக வேறுபட்டு இருந்தமையால், இத்திட்டம் இயல்பாகவே முதலாளித்துவ சீர்திருத்தவாதிகளிடம் இருந்து எதிர்ப்பைச் சந்தித்தது.

ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பது என்ற கோஷத்தை சீனாவில் முதல் தடவையாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சி முன் வைத்தபோது ஹூஷி உடன்டியாக பின்வருமாறு வியந்து கூறினார்: "இப்படிப் பட்டதொரு பார்வை முற்றிலும் அடித்தள மற்றது; நாட்டுபுற மக்கள் நூதனமான ஒரு நாட்டில் உள்ள அற்புதங்களைப் பற்றி பேசுவதுபோல் இது உள்ளது!" தன்னுடைய விஷேமான வர்க்கப்பணியோடு, அவன் ஏகாதிபத்தியத்தைப் பாதுகாக்க முயற்சித்தான்; அமெரிக்காவும் இதர எல்லா ஏகாதிபத்திய நாடுகளும் "அமைதியான ஒற்றுமையான" ஒரு சீனாவை விரும்பினார்கள் என்றும், வாஷிங்டன் மாநாடு, "சீனாவிற்கு உதவி செய்வதில்" அமெரிக்காவின் உண்மையானதொரு அறிவிப்பாக இருந்தது என்றும், அமெரிக்காவினால் ஏற்பாடு செய்யப்பட்ட புதிய வங்கி கூட்டணி எந்த விதமான "தீமையையும்" அர்த்தப்படுத்தவில்லை என்றும், சினாவில் முதலீடு செய்யும் ஏகாதிபத்திய முதலீடுகள் "அனைத்தும் நன் மைக்காகவே" இருந்தன என்றெல்லாம் அவன் அடித்துக் கூறி னான். "இப்போது சீனாவில் அந்நிய ஆக்கிரமிப்புப் பற்றி அதிக அபாயம் இல்லை" என்ற படுபயங்கரமான வாதத்தினால் சீன மக்களைக் கைகழுவக்கூட அவன் முயற்சித்தான். ஆகவே, "அந்நிய ஏகாதிபத்தியம் என்ற வார்த்தையைச் சொல்லக் கூட" அவன் ஆட்சேபித்தான். ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும்

ஜனநாயகத்திற்காகவும் நடைபெறும் சீனாவின் போராட்டம் முற்றிலும் சம்மந்தமற்றது என்ற அளவிற்கு சென்று சொன்ன போது, ஏகாதிபத்தியத்தின் இந்த விசுவாசமான தொங்குசதை யான இவன் தனது முகமுடியை கலைந்துக்கொண்டான்.

ஒரு நாடாளுமன்றம், ஜனாதிபதி, அரசியல் சட்டம், "கனதனவான்களின் அரசாங்கம்" சுயாட்சி பெற்ற மாநிலங் களின் மகா சம்மேளனம் போன்ற இப்படிப்பட்ட சாதானங்களி னால் ஜனநாயகத்தைச் சித்தி பெற செய்வதற்கு முதலாளித்துவ சீர்திருத்த வாதிகள் முயற்சி செய்தார்கள்; யுத்த பிரபு அரசாங் கத்தின் கீழ் ஒரு முதலாளித்துவ பாராளுமன்ற அமைப்பை ஏற்படுத்துவது சாத்தியம் என்று அவர்கள் நினைத்தார்கள். வடசீனாவிற்கும் தென் சீனாவிற்கும் இடையே சமாதான பேச்சுவார்த்தைகளை ஊக்குவிப்பதற்காகவும், மீண்டும் நாடாளு மன்றத்தைச் செயல்பட செய்வதற்காகவும் பீக்கிங் மத்திய அரசாங்கத்தில் ஒரு சீர்த்திருத்தவாத மந்திரி சபை ("கனதன வான்களின் அரசாங்கம்" என்று அவர்களால் கருதப்பட்ட ஒரு அரசாங்கத்திற்கு சமமானது) வேண்டுமென்று அவர்கள் பிரே ரேபித்தார்கள். ஸ்தல அரசு சம்பந்தப்பட்ட மட்டில் அவர்கள் மாநில சுயாட்சியைக் கோரினார்கள். ஏனெனில், "ஒரு ஒற்றை உறுப்பு அரசாங்கம்" சீனாவிற்கு பொறுத்தமற்றதாக இருக்கும் என்று அவர்கள் கருதினார்கள். ஸ்தல சட்டபேரவைகளுக்கு அதிகாரத்தைப் பரவலாக்குவது மிகமிகச் சிறப்பான முறையாக இருக்கும் என்றும் இந்த முறை யுத்த பிரபுக்களை, "கட்டுப் பாட்டின்கீழ்" வைத்திருக்கும் ஒரு நிலையில் இருக்கும் என்றும் அவர்கள் கூறினார்கள்.

இப்படிப்பட்டதொரு திட்டத்தோடு முதலாளித்துவ சீர்த் திருத்தவாதிகள், யுத்தபிரபு அரசாங்கத்திடம் இருந்து கொஞ் சம் அரசியல் அதிகாரத்தைப் பறிப்பதற்கு முயற்சித்தார்கள். நிலச் சுவாந்தார்கள், அதிகார வர்க்கத்தினர், யுத்த பிரபுக்கள் பூர்ஷ்வா வர்க்கத்தின் உறுப்பினர்களாக மாறிவிடுவார்கள் என்ற சிந்தனையிலும்கூட அவர்கள் ஊறிப்போய் இருந்தார்கள். நிச்சயமாக, யுத்த பிரபுக்களின் பிற்போக்கு ஆட்சி அப்படியே வைக்கப்பட்டிருந்த இந்தத் திட்டம் ஒருபோதும் எங்கும் அழைத் துச் செல்லமுடியாது. நாடாளுமன்றம், ஜனாதிபதி, அரசியல் சட்டம், கனதனவான்களின் அரசாங்கம் என்று சொல்லப்படுவ தெல்லாம், கேந்திரமான யுத்தபிரபுக்களின் கரங்களில் வசதி யான கருவிகளாக மட்டுமே மாறிவிடும்; மாநில சுயாட்சி என்பது ஸ்தல நிலப்பிரபுக்களிடையே சண்டைச் சச்சரவுக்கான

ஒரு சாக்காகவும் மாறிவிடும். பிரதேச விரிவாக்கத்தைக் குறிக் கோளாகக் கொண்ட யுத்த பிரபுக்கள் பலாத்காரத்தினால் சீனா ஒன்றுபடுத்தப்பட வேண்டும் அல்லது சக்தி வாய்ந்த ஒரு மத்திய அரசு நிறுவப்படவேண்டும் என்று வக்காளத்துவாங்கி பேசுவார் கள்; தங்களுடைய சொந்த மாநிலங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்கள். சுயாட்சி பெற்றுள்ள மாநிலங்களின் ஒரு கூட்டு அமைப்பது பற்றி வக்காளத்து வாங்கி பேசுவார்கள்; ஆகவே, யுத்த பிரபு அமைப்பின் கீழ் ஒரு மத்திய அரசாங்கமோ அல்லது ஸ்தல அரசாங்கமோ யுத்த பிரபுக்களின் சர்வாதிகாரத் தில் இருந்து அதனை விடுவித்துக் கொள்வது சாத்தியமற்றதாக இருந்தது.

இந்த முறையில், சீனக் கம்யூனிஸ்ட்டுகள் அக்காலத்து முதலாளித்துவ சீர்திருத்த வாதத்தின் பல்வேறு தவறுகளை விமர்ச்சித்தார்கள். இந்த முழுமையான பார்வை இல்லாமை யால் கோமிங்டான் கட்சியின் ஜனநாயகப் பகுதியினர், அவர் களது தொடர்ச்சியான புரட்சிகரமான முயற்சிகளில் திட்ட வட்டமாக தவறிவிட்டார்கள் என்றும் சீனக் கம்யூனிஸ்ட்டுகள் சுட்டிக்காட்டினார்கள். ஏகாதிபத்தியத்திற்கும் மற்றும் நிலப் பிரபுத்துவத்திற்கும் எதிராக ஒரு போராட்டத்தை ஆரம்பிக்கும் பொருட்டு இந்த புரட்சிகரமான ஜனநாயகத் திட்டத்தின் அடிப்படையில் ஒரு ஐக்கிய முன்னணியை நிறுவும்படி கம்யூனிஸ்ட் கட்சி சகல ஜனநாயக வாதிகளுக்கும் அறைகூவல் விடுத்தது.

முதலாவது தேசிய மாநாடு, கட்சியின் ஸ்தாபனக் கோட் பாட்டுக்கு அஸ்திவாரம் போட்டது போலவே, இரண்டா வது தேசிய மாநாடு கட்சியின் அரசியல் பாதைக்கும் திட்டத்திற் கும் அஸ்திவாரத்தைப் போட்டது. எனினும், இரண்டாவது மாநாடும் பலபல பலஹீனங்களைக் கொண்டு இருந்தது. குறிப்பாக, பட்டாளி வர்க்க தலைமை பிரச்சனையில் பலஹீனங் களைக் கொண்டு இருந்தது. பட்டாளிவர்க்கம் தவிர்க்க முடியாத படி புரட்சியின் தலைமை தாங்கும் வர்க்கமாக மாறிவிடும் என்று சுட்டிக்காட்டிய போதிலும், உடனடியான முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியில் பட்டாளி வர்க்க தலைமையின் அவசியத்தை வலியுறுத்தி கூறுவதற்கு அது தவறி விட்டது. அதற்கு பதிலாக ''ஜனநாயக புரட்சி இயக்க பாதையின் வழியாக செல்வதற்கு உதவி செய்வதில் தொழிலாளிகளுக்கு வழி காட்டுவது'' மட்டுமே கட்சியின் கடமை ஆகும் என்று அது கூறிற்று. ஜனநாயக புரட்சியின் ஒரு தலைவன் என்ற பாத்திரத் தில் இருந்து, பூர்ஷ்வா வர்க்கத்திற்கு வெறுமனே ஒரு உதவி

யாளன் என்ற பாத்திரத்திற்கு பட்டாளி வர்க்கத்தை ம ட்ட தட்டுவதற்கு இது ஒப்பாக இருந்தது. ஜனநாயக புரட்சியின் வெற்றிக்கு பிறகு தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளுக்கு, ''சில உரிமைகளைப்'' பெறுவதை மட்டுமே மாநாடு எதிர் பார்த்தமையால், அரசியல் அதிகாரத்தைப் பெற வேண்டும் என்ற தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் கோரிக்கையையும் நிலம் வேண்டும் என்ற விவசாயிகள் கோரிக்கையையும் முன் வைப்பதற்கு அது தவறியது, மேலே குறிப்பிட்டுள்ள விஷயத் தோடு நெருக்கமாக சம்பந்தப்பட்டுள்ளது. தொழிலாளி வர்க்கத் தினால் தலைமைத் தாங்கப்பட்டும் மற்றும் தொழிலாளி, விவ சாயி கூட்டணியை அடிப்படையாக கொண்டும் அமைக்கப்படும் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் நிறுவப்படுதல் முற்றிலும் அவசியமானது ஆகும் என்பதோடு மட்டுமின்றி, சீனாவின் இடைக்காலத்தில் ஒரு பூர்ஷ்வா சர்வாதிகார காலகட்டத்தை இடைக்காலத்தில் திணிக்கப்படாமல், சீனாவில் சோசலிசத்திற் கும் கம்யூனிசத்திற்கும், வழி நடத்தி செல்வதற்கான ஒரே வழி அதுதான் என்ற விவரத்தை அது புறக்கணித்தது. இத்தகைய பலஹீனங்கள் 1924 ஆம் ஆண்டு இருந்து 1927 ஆம் ஆண்டு வரையிலும் நடைபெற்ற புரட்சியின்போது சென் டு ஷீ யூ சந்தர்ப்பவாத கும்பலினால் கட்சி கொள்கையில் ஒரு கடுமை யான திரிபு ஆக மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டது. இதன் விளைவாக புரட்சி ஒரு பின்னடைவினால் கஷ்டப்பட நேர்ந்தது.

மாநாடு, கோமிங்டானில் சேர்வதற்கும் கட்சியின் ஒரு மத்திய பத்திரிகையை—வழிகாட்டி என்ற வார பத்திரிக்கையை-பிரசுரிப்பதற்கும் முடிவுகள் எடுத்தது. வழிகாட்டி 1922 ஆம் ஆண்டு செப்டம்பரில் துவக்கப்பட்டது;இப்பத்திரிக்கை புரட்சிகர மான ஐக்கிய முன்னணியை ஆதரித்து நிற்பதிலும் மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு கருத்துக்களைப் பரப்புவதிலும் குறிப்பிடத்தக்கதொரு பாத்திரத்தை வகுத்தது.

### 3. சீனத்தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சி. ஹூனானில் தொழிலாளி வர்க்க இயக்கம். பீகிங் ஹாங்காங் ரயில்வே தொழிலாளிகளின் பெரிய அரசியல் வேலை நிறுத்தம்.

1921 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கட்சி நிறுவப்பட்ட பிறகு, தொழிலாளி வர்க்க இயக்கத்தைத் தலைமைத் தாங்கு வதில் கட்சி தனது முயற்சிகளைக் குவித்தது. கட்சியினுடைய

முதல் தேசிய மாநாட்டிற்கு பிறகு தொழிலாளர்களின் போராட்டங்களுக்கு வழிகாட்டுவதற்கு சீனத் தொழிற்சங்க செயற்குழு நிறுவப்பட்டது. செய்தித் தாள்களையும், மாத, வார இதழ்களையும் பிரசுரிப்பதும், மற்றும் தொழிலாளர்களுக்காக இரவுப் பள்ளிகளையும், சங்கங்கள் வாசகச் சாலைகளையும் ஏற்பாடு செய்வதும் மற்றும் அவர்களது அன்றாடப் போராட்டங்களில் அவர்களுச்கு வழிக்காட்டுவதும், அதனுடைய முக்கியமான கடமைகளாக இருந்தன. கட்சியின் சரியான தலைமையின் காரணமாகவும் சீனத் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரமான உற்சாகத்தின் காரணமாகவும் 1922 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து 1923 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரையிலும் தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களின் பெரும் அலை அடித்தது. 1922 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து ஹாங்காங் கடல் போக்குவரத்து தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தோடு அது ஆரம்பித்தது. 1923 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற பீக்கிங்—ஹாங்காங் ரயில்வே தொழிலாளர்களின் பெரும் அரசியல் வேலை நிறுத்தத்தில் அந்த அலை அதன் உச்சியை எட்டிப் பிடித்தது; மொத்தத்தில் 13 மாதங்கள் நீடித்த இந்த வேலை நிறுத்த அலையில், 100க்கும் மேற்பட்ட பெரிய, சிறிய வேலை நிறுத்தங்கள் சேர்ந்திருந்தன. இந்த வேலை நிறுத்த அலை வீச்சில், மூன்று லட்சத்திற்கும் அதிகமான தொழிலாளிகள் பங்கு கொண்டனர். இவற்றில் மிகப் பெரும்பாலான வேலை நிறுத்தங்கள் முழுமையாக வெற்றி பெற்றன. இத்தகைய வெற்றிகளினால் உற்சாகம் ஊட்டப் பட்ட தொழிலாளிகள், கம்யூனிஸ்ட்கள் தலைமைத்தாங்கிய தொழிற் சங்கங்களில் சேர்வதற்கு விரைந்து வந்தார்கள். தொழிலாளி வர்க்க இயக்கமும், தொழிலாளர்களின் ஸ்தாபனமும் துரிதமாக அபிவிருத்தி அடைந்து கொண்டு இருந்தமையால், சீனாவின் அரசியல் மற்றும் பொருளாதார வாழ்க்கை தொழிலாளி வர்க்கத்தினால் வகிக்கப்பட்ட முக்கியமான பாத்திரம் மிகவும் அதிகமாகவும் தெளிவாகவும் ஆயிற்று.

1922 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் தேதியன்று ஹாங்காங்கில் உள்ள அன்னிய கப்பல் கம்பெனிகளில் பணியாற்றிய சீனக்கப்பல் போக்குவரத்துத் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தனர்.

சீனக் கடல் போக்குவரத்துத் தொழிலாளிகள் பலவகைப் பட்ட ஒடுக்கு முறைகளினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் பரிதாபகரமான குறைந்தக் கூலியைப் பெற்றுக் கொண்

டிருந்தார்கள்; இக்கூலி அவர்களுடைய சுயவாழ்க்கைக்குக்கூட பற்றாக் குறையாக இருந்தது. அவர்கள் போர்மேன்களால் கசக்கிப் பிழியப்பட்டார்கள்; இந்த பேர்மேன்கள் முதலாளி களோடு கைக்கோத்துக் நின்றுக்கொண்டு தொழிலாளிகளை வேலைக்கு சேர்ப்பதிலும் காண்ட்ராக்ட் தொழிலாளிகளை அமர்த்துவதிலும் முழுக்கமுழுக்க சலுகைகளை அனுபவித்துக் கொண்டு இருந்தனர். கூலி விகிதங்கள் மிதமிஞ்சிய அளவிற்கு நியாயமற்றதாக இருந்தன. ஒரு சீனக் கடல் போக்குவரத்து தொழிலாளி, ஒரு அன்னிய கடல் போக்குவரத்துத் தொழிலாளி பெற்றுவந்த கூலியில், $\frac{1}{5}$ பகுதிமட்டுமே கூலியாகப் பெற்று வந்தான். இவை எல்லாவற்றிற்கும் மேலாக அரசியல்சமத்துவமற்று இருந்தது. யுத்தபிந்திய கால புரட்சி அலையின் செல்வாக்கின் கீழ், சீனக் கடல் போக்குவரத்துத் தொழிலாளிகள் சீக்கிரமாக வர்க்க உணர்வு பெற்றவர்களாக மாறினார்கள். வேலை நிறுத்தம் கூலி உயர்வுக்காகவும், மற்றும் தொழிலாளர்களை சிபாரிசு செய்வதற்கு தொழிற் சங்கங்களுக்கு உரிமை வேண்டும் என்பதற்காகவும் நடைபெற்றது. முப்பதாயிரத்துக்கும் அதிக மான கடல் போக்குவரத்துத் தொழிலாளர்களும் இதர போக்குவரத்துத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் குதித்தார்கள்; சீனக் கடல் போக்குவரத்துத் தொழிலாளர் சங்கம் இப்போராட்டங்களுக்கு தலைமை தாங்கிற்று. கடல் போக்குவரத்துத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் வெடித்தப் பிறகு, அந்த வேலை நிறுத்தத்திற்கு அனு தாபம் தெரிவிக்கும் முறையில் போக்குவரத்துத் தொழி லாளிகள் முதலில் வேலை நிறுத்தத்தில் குதித்தார்கள்; பிறகு ஹாங்காங்கிலுள்ள அனைத்துத் தொழிலாளர்களின் பொது வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடப்பட்டது. இந்தவேலை நிறுத்தம் நாடு முழுவதும் இருந்த தொழிலாளர்களிடமிருந்தும் ஆதரவைப்பெற்றது. வேலைநிறுத்தத்தை உடைக்கும் பொருட்டு ஹாங்காங் அரசாங்கம் சாத்தியமானச் சகல முறைகளையும் கை யாண்டது. பலாத்காரம், லஞ்சம் கொடுத்தல், மத்தியஸ்தம், பிளவை உண்டாக்குதல், கருங்காலிகளைச் சேர்ப்பது போன்ற எல்லாமுயற்சிகளையும் கையாண்டது; ஆனால் இத்தகையஎல்லா சூழ்ச்சிகளும் வேலை நிறுத்தம் செய்தவர்களால் தவிடு பொடி யாக்கப்பட்டன. மாலுமிகளால் கையாளப்பட்ட பிரதான நடை முறைத் தந்திரங்கள், ஹாங்காங்கை முற்றுகை இடுவதாக இருந்தது: ஹாங்காங் தனிமைப் படுத்தப்பட்டதொரு தீவாக இருந்தமையால், அங்கு வசிப்பவர்களின் தேவையைப் பூர்த்தி

செய்வதற்குப் போதிய உற்பத்தியைச் செய்ய முடியவில்லை. சகல உணவுப் பொருட்களும் மற்றும் அதனுடைய அன்றாடத் தேவைகளின் ஒரு பகுதியும் குவாங்டுங்கிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டியிருந்தது. இப்பொழுது ஹாங்காங்கிற்கும் குவாங்டுங்கிற்கும் இடையே செய்திப்போக்குவரத்துக்கள் வேலை நிறுத்தத்தினால் துண்டிக்கப்பட்டுவிட்டமையால், ஹ்ராங்காங்கில் தானியங்கள் மற்றும் இதர உணவுப் பொருள்களுக்குக் கூர்மையானதொரு பற்றாக்குறை இருந்தது. விலைவாசிகள் உயர்ந்தன; அரிசி விலை 60 சதவீதத்திற்கு அதிகமாகவும், இறைச்சி விலை 20முதல் 30 சதவீதமாகவும் உயர்ந்தது.

ஹ்ராங்காங் தொழிலாளர்களின் தீவிரமானப் போராட்டம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளைச் சலுகைகள் வழங்கும்படி நிர்பந்தித்தது. மார்ச் 6ஆம்தேதி அன்று மாலுமிகள் சங்கத்தை மூடுவதற்காகப் போட்ட உத்தரவை ரத்துச் செய்வதாக ஹாங்காங் அதிகாரிகள் அறிவித்தார்கள். கைது செய்யப்பட்ட தொழிலாளர்கள் விடுதலை செய்யப் பட்டார்கள்; 15 முதல் 30 சதவீத கூலி உயர்வும் பெறப்பட்டது. மார்ச் 8-ஆம் தேதி அன்று இந்தப் பெரும் வேலை நிறுத்தம் வெற்றிகரமானதொரு முடிவிற்கு வந்தது. ஒரு நூற்றாண்டுக் காலமாக நடைபெற்ற ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில், இது சீன மக்களின் முதல் வெற்றியைக் குறித்தது. மற்றும் இது அவர்களுடைய சொந்தப் பலத்தினாலேயே பெறப்பட்ட வெற்றியாகவும் இருந்தது. ஏகாதிபத்தியத்திற்கு எதிரான அவர்களது போராட்டத்தில், சீனமக்களின் மிக மிக உறுதியான முன்னணிப்படையாக இருப்பதையும் இது வெளிப்படுத்திற்று.

ஹ்ராங்காங் கடல் மாலுமிகளின் வேலை நிறுத்தத்தின் வெற்றி, நாடு முழுவதிலும் உள்ள தொழிலாளர்களின் போராட்டங்களுக்குப் பெரிய அளவில் உற்சாக மூட்டிற்று. எழும்பி வரும் வேலை நிறுத்த அலையைச் சமாளிப்பதற்காகவும் மற்றும் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலைமையைப் பலப்படுத்துவதற்காகவும், சீனக்கம்யூனிஸ்ட் கட்சி, ஒரு நாடு தழுவிய தொழிலாளர் மாநாட்டை நடத்துவதற்கு அறை கூவல் விடுத்தது. சீனத்தொழிற் சங்கச் செயற்குழுவின் முன் முயற்சியால், முதல் தேசியத் தொழிலாளர் மாநாடு 1922ஆம் ஆண்டு மே மாதம் 1-ஆம் தேதி அன்று காண்டனில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் 162 பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். இப்பிரதிநிதிகள் 12 நகரங்களையும் 100க்கும் மேற்பட்ட தொழிற் சங்கங்களையும் இரண்டு லட்சத்து எழுபதினாயிரம் தொழிற்சங்க உறுப்பினர்களையும் பிரதிநிதித்துவப் படுத்தினார்கள். பிரதிநிதிகளி

டையே கம்யூனிஸ்ட் கட்சி, கோமிங்டாங் அராஜகவாதக்கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளும், எந்தக் கட்சியோடும் இணைப்பு இல்லாமல் இருந்தவர்களின் பிரதிநிதிகளும் இருந்தார்கள். அந்தக் மாநாட்டில் பின்வரும் பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன.

ஜனநாயகப் புரட்சியில் தொழிலாளர்கள் பங்கெடுப்பது. ஸ்தலத் தொழிற்சங்களில் நிலவி வந்த கில்டு கண்ணோட்டத்தை அகற்றும் பொருட்டுத் தொழிற்சங்கங்களின் அகில சீனச் சம்மேளனத்தை நிறுவுதல், மற்றும் தொழிலாளர்களிடையே சோஷலிசக் கல்விக்கு ஏற்பாடு செய்தல் போன்ற கோட்பாடு களையும், 'ஏகாதிபத்தியம் ஒழிக', 'யுத்தப் பிரபுக்கள் ஒழிக' போன்ற கம்யூனிஸ்ட் கட்சியினால் முன்வைக்கப்பட்ட கோஷங் களையும்அந்த மாநாடு ஏற்றது. எட்டுமணி நேரவேலை நாள் பற்றியும் மற்றும் வேலை நிறுத்தங்களில் பரஸ்பர உதவி செய்யும் கோட்பாடு பற்றியும் அந்த மாநாடு தீர்மானங்களை நிறை வேற்றிற்று. மற்றும் தொழிற் சங்கங்களில் அகில சீனச் சம்மேளனம் நிறுவப்படும் வரையிலும் சீனத்தொழிற்சங்க செயற் குழுவைத் தேசியத் தொடர்பு மையமாக அங்கீகரித்தது. இந்தக் கடைசித் தீர்மானமும் மற்றும் மாநாட்டின் முழுமையான போக்கும் மாநாட்டில் பங்கு கொண்டவர்கள் அனைவரும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சீனத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலைவனாக ஒருமனதாக அங்கீகரித்தார்கள் என்பதைச் சுட்டிக் காட்டின. அதே சமயத்தில், சீனத் தொழிலாளி வர்க்கத்தின் நாடு தழுவிய ஒற்றுமையின் ஆரம்பத்தையும், மாநாடு குறிப் பிட்டுக் காட்டிற்று; இந்த முறையில், மாநாடு அந்தச் சமயத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேலை நிறுத்த இயக்கத்திற்குப் பலமானதொரு ஊக்குவிப்பையும் கொடுத்தது.

தங்களது வேலை நிறுத்தங்கள் ஏகாதிபத்தியவாதிகளாலும், யுத்த பிரபுக்களாலும் எல்லா இடங்களிலும் நசுக்கப்பட்டன என்ற விவரமும் தொழிலாளிகளுக்கு அரசியல் சுதந்திரத் முக்கியத்துவத்தை உணரும் படிச்செய்தது. எனவே, கட்சியின் தலைமையில் தொழிலாளர்ச் சட்டத்திற்கான ஒரு இயக்கத்தை அவர்கள் ஆரம்பித்தார்கள். தொழிலாளர்களின் உரிமைகளை யும், சுதந்திரத்தையும் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட "தொழிலாளர்ச் சட்டத்தின் உத்தேச நகல்" தொழிற்சங்கச் செயற் குழுவினால் தயாரிக்கப்பட்டுப் பீகிங்கிலிருந்த நாடாளு மன்றத்திற்கு ஒப்புதலுக்காகச் சமர்பிக்கப்பட்டது; அது 19 பகுதிகளைக் கொண்டிருந்தது. தொழிலாளர்களுக்குச் சங்கம் வைக்கும் சுதந்திரமும், தொழிலாளர்களுக்குப் பொது வேலை

நிறுத்தம் செய்யும் உரிமையும், கூட்டுப்பேரம் செய்யும் உரிமையும், எட்டு மணி நேர வேலை நாளை அங்கீகரித்தல், பெண்கள் மற்றும் குழந்தைகளின் வேலைக்குப் பாதுகாப்பு, குறைந்தப் பட்சக்கூலி விகிதத்தை நிலை நிறுத்துதல் மற்றும் சர்வதேச இணைப்புகளை நிலை நாட்டுவதற்குத் தொழிலாளர்களுக்குள்ள உரிமையை அங்கீகரித்தல் போன்ற உரிமைகள், மற்ற உரிமைகளுக்கிடையே இந்த 19 பகுதிகளில் சேர்க்கப்பட்டிருந்தன. இந்த நகல் திட்டம் நாடு முழுவதிலுமிருந்த செய்திப் பத்திரிக்கைகளில் பிரசுரிக்கப்பட்டு, தொழிலாளர்களிடையே பரவலாக விநியோகிக்கப்பட்டது. நாடு முழுவதிலுமிருந்த தொழிலாளர்கள், சட்டம் கொண்டு வரப்படவேண்டும் என்ற இயக்கத்தில் பங்கு கொள்ளும்படித் தொழிற்சங்கச் செயற்குழுவினால் விடப்பட்ட அறைகூவலுக்குச் சுறுசுறுப்பாகச் செவி சாய்த்தார்கள் யுத்த பிரபுக்களின் கட்டுப்பாட்டிலிருந்த ஒரு நாடாளு மன்றம் தொழிலாளர்களுக்கு மனித உரிமையையும் சுதந்திரத்தையும் வழங்குமென்றோ அல்லது தங்களுடைய நலன்களுக்கு உகந்ததொரு தொழிலாளர்ச் சட்டத்தை நிறைவேற்றுமென்றோ எதிர்பார்ப்பது நிச்சயமாக அப்பாவித்தனத்தின் உச்சமாக இருந்திருக்கும். எனினும், இத்தகைய 19 பிரிவுகளும் தொழிலாளர்களிடம் பலமான அபிப்பிராயத்தை உருவாக்கி, வேலை நிறுத்தங்களில், அவர்களது போராட்டத் திட்டமாக மாறி விட்டது. இடைவிடாத போராட்டமின்றி, அரசியல் சுதந்திரத்தைப் பெற முடியாது என்பதை இயக்கம் தொழிலாளி வர்க்கத்திற்குக் கற்றுக் கொடுத்தது.

நாடு தழுவிய வேலை நிறுத்தங்கள் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருந்தன. அந்தச் சமயத்தில் தொழிலாளி வர்க்க இயக்கம், மகத்தான அளவில் முன்னேறிக் கொண்டியுந்த மாகாணங்களில் ஹுன்னான் மாகாணமும் ஒன்றாகும். 1921-ஆம் ஆண்டில் கட்சியின் முதல் மாநாடு முடிந்த பிறகு, ஹுன்னானில் கட்சி வேலைக்குத் தலைமை தாங்குவதில், தோழர் மாசே-துங் ஹுன்னானுக்குத் திரும்பினார். 1922-ஆம் ஆண்டு மே மாதத்தில் முதல் தேசிய மாநாடு முடிந்த பிறகு, தொழிசங்கச் செயற்குழு ஷாங்காயிலிருந்து பீகிங்கிற்கு மாற்றப் பட்டது. மற்றும் நாட்டின் பெரிய நகரங்களில் கிளைகள் நிறுவப் பட்டன. தோழர் மாசே-துங் ஹுன்னான் கிளையின் தலைவராகத் தேர்ந்தெடுசகப்பட்டார். அவர் தொழிலாளி வர்க்க இயக்கத்திற்காகக் கடினமாக உழைத்தார். சாங்ஷா, அன்யுவான் நிலக்கரிச் சுரங்கம் மற்றும் ஷிகோ ஷாங் ஈயச்சுரங்கம்

ஆகியவற்றில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருந்தார். மாசே-துங், லியு ஷா-சீ மற்றும் பலரும் தொழிலாளர் மற்றும் வெகுஜனங்களோடு நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருந்தார்கள். அவர்களுடைய பிரச்சினைகள் பற்றி நன்கு அறிந்திருந்தார்கள். மற்றும் அவர்களுடைய போராட்டங்களில் எப்போதும் முன்னணியில் நின்றார்கள்.

1922-ஆம் ஆண்டிலும் மற்றும் 1923-ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியிலும் ஹுன்னானிலும்,ஒட்டு மொத்தமாக நாடு முழுவதிலும் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் தீவிரமானதொரு அபிவிருத்தி ஏற்பட்டு இருந்தது. கூலி உயர்விற்காகவும், அரசியல் உரிமைகளுக்காகவும் நடைபெற்ற வீரமிக்க வேலை நிறுத்தப் போராட்டங்கள், மாகாணம் முழுவதிலும் பரவலாக நடைபெற்றன. ஹுன்னான் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் மீதும், மற்றும் நாட்டின் இதர பகுதிகளில் நடைபெற்ற தொழிலாளி வர்க்க இயக்கத்தின் மீதும் மாபெரும் 'அன்யுவான் வேலை நிறுத்தம்' மிகப்பெரிய செல்வாக்கினைப் பெற்றிருந்தது.

கியாங்கி மாகாணத்தின் பிங்சியாங் நாட்டுபுறத்திலுள்ள அன்யுவான் நிலக்கரிச் சுரங்கம், அந்தச் சமயத்தில் தினந் தோறும் 2 ஆயிரம்டன்களுக்கும் அதிகமான நிலக்கரியைஉற்பத்தி செய்தது. டாயே இரும்புச்சுரங்கம் மற்றும் ஹன்யாங் இரும்புத் தொழிற்சாலை (இவ்விரண்டும் ஹீபே மாகாணத்திலுள்ளன.) ஆகியவற்றிற்குத் தேவைப்பட்ட நிலக்கரியை அது சப்ளை செய்தது. மொத்தத்தில் சுரங்கங்களிலும் மற்றும் சூசௌ-பிங்சியாங் ரெயில்வேயிலும் சுமார் 20 ஆயிரம் பேர் வேலை செய்தார்கள்.

அன்யுவான் நிலக்கரிச் சுரங்கம் ஜப்பானிய ஏகாதிபத்தியத் தின் ஆதிக்கத்தில் இருந்த அதிகார வர்க்க முதலாளிகளுக்குச் சொந்தமானதொரு நிறுவனம் ஆகும். அடுத்தடுத்து வந்த இயக்குனர்கள் அனைவரும் ஊழல் மலிந்த அதிகார வர்க்கத்தின ராக இருந்தார்கள்; சுரங்கத்திட்டங்கள் சம்பந்தப்பட்ட உண்மையான அதிகாரம் அன்னிய மேற்பார்வையாளரின் கரங்களில் இருந்து கொண்டிருந்தது. நிறுவனம் முழுவதுமே கும்பல் எஜமானர் முறையில் நடத்தப்பட்டு வந்தது. ஏகாதிபத்தியம், அதிகார வர்க்க முதலாளித்துவம் மற்றும் பத்தாம்பசலி நிலப்பிரத்துவம் ஆகிய மூன்று வகைப்பட்ட ஒடுக்கு முறையின் கீழ், தொழிலாளர்கள் அழுந்திக் கொண்டிருந் தார்கள். ஆகவே, அன்யுவான் நிலக்கரிச் சுரங்கம் ஏராளமானப் புரட்சிகரச் சாத்தியப்பாடுகளைக் கொண்டிருந்தது.

1921-ஆம் ஆண்டிற்குப் பிறகு மார்க்சியக் கல்வியைப் போதிப்பதற்குச் சுரங்கத்திலிருந்த தொழிலாளர்களுக்காகக் கட்சி முதலில் ஓய்வு நேரப் பள்ளிகளை நடத்திற்று; பிறகு அது ஒரு தொழிற்சங்கத்தை அமைத்தது; அத்தொழிற்சங்கம் 1922-ஆம் ஆண்டு மே மாதம் 1-ஆம் தேதி அன்று சம்பிரதாயமாக நிறுவப்பட்டது. இடைக்காலத்தில், சோசலிஸ்ட் இளைஞர் கழகத்தின் ஒரு கிளை, தொழிலாளர்களிடையே அமைக்கப்பட்டது; இக் கழகத்தின் மிகச் சிறந்த உறுப்பினர்கள் பின்னர் கட்சிக்குள் சேர்க்கப்பட்டார்கள்.

நாடு முழுவதிலும் விளைவுகளைக் கொண்டிருந்த அன்யுவான் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களின் பெரும் வேலை நிறுத்தம் 1922-ஆம் ஆண்டு செப்டம்பர் 10-ஆம் தேதி அன்று வெடித்தது. சுரங்க அதிகாரிகளும் மற்றும் ரயில்வே அதிகாரிகளும் பல மாதங்களாகத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுப்பதைத் தாமதம் செய்து அவர்களது சங்கத்தை கலைக்க முயற்சி செய்தார்கள். ஹன்யாங் இரும்புத் தொழிற்சாலையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தின் வெற்றியினால் மேலும் தொழிலாளர்கள் உற்சாகமடைந்திருந்தனர். அவர்கள் தங்களுடைய வேலை நிலைமைகளை அபிவிருத்தி செய்யும்படியும் கூலிகளை உயர்த்தும்படியும் கோரினார்கள்.

வேலை நிறுத்தம் வெடித்த பிறகு, சுரங்க மாவட்டத்தில் ஒழுங்கைப் பராமரிப்பதற்குத் தொண்டர் குழுக்கள் அமைக்கப் அமைக்கப்பட்டிருந்தன. கியாங்சி மாகாணத்தின் யுத்தப்பிரபுக்கள் வேலை நிறுத்தத்தை நசுக்குவதற்குப் படைகளை அனுப்பிய போது, கட்சியின் வழிகாட்டுதலின் கீழ் தொழிலாளிகள் ராணுவ வீரர்களிடையே கிளர்ச்சிப் பிரசாரம் செய்வதற்குச் சென்றார்கள். மற்றும் அந்த ராணுவ வீரர்கள் தொழிலாளர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய மறுக்குமளவிற்கு அவர்களது அனுதாபத்தை வென்றெடுப்பதில் வெற்றியும் பெற்றார்கள்.

வேலை நிறுத்தத்தைத் தலைமை தாங்கிக் கொண்டிருந்த தோழர் லியு ஷா-சீயைக் கைது செய்வதற்குப் போலித்தனமானப் "பேச்சு வார்த்தைகள்" மூலம் அதிகாரிகள் முயற்சி செய்தார்கள். ஆனால், ஆயிரக் கணக்கான வேலை நிறுத்தக்காரர்கள், கூட்டம் நடக்குமிடத்தைச் சுற்றி வளைத்து நின்று கொண்டு யுத்தப் பிரபுக்களின் திட்டத்தை முறியடித்தார்கள்.

தொழிலாளர்களின் ஒருமைப்பாட்டின் காரணமாகவும் மற்றும் அவர்களது தீவிரமானப் போராட்டத்தின் காரணமாகவும், அதிகாரிகள் தொழிலாளிகளின் கோரிக்கைகளை வேலை

நிறுத்தம் ஆரம்பித்த ஐந்தாவது நாளன்று ஏற்றுக் கொள்ளும்படி நிர்பந்திக்கப்பட்டார்கள். இந்த முறையில் வேலை நிறுத்தம் வெற்றிகரமாக முடிவடைந்தது.

வேலை நிறுத்தத்தின் வெற்றிக்குப் பிறகு, தொழிற் சங்கம் புதிய பாதைகளில் திருத்தியமைக்கப்பட்டது. ஸ்தாபனத்தின் அடிப்படை கிளை பத்து பேரைக் கொண்ட ஒரு குழுவாகஇருந் தது. ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு பிரதிநிதி, ஒவ்வொரு 10 குழுக்களுக்கும் ஒரு இடைமட்ட பிரதிநிதி, மற்றும் ஒவ்வொரு குழு அல்லது தொழிற் கூடத்திற்கும் ஒரு முக்கியப் பிரதிநிதி என்ற முறையில் தேர்வு செய்யப்பட்டார்கள். ஒவ்வொரு தொழிற் கூடமும் அதனுடைய பிரதிநிதிகளின் வாரியத்தை அல்லது இடை மட்ட பிரதிநிதிகளின் வாரியத்தைக் கொண்டிருந்தது. அவை எல்லாவற்றிற்கும் மேலாக முக்கியப் பிரதிநிதிகளின் உச்சக்கட்ட மாநாடு இருந்தது. இந்த முறையில் தொழிலாளர்கள் மிகவும் சிறப்பாகவும் மிகவும் கட்டுப்பாடாகவும், ஸ்தாபன ரீதியாகத் திரட்டப்பட்டிருந்தார்கள்.

அவர்களுடைய அரசியல் உரிமைகள் விஸ்தரிக்கப்பட்டன. அவர்களுடைய வாழ்க்கை நிலைமைகள் குறிப்பிடத் தக்க அளவிற்கு அபிவிருத்தி அடைந்தன. தொழிலாளர்களும் தங்களுடைய பள்ளிக்கூடங்களை விரிவடையச் செய்தார்கள்; மற்றும் நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்களையும் திறந்தார்கள். அன்யுவான் தொழிற்சங்கம் அந்தச் சமயத்தில் நாட்டிலிருந்த மிக மிக பலமானத் தொழிற்சங்கங்களில் ஒன்றாக இருந்தது. 1923 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 7 ஆம் தேதி அன்று பீகிங்—ஹான்கோவ் ரயில்வே தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டதைப் பின் தொடர்ந்து தொழிலாளி வர்க்க இயக் கத்தின் அலை தணிந்திருந்த காலகட்டத்தில் இதர பெரிய தொழில் நிறுவனங்களில் கிட்டத்தட்ட எல்லாத் தொழிற் சங்கங்களும் அழிக்கப்பட்டிருந்த பொழுது, அது மட்டுமே (அன்யுவான் தொழிற்சங்கம்) உறுதியாக நின்றது. 1926 ஆம் ஆண்டில் வடக்கத்திய படையெழுச்சி நடைபெற்ற சமயத்தில், அன்யுவான் தொழிலாளிகள், படையெழுச்சியில் ஈடுபட்ட ராணுவத்திற்குப் பலமான ஆதரவைக் கொடுத்தார்கள். 1927 ஆம் ஆண்டில் இலை உதிர்கால அறுவடைப் பேரெழுச்சி நடைபெற்ற சமயத்தில், அவர்களும் ஆயுதமேந்திய போராட்டத் தில் பங்கு கொண்டனர். 1928 ஆம் ஆண்டிலிருந்து, சிங்காங் மலைகளின் புரட்சித்தளத்தின் தொடர்பு மையமாக அன்யுவான் இருந்தது.

இரண்டு ஆண்டுகளாக ஹுன்னான் தொழிலாளிகள் அவர்களுடைய எல்லாப் போராட்டங்களிலும் வெற்றி பெற்றார்கள். அவர்களுடைய வெற்றிக்கு இரண்டு அம்சங்கள் காரணமாக இருந்தன: வேலை நிறுத்த இயக்கத்தின் நாடு தழுவிய விஸ்தரிப்பு மற்றும் (மிக முக்கியமான அம்சம்) சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை.

ஹுன்னான் தொழிலாளிகளை அவர்களது போராட்டங்களில் கட்சி எப்படி ஸ்தாபன ரீதியாகத் திரட்டித் தலைமை தாங்கிற்று?

முதலாவதாக, சித்தாந்தப் பணிக்கு அது முழுமையான கவனம் செலுத்திற்று. தொழிலாளர்களின் குடியிருப்புகளில் மாலை வகுப்புகளை நடத்தியதன் மூலம் கட்சி, தொழிலாளர்களுக்கு மார்க்சிய-லெனினியத்தின் போதனைகளைக் கொடுத்தது. அவர்களுடைய வர்க்க உணர்வைத் தட்டி எழுப்பிற்று. மேலும், அவர்களது வாழ்க்கை, எண்ணங்கள், உணர்ச்சி ஆகியவையோடு ஒன்றிப் போய் இருந்தது. சந்தர்ப்பம் பக்குவமாக இருந்த பொழுது, கட்சி உடனடியாக அவர்களது அவசரமான கோரிக்கைகளுக்குக் குரல் கொடுத்து; போராட்டத்திற்கு வழிநடத்திச் சென்றது. போராட்டம் நடைபெற்ற சமயத்திலும், அதனுடைய வெற்றிக்குப் பிறகும், தொழிலாளிகளின் அரசியல் உணர்வை உணர்த்துவதிலும், கெட்டிப்படுத்துவதிலும் கட்சி ஒரு நொடிப்பொழுதும் அதனுடைய கடமையைத் தட்டிக் கழிக்கவில்லை.

இரண்டாவதாக, அது தொழிலாளிகளிடையே கண்டிப்பு மிக்க ஸ்தாபனங்களை ஏற்பாடு செய்தது, எல்லாவற்றிற்கும் மேலாக, தொழிற்சங்கத்தையும் அதனுடைய அடிப்படையான ஸ்தாபனங்களையும் ஏற்பாடு செய்தது. ஒரு போராட்டத்தை நடத்துவதற்கு, இரண்டுதரப்புகளின் பலத்தைப் பற்றியும் மற்றும் போராட்டத்தின் போக்கில் ஏற்படக்கூடிய சாத்தியமான எல்லா ஏற்றத்தாழ்வுகளைப் பற்றியும் கட்சி துல்லியமானதொரு மதிப்பீட்டைச் செய்ய வேண்டியிருந்தது. போராட்டத்தின் கோரிக்கைகளையும், போராட்டத்திற்கான கோஷங்களையும் அது வெகுஜனங்களுக்குத் தெளிவாக விளக்கவேண்டியிருந்தது. சுருக்கமாகச் சொல்லுமிடத்து, கண்டிப்பு மிக்க ஸ்தாபனமும், முன்பார்வையுடன் கூடிய ஒரு தலைமையும் நன்கு சிந்திக்கப்பட்டதொரு திட்டமும் அங்கே இருக்கவேண்டும். ஒவ்வொரு விஷயமும் முழுமையாகத் தயாரிக்கப் பட்டிருக்க வேண்டும் மற்றும், விளைவு முற்றிலும் நிச்சயமானதாகச் செய்யப்பட்டிருக்க

வேண்டும். போராட்டத்தில், தொழிலாளர்கள் மத்தியிலிருந்து வந்த தலைவர்களுக்குப் பயிற்சி கொடுக்கவும், தொழிலாளர் களின் ஸ்தாபனங்களை விரிவுபடுத்தவும் விசேஷக் கவனம் செலுத்தப்பட்டது.

மூன்றாவதாக, அது தெளிவு சுளிவான போர்த் தந்திரங் களைப் பிரயோகித்தது. எதிரிகளிடையே இருந்த முரண்பாடு களைக் கட்சி முழுமையாகப் பயன்படுத்திற்று: ''மாகாண அரசி யல் சட்டங்களை''ப் பயன்படுத்திக் கொண்டும் மற்றும் வெகு ஜனங்களின்மீது சார்ந்து நின்று கொண்டும் ஆளும் வர்க்கத்தின் தந்திரங்களை அம்பலப்படுத்தி, தொழிலாளர்களின் கூட்டம் கூடும் சுதந்திரத்தையும், சங்கம் வைக்கும் சுதந்திரத்தையும், மற்றும் வேலை நிறுத்தம் செய்யும் உரிமையையும், அரசாங்கத் தோடு பேச்சு வார்த்தை நடத்துவதற்குத் தொழிற்சங்கப் பிரதி நிதிகளை அனுப்பும் உரிமையையும் அங்கீகரிக்கும்படி அவர்களை நிர்பந்தித்தது. தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கை களுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவு கொடுக்கும் படி பல்வேறு செல்வாக்கு மிக்க சமுதாய ஸ்தாபனங்கள் ஈர்க்கப் பட்டிருந்தன.

இத்தகைய வெற்றிகளின் அடிப்படையிலும், வெகுஜனங் களின் ஒருமைப்பாட்டின் அடிப்படையிலும், ஹூன்னான் மாகாணத் தொழிற்சங்கச் சம்மேளனம், மாகாணம் முழுவ திற்குமான ஒன்றுபட்டதொரு தொழிலாளி வர்க்க ஸ்தாபனம், 1922ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நிறுவப்பட்டது. இந்தச் சம்மேளனம் உழைப்பாளி வர்க்கத்தின் உரிமைப் பதாகையாக மாறிற்று; இந்தப் பதாகையின் கீழ் ஹூன்னான் வெகு ஜனங்கள் தங்களது புரட்சிப் போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தி வந்தார்கள்.

பீகிங்-ஹாங்கோவ் ரயில்வே தொழிலாளிகள் வூபெய்-ஃபூ தலைமையின் கீழிருந்த யுத்தப்பிரபு அரசாங்கத்தின் அடக்கு முறை கொள்கையை எதிர்த்து வீறுகொண்டு எழுந்தபோது, 1923ஆம் ஆண்டு பிப்ரவரி 7ஆம் தேதி அன்று நடைபெற்ற படுகொலையில் வேலை நிறுத்த இயக்கம் அதனுடைய உச்சக் கட்டத்தை எட்டிப் பிடித்தது. பீகிங்-ஹாங்கோவ் ரயில்வே தொழிலாளர்களின் தொழிற்சங்கம் நிறுவப்பட்டதை வூ அடக்குமுறை கொண்டு நசுக்கியதால் இந்நிகழ்ச்சி ஏற்பட நேர்ந்தது. ரயில்வே தொழிலாளிகள் 1921ஆம் ஆண்டில் இருந்தே தங்களைத் தொழிற்சங்கத்தில் ஸ்தாபன ரீதியாக

வலுப்படுத்திக் கொண்டிருந்தார்கள். 1922ஆம் ஆண்டு இறுதியில், பீகிங்-ஹாங்கோவ் ரெயில் பாதையில் 16 சிறிய தொழிற் சங்கங்கள் அமைக்கப்பட்டிருந்த சூழ்நிலையில், ஹோனான் மாகாண செங்ச்சௌவில் ஒரு பொதுத் தொழிலாளர் சங்கத்தை 1923, பிப்ரவரி 1-இல் நிறுவுவதென முடிவு செய்யப் பட்டது. ஹோப்பேய், ஹோனான், ஹூபேய் ஆகிய மாகாணங் களை ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டு மேலாண்மை செலுத்தி நின்ற யுத்தப்பிரபுவான வூபெய்-ஃபூ, "தொழிலாளிகளைப் பாதுகாப்பதற்கான" அவனுடைய விருப்பத்தை நேர்மையற்ற முறையில் அறிவித்து இருந்தான். பொதுஜனஆதரவைத் திரட்டும் பொருட்டு ஒரு தொழிலாளர் குழுவை ஏற்பாடு செய்வதுபற்றிய அவனுடைய எண்ணத்தையும் மற்றும் தொழிலாளர் சட்டத்தை விரும்பும் அவன் எண்ணத்தையும் அவன் பிரகடனம் செய்தான். இப்பொழுது தொழிலாளர்களின் ஸ்தாபனம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் ஆகப் பலப்பட்டுக்கொண் டிருந்தமையால், தொழிற்சங்கத்தை நிறுவுவதைத் தடுக்கும் உத்திரவுகளைப் போடுவதின் மூலம் அவன் தன்னுடைய பிற் போக்குத் தன்மையை அப்பட்டமாக வெளிப்படுத்தினான். ஆனால் இத்தகைய எல்லாத் தடைகளும் இருந்தபோதிலும் பிரதிநிதிகள் திட்டமிட்டபடிக் கூட்டத்தை நடத்தத் தீர்மானித் தார்கள். குறிப்பிட்ட அந்த நாளில், பிரதிநிதிகள் பட்டாளங்கள் மற்றும் போலீசாரின் வளையங்களை உடைத்தெறிந்துவிட்டுக் கூட்டத்தை நடத்திப் பீகிங்-ஹாங்கோவ் ரயில்வே தொழிலாளர் களின் தொழிற்சங்கம் நிறுவப்பட்டதைப் பிரகடனம் செய் தார்கள். அந்தக் கூட்டத்தில், தொழிற்சங்கம், போராட்டம் நடத்துவதற்குப் பின்வரும் லட்சியங்களை அவர்கள் முன்வைத் தார்கள்; "தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமைகளை அபிவிருத்திச் செய்தல், தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் உணர்வினை அதிகரித்தல் நாடு முழுவதிலும், உலகம் முழுவதிலும் உள்ள தொழிலாளி வர்க்கத்தோடு ஒன்றுபடுதல்."

கூட்டம் முடிந்தபிறகு, பிரதிநிதிகள் செங்ச்சௌவை விட்டுச் செல்லும்படி நிர்பந்திக்கப் பட்டார்கள். யுத்தப் பிரபுவின் இந்த அடக்குமுறை நடவடிக்கையை எதிர்த்து ஆட்சேபிக்கும் முறையில் பிப்ரவரி 4-ஆம் தேதி அன்று பீகிங்—ஹாங்கோவ் ரயில்வே தொழிலாளர்களின் ஒரு பொது வேலை நிறுத்தத்திற்கு அறை கூவல் விடுவது என்று தொழிற்சங்கம் அன்று மாலையிலேயே தீர்மானித்தது. சங்கத்தின் தலைமை அலுவலகம் ஹாங்கோவி

லுள்ள கியான்கானுக்கு பின்னர் மாற்றப்பட்டது. மேலும் சுதந்திரத்திற்காகவும் மனித உரிமைகளுக்காகவும் போராடும் படித் தொழிலாளர்களை அறைகூவி ஒரு வேண்டுகோள் விடப் பட்டது.

பிப்ரவரி 4-ஆம் தேதி அன்று, பீகிங்—ஹாங்கோவ் ரயில்வே முழுவதிலும் பொது வேலை நிறுத்தம் வெடித்தது. சகலப் பிரயாணிகள், சரக்குப் போக்குவரத்து மற்றும் இராணுவ இரயில்கள் நிறுத்தப்பட்டன. வேலை நிறுத்தத்தின் மூன்றாவது நாளில், ஊகான் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும் மற்றும் கியான்கான் மாவட்டத் தொழிலாளர்களும், மொத்தத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பெரியதொரு ஆர்ப் பாட்டத்தை நடத்தினார்கள். அப்போது தான் ஏகாதிபத்திய வாதிகள் சீனத்தொழிலாளி வர்க்க இயக்கத்தில் பகிரங்கமாகத் தலையிடுவதற்கு ஆரம்பித்தார்கள். அன்னிய "இராஜதந்திர அமைப்பு" பீகிங் அரசாங்கத்திற்குக் கூட்டானதொரு குறிப்பைக் கொடுத்துத் தொழிலாளர்களை நசுக்கும்படித் தூண்டிவிட்டது. வேலை நிறுத்தத்தை உடைத்தெறியும் நோக்கத்தோடு ஹாங்கோவிலிருந்த பிரிட்டிஷ் கான்சல் ஒரு மாநாட்டைக் கூட்டினார். இந்த மாநாட்டில் யுத்தப் பிரபு ஷியாவோ யாவோ-நான் என்பவருடைய பிரதிநிதிகளும் அயல் நாட்டு முதலாளிகளும் கலந்து கொண்டார்கள். பிப்ரவரி 7-ஆம் தேதி படுகொலை ஆரம்பமாயிற்று. தகராறில் மத்தியஸ்தம் செய்யும் போர்வையில், கியான்கானில் ரயில்வே தொழிலாளரின் தொழிற் சங்கத் தலைமைக்காரியாலயத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்தும் படி ஷியாவோவின் அதிகாரிகள் தொழிலாளர்களின் பிரதிநிதிக்கு ஆசை வார்த்தைக் காட்டினார்கள். கியான்கானில் அப்பிரதிநிதி களைப் பிடிப்பதற்கு ஒரு பதுங்கிடம் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. அவர்கள் வருவதற்கு முன்பே ஷியாவோவின் படைகள் தொழிற்சங்கத் தலைமைக்காரியலாயத்திற்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்த ஆயுதமற்ற தொண்டர்களைத் தாக்க ஆரம்பித்து, அவர்களில் 37-பேரைக் கொன்று குவித்தார்கள் மற்றும் 200க்கும் மேற்பட்டவர்களைக் காயப்படுத்தினார்கள். கியான்கான் கிளைச்சங்கத் தலைவரான லின்ஷியான்-சியென் கைது செய்யப்பட்டு ரயில்வே ஸ்டேஷனில் இருந்த ஒரு கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டார். மேலும், வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறும்படி, அவரை நிர்ப்பந்தித்து முயற்சிகள் செய்யப்பட்டன. திடமான உறுதியோடு அவர் மறுத்துவிடவே அந்த இடத்

திலேயே கொலை செய்யப்பட்டார். இதைப் போன்ற அக்கிரமங்கள், சாங்-சிங்-டியன்னிலும் செஞ்செளவிலும். ஷின்யாங்கிலும், குவாங்ஷிவிலும் மற்றும் சுமாடியெனிலும் நடைபெற்றன. ஊகான், தொழிற்சங்கச் சம்மேளத்தின் சட்ட ஆலோசகரான ஷியான் கைது செய்யப்பட்டுப் பிப்ரவரி 15-ஆம் தேதி அன்று, ஊசாங்கில் கொலை செய்யப்பட்டார். அந்தச் சமயத்தில் ஹீபே மாகாணத் தொழிற் சங்கச் சம்மேளனம், ஊகானில் இருந்த இதர எல்லாத் தொழிற் சங்கங்களும் மூடப்பட்டிருந்தன.

படுகொலை நடந்த அதே தினத்தில் ஹீபே மாகாணத் தொழிற் சங்கச் சம்மேளனம் ஒரு பொது வேலை நிறுத்தத்திற்கு அறை கூவல் விடுத்தது. அந்த அறை கூவலை ஏற்று ஊகானில் பெரும் தொழிற்சாலைகளில் வேலை செய்த எல்லாத் தொழிலாளிகளும் வேலை நிறுத்தம் செய்தார்கள். இந்த அறை கூவலுக்கேற்ப டாவோ கோவ்சிங்குவா, செங்டிங்—டையுவான், டீன்சின்—புக்கோ, மற்றும் காங்டன்—காங்கோவ் ரயில்வேகளின் தொழிலாளர்கள் அடுத்து அடுத்தாற் போல் வேலை நிறுத்தங்கள் நடத்தினார்கள். பீகிங் —பெங்டியங் மற்றும் பீகிங்—சூய்யுவான் ரயில்வேகளிலும் வேலை நிறுத்தங்களின் புகை மூட்டம் இருந்து கொண்டிருந்தது. பீகிங் — ஹாங்கோவ் ரயில்வே வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக நாட்டின் எல்லாப் பெருநகரங்களிலும் சங்கங்கள் அமைக்கப்பட்டன. அகிலச் சீன மாணவர் சம்மேளனமும், மற்றும் பல சமுதாய வட்டார சங்கங்களும் தொழிலாளரின் நியாயமானப் போராட்டத்திற்கு ஆதரவாக அறிக்கைகளை விட்டார்கள்.

இந்நிகழ்ச்சிக்குறித்து கோமிங்டாங்கும் ஒரு அறிக்கையை வெளியிட்டது.

பீகிங் — ஹாங்கோவ் ரயில்வே தொழிலாளரின் பெரும் வேலை நிறுத்தம் அபரிமிதமான முக்கியத்துவம் வாய்ந்ததொரு நிகழ்ச்சியாக இருந்தது. அது நாடு முழுவதையும் மற்றும் உலகம் முழுவதையும் குலுக்கிற்று.

படுகொலைக்குப் பிறகு யுத்தப்பிரபு அரசின் படைகளும் போலீசும் தொழிலாளிகளை மீண்டும் வேலைக்குச் செல்ல வைக்கும் ஒரு முயற்சியில், தொழிலாளர்கள் மீது பாய்ந்து தாக்கி அவர்களைக் கயிறுகளால் கட்டி வைத்து, துப்பாக்கிகளாலும் துப்பாக்கி முனைகளாலும் பயமுறுத்தியும் கொண்டிருந்தார்கள். ஆனால், தொழிற் சங்கம் உத்திரவு கொடுப்பதற்கு முன்பே

தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குச் சேருவதற்குத் தீர்மான மாக மறுத்து விட்டார்கள். இதர நகரங்களில் இருந்த கிளைச் சங்கங்களும் தொழிற் சங்கத் தலைமைக் காரியலாயத்தில் முடிவு களை விசுவாசமாகப் பற்றிப் பிடித்து ஸ்தல அதிகாரிகளோடு தனித்தனியாகப் பேச்சு வார்த்தை நடத்த மறுத்து விட்டார்கள். தொழிலாளி வர்க்கத்தின் பலத்தைப் பாதுகாக்க வைக்கும் பொருட்டுப் பீகிங் — ஹாங்கோவ் ரயில்வே தொழிலாளர் தொழிற் சங்கம் மற்றும் ஊகான் தொழிற் சங்கச் சம்மேளனமும் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற தீர்மானிக்கும் வரையிலும் தொழிலாளர்கள் வேலைக்கு திரும்ப மறுத்து விட் டார்கள். மொத்தத்தில் ரயில்வே பாதை நெடுகிலும் 40-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கொல்லப்பட்டார்கள் பல நூற்றுக் கணக்கானவர்கள் காயப்படுத்தப்பட்டார்கள். 40க்கும் மேற் பட்டவர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஆயிரத்திற்கும் மேற் பட்டவர்கள் வெளியேற்றப்பட்டார்கள் அல்லது நாட்டின் இதரப் பகுதிகளில் தஞ்சம் புகுந்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள். பீகிங்கிலிருந்த சீனத் தொழிற் சங்கச் செயற்குழுவின் சிப்பந்திகள் அனைவரையும் கைது செய்வதற்கான உத்திரவுகள் அனுப்பப் பட்டிருந்தன.

செயற்குழு அதற்கு பிறகு, பீகிங்கில் இருந்து ஷாங்கேவுக்கு மாற்றப்பட்டது. எல்லா ரயில்வே தொழிற் சங்கங்களும் இழுத்து மூடப்பட்டன. இந்த முறையில், பிற்போக்கு அரசாங்கத்தின் அடக்குமுறைக் கொள்கையின் கீழ்த் தொழிலாளர்களின் போராட்டம் தற்காலிகமாகத் தாழ்வானதொரு அலையாக மாறிற்று.

அதனுடைய குழந்தைப் பிராயத்தில் சீனத் தொழிலாளி வர்க்க இயக்கம் ஏகாதிபத்தியவாதிகளாலும் மற்றும் யுத்தப் பிரபு அரசாங்கத்தினாலும் கட்டவிழ்த்து விடப்பட்ட காட்டு மிராண்டித்தனமான ஒடுக்கு முறையைச் சந்திக்க வேண்டி யிருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு தேசிய ஜனநாயகப் புரட்சியை நடத்துவதினால் மட்டுமே சீனத் தொழிலாளி வர்க்க இயக்கம் விடுதலைபெற முடியும் என்பது அப்போது தெளிவாக யிருந்தது. மற்றும், ஒட்டு மொத்தமாகச் சீனமக்களின் விடுதலை இயக்கத்தின் நலன்களும் சீனத்தொழிலாளி வர்க்க நலன்களும் ஒரே மாதிரியானவை என்பதும் அப்போது தெளிவாக யிருந்தது. போராட்டத்தில் இப்படிப்பட்ட உறுதியையும் முழுத்தன்மையையும் மற்றும் கட்டுப்பாட்டையும் தொழி

லாளி வர்க்கம் காட்டியதானது, தொழிலாளி வர்க்கத்தினு டையவும் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியினுடையவும் அரசியல் அந்தஸ்தை அனைத்துச் சீன மக்களிடமும் வெகுவாக உயர்த் திற்று; மற்றும் சீனாவின் ஜனநாயகப் புரட்சியின் ஒரு மாபெரும் தலைமைத் தாங்கும் சக்தி தோன்றி இருந்ததையும் நிரூபித்தது. மேலும், சீனாவின் ஜனநாயகப் புரட்சியின் வெற்றி யைப் பெறும் பொருட்டுத் தொழிலாளி வர்க்கம் அதற்கே உரித் தானதொரு ஆயுதப் படையைப் பெற்றிருக்க வேண்டும் என்ப தனையும் நிரூபித்துக் காட்டிற்று; ஏனெனில் ஜனநாயகம் இல்லாத ஒரு நாட்டில் முற்றிலும் ஆயுதப் பாணிகளாக இருந்த பிற்போக்கு வாதிகளை வெல்லுவதற்கு இதர எந்த வழியும் கிடையாது. கடைசியாகப் புரட்சியில் தலைமைத் தாங்கும் ஒரு பாத்திரத்தை வகிக்கும் பொருட்டுத் தொழிலாளி வர்க்கம் விரி வானதொரு கூட்டணியை, அதாவது, நாட்டின் மொத்த ஜனத் தொகையில் 80 சதவீதம் அதிகமாக இருந்த விவசாயிகளோடும், பல கோடிக்கணக்கானவர்களாக இருந்த நகர்புறக் குட்டி முத லாளிகளோடும், மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நில பிரபுத்துவ எதிர்ப்புச்சாயல்களைக் கொண்டு தேசிய முதலாளி வர்க்கத்தின் ஜனநாயகப் பகுதிகளோடும் ஒரு கூட்டணியைக் கொண்டிருக்க வேண்டும் என்பதனையும் அது காட்டிற்று; அதற்குப் பிறகு, டாக்டர் சன்யாட்-சென்னால் தலைமைத் தாங்கப்பட்ட கோமிங்டாங் கட்சியோடு புரட்சிகரமானதொரு ஐக்கிய முன்னணியை அமைப்பதற்கும் மற்றும் ஏகாதிபத்திய வாதி களுக்கும் யுத்தப் பிரபுக்களுக்கும் எதிராகப் புரட்சிகரமானதொரு யுத்தத்தை நடத்தும், ஒரு ராணுவத்தை அமைப்பதற்கு, அதற்கு உதவி செய்யவும் சக்தி வாய்ந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பித்தது.

### 4. ஒரு ஐக்கிய முன்னணியை அமைப்பதற்கானச் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அடிப்படையானப் போர்த் தந்திரக் கோட்பாடுகள்.

சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் 3-வது தேசிய மாநாடு 1923 ஜூன் மாதம் காண்டனில் நடைபெற்றது. இந்த மாநாட் டில் 432 கட்சி உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவபடுத்திய 30 பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். சன்யாட்-சென்னால் தலைமை தாங்கப்பட்ட கோமிங்டாங்குடன் புரட்சிகரமான

தொரு ஐக்கிய முன்னணியை நிறுவுவது விவாதத்தின் மையமாக விளங்கிற்று. கொடூரமான ஒரு எதிரியை எதிர்நோக்கி வெல்வதற்கு, தொழிலாளி வர்க்கம் பரந்து பட்டதொரு வெகுஜனங்களை அணி திரட்டவும் ஸ்தாபன ரீதியாகத் திரட்டவும் வேண்டியிருந்தது; மற்றும் ஏகாதிபத்தியத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் எதிர்த்துப் போராடுவதற்கு விரும்பிக் கொண்டிருக்கும் சகல வர்க்கங்களோடும் கட்சிகளோடும் ஸ்தாபனங்களோடும் மற்றும் தனி நபர்களோடும் தொழிலாளி வர்க்கம் ஒன்றுபட்டு நின்று, தேசியச் சுதந்திரத்தையும் விடுதலையையும் வென்றெடுப்பதற்கு முன்பு பரவலானதொரு ஐக்கிய முன்னணியையும் அமைக்க வேண்டியிருந்தது. ஆகவே, சீனாவில் ஒரு தேசியப்புரட்சிகரமான ஐக்கிய முன்னணியை நிறுவுதல் ஒரு முழுமையானத் தேவையாக இருந்தது.

அப்பொழுது சீன மக்கள் அனுபவித்துக் கொண்டிருந்த மிகப் பெரிய ஒடுக்குமுறை, தேசிய ஒடுக்குமுறையாக இருந்தது. எனினும், ஏகாதிபத்தியவாதிகளும் சீனாவிலிருந்த அவர்களின் ஏஜெண்டுகளும் தனிமைப்பட்டிருந்தார்கள். சீனாவில் இருந்த மிகப் பெரும்பாலான மக்கள் எதிர்த்து கொண்டிருந்தார்கள், தொழிலாளிகள், விவசாயிகள் மற்றும் குட்டி முதலாளிகள் அனைவருமே எதிராக இருந்தார்கள். இவர்கள் தவிர, தேசிய முதலாளிகளும் குறிப்பிட்ட சமயங்களில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு, எதிர்ப்பாளர்களோடு சேரலாம் என்ற நிலைமை இருந்தது. ஆகவே சீனாவில் ஒரு தேசியப் புரட்சிகரமான ஐக்கிய முன்னணியை நிலை நிறுத்துவது தெளிவாகச் சாத்தியமாக இருந்தது.

கட்சி இந்த பிரச்சினையின் முக்கியத்துவத்தைச் சீக்கிரத்திலேயே புரிந்து கொண்டது. 3-வது தேசிய மாநாட்டில் சீனப்புரட்சியை நடத்துவதற்குக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கோமிங்டாங்குக்குமிடையே ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு புரட்சிகரமான ஐக்கிய முன்னணியை அமைப்பதென்று சரியாகவே தீர்மானிக்கப்பட்டது. இந்த முறையில் கட்சியின் அடிப்படையானப் போர்த்தந்திரக் கோட்பாடுகளை 3-வது மாநாடு வகுத்தது.

கோமிங்டாங்கிற்கு முன்னோடியான துங்மெங்ஹீயு 1911 ஆம் ஆண்டில் நடைபெற்ற புரட்சியின் பிரதான அமைப்பாளராக இருந்து வந்தது. அரசியல் ரீதியாகப் பார்த்தால் பூர்ஷ்வாக்கள் மற்றும் குட்டி முதலாளித்துவத் தீவிரவாதிகள், பூர்ஷ்

வாமிதவாதிகள் மற்றும் மஞ்சு எதிர்ப்பு நிலபிரபுக்கள் ஆகியோரின் ஒரு தொளதொளக் கூட்டணியாக இருந்தது. 1911 ஆம் ஆண்டு நடைபெற்ற புரட்சி காட்டிக் கொடுக்கப்பட்ட பிறகு, இரண்டு பிளவுகளாகப் பிளவுபட்டது. ஒரு பிரிவு, சமரச வாதிகளைக் கொண்ட பல சிறு அரசியல் கோஷ்டிகளைக் கொண்டதாக இருந்தது; பிரதானமாக இக் கோஷ்டிகள் ஆரம்பம்கால மஞ்சு எதிர்ப்பு நிலப்பிரபுக்களையும் பூர்ஷ்வாமித வாதிகளையும் கொண்டதாக இருந்தன. இக்கோஷ்டிகள் ஏகாதிபத்திய வாதிகள் மற்றும் சீனப்பிற்போக்காளர்களின் பக்கத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். மற்றொரு பிரிவு பூர்ஷ்வா ஜனநாயக வாதிகளைக் கொண்ட சன்யாட் சென்னால் தலைமை தாங்கப்பட்ட பகுதியாகும்; இந்தப் பூர்ஷ்வா ஜனநாயகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போதிலும், புரட்சிக்கானச் சரியானப் பாதையைக் காணத் தவறியதாலும், மற்றும் புரட்சிகரமானப் பலத்தின் மூலாதாரங்களை எங்கே தேடுவது என்று தெரியாததாலும், தொடர்ச்சியானப் பின்னடைவுகளின் காரணமாக அதிகமாகச் சீர் குலைந்துக் கொண்டிருந்தார்கள். எனினும் ரஷ்யாவில் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றி, சீனாவிலும் இதரக் கிழக்கத்திய நாடுகளிலும் ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய விடுதலை இயக்கங்களின்பால் சோவியத் யூனியன் கையாண்ட சரியானக் கொள்கை, சன்யாட்சென்னின் புரட்சிகரமான நடவடிக்கைளுக்குச் சோவியத் யூனியன் காட்டிய பரிவும் உதவியும், மே 4-ஆம் தேதிய இயக்கத்திற்குப் பிறகு சீனத் தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சி மற்றும் சீனக்கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்படுதல் இத்தகைய எல்லா அம்சங்களும் டாக்டர் சன்யாட்-சென்னுடையவும்; மற்றும் கோமின்டாங் கட்சியின் இதர முற்போக்கான உறுப்பினர்களுடையவும் கவனத்தைப் படிப்படியாக ஈர்த்தது; மற்றும் சீனப் புரட்சியைத் தொடர்ந்து நடத்தும் பொருட்டு, சோவியத் யூனியனோடு கூட்டணிச் சேர்ந்து நிற்கும் படியும் கம்யூனிஸ்ட் கட்சியோடு ஒத்துழைக்கும் படியும் அவர்களைத் தூண்டிற்று. சன்யாட் சென்னால் தலைமை தாங்கப்பட்ட கோமிங்டாங் பூர்ஷ்வா வர்க்கம் புரட்சிக்கரமான ஜனநாயக வாதிகளைக் கொண்டதாக இருந்தமையாலும் மற்றும் முன்னாளைய மஞ்சு எதிர்ப்பு ஐக்கிய முன்னணியில் ஒரு கூட்டணிக் கட்சியாகச் செயல்பட்டிருந்த காரணத்தால் மிகவும் பரவலாக அறிமுகமாகி இருந்தமையாலும், அக்கட்சியோடு ஒத்துழைப்பதற்குச் சீனக் கம்யூனிஸ்ட்

கட்சி தீவிரமான நடவடிக்கைகளை எடுத்தது. மேலும், தொழிலாளி வர்க்கம் மற்றும் இதர ஜனநாயக சக்திகளின் கம்யூனிஸ்ட் தலைமையிலான ஏகாதிபத்திய, பத்தாம்பசலி நிலபிரபுத்துவ எதிர்ப்பு ஜனநாயகப் புரட்சிகரமானக் கூட்டணியாக அதனை மாற்றுவதற்கு, ஒரு புரட்சிகரமான ஐக்கிய முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்துமொரு ஸ்தாபனமாக அதனை மாற்றுவதற்கு உதவி செய்வதற்குச் சீன கம்யூனிஸ்ட் கட்சி தீவிரமான நடவடிக்கைகள் எடுத்தது.

ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராகவும் டாக்டர் சன் அவர்கள் எடுத்த ஜனநாயக நிலைபாட்டினைத் துல்லியமாக மதிப்பீடு செய்திருந்தது. மேலும், கோமின்டாங் கட்சியின் தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், குட்டி முதலாளி வர்க்கம், தேசிய முதலாளி வர்க்கம் ஆகியோரின் ஒரு கூட்டணியாக மாற்றுவதற்கு உள்ள சாத்தியப்பாட்டினைத் துல்லியமாக மதிப்பீடு செய்திருந்தது. இதனால் கோமின்டாங் கட்சியின் ஒத்துழைக்கும் கொள்கையைக் மாநாடு நிறைவேற்றியது.

மாநாட்டில் இக்கொள்கை பற்றி நடைபெற்ற விவாதம் கசப்பானதொரு போரட்டத்திற்கு வழி நடத்திச் சென்றது. இப்போரட்டத்தின் போக்கில் கட்சியில் நிலவிய இரண்டு சந்தர்ப்பவாதப் போக்குகள் அம்பலப்படுத்தப்பட்டு நிராகரிக்கப்பட்டன.

ஒரு போக்கு, சென்-டூ-ஷியுவினால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட சரணாகதிப் போக்கு, இத்தகைய சரணாகதி வாதிகள், தற்போதைய புரட்சி ஒரு பூர்ஷ்வா ஜனநாயகத் தன்மை வாய்ந்த புரட்சியாக இருப்பதால்; பூர்ஷ்வா வர்க்கத்தினால் தலைமை தாங்கப்பட வேண்டும் என்றும் ''எல்லா வேலையும் கோமிங்டாங்கிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்'' என்றும் மற்றும் ''ஜனநாயகப் புரட்சி வெற்றி பெற்றதும் பாட்டாளி வர்க்கம் சில உரிமைகளையும் சுதந்திரத்தையும் தவிர வேறு எதையும் பெற முடியாது'' என்றும் அவர்கள் நிலை எடுத்தார்கள். ஆகவே, இந்த முதல் புரட்சியில் பாட்டாளி வர்க்கம் ஒரு செயலற்ற பாத்திரத்தையும் ஒரு துணைப் பாத்திரத்தையும் வகிக்க வேண்டுமென்றும் ஒரு தலைவரின் பாத்திரத்தை வகிக்க முடியாது என்றும் அவர்கள் வாதித்தார்கள். பூர்ஷ்வாக் குடியரசு ஸ்தாபிக்கப்படும் வரையிலும், மற்றும் முதலாளித்துவம் மேலும் அபிவிருத்தி அடையும்

வரையிலும் பாட்டாளி வர்க்கம் காத்திருக்க வேண்டும் என்றும் அவர்கள் உறுதியாகக் கூறினார்கள். பிறகு, பூர்ஷ்வாக் குடியரசு தூக்கி எறியப்படும் என்றும் மற்றும் பட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தினால் அகற்றப்பட்டுச் சோஷலிஸத்தை உரு வாக்க முடியும் என்றும் கூறினார்கள். ஆகையினால், அவர் களுடைய தத்துவம் “இரட்டைப் புரட்சித் தத்துவம்” என்று சொல்லப்பட்டது.

சீனப் புரட்சிக்கான ஒரு சூத்திரத்தைக் கூட சென்டுஷீயூ கொடுத்தார். “பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியை உருப்பெறச் செய்வதற்குப் புரட்சிகரமானப் பாட்டாளி வர்க்கத்தோடு கூட்டணி சேர்ந்து புரட்சிகரமானப் பூர்ஷ்வா வர்க்கத்திற்குத் தலைமை தாங்குவது கோமிண்டாங்கின் தற்போதைய கடமை யாகும்” என்று அவர் கூறுனார். அவருடைய அபிப்பிராயத்தில், சீனப் புரட்சியின் தலைவனாகப் பிரதானமாகப் பூர்ஷ்வாக் களைக் கொண்ட ஒரு கட்சியான கோமிங்டாங் இருக்க வேண்டுமென்றும், மற்றும் புரட்சியின் பிரதானப் பலம் தேசியப் பூர்ஷ்வாக்களிடமிருந்து ஈர்க்க பட வேண்டும் என்றும், அதே சமயத்தில் தொழிலாளி வர்க்கம் அதனுடைய உதவிப் படையாக மட்டுமே செயல்பட முடியும் என்றும் அவர் கருதினார். விவசாயி கள் சம்மந்தப்பட்ட மட்டில், புரட்சியில் ஊக்குவிக்கும் சக்தி களுக்கு இடையே கூடச் சேர்க்கப்படவில்லை; ஆனால் அதற்கு மாறாக முற்றிலும் புறக்கணிக்கப்பட்டிருந்தது.

மற்றொரு போக்கு சாங்குவோ - டாவோவினால் பிரதி நிதித்துவப்படுத்தப்பட்ட செக்டேரியன் போக்காகும். கம்யூனிஸ்ட் கட்சி கோமிங்டாங்குடன் ஒத்துழைக்கக் கூடாது என்ற கருத்தோடு இருந்தார்கள். ஏனெனில், அவர்கள் புரட்சி கரமாக இருக்கவில்லை என்றும் தொழிலாளி வர்க்கப் புரட்சி யைக் கம்யூனிஸ்ட் கட்சிப்பதாகையின் கீழ்த் தொடர்ந்து நடத்த வேண்டுமென்றும் அவர்கள் கூறினார்கள். கோமிங்டாங்குடன் ஒத்துழைப்பது தொழிலாளிகளிடையே சித்தாந்த ரீதியானக் குழப்பத்தை உண்டாக்குமென்று அவர்கள் வாதித்தார்கள். அதே காரணத்திற்காகக் கம்யூனிஸ்ட்டுகளும், தொழிலாளிகளும், விவசாயிகளும் கோமிங்டாங்குடன் சேருவதை அவர்கள் எதிர்த்தார்கள்.

சாங்கோ - டாவோவினால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட இந்தக் கருத்தும் முற்றிலும் தவறானதாக இருந்தது நேசச் சக்திகளின் பிரச்சினை புரட்சியின் பாட்டாளி வர்க்க தலைமைக்

குக் கேந்திரமானதாக இருந்தது என்பதையும், நேசச் சக்தி களோடு ஒன்றுபடுவதற்குக் கிடைக்கும் எல்லாச் சந்தர்ப்பங் களையும் பாட்டாளி வர்க்கம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதையும், இத்தகைய நேசக் சக்திகள் தற்காலிகமானதாக, நம்பத்தகாததாக இருந்த போதிலும் அவர்களையும் பயன்படுத்த வேண்டும் என்பதையும் செக்டேரியன்கள் புரிந்து கொள்வதற்குத் தவறினார்கள். அரைக் காலனி நாடானச் சீனாவில் தேசியப் பூர்ஷ்வாக்களோடு ஒன்றுபடுவது தொழிலாளி வர்க்கத்திற்கு சாத்தியமாகவும் அவசியமாகவும் இருந்தது என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை. கம்யூனிஸ்டுகளும், தொழிலாளிகளும் தங்களுடைய சொந்த அரசியல் கட்சிப் பதாகையின் கீழ்ப் புரட்சி கரமான நடவடிக்கைகளில் ஈடுபடாமலிருந்ததால் சித்தாந்தக் குழப்பம் ஏற்படும் என்ற அபிப்பிராயம் புரட்சிகரமான ஐக்கிய முன்னணியில், கட்சியின் தலைமைப் பாத்திரத்தையும், தொழி லாளிவர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தையும் உண்மையிலேயே மறுப்பதாகும்.

மாநாடு வலதுசாரித் திரிபுகளையும் மற்றும் "இடது சாரித்"திரிபுகளையும் விமர்சித்தது. கட்சி கோமிங்டாங்குடன் ஒத்துழைக்க வேண்டும் என்று தீர்மானித்தது; மற்றும் கட்சி உறுப்பினர்களின் அந்தப் பகுதியினர் தங்களது சொந்த முறையில் கோமிங்டாங் கட்சியில் சேர வேண்டுமென்றும் அது தீர்மானித் தது. கட்சி, அதனுடைய சித்தாந்த ரீதியான மற்றும் அரசியல் ரீதியானச் சுயேச்சைத் தன்மையை வைத்துச் கொண்டிருக்கும் அதே சமயத்தில். கோமிங்டாங் கட்சியை ஒரு தேசிய ஜன நாயகப் புரட்சிகரமானக் கூட்டணிக்குள் புனரமைப்பதற்குக் கட்சி இந்த முறையில் உதவி செய்யும். இந்த ஒத்துழைப்பில் கம்யூனிஸ்டு கட்சி அதனுடைய புரட்சிகரமான உறுதியையும் மற்றும் முழுமைத் தன்மையையும் வெளிப்படுத்தி, அதனுடைய நேசக் சக்தியின் சமரசம் செய்யும் போக்குகளையும் சீர்திருத்த வாதப் போக்குகளையும் முறியடிக்க வேண்டுமென்று மாநாடு வலியுறுத்திற்று. கோமிங்டாங் அதனுடைய ஸ்தாபனத்தை விஸ்தரிப்பதற்குக் கம்யூனிஸ்டு கட்சி உதவி செய்ய வேண்டு மென்றும், அதே சமயத்தில் முன்னேறிய தொழிலாளிகளையும் விவசாயிகளையும் கம்யூனிஸ்டு கட்சிக்குள் கொண்டு வர வேண்டு மென்றும் அது சுட்டிக் காட்டிற்று. எனினும், புரட்சியில் தலைமை பற்றிய பிரச்சினைக்கு முழுமையாகத் தீர்வு காணு வதற்குக் மாநாடு தவறி விட்டது; விவசாயிகள் பிரச்சினைக்கும்

அல்லது புரட்சிச் சேனை பற்றிய பிரச்சினைக்கும் அது உரிய கவனம் செலுத்தவில்லை.

தோழர் மாசே-துங் மாநாட்டில் கலந்துக் கொண்டார். அவர்சரியானக் கருத்துக்களை ஆதரித்துக் கொண்டும் தவறானக் கருத்துக்களை எதிர்த்துக் கொண்டுமிருந்தார். இந்த மாநாட்டில் அவர் கட்சியின் மத்தியக் கமிட்டியின் ஒரு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் ஆரம்பக்காலம் பற்றிய சுருக்கமானத் தொகுப்புரை

இந்தச் சமயத்தில் சீன மக்களின் அடிப்படையான கோரிக்கை, ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் புரட்சியின் மூலம் சீனாவில் தேசியச் சுதந்திரத்தையும் மக்கள் ஜனநாயகத்தையும் உருப்பெறச் செய்வதாக இருந்தது. இப்படிப்பட்டதொரு மாபெரும் கடமையை நிறைவேற்றுவதற்கு, அவர்கள் சீனத்தொழிலாளி வர்க்கத்தின் தலைமையையும் மற்றும் அதன் முன்னணிப் படையான சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் தலைமையையும் அவர்கள் பெற்றிருக்க வேண்டும்.

முதல் உலக யுத்தத்திற்குப் பிறகு அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்கும் மற்றும் மே 4 ஆம் தேதிய இயக்த்திற்குப் பிறகும், சீனத் தொழிலாளி வர்க்கம் பலமாக வளர ஆரம்பித்தது; மற்றும் சீனக் கம்யூனிஸ்டு கட்சி உருப்பெற்றது. முதலாவது உலக யுத்தம் நடைபெற்ற சமயத்தில், சீனாவின் தேசியத் தொழில்களில் ஒப்பு நோக்கிப் பார்க்கும் பொழுது ஏற்பட்ட துரிதமான அபிவிருத்தி, சீனத் தொழிலாளி வர்க்கத்தின் அணிகளும் அவர்களது போராட்டத்தின் வீச்சும் அதிகமானது. அக்டோபர் சோஷலிஸப் புரட்சியைப் பின் தொடர்ந்து, மார்க்சியம்-லெனினியம் சீனாவிற்கு அறிமுகம் செய்யப்பட்டது; மற்றும் மே 4-ஆம் தேதிய இயக்கம் சீனத் தொழிலாளி வர்க்க இயக்கத்தை மார்க்சிய-லெனினியத்தோடு ஒருங்கிணைப்பதை வேகப் படுத்திற்று.

இந்த ஒருங்கிணைப்பின் விளை பொருள்தான் சீனக் கம்யூனிஸ்டு கட்சி. இக்கட்சி 1921 ஜுலையில் நிறுவப்பட்டது. கட்சியின் முதல் தேசிய மாநாடு போல்ஷ்விக் பாணியைப் பின்பற்றிக் கட்சியின் ஸ்தாபனக் கோட்பாடுகளை வகுத்தது. தொழிலாளி

வர்க்கத்தின் முற்றிலும் புதியதொரு வகைப்பட்ட கட்சி, ஒரு லெனினியக்கட்சி, இந்த முறையில் சீனாவில் தோன்றிற்று. இரண்டாவதுதேசியக் கட்சி மாநாடு சீனப் புரட்சியின் உடனடியான அடிப்படைக் கடமைகளை வரையறுத்தது; மற்றும் உண்மையான தொரு புரட்சிகரமான ஜனநாயகத்திட்டத்தையும் முன்னுக்கு வைத்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக, தொழிலாளி வர்க்க இயக்கத்தைத் தலைமை தாங்குவதையும் அந்த இயக்கத்தைக் கம்யூனிஸத்தோடு மேலும் ஒன்றுபடச் செய்வதையும் கட்சி அதனுடைய மத்தியத்துவப்படுத்தப்பட்ட கடமையாகக் கருதிற்று. அதன் விளைவாக, தொழிலாளி வர்க்க இயக்கத்தின் முதல் எழுச்சி, 1922-ஆம் ஆண்டிலிருந்து 1923 பிப்ரவரி வரையிலும் தோன்றிற்று. சீனாவில் அரசியல் மற்றும் பொருளாதார வாழ்க்கையில் தொழிலாளி வர்க்கத்தின் முக்கியமானப் பாத்திரம் அதன் மூலம் முழுமையாக நிருபணம் ஆயிற்று.

சீனத்தொழிலாளி வர்க்க இயக்கத்தின் முதல் எழுச்சி, பிற்போக்கு வாதிகளின் கரங்களில் கடுமையான தொரு பின்னடைவினைச் சந்தித்த பொழுது, தொழிலாளி வர்க்கம் எதிரியை எதிர்த்து தன்னந்தனியாகப் போராடுவதற்குப் பதிலாக எல்லா ஜனநாயகச் சக்திகளோடும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் மற்றும், சாத்தியமான அளவிற்கு மிக விரிவான கூட்டணியை உருவாக்க வேண்டுமென்றும் கட்சி உணர ஆரம்பித்தது. மூன்றாவது தேசியக்கட்சி மாநாடு புரட்சிகரமான தொரு ஐக்கிய முன்னணிக்கானப் போர்த் தந்திரங்களை நிர்ணயித்தது; மற்றும், கோமிங்டாங் கட்சியைப் புரட்சிகரமான ஐக்கிய முன்னணியின் ஒரு ஸ்தாபனமாக மாற்றுவதற்கு, அதாவது, தொழிலாளிவார்க்கம் மற்றும் இதர ஜனநாயகச் சக்திகளின் ஒரு கூட்டணியாக மாற்றுவதற்குச் சன்யாட் சென்னுக்கு சக்தி வாய்ந்த முறையில் உதவி செய்ய வேண்டுமென்றும் தீர்மானித்தது.

சீனக்கம்யூனிஸ்டு கட்சி நிறுவப்பட்டதும் கட்சியின் ஸ்தாபானக் கோட்பாடுகள், போர்த் தந்திரக் கோடுபாடுகள், மற்றும் திட்டங்கள் ஆகியவற்றிற்கு அடித்தளம் அமைக்கப்பட்டதானது சீனாவின் நவீன வரலாற்றின் மிகக் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும். அதிலிருந்து சீனப்புரட்சியின் தன்மை அடிப்படையானதொரு மாறுதலைப் பெற்றது.

ஆனால், பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத் தலைமையானது மக்களின் அரசியல் அதிகாரம், நிலம் வேண்டுமென்ற விவசாயிகளின் கோரிக்கை, புரட்சிப்படை போன்ற பிரச்சினைகளுக்குக் கட்சி இந்தக் காலக் கட்டத்தில் உரிய கவனம் செலுத்தவில்லை, அல்லது சரியானத் தீர்வும் காணவில்லை. புரட்சி இயக்கத்தின் விஸ்தரிப்பினால் இத்தகைய பிரச்சினைகள் மிகவும் அதிகமாகக் கூர்மை அடைந்து கட்சிக்குள் அடிப்படையிலேயே இரண்டு வேறுபட்ட பாதைகளுக்கு, தோழர் மாசே-துங்கினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட போல்ஷிவிக் பாதைக்கும் மற்றும் சென்டு-ஷியூவினால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட மென்ஷிவிக் பாதைக்கும் வழி நடத்திச் சென்றது.

## அடிக் குறிப்பு

1. தங்களுடைய ஆட்சியை நிலை நிறுத்தவும் கெட்டிப் படுத்தவும், சில மாகாணங்களில் யுத்தப் பிரபுக்கள் ஸ்தல சுய ஆட்சிக்கு வக்காலத்து வாங்கிப் பேசினார்கள். அவர்கள் "மாகாண அரசியல் சட்டங்களை" உருவாக்கினார்கள்; "ஜனநாயகம் மற்றும் சுயாட்சி" என்பதன் பெயரால் அவர்கள் இந்த முறையில் தங்களுடைய இராணுவக் கட்டுப் பாட்டினை மூடி மறைத்தார்கள். ஹுனானிலிருந்த யுத்தப் பிரவு சாவோ-ஹெங்-டி என்பவன், தான் ஒரு "மாகாண அரசியல் சட்டத்தை முதன் முதலில் பிரகடனம் செய்தான்.

அத்தியாயம் மூன்று

## புரட்சிகரமான ஐக்கிய முன்னணி அமைக்கப்படுதல். புரட்சி இயக்கத்தின் எழுச்சி.

(ஜனவரி 1924—ஜூலை 1926)

### 1. 1924லிருந்து 1927 முடிய நிலவிய சர்வ தேசிய மற்றும் தேசிய நிலைமை.

1924லிருந்து 1927 வரையிலும் நிலவிய சர்வத்தேச நிலைமை-சோஷலிசச் சோவியத் யூனியனின் ஸ்திரத்தன்மையும் முதலாளித்துவ நாடுகளின் தற்காலிகமான ஒரு ஸ்திரத்தன்மையும்-ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாக இருந்தது. இவ்விரு வகைப்பட்ட ஸ்திரத்தன்மைகளும் தீவிரமாக வேறுபட்டிருந்தன.

ஏகாதிபத்திய ஆயுதமேந்திய தலையீட்டையும், வெண்படைக் கலகங்களையும் நசுக்கிய பிறகு, சோவியத் யூனியன் 1921ம் ஆம் ஆண்டில் தேசியப் பொருளாதாரப் புனர் நிர்மானத்தின் ஒரு காலகட்டத்துள் அடி எடுத்து வைத்தது. 1927 ஆம் ஆண்டு வாக்கில் சோவியத் தேசிய பொருளாதாரம் அதனுடைய யுத்த முற்காலக் கட்டத்தைத் தாண்டிவிட்டது. 1926-27ல் ஆம் ஆண்டில் தொழில் உற்பத்தி, யுத்த முற்கால அளவில் 100.9 சதமாக இருந்தது; விவசாய உற்பத்தி 108.3 சதமாக இருந்தது. சோவியத் யூனியனின் தேசியப் பொருளாதாரம் சோஷலிசத் தொழில் மயமாக்கும் கொள்கைக்கு இணக்கமான முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டது. தேசிய பொருளாதாரத்தில், மொத்த உற்பத்தியில், 1926-27 ஆம் ஆண்டில் தொழில் உற்பத்தி 38 சதமாக இருந்ததிலிருந்து சோவியத் யூனியன் படிப்படியாக தொழில் மயமாக்கப்பட்ட நாடாக மாறிக் கொண்டிருந்தது. சோஷலிசப் பாதையில் சோவியத் யூனியன், துரிதமாக

முன்னேறிக் கொண்டிருந்தது. இது நாட்டின் மொத்த உற்பத்தியில் தொழிலின் சோஷலிசப் பகுதி 86 சதமாக இருந்ததில் இருந்து விளங்கியது.

சகல நாடுகளிலும் உள்ள தொழிலாளிகள் தங்களுடைய நலனைச் சோவியத் யூனியனோடு பிணைத்துக் கொண்டிருந்தார்கள். தொழிலாளி வர்க்கத்தினால் தலைமை தாங்கப்பட்டிருந்த உலகில் உள்ள ஒரே நாடு ரஷ்யாதான் என்று புரிந்து கொண்டிருந்தார்கள். ரஷ்யத் தொழிலாளி வர்க்கம், முதலாளித்துவ அமைப்பை அழிக்க முடியும் என்பதோடு மட்டுமின்றி அரசு அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு, ஒரு சோஷலிச அமைப்பை நிர்மாணிக்கவும் முடியும் என்று உறுதியாகப் புரிந்து கொண்டிருந்தார்கள், அந்த நிலையில், சோவியத் யூனியனது வலிமை அதிகரிக்கப்பட வேண்டும். சோவியத்யூனியன்பால், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை இயக்கத்திற்கு சோவியத் யூனியன் மட்டுமே உண்மையிலே உதவி செய்ய முடியும் என்ற கொள்கைப் பிடிப்பில் இருந்தும், சோவியத் யூனியன் மட்டுமே அந்நாட்டிலிருந்த தேசியச் சிறுபான்மையோரின் பிரச்சினைக்குச் சரியானதொரு தீர்வினைக் காணமுடியும் என்ற கொள்கைப் பிடிப்பில் இருந்தும் சோவியத் யூனியன்பால் சகல ஒடுக்கப்பட்ட தேசங்களும் கொண்டிருந்த நம்பிக்கையும் நேசமும் சோவியத் யூனியனோடு நேசச் சக்திகளாக இணைய வேண்டுமென்ற அவர்களது விருப்பமும் தெளிவாகத் தெரிந்தது.

சோவியத் யூனியனின் ஸ்திரத் தன்மை திடமானதொரு அடிப்படையின் மீது அமைந்திருந்தது. இந்த ஸ்திரத் தன்மை நாள்தோறும் வளர்ச்சியுற்றுக் கொண்டிருந்தது என்பதும் இதற்கு அர்த்தமாகும்.

உலகின் பல்வேறு முதலாளித்துவ நாடுகளும்கூட தற்காலிக ஸ்திரத் தன்னமயின் ஒரு உபகட்டத்தில் அடியெடுத்து வைத்திருந்தன. 1924ஆம் ஆண்டிலிருந்து 1927ஆம் ஆண்டு வரையிலுமுள்ள காலக்கட்டத்தில் இத்தகைய நாடுகள் அவற்றின் யுத்தப் பிற்காலப் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளிலிருந்து தற்காலிகமாக மீட்சி பெற்றிருந்தன; அந்நாடுகளின் உற்புத்தி யுத்த முற்கால அளவை எட்டிப் பிடித்திருந்தன. அவற்றில் சில நாடுகளின் உற்பத்தி யுத்த முற்கால அளவை தாண்டியும் இருந்தன; புரட்சியலைத் தணித்திருந்தது.

1926-ஆம் ஆண்டில் முதலாளித்துவ நாடுகளில் இரும்பு உற்பத்தி யுத்த முற்கால அளவில் 100.5 சதவீதத்தை எட்டிப்

பிடித்தது. நிலக்கரி 96.8 சதவீதத்தை எட்டிப் பிடித்தது. உருக்கு 122.6% சதவீதத்தை எட்டிப் பிடித்தது. ஐந்து பல்வேறு வகைப்பட்ட தானியங்கள் 110.5 சதவீதத்தை எட்டிப் பிடித்தது. ஆனால், பல முதலாளித்துவ நாடுகளில் (உதாரணமாக அமெரிக்காவிலும் ஜப்பானிலும் உற்பத்தி சீராக முன்னேறுவதைக் காட்டிலும் வேகமாக அபிவிருத்தி அடைந்தது. இது முதலாளித்துவத்தின் சீரற்ற அபிவிருத்தியின் குணாம்சம் ஆகும்.

முதலாளித்துவ உலகத்தின் தற்தாலிக ஸ்திரத்தன்மை, பிரதானமாக அமெரிக்காவின் "உதவி"யின் மூலம் எய்தப்பட்டது; மேற்கு ஐரோப்பிய நாடுகள் அமெரிக்கா மீது நிதித்துறையில் சார்ந்து நிற்கும்படியான நிலைமையின் மூலம் எய்தப்பட்டது. உலக நிதிமூலதனத்தின் மையம் யுத்தத்திற்கு பிறகு ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவிற்கு மாறிச் சென்றிருந்தது. அமெரிக்க மூலதனத்தின் இறக்குமதியின் மூலம் மட்டுமே இந்த ஐரோப்பிய நாடு சமாளிக்க முடிந்தது இந்த முறையில் அமெரிக்கா உலகத்தின் மிகப் பெரிய லேவாதேவிக்காரனாக மாறியிருந்தது.

கிட்டத்தட்ட ஒவ்வொரு ஐரோப்பிய நாடும் ஆண்டுதோறும் பெரும் தொகைகளை அசலாகவும் வட்டியாகவும் கொடுக்க வேண்டியிருந்தது. இதன் விளைவாக இத்தகைய நாடுகள் தங்கள் சொந்த மக்களின் மீது எப்பொழுதும் அதிகரித்துக் கொண்டிருக்கும் வரிகளைத் திணிக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டன. அதனால், உழைக்கும் வெகுஜனங்களின் பொருளாதார நிலைமைகள் படுமோசமாகிக் கொண்டிருந்தன. ஜெர்மனியிடமிருந்து யுத்தக் கடன்களை எடுத்தது, (1, 30, 000 மில்லியன் ரெண்டன்மார்க்ஸ்) ஜெர்மன் பொருளாதாரத்தைச் சீர் குலைத்தது. இதனால் அந்த நாட்டின் வேலை இல்லாதவர் எண்ணிக்கை அதிகரித்தது; காலனி நாட்டு மக்களை இன்னும் மிக அதிகமாக ஈவு இரக்கமற்று சுரண்டியதன் காரணமாக அந்த நாடுகளின் பொருளாதார நெருக்கடியைத் தீவிரப் படுத்தி, அந்நாடுகளின் மக்களின் வாழ்க்கை நிலைமைகளைச் சீரழியும்படி செய்தன. இவையனைத்தும் முதலாளி வர்க்கத்துக்கும் பட்டாளி வர்க்கத்துக்கும் இடையேயும், ஏகாதிபத்திய வாதிகளுக்கும் காலனி நாட்டு மக்களுக்கிடையேயும் மோதல்களைத் தவிர்க்க முடியாதபடி அதிகரிக்கச் செய்தன. இப்படிப்பட்டதொரு அடிப்படையின் மீது நிலை நின்றுகொண்டு முதலாளித்துவ உலகின் ஸ்திரத்தன்மை தற்காலிகமானதாகவும்

பாதுகாப்பு அற்றதாகவும் மட்டுமே இருக்க முடிந்தது.

இத்தகைய இருவகைப்பட்ட ஸ்திரத் தன்மையிலிருந்தது மகத்தான முக்கியத்துவமுடைய புதியதொரு நிகழ்ச்சிப்போக்கு உதயமாயிற்று. சோவியத் யூனியனுக்கும் முதலாளித்துவ நாடுகளுக்குமிடையே தற்காலிகமானதொரு சமபல நிலைமை, ''சமாதான சக வாழ்வின்'' ஒரு காலக்கட்டத்தை அறிமுகம் செய்தது.

ஏகாதிபத்திய நாடுகளைப் பலவீனப்படுத்தக் கூடிய எந்த யுத்தமும் இந்தக்காலக் கட்டத்தில் நடைபெறாமல் இருந்தமையாலும்; புரட்சி முகாமுக்கும், எதிர்ப்புரட்சி முகாமுக்கிடையே தற்காலிகமானதொரு சம பல நிலைமை ஏற்பட்டிருந்தமையாலும் சீன மக்களின் புரட்சியை எதிர்ப்பதற்கும் அதன் கழுத்தை நெறிப்பதற்கும் ஒரு தற்காலிகமான, ஆனால் சக்தி வாய்ந்த பிற்போக்கானக் கூட்டணியை அமைப்பதற்கும், மிக அதிகமானப் பலத்தைத் திரட்டுவது சாத்தியமாக இருந்ததை ஏகாதிபத்திய வாதிகள் கண்டார்கள். இது சீனப் புரட்சிக்குப் பல இடையூறுகளை உண்டாக்கிற்று. உண்மையில், இறுதி வெற்றியை அடைவதற்கு முன்பு சீனப்புரட்சி, ரஷ்யப் புரட்சியைக் காட்டிலும் மிக அதிகமான இடையூறுகளை எதிர் நோக்க வேண்டியிருந்தது.

மறுபுறத்தில், காலனி நாடுகளிலும் அரைக்காலனி நாடுகளிலும் கூர்மையாகிக் கொண்டிருந்த புரட்சிகரமான நெருக்கடி இந்தக் காலக்கட்டத்தில் விசேஷமானதொரு அம்சமாகவும் இருந்தது. முதல் உலக யுத்தம் நடைபெற்ற சமயத்திலும் முடிந்த பிறகும், பல்வேறு காலனி நாடுகளிலும் பொருளாதார நெருக்கடிகளும் புரட்சிகரமான நெருக்கடிகளும், இயந்திரத் தொழில் பாட்டாளி வர்க்கம், முதலாளி வர்க்கம் ஆகியவற்றின் வளர்ந்து கொண்டிருந்த பலத்தின் காரணமாகவும் மார்க்சிய-லெனினியம் மற்றும் ஜனநாயகக் கருத்துக்கள் பரவியதன் காரணமாகவும், கொடூரமான ஏகாதிபத்திய ஒடுச்குமுறை, சுரண்டல் ஆகியவற்றின் காரணமாகவும் அதிகத் தீவிரம் அடைந்திருந்தன.

பிரிட்டனுக்கு எதிரான இந்தியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளின் போராட்டமும் பிரான்சுக்கு எதிரான சிரியா மற்றும் மொராக்கோ ஆகிய நாடுகளின் போராட்டமும், எல்லாவற்றிற்கும் மேலாக பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான் ஆகியவற்றிற்கு எதிரானச் சீன மக்கள் நடத்திய ஆயுதம் ஏந்திய போராட்டமும் ஏகாதிபத்திய நாடுகளை அந்நாடுகளின் ''கொல்லைப்புற

நிலை''யைப் பறித்து விடும்படி பயமுறுத்தின. அதாவது, ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கம், அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவது இன்னும் உடனடியாக உருப்பெறாமலிருக்கும் நிலையில், ஒடுக்கப்பட்ட தேசங்களின் விடுதலை ஏற்கனவே ஒரு அவசரப் பிரச்சினையாக மாறி இருந்தது; ஏனெனில் ஸ்திர தன்மையின் எந்த அடையாளமும் காலனிகளிலும், அரைக் காலனிகளிலும் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியாமலே இருந்தது. ஒடுக்கப்பட்ட தேசங்களில் யுத்தப்பிற்கால விடுதலை இயக்கம். குறிப்பாக, சீனாவின் விடுதலை இயக்கம் ஏகாதிபத்திய ஆட்சிக்குக் கடுமையான அடிகளைக் கொடுத்தது.

யுத்தப் பிற்காலக் கட்டத்தில் சீனாவில் ஏகாதிபத்திய ஒடுக்குமுறைகளும், சுரண்டலும் அதிகரித்துக் கொண்டிருந்தன. சீனாவில் தேசியத்தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. உதாரணமாகப் பஞ்சாலைத் தொழிலை எடுத்துக்கொள்வோம். இது சீனாவின் தேசியத் தொழிலின் பிரிவாக இருந்தது. 1919 ஆம் ஆண்டிலிருந்து 1927 ஆம் ஆண்டு வரையிலும், அது நடைமுறையில் அப்படியே ஒரு தேக்கமுற்ற நிலையில் இருந்தது. சீனர்களுக்கு உடமையாக இருந்த மில்களில் உற்பத்தியான நூற்கதிர்கள், முறுக்கு நூற்கதிர்கள் தறிகள் ஆகியவற்றின் விகிதாசாரம் மொத்த உற்பத்தியோடு இணைத்துப் பார்ப்பதைப் பின்வரும் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன; நூற்கதிர்கள் 1919 ஆம் ஆண்டில் மொத்தம் இருந்த கதிர்களில் 53.3. சதவீதமாக இருந்தது. 1927 ஆம் ஆண்டில் 57. 4. சதவீதமாக இருந்தது. முறுக்கு நூற் கதிர்கள் 1919 ஆம் ஆண்டில் 88.7. சதவீதமாக இருந்தன. 1927 ஆம் ஆண்டில் 45.3. சதவீதமாக இருந்தது. தறிகள் 1919 ஆம் ஆண்டில் 40.8. சதவீதமாக இருந்தது 1927 ஆண்டில் 50.3. சதவீதமாக இருந்தது. 1922 ஆம் ஆண்டில் இருந்து 1927 ஆம் ஆண்டு வரையிலும் சீனர்களுக்கு உடமையாயிருந்த பஞ்சாலைகளின் உற்பத்தி, நாட்டின் பஞ்சுநூல் உற்பத்தியோடு ஒப்பு நோக்கிப் பார்க்கும்போது 92 சதவீதமாக இருந்தது 58 சதவீதமாகக் குறைந்து விட்டது; அதே சமயத்தில் அந்நியர்களுக்குச் சொந்தமான மில்லில் செய்யப்பட்ட உற்பத்தி 8 சதவீதத்தில் இருந்து 42 சதவீதமாக உயர்ந்தது. 1925 ஆம் ஆண்டில் இருந்து 1927 ஆம் ஆண்டு வரையிலும் நாடு முழுவதிலும் செய்யப்பட்ட மொத்த உற்பத்தியில் சீனர்களுக்குச் சொந்தமான மில்லில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தித் துணியின் விகிதாசாரம் 83 சதவீதமாக இருந்து 47 சதவீதத்துக்கு விழுந்துவிட்

டது. அதே சமயத்தில், அந்நியருக்குச் சொந்தமான மில்களில் உற்பத்திச் செய்யப்பட்ட பருத்தித்துணி 17 சதவீதத்தில் இருந்தது, 53 சதவீதத்துக்கு உயர்ந்தது.

அந்நிய வாசகத்தைப் பொறுத்தவரை யுத்தக்காலத்தில் பெருமளவிற்குக் குறைந்திருந்த சாதகமற்ற மிச்சம் (Balance) மீண்டும் துரிதமாக அதிகரித்தது. 1919-ஆம் ஆண்டு கிட்டத்தட்ட ஒரு மிச்சம் (Balance) இருப்பதைக் காட்டிய அதே சமயத்தில், (16,188,270 வெள்ளி டாலர்கள் வித்தியாசம் இருப்பதை மட்டுமே காட்டிய அதே சமயத்தில்) 1920-ஆம் ஆண்டில் ஏற்றுமதிகளைக் காட்டிலும் இறக்குமதிகளின் பயங்கரமானதொரு அதிகரிப்பு இருந்தது. சாதகமற்ற நிலை 220,618,930, டாலர்களாக இருந்தது. அடுத்த சில ஆண்டுகளில் அது இன்னும் மிகவும் அதிகமாகக் கூட இருந்தது.

இந்தக் காலத்தில் சீனாவின் பல்வேறு யுத்தப் பிரபு அரசாங்கங்களை ஆதரித்துக் கொண்டிருக்கும் தங்களுடைய பழைய கொள்கையையும் பல்வேறு யுத்தப்பிரபுக்களின் கும்பல்களுக்கிடையே உள்நாட்டு யுத்தங்களை மூட்டிவிடும் தங்களுடைய பழைய கொள்கையையும் ஏகாதிபத்தியவாதிகள் பின்பற்றிக் கொண்டிருந்தார்கள். 1924-ஆம் ஆண்டில் கியாங்-ஷு, சிகியாங் யுத்தமும் மற்றும் 2-வது சிகிலி-பெங்டியன் யுத்தமும் நடைபெற்றன; இவற்றைப் பின் தொடர்ந்து, 1925-ஆம் ஆண்டின் சிகியாங்-பெங்டியன் யுத்தமும், புரட்சிகரமானச் சார்புத்தன்மைகளைக் கொண்டிருந்த "தேசிய ராணுவத்தின் மீது" பெங்டியன் மற்றும் சிகிலிக் கும்பல்களால் நடத்தப்பட்ட கூட்டுத் தாக்குதல்களும் நடைபெற்றன.

வடக்கத்திய யுத்தபிரபுக்களுக்கிடையே நடைபெற்ற பெரும் பாலான யுத்தங்கள் லயோனின், ஜிகோர், ஹோப்பை, ஷாண்டுங், கியாங் சு. சிகியாங், ஹீப்பே.போன்ற மாகாணங்களில் நடத்தப்பட்டன. ஒவ்வொரு தரப்பிலும் அணிதிரட்டப்பட்ட படைகள் 1 லட்சம் முதல் 4 லட்சம் வரை இருந்தார்கள். 1924 ஆம் ஆண்டுச் செப்டம்பர் மாதத்திலிருந்து 1925-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையிலும் உள்ள காலக்கட்டத்தில், இத்தகைய யுத்தங்களால் தொழிலுக்கும் வியாபாரத்திற்கும் ஏற்பட்ட நஷ்டங்களின் மொத்தம் 79 கோடி வெள்ளி டாலர்கள் ஆகும். யுத்தப்பிரபு அரசாங்கங்களின், ஆட்சியின் கீழ், மிதமிஞ்சிய வரிகள் மக்களின் மீது விதிக்கப்பட்டன. அதே சமயத்தில், குத்தகைகளினாலும், கொடும்வட்டி லேவாதேவி முறைகளினாலும்

விவசாயிகள் காட்டுமிராண்டித்தனமானச் சுரண்டலினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பின் விளைவுகளாலும் யுத்தப் பிரபுக்களிடையே நடைபெற்ற யுத்தங்களின் விளைவுகளாலும் சீனாவின் சமுதாய உற்பத்திச் சக்திகளின் அபிவிருத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்டு சீர்குலைக்கப் பட்டது; தொழிலும் வியாபாரமும் நாசமடைந்தன. மக்கள் வறுமையில் உழன்றனர். இது ஏகாதிபத்திய வாதிகளுககுக்கெதிராகவும் யுத்தப்பிரபு அரசாங்கபகளுக்கெதிராகவும் புரட்சிப் போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தும்படி நாட்டில் உள்ள அனைத்து மக்களையும் உந்தித் தள்ளிற்று.

**2. கோமிங்டாங் கட்சியின் முதல் தேசியக் காங்கிரஸ். தொழிலாளி வர்க்க இயக்கமும் விவசாய இயக்கமும் புத்துயிர் பெறுதல். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 4-ஆவது தேசியக் காங்கிரஸ். தேசியச் சட்டப் பேரவையைக் கூட்டுவதற்கான இயக்கம்.**

ஏகாதிபத்தியத்திற்கும் மற்றும் பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவத்திற்கும் எதிராக டாக்டர் சன்யாட்-சென்னுடைய ஜனநாயக நிலைபாட்டினைச் சரியாக மதிப்பீடு செய்திருந்தமையாலும், கோமிங்டாங் கட்சியினைத் தொழிலாளிகள், இதர ஜனநாயகச் சக்திகளின் ஒரு கூட்டணியாக மாற்றுவதற்கானச் சாத்தியப் பாட்டினைச் சரியாக மதிப்பீடு செய்திருந்தமையாலும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 3-ஆவது தேசியக் காங்கிரஸ் ஒரு ஐக்கிய முன்னணிக் கொள்கையைத் தீர்மானித்தது.

இந்தக் காங்கிரசுக்குக் கொஞ்ச காலத்திற்கு முன்னால் ஒரு ஐக்கிய முன்னணியை நிலை பெறச் செய்வதற்காகவும் கோமிங்டாங்-கம்யூனிஸ்ட் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்காகவும் கட்சி சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருந்தது. அது தன்னுடைய பல உறுப்பினர்கள் மூலம் சன்யாட்-சென் மீது உருப்படியானச் செல்வாக்கினைப் பிரயோகித்திருந்தது; குறிப்பாக, லீடா-சாவோ, லின்போ-சூ ஆகியோர் மூலம் உருப்படியானச் செல்வாக்கினைப் பிரயோகித்து இருந்தது. இவர்கள் இருவரும் கட்சியின் வழிக்காட்டுதலின் கீழ் ஏராளமாகப் பயனுள்ள வேலையைச் செய்தார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியினால் ஆதரிக்கப்பட்டிருந்த டாக்டர்

சன்யாட்-சென் 1923ஆம் ஆண்டு, மார்ச் மாதம் குவாங்டுங்கில் புரட்சிகரமானதோர் அரசாங்கத்தை அமைத்தார். அக்டோபரில் கோமிங்டாங்கைப் புனரமைப்பதுபற்றி அவர் ஒரு அறிக்கையை வெளியிட்டார். கட்சியின் ஒரு நகல் திட்டத்தை அவர் முன்வைத்தார். சோவியத் ரஷ்யாவோடு கூட்டணி, கம்யூனிஸ்ட் கட்சியோடு ஒத்துழைப்பு, தொழிலாளிகள் விவசாயிகளுக்கு உதவி செய்வது என்ற அவருடைய மூன்று முக்கியமான கொள்கைகளை வரையறுத்துக் கூறினார்.

1924 ஜனவரியில் கோமிங்டாங் அதனுடைய முதல் தேசியக் காங்கிரசைக் காண்டனில் நடத்திற்று. வீடா-சாவோ மாசே-துங் மற்றும் இதர கம்யூனிஸ்டுகளும் காங்கிரசில் கலந்து கொண்டு முக்கியமானதொரு வழிகாட்டும் பாத்திரத்தை வகித்தார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களையும் சோஷலிஸ்ட் இளைஞர் கழகத்தின் உறுப்பினர்களையும் (அவர்களது தனிப்பட்ட முறையில்) கோமிங்டாங் கட்சிக்குள் சேர்த்துக் கொள்ளும் தீர்மானத்தைக் காங்கிரஸ் நிறைவேற்று; புதிய கட்சியின் திட்டத்தையும் அமைப்புச் சட்டத்தையும் கோமிங்டாங்கைப் புனர் அமைப்பதற்கானப் பல்வேறு ஸ்தூலமான நடவடிக்கைகளை எடுப்பதற்கானத் தீர்மானத்தையும் நிறைவேற்றிற்று. ''சீனக் கோமிங்டாங் கட்சியின் முதல் தேசியக் காங்கிரசின் அறிக்கை'' என்ற தஸ்தாவேஜினைக் காங்கிரஸ் அங்கீகரித்தது. அது மகத்தான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தஸ்தாவேஜாகும். அந்தத் தஸ்தாவேஜில் டாக்டர் சன்யாட்-சென் மக்களின் மூன்று கோட்பாடுகளைப்பற்றி (அதாவது மேலே சொல்லப்பட்ட மூன்றுமுக்கியமான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட மக்களின் புதிய மூன்று கோட்பாடுகளைப்பற்றி) புதியதொரு வியாக்கியானத்தைக் கொடுக்கிறார்.

இந்த முறையில் கோமிங்டாங், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின்கீழ் ஓர் ஐக்கிய முன்னணி ஸ்தாபனமாக மாறிற்று. நான்கு வர்க்கங்களில் தொழிலாளி வர்க்கம், விவசாயி, குட்டி முதலாளி வர்க்கம், தேசிய முதலாளி வர்க்கம் ஆகிய கூட்டணியின் ஒரு ஸ்தாபனமாக மாறியிருந்தது,

மக்களின் மூன்று புதிய கோட்பாடுகள், பழைய கோட்பாடுகளிலிருந்து சில அடிப்படையான வேறுபாட்டினைக் காட்டின. மக்களின் பழைய மூன்று கோட்பாடுகள் பழைய ஜனநாயகப் புரட்சியின் வரலாற்று ரீதியான அம்சங்களைப் பிரதிபலித்தன.

பூர்ஷ்வாக்களால் தலைமை தாங்கப்பட்ட பழைய ஜனநாயகப் புரட்சி ஒரு பூர்ஷ்வா ஜனநாயகத்தையும் முதலாளித்துவச் சமுதாயத்தையும் நிலைநாட்டுவதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. புதிய ஜனநாயகப் புரட்சிக் காலக்கட்டத்தில் அவை காலாவதியாகிப்போய், மக்களின் புதிய மூன்று கோட்பாடுகள் உருவாகி வந்தன. புதிய கோட்பாடானத் தேசியம், ஏகாதிபத்தியத்தை எதிர்த்தது; ''சீனத் தேசத்தின் சுயவிடுதலையையும்'', ''சீனாவிற்குள்ளிருந்த சகல தேசிய இனங்களுக்கும் முழுமையானச் சமத்துவத்தையும்'' ஆதரித்து நின்றது. ஜனநாயகத்தின் புதிய கோட்பாடு ஜனநாயக உரிமைகள் ஏகாதிபத்தியத்தையும் நிலபிரபுத்துவத்தையும் எதிர்த்துக் கொண்டிருந்த பொதுமக்களாலும், சகல தனி நபர்களாலும் அமைப்புகளாலும் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்றும், விரல்விட்டு எண்ணக்கூடிய முதலாளிகளால் ஏகபோகமாக ஆக்கிக்கொள்ளப் படக்கூடாது என்றும் கூறிற்று. வாழ்வு என்ற புதிய கோட்பாடு ''நிலஉடமையைச் சமப்படுத்துதல்'', ''உழுபவர்களுக்கு நிலம்'', ''மூலதனத்தைக் கட்டுப் படுத்தல்'', ''தொழிலாளிகளின் வாழ்க்கை நிலைமைகளை அபிவிருத்திச் செய்தல்'' ஆகியவற்றை ஆதரித்துக் கொண்டிருந்தது. விரல்விட்டு எண்ணக் கூடிய நிலச்சுவான்தார்கள், மக்களின் வாழ்க்கையைத் தேசிய நலம் கட்டுப்படுத்துவதையும் எதிர்த்தது.

மக்களின் புதிய மூன்று கோட்பாடுகள், மூன்று முக்கியமான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஏகாதிபத்தியத்திற்கும் பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவத்திற்கும் எதிர்ப்பினைத் தெரிவித்துக் கொண்டிருந்தது. சகலவிதமான புரட்சிகர வர்க்கங்களின் ஜனநாயக ரீதியான ஒரு கூட்டு அரசை நிறுவுதலை ஆதரித்துக் கொண்டிருந்தது. பூர்ஷ்வா ஜனநாயகம் புரட்சியின் காலக்கட்டத்தில் அவை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டத்தோடு அடிப்படையிலே உடன்பட்டிருந்தன. இந்த முறையில் இக்கோட்பாடுகள் கோமிங்டாங்-கம்யூனிஸ்ட் ஒத்துழைப்பிற்கு அரசியல் அடிப்படையாக மாறியிருந்தன.

எனவே, கம்யூனிஸ்ட் பங்கெடுத்து வழி காட்டும் ஒரு பாத்திரத்தை வகித்த கோமிங்டாங்கின் முதல் தேசிய மாநாடு சீனப் புரட்சியில் ஒரு புதிய எழுச்சியின் ஆரம்ப இடமாக மாறிற்று.

புரட்சியின் உத்வேகத்தை வேகப்படுத்திய இரண்டு இதர முக்கியமான நிகழ்ச்சிகள் இந்தக் காலக்கட்டத்தில் நடை-

பெற்றன. அவை: சோவியத் யூனியனுக்கும் சீனாவுக்கும் இடையே ஏற்பட்ட நட்புறவு உடன்படிக்கை; புரட்சிப் படையின் நிர்மாணம்.

இரு நாடுகளுக்கிடையே ராஜதந்திர உறவுகளை ஸ்தாபிப்ப தற்காகச் சோவியத் யூனியனால் சீனா பற்றி விடப்பட்ட அறிக்கைகளில் கொடுக்கப்பட்ட முன்மொழிவுகளைப் பீகிங் அரசாங்கம் இரண்டுமுறை மறுத்துவிட்டது. 1922 ஆம் ஆண்டில் சோவியத் அரசாங்கத்தின் பிரதிநிதி பீகிங்கில் வந்து இறங்கிய பொழுது, பீகிங் வாசிகளால் அவர் உற்சாகமாக வரவேற்கப் பட்டார்: ஆனால், பீகிங் அரசாங்கத்தினால் அலட்சியமாக நடத்தப்பட்டார். எனினும் இவ்விரு நாடுகளின் மக்களுக் கிடையே இருந்த மாபெரும் நட்புறவு பிரிக்க முடியாததா யிருந்தது. 1923 ஆம் ஆண்டு செப்டம்பரில் சோவியத் அரசாங் கம் மீண்டும் ஒரு முறை ஒரு தூதுவரை பீகிங்கிற்கு அனுப்பிச் சீனாவில் ஜார் காலத்திலிருந்த சகலவிதமானச் சலுகைகளையும் விட்டு விடுவதற்கு அதற்கிருந்த விருப்பத்தை மீண்டும் வலி யுறுத்தியபோதும், சீனஅரசாங்கத்தோடு சமாதானப் பேச்சுக்கள் நடத்துவதற்கு அதற்கிருந்த விருப்பத்தினை மீண்டும் வலியுறுத் திய பொழுதும், சீன அரசாங்கம் அதனை மறுப்பதற்கு எந்த விதமான நொண்டிச்சாக்கினையும் கண்டு பிடிக்க முடியாதபடி இடப்பட்டது. பேச்சு வார்த்தைகள் ஒரு நட்பு உடன்படிக் கையை—சீனக் குடியரசுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையே தலை தூக்கி நிற்கும் பிரச்சினைகளில் தீர்வு காணுவதற்கானப் பொதுக் கோட்பாடுகள் பற்றிய உடன்பாடுகள்—செய்து கொள் வதில் முடிவடைந்தது.

சீனா பற்றிய சோவியத் அறிக்கைகளில் தெளிவுபடுத்தப் பட்டிருந்த கோட்பாடுகளுக்கு ஏற்ப, சலுகைகள் பெறுவதற்கான சகலவித உரிமைகளையும் விட்டு ஒழித்தல், குத்தகைக்கு விடப் பட்டிருந்த பிரதேசங்களை விட்டுவிடுதல், இன்னும் இதுபோன்று சீனாவிலிருந்த அனைத்துச் சலுகைகளையும் விட்டு விடுதல் "பாக்சர்" கடன் சம்பந்தமான ரஷ்யப் பகுதியையும், பிரதேசங் களையும் விட்டு விடுதல், சீனக் கிழக்கத்திய இரயில்வே சம்பந்த மான (தொழில் உறவுகள் சம்பந்தமான விஷயங்களைத் தவிர) எல்லாச் சலுகைகளையும் விட்டு விடுதல் — இத்தகைய சலுகை கள் சம்பந்தமான ஜாரிஸ்ட் அரசாங்கத்திற்கும், சீன அரசாங்கத் திற்குமிடைாய செய்யப்பட்டிருந்த எல்லா சமத்துவமற்ற உடன் படிக்கைகளையும் நிபந்தனையற்ற முறையில் கிழித்தெறிவதாகச் சோவியத் அரசாங்கம் உடன்படிக்கையில் பிரகடனம் செய்தது.

அயல் நாட்டு உறவுகளின் சீன வரலாற்றிலேயே இதற்கு முன் கண்டிராத இந்த உடன்படிக்கை, சீன மக்களிடமிருந்து உற்சாக மானப் பாராட்டுதலைப் பெற்றது.

மேலும், சோவியத் யூனியன் ஒரு புரட்சிப் படையை நிறுவு வதற்குச் சன் யாட்-சென்னுக்கு உதவி செய்தது. கடந்த காலப் புரட்சி முயற்சி ஏற்பட்டிருந்த தொடர்ச்சியானத் தோல்விகளால், இப்படிப்பட்டதொரு படையின் மிதமிஞ்சிய முக்கியத்துவம் சன் யாட்-சென்னால் அழுத்தமாக உணரப்பட்டிருந்தது, ஆகவே, சோவியத் செஞ்சேனையின் பாணியைப் பின்பற்றி ஒரு ராணுவக் கல்லூரியை ஏற்படுத்த அவர் தீர்மானித்தார். அதன் விளைவாக 1924- ஆம் ஆண்டு மே மாதத்தில் காண்டன் நகரில் வாம்போவா ராணுவக் கல்லூரி நிறுவப்பட்டது. இக் கல்லூரியிலிருந்து தேர்ச்சி பெற்ற படைவீரர்கள் புதிதாக நிறுவப்பட்டிருந்த தேசியப் புரட்சிப் படையின் முதுகெலும்பாக அமைந்தார்கள். இந்த தேசிய புரட்சிப் படை பிரதானப் போராடும் படையாக இருந்தது; இப்படை பின்னர் குவாங்டுங் மாகாணம் முழுவதை யுமே புரட்சி அரசாங்கத்தின் கீழ்க்கொண்டு வந்தது; வடக்கத்திய படையெடுப்பை நிறைவேற்றிற்று.

புரட்சிகரமான ஐக்கிய முன்னணி நிறுவப்பட்டது. ஏகாதி பத்திய வாதிகள், யுத்தப்பிரபுக்கள், தரகு முதலாளிகள் ஆகியோ ரிடையே விரோதத்தையும் பயத்தையும் தட்டியெழுப்பிற்று. ஆகவே இவர்கள் புரட்சிகரமான ஐக்கிய முன்னணியை எதிர்ப் பதற்குக் கூட்டு முயற்சிகளைச் செய்ய ஆரம்பித்தார்கள். பெங் ஸீ-யு மற்றும் இதர பிற்போக்கு வாதிகளின் நடவடிக்கைகள் கோமிங்டாங்கின் அணிகளுக்குள் நடைபெற்ற இந்தப் போராட் டத்தின் ஒரு பிரதிபலிப்பாக இருந்தது. பெங்ஸீ-யுவும் இதர பிற்போக்கு வாதிகளும் கோமிங்டாங் - கம்யூனிஸ்ட் ஒத்துழைப் பையும், கம்யூனிஸ்ட் கட்சியையும், சோவியத் யூனியனையும் தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களையும் பகிரங்கமாகவே எதிர்த்தார்கள்; ஏகாதிபத்தியவாதிகளோடும் இதர எல்லாப்பிற் போக்கு வாதிகளோடும் சேர்ந்து கொண்டு ஒரு கம்யூனிஸ்ட் எதிர்ப்புக் கூட்டணியை அமைப்பதற்கு முயற்சி செய்தார்கள். அதற்குப் பிறகு, சாங்சி, ஷிசி, செளலு, கோமிங்டாங்கிலிருந்த இதர கம்யூனிஸ்ட் எதிர்ப்புப் பேர்வழிகளும் அவர்களைப் பின் தொடர்ந்து, கோமிங்டாங்-கம்யூனிஸ்ட் ஒத்துழைப்பையும் புரட்சிகரமான ஐக்கிய முன்னணியையும் எதிர்த்தார்கள்.

புரட்சி வாதிகளுக்கும் எதிர் புரட்சி வாதிகளுக்குமிடையே நடைபெற்ற போராட்டம் 1924 அக்டோபரில் குவாங்டுங்

வியாபாரத் தொண்டர்ப் படைச்சம்பவத்தில் அதனுடைய மிக மூர்க்கத்தனமான வடிவத்தை எடுத்தது. இப்படை நிலப்பிரபுக்களின், தரகு முதலாளிகளின் ஓர் ஆயுதமேந்திய ஸ்தாபனம். இப்படைக்கு சென்லிம்-பாக் தலைமை தாங்கினார். இவர் பிரிட்டனுக்குச் சொந்தமான ஹாங்காங் மற்றும் ஷங்காய் வங்கி கார்ப்பரேஷனின் ஒரு தரகு முதலாளி. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளின் ஆதரவோடும் யுத்தப்பிரபு சென்ஸின் மிங்கோடு இணைந்து நின்று கொண்டும், இப்படைப் பிரிவினர் உள்ளேயிருந்தும் வெளியேயிருந்தும் ஒரு முகப்படுத்திய தாக்குதல்களை நடத்தி குவாங்டுங்கிலிருந்த சன்யாட்-சென்னுடைய புரட்சி அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குச் சூழ்ச்சி செய்தார்கள், ஆனால் சன்யாட்-சென் போராட்டத்தில் மகத்தான உறுதியை வெளிப்படுத்தினார்; தொழிலாளி,விவசாயி வெகு ஜனங்களின் ஆதரவோடு புரட்சி அரசாங்கம் வியாபாரிகள் தொண்டர்ப் படையினரின் ஆயுதமேந்திய கலகத்தை வெற்றிகரமாக உருவாக்கிற்று.

சீனப்புரட்சி எழுச்சியினால் தொழிலாளி வர்க்க இயக்கம் புத்துயிர் பெற்றது.

பிப்ரவரி 7ஆம் தேதி படுகொலைக்குப்பிறகு, பீகிங்-காங்கோ ரயில்வேத் தொழிற் சங்கங்களும் ஊகாங் நகரத்துத் தொழிற் சங்கங்களும் இதரச் தொழிற்சங்கங்களும் தலைமறைவாகச் செல்லும்படி நிர்பந்திக்கப்பட்டன; காண்டனிலும், ஹுனானிலுமிருந்த தொழிற் சங்கங்கள் மட்டுமே இதற்கு விதி விலக்கா யிருந்தன. ஆனால் காண்டனிலிருந்த புரட்சி அரசாங்கம் தொழிற்சங்கங்களை அங்கீகரித்து இருந்த போதிலும், தொடர்ந்து போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்த அன் யுவான் தொழிற் சங்கத்தினால் அதிகமாகச் சாதிக்கப்பட்டிருந்த போதிலும் ஒட்டு மொத்தமாக நாடு முழுவதிலும் தொழிலாளி வர்க்க இயக்கம் தற்காலிகமாக ஒரு தணிந்த அலையிலேயே இருந்தது, அந்தச் சமயத்தில், தொழிலாளிகளுக்கு நிவாரணம் கொடுப்பதும் மீண்டும் போராட்டத்தை ஆரம்பிக்கச் செய்வதும் தொழிற்சங்கங்களின் மிக முக்கியமானக் கடமைகளாக இருந்தன. பாதிக்கப்பட்டிருந்த பலருக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நிவாரணம் அளிப்பதற்காக நன்கொடைகளை வசூலிப்பதற்குத் தொழிற்சங்கச் செயற்குழு விசேஷமானதொரு குழுவை அமைத்தது. சர்வத் தேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் அனுபவங்களிலிருந்து கற்றுக் கொண்டு, தொழிலாள வெகு

ஜனங்களை ஸ்தாபன ரீதியாக அணி திரட்டும் குறிக்கோளுடன், "தொழிச்சாலைத் தொழிற் சங்கக் குழுக்களை", அமைப்பதை, அதாவது, தொழிற் சாலைத் தொழிற் கூட்டங்களில் பத்துப் பேருக்கும் குறைவானவர்களைக் கொண்ட இரகசியக் குழுக் களை அமைப்பதைச் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அதனுடைய மைய மானதொரு கடமையாக முடிவு செய்தது. 1924 ஆம் ஆண்டு பிப்ரவரியில், தேசிய ரயில்வே தொழிலாளர்களின் தொழிற் சம்மேளனம் பீகிங்கில் நிறுப்பட்டது.

கோமிங்டாங்கில் அரசியல் திட்டம், "தொழிலாளர் சட்டங் களை உருவாக்குவதற்கும், "தொழிலாளர் ஸ்தாபன்ங்களைப் பாதுகாப்பதற்கும்" வகைச் செய்திருந்தது. இந்த முறையில் காண்டனில் தொழிலாளி வர்க்க இயக்கம் முன்னேற முடிந்தது; தொழிலாளர்களின் ஒரு படையும் கூட நிறுவப்பட்டது.

1924 ஜுலையில், காண்டனிலிருந்த பிரிட்டிஷ் சலுகைப் பகுதியான ஷாமீனில் அந்நியர்களுக்குச் சொந்தமானத் தொழிற் சாலைகளில் தொழிலாளர்களின் பெரிய தொரு வேலை நிறுத்தத் தைக் கம்யூனிஸ்ட் கட்சி தலைமை தாங்கி நடத்திற்று; அந்த மாவட்டத்திற்குள் நுழைவதற்கும், அந்த மாவட்டத்திலிருந்து வெளியேறுவற்கும் தங்களது அடையாள அட்டைகளை சீனர்கள் காட்ட வேண்டுமென்று வேண்டப்பட்ட புதிய போலீஸ் உத்தரவுக்கு எதிராக இப்பெரும் வேலை நிறுத்தம் நடை பெற்றது. வேலை நிறுத்தம் ஒரு மாதத்திற்கும் அதிகமாகவே நீடித்தது; வேறுபாடு செய்யும் உத்தரவைத் திரும்பப் பெறும்படி ஏகாதிபத்தியவாதிகள் நிர்பந்திக்கப் பட்டார்கள். இந்த வேலை நிறுத்தம் ஸ்தல உணர்வுகளைக் காட்டிலும் மிக அதிகமான உணர்ச்சிகளை உண்டாக்கிற்று. அதன் விளைவுகள் மத்தியச் சீனாவிலிருந்து வடசீனா வரையிலும் ஒலித்தன. அந்த வேலை நிறுத்தத்தைப் பின் தொடர்ந்து, ஷாங்காயிலிருந்த நான்யாங் புகையிலைத் தொழிற்சாலைத் தொழிலாளர்களும், ஹாங்கோவ் ரிக்ஷாத் தொழிலாளர்களும் சூசௌ நெசவாளிகளும் சிக்கியாங் மாகாணத்திலிருந்த யுயாவோ உப்புத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டார்கள். இப்படிப் பட்ட ஒவ்வொரு வேலை நிறுத்தத்திலும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கு பெற்றார்கள். இவை அனைத்தும் நாட்டில் தொழிலாளி வர்க்க இயக்கம் புத்துயிர் பெற்று வளர வித்தாகித்திகழ்ந்தன.

இந்தக் காலக்கட்டத்தில் விவசாயி இயக்கமும் தெற்கில்

ரான முறையில் அபிவிருத்தி அடைந்தது, 1921-ஆம் ஆண்டிலேயே, பெங்பை[1] ஏற்கனவே குவாங்டுங்கில்விவசாயிகளிடையே அதிகமாகப் புரட்சிப்பணி ஆற்றியிருந்தார். எதேச்சாதிகார நிலப்பிரபுக்கெதிரானப் போராட்டங்களும், குத்தகைக் குறைப்புக்கானப் போராட்டங்களும், ஹைபெங் விவசாயச் சங்கத்தால் நடத்தப் பட்டிருந்தன; அந்தச் சங்கத்தில் ஒரு இலட்சம் பேர் உறுப்பினர்களாய் இருந்தார்கள். அந்தச் சங்கம் பிற்போக்கு யுத்தப் பிரபு சென்சியுங்-மிங்கினால் 1924 பிப்ரவரியில் கலைக்கப்பட்ட போதிலும், இந்த உருவத்தில் இருந்த விவசாய அமைப்பு ஹைபெங்கிலிருந்தும், லுபெங்கிலிருந்தும் சாவோ சோவுக்கும் ஸ்வாட்டோவுக்கும் அதற்கு பிறகு குவாங்டுங் மாகாணம் முழுவதற்கும் துரிதமாகப் பரவிற்று. 1932 அக்டோபரில், கெங்ஷாங், ஹுன்னான் ஆகிய மாகாணங்களில் கட்சி ஒரு இலட்சம் விவசாயிகளை விவசாயச் சங்கங்களில் ஸ்தாபன ரீதியாகத் திரட்டி, ஹுன்னான் யுத்தப்பிரபுக்களுக்கும் நிலச்சுவான்தார்களுக்கும் எதிராகக் கடுமையானப் போராட்டங்களை நடத்துவதற்கு அவர்களை வழி நடத்திச் சென்றது. குவாங்டுங் மற்றும் ஹுன்னான் ஆகிய மாகாணங்களை மையமாகக் கொண்டிருந்த தென்பகுதியில் விவசாய இயக்கம் அதன் அமைப்புக்களை விரிவுபடுத்தியது; பொருளாதாரப் போராட்டங்களை நடத்தியது; அரசியல் போராட்டங்களிலும் பங்கு கொண்டது. காண்டனைச் சுற்றிலும் இருந்த விவசாயித் தற்பாதுகாப்புப் படைப் பிரிவுகள், வியாபாரி, தொண்டர் படைகளின் கலகத்தை ஒடுக்குவதற்கும் சன்யாட் - சென்னுக்கு உதவி செய்தன. இரண்டாவது சிகிலி—பெங்டியன் யுத்தம் நடைபெற்ற சமயத்தில், 1924 அக்டோபரில் சிகிலி கும்பலைச் சேர்ந்த பெங்யு-ஷியாங் ஒரு ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தினான். அவன் தன்னுடைய படைகளைத் தேசியப்படை என்று வேறு பெயர் கொடுத்து பீகிங்கிலிருந்து சிகிலி யுத்தப் பிரபுக்களை வெளியேற்றினான்.

இந்தக் கவிழ்ப்பு நடவடிக்கையைப் பின்தொடர்ந்து பெங்டியன் யுத்தப் பிரபுக்களின் செல்வாக்கு வடசீனாவிற்குள் ஊடுருவிச் சென்றது: அவர்கள் சந்தர்ப்பவசமாகப் பீகிங்கில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றினார்கள். ஊபெய்-ஃபூ தோல்விக்குப் பிறகு சிகிலி கும்பலின் பிரதானப்படைகள் யாங்ட்சி பள்ளத்தாக்கிற்குப் பின்வாங்கின; மீண்டும் முன்னேறுவதற்குப் பலத்தைத் திரட்ட ஆரம்பித்தன பீகிங் ஆட்சி மூன்று

குும்பல்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த ஒரு கூட்டு அரசாங்கத்தின் உருவத்தை எடுத்தன: சாங்சோ-லின், டுவான்சி-ஜீ, மற்றும் பெய்யூ—சியான். இக்கும்பல்களின் தலைவனாக டுவான்சி-ஜீ இருந்தான்; இவன் "தற்காலிக நிர்வாகத் தளபதி" என்ற பட்டத்தை வகித்துக் கொண்டிருந்தான்.

இன்னும் நிலையற்றதாக இருந்த புதிய பீகிங் யுத்தப் பிரபு அரசாங்கம், தொழிலாளிகள் மீது ஏவிவிடப்பட்ட ஒடுக்குமுறையைத் தற்காலிகமாகத் தளர்த்திற்று. இது பிப்ரவரி 7ஆம் தேதிப் படுகொலை நடைபெற்ற காலத்தில் இருந்து சிறையிலடைக்கப்பட்ட தொழிலாளர் தலைவர்களை மீட்பதற்குக் கட்சிக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்தது; ரயில்வே தொழிற் சங்கங்களைப் புத்துயிர் பெறச் செய்யவும் வேலை இல்லாதவருக்கு வேலை தேடிக் கொடுக்கவும் கட்சிக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. 1925 பிப்ரவரியில் இரயில்வே தொழிற் சங்கங்களின் இரண்டாவது தேசிய மாநாடு பீகிங்கில் நடைபெற்றது. இந்தக் காங்கிரசின் உடனடி விளைவு சிங்டாவோ-சினான் ரயில்வே தொழிலாளர்களின் மாபெரும் வேலை நிறுத்தமாகும். இதைத் தொடர்ந்து மற்ற வேலை நிறுத்தங்கள், பீகிங், ஊகான், ஷென்யான் மற்றும் டாங்சாவ் ஆகிய இடங்களில் நடைபெற்றன.

இத்தகைய சூழ்நிலைகளில், தேசியச் சட்டப் பேரவையைக் கூட்டுவதற்காகவும், சமத்துவமற்ற உடன்பாடுகளைக் கிழித்தெறிவதற்காகவும் நாடு தழுவிய ஒரு வெகுஜன இயக்கத்தைத் துவக்கி வைப்பதன் மூலம், ஜனநாயகப் புரட்சிப் பதாகையின் கீழ், பரவலான வெகு ஜனங்களை அணி சேர்க்கவும் அமைப்பு ரீதியாகத் திரட்டவும் கட்சி தீர்மானித்தது. கட்சியின் அறைகூவலை ஏற்றுத் "தேசியச் சட்டப் பேரவையைக் கூட்டுவதற்கானச் சங்கங்கள்" அடுத்தடுத்து ஷாங்காய், சிகியாங், குவாங்டுங், ஹுன்னான், ஹுபேய் ஆகிய நகரங்களிலும் மற்றும் இதர இடங்களிலும் அமைக்கப்பட்டன.

ஏற்கனவே வெகுஜன இயக்கம் முழு மூச்சோடு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, 1925 ஜனவரியில், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 4-ஆவது தேசிய மாநாடு ஷாங்காயில் நடைபெற்றது. அதில் 20 பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். அவர்கள் 980 கட்சி உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவ படுத்தினார்கள்.

அச்சமயத்தில் நிலவிய அரசியல் நிலைமையைக் கட்சி

மாநாடு விரிவாக அலசி ஆராய்ந்துக் கட்சியின் அரசியல் கடமையைத் தீர்மானித்து. முன்பு ஆண்ட யுத்தப் பிரபுக்கள் தூக்கி ஏறியப்பட்டிருந்தமையாலும் புதிய ஆட்சியாளர்களான யுத்தப்பிரபுக்கள் இன்னும் தங்களது நிலைமையைக் கெட்டிப் படுத்தாமல் இருந்தமையாலும், யுத்தப் பிரபுக்களின் ஆட்சி வீழ்ச்சியை நோக்கி துரிதமாகப் போய்க் கொண்டிருந்த ஒரு காலக் கட்டமாக அக்காலக்கட்டம் இருந்தது. இந்த நிலைமை சீனாவில் மக்கள் இயக்கம் மேலும் அபிவிருத்தி அடைவதற்குச் சாதமாக இருந்தது. இயக்கத்தின் வெற்றி கட்சியின் கொள்கை மீதும் வெகு ஜனங்களிடையே அதனுடைய பிரச்சாரம், அமைப்பு வேலை ஆகியவற்றின் மீதும் முற்றிலும் சார்ந்திருந்தமையால் நாடு தவியதொரு மக்கள் இயக்கத்தை எப்படி அபிவிருத்தி செய்வது என்ற பிரச்சினை இயல்பாகவேகாங்கிரசில் விவாதத்தின் மையமான விஷயமாக ஆகியிருந்தது.

பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியில் பங்கெடுப்பதில் தொழிலாளி வர்க்கம் அதற்கே உரித்தானதொரு குறிக்கோளைக் கொண்டிருந்தது. அதாவது, ஜனநாயகப் புரட்சியின் முழுமை யான வெற்றிக்குப் பிறகு ஒரு பட்டாளி வர்க்கப் புரட்சியை நோக்கி மக்களைத் தலைமை தாங்கி அழைத்துச் செல்ல வேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டிருந்தது என்று கட்சி மாநாடு சுட்டிக் காட்டிற்று. ஆகவே, இந்தப் புரட்சியில் தொழிலாளி வர்க்கத்தின் நிலை இதர வர்க்கத்தின் நிலையில் இருந்து வேறுபட்டிருந்தது. தொழிலாளி வர்க்கம் பூர்ஷ்வா வர்க்கத்திற்கு ஒரு தொங்குச் சதையாக இருக்காமல் அதற்கே உரித்தானத் தனித் தன்மையையும் குறிக்கோள்களையும் வைத்திருக்க வேண்டும். தொழிலாளி வர்க்கம் தலைமையை மேற்கொள்வதின் மூலம் மட்டுமே சீன ஜனநாயகப் புரட்சி முழுமையானதொரு வெற்றியைப் பெறமுடியும். மீண்டும் முன்னோக்கிப் போய்கொண்டிருந்த தொழிற்சங்க இயக்கத்திற்கு புதியதொரு காலக்கட்டம் ஆரம்பமாகியிருந்தது என்று காங்கிரஸ் சுட்டிக் காட்டிற்று. சீனாவில் தேசியச் சட்டப் பேரவையைக் கூட்டுவது என்பது அந்தச் சமயத்தில் தெளிவானதொரு சாத்தியப்பாடாக இருந்தது, எனவே, தேசிய ஜனநாயக இயக்கத்தில் அதற்கு ஒரு தலைமைத் தாங்கும் பாத்திரத்தைப் பெறும் பொருட்டுத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் சுறுசுறுப் பானப் பங்கை ஏற்று, சக்தி வாய்ந்த பொது மக்களின் அமைப்பு களை ஏற்படுத்த வேண்டும். யுத்தப்பிரபுக்களின் கட்டுப்பாட்டில்

இருந்த பிரதேசங்களில், இத்தகைய ஸ்தாபனங்கள் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் தொழிற்கூடத்திலும் 3 தொழிலாளர்களுக்கு அதிகமானவர்களைக் கொண்டு அமைக்கப்பட இருந்த தொழிற்சங்கக் குழுக்களின் உருவத்தை எடுத்தது; இக்குழுக்கள் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் பல்வேறு வேலைப் பிரிவுகளுக்கு ஏற்பக் கிளைகளாக இணைக்கப்பட வேண்டும்; இத்தகைய கிளைகளின் விழைவு, தொழிற்சாலைத் தொழிற்சங்கங்கள் இருக்க வேண்டும், இவைகள் பிரதேசத் தொழிற்சங்கங்களாக ஒன்றிணைக்கப்பட வேண்டும். ரயில்வேக்கள், சுரங்கங்கள், பஞ்சாலைகள் ஆகிய இப்படிப்பட்ட தொழில்களிலும் ஷாங்காய், ஹாங்கோவ், டியென்சின் போன்ற இப்படிப்பட்ட தொழில் நகரங்களிலும் வியாபார நகரங்களிலும் அமைப்பு வேலை எல்லாவற்றிற்கும் முதலாக நிறைவேற்றப்பட வேண்டும்.

சீனாவின் தேசிய ஜனாாயகப் புரட்சியில் விவசாயிகள் அடிப்படையானச் சக்தியாகவும் தொழிலாளி வர்க்கத்தின் பிரதானக் கூட்டாளியாகவும் இருந்தார்கள் என்று காங்கிரஸ் மேலும் சுட்டிக் காட்டிற்று. எனவே, அரசியல், பொருளாதார போராட்டங்களை நடத்துவதற்கு, விவசாயிகளை அமைப்பு ரீதியாகத் திரட்டுவதற்குக் கம்யூனிஸ்ட் கட்சி சாத்தியமான எல்லாவற்றையும் செய்ய வேண்டும். ஆகவே, நிலப்பிரபுத்துவ ஆட்சியையும், அதனுடைய ஆயுதப்படைகளையும் எதிர்த்துப் போராடுவதற்கு விவசாயச் சங்கங்களையும் விவசாய தற்பாதுகாப்புப் படைபிரிவுகளையும் அமைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. தெற்கு மாகாணங்களில் விவசாய இயக்கத்தில் கிடைத்த அனுபவங்கள், நாடு முழுவதும் விவசாய இயக்கத்தை விரிவுபடுத்தும் பொருட்டு, முழுமையாகப் பயன் படுத்தப்பட்டு மக்களிடையே பரப்பப்பட்டன.

கடந்த ஆண்டில் ஐக்கிய முன்னணி வேலையில் ஏற்பட்ட இடதுசாரி மற்றும் வலதுச்சாரிச் சந்தர்ப்பவாதத் தவறுகளை மாநாடு விமர்சனம் செய்தது. புனரமைக்கப்பட்ட பிறகு கோமிங்டாங் கட்சிக்குள் இடது, மத்திய மற்றும் வலதுசாரிப் பகுதிகள் தோன்றி இருப்பதை அது சுட்டிக் காட்டிற்று; இடதுசாரி அணிகளை விரிவுபடுத்தும் கொள்கையையும், நடுநிலைப் பகுதியை விமர்சிக்கும் கொள்கையையும், வலதுசாரியை எதிர்க்கும் கொள்கையையும் அது ஏற்றுக் கொண்டது.

கட்சியின் நான்காவது தேசியக் காங்கிரசின் சாதனை என்ன வென்றால், பிரதானமாக வெகுஜனப் போராட்டங்களின் ஒரு

புதிய அலையை உருவாக்குவதற்கு அது அமைப்பு ரீதியாகத் தயாரித்ததுதான்.

ஒரு விவசாயத் திட்டத்தை முன் வைப்பதற்கு அது தவறியதில்தான் அதனுடைய குறைபாடு இருந்தது.

பீகிங் கவிழ்ப்பு நடவடிக்கை நடைபெற்ற சமயத்தில் பெங்யு-சியாங் புரட்சியின்பால் விருப்பத்தோடு இருந்தான்; தன்னுடைய சொந்த நிலைமைப் பலப்படுத்திக் கொள்ளும் நோக்குடன் வடக்கே வரும்படி டாக்டர் சன்யாட்-சென்னை அழைத்தான். டுவான்சி-சுவும், சாங்சோ-லின்னும், தேசிய விவகாரங்களைப் பற்றி ஒரு கலந்தாலோசனை நடத்துவதற்கு அவரை அழைக்கும் சாக்கின் பேரில் இருவரும் தங்களுடைய பிரபல்யத்தை அதிகரிக்கும் நோக்குடன் டாக்டர் சென்னுக்கு அதே வேண்டுகோளை விடுத்தார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் உறுதியான ஆதரவோடு, சன்யாட் - சென் 1924 அக்டோபரில் குவாங்டுங்கிலிருந்து பீகிங்கிற்கு சென்றார் ''என்னுடைய வடக்கத்திய பயணம் சம்பந்தமான அறிக்கை'' என்ற அறிக்கையை வெளியிட்டார். அந்த அறிக்கையில் சமத்துவமற்ற உடன்படிக்கைகளை ரத்து செய்யவும் தேசியச் சட்டப் பேரவையைக் கூட்டுவது பற்றியும் அவர் அறை கூவல் விடுத்தார். எனினும் அவர் பீகிங்கிற்குப் போய்ச் சேர்ந்த பொழுது, தேசியக் சட்டப் பேரவையைக் கூட்டுவதில் டுவான்சி-ஜீ அக்கறை இல்லாமல் இருப்பதை அவர் கண்டார். ஒரு விபரம் என்ற முறையில், ''தேசிய புனரமைப்பு மாநாட்டைக் கூட்டுவதின் மூலம் டுவான் அதை எதிர்ப்பதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தான். டுவானுடைய திட்டத்தை எதிர்க்கும் பொருட்டு, 1925 மார்ச்சில் சன்யாட்-சென்னும், விடா-சாவோவும் தேசியச்சட்டப் பேரவையைக் கூட்டுவதற்காகச்சங்கங்களின் தேசியக் காங்கிரஸை ஏற்பாடு செய்தார்கள். தேசியப் புனரமைப்பு மாநாட்டின் தன்மையை அம்பலப் படுத்துவதிலும், புரட்சிகரமானக் கருத்துக்களைப் பரப்புவதிலும் வெகு ஜனங்களை அரசியல் நடவடிக்கைக்குத் தட்டி எழுப்புவதிலும் காங்கிரஸ் மாபெரும் பலனைப் பெற்றிருந்தது.

1925-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12-ஆம் தேதி, அவருடைய வடக்கத்திய பயணத்தின் போது ஏற்பட்ட களைப்பின் விளைவாகவும் மித மிஞ்சிய வேலையின் விளைவாகவும் டாக்டர் சன்யாட்-சென் இறந்து போனார். அவர் மரணப்படுக்கையில் இருந்த போது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக்

கமிட்டிக்கு ஒரு கடிதம் எழுதினார்; அக்கடிதத்தில், சீனா, சோவியத் யூனியன் ஆகிய இருபெரும் தேசங்களுக்கு இடையே நட்புப் பூர்வமான ஒத்துழைப்பு இருக்க வேண்டும் என்ற அவரது ஆவலான நம்பிக்கையை அவர் தெரிவித்தார். ஸ்டாலினுடைய முயற்சியின் பேரில், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய நிர்வாகக் குழு அவரது மரணம் குறித்து அதனுடைய அனுதாபங் களைத் தந்தி மூலம் தெரிவித்தது, சீனத் தொழிலாளர், விவசாயிகளின் நினைவில் டாக்டர் சன்யாட் - சென்னின் மாபெரும் சாதனை என்றென்றும் நிலைத்து இருக்கும் என்று தந்தி சுட்டிக்காட்டிற்று; ஜனநாயகப் புரட்சியில் முழுமையான வெற்றி பெறப்படும் வரையில் சன்யாட் - சென்னின் பதாகையை உயர்த்திப் பிடிக்கும்படி கோமிங்டாங்கின் ஜனநாயப் பகுதியை டாக்டர் சன்யாட்-சென்னின் மாபெரும் சாதனை ஊக்குவிக்கும் என்றும் அது சுட்டிக் காட்டிற்று.

கம்யூனிஸ்ட் கட்சியின் மாபெரும் நண்பரும் இந்த ஜனநாய கப் புரட்சிவாதியான அவருடைய திடீர் மரணத்தினால் தேசம் முழுவதும் ஏற்பட்ட துக்கம் அரசியல் பிரச்சாரத்துக்கான விரிவானதொரு இயக்கம் நடத்துவதற்குச் சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கோமிங்டாங் கட்சிக்கும் இடையே இருந்த ஒத்துழைப்பின் காரணமாகவும், இரு கட்சி களின் புரட்சிகரமான உறுப்பினர்களின் கூட்டு முயற்சிகளின் காரணமாகவும், மூன்று முக்கியமான ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலப் பிரபுத்துவ எதிர்ப்புக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருந்த மக்களின் மூன்று கோட்பாடுகள் நாடு முழுவதி லும் சீக்கிரத்திலேயே அறியப்படலாயின.

**3. சீனத் தொழிலாளர்களின் ஜப்பானிய எதிர்ப்பு வேலை நிறுத்தங்கள். இரண்டாவது தேசிய தொழி லாளர் காங்கிரஸ். ஷாங்காயில் நடைபெற்ற மே 30-ஆம் தேதிய ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம். காண்டனிலும் ஹாங்காங்கிலும் நடைபெற்ற மாபெரும் வேலை நிறுத்தம். குவாங்டுங் புரட்சித் தளத்தை நிலை நாட்டுதல். விவசாய இயக்கத்தின் முன்னேற்றம்.**

சீனாவில் தங்களுடைய பொருளாதார ஆக்கிரமிப்பை நிறை வேற்றுவதற்கு ஏகாதிபத்தியவாதிகள் பயன்படுத்திய பிரதான வழிகளில் ஒன்று தொழிற்சாலைகளில் பிரதானமாகப் பஞ்சாலை

கள் நிறுவுவதாக இருந்தது. சீனாவில் அந்நிய முதலாளிகளால், குறிப்பாக ஜப்பானிய முதலாளிகளால் திறக்கப்பட்ட பஞ்சாலை களின் எண்ணிக்கையில் மகத்தானதொரு அதிகரிப்பை யுத்தத் தின் பிந்தைய ஆண்டுகளில் பார்க்க முடிந்தது.

யுத்தத்திற்குப் பிறகு பஞ்சாலைச் சரக்குகளுக்கு மேலும் மேலும் சுருங்கிக் கொண்டிருந்த சந்தையின் பயமுறுத்தலை எதிர் நோக்கியதால் ஜப்பானிய முதலாளிகள் உள்நாட்டில் ஒரு ஏக போகக் கொள்கையைக் கையாள்வதின் மூலமும், சீனாவில் அவர்களுடைய முதலீடுகளை விரிவுபடுத்துவதின் மூலமும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சித்தார்கள். மேலும் சீனாவில் தொழிற்சாலைகளை அமைப்பதில் ஜப்பானுக்குப் பல சாதகமான நிலைமைகள் இருந்தன. ஜப்பான் சீனாவில் மலிவான உழைப்பை பயன்படுத்த முடிந்தது. ஜப்பானுக்கு இருந்த விசேஷ உரிமைகளைப் பயன்படுத்திக் கொண்டும் சீன யுத்த பிரபு அரசாங்கத்தோடு ஒத்துழைத்துக் கொண்டு சீனத் தொழிலாளர் மீது ஜப்பான் ஒரு வன்முறைக் கொள்கையைக் கடைபிடித்தது. ஜப்பானிய சரக்குகள் சப்பிரதாய வரி விதிப்பு முறையினால் பாதுகாக்கப்பட்டன வடசீனாவிலும் வடகிழக்குச் சீனாவிலும் ஜப்பான் சகல பஞ்சாலை உற்பத்தியையும் கட்டுப் பாட்டில் வைத்து இருந்தது. சீனப் பிரதேசத்தில் முழுமையான தொரு வலைப்பின்னல் போன்ற போக்குவரத்தையும் சொந்த மாக வைத்திருந்தது ஜப்பானிய முதலாளிகள் அபரிமிதமான மூலதனத்தையும், முன்னேறிய உற்பத்தித் தொழில் நுட்பங் களையும் பெற்றிருந்தார்கள்; தங்களுடைய தொழிற்சாலை களைத் திறமையாகவும் நடத்தினார்கள். ஆகவே அவர்கள் சீனாவில் இருந்து அபரிமிதமான லாபத்தை உறிஞ்சியதோடு மட்டுமின்றிச் சீனப்போட்டித் தொழில் நிறுவனங்களைத் தகர்த்தெறியவும் முடிந்தது. 1913-ஆம் ஆண்டிலிருந்து 1925-ஆம் ஆண்டு வரையிலும் சீனாவில் மொத்தக் கதிர்களின் எண்ணிக்கையில், ஜப்பானியர்களுக்குச் சொந்தமானக் கதிர்களின் விகிதாசாரம் 13·6 சதவீதத்திலிருந்து 45.3 சதவீதமாக உயர்ந்தது. அதே சமயத்தில், சீனர்களுக்குச் சொந்தமானக் கதிர்களின் விகிதாசாரம் 58.8 சதவீதத்திலிருந்து 44 சதவீதமாக குறைந்தது. ஜப்பானியப் பஞ்சாலைகள் ஷாங்காயிலும் சிங்டா வோவிலும் குவிந்து கிடந்தமையால் சீனப் பஞ்சாலைகள் அவர் களோடு போட்டிப் போட முடியாத நிலையில் இருந்தன.

இத்தகைய பஞ்சாலைகளின் ஜாப்பானிய உரிமையாளர்கள் ஓவர்டைம் வேலை வாங்கியதின் மூலமும் கூலிகளை வெட்டிக்

குறைத்ததின் மூலமும் சீனத் தொழிலாளர்களைக் கொடூரமாகச் சுரண்டியும் ஒடுக்கியும் வந்தார்கள். இவை எல்லாவற்றிலும் மிக மோசமான விஷயம் என்னவென்றால், ஷாங்காய் நகரத்தில் இருந்த ஜப்பானிய மில்கள் தங்களுடைய சுரண்டலையும் ஒடுக்கு முறையையும் தீவிரபடுத்தும் பொருட்டு, வயது வந்த தொழிலாளர்களை அகற்றுவதற்காக குழந்தைகளுக்குப் பயிற்சி கொடுக்கத் தயாரிப்புகளைச் செய்தார்கள். ஜப்பானிய முதலாளிகளின் இத்தகைய ஈவிரக்கமற்ற நடவடிக்கைகள் 1925 பிப்ரவரியில் பெரியதொரு வேலை நிறுத்தத்தை நடத்து வதற்குச் சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. இந்த வேலை நிறுத்தத் தில் ஜப்பானுக்குச் சொந்தமான ஷாங்காய் நகரத்துப் பஞ்சாலை களில் பணியாற்றிய தொழிலாளர்கள் பங்கெடுத்தார்கள். அதற்குப்பிறகு, ஒரு "ஆயுதம் ஏந்திய ஆர்பாட்டத்திற்காக" ஜப்பான் சீனாவுக்கு யுத்தக் கப்பல்களை அனுப்பிற்று. அதே சமயத்தில் சீனாவிற்கான ஜப்பானிய அமைச்சர் பீகிங் அரசாங்கத்திற்குப் பலமானதொரு எச்சரிக்கையும் கொடுத்தார் அந்த நிகழ்ச்சி தூரக்கிழக்கு முழுவதையும் அதிர்ச்சி அடையச் செய்தது.

அந்த வேலை நிறுத்தம் தங்களுடைய சொந்த வர்க்கத்தின் பலத்தைத் தொழிலாளர்களுக்கு முழுமையாகப் புரியும்படி செய்தது. வளர்ந்துக் கொண்டிருந்த எண்ணிக்கையில் தொழி லாளர்கள் தொழிற்சங்கங்களில் சேர ஆரம்பித்தார்கள். அவர்கள் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் தங்களை அமைப்பு ரீதியாக அணித்திரட்டிக் கொண்டார்கள். அப்படிச் செய்ததின் மூலம் சங்கங்களை அமைப்பதற்குப் பலமானதொரு அடித்தளத்தை அமைத்துக் கொண்டிருந்தார்கள். சங்கங்களின் வளர்ந்து கொண்டிருந்த பலத்தில் பயமுறுத்தப்பட்டிருந்த ஜப்பானிய முதலாளிகள் அச்சங்கங்களைத் தடை செய்யவும் அதன் அமைப்பாளர்களை வேலையை விட்டு நீக்கவும் தீர்மானித்தார்கள். இது ஷாங்காய் தொழிலாளர்கள் மத்தியில் மற்றொரு வேலை நிறுத்தத்திற்குக் காரணமாய் இருந்தது. மே 15ல் ஒரு ஜப்பானியத் தொழிற்சாலைக் காவ லாளி வேலை நிறுத்தம் செய்திருந்த தொழிலாளர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தான். அந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் கு செங்-ஹுங் என்ற தொழிலாளி கொல்லப் பட்டார்; பன்னிருவர்க்கு மேல் தொழிலாளர்கள் காயம் அடைந்தார்கள்.

இதைப் போலவே ஜப்பானிய உடமையாளர்களால் தொடுக்கப்பட்ட ஒடுக்கு முறை நடவடிக்கைகள் சில புசிங்டாவோ மில்களில் பெரியதொரு வேலை நிறுத்தத்தை ஏப்ரல் 19ம் தேதி அன்று உண்டாக்கின. மே 28ம் தேதி அன்று ஜப்பானிய உடமையாளர்கள் தொழிற்சாலைகளை மூடித் தொழிலாளர்களை அங்கிருந்து வெளியேறும்படி நிர்பந்தித்தார்கள். ஜப்பானியப் படைகள் தொழிலாளிகள் மீது குறி வைத்துச் சுட்டு அவர்களில் பலரைக் கொன்று குவித்தது.

இப்படிப்பட்ட அக்கிரமங்கள் சீன மக்களின் ஆத்திரத்தைத் தட்டியெழுப்பிப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு அவர்களுக்கு இருந்த உறுதியைப் பலப்படுத்தின.

அந்தச் சமயத்தில் தொழிலாளி வர்க்கத்தைப் பலப்படுத்துவதும் கெட்டிப் படுத்துவதும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதன்மைப் பணியாக இருந்தது. கட்சியின் தலைமையிலும் சீனாவின் மிகப் பெரிய நான்கு தொழிற் சங்கங்களின் ஆதரவிலும் தேசிய ரயில்வே தொழிலாளர்களின் தொழிற் சங்கச் சம்மேளனம், ஹாங்கோவ்-டாயே-பின்ஷியாங் தொழிற் சங்கச் சம்மேளனம், சீனக் கடல் தொழிலாளர் சம்மேளனம் குவாங்டுங் தொழிலாளர் மாநாடு ஆகியவற்றின் சார்பிலும் நாடு தழுவிய தொரு ஏகாதிபத்திய எதிர்ப்புப் புயல் வீசும் தருவாயில், இரண்டாவது தேசியத் தொழிலாளர் மாநாடு காண்டனில், மே 1 ஆம் தேதி அன்று கூட்டப்பட்டது. இந்த மாநாட்டில் 281 பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். இவர்கள் 166 தொழிற் சங்கங்களையும் அமைப்பு ரீதியாகத் திரட்டப்பட்ட 5 லட்சத்து 40 ஆயிரம் தொழிலாளர்களையும் பிரதிநிதித்துவப் படுத்தினார்கள்.

தொழிலாளி வர்க்கம், தேசிய ஜன நாயகப் புரட்சியில் பங்கெடுக்க வேண்டும் என்றும் தலைமை ஏற்க வேண்டும் என்றும் கூட்டணிகளை அமைக்க வேண்டும் என்றும் இக்கூட்டணிகளில் விவசாயிகள் மிக மிக நம்பத் தகுந்தவர்கள் என்றும் மாநாடு சுட்டிக் காட்டிற்று. குறைந்த பட்சக் கூலி விகிதங்கள் நிலை நிறுத்துவதும், 8 மணி நேர வேலை நாளைப் புகுத்துவதும், தாய்மார்கள் குழந்தைகள் வேலை நிலைமைகளை அபிவிருத்திச் செய்வதும், தொழிலாளர்கள் காப்பீட்டையும் சமுதாயக் காப்பீட்டையும் அமுல் படுத்துவதும், காண்ட்ராக்ட் உழைப்பு முறையை ஒழிப்பதும், தற்போதைய போராட்டத்தில் தொழிலாளர்களின் உடனடியானப் பொருளாதாரக் கோரிக்கைகளாக இருந்தன என்று அது கூறிற்று. தொழிலாளி வர்க்கத்தினை

மிகப் பரவலாக இருந்த வெகுஜன ஸ்தாபனங்களானத் தொழிற் சங்கங்களில் தொழிலாளர்களைச் சேர்ப்பதற்குச் சகல முயற்சிகளையும் செய்யவேண்டும் என்றும் ஒரு தொழில் அடிப்படையில் அமைக்கப் பட்டதொரு தொழிற் சங்கம் தான் மிகச் சிறப்பான உருவமாக இருக்க முடியும் என்றும் அது பிரகடனம் செய்தது. இறுதியாகத் தங்களுடைய அணிகளுக்கிடையே உலவிக் கொண்டிருந்த எல்லா கருங்காலிகளையும் வெளியேற்றும் படி அது தொழிலாளர்களுக்கு அறைகூவல் விடுத்தது.

காங்கிரசின் சாதனைகள் பின் வருமாறு: முதலாவதாக அது அகிலச் சீனத் தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தை நிறுவி, அதனுடைய அமைப்பு விதிகளை நிறைவேற்றி, அதனுடைய தலைமை தாங்கும் உறுப்பான நிர்வாகக் குழுவையும் தேர்ந்து எடுத்தது. இரண்டாவதாகத் தொழிற் சங்கங்களின் சிகப்பு அகிலத்தில் சேருவதற்கும் அது தீர்மானித்தது. இதனுடைய பொருள் என்னவென்றால், உலகப் புரட்சியை உருப் பெறச் செய்வதற்காகச் சகல நாடுகளில் உள்ள தொழிற்லாளர்களோடு சீனத் தொழிலாளர்கள் கை கோர்க்க ஆரம்பித்தார்கள் என்பதாகும். சீனத் தொழிலாளி வர்க்க வரலாற்றில் அந்த மாநாடு முக்கியமானதொரு இடத்தை வகிக்கிறது.

மாநாட்டுக்குப் பிறகு இருபது நாட்களுக்குள் மே 30 ஆம் தேதிய இயக்கம் வெடித்தது.

ஷாங்காய் நகரத்தில் பல கல்லூரி மாணவர்கள் கைது செய்யப்பட்டதோடு கொலை செய்யவும் பட்டனர். அதோடு, தொழிலாளர்களின் குடும்பங்களுக்குத் தெருக்களில் நன்கொடை வசூலித்துக் கொண்டிருந்தபோது சிலர் கைது செய்யப்பட்டனர். சிலர் சுட்டுக் கொல்லப்பட்ட தொழிலாளி குசெங்-ஹங்னுக்கு மரியாதைச் செல்லுவதற்காக நினைவுச் சின்னக்கூட்டத்திற்குச் செல்லும்வழியில் கைது செய்யப்பட்டனர். ஏகாதிபத்தியவாதிகள் கலப்பு நீதி மன்றத்தில் மே 30-ஆம் தேதி அன்று அவர்களுடைய விசாரணைக்குத் தேதி நிர்ணயித்தார்கள். சீனாவில் தேசியத் தொழில் தடை செய்யும் நோக்குடன், "சர்வதேசக் குடியிருப்பின்" நகர் மன்றத்தால் முன் வைக்கப்பட்டிருந்த ஒடுக்குமுறை சட்டங்களை ஜூன் 2-ஆம் தேதி அன்று அமுலாக்குவதற்கு அவர்கள் மேலும் திட்டமிட்டிருந்தார்கள். இத்தகைய முன் மொழிவுகளில் கப்பல் கட்டணப் பாக்கிகளை அதிகரித்தது, பத்திரிகைகளை ஒழுங்குபடுத்தல், பங்கு மார்க்கெட்டைப் பதிவு செய்தல் ஆகியவையும் அடங்கி இருந்தன. கப்பல் கட்டணப்

பாக்கிகளை அதிகரிப்பது, சீன இறக்குமதி மீதும் ஏற்றுமதி மீதும் மிகக் கடுமையானக் கட்டணங்களைத் திணிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. ''சர்வதேசக் குடியிருப்பின்'' நகர் மன்றத்தில் பங்கு மார்க்கெட்டைப் பதிவு செய்வது என்பது, ''அந்நியச் சலுகை பெற்ற பிரதேசங்களில்'' வாழும் சீனர்களின் ஜனநாயக உரிமைகள் கட்டுப்படுத்துவதையும் சீன முதலாளிகள் மீது சரியான அடி கொடுப்பதை நோக்கமாகவும் கொண்டிருந்தது. பத்திரிகைகளை ஒழுங்குபடுத்துதல், நகர் மன்றத்தின் சகல வெளியீடுகளைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடு மற்றும் எந்த ஒழுங்கையும் மீறுவதற்காக அபராதங்கள் விதிப்பதும் மற்றும் சிறைப்படுத்துவதும், சீன வெளியீட்டாளர்களைக் கட்டுபடுத்தி இருக்கும் என்பதோடு மட்டுமின்றிச் சீன மக்களின் பேச்சுச் சுதந்திரத்தையும், வெளியிடும் சுதந்திரத்தையும் பணித்திருக்கும். ஆகவே, இந்த முன்மொழிவுகள் ஷாங்காய் நகரத்து மக்களிடையே கடும் ஆத்திரத்தைத் தட்டி எழுப்பின.

குசெங்-ஹங்கின் மரணத்திற்குப்பின், ஷாங்காயின் மேற்குப் பகுதியில் 20 ஆயிரம் பஞ்சாலைத் தொழிலாளிகள் உயர்ந்த கூலி கோரி ஒரு வேலை நிறுத்தத்தை நடத்தினார்கள் கதவடைப்பின் மூலம், வேலை நிறுத்தத்தை உடைப்பதற்கு ஜப்பானிய உடமையாளர்கள் முயற்சித்தார்கள். மே 28-ஆம் தேதியன்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில், சகல புரட்சிகரமானச் சக்திகளையும் வென்றெடுக்கும் பொருட்டுத் தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டங்கள் அன்றாடம் வளர்ந்து கொண்டிருக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தோடு இணைக்கப்பட்டத் தெளிவானதொரு அரசியல் போராட்டமாக மாற்றப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ''சர்வதேச குடியிருப்பில்'' ஓர் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை மே 30-ஆம் தேதி நடத்துவதற்கு முடிவு எடுக்கப்பட்டது. அன்று மாலை 3 மணிக்கு 10 ஆயிரம் பேர் நான்கிங் பாதை வழியாக அணிவகுத்துச் சென்றபோது. பிரிட்டிஷ் போலீசார் நிராயுதபாணியான பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து ஸ்தலத்திலேயே சுமார் ஒரு டஜன் பேர்களைக் கொன்றார்கள்; 50-க்கும் அதிகமானவர்களைக் கைதுச் செய்தார்கள்.

நகரம் கொந்தளிப்பில் இருந்தது. எல்லா இடங்களிலும் வெகு ஜனக்கூட்டங்கள் நடத்தப்பட்டுப் பகிரங்கமானச் சொற்

பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. மத்தியக் கமிட்டியின் ஒரு மாநாட்டில் ஷாங்காய் நகரத்தில் அனைத்துத் தொழிலாளிகள், வியாபாரிகள், மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்யும்படியும், வேலை நிறுத்த இயக்கத்தைத் தலைமை தாங்குவதற்கு ஒரு செயல் கமிட்டியை அமைக்கும்படியும் அறைகூவல் விடுத்ததின் மூலம் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தை வளர்ப்பதற்கான ஒரு கொள்கையை நிர்ணயித்தது. கட்சித் தலைமையின் கீழ் அமைப்பு ரீதியாகத் திரட்டப்பட்டிருந்த 2 லட்சம் தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருந்த ஷாங்காய் தொழிலாளர்ச் சம்மேளனம் மே 31-ஆம் தேதி அமைக்கப்பட்டது. அது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் அனு மையமாக இருந்தது. ஜூன் 1-ஆம் தேதி மாபெரும் வேலை நிறுத்த இயக்கத்தின் ஆரம்பத்தை குறித்தது. 2 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தார்கள்; 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் படிப்பை உதறிவிட்டு வெளியேறினார்கள்; மிகப் பெரும்பான்மையான வியாபாரிகள் கடைகளை மூடினார்கள்; ''சர்வதேசக் குடியிருப்பில்'' இருந்த சீனப் போலீசாரும் கூட வேலை நிறுத்தம் செய்தார்கள். பிறகு தொழிலாளிகள், வியாபாரிகள், மாணவர்கள் ஆகியோரின் ஒரு சம்மேளனம் நிறுவப்பட்டது. ஷாங்காய் தொழிற்சங்கச் சம்மேளனம் வியாபாரிகள், சம்மேளனம், அகில சீன மாணவர் சம்மேளனம். ஷாங்காய் மாணவர் சம்மேளனம் ஆகியவற்றைக் கொண்ட ஓர் அமைப்பாக அது இருந்தது. தரகு முதலாளிகளின் அமைப்பான ஷாங்காய் பொது வியாபாரச் சங்கம் மட்டுமே அதில் சேர மறுத்தது. ஜூன் 6 ஆம் தேதி அன்று கட்சி, மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தது. வேண்டுகோளில், ஷாங்காய் சம்பவத்திற்குத் தீர்வு 'சட்டத்தில் அல்ல ஆனால் அரசியலில்தான்' உள்ளது என்று சுட்டிக் காட்டிற்று. போராட்டத்தின் முதன்மைக் குறிக்கோள் ''சீனாவில் சகல ஏகாதிபத்தியச் சலுகைகளையும் ஒழித்துக்கட்டுவதாக'' இருக்க வேண்டும் என்று அது சுட்டிக் காட்டிற்று. ஜூன் 11-ஆம் தேதி அன்று 2 லட்சத்திற்கும் மேற்பட்ட ஷாங்காய் தொழிலாளிகள், வியாபாரிகள், மாணவர்கள் பிரமாண்டமான ஒரு கூட்டத்தை நடத்தினார்கள்; அக்கூட்டத்தில் 17 ஏகாதிபத்திய எதிர்ப்பு கோரிக்கைகள் பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. இவற்றில் பின் வரும் கோரிக்கைகளும் இருந்தன. சீனாவிலிருந்து சகல அந்நியத்

தரைப்படைகளையும் கப்பற்படைகளையும் திரும்பப் பெறுதல், ராஜதந்திரப் பிரதிநிதிகள் வசிக்கும் பிரதேச அதிகார வரம்பை ரத்துச் செய்தல், பேச்சுச் சுதந்திரம், குடியிருப்பில் வாழும் சீனர் களுக்குப் பேச்சுரிமை, பத்திரிக்கை உரிமை, கூட்டம் கூடும் உரிமை, வேலை நிறுத்தங்கள் நடத்தவும் தொழிற் சங்கங்களை அமைக்கவும் தொழிலாளர்களுக்கு உரிமை, "குடியிருப்பில்" உள்ள "நகர் மன்றத்தில்" சீனர்களுக்குப் பிரதிநிதித்துவம், கலப்பு நீதிமன்றத்தை சீனாவில் புத்துயிர் பெறச் செய்தல் முதலியன. மே 30 ஆம் தேதிய ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தில் ஷாங்காய் தொழிலாளர்கள் முன்னணிப் பாத்திரத்தை வகித்தார்கள்.

இந்தப் புரட்சிப் புயலினால் எதிர் நோக்கப்பட்ட சமயத்தில் ஏகாதிபத்தியவாதிகள் சீன மக்களைப் பலாத்காரத்தைக் காட்டி முதலில் பயமுறுத்தினார்கள். அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் ஆகிய நாடுகள் வாங்பூ நதியில் ஏராளமான யுத்தக் கப்பல்களைக் குவித்துத் தங்கள் கடற்படையினரை ஷாங்காயில் இறக்கி னார்கள்; இக்கடற்படையினர் சீன மக்களைத் தெருக்களிலே தாக்க ஆரம்பித்தார்கள். எனினும் மிருகப் பலத்தால் புரட்சியை ஒடுக்க முடியாது என்பதனை உணர்ந்துக்கொண்ட ஏகாதிபத்திய வாதிகள் விஷமத்தனமானச் சூழ்ச்சிகளுக்குத் திரும்பினார்கள். பெரிய தரகு முதலாளிகளோடு கூட்டுச் சேர்ந்து கொண்டு, "குடியிருப்பில்" வரிகொடுப்போர் சங்கத்தில் இயக்குனர் குழுவின் சீனப் பிரதிநிதிகளுக்கு இடங்களை அதிகரிக்க வாக்குறுதி கொடுத்ததினாலும் சீனாவின் கலப்பு நீதி மன்றத்தைப் புத்துயிர் பெறச் செய்வதற்கு வாக்குறுதி கொடுத்ததின்மூலம் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியைப் பிளவு படுத்த முயற்சித்தரர்கள். ஒரு புறத்தில் "நீதித்துறை பரிசீலனை" மற்றும் ஒரு "சுங்க மாநாடு" ஆகிய பிரேரனைகளால் ஷாங்காய் நகரத் தேசிய முதலாளிகளோடு சமரசம் செய்து கொள்வதற்கு அவர்கள் வசப்படுத்த முயற்சி செய்தார்கள். மறுபுறத்தில், கடன்களையும் பணம் செலுத்துவதையும் போக்குவரத்து மற்றும் மின் சப்ளை யும் நிறுத்தப் போவதாகப் பயமுறுத்தினார்கள். இடைக் காலத்தில் "நட்புப் பூர்வமான கலந்தாலோசனையால்" தீர்வு காண்பதற்கான ஒரு பிரேரனையை முன் வைக்கும்படி டைசீடா வோவையும் ஹூஷியையும் ஏகாதிபத்தியவாதிகள் கேட்டுக் கொண்டார்கள். இந்த ஏகாதிபத்தியக் கொள்கையின் விளைவாக ஷாங்காய் நகரத்துத் தேசிய முதலாளிகள் ஊசலாட ஆரம்பித் தார்கள். ஒரு பெருந்தரகு முதலாளியான யூஷியா - சிங் 17

கோரிக்கைகளை திருத்துவதற்கும், தன் செல்வாக்கிலிருந்த கடைகளில் வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெறச் செய்யவும் ஷாங்காய் நகரத் தொழிலாளர்களுக்காக இதர நகரங்களின் மக்கள் வசூலித்துக் கொடுத்த நிவாரண நிதிகளைக் கைவசப் படுத்திக்கொள்ளவும் அத்தொழிலாளிகளை மீண்டும் வேலைக்குச் சேரும்படி நிர்ப்பந்தம் செய்யவும் சந்தர்ப்பத்தைப் பற்றிப் பிடித்தான். பெங்டியன் கும்பலைச் சேர்ந்த யுத்தப் பிரபுக்கள் சிங்டாவோ, டியென்சின், நான்கிங் ஆகிய நகரங்களில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களை ஒடுக்கினார்கள். ஷாங்காய் தொழிலாளர்கள், மாணவர்களின் சம்மேளனத்தையும் மற்றும் ஷாங்காய் தொழிற்சங்க சம்மேளனத்தையும் மூடினார்கள். பல புரட்சித் தலைவர்களைக் கைதும் செய்தார்கள். தொழிலாளி வர்க்கத்தின் அமைப்புக்களைப் பாதுகாக்கவும், ஏற்கனவே பெறப்பட்ட வெற்றிகளைப் பாதுகாக்கவும், தொழிலாளர்களின் பொருளாதாரக் கோரிக்கை சம்பந்தமாகவும் பிரதேசத் தகராறு சம்பந்தமாகவும் திருப்தியான உடன்பாடு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் ஷாங்காய் தொழிற்சங்க சம்மேளனம் பொது வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெறத் தீர்மானித்தது. ஜூலையிலும் ஆகஸ்டிலும் தொழிலாளிகள் படிப்படியாக வேலைக்குத் திரும்பினார்கள்.

ஷாங்காய் நகரத்தில் மே 30 ஆம் தேதி அன்று நடைபெற்ற சீன மக்களின் படுகொலை தேசம் முழுவதையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

ஏகாதிபத்தியவாதிகளுக்கெதிராக ஆத்திரத்தோடு கிளர்ந்து எழச் செய்தது. ஏகாதிபத்திய எதிர்ப்பு அணி வகுப்புகள், ஆர்ப்பாட்டங்கள், தொழிலாளிகள், வியாபாரிகள் மாணவர்களின் வேலை நிறுத்தங்கள் அடுத்தடுத்து பீக்கிங்கிலும் ஹாங்கோவிலும், சாங்ஷாவிலும், கியுகியாங்கிலும் யாங்சோவிலும் மற்றும் இதர இடங்களிலும் வெடித்தன. மாபெரும் காண்டன் - ஹாங்காங் வேலை நிறுத்தம் மிகவும் செல்வாக்கு வாய்ந்த வேலை நிறுத்தமாக இருந்தது.

புகழ்ப் பெற்ற காண்டன் - ஹாங்காங் வேலை நிறுத்தத்திற்கு முன்னோடியாக ஷாங்காய் சம்பவத்திற்கெதிராக தொழிலாளர்களின் எதிர்ப்புக்கள் இருந்தன. ஜூன் 19இல் ஹாங்காங்கில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான சீனத் தொழிலாளர்களின் ஒரு வேலை நிறுத்தம் வெடித்தது. ஷாங்காய் சம்மேளனத் தொழிலாளிகளால் முன் வைக்கப்பட்டிருந்த 17

கோரிக்கைகளுக்கு அவர்கள் ஒருமித்த ஆதரவைக் கொடுத்த தோடு வேலைநிறுத்தக்காரர்கள் தங்களுடைய 6 கோரிக்கை களையும் முன் வைத்தனர். அரசியல் விடுதலை சட்டத்தின் முன் சமத்துவம், பொதுத் தேர்தல்கள், தொழிலாளர்ச் சட்டம் வீட்டு வாடகைக் குறைப்பு, குடியேறியவர்களுக்கு விடுதலை இந்தக் கோரிக்கைகளுக்கு பதில் கொடுப்பதற்குப் பதிலாக ஹாங்காங் அதிகாரிகள் உடனடியாக ராணுவ சட்டத்தைப் பிரகடனம் செய்து, ஹாங்காங் தொழிலாளர்களின் நியாயமான நடவடிக்கையை ஆதரித்து நின்ற குவாங்டுங் புரட்சி அரசு மீது முற்றுகையிட்டது. ஜூன் 23இல் ஏகாதிபத்திய எதிர்ப்பு மே 30 இயக்கத்திற்கு ஆதரவாக காண்டன் நகரத்தில், ஒரு லட்சம் தொழிலாளிகள், மாணவர்கள், ராணுவ வீரர்கள் மற்றும் இதர குடியிருப்போர்களால் ஒரு ஆர்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் ஷாக்கி வீதி வழியாகக் கடந்து சென்ற சமயத்தில் பிரிட்டிஷ் படைகளும், அந்நிய சலுகைப் பெற்றிருந்த பிரதேசமான ஷாமினில் இருந்த பிரஞ்சு படைகளும் அவர்கள் மீது குறுக்கே நின்று சுட்டார்கள். 50 பேர்கள் கொல்லப்பட்டார் கள். மற்றும் நூறுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தார் கள். ஷாக்கி படுகொலைக்குப் பின் உடனடியாக குவாங்டுங் புரட்சி அரசாங்கம் பிரிட்டனோடு இருந்த பொருளாதார உறவினை முறித்துக் கொண்டதாகப் பிரகடனம் செய்து துறைமுகங்களை முற்றுகையிட்டது. ஹாங்காங்கில் சூசாவோ-சென்,[2] டென்சிங்-ஷியா [3] ஆகியோரின் தலைமையின் கீழ் 2 லட்சத்து 50 ஆயிரம் பேர் பங்கு கொண்ட மற்றுமொரு பெரிய வேலை நிறுத்தம் வெடித்தது. இத்தகைய வேலை நிறுத்தக்காரர் களில் 1 லட்சத்து 30 ஆயிரம் பேர் தனித்தனி கோஷ்டியாகக் காண்டனுக்குத் திரும்பினார்கள், அங்குக் காண்டன் தொழி லாளர்களின் ஒத்துழைப்போடும் காண்டன் - ஹாங்காங் வேலை நிறுத்தத் தலைமையின் கீழும் அவர்கள் 2 ஆயிரத்திற்கும் அதிகமானவர்களைக் கொண்ட ஒரு முறையான மறியல் படைப் பிரிவை ஏற்பாடு செய்தார்கள். பிரிட்டிஷ் சரக்குகளையும், ஜப்பானிய சரக்குகளையும் கண்டிப்பாகப் பகிஷ்கரிப்பதை அமுலாக்குவதற்கு இப்படைப் பிரிவை ஏற்பாடு செய்தார்கள்.

காண்டன்—ஹாங்காங் வேலை நிறுத்தக் குழுவிற்கு மேலாக 800 தரதிநிதிகளைக் கொண்ட நடவடிக்கை எடுக்கும் உறுப்பான வேலை நிறுத்தக்காரர்களின் காங்கிரஸ் நிறுவப்பட்டது. அதன் கீழ் ஒரு நிர்வாகக் குழுவும், சட்டக் குழுவும், நீதித்துறைக்

குழுவும், கணக்குப் பரிசீலனைக் குழுவும், நிதி சம்மந்தமானக் குழுவும், சிறைச்சாலைகள், ஆயுதம் ஏந்திய மறியல் படைகள், மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், இன்னபிற இருந்தன. இந்த அமைப்பு முழுவதும், நடைமுறையில் ஓர் அரசுக்கு ஒப்பானதாக இருந்தது.

வேலை நிறுத்தக் குழுவின் தலைமையின் கீழ் காண்டன் தொழிலாளர்கள், சகல குவாங்டுங் துறை முகங்களையும் முற்றுகையிட்டார்கள். மேலும், கிழக்கில் சுவாட்டோவிற்கும் மேற்கில் பாக்ஹாய்க்கும் இடையே இருந்து கடற்துறை முழு வதையும் முற்றுகையிட்டார்கள். இதன் மூலம் ஹாங்காங்கிற் கும், மக்காவோவிற்கும் இடையே இருந்த சகல தொடர்பு களையும் துண்டித்தார்கள்.

இந்த வேலை நிறுத்தம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளுக்கு கடுமையான ஒரு நெருக்கடியைக் கொடுத்தது.

முதலாவதாக, ஹாங்காங்கின் மீது கடுமையான பொருளாதார நஷ்டங்களை உண்டாக்கிற்று.

வேலை நிறுத்தக் கால கட்டத்தில் ஹாங்காங்கின் ஏற்றுமதி, பாதிக்கும் அதிகமாக குறைந்துவிட்டது. பெரும் எண்ணிக்கையி லான கடைகள் மூடப்பட்டன. ஹாங்காங் வங்கிநோட்டுகளை உபயோகிக்க மக்கள் மறுத்து விட்டனர். மேலும், ஹாங்காங் அரசாங்கம் நிதிக்குழப்பத்தில் மூழ்கிவிட்டது. அன்றாட நஷ்டம் 35 லட்சம் ஹாங்காங் டாலர்களை எட்டிப் பிடித்தது.

மறுபுறத்தில், வேலை நிறுத்தம் குவாங்டுங்கின் பொருளாதார சுதந்திரத்தையும் அபிவிருத்தையையும் ஊக்குவித்தது. வேலை நிறுத்தக் குழுவினால், கான்டனுக்கும் ஷாங்காய்க்கும் இடையே கப்பல் போக்குவரத்துத் திறக்கப்பட்ட போது, முன்பு ஹாங் காங்கில் இருந்து நேரடியாக கொள்முதல் செய்துக் கொண் டிருந்த வியாபாரிகள், இப்போது காண்டனுக்கு வந்து தங்களது கொள்முதல்களைச் செய்தார்கள். அதன் விளைவாக காண்டனின் மொத்த வியாபாரம், வேலை நிறுத்தத்திற்கு முந்திய கால கட்டத்தின் மட்டத்திற்கு போனது மட்டுமின்றி, நாள் தோறும் அதிகரித்துக் கொண்டிருந்தது. குவாங்டுங் அரசினால் காகித நோட்டுகள் அதனுடைய மதிப்பை மீண்டும் பெற்றன. அரசு வருமானங்கள் மிகவும் பெருமளவுக்கு அதிகரித்தன.

இரண்டாவதாக, வேலை நிறுத்தம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தி யத்தின் அரசியல் அந்தஸ்தை முழுமையாகப் பறித்துவிட்டது.

இந்த வேலை நிறுத்தம் 1925 ஜூன் முதல் 1926 அக்டோபர் வரை 16 மாதங்கள் நீடித்தன. இவ்வேலை நிறுத்தம், சீனப் புரட்சியின் வரலாற்றில், மகத்தானதொரு நிகழ்ச்சியாக இருந்த தோடு மட்டுமின்றி, உலகம் முழுவதும் நடைபெற்றுள்ள தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களின் வரலாற்றிலேயே இணையற்றதாகவும் இருந்தது.

காண்டன்—ஹாங்காங் வேலை நிறுத்தக்காரர்கள் மற்றும் குவாங்டுங் விவசாயிகளின் ஆதரவோடும் உதவியோடும், குவாங்டுங் புரட்சித்தளம் அதிகமாக கெட்டிப்படுத்தப்பட்டது.

வேலை நிறுத்தம் ஆரம்பமான சமயத்தில், புரட்சி அரசு மிகவும் கஷ்டமான நிலமையில் இருந்தது. அரசினுள்ளே இருந்த இரண்டு யுத்த பிரபுக்களான யாங் ஷி-மின்னும், லியூசென்-ஹூவானும் கவிழ்ப்பு நடவடிக்கைக்காக கோமிங் டாங்கின் வலதுசாரிகளோடு சூழ்ச்சி செய்துக் கொண்டிருந் தார்கள். வெளியே, சென்சியுங்-மிங், டெங்பென்-இன் ஆகிய யுத்த பிரபுக்களின் படைகள் முற்றுகை இட்டுக் கொண்டிருந்தன. புரட்சி அரசை கவிழ்ப்பதற்கான தொடர் முயற்சியில் ஈடுபட் டிருந்தார்கள். ஆனால், தொழிலாளிகள், விவசாயிகள் ஆதரவோடு நெருக்கடி வெற்றிகரமாக சமாளிக்கப்பட்டது.

டாக்டர் சன்யாட்-சென் வடக்கே போயிருந்த சமயத்தில் சென்சியுங்-மிங் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளின் ராணுவ ஆதரவுடனும், டுவான் ஜி-ஜீ தலைமையின் கீழிருந்த பீகிங் அரசின் ராணுவ ஆதரவோடும், ஹியூ சொவ், சாவோவ் சோ, ஸ்வாட்டோ பகுதியை காண்டனுக்கு எதிரான தன்னுடைய நடவடிக்கைத் தளமாக பயன்படுத்திக் கொண்டிருந்தான். ஆகவே, 1925 பிப்ரவரியில், புரட்சிப்படை முதல் கிழக்கத்திய படையெடுப்பைத் துவக்கிற்று. அதனுடைய பிரதான பலம் வாம் போவா ராணுவக் கல்லூரியிலிருந்து வந்த படையினரைக் கொண்டதாக இருந்தது; மொத்தத்தில், சுமார் 3 ஆயிரம் பேரை மட்டுமே கொண்டதாக இருந்தது; ஆனால், அவர்கள் 90 ஆயிரம் பேரைக் கொண்ட சென்னுடைய படைகளையும், அவனது கூட்டாளிகளின் படைகளையும் எதிர் நோக்கினார்கள். வாம்போவா ராணுவக் கல்லூரியில், கட்சி செய்திருந்த அரசியல் பணியின் காரணமாகவும், அக்கல்லூரியில் பயின்ற படைப் பிரிவினரின் போர்த் தந்திர திறமையின் காரணமாகவும், புரட்சிப் படை சென்னின் அதிரடிப் படைகளைத் துரத்தி அடித்து. மார்ச் மாத இறுதியில் சாவோ-சோவையும், ஸ்வாட்டோவையும் கைப் பற்றினார்கள்.

மான குவாங்டுங் மாகாணத்தில் தான் விவசாயி இயக்கம் விஸ்தரிக்க ஆரம்பித்தது. மாகாண விவசாயி மாநாடு ஒன்று, 1925ல் கூட்டப்பட்டது. மற்றொரு மாநாடு 1926ல் கூட்டப் பட்டது. ஊழல் மலிந்த அதிகாரிகளைத் தூக்கி எறிவது பற்றியும், மற்றும் ஸ்தலத்திலுள்ள மிரட்டல் பேர்வழிகளையும் மோசமான கனதனவான்களையும் தூக்கி எறிவது பற்றியும், பாவோநங்[4] முறையை ஒழிப்பது பற்றியும் குத்தகைகளைக் குறைப்பது பற்றியும் நிலச்சுவான் தார்களுக்கு விவசாயிகள் கொடுத்திருந்த முன் பணங்களைத் திரும்பப் பெறுவது பற்றியும், விவசாயிகளின் தற்பாதுகாப்பு படை ஏற்பாடு செய்வது பற்றியும், நிலச்சுவான்தார்களின் பாதுகாப்புப் படைகளை ஒழிப்பது பற்றியும் விவசாயி, தொழிலாளி கூட்டணியை அமைப்பது பற்றியும் மற்றும் பல முக்கிய தீர்மானங்களும் நிறை வேற்றப்பட்டன. இந்தக் கால கட்டத்தில், அத்து மீறிய லெவி களையும் இதர வரிகளையும் ஒழிப்பதிலிருந்து, குத்தகைகளை குறைப்பதிலிருந்து, முன் பணங்களைத் திரும்பப் பெறுவதி லிருந்து" ஸ்தல மிரட்டல்காரர்கள், மோசமான கனதனவான் கூட்டங்கள், நிலச்சுவான்தார்களின் பாதுகாப்பு படைகளை எதிர்த்து போராடுவதில் குவாங்டுங் விவசாயிகள் உண்மையி லேயே முன்னேறியிருந்தார்கள்.

குவாங்டுங் விவசாயிகள் யுத்தப் பிரபுக்களுக்கும் ஏகாதி பத்தியவாதிகளுக்கும் எதிராக நடைபெற்ற போராட்டத்திலும் குதித்தார்கள். டுங்கியாங் இயக்கத்தில் ஹைபெங், லூபெங் ஊகுவா மற்றும் கிராமப் பகுதிகளிலும் இருந்த விவசாயிகள் சென் சியுங்-மிங்கைத் தோற்கடிக்க தேசிய புரட்சிப் படைக்கு உதவி செய்தார்கள். காண்டனைச் சுற்றிலும் வெளிப்புற பிரதேசங்களில் இருந்த விவசாயிகள், யாங் சீ-பின் மற்றும் லியூசென்-ஹீவான் ஆகியோருக்கு எதிராக இராணுவத்தோடு இணைந்து போராடினார்கள். ஹாங்காங்கின் முற்றுகையில், விவசாயிகள் தொழிளாளர்களோடு ஒத்துழைத்தார்கள். இந்த முறையில், காண்டன்-ஹாங்காங் பெரிய வேலை நிறுத்தத்தில், சுறுசுறுப்பான ஆதரவைக் கொடுத்தார்கள்.

அந்த சமயத்தில், விவசாயி இயக்கம் மாபெரும் முன்னேற் றத்தைக்கண்டிருந்த மாகாணங்களில் குவாங்டுங்கும் ஒன்றாகும். தொழிலாளி விவசாயி இயக்கத்தின் அடிப்படையில்தான் குவாங் டுங் புரட்சி அரசாங்கம் நிறுவப்பட்டு பலப்படுத்தப்பட்டது.

ஹுன்னான், ஹுப்பே, கியாங்கி மாகாணங்களில் விவசாய

இயக்கம், வடக்கத்திய படையெடுப்பு[5] நடக்கும் தருவாயில் அபிவிருத்தியடைய ஆரம்பித்தது. ஹூன்னானில், கட்சியின் செல்வாக்கின்கீழ் சுமார் 10 லட்சம் விவசாயிகள் இருந்தார்கள். அவர்களில், 4 லட்சம் பேர்களுக்கும் அதிகமானவர்கள் ஸ்தாபன ரீதியாக திரட்டப்பட்டிருந்தார்கள். ஹூப்பே விவசாய சங்கங்களின் 72,000 உறுப்பினர்கள் இருந்தார்கள். இந்த மாகாணங்களின் விவசாயிகள் பொருளாதார மற்றும் அரசியல் போராட்டங்களைத் துவக்கினார்கள். மற்றும் புரட்சிப் படைக்கு அதனுடைய வடக்கு அணி வகுப்பில், உதவியாளர்களாகவும் வழிகாட்டிகளாகவும் செயல்படுவதற்கு தயாராகிக் கொண்டிருந்தார்கள்.

வடக்கு மாகாணங்களில், ஹோனான், ஷென்ஸி, ஷாண்டுங், ஹோபேய் மற்றும் இதர மாகாணங்களிலும் யுத்தப் பிரபுக்களிடையே நடைபெற்ற உள்நாட்டு யுத்தங்களுக்கெதிராகவும், மிதமிஞ்சிய லெவிகள் மற்றும் பல்வகைப்பட்ட வரிகளுக்கு எதிராகவும், நிலவரியை முன்கூட்டியே கொடுப்பதற்கு எதிராகவும், ஊழல் மலிந்த அதிகாரிகளுக்கு எதிராகவும், விவசாய கலகங்கள் இடைவிடாமல் வெடித்துக் கொண்டிருந்தன. அவர்களது போராட்டங்களில், விவசாயிகள் 'சிவப்பு ஈட்டி சங்கம்' போன்ற இப்படிப்பட்ட புராதன அமைப்புகளையும் விவசாயிகள் பயன்படுத்தினார்கள். ஆனால் இப்படிப்பட்ட அமைப்புகள் அடிக்கடி நிலச்சுவான்தார்கள் அல்லது பணக்கார விவசாயிகளால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு வந்தமையால். அவை அடிக்கடி நிலச்சுவான்தார் வர்க்கத்தின் நலன்களுக்கு பயன்படாமல் இருக்க முடியவில்லை.

சீனக் கம்யூனிஸ்ட்க் கட்சியின் முயற்சிகளின் மூலம் வட சீனாவில் நிறுவப்பட்டிருந்த இப்படிப்பட்ட புராதன விவசாய அமைப்புகள் படிப்படியாக முன்னேறிய அமைப்புகளாக மாற்றியமைக்கப்பட்டன. அதாவது, விவசாய சங்கங்களாக மாற்றப்பட்டன. ஹோனான் மாகாண விவசாய சங்கம் 1926 ஏப்ரலில் நிறுவப்பட்டது. அச்சங்கத்தில் 2 லட்சத்து 70 ஆயிரம் பேர் உறுப்பினர்கள். மேலும், விவசாயிகளின் தற்பாதுகாப்புப் படையில் ஒரு லட்சம் ஆண்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள். யுத்தப் பிரபுக்களின் ஆட்சியின்கீழ், அவர்கள் லெவிகள் மற்றும் வரிகள் கொடுப்பதற்கு எதிராக ஒரு போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினார்கள்.

**4. புதிய ஜனநாயகப் புரட்சியின் அடிப்படைக் கருத்துக் களைப்பற்றி மாசே-துங் கூறியவை. டாய்சி-டாவோவின் பிற்போக்குக் கோட்பாடுகள் புரட்சியின் தலைமையைத் தட்டிப் பறிப்பதற்கு சியாங்காய்-ஷேக்கின் வலதுசாரி களின் சூழ்ச்சி. சென்டு-ஷியு வலதுசாரி சந்தர்ப்பவாதக் கும்பலினால், சியாங்காய்-ஷேக்கிற்கு கொடுக்கப்பட்ட சலுகைகள்.**

சீனப் புரட்சி 1924-லிருந்து 1926ஆம் ஆண்டு ஆரம்பம் வரையிலும், வேகமாக அபிவிருத்தி அடைந்தது. குவாங்டுங்கில் புரட்சித்தளம் பலப்படுத்தப்பட்டதின் விளைவாகவும் நாடு தழுவிய தொழிலாளி வர்க்க இயக்கம், விவசாயி இயக்கம் ஆகிய வற்றியின் எழுச்சியின் விளைவாகவும், நாடு முழுவதிலும் புரட் சிக்கும் எதிர்ப் புரட்சிக்கும் இடையே தீர்மானமானதொரு போராட்டம், முன்னுக்கு வந்தது. புரட்சி முகாமுக்கு உள்ளேயே, புரட்சிக்கும் எதிர்புரட்சிக்கும் இடையே, பாட்டாளி வர்க்கத்திற்கும் பூர்ஷ்வா வர்க்கத்திற்கும் இடையே நடைபெற்ற போராட்டங்கள், மோதலின் ஒரு உச்சக்கட்டத்தை எட்டிப் பிடித்தது.

1926-ல் வடக்கத்திய படையெடுப்பு நடைபெறும் தருணத் தில் நிலைமை இவ்வாறுதான் இருந்தது.

எனினும், நெருக்கடியான காலத்தில் யார் புரட்சியை, வெற்றி நோக்கி தலைமைத் தாங்கிச் செல்லமுடியும் என்ற அடிப்படையான பிரச்சினையின்மீது கட்சி பிளவுபட்டு இருந்தது. இன்னும் அதனை திட்டவட்டமாகச் சொல்லுவதென்றால், புரட்சியின் தலைவனாக யார் இருக்கவேண்டும்—பாட்டாளி வர்க்கமா? அல்லது பூர்ஷ்வா வர்க்கமா? தொழிலாளி வர்க் கத்தின் அடிப்படையான நேச சக்தியாக யார் இருக்கவேண்டும்—விவசாயிகளா அல்லது பூர்ஷ்வாக்களா? இத்தகையப் பிரச்சினை களுக்குப் பல கம்யூனிஸ்டுகளுக்கிடையே இன்னும் சரியாக தீர்வு காணப்பட்டிருக்கவில்லை. சென்டு-ஷியுவினால் தலைமை தாங்கப்பட்ட வலதுசாரி சந்தர்ப்பவாதக் கும்பல், பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சி, பூர்ஷ்வா வர்க்கத்தினால் தலைமைதாங்கப் படவேண்டும் என்றும் அதன் குறிக்கோள் ஒரு பூர்ஷ்வா குடியரசை நிலைநாட்டுவது என்றும் தொழிலாளி வர்க்கத் துடன் ஒன்று சேர்க்கக்கூடிய ஒரே ஜனநாயக சக்தி பூர்ஷ்வா வர்க்கந்தான் என்றும் அது சாதித்தது. பூர்ஷ்வா வர்க்கத்தோடு ஒத்துழைக்க வேண்டுமென்ற கருத்தில், அந்த அளவுக்கு அவர்கள்

மூழ்கிப்போய் இருந்தமையால், மிகப் பரவலான, மிக அடிப்படையான நேசசக்தி—விவசாயிகள் என்பதை அவர்கள் மறுத்துவிட்டார்கள். அதன் விளைவாக, புரட்சிப் போராட்டத்தில் அவர்கள் தங்களைப் பலஹீனமாகவும் கையாலாகாதவர்களாகவும் காட்டிக் கொண்டார்கள். மறுபுறத்தில், சாங்குவாடாவோவினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட "'இடதுசாரி'' சந்தர்ப்பவாதிகள் தொழிலாளி வர்க்க இயக்கத்தை மட்டுமே பார்த்தார்கள்; அவர்களும் விவசாயிகளைப் புறக்கணித்தார்கள். இருவகைப்பட்ட சந்தர்ப்பவாதிகளும் தங்களுடைய சொந்த பலவீனத்தை முழுமையாகத் தெரிந்திருந்தார்கள்; எனினும், சக்தி வாய்ந்ததொரு நேச சக்திக்காக, எங்கே உற்றுநோக்க வேண்டுமென்று அவர்களுக்குத் தெரியவில்லை.

கட்சிக்குள் நிலவிய இத்தகைய இரண்டு தவறானப் போக்குகளை எதிர்த்துப் போராடும் பொருட்டு, தோழர் மாசேதுங் 1926 மார்ச்சில், 'சீன சமுதாயத்தில் வர்க்கங்களைப்பற்றி அலசி ஆராய்தல்' (Analysis of the Classes in Chinese Society) என்ற கட்டுரையை எழுதினார்.

மார்க்சிய-லெனினிய நிலைபாடு, கருதோட்டம், முறை மற்றும் காலனிகளில் தேசியப் புரட்சி நடத்துவது சம்பந்தமான லெனினியத் தத்துவம் ஆகியவற்றின்மீது தன்னை அடிப்படையாக நிறுத்திக்கொண்டு. தோழர் மாசே-துங் புதிய ஜனநாயகப் புரட்சியின், தொழிலாளி விவசாயி கூட்டணியை அடிப்படையாகக் கொண்டு பாட்டாளி வர்க்கத்தினால் தலைமை தாங்கப்படும் பரந்துபட்ட வெகுஜனங்களில் ஒரு புரட்சியின் அடிப்படையான கருத்துக்களை வகுத்தார். இத்தகைய கருத்துக்கள் பின்வரும் இரண்டு காரணங்களால் ஆட்கொள்ளப்பட்டிருந்தன.

முதலாவதாக, உள்நாட்டு நிலைமை சம்பந்தப்பட்ட மட்டில், சீன சமுதாயத்திலிருந்த பல்வேறு வர்க்கங்களின் பொருளாதார அந்தஸ்து பற்றியும் அரசியல் போக்குகளைப் பற்றியும் விஞ்ஞான ரீதியான பகுத்து ஆய்தலை தோழர் மாசே-துங் கொடுத்தார்.

> ... ஏகாதிபத்தியத்தோடு கூட்டணி சேர்ந்துள்ள அனைவரும் — யுத்தப் பிரபுக்கள், அதிகார வர்க்கத்தினர், தரகு முதலாளிகள், பெரும் நிலச்சுவான்தார்கள், அவர்கள் மீது சார்ந்து நிற்கும் புத்திஜீவிகளின் பிற்போக்குப் பகுதியினர் — நம்முடைய எதிரிகள் ஆவர். இயந்திரத் தொழில் பாட்டாளி வர்க்கம் நம் புரட்சியில் தலைமை தாங்கும் சக்தியாகும். அரைப் பாட்டாளி வர்க்கம், குட்டி முதலாளி

வர்க்கம் ஆகியோரில் அனைத்துப் பகுதிகளும் நம்முடைய மிக நெருக்கமான நண்பர்களாவர். ஊசலாடிக் கொண்டிருக்கும் நடுத்தர பூர்ஷ்வா வர்க்கம் (இங்கு தோழர் மாவோ தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தை மனதில் கொண்டுள்ளார்—ஆசிரியர்) சம்பந்தப்பட்ட மட்டில், அதனுடைய வலதுசாரிப் பகுதி நம்முடைய எதிரியாக மாறலாம்; மற்றும் அதனுடைய இடது சாரிப் பகுதி நம்முடைய நண்பனாக மாறலாம்; ஆனால், பின்னால் கூறப்பட்ட இடதுசாரிப் பகுதியினரின்பால் நாம் இடைவிடாமல் கண்காணிப்போடு இருந்து நம்முடைய முன்னணியில் குழப்பத்தை உண்டாக்க அனுமதிக்காதபடி பார்த்துக் கொள்ளவும் வேண்டும். [6]

சீன நிலப்பிரபு மற்றும் தரகு முதலாளி வர்க்கங்கள், சீனாவில் மிகப் பிற்போக்கான, பின்தங்கிய உற்பத்தி உறவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தின; மேலும், சீனாவின் சமுதாய உற்பத்தி சக்திகளின் அபிவிருத்தி கடுமையாக தடைப்படுத்தவும் செய்தன. தங்களுடைய இருத்தலுக்கும் (existence), அபிவிருத்திக்கும் அவர்கள் முற்றிலும் ஏகாதிபத்தியவாதிகளைச் சார்ந்து நின்றார்கள்; மற்றும் உண்மையில் அவர்களுடைய தொங்குசதைகளாவே இருந்தார்கள். ஆகவே, அவர்களது வாழும் முறை, சீனப் புரட்சியின் குறிக்கோள்களோடு முற்றிலும் இணக்கமற்றதாகவே இருந்தது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், அவர்கள் பிற்போக்குவாதிகளாகவும், சீனப் புரட்சியின் எதிரிகளாகவும், தாக்குதல்களின் இலக்குகளாகவும் இருந்தார்கள்

சீனாவில், தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், குட்டி முதலாளி வர்க்கம், தேசிய முதலாளி வர்க்கம் ஆகியவை புரட்சிகர வர்க்கங்களாக இருந்தன. தொழிலாளி வர்க்கத்தின் மாபெரும் பலத்தின் காரணமாகவும், பூர்ஷ்வா வர்க்கத்தின் மிதமிஞ்சிய பலஹீனத்தின் காரணமாகவும், சீனப் புரட்சியின் தலைமையை, இயல்பாகவே தொழிலாளி வர்க்கம் ஏற்க வேண்டி வந்தது.

தொழிலாளி வர்க்கம், சீனாவில் புதிய உற்பத்தி சக்திகளைப் பிரதிநிதித்துவப்படுத்திற்று. மற்றும் நவ சீனத்தில் மிக முற்போக்கான வர்க்கமாகவும் இருந்தது. அது மிகவும் குவிந்து கிடந்தது. மித மிஞ்சிய அளவிற்கு தாழ்வானதொரு பொருளாதார அந்தஸ்த்தையும் பெற்றிருந்தது. அதன் விளைவாக,

புரட்சிப் போராட்டத்தில் மிகப் போர்க்குணமுடையதாக அது தன்னைக் காட்டிக் கொண்டது. பல சமீப காலத்திய வரலாற்று ரீதியாக, முக்கியத்துவம் வாய்ந்த மாலுமிகள், ரயில்வே தொழிலாளிகள், சுரங்கத் தொழிலாளிகள் மற்றும் விசேஷமாக, ஷாங்காய் - ஹாங்காங் தொழிலாளிகளின் வேலை நிறுத்தங்களில், இதன் வலிமை ஏராளமாக காணப்பட்டது. இத்தகைய விவரங்களில் இருந்து, தொழிலாளி வர்க்கம்தான் சீனப்புரட்சியின் தலைவனாக இருக்க வேண்டும் என்று ஆட்சேபிக்க முடியாத முடிவிற்கு, தோழர் மாவோ வந்தார்.

தொழிலாளி வர்க்கத்தின் மிகப் பரவலான, மிக நம்பத் தகுந்த நேச சக்திகள் விவசாயிகளும், குட்டி முதலாளிகளுமாவர். விவசாயிகள், குட்டி முதலாளிகள் ஆகியோரின் பல்வேறு பகுதியினரின் பொருளாதார அந்தஸ்துப் பற்றியும், மேலும் புரட்சியின் பால் அவர் தம் போக்குகளைப் பற்றியும் தோழர் மாசே-துங் ஸ்தூலமானதொரு பகுத்தாய்வினைச் செய்து, அவர்களது புரட்சிகரமான குணங்களின் (qualities) பல்வேறு அளவுகளைச் (degrees) சுட்டிக் காட்டினார். அவர்களில் ஒரு சிறு பகுதியினர் — உடமையாளர் - விவசாயிகள் (owner-peasants), கைத்தொழில் வினைஞர்கள், மற்றும் அரை குறை அறிவு ஜீவிகள் — சாதாரணமான காலங்களில், ஏகாதிபத்திய வாதிகளுக்கும் யுத்தப் பிரபுக்களுக்கும் எதிரான போராட்டத்தில் வெற்றி பெறுவதைப் பற்றி ஊசலாட்டத்துடன் இருக்கலாம். ஆனால், புரட்சி மகத்தான நிலையை அடையும் பொழுது அவர்கள் புரட்சியில் இணைவார்கள். அவர்களில் பெரும் பகுதியினர், அரைக் குத்தகை விவசாயிகள் (semi-tenants)[7] ஏழை விவசாயிகள், சிறு கைத் தொழில் வினைஞர்கள், மற்றும் கடைச் சிப்பந்திகள் எப்பொழுதுமே ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட நிலையில் இருந்து வந்துள்ளார்கள். அதன் விளைவாக அவர்கள் புரட்சிகரமான கருத்துக்களுக்கு மிகவும் எளிதாக உட்படக்கூடிய வர்களாக இருப்பார்கள்; அவர்கள் தயக்கமில்லாமல் புரட்சியில் குதிப்பார்கள். அரைக் குத்தகை விவசாயிகள் (semi-tenants) ஏழை விவசாயிகளோடு ஒன்று சேர்த்தால், அவர்கள் கிராமப்புற மக்கள் தொகையில் அதிகப் பெரும்பான்மையினராக இருந்தார்கள். ''விவசாயி பிரச்சினை பிரதானமாக இவர்களுடைய பிரச்சினைதான்.''[8] ஒரு வர்க்கம் என்ற முறையில், விவசாயிகள் பிரம்மாண்டமான, புரட்சிகரமான உள்ளடக்க ஆற்றல்களைப் (Potentialities) பெற்றிருந்தார்கள். இந்த முறையில், புரட்சியின் பிரதான நேச சக்தி பற்றிய முக்கியமான பிரச்சினையை

வேறு வார்த்தைகளில் சொன்னால், தொழிலாளி - விவசாயி கூட்டணி பற்றிய பிரச்சினையை தோழர் மாசே-துங் விவரமாக எடுத்துக் கூறினார்.

தேசிய பூர்ஷ்வா வர்க்கம், புரட்சியின்பால் அதனுடைய போக்கில் முன் பின் முரண் கொண்டிருந்தது; ஏனெனில், ஒரு புறம் அது ஒரு புரட்சிகரமானதாகவும், மறு புறம் சமரசம் செய்துக் கொண்டுமிருந்தது. இந்த இரண்டு தன்மையும், அதனுடைய சொந்த பொருளாதார அந்தஸ்தினால் தீர்மானிக்கப் பட்டிருந்தது.

சீன தேசிய முதலாளித்துவத்தின் அபிவிருத்தி ஏகாதிபத்தியத்தினாலும், பத்தாம் பசலி நிலப்பிரபுத்துவத்தினாலும் தடை செய்யப்பட்டிருந்தது. தோழர் மாசே-துங்கின் வார்த்தைகளில் கூறுவதென்றால், "அந்நிய மூலதனத்தின் அடிகளினாலும் மற்றும் யுத்தப் பிரபுக்களின் ஒடுக்கு முறையினாலும் கஷ்டப்படும் பொழுது, அது ஒரு புரட்சியின் தேவையை உணர்கிறது; மேலும் ஏகாதிபத்தியத்திற்கும், யுத்த பிரபுக்களுக்கும் எதிரான புரட்சியை விரும்புகிறது."[9] ஆகவே, புரட்சியில் சேருவதற்கு அதற்கு ஒரு சாத்தியப்பாடிருந்தது. ஆகவே, கட்சி அதனோடு ஒன்றுபட வேண்டும். ஆனால் மறுபுறத்தில் ஏதாவதொரு வகையில், அதனுடைய வளர்ச்சி ஏகாதிபத்தியத்தோடும் நிலப்பிரபுத்துவத்தோடும் பிணைக்கப்பட்டிருந்தது; மற்றும் பெரு முதலாளி வர்க்கத்தின் நிலைக்கு மேலே ஏறுவதற்கு அது பலமானதொரு தூண்டுதலையும் எப்போதுமே பெற்றிருந்தது. இவைதான் அதனுடைய புரட்சிகரமான உறுதியில்லாமைக்குக் காரணம். குறிப்பாக, "உள்நாட்டில் பாட்டாளி வர்க்கம் புரட்சியில் போர் குணம் மிக்கதொரு பங்கினை எடுக்கும் போதும், சர்வதேச பாட்டாளி வர்க்கம் வெளிநாடுகளில் இருந்து அதனுடைய சுறுசுறுப்பான ஆதரவை தரும் போதும், ஒரு பெரு முதலாளியின் அந்தஸ்திற்கு ஒரு வர்க்கம் என்ற முறையில் தேசிய பூர்ஷ்வா வர்க்கத்திற்கு இருந்த விருப்பம் உருப்பெறுவதற்கு இருந்த பயமுறுத்தலை உணர்ந்து அது புரட்சியை பற்றிய ஊசலாட்டமாக மாறி விடுகிறது."[10] அது முழுமையான ஒரு புரட்சியைக் கண்டு பயந்திருந்தது. இந்த கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் பொழுது சமரசம் மற்றும் ஊசலாட்டம் ஆகியவற்றில் இருந்து படுமோசமாக புரட்சியை உதறித் தள்ளி விட்டு எதிர் புரட்சிக்கும்கூட போகலாம். ஆகவே கட்சி உயர்ந்த கண்காணிப்புடன் இருக்க வேண்டும். அதனுடைய சமரச குணாதியசத்திற்கு எதிராக

கட்சி இடைவிடாமல் உறுதியான, ஆனால் அத்துமீறி போய் விடாத போராட்டத்தில் ஈடுபட வேண்டும்.

தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தில் இந்த இரட்டைத்தன்மை 1911 ஆம் ஆண்டில் நடைபெற்ற புரட்சியில் இருந்து, 1925ம் ஆண்டு மே 30 ஆம் நாள் நடைபெற்ற இயக்கம் வரையிலும் நிகழ்ந்த சம் பவங்களின் போக்கை தெளிவாகப் பார்க்க முடிந்தது. 1925 ஆம் ஆண்டில், "ஏகாதிபத்தியத்தை வீழ்த்துவதற்கு உங்கள் இடது முஷ்டியை உயர்த்துங்கள்; கம்யூனிஸ்ட் கட்சியை வீழ்த்து வதற்கு உங்கள் வலது முஷ்டியை உயர்த்துங்கள்" என்று வலது, இடது பேசி கூச்சலிட்டவர்கள் சிலரும் உண்டு.

தோழர் மாசே-துங் தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தின் தவிர்க்க முடியாத துருவ மயமாதலை முன் கூட்டியே பார்த்தார்; அதன் ஒரு பகுதி, புரட்சியில் சேர்ந்து தொழிலாளி வர்க்கத் தலைமையை அங்கீகரித்து இடது பக்கம் திரும்பும் என்றும், மற்ற பகுதி எதிர் புரட்சியில் சேர்ந்து, தரகு முதலாளி வர்க்கத்தினை பின்பற்றி வலது பக்கமாக திரும்பும் என்றும் தீர்க்க தரிசனமாக கூறினார். இந்த விஞ்ஞான ரீதியான முன்னறிவிப்பு 1927ஆம் வருடத்திய நிகழ்ச்சிகளால் முற்றிலும் நிரூபிக்கப்பட்டன.

இரண்டாவதாக, சர்வ தேச நிலமை சம்பந்தமாக அக்டோ பர் சோஷலிச புரட்சிக்குப் பிறகு, உலகம் இரண்டு பெரிய சக்தி களாக—சோஷலிச சக்தி, ஏகாதிபத்திய சக்தி என—பிரிந்திருந்தது என்று தோழர் மாசே-துங் சுட்டிக்காட்டினார். சீனா, அவற்றில் ஒன்றோடு சேர்ந்து மற்றொரு சக்தியை எதிர்க்க வேண்டும். மேலும் சோஷலிச சக்தியோடு சேர்வதினால் மட்டுமே, லெனினிய பதாகையின் கீழ் ஏகாதிபத்திய எதிர்ப்பு முகாமின் ஒரு பகுதியாக ஆவதினால் மட்டுமே சீனப் புரட்சி வெற்றி பெற முடியும். ஏனெனில் அபினி யுத்தத்திற்குப் பிறகு நடைபெற்ற எல்லா சீனப் புரட்சி இயக்கங்களும் ஏகாதிபத்தியவாதிகளால் நசுக்கப்பட்டு இருந்தன. அதே சமயத்தில், அதனுடைய இருத்தலின் மூலமும் சாதனைகள் மூலமும் ஏகாதிபத்திய எதிர்ப்புரட்சி சக்திகளின் மீது ஒரு தடையை வைத்ததோடு மட்டுமின்றி, அதனுடைய அனுபவத்தினாலும் எப்பொழுதும் வளர்ந்து கொண்டிருந்த பலத்தினாலும் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தை ஊக்குவித்து வந்தது.

இந்த முறையில், சர்வதேச மற்றும் உள்நாட்டு நிலைமையின் வெளிச்சத்தில், புரட்சி பற்றிய பின்வரும் அடிப்படையான பாதை முன் வைக்கப்பட்டது. சீனப் புரட்சி பாட்டாளி வர்க்க

சோஷலிசப் புரட்சியின் பகுதியாகும். அது தொழிலாளி வர்க்கத்தினால் தலைமை தாங்கப்பட வேண்டும். அது விவசாயி களையும் குட்டி முதலாளிகளையும் அதனுடைய மிக நம்பக கூட்டாளிகளாக கருத வேண்டும்; மற்றும் புரட்சிகரமான தேசிய பூர்ஷ்வாக்களோடு ஒன்றுபடவும் வேண்டும். அதனுடைய குறிக்கோள் ஏகாதிபத்தியவாதிகள், நிலப்பிரபுக்கள், தரகு முதலாளிகள் ஆகியோருக்கு எதிராக போராடுவதும் ஜனநாயக புரட்சியின் முழுமையான வெற்றிக்கு முயற்சிப்பதும் சோஷ லிசத்தை நோக்கி முன்னேறுவதற்கான பாதையை வகுப்பதும் ஆகும்.

இந்தக் கட்டுரை மிக முதன்மையான மிகத் தெளிவான மார்க்சிய-லெனினிய ஆவணமாகும். சீனப் புரட்சியின் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகளை, அது ஸ்தூலமாகவும், விஞ்ஞான ரீதியாகவும் அலசி ஆராய்ந்து விவாதித்து மற்றும் அடுத்தடுத்து, நடைபெற்ற கட்சியின் மாநாடுகளால் தீர்க்கப்படாமல் விட்டிருந்த அல்லது போதுமான அளவிற்கு தீர்க்கப்படாமலிருந்த எல்லா அடிப்படை பிரச்சினைகளும், புரட்சியில் பாட்டாளி வர்க்கத் தலைமை பற்றிய பிரச்சினை,விவசாய பிரச்சினை ஆகியவற்றிற்கு அது சரியான முறையில் தீர்வு கண்டது, அப்போது கட்சியில் நிலவிக் கொண்டிருந்த இடதுசாரி மற்றும் வலதுசாரி சப்தர்ப்ப வாத கருத்தோட்டங்களை அது உறுதியாக மறுத்துரைத்தது.

ஜனநாயகப் புரட்சி கால கட்டத்தில் கட்சியின் பொதுவான பாதையையும், பிரதான கடமையையும் ஊடுருவிப் பார்க்கக் கூடியதொரு முறையில் விளக்கிக் கூறிற்று.

இக்கட்டுரை கோமிங்டாங் வலதுசாரிகளின் பிற்போக்கு கொள்கைகளை மறுத்துரைப்பதையும் நோக்கமாகக் கொண் டிருந்தது. இந்த வலதுசாரிகளின் பிரதான குரலாக டாய்சீ-டாவோ இருந்தார். அவரது தத்துவங்கள், "தேசிய புரட்சியும், கோமிண்டாங்கும்" (The National Revolution and the Kuomingtang), "சன்யாட்சென்னின் போதனைகளின் தத்துவஞான அடிப் படை" (The Philosophical Foundation of the Doctrines of Sun Yat - sen) என்ற இப்படிப்பட்ட பிரசுரங்களில் பொதிந்துக் கிடந்தன. இக்கம்யூனிஸ்ட் எதிர்ப்புக் குரல், பிற்போக்கு கோமிங் டாங்கின் வலது சாரிகளின் "தத்துவார்த்தவாதியாக" பார்க்கப் பட்டார்.

டாய்சீ - டாவோவின் தத்துவங்களின் பிரதான கருத்துக்கள் மற்றும் பிற்போக்கு உள்ளடக்கங்கள் என்ன?

முதலாவதாக, அவர் வர்க்க போராட்டத்தைப் பலமாக எதிர்த்தார்; மற்றும் சீன முதலாளி வர்க்கத்திற்கெதிராக சீனத் தொழிலாளி வர்க்கத்தினால் நடத்தப்பட்ட போராட்டத்தையும் கண்டனம் செய்தார். தொழிலாளி வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாப்பதற்கு, அவருடைய வாதம் அப்படித்தான் இருந்தது. போராட்டத்திற்கு செல்ல வேண்டிய அவசியமில்லை. முதலாளி களை நகரச் செய்து, தொழிலாளர்களின் நலன்களை, அவர்களை மதிக்க செய்வதற்கு அன்பும், நேச பூர்வமான ஒரு இதயமும் போதுமானதாகும். இது சாராம்சத்தில் தொழிலாளிகளையும் விவசாயிகளையும் அவர்களது போராட்டத்தை நிறுத்தும்படி கேட்பதாகும். மற்றும் முதலாளிகளின் 'தர்மத்தினை'ச் சார்ந்து நின்று கீழ்த்தர சிப்பந்திகளைப் போல் வாழ்வதுமாகும்.

இரண்டாவதாக, 'அரசு' மற்றும் 'தேசம்' மிக உயர்வான அரசியல் அளவு கோலாகும் என்று டாய்சீ-டாவோ சாதித்தார். ஆனால், அவருடைய 'அரசு' மற்றும் 'தேசத்தில்' பூர்ஷ்வா வர்க்கம், எஜமானர்களாக இருந்தார்கள். தொழிலாளிகளும் விவசாயிகளும், கீழ்படிவோர் மற்றும் பிரஜைகள் என்ற பாத்திரத்தை மட்டுமே வகிக்க முடியும். இத்தகைய இரண்டு பதங்களை உயர்த்தி ஒலிப்பிதால் தொழிலாளி, விவசாயி, வெகு ஜனங்களது நியாயமான கோரிக்கைகளை விட்டுவிடும்படி செய்து, அவர்களை முட்டாள்களாக்குவதற்கு அவர் உண்மையிலேயே முயற்சித்துக் கொண்டிருந்தார். அவரது இறுதி லட்சியம் ஒரு பூர்ஷ்வா சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதேயாகும்.

மூன்றாவதாக, கோமிங்டாங் கட்சியினுள்ளேயிருந்த கம்யூனிஸ்ட்கள், கம்யூனிசத்தை நம்புவதற்குப் பதிலாக, மக்களின் மூன்று கோட்பாடுகளில் நம்பிக்கை வைக்க வேண்டும் என்றும் மூன்று கோட்பாடுகள்தான் ஒரே சரியான அரசியல் தத்துவங்கள் என்று அங்கீகரிக்க வேண்டும் என்றும், நாட்டைக் காப்பாற்றும் ஒரே அரசியல் கட்சி கோமிங்டாங் கட்சிதான் என்று அங்கீகரிக்க வேண்டும் என்றும் டாய்சீ-டாவோ கருதினார். ஆகவே, கம்யூனிஸ்ட்கள் கோமிங்டாங் கட்சியில் சேர்வதை அவர் எதிர்த் தார். ஆகையால் அவர்கள் விலக வேண்டும் அல்லது விலக்கப் படவேண்டும் என்று அவர் கோரினார். பாட்டாளி வர்க்கத் தின் முன்னணிப் படையை—கம்யூனிஸ்ட் கட்சியைக் — கட்டுப் படுத்துவதும், சாத்தியமானால் சித்தாந்த ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், ஸ்தாபன ரீதியாகவும் ஒழித்து கட்டுவதும் அவரது முயற்சியாக இருந்தது.

வர்க்கப் போராட்டத்தைக் கண்டனம் செய்வதில் டாய்சீ-டாவோ சலிப்படையாமலிருந்த போதிலும், அவர் தன்னுடைய தத்துவங்களாலும் நடவடிக்கைகளாலும் யதார்த்தமான நடைமுறையாலும் அதனை நிறைவேற்றிக் கொண்டுதானிருந்தார். ஒரே வித்தியாசம் என்னவென்றால், அவரது வர்க்கப் போராட்டம் பாட்டாளி வர்க்கத்தை அடக்கும் பூர்ஷ்வா ஒடுக்குமுறை உருவத்தை எடுத்தது என்பதுதான். அவர், "என்ன விலை கொடுத்தும் ஒரு சர்வாதிகாரத்தை" ஏற்படுத்த வேண்டும் என கூச்சலிட்டார். இது நேரடியான ஒரு போர்க் கூச்சலாக இருந்தது; எதிர்புரட்சிகரமானதொரு கவிழ்ப்பு நடவடிக்கை தொடங்குவதற்கு கோமிங்டாங் வலதுசாரிகளை தூண்டுவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

1925ம் ஆண்டின் பின் பாதியில் இருந்து, டாய்சீ-டாவோவின் தத்துவங்களை போதிப்பதற்காக ஒரு பிற்போக்கு இயக்கம் கோமிங்டாங் கட்சிக்குள் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இயக்கம் உச்சநிலை அடைந்து, நவம்பரில் மேற்கத்தியக் குன்றுகள் கும்பலைத் தொடங்குவதில் கொண்டுபோய் முடிந்தது. இக்கும்பலுக்கு அப்படி பெயர் சூட்ட காரணம் என்னவென்றால், கோமிங்டாங் கட்சியின் உள்ளேயிருந்த பிற்போக்குவாதியினரின் ஒரு பகுதியினர், பீகிங் அருகிலுள்ள மேற்கத்திய குன்றுகளில் உள்ள 'பையுன்' கோவிலில் டாக்டர் சன்யாட் - சென்னின் சவப் பெட்டிக்கு முன்பு, ஒரு கூட்டத்தை நடத்தி, சோவியத் யூனியனையும் கம்யூனிஸ்ட் கட்சியையும் கடுமையாகத் தாக்கினார்கள் என்பதினால்தான். பின்னர் அவர்கள் ஒரு இரண்டாவது கோமிங்டாங்கையும், ஷாங்காய் நகரத்தில் ஏற்பாடு செய்தார்கள். எதிர் புரட்சி நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு பீகிங்கிலும் மற்றுமித்ர இடங்களிலும் அமைப்புகளை நிறுவினார்கள்.

டாய்சீ - டாவோவின் தத்துவங்களின் செல்வாக்கின் கீழ், மற்றொரு சோவியத் எதிர்ப்பு, கம்யூனிஸ்ட் எதிர்ப்பு பிற்போக்கு ஸ்தாபனம் ஒன்று "டாக்டர் சன்யாட் சென்னின் போதனைக் கல்விக் கழகம்" (Society for Study of Sun Yat-sen's Doctrines) என்ற பெயரில் காண்டனில் அமைக்கப் பட்டது.

1926 ஜனவரியில் கோமிங்டாங் கட்சியினுள் புரட்சிக்கும் பிற்போக்கிற்கிற்குமிடையே போராட்டம் கூர்மையாகிக் கொண்டிருந்த போது அதனுடைய இரண்டாவது தேசிய மாநாட்டை காண்டனில் கூட்டிற்று. இந்த மாநாட்டில் கம்யூனிஸ்ட்களும்

இடதுசாரி கோமிங்டாங் உறுப்பினர்களும் ஆதிக்கம் வகித்தார்கள். சன்யாட் - சென்னின் உயிலையும் அவரது மூன்று முக்கியமான கோட்பாடுகளையும் உறுதியாக நிறைவேற்றுவது, பிற்போக்கு நடவடிக்கைகளுக்காக வலது சாரிகளைக் கண்டிப்பது மேற்கத்தியக் குன்றுகள் கும்பலின் தலைவர்களுக்கெதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது ஆகியவைப் பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. ஆனால், இந்த மாநாட்டின் வேலைகளுக்கு வழிகாட்டுவதில் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் இருந்தவர்கள் பல கடுமையான தவறுகளைச் செய்தார்கள். கோமிங்டாங் கட்சியில் இருந்த வலதுசாரி தலைவர்களை எதிர்த்துப் போராடி அவர்களை விலக்க வேண்டும் என்று சில தோழர்கள் கூறிய சரியான கருத்தோட்டத்தை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக, சில சந்தர்ப்பவாதிகள் கோட்பாடற்ற சமரசங்களையும் சலுகைகளையும் செய்தார்கள். புரட்சிவாதிகளால் குவாங்டுங்கிலிருந்து விரட்டியடிக்கப் பட்டிருந்த டாய்சீ - டாவோ, சன்-போ மற்றும் இதர வலது சாரிகளையும் மீண்டும் ஷாங்காயிலிருந்து மாநாட்டில் கலந்து கொள்ளும்படி அவர்கள் அழைத்தார்கள். அவர்களை கோமிங்டாங் கட்சியின் மத்திய குழுவிற்கு தேர்ந்தெடுக்கவும் செய்தார்கள். மற்றும், வலது சாரிகளான ஊசீ-ஹியு, லீ ஹூ-செங் ஆகியோரை மேற் பார்வை குழுவின் உறுப்பினராகவும் தேர்ந்தெடுத்தார்கள். இத்தேர்தல்களின் விளைவாக, மத்திய கமிட்டியில் இருந்த 36 பேரில் 7 பேர் மட்டுமே கம்யூனிஸ்ட்கள் மற்றும் 14 பேர் கோமிங்டாங் இடதுசாரியை சேர்ந்தவர்கள்; அதே சமயத்தில், 15 பேர் வலது சாரிகளாகவோ அல்லது நடுநிலைப் பேர்வழிகளாகவோ இருந்தார்கள். மேற் பார்வை குழுவின் வலதுசாரிகள் பெரும்பான்மை பெற்றிருந்தார்கள். கோமின்டாங் கட்சியில் தங்களுடைய அதிகார பூர்வமான பதவிகளைப் பயன்படுத்தி வலதுசாரிகள் இந்த முறையில் பிற்போக்கு நடவடிக்கைளை நடத்தவதற்கு முடிந்தது. ஆனால் சியாங்காய்-ஷேக்கை மத்திய கமிட்டியின் ஓர் உறுப்பினராக தேர்வு செய்தது· தவறின் சிகரமாக அமைந்தது. இந்த முறையில் அவருடைய அந்தஸ்து புரட்சி அணிகளிடையே உயர்த்தப் பட்டது.

சியாங்காய்-ஷேக் புரட்சி முகாமில் ஒரு வீர செயல்வாதியாகவும், தன் முன்னேற்றத்தில் நாட்டமுடையவராகவும் இருந்தார். 1911ம் ஆண்டு நடைபெற்ற புரட்சி தோற்ற சமயத்தில் அவர் ஷாங்காய் பங்கு மார்க்கெட்டில் ஒரு புரோகராக இருந்தார். சோவியத் யூனியனோடு கூட்டாளியாக இருக்கும் கொள்கையை

சன்யாட்-சென் பின்பற்றிய போது, சியாங் அவனுடைய சேவைகளை அது அவனுக்கு லாபகரமானதொரு வேலையாக இருக்குமென்று கருதி அர்ப்பணித்தான். அவன் சோவியத் யூனியனுக்கு ஒரு முறை விஜயம் செய்தான். முழுமையான புரட்சிகரமான உற்சாகத்தோடு காணப்பட்டவனைப் போல் அவன் திரும்பினான். அவனை ஒரு புரட்சிவாதி என்று தவறாக நிர்ணயித்து, சன்யாட் - சென் அவனை வாம்போவா ராணுவக் கல்லூரியில் தளபதியாக நியமித்தார். இந்த முக்கியமான பதவியை பெற்ற பிறகு, சியாங்காய்-ஷேக் அவனுடைய இரட்டை விளையாட்டை தொடர்ந்து நடத்தினான்; புரட்சி லட்சியத்திற்கு உதட்டளவில் அதிகமாக சேவை செய்தான். எனினும் உண்மையில் புரட்சியின் தலைமையைத் தட்டிப்பறிப்பதற்கும் நிகழ்ச்சிப் போக்கில் அதை காட்டிக் கொடுப்பதற்கும் அவன் தயாரிப்புகளைச் செய்து வந்தன.

கோமிங்டாங் கட்சியின் மத்தியக் கமிட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு சீக்கிரத்திலேயே, தேசியப் புரட்சிப் படையின் பொது மேற் பார்வையாளராக அவன் நியமிக்கப்பட்டான். அப்பொழுதிலிருந்து, அவனைத் தங்களது சக்தி வாய்ந்த ஒரு அரசியல் ஏஜெண்டாக கருதிய எல்லா ஏகாதிபத்தியவாதிகளாலும், பெரு முதலாளிகளாலும் அவன் விரும்பப்பட்டான். இந்த முறையில், தைரிய மூட்டப்பட்ட அவன், புரட்சியின் தலைமையை தன் கைவசப்படுத்தும் பொருட்டு, ஒரு சம்பவத்தை பொய்யாகச் சிருஷ்டிப்பதற்கு தயார் செய்தான்.

1926 மார்ச் மாதத்தில், ''சன்யாட்-சென்னின் போதனைக் கல்விக் கழகத்தின்'' தலைவர்களின் உதவியோடு, சியாங் ''சுங்ஷான் கப்பல் சம்பவத்தை'' திட்டமிட்டான்; இச்சம்பவம் கம்யூனிஸ்ட்களின் மீது அவனது தாக்குதலின் ஆரம்பத்தைக் குறித்தது.

மார்ச் 18ல், சியாங்காய்-ஷேக் வாம்போவா ராணுவக் கல்லூரியின் காண்டன் அலுவலகத்தின் பெயரில், அப்பொழுது கடற்படை கழகத்தின் தற்காலிக இயக்குனராகப் பணியாற்றிக் கொண்டிருந்த லீசீ-லங்கிற்கு சில வேலையின் நிமித்தம், சுங்ஷான் கப்பலை, வாம்போவா துறைமுகத்திற்கு அனுப்பும்படி ஒரு உத்திரவினை அனுப்புவதற்கு தன்னைப் பின்பற்றுபவர்களோடு சேர்ந்து ஒரு சதி செய்தான். கப்பல் வாம்போவாவைச் சென்று அடைந்த உடனேயே, அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு கம்யூனிஸ்ட்கள் ஒரு கலகத்தை ஆரம்பிக்கப் போகிறார்கள் என்ற

வதந்திகளைச் சதிக்காரர்கள் பரப்பினார்கள். ஆகவே இருபதாம் தேதி காலையில், ஒரு கம்யூனிஸ்ட் கலகம் மூண்டு கொண்டிருந்தது என்று கூறிக் கொண்டு, சியாங்காய்-ஷேக் அவனது ஆயுதப் படைகளுக்கு அறை கூவல் விடுத்து இராணுவ சட்டத்தைப் பிரகடனம் செய்து, காண்டனைச் சுற்றிலும் காண்டானிலும் எல்லாச் செய்திப் போக்குவரத்துகளையும துண்டித்து, காண்டன்-ஷாங்காய் வேலை நிறுத்தக் குழுவைச் சுற்றி வளைத்து, சோவியத் ஆலோசகர்களின் அலுவலகத்தையும் தங்குமிடங்களையும் சுற்றி வளைத்தான். லிசீ-லங் உள்பட 50க்கும் மேற்பட்ட கம்யூனிஸ்ட்கள் கைது செய்யப்பட்டார்கள்; மேலும், வாம்போவா ராணுவக் கல்லூரியிலும் மற்றும் தோழர் சூ என்-லாய் அவர்களால் தலைமை தாங்கப்பட்ட தேசிய புரட்சிப் படையின் முதல் படையிலும் இருந்த எல்லாக் கம்யூனிஸ்ட் உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டார்கள். பின்னர், முதல் படையிலிருந்து வாபஸ் வாங்கும்படி அவன் கம்யூனிஸ்ட்களை நிர்பந்தித்தான்; இந்த முறையில் அவன் அப்படையின் தலைமையைக் கைப்பற்றினான்.

1926 மே, 15இல் நடைபெற்ற கோமிங்டாங் கட்சியின் மத்தியக் கமிட்டியின் ஒரு கூட்டத்தில் சியாங்காய்-ஷேக், ‘‘கட்சி விவகாரங்களை புணரமைப்பதற்கான மசோதா’’ ஒன்றை பிரேரேபித்தான்; இம்மசோதா கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. அம்மசோதாவின் பிரதான அம்சங்கள் வருமாறு: கம்யூனிஸ்டுகள் கோமிங்டாங் கட்சியின் உயர்மட்ட ஸ்தாபனங்களில் நிர்வாக பதவிகளில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேற்பட்ட ஸ்தாபனங்களில் இருக்கக்கூடாது; எந்த கம்யூனிஸ்டும் மத்திய இலாக்காகளில் இயக்குனராக நியமிக்கப்படக் கூடாது; கோமிங்டாங் உறுப்பினர் எவரும் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்வதற்கு அனுமதிக்கப்படக்கூடாது; தற்சமயத்தில் கோமிங்டாங் கட்சியில் உறுப்பினராக இருக்கும் கம்யூனிஸ்டுகளின் பட்டியல் கோமிங்டாங் கட்சியின் தலைவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும், இந்த மசோதாவின் உண்மையான முக்கியத்துவம், கோமின்டாங் கட்சியின் தலைமையைக் கைப்பற்றுவதற்கு சியாங்காய்-ஷேக் கும்பலின் சூழ்ச்சியில் அடங்கியிருந்தது. அந்தக் கூட்டத்திற்குப் பிறகு, கோமின்டாங் கட்சியின் மத்தியக் கமிட்டியின் சகல அதிகாரங்களையும் தன் சொந்தக் கரங்களிலே குவிப்பதற்கு சியாங் ஆரம்பித்தான்.

சியாங்காய்-ஷேக்கின் இத்தகைய சூழ்ச்சிகள் சென்டு-ஷியுவின் வலதுசாரி சந்தர்ப்பவாதத்தின் காரணமாக சாத்தியமாக இருந்தது; இந்த வலது சாரி சந்தர்ப்பவாதம் சீனக்கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமை உறுப்புகளில் ஆதிக்கம் வகித்து வந்தது, சுங்ஷாங் கப்பல் சம்பவத்திற்குப் பிறகு, தோழர் மாசே-துங்கும் மற்றவர்களும் சியாங்காய்-ஷேக்கின் விஷமத்தனமான நடவடிக்கைகளுக்கு எதிராக ஒரு எதிர்த்தாக்குதலை தொடுத்து, அவனுடைய சகல பிற்போக்கு சூழ்ச்சிகளுக்கும் எதிராக முன்னேறித் தாக்குதல் ஒன்றை நடத்துவதை ஆதரித்தார்கள், இப்படிப்பட்டதொரு முன்னேறித் தாக்குதலின் வெற்றி, சாத்தியப் பாட்டின் வரம்பிற்குள் நன்றாகவே இருந்தது. ஏனெனில், அந்தச் சமயத்தில், சியாங் சற்றுத் தனிமைப்பட்டதொரு நிலையில் இருந்தான்; குவாங்டுங்கில் தேசிய புரட்சிப் படையில் ஒரு சிறு பகுதி மட்டுமே அவன் தலைமையில் இருந்தது; மற்றும் சகல வெகுஜன இயக்கங்களும் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கின்கீழ் இருந்து கொண்டிருந்தன. கட்சி உறுதியானதொரு கொள்கையை கையாண்டிருந்தால், சியாங்கின் கம்யூனிஸ்ட் எதிர்ப்புச்சூழ்ச்சிகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டிருந்திருக்கும். எனினும், சென்டு-ஷியு சந்தர்ப்பவாதிகள் அப்படிச் செய்ய மறுத்தார்கள்; போராட்டத்தை முழுமையாகத் தகர்க்குமளவிற்கு ''ஒத்துழைப்பு'' இருக்கவேண்டுமென்று முடிவற்ற முறையில் அவர்கள் வலியுறுத்தி வந்தார்கள். புரட்சி தாழ்வானதொருவேகத்தை அடைந்துள்ளதென்றும், கம்யூனிஸ்டு கட்சியின் சக்திகளும், கோமிங்டாங்கின் இடதுசாரி சக்திகளும் சியாங்காய்-ஷேக்கின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்கும் போதுமான அளவிற்குப் பலமாக இல்லையென்று அவர்கள் கூறினார்கள். மறுபுறத்தில், சியாங் சக்தி மிக்கதொரு படையினைப் பெற்றிருந்ததோடு மட்டுமின்றி, பூர்ஷ்வா வர்க்கம் முழுவதும் அவனுக்குப் பின்னால் இருந்தார்கள் என்றும் அவர்கள் வாதித்தார்கள்; ஆகவே பூர்ஷ்வா வர்க்கத்தை ஐக்கிய முன்னணிக்குள் வைத்திருக்கும் பொருட்டு கட்சி சலுகைகளை வழங்க வேண்டும் என்றும் அவர்கள் வாதிட்டார்கள்.

''கப்பல் சுங்ஷாங் சம்பவத்திற்குப்'' பிறகு, சீனாவில் தேசிய புரட்சி இயக்கத்தின் ''தூணாக'' சியாங் இருப்பதாகவும், மற்றும் சியாங்கை எதிர்த்தவர்கள் ஏகாதிபத்திய 'கருவிகளாக' இருப்பதாகவும் சென்டு-ஷியு தவறாகக் கருதினர். ''ஒற்றுமையின்'' நலனை முன்னிட்டு, சென்டு-ஷியு சந்தர்ப்பவாதிகள் முதுகில் கத்தியால் குத்தப்பட்ட பிறகும்கூட, திருப்பித் தாக்கத்

துணியவில்லை; அப்படிச் செய்வதற்கு மிகமிகச் சிறிதளவேனும் வெளிப்படையாக அந்த எண்ணத்தைக் கொண்டிருக்கவும் இல்லை. ஜூன் 4ஆம் தேதியன்று சென் ஒரு பகிரங்கக் கடிதத்தைக்கூட சியாங்கிற்கு எழுதினார். அக்கடிதத்தில் சியாங்கின் குற்றங்களை ஆதரித்து எழுதினார். சென்னுடைய சொந்த வார்த்தையில் கூறுவதென்றால் ''வாம்போவா ராணுவக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து மார்ச் 20ஆம் தேதி வரையிலும், எதிர்ப்புரட்சிகரமானது என்று கருதப்படக்கூடிய எந்தக் காரியத்தையும் சியாங் ஒருபோதும் செய்ததில்லை என்பதை விவரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.'' வாழ்க்கை வண்டியை ஓட்டுபவரும் வீரச்செயல்வாதியுமான சியாங்காய் - ஷேக்கை ஒரு புரட்சிவாதியாக சென்டு-ஷியு பார்த்தமையால், சியாங்கிற்கு எதிரான எந்த எதிர்ப்பினையும் ''எதிர்ப் புரட்சிகரமானது'' என்று கருதும் அளவிற்கு அவர் சென்றது ஆச்சரியமானதல்ல.

சமரசம் மற்றும் சலுகை வழங்கும் இந்தக் கொள்கை, சியாங்கினுடைய எதிர்ப்புரட்சிகரமான பேராசையை மேலும் ஊக்குவித்தது.

ஆனால், தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் பலத்தை பயன்படுத்தி தங்களுக்கு மேலும் மேலும் மிக அதிகமான இலாபத்தைத் தேடிக்கொள்வது சியாங்காய்-ஷேக் பிற்போக்குக் கும்பலின் திட்டவாக இருந்தது என்றாலும் அவர்கள் கம்யூனிஸ்டு கட்சியை பகிரங்கமாக எதிர்ப்பதற்கு இன்னும் விருப்பமின்றியும், பயந்துகொண்டும் இருந்தார்கள். ஆகவே, ''கட்சி விவகாரங்களைத் திருத்தியமைக்கும் மசோதாவினை'' நிறைவேற்றிய பிறகு, சியாங் அவனுடைய எதிர்ப் புரட்சிகரமான இரட்டை வேலையைத் தொடர்ந்து நடத்தி வந்தான். கம்யூனிஸ்டுகளோடு ஒத்துழைப்பைப் பற்றி அவன் பேசினான். ஆனால் உண்மையில் மிகப்பெரியதொரு எதிர்ப்பு புரட்க்கரமான கவிழ்ப்பு நடவடிக்கைக்கு அவன் சதாகாலமும் தயாரித்துக் கொண்டிருந்தான்.

## அடிக் குறிப்புகள்

1. பெங்பை சீனாவில் ஆரம்பகால விவசாய இயக்கத்தின் ஒரு கம்யூனிஸ்டு தலைவர்; மற்றும் குவாங்டுங் மாகாணத்தின்

ஹைஹபெங் மற்றும் லூபெங் கிராமப் புறப்பகுதிகளில் புரட்சி அரசாங்கத்தை நிறுவியவர் அவர் கட்சியின் மத்தியக் கமிட்டிக்கும் மற்றும் அதன் அரசியல் தலைமைக் குழுவிற்கும் 1927-இலும் 1928-இலும் முறையே தேர்ந்தெடுக்கப்பட்டார். 1929 ஆம் ஆண்டில் ஷாங்காயிலிருந்த கோமிங்டாங் அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

2. சீனாவில் ஆரம்பகாலத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் கம்யூனிஸ்டு தலைவர்களில் ஒருவர்; 1922ஆம் ஆண்டு நடைபெற்ற மாபெரும் ஹாங்காங் மாலுமிகளின் வேலை நிறுத்தத்தின் ஒரு அமைப்பாளரும், தலைவரும் ஆவார்; 1925-இல் நடைபெற்ற காண்டன், ஹாங்காங் வேலை நிறுத்தத்தின் ஒரு அமைப்பாளரும் தலைவரும் ஆவார். 1927ஆம் ஆண்டு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் மத்தியக் கமிட்டியின் உறுப்பினராகவும், அதனுடைய அரசியல் தலைமைக் குழுவின் ஒரு மாற்று உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1928-ல் அவர் கட்சியின் மத்திய அரசியல் தலைமைக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1929 ஜனவரியில் ஷாங்காயில் மரணமடைந்தார்.

3. சீனாவில் ஆரம்பகாலத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் ஒரு தலைவர். 1922-ல் அவர் சீனத் தொழிற்சங்க செயற் குழுவில் தலைவராகவும் மற்றும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் ஒரு உறுப்பினராகவும் இருந்தார். 1928-ல் தொழிற்சங்கங்களின் சிவப்பு அகிலத்திற்கு, தொழிற்சங்கங்களின் அகில சீன சம்மேளனத்தின் பிரதிநிதியாக அவர் அனுப்பப்பட்டார். மற்றும் தொழிற்சங்க அகிலத்தின் நான்காவது மாநாடு அவர் சிவப்பு அகிலத்தின் ஒரு நிர்வாகக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1930-ல் அவர் சீனாவிற்குத் திரும்பினார்: மேற்கு ஹுன்னான் மேற்கு ஹூப்பே புரட்சித் தளத்தில் செஞ்சேனையின் இரண்டாவது படைப்பிரிவின் அரசியல் அமைச்சராகப் பணியாற்றினார். 1933-இல் ஷாங்காயில் அவர் கோமிங்டாங் அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்டு அதே ஆண்டில் நான்கிங்கில் கொலை செய்யப்பட்டார்.

4. இந்த முறையின் மூலம் முதலாளிகள் ஒரு கம்பெனியை அமைத்து, நிலப்பிரபுக்களிடமிருந்து பெரும் பிரதேசங்களை குத்தகைக்கு எடுத்து, அதனை சிறுசிறு பகுதிகளாக உள்

குத்தகைக்கு விட்டார்கள். இந்த முறையில் குத்தகை விவசாயிகள் இரட்டைச் சுரண்டலால் அவதிப்பட்டார்கள்.

5. நான்காவது அத்தியாயத்தில், முதல் துணை அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

6. மாசே-துங், முன் நூல் பாகம் 1, பக்கம் 20.

7. தங்களுடைய சொந்த நிலத்தில் ஒரு பகுதி வேலைசெய்து கொண்டு மற்றவர்களிடம் குத்தகைக்கு எடுக்கும் நிலத்தில் இன்னொரு பகுதி வேலை செய்யும் ஏழை விவசாயிகள்.

8. மாசே-துங், முன் நூல் பாகம் 1, பக்கம் 17.

9. மேற்படி நூல், பக்கம் 14.

10. மேற்படி நூல்.

அத்தியாயம் நான்கு

## வடக்கத்திய படையெடுப்பு.
## முதல் புரட்சிகரமான உள்நாட்டு யுத்தத்தில் நெருக்கடியான கட்டம்.

*(ஜுலை 926 — ஜுலை 1927)*

**1. வடக்கத்திய படையெடுப்பிற்கு முன்பு உள்நாட்டு நிலைமை. வடக்கத்திய படையெடுப்பு சேனை. யாங்ட்சி பள்ளத்தாக்கை நோக்கி அணிவகுப்பு. வடக்கத்திய படையெடுப்பு நடைபெற்ற சமயத்தில் வர்க்க உறவுகளில் புதிய மாற்றங்கள்.**

1924இல், பீகிங் ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கைக்குப் பிறகு பெங்டியன் கும்பலைச் சேர்ந்த யுத்தப்பிரபு சாங்ட் சோ-லின் வடசீனாவில் பிற்போக்கு படைகளின் தலைவன் ஆனான். அவனது கும்பல் தேசிய சட்டசபையை எதிர்த்தது, புரட்சிக்குச் சாதகமாக இருந்த ஃபெங்யு-ஷியாங்கின் தேசியப் படையை விலக்கிற்று; பெங்டியன் யுத்தப் பிரபுக்களின் பிரதேசங்களைப் பெருஞ்சுவரின் தெற்கேயும் விஸ்தரித்து, மக்களின் புரட்சி இயக்கத்தை நசுக்கிற்று. இந்த முறையில், மே-30ம் தேதி சம்பவத்தின் விளைவாக வளர்ந்து கொண்டிருந்த தேசபக்தி இயக்கம் பெங்டியன் யுத்தப் பிரபுக்களின் பலாத்காரக் கொள்கையினால் முற்றிலும் அழிக்கப்பட்டது. இத்தகைய துரோகத்தனமான பெங்டியன் யுத்தப் பிரபுக்கள் ஏகாதிபத்தியவாதிகளின் மிக மிக சக்தி வாய்ந்த கருவிகளாக இருந்தமையால். சீன மக்கள் அனைவரும் அவர்களை பலமாக எதிர்த்தார்கள்; மற்றும் ஒரு வெகுஜன ரீதியான பெங்டியன் எதிர்ப்பு இயக்கம் நாடு முழுவதும் வேகமாகப் பரவிற்று.

மக்களின் பெங்டியன் எதிர்ப்பு உணர்வினைப் பயன்படுத்திக் கொண்டு, இரண்டு சிலி யுத்தப் பிரபுக்களான வூபெய்-ஃபூ

மற்றும் சன் சுவான்-ஃபாங் ஆகியோர் சாங்சோ-லின் மீது யுத்தப் பிரகடனம் செய்து, கியாங்சியைச் சேர்ந்த ஷாங்காய் பகுதியைத் தாக்க ஆரம்பித்தார்கள், ஏகாதிபத்திய வாதிகளின் ஆதரவை வெல்வதில் பெங்டியன் கும்பலோடு போட்டி போடும் பொருட்டு, அவர்கள் பெங்டியன் எதிர்ப்பு இயக்கத்தில் தலைமை தாங்கும் ஒரு நிலையைப் பெறுவதற்கு முயற்சித்தார்கள். 1925 டிசம்பரில், நாடு தழுவிய பெங்டியன் எதிர்ப்பு இயக்கத்தின் எழுச்சி இருந்த சமயத்தில், பெங்டியன் கும்பலின் அணிகளுக் குள்ளே, ''குவோ சங்-லிங் கலகம்'' என்று அறியப்பட்டிருந்த சம்பவம் வெடித்தது, குவோ, ஹோப்பெய் மாகாணத்தின் லுவான்ஷோவில் ஒரு எழுச்சிக்கு ஏற்பாடு செய்து, அவனது படையை பெங்டியனின் சுற்றுப் புறங்களுக்கு வழி நடத்திச் சென்றான்.

இந்த முறையில், சாங்சோ-லினுடைய பிற்போக்கு ஆட்சி வடசீனாவில் ஆட்டம் கண்டு கொண்டிருந்தது.

ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் பகிரங்கமாகவும் வரை யறையற்ற முறையிலும் ஆயுதங்களோடு சாங்சோ-லினுக்கு உதவி செய்தார்கள். மேலும் இந்த மிகமிக பயனுள்ள ஏகாதி பத்திய ஏஜெண்டுக்கு எதிராக மக்களின் நாடு தழுவிய பெங்டியன் எதிர்ப்பு இயக்கம் திசை திருப்பப்பட்டிருந்தது என்பது சீனாவில் தங்களுடைய ஆதிக்கத்திற்கு கடுமையானதொரு பயமுறுத்தலாக மாறிவிட்டது என்பதைப் பார்த்து. அமெரிக்கா, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள், சாங்சோ-லின்னுக்கும் மற்றும் வூ பெய்-ஃபுவிற்குமிடையே, ''கம்யூனிஸ்டுகளை எதிர்த்துப்போராடு வது!'' என்ற கோஷத்தின் கீழ் ஒரு சமரசத்தை உருவாக்கி, புரட்சியின்பால் சார்ந்து நின்ற தேசிய படையையும் சீன மக்களை யும் தாக்குப்படி அவர்களைத் தூண்டினார்கள்.

முதல் ஆயுதம் ஏந்திய ஏகாதிபத்திய தலையீடு 1925 டிசம்பரில் நடைபெற்றது. அப்பொழுது ஜப்பானியப் படைகள், சாங்சோ-லின்னுக்கு உதவியாக, குவோசங்-லிங்கை முறி யடிப்பதற்காக பெங்டியனுக்கு அனுப்பப்பட்டன; இந்த முறையில், பெங்டியன் படைகளின் மத்திய தளம் தக்க வைக்கப் பட்டது. இரண்டாவது தலையீடு 1926 மார்ச்சில் நடை பெற்றது; அப்பொழுது, சிகிலியைத் (ஹோப்பெய் மாகாணம்) தாக்குவதற்கு, ஜப்பான் சாங்சோ-லின்னுக்கு உதவி செய்தது இதன் விளைவாக தேசிய ராணுவம் டீன்சீன், பீகிங், நான் கோவ் மற்றும் சாங்சியூக்கோவ் ஆகிய இடங்களிலிருந்தும் பின் வாங்கும்படி நிர்ப்பந்திக்கப் பட்டது. அதே சமயத்தில்,

ஹோனானைத் தாக்குவதற்கு பிரிட்டன் வூபெய்-ஃபுவிற்கு உதவி செய்தது; மற்றும் அங்கிருந்த தேசியப்படையை நிராயுதபாணி ஆக்குவதற்கும் உதவி செய்தது.

சாங்ஸா-லின்னின் படைகள் சிகிலியில் தேசியப் படைக்கெதிராக அணிவகுத்துச் சென்று கொண்டிருந்த பொழுது, ஜப்பானிய யுத்தக் கப்பல்கள் தேசியப் படையை டாகு துறைமுகத்திலிருந்து பீரங்கி வைத்துத் தாக்கிக் கொண்டிருந்ததன் மூலம் அவனுக்கு உதவி செய்தன. இது பீகிங் மக்களுக்கு கோபத்தை மூட்டிற்று. சீனாவின் உள்நாட்டு விவகாரங்களில் ஏகாதிபத்தியத் தலையீட்டை ஆட்சேபித்து 1926 மார்ச் 18இல் அவர்கள் ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள். இயக்கத்தில் பங்கு கொண்ட பல தேசபக்த மக்கள் டுவான்சி-ஜுவினால் இரக்கமற்ற முறையில் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்தப் படுகொலை பின்னர் 'மார்ச் 18 சம்பவம்' என்று பெயர் பெற்றது.

பீகிங்கில் நடைபெற்ற படுகொலையினால், சீனப் புரட்சியை நசுக்குவதற்த ஏகாதிபத்தியவாதிகளகல் செய்யப்பட்ட முயற்சி ஓரளவு வெற்றி பெற்றது. இதன் விளைவாக, 'கம்யூனிஸ்ட் எதிர்ப்பு' இயக்கம் நாடு முழுவதிலும் தொடர்ந்து பரவிற்று. முதலில், ஏகாதிபத்தியவாதிகள் சிசிலி மற்றும் பெங்டியன் கும்பல்களை அணி திரட்டினார்கள். வட சீனாவிலும், மத்திய சீனாவிலும் தங்களது ஆதிக்கத்தை கெட்டிப்படுத்தினார்கள், மேலும், பீகிங்கில் இவ்விரு கும்பல்களின் ஒரு கூட்டு அரசாங்கத்தை ஏற்பாடு செய்தார்கள். இரண்டாவதாக, தேசியப் படையை பெருஞ்சுவருக்கு அப்பாலும், இன்னும் வடமேற்கே மேலும் தொலைவிற்கும் கூட துரத்துவதற்கு, அவர்கள், சாங்சோ-லின்னுக்கு உதவி செய்தார்கள், மூன்றாவதாக, ஹுன்னான், கியாங்ஸி, ஃபூகியன் ஆகிய மாகாணங்களிலிருந்து குவாங்டுங் புரட்சித் தளத்தின் மீது சுற்றி வளைத்து நடத்தும் ஒரு தாக்குதலைத் தொடுப்பதற்கு, அவர்கள் சிகிலி கும்பலுக்கு உதவி செய்தார்கள்.

அந்த சமயத்தில் ஹோனானும் ஹுப்பேயும் வூ பெய்-ஃபூவின், கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன; கியாங்சு, சிகியாங், அன்வெய், கியாங்சி, ஃபூகியன் ஆகியவை சன்சுவான்-பாங்கின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன; மற்றும் ஹோபெய், சாஹார், ஷாண்டுங் மாகாணங்களும், இவற்றுடன் வடகிழக்கு மாகாணங்களும், சாங்சோ-லின்னின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தன. வூ பெய்-

ஃபூவும், சன்சுவான் - ஃபாங்கும் தெற்கிலிருந்த புரட்சித் தளங் களைத் தாக்கினார்கள். அதே சமயத்தில், சாங்சோ-லின் வடக்கிலிருந்த புரட்சித் தளங்களைத் தாக்கினான்.

வூ பெய்-ஃபூவிற்கும் மற்றும் சாங் சோ-லின்னுக்கும் இடையே, ''கம்யூனிஸ்ட் எதிர்ப்பு'' (Anti-red) இயக்கத்தில் அடிக்கடி சண்டைகளும், மோதல்களும் இருந்ததன் விளைவாக, யுத்தப்பிரபு முகாமிற்குள் பிளவு விரிவடைந்து கொண்டிருந்த போதிலும், ஏகாத்திபத்திய சூழ்ச்சிகளின் விளைவாக சிகிலி, பெங்டியன் ஆகிய இரு கும்பல்களும் ஒன்றுபட்டிருந்தன. மத்திய அரசாங்கத்தில் அதிகாரத்தைப் பங்கிடுவது பற்றிய அவர் களுடைய பல தகராறுகள், அதனுடைய அடிப்படையான பிற் போக்குத் தன்மையை மாற்றுவதற்கு எதையும் செய்யவில்லை. ஏகாத்திபத்தியவாதிகள் தத்தம் யுத்தப் பிரபுக்களைக் கட்டுப் படுத்தினார்கள். சீனாவில் மேலாதிக்கத்தைப் பெறுவதற்குப் போட்டி போட்டார்கள்; ஆனால் வடக்கத்திய யுத்தப் பிரபுக் களின் பிற்போக்கு ஆட்சியினை அவர்கள் கூட்டாக ஆதரித் தார்கள்.

தெற்கிலிருந்த புரட்சிப் படைகளுக்கு எதிராக வூ பெய்-ஃபூ வினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வருமாறு: முதலாவதாக, புரட்சிக்குச் சாதகமாக இருந்த படைகளை ஹுன்னான் மாகாணத்திலிருந்து விரட்டி அடிப்பதிலும் அங்கிருந்த புரட்சி சக்திகளைத் தாக்குவதிலும், ஹுன்னானிலிருந்த சகல பிற் போக்குப் படைகளையும் ஆதரிப்பது; இரண்டாவதாக, அந்த சமயத்தில், புரட்சித் தளங்களாக விளங்கிய குவாங்டுங்கையும், குவாங்ஸியையும் தாக்குவதற்கு ஹுப்பேயிலுள்ள எல்லாப் படைகளையும் மற்றும் ஹோனான், ஹுன்னான், மற்றும் கியாங்ஸி மாகாணங்களிலிருந்த படைகளில் ஒரு பகுதியினரையும் அணி திரட்டுவது; சிகிலி மற்றும் பெங்டியன் யுத்தப் பிரபுக்களின் ஆட்சியை சீனமக்கள் இனியும் சகித்துக் கொண்டிருக்க மாட்டார் கள் என்பதைப் பார்த்த குவாங்டுங்கிலிருந்த புரட்சி அரசாங்கம் ஒரு புரட்சி யுத்தத்தின் மூலம் வடக்கத்திய யுத்தப் பிரபுக்களின் பிற்போக்கு அரசாங்கத்தை நொறுக்கித் தள்ளி, நாடு முழுவதிலு மிருந்த ஒடுக்கப்பட்ட வெகு ஜனங்களின் அவசரமான கோரிக்கை களுக்கு இணக்கமான முறையில் சீனாவின் சுதந்திரத்தையும், ஒற்றுமையையும் உருவாக்கத் தீர்மானித்தது. மேலும் புரட்சி அரசாங்கம் அப்போது முற்றுகைக்கு இலக்காக இருந்தது. இந்த சாதகமற்ற நிலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கு

ஒரு வடக்கத்திய படையெடுப்பைத் துவங்குவதுதான் ஒரே வழியாக இருந்தது.

1926 ஜூலையில், தற்போதைய நிலைமையைப்பற்றி சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு அறிக்கையை விடுத்தது: அந்த அறிக்கையில் நாடு முழுவதிலுமுள்ள தொழிலாளிகள், விவசாயிகள், வியாபாரிகள், மாணவர்கள் மற்றும் சிப்பாய்களை ஒன்றுபடும்படியும், புரட்சிகரமான தேசிய ஐக்கிய முன்னணியை பலப்படுத்தும்படியும் மற்றும் யுத்தப் பிரபுக்கள்,ஏகாதிபத்தியவாதிகள் ஆகியோரின் ஆட்சியைத் தூக்கி எறியும் படியும் அறைகூவியிருந்தது. வடக்கத்திய படையெடுப்பை நடத்துவதில் குவாங்டுங் புரட்சி அரசாங்கத்திற்கு இது ஒரு மாபெரும் ஊக்குவிப்பாக இருந்தது. ஆனால், சென்டி-ஷியு, கட்சியின் மத்திய கமிட்டியின் தீர்மானத்தை மீறி, வார இதழான வழிகாட்டியில் "தேசிய அரசாங்கத்தின் வடக்கத்திய படையெடுப்பு" என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதினார். அக் கட்டுரையில், வடக்கத்திய படையெடுப்பின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டார்' அதற்கான நிலைமைகள் இன்னும் பக்குவமடையவில்லை என்று கருதினார். மேலும், வடக்கத்திய படையெடுப்பிற்குப் பதிலாக தற்போதைய கடமை தற்காப்புடன் இருக்க வேண்டுமென்றும் கருதினார். படையெடுப்பு நடத்த வேண்டியது கோமிங்டாங் மற்றும் தேசிய அரசாங்கத்தின் கடமையென்றும், அதிகாரத்தில் இல்லாத ஒரு கட்சி என்ற முறையில், கம்யூனிஸ்ட் கட்சி அவர்களுக்கு உதவி மட்டுமே செய்ய வேண்டும் என்றும் கூறினார். இப்படிப்பட்டதொரு செயலற்ற போக்கு, உண்மையில் படையெடுப்பின் அரசியல் முக்கியத்துவத்தைக் குறைத்து, யுத்தத்தில் ராணுவத் தலைமையைக் கைப்பற்றி சியாங்காய்-ஷேக்கிற்குப் பாதையைச் செப்பனிட்டுக் கொடுத்தது.

புரட்சிப்படை அதன் வடக்கத்திய அணிவகுப்பை 1926 ஜூலையில் ஆரம்பித்தது.

சோவியத் செஞ்சேனையின் பாணியைப் பின்பற்றி, சீனக் கம்யூனிஸ்ட் கட்சி புரட்சிப்படையில் அரசியல் வேலை முறையை அறிமுகம் செய்தது. மிகப் பெரும்பாலான அரசியல் வேலை கம்யூனிஸ்டுகளால் மேற்கொள்ளப்பட்டது என்ற விவரம், படையெடுப்பின் இறுதி வெற்றியில் முக்கியமானதொரு அம்சமாக இருந்தது.

வடக்கத்திய படையெடுப்பின் யுத்த தந்திர ரீதியான திட்டம் புரட்சிப் படையின் பிரதான சக்தியை ஹூனான்,

ஹூப்பே அரங்கில் வைப்பதாக இருந்தது. மேலும், ஃபூக்கியனி லும் இயாங்கியிலும் எதிரிகளைக் கட்டுப்பாட்டில் வைக்கும் பொருட்டு, குவாங்டுங்கின் கிழக்கு எல்லைகளுக்கும் வடக்கு எல்லைகளுக்கும் இரண்டு படைப் பிரிவுகளை அனுப்புவதாகவும் இருந்தது. ஹுன்னான்-ஹூப்பே அரங்கில் வெற்றி அடைந் திருந்தபோது வடக்கத்திய படையெடுப்பில் ஈடுபட்ட சேனை, சாங்ட் சோ-லின்னை இறுதி இலக்காக வைத்துக்கொண்டு, சங்சுவான்-ஃபாங்கின் படைகளைத் தாக்குவதற்காக தங்களது படைகளை குவித்துக் கொண்டிருக்கும்.

வடக்கத்திய படையெடுப்பின் முதல் போராட்டம் ஹுன்னான்-ஹூப்பே அரங்கில் நடைபெற்றது. அங்கு வூபெய்-ஃபூவின் படைகளில் ஒரு லட்சம் பேர் நிறுத்தப்பட்டிருந்தார்கள். வூவினுடைய பிற்போக்குப் படையை ஒழிப்பது, வடக்கத்திய படையெடுப்பு சேனையின் பிரதான கடமையாயிற்று.

இந்த அரங்கின் 4வது சேனையும் மற்றும் இதர படைகளும் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. இப்படைகள் 50 ஆயிரம் பேரைக் கொண்டதாக இருந்தது. தளபதி ஏடிங்கினால் தலைமை தாங்கப்பட்ட 4வது சேனையின் சுயேச்சையான படைப்பிரிவு முன்னணிப் படையாகத் திகழ்ந்தது. ஒரு பொழுதுமே தோல்வி யைக் கண்டிராத பொறுக்கியெடுக்கப்பட்ட படைகளில் ஒரு அமைப்பாக (பெரும்பாலும் கம்யூனிஸ்டுகளையும் கம்யூனிஸ்ட் இளைஞர் கழக உறுப்பினர்களையும் கொண்டதாக) அது இருந்தது.

சேனையின் பிரதான அமைப்பு, புறப்படுவதற்கு முன்பு, சுயேச்சையான படைப்பிரிவு ஹுன்னானுக்குள் விரைந்து சென்றது. இந்த முறையில், வடக்கத்திய படையெடுப்புச் சேனையின் முன்னேற்றத்திற்கு பாதை செப்பனிடப்பட்டது. அவர்கள் விரைவிலேயே சாங்சாவையும், யூயாங்கையும் பிடித் தார்கள். வூபெய்-ஃபூவின் அந்தஸ்தைத் தவிடு பொடியாக்கி அவனது படையைக் குழப்பமடையச் செய்தார்கள். பிறகு புரட்சிப்படை வடக்கு நோக்கி ஒரு தடங்கலுமின்றி முன்னேறிற்று.

ஹூப்பேயில் டிங்சியாவோவில் நடைபெற்ற போராட்டம் யுத்தத்தில் மிகக் கசப்பான மோதலாக இருந்தது. ஹூப்பேயில், காண்டன்-ஹாங்கோங் ரயில்வேமீது, டிங்சியாவோ கிட்டத் தட்ட ஊடுருவ முடியாததொரு யுத்த தந்திர மையமாக இருந் தது. அது வடக்கிலும், தெற்கிலும், மேற்கிலும் தண்ணீரால்

சூழப்பட்டிருந்த மற்றும் கிழக்கில் உயர்ந்த மலைகளால் பாது காக்கப்பட்டிருந்தது. தென்மேற்கில் மட்டும் அனுகுவதற்கிட மிருந்தது. அங்கு ஒரு ஆழமான நதியின் மேற்கில் ரயில்வே பாதை இருந்தது. இந்த மையத்தை ஊபெய்-ஃபூவின் சில படைகள் பாதுகாத்துக் கொண்டிருந்தன. அதே சமயத்தில், எதிர் முன்னேறித் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்காக வடக்கி லிருந்து கூடுதலான படைகள் வந்துகொண்டிருந்தன. சாங்சா மீது ஒரு தாக்குதலைத் தொடுப்பதின்மூலம் புரட்சிப்படை பின் வாங்குவதை முறியடிப்பதற்கு சன் சுவான்-ஃபாங், கியாங்சியில் தயாராகும் வரையிலும், தாக்குப்பிடிப்பது அவர்களின் திட்ட மாகும். ஆனால் எதிர்பார்த்ததைக் காட்டிலும் வடக்கத்திய படையெடுப்புச் சேனை அதிவேகமாக முன்னேறி டிங்சிசியா வோவை ஆகஸ்ட் இறுதியில் கைப்பற்றி ஊபெய்-ஃபூவின் போராட்ட திட்டத்தை உடைத்தெறிந்தது. போராட்டம் முடிவடையும் தறுவாயில் ஊபெய்-ஃபூவின் படைகள் வடக்கி லிருந்து ஹாங்கோவிற்கு வந்து சேர்ந்தன. மேலும், சன்சுவாங்-ஃபாங் அவனது பிரதான படையை செயலில் இறங்கும்படி உத்தரவிட்டான். இது அரங்கம் முழுவதிலும் டிங்சிசியாவோ போராட்டத்தின் துரிதமான வெற்றியின் மகத்தான முக்கியத் துவத்தைக் காட்டுகிறது.

கான்டன்-ஹாங்கோங் ரயில்வேயில் அடுத்த யுத்த தந்திர மையமாக ஹோஸ்சென்ங்சியாவோ இருந்தது. இதுவும் ஊபெய்-ஃபூவின் படைகளால் பாதுகாக்கப்பட்டு வந்தது. வடக்கத்திய படையெடுப்பு சேனை எதிரியின் ஆதிக்க நிலைகளைக் கைப்பற்றி ஹூன்னானிலும், ஹூபேயிலும் ஊவின் பிரதான படையை ஒழித்துக் கட்டியது, பின்னர் அது ஹாங்கோவை கைப்பற்றிற்று. மேலும், அக்டோபர் 10 ஆம் தேதியன்று ஊசாங்கை கைப்பற் றியது. இவ்விரு நகரங்களும் ஒரு காலகட்டத்திற்கு புரட்சியின் மையமாக இருந்தன. 1926 ஆம் ஆண்டு இறுதியில், ஊபெய்-ஃபூவின் படைகள் ஊசெங்-குவான் கணவாய்க்கு அப்பால் விரட்டபட்டன. இம்முறையில், ஹூப்பே மாகாணத்தில் ஒற்றுமை உருவாக்கப்பட்டது.

இரண்டாவது போர் அரங்கம் கியாங்சி, அன்வெய், கியாங்சு அரங்கமாக இருந்தது. ஹூன்னான்-ஹூப்பே அரங்கத்தில் கிடைத்த வெற்றிக்குப் பிறகு வடக்கத்திய படையெடுப்பு சேனையின் பிரதான படை கியாங்சிக்குத் திரும்பியது. கம்யூ னிஸ்டுகள் செய்த அரசியல் வேலை காரணமாக இரண்டாவது

மற்றும் ஆறாவது சேனைகள் கியாங்சி யுத்தத்தில் சன்சுவான்-பாங்கின் பிரதான படைகளை நொறுக்கித் தள்ளின. ஆனால் வாங்போ-லிங்கினால் தலைமை தாங்கப்பட்ட சியாங்காய்-ஷேக்கின் சொந்த முதல் சேனையின் ஒரு பிரிவு, சன்சுவான்-பாங்கின் படைகளோடு ஏற்பட்ட முதல் மோதலில் துரத்தியடிக்கப்பட்டது. கம்யூனிஸ்டுகளைத் தவிர்த்ததின் விளைவாக சியாங்காய்-ஷேக்கின் மேற்குறிப்பிட்ட படைப்பிரிவு போராட சக்தியற்றதாக ஆக்கப்பட்டிருந்தது. அன்வெய்ன் வடக்கத்திய படையெடுப்பு சேனை கியுகியான்கிலிருந்து யாங்ட்ஸி நதிவரையிலும் முன்னேறிற்று. மேலும், அங்கு வந்திருந்த யுத்தப்பிரபு படைகளினால் உதவி செய்யப்பட்டு, ஹோஃபை, பெங்ஃபூ, அன்கிங் மற்றும் ஊகு ஆகியவற்றை கைப்பற்றி நான்கிங் நுழைவாயில்களை வந்தடைந்தது. இந்த முறையில் வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் நான்கிங் ஒரு இடுக்கித் தாக்குதல் இயக்கத்தில் அகப்பட்டுக் கொண்டது.

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குப் பிறகு, நான்சாங், சியாங்காய்-ஷேக்கினால் கைப்பற்றப்பட்டு, ஒரு எதிர்ப்புரட்சி மையமாக மாற்றப்பட்டது.

மூன்றாவது போர் அரங்கம் ஃபூகியன்-சிகியாங் அரங்கமாகும். வடக்கத்திய படையெடுப்பு துவங்கியபொழுது ஹோயிங்-சின்னால் தலைமை தாங்கப்பட்ட சியாங்காங்-ஷேக்கின் சொந்த முதல் சேனையின் படைப்பிரிவு ஃபூகியனிலிருந்து எதிரியை வெளியே வைத்திடும் பொருட்டு குவாங்டுங்கில் சாவோசோவிற்குள்ளும் மற்றும் ஸ்வாட்டோவிற்குள்ளும் நுழைந்தது. கியாங்ஸி போராட்டம் நடந்துக்கொண்டிருந்த நேரத்தில் ஃபூகியன் யுத்தப் பிரபுவான சூஇன் ஜென்னின் படைகள் குவாங்டுங் மாகாணத்தைச் சேர்ந்த மெய்ஹியன் மாவட்டத்தில் சங்கோவிற்குள் ஊடுருவிற்று. அதே சமயத்தில் ஹோஇங்-சின் அவரது படைகளைக் குவாங்டுங்கின் கிழக்கில் இருந்து சாங்சோவிற்கும், சுவாங்சோவிற்கும் மற்றும் ஃபூச்சோவிற்கும் துரிதமாக அனுப்பினான், சன்சுவான்-ஃபாங்கின் பிரதான படை இல்லாததால் பூகியன் போராட்டத்தில் மூர்க்கத்தனமான சண்டை நடைபெறவில்லை. சிசியாங் போராட்டம் டிசம்பரில் ஆரம்பமாயிற்று. அப்போது கலகம் செய்திருந்த ஸ்தல படைகள் சன்சுவான்-ஃபாங்கின் படைகளால் சூசோவிற்கு பின்வாங்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தன. இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு ஹோகின்-சின்னும் மற்றும் பை சுங்-ஷி

யும் சியாங்சியில் இருந்து நகரத்தினுள் நுழைந்து அங்கிருந்து ஹாங்சோவிற்கும் ஷாவோசாங்கிற்கும் சென்றார்கள். இவ்விரு நகரங்களையும் அவர்கள் 1927 பிப்ரவரியில் கைப்பற்றியிருந் தார்கள்.

வடக்கத்திய படையெடுப்பு சேனை யாங்சட்சி பள்ளத் தாக்கு வழியாக நடத்திய அதனுடைய அணிவகுப்பில் தொழி லாளி - விவசாயி வெகுஜனங்களால் சுறுசுறுப்பாக ஆதரிக்கப் பட்டு வந்தது.

படையெடுப்பு சேனை புறப்பட்டபொழுது, காண்டன்-ஹாங்காங் வேலை நிறுத்தத்தில் பங்குகொண்டிருந்த தொழி லாளிகள் சேனையோடு வடக்கு நோக்கி அணிவகுத்து செல்வ தற்கு பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொண்ட போக்கு வரத்து, பிரச்சாரம் மற்றும் வைத்தியப் பிரிவுகளை ஏற்பாடு செய்தார்கள். புரட்சியின் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தும் பொருட்டு காண்டன்-ஹாங்காங் வேலைநிறுத்தக் கமிட்டி வடக்கத்திய படையெடுப்பு சேனையினால் வுகான் கைப்பற்றப் பட்ட பிறகு அதனுடைய சொந்த தீர்மானத்தின்படி வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் ஹூனானி லும் ஹூபேயிலும் இருந்த தொழிலாளி விவசாயி வெகுஜனங்கள் புரட்சி சேவைக்கு சக்திவாய்ந்த ஆதரவினைக் கொடுத்தார்கள். இந்த ஆதரவு புரட்சிசேனை இரண்டு மாகாணங்களுக்குள் விரைவாக ஊடுருவிச் செல்வதை சாத்தியமாக்கிற்று.

வடக்கத்திய படையெடுப்பு ஆரம்பமாகும் தறுவாயில் ஹூனானில் இருந்த தொழிலாளிகளும், விவசாயிகளும் பெரியதொரு அளவில் ஏற்கனவே நன்றாக ஸ்தாபன ரீதியாகத் திரட்டப்பட்டிருந்தார்கள். அந்த மாகாணத்தில் ஒரு லட்சத்து பத்தாயிரம் ஸ்தாபனரீதியாகத் திரட்டப்பட்ட தொழிலாளி களும், 4 லட்சத்திற்கும் மேற்பட்ட ஸ்தாபன ரீதியாகத் திரட்டப் பட்ட விவசாயிகளும் இருந்தார்கள். 10 லட்சத்திற்கும் மேற் பட்ட மக்கள் நேரிடையாக கட்சியின் செல்வாக்கின் கீழ் இருந் தார்கள். பெரும்பாலான கல்லூரி மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களும் ஸ்தாபனரீதியாகத் திரட்டப்பட்டிருந்தார்கள். மேலும், பல புரட்சிப் போராட்டங்களின் அனுபவத்தையும் இவர்கள் பெற்றிருந்தார்கள்.

1926-ஆம் ஆண்டு மார்ச் 9இல் யுத்தப் பிரபு அரசினால் மக்கள் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டத்தை எதிர்த்து

ஆட்சேபிக்கும் பொருட்டு சாங்சாவில் குடிமக்கள் ஒரு அணி வகுப்பை நடத்தினார்கள். அந்த அணிவகுப்பில் அவர்கள் ஹூன்னான் மக்களின் தற்காலிக கமிட்டியை அமைத்தார்கள். பிறகு அவர்கள் ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள். பொதுஜன நிர்ப்பந்தத்தின் கீழ் யுத்தப்பிரபு சாவோ-ஹெங்டி, சாங்சாவிலிருந்து ஓடிவிட்டான். ஹூன்னானில் வடக்கத்திய படையெடுப்புச் சேனை நடத்திய எல்லா போராட்டங்களிலும் தொழிலாளி, விவசாயிகள் தீவிரமாக பங்காற்றினார்கள். அவர்கள் முன்னணி வீரர்களாகவும் வழிகாட்டிகளாகவும், செய்தியைக் கொண்டு செல்பவர்களாகவும் சேவை செய்தார்கள். போக்குவரத்து தொழிலாளிகள் தப்பியோடிக் கொண்டிருந்த எதிரியை நிர்மூலமாக்கிக் கொண்டும், பிரச்சாரப் படைப் பிரிவு களையும் மற்றும் கோரிக்கை குழுக்களையும் ஏற்பாடு செய்து கொண்டுமிருந்தார்கள்.

வடக்கத்திய படையெடுப்புச் சேனை வந்தவுடன் சாங்சாவில் இருந்து யுத்தப் பிரபு ஏகாய்-ஷின் தப்பியோடியபோது, மாகாண தொழிற்சங்க சம்மேளனம், நகரத்திற்கு உள்ளேயும் வெளியேயும் முக்கியமான தெருக்களையும், சாலைகளையும் பாதுகாக்கவும் மற்றும் பொது ஒழுங்கை பராமரிப்பதற்காகவும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர் பாதுகாப்புப் படையை அமைத்தார் கள். சாங்ஷா, கியாங்சியின், அன்யுவான் மற்றும் இதர இடங் களிலிருந்த தொழிலாளிகள் புரட்சிப் படைக்குப் போக்குவரத்து வசதி செய்து கொடுப்பதற்குப் பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொண்ட ஒரு குழுவை ஏற்பாடு செய்தார்கள். காண்டன்-ஹாங்கோவ் ரயில்வே தொழிலாளர்கள் ஒரு ரயில்வே அழிப்புப் படைப்பிரிவை ஏற்பாடு செய்தார்கள்; மேலும் ஹன்யாங் ஆயுத தளவாட தொழிலாளர்கள், புரட்சிப்படையின் வடக்கத்திய அணிவகுப்போடு ஒருங்கிணைக்கும் முறையில் ஒரு பொது வேலை நிறுத்தத்தை நடத்தினார்கள்.

தொழிலாளி மற்றும் விவசாயி வெகு ஜனங்களின் ஆதரவு, வடக்கத்திய படையெடுப்பு சேனையினால் சாங்ஷா. யுயேயாங், ஊஹான் ஆகிய இடங்களில் துரிதமாக கைப்பற்றச் செய்வதற்கு, பிரதான அம்சங்களில் ஒன்றாக இருந்தது.

6 மாதத்திற்குள் (1926 ஜூலை முதல் டிசம்பருக்குள்) குவாங்டுங் புரட்சிப்படை ஹூன்னான், ஹூப்பே, ஃபூக்கியன், சிகியாங், கியாங்ஸி மற்றும் அன்வெய்ன் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றி, ஊபெய்-ஃபூவின் படைகளை செயலற்றதாக்கி, சன்

செய்யவும் துவங்கினார்கள்.

இவ்வகையில், புரட்சிப் படையினால் ஷாங்காய் மற்றும் நான்கிங் ஆகிய நகரங்கள் கைப்பற்றப் படும் தறுவாயில் புரட்சி அணிகளுக்குள்ளே வர்க்கங்களின் புதியதொரு சேர்க்கையும் உருவெடுத்துக் கொண்டிருந்தது.

**2. ஹுனனை மையமாகக் கொண்டு, நாடு தழுவிய விவசாயி இயக்கம். புரட்சியில் விவசாயிகளின் பாத்திரம் சம்பந்தமாக தோழர் மா சே-துங்கின் கொள்கை.**

யாங்-சி பள்ளத்தாக்கை நோக்கி வடக்கத்திய படையெடுப்பு சேனையின் வெற்றிகரமான முன்னேற்றம், ஹுனானை நாடு தழுவிய விவசாயி இயக்கத்தின் மையமாக செய்தது. மேலும், புரட்சிக்கும் எதிர்ப் புரட்சிக்குமிடையே நாட்டில் நடைபெற்ற மிகக் கடுமையான போராட்டத்தின் ஓர் அரங்கமாகவும் மாற்றிற்று. ஆகவே ஹுனானில் விவசாயி இயக்கத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் சீனப் புரட்சியின் பொதுவான நிலைமையோடு நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருந்தது.

நாடு தழுவிய விவசாயி இயக்கத்தின் எழுச்சி தோழர் மா சே-துங்கின் புரட்சி நடவடிக்கைகளிலிருந்து பிரிக்கப்பட முடியாதவை. 1925லிருந்து 1926வரையிலும் அவர் காண்டனில் தேசிய விவசாயி இயக்கக் கல்லூரியை நடத்திக் கொண்டிருந்தார். வடக்கத்தியப் படையெடுப்பு ஆரம்பமானதோடு அவர் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் கமிட்டியின் விவசாயி இயக்கக் கமிட்டியின் தலைவர் பதவியை ஏற்பதற்கு ஷாங்காய்க்குச் சென்றார். பிறகு தேசிய விவசாயி சங்கத்தின் பொதுச் செயலாளராக பதவியேற்க அவர் வூகானுக்குச் சென்றார்.

1925-ம் ஆண்டு இறுதியில் புரட்சி நிலைமையின் அபிவிருத்தியைப் பின்பற்றி, விவசாயி இயக்கத்தின் தேசியக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த ஹுனான் மாணவர்கள் ரயில் பாதையை யொட்டிய இடங்களில் இயக்க வேலை செய்வதற்காக மீண்டும் விவசாயிகள் மத்தியில் சென்று, அவர்கள் எல்லாவற்றுக்கும் முதலாவதாக, பல சுறுசுறுப்பான நபர்களோடு தொடர்பு கொண்டார்கள்; பெரும்பாலும் சற்று கல்வி அறிவு உடைய ஏழை விவசாயிகளிடமும், ஏழை மக்களிடமும் தொடர்பு கொண்டார்கள்; பின்னர் நகரியங்களில் விவசாயச் சங்கங்களை நிறுவினார்கள். போதுமான அளவில் இத்தகைய நகரிய சங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தபொழுது அவற்

திற்குத் தலைமைத் தாங்குவதற்கு மாவட்ட சங்கங்கள் அமைக்கப்பட்டன. இந்த முறையில், ஹுனானில் கீழ் மட்டங்களில் விவசாயி இயக்கத்திற்கான உறுதியானதொரு அடித்தளம் உருவாக்கப்பட்டது.

வடக்கத்திய படையெடுப்புச் சேனை ஹுனானில் நுழைந்த பிறகு, யுத்தத்தில் விவசாயிகளின் உணர்வுபூர்வமான பங்கெடுப்பு அவர்களின் ஸ்தாபனத்தின் அபிவிருத்திக்கு விவசாய சங்கத்தின் அபிவிருத்திக்கு, சீக்கிரத்திலேயே இட்டுச் சென்றது. அவர்கள் தங்களுடைய சொந்த முன் முயற்சியினாலேயே, அரசியல் அதிகாரத்திற்காகப் போராடும் உறுதியோடு அவர்களுடைய அவசரமான அரசியல் மற்றும் பொருளாதாரக் கோரிக்கைகளை முன்னுக்குக் கொண்டு வந்தார்கள்.

1926 நவம்பரில் ஹுனானில் 50 கிராமப் புறங்களுக்கு மேல், விவசாய சங்கங்கள் அமைக்கப்பட்டு இருந்தன. அவற்றின் உறுப்பினர் எண்ணிக்கை 13 லட்சத்து 67 ஆயிரம்.

விவசாயி சங்கம் கிராமப் புறத்தில் அதிகாரத்தின் ஒரே கருவியாக— "விவசாய சங்கத்திற்கு அனைத்து அதிகாரமும்"— ஆகியிருந்தது. விவசாயிகளின் புரட்சிகரமான சர்வாதிகாரத்தின் கீழ், அது உண்மையிலேயே அரசியல் அதிகாரத்தின் ஒரு உருவமாக இருந்தது. அவர்களது சங்கங்களின் மூலம், விவசாயிகள் அரசியல் - பொருளாதார மற்றும் சித்தாந்தப் போராட்டங்களைத் தீவிரமானதொரு வழியிலும் உறுதியானதொரு வழியிலும் நிறைவேற்றினார்கள்.

(1) நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் அரசியல் மற்றும் சமுதாய நிலைமை சம்பந்தமட்டில், அவர்கள் நிலபிரபுத்துவ வர்க்கத்தின் அதிகாரத்தை உடைத்தெறிந்தார்கள்; மற்றும் விவசாய சங்கத்தின் அதிகாரத்தை (Authority) நிலை நிறுத்தினார்கள். ஸ்தல மிரட்டல்காரர்களாலும் மோசமான பிரபுத்துவ கூட்டத்தாலும் ஆதிக்கம் செலுத்தப்பட்டு வந்த நகரிய நிறுவனங்களையும், மாவட்ட நிறுவனங்களையும் தூக்கியெறிந்துவிட்டு புரட்சிகர வெகுஜன ஸ்தாபனங்கள், மாஜிஸ்ரேட் ஆகியோரின் கூட்டுக் குழுவின் மூலம் கிராமப்புற அரசாங்கத்தின் கட்டுப்பாட்டினைப் பெற்றார்கள்; அரசியல் உணர்வினை உயர்த்துவதற்கு, அவர்களிடையே கல்வியைக கற்றுக் கொடுத்தார்கள். சூதாடுதலைத் தடுத்ததன் மூலமும், கொள்ளையை ஒழித்ததின் மூலமும் புரட்சிகரமானதொரு சமுதாய ஒழுங்கினை நிலை நிறுத்தினார்கள். (2) ஏரியாவுக்கு வெளியே தானியத்தை

எடுத்துச் செல்வதின் மீதும் மற்றும் அதன் விலையை உயர்த்து வதன் மீதும் அவர்கள் ஒரு தடையை விதித்தார்கள்; குத்தகைக் குறைப்புகளை அமல் நடத்தினர்கள். மேலும், விவசாயிகளிட மிருந்து நிலச்சுவரன்தார் கட்டாயமாக வசூலித்திருந்த குத்தகை முன் பணங்களைத் திருப்பிப் பெறுதலை அமல் நடத்தினார்கள். குத்தகைகளை ரத்துச் செய்வதைத் தடுத்தார்கள். மேலும் மித மிஞ்சிய கட்டணங்களை வசூலிப்பதை ஒழித்தார்கள். உபயோகிப்போர் கூட்டுறவு நிறுவனங்களையும் விற்பனைக் கூட்டுறவு நிறுவனங்களையும் கடன் வசதி செய்துத் தரும் கூட் டுறவு நிறுவனங்களையும் ஏற்பாடு செய்தார்கள். நடுத்தரக் காரர்களின் சுரண்டலுக்கும் கொடுவட்டி லேவாதேவிக்கும் வரம்புகளை நிர்ணயித்தார்கள். (3) அவர்கள் இன அதிகாரத் தையும் மத அதிகாரத்தையும் கணவன்மார்களின் அதிகாரத்தை யும் எதித்தார்கள். இத்தகைய ஆன்மீகத் தளைகளில் இருந்து, தங்களை தைரியமாக விடுவித்துக் கொண்டார்கள். விவசாயி களுக்கு எழுதுவதற்கும் படிப்பதற்கும் கற்றுக் கொடுப்பதற்காக விவசாய சங்கங்கள் இரவுப்பள்ளிக் கூடங்களைத் திறந்தார்கள். 1926-டிசம்பரில் ஒரு விவசாய மாநாடு சாங்-ஷாவில் நடத்தப் பட்டது. அந்த மாநாடு குத்தகைகளைக் குறைப்பது பற்றியும் முன்வைப்புத் தொகைகளைத் திரும்பக் கொடுப்பது பற்றியும் கொடுவட்டி லேவாதேவி முறையை ஒழிப்பது பற்றியும். மித மிஞ்சிய கட்டணங்களையும் வரிகளையும் எதிர்ப்பது பற்றியும், ஊழல் மிகுந்த அதிகாரிகள், ஸ்தல மிரட்டல்காரர்கள் மற்றும் மோசமான பிரபுக்களின் கூட்டத்தை அகற்றுவது பற்றியும் விவசாயி அரசாங்கங்களை நிலை நிறுத்துவது பற்றியும் நிலச் சுவான்தார்களின் "தற்காப்புப் படைகளை" ஒழிப்பது பற்றியும் மற்றும் தற்காப்பிற்காக விவசாயிகளின் ஆயுதப்படையினை அமைப்பது பற்றியும் முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. மாகாணம் முழுவதிலும் விவசாய இயக்கத்தைத் தலைமை தாங்குவதற்கு ஒரு ஸ்தாபனமும் அமைக்கப்பட்டது.

ஹூன்னானில் பல கோடிக்கணக்கான விவசாயிகளால் ஒரு சில மாதங்களுக்குள் பூமி குலுங்கக் கூடிய மகத்தானதொரு புரட்சி நிறைவேற்றப்பட்டது. அப்புரட்சிக்கு முதுகெலும்பாக பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட பலம் வாய்ந்த விவசாய சங்கம் இருந்தது.

இந்த முறையில் விவசாய பிரச்சினை மீது புரட்சிக்கும் எதிர்ப்புரட்சிக்குமிடையே தீர்மானமானதொரு போராட்டம்

ஆரம்பமாயிற்று. நிலச்சுவான்தார்கள், மிரட்டல்காரர்கள், கோமிங்டாங் கட்சியின் வலதுசாரி பிரிவினர் மற்றும் வடக்கத்திய படையெடுப்பு சேனையில் இருந்த பிற்போக்கு அதிகாரிகள் அனைவரும் பிற்போக்கு பிரச்சாரம் மூலமும், இதர சாதனங்கள் மூலமும் புரட்சிகரமான விவசாயிகளைத் தாக்குவதற்கு வெளியே வந்தார்கள்.

விவசாயி இயக்கத்தை, ''சோம்பேறி'' விவசாயிகளின் இயக்கம் என்றும், ''முரடர்களின்'' இயக்கம் என்றும் பிற்போக்கு வாதிகள் அவதூறு செய்தார்கள். விவசாய உற்பத்தியை முடக்கு வதற்கான ''சோம்பேறிதனத்தின் வெளிப்பாடு'' என புரட்சிப் போராட்டத்தை அவதூறு செய்தார்கள். அவர்களுடைய மித மிஞ்சிய பிற்போக்கு நிலைப்பாட்டிலிருந்துக் கொண்டு புரட்சியில் விவசாயி இயக்கம் வகித்துக் கொண்டிருந்த பாத்திரத்தை அவர் கள் மறுத்தார்கள்.

பிற்போக்கு வாதிகளால் ஜோடித்து செய்யப்பட்ட மற்றொரு விஷமத்தனமான பிரச்சாரம் என்னவென்றால், விவசாய இயக்கம் பணக்காரர்களை விரட்டி விட்டது என்றும், இது வரி வருமானத்தில் கூர்மையானதொரு வீழ்ச்சியை உண்டாக்கி விட்டது என்றும் ராணுவச் செலவுகளைக் குறைக்கும்படி செய்து விட்டது என்றும் அவதூறு செய்ததாகும். விவசாயி இயக்கம் அரசாங்க வருவாயைக் குறைத்து வடக்கத்திய படையெடுப்பு, யுத்தத்தைத் தடங்கல் செய்து விட்டது என்று கூறிக் கொண்டு, யுத்தத்தின் பின்னணியை சீர்குலைத்த குற்றத்தைச் செய்ததாக விவசாயிகள் மீது குற்றம்சாட்ட அவர்கள் முயற்சி செய்தார்கள்.

நிலச் சுவான்தாரர்களின் ஆயுதப்படைகளை ''பாதுகாப்பு படைகள்'' என்று பிரபல்யம் அடைந்திருந்த படைகளைப் பயன்படுத்தியதன் மூலம், விவசாயத் தலைவர்களையும் புரட்சிகரமான விவசாயிகளையும் பகிரங்கமாக கொலை செய்யுமளவிற்கு கூட பிற்போக்குவாதிகள் சென்றார்கள். தொலை தூரப் பிரதேசங்களில் அவர்கள் கலகங்களை ஆரம்பித்தார்கள். பின் தங்கிய விவசாயிகளைத் தெருக்களில் ஆர்ப்பாட்டம் நடத்தும்படி தூண்டிக் கொண்டிருந்தார்கள். விவசாய சங்க அலுவலகங்கள், கோமிங்டாங் தலைமை காரியாலயம், அரசு காரியாலயங்கள் ஆகியவற்றை நொறுக்கித் தள்ளும்படியும் பிற்போக்குவாதிகள் பின் தங்கிய விவசாயிகளைத் தூண்டிக் கொண்டிருந்தார்கள். மேலும், போலித்தனமான விவசாய சங்கங்களை அமைப்பதின் மூலமும் நிலசுவான்தாரர்

களின் செல்வாக்கினையும், ஆயுதப் படைகளையும் பயன்படுத்து வதின் மூலமாகவும், விவசாய சங்கங்களுக்குள் ஊடுருவல் செல் வதற்கு ஸ்தலத்திலுள்ள விஷமக்காரர்களுக்கும் அயோக்கியர் களுக்கும் லஞ்சம் கொடுப்பதின் மூலமும், கோமிங்டாங் கட்சியின் அடிமட்டங்களில் உள்ளவர்களைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் வடக்கத்திய படை யெடுப்பு சேனையின் பிற்போக்கு அதிகாரி களோடு சதி செய்வதின் மூலமும் அவர்கள் விவசாய இயக்கத்தை நாசப்படுத்த முயற்சி செய்தார்கள்.

பிற்போக்குவாதிகளின் தாக்குதலுக்கு முன்னால் சென்டு-ஷியூவினால் தலைமை தாங்கப்பட்ட சந்தர்ப்பவாதிகள் திருப் பித் தாக்குவதற்கு பதிலாக புரட்சியில், விவசாயிகளின் பாத்திரத்தை விடாப்பிடியாக மறுத்து வந்தார்கள்; மேலும், விவசாயிகளின் புரட்சிப் போராட்டத்தை எதிர்த்தும் வந்தார்கள்.

1926 ஜூலையில், 3 ஆவது மத்திய நிர்வாகக் குழுவின் விரிவடைந்த ஒரு கூட்டத்தை கட்சி கூட்டிற்று. அக்கூட்டத்தில் செங்டு - ஷியூவினால் எழுதப்பட்டதொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானம் அவனுடைய வலதுசாரி சந்தர்ப்பவாத கருத்துக்கள் ஒரு வலது சாரி சந்தர்ப்பவாதப் பாதையாக அபிவிருத்தி அடைந்ததைக் குறித்தது.

விவசாயிகள் சங்கம் "வர்க்க வேறுபாடுகளால் கறை படிந்த தாக" இருக்கக் கூடாது என்றும், ஏழை விவசாயிகள், விவசாய தொழிலாளிகள் மற்றும் நடுத்தர விவசாயிகளோடு கூடவே, அது சிறிய நிலச் சுவான் தார்களையும் நடுத்தர நிலச்சுவான் தார்களையும் அனுமதிக்க வேண்டும் என்று கூறிக் கொண்டு சென்டூ-ஷியூ, "கிராமப் புறத்தில் ஒரு ஐக்கிய முன்னணியை" உருவாக்க வேண்டுமென்று வக்காலத்து வாங்கிப் பேசினான். இந்தப் பாதை பின்பற்றப் பட்டிருந்திருக்குமே யானால், நிலச் சுவான்தார்களும், பணக்கார விவசாயிகளும் விவசாய சங்கத்திற்குள் ஊடுருவி அதனைக் கட்டுப்படுத்தியிருப் பார்கள். விவசாயிகளின் புரட்சி அரசை எதிர்க்கும் செங்டு-ஷியூ, பிரபுத்துவக் கூட்டத்தின் (அதாவது, மோசமான பிரபுத்துவக் கூட்டத்தின்) பழைய அதிகாரத்தை, சீர்திருத்தப்பட்டதொரு அதிகாரத்தினால் (அதாவது, நல்ல பிரபுத்துவக் கூட்டத்தின் அதிகாரத்தினால்) அகற்ற வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டிருந்தான். உண்மையில், இதனுடைய பொருள் நிலப் பிரபுத்துவ வர்க்கத்தின் அதிகாரத்தைத் தக்க வைப்பது என்பதைத் தவிர வேறொன்றுமல்ல. விவசாயிகளின் ஆயுதப்

படைகள் பிற்போக்கான 'தற்காப்புப் படைகளாக' மட்டுமே செயல்பட வேண்டுமென்றும் அவர்கள் ஒரு பொழுதுமே தாக்கக் கூடாது என்றும், ஏனெனில் அவர்கள் செய்யும் வேலையின் குறிக்கோள் முழுக்க முழுக்க தற்காப்பு வேலைதான் என்றும், அவன் வாதிட்டான். விவசாயிகளின் ஆயுதப் படைகளை ''தற்பாது காப்பு'' படைகளுக்கும், பிற்போக்கு படைகளுக்கும் எதிராகப் போராடும் ஒரு நிரந்தர சேனையாக அமைப்பதற்கு, செங்டு-ஷியூ கொடுத்த எதிர்ப்பு, உண்மையிலேயே, விவசாயிகளின் சொந்த ஆயுதப் படைகளை அகற்றுவதற்கு ஒப்பாக இருந்தது.

மேற்கூறிய பாதைக்கு இணக்கமான முறையில், செங்டு-ஷியூ எந்தவிதமான புரட்சிகரமான விவசாய திட்டத்தையும் முன்வைக்கவில்லை. ஆனால், அதற்கு மாறாக சில சீர்திருத்தவாதக் கொள்கைகளை முன்னுக்கு வைத்தான். ''குத்தகைகளுக்கு அதிக பட்ச வரம்பை ஏற்பாடு செய்தல்'' மற்றும் ''கொடுவட்டி லேவாதேவி முறையைத் தடுத்தல்'' பான்ற இப்படிப்பட்ட சீர்திருத்த வாதக் கொள்கைகளை முன் வைத்தான். பூர்ஷ்வா வர்க்கத்தோடு ஒத்துழைப்பதில் அவனுடைய கவனம் குவிந்து கிடந்தமையால் அவன் விவசாயிகளை முற்றிலும் மறந்து விட்டான். அதன் விளைவாக விவசாயப் புரட்சியைத்தலைமை தாங்கும் பாட்டாளி வர்க்கப் பொறுப்பினை அவன் வீசி எறிந்து விட்டான். மத்திய கமிட்டியினால் நிறைவேற்றப்பட்டிருந்த தீர்மானத்தில் ''சீன பூர்ஷ்வா வர்க்கம் கேந்திரமானதொரு பாத்திரத்தை வகிக்காமலிருந்தால் சீன தேசிய புரட்சி மாபெரும் துன்பங்களுக்குள்ளும், அபாயங்களுக்குள்ளும் கூட போய்விடும்'' என்பதனையும் சுட்டிக் காட்டினான். பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சி கால கட்டத்தில் அரசியல் அதிகாரத்திற்காக கம்யூனிஸ்ட் கட்சி கோமிங்டாங் கட்சியோடு போராடாது என்றும் அவன் அடித்துக் கூறினான். ''பாட்டாளி வர்க்கப் புரட்சிக் கால கட்டத்தில் மட்டுமே கம்யூனிஸ்ட் கட்சி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும். இப்படிப்பட்டதொரு பிரச்சினை தேசியப் புரட்சி கால கட்டத்தில் எழவில்லை''[1]

சென்டு - ஷியூவின் கண்களில் பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளிவர்க்கத் தலைமையின் பிரச்சனை இல்லாமல் இருந்தது; மேலும் ஒரு பொழுதும் ''எழவே செய்யாது'' என்பதாகும். ஆகவே சீனப் புரட்சி, சீனாவில், தேசிய முதலாளித்துவ சமுதாயத்திற்கு'' வழி நடத்திச் செல்லும் என்றும், முதலில் ஒரு முதலாளித்துவ சமுதாயத்தின் மூலமாகக் கடந்து செல்லாமல் ஒரு சோஷலிச சமுதாயத்திற்குள் சீனா ஒரு பொழுதுமே அடி

யெடுத்து வைக்க முடியாது என்றும் அடித்துக் கூறி அவன் தீர்மானத்தில் சுட்டிக் காட்டினான். "நாம் கற்பனா சோஷலிஸ்ட் அல்லவென்றும், மற்றும் முதலாளித்துவ சமுதாயத்தைத் தாண்டிச் சென்று ஒரு அரை நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலிருந்து சோஷலிச சமுதாயத்திற்கு நேரடியாக மாறிச் செல்ல முடியும் என்று நாம் கற்பனை செய்யவில்லை என்றும், சோஷலிச சமுதாயத்தை ஒரே தாவலில் அமுலுக்குக் கொண்டு வந்துவிட முடியும் என்று நாம் கற்பனை செய்யவில்லை என்றும் அவன் கூறினான்.

இந்த முறையில், பிற்போக்கு வாதிகளுக்குப் பின்னால் வால் பிடித்துக் கொண்டு, வடக்கத்திய படையெடுப்புக் காலத்தில் சீராக வளர்ந்து கொண்டிருந்த விவசாய இயக்க்த்தை சென்-டு-ஷியூ நடை முறையில் கட்டுப்படுத்தினான்.

கோமிங்டாங் கட்சியில் இருந்த அரை நிலப்பிரபுத்துவ பேர் வழிகளையும், பூர்ஷ்வா பேர்வழிகளையும் சலுகைகள் கொடுப்பதனாலும்; சமரசம் செய்வதனாலும் தாஜா செய்ய முடியும் என்று சென்டு-ஷியூ நம்பினான்; அப்படிச் செய்வதன்மூலம் அவர்கள் ஐக்கிய முன்னணியை விட்டுப் போக மாட்டார்கள் என்றும் அவன் நம்பினான்; மேலும், அப்படிச் செய்வதன் மூலம் புரட்சி லட்சியத்தைக் காப்பாற்ற முடியும் என்றும் அவன் நம்பினான். அதன் விளைவு என்னவெனில், கம்யூனிஸ்ட் கட்சி அதிகமான சலுகைகள் வழங்க வழங்க, பிற்போக்கு சக்திகள் மேலும்மேலும் கடிவாளமற்றவைகளாக மாறின. அதே சமயத்தில் வெகுஜன இயக்கம் திரும்பத் திரும்ப இடையூறுகளைச் சந்தித்தது; மேலும், கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்த வலதுசாரி சந்தர்ப்பவாதிகளின் தவறான கொள்கையின் காரணமாக கடுமையான நஷ்டங்களையும் சந்தித்தது.

வடக்கத்திய படையெடுப்புக் காலத்தில் ஏற்கனவே எழும்பியிருந்த அல்லது இன்னும் எழும்பிக் கொண்டிருந்த விவசாயப் போராட்டங்களுக்கு ஆதரவாக, ஒரு துப்புத் துலக்கலைச் செய்வதற்காக தோழர் மா சே-துங் 1927 ஜனவரியில் ஹுன்னானுக்குச் சென்றார். முதல் புரட்சிகரமான உள்நாட்டு யுத்த காலகட்டத்தில், மிக முக்கியமான நூலான "ஹுன்னானின் விவசாயிகள் இயக்கம் பற்றிய பரிசீலனை அறிக்கை" என்ற நூலை எழுதினார் தோழர் மா சே-துங் விவசாயிகளின் வீரம் செறிந்த செயல்களையும் புரட்சிகரமான படைப்புகளையும் பாராட்டி எழுதினார். மேலும் பாட்டாளி வர்க்கத்தின் சரியான புரட்சிகரமான

பாதையை மேற்கொண்டு அந்த காலத்தில் விவசாயப் புரட்சியின் பல்வேறு அனுபவங்களையும் சாதனைகளையும் தொகுத்துக் கூறினார். முதல் புரட்சிகரமான உள்நாட்டு யுத்த கால கட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியினால் செய்யப்பட்ட விவசாயிகள் இயக்கப் பிரச்சனை பற்றிய விஞ்ஞான ரீதியான பொதுமைப் படுத்தப்பட்டதொரு நூலாக இது இருந்தது.

முதலாவதாக, இந்த அறிக்கை சீனப் புரட்சியில் விவசாயி களின் பாத்திரத்தை முழுமையாக மதிப்பீடு செய்தது.

சீனாவின்மீது ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்கு சமுதாய அடிப் படையாக பயன்பட்டு வந்திருந்த சகல நிலப் பிரபுத்துவ சக்தி களுக்கு எதிராக விவசாயப் புரட்சி திசை திருப்பப்பட்டிருந்தது. நிலப் பிரபுத்துவத்திற்கு எதிரான போராட்டம் சீன விவசாயி களின் வரலாற்று ரீதியானதொரு பணியாக இருந்தது. விவசாயப் புரட்சியை உற்சாகமாகப் பாராட்டியதில் தோழர் மாசே-துங் அதனுடைய மகத்தான முக்கியத்துவத்தை தெளிவாக ஊர்ஜிதம் செய்தார். ஏனெனில், சீன வரலாற்றில் ஆயிரக்கணக் கான ஆண்டுகளாக நடைபெற்ற தொடர்ச்சியான விவசாயிகள் எழுச்சியினாலும் மற்றும் டாக்டர் சன்யாட் - சென்னின் நாற்ப தாண்டு கால புரட்சிப் போராட்டத்தினாலும் பூர்த்தி செய்யப் படாமல் விட்டு வைக்கப்பட்டிருந்த ஒரு கடமையை அது நிறை வேற்றவிருந்தது.

அந்நேரத்தில், விவசாய இயக்கம் "ஒரு பயங்கரமான குழப்ப மாக" இருந்தது என்று நிலப்பிரபுத்துவ வர்க்க நலன்களை பிரதி நிதித்துவப்படுத்திய சில வதந்திகள் இருந்தன. ஆனால் சீனாவி லிருந்த பல கோடிக் கணக்கான விவசாயிகளின் நலன்களை பிரதி நிதித்துவப் படுத்திக் கொண்டிருந்த தோழர் மா சே - துங் அந்த இயக்கத்தை "உண்மையிலேயே மிகவும் நல்லதொரு இயக்கம்" என்று பாராட்டினார். புரட்சி, கிராமப் புறங்களில் பலமான தொரு புயலைப் போல் எழும்பும் என்றும், எவ்வளவு பலமான சக்தியினாலும் அதனைத் தடுத்து நிறுத்த முடியாதென்றும் அவர் சுட்டிக் காட்டினார். அது சகல ஏகாதிபத்திய சக்திகளை யும், நிலப்பிரபுத்துவ சக்திகளையும் அவைகளுடைய சவக் குழி களுக்குள் கொண்டு சேர்க்கும். சகல அரசியல் கட்சிகளும் புரட்சி கரமான விவசாயிகளுக்கு முன்பு சோதிக்கப்படுவதற்காகவும் மற்றும் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்காகவோ அல்லது நிராகரிக்கப்படுவதற்காகவோ நிற்க வேண்டியிருக்கும். பின்வரும் மூன்று பாதைகளில் ஒரு பாதையை அவர்கள் விரைவாக தேர்ந்

தெடுக்க வேண்டியிருக்கும்.

அவை : ''அவர்களுக்குத் தலைமை தாங்கி அவர்களை வழி நடத்திச் செல்லுவதா? அல்லது அவர்களுடைய பின்னணியில் பின்தொடர்ந்து சென்று அவர்களை நையாண்டி செய்தும் விமர்சித்துக் கொண்டும் இருப்பதா? அல்லது அவர்களை எதிரிகளாக எதிர் நோக்கிக் கொண்டிருப்பதா?''[2] சீனப் பாட்டாளி வர்க்கத்தின் சார்பாகவும் அதனுடைய கட்சியின் சார்பாகவும் தோழர் மாசே-துங் முதல் பாதையைத் தேர்ந்தெடுத்தார். இந்த முறையில் விவசாயிகளின் உண்மையான தலைவனாக பாட்டாளி வர்க்கம் இருப்பதை அவர் சுட்டிக் காட்டினார்.

விவசாயிகள் பல்வேறு பகுதிகளைக் கொண்டவர்களாக இருந்தனர்; அவர்களிடையே கிராமப்புற மக்கள் தொகையில் பெரும்பான்மையோராக அமைந்திருந்த ஏழை விவசாயிகள் மிகப் புரட்சிகரமான சக்தியாக இருந்தார்கள். பணக்கார, நடுத்தர மற்றும் ஏழை விவசாயிகள் புரட்சியின்பால், பல்வேறு போக்குகளைக் கொண்டிருந்தார்கள். பணக்கார விவசாயிகள் புரட்சிக் காலம் முழுவதிலும் செயலற்றவர்களாக இருந்தார்கள். அதே சமயத்தில் நடுத்தர விவசாயிகள் ஊசலாடிக் கொண்டிருந்தார்கள். ஊசலாடிக் கொண்டிருந்த போதிலும், பணக்கார விவசாயிகளைப் போலல்லாமல், புரட்சி அதனுடைய உச்சக்கட்டத்தில் இருந்த போது அவர்கள் புரட்சிக்குள் ஈர்க்கப்பட முடியும். கிராமப்புறத்தில் ஏழை விவசாயிகள் பிரதான சக்தியாக இருந்தார்கள். கிராமப்புறம்தான் எப்போதுமே மிகக் கடுமையான போராட்டத்தை நடத்தி வந்தது. புரட்சியின் மூதுகெலும்பாகவும் முன்னணியினராகவும் மிக முன்னணியில் நின்ற வீரர்களாகவும் அவர்கள் திகழ்ந்தார்கள். மிகமிகப் புரட்சிகரமானவர்களாக இருந்தமையால், விவசாய சங்கங்களில் அவர்கள் தலைமையை வென்றிருந்தார்கள். மேலும் மிகமிக அடிமட்டத்தில் நடைமுறையில் எல்லா தலைமைப் பதவிகளையும் அவர்கள் வென்றிருந்தார்கள். அவர்கள் வீறு கொண்டெழுந்து, அதிகாரத்தைத் தங்கள் கரங்களுக்கு எடுத்துக் கொண்டார்கள். மற்றும் நடுத்தர விவசாயிகளோடு ஒன்று சேர்ந்து கொண்டார்கள். இந்த முறையில் பணக்கார விவசாயிகளை நடுநிலை வகிக்கும்படிச் செய்தார்கள். தோழர் மாசே-துங்கின் வார்த்தைகளில், ''ஏழை விவசாயிகள் இல்லாமல் புரட்சி இருக்கவே முடியாது. அவர்களை நிராகரிப்பது புரட்சியை நிராகரிப்பதாகும். அவர்களைத் தாக்குவது புரட்சியைத் தாக்குவதாகும்.''[3] ''முரடர்

களின் இயக்கம்'' மற்றும் ''சோம்பேறி விவசாயிகளின் இயக்கம்'' என்ற அவதுறான வார்த்தைகள் எதிர்ப்புரட்சி நிலச்சுவான் தார்களால் மற்றும் கனதனவான் கூட்டத்தினால் ஏழை விவ சாயிகளின் மீது அவர்களது மிதமிஞ்சிய விஷமத்தனமான தாக்குதலில் பயன்படுத்தப் பட்டன.

இரண்டாவதாக, ஒரு புரட்சிகரமான அரசாங்கத்தை நிலை நிறுத்துவதற்கும் மற்றும் விவசாயிகளின் ஆயுதமேந்திய படை களை ஏற்பாடு செய்வதற்கும் இந்த அறிக்கை தைரியமாக வெகு ஜனங்களை அணிதிரட்டுவது என்ற புரட்சிகரமான கருத்தை பல மாக ஆதரித்தது. கிராமப்புரத்தில் நடைபெற்ற உலகைக் குலுக்கும் மாற்றங்கள், ''எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றுவதென்றும்'', ''வெகுதூரம் போவதென்றும்'' மற்றும் ''அத்துமீறியதென்றும்'' சீர்திருத்தவாதிகளால் கருதப்பட்டன. எனினும், தோழர் மாசே-துங் இத்தகைய மாற்றங்கள் புரட்சியில் தவிர்க்க முடியாதவை என்று சுட்டிக்காட்டினார். முதலாவதாக நிலப்பிரபுக்களின் அடக்கு முறையை எதிர்த்து விவசாயிகள் கலகத்தில் கிளம்பியிருந்தார்கள். மேலும், அவர்களது கலகத்தின் பலாத்காரம் இயல்பாகவே அவர்கள் அனுபவித்திருந்த ஈவிரக்க மற்ற ஒடுக்கு முறைக்கு விகிதாச்சார ரீதியில் இருந்தது. புரட்சியின் அவர்களது திசைவழி தவறாகவே இருந்ததில்லை. ''யார் மோசமானவர்களாக இருக்கிறார், மற்றும் யார் மோச மானவர்களாக இருக்கவில்லை, யார் மிக ஈவிரக்க மற்றவர்களாக இருக்கிறார், மற்றும் யார் குறைந்த அளவில் ஈவிரக்க மற்றவராக இருக்கிறார், யார் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டியவர் என்பதைப் பற்றி விவசாயிகள் முழுமையான தெளிவான கணக்குகளை வைத்திருக்கிறார்கள்; மற்றும் குற்றத்திற்கும் தண்டனைக்குமிடையே எந்தவிதமான குறைபாடும் மிகமிக அரிதாகவே இருந்துள்ளது''[4]. இரண்டாவதாக, ஒரு புரட்சியில் புதிய சக்திகள் பழைய சக்திகளை ஒடுக்காமல் வளர முடியாது; ஆகவே புரட்சிகரமான நடவடிக்கையின் ஒரு காலக் கட்டத்தில் ஒரு பலாத்கார்ரமான புரட்சிகரமான உயர்வான அலை இருப்பது அவசியமாக இருந்தது. மேலும் விவசாயிகளின் முழுமையான அதிகாரத்தை நிலை நிறுத்துவதும் அவசியமாக இருந்தது.

கிராமப்புறத்தில் பத்தாம்பசலி நிலப் பிரபுத்துவத்திற்கு எதிரான போராட்டம் கடுமையானதொரு வர்க்கப் போராட்ட மாக இருந்தது. இந்தப் போராட்டம் பத்தாம்பசலி நிலப்பிரபுத்

துவ சக்திகளுக்கும் ஜனநாயக சக்திகளுக்குமிடையே இறுதிப் பேராட்டமாகவும் இருந்தது. புரட்சிவாதிகளுக்கும் சீர்திருத்த வாதிகளுக்குமிடைய இருந்த அடிப்படையான வித்தியாசம் புரட்சியின்பால் அவர்களுக்கிருந்த உருப்படியான, அல்லது எதிர்மறையான போக்கில் அடங்கியிருந்தது. சீர்திருத்தவாதிகள், விவசாயிகளின் புரட்சிகரமான நடவடிக்கைகளைத் தடுக்க முயற்சித்தார்கள். நிலப்பிரபுத்துவ அமைப்பின் வரம்புகளுக்குள் மட்டுமே அவர்களை செயல்பட அனுமதித்துக் கொண்டிருந் தார்கள். நிலப்பிரபுத்துவ அமைப்பிற்கு ஒட்டுப் பிளாஸ்திரி போடுவதற்கு மட்டுமே அவர்கள் விவசாயிகளை அனுமதித்தார் கள்; ஆனால் பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவ அமைப்பை அழிப்பதற்கு அவர்கள் விவசாயிகளை அனுமதிக்க மாட்டார்கள். தோழர் மா சே-துங் இந்த பிற்போக்கு கருத்தோட்டத்தைப் பின்வருமாறு கூறி மறுத்துரைத்தார்: "ஒரு தவறை சரிசெய் வதற்கு முறையான வரம்புகளை மீறுவது அவசியமாக உள்ளது. மேலும் முறையான வரம்புகளை மீறாமல் தவறை சரிசெய்ய முடியாது"[5] அதாவது நிலப்பிரபுத்துவ அமைப்பு வெகுஜன புரட்சிகரமான முறைகளால் மட்டுமே தூக்கியெறியப்பட முடியும். சீர்திருத்தவாத முறைகளினால் தூக்கியெறியப்பட முடியாது என்பதாகும்,

நிச்சயமாக, அவர்களது போராட்டத்தில் வெகுஜனங்கள் சில தவறுகளைப் புரியலாம். ஆனால் அந்த காரணத்திற்காக ஒருவர் அவர்களது நடவடிக்கைகளை ஒரு பொழுதும் கட்டுப் படுத்தக்கூடாது. அவர்களது உற்சாகத்தை மந்தமாக்கக் கூடாது. அல்லது அவர்களது போராட்டத்தின் முக்கியத் துவத்தை முற்றிலும் மறுக்குமளவிற்கு போகவும் கூடாது. இங்கு புரட்சிகரமான தலைமை, தலையாய முக்கியத்துவம் உடைய தாக இருந்தது. சீனக் கம்யூனிட் கட்சி விவசாயிகளின் தலைமை யில் அணிவகுத்துச் சென்று அவர்களுக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்ல வேண்டும்.

புரட்சி ஆரம்பமாகி இருக்கும் போதுதான் — அதற்கு முன்பாக அல்ல — ஒரு புரட்சியை எப்படி நடத்துவது என்பதை ஒருவர் கற்றுக் கொள்கிறார். வெகுஜனங்களின் சரியான ஆக்கப் பூர்வமான கருத்துக்களில் நம்பிக்கை வைத்து, அவர்களது புரட்சிகரமான அனுபவத்தைத் தெகுத்துரைத்து, வெற்றியை நோக்கி சரியான பாதையில் அவர்களை வழிநடத்திச் செல்வது தலைவர்களின் கடமையாகும். பிரபுக்களின் கூட்டத்தினால்

"முரடர்கள்" என்று முத்திரைக் குத்தப்பட்டிருந்த கீழ் மட்டங்களில் இருந்த விவசாயங்களின் சில தலைவர்கள், பல்வேறு அளவுகளில், பழைய சமுதாயத்தினால் வளர்க்கப்பட்டிருந்த மோசமான கருத்துக்களையும் பழக்க வழக்கங்களையும் பெற்றிருந்தார்கள் என்பது உண்மைதான். ஆனால் புரட்சிப் புயலில் தங்களது கரங்களுக்குள் அதிகாரத்தை அவர்கள் மேற்கொண்டபோது, அவர்களில் பலர் மீண்டும் வார்த்தெடுக்கப் பட்டிருந்தார்கள். "அவர்களே சக்தி வாய்ந்த முறையில் சூதாட்டத்தைத் தடுத்துக் கொண்டும், கொள்ளைக்காரத் தனத்தை ஒழித்துக் கொண்டும் இருக்கிறார்கள். விவசாய சங்கம் சக்திமிக்கதாக இருக்குமிடத்தில், சூதாட்டமும் கொள்ளையும் மறைந்துள்ளன. சில இடங்களில் சாலைகளில் தவறவிடப்பட்ட பொருட்களை மக்கள் எடுத்துக் கொள்வதில்லை என்பதும் இரவில் கதவுகள் பூட்டப்படுவதில்லை என்பதும் முற்றிலும் உண்மைதான். ஹெங்ஷானில் நடைபெற்ற ஒரு கணக்கெடுப்பின் படி 85 சதவீத ஏழை விவசாய தலைவர்கள் இப்பொழுது முற்றிலும் சீர்திருத்தப் பட்டவர்களாகவும், திறமையானவர்களாகவும், ஆற்றல் மிக்கவர்களாகவும் மாறியிருக்கிறார்கள்." [6] இங்கு விவசாயி வெகுஜனங்கள் புரட்சிகரமான அற்புதங்களைச் செய்யும் திறன் படைத்தவர்களாக இருக்கிறார்கள் என்ற உண்மையையும், அவர்களது பலம் சோர்வு அடைய முடியாத அளவிலானது என்ற உண்மையையும் தோழர் மா சே-துங் நிரூபித்தார். பழைய சமுதாயத்தை மாற்றும் அதே சமயத்தில், அவர்கள் தங்களையும் வார்த்தெடுத்துக் கொண்டார்கள். இது வெகு ஜனங்களின் புரட்சிகரமானதொரு படைப்பாகவும், அவர்களது சுயமான புதிய திசைவழியாகவும் இருந்தது.

கிராமப் புறங்களில் புரட்சிகரமானதொரு அரசாங்கத்தையும் மற்றும் விவசாயிகளின் ஒரு படையையும் நிலைநிறுத்துவதன் அவசியத்தை இந்த அறிக்கை தெளிவாகச் சுட்டிக் காட்டிற்று. ஒரு புரட்சி என்பது பலாத்காரமானதொரு செயல் என்பதை அது சுட்டிக் காட்டிற்று. அந்தப் பலாத்காரச் செயலின்மூலம் ஒடுக்கப்பட்ட வர்க்கம், ஒடுக்கிக் கொண்டிருக்கும் வர்க்கத்தின் ஆட்சியைத் தூக்கி எறிந்தது என்றும் அது சுட்டிக் காட்டிற்று

ஹுன்னான் கிராமப்புறத்தில் நடைபெற்ற புரட்சி இப்படிப்பட்டதொரு செயலாகத்தான் இருந்தது. இந்த நடவடிக்கையின்மூலம் விவசாயிகள் நிலப்பிரபுக்களின் அதிகாரத்தைத்

தூக்கியெறிந்து புரட்சிகரமானதொரு ஆட்சியை நிலைநிறுத்தினார்கள். அவர்களுடைய விவசாய சங்கம் அதிகாரத்தின் ஒரே அமைப்பாக மாறிற்று. ''அனைத்து அதிகாரமும் விவசாய சங்கத்திற்கே'' என்று ஹூன்னானில் இருந்த நூறு லட்சம் விவசாயிகளின் கோஷமாக இருந்தது. அதிகாரத்தின் உச்சத்திலிருந்த விவசாய சங்கம், நிலப்பிரபுக்கள் தங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதைத் தடை செய்தது; அதனுடைய சொந்த உத்தரவுகளை உறுதியாக நிறைவேற்றியது. பழைய சமுதாயத்தில் எந்தவிதமான அந்தஸ்தும் இல்லாதிருந்த மக்கள் இப்பொழுது நிமிர்ந்து நின்று அதிகாரத்தை தமது கரங்களுக்குள் எடுத்துக் கொண்டார்கள்.

புரட்சி அரசாங்கத்தின் புராதன தளம் அதனுடைய புரட்சிகரமான ஆயுதமேந்திய படைகளாகும்; இப்படைகள் மட்டுமே விவசாயிகளை அவர்களது சொந்த நலன்களை பாதுகாத்துக் கொள்ளும்படி செய்ய முடிந்தது; மேலும் சகல பிற்போக்குவாதிகளின் கலகங்களையும் ஒடுக்கும்படியும் செய்யமுடிந்தது. அச்சமயம் ஹூன்னானில் இருந்த விவசாயிகளின் ஆயுதமேந்திய படைகள் இரண்டு பகுதிகளாக இருந்தன. ஒன்று நிலப்பிரபுக்களின் புனரமைக்கப்பட்ட ஆயுதப் படைகள், மற்றொன்று விவசாயிகளால் தங்களாலேயே அமைத்துக் கொள்ளப்பட்ட ஈட்டிப் படைகள். ஈட்டிப் படைகள் நிலப்பிரபுக்களின் புனரமைக்கப்பட்ட ஆயுதப் படைகளைக் காட்டிலும் மிக அதிகமான சக்தி வாய்ந்தவை; அதனுடைய பலம் 30-லிருந்து 80 ஆயிரம் வரையிலும் கிராமத்திற்கு கிராமம் வேறுபட்டிருந்தது. இப்படிப்பட்ட ஆயுதப்படை மாநிலம் முழுவதிலும் நிறுவப்பட வேண்டுமென்றும், ஒவ்வொரு இளம் விவசாயிக்கும் ஒரு ஈட்டி கொடுக்கப்பட வேண்டுமென்றும், இவ்வாறு செய்வதன்மூலம் புரட்சியின் முழுமையான வெற்றியைப் பெறுவதற்கு ஆயுதப் படைகளைப் பலப்படுத்த முடியும் என்றும் தோழர் மாசே-துங் ஹூன்னானில் இருந்த புரட்சிகரமான அதிகாரிகளுக்கு நினைவு படுத்தினார்.

வெகுஜனங்களை அணி திரட்டும் அதே நேரத்தில், கட்டளை வாதத்தையும், வால்பிடிக்கும் வாதத்தையும் எதிர்ப்பது அவசியமாக உள்ளது. ஏனெனில் இவ்விரண்டு போக்குகளுமே வெகுஜனங்களிடமிருந்து அன்னியமாவதைக் காட்டுகின்றன. கட்டளைவாதம் என்பது வெகுஜனங்களின் அரசியல் உணர்வுக்கு அப்பால் செயல்படுவது என்று பொருளாகும்.

விருப்பமான தன்மை என்ற கோட்பாட்டினை மீறுவது என்று பொருளாகும். மேலும், வெகுஜனங்களின் சரியான நடவடிக்கைகளில் எந்தவிதமான நம்பிக்கையும் கொள்வதில்லை என்று பொருளாகும். வால்பிடிக்குய் வாதம் என்றால், வெகு ஜனங்களின் அரசியல் உணர்வுககுப் பின்னால் மிகவும் பின்தங்கி நிற்பது என்று பொருளாகும். அவர்களை ஒரு அடி மேலும் முன் நோக்கி தலைமை தாங்கிச்செல்லும் கோட்பாட்டினை மீறுவது என்று பொருளாகும். மேலும், அவர்களது சிந்தனையையும், அனுபவங்களையும் குவித்து அவர்களை வெற்றியை நோக்கி சரியான பாதையில் தலைமை தாங்கிச்செல்லத் தவறுவது என்று பொருளாகும்.

கம்யூனிஸ்ட் கட்சியை இதர அரசியல் கட்சிகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிற குணாதிசயங்களில் ஒன்று, வெகுஜனங்களோடு நெருக்கமான பிணைப்பைப் பெற்றிருப்பதாகும். இந்த குணாம்சம் விவசாயப் புரட்சியின் சீனப் பாட்டாளி வர்க்கத் தலைமைபற்றிய தோழர் மாசே-துங்கின் கருத்துக்களில் முழுமையாக விளக்கிக் காட்டப்பட்டுள்ளது. சீன பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியின் பிரதான உள்ளடக்கமாக விவசாயப் புரட்சி அமைந்திருப்பதாக அவர் விஞ்ஞான ரீதியாக மதிப்பீடு செய்தார். மேலும், அதனுடைய அடிப்படை சக்தியாக விவசாயிகள் அமைந்திருக்கிறார்கள் என்றும், புரட்சிகரமான முறையில் அரசாங்கத்தை நிலைநிறுத்துவதற்கும் கிராமப்புறத்தில் அவர்களது சொந்தப் படையினை நிலைநிறுத்துவற்தகும் விவசாய வெகு ஜனங்களை தைரியமாக அணிதிரட்டும் அடிப்படையான கருத்தினை இந்த முறையில் உருவாக்கியும் அவர் விஞ்ஞான ரீதியாக விவசாயப் புரட்சியை மதிப்பீடு செய்தார். விவசாயப் புரட்சி பற்றியபிரச்சனையும், புதிய ஜனநாயகப் புரட்சிபற்றிய கருத்தின் ஒரு உள்ளடக்கமாக திகழ்ந்தது.

''ஹுனானில் விவசாய இயக்கப் பரிசீலனைப்பற்றிய அறிக்கை'' மகத்தான முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று ரீதியானதொரு ஆவணம் ஆகும். தொழிலாளி வர்க்கம் விவசாயிகளை தலைமை தாங்கிச் செல்லமுடியுமா முடியாதா என்பதின் மீதுதான் சீனப்புரட்சியின் வெற்றி சார்ந்து நின்றது என்று தோழர் மாசே-துங், அவரது ஈடு இணையற்ற புரட்சிகரமான விஞ்ஞான ரீதியான உணர்வுடன், சுட்டிக் காட்டினார். இந்த முறையில், இந்நூல் விவசாயிகளின்மீது சீனப் பாட்டாளி வர்க்கத் தலைமைபற்றிய ஒரு துறை நூலாக (Classic) மாறியுள்ளது.

**3. சீனப் புரட்சியில் ஏகாதிபத்தியத் தலையீடு தீவிரமடைதல். பிரிட்டிஷ் சலுகை பெற்ற பிரதேசங்களை மீட்பதற்காக ஊகான் மற்றும் கியூசியாங் தொழிலாளர்கள் நடத்திய போராட்டம். ஷாங்காய் தொழிலாளர்களின் மூன்று பேரெழுச்சிகள். நான்கிங் பிடிக்கப்படுவதும், நான்கிங்மீது ஆங்கிலோ-அமெரிக்க குண்டு வீச்சு சம்பவமும். ஏப்ரல் 12ஆம் தேதி நடைபெற்ற சியாங்காய்-ஷேக்கின் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகள்.**

வடக்கத்திய படையெடுப்பு சேனையின் வெற்றிகரமான முன்னேற்றத்தினாலும், தொழிலாளி, விவசாயி வெகுஜனங்களின் புரட்சிகரமான பேரெழுச்சியினாலும், பதட்டமடைந்திருந்த ஏகாதிபத்தியவாதிகள், சீனப்புரட்சியில் அவர்களது தலையீட்டினைத் தீவிரப்படுத்தினார்கள்.

இத்தலையீடு இரண்டு உருவங்களை எடுத்தன. அவை: சீன மக்களின் போராட்டத்தைக் காட்டுமிராண்டித்தனமான படுகொலையால் ஒடுக்குதல் மற்றும் வெற்றிகரமான புரட்சி இயக்கத்தை எதிர்ப்பதற்கு எதிர்ப்புரட்சி சக்திகளுக்கு உதவி செய்தல்.

பிரிட்டிஷ், ஜப்பானிய மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் நிதி, ராணுவம் மற்றும் தார்மீக ஆதரவு இல்லாமல், வடக்கத்திய யுத்தப் பிரபுக்களான ஊபெய்-ஃபூ, சன்சுவான் - ஃபாங், சாங்சோ-லின் மற்றும் சாங் சங்-சங் ஆகியோர், புரட்சியை எதிர்ப்பதற்கு ஒரு போதும் ஒன்று பட்டிருக்க முடியாது. இது ஏகாதிபத்தியவாதிகள் தரப்பில் அத்து மீறிய தலையீடாக இருந்தது. மேலும் யுத்தப் பிரப்புக்களை ஒழித்துக்கட்டுவதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்த சீனப்புரட்சி, ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டுக் கொள்கைகளையும் தாக்கிற்று.

குவாங்டுங் புரட்சிப்படை யாங்ட்சி பள்ளத்தாக்கை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த போது, வடக்கத்திய யுத்தப் பிரபுக்களைக் காட்டிலும் புரட்சியை நசுக்குவதற்கு மிகவும் சக்தி வாய்ந்த கைக்கூலிகளைக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது என்பதை ஏகாதிபத்தியவாதிகள் பார்த்தார்கள். ஆகவே அவர்கள் மிகவும், அதிகமான விஷமத்தனமான நடவடிக்கைகளிலும் கூட இறங்கினார்கள். புரட்சிகரமான ஐக்கிய முன்னணிக்குள்ளே கூட்டாளிகளைத் தேடிக்கொண்டிருந்தார்கள். உள்ளேயிருந்து புரட்சியை நாசம் செய்யும் பொருட்டும் ஐக்கிய முன்னணியைச் சீர்குலைக்கும் பொருட்டும் புரட்சிகர அணிகளுக்குள் மறைந்-

திருந்த பிற்போக்குவாதிகளோடு இணைந்து வேலை செய்ய முடியும் என்று அவர்கள் நம்பினார்கள்.

1927 ஜனவரி 3ஆம் தேதியன்று, வடக்கத்திய படையெடுப்பின் வெற்றியைக் கொண்டாடுவதற்காகவும், தேசிய அரசாங்கத்தை வடக்கே கொண்டு சென்றதைக் கொண்டாடுவதிற்காகவும், ஊகான் அரசு ஹாங்கோவில் ஒரு வெகுஜனக் கூட்டத்தை நடத்திற்று. ஹாங்கோவில் பிரிட்டிஷ் சலுகைபெற்ற பிரதேசத்தின் எல்லையில் ஒரு பேச்சாளர் பேசிக் கொண்டிருந்தார் அப்போது கூட்டத்தைக் கலைப்பதற்கு பிரிட்டிஷ் கடற்படையினர் தரை இறக்கப்பட்டனர். அவர்கள் கூட்டத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களைத் துப்பாக்கி முனையால் தாக்கி பலரையும் கொல்லவும், காயப்படுத்தவும் செய்தார்கள். பிரிட்டிஷ் அரசுவுடன் பலமானதொரு ஆட்சேபணையைத் தாக்கல் செய்யும்படி சீன அரசை வலியுறுத்துவதற்காக ஹாங்கோவ் மக்கள் ஜனவரி 5இல் ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தி பிரிட்டிஷ் சலுகை பெற்ற பகுதியைக் கைப்பற்றி, அப்பகுதியை சீன அரசிடம் திருப்புக் கொடுக்கும்படி பிரிட்டிஷ் அதிகாரிகளை நிர்பந்தித்தார்கள்.

ஜனவரி 6ஆம் தேதி அன்று கியுசியாங்கியில் சில சீனத் தொழிலாளிகளை பிரிட்டிஷ் சிப்பாய்கள் சுட்டுவிட்ட பிறகு, அங்கிருந்த பிரிட்டிஷ் சலுகை பெற்றிருந்த பகுதியை அப்பகுதி மக்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். இப்பகுதியும் பின்னர் சீன அரசிடம் ஒப்புடைக் கப்பட்டது. ஹாங்கோவிலும் மற்றும் கியுசியாங்கிலும் இருந்த சலுகை பெற்ற பகுதிகள் மீட்கப்பட்ட விஷயம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்ட வரலாற்றிலேயே இதுவரை கண்டிராததொரு நிகழ்ச்சி ஆகும்.

ஊகானைக் கைப்பற்றிய பிறகு சன்சுவான் பாங்கின் படைகளை எதிர்த்துப் போராடுவதற்காக வடக்கத்திய படையெடுப்புச்சேனை கியாங்சி, ஃபூகியன் மற்றும் அன்வெய்யை நோக்கித் திரும்பிற்று. அதனுடைய முன்னேற்றத்துடன் ஒருங்கிணைக்கும் பொருட்டு கட்சினால் தலைமை தாங்கப்பட்ட தொழிலாளிகள் மூன்று பேரெழுச்சிகளை நடத்தி நகரத்தை விடுதலைச் செய்தார்கள். இந்த நகரம் பல்லாண்டுகளாக ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பின் ஒரு கோட்டையாகவும், யுத்தப் பிரபு ஆதிக்கத்தின் ஒரு கோட்டையாகவும் இருந்து வந்தது.

1926 மே 30ஆம்தேதியன்று, ஆயுதம் ஏந்திய பேரெழுச்சிக்கு முன்னால், தொழிலாளி வர்க்கத்தினால் தலைமை தாங்கப்பட்

டிருந்த ஷாங்காய் நகர மக்கள் பெரியதொரு அளவிலான ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆர்ப்பபட்டத்தை நடத்தினார்கள். இதைப் பின்தொடர்ந்து ஷங்காய் தொழிற்சங்கத் தலைமையின் கீழ் பெரியதொரு வேலை நிறுத்தம் நடை பெற்றது. ஜுன் முதல் ஆகஸ்ட் வரை 2 லட்சம் பேர் வேலை நிறுத்தம் செய்தார்கள். செப்டம்பரில் கூட 30 ஆயிரம் தொழிலாளர்கள் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டிருந்தார்கள். கூட்டம் கூடும் சுதந்திரம், சங்கம் வைக்கும் உரிமை, குறைந்தபட்சக்கூலி, வேலை நேரக் குறைப்பு, வேலை நிலைமைகளில் அபிவிருத்திகள் போன்ற பல கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் செய்தார்கள். முதலாளிகள் தங்களுடைய கடைகளையும், தொழிற்சாலைகளையும் அடைத்து பதிலுக்குத் தாக்கினார்கள். மற்றும் ஷாங்காய் தொழிற்சங்க சம்மேளனத்தைத் தடை செய்யும்படி யுத்தப் பிரபுக்கள் அரசை நிர்ப்பந்தித்தார்கள். வேலை நிறுத்தத்தில் பங்குபெறாதவர்களைக் கூட அவர்கள் வேலை நீக்கம் செய்தார்கள்; அல்லது காரணமின்றி சம்பள வெட்டு செய்தார்ாள். தொழிலாளிகளுக்குத் தொல்லை கொடுப்பதற்காக அவர்கள் ஆத்திர மூட்டுவோரையும் கூலிக்கு அமர்த்தினார்கள். ஆனால், இவற்றின் விளைவாக ஷாங்காயில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் நிற்கவில்லை. ஆகஸ்ட் மாத பின்பாதியிலிருந்து சீனத் தொழிலாளிகளைக் கொன்று குவித்திருந்த ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கெதிராக வேலை நிறுத்த இயக்கம் திசைத் திருப்பப்பட்டது. ஷாங்காய் பஞ்சாலைத் தொழிற்சங்க சம்மேளனத்தினால், அறைகூவல் விடுவிக்கப்பட்ட வேலை நிறுத்தம், போராடுவதற்கான தொழிலாளிகளின் உறுதியை மேலும் பலப்படுத்தி அவர்களுடைய ஸ்தாபன ரீதியான பலத்தையும் அதிகரித்தது.

1926 அக்டோபரில் வடக்கத்திய படையெடுப்புச் சேனையினால் ஊசாங் கைப்பற்றப் பட்டதனால் ஊய்பெய்-ஃபூ அவனுடைய கடைசி தளத்தையும் இழந்துவிட்டான். பின்னர், படையெடுப்பு சேனையின் பிரதானபடை, கியாங்சியை நோக்கிச் சென்றது. அங்கு சுவான்-ஃபாங்கின் பெருப்பகுதிப் படைகளால் அது எதிர் நோக்கப்பட்டது. இடைக்காலத்தில் சிகியாங்கில், சன்னின் கீழ் அதிகாரிகளில் ஒருவனான, புரட்சியின்பால் அனுதாபம் கொண்டிருந்த ஷியா-சாவோ ஹாங்சோவில் சன்னை பகிரங்கமாகக் கண்டனம் செய்து, ஷாங்காயின் சுற்றுப் புறங்கள்ள நோக்கி அணிவகுத்துச் சென்றான். சீனக் கம்யூனிஸ்ட்

கட்சியின் தலைமையின்கீழ் ஷாங்காய் தொழிலாளிகள் அக்டோபர் 23இல் முதல் ஆயுதம் ஏந்திய பேரெழுச்சியைத் துவக்கினார்கள். இந்த எழுச்சிக்கு முன், அவர்கள் 1,130 தொழிலாளர்களைக் கொண்ட போராடும் ஒரு படைப் பிரிவினை ஏற்பாடு செய்தார்கள்; அவர்களிடையே 130 பேர் மட்டும்தான் ஆயுதந்தாங்கி இருந்தார்கள். அதே நேரத்தில் எதிரியிடம் 3,000 காலாட்படையும் நகரத்தின் போலீசாரும் மற்றும் ஷாங்காய் அருகில் யாங்ட்சி நதிக்கரைகளில் ஒரு பெரும் படைப்பிரிவும் இருந்தது. போதுமான தயாரிப்புகள் இல்லாமை யாலும், ஷியா-சாவின் தோல்வியினாலும் அந்த பேரெழுச்சி தோல்வியில் முடிவடைந்தது.

வடக்கத்தியப் படையெடுப்பு சேனையினால் ஹாங்-சோவ் வும், சியாசிங்கும் கைப்பட்ட பிறகு படையெடுப்பு சேனையின் முன்னேற்றத்துடன் ஒருங்கினைத்து 2-வது ஆயுதம் ஏந்திய பேரெழுச்சியை நடத்த கட்சி தீர்மானித்தது. 1927 பிப்ரவரி 19ஆம் தேதியன்று ஷாங்காய் தொழிற்சங்க சம்மேளனம் ஒரு பொது வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தும், அத னுடைய கோரிக்கையை பிரகடனம் செய்யும் ஒரு உத்தரவினைப் பிறப்பித்தது. முதல் நாளில் 1,50,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். இரண்டாவது நாளில் எண்ணிக்கை 2,70,000 ஆக உயர்ந்தது, 3வது நாளில் 2,50,000 ஆக உயர்ந்தது. 4-ஆவது நாளில் 3,60,000 ஆக உயர்ந்தது. வேலை நிறுத்தத்தின் முதல் நாளில் இருந்தே சர்வதேசக் குடியிருப்பின் ''ஷாங்காய் நகர் மன்றத்தோடு' குலாவிக்கொண்டு யுத்தப் பிரபு அரசாங்கம் நகர் முழுதும் 'வெள்ளை பயங்கர' ஆட்சியைத் திணித்தது. 4-வது நாளன்று (பிப்ரவரி 22) ஆயுதமேந்திய பேரெழுச்சி ஆரம்பமாயிற்று. கம்யூனிஸ்ட் கட்சி கோமிங்டாங் கட்சி, தொழிலாளிகள், வியாபாரிகள், மாணவர்கள் ஆகியோரின் பிரதிநிதிகளால் ஷாங்காய் குடிமக்களின் தற்காலிக புரட்சிக்குழு அமைக்கப்பட்டது.

எனினும், ஆயுதமேந்திய பேரெழுச்சிக்குச் சாதகமற்ற நிலைமைகள் அங்கே இருந்தன. முதலாவதாக, பிற்போக்கான பைசுங்-ஷி தலைமையிலிருந்த வடக்கத்திய படையெடுப்பு சேனையின் பிரிவுகள் ஷாங்காயைத் தாக்குவதை நிறுத்தி விட்டன. சன்னின் படைகளை எதிர்த்துப் போராடுவதற்குத் தொழிலாளிகளைத் தனிமையாக விட்டு விட்டனர். தொழிலாளி கள் ஒருவரையொருவர் துண்டு துண்டாக வெட்டிக் கொள்வார்

கள் என்ற நம்பிக்கையில் அவ்வாறு செய்தனர். இரண்டாவதாக, யுத்தப் பிரபுக்களின் ஆயுதப் படைகளின் (ஊசலாடிக் கொண்டிருந்த கடற்படையும், லீ பாவோ—சாங்கின் படைகளும்) மத்தியிலும் அல்லது இடைத்தட்டு வர்க்கங்களின் மத்தியிலும் கட்சி மிகக் குறைவாகவே வேலை செய்திருந்தது. உண்மையிலேயே, உள்ளுக்குள் இருந்தே எதிரியை சீர்குலையச் செய்வதற்கு இத்தகைய சக்திகள் வெற்றி பெற்றிருக்க முடியும். கட்சி தெருவிலுள்ள சாதாரண மக்களை அறைகூவி அழைக்கவில்லை. அது குட்டி முதலாளித்துவத்தைப் புறக்கணித்தது. மேலும் நியு யங்-சியன் மற்றும் யுஷியா - சிங் போன்ற பெருமுதலாளை மட்டும் சார்ந்திருந்தது. பிப்ரவரி 23-ஆம் தேதியன்று வேலை நிறுத்தம் மறுநாள் மதியம் 1 மணிக்கு வாபஸ் பெறப்படும் என்று தொழிற்சங்க சம்மேளனம் அறிவித்தது. இரண்டாவது பேரெழுச்சியும்தோல்வியில் முடிவடைந்தது.

பின்னர், மகத்தான மனோதைரியத்துடனும், விடாமுயற்சியுடனும், மிகப் பெரியதொரு மூன்றாவது பேரெழுச்சிக்கு கட்சி தயாரிப்பு செய்தது. தொழிற்சங்கங்களிலும் மற்றும் நகரத்திலுள்ள ஏழை மக்களிடையேயும், குட்டி முதலாளித்துவ வெகுஜனங்கள் மத்தியிலும் அது ஏராளமான அரசியல் வேலையையும், ஸ்தாபன வேலையையும் செய்தது. ஒரு மக்கள் அரசாங்கத்தை நிலைநாட்டுவது என்ற கோஷம், தொழிலாளி வெகு ஜனங்களிடையே பரப்பப்பட்டது. தொழிலாளி வர்க்கத்தினிடையே உறுதியானதொரு அமைப்பை உருவாக்குவதற்கு குட்டி முதலாளி வர்க்கம் தட்டி எழுப்பப்பட்டது. பெருமுதலாளி வர்க்கத்தோடு தொடர்பு கொண்டிருந்த அதே நேரத்தில், அதனை வெகுஜனங்களின் விருப்பத்திற்கு விட்டுக் கொடுக்கும்படியும், அதனுடைய சமரசக் கொள்கையைக் கைவிடும்படியும் கட்சி நிர்ப்பத்தித்தது.

1927 மார்ச் 21ஆம் தேதியன்று ஷாங்காய் அருகேயுள்ள லுங்குவாவை வடக்கத்திய படையெடுப்பு சேனை தாக்கிய போது ஷாங்காய் தொழிற்சங்க சம்மேளனம் ஒரு பொது வேலை நிறுத்தத்திற்கான மற்றொரு உத்தரவைப் பிறப்பித்தது. அந்த உத்தரவிற்கேற்ப 8 லட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். கட்சியின் தலைமையின்கீழ் ஆயுதம் தாங்கிய பேரெழுச்சி பின்வரும் ஏழு மாவட்டங்களில் ஆரம்பமாயிற்று. நான்ஷி, ஹாங்கி, பூட்டுங், ஊசுங், கிழக்கு ஷாங்காய், மேற்கு ஷாங்காய் மற்றும் ஷாபெய் பேரெழுச்சியின் ஆரம்ப கட்டத்

திலேயே தொழிலாளிகள் ரயில்வேக்களையும் மின்சாரத்தையும், தண்ணீர் சப்ளையையும் துண்டித்தார்கள். மேலும், போலீஸ் தலைமை அலுவலகத்தையும் டெலிபோன் மற்றும் தந்தி அலுவலகத்தையும் ஆக்கிரமித்தார்கள், வெகு ஜனங்களால் கோஷங்கள் முழங்கப்படுவதும், துப்பாக்கியால் சுடப்படுவதும் ஷாங்காய் முழுவதும் இடிமுழக்கம்போல் கேட்டன. ஆயுதமற்ற வெகுஜனங்கள் இப்பொழுது எதிரியிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றினார்கள். பிப்ரவரி 21ஆம் தேதி மதியம் வரையிலும் சாபெய் தவிர அனைத்து மாவட்டங்களும் கைப்பற்றப்பட்டிருந்தன. சாபெய் போராட்டம் மிகமிக கடுமையாக இருந்தது.

அப்போராட்டம் இரண்டு பகல்கள், ஒரு இரவு நீடித்தது 22ஆம் தேதி மாலை 6 மணி வரையிலும் வெற்றி கிட்டவில்லை ரஷ்ய வெண்படைகளும் பிரிட்டிஷ் ஆயுதமேந்திய வாகனங்களும் ஹோ பெய் - ஷாண்டுங் யுத்தப்பிரபுப் படைகளோடு அடுத்தடுத்துப் போராடிக் கொண்டிருப்பது காணப்பட்டன. பல்வேறு அஞ்சல் அலுவலகங்களைக் கைப்பற்றியப் பிறகு, தொழிலாளிகளும் மக்களும் டியன்டுங்கர் ரயில்வே நிலையத்தையும் வர்த்தக, பத்திரிகை மன்றத்தையும் கைப்பற்றினார்கள். இறுதிப் போராட்டம் வடக்கு ஸ்டேஷனைக் கைப்பற்றுவதில் குவிந்திருந்தது. தொழிலாளர்களின் ஆயுதப்படையினால் தொடுக்கப்பட்ட வீரஞ்செறிந்த தாக்குதல்களின் காரணமாகவும், போராட்டத்தில் பரவலான வெகுஜனங்கள் பங்கெடுத்ததின் காரணமாகவும், ஸ்டேஷன் கைப்பற்றப்பட்டு பிற்போக்குப் படைகள் முறியடிக்கப்பட்டன. இந்த முறையில், மூன்றாவது பேரெழுச்சி வெற்றி வாகை சூடிற்று. சீனாவில் மிகப் பெரும் வர்த்தகம் மற்றும் தொழில் நகரமான ஷாங்காய் நகரம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் மக்களாலும் தொழிலாளி வர்க்கத்தாலும் விடுதலை செய்யப்பட்டது. ஷாங்காய் மக்கள் அரசாங்கத்தின் அதிகாரிகளைத் தேர்வு செய்வதற்கு, கட்சி உடனடியாக ஷாங்காய் குடிமக்களின் ஒரு வெகுஜன அணிவகுப்பொன்றை நடத்தியது.

6வது படையினாலும் 2வது படையினாலும் வடக்கத்திய படையெடுப்பு சேனையின் இருபிரிவுகளாலும் 1927 மார்ச் 24இல் நான்கிங் விடுதலை செய்யப்பட்டது. அன்று இரவே, பிரிட்டிஷ், அமெரிக்கா, ஜப்பானிய மற்றும் பிரெஞ்சு யுத்தக் கப்பல்கள் நாங்கிங்கை பீரங்கி குண்டுகளால் தாக்கி, இரண்டாயிரம் வீரர்களையும் குடி மக்களையும் கொன்று குவிக்கவும் காயப்படுத்தவும் செய்தார்கள். சீன மக்களை பீரங்கிகளால் பயமுறுத்தி புரட்சியின் இதயத்தில் கலமையானதொரு அடிக்கொடுப்பது ஏகாப்

பத்தியவாதிகளின் குறிக்கோளாக இருந்தது.

நான்கிங் சம்பவம் சீனப் புரட்சியில் ஏகாதிபத்தியவாதிகள் தீவிரமாகத் தலையிடுவதற்கு ஓர் அறிகுறியாக இருந்தது. வெகு விரைவிலேயே இத்தகைய ஏகாதிபத்திய வாதிகளின் ஆதரவோடு சியாங்காய்-ஷேக் ஏப்ரல் 12ஆம் தேதியோடு எதிர்ப்புரட்சிகர மானதொரு ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தினான்.

வடக்கத்திய படையெடுப்பு சேன்ன யாங்ட்சி பள்ளத்தாக்கில் நுழைந்தபொழுது கோமிங்டாங் வலதுசாரியின் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகள் அப்பட்டமாக அதிகரித்தன. 1926 ஆம் ஆண்டு மழைக் காலத்தில் சியாங்காய்-ஷேக் நான்சாங்கிற்கு வந்து சேர்ந்த பிறகு, தலைநகரத்தை மாற்றம் செய்யும் பிரச்னையின் மீது தகராறு எழுந்தது. புரட்சிமயமான வூஹானுக்கு எதிராக அவனுடைய எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளின் ஒரு மையமாக நாங்சாங்கை பயன்படுத்திக் கொண்டு தலைநகரம் வூஹானுக்கு மாற்றப்பட வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சியும், கோமிங் டாங் இடதுசாரிகளும் முன் வைத்த யோசனையை சியாங்காய் ஷேக் எதிர்த்தான். எனினும், 1926 நவம்பரில், கோமிங்டாங் மத்திய நிர்வாகக் குழு தலைநகரத்தை மாற்றுவதென்று தீர் மானித்தது. அதோடு தேசிய அரசாங்கத்தையும் சேர்த்து வூஹா னுக்கு தலைநகரம் மாற்றப்பட்டது. 1927 மார்ச்சில், கோமிங்டாங் கின் மத்திய நிர்வாகக்குழு ஹாங்கோவில் ஒரு விரிவடைந்த கூட் டத்தை நடத்திற்று. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் கோமிங் டாங்கின் இடதுசாரிகளின் சுறுசுறுப்பான ஆதரவோடு கட்சியின் அதிகாரத்தை உயர்த்துவது பற்றியும், ஜனநாயகத்தை வளர்ப் பதுபற்றியும், சர்வதிகார ஆட்சியைத் தடுப்பது பற்றியும் தீர்மா னங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. சியாங்காய்-ஷேக் மத்திய நிர்வாகக் குழுவின் தலைவர் பொறுப்பிலிருந்தும், இராணுவக் கமிஷன் தலைவர் பொறுப்பிலிருந்தும் அகற்றப் பட்டான். இக்கூட்டம் புரட்சிக்கரமான பகுதிக்கு அதன் எதிரி களின்மீது வெற்றித்தேடித் தருவதில் முடிவடைந்தது. இக் கூட்டத்திற்குப் பிறகு சியாங்காய்-ஷேக் அவனது காட்டிக் கொடுக்கும் வேலைக்கு சுறுசுறுப்பாகத் தயார் செய்தான். அவனது சொந்தப் படைகளை சுறுசுறுப்பாக அதிகரித்தான். ஃபூக்கியன், சிக்கியாங், கியாங்சி மற்றும் அன்வெய் மாநிலங்களில் நடைபெற்ற போராட்டங்களில் புரட்சியின் பக்கம் வந்திருந்த யுத்தபிரபுப் படைகளை விரிந்த அளவில் சேர்த்துக்கொண்டிருந் தான். உதவிக்காக அவன் ஏகாதிபத்தியவாதிகளுக்கு வேண்டு

கோள் விடுத்தான். டாய்சி-டாவோ மூலமாக ஜப்பானில் ஏகாதிபத்தியவாதிகளோடு குலாவிக் கொண்டிருந்தான். வாங் செங்-டிங் மூலம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளோடு குலாவிக் கொண்டிருந்தான். டி லி-சுங் மூலம் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளோடு குலாவிக் கொண்டிருந்தான். லீ ஷி-செங் மூலமும் ஊசி-ஹீயு மூலமும் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளோடும் குலாவிக் கொண்டிருந்தான். அவர்களது தரப்பில் ஜப்பானிய, அமெரிக்க, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் பெரியதொரு ஷாங்காய் தரகனான யூ ஷியா-செங் மூலம் சியாங்காய்-ஷேக் கோடு ஒரு எதிர்ப்புரட்சியை நடத்துவதற்கான நிபந்தனைகளை பற்றி பேச்சு வார்த்தை நடத்த முயற்சித்தார்கள். ஏகாதிபத்திய வாதிகளின் தூண்டுதலால், ஹூவாங்பூ மற்றும் சாங்சுன் போன்ற பல பழைய அதிகாரவர்க்கத்தினரும் அரசியல்வாதி களும் சியாங்கிற்கு ஆதரவாக அணிதிரண்டு அவனது எதிர்ப் புரட்சி நடவடிக்கைகளில் அவனுக்கு உதவி செய்தார்கள். அச் சமயத்தில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிரிட்டிஷ், அமெரிக்க பிரெஞ்சு மற்றும் ஜப்பானியப் படையில் ஷாங்காயில் குவிக்கப் பட்டிருந்தன. மேலும் அதிகமான படைகள் சியாங்குக்கு ஆதரவாக வந்துக் கொண்டிருந்தன. ஏகாதிபத்தியவாதிகளோடு அவனுக்கிருந்த நெருக்கமான உறவுகளை உயர்த்திப் பிடித்துக் கொண்டு, சியாங் எப்போதைக் காட்டிலும் மிகவும் பிற்போக் கானவனாகவும் மூர்க்கத் தனமானவனாகவும் மாறினான். 1927 மார்ச்சில் அவன் கியாங்சியில் காங்சொவ் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவரான சென் சாங்-ஷியனை படுகொலை செய்தான். அங்கு தொழிலாள வர்க்க இயக்கத்தை ஒடுக் கினான். பிறகு கியுகியாங்கின் தொழிற்சங்க சம்மேளனத்தைக் கலைத்துவிட்டு பல தொழிலாளிகளை கொன்று குவிக்கவும். படுகாயப்படுத்தவும் செய்தான். ஆன்கிங்கில் அவன் அன்வெய் மாநிலத்தின் ஒரு போலித் தொழிற்சங்க சம்மேளனத்தை ஏற்பாடு செய்தான். அந்த தொழிற்சங்க சம்மேளனம், சட்ட பூர்வமான தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைமைச் செயலகத் தையும் கோமிங்டாங் இடதுசாரிகள் மாநிலக் கட்சி தலைமை செயலகத்தையும் ஒரு கலகத்தில் சின்னாபின்னமாக்கியது. தொழிலாளர்களால் ஷாங்காய் நகரம் விடுவிக்கப்பட்டபிறகு, ஏகாதிபத்திய வாதிகளையும், பெரும் தரகு முதலாளிகளையும் நிலச்சுவான்தார்களையும் சந்திப்பதற்கு சியாங் அங்கே சென்றான். அவர்களுடைய ஆதரவையும் வென்றான். 'ஏகாதி

பத்தியவாதிகள் தரகு முதலாளிகளின் தூண்டுதலினால் அவன் ஆட்சிக் கவிழ்ப்புக்கு தயாரிப்புகளைச் செய்தான்.

ஷாங்காங் நகரத்தைச் சுற்றிலுமிருந்த முக்கிய நகரங்களில் துவங்கி, நான்கிங்கையும் ஷாங்சோவ்வையும் கைப்பற்றுவதற்கு சியாங்காய்-ஷேக் அவனுடைய சொந்தக் கைகூலிகளில் சிலரை அனுப்பினான். இந்த முறையில் ஷாங்காயிலிருந்த புரட்சிப் படையைத் தனிமைப்படுத்திக் கொண்டிருந்தான். ஏப்ரல் 2ஆம் தேதி நடைபெற்ற கோமின்டாங்கின் மத்திய மேற்பார்வைக் குழுவின் விரிவடைந்த கூட்டம் என்று சொல்லப்பட்ட கூட்டத்தில் ஊசி-ஷியு கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக ஒரு துரோகக் குற்றச்சாட்டை முன்வைத்தான். எதிர்ப் புரட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கைக்கு ஒரு ஆரம்ப நடவடிக்கையாக இருப்பதை இது குறிக்கோளாகக் கொண்டிருந்தது. பிறகு, சியாங்காய்-ஷேக் மற்றும் வாங்சிங்-வெய் கும்பல்கள் ஒரு கூட்டான கம்யூனிஸ்ட் எதிர்ப்பு மாநாட்டை நடத்தினார்கள். மேலும் கம்யூனிஸ்ட்-கட்சியை ஒடுக்குவது, ஷாங்காயின் ஆயுதமேந்திய தொழிலாளிகளை ஒடுக்குவது, ஊஹானிலிருந்த கோமிங்டாங் தலைமைச் செயலகத்தின் உத்தரவினை நிறைவேற்ற மறுப்பது போன்ற சில உடன்பாடுகளுக்கு வந்தார்கள். பிறகு உடனடியாக சியாங்காய்-ஷேக் ஷாங்காயிலிருந்த குண்டர்களை அணிதிரட்டினான். மேலும் ஷாங்காய் தொழிற்சங்க சம்மேளனத்தை எதிர்ப்பதற்காக, சீனா ஒன்று சேர்ந்து அணிவகுத்துச் செல்லும் கழகம், மற்றும் 'ஷாங்காய் தொழிற்சங்கங்களின் சம்மேளன சங்கம்' ஆகியவற்றை அமைத்தான். ஷாங்காய் தொழிற்சங்க சம்மேளனத்தையும், தொழிலாளர் பாதுகாப்பு அணியையும் (Workers' Pickets) கண்காணிப்பதற்காக, பிற்போக்குப் படைகள் ஷாங்காய்க்கு அனுப்பப்பட்டன. சகல கூட்டங்களையும், வேலை நிறுத்தங்களையும், அணிவகுப்புகளையும் தடை செய்வதால் தொழிலாளிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக, இரத்தவெறி பிடித்த பிற்போக்காளர்களான பை சுங்-ஷி மற்றும் சூ பெங்-சி ஆகியோரால் தலைமை தாங்கப்பட்ட ஷாங்காய்-வூசங் ராணுவத் தலைமைச் செயலகம் அமைக்கப்பட்டது.

இடைக் காலத்தில், சியாங்காய்-ஷேக், அவனது எதிர்ப் புரட்சிகர இரட்டை வேடத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தான். தொழிலாளர்களின் காவற்படையை அவன் தரப்பிலிருந்த ஒரு முள்ளாக (Thorn in his side) கருதிய போதிலும், அவன் தன்

உணர்வுகளை வெளிக்கட்டிக்கொள்ளவில்லை. அதற்குப்பதிலாக, அவன் திட்டமிட்டுக் கொண்டிருந்த புரட்சியின்மீது தொடுக்கவிருந்த திடீர் வகைப்பட்ட தாக்குதலின் சாத்தியப்பாட்டிற்கு எதிராக, புரட்சிவாதிகளின் விழிப்புத்தன்மையை மழுங்கடிக்கும் நோக்குடன் அவன் தொழிலாளர் பாதுகாப்பு அணிக்கு 'நம் பொதுவான போராட்டத்திற்கு' என்ற வார்த்தைகளைத் தாங்கிய ஒரு வெள்ளிப் பதாகையை அன்பளிப்பாகக் கொடுத்தான். மேலும், சென் டு - ஷியுவின் சந்தர்ப்பவாதப் போக்குகளைப் பயன்படுத்திக் கொண்டு, ஷாங்காய் மக்களின் நகர்மன்ற அரசாங்கம் (இந்த அரசாங்கம் மார்ச் 29ஆம் தேதியன்று அமைக்கப்பட திட்டமிடப்பட்டிருந்தது) நிறுவப்படுவதை அவன் தடுத்தான். மேலும், தங்களுடைய ராஜினாமாக்களைக் கொடுத்து விடும்படி பூர்ஷ்வாக்களின் பிரதிநிதிகளைத் தூண்டினான். அதன் விளைவாக, ஒரு மக்கள் அரசாங்கம் நிறுவப்படும் திட்டம் கைவிடப்பட்டது. மறுபுறத்தில், அரசாங்கத்தை ஆதரிப்பதற்கு மக்களை அணி திரட்டுவதற்குப் பதிலாக, சென் டு-ஷியு பாட்டாளி வர்க்கக் கோட்பாடுகளைக் காற்றிலே பறக்க விட்டான். மேலும், பூர்ஷ்வா வர்க்க பிரதிநிதிகள் இல்லாமல் அரசாங்கம் செயல்படமுடியாமல் போகலாம் என்ற பயத்தில் பூர்ஷ்வா வர்க்கப் பிரதிநிதிகளைத் தாஜா செய்வதற்காக அவர்கள் பக்கம் சாய்ந்து நின்றான். சென் டு-ஷியுவின் பலவீனத்தினாலும் கையாலாகத் தனத்தினாலும் ஊக்குவிக்கப்பட்ட சியாங்காய்-ஷேக், "ஷாங்காய் தற்காலிக அரசியல் குழுவை" அமைக்கும்படி அவனது கையாட்களுக்கு உத்தரவிட்டான். இந்த முறையில் ஷாங்காய் மக்களின் அரசியல் அதிகாரத்தைப் பறித்துக் கொண்டான். சென்டு-ஷியு மற்றும் மாங்சிங் - வேய் ஆகியோரால் "கூட்டறிக்கை" என்று கூறப்பட்ட ஒரு அறிக்கை ஏப்ரல் 5ஆம் தேதியன்று வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில் எதிர்ப்புரட்சி சூழ்ச்சியைக் கண்டித்து ஒரு வார்த்தை கூட இல்லை. அதற்கு மாறாக, அது சியாங்காய்-ஷேக்கின் கொலைகாரத் திட்டங்களுக்கு ஒரு வகையான முகமூடியாகப் பயன்பட்டது.

அவனது பிற்போக்கு சூழ்ச்சிக்கான தயாரிப்புகளைப் பூர்த்தி செய்த பிறகு, சியாங் காய்-ஷேக் ஏப்ரல் 9-ஆம் தேதியன்று ஷாங்காயை விட்டு நான்கிங்கிற்குச் சென்றான். ஏப்ரல் 12ஆம் தேதி விடிவதற்கு முன்பு, சாபெய், ஊசங், பூட்டுங், நான்ஷி ஆகிய இடங்களில் முகாமிட்டிருந்த அனைத்து தொழிலாளர்

களின் காவலாளிகளையும் படுகொலை செய்யும்படி சியாங்காய்-ஷேக் உத்தரவிட்டான். முழுமையாக ஆயுதம் தரித்திருந்த குண்டர்களும் எதிர்ப்புரட்சிப் படைகளும் ஏகாலத்தில் செயலில் இறங்கினர். குண்டர்கள் அந்நிய சலுகைப் பெற்றப் பகுதிகளில் இருந்து பாய்ந்து சென்று தொழிலாளிகளைத் தாக்கினார்கள். மேலும், எதிர்ப்புரட்சிப் படைகள் அவர்களுக்கு உதவி செய்யும் சாக்கில் அல்லது பலாத்காரத்தின் மூலம் தொழிலாளர் பாதுகாப்பு அணியின் ஆயுதங்களைப் பறித்தார்கள். தொழிலாளர் பாதுகாப்பு அணியின் ஆயுதங்களைப் பறித்த பிறகு, கொலைகாரன் பை சுங்-ஷி தொழிலாளர்கள்மீது குண்டர்கள் நடத்திய தாக்குதலை “தொழிலாளர்களிடையே உள் மோதல்” என்று அப்பட்டமாகக் கூறினான். அதனால்தான் தொழிலாளர் பாதுகாப்பு அணியின் ஆயுதங்கள் பறிக்கப் பட்டன என்றும் கூறினான். இடைக்காலத்தில், ஆயுதங்கள் பறிக்கப்பட்ட காவற்படையினருக்கு ஆதரவாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யலாம் என்ற பயத்தின் விளைவாக, சகல வேலை நிறுத்தங்களையும் தடை செய்து ஒரு உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

ஷாங்காய் தொழிலாளர்கள், தொழிலாளர் பாதுகாப்பு அணியிடமிருந்து சியாங்காய்-ஷேக் ஆயுதங்களைப் பறித்ததை ஆட்சேபித்து தைரியமானதொரு எதிர்த் தாக்குதலைத் தொடுத்தார்கள். ஏப்ரல் 12ம் தேதி நடுப்பகலில் அவர்கள் தொழிற்சங்க சம்மேளனத்தின் செயலகத்தை மீண்டும் கைப்பற்றினார்கள் அதற்குப் பிறகு, அன்றிலிருந்தே துவங்கும் வகையில் நகரம் முழுவதற்குமான ஒரு பொது வேலை நிறுத்தத்திற்கு அறைகூவி தொழிற்சங்க சம்மேளனம் உடனடியாக ஒரு உத்தரவினைப் பிறப்பித்து இந்த வேலை நிறுத்தத்தில் 2 லட்சத்திற்கும் அதிகமான தொழிலாளிகள் ‘வெள்ளை பயங்கர’மிருந்த போதிலும் பங்கெடுத்துக் கொண்டார்கள்,

ஷாங்காய் நகரத்து குடிமக்களும் தொழிலாளிகளும் பிற்போக்கு வாதிகளுக்கெதிராக, தங்களது பலமான ஆட்சேபனையைத் தெரிவிக்கும் பொருட்டு எல்லா இடங்களிலும் வெகுஜனக் கூட்டங்களை நடத்தினார்கள். நான்சியில் ஒரு கூட்டத்திற்குப் பிறகு பை சுங்-ஷியிடம் ஒரு மனுவைக் கொடுப்பதற்கு, வடக்கத்தியப் படையெடுப்புச் சேனையின் கட்டளையிடும் தலைமைச் செயலகமான லுங்குவாவை நோக்கி சுமார் 5 லட்சம் குடிமக்கள் அணி வகுத்துச் சென்று நிபந்தனை

களை ஒப்புக்கொள்ள செய்வதற்கு அவனது நிர்ப்பந்தத்தில் வெற்றியும் பெற்றார்கள்.

13ம் தேதியன்றி தொழிற்சங்க சம்மேளனம் சாப்பையில் ஒரு வெகுஜன அணி வகுப்பு அறைகூவல் விடுத்தது. அந்த அணி வகுப்புக்குப் பிறகு, வடக்கத்திய படையெடுப்பு சேனையின் ஒரு கோட்டத் தளபதியான சூ பெங்-சியின் தலைமைச் செயலகத்தை நோக்கி வெகுஜனங்கள் அணி திரண்டுச் சென்றார்கள். ஆனால் பாவோ ஷாங் வீதி வழியாகக் கடந்துச் சென்றுக் கொண்டிருந்த பொழுது பிற்போக்குப்படைகளால் அவர்கள் தாக்கப்பட்டார்கள். 100க்கு மேற்பட்டார்கள், மேலும், எண்ணற்ற மக்கள் படுகாயப் படுத்தப் பட்டார்கள்.

அந்தப் பெரும் படுகொலைக்குப் பிறகு சியாங்காய்-ஷேக் தொழிற்சங்க சம்மேளனத்தை கலைக்கும்படி உத்திரவிட்டான். ஷாங்காய் தொழிற் சங்கங்களின் சம்மேளன சங்கத்திலிருந்த (இது பின்னர் சங்க ஸ்தாபனங்களின் ஷாங்காய் ஐக்கியக் கமிட்டி என்று பெயர் கொடுக்கப்பட்டது) அவனது குண்டர்களை ஏவி விட்டு ஷாங்சாங் தொழிற்சங்க சம்மேளன செயலகத்தைக் கைப்பற்றச் செய்தான். சகல தொழிற்சங்க ஸ்தாபனங்களையும் மூடச் செய்தான். மேலும் தொழிலாளர்களின் தலைவர்களைப் படுகொலைச் செய்யச் செய்தான். பின்னர் சகல புரட்சிகர ஸ்தாபனங்களும் அமைப்புகளும் ஒன்றன்பின் ஒன்றாக மூடப்பட்டன. அந்த சமயத்திலிருந்து ஷாங்சாய் நகரத்துத் தொழிலாளிகள், புரட்சிவாதிகளும் ஆகியோரின் அனைத்து சுதந்திரங்களும் பறிக்கப்பட்டன. கூட்டங்கள் நடத்தியவர்கள் அல்லது வேலை நிறுத்தம் செய்தவர்களுக்கு மரண தண்டனை கொடுக்கப்பட்டது. இத்தகைய சூழ்நிலைமைகளில் தங்களது தனிமைப் படுத்தப்பட்டிருந்த நிலையில், தொழிலாளிகள் பொது வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்தியிருந்தால் எந்த பயனுமில்லாமல் அவர்கள் உயிர்களைத் தியாகம் செய்திருப்பார்கள். ஆகவே, தொழிலாளர்களின் பலத்தைப் பாதுகாத்து வைக்கும் பொருட்டு, 14ம் தேதி மாலையே வேலைக்கு திரும்பும்படி தொழிற்சங்க சம்மேளனம் உத்தரவிட்டது.

ஷாங்காய் தொழிலாளிவர்க்க இயக்கம் கடுமையாகக் குழம்பியிருந்த போதிலும், நிர்ப்பந்தத்தின்பேரில் பொது வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடப்பட்டிருந்த போதிலும், ஷாங்காய் தொழிலாளிகள் விட்டுக் கொடுக்கவில்லை. வெள்ளை பயங்கரத்தின் மத்தியில் பொதுத் தொழிலாளர் சங்கம் தலை

மறைவு நடவடிக்கைகளை இன்னும் தொடர்ந்து நடத்திற்று. பிற்போக்குவாதிகளுக்கு எதிரான அவர்களது போராட்டத்தில் ஷாங்காய் தொழிலாளர்களுக்கு அது தலைமை தாங்குக் கொண்டுமிருந்தது.

சியாங்காய்-ஷேக்கின் காட்டிக் கொடுக்கும் நடவடிக்கை தென்கிழக்கு மாகாணங்களிலும், ஹுவான்டுங்கிலும் ஒரு வெள்ளை பயங்கர ஆட்சியைக் கட்டவிழ்த்து விட்டது. அந்த மாநிலங்களில் ஏராளமான கம்யூனிஸ்டுகளும் தலைதூக்கி நின்ற புரட்சிவாதிகளும் சியாங்காய்-ஷேக் குண்டர்களின் கரங்களில் மரணத்தைச் சந்தித்தார்கள்.

ஏப்ரல் 15இல் ஹுவாங்டுங்கில் கோமிங்மாங் பிற்போக்கு வாதிகள், பல கம்யூனிஸ்டுகளையும் முன்னேறிய தொழிலாளர் களையும் கைது செய்து கொன்றார்கள். வாம்போவா ராணுவக் கல்லூரியிலும். காண்டன்—ஹாங்காங் வேலைநிறுத்தக் கமிட்டி யிலும் நிறுத்திவைக்கப்பட்டிருந்த தொழிலாளர்களின் பாது காப்பு அணியினரின் ஆயுதங்களைப் பறித்து, தொழிற்சங்கங்கள், விவசாய சங்கங்கள் போன்ற புரட்சிகரமான வெகுஜன ஸ்தாபனங்களையும் சோதனையிட்டார்கள். ஹுவான்டுங்கில் எதிர்ப்புரட்சி நடவடிக்கை நடைபெற்ற சமயத்தில், 2,100க்கும் மேற்பட்ட கம்யூனிஸ்டுகளும் தீவிர ஊழியர்களும் கொல்லப் பட்டார்கள். 100க்கு அதிகமானவர்கள் ரகசியமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். மேலும் 2,000த்திற்கும் மேற்பட்ட ரயில்வே தொழிலாளிகள் வேலையிழந்தனர். ஜுன் 19ம் தேதியும், 23ஆம் தேதியும் பொது வேலைநிறுத்தத்தை மீண்டும் துவக்குவதற்குத் தொழிலாளர்கள் வீறு கொண்டெழுந்தார்கள். ஆனால் அதுவும் ஒடுக்கப்பட்டது.

சியாங்காய்-ஷேக்கின் காட்டிக் கொடுத்தல் நடவடிக்கை புரட்சியின் பகுதித் தோல்வியைக் குறித்தது. ஆனால் ஒட்டு மொத்தமாக புரட்சி மிக உயர்வானதொரு அபிவிருத்தி கட்டத்தை நோக்கிச் செல்லும் அதனுடைய பாதையில் தொடர்ந்து சென்றது.

---

### 4. வூகான் புரட்சி அரசாங்கம் இருந்த காலகட்டத்தில், தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் வளர்ந்து வந்த இயக்கம். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஐந்தாவது தேசிய மாநாடு.

ஏப்ரல் 12ம் தேதி சம்பவம் புரட்சியின் மீது பிற்போக்கு சியாங்காய்-ஷேக் கும்பலால் தொடுக்கப்பட்ட பகிரங்கமான தொரு எதிர்ப்புரட்சி தாக்குதாலக இருந்தது. இந்தச் சம்பவத் திற்குப் பிறகு, சீனாவில் இரண்டு முகாம்கள் தோன்றின. வூகானை மையமாகக் கொண்டிருந்த புரட்சி முகாமும், நான்கிங்கை மையமாகக் கொண்டிருந்த எதிர்ப்புரட்சி முகாமும் தோன்றின.

ஏகாதிபத்திய வாதிகளின் தலையீட்டுக் கொள்கையின் விளைவாக, வூகான் புரட்சி அரசாங்கம் எல்லா முனைகளிலும் எதிரியால் சூழப்பட்டிருந்தது. கிழக்கே சியாங்காய்-ஷேக்கினா லும், வடக்கே பெங்டியன் யுத்தப் பிரபு சாங்சோ-லின்னாலும் மேற்கே ஸீசுவான் யுத்தப் பிரபு யாங்சென்னாலும், தெற்கே குவாங்டுங் யுத்தப் பிரபுக்களாலும் சூழப்பட்டிருந்தது. ஒரே சமயத்தில் நான்கு முனைகளிலும் தாக்குவதற்கு புரட்சி சக்திகளை நிலைமை அனுமதிக்காததால், வூகானைக் கைப் பற்றும் முயற்சியில் தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்த சாங் சோ-லின்னின் படைகளை எதிர்த்து, அதனுடைய வடக்கு நோக்கிய முன்னேற்றத்தை ஒரு அவசரமான பாதுகாப்பு நடவடிக்கையாக தொடர்ந்து நடத்த வூகான் அரசாங்கம் தீர்மானித்தது. வூகான் ஒரு வர்த்தக மையமாக இருந்தமையால், பொருளாதாரக் குழப்பத்திலிருந்து நகரத்தை விடுவிக்கும் பொருட்டு, சுற்றி வளைக்கப்பட்டிருந்த நிலை உடைக்கப் பட்டாக வேண்டும். மேலும், பெங்டியன் படைகளால் தொடுக்கப்படும் தாக்குதலின் அபாயத்தைத் தவிர்க்கும் நோக்கத் திற்காகவும் அல்லது குறைக்கும் நோக்கத்திற்காகரும் லுன்காய் ரயில்வே நெடுகிலும் சியாங்கின் படைகளைத் தாக்குவதற்கு சுற்றி அணிவகுத்து வருவதற்கு முன்பு, ஹோனானிலிருந்த பெங் யு-ஸியாங்கின் படைகளோடு இணைத்துக் கொள்வதற்கு வூகான் அரசாங்கம் விரும்பிற்று.

எனவே, இதனை ராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதி யாகவும் கெட்டிப்படுத்திக் கொள்வதற்கு, பெங் யு-ஸியாங்கின் படைகாளாடு முதலில் இணைத்துக் கொள்வது சிறப்பாக இருக்கும் என்று வூகான் அரசாங்கம் நினைத்தது, இடைக் காலத்தில், விவசாயப் புரட்சியை நிறைவேற்றுததற்கு அது எல்லா முயற்சியையும் செய்தது. சியாங்காய்-ஷேக்கைத் தாக்கும் பிரச்னைக்கு தீர்வு காணுவதற்கு முன்பாக புரட்சியை விஸ்தரிப் பதற்கும், ஆழப்படுத்துவதற்கும் அது எல்லா முயற்சியையும்

எடுத்தது.

தொழிலாளி—விவசாயி வெகு ஜன இயக்கம் தொடர்ந்து அபிவிருத்தி அடைந்தது. மேலும் விஷேசமாக ஹுன்னானிலும் ஹுப்பேயிலும் விவசாயி இயக்கம் ஏற்றத்தில் இருந்தது.

ஐந்தாவது தேசிய மாநாடு நடைபெற்ற சமயத்தில், 57,900க்கும் அதிகமான உறுப்பினர்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தார்கள். ஆனால் அதனுடைய 4வது மாநாடு நடைபெற்ற சமயத்தில் 900க்கும் சற்று அதிகமான உறுப்பினர்கள் மட்டுமே இருந்தார்கள். அதனுடைய உறுப்பினர்கள் எண்ணிக்கையை காட்டிலும், கட்சி அதனுடைய அரசியல் செல்வாக்கினை மிகவும் சீக்கிரமாகவும், விரிவாகவும் அதிகரித்திருந்தது. மேலும் அதன் தலைமையின் கீழ் சுமார் 28 லட்சம் தொழிலாளிகளையும், 90 லட்சம் விவசாயிகளையும் இப்பொழுது நேரடியாகப் பெற்றிருந் தது.

தொழிலாளி வர்க்க இயக்கத்தின் அடிப்படையான குணாம் சங்கள் அரசியல் ரீதியாகப் பார்க்கும்போது, கூட்டம் கூடும் உரிமை, சங்கம் வைக்கும் உரிமை, வேலை நிறுத்தம் செய்யும் உரிமை ஆகியவற்றுக்காகப் போராடுவதிலிருந்து அரசாங்கத்தில் பங்கு கொள்ளும் கோரிக்கையான போராட்டத்திற்குப் போய்க் கொண்டிருந்தது. பொருளாதார ரீதியாகப் பார்த்தால், வாழ்க்கை நிலைமைகளை அபிவிருத்தி செய்வதற்கான போராட் டத்திலிருந்தும், கூட்டுபேரம் செய்யும் உரிமைக்கான போராட்டத் திலிருந்தும் அரசு நிறுவனங்களின் நிர்வாகத்தில் பங்கு கொள்ளும் போராட்டத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. ஸ்தாபன ரீதியாகப் பார்த்தால், ஒவ்வொரு பகுதியிலும் பொதுத் தொழிலாளர் சங்கங்கள் மிக உயர்ந்த அதிகாரத்தைப் பெற்றிருப் பதோடு, சிதறிக் கிடந்த சிறு தொழில் கில்டுகளை இயந்திரத் தொழில் சங்கங்களாக படிப்படியாக மாற்றுவதன் மூலம் தொழிற்சங்கங்களின் அதிகாரங்களைக் குவிப்பதை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது என்பதாகும்.

புரட்சி அரசாங்கத்தின் தலைமையின் கீழ், விவசாய இயக்கம் ஹுன்னான், ஹுப்பே, கியாங்சியில் ஒரு பெரும்புயலைப் போல் வெடித்தெழுந்தது.

1927 ஜுன் மாதத்தில் நாடு முழுவதிலும் சுமார் 91 லட்சத்து 50 ஆயிரம் உறுப்பினர்கள் விவசாய சங்கங்களில் இருந்தார்கள். ஹுன்னான் மாகானம் 45 லட்சத்து 10 ஆயிரம் உறுப்பினர்களோடு முதன்மை வகித்தது. ஹுப்பே மாகாணம் 25 லட்சம் உறுப்பினர்களோடு 2-ஆவது இடம் வகித்தது.

ஹுன்னான் மாகாணத்தின் ராமப் பகுதி ஒரு புரட்சிப் புயலில் சிக்கியிருந்தது. விவசாயிகள் தானியத்தின் கட்டுப்பாட்டையும் வினியோகத்தையும் மேற் கொண்டார்கள். நிலபிரப்புக்களின் யோசனைகளைத் துடைத்தெறிந்தார்கள். மேலும் நிலத்தை அளந்திருந்த அடிப்படையில் குத்தகையை நிர்ணயம் செய்து விவசாய பிரச்சனைக்குத் தீர்வு கண்டார்கள். பிறகு நிலத்தின் எல்லையைக் குறிக்கும் அளவு கற்களை நட்டு பயிர் செய்யும் உரிமையைப் புதியதாக வரையறுத்தார்கள். இறுதியாக, நிலச்சுவான்தார்களுக்குச் சொந்தமாக இருந்த நிலங்களைப் பறிமுதல் செய்து மறுவினியோகம் செய்தார்கள்.

வடக்கத்திய படையெடுப்பு சேனையினால் வூஹான் கைப்பற்றப்பட்ட பிறகு விவசாயி இயக்கம் பெருமளவில் விரிவடைந்தது. முதல் மாநில விவசாய காங்கிரஸ் 1927 மார்ச்சில் நடைபெற்றது. அதற்குப் பிறகு, கிராமப் புறத்தில் விவசாயிகள் பலாத்காரமானதொரு வர்க்கப் போராட்டத்தை நடத்தினார்கள். விவசாய சங்கம் புரட்சிகரமானதொரு விவசாய ஆட்சியாக மாற்றப்பட்டது. அதனுடைய சொந்த தற்காப்புப்படையை நிலைநாட்டிக் கொண்டும், குத்தகைக் குறைப்பையும், வட்டிக் குறைப்பையும், பின்தொடர்ந்து நிலத்தை மறுவினியோகம் செய்யவும் கோரி வந்தது.

1927 பிப்ரவரியில் கியாங்சியில் மாநில விவசாய சங்கம் அமைக்கப் பட்ட பிறகு, நிலப்பிரபுக் கூட்டத்தின் அதிகாரத்தைத் தூக்கி எறிவதற்காகவும், குத்தகைக் குறைப்பிற்காகவும் வட்டிக் குறைப்பிற்காகவும் விவசாயிகள் ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். கியாங்சி மாநிலம் நீண்ட காலமாக சியாங்காய்-ஷேக்கின் ஆட்சியின் கீழ் இருந்தமையாலும் அதனுடைய அரசாங்கம் இரண்டு முறை கோமிண்டாங் கட்சியின் இடதுசாரிக்கும் வலதுசாரிக்குமிடையே கைமாறி இருந்தமையாலும், அங்கு விவசாய இயக்கம் அப்போதுதான் ஆரம்பமாகிக் கொண்டிருந்தது.

விவசாய இயக்கம் குவாங்டுங்கில் மிகவும் துவக்க காலத்திலேயே அபிவிருத்தி அடைந்திருந்தது. அங்கே பிற்போக்கு ஆட்சியின் கீழ் விவசாய ஸ்தாபனங்கள் கடுமையான துன்புறுத்தலுக்கு ஆளாக்கப் பட்டிருந்த போதிலும் கூட, விவசாயி வெகுஜனங்கள் நிலத்தை மறுவினியோகம் செய்யும்படி நீண்டகாலமாகவே கோரிக் கொண்டிருந்தார்கள். தென் கிழக்கு மாநிலங்

களான கியாங்சு, அன்வெய், சிகியாங் மற்றும், ஃபூகியன் ஆகிய வற்றில் குத்தகைக் குறைப்பிற்காகவும், வரி மறுப்பிற்காகவும் ஒரு போராட்டம் வெடித்தெழுந்தது. ஹோனானில், சிவப்பு ஈட்டிக் கழக யுத்தப் பிரபுக்களுக்கு எதிராகவும் கட்டாய நிதி வசூல் மற்றும் வரிகளுக்கு எதிராகவும் போராட்டங்களை நடத்திற்று. வடமாநிலங்களில் யுத்தப் பிரபுக்களின் கொடுங் கோன்மைக்கு எதிராக விவசாயிகள் அணியணியாக வீறு கொண் டெழுந்தார்கள்.

ஹூன்னான், ஹூப்பே, குவாங்டுங் மாநிலங்களில் விவசாய இயக்கம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழும் ஏழை விவசாயிகளை அதனுடைய முதுகெலும்பாகக் கொண்டும் வேக மாக வளர்ந்தது. இயக்கம் இறுதியில், விவசாயப் புரட்சிக்கு வழி, நடத்திச் செல்லும் என்பதற்கு இது தெளிவான சாட்சியாக இருந்தது. ஏழை விவசாயிகள் விவசாயிகளின் ஆட்சியின் பிரதான தனமாக அமைந்தார்கள். விவசாயிகளால் அரசியல் அதிகாரம் கைப்பற்றப்பட்டது. புரட்சிக்கு கேந்திரமாக இருந்தது. ஏனெனில் நிலத்தைப் பெறுவது ஒரு புறமிருக்க தங்களுடைய சொந்த அரசாங்கமில்லாமல் விவசாயிகள் தங்களுடைய குத்த கையைக் கூட குறைத்திருக்க முடியாது. விவசாயிகளின் போராட்டம் குத்தகைக் குறைப்போடும் வட்டிக் குறைப்போடும் ஆரம்பமாயிற்று. பிறகு, நிலப்பிரபுக்களின் ஆட்சியைத் தூக்கி எறிவதை நோக்கியும், விவசாயப் புரட்சியை நோக்கியும் சென்றது.

நாடு முழுவதிலும் விவசாய இயக்கம் சீரற்ற முறையில் அபிவிருத்தி அடைந்து கொண்டிருந்த சமயத்தில் தெற்கு மாநிலங் களில் அது ஒட்டுமொத்தமாக நிலப் பிரபுக்களின் ஆட்சியைத் தூக்கி எறியும் கட்டத்தில் நுழைந்து, நிலத்தைப் பெறுவதற்கான போராட்டத்தை ஆரம்பிக்கும் கட்டத்திற்குள் சென்றது. சீனப் புரட்சியில் புதியதொரு காலகட்டத்தின் அடிப்படையான குணாம் சமாக இது இருந்தது.

புரட்சியின் இந்த நெருக்கடியான சமயத்தில் 1927 ஏப்ரல், 27இல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அதனுடைய 5வது தேசிய காங்கிரசை ஹாங்கோவில் நடத்திற்று. இந்த காங்கிரசில் 80 பிரதிநிதிகள் பங்கெடுத்தார்கள். இவர்கள் 57,900 கட்சி உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தினார்கள்.

இந்த காங்கிரசில் சென்டு-ஷியு, அவனுடைய வலதுசாரி

சந்தர்ப்பவாத பாதையை, கலைப்பதற்கு முயற்சிக்கவில்லை. ஷாங்ஷான் கப்பல் சம்பவம் சம்பந்தமாக சலுகை காட்டுதல் மற்றும் சமரசம் செய்தல் பற்றியதொரு கொள்கையைக் கையாண்டதில் அவருடைய சொந்த சந்தர்ப்பவாதத் தவறு களைப் பற்றியதொரு விமர்சனத்திலிருந்து சரியான முடிவினை எடுப்பதற்கு பதிலாக, சியாங்காய்-ஷேக்கை மிஞ்சுவதற்குப் போதுமான அளவிற்கு பலமில்லாமல் இருந்தமைக்காக அவன் புரட்சி சக்திகளின்மீது பழியைப் போட்டான். மேலும் சியாங்கின் எதிர்ப்புரட்சி உள்நோக்கங்கள் முழுமையாக அம்பலப் படுத்தப்படவில்லை என்று கூறிக் கொண்டு தன்னை மன்னித்துக் கொண்டான். ஷாங்காய் தொழிலாளிகளின் பேரெழுச்சி சம்பந்தமாக தொழிலாளர் வர்க்கம் அதனுடைய போராட்டங்களைப் பொருளாதாரப் பிரச்சனைகளோடு நிறுத் திக்கொள்ளவேண்டுமென்றும் அரசியல் போராட்டங்களை நடத் துவதும், பேரெழுச்சிகளை ஏற்பாடு செய்வதும் தவறானதாகும் என்றும் சென் சாதித்தான். இம்முறையில், தொழிலாளிவர்க்கத் தின் தலைமையை முற்றிலும் நிராகரித்து புரட்சிகரமான அரசி யல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போராட்டத்தின் மகத்தான முக்கியத்துவத்தை மறுத்துக் கொண்டும் இருந்தான். அந்த சமயத்தில், மிகமிக அடிப்படைப் பிரச்சனையாக விவசாய பிரச்சனை இருந்தது. அப்பிரச்சனைப் புரட்சி முழுவதற்கும் கேந்திரமாக இருந்தது. ஆனால், சென்டு-ஷியு இப்பிரச்சனையை எவ்வாறு பார்த்தான்? சிறு நிலச் சொந்தக்காரர்களின் நிலம் தொடப்படாமல் விட்டுவைக்கப்படவேண்டுமென்று வக்காலத்து வாங்கிப் பேசினான். பெரிய மற்றும் நடுத்தர நிலச்சுவான் தார்களுக்குச் சொந்தமான நிலம் பறிமுதல் செய்யப்பட வேண்டுமென்று அவன் ஒப்புக் கொண்டபோதிலும், இது கோட்பாடு ரீதியில் ஏற்றுக் கொண்டதாக மட்டுமே இருந்தது. உடனடி நடவடிக்கைக்கான ஒரு வழிகாட்டும் கட்டளையாக இருக்கவில்லை. ஒரு விவரம் என்ற முறையில் சென்டு-ஷியு இப்பிரச்சனையை முற்றிலும் மழுப்பினான். இப்பிரச்சனைக்கு பதிலாக "அரசியல் பறிமுதல்" என்ற கருத்தினை முன்னுக்கு வைத்தான். அதாவது, எதிர்ப்புரட்சிவாதிகளுக்குச் சொந்த மாக இருந்த நிலத்தையும் சொத்துக்களையும் மட்டுமே பறிமுதல் செய்யவேண்டுமென்று அவன் கூறினான்.

சென்னுடைய சந்தர்ப்பவாத தத்துவங்களில் ஒரு தத்துவம், "புரட்சியை விரிபடுத்தும் தத்துவமாக" இருந்தது. புரட்சியை

விரிவுபடுத்துவதையும், தீவிரமாக்குவதையும் இரண்டு பரஸ்பர தொடர்பில்லாத பிரத்யேகமான பிரச்சனைகளாகக் கருதினான். புரட்சியை விஸ்தரிக்கும் ஒரு விஷயமாகவோ, அதாவது வடக்கத்திய படையெடுப்பைத் தொடர்ந்து நடத்தி, புரட்சியின் துறையை விஸ்தரிப்பதற்காகவோ அல்லது புரட்சியைத் தீவிரப் படுத்தும் ஒரு விஷயமாகவோ, அதாவது விவ்சாயப் புரட்சியை நிறைவேற்றி ஒரு மக்களாட்சியை நிலைநிறுத்தும் விஷயமாகவோ அவன் கருதினான். அவன் முன்னால் கூறப்பட்ட கருத்தைத் தேர்ந்தெடுத்தான். வடக்கத்திய படையெடுப்பைத் தொடர்ந்து நடத்தும் நோக்கத்திற்காக, அதனை அவன் தேர்ந்தெடுக்கவில்லை மாறாக, அவனே கூறியதுபோல்,விவசாயப் புரட்சியைத் தாமதப் படுத்தி, வர்க்கப் போராட்டத்தை தளர்த்துவதற்காக அந்தக் கருத்தைத் தேர்ந்தெடுத்தான்.

அவருடைய மற்றொரு சந்தர்ப்பவாத தத்துவம் ''வடமேற்கே போவது'' என்பதாகும். ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் யுத்த பிரபுத்துவ சக்திகள் பலமாக இருந்த காண்டன், ஷாங்சாய், ஹாங்கோவ், டீன்டிசின் ஆகிய நகரங்களிலும் மற்றும் இதர தொழில் வளர்ச்சியுற்ற மாவட்டங்களிலும் புரட்சி எவ்வித மான முன்னேற்றத்தையும் அடைய முடியாது என்று அவன் கருதினான். ஆனால் ஏகாதிபத்திய செல்வாக்கு பலவீனமாக இருந்த வடமேற்கு மாநிலங்களில் மிகவும் சுலபமாக வேர்விட முடியும் என்றும் கூறினான். எனவே புரட்சிப்படைகள் தென் கிழக்கு மாநிலங்களில் இருந்து வாபஸ் பெற்று, வடமேற்கு மாநிலங்களுக்கு அனுப்புவது என்று அவனுடைய பிரேரணை யைக் கொடுத்தான்.

இத்தகைய தத்துவங்கள் அவனுடைய வலதுசாரி சந்தர்ப்ப வாதப் பாதையின் ஒரு தொடர்ச்சியாகவும், வளர்ச்சியாகவும் இருந்தன.

சந்தர்ப்பவாதத்தைக் கண்டனம் செய்தும், விவசாய சீர்திருத்தத்தை அமல் நடத்தவும் அறைகூவல் விடுத்து, காங்கிரஸ் தீர்மானங்களை நிறைவேற்றிற்று, காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட ''அரசியல் நிலைமையும், கட்சியின் கடமைகளும் பற்றிய தீர்மானம்'' சென்னுடைய அரசியல் பாதை முற்றிலும் தவறானது என்றும், பூர்ஷ்வா ஜனநாகப் புரட்சியில் பாட்டாளிவர்க்க தலைமையைக் கைவிட்டதன் மூலம் அவனது பாதை கம்யூனிஸ்ட் அகிலத்தின் தீர்மானங்களுக்கும், வழிகாட்டுதலுக்குல் முரணாக இருந்தது

என்றும், இந்த முறையில் புரட்சியை அதனுடைய வெற்றியை நோக்கி அழைத்துச் செல்வதற்கு ஜீவாதாரமான உத்தர வாதத்தை புரட்சியிடமிருந்து பறித்துவிட்டது என்றும் சுட்டிக் காட்டியது.

புரட்சியை விரிவுபடுத்துவதும், தீவிரப்படுத்துவதும் உண்மையில் ஒன்றையொன்று சார்ந்து நிற்கக் கூடியதாக இருந்தமையால் புரட்சியை விரிவுபடுத்துவதும், தீவிரபடுத்துவதும் ஒன்றுக்கொன்று சம்மந்தமில்லாத தனிப்பட்ட கருத்துக்கள் எனக்கருதிய சென்னுடைய தவறான கருத்தை காங்கிரஸ் மறுத்துரைத்தது. புரட்சிக்கு உறுதியான ஒரு அடிப்படை கொடுக்கப்படுமேயானால், அது தீவிரப்படுத்தப்படவேண்டும்; மேலும் விரிவு படுத்தப்படவும் வேண்டும். "புரட்சியை விரிவு படுத்தும் தத்துவம்" பூர்ஷ்வா தேசியத்திற்கான பாதையை செப்பனிட மட்டுமே பயன்பட்டது என காங்கிரஸ் சுட்டிக் காட்டிற்று. புரட்சியைத் தீவிரப்படுத்தாமல், அதனை விரிவு படுத்தும் அபாயத்தையும் அது சுட்டிக் காட்டியது. கடந்த காலத்தில் புரட்சிப் படைகளால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் என்ன நடந்தது என்பதை சுட்டிக் காட்ட வேண்டியிருந்த்து. அந்த சமயத்தில் புரட்சியை தீவிரப்படுத்தாமல் தாமதப்படுத்தியதன் விளைவாக, உறுதியான புரட்சிகரமான அடிப்படை எதுவும் போடப்படாமல் பிற்போக்கான சமுதாய அடிப்படையின் பகுதிகள் அப்படியே விட்டு வைக்கப்பட்டிருந்தன. அதன் விளைவாக சியாங்காய்-ஷேக் கும்பல்கள் துரோகியாக மாறியபின் அவர்கள் தனிமைப் படுத்தப்படவில்லை. அதற்கு மாறாக, பலமானதொரு பின்பற்றுவோர் கூட்டத்தைப் பெற்றிருந்தது. இக்கூட்டம் அவர்களோடு ஐக்கிய முன்னணியில் இருந்து முறித்துக் கொண்டு சென்றார்கள்.

காங்கிரஸ் மேலும் சுட்டிக் காட்டியது : தீவிரமானதொரு நிலச் சீர்திருத்தத்தை நிறைவேற்றும் முன்பாகவும், மேலும் ஒரு ஜனநாயக அரசை நிலை நாட்டுவதற்கு முன்பும் வடக்கத்திய படையெடுப்பு நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்தும் பூர்ஷ்வா-வர்க்கத்திற்குத்தான் உதவி செய்யும். பூர்ஷ்வா வர்க்கம் ஏகாதிபத்திய வாதிகளுக்குப் பலனளிக்கக் கூடிய முறையில் கடற்கரையோர மாநிலங்களில் துரிதமாகத் தங்களை நுழைத்துக் கொள்வதற்கு தேசிய முகமூடியை அணிந்திருந்தார்கள்;

அதாவது, நிலச் சீர்திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு வடக்கத்திய படையெடுப்பை பூர்த்தி செய்வது என்ற தத்துவம்,

சியாங்காய்-ஷேக் ஒரு தேசியவாதி என்ற முகமூடியைப் போட்டுக் கொள்வதையும், தென்கிழக்கு மாநிலங்களில் அவனுடைய நிலைமையை பலப்படுத்துவதையும் சுலபமாக்கி இருக்கும். ஏனெனில், அவனும்கூட, ''படையெடுப்பைத் தொடர்ந்து நடத்துவதையும், நாடு முழுவதையும் ஒற்றுமைப்படுத்துவதையும்'' ஆதரித்துப் பேசி வந்தான்.

சியாங்காய் - ஷேக்கின் காட்டிக் கொடுக்கும் புரட்சியைத் தோல்வியுறச் செய்திருக்கவில்லை. ஆனால் புரட்சி அலை ஏற்றத்திலிருந்தது என்றும், விவசாயப் புரட்சிக்கான தருணம் வந்து விட்டது என்றும் காங்கிரஸ் சுட்டிக் காட்டியது. வடமேற்கு நோக்கிச் செல்வது என்ற கருத்தோட்டம் படுமோசமான, முட்டாள்தனமான கருத்தோட்டம் என்று கருதப்பட்டு, சந்தேகத்திற்கு இடமின்றி நிராகரிக்கப்பட்டது.

காங்கிரஸ், கட்சி முழுவதற்கும் இரண்டு முக்கிய கடமைகளை முன் வைத்தது; விவசாயப் புரட்சியை நிறைவேற்றுவதும், மக்களாட்சியை நிலைநாட்டுவதும் அவ்விரு கடமைகளாகும்.

காங்சிரஸ் 29 உறுப்பினர்களையும், 11 மாற்று உறுப்பினர்களையும் மத்திய கமிட்டிக்குத் தேர்ந்தெடுத்தது. காங்கிரஸின் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டதாக, சென் டு-ஷியு பிரகடனம் செய்ததால், அவன் மீண்டும் மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

ஆனால் உண்மையில் சென் டு - ஷியு இன்னும் அவனுடைய எதிர்க் கருத்தோட்டத்தைப் பிடிவாதமாகப் பின்பற்றி வந்தான். காங்கிரசிற்குப் பின் கட்சி எல்லா விஷயங்களிலும், குறிக்கோன்களிலும் சென்னினுடைய கட்டுப்பாட்டின்கீழ் இருந்தமையால், அரசியல் தலைமைக் குழுவின் பல உறுப்பினர்கள் மத்தியக் கமிட்டியில் பணியாற்ற முடியாமலிருந்தனர்.

ஆகவே, ஐந்தாவது தேசிய காங்கிரஸ் கேந்திரமான முக்கியத்துவம் வாய்ந்த எதையும் உண்மையிலேயே சாதிக்கவில்லை.

தோழர் மாசே-துங் காங்கிரஸில் கலந்து கொண்டார். ஆனால் தலைமைப் பொறுப்பிலிருந்து அவர் விலக்தப்பட்டு சட்ட விரோதமாக ஓட்டளிக்கும் உரிமையும் பறிக்கப்பட்டிருந்தார்.

**5, எதிர்ப்புரட்சி தாக்குதல் நடைபெற்ற சமயத்தில் வூகானில் கோமிங்டாங்கின் ஊசலாட்டம். சென் டு - ஷியுவின் சரணாகதிப் பாதையில், புரட்சிக்கு உண்டாக்கப்**

**பட்ட நாசம். வாங்சிங்-வெய் கும்பலால் காட்டிக் கொடுக்கப்படுதல். முதல் புரட்சிகரமான உள்நாட்டு யுத்தத்தின் தோல்வி.**

வூகான் அரசாங்கம் நிறுவப்பட்டதிலிருந்தே நகரம் கஷ்டங்களால் சூழப்பட்டிருந்தது. அது முக்கியமானதொரு வர்த்தக நகரம். பல வர்த்தகப் பாதைகள் அதிலிருந்து பிரிந்து சென்றன. ஆனால், அச்சமயத்தில் அது ஏகாதிபதிய வாதிகளாலும் யுத்தப் பிரபு அரசாங்கத்தினாலும் முற்றுகை இடப்பட்டிருந்தது. அதன் விளைவாக நகரத்திலிருந்த பல வியாபார நிறுவனங்கள் மூடும்படி நிர்ப்பந்திக்கப் பட்டிருந்தன.

வூகானிலிருந்த பிரிட்டிஷ், அமெரிக்க, ஜப்பானிய முதலாளிகள் அவர்களது நிறுவனங்களை மூடிவிட்டார்கள். அமெரிக்க வியாபாரிகள் வூகானில் இருந்து அவர்களது மண்ணெண்ணை இருப்புகள் முழுவதையும் கூட வெளியே அனுப்பிவிட்டார்கள். எரிபொருள் மற்றும் மூலப் பொருள்களில் பற்றாக் குறைகள் உற்பத்தியைக் குறைக்கும்படி தொழிற்சாலைகளை நிர்ப்பந்தித்தன. சரக்குகள் இல்லாததன் விளைவாக விலைவாசிகள் உயர்ந்தன. தானியம் மற்றும் இதர உணவுப் பொருட்கள் ஆகியவற்றின் சப்ளை வறண்டு போன போது குழப்பம் துவங்கியது.

பிறகு சீன முதலாளிகள் வூகானிலிருந்து ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் தங்களோடு வெள்ளி டாலர்களை பெரும் தொகையில் எடுத்துச் சென்றார்கள். வெள்ளி வெளியே எடுத்துச் செல்லப்படுவதைத் தடை செய்வதற்கும், சகல வங்கிகளும் ரொக்க நிதிகளைப் பதிவு செய்ய வேண்டுமென்றும், ஏப்ரல் இறுதியில் வூகான் அரசாங்கம் தீர்மானித்த பொழுது, அது வங்கிகளிலிருந்து எதிர்ப்பினை எதிர் நோக்கியது. வங்கிகள் பகிரங்கமாக அவற்றின் சகல தொழில் நடவடிக்கைகளையும் நிறுத்தி விட்டன.

வர்த்தக நெருக்கடி, நிதி வருமானத்தை பாதித்தது. வடக்கத்திய படையெடுப்பினைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஏற்பட்ட பெரும் ராணுவச் செலவுகளைச் சமாளிப்பதற்கு நிதி வருமானம் அதிகமான அளவில் பற்றாக் குறையாக ஆகிக் கொண்டிருந்தது. நிதிப் பற்றாக்குறையைச் சரிகட்டுவதற்கு பெரும் எண்ணிக்கையில் வங்கி, நோட்டுகளை வெளியிடுவதற்கு அவசர கால நடவடிக்கைகளை எடுக்கும்படி வூகான் அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது

வூகான் அரசாங்கம் ஒரு பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கிக் கொண்டிருப்பதைக் கண்டுகொண்டது.

கடுமையான பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு, முதலாளிகள் தங்களுடைய தொழிலாளிகளைச் சுரண்டுவதைத் தீவிரப் படுத்தினார்கள். இதுவும் வேலையில்லாத் திண்டாட்டமும், உயர்ந்து கொண்டிருந்த விலைவாசியும் தொழிலாளிகளின் வாழ்க்கை நிலையை மோசமடையச் செய்து, வர்க்க முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்தின.

வூகான் அரசாங்கத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதி களில் விவசாய இயக்கம் தொடர்ந்து வளர்ந்தது. பல கிராமப் புறங்களில் விவசாயிகள் பலாத்காரமாக நிலச் சுவான்தார்களின் நிலத்தைப் பறிமுதல் செய்தார்கள்.

பொருளாதார முற்றுகை, வியாபார சூன்யம், தான்யப் பற்றாக்குறை, நிதி நெருக்கடி, தொழிலில் மந்தம் மற்றும் தொழிலாளி—விவசாயப் புரட்சி ஆகியவற்றின் முன்பு நடுத்தர முதலாளி வர்க்கமும் குட்டி முதலாளி வர்க்கத்தின் மேல் தட்டுப் பகுதியும் புரட்சியைக் கைவிடத் துவங்கின.

1927 ஜூன் 1ம் தேதியன்று ஹோனான் மாநிலத்தில் செங்-சோவையும், கைபெங்கையும் வடக்கத்திய படையெடுப்புச் சேனை கைப்பற்றியது. அம்மாநிலத்தில் அச்சேனை பெங் யு-சியாங்கின் படைகளோடு கைகோர்த்தார்கள்.

வூகான் அரசாங்கம் உண்மையிலேயே நொறுங்கிக் கொண் டிருந்தது என்பதை நிரூபித்துக் கொண்டிருந்த உள் மோதல்களும் பிளவுகளும் இல்லாதிருந்திருந்தால், இந்த வெற்றி வூகான் அரசாங்கத்தின் நிலைமையைப் பலப்படுத்தியிருக்கும்.

வூகான் அரசாங்கத்தின் கீழிருந்த பகுதியில் நிலச் சுவான் தார்களும், முதலாளித்துவப் பேர்வழிகளும் தொழிலாளி மற்றும் விவசாயி இயக்கத்தை எதிர்ப்பதில் முதன்மையாக இருந் தார்கள். அவர்கள் விவசாய சங்கங்களையும், நகரங்களியிலிருந்த தொழிற் சங்கங்களையும் சட்டபூர்வமற்ற ஸ்தாபனங்கள் என்று கூறித்தாக்கினார்கள். அவர்களோடு ஒன்று சேர்ந்து செயல் பட்டுக் கொண்டு, வூகான் அரசாங்கத்திலிருந்த பிற்போக்கு வாதிகள் கலகம் செய்தார்கள். ஷியா டௌ-யின் மே 17ஆம் தேதியன்று முதலாவதாக பகிரங்கமாகக் கலகம் செய்தான். அச்சமயத்தில், புரட்சிப் படைகள் ஹோனானின் மீது அணி வகுத்துச் சென்றுக் கொண்டிருந்தன. செ சூ வான் யுத்தப் பிரபு யாங் சென்னின் படைகள் வூகானைத் தாக்கிக் கொண்டிருந்தன.

பிறகு ஸு-கே-ஷியாங் என்ற மற்றொரு பிற்போக்கு அதிகாரி மே மாதம் 21ம் தேதியன்று சாங்ஷாவில் இதே வேலையைச் செய்தான். மாநில தொழிற்சங்க சம்மேளனம், மாநில விவசாய சங்கம் மற்றும் இதர புரட்சிகர ஸ்தாபனங்களின் கட்டிடங்களை முற்றுகையிட்டுக்கொண்டும், கியான்சி மாநிலத்திலுள்ள நான் சாங்கில் சூபெய்-டேயில் இருந்த கம்யூனிஸ்டுகளையும், புரட்சிகரமான வெகுஜனங்களையும் கைது செய்து கொண்டும், கொன்று குவித்துக் கொண்டும், ராணுவத்திலிருந்த சகல அரசியல் ஊழியர்களையும் மாநிலத்திற்கு வெளியே செல்லும்படி நிர்பந்தம் செய்தான். மேலும் தொழிலாளி—விவசாயி இயக்கத்தின் பல தலைவர்களைக் கொலை செய்து கியான்சி மாநிலத்தை வூகான் அரசாங்கத்திடமிருந்து சுயேச்சையானதாகச் செய்தான்.

இத்தகைய கலகங்கள் மற்றும் காட்டிக் கொடுத்தல்களின் விளைவாக வூகான் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழிருந்த பிரதேசங்கள் பெருமளவில் குறைக்கப்பட்டன.

இவை அனைத்தும் வூகானிலிருந்த கோமிண்டாங் தலைவர்களின் மீது அழுத்தமான பிரதிபலிப்பை உண்டாக்கக் காரணமாக இருந்தன. வூகானிலிருந்த கோமிண்டாங் தலைவர்கள் நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ பேர்வழிகளால் சூழப்படும், செல்வாக்கிற்கு உட்படுத்தப்பட்டும் இருந்தார்கள். வூகானில் நிலவிய பொருளாதார, அரசியல் நெருக்கடிகள் அவர்களை மேலும் அதிகமாக ஊசலாடச் செய்து புரட்சியைச் சந்தர்ப்பவசமாகக் காட்டிக் கொடிக்கச் செய்தது.

தொழிலாளி மற்றும் விவசாயி வெகுஜனங்கள் வெகுதூரம் போய்விட்டார்களென்றும், சேனையின் எதிர்ப்பைத் தட்டியெழுப்புமென்றும், சகல தொழிலதிபர்களும், வியாபாரிகளும் எதிர்வரிசையில் சேர்ந்து விடுவார்களென்றும், ஏகாதிபத்தியவாதிகள் அவர்களது தலையீட்டினை அதிகரிப்பார்களென்றும் அவர்கள் கூறினார்கள். விவகாரங்களில் இப்படிப்பட்டதொரு நிலைமை நீடிக்க அனுமதிக்கப்படுமேயானால், முற்றுகையிடப்பட்டிருந்த வூகான் அரசாங்கம் சீக்கிரத்திலேயே நொறுங்கிப் போய்விடும் என்றும் அவர்கள் கூறினார்கள்.

ஏப்ரல் 12ஆம் தேதிய சம்பவத்திற்குப் பிறகு, குவாங்டுங்கில் 10 லட்சம் விவசாயிகள் ஸ்தல யுத்தப்பிரபுக்களால் சுலபமாக முறியடிக்கப்பட்டிருந்தமையாலும், ஷாங்காய் நகரத்தில் 8 லட்சம் பேர் சியாங்காய்-ஷேக்கினால் முறியடிக்கப் பட்டிருந்

தமையாலும், ராணுவம் மட்டுமே நம்பத் தகுந்ததாக இருந்த தென்றும், தொழிலாளி, விவசாயி வெகுஜனங்கள் நம்பத் தகுந்தவர்கள் அல்லவென்றும் அவர்கள் நினைத்தார்கள்.

ஊசலாட்டத்திலிருந்து காட்டிக் கொடுத்தலுக்குச் சென்ற பாதை, முதலில் விவசாயப் பிரச்சினைச் சம்பந்தமாகத் தன்னை வெளிப்படுத்திற்று. 1927 ஆம் ஆண்டு வசந்தகாலத்தில் வூகானில் கோமிங்டாங் கட்சி ஒரு மத்திய விவசாயக் குழுவை அமைத்தது. விவசாயப் பிரச்னையின் மீது நடைபெற்ற விவாதத்தில் கோமிங்டாங் தலைவர்களின் பிற்போக்கான நிலைபாடு முழுமையாக அம்பலப்படுத்தப் பட்டது. அவர்கள் பல்வேறு நொண்டிச் சாக்குகளின் பேரில் விவசாய சீர்திருத்தத்தை எதிர்த்தார்கள். வடக்கத்திய படையெடுப்பு சேனையிலிருந்த அதிகாரிகளுக்குச் சொந்தமான நிலம் பறிமுதல் செய்யப்படு வதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டுமென்று சிலர் கூறினார்கள். சிறுநிலச் சுவான்தர்களுக்குச் சொந்தமான நிலமும் விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டுமென்று மற்றவர்கள் கூறினார்கள். எதிர்ப்புரட்சிப் பேர்வழிகளுக்குச் சொந்தமான நிலமும்கூட அப்படியே வைத்திருக்கப்பட வேண்டுமென்று இன்னும் சிலர் கூறினார்கள். சீனாவில் 15% நிலம் மட்டுமே பயிர் செய்யப்படுவதனால் நிலச்சுவான்தார்களின் நிலத்தைப் பறிமுதல் செய்யவேண்டிய அவசியமில்லை என்ற வாதமும் அங்கே இருந்தது. தேவைப்படுவதெல்லாம் காலி நிலத்தை விவசாயிகளுக்கு கொடுப்பது என்பதுதான். பின்னர் ஒரு விவசாய திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டம் நிலத்தைப் பறிமுதல் செய்வதன் கட்டுக்கோப்பிற்கு வரம்பு கட்டுவதை உண்மையிலேயே நோக்கமாகக் கொண்டிருந்தது. மே மாதத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், பெரும் நிலச்சுவான்தார்களின் நிலத்தைப் பறிமுதல் செய்வதைக் கோட்பாடு ரீதியில் மட்டுமே ஏற்றுக்கொண்டிருந்தது. குத்தகைக் குறைப்பிற்கும், மொத்த உற்பத்தியில் 40 சதவீதத்தை குத்தகைக்கு உச்சவரம்பாக நிர்ணயிப்பதற்கும் அது வகை செய்திருந்தது என்பது உண்மை தான். ஆனால் அதன் ஷரத்துக்கள் பகிரங்கமாக்கப்படவில்லை. பின்னர். "பிரபுக்கள் கூட்டத்தைப்" பாதுகாக்க ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. வேறு வார்த்தைகளில் கூறினால், பத்தாம் பசலி நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் ஆட்சி அதிகாரத்தைப் பாதுகாப்பதற்கு ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இறுதியாக ஹூப்பே மாநிலத்தில் இரண்டு மிகப் பெரும் கிராமப்புறங்களாக

இருந்த ஹூவாங்காங் மற்றும் ஹூவாங்பீ ஆகியவற்றிலிருந்த விவசாய சங்கங்கள்கூட கலைக்கப்பட்டன.

வூகான் கோமிண்டாங் தலைவர்கள் விவசாய இயக்கத்திற்கும், விவசாய சீர்திருத்தத்திற்கும் எதிர்ப்பாக இருந்தார்கள் என்பதனை இவை அனைத்தும் முழுமையாக நிரூபித்தன. அவர்கள் தொழிலாளி வர்க்கப் போராட்டத்திற்கும் எதிராக இருந்தார்கள். இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டு கட்டாய மத்தியஸ்தத்தைத் திணிக்கும் சட்டங்கள் பிரகடனம் செய்யப்பட்டன. தொழிலாளிகள், கடை ஊழியர்களின் கோரிக்கைகளைக் கட்டுப்படுத்தும் சட்டங்களும் தொழிற்சாலைகள் மற்றும் கடைகளின் நிர்வாகத்தில் தொழிலாளிகள் பங்கு பெறுவதைத் தடை செய்யும் சட்டங்களும், சட்டத்தை மீறும் முதலாளிகளுக்கு அபராதம் போடவும், அவர்களைக் கைதுசெய்யவும் தொழிலாளர்களின் பாதுகாப்பு அணிக்கு இருந்த உரிமையைத் தடை செய்யும் சட்டங்களும் பிரகடனம் செய்யப்பட்டன.

இத்தகைய நடவடிக்கைகள் அனைத்தும் தொழிலாளி — விவசாயி இயக்கத்தை ஒடுக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தன. தொழிலாளி விவசாயி இயக்கத்தை ஆளும் வர்க்கத்தின் நலன்களுக்கு அடிபணியச் செய்யும் நோக்கத்தோடும் இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

கோமிங்டாங் தலைவர்கள் கலகம் செய்த தளபதிகளுக்கு எதிராக எந்தவிதமான கடுமையான நடவடிக்கையும் எடுக்கவில்லை. சியாடௌ-இன்னின் படைகளில் ஒரு பகுதியை ஆயுதமற்றவர்களா ஆக்குவதற்கு மட்டுமே அவர்கள் விரும்பிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் விபரங்களைத் திரித்துக் கூறினார்கள் சூகே-சியாங்கின் படைகளின் மீது தொழிலாளர் பாதுகாப்பு அணியினரால் நடத்தப்பட்ட ஒருதாக்குதலாக சாங்ஷா சம்பவம் இருந்தது என்று அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள். கியான்சி மாநிலத்தில் சூபெய்-டெயின் காட்டிக் கொடுத்தலைப் பொறுத்த வரையில் அதைப் பற்றி எதுவுமே தெரியாததுபோல் பாசாங்கு செய்து கொண்டு அவர்கள் முற்றிலும் மௌனம் சாதித்தார்கள்

இந்த முறையில் வூகான் கோமிண்டாங் தலைவர்கள் யுத்தப் பிரபுக்களின் அரசியல் கருவிகளாக மாறினார்கள்.

ஆனால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலிருந்த சென் டு-ஷிபு கும்பல் அச்சமயத்தில் என்ன செய்தது?

இப்படிப்பட்டதொரு நெருக்கடியான சமயத்தில், ஏகாதி

பத்திய வாதிகள் ஆகியோரின் கூட்டுத்தாக்குதலை எதிர்த்துதி போராடுவதற்கு வெகு ஜனங்களின் பலத்தை அதிகரிக்கும் பொருட்டு எவ்வித தயக்கமும் இல்லாமல் தொழிலாளிகள்—விவசாயிகளின் வெகுஜன இயக்கத்தை கட்சி மேலும் முன்னோக்கிக் கொண்டு சென்றிருக்க வேண்டும். குறிப்பாக ஹுன்னானைச் சுற்றிலும் மையமாகக் கொண்டிருந்த விவசாய இயக்கத்தை முன்னோக்கிக் கொண்டு சென்றிருக்க வேண்டும். தேசிய அரசாங்கத்திலிருந்தும் புரட்சிப் படையிலிருந்தும் கோமிங்டங் வலதுசாரிகளை விலக்குவதற்கு அது அறை கூவியிருக்க வேண்டும். மேலும் கோமிங்டாங் காட்சிக்குள்ளும் அதனுடைய அரசாங்கத்திற்குள்ளும் புதிய தொழிலாளர் தலைவர்களையும் விவசாயத் தலைவர்களையும் சேர்ப்பதற்கும் அது அறை கூவியிருக்க வேண்டும். ஒரு புதிய தொழிலாளர் — விவசாயிகளின் சேனையை அது வேகமாக ஏற்பாடு செய்து, அரசாங்கத்தின் மீதும் ராணுவத்தின் மீதும் நேரடியான கட்டுப்பாட்டினை மேற்கொண்டிருக்க வேண்டும். புரட்சியை வெற்றியைநோக்கி வழி நடத்திச் செல்வதற்கு அதுதான் ஒரே வழியாக இருந்தது.

ஆனால் சென் டு-ஷியு சரணாகதிவாதிகள் இதைச் செய்ய வில்லை. மேலும் அவர்களது தவறுகள் 5வது கட்சிக் காங்கிரஸில் உண்மையிலேயே சரி செய்யப்படவில்லை.

விவசாயத் திட்டம் சம்பந்தப்பட்ட மட்டில், கட்சியிலிருந்த வலது சாரி சந்தர்ப்பவாதிகள் முற்றிலும் கோமிங்டாங் தலைவர்களின் ஆதிக்கத்தின் கீழ் நடந்துக் கொண்டிருந்தார்கள். விவசாய இயக்கத்தை எதிர்த்த கோமிங்டாங் தலைவர்களின் தீர்மானத்திற்கு எதிராக எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. விவசாய இயக்கத்தின் "அத்து மீறல்கள்" என்று சொல்லப் பட்டவைக்கு எதிராக கோமிங்டாங்கில் இருந்த நிலச் சுவான் தார்களும் பூர்ஷ்வாக்களும் செய்த முணுமுணுப்பைக் கூட அவர்கள் எதிரொலித்தார்கள். மேலும் விவசாயப் புரட்சி பற்றி பத்திரிக்கையில் விமர்சிக்கப்பட வேண்டும் என்றும், அதனுடைய 'திரிபுகள்' விவசாய அமைச்சரவையிலிருந்து கொடுக்கப்படும் அறிவிப்புகளாய் திருத்தப்பட வேண்டும் என்றும் கோரிக்கொண்டு விவசாயப் புரட்சியை நிறுத்தும் படி முன்மொழிந்தார்கள். விவசாயிகளின் அரசியல் அதிகாரம் சம்பந்தப்பட்ட மட்டில் விவசாய இயக்கத்தை நிறுத்தி வைக்கும் குறிக்கோளோடு வூகானில் இருந்த கோமிங்டாங் கட்சியின் மத்திய நிர்வாகக்

குழுவினால் முன்வைக்கப்பட்ட "கிராமப்புற சுயாட்சி" கொள்கையைச் சந்தர்ப்பவாதிகள் ஏற்றுக் கொண்டார்கள். ஊகானில் நடைபெற்ற வெகுஜனப் போராட்டம் சியாங் காய்-ஷேக்கின் ஏஜெண்டுகளால் துவக்கப்பட்டது, என்ற விஷமத்தன மான வதந்தியைக்கூட அவர்கள் பரப்பினார்கள்.

சாங்ஷா சம்பவம் வெடித்தபொழுது, நகரத்தில் ஸீகே-ஷியான் தலைமையின் கீழ் 1000 வீரர்கள் மட்டுமே அங்கிருந் தார்கள். அப்போது பத்தாயிரக்கணக்கான விவசாயிகள் அந்நகரத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டிருந்தார்கள். நகரத்தைக் கைப்பற்றுவது சுலபமாக இருந்திருக்கும். ஆனால் கட்சியின் தலைமை அமைப்பு, தாக்குதல் திட்டத்தை ரத்து செய்து விட்டது. இது நடைமுறையில் புரட்சியைக் காட்டிக் கொடுத்ததற்கு ஒப்பாகும். சாங்ஷா சம்பவத்திற்குப் பிறகு சரணாகதிவாதிகள் அரசியல் சாகசங்களால் விவகாரங்களுக்குத் தீர்வு காண முயற்சி செய்தார்கள். ஆனால் இச்சாகசங்கள் பிற்போக்குவாதிகள் மிகவும் தீவிரமாவதில் மட்டுமே கொண்டு போய் முடிந்தது.

கட்சியிலிருந்த சந்தர்ப்பவாதிகளின் துரோகத்தனமான நிலை, தொழிலாளி வர்க்க இயக்கத்தின்பால் அவர்கள் கடைப் பிடித்த போக்கிலும் அதே அளவிற்கு வெளிப்படையாகத் தெரிந்தது. கட்டாய மத்தியஸ்தம், அந்நியர்களுக்குச் சொந்த மான நிறுவனங்களில் வேலை நிறுத்தங்களைத் தடைசெய்தல், சங்க நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துதல், தொழிலாளர் போராட்டங்களைத் தடுத்தல் ஆகியவை தொடர்பாக கோமிங்டாங்கின் கட்டளைகள் அனைத்தையும் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஷியாடௌ-யின்னின் கலகம் நடைபெற்ற சமயத்தில் 1500 தொழிலாளர்களை ஆயுதபாணி களாக்க வேண்டும் என்ற யோசனையை அவர்கள் நிராகரித் தார்கள். மேலும் ஆயுதங்களைப் பெறுவதற்குக் கூட மறுத் தார்கள். மேலும் மோசமானது என்னவெனில், ஊகானிலிருந்த பிற்போக்கு அதிகாரிகளின் அதிருப்தியைப் பார்த்ததும் அவர்கள் தொழிலாளர் பாதுகாப்பு அணியின் ஆயுதங்களைப் பறித்துச் கலைத்து விட்டார்கள். இம்முறையில் தொழிலாளர்களை எதிரியின் தாக்குதலுக்கு அம்பலமாக்கி வைத்தார்கள்.

ஊகான் காலகட்டத்தில், கோமிங்டாங் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டுக் கூட்டங்கள் நடைபெற்றன. ஆனால் சரணாகதிவாதிகள் தலைமைப் பொறுப்பை விருப்பத்தோடு

வெய் கும்பலின் குற்றங்களைக் கண்டனம் செய்தும், வூகான் அரசாங்கத்திலிருந்து தனது உறுப்பினர்களை வாபஸ் பெறுவதை அறிவித்தும் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு பிரகடனத்தை வெளியிட்டது. ஜூலை 15லிருந்து வூகான் பிற்போக்குவாதிகள் தொழிலாளர்கள், விவசாயிகளின் ஸ்தாபனங்களை மூடினார்கள். மேலும் கம்யூனிஸ்டுகளையும் இதர புரட்சிக்காரர்களையும் பெரும் எண்ணிக்கையில் படுகொலை செய்து புரட்சி இயக்கத்தை ஒடுக்கினார்கள்.

சூன்சிங் - லிங்கினால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட கோமிங்டாங்கின் ஜனநாயக கோஷ்டி, டாக்டர் சன்யாட் - சென்னின் மூன்று மக்கள் கோட்பாடுகளையும் அவரது மூன்று கேந்திரமான கொள்கைகளையும் உறுதியாக ஆதரித்தார்கள். மேலும் டாக்டர் சென்னுடைய புரட்சிகரமான கோட்பாடுகளையும், கொள்கைகளையும் மீறியதற்காகவும், அவரது போதனைகளுக்கு விசுவாச மில்லாமல் இருந்தமைக்காகவும், கோமிண்டாங் தலைவர்களைக் கண்டனமும் செய்தார்கள். மேலும் அவர்களது காட்டிக் கொடுத்தல், கோமிங்டாங்கினை யுத்தப் பிரபுக்களின் ஒரு கருவி என்ற அளவிற்குக் குறுக்கிவிடும் என்றும் சுட்டிக் காட்டினார்கள். விவசாயப் புரட்சி, விவசாயிகளின் அவசரமான கோரிக்கையாகும் என்றும், விவசாயப் பிரச்சனைக்கு புரட்சிகரமான முறைகளில் பரிகாரம் காணுவது டாக்டர் சென்னுடைய மாபெரும் இலட்சியம் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். இப்புரட்சிகரமான நிலைபாட்டினையும் பிரகடனம் செய்து அவர்கள் அறிக்கையொன்றை வெளியிட்டார்கள்.

ஏப்ரல் 12ஆம், ஜூலை 15ஆம் தேதிகளில் நடைபெற்ற படுகொலைகளுக்குப் பிறகு, முதல் புரட்சிகரமான உள் நாட்டு யுத்தம் தோல்வியில் முடிந்தது.

புரட்சிகரமான சக்தியினைக் காட்டிலும், ஏகாதிபத்தியவாதிகளின் எதிர்ப்புரட்சி சக்திகளும், வடக்கத்திய யுத்தப் பிரபுக்கள், கோமிங்டாங் பிற்போக்கு கும்பல் ஆகியோரின் எதிர்ப்புப் புரட்சி சக்திகளும் மிதமிஞ்சிய அளவுங்கு பலம் பெற்றிருந்தது, தோல்விக்கு முதல் காரணமாகும். கட்சியின் தலைமையினால் செய்யப்பட்ட வலதுசாரி சந்தர்ப்பவாதத் தவறுகள் தோல்விக்கு இரண்டாவது காரணமாகும்.

முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளிவர்க்கத் தலைமையைக் கைகழுவி விட்டதிலும்,விவசாயிகளின் மீதும் குட்டி

முதலாளிகளின் மீதும், தேசிய முதலாளிகளின் மீதும். அனைத்திற்கும் மேலாக ஆயுதப் படைகளின் மீதும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையை உதறித்தள்ளியதிலும் சென்டு-ஷியுவின் சந்தர்ப்பவாதிகளின் தவறுகள் பிரதானமாக அடங்கியிருந்தன. இதனுடைய விளைவு, எதிரியின் தாக்குதலுக்கு முன்னால் கட்சி பலமான எதிர்ப்பினை உருவாக்க முடியாமல் இருந்ததாகும். எனவே, புரட்சி தோற்கடிக்கப்பட்டது.

ஆனால் புரட்சியின் தீப்பிழம்புகள் ஒருபோதும் அணைக்கப் படமுடியவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் சீன மக்கள் தொடர்ந்து போராடினார்கள்.

### முதல் புரட்சிகர உள்நாட்டு யுத்தம் பற்றிய சுருக்கமான தொகுப்புரை

1924-27 ஆண்டுகளில் நடைபெற்ற யுத்தம் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் சீன மக்களால் நடத்தப் பட்ட முதல் ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் பத்தாம்சலி நிலப் பிரத்துவ எதிர்ப்புப்புரட்சி யுத்தமாகும்.

கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கோமிங்டாங்கின் கட்சிக்குமிடையே 1924ம்ஆண்டில் ஏற்பட்ட ஒத்துழைப்பு குவாங்டுங்கின் புரட்சித் தளத்தை நிலைநாட்டுவதற்கான போராட்டத்தின் துவக்கத்தைக் குறித்தது. தொழிலாளிகள், விவசாயிகள் ஆகியோர் புரட்சிகரமான வெகு ஜனங்களின் ஆதரவோடு புரட்சித்தளம் ஒருங்கிணைக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டது. மேலும், இம்முறையில் வடக்கத்திய படையெடுப்பு யுத்தத்தின் அடித்தளம் உருவாக்கப்பட்டது.

வடக்கத்திய படையெடுப்பு யுத்தம் 1926 ஜூலையில் துவங்கிற்று. அரையாண்டிற்குள், வடக்கத்திய படையெடுப்பு ராணுவம் சிகிலி யுத்தப் பிரபுக்களின் படைகளை நொறுக்கித் தள்ளி, அதனுடைய படைகளை யாங்ட்ஸி பள்ளத் தாக்கு வரை விரிவுபடுத்தி, வடக்கிலிருந்த பெங்டியன் யுத்தப் பிரபுக்களை எதிர்த்து மோதிற்று. புரட்சியின் அபிவிருத்தி சீனாவின் ஒற்றுமைக்கும் சுதந்திரத்திற்கும் வழி நடத்திச் செல்லும் உண்மையானதொரு சாத்தியப்பாடு அங்கு நிலவியது.

ஆனால் புரட்சிப் படையில் யுத்தப் பிரபுத்துவம் ஒழிக்கப் படாமல் இருந்தமையாலும், புரட்சிப் படைகளால் கைப்பற்றப்

பட்டிருந்த பகுதிகளின் நிலப்பிரபுக்களின் ஆட்சி சிதறடிக்கப் படாமல் இருந்தமையாலும், துரிதமாக விஸ்தரித்துக் கொண் டிருந்த புரட்சியின் அடித்தளம் பலப்படுவதிலிருந்தும் வெகு தூரத்தில் இருந்தது.

இப்படிப்பட்டதொரு பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு கோமிண்டாங் பிற்போக்குவாதிகள் ஏகாதிபத்திய வாதிகளால் ஆதரிக்கப்பட்டும் தூண்டி விடப்பட்டும், புரட்சியின் மீது ஒரு திடீர்தாக்குதலை நடத்தினார்கள். இடைக்காலத்தில் சென்டு-ஷியுவினால் தலைமை தாங்கப்பட்டிருந்த சரணாகதி வாதிகளால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு வந்த கம்யூனிஸ்ட் கட்சி தலைமை அமைப்பு தோழர் மாசே-துங்கினால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட சரியான கருத்தோட்டங்களை அமுக்கி வைத் திருந்தது. இப்படிப்பட்ட தலைமை அமைப்பு தாக்குதலுக்கு எதிராக சக்தி வாய்ந்த எதிர்ப்பினை ஏற்பாடு செய்யத தவறி விட்டது. இம்முறையில் புரட்சி தோல்வியில் முடிவடைந்தது.

புரட்சின் போக்கு முழுவதிலும் இரண்டு எதிரிடையான போக்குகளுக்கிடையே ஒரு போராட்டமாக உருவாகிது. ஒரு புறத்தில் பூர்ஷ்வா வர்க்கம் தலைமையைக் கைப்பற்ற முயற்சி செய்தது. ஏகாதிப்பத்திய வாதிகளோடு ஒத்துழைத்துக் கொண்டு, முதலாளித்துவ ஆதிகத்தை ஏற்படுத்துவதனால் புரட்சியை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியில் அது புரட்சிக் கெதிரானதொரு தாக்குதலைத் துவங்கியது. மறுபுறத்தில் ஜனநாயகப் புரட்சியில் முதலில் முழுமையான வெற்றியைப் பெறும் பொருட்டு, பிறகு சோஷலிசப் புரட்சியை நோக்கி படிப்படியாக மாறிச் செல்லும் பொருட்டு, கோடிக்கணக்கான உழைக்கும் வெகு ஜனங்களை அணிதிரட்டுவதன் மூலம், பட்டாளி வர்க்கம் அதனுடைய தலைமையைப் பலப்படுத்தவும். பூர்ஷ்வா வர்க்கத்தின் எதிர்ப்பினை முறியடிக்கவும் முயற்சி செய்தது. கட்சிக்குள் இந்த போராட்டத்தின் பிரதிபலிப்பு சென்டு-ஷியுவினால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட வலதுசாரி சந்தர்ப்பவாத பாதைக்கும் மா-சே துங்கினால் பிரதிநிதித்துவ படுத்தப்பட்ட மார்க்சிய-லெனினிய பாதைக்கும் இடையே நடைபெற்ற ஒரு போராட்டத்தை தனது உருவமாகக் கொண்டது. கட்சியின் ஆரம்ப ஆண்டுகளில் தத்துவத்தில் போதுமான பயிற்சி அளிக்கப்படாமல் இருந்தமையால், பல உறுப்பினர்கள் புரட்சியின்பால் வரம்பற்ற விசுவாசத்தினைப் போராட்டங்களில் வெளிப்படுத்தியிருந்த போதிலும், மகத்தான

ஸ்தாபனத் திறமையைப் போராட்டத்தில் வெளிப்படுத்தியிருந்த போதிலும், பல உறுப்பினர்கள் மார்க்சிய லெனினிய - சாராம்சத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்ள எவ்விதமான கடுமையான முயற்சியையும் செய்யவில்லை. இப்பலவீனம் கட்சியின் தலைமை அமைப்புகளில் தற்காலிகக் கட்டுப்பாட்டினை பிரயோகிப்பதற்கு சென்டு-ஷியு கும்பலின் சந்தர்ப்பவாதத்தைச் சாத்தியமாகச் செய்தது.

முதல் புரட்சிகரமான உள்நாட்டு யுத்தம் சீன ஜனநாயகப் புரட்சியின் பின்வரும் அடிப்படையான கோட்பாடுகளை வெளிப்படுத்தியது:

1. நவசீனாவில் ஜனநாயகப் புரட்சி தொழிலாளி வர்க்கத்தினால் தலைமை தாங்கப்பட்டதொரு ஐக்கிய முன்னணியினால் மேற்கொள்ளப்பட வேண்டும். புரட்சியின் வெற்றி, இந்த ஐக்கிய முன்னணி இல்லாமல் சாதிக்கப்பட முடியாது. மேலும் இந்த ஐக்கிய முன்னணி தொழிலாளி வர்க்கத்தினால் தலைமை தாங்கப்படாமல் இருந்தால் அது தோல்வியடையும்.

4. சீனாவில் ஜனநாயகப் புரட்சியில் தொழிலாளி வர்க்கத் தலைமையில்,கேந்திரமான பிரச்சனையாக விவசாயப் பிரச்சனை இருந்தது. விவசாயிகள் புரட்சிகரமானதொரு கூட்டாளியாக உருவாக்கப்பட்டிருக்கும்போது மட்டுமே புரட்சி வெற்றி பெற முடியும்.

3. சீனாவில் புரட்சியின் பிரதான உருவம் ஆயுதம் ஏந்திய எதிர்ப்புரட்சிக் கெதிராக ஆயுதம் ஏந்திய புரட்சியால் மட்டுமே இருக்க முடியும். ஒரு புரட்சிப்படை இல்லாமல் எதையுமே சாதிக்க முடியாது.

முதல் புரட்சிகரமான உள்நாட்டு யுத்தத்திலும், ஒட்டு மொத்தமான ஜனநாயகப் புரட்சியிலும் இவை அனைத்தும் வெற்றிக்கு அடிப்படையாக இருந்தன.

ஒரு ஜனநாயகப் புரட்சிகரமான உள்நாட்டு யுத்தம் பரந்துபட்ட தொழிலாளர்கள், விவசாயிகளின் வெகுஜனங்களின் மீது தொலைதூர செல்வாக்கினைக் கொண்டிருந்தது. கம்யூனிஸ்ட் கட்சி ஆயுதப்படையின் ஒரு பகுதியின் மீது கட்டுப்பாட்டினையும் செல்வாக்கினையும் பெற்றிருந்தது. அது கோமிங்டாங், ஏகாதிபத்தியவாதிகள், நிலப்பிரபு, தரகு முதலாளி வர்க்கங்களின் பிற்போக்குத் தன்மையையும் தேசிய பூர்ஷ்வாக்களின் இரட்டை குணாம்சத்தையும் அம்பலப் படுத்தியிருந்தது. இம்முறையில், மக்களிடையே அதனுடைய அந்தஸ்தை நிலைநிறுத்திக்

கொண்டும், இரண்டாவது புரட்சிகரமான உள்நாட்டு யுத்தத்தின் அடித்தளத்தைப் போட்டுக் கொண்டும் இருந்தது.

முதல் புரட்சிகரமான உள்நாட்டு யுத்தத்தின் சர்வதேச முக்கியத்துவம் என்னவெனில், அது உலக முதலாளித்துவத்தின் தற்காலிக ஸ்திரத்தன்மையைக் கவிழ்ப்பதனால் உலக முதலாளித்துவத்திற்குக் கடுமையானதொரு அடியைக் கொடுத்து, ஒடுக்கப்பட்ட கிழக்கத்திய மக்களின் விடுதலை இயக்கத்தை வளர்த்து, அதன் மூலம் சோவியத் யூனியனை அதனுடைய சோஷலிஸ நிர்மானத்தில் ஆதரித்துக் கொண்டும் இருந்ததுதான்.

லெனின் ஒரு சமயம் கூறினார்: "1905ம் ஆண்டில் 'ஆரம்ப ஒத்திகை' இல்லாமல், 1917ம் ஆண்டில் அக்டோபர் புரட்சியின் வெற்றி சாத்தியமற்றதாக இருந்திருக்கும்"[7], முதல் புரட்சிகரமான உள்நாட்டு யுத்தம் சீனப் புரட்சியின் பிரகாசமானதொரு ஒத்திகையாக இருந்தது.

### அடிக் குறிப்புகள்

1. "இப்பொழுது நாம் எதற்காப் போராடிக் கொண்டிருக்கிறோம்?" வழிகாட்டி, எண்-172, சீனப்பதிப்பு.
2. மா சே-துங், முன்பு மேற்கோள் காட்டப்பட்ட நூல், பாகம் I, பக்கம். 22. (ஆங்கிலப்பதிப்பு)
3. மேலே குறிப்பிட்ட நூல், பக்கம். 32.
4. மேலே குறிப்புட்ட நூல், பக்கம். 27.
5. மேலே குறிப்பிடப்பட்டது.
6. மேலே குறிப்பிட்ட நூல், பக்கம். 33.
7. லெனின், தேர்வு நூல்கள், அயல் மொழிப் பதிப்பகம், மாஸ்கோ, 1952, பாகம் II, பகுதி. 2, பக்கம். 348. (ஆங்கிலப் பதிப்பு).

அத்தியாயம் ஐந்து

# சீனப் புரட்சியின் தணிந்த அலை
# புரட்சிகரமான தளங்களை நிலை நாட்டுதலும் அபிவிருத்தி செய்தலும்

(ஆகஸ்ட் 1927—செப்டம்பர் 1931)

## 1. 1927ல் புரட்சி தோற்ற பிறகு நிலவிய அரசியல் நிலைமை. புரட்சியின் ஒரு தணிந்த நிலை.

1924க்கும் 1927க்கும் இடையே முதலாளித்துவ உலகத்தின் ஸ்திரத்தன்மை ஒரு முக்கியமான பலவீனத்தினால் குறிப்பிடத்தக்கதாயிருந்தது. ஸ்திரத் தன்மை நிலை நிறுத்தப்படவில்லை. உண்மையில், அந்நிலையில் ஒரு புதிய நெருக்கடியின் கரு உள்ளடங்கி இருந்தது.

இந்த காலகட்டத்தில், முதலாளித்துவ உற்பத்தியின் அதிகரிப்பு பற்றிய மிகப் பளிச்சென்று பட்ட அம்சம், அதனுடைய சீரற்ற தன்மையாகும். உலகிலுள்ள பல நாடுகள் அவற்றின் அதிகரிக்கப்பட்ட உற்பத்திக்கு சந்தைகளைத் தேடிக் கொண்டிருந்தன. ஆனால், சந்தைகளின் அளவும், செல்வாக்கு மண்டலங்களும் கிட்டதட்ட மாறாமலேயே இருந்தன. அதன் விளைவாக, சந்தைகளின் பிரச்சினை, முக்கியமாக அந்நிய சந்தைகளின் பிரச்சினை கூர்மையாக ஆயிற்று; இந்தக் கால கட்டத்தில், முதலாளித்துவ நாடுகளிடையே ஒத்துப் போக முடியாத முரண்பாடுகள் தீவிரமடைதலுக்கான அடிப்படைக் காரணம் இதில்தான் இருந்தன.

ஐரோப்பாவிலும் தூர கிழக்கிலும் ஒழுங்கை மீட்பதற்காக உடன்பாடுகள் (வெர் சேல்ஸ் மற்றும் வாஷிங்டன் உடன்படிக்கைகள்) செய்வதின் மூலம் முதலாளித்துவ உலகில் நிலைமையை ஸ்திரப்படுத்துவதற்கு ஏகாதிபத்திய அரசுகள் முயற்சித்தனர். அவை ஒரு குறுகிய காலத்திற்கு வெற்றியும் பெற்றன. ஆனால், கூர்மையான சந்தைப் பிரச்சினையால், அமெரிக்கா, பிரிட்டன்,

ஜப்பான், பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் முதல் உலக யுத்த முடிவில் காலனி நாட்டுச் சந்தைகள பிரிக்கப் பட்டிருந்த முறை சீக்கிரத்திலேயே அதிருப்தி அடைந்திருந்தன: மற்றும் அந்தப் பிரிவினை காலாவதி ஆகிவிட்டதாகவும் கருதின.

ஆகவே, உலகத்தைப் புனர்பங்கீடு செய்வதும் மற்றும் அந்நியச் சந்தைகள் சம்பந்தமாக செல்வாக்கு மண்டலங்களைப் புனர் பங்கீடு செய்வதும் ஏகாதிபத்திய வாதிகளுக்கிடையே அடிப் படையான முரண்பாடாக ஆயிற்று. சீனாவை மையமாகக் கொண்டிருந்த கிழக்கிந்திய சந்தை ஏகாதிபத்தியவாதிகளிடையே பிரதான போட்டிக்குரிய விஷயமாக இருந்தது. இந்த முறையில், தற்காலிகமான ஸ்திர நிலைமையிலிருந்து ஒரு புதிய நெருக்கடி தோன்றி, ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையே யுத்தத்தைத் தவிர்க்க முடியாததாகச் செய்து கொண்டிருந்தது.

1927ல் புரட்சியின் தோல்விக்குப் பிறகு, சீனாவில் ஏகாதி பத்தியவாதிகளுக்கிடையே மோதல்கள் தீவிரமடைவதற்கு இது காரணமாக இருந்தது. புதிய கோமிங்டாங் யுத்தப் பிரபுக் களிடையே நடைபெற்ற தொடர் யுத்தங்களில், அது பிரதிபலிக் கப்பட்டது. 1927 ஆகஸ்டுக்கும் 1930க்குமிடையே, ஆறு பெரிய உள்நாட்டு யுத்தங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அவை ஒரு புறம் சியாங் காய் - ஷேக், லி சங் - ஜென்னுக்கும் மறுபுறத்தில், வாங் சிங் - வெய் மற்றும் வூகான்னை சேர்ந்த டாங் செங் - ஷி ஆகியோருக்குமிடையே 1927 அக்டோபரில் நடை பெற்ற யுத்தம் குவாங்டுங்கை கட்டுப்படுத்துவதற்காக குவாங் டுங் யுத்த பிரபுக்கும் சியாங்காய் ஷேக்கிற்கும் இடையே, அதே ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற யுத்தம்; 1928 ஏப்ரல் மே,மாதங் களில் பெங்டியன் கும்பலைச் சேர்ந்த யுத்தபிரபு சாங்சோ சிறியது ன்னுக்கு எதிராக சியாங்காய் - ஷேக், லிடிசங்-ஜென், பெங்யூ - ஷியான், மற்றும் யென் ஷி - ஷாங் ஆகியோரால் தொடுக்கப் பட்ட யுத்தம், 1929 மார்ச், ஏப்ரல் மாதங்களில் மத்திய சீனாவைக் கட்டுப்படுத்துவதற்காக குவாங்கி யுத்த பிரபுக் களுக்கும், சியாங்காய் - ஷேக்கிற்கும் இடையே நடைபெற்ற யுத்தம், 1929 ஆகஸ்ட் மாதத்திலும், 1930 ஏப்ரல் மாதத்திலும் பெங் மற்றும் யென் ஆகியோரின் ஒன்றுபட்ட படைகளுக்கும், சியங்காய் ஷேக்கிற்கும் நடைபெற்ற 2 யுத்தங்கள் ஆகியவை ஆகும். மேலும் யுன்னான், குவெய்சோ மற்றும் செச்சுவாங் யுத்த பிரபுக்களிடையே நடைபெற்ற யுத்தங்களும் இருந்தன.

நவசீன வரலாறில், முன்பு ஒரு போதுமே கண்டிராத

அளவிற்குப் புதியகோமிங்டாங் யுத்த பிரபுக்களின் முதல் 8 ஆண்டு ஆட்சியில் நாட்டின் பெரும் பகுதியில் யுத்தங்கள் வெடித்தன. இத்தகைய யுத்தங்கள் ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையே நிலவிய முரண்பாடுகளைப் பிரதிபலித்தன. இத்தகைய யுத்தங்களில் இறுதியில், சியாங் காய் - ஷேக் வெற்றியாளனாக வெளி வந்தான்; ஏனெனில் அவனுடைய படைகள் மேம்பாடு அடைந்த படைகளாக இருந்தன. மற்றும் அவனுக்கு அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் ஆதரவும் இருந்தது. சியாங்காய்-ஷேக்கினால் பிரதி நிதித்துவ படுத்தப்பட்ட புதிய கோமிங்டாங் யுத்த பிரபுக்களின் ஏகாதிபத்திய ஆதரவுடன் கூடிய ஆட்சி, முற்றிலும் ஏகாதிபத்திய வாதிகளுக்கு சரண் அடைந்து, சீனாவின் தேசிய நலன்களை விட்டு விட்டது. மேலும், சீனாவில் பரந்துபட்ட வெகு ஜனங்களை ஒடுக்குவதற்கு அவர்கள் பத்தாம்பசலி நில பிரபுத்துவ சக்திகளின் மீது முற்றிலும் சார்ந்து நின்றார்கள். புரட்சியைக் காட்டிக் கொடுத்தமையால், சியாங்காய் - ஷேக், சீனாவில் எந்த பிரச்னைகளுக்கும் தீர்வு காணவில்லை. தீர்வு காணவும் முடியவில்லை. மறுபுறத்தில், ஏகாதிபத்தியவாதிகள், பத்தாம்பசலி நிலப்பிரபுக்கள் மற்றும் தரகு முதலாளிகள், ஆகியோரின் பொதுவான கைக்கூலியாக அவன் மாறினான்.

தோழர் மாசேதுங், சியாங்காய் - ஷேக்கினுடைய பிற்போக்கு ஆட்சியைப்பற்றி, ஊடுருவிப் பார்க்கும் ஒரு பகுத்தாய்வினைச் செய்திருக்கிறார்.

> புதிய கோமிங்டாங் யுத்த பிரபுக்களின் தற்போதைய ஆட்சி, நகரங்களில் உள்ள தரகு முதலாளிகளின் ஒரு ஆட்சியாகவும், மற்றும் கிராமப்புறத்தில் உள்ள நிலம்படைத்த கனதனவான் கூட்டத்தின் ஆட்சியாகவும் இன்னும் உள்ளது; அயல் நாட்டு விவகாரங்களில் ஏகாதிபத்தியத்திற்கு சரண் அடைந்த ஒரு ஆட்சியாகவும், மற்றும் உள்நாட்டில் பழைய யுத்த பிரபுக்களை, புதிய யுத்த பிரபுக்களால் அகற்றப்பட்டுள்ள ஒரு ஆட்சியாகவும் இன்னும் உள்ளது; மற்றும் முன்னைக் காட்டிலும், மிக அதிகமான ஈவிரக்கமற்ற முறையில் தொழிலாளி வர்க்கத்தையும், விவசாயிகளையும் பொருளாதார சுரண்டலுக்கும், அரசியல் ஒடுக்கு முறைக்கும் உள்ளாக்கி உள்ளது. குவாங்டுங்கில் இருந்து ஆரம்பித்த பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சி, பாதி வழி மட்டுமே சென்றிருந்தபோது, தரகு முதலாளி வர்க்கமும், நிலம் படைத்த கனதனவான் பிரபுக் கூட்டமும் அதன் தலைமையைக் கைப்

பற்றி உடனடியாக எதிர்ப்புரட்சியின் பாதையில் முடுக்கி விட்டார்கள்; நாடு முழுவதிலும் தொழிலாளிகள், விவசாயிகள், பொது மக்களின் இதர பகுதிகள் மற்றும் பூர்ஷ்வா வர்க்கமும் கூட (தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தை அர்த்தம் படுத்துகிறார்:- ஆசிரியர்.) எதிர்ப்புரட்சி ஆட்சியின்கீழ் இருந்துள்ளனர்; மற்றும் அரசியல் அல்லது பொருளாதார விடுதலையின் ஒரு துணுக்கைக்கூட அவர்கள் பெறவில்லை.[1]

அதாவது வர்க்க பின்னணி சம்மந்தபட்ட மட்டில், அந்த ஆட்சி மிக அதிகமான காட்டுமிராண்டித்தனமாக இருந்தது. என்பதைத் தவிர, புதிய கோமிங்டாங் யுத்த பிரபுக்களின் ஆட்சி, பழைய யுத்த பிரபுக்களின் ஆட்சியைப் போலவே இருந்தது. கியாங்சூவிலும், மற்றும் சிகியாங்கிலுமிருந்த வங்கி தரகு முதலாளிகள், குண்டர்கள், யுத்தப்பிரபுக்கள், மற்றும் கட்சித் தலைவர்கள் உள்ளடங்கிய ஒரு அரசியல் அமைப்பாக இருந்தது. நாடு முழுவதிலும் உள்ள மக்களின் மீது ராணுவப்படை, ரகசியப் போலீஸ் ஆகியவற்றின் பயங்கரமானதொரு ஆட்சியை அது திணித்துக் கொண்டிருந்தது. புதிய யுத்தப் பிரபுக்களின் ஆட்சி கோமிங்டாங் கட்சியினை ஓர் ஐக்கிய முன்னணி ஸ்தாபனமாக இருந்து, பெரு முதலாளி வர்க்கத்தின் ஒரு பாசிச ஸ்தாபனமாக மாற்றிவிட்டது. அவர்கள் தங்களுடைய எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளை மூடி மறைப்பதற்கும், மக்களை மோசடி செய்வதற்கும் அவர்கள் புரட்சிப் பதாகையை பயன்படுத்தினார்கள். ஆகவே, அரசியல் மோசடியோடு கூடிய பயங்கரவாதம், சியாங்காய்-ஷேக் ஆட்சியினைக் குணாதிசயப் படுத்திற்று.

1927இல் புரட்சியின் தோல்விக்கு பிறகு, சீனாவில் வர்க்க சேர்மானத்தில் புதியதொரு மாற்றம் ஏற்பட்டது. பெருமுதலாளி வர்க்கம் புரட்சியின் லட்சியத்தைக் காட்டிக் கொடுத்து விட்டது. தேசிய பூர்ஷ்வா வர்க்கம் சரண் அடைந்து விட்டது. குட்டி முதலாளி வர்க்கத்தின் பகுதி ஒதுங்கிப் போய்விட்டது. தொழிலாளி வர்க்கமும் விவசாயிகளும் மற்றும் வறுமையில் வாடிக் கொண்டிருந்த குட்டி முதலாளி வர்க்கமும்தான் புரட்சிப் போராட்டத்தில் விடாப்பிடியாக இருந்தார்கள். ஏகாதிபத்திய வாதிகள், நிலப்பிரபுக்கள், அதிகார வர்க்கத் தரகு முதலாளிகள், கோமிங்டாங்கின் வலதுசாரிகள், ஓர் எதிர்ப்புரட்சிக் கூட்டணியாக அமைந்து இருந்தார்கள். அவர்களது பலம், புரட்சியின் பலத்தைக் காட்டிலும் மிகவும் மிதமிஞ்சியதாக இருந்தது. ஆகவே, புரட்சி ஒரு தணிந்த அலையின் நிலையைச்

சென்றடைந்தது.

கோமிங்டாங் பிற்போக்கு ஆட்சி, பெருமுதலாளி வர்க்கத்தின் பக்கத்திற்கு கடந்துச் சென்றிருந்த குட்டி முதலாளி வர்க்கத்தின் மேல் தட்டுப்பகுதிக்கும் தேசிய முதலாளிகளுக்கும் எந்த விதமான அரசியல் உரிமைகளையும் அல்லது பொருளாதார லாபத்தையும் கொடுக்கவில்லை. பிற்போக்கு கோமிங்டாங் அரசாங்கத்தின் தேசிய முதலாளி வர்க்கத்தின் ஒன்று அல்லது இரண்டு பிரதிநிதிகள் பங்கெடுத்தார்கள் என்ற விவரம் அதனுடைய பாசிச சர்வாதிகாரத்தின் உண்மையான தன்மையை மூடி மறைப்பதற்கான ஒரு முயற்சியே தவிர, வேறு எதுவும் அல்ல. புரட்சிப் போராட்டத்தில் விடாப்பிடியாக இருந்த தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளை கோமிங்டாங் பிற்போக்குவாதிகள் ஈவிரக்கமற்ற முறையில் கொன்றுக் குவித்தார்கள். 1928ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கும் ஆகஸ்ட் மாதத்திற்கும் இடையே, ஒரு லட்சம் விவசாயிகளும் தொழிலாளிகளும் கொல்லப் பட்டார்கள். அதே சமயத்தில், உயிரோடு இருந்தவர்கள் முன்பு எப்போதைக் காட்டிலும் மிகவும் அதிகமாக ஈவிரக்கமற்ற முறையில் ஒடுக்கப்பட்டு சுரண்டப்பட்டார்கள்.

கோமிங்டாங் பிற்போக்குவாதிகள் நகரிலிருந்தது தொழிலாளிகளை முதலில் தாக்கினார்கள்.

கோமிங்டாங் பிற்போக்குவாதிகளின் ஆட்சி, பழைய யுத்தப் பிரபுக்களின் ஆட்சியைக் காட்டிலும் மிக அதிகக் காட்டுமிராண்டித்தனமாக இருந்தது. தொழிலாளிகள் ஏற்கெனவே பெற்றிருந்த பொருளாதார முன்னேற்றங்களையும், மற்றும் ஜனநாயக உரிமைகளையும் முற்றிலும் பறிக்கப் பட்டிருந்தார்கள்.

ஷாங்காய், காண்டன் மற்றும் வூகான் ஆகிய நகரங்களிலிருந்த தொழிலாளர்களின் சங்கத்தின் போராட்டத்திலிருந்து பெறப்பட்ட முக்கியமான வெற்றிகளில் கூலி உயர்வு ஒன்றாகும். எனினும், எதிர்ப்புரட்சிகரமான கவிழ்ப்பு நடவடிக்கைகளுக்குப் பிறகு இத்தகைய நகரங்களிலிருந்த தொழிலாளர்களின் கூலிகள் கடுமையாக வெட்டப்பட்டன.

வேலை நேரம் மீண்டும் 11 மணி நேரமாகவும் மேலும் அதிகமாகவும் நிர்ணயிக்கப்பட்டன. முன்பு வழங்கப்பட்டிருந்த இடைவேளைக்குப் பிறகு இருந்த அரைமணி நேர ஓய்வு ரத்து செய்யப்பட்டது. பொதுவாகக் கூறுமிடத்து, தொழிலாளர்கள் ஒரு நாள் சம்பளத்தை இழப்பதற்குத் தயாராக இருந்தால் ஒழிய அவர்

களுக்கு ஞாயிற்றுக் கிழமை விடுமுறையும் இல்லாமல் இருந்தது.

வேலை நிலைமைகள் கடுமையாக மோசமடைந்தன. உழைப்பின் கடுமை அதிகரித்தது. உதாரணமாக, கடந்த காலத்தில் ஒன்று அல்லது இரண்டு இயந்திரங்களைப் பார்த்து வந்த தொழிலாளிகளின் வேலையோடு ஒப்பிடும் போது, ஒவ்வொரு தொழிலாளியும் மூன்று அல்லது நான்கு இயந்திரங்களை ஓட்ட வேண்டியதாயிருந்தது. குழந்தைத் தொழிலாளிகள் முன்புபோலவே கடுமையாகச் சுரண்டப்பட்டார்கள். பெண் தொழிலாளிகள் குழந்தைப் பேறுகால சமயத்தில் முன்பு அனுபவித்த ஒரு மாதகால ஓய்வினை அனுபவிக்க முடியவில்லை. மேலும், தொழிற்சாலைகளில் பணியாற்றிய தொழிலாளர்கள் ஒரு ஜாமின் அல்லது பலஜாமீன்களைக் கொடுக்கும்படிச் சொல்லப் பட்டார்கள். மற்றும், அவர்கள் விசேஷமாகக் கூலிக்கு அமர்த்தப்பட்ட, துப்பு அறிபவர்களாலும், போலீசாராலும், படைகளாலும்கூட கண்காணிக்கப்பட்டார்கள்.

சுருக்கமாகச் சொன்னால், சங்கங்களால் தொழிலாளர்களுக்கு வாங்கித் தரப்பட்டிருந்த பொருளாதார முன்னேற்றங்கள் அனைத்தும் புரட்சியின் தோல்விக்குப் பிறகு, தூக்கியெறியப்பட்டன.

கோமிங்டாங் பிற்போக்குவாதிகள், கம்யூனிஸ்ட் தலைமையிலிருந்த சிவப்பு தொழிற்சங்கங்களை எப்பொழுதைக் காட்டிலும் மிகவும் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கினார்கள். அவர்களை வெள்ள பயங்கரத்திற்கு உள்ளாக்கினார்கள். அத்தொழிற்சங்கங்களை மூடி அவற்றை தலைமறைவாகச் செல்லும்படிச் செய்தார்கள். தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய தலைவர்களின் எல்லா நடவடிக்கைகளும் நசுக்கப்பட்டன. புரட்சி போராட்டத்தில் அனுபவம் பெற்றிருந்த தொழிலாளர்களில் சுமார் 80% பேர் கொல்லப்பட்டார்கள், அல்லது வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள்.

எனினும், கோமிங்டாங் பிற்போக்குவாதிகள் அவர்களது ஆட்சியில் ஒரு தற்காலிக ஸ்திரத் தன்மையை மட்டுமே வைத்திருக்க முடிந்தது. அரசியல் ரீதியான அல்லது பொருளாதார ரீதியான எந்த விதமான உண்மையான ஸ்திரத் தன்மையும் முற்றிலும் அவர்களுடைய சக்திக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. அவர்களுடைய அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் மோசமாகிக் கொண்டு இருந்த போதிலும், தொழிலாளிகள் அவர்களது போராட்டத்தில் விடாப்பிடியாக இருந்தார்கள்.

1928இல் ஷாங்காயில் 140 வேலை நிறுத்தங்கள் வெடித்தன. அவற்றில் 2,33,802 தொழிலாளிகள் சம்பந்தப்பட்டிருந்தார்கள். அவர்கள் மிதமிஞ்சி கடினமான நிலைமைகளில் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினார்கள். ஆனால், சிவப்புத் தொழிற்சங்கங்கள் தலைமறைவாகச் செல்லும்படி நிர்ப்பந்தப் படுத்தியிருந்த சமயத்தில், தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்கள் எதிர்ப்புரட்சி பயங்கர ஆட்சியின் கீழ் தொடர்ந்து நடத்தப் பட்டன. தணிவானதொரு அலையின் நிலையிலிருந்த ஒரு புரட்சியின் குணாம்ச ரீதியான பின்வரும் அடையாளங்களை அவை தவிர்க்க முடியாதபடி பெற்றிருந்தன.

முதலாவதாக, தொழிலாளர்களின் போராட்டம் பெரும் பாலும், தன்மையில் பொருளாதார ரீதியான போராட்டமாக இருந்தது. உதாரணமாக, 1928ஆம் ஆண்டில் பின்பாதியில் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே ஏற்பட்ட தகராறுகளில், 92% தகராறுகள் பொருளாதார காரணங்களால் ஏற்பட்ட மற்றும் உயர்ந்த கூலிகளைக் கோரி ஏற்பட்ட தகராறுகள். தொழிலாளிகள் போராடுவதற்கான அவசரத் தேவையை உணர்ந்திருந்தார்கள்; ஏனெனில், அவர்கள் மிதமிஞ்சிய கொடிய சுரண்டலினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இரண்டாவதாக, போராட்டம் பெரும்பாலும் தன் எழுச்சியானதாகவே இருந்தது. நாற்பத்தொன்பது சதவீதத்திற்குக் குறையாத வேலை நிறுத்தங்கள் தொழிலாளர்களாலேயே துவக்கப்பட்டிருந்தன; பன்னிரண்டு சதவீதப் போராட்டங்கள் மஞ்சள் தொழிற்சங்கங்களால் தலைமை தாங்கப்பட்டிருந்தன; மற்றும் 37% வேலைநிறுத்தப் போராட்டங்கள் சிவப்பு தொழிற் சங்கங்களால் தலைமை தாங்கப்பட்டிருந்தன.

மூன்றாவதாக, வேலைநிறுத்தக்காரர்களில் ஒரு பெரும்பகுதியினர் கடை வைத்திருப்பவர்களாகவும், கைவினைத் தொழிலாளர்களாகவும், மற்றும் கப்பல் தொழிலாளர்களாகவும் இருந்தார்கள். போராட்டத்தில் பங்குக் கொண்ட மொத்தம் 196 தொழில்களில் அவர்கள் தொழில்களைச் (சுமார் 49%) சேர்ந்தவர்கள். தொழிற்சாலைத் தொழிலாளர்கள் எதிர்புரட்சி பயங்கரத்தின்கீழ் வாங்கிய அடியிலிருந்து இன்னும் மீளவில்லை.

நான்காவதாக, 22 சதவீத வேலை நிறுத்தங்கள் மட்டுமே முழுமையான வெற்றியில் முடிவடைந்தன; 19% வேலை நிறுத் தங்கள் பகுதி வெற்றியில் முடிவடைந்தன? 59% சதவீத வேலை நிறுத்தங்கள்—பெரும் பகுதியான வேலை நிறுத்தங்கள்—தோல்வி

யில் முடிவடைந்தன, அல்லது எதையுமே சாதிக்காமல் முடிவடைந்தன.

எதிர்புரட்சி பயங்கரத்தின்கீழ் நகரங்களிலிருந்த தொழிலாளி வர்க்கத்தின் இனம் உயர்வானதொரு அலையிலிருந்து தணிவானதொரு அலைக்கு கடந்து சென்றிருந்தது; முன்னேறித் தாக்குதலிருந்து தற்காப்பு நிலைக்கு கடந்து சென்றிருந்தது.

சியாங்காய்-ஷேக்கின் புதிய கோமிங்டாங் யுத்தப்பிரபு ஆட்சி கிராமப்புறத்தில் விவசாயிகளோடு எதிர்த்தாக்குதல் நடத்தி, விவசாயிகளோடு சீராகச் செல்வதற்கு ஒரு சர்ந்தர்ப்பத்தை நிலச்சுவான்தாரர்களுக்கு கொடுத்தது. அதன் விளைவாக, வடக்கத்திய படையெடுப்பு நடந்த சமயத்தில் விவசாயிகளால் ஸ்தாபிக்கப்பட்டிருந்த பெரும்பாலான புரட்சிகரமான ஸ்தல அரசாங்கங்கள் அழிக்கப்பட்டன. மற்றும் குத்தகைக் குறைப்பிற்காகவும், வட்டி குறைப்பிற்காகவும் போடப்பட்டிருந்த உத்தரவுகள் கிழித்தெறியப்பட்டன. நிலச்சுவான்தார்கள் வெறித்தனமாக வட்டியையும் குத்தகையையும் அதிகரித்துக் கொண்டிருந்தாமையாலும், பிற்போக்கு அரசாங்கம் மிதமிஞ்சிய நிலவரியையும் இதர வரிகளையும் மிதித்துக் கொண்டிருந்தமையாலும் விவசாயிகள் அவர்களுடைய வாழ்வுக்கும் உற்பத்திக்கும் அவசியமாக இருந்த நிலைமைகளை பறிக்கப்பட்டிருந்தார்கள்.

குவாங்டுங், ஹூன்னான், ஹூப்பே மற்றும் கியாங்சிலும் விவசாயஇயக்கம் ஆயுதம் ஏந்திய ஒரு ஆக்கிரமிப்பின் உருவத்தை மேற்கொண்டது. கிழக்கு குவாங்டுங்கில் ஹைபெங்கிலும், லு பெங்கிலும், ஹைணான் தீவிலும், ஹூன்னான்—கியாங்சி மற்றும் ஹூன்னான் — குவாங்டுங் எல்லைகளிலும், மற்றும் ஹூவாங் கானிலும் மற்றும் ஹீப்பேயில் மாசெங்கிலும் விவசாயிகள் தங்களது சொந்தப் படைகளை அமைத்து, தங்களுடைய சொந்த அரசாங்கங்களையும் ஏற்பாடு செய்தார்கள். சியாங் காய்-ஷேக்கின் ஆட்சியின் மையமான கியாங்சுவிலும், சிக்கியாங்கிலும் குத்தகைகள் மற்றும் வரிகளைக் கொடுப்பதற்கு எதிரர்க விவசாயிகளுடைய போராட்டங்கள் வெடித்துக் கிளம்பின. ஹோனானிலிருந்த சிவப்பு ஈட்டிக் கழகம் போன்ற இப்படிப்பட்ட புராதனமான விவசாயி ஸ்தாபனங்களின் போராட்டம் அதிகமாக தீவிரப்படுத்தப்பட்டது. ஹோப்பெய் மற்றும் ஷாங்டுங் மாகாணங்களில் சில மாவட்டங்களில் விவசாயி கலகங்கள் நடைப்பெற்றன.

மிதமிஞ்சிய, கஷ்டமான சூழ்நிலைமைகளின் மத்தியில், விவசாய வெகு ஜனங்கள் அவர்களது போராட்டங்களை இன்னும்

விடாப்பிடியாக நடத்தி வந்தார்கள். ஆனால், வெள்ளைப் பயங்கரத்தின் கீழ் தனிவானதொரு அலையைக் கொண்ட ஒரு இயக்கததின் குணாதிசயங்களையும் விவசாயி இயக்கம் பெற்றிருந்தது; புரட்சியின் தோல்விக்குப் பிறகு ஹூன்னான்-சியாங்கி எல்லையில் கெரில்லா யுத்தத்தை நிறைவேற்றுவதில் அவருக்குக் கிடைத்த அனுபவத்திலிருந்து தோழர் மா சே-துங்கினால் பின் வருமாறு சரியாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது:

கடந்த ஆண்டில் பல இடங்களில் போராடிய பிறகு, நாட்டில் ஒட்டுமொத்தமாக புரட்சி பேரெழுச்சி தணிந்து கொண்டிருக்கிறது என்பது நமக்கு கூர்மையாகத் தெரியும்...... ......செஞ்சேனை செல்லும் இடங்களிலெல்லாம், வெகு ஜனங்கள் வரவேற்காமலும், தயக்கத்தோடு இருப்பதையும் அது காண்கிறது. எதிரியின் படைகள் எவராக இருந்தாலும், நாம் அவர்களை எதிர்த்துப் போராட வேண்டியுள்ளது. மற்றும், எதிரியின் படைகளுக்குள்ளே எந்தவிதமான கலகமும் எழுச்சியும் நடைபெறவேயில்லை.[2]

உள்நாட்டு நிலைமை பற்றிய இந்த ஊடுருவிப் பார்த்து அலசி ஆராய்தல், உயிரோட்டமான முக்கியத்துவம் உடையதாயிருந்தது. வெகுஜனங்களிடத்தில் வரவேற்பில்லாமலும், தயக்கமும் இருந்தது என்பதன் அர்த்தம் என்னவென்றால், நொறுக்கப்பட்டிருந்த வெகுஜன இயக்கம் இன்னும் மீட்சிப் பெறவில்லை என்பதுதான். கொரில்லா யுத்தத்தில் இருந்த கடினமான போராட்டம் பிற்போக்கு வர்க்கங்களின் ஆட்சி இன்னும் முழுமையான வீழ்ச்சியின் கட்டத்தை அடைந்திருக்கவில்லை என்பதைக் காட்டிற்று.

ஹூன்னான், கியாங்சி எல்லையிலிருந்த உண்மையான நிலைமை இதர இடங்களிலும் உண்மையாகவே இருந்தது.

இந்த காலக் கட்டத்தில் நடைப்பெற்ற பெரும்பாலான விவசாயப் பேரெழுச்சி குவாங்டுங், ஹூன்னான், ஹூப்பே மற்றும் கியாங்சி மாகாணங்களில் நடைப்பெற்றன; இந்த மாகாணங்களில் வடக்கத்திய படையெடுப்பு நடைபெற்றக் காலத்தில் வீசிய மாபெரும் புரட்சிப் புயலின் செல்வாக்கின் கீழும், மற்றும் இந்த மாகாணங்களில் கிராமப்புறத்தில் ஏகாதிபத்தியவாதிகள், பத்தாம்பசலி யுத்தப் பிரபுக்கள் ஆகியோரின் ஆட்சியைச், சம்பந்தப்படுத்திப் பார்க்கும் போது, பலஹீனமாக இருந்தாலும் புரட்சிகரமானதொரு அடித்தளம் போடப்பட்டிருந்தது. ஆனால், கட்சியின் சரியான தலைமையினால் மட்டுமே

விவசாயி ஆயுதப்படைகளையும் ஆட்சியையும் கெட்டிப்படுத்தவும் அபிவிருத்தி செய்யவும் முடிந்தது. கட்சித் தலைமையின் பலமும் புரட்சி சக்திகளின் பலமும் மாவட்டத்துக்கு மாவட்டம் வேறுபட்டிருந்தமையால், விவசாயி இயக்கத்தின் அபிவிருத்தியும் சீரற்றதாக இருந்தது.

பொதுவாக சொல்லுமிடத்து, 1927-ஆம் ஆண்டிற்குப் பிறகு புதிய கோமிங்டாங் யுத்தப் பிரபுக்களின் ஆட்சி இன்னும் நகர்ப்புறங்களில் தரகு முதலாளிகளின் ஆட்சியாகவும், கிராமப்புறத்தில் நிலம் படைத்த கனதனவான்களின் ஆட்சியாகவும் இருந்தது. ஆகவே, சீனா இன்னும் அப்பொழுது பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியின் காலக் கட்டத்தில்தான் இருந்தது. ஆனால் புரட்சியின் தோல்விக்குப்பிறகு தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் படைகள் ஈவிரக்கமற்ற வெள்ளை பயங்கரத்னால் ஒடுக்கப்பட்டும் சிதறடிக்கப்பட்டும் இருந்தன. புரட்சி அலை அப்பொழுது இரண்டு எழுச்சிகளின் இடையே இருந்தது. மற்றொரு எழுச்சி இன்னும் வரவேண்டியிருந்தது; மற்றும் இப்படிப்பட்ட இரு எழுச்சிகளின் இடையே இருந்த இடைவேளையில் புரட்சி அலை இருந்தது.

எனினும், புதிய யுத்தப் பிரபுக்களின் ஆட்சி ஸ்திரமற்றதாக இருந்தது. இத்தகைய யுத்தப் பிரபுக்கள் மக்களிடமிருந்து முற்றிலும் தனிமைப்பட்டிருந்தார்கள்; மற்றும் மக்களோடு அவர்களுக்கிருந்த முரண்பாடுகள் நாள்தோறும் மிகவும் கூர்மையாகிக் கொண்டிருந்தன; ஏனெனில் அவர்களது ஆட்சி தொழிலாளிகள், விவசாயிகள் மற்றும் புரட்சிகரமான புத்தி ஜீவிகளை முன்கண்டிராத ஓர் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப் பட்டதன் மூலமாக அவர்களது ஆட்சிப் படிப்படியாக, நிலைநாட்டப் பட்டிருந்தது. அவர்களது எல்லா ஸ்தாபனங்களும் (அரசாங்கம்) ஆயுதபபடைகள், கட்சிகள், இத்யாதி) பலஹீனமாக இருந்தன. ஏனெனில், அவை பின் தங்கியதொரு சமுதாய மற்றும் பொருளாதார அடிதளத்தின் மீது நிலைநாட்டப் பட்டிருந்தன. அவற்றின் பலமும், உள்நாட்டு மோதல்களாலும், யுத்தங்களாலும் மேலும் பலஹீனப்பட்டிருந்தது. புரட்சி சக்திகள் பெருமளவிற்கு பலஹீனப்பட்டிருந்த போதிலும், புதிய கோமிங்டாங் யுத்தப் பிரபுக்களின் ஆட்சி ஸ்திரமாக இருப்பதிலிருந்து வெகு தொலைவில் இருந்தது என்பதை இவை அனைத்தும் சுட்டிக்காட்டின. இவை இரண்டாவது ஒரு புரட்சி அலையின் எழுச்சியை தவிர்க்க முடியாததாகச் செய்தன.

புரட்சியின் தோல்வியைப் பின்தொடர்ந்து ஏற்பட்டிருந்த அரசியல் நிலைமையிலிருந்து, புரட்சிகரமான யுத்த தந்திரத்தையும், போர்த் தந்திரங்களையும் உருவாக்குதல் நடைபெற வேண்டியிருந்தது. இரண்டாவது புரட்சிகரமான உள்நாட்டு யுத்தக் காலக்கட்டத்தில் இதிலிருந்து சரியான புரட்சிப் பாதை, தோழர் மாசே-துங்கினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ஒரு பாதை, உருவாக்கப் பட்டது. இந்தப் பாதை படிப்படியாக சீனப் புரட்சியின் அலையை மாற்றிற்று.

## 2. முன்னேறுவதிலிருந்து பின்வாங்கிச் செல்வதற்கு சீனப் புரட்சி மாறிச் செல்லுதல் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் முதல் ''இடதுசாரி''ப் பாதையை களையெடுத்தல்.

முதலில் சியாங்காய் - ஷேக்கினாலும் பிறகு வாங் சிங் வெய்யினாலும் புரட்சி காட்டிக் கொடுக்கப்பட்டிருந்த நெருக்கடியான சமயத்தில், தோழர்கள் சூயென்-லாய் மற்றும் சூடே ஆகியோரின் தலைமையின்கீழ் முப்பதினாயிரத்துக்கும் அதிகமான படைகளைக் கொண்டு 1927 ஆகஸ்டு 1-ந் தேதியன்று கியாங்கி மாகாணத்தில் நான் சாங்கில் ஓர் ஆயுதப் பேரெழுச்சியை ஏற்பாடு செய்ததின் மூலம், தோல்வியிலிருந்து புரட்சியை மீட்பதற்கு கட்சி ஏற்பாடு செய்தது. புரட்சிக் குழு என்ற பெயரில் ஒரு தலைமை உறுப்பு அமைக்கப்பட்டது. அதிகாலையில் பேரெழுச்சி ஆரம்பிக்கப்பட்டது. மூன்று மணி நேர போராட்டத்திற்குப் பிறகு மற்றும் கோமிண்டாங் பிற்போக்குப் படைகள் செயலற்று தாக்குப்பட்டு, நகரம் விடுதலை செய்யப்பட்டது.

ஆகஸ்ட் 5-ல் புரட்சிப் படைகள் நான்சாங்கைக் காலி செய்து, குவாங்டுங்கை நோக்கி அணி வகுக்க ஆரம்பித்தது.

ஆயுதமேந்திய கலகத்தை, விவசாயி இயக்கத்தோடு ஒருங்கிணைக்க வேண்டிய அவசியத்தை உணர்வதற்கு தலைமை தவறியதன் காரணமாய, பேரெழுச்சிக்குப் பிறகு எடுக்க வேண்டிய அடுத்த நடவடிக்கைப் பற்றிய பிரச்சனைக்குச் சரியாக தீர்வு காணப்படவில்லை. கியாங்சி, ஹூன்னான், மற்றும் ஹூப்பே மாகாணங்களில் விவசாயி இயக்கம் இன்னும் முழு மூச்சோடு இருந்தமையால், ஒரு விடாப்பிடியான, நீடித்த கொரில்லா யுத்தத்தை நடத்துவதற்காக புரட்சிகரமான தளங்களை நிலைநிறுத்துவதற்காகவும் மற்றும் முழுமையானதொரு நிலச்சீர்திருத்தத் திட்டத்திற்கு ஏற்பவும் விவசாயப் புரட்சியை

நிறைவேற்றுவதற்கு விவசாயிகளை ஆயுதமேந்தச் செய்வதற்கு புரட்சிப்படைகள் கிராமப்புறங்களுக்குச் சென்றிருக்க வேண்டும். ஆனால், அப்படிச் செய்வதற்குப் பதிலாக, கான்டனையும் மற்றும் குவாங்டுங்கின் இதரப் பகுதிகளையும் மீண்டும் கைப்பற்றக் கூடிய ஒரு முயற்சியை - அவர்கள் தெற்கு நோக்கி ஒரு படையெடுப்பினை—நடத்தினார்கள். இந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்பது பற்றி புத்திசாலித்தனமற்ற தொரு முடிவையும் அவர்கள் செய்தார்கள். விவசாயி இயக்கம் பலமானதொரு அடித்தளத்தைப் பெற்றிருந்த மேற்கத்திய கியாங்சி வழியாக அணிவகுத்துச் செல்வதற்குப் பதிலாக விவசாயி இயக்கம் இன்னும் உதயமாகவிருந்த கிழக்கத்திய கியாங்சியில் பொட்டல் காடாக இருந்த பிரதேசத்தின் வழியாக அவர்கள் சென்றார்கள். ஜுசின் மற்றும் ஹுய்செங் வெற்றிகளுக்குப் பிறகு மெய்சியன் கிராமப் பிரதேசத்தைப் பிடிப்பதற்கு அவர்கள் தெற்கு நோக்கிச் செல்லவில்லை. ஆனால் சாவோசோவ் மற்றும் ஸ்வாடொவ் ஆகியவற்றைப் பிடிப்பதற்காக, ஹாங்காங் மற்றும் டிங்சொவ் ஆகிய ஊர்களின் வழியாக மீண்டும் திரும்பிச் சென்றார்கள். இந்த முறையில், எதிர்ப்படைகள் எதிர்த்தாக்குதலை நடத்துவதற்கு போதிய தயாரிப்புகளைச் செய்வதற்கு அவர்கள் அனுமதித்துக் கொண்டிருந்தார்கள். போதுமான அரசியல் வேலை செய்யாததின் காரணமாக, படைகளிடையேயும் வெகு ஜனங்களிடையேயும் பிரச்சாரம் முழுமையாகச் செய்யப்படவில்லை; மற்றும் கட்சிக் கிளைகள் ரெஜிமெண்ட்களின் அளவில் மட்டும் அமைக்கப்பட்டிருந்தனவே யொழிய கம்பெனிகளின் அளவில் அமைக்கப்படாமலிருந்தன. இதன் விளைவாக, மிதமிஞ்சிய பிற்போக்குப் படைகளுக்கு எதிரே, பெரும்பாலான படைகள் தோல்வியைச் சந்திக்க வேண்டியிருந்தது. ஒரு சிறு பகுதி மட்டுமே பாதுகாக்கப் பட்டிருந்தது.

அது தோல்வி அடைந்த போதிலும், நான்சாங் பேரெழுச்சி மாபெரும் வரலாற்று முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது.

எதிர் புரட்சிக்கு எதிராக, கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரே தலைமையின் கீழ் புரட்சிகரமான ஆயுதப்படைகளின் போராட்டத்தின் ஆரம்பத்தை அது குறித்தது. ஆயுதமேந்திய ஒரு பேரெழுச்சியினால், எதிர்புரட்சி படுகொலையை எதிர்த்ததின் மூலம் இந்த நெருக்கடியான சமயத்தில் புரட்சியைக் காப்பாற்றுவதை நோக்கமாகக் கொண்டிருந்த தைரியமானதொரு போராட்டமாக அது இருந்தது. சீன மக்களுக்காக

விடாப்பிடியான புரட்சிகரமான போராட்டத்தில் அற்புதமான தொரு உதாரணமாக அது திகழ்கிறது.

நான்சாங் பேரெழுச்சி சீனமக்கள் படையின் தோற்றத்தைக் குறித்தது. அப்படை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரே தலைமையின் கீழிருந்த ஒரு படையாக இருந்தது; மற்றும் முழு மனதோடு மக்கள் புரட்சியின் இலட்சியத்திற்கு அர்ப்பணித் திருந்த ஒரு படையாகவுமிருந்தது. இந்த முறையில் சீனமக்களின் புரட்சிப் போராட்டத்திற்கு புதியதொரு வரலாற்றுக் கால கட்டம் ஆரம்பமாயிற்று.

புரட்சியைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு, சீனக் கம்யூனிஸ்ட் கட்சி கியாங்சி மாகாணத்தில் கியூகியாங்கில் ஆகஸ்ட் 7-ஆம் தேதியன்று மத்தியக் கமிட்டியின் அவசர மாநாட்டை நடத்திற்று.

புரட்சிகரமான தலைமை, புரட்சிகரமான ஆயுதப்படைகள் மற்றும் விவசாயப் புரட்சி ஆகிய பிரச்சினைகளில் வலது சாரி சந்தர்ப்பவாதசென்டு-ஷியூவின் தவறான சரணாகதிப் பாதையை மாநாடு விமர்சித்து, தலைமை பதவியிலிருந்து சென்டு-ஷியூவை அகற்றியது. சீன ஜனநாயகப் புரட்சிக்கு திறவு கோலாக விவசாயப் புரட்சி இருந்தமையால், புரட்சிகரமான முறைகளால் விவசாயப் பிரச்சினைக்கு தீர்வுகாணுவதில், கட்சி விவசாயிகளை தலைமைத் தாங்கிச் செல்லவேண்டுமென்று அந்த மகாநாடு உறுதியான நிலை எடுத்தது. படுகொலை செய்தல் என்ற கோமிங்டாங் பிற்போக்கு வாதிகளின் கொள்கையை எதிர்த்தது, ஆயுதமேந்திய எதிர்ப்பினைக் கொடுப்பது என்ற பொதுவாது தொரு பாதையை அது வகுத்தது; மற்றும் புரட்சிகரமான போராட்டத்தை விடாப்பிடியாக நடத்தும்படி அது கட்சி முழுமைக்கும் வெகு ஜனங்களுக்கும் அறைகூவல் விடுத்தது. அது ஒரு புரட்சிக் குழுவை நிறுவிற்று; அக்குழு முதலில் பேரெழுச்சியில் தலைமை தாங்கும் உருப்பாகப் பயன்படுவதாக இருந்தது; பின்னர் பேரெழுச்சி வெற்றி பெற்ற பிறகு, தற்காலிகப் புரட்சி அரசாங்கமாக செயல்படுவதாகவும் இருந்தது தொழிலாளிகளின் மற்றும் விவசாயிகளின் புரட்சிப்படை ஒன்றினை நிறுவுவதற்கு அது தீர்மானித்தது; மற்றும் ராணுவத் தில் விரிவான அரசியல் வேலைகளை நிறைவேற்றுவதற்கும் மற்றும் கட்சிப் பிரதிநிதிகளின் ஒரு அமைப்பினை நிலைநாட்டு வதற்கும் அது தீர்மானித்தது. இவை ஆகஸ்ட் 7-ஆம் தேதி நடைபெற்ற மாநாட்டின் சாதனைகளாக இருததன: மற்றும்,

அதன் பிரதான அம்சமாகவும் அமைந்தன.

புரட்சியைக் காப்பாற்றுவதற்கு இலையுதிர்கால அறுவடை சமயத்தில் பேரெழுச்சிகளைத் துவக்கும்படி விவசாயிகளுக்கு மாநாடு அறைகூவல் விடுத்தது.

ஹூன்னான், ஹூப்பே, கியாங்சி மற்றும் குவாங்டுங்கில் பேரெழுச்சியை ஆரம்பிபதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது; அந்த மாகாணங்களில், புரட்சி மிகமிகப் பலமான அடித்தளத்தை பெற்றிருந்தது. இலையுதிர் காலத்தில்தான் விவசாயிகள் அவர்களது மகசூலை எடுத்தமையால் நிலச்சுவான்தார்கள் குத்தகையை வசூலிப்பதற்கு அந்த சமயத்தில்தான் வந்தமையாலும், நிலச்சுவான்தார்கள், மிரட்டல் பேர்வழிகள் மற்றும் மோசமான பிரபுக்கூட்டம் ஆகியோர் ஒரு மணி அரிசியைக் கூடப் பெறவிடாதபடி தடுக்கவும், மற்றும் அவர்களது நிலம் பறிமுதல் செய்யப்படவும் வசதியாக இருக்கும் பொருட்டு கட்சியினால் தலைமை தாங்கப்பட்ட பேரெழுச்சிக்கு அந்த நேரம் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு தொடர்ச்சியான எழுச்சிகள் சியாங்டான் மற்றும் நிங்சியாங் (மத்திய ஹூன்னான்) ஆகிய இடங்களில் வெடித்துக் கிளம்பின. பிங்கியாங், லைலிங் மற்றும் லியுயாங் (கிழக்கத்திய ஹூன்னான்) புச்சி மற்றும் சியிந்நியாங் (தெற்கத்திய ஹூப்பே), மற்றும் ஹைபெங் லுபெங் (கிழக்கத்திய குவாங்டுங்) ஹூவாங்கன், மாசெங் (கிழக்கத்திய ஹூப்பே) ஆகிய இடங்களிலும் தொடர்ச்சியான எழுச்சிகள் வெடித்துக் கிளம்பின.

இலையுதிர்கால அறுவடைப் பேரெழுச்சியைத் தலைமை தாங்குவதற்கு, தோழர் மாசே-துங் ஹூன்னானுக்கு அனுப்பப்பட்டார். அங்கே அவர் அன்யுவான் நிலக்கரிச் சுரங்க தொழிலாளர்களையும், கட்சியின் செல்வாக்கின் கீழிருந்த மற்றும் வூசாங்கிலிருந்து தமது அணிக்கு கடந்து வந்திருந்த கோமிங்டாங் காவலர்களின் படைப் பிரிவையும், மற்றும் பிங்சியாங், லைலிங் மற்றும் லியுயாங் ஆகிய இடங்களிலிருந்து விவசாயிகளின் தற்பாதுகாப்புப் படைகளையும் தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் புரட்சிப் படையாக ஸ்தாபன ரீதியாகத் திரட்டினார். பேரெழுச்சி, செப்டம்பர் 8ஆம் தேதியன்று நடைபெற்றது; ஆனால், ஷாயா டௌ-பின்னின் மிச்ச சொச்சப் படைகள் நிலை மாறிவிட்டமையால் நஷ்டங்கள் ஏற்பட்டன.[3] பிறகு தோழர் மாசே-துங் அவரது ஆட்களை கியாங்சி மாகாணம் யுங்சிங் கிராமப்புறத்தைச் சேர்ந்த சான்வானுக்கு அழைத்துச்

சென்றார்; அங்கு புதிய தளபதிகளை நியமித்தும், சேனையில் கட்சிப் பிரதிநிதிகளின் முறையைப் புகுத்தியும், மற்றும், கட்சியின் அரங்கக் கமிட்டியை ராணுவத்தில் தலைமை தாங்கும் உச்சமட்ட அமைப்பாக ஏற்பாடு செய்தும் அவர்களை தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் செஞ்சேனையாக புனரமைக்கப் பட்டார்கள் புனரமைக்கப்பட்ட பிறகு, ஹுன்னான் கியாங்சி எல்லையில் சிங்காங் மலைகளை நோக்கி திட்டமிட்டபடி படை அணிவகுத்துச் சென்றது. அங்கு அக்டோபரில் முதல் புரட்சி தளம் அமைக்கப்பட்டது.

படுகொலை செய்தல் என்ற கோமிங்டாங் பிற்போக்குவாதிகளின் கொள்கையை எதிர்த்துப் போராடுவதற்கு, கான்டனிலிருந்த தொழிலாளிகளும், சிப்பாய்களும் கட்சி தலைமையின்கீழ் 1927 டிசம்பர் 11ஆம் தேதியன்று புகழ்பெற்ற கான்டன் பேரெழுச்சியை நடத்தினார்கள். தொழிலாளர்கள் செங்காவலர்களோடு ஒன்று சேர்ந்து ஏசியன்-யிங் தலைமையின் கீழிருந்த சிப்பாய்களின் பயிற்சிப் படைகளால் பேரெழுச்சி ஆரம்பிக்கப் பட்டது. முதலில் சிப்பாய்களின் பயிற்சிப் படைகள் பிரதானப் படையாக அமைந்தன; ஆனால் தொழிலாளர்களின் செங்காவலர்கள் சீக்கிரத்திலேயே கிட்டத்தட்ட 60,000 தொண்டர்களால் பலப்படுத்தப்பட்டார்கள். கான்டன் கம்யூன் என்று பெயர் பெற்றிருந்த தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் ஜனநாயக அரசாங்கம் நிலைநாட்டப்பட்டு, புரட்சிகரமான தொரு திட்டமும் பிரகடனம் செய்யப்பட்டது. இது பெரியதொரு நகரத்தில் ஏற்பட்ட ஒரு பேரெழுச்சியாக இருந்தமையால் சிப்பாய்களும், தொழிலாளிகளும் மிதமிஞ்சிய சோதனைகளை எதிர் நோக்க வேண்டியிருந்தது. நகரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கோமிங்டாங் படைகள் புரட்சிப்படைகளைக் காட்டிலும் ஐந்து அல்லது ஆறுமடங்கு எண்ணிக்கையில் அதிகமாக இருந்தன. மேலும், கோமிங்டாங்கின் இதர ஆயுதப்படைகளும், போலீசும் மற்றும் ராணுவப் போலீசும் எல்லாப் பக்கங்களிலிருந்தும் கான்டனின்மீது ஒரு குவிந்த தாக்குதலை நடத்தின; அமெரிக்கா, பிரிட்டிஷ் மற்றும் ஜப்பானிய ஏகாதிபத்திய துப்பாக்கிப் படகுகளின் பாதுகாப்புக் குடையின்கீழ் இந்தத் தாக்குதலை நடத்தின. ஹைபெங் மற்றும் லு பெங் ஆகிய இடங்களில் நடைபெற்ற விவசாயிப் பேரெழுச்சிகளோடு ஒருங்கிணைக்கத் தவறியது, இப்பேரெழுச்சியின் துரிதமான தோல்விக்குக் காரணமாகவும் இருந்தது. ஒரு வெள்ளைப் பயங்கர காலகட்டம் பின்

தொடர்ந்தது. கோமிங்டாங் யுத்தப் பிரபுக்களால் சுமார் 8,000 புரட்சிவாதிகள் கொல்லப்பட்டார்கள். புரட்சி தணி வானதொரு அலையில் இருக்கும் பொழுதும், மற்றும் புரட்சிப் படைகளைக் காட்டிலும் எதிர்புரட்சிப் படைகள் பெருமளவில் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கும் பொழுதும், கான்டனைப் போன்ற பெருநகரங்களை நீண்ட காலம் பிடித்து வைத்திருப்பது சாத்தியமற்றது என்பதனை இவை அனைத்தும் நிரூபித்தன.

இலையுதிர்கால அறுவடைப் பேரெழுச்சி கட்சியின் செல்வாக்கினை விவசாயி வெகுஜனங்களிடையே அதிகரித்தது. மற்றும் விவசாயப் புரட்சி பற்றிய கருத்தினை அவர்களிடையே ஆழமாக உண்டாக்கிற்று. தோழர் மாசே-துங் மற்றும் இதரர்களின் தலைமையின்கீழ் பேரெழுச்சியில் பங்கு கொண்டிருந்த படைகளின் ஒரு பகுதியும் தொழிலாளர்கள் காவலர்கள் மற்றும் விவசாயிகளின் தற்காப்புப் படைப் பிரிவினரின் ஒரு பகுதியும், சீனத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் செஞ்சேனையாக, மக்கள் விடுதலை சேனையின் முன்னோடியாக அமைந்தார்கள்.

1927இல், புரட்சியின் தோல்விக்குப் பிறகு, சென்-டு-ஷியூவினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட கட்சியிலிருந்த வலதுசாரி சந்தர்ப்பவாதிகள், கலைப்புவாதிகளாக மாறினார்கள். சியாங்காய்-ஷேக்கின் கோமிங்டாங் பிற்போக்கு ஆட்சி ஸ்திரப்பட்டுவிட்டது என்று நினைத்துக் கொண்டும், புரட்சி முற்றிலும் தோற்றுவிட்டது என்று நினைத்துக் கொண்டும், போர்க்களத்திலிருந்து சகல படைகளையும் உடனடியாக வாபஸ் வாங்குவதினால் பின் வாங்கும் ஒரு கொள்கையை அனுஷ்டிக்க வேண்டுமென்றும் சகலப் புரட்சிப் போராட்டங்களையும் நிறுத்தக்கூடிய ஒரு கொள்கையை அனுஷ்டிக்க வேண்டும் என்றும் அவர்கள் வக்காலத்து வாங்கிப் பேசினார்கள்; மற்றும், "சட்டபூர்வமான இயக்கங்களைத்" தொடர்ந்து நடத்த வேண்டுமென்றும் ஆலோசனை கூறினார்கள். ஆயுதமேந்திய பேரெழுச்சிகளின் மூலம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது, ஒரு விரும்பத்தகாத பிரமை என்று சென்டு-ஷியூ எதேச்சாதிகாரமாக அடித்துக் கூறினான். குத்தகைகள், வரிகள், கட்டாய வசூல்கள் மற்றும் கடன்கள் ஆகியவற்றை கொடுப்பதை மட்டுமே விவசாயிகள் தவிர்க்க வேண்டுமென்று அவன் பிரேரேபித்தான்; மற்றும், விவசாயப் பேரெழுச்சிகளிலும், விவசாயப் புரட்சியிலும் மற்றும் ஒரு சிவப்பு ஆட்சியை நிலைநாட்டுவதிலும்

படக் கூடாதென்றும் அவன் பிரேரேபித்தான். சாராம்சத்தில், அவனும் அவனைப் பின்பற்றியவர்களும் ஜனநாயகப் புரட்சியின் பாட்டாளி வர்க்கத் தலைமையை எதிர்த்துக் கொண்டிருந்தார்கள்; மேலும், சீன மக்களின்மீது ஏகாதிபத்தியவாதிகள், பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவவாதிகள், தரகு முதலாளிகள் ஆகியோரின் ஆட்சியை பலப்படுத்துவதற்கும் அவர்கள் உதவி செய்து கொண்டும் இருந்தார்கள். இப்படிப்பட்டதொரு போக்கு, கட்சி விரோத நிலைபாட்டிலிருந்து நேரடியாக எழுந்தது.

அதே சமயத்தில் ''இடது சாரி'' உணர்வில் ஒரு துரிதமான வளர்ச்சி கட்சியில் இருந்தது; குட்டி முதலாளி வர்க்கத்தின் பதட்டமான போக்கின் பிரதிபலிப்பு கட்சியில் இருந்தது. இப்போக்கு கோமிங்டாங் பிற்போக்கு வாதிகளின் படுகொலைக் கொள்கையின் மீது ஏற்பட்ட வெறுப்பினாலும், மற்றும் சென்டு-ஷியூவின் சரணாகதி வாதத்தின்மீது ஏற்பட்ட ஆத்திரத்தினாலும் தீவிரமாக்கப்பட்டது. இந்த உணர்வு, ஆகஸ்ட் 7ஆம் தேதி நடைபெற்ற கட்சி மாநாட்டில் முதலில் வெளிப்பட்டது. மேலும், 1927 நவம்பரில் நடைபெற்ற மத்தியக் கமிட்டியின் விரிவடைந்த கூட்டத்தில் ''இடதுசாரி'' திடீர்ப் புரட்சி வாதமாக அபிவிருத்தி அடைந்தது. கட்சியின் மத்தியத் தலைமை உறுப்பில் ''இடது சாரி'' பாதை ஆதிக்கம் செலுத்தியது, இதுதான் முதல் தடவையாக இருந்தது.

சூ சியு-பையும், கட்சியின் இதர தலைவர்களும் அந்த சமயத்தில் ஜனநாயகப் புரட்சியை, சோஷலிசப் புரட்சியோடு தவறாக குழப்பிக் கொண்டார்கள். புரட்சி பல கட்டங்களில் கடந்து செல்ல வேண்டுமென்பதையும், மற்றும் ஜனநாயகப் புரட்சி அதற்கே உரித்தான கால கட்டத்தையும், கடமையும் பெற்றிருந்தது என்பதையும் அவர்கள் மறுத்தார்கள். மற்றொரு கட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டியதை ஜனநாயக புரட்சியில் நிறைவேற்ற முடியும் என்று அவர்கள் நினைத்தார்கள்.

சீனப் புரட்சியில், ஒரு ''தொடர்ச்சியான பேரெழுச்சி'' இருப்பதாக அவர்கள் தவறாக மதிப்பீடு செய்தார்கள். 1926ல் தோல்வி ஏற்பட்ட பிறகும்கூட புரட்சி அலை தணிவதற்குப் பதிலாக எழும்பிக் கொண்டிருந்தது என்றும் அவர்கள் சாதித்தார்கள். பலமாகாணங்களில், அரசியல் அதிகாரத்தின் விவாசயி வெகு ஜனங்கள் கைப்பற்றுவதற்கு நேரம் பக்குவமாக இருந்தது என்று நினைத்தார்கள். மேலும், சில தொழில் மையங்களிலும்.

வியாபார கேந்திரங்களிலும்கூட நேரம் பக்குவமாக இருந்தது என்றும் அவர்கள் நினைத்தார்கள். ஆகவே, ஹுன்னானிலும், ஹுப்பேயிலும் பேரெழுச்சிகளுக்கான திட்டங்களைத் தீட்டினார்கள். கோமிங்டாங் ஆட்சியின் மையமாக திகழ்ந்த கியாங்சுவிலும், சிகியாங்கிலும் மற்றும் ஹோப்பேயை ஆரம்பப் புள்ளியாகக் கொண்ட வடக்கத்திய மாகாணங்களிலும், மற்றும் வடகிழக்கு மாகாணங்களிலும் பேரெழுச்சிக்கான திட்டங்களை உருவாக்கினார்கள். நகரங்களில் நடத்தும் போராட்டங்களுக்கும், கிராமப்புற போரட்டங்களுக்குமிடையேயுள்ள வித்தியசத்தை அலட்சியப்படுத்திக் கொண்டு நகரங்களில் பேரெழுச்சிக்கான தருணம் வந்துவிட்டது என்று அவர்கள் தவறாகக் கருதினார்கள். அதன் விளைவாக அண்டையில் இருந்த கிராமப்புறங்களில் நடைபெற்ற விவசாய பேரெழுச்சியோடு ஒருங்கிணைந்து எழும்பும்படி அவர்கள் ஷாங்காய் தொழிலாளிகளுக்கு உத்தரவிட்டார்கள். மற்றும், யிஷிங், வூஷி விவசாயி பேரெழுச்சிக்குப்பிறகு நடவடிக்கைக்குத் தயாரிப்புகளை வேகமாக செய்யும்படி நான்கிங் தொழிலாளர்களுக்கு உத்தரவிட்டார்கள். விவசாய புரட்சி தளங்களில் தீர்மானமான முக்கியத்துவத்தைப் புறக்கணித்துவிட்டு, அவர்கள் பெருநகரங்களில் ஏற்படும் பேரெழுச்சிகள்மீது பிரதானமாக அவர்களது நம்பிக்கைகள் வைத்திருந்தார்கள்.

முதல் புரட்சிகரமான உள்நாட்டு யுத்தம் தோல்வியில் முடிவடைந்திருந்தது என்பதையும், மற்றும் புரட்சி அப்பொழுது தணிவான ஒரு அலையில் இருந்தது என்பதையும் அவர்கள் மறுத்தார்கள். எனவே, எந்தவிதமான பின்வாங்குதலையும் அவர்கள் எதிர்த்தார்கள். மற்றும், தொடர்ந்து தாக்குதலை நடத்தவேண்டும் என்றும் கோரினார்கள். நகர்ப்புற தொழிலாளர்களின் பொருளாதார போராட்டங்களையும், மற்றும் கட்டாய வசூல்கள், வரிகள் ஆகியவற்றை எதிர்த்து விவசாயிகள் நடத்தும் போராட்டத்தையும், அரசியல் போராட்டகளாகவும், ஆயுதம் ஏந்திய பேரெழுச்சிகளாகவும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள். மேலும், அப்படிப்பட்ட அரசியல் போராட்டங்களை, ஆயுதம் ஏந்திய பேரெழுச்சிகளாக அபிவிருத்தி செய்யவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள். மேலும், அப்படிப்பட்ட அரசியல் போராட்டங்களுக்கும், ஆயுதம் ஏந்திய பேரெழுச்சிகளுக்கும் எந்தவிதமான தயாரிப்புகளும் தேவையில்லை என்று, ஒரு முறை ஒரு பேரெழுச்சி ஆரம்பித்துவிட்டால் எந்தவிதமான பின்வாங்கு

தலையும் அனுமதிக்கக்கூடாது என்றும் அவர்கள் கூறினார்கள். புரட்சியின் தோல்விக்குப்பிறகு, எதிரிக்கு இருந்த பலத்தைக் கருத்தில் கொள்ளாமலும், விரல் விட்டு எண்ணப்படக்கூடிய கட்சி உறுப்பினர்களும், புரட்சி வாதிகளும் வெற்றிகிட்டும் என்ற மிகமிக சிறிதளவேனும் நம்பிக்கையில்லாத ராணுவ முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்று அவர்கள் உத்தரவிட்டார்கள். கட்சி ஸ்தாபனங்களும், கட்சி உறுப்பினர்களும் இருந்த இடங்களில் எல்லாம் ஆயுதம் ஏந்திய பேரெழுச்சிக்காக சுறுசுறுப்பாக தயாரிப்பு செய்யும்படி உத்தரவுகள் கொடுக்கப்பட்டன.

இந்தத் தவறான "இடது சாரி"ப்பாதை ஆரம்பத்திலிருந்தே தோழர் மாசே-துங்கிடமிருந்தும், கோமின்டாங் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்களில் பணியாற்றிக்கொண்டிருந்த தோழர்களிடமிருந்தும் நியாயமான விமர்சனத்தை சந்தித்து இருந்தது. எனினும். 1928ம் ஆண்டு ஆரம்பத்தில், பல இடங்களில் கைவிடப்படுவதற்கு முன், அந்தப் பாதை ஏராளமான நாசத்தை உண்டாக்கி இருந்தது. ஏப்ரலில், அந்தப் பாதை நாடு முழுவதிலும், நடைமுறையில் கைவிடபபட்டிருந்தது.

### 3. சிங்காங் மலைகளில் புரட்சித்தளம் நிறுவப்படுதல் :

தோழர் மாசே-துங்கின் தலைமையின் கீழ், இலையுதிர்கால அறுவடைப் பேரெழுச்சியில் பங்கெடுத்தவர்கள் ஹுன்னான்-கியாங்சி எல்லையிலிருந்த சிங்காங் மலைகளை நோக்கி 1927 அக்டோபரில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அணிவகுப்பை மேற்கொண்டார்கள்; அங்கே முதல் புரட்சி தளம் அமைக்கப் பட்டது.

1928 ஏப்ரலில், நான்சாங் பேரெழுச்சியில் பங்கு கொண்ட படைகளை, தெற்கு ஹுன்னானிலிருந்து சிங்காங் மலைகளுக்கு தோழர் சூடே தலைமை தாங்கிச் சென்றார்; மேலும். சினாவில் புதியவகைப்பட்டதொரு படையை சீனத் தொழிலாளிகள் மற்றும் விவாசாயிகளின் செஞ்சேனையின் நாலாவது படையை அமைப்பதற்கு தோழர் மாசே-துங் தலைமையிலிருந்த படைகளோடு சேர்ந்து கொண்டார்.

1928 ஏப்ரலிலிருந்து ஜுலைவரையிலும், பிற்போக்கு ஆட்சி தெற்கில் தற்காலிகமாக ஸ்திரத்தன்மையை பெற்றிருந்த பொழுது, சியாங்காய்-ஷேக் கியாங்சியிலும், ஹுன்னானிலு

த அவனது படைகளை சுற்றிவளைக்கும் மூன்று தாக்குதல்களுக்காக எல்லையில் குவியும்படி உத்தரவிட்டான். ஒவ்வொரு சமயத்திலும் குறைந்தபட்சம் 8 அல்லது 9 ரெஜிமெண்டுகள், சில சமயங்களில் 18 ரெஜிமெண்டுகள் வரையிலும் பிற்போக்குப் படைகள் ஈடுபடுத்தப்பட்டன. எனினும், 4க்கும் குறைவான ரெஜிமெண்டுகளால் செஞ்சேனை எதிரியை எதிர்த்துப் போராடி, அதனுடைய "கூட்டுப் படையெடுப்புகளை" நொறுக்கித்தள்ளி சிங்காங் மலைகளின் தளத்தை கெட்டிப்படுத்திற்று.

தோழர் மாசே-துங்கின் மார்க்சிய-லெனினிய கொள்கையைப் பின்பற்றியது. சிங்காங் மலைகளின் புரட்சித் தளத்தை உருவாக்குவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் வழிநடத்திச் சென்றது.

இரண்டு அடிப்படையான கோட்பாடுகள் இந்தக் கொள்கையை கோடிட்டுக் காட்டின.

முதலாவதாக, ராணுவ நடவடிக்கைகளில், எதிரியை சமாளிப்பதில், படைகளைக் குவிப்பது கோட்பாடாக இருந்தது. அதனுடைய படைகளைக் குவிப்பதின் மூலம்மட்டுமே, ஒப்பு நோக்கிப் பார்க்கும்பொழுது, அதிக சக்திவாய்ந்த எதிரியினுடைய படைகளை ஒழித்துக் கட்டுவதும், நகரங்களையும், பட்டிணங்களையும் கைப்பற்றுவதும், இதன் விளைவாகப் பல்வேறு கிராப்புறங்களைக் கொண்ட தொடர்ச்சியானதொரு பிரதேசத்தில் ஒரு புரட்சிகரமான ஆட்சியை நிறுவுவதற்கு வெகு ஜனங்களைப் பெருமளவில் அணி திரட்டுவதும் செஞ்சேனைக்கு சாத்தியமாக இருந்தது. ஹுன்னான்-கியாங்சி எல்லைப்புற பிரதேசம் நீடித்ததும், அபிவிருத்தி அடைந்ததும் இப்படிப்பட்ட படைக்குவிப்புகளின் விளைவாகவே இருந்தன; அதே சமயத்தில், படைகளைச் சிதறவிடுவதும், அல்லது தனித்தனி நடவடிக்கைகளும், உண்மையில், அநேகமாக எப்பொழுதுமே தோல்விக்கு வழிநடத்திச் சென்றன. இந்தக் கால கட்டத்தில் பல்வேறு தூரங்களுக்கிடையே வெற்றிகரமான சிதறடித்தல் நடைபெற்றிருந்த உதாரணங்களும் உண்டு என்பது உண்மைதான். ஆனால், தளத்தை விரிவுபடுத்தி, பலப்படுத்தும் குறிக்கோளாடும் மற்றும் பெரியதொரு அளவில் வெகுஜனங்களை வென்று பெறும் குறிக்கோளாடும் அவை நடைபெற்றிருந்தன. இங்கு பிற்போக்கு அரசாங்கத்தோடு விஷயங்கள் எப்படி இருந்தன என்ற கேள்வி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அது அரசியல் பிளவுகளால் பயமுறுத்தப்பட்டதா அல்லது தற்காலிக ஸ்திரத்

தன்மையை அனுபவித்தால் பயமுறுத்தப்பட்டதா என்ற கேள்வி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும். முன்னால் கூறப்பட்ட விஷயத்தில், சம்பந்தப்படுத்திப் பார்க்கும்பொழுது அபாயம் நிறைந்த முன்னேற்றகரமான ஒரு யுத்த தந்திரத்தைக் கையாண்டு, அடித்தள ஆட்சியை (Base regin e) எப்பொழுதும், நிச்சயமாக, நிலைகளை நன்கு பலப்படுத்திவதனால், ஆயுத பலத்தினால் அநேகமாக பெரியதொரு பிரதேசத்தில் விஸ்தரிப்பதும் சாத்தியமாக இருததது. ஆனால், பின்னால் கூறப்பட்ட விஷயத்தில் படிப்படியான முன்னேற்றமுடைய ஒரு யுத்த தந்திரத்தைக் கையாள்வதும் மற்றும் தொடர்ச்சியான அலை போன்ற முன்னோக்கிச் செல்லும் இயக்கங்களில் தளத்தை விரிவுபடுத்துவதும் முக்கியமானதாக இருந்தது

இரண்டாவதாக, ஸ்தலவேலையில், ஒரு மத்திய ஏரியாவுக்கான கெட்டியான அடித்தளத்தைப் போடுவதில் முயற்சிகள் குவிக்கப்பட்டிக்கவேண்டும்; அதாவது, தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் அரசாங்கத்தை நிர்மாணிப்பதிலும், விவசாயப் புரட்சியை நிறைவேற்றுவதிலும் மக்களின் ஆயுதப்படைகளைப் பலப்படுத்துவதிலும் கம்யூனிஸ்ட் கட்சியை விரிவுபடுத்துவதிலும் முயற்சிகள் குவிக்கப்பட்டிருக்கவேண்டும். ஒரு சிவப்பு ஆட்சியை ஸ்தாபிப்பதற்கு இவை அடிப்படையான கோட்பாடுகளாக இருந்தன.

மேலே சொல்லப்பட்ட கோட்பாடுகளின் பலத்தின் அடிப்படையில், தளங்களை ஸ்தாபிப்பதற்கு, தோழர் மாசே-துங தொடர்ச்சியான நடவடிக்கைகளை உருவாக்கினார்.

1. சிங்காங் மலைகள் தள காலக்கட்டத்தில், தொழிலாளிகள், விவசாயிகள் மற்றும் ராணுவ வீரர்கள் ஆகியோரின் அரசாங்கங்கள் மற்றும் ராணுவ பிரதிநிதித்துவ மாநாடுகளின் உருவத்தில், ஒரு ஜனநாயக ஆட்சி எல்லா மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டது. இதுதான் சீனாவில் எக்காலத்திலும் நிறுவப்பட்ட அமைப்புகளில், முதல் உண்மையான ஜனநாயக அமைப்பாக இருந்தது. தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் அரசாங்கம் ஒரு வெகுஜன கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டது. சில இடங்களில், நிர்வாகக் குழுக்களைத் தேர்ந்தெடுப்பதற்கு காங்கிரஸ்கள் நடத்தப்பட்டன. இந்தக் காங்கிரஸ்களில், ஸ்தல அரசாங்க அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.

2. விவசாயப் புரட்சியின் பதாகையின் கீழ், சகல நிலமும் முதலில் கைப்பற்றப்பட்டு, முற்றிலும் புனர் விநியோகம் செய்யப்பட்டன இந்தக் கொள்கை, பின்னர் நிலச்சுவான்களின் நிலத்தை

மட்டும் பறிமுதல் செய்து, அந்த நிலத்தை ஒரு நகரிய அடிப்படையில் விவசாயிகளிடையே விநியோகம் செய்யும் ஒரு கொள்கையினால் அகற்றப்பட்டது. தோழர் மா-சே-துங் இடைத்தட்டு வர்க்கத்தை [4] வென்று பெறுவதற்கு மகத்தான கவனத்தைச் செலுத்தினார்; விவசாயப் போராட்டத்தில் இருந்த வர்க்கம் மித மிஞ்சிய தாக்குதலுக்கு எந்த சமயத்திலும் உள்ளாக்கப்படக் கூடாது என்று அவர் சுட்டிக் காட்டினார். ஏனெனில், ஒரு விரோதமான இடைத்தட்டு வர்க்கம் அவர்களது சமுதாய நிலைமையைப் (Social position) பயன்படுத்திக் கொண்டு, நில விநியோகத்தைத் தடை செய்வார்கள். அவர்களது நிலத்தின் உண்மையான பரப்பைப்பற்றிய தகவலை மறைத்து வைப்பார்கள்; வெள்ளை பயங்கரத்தினால் எதிர் நோக்கப்படும் பொழுது, துரோகியாகக் கூட மாறுவார்கள்.

3. தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் ஒரு புரட்சிகரமான ஆயுதப்படை நிர்மாணிக்கப்பட்டது. செஞ்சேனை தொழிலாளிகள், விவசாயிகள், லும்பன் பாட்டாளிகள் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக, எதிர்ப்படைகளிலிருந்து பிடிப்பட்டவர்கள் ஆகியோரைக் கொண்டிருந்தமையால், படைகளிடையே அரசியல் கல்வி அவசியமாக இருந்தது. ராணுவத்தில் கட்சியின் தலைமையை உத்திரவாதம் செய்வதற்கு, கட்சிப் பிரதிநிதிகளின் அமைப்பு புகுத்தப்பட்டு, கம்பெனி (ஒரு ராணுவப் பிரிவி—மொழி பெயர்ப்பாளர்) அடிப்படையில் கட்சிக் கிளைகள் அமைக்கப்பட்டன. ராணுவத்தில் ஒரு ஜனநாயக அமைப்பு அறிமுகம் செய்யப்பட்டது; இந்த அமைப்பு சிப்பாய்களை அடிப்பதையும், திட்டுவதையும் தடை செய்தது; மற்றும் அதிகாரிகளும் ஜவான்களும் சமமான ஒரு அடிப்படையில் வைக்கப்பட்டார்கள். எதிர்ப் புரட்சிவாதிகளை ஒடுக்குவதற்கும், நகரிய அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கும் மற்றும் எதிரியோடு நடைபெறும் மோதல்களில் செஞ்சேனைக்கு உதவி செய்வதற்காகவும், ஸ்தலப்படைகளை ஆயுதப் பாணியாக்குவதற்கு செஞ்சேனை உதவி செய்தது; பிடிபட்டவர்களை விடுதலை செய்வது மற்றும் காயமடைந்தவர்களுக்கு வைத்திய சிகிச்சை கொடுப்பது உள்ளிட்டு, பிடிபட்ட சிப்பாய்களின்பால் சரியானதொரு கொள்கை அனுஷ்டிக்கப்பட்டது.

4. கட்சி ஸ்தானங்கள் அமைக்கப்பட்டு, விஸ்தரிக்கப்பட்டன. கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டுவதற்கு சித்தாந்தப்பணி திறவுகோலாக இருந்தமையால், பாட்டாளி வர்க்க சித்தாந்தத்

தலைமையைப் பலப்படுத்துவதின் மகத்தான முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டிக்கொண்டும், குட்டி முதலாளித்துவக் கண்ணோட்டத்தை மீண்டும் வார்த்தெடுக்க வேண்டியதின் (Remoulding) மகத்தான முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டிக் கொண்டும், தோழர் மாசே-துங் கட்சியின் சித்தாந்த வேலைக்கு மாபெரும் கவனத்தைச் செலுத்தினார்.

மேலே கூறப்பட்ட கொள்கை ஒரே சரியான கொள்கையாக அமைந்தது; அந்தக் கொள்கையின் மூலம், தளங்கள் நிறுவப் பட்டு, விரிவு படுத்தப்பட்டு, நாடு தழுவியதொரு புரட்சிகரமான எழுச்சியை உருவாக்குவதற்கும் பயன்படுத்த முடியும். அந்தக் கொள்கையை "சூடே—மா—சே—துங் ரகம் அல்லது பாங்சி-மின் ரக"மானதொரு கொள்கை என்று தோழர் மா-சே-துங் கூறினார்.

மா-சே-துங்கினால் கண்டுபிடிக்கப்பட்டிருந்த சீனப் புரட்சியின் அபிவிருத்தியை ஆட்கொண்டிருந்த விதிகளில் ஒன்று ஆயுத மேந்திய போராட்டத்தினால் கிராமப்புறத்தில் முதலில் புரட்சியை ஆரம்பித்து, தளங்களை நிறுவி, அவற்றின் எண்ணிக்கையையும், அளவையும் அதிகரிப்பது. பிறகு ஆயுத மேந்திய, புரட்சிகரமான கிராமப்புற மாவட்டங்களால், எதிர்ப் புரட்சி சக்திகளால் கைப்பற்றப் பட்டிருந்த நகரங்களைச் சுற்றி வளைத்து, பிறகு அவற்றைக் கைப்பற்றுவது என்பதாகும். நகரங்களில் கட்சியின் சக்திகள் பலமானதொரு எதிரிகளால் நசுக்கப் பட்டிருந்த ஒரு சமயத்தில் அங்கு தற்போது புத்துயிர் பெற்று எழுவதற்கு எந்த விதமான சந்தர்ப்பமும் இல்லாதிருக்கும் ஒரு சமயத்தில், இதுதான் புரட்சியின் அபிவிருத்தியின் விதியாகும். இப்படிப்பட்ட புரட்சிகரமான தளங்களில், சிங்காங் மலைகள் தளம் முதல் தளமாகத் திகழ்ந்தது.

சிங்காங் மலைகள் தளம் முதல் தளமாகத் தேர்வு செய்யப் பட்டது, பின்வரும் காரணங்களால் தீர்மானிக்கப் பட்டிருந்தது.

1. சிங்காங் மலைகள் லோஷியாவோ மலைத்தொடரின் மத்தியப் பகுதியாக அமைந்தது; அது வடக்கில் ஹூப்பேயிலும், தெற்கில் வாங்டுங்கிலும், கிழக்கில் கியாங்சியிலும், மேற்கில் ஹூன்னானிலும் எல்லைகளைக் கொண்டிருந்தது. ஆகவே புரட்சிகரமான அபிவிருத்தி ஹூன்னான், ஹூப்பே மற்றும் கியாங்சி மாகாணங்களின் தொழிலாளிகள் மற்றும் விவசாயிகள் வெகு ஜனங்களை செல்வாக்கிற்கு உட்படுத்தும்.

2. இந்தப் பிரதேசத்தில். சம்பந்தப்படுத்திப் பார்க்கும்

பொழுது, உருப்படியான கட்சி ஸ்தாபனங்கள் இருந்தன; இந்த ஸ்தாபனங்கள் போராட்டங்களில் பெற்றிருந்த ஸ்தல ஆயுதப் படைகளிடையேயும், வெகு ஜனங்களிடையேயும் பலமானதொரு செல்வாக்கினைப் பெற்றிருந்தது.

3. அருகாமையிலிருந்த செழிப்பான நிலமும், செல்வாதாரங்களும் நிதிகளை எழுப்புவதையும் சமான்களைப் பெறுவதையும் செஞ்சேனைக்கு மிகவும் சுலபமாக்கிற்று.

4. 40 கிலோ மீட்டர் அகலமும், 250 கிலோ மீட்டர் சுற்றளவையும் கொண்டு, வெளி உலகத்தோடு ஐந்து குறுகிய பாதைகளினால் மட்டுமே இணைக்கப்பட்டும் கூர்மையான சிகரங்களாலும், அடர்ந்த காடுகளாலும், பாதுகாக்கப் பட்டிருந்த சிங்காங் மலைகள் கிட்டத்தட்ட ஊடுருவப்பட முடியாதவனாக இருந்தன.

சிங்காங் மலைகளில் புரட்சித்தளம் நிறுவப்பட்டது. அபரிமிதமான வரலாற்று முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது. ஏனெனில் அது புரட்சிகரமான பின் வாங்குதலோடு இணைத்திருந்தது. பின் வாங்கும் ஒரு காலக்கட்டத்தில் கிராமப்புறம் மத்திய நிலையாக (Central Position) தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. ஏனெனில், இங்கு புரட்சிகரமான பலத்தைக் குவிப்பது மிகவும் சுலபமாக இருந்தது. ஒட்டு மொத்தமாக கட்சி முழுவதற்கும் மிக மிக சிறப்பாக திட்டமிடப்பட்ட, மிக மிக ஒழுங்கான, மற்றும் மிகமிக செலவு குறைவான பின் வாங்குதலாக இருந்தது; ஏனெனில், பின் வாங்குதலில் பங்கு கொள்ளும் புரட்சிப் படைகளைப் பாதுகாத்து வைத்துக் கொள்வதோடு, நாடு முழுவதிலுமுள்ள புரட்சியின் பின்வாங்குதலுக்கும் அது ஒரு முகமுடியாகவும் அமைந்தது. அது ஒரு தாக்குதலாகவும் இருந்தது. புரட்சி தற்காலிகமானதொரு தோல்வியைத் தழுவியிருந்தஒரு நிலைமையில், புரட்சிகரமான தாக்குதல் சரியாகவே கிராமத்திற்கு மாற்றப்பட்டிருந்தது; கிராமப்புரத்தில்தான், எதிர்ப்புரட்சியின் பலம், சம்பந்தப்படுத்திப் பார்க்கும்பொழுது, பலஹீனமாக இருந்தது; வர்க்க முரண்பாடுகள் மிக அதிகமாக இருந்தன. மற்றும் புரட்சியைச் சம்பந்தப்படுத்திப் பார்க்கும் போது, மிகவும் ஆழமாக வேர் விட்டிருந்தது. எதிரியினுடைய மிகமிக வடுப்படத்தக்க இடத்தில், அது மிகமிக சக்தி வாய்ந்த தாக்குதலாக இருந்தது. சிங்காங் மலைகளை நோக்கிய அணிவகுப்பு புரட்சியின் முன்னேற்றத்திற்கான ஒரே சரியான பாதையை, 1927-ஆம் ஆண்டில் புரட்சியின் தோல்விக்குப் பிறகு, "ஒரு சிறு பொறி

விட்டுத் தீயை உருவாக்கக்கூடிய'' வழியைத் திறந்து விட்டது.

### 4. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆறாவது தேசியக் காங்கிரஸ். சீனாவின் சிவப்பு ஆட்சி எப்படி நீடித்து அபிவிருத்தி அடைய முடியும் என்பது பற்றிய தோழர் மாசே-துங்கின் தத்துவம்.

1928 ஜூலையில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அதனுடைய ஆறாவது காங்கிரசை நடத்திற்று. கட்சியின் கொள்கைகளையும் கடமைகளையும், போராட்டத்திற்கான போர்த் தந்திரங்களையும் வகுக்கும் பொருட்டு, முதல் புரட்சிகரமான உள்நாட்டு யுத்தத்தில் கிடைத்த அனுபவங்களைத் தொகுப்பதும், மற்றும் அந்த சமயத்தில் புரட்சியின் தன்மையையும் தலைமையையும் பகுத்து ஆய்வதும் அந்த காங்கிரஸின் பிரதான கடமையாக இருந்தது.

சீனப்புரட்சி, ஒரு பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியாக இருந்தது என்பதை காங்கிரஸ் ஊர்ஜிதம் செய்தது; அதனுடைய பொதுவான கடமை ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு தொழிலாளி-விவசாயிகளின் ஜனநாயக சர்வாதிகாரத்தை நிலை நாட்டுவதாக இருந்தது என்பதையும் காங்கிரஸ் தீர்மானித்தது. ஏனெனில், முதலாவதாக, சீனா இன்னும் ஏகாதிபத்திய ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெற்றிருக்கவில்லை; மற்றும் சீனாவின் உண்மையான ஒற்றுமை சாதிக்கப்படவும் இல்லை. இரண்டாவதாக, நிலப்பிரபுத்துவ நில அமைப்பு ஒழிக்கப்படவில்லை; மற்றும், நிலப்பிரத்துவ சக்திகள் ஒழிக்கப்படவுமில்லை. மூன்றாவதாக, அரசு அதிகாரம் இன்னும் ஏகாதிபத்திய ஆதரவு பெற்ற நிலம் படைத்த பிரபுக் கூட்டத்திடமும் இருந்தது. தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் ஜனநாயக சர்வாதிகாரத்திற்கான பத்து அம்சம் கொண்ட ஒரு திட்டத்தைக் காங்கிரஸ் வகுத்தது.

1927-ஆம் ஆண்டிற்குப் பிறகு புரட்சி நிலைமை தாழ்வான தொரு நிலையில் இருந்தது என்று காங்கிரஸ் சுட்டிக் காட்டிற்று; புரட்சிகர நடவடிக்கையின், இருபெரும் அலைகளுக்கு இடையேயான ஒரு காலகட்டமாக, அக்காலகட்டம் இருந்தது. தொழிலாளிகளும், விவசாயிகளும் கடுமையான அடிகளை வாங்கி இருந்தார்கள்; அவர்களது புரட்சிகர ஸ்தாபனங்கள் சீர்குலைக்கப்பட்டிருந்தன. புரட்சிகரமான தளங்களுக்குள், விவசாயிகளின் கொரில்லா யுத்தம் இங்குமங்கும் தானாகக்

கிளம்பிய வெடிப்புகளாக, வரம்புக்குட்பட்டு இருந்தன. சீனப் புரட்சியைத் தோற்றுவித்த எந்த முரண்பாடுகளும், தீர்வுகாணப் படாமல் இருந்தமையாலும், மற்றும் இத்தகைய முரண்பாடுகள் தீவிரமடைவதோடும், சர்வதேச நிலையில் ஏற்படும் மாற்றங் களாலும் அந்த முரண்பாடுகள் துரிதப்பட மட்டுமே முடியுமென்பதாலும், ஒரு புதிய பேரெழுச்சி வந்தே தீருமென்றும் காங்கிரஸ் அழுத்தமாகச் சுட்டிக் காட்டிற்று.

இந்த அடிப்படையில், அந்த சமயத்தில் நகரங்களில் தாக்குதல்களையும் பேரெழுச்சிகளையும் துவக்குவது அல்ல; ஆனால், அதற்கு மாறாக, நடைபெறவிருக்கும் புதிய புரட்சிகர மான எழுச்சிக்கான தயாரிப்பில் வெகுஜனங்களை வென்று எடுப்பதுதான் கட்சியின் போர்த் தந்திரமாகும் என்று காங்கிரஸ் தீர்மானித்தது.

காங்கிரஸ் இரண்டு அரங்கங்களில் ஒரு போராட்டத்தை நடத்திற்று.

சென்டு-ஷியு மனப்பூர்வமாக புரட்சித் தலைமையை சரணடையச் செய்துவிட்டான் என்பதை உறுதிப்படுத்தி அது சென்டு-ஷியூலின் வலதுச்சாரி சந்தர்ப்பவாதத்தை முழுமையாகக் களைந்தெடுத்தது. ஆனால், சென் கட்சியின் சரியான பாதையை ஒப்புக் கொள்ள மறுத்ததோடு மட்டுமின்றி, புரட்சி யின் தோல்விக்கு சீனக்கம்யூனிஸ்ட் கட்சியும், கம்யூனிஸ்ட் அகிலமும்தான் பொறுப்பானவை என்று கூறி கட்சியின் புரட்சிகரமான ஐக்கிய முன்னணிக் கொள்கையையும், திரித்துக் கூறினான். டிராட்ஸ்கீய வாதிகளோடு கூட்டு சேர்ந்துகொண்டு அவன் கட்சி விரோத கோஷ்டி ஒன்றினை அமைத்தான். ஆகவே, கட்சி சென்டு-ஷியுவை 1929 நவம்பரில் வெளியேற்றிற்று.

எதிரியின் படைகள் ஆதிக்க நிலையைப் பெற்றிருந்த பெரு நகரங்களில், ஏதேச்சாதிகார முறைகளால் ''இடது சாரிகளால்'' துவக்கப்பட்ட கண்மூடித்தன்மான ஆயுதமேந்திய கலகங்கள், ராணுவ அதிதீவிரவாதத்தின் ஒரு உருவமாகத் திகழ்ந்தன என்று கருதி, ''இடதுசாரி'' கவிழ்ப்புவாதத் தவறையும் காங்கிரஸ் விமர்சித்தது. அந்த சமயத்தில் கட்சியின் முக்கிய மானதொரு கடமையாக இருந்த மக்களை வென்றுபெறுவது ஏதேச்சாதிகாரத்தோடு ஒத்துப்போக முடியாததாக இருந்தது; ஆகவே, ''இடது சாரி'' கவிழ்ப்பு வாதம், கட்சிக்கு மிகமிகப் பெரிய அபாயமாக அமைந்தது.

கவிழ்ப்புவாதம், ராணுவ சாகசவாதம், ஏதேச்சாதிகாரம்

ஆகிய அனைத்தும், வெகு ஜனங்களிடமிருந்து தனிமைப்படுத்துவதற்கு வழி நடத்திச் சென்றனர்; அவை அனைத்தும் கட்சியில் ''இடதுசாரி'' குட்டி முதலாளித்துவ உணர்வுகளின் பிரதிபலிப்புகளாக இருந்தன.

அவை அனைத்தும் ஆறாவது காங்கிரஸின் சரியான மற்றும் பிரதான அம்சமாக இருந்தது. ஆனால், காங்கிரஸ் அதனுடைய குறைபாடுகளையும், தவறுகளையும் கொண்டிருந்தது.

முதலாவதாக, கிராமப்புறத் தளங்களின் முக்கியத்துவம், ஜனநாயகப் புரட்சியின் நீடித்தத் தன்மை, கட்சிக்கு அவசியமான போர்த் தந்திர ரீதியான பின் வாங்குதல், மற்றும் கட்சியின் நடவடிக்கையின் மையத்தை, நகரங்களிலிருந்து கிராமப்புறத்திற்கு மாற்றும் கேந்திரமான பிரச்சினை ஆகியவைப் பற்றி போதுமான அறிவைப் பெறுவதற்கு அது தவறிவிட்டது. அதன் விளைவாக, கட்சியின் மத்திய உறுப்பு நகரத்திலிருந்தது; கட்சி நடவடிக்கைகள் இன்னும் பெரிய அளவில் நகரங்களிலேயே குவிந்திருந்தன.

இரண்டாவதாக, இடைத் தட்டு வர்க்கங்களின் இரட்டைத் தன்மை சம்பந்தமாகவும், பிற்போக்கு சக்திகளுக்கிடையே இருந்த உள் முரண்பாடுகள் சம்மந்தமாகவும் ''ஒரு சரியான மதிப்பீட்டை உருவாக்குவதற்கு அது தவறிவிட்டது; ஏனெனில், தேசிய பூர்ஷுவா வர்க்கத்தை, ''புரட்சியின் வெற்றியைத் தடை செய்யும் மிக அபாயகரமான எதிரிகளில் ஒன்று'' என அது கருதிற்று. சியாங்காய்-ஷேக் ஆட்சியின்கீழ், தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தின் இரட்டைத் தன்மையையும், நிலைமையையும் புறக்கணித்துவிட்டு, இந்த வர்க்கத்தின் அரசியல் போக்கில் ஒரு மாற்றத்திற்கான சாத்தியப்பாட்டினை அது முன்கூட்டியே பார்க்கத் தவறிவிட்டது; மிகப் பிற்போக்கான எதிரிகளைத் தனிமைப் படுத்தி, அவர்களைத் தனித்தனியாக நொறுக்கித் தள்ளும் பொருட்டு கோமிங்டாங் கோஷ்டிகளுக்கிடையே எந்த விதமான வேறுபாட்டையும் செய்யத் தவறியும் அல்லது அவர்களுக்கிடையே உள்ள முரண்பாடுகளைப் பயன்படுத்தத் தவறியும், ''கோமிங்டாங்கின் எல்லாக் கோஷ்டிகளும் பிற்போக்கானவையே,'' என்ற கூற்றையும் காங்கிரஸ் செய்தது.

மூன்றாவதாக, முதல் ''இடதுசாரி'' ப்பாதைப் பற்றி மாநாட்டினால் செய்யப்பட்ட விமரிசனம், கவிழ்ப்பு வாதத்தவறு மற்றும் சில இதர தெளிவான தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்கு அப்பால் செல்லவில்லை. சித்தாந்த ரீதியான கருத்தோட்டத்திலிருந்த, தவறான பாதையை விமர்சிப்பதற்கு அது தவறி

விட்டது: அதாவது மார்க்சிய லெனினிய நிலைப்பாட்டையும், கண்ணோட்டத்தையும், முறையையும உபயோகித்து இப்படிப் பட்டதொரு பாதையின் சித்தாந்த ரீதியான மூலக் காரணத்தை ஆழமாகத் தேடிக் கண்டுபிடிக்க அது தவறி விட்டது.

இத்தகைய குறைபாடுகளின் காரணமாகவும், மாநாட்டிற்கு பிறகு தலைமை, ''இடதுசாரிகளின்'' காங்கிரஸில் இருந்தது என்ற விவரத்தின் காரணமாகவும் ''இடதுசாரித் தவறுகள்'' முழுமையாக களைந்தெறியப் படவில்லை. ஆனால், பின்னர் ''இடதுசாரி'' சந்தர்ப்பவாதிகளால் முழுமையான தொரு தவறான பாதையாக அபிவிருத்தி செய்யப்பட்டது.

தோழர் மாசே-துங் கட்சியின் ஆறாவது மாநாட்டில் கலந்துக் கொள்ளவில்லை. எனினும் அவர் மத்தியக் கமிட்டியின் ஒரு உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார்.

மாநாட்டிற்குப் பிறகு, மாநாட்டு தீர்வு காணாமல் விட்டு வைத்திருந்த அல்லது சரியற்ற முறையில் பரிசீலனைச் செய்யப் பட்டிருந்த சீனப் புரட்சியின் முக்கியமான பிரச்சினைகளுக்கு தோழர் மா-சே-துங் நடைமுறையிலும், தத்துவத்திலும் சரியான முறையில் தீர்வு கண்டார்,

நகரங்களில் பலமானதொரு எதிரியினால் புரட்சிப் படைகள் தோற்கடிக்கப்பட்டப் பிறகு, இத்தகையப்படைகள் கிராமப் புறத்திற்கு மாற்றலாகிச் செல்வதுதான் ஒரே சரியான வழியாக இருந்தது. அங்கே அவர்கள் புரட்சிகாமான தளங்களை அமைக்க முடிந்தது. மற்றும் நகரங்களைச் சுற்றி வளைத்து, நிகழ்ச்சிகளின் போக்கில் அவற்றைக் கைப்பற்றும் பொருட்டு, அந்தத் தளங்களின் பலத்தைக் குவிக்கவும் அபிவிருத்தி செய்யவும் முடிந்தது. இலையுதிர்கால அறுவடைப் பேரெழுச்சிக்குப் பிறகு, தோழர் மாசே-துங் அவரது படைகளை சிங்காங் மலைகளின் பிரதேசத் திற்குள் வழி நடத்திச் சென்றார். அங்கே அவர்கள் ஒரு புரட்சித் தளத்தை ஏற்பாடு செய்தார்கள்; அதன் மூலம், யதார்த்தமான நடைமுறையில் புரட்சியின் முக்கியமானப் பிரச்சினைகளில், ஒரு பிரச்சினைக்குத் தீர்வு கண்டார்கள். ஆனால் புரட்சித் தளம் அல்லது சீனாவின் சிவப்பு ஆட்சி நீடிக்கவும் அபிவிருத்தி அடைய வும் முடியுமா? இது கட்சி முழுமைக்கும் முக்கியமானதொரு கேள்வியை எழுப்பிற்று; ஆனால், அதுவரையிலும் திருப்திகர மான பதில் கொடுக்கப்படவில்லை.

கட்சியில் சில தோழர்களுக்கிடைய தற்கால நிலைமைப்பற்றி இரண்டு தவறான கண்ணோட்டங்கள் இருந்தன. ஒரு

கருத்தோட்டம், புரட்சி சக்திகளை மிகைப்படுத்தி மதிப்பிட்டு, இந்த முறையில் புரட்சியைக் கவிழ்ப்புவாதப் பாதையில் ஏற்பாடு செய்வதாக இருந்தது. மற்றொருக் கருத்தோட்டம் புரட்சி சக்திகளைக் குறைத்து மதிப்பிட்டு, எதிர்ப் புரட்சி சக்திகளை அதிகமாக மதிப்பிட்டு, இந்த முறையில் அவநம்பிக்கைக்குள் விழுந்துவிடுவதாக இருந்தது. புரட்சியில் எழுச்சி ஏற்படுவதை வெகு தூரத்தில் இருப்பதாகக் கருதியவர்கள், கொரில்லாப் போராட்டத்தில் மட்டுமே ஈடுபட்டு, தளங்களை அமைக்கும் வேலையைப் புறக்கணித்தார்கள். தோல்வி அடையும் ஒவ்வொரு சமயத்திலும், அல்லது எதிரியினால் சுத்தி வளைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு சமயத்திலும் ''எவ்வளவு காலத்திற்கு செங் கொடியை பறக்க விட்டுக் கொண்டிருக்க முடியும்?'' என்பது பற்றிய சந்தேகங்களை எழுப்பிய சிலரும் இருந்தார்கள்.

இதன் விளைவாக, இந்தப் பிரச்சனையை ஒரு விஞ்ஞான ரீதியான மார்க்சிய-லெனினிய அலசி ஆராய்தலுக்கு உள்ளாக்கி இப்பிரச்சனைப் பற்றிய ஒரு தத்துவ ரீதியான விளக்கம் கொடுப்பது அந்தக் காலத்தின் ஒரு அவசர அரசியல் கடமையாக மாறி இருந்தது, தோழர் மாசே-துங் இந்த மாபெரும் கடமைய பிரகாசமான முறையில் நிறைவேற்றினார். சிவப்பு ஆட்சியையும், செஞ்சேனையையும் நிலைநாட்டி அபிவிருத்தி செய்தது, தொழிலாளிவர்க்கத்தின் தலைமையின்கீழ் அரைக் காலனியாதிக்க சீனாவில் விவசாயி புரட்சியின் மிகமிக உயர்ந்த உருவமாக இருந்தது. ஏகாதிபத்தியவாதிகளாலும், யுத்தப் பிரபுக்களாலும் நீண்ட காலமாக கைப்பற்றப்பட்டிருந்த பெரிய நகரங்களில் புரட்சி சீக்கிரமாக வெற்றிபெற முடியவில்லை. போதிய முன் தயாரிப்பு இல்லாமல் எதிரியோடு தீர்மானமான போராட்டத்தை நடத்துவதைத் தவிர்ப்பதற்கு, விவசாயி களோடு ஸ்திரமானதொரு புரட்சிகரமான கூட்டணியை அமைப்பதற்கு, தொழிலாளிவர்க்கம் கிராமப்புரத்திற்கு அத னுடைய முன்னணிப்படையை அனுப்பவேண்டும்; மற்றும் எதிரியின் தாக்குதல்களை எதிர்பதற்காவும், புரட்சிப்படைகளை அபிவிருத்தி செய்வதற்காகவும் புரட்சிகரமான யுத்த தந்திரத் திற்கு ஏற்ப அரசியல், ராணுவ, பொருவாதார, கலாச்சார தளங்களை ஏற்பாடு செய்யவும் வேண்டும்.

நாடு தழுவிய புரட்சிகரமான பேரெழுச்சியைத் துவக்குவதை வேகப்படுவதற்குப் புரட்சிகரமான தளங்களையும், செஞ்சேனை யையும் ஸ்தாபிப்பதும், அபிவிருத்தி செய்வதும் மிகமிக முக்கிய மான அம்சங்களாக இருந்தன. கிராமப்புறத்தில் ஏற்படும்

புரட்சியின் அபிவிருத்தி, பின்தங்கிய கிராமப்புறங்களைப் புரட்சிகரமான பிரதேசங்களாக மாற்ற முடியும். கிராமப்புறத்தில் அவற்றின் அடிப்படையான நிலையிலிருந்து, செஞ்சேனை பெரிய மற்றும் நடுத்தரமான நகரங்களில் எல்லா திசைகளிலிருந்தும் எதிரியை முற்றுகையிட முடியும்; மற்றும், எதிர்ப்பு புரட்சிக்காரர்களை திரும்பத் திரும்பத் தாக்குவதினால் துன்புறுத்த முடியும்; இந்த முறையில், எதிரியின் பாதையில ஏராளமான கஷ்டங்களை வைத்துக் கொண்டிருக்க முடியும். சிவப்பு ஆட்சி நீடித்து அபிவிருத்தி அடைந்தது என்ற விவரம் கம்யூனிஸ்ட் கட்சியும், மக்களின் புரட்சிப்படைகளும் வெல்லப்படமுடியாதவை என்பதை நிருபித்தன. அது சீன மக்களுக்கு மகத்தான நம்பிக்கையைக் கொடுத்தது; அது அவர்களைப், போராடுவதற்கான சித்தத்தினால் உற்சாகமூட்டிக் கொண்டிருந்தது; மற்றும், புரட்சிகரமான எழுச்சியின் துவக்கத்தை வேகப்படுத்திக் கொண்டுமிருந்தது.

கிராமப்புறத்தில் தளங்களை ஏற்பாடு செய்வதினால், சீனப் புரட்சியைப் புத்துயிர் பெறு செய்யும் இந்தப் பாதைக் கேற்ப செயல்பட்டு, இந்த முறையில் புரட்சியை வெற்றிக்கு வழி நடத்திச் செல்வது சாத்தியமாக இருந்ததா? இந்தக் கேள்விக்கு, கிராமப்புறத்தில் புரட்சிகரமான தளங்கள் (சிவப்பு ஆட்சி, தோன்றுவதற்கும் நீடிப்பதற்குமான காரணங்களை விஞ்ஞானப் பூர்வமாக விளக்கிக் கூறியதன் மூலம் தோழர் மாசே-துங், ஆம் என்று உறுதியாகப் பதில் கூறினார்.

முதலாவதாக, அரைக்காலனி ஆதிக்க, அரைநிலப் பிரபுத்துவ சீனாவில், பலஹீனமான முதலாளித்துவப் பொருளாதாரமும் சக வாழ்வு நடத்தின; ஒரு சிறு எண்ணிக்கையிலான நவீன இயந்திரத் தொழில் நகரங்கள் மத்திய கால, பின் தங்கிய பரந்த கிராமப்புறத்தை ஒட்டியே இருந்தன. சீனாவின் பொருளாதார அபிவிருத்தி அதன் பின்தங்கிய நிலைமைக்கும் சீரற்றத் தன்மைக்கும் அமோகமான சாட்சியமாக இருந்தது; இது பிளவு படுத்தும் ஏகாதிபத்தியக் கொள்கையினால் மிகவும் அதிகமாக கடுமையாயிற்று. இது சீன ஜனநாயகப் புரட்சியின் அபிவிருத்தியில் மாபெரும் சீரற்றத் தன்மையை தீர்மானித்தது. சீனாவின் பொருளாதாரம் பின் தங்கியதாகவும், ஒன்று சேராததாகவும் இருந்ததைப் போலவே, சீனாவின் நாட்டுப்புறமும் அப்படித்தான் இருந்தது; ஒரு குறிப்பிட்ட அளவிற்கு நகரங்களைச் சார்ந்திருந்ததாகவும் இருந்தது; நீண்ட காலத்திற்கு

சுய சார்புடையதாகவும், புரட்சியை மறைத்து வைக்கக் கூடிய தாகவும் இருந்தது. சீனாவின் பொருளாதாரா அபிவிருத்தி சீறற்றதாக இருந்தமையால், தொலைவிலுள்ள பல பிரதேசங் களின் மீது ஏகாதிபத்திய பொருளாதார சக்திகள் நேரடியான கட்டுப்பாட்டினைப் பெற முடியாமலிருந்தன; ஆனால் மறைமுக மானக் கட்டுப்பாட்டை மட்டுமே பெறமுடிந்தன அல்லது எந்த விதக் கட்டுப் பாட்டையும் பெற முடியாமலேயே இருந்தன. அதன் விளைவாக எதிரிப் படைகள், சம்பந்தப்படுத்திப் பார்க்கும் பொழுது, எந்த இடங்களில் பலஹீனமாக இருந்தனவோ அப்படிப் பட்ட இடங்களில் சீனப் புரட்சி முதலில் வெற்றிப் பெறுவது சாத்தியமாக இருந்தது.

இரண்டாவதாக, சிவப்பு ஆட்சி கண்மூடித்தனமாக எந்தக் கிராமப்புறத்திலும் அமைக்கப்படவில்லை. புரட்சியின் செல் வாக்கினை உணர்ந்திருந்த ஹுன்னான், ஹுப்பே, குவாங்டுங் மற்றும் கியாங்சி போன்ற இப்படிப்பட்ட பிரதேசங்களில்தான், தொழிலாளி மற்றும் விவசாயி வெகுஜனங்கள் புரட்சி யுத்தங்களி லும், நிலப்பிரபுத்துவ வர்க்கத்திற்கெதிரான கசப்பானப் போராட்டங்களிலும் புடம்போட்டு எடுக்கப்பட்டிருந்த பிரதேசங் களிலும், மற்றும் தொழிற்சங்கங்களும், விவசாய சங்கங்களும் அமைக்கப்பட்டிருந்த பிரதேசங்களிலும்தான், அது (சிவப்பு ஆட்சி) முதலில் அமைக்கப்பட வேண்டும். வேறு வார்த்தைகளில் சொன்னால், இத்தகையப் பிரதேசங்களில் அதை நிறுவுதலுக்கும், அதன் அபிவிருத்திக்கும் சிவப்பு ஆட்சி ஒரு சிறப்பான வெகுஜன அடிப்படையைக் கொண்டிருக்கும். இத்தகைய மாகாணங்களில், குறிப்பாக, கியாங்சி மாகாணத்தின் நிலைமைகளை தோழர் மாசே-துங் அலசி ஆராய்ந்தார். 1. கியாங்சின் பொரு ளாதாரம் பிரதானமாக பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவத் தன்மை கொண்டதாக இருந்தது; மற்றும், நிலப்பிரபுக்களின் ஆயுதப் படைகள், இதர எந்த தெற்கு மாகாணத்தைக் காட்டிலும் மிகவும் பலஹீனமாக இருந்தன. 2. கியாங்சி எப்பொழுதுமே இதர மாகாணங்களிலிருந்து வந்தப் படைகளினால் பாதுக்காக்கப்பட்டு வந்தது. இப்படைகள் ஸ்தல நிலைமைகளைப் பற்றி சரியாக அறியாமலிருந்தார்கள்; இதன் விளைவாக அதனுடைய பிரச்சினைகளோடு கூர்மையாகச் சம்பந்தப்படாமலிருந்தார்கள். 3. கியாங்சி ஏகாதிபத்திய செல்வாக்குகளிலிருந்து ஒப்பு நோக்கிப் பார்க்கும் பொழுது தொலைவிலேயே விலகி நின்றது; ஆகவே, கிராமப்புறத்தில் நடைபெற்ற பேரெழுச்சிகள் வேறு

எந்த இடத்தைக் காட்டிலும் மிகவும் அதிகமாகப் பரவலாக இருந்தன.

மூன்றாவதாக, சிவப்பு ஆட்சி நீண்ட காலம் நீடிக்க முடியுமா? என்பது புரட்சிகரமான நிலைமையின் கூடுதல் அபிவிருத்தியின் மீது சார்ந்து இருந்தது. கோமிங்டாங் கட்சியின் காட்டிக்கொடுத்தலுக்குப் பிறகு, புரட்சி தணிந்த ஒரு நிலையிலிருந்தது. ஆனால், புரட்சியைத் தோற்றுவித்த எந்த முரண்பாடுகளுக்கும் தீர்வு காணப்படவில்லை. இவை ஏகாதிபத்தியத்திற்கும், சீன மக்களுக்குமிடையே இருந்த முரண்பாடுகளாக இருந்தன. சீனாவைச் சுரண்டுவதற்காக ஏகாதிபத்தியவாதிகளுக்கிடையே இருந்த முரண்பாடுகளாக இருந்தன; சீனாவின் பிற்போக்கு வர்க்கங்களுக்கிடையே இருந்த முரண்பாடுகளாக இருந்தன; நிலப்பிரபுத்துவ வர்க்கத்திற்கும் விவசாயிகளுக்குமிடையே இருந்த முரண்பாடுகளாக இருந்தன; பூர்ஷ்வா வர்க்கத்திற்கும் தொழிலாளி வர்க்கத்திற்குமிடையே இருந்த முரண்பாடுகளாக இருந்தன; யுத்தப் பிரபுக்களுக்கும், அவர்களது ராணுவங்களின் அணிகளுக்குமிடையே இருந்த முரண்பாடுகளாக இருந்தன. அந்த முரண்பாடுகள் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டிருந்த அதே சமயத்தில், அவை ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டுமிருந்தன. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் அடிப்படையிலிருந்து ஆரம்பித்து, சீனாவின் மீது ஏகாதிபத்தியவாதிகளின் கடுமையானப் போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கும் சீன மக்களுக்குமிடையே இருந்த முரண்பாடுகளும் தவிர்க்க முடியாதபடி தீவிரமடையும் என்பதையும், இந்த முறையில் யுத்தப் பிரபுக்களுக்குமிடையே முடிவற்ற யுத்தங்களைத் தோற்றுவித்து அவை இதர முரண்பாடுகளைத் தீவிரப்படுத்தும் என்பதையும், தோழர் மாசே-துங் பார்த்தார். சின யுத்தப் பிரபுககளு•கிடையே இருந்த நீடித்த பிளவுகளும், யுத்தங்களும் வெள்ளை பயங்கர ஆட்சியின் சுற்று வளைத்தலுக்கு மத்தியிலே ஒன்று அல்லது பல சிறு புரட்சி தளங்கள் தோன்றி அபிவிருத்தி அடைவதை சாத்தியமாக்கின.

நான்காவதாக, போதிய அளவு பலம் கொண்ட ஒழுங்கானதொரு செஞ்சேனை இருப்பது, சிவப்பு ஆட்சியை ஏற்பாடு செய்வதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் அவசியமானதொரு நிபந்தனையாக இருந்தது. ஒழுங்கானதொரு செஞ்சேனையின் உதவியோடு, எதிரியின் தாக்குதல்களை எதிர்ப்பதற்கும், கொரில்லா யுத்தத்தைத் தொடர்ந்து நடத்து

வதற்கும், புரட்சிகரமான தளங்களை விஸ்தரிப்பதற்கும் ஆயுதப்படைகளைக் குவிப்பது சாத்தியமாக இருந்தது. வெகுஜனங்கள் புரட்சிகரமானதொரு அரசாங்கத்தை நிறுவுவதற்கும் கட்சி அமைப்புகளை நிறுவுவதற்கும் செஞ்சேனை வெகுஜனங்களைத் திரட்டவும், அவர்களுக்கு உதவி செய்யவும் முடிந்தது.

ஐந்தாவதாக, சிவப்பு ஆட்சி நீடிக்கவும் அபிவிருத்தியடையவும் கம்யூனிஸ்ட் கட்சி இருப்பது, தீர்மானமானதொரு நிபந்தனையாக இருந்தது. சிங்காங் மலைகள் தள காலக்கட்டத்தில் பாட்டாளி வர்க்க சித்தாந்தத் தலைமையின் அவசியம் பற்றியப் பிரச்சினையை, அதாவது பாட்டாளி வர்க்கக் கருத்துக்கள் விவசாயிகள் மற்றும் குட்டி முதலாளிகளின் கருத்துக்களின்மீது தலைமை தாங்கவேண்டும் என்ற பிரச்சினையை, திட்டவட்டமாக முன்னுக்குக்கொண்டு வந்தார். செஞ்சேனையில் சித்தாந்தப் போராட்டத்தை நிறைவேற்றுவதில் கட்சிக்குக் கிடைத்த அனுபவம், நான்காவது சேனையின் கட்சியின் ஒன்பதாவது காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு, ஒரு அடிப்படையாக அமைந்தது; இந்த ஒன்பதாவது காங்கிரஸ் செஞ்சேனையின் கட்சி ஸ்தாபனங்களில் நிலவிய பல்வேறு பாட்டாளி வர்க்க சம்பந்தமற்ற (Non Proletarian Ideas) கருத்துக்களின் வெளிப்படுதல்களையும், தோற்றுவாய்களையும் அலசி ஆராய்ந்து, இத்தகைய தவறான கருத்துக்களைக் களையெடுப்பதற்கான முறைகளையும் உருவாக்கிற்று. இந்த முறையில், கம்யூனிஸ்ட் கட்சியை நிர்மானிப்பதற்கான அடிப்படையான சித்தாந்த, அரசியல், ஸ்தாபனக் கோட்பாடுகள் வகுக்கப்பட்டன. கட்சி முறையானதொரு சித்தாந்த அடிப்படையின் மீதுக் கட்டப்படவேண்டும். ஏனெனில், கட்சியிலிருந்த தவறான கருத்துக்கள், தவறானதொரு அரசியல் பாதைக்கு மூல்தாரமாக இருந்தன. ஒரு அரசியல் நிலைப்பற்றி அகநிலை ரீதியான அரசியல் அலசி ஆராய்தலும், மற்றும், வேலை சம்பந்தமாக அகநிலை ரீதியான வழி காட்டுதலும் தவிர்க்க முடியாதபடி வலதுசாரி சந்தர்ப்பவாதத்திலோ அல்லது ''இடதுசாரி''க் கவிழ்ப்பு வாதத்திலோ முடிவடையும். அரசியல் நிலைமையை அலசி ஆராய்வதிலும், பல்வேறு பிரச்சினைகளுக்கு பரிகாரம் காணுவதிலும், மற்றும் சமுதாய, அரசியல், பொருளாதாரப் பிரச்சனைகளைக் கற்றறிந்து தெளிவதிலும் பரிசீலிப்பதிலும் செயல்பட வேண்டிய முறையைக் கற்றுக் கொள்வதிலும் மார்க்சிய—லெனினிய முறையையும்,

கண்ணோட்டத்தையும் பயன்படுத்துவதுதான் கட்சியில் தவறான கருத்துக்களைக் களை எடுப்பதற்கு சரியான வழியாக இருந்தது. சித்தாந்த அரங்கில் அகநிலைவாதத்தை வெற்றிக் கொள்ளும் அதே சமயத்தில், கட்சி அரசியல் அரங்கில் இரண்டு திரிபுகளை எதிர்த்து ஒரு போராட்டத்தை நடத்த வேண்டும். ஒரு புறத்தில், புரட்சி சக்திகளைக் குறைத்து மதிப்பிடுவதின் விளைவாகவும் அதன் வருங்காலத்தைப் பார்க்கத் தவறுவதின் விளைவாகவும் ஏற்படும் நம்பிக்கையின்மையை அது எதிர்த்துப் போராட வேண்டும்; மறுபுறத்தில், எந்தவிதமான சிறு வேலையையும், கஷ்டம் நிறைந்த வழக்கமான வேலையையும் செய்வதில் அலட்சியமாக இருக்கும் சிலத் தோழர்களின் புரட்சிகரமான பதட்டத் தன்மையின் ஒரு பிரதிபலிப்பாக இருந்த கவிழ்ப்பு வாதத்தையும் அது எதிர்த்துப் போராட வேண்டும். ஸ்தாபன விஷயங்களில், அது ஜனநாயக மத்தியதுவத்தை வலியுறுத்த வேண்டும்; மற்றும், கட்சியின் மத்தியதுவத்தின் விரும்பத் தகாதக் கட்டுப்பாட்டையும், உள்கட்சி ஜனநாயகத்தின் விரும்பத் தகாதக் கட்டுப்பாட்டையும் அது எதிர்க்க வேண்டும். மத்தியத்துவ வழிகாட்டுதலின் கீழ் கட்சியில் ஜனநாயக வாழ்க்கையைக் கண்டிப்பாக அமல் நடத்துவது முறையான வழியாக இருக்க வேண்டும். இதன் விளைவாக, அத்துமீறிய ஜனநாயகம், பரிபூரண சமத்துவவாதம் ஸ்தாபன ரீதியான அல்லாத கருத்தோட்டங்கள், மற்றும் பல்வேறு வகைப்பட்ட தனித் தன்மைவாதம் ஆகியவற்றை எதிர்த்தும் போராட வேண்டும். ஏனெனில் இந்த ஒரே வழியில் மட்டுமே உண்மையானதொரு மார்க்சிய—லெனினியக் கட்சியை நிர்மாணிக்க முடியும்.

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையோடும், செஞ்சேனை இருப்பதினாலும் எதிர்ப்புரட்சியின் பல்வேறு கோஷ்டிகளுக்கிடையே நடைபெறும் போராட்டங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வது சாத்தியமாக இருக்கும்; அப்படி செய்வதன் மூலம் புரட்சி சக்திகள் புத்துயிர்ப் பெற முடியும்; மற்றும் எதிரிப் படைகள் பலஹீனமாக இருக்கும் கிராமப் புறங்களில் புரட்சி வெற்றிப் பெறவும் முடியும்; மற்றும் கிராமப்புறத்தில் நீண்டதொரு காலத்திற்கு புரட்சி சக்திகளால் நீடித்திருக்கவும் முடியும்.

இந்த முறையில், புரட்சியின் அகநிலைமைகளையும், புறநிலமைகளையும் பற்றிய சரியானதொரு பகுத்தாய்தலின் மூலம்,

தோழர் மா சே-துங் விஞ்ஞான ரீதியானதொரு முடிவிற்கு வந்து சேர்ந்தார்.

ஏகாதிபத்திய சகாப்தத்தில், முதலாளித்துவ நாடுகளில் சீரற்றப் பொருளாதார மற்றும் அரசியல் அபிவிருத்திப் பற்றிய விதியினைத் தோழர் லெனினாலும், ஸ்டாலினாலும் விளக்கிக் கூறப்பட்ட முறையில் தோழர் மா சே-துங் அரைக்காலனி, அரை நிலப்பிரபுத்துவ சீனாவிற்கு பிரகாசமான முறையில் பிரயோகம் செய்தார்; மற்றும், வெள்ளைப் பயங்கர ஆட்சியால் சுற்றி வளைக்கப்பட்டிருப்பதின் மத்தியில் சிவப்பு ஆட்சியின் கீழ், ஒன்றோ அல்லது பல சிறு பிரதேசங்களோ நீடிப்பதும், அபிவிருத்தி அடைவதும் சாத்தியமாக இருந்தது என்பதையும், எதிரிப்படைகள் பலஹீனமாக இருந்த கிராமப்புறத்தில் புரட்சி முதலில் வெற்றி அடைந்து, பின்னர் நாடு முழுவதிலும் வெற்றி அடைய முடியுமென்பதையும் சுட்டிக் காட்டிற்று. சீனாவில் சீரற்றப் பொருளாதார அரசியல் அபிவிருத்தி பற்றிய விதியையும் விளக்கிக் கூறினார். இந்த புதிய முடிவு, முதலாளித்துவ நாடுகளில் சீரற்ற பொருளாதார மற்றும் அரசியல் அபிவிருத்தி விதி (Law) பற்றிய மார்க்சிய- லெனினியத் தத்துவத்தின் கூடுதலானதொரு அபிவிருத்தியாகவும், முதலில் ஒரு நாட்டில் சோஷலிசம் வெற்றி பெறுவதற்கான சாத்தியப்பாடுப் பற்றிய தத்துவத்தின் கூடுதலானதொரு அபிவிருத்தியாகவும் இருந்தது. இந்தப் புதிய முடிவுதான் சீனப் புரட்சியின் வெற்றிக்கு வழி நடத்திச் சென்றது.

**5. மத்திய தளத்தையும் மற்றும் இதர தளங்களையும் நிறுவுதல். கம்யூனிஸ்ட் கட்சியினால் இரண்டாவது ''இடது சாரி'' பாதைக் கலைந்தெடுக்கப் படுதல். சிவப்பு பிரதேசங்களில் விவசாயப் புரட்சியின் வழி காட்டும் பாதையும் மற்றும் விவசாயக் கொள்கையும்.**

இலையுதிர்கால அறுவடைப் பேரெழுச்சிக்குப் பிறகு, அபிவிருத்தியடைந்த சகல புரட்சிகரமான ஆயுதமேந்திய படைகளும் ஒரு சரியான தலைமையைப் பின்பற்றி, தோழர் மாசே-துங் இனுடைய கொள்கையைப் போன்றதொரு கொள்கையை கிராமப்புறத்திற்கு முன்னேறி தங்களை அமைக்கும் கொள்கையை அனுஷ்டித்தார்கள். 1930-ஆம் ஆண்டின் ஆரம்பத்தில்,

மூன்றாண்டுப் போராட்டத்திற்குப் பிறகு, புரட்சிகரமான தளங்களும் மக்களின் ஆயுதமேந்திய படைகளும் அதாவது சீனத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் செஞ்சேனை பல இடங்களில் நிறுவப்பட்டன.

1. மத்தியதளம் : 1927 அக்டோபரில் சிங்காங் மலைகளின் மீது ஏற்பட்ட முன்னேற்றம் ஹுன்னான் கியாங்சி தளத்திற்கான (Base) அஸ்திவாரத்தைப் போட்டது. 1928 நவம்பரில் ஐந்தாவது சேனையின் பகுதி சிங்காங் மலைகளை வந்தடைந்தது. மா சே-துங்கினாலும், மற்றும் சூ டேயினாலும் தலைமைத் தாங்கப்பட்ட நாலாவது சேனையின் படைகளோடு சேர்ந்துக் கொண்டு, செஞ்சேனையின் பலத்தை அதிகப் படுத்திற்று. எதிரியினுடைய முற்றுகையையும், சுற்றி வளைத்தலையும் உடைத்தெறிவதற்கு, நாலாவது படை தெற்கு கியாங்சியில் நுழைந்து, அங்கிருந்து 1929 ஜனவரியில் ஒரு தளத்தை அமைத்தது. அதே ஆண்டில் பிப்ரவரிக்கும், டிசம்பருக்கும் இடையே அது மூன்று முறை ஃபூக்கியனுக்குள் நுழைந்து ஸ்தல கட்சி ஸ்தாபனங்களோடு இணைந்து நின்று மேற்கத்திய ஃபூக்கியன் தளத்தை அமைத்தது. 1930-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், மேற்கத்திய ஃபூக்கியன் மற்றும் தெற்கத்திய கியாங்சியின் தொழிலாளிகள், விவசாயிகள் மற்றும் ராணுவ வீரர்களின் அரசாங்கங்கள் அமைக்கப் பட்டன. மேலும் ஜுன் மாதத்தில் சீனத் தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் செஞ்சேனையின் முதல் ராணுவப் பிரிவும் அமைக்கப்பட்டது. ஆகஸ்ட் மாதத்தில் முதல் ராணுவப் பிரிவும், மூன்றாவது ராணுவப்பிரிவும், தங்களது படைகளை இணைத்து முதல் அரங்கச் சேனையை (First front army) அமைத்தன; இந்த சேனைக்கு பிரதம சேனாதிபதயாக சூ டேயும், முக்கிய அரசியல் அமைச்சராக (Chief political Commissioner) மா சே-துங்கும் இருந்தார்கள்.

2. ஹுன்னான்-ஹுப்பே கியாங்சி-தளம் : 1928 ஜுலையில் பிங்கியாங் பேரெழுச்சிக்குப் பிறகு, ஐந்தாவது சேனை அமைக்கப் பட்டது. அது ஹுன்னானிலும், கியாங்ஸியிலும் கொரில்லா யுத்தத்தை நடத்திற்று. மற்றும் ஹுன்னான்-ஹுப்பே-கியாங்சி தளத்தையும் அமைத்தது. 1930 பிப்ரவரிக்குப் பிறகு, செஞ்சேனை தென் கிழக்கு ஹுப்பே பயிற்சிச் சென்றது; அங்கு, கொரில்லா யுத்தத்தை நடத்தி டாயேயையும், இதர பல கிராமப் புறங்களையும் கைப்பற்றி மூன்றாவது ராணுவப் பிரிவாக விரிவடைந்தது.

3. ஹூப்பே-ஹோனான்-அன்வெய் தளம் : ஹூவான்கானிலும், மாச்செங்கிலும் இரண்டு பேரெழுச்சிகள் நடைபெற்றிருந்தன. முதல் பேரெழுச்சி, அக்டோபர் 1927 லும் இரண்டாவது பேரெழுச்சி 1928 ஆரம்பத்திலும் டாப்பே மலைகளை மத்தியத் தளமாகக் கொண்டு நடைபெற்றிருந்தன. 1929 மார்ச்சில் ஷாங்செங்கில் ஒரு பேரெழுச்சி நடைப் பெற்றது. அதன் விளைவாகத் தென்கிழக்கு ஹோனானில் ஒரு மத்திய தளம் அமைக்கப்பட்டது. பிறகு லியூ ஆன் பேரெழுச்சி பின் தொடர்ந்தது. இது வடமேற்கு அன்வெயில் ஒரு மத்திய தளத்தை நிறுவுவதற்கு வழி நடத்திச் சென்றது. இத்தகைய மூன்று தளங்களும் ஹூப்பே-ஹோனான்-அன்வெய் பிரதேசத்தில் மத்திய பாகத்தில் அமைந்திருந்தன; இவற்றில் ஒரு டஜன் கிராமப் பிரதேசங்களுக்கும் அதிகமாக உள்ளடங்கி இருந்தன. 1930 பிப்ரவரியில், ஹூப்பே-ஹோனான்-அன்வெய் விசேஷ பிராந்தியம் அமைக்கப்பட்டது. 1931இல் அங்கிருந்த செஞ்சேனை நான்காவது அரங்க சேனையாக புணரமைக்கப்பட்டு ஷூஷியரங்-சியன் தளபதியாக பொறுப்பேற்றார்.

4. ஹூங்கு-ஹூன்னான்-மேற்கு ஹூப்பே தளம்: 1927-ஆம் ஆண்டு இறுதியிலிருந்து 1936 ஆம் ஆண்டு ஆரம்பம் வரையிலும் தெற்கு ஹூப்பேயில் யாங்ட்ஸி நதியின் வடக்கேயிருந்த ஹிங்கு ஏரி பிரதேசத்தில் செஞ்சேனை கொரில்லா யுத்தத்தை நடத்தி ஹூங்கு தளத்தை அமைத்தது; மற்றும் 6-ஆவது சேனையையும் உருவாக்கிற்று. இலையுதிர்கால அறுவடைப் பேரெழுச்சிக்குப் பிறகு கொரில்லா யுத்தம், சாங்சியிலும் வடமேற்கு ஹூன்னானில் தாயுங்கிலும், தென்மேற்கு ஹூபேயில் என்ஸியிலும், ஹோஃபெங்கிலும் நடைபெற்றது. இதன் விளைவாக ஹூன்னான் மேற்கு ஹூப்பே தளம் நிறுவப்பட்டு, இரண்டாவது சேனை அமைக்கப்பட்டது. 1930-ஆம் ஆண்டில் இரண்டாவது சேனையும், 6-ஆவது சேனையும் தெற்கு ஹூப்பேயில் குங்கனில் ஒன்று சேர்ந்து இரண்டாவது இராணுவப் பிரிவினை அமைத்தது. இப்படைப் பிரிவிற்கு ஹோலங் தளபதியாக இருந்தார்; மற்றும் ஹூவான் சியாங்-இன் அரசியல் அமைச்சராக இருந்தார்.

6. ஃபூக்கியன்-சிக்கியாங்-கியாங்சி தளம் : 1927 - இல் புரட்சியின் தோல்விக்குப் பிறகு ஃபாங்சி-மின் கியாங்சிலும், கிழக்கு கியாங்சியிலும் ஹெங்ஃபெங்கிலும் புரட்சிகரமான நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்தி, ஆண்டின் இறுதியில் ஒரு ஆயுதம் ஏந்திய பேரெழுச்சிக்குத் தலைமைத் தாங்கினார்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில், புரட்சி தளம் கியாங்சியின் வடகிழக்கு பகுதிக்கு விஸ்தரிக்கப்பட்டது. வடகிழக்கு கியாங்சியில் விவசாயி இயக்கத்தின் செல்வாக்கின் கீழ் வடக்கு ஃபூக்கியன் விவசாயிகள் 1928-இல் ஒரு பேரெழுச்சியை நடத்தினார்கள் 1939-ஆம் ஆண்டு மழை காலத்தில் செங்கியாங்கில் நடைபெற்ற தொழிலாளிகள், விவசாயிகள் மற்றும் இராணுவ வீரர்களின் முதல் பிரதிநிதித்துவ மகாநாடு நடைபெற்றப் பிறகு, ஃபூக்கின், சிக்கியாங். அன்வெய்மற்றும் கியாங்சி மாகாணங்களின் தலைமை அமைப்பு அமைக்கப்பட்டது. 1930 ஆம் ஆண்டு மே மாதத்தில், சியாங்காய்-ஷேக்கை எதிர்த்து பெங்யு-ஷியாங் மற்றும் பென்ஷி ஷான் ஆகியோர் நடத்திய யுத்தம் வெடித்தப் பிறகு செஞ்சேனை சிங்டே சென், லோபிங், சிகுவா, புலியாங் பியுவான் ஆகியவற்றைக் கொண்ட முக்கோண வடிவமான பிரதேசத்தை அடைந்தது; அப்பிரதேசத்தில் அவர்கள் கொரில்லா யுத்தத்தை தொடர்ந்து நடத்தினார்கள். 1930-ஆம் ஆண்டில் தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் வட கிழக்கத்திய கியாங்சி ஜனநாயக அரசாங்கமும் பத்தாவது சேனையும் அமைக்கப்பட்டன.

(5) குவாங்சி (யுகியாங் நதி - சோகியாங் நதி) தளம்: 1929 அக்டோபரில், சியாங்காய்-ஷேக்கிற்கும் குவாங்சி யுத்தப் பிரபுக்களுக்குமிடையே யுத்தம் வெடித்த பிறகு, விவசாயிப் படையின் ஒரு பேரெழுச்சிக்குத் தலைமை தாங்கிற்று; மற்றும் யுகியாங் நதிப் பிரதேசத்தில் கோமிங்டாங் சிப்பாய்களையும் தலைமை தாங்கி நடத்திற்று. மேலும், டிசம்பர் மாதத்தில் தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் யுகியாங் ஜனநாயக அரசாங்கமும், ஏழாவது சேனையும் அமைக்கப்பட்டன. 1930 பிப்ரவரியில் சோகியாங் நதிப் பிரதேசத்தில் லங்கோவில் ஒரு பேரெழுச்சியில் கோமிங்டாங் சிப்பாய்களின் ஒரு பகுதிக்கு கட்சித் தலைமை தாங்கி நடத்தி, அவர்களை எட்டாவது சேனையாக அமைத்தது. இந்தப் பிரதேசத்தில் தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் அ ர சா ங் க ம் அமைக்கப்பட்டதைப் பின் தொடர்ந்து இது நடைபெற்றது. சோகியாங் புரட்சி அரசாங்கம் சீக்கிரத்திலேயே சீர் குலைந்து விட்ட போதிலும், ஏழாவது சேனையும், விவசாயி படைகளும் யுகியாங் நதிப் பிரதேசத்தில் அவர்களது போராட்டத்தை விடாப்பிடியாக நடத்தினார்கள். 1930-ல் செஞ்சேனையின் பிரதானப் படை யுகியாங் நதியிலிருந்து வடக்கு நோக்கி முன்னேறி ஹூன்னான் வழியாகப்

போராடியப் பிறகு மத்திய செஞ்சேனையோடு சேர்ந்து கொண்டார்கள்.

1927-ல் இல்லயுதிர் கால அறுவடை பேரெழுச்சிலியிருந்து 1930-ஆம் ஆண்டு ஆரம்பம் வரையிலும் ஆயுதப் பேரெழுச்சிகள் நடைப்பெற்ற பிரதேசங்களும், கிராமப் புற புரட்சித் தளங்கள் ஏற்பட்ட பிரதேசங்களும் கியாங்சி, ஃபுக்கியான், ஹுன்னான், ஹுப்பே, அன்வெய், ஹோனான், குவாங்டுங், குவாங்சி, சிகியாங் மாகாணங்களின் பகுதிகளில் இருந்தன. செஞ்சேனை 60,000 பேர்களுக்கும் அதிகமாக வளர்ந்து, சிறிது காலத்திற்குப் பிறகு 1,00,000 பேராக வளர்ந்தது.

ஆறாவது காங்கிரஸிற்குப் பிறகு, கொஞ்சம் கட்சியின் வேலை பலதுள்ளதாக இருந்தது. தோழர் மா சே - துங்கின் தோழமையின் கீழும், செல்வாக்கின் கீழும் சிவப்பு ஆட்சி கிராமப் புறத்தில் படிப்படியாக அபிவிருத்தி அடைந்தது. கோமிங்டாங் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்களில், கட்சி ஸ்தாபனங்கள் புதுப்பிக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அவற்றின் வேலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், அந்த சமயத்தில் வீரச் செயல் வாத ''இடது சாரி''க் கருத்துககள் கட்சியில் இன்றும் புத்துயிர் பெற்று வந்தன. புரட்சிப் படைகள் சற்று முன்னேறி இருந்த பொழுது, குறிப்பாக, 1930-ம் ஆண்டு மே மாதத்தில் ஒரு புறம் சியாங்காய்-ஷேக்கிற்கும், மறுபுறம் பெங்யு-ஷியாங்கிற்கும் மற்றும் யென்ஷி-ஷானுக்குமிடையே நடைப்பெற்ற யுத்தம் வெடித்தப் பிறகு, உள்நாட்டு நிலைமை புரட்சிக்கு சாதகமாக மாறியப் பிறகு, தோழர் லிலி - சானால் பிரதிநிதித்துவப்பட்டிருந்த ''இடது சாரி''க் கருத்துக்கள் மிகவும் அதிகமாக இடம் பெற ஆரம்பித்தது. இரண்டாவது, ''இடதுசாரி''ப் பாதையில் கொண்டு முடிந்தது; இந்தப் பாதை 1930 ஜூன் மாதத்தில் தலைமை ஸ்தாபனத்தின் மீது ஆதிக்கம் வகுத்துக் கொண்டிருந்தது.

''இடதுசாரி'' வீரச் செயல்வாத இரண்டாவது திரிபின் தவறு எங்கிருந்து வந்தது?

முதலாவதாக. லிலிசானும் அவரைப் பின்பற்றியவர்களும், சீனப் புரட்சியின் சீரற்ற அபிவிருத்தியை மறுத்தார்கள். நகரங்களில் நடைப்பெற்ற போராட்டங்களுக்கும் கிராமப் புறத்தில் நடைபெற்ற போராட்டங்களுக்குமிடையே எந்த விதமான அடிப்படையான வித்தியாசமும் கிடையாதென்றும், தொழிலாளி வர்க்க இயக்கத்திற்கும், மற்றும், விவசாயி இயக்கத்திற்கு

யிடையே எந்த விதமான அடிப்படையான வித்தியாசமும் கிடையாதென்றும் இப்போராட்டங்கள் அனைத்தும் ஒரே அளவிற்கு கூர்மையாகி விட்டனவென்றும் அவர்கள் கூறி வந்தார்கள். பெரிய நகரங்களில் நடைபெறும் பேரெழுச்சிகள் மட்டுமே நாடு தழுவியதொரு புரட்சிகரமான பேரெழுச்சியைக் கொண்டு வந்து, ஒரு மாகாணத்திலோ அல்லது பல மாகாணங்களிலோ வெற்றிக்கு வழி நடத்திச் செல்ல முடியும் என்றும் அவர்கள் கருதினார்கள். ஆகவே, வூகானைச் சுற்றிலுமிருந்த மாகாணங்களில் முதலில் பேரெழுச்சிகளை உருவாக்குவதற்கான ஒரு திட்டத்தை அவர்கள் தயாரித்தார்கள். சீன ஜனநாயகப் புரட்சியில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் விவசாயிகள் நடத்தும் நிலப் பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டத்தினால் வகிக்கப்படும் தீர்மானமான பாத்திரத்தை அவர்கள் குறைத்து மதிப்பிட்டார்கள். எனவே நீண்டதொரு காலத்திற்கு கிராமப்புறத் தளங்களை உருவாக்குவதில் அழுத்தம் வைக்கப்பட வேண்டும்; இந்தத் தளங்கள் நகரங்களைச் சுற்றி வளைப்பதை உருவாக்கி, புரட்சியில் தேசம் தழுவிய எழுச்சியை துரிதப் படுத்தும் என்ற மா சே - துங்கின் கருத்தை "முற்றிலும் தவறானது" என்று அவர்கள் தவறாக முத்திரை குத்தினார்கள்.

இரண்டாவதாக, புரட்சி சக்திகள் முன்னேற்றமடைய ஆரம்பித்திருப்பதாலும், யுத்தப் பிரபுக்கள் தங்களுக்கிடையே போராடி கொண்டிருப்பதாலும், நாடு முழுவதிலும் உடனடியாக ஆயுதமேந்திய பேரெழுச்சிகளை ஆரம்பிப்பதற்கு நிலைமைகள் ஏற்கெனவே பக்குவமடைந்துள்ளன என்று நினைத்துக் கொண்டு, ஸ்தாபன பலத்தை திரட்டுவதற்கான அவசியத்தையும், புரட்சிக்கான முழு தயாரிப்புகளைச் செய்ய வேண்டிய அவசியத்தையும் அவர்கள் மறுத்தார்கள். பேரெழுச்சிகளுக்கான கட்சியின் அறைகூவலுக்கு வெகுஜனங்கள் உடனடியாக செவி சாய்ப்பார்கள் என்று அவர்கள் நம்பினார்கள்; வெகு ஜனங்கள் பேரெழுச்சிகளை மட்டுமே நடத்த வேண்டும் என்றும் அவர்கள் சாதித்தார்கள்; மேலும், வெகு ஜனங்கள் பெரிய நடவடிக்கைகளுக்கு மட்டுமே செல்லவேண்டுமென்றும், சிறிய நடவடிக்கைகளுக்குச் செல்ல வேண்டாம் என்றும் அவர்கள் சாதித்தார்கள். அதன் விளைவாக, தொழிலாளிகளின் அரசியல் போராட்டங்களும், அரசியல் வேலை நிறுத்தங்களும் தீவிரமாக்கப்பட வேண்டுமென்றும், அப்படிச் செய்வதன் மூலம் ஒவ்வொரு பொருளாதாரப் போராட்டமும் ஒரு அரசியல் போராட்டமாக

அபிவிருத்தி அடையுமென்றும், தொழிலாளர்களின் ஆயுதப் படைகள் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்றும், நாடு தழுவிய தொரு பேரெழுச்சிக்கான தயாரிப்பில் ராணுவப் பயிற்சி பலப் படுத்தப்பட வேண்டுமென்றும் அவர்கள் தவறான முறையில் வக்காலத்து வாங்கிப் பேசினார்கள்.

மூன்றாவதாக, சீனப் புரட்சியின் பொதுவான வெடிப்பு தவிர்க்க முடியாதபடி உலகப் புரட்சியின் பொதுவான வெடிப் புக்கு வழி நடத்திச் செல்லுமென்றும், அப்படிப்பட்ட வெடிப்பு இல்லாமல் சீனப்புரட்சியின் வெற்றி சாத்தியமற்றதாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டு, உலகப் புரட்சியின் சீரற்ற தன்மையை (unevenness) அவர்கள் மறுத்துக் கூறினார்கள்.

நான்காவதாக, ஒரு மாகாணத்தில் அல்லது பல மாகாணங் களில் வெற்றிக் கிட்டியவுடனேயே, சோஷலிசப் புரட்சிக்கு மாறிச் செல்லுதல் ஆரம்பமாகிவிடும் என்று நினைத்துக் கொண்டு, சீன பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சியின் நீடித்தத் தன்மையை அவர்கள் புறக்கணித்தார்கள்; மற்றும் சோஷலிசப் புரட்சிக்கும், ஜனநாயகப் புரட்சிக்குமிடையேயுள்ள வேறு படுத்தும் கோட்டினையும் அவர்கள் மறைத்தார்கள். இதன் விளைவாக, சீன பூர்ஷ்வாக்களுக்கு சொந்தமான எல்லாத் தொழிற்சாலைகளும், நிறுவனங்களும், வங்கிகளும் ''எதிர்ப் புரட்சி ஆயுதங்களாக''க் கருதி பறிமுதல் செய்யப்பட வேண்டு மென்று அடித்துக் கூறிக்கொண்டு, அவர்கள் இடைத்தட்டு வர்க்கங்களின் (Intermediate Classes) பால் ''இடதுசாரி'' தீவிரவாதக் கொள்கைகளை உருவாக்கினார்கள்.

நாடு முழுவதிலுமுள்ள பெரிய நகரங்களில் ஆயுதமேந்திய பேரெழுச்சிகளை ஏற்பாடு செய்வதற்காகவும், இத்தகையப் பெரிய நகரங்களைத் தாக்குவதற்காக செஞ்சேனையின் சகலப் படைப் பிரிவுகளையும் குவிப்பதற்காகவும் 1930 ஜூன் மாதத்தில் ''இடதுசாரிகள்'' ஒரு சாகசத் திட்டத்தை உருவாக் கினார்கள். நான்சாங், கியுகியாங், சாங்ஷா, வூகான், கிவெய்லின் லியுசோவ் மற்றும் காண்டன் ஆகிய நகரங்களைத் தாக்கி அவற்றைக் கைப்பற்றும்படி அவர்கள் செஞ்சேனைக்கு உத்திர விட்டார்கள். ஆயுதமேந்திய பேரெழுச்சிகளுக்குத் தயார் செய் வதற்கு, கட்சியின் எல்லா மட்டங்களிலுமிருந்த தலைமை உறுப்பு களையும், இளைஞர் கழகத்தையும், தொழிற்சங்கங்களையும் செயல்'கமிட்டிகளாக அவர்கள் பின்னர் இணைத்தார்கள். இந்த முறையில் இத்தகைய ஸ்தாபனங்களின் சகல மாமூல் வேலையை

யும் ஸ்தம்பிக்கும்படிச் செய்தார்கள்.

ஆனால், கட்சியில் லிலி-சானின் பாதையின் ஆட்சி குறுகிய காலத்திற்கே இருந்தது; அது 1930 ஜுன் மாதத்திலிருந்து செப்டம்பர் வரை மட்டுமே நீடித்தது. இந்தப் பாதை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட பொழுதெல்லாம் கட்சியும், புரட்சிகரமான சக்திகளும் கடுமையான இழப்புக்களுக்கு ஆளாக்கப்பட்டமையால், பெருமளவிலான கட்சி உறுப்பினர்கள் அந்தப் பாதைகளை களைந்தெறிப்பட வேண்டுமென்றுக் கோரினார்கள். குறிப்பாக, தோழர் மாசே-துங் முதல் அணி சேனையில் (First front army) "இடதுசாரி"த் தவறுகளை மகோன்னத பொறுமைகளோடு களைந்தெறிந்தார்கள்; இதன் விளைவாக, இந்தக் காலக் கட்டத்தில் கியாங்சி புரட்சித் தளத்தில் முகாமிட்டிருந்த செஞ்சேனை எவ்விதமான இழப்புகளையும் அடையாமலிருந்ததோடு மட்டுமின்றி, சாதகமான நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு அதனுடைய அணிகளை விரிவுப்படுத்தவும் செய்தது; மேலும், 1930-ஆம் ஆண்டு இறுதியிலும், 1931-ஆம் ஆண்டு ஆரம்பத்திலும் சியாங்காய்-ஷேக் நடத்திய முதல் சுற்றி வளைக்கும் இயக்கத்தை வெற்றிகரமாக நொறுக்கித் தள்ளவும் செய்தது.

1930 செப்டம்பரில், கட்சியின் 6வது மத்தியக் கமிட்டி அதனுடைய மூன்றாவது விரிவடைந்தக் கூட்டத்தை நடத்திற்று இந்தக் கூட்டத்திலும், மற்றும், அதனுடைய பிந்திய வேலைகளிலும் லீலீ, சாங் பார்வையைப் பிரதிநிதித்துவப் படுத்திய, சீனாவில் புரட்சி நிலைமைப்பற்றிய "இடதுசாரி" மதிப்பீட்டை, மத்தியக் கமிட்டியை களைந்து எறிந்து, நாடு முழுவதிலும் பேரெழுச்சிகளை ஏற்பாடு செய்யும் திட்டத்தையும் மற்றும் செஞ்சேனையும் சகல சக்திகளும் பெருநகரங்களைத் தாக்குவதற்காகக் குவிக்கப்படும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முற்றுப் புள்ளி வைக்கிறது; மற்றும் கட்சி, இளைஞர் கழகம், தொழிற் சங்கங்கள் ஆகியவை தங்களுடைய மாமூல் வேலையைச் செய்யத் திறன் படைத்த சுயேச்சையான ஸ்தாபனங்களாக மீண்டும் நிலை நிறுத்தப்பட்டன. இந்த முறையில், லிலி-சான் பாதையின் மேற்கூறிய தவறுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, மூன்றாவது விரிவடைந்தக் கூட்டம், சில உருப்படியான பலன்களைப் பெற்றது. இந்தக் கூட்டத்தில், தோழர் லிலி-சானே தன் தவறுகளை ஒப்புக் கொண்டார்; பின்னர் மத்தியக் கமிட்டியின் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார். ஆனால்

மூன்றாவது விரிவடைந்த கூட்டமும், மத்தியக் கமிட்டியும் லிலி-சான் பாதையை முழுமையாக விமர்ச்சிக்க ஏற்பாடு செய்ய வில்லை; ஆகவே, விரிவடைந்தக் கூட்டத்திலும், அதற்குப்பின் கொஞ்ச காலமும் செக்டேரியனிச (தனிமைப்படும் போக்கு) தவறு கட்சியில் தொடர்ந்து நீடித்தது; மேலும், ''இடதுசாரி''க் கருத்துக்களும் கொள்கைகளும் இன்னும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன.

நிலச்சுவான்களின் நிலங்களைப் பறிமுதல் செய்வதற்காகவும், அதனை விவசாயிகளிடையே விநியோகிப்பதற்காகவும், போராட்டங்களைத் தொடர்ந்து நடத்துவதற்கு, எங்கெல்லாம் சிவப்பு ஆட்சி இருந்ததோ, எங்கெல்லாம் செஞ்சேனை சென்றதோ, அங்கெல்லாம் பரந்துப்பட்ட விவசாயி வெகுஜனங்கள் கட்சியின் தலைமையின் கீழ் அணி திரட்டப்பட்டனர்.

விவசாயப் பிரச்சனைக்கு சரியானதொரு தீர்வுகாணுவதற்காக கிராமப்புறத்தில் வர்க்கப் போராட்டம் முடுக்கிவிடப்படும். பொழுதுமட்டுமே, பரந்துப்பட்ட விவசாயி வெகுஜனங்கள் புரட்சி யுத்தத்தில் பங்குக் கொள்ளும்படி தட்டி எழுப்பப்பட முடியும். மற்றும் புரட்சியை மேலும் விஸ்தரிப்பதற்காகத் தளங்களை நிறுவுவதற்கும், விவசாயி வெகுஜனங்களைப் பங்குக் கொள்ளும்படியும் தட்டி எழுப்பப்பட முடியும்.

விவசாயப் பிரச்சினைக்கான சரியானத் தீர்வு விவசாயப் புரட்சியின் சரியானதொரு வழிகாட்டும் பாதை (Guiding line) யின் மீது சார்ந்து நின்றது. தோழர் மா சே-துங் சீனாவின் நிலைமைகளை ஸ்தூலமாக அலசி ஆராய்ந்து இப்படிப்பட்டதொரு பாதையை உருவாக்கினார்; நிலப்பிரபுத்துவ வர்க்கத்தை ஒழித்துக்கட்டும் பொருட்டு, நடுத்தர விவசாயிகளோடு ஒன்றுபடும் அதே சமயத்தில், பணக்கார விவசாயிகளைக் கட்டுப்படுத்தும் (Restricting) அதே சமயத்தில், நடுத்தர மற்றும் சிறு தொழில் அதிபர்களையும், வியாபாரிகளையும் பாதுகாக்கும் அதே சமயத்தில், ஏழை விவசாயிகளின் மீதும், விவசாயத் தொழிலாளிகளின் மீதும் நம்பிக்கைக்குரிய நிலை (Reliance) வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று இந்தப் பாதை வலியுறுத்திக் கூறிற்று. பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிக் காலக் கட்டத்தில், இந்தப் பாதைதான் விவசாயப் புரட்சியின் கட்சியின் ஒரே சரியானப் பாதையாக இருந்தது.

விவசாயத் தொழிலாளி எந்தவிதமான நிலத்தையும், சாதனங்களையும் பெற்றிருக்கவில்லை. எனவே, விவசாயத்

தொழிலாளிகள் கிராமப் புறத்தின் பாட்டாளிகளாக இருந்தார்கள்; மற்றும், விவசாயப் புரட்சியின் முன்னணிப் படையாகவும் விளங்கினார்கள். ஏழை விவசாய மிகக் குறைவான நிலத்தையும், முற்றுப் பெறாத சாதனங்களையும் பெற்றிருந்தார்கள். ஒரு விதி என்றமுறையில், அவன் நிலத்தை குத்தகைக்கு எடுக்க வேண்டி இருந்தது; அவனுடைய உழைக்கும் சக்தியில் பகுதியை விற்க வேண்டி இருந்தது; அவன் சுரண்டப்பட்டவனாக இருந்தான். ஆகவே ஏழை விவசாயி வெகுஜனங்கள் விவசாயப் புரட்சியின் உண்மையான ஆதரவாளர்களாகவும், கிராமப்புறத்தில் பாட்டாளி வர்க்கத்தினராகவும், கட்சியினுடைய மிக மிகப் பலமான ஆதரவாளர்களாகவும் இருந்தார்கள். ஆகவே, விவ்சாயப் போராட்டத்தை நடத்துவதில் ஏழை விவசாயியை யும், விவசாயத் தொழிலாளியையும் சார்ந்து நிற்பது கட்சியின் மத்தியக் கொள்கையாக (Central Policy.) இருந்தது.

பொதுவாகப் பார்த்தால், நடுத்தர விவசாயி நிலத்தைப் பெற்றிருந்தான்; மற்றும், ஒரு சில விவசாயக் கருவிகளையும் உடைமையாகக் கொண்டிருந்தான். அவனுடைய வருமானத்தின் மூலாதாரமாக, அவன் பிரதானமாக, அவனது சொந்த உழைப்பின் மீதே சார்ந்து நின்றான். ஒரு விதி என்ற முறை யில், அவன் இதர மக்களைச் சுரண்டவில்லை; ஆனால் அதற்கு மாறாக, ஏகாதிபத்திய வாதிகளாலும், நிலச் சுவான்தார் களாலும், முதலாளிகளாலும் அவன் சுரண்டப்பட்டு வந்தான். சாதாரணமாக, அவனும்கூட நிலம் வேண்டுமென்று கோருவான். ஆகவே, நடுத்தர விவசாயி ஜனநாயகப் புரட்சியில் பங்கெடுப்பதோடு மட்டுமின்றி, சோஷலிசத்தையும் கூட ஏற்றுக் கொள்வான். நடுத்தர விவசாய வெகுஜனங்கள் பாட்டாளி வர்க்கத்தின் நம்பத்தக்க நேச சக்தியாக இருந்தார்கள். நடுத்தர விவசாயிகளோடு ஒன்றுபடுவது விவசாயப் புரட்சியின் முக்கிய மானதொரு கொள்கையாக இருந்தது; அப்படிச் செய்வதினால் மட்டுமே, நிலச்சுவான்களின் எதிர்ப்பை சக்தி வாய்ந்த முறையில் சமாளிக்க முடியும். மேலும், விவசாயப் புரட்சிக்குப் பிறகு நடுத்தர விவசாயிகள் கிராமப் புறத்தில் வெகுஜனங்களின் பெரும்பகுதியாக இருப்பார்கள். எல்லாக் கொள்கை களும் அவர்களால் ஆதரிக்கப்பட வேண்டும். அவர்களது குரல் களுக்கு, உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். நடுத்தர விவசாயிகளின் நலன்களைப் பாதிக்கச் செய்யும் எந்த முயற்சியும் அல்லது நடவடிக்கையும் பலமாக எதிர்க்கப்பட வேண்டும்.

பணக்கார விவசாயி நிலத்தைப் பெற்றிருந்தான்; மற்றும் பொதுவாகப் பார்த்தால், ஏராளமான உற்புத்திச் சாதனங்களையும் பெற்றிருந்தான். அவனும் உழைப்பில் ஈடுபட்டிருந்த போதிலும், கூலி உழைப்பைச் சுரண்டுவதின் மூலமும், லேவா தேவி மூலமும், குத்தகை மூலமும், பெரிய அளவிற்கு அவனது வாழ்க்கையை நடத்தினான். பணக்கார விவசாயி ஒரு அரை நிலப்பிரபுத்துவ சுரண்டல் பேர் வழியாக இருந்தான்; ஆனால், அவனது ரகத்தைச் சேர்ந்த உற்பத்தி, குறிப்பிட்டதொரு காலத்திற்கு பயனுள்ளதாக இருக்க முடியும். பணக்கார விவசாயி ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களிலும், நிலப் பிரபுத்துவ எதிர்ப்பு போராட்டங்களிலும் பங்கெடுக்கலாம் அல்லது நடு நிலைமையானதொருப் போக்கினை மேற் கொள்ளலாம். எனவேதான், பணக்கார விவசாயிகளின்பால் கட்டுப்படுத்தும் கொள்கை (Policy of restriction). பணக்கார விவசாயிப் பொருளாதாரத்தை நீடித்திருக்க அனுமதிக்கும் அதே சமயத்தில், அந்தப் பொருளாதாரத்தை ஒழித்துக் கட்ட முயற்சிக்கும் எந்தப் போக்கினையும் எதிர்க்கும் கொள்கையாக நிலச் சுவான் பெற்றிருந்தான்; தானே உழைப்பில் ஈடுபடுவதில்லை; மற்றும் விவசாயிகளைச் சுரண்டியே வாழ்க்கை நடத்தி வந்தான். நிலச்சுவான்தார்கள் பத்தாம்பசலி சுரண்டல்காரர்களாகவும், ஒடுக்கு முறையாளர்களாகவும் இருந்தார்கள்; மற்றும், சீனாவின்மீது ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் பிரதான சமுதாய அடிப்படையாகவும் அமைந்திருந்தார்கள். ஒரு வர்க்கம் என்ற முறையில், நிலச்சுவான்தார்கள் சீனச் சமுதாயத்தின் அரசியல், பொருளாதார, கலாச்சார முன்னேற்றத்தைத் தடுத்தார்கள்; மற்றும் தீர்மானமாகப் புரட்சியை எதிர்த்தும் வந்தார்கள், எனவேதான், தனி நபர்கள் என்ற முறையில் வாழ்க்கை நடத்துவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கும் அதே சமயத்தில், ஒரு வர்க்கம் என்ற முறையில் அவர்களைத் துடைத்தெறியும் கொள்கையாக இருந்தது.

நடுத்தர, சிறு தொழில் அதிபர்கள் மற்றும் வியாபாரிகளின்பால் அனுஷ்டிக்கப்பட்ட பாதுகாப்புக் கொள்கை (Protective Policy) ஜனநாயகப் புரட்சிக் காலக் கட்டத்தில் ஒரு அடிப்படைக் கொள்கையாக இருந்தது; ஏகாதிபத்தியத்தையும், பத்தாம்பசலி நிலப் பிரபுத்துவத்தையும் எதிர்க்கவும் மற்றும் புரட்சித் தளங்களின் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிக்கவும் இந்தக் கொள்கை முக்கியமானதாக இருந்தது.

விவசாயப் புரட்சியின் இந்தப் பாதை முற்றிலும் சரியான தாக இருந்தது. இந்தப் பாதை பின்பற்றப்பட்ட பிரதேசங்களி லெல்லாம் பரந்துப் பட்ட வெகு ஜனங்கள் அணி திரட்டுப்பட்டு, பத்தாம் பசலி நிலப் பிரபுத்துவ சக்திகள் தூக்கி எறியப்பட்டு, விவசாயப் போராட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது என்பதை விவரங்கள் நிரூபித்தன.

1928ஆம் ஆண்டிலிருந்து 1931 வரையிலும், சிங்காங் மலைகள் காலக் கட்டத்திலும், மத்திய ஏரியா ஸ்தாபிக்கப்பட்ட காலக் கட்டத்திலும், தோழர் மாசே-துங்கின் தலைமையின் கீழ் வெகுஜனங்களுக்குக் கிடைத்த சிருஷ்டிப் பூர்வமான அனுபவத்தையும், மற்றும் புரட்சிகரமான நடைமுறையையும் தொகுப்பதினின்று கட்சியின் விவசாயக் கொள்கை வரையறுக்கப்பட்டது.

முதலாவதாக, ஜனநாயக அரசாங்கத்தினால் அடிப்படை மட்டத்தில் நடக்கப்பட்ட ஒரு மதிப்பீட்டோடு (Survey) சிவப்பு பிரதேசங்களில் நிலச் சீர்திருத்தத்தில் நில விநியோகம் ஆரம்பமாயிற்று. அந்த மதிப்பீடு (Survey) மொத்தப் பரப்பளவு, மக்கள் தொகை மற்றும் தனி நபர் வீதாச்சார ஒதுக்கீடு (Per Capita allotment) ஆகியவற்றை உறுதிப்படுத்திற்று. இதைப் பின் தொடர்ந்து, ஒரு வெகுஜனக் கூட்டத்தில் விவாதம் நடத்தி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஷியாங்கை (நகரியம்) ஒரு அடிப்படையானப் பிரிவாகக் கொண்டு, மக்கள் தொகைக்கு ஏற்ப நிலம் சமமாக விநியோகிக்கப்பட்டது. நிலத்தை அதனுடைய தற்போதைய உழவனுக்கு (tiller) ஒதுக்கீடு செய்யும் கோட்பாட்டையும் மற்றும் நிலத்தின் அளவு, தரம் (quality) ஆகியவைப் பற்றிப் புணர் ஏற்பாடு செய்யும் கோட்பாட்டையும் விநியோகம் அடிப்படையாகக் கொண்டிருந்தது. சிவப்புப் பிரதேசங்களில், இது விவசாயக் கொள்கையின் ஒரு அடிப்படையான கோட்பாடாக இருந்தது.

இரண்டாவதாக, பறிமுதல் செய்யப்பட வேண்டிய நிலத்தின் வரம்பு மற்றும் உடைமை உரிமைப் பற்றிய பிரச்சினைகள், தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் ஜனநாயக அரசாங்கம் இரு வகைப்பட்ட விவசாயச் சட்டத்தைப் பிரகடனம் செய்தது. 1929 ஏப்ரலில் சிங்குவாவோ கிராமப்புற விவசாயச் சட்டத்தையும் பிரகடனம் செய்தது. முந்திய சட்டம் எல்லா நிலத்தையும் பறிமுதல் செய்வதற்கு வகை செய்தது; பொது நிலம் மட்டுமின்றி, நிலச்சுவான்களுக்குச்

சொந்தமான நிலத்தையும் பறிமுதல் செய்வதற்கு வகை செய்திருந்தது. ஆனால, சிங்காங் மலைகளிலிருந்து தெற்கு கியாங்சியில் சிங்குவாவோ கிராமப் புறத்தில் செஞ்சேனை வந்து சேர்ந்த பிறகு, விவசாயச் சட்டத்தில் ஒரு முக்கியமான மாற்றம் புகுத்தப்பட்டது; ''சகல நிலங்களையும் பறிமுதல் செய்வது'' என்ற பகுதி, இப்பொழுது ''சகல பொது நிலத்தையும், நிலச் சுவான்தார்களுக்குச் சொந்தமான நிலத்தையும் பறிமுதல் செய்வது'' என்று மாற்றப்பட்டது.

உடமை சம்பந்தப்பட்ட மட்டில், இரண்டு சட்டங்களும் நிலம் அரசாங்கத்திற்கு சொந்தமானது, விவசாயிகளுக்குச் சொந்தமானதல்ல என்று ஏற்பாடு செய்திருந்தன. வேறு வார்த்தைகளில் சொன்னால், நிலத்தின் நிலச் சுவான்தார் உடமை அரசு உடமையாக மாற்றப்பட்டிருந்தது. நிலத்தில் செய்யப்படும் சகல பரிவர்த்தனை நடவடிக்கைகளும் தடை செய்யப்பட்ட விஷயமும், இந்தப் பிரச்சினையோடு நேரடியாக பிணைக்கப்பட்டிருந்தது. சுருக்கமாகச் சொன்னால், நிலம் உடமையாகமலேயே விவசாயிகள் நிலத்தைப் பயன்படுத்துவதை அனுபவித்து வந்தார்கள். ஆனால் 1930-ஆம் ஆண்டில், இந்த ஏற்பாடுகள் மாற்றப்பட்டன; நிலத்தின் உடமை விவசாயிகளின் கைகளுக்குக் கடந்து சென்றது. விவசாயிகள் அதனைச் சுதந்திரமாக விற்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

மூன்றாவதாக, விவசாயப் புரட்சி காலக் கட்டத்தில், தடுத்தர அல்லது சிறு தொழில்களிலும் அல்லது வர்த்தக நிறுவனங்களிலும் ஈடுபட்டிருந்தவர்களை வென்றெடுப்பது அவசியமாக இருந்தது. 1929-ஆம் ஆண்டு ஜனவரியில் செஞ்சேனையின் பொதுத் தலைமைக் காரியாலத்தால் விடுக்கப்பட்ட ஒரு பிரகடனத்தில், ''தங்களுடைய சிறு சொத்துக்களை கவனமாகவும், மெதுவாகவும் சேர்த்து வைத்துள்ள நகரங்களிலுள்ள வியபாரிகள், அரசாங்கத்திற்கு கீழ்படிந்து நடக்கும்வரையிலும் விட்டு வைக்கப்படுவார்கள்'' என்றும், ''மற்றும் மிதமிஞ்சிய கட்டணங்கள், வரிகள் அனைத்தும் ரத்து செய்யப்படுமென்றும்'' அறிவிக்கப்பட்டிருந்தது. இத்தகைய மக்களின்பால், இது கட்சியின் பாதுகாப்பு கொடுக்கும் கொள்கையாக இருந்தது.

விவசாய சீர்த்திருத்தத்தில் ஏழை விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் ஆதாயமடைந்தார்கள். மக்கள் தொகையில் பெரும்பாலானவர்களாக இருந்த இப்பகுதியினருக்கு விவசாய

நிலம் கொடுக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து அவர்கள் அடிப்படையான பொருளாதார நலன்களைப் பெற்றார்கள். புரட்சிக்கு முன்பு வாங்கியிருந்த எல்லாக் கடன்களும் ரத்து செய்யப்பட்டன. ஆனால், பொருளாதார ஆதாயங்களைக் காட்டிலும் அரசியல் ஆதாயம் மிதமிஞ்சியதாக இருந்தது; ஏனெனில், இப்பொழுது அவர்கள் அரசியல் அதிகாரத்தை வென்றுப் பெற்றிருந்தார்கள்.

நிலத்தின் சமமான புனர் விநியோகம் நடுத்தர விவசாயிகளின் நலன்களுக்கு உகந்ததாக இருந்தது; இவர்கள் போதிய நிலம் இல்லாமலிருந்தார்கள்; இவர்களில் மிகப் பெரும்பாலோர் புனர் விநியயோகத்திற்குப் பிறகு அதிகமான நிலத்தைப் பெற்றார்கள். இவர்கள் அரசியல் ரீதியாகவும் ஆதாயம் அடைந்தார்கள்; ஏனெனில், ஏழை விவசாயிகளோடும், விவசாயத் தொழிலாளிகளோடும் ஒன்று சேர்ந்து அரசாங்கத்தில் பங்கெடுக்க அவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். மாவட்ட, நகரிய மட்டங்களில் ஸ்தல அரசாங்கங்களில் பணியாற்றிக் கொண்டிருந்தவர்களில் நடுத்தர விவசாயிகள் சுமார் 40 சதவீதம் பேர் இருந்தார்கள்.

புரட்சிக்குப் பின் நிறுவப்பட்டத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் அரசாங்கத்தின் மிக தாழ்வான மட்டமான நகரிய மட்டத்தில், பிரதான ஊழியர்கள் (Chief Cadres) ஏழை விவசாயிகளாகவும், விவசாயத் தொழிலாளிகளாகவும் இருந்தார்கள். மிகமிகப் புரட்சிகரமான ஏழை விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளிகளையும் மையமாகக் கொண்டு, உழைக்கும் மக்களின் ஓர் அரசாங்கமாக அது திகழ்ந்தது.

புரட்சித் தளங்கள் எதிரியின் இடைவிடாதச் சுற்றி வளைக்கப் படும் நிலையிலிருந்தமையால், ஒவ்வொரு நகரியமும் ராணுவ வழிமுறைகளில் அமைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு நகரியத்திலும். 8 முதல் 50 வயது வரையிலிருந்த ஒவ்வொருவரும், அவர்களது வயதுக்கு ஏற்ப, குழந்தைகளின் படைப் பிரிவிலும், இளம் பயோனியர்களிலும், அல்லது செங்காவலர் பிரிகவுளிலும் சேர்ந்திருந்தார்கள் அவர்களது கடமைகள், தங்களது வீடுகளைப் பாதுகாப்பதில் காவலர்களாகவும், காவற் போர் வீரர்களாகவும் சேவை செய்வதாகும். அதற்கு அவர்கள் அவசியமான ராணுவப் பயிற்சியையும், அரசியல் பயிற்சியையும் பெற்றார்கள்.

இத்தகைய வெகுஜன ராணுவ ஸ்தாபனங்கள், செஞ்சேனையின் பிரதான மூலாதாரங்களாகத் திகழ்ந்தன. இத்தகைய ஸ்தாபனங்களில், செஞ்சேனைத் தன்னைப் பலப்படுத்துவதற்கும்

விரிவுப்படுத்துவதற்கும் ஒரு அடித்தளத்தை நிறுவிற்று.

**6. செஞ்சேனையைக் கட்டுவதின் அடிப்படைக் கோட்பாடுகள். செஞ்சேனையின் யுத்த தந்திரம் மற்றும் போர் தந்திரம் ஆகியவற்றின் அடிப்படைக் கோட்பாடுகள் சியாங்காய்-ஷேக் பிற்போக்குக் கும்பலின் முதல் மூன்று சுற்றி வளைக்கும் இயக்கங்கள், சிவப்பு ஏரியாவில் நொறுக்கித் தள்ளப்பட்டன. சீனப் புரட்சியில் புதிய எழுச்சி.**

ஆயுதப் போராட்டத்தின் விளைவு, புரட்சி தளங்களை நிறுவுவதாக இருந்தது. ஆயுதப் போராட்டத்தில் வெற்றி இல்லாமல், புரட்சி தளங்களை கெட்டிப் படுத்துவதும் விரிவுப் படுத்துவதும் அல்லது விவசாயப் புரட்சியை ஊக்குவிப்பதும் சாத்தியமற்றதாக இருந்திருக்கும். சகல பழைய வகைப்பட்ட ராணுவங்களிலிருந்தும் வேறுபட்டதொரு மக்களின் புரட்சிபடை ஆயுதப் போராட்டத்தின் வெற்றிக்குத் தேவையாக இருந்தது; மேலும், இந்தப் படை சரியான யுத்தத் தந்திரம் மற்றும் போர்த் தந்திரத்தின் வழிகாட்டுதலின் கீழ் போராட வேண்டியிருந்தது. செஞ்சேனையைக் கட்டுவதின் அடிப்படைக் கோட்பாடுகளும், மற்றும் செஞ்சேனையின் யுத்தத் தந்திரங்களும், போர்த் தந்திரங்களும் இந்தக் காலக் கட்டத்தில் மா சே-துங்கினால் முறையாகவும், ஒழுங்கமைவுடனும் உருவாக்கிக் கொடுக்கப் பட்டன. இத்தகைய அடிப்படையான கோட்பாடுகளும், இதர ராணுவத் தத்துவங்களும் சேர்ந்து, மா சே-துங்கினால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ராணுவப் பாதையாக அமைந்தன.

முதலாவதாக, செஞ்சேனையை நிர்மாணிப்பதின் அடிப் படையான கோட்பாடுகள் என்ன?

செஞ்சேனை பாட்டாளி வர்கக சித்தாந்தத்தினால் வழிக் காட்டப்பட வேண்டும்; மக்களின் போராட்டத்திற்கு பயன்பட வேண்டும் மற்றும் தளங்களை நிர்மாணிப்பதில் உத்வி செய்ய வேண்டும். இதுதான் செஞ்சேனையைக் கட்டுவதை ஆட்க் கொண்டிருந்த அடிப்படையான தத்துவமாக இருந்தது.

இந்த அடிப்படையானக் கருத்திற்கு ஏற்ப, செஞ்சேனையின் மீது கட்சியின் தலைமை ஸ்தாபன ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், சித்தாந்த ரீதியாகவும் உறுதிப்படுத்தப்பட

வேண்டும். செஞ்சேனையின் பல்வேறு மட்டங்களில் கட்சி ஸ்தாபனங்களை ஏற்பாடு செய்வதினாலும், அரசியல் காமிசார்களின் முறையை நடைமுறைக்கு கொண்டு வருவதினாலும், செஞ்சேனையின் மீது கட்சி உறுதியானதொரு தலைமையைப் பிரயோகம் செய்யும்; மற்றும், கட்சியின் திட்டங்களையும் கொள்கைகளையும் தீர்மானமாக நிறைவேற்றுவதையும் அதற்கு சாத்தியமாக்கும்; அதே சமயத்தில், செஞ்சேனையின் அரசியல் வேலையின் ஒரு அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டு, பலப்படுத்த வேண்டியிருந்தது. அதனுடைய வேலைகள் செஞ்சேனைக்கு கட்சியின் திட்டங்களையும், கொள்கைகளையும் கற்றுக் கொடுப்பதும், செஞ்சேனையில் நிலவிக் கொண்டிருந்த பாட்டாளி வர்க்கத்திற்கு ஒவ்வாதக் கருத்துக்களை எதிர்த்துப் போராடுவதும், செஞ்சேனையினுடைய மார்க்சிய-லெனினிய சித்தாந்த உணர்வின் தரத்தை உயர்த்துவதும் அதனுடைய போராடும் சக்தியினை உயர்த்துவதுமாகும்

மேலும், இக்கருத்திற்கு ஏற்ப, புரட்சி யுத்தத்தை நிறைவேற்றுவதில் விவசாயிகளை நம்பி நிற்க வேண்டும். விவசாயிகளை அதனுடைய முதுகெலுப்பாகக் கொண்ட ஒரு சேனை அமைக்கப்பட வேண்டும்; மற்றும், விரிவான வெகுஜன யுத்தத்தை நடத்துவதற்கு கிராமப்புற மாவட்டங்களில் புரட்சித் தளங்கள் நிறுவப்படவும் வேண்டும். ஆகவே, செஞ்சேனையின் வேலை எதிர்த்துப் போராடுவதோடு மட்டும் நின்று விடுவதல்ல. மக்களிடம் கிளர்ச்சிப் பிரச்சாரம் செய்வது அவர்களை ஸ்தாபன ரீதியாகத் திரட்டுவது, அவர்களை ஆயுதபாணியாக்குவது, புரட்சிகரமான அரசாங்கத்தை நிறுவுவதற்கும் கட்சியைக் கட்டுவதற்கும் அவர்களுக்கு உதவி செய்வது போன்ற இப்படிப்பட்ட கடமைகளையும் அது மேற்கொள்ளவேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, நிதிகளைச் சேர்க்கும் வேலையை மேற்கொள்ள வேண்டும். போராடுவது, மக்களிடையே வேலை செய்வது மற்றும் நிதி சேர்ப்பது — செஞ்சேனையின் இத்தகைய மூன்று கடமைகளும், பிரிக்க முடியதொரு அம்சமாக அமைந்திருக்கின்றன.

மேலும், ராணுவ உறுப்புகளுக்கும் அரசியல் உறுப்புகளுக்கும் இடையேயும், ராணுவத்திற்கும் மக்களுக்குமிடையேயும், மற்றும் அதிகாரிகளுக்கும், ஜவான்களுக்குமிடையேயும் சரியான உறவுகள் நிலை நாட்டப்பட்டிருப்பதையும் செஞ்சேனை பார்த்துக் கொள்ள வேண்டும். எதிரியைச் சீர்குலைப்பதற்காகவும்,

யுத்தக் கைதிகளை வென்றெடுப்பதற்காகவும் சரியானதொரு கொள்கையை அது பெற்றிருக்க வேண்டும்.

செஞ்சேனையைக் கட்டுவதற்கான தோழர் மா சே-துங்கின் அடிப்படையானத் தத்துவமும், அதிலிருந்து வளர்ந்து வந்த கோட்பாடுகளின் முழுமையான அமைப்பும் செஞ்சேனையை வெல்ல முடியாததொரு படையாகச் செய்தது; மற்றும் இதர எல்லாச் சேனைகளிலிருந்தும் வேறுபட்டதொரு புரட்சிகரமான சேனையாகவும் செய்தது.

அடுத்து, செஞ்சேனையின் யுத்த தந்திரம் மற்றும் போர்த் தந்திரங்கள் ஆகியவற்றின் அடிப்படையான கோட்பாடுகள் எவை?

சீனப் புரட்சி யுத்தத்தின் பின்வரும் நான்கு குணாம்சங்களை மாசே-துங் தெளிவுபடுத்தினார். (1) சீனா, அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சீரற்ற முறையில் அபிவிருத்தி அடைந்திருந்த பரந்த ஓர் அரை காலனி நாடு; மற்றும். அப்பொழுதுதான் ஒரு புரட்சியின் வழியாகச் சென்றிருந்த ஒரு அரைக்காலனி நாடு; (2) எதிரியின் அதிகமான பலம்; (3) செஞ்சேனையின் பலவீனமும், சிறிய அளவும் (Smael Slze); (4) கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையையும், விவசாயப் புரட்சியும். இத்தகைய குணாம்சங்கள், ஒரு புறத்தில், செஞ்சேனை வளர்ந்து அதனுடைய எதிரியை முறியடிக்கும் சாத்தியப்பாட்டினைத் தீர்மானித்தது; மறுபுறத்தில், செஞ்சேனை வேகமாக வளர்வதின் அல்லது அதனுடைய எதிரியை சீக்கிரமாக முறியடிப்பதின் சாத்தியமற்ற தன்மையையும் நிர்ணயித்தது. உண்மையில், விஷயங்களைத் தவறாகக் கையாளும்பொழுது, தோல்வி ஏற்படும் சாத்தியப்பாட்டினையும் அவை சுட்டிக் காட்டின. இத்தகைய குணாம்சங்களிலிருந்து வெளிவந்த அடிப்பவடயான யுத்ததந்திர மற்றும் போர்த்தந்திர கோட்பாடுகளில் பின்வரும் விஷயங்களும் அடங்கும். ஒரு மக்கள் யுத்தத்தை நடத்துவதற்கு வெகுஜனங்களை நம்பி இருப்பது, போராடுவதின் பிரதான வடிவங்களாக, கொரில்லா யுத்த முறையையும் "கொரில்லா தன்மை வாய்ந்த இயக்கத்திலுள்ள யுத்த முறை"யையும் (Mobile warefare) கையாளுவது யுத்த தந்திர ரீதியாக நீடித்த ஒரு யுத்தத்தையும், சீக்கிரமாக முடிவு செய்யும் தனித்தனி போராட்டங்களையும் நடத்துவதற்கு செஞ்சேனைக்குள்ள அவசியம், யுத்த தந்திர ரீதியாக கொஞ்சம் பேரை வைத்துக் கொண்டு பலரை முறியடிப்பதும் ஆனால்

தனியான இயக்கங்களில் கொஞ்சம் பேரை, பலரை வைத்துக் கொண்டு முறியடிப்பதும் ஆகும்.

மேலே சுட்டிக் காட்டப்பட்டிருப்பது போல், எதிரியினுடைய படை பலமானதாகவும் பெரியதாகவும் இருந்தது. ஆனால், வெகு ஜனங்களிடமிருந்த அந்நியமாகி இருந்தது. அதே சமயத்தில் செஞ்சேனை பலவீனமாகவும், சிறியதாகவும் இருந்தது. ஆனால் வெகுஜனங்களோடு நெருக்கமான தொடர்பில் இருந்தது இத்தகைய நிலைமைகளின் கீழ், எதிரியினுடைய பலவீனங்களையும் அதனுடைய சொந்த வசதிகளையும் செஞ்சேனை முழுமையாகப் பயன்படுத்தாமலிருந்தால், நீடிப்பதும் வெற்றி பெறுவதும், மேலும் வளர்ச்சி அடைவதும் கேள்விக்கு அப்பாற்பட்டதாக இருக்கும். ஆகவே, அதனுடைய மிகவும் பலமான எதிரியை வெற்றிக்கு கொள்வதற்கு, செஞ்சேனை ஒரு மக்கள் யுத்தத்தை நடத்த வேண்டும்; அந்த யுத்தத்தில் பிரதானப் படைகள் ஸ்தல படைப் பிரிவுகளோடு (Local Units) ஒருங்கிணைக்கப் பட்டிருக்க வேண்டும்; முறையான ராணுவம் (Regular army) கொரில்லாப் படைகளோடும், ஆயுதமேந்திய ஊர்க் காவல் படைகளோடும் (Militia Contingents) மற்றும் ஆயுதமேந்தியவர்கள், ஆயுதம் ஏந்தாமலிருக்கும் வெகு ஜனங்களோடு ஒருங்கிணைக்கப் பட்டிருக்க வேண்டும்.

கொரில்லாப் போராட்ட முறையையும், "கொரில்லாத் தன்மை வாய்ந்த இயக்கத்திலுள்ள யுத்த முறை"யையும் பிரதானப் போராடும் வடிவங்களாக அனுஷ்டிப்பது செஞ்சேனைக்கு அவசியமாக இருந்தது. ராணுவ விஞ்ஞானத்திற்கு தோழர் மா சே - துங்கினால் செலுத்தப்பட்ட மிகப் பெரியப் பங்குகளில் ஒன்று, ஒரு யுத்தத் தந்திர மட்டத்தில் கொரில்லா யுத்த முறையைப் பற்றி அவரது விளக்கிக் கூறலில் திட்ட வட்டமாக அடங்கியுள்ளது. அவர் பின்வருமாறு சொன்னார்:

கொரில்லா யுத்த முறை என்றால் என்ன?

ஒரு பின் தங்கிய நாட்டில, ஒரு பெரிய அரைக்காலனி நாட்டில், நீண்டதொரு காலக் கட்டத்திற்கு அது தவிர்க்க முடியாததாக உள்ளது; ஆகவே, ஆயுத மேந்தியுள்ள எதிரியை வெற்றிக் கொள்வதற்கும், அவர்களுக்கே உரித்தான தளங்களை உண்டாக்குவதற்கும், மக்களின் ஆயுத மேந்திய படைகளுக்கு மிகமிகச் சிறப்பான போராட்ட உருவமாகவும் அது உள்ளது.[6]

கொரில்லா யுத்த முறையை, அதனுடைய அதிகபட்ச வரம்பிற்கு விஸ்தரிப்பது சரியான கொள்கையாக இருந்தது; பிறகு

திட்டவட்டமான நிலைமைகளின் கீழும், பலம் வளர்ந்திருப்பதைப் பொறுத்தும் கெரில்லா யுத்த முறையை முறையான யுத்த முறையாக (Regular Warfare) மாற்றுவதும் சரியானக் கொள்கையாக இருந்தது. இரண்டாவதுப் புரட்சிகர உள் நாட்டு யுத்தக் கால கட்டம் கொரில்லா யுத்த முறை, முறையான யுத்த முறையை நோக்கிப் படிப்படியாக அபிவிருத்தி அடைந்துக் கொண்டிருந்ததை ஏற்கனவேப் பார்த்தது. ஆனால் ஒட்டு மொத்தமாக, செஞ்சேனை அந்த சமயத்தில் இன்னும் ஒரு கொரில்லாத் தன்மை வாய்ந்த இயக்கத்திலிருந்த (Mobile) யுத்தத்தைத் தான் நடத்திக் கொண்டிருந்தது.

வலிமையின் விஷயத்தில் செஞ்சேனை எதிரிக்கு குறைவானதாக இருந்தமையால், சீக்கிரமானதொரு வெற்றியைப் பற்றி சிந்திக்க முடியாததாக இருந்தது. ஆகவே, நீடித்த யுத்த முறையான ஒரு யுத்தத் தந்திரக் கொள்கையை பின்பற்ற வேண்டியது அவசியமாக இருந்தது; மற்றும் வலிமையின் சாதகமற்ற நிலையில் ஒரு மாற்றத்தைப் படிப்படியாக கொண்டு வருவதும் அவசியமாக இருந்தது. எனினும், நடவடிக்கை திசை வழியின் கோட்பாடும், போர்த் தந்திரக் கோட்பாடும் எதிரிடையானதாக — பாதுகாப்பு அல்ல, ஆனால் சீக்கிரமான முடிவு — இருந்தது. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. முதலாவதாக, ஆயுதங்களை, சிறப்பாக வெடிகுண்டு முதலியவற்றை புதுப்பிப்பதற்கு செஞ்சேனையிடம் எந்தவிதமான மூலாதாரமும் கிடையாது. இரண்டாவதாக, எதிரிப் பெரும் எண்ணிக்கையில் தனியானப் படைப் பிரிவுகளைப் பெற்றிருந்தான். அவற்றில் ஒன்றினை எதிர்த்துப் போராடும் பொழுது செஞ்சேனை சீக்கிரமாக வெற்றிப் பெறுவதில் தவறி விடுமேயானால், தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கும் ஒருப் படைப்பிரிவை மீட்பதற்கு இதரப் படைப் பிரிவுகள் ஒன்று சேர்ந்து வரும். மூன்றாவதாக, ஒரு ''சுற்றி வளைக்கும் இயக்கத்தை'' நொறுக்கித் தள்ளியப்பிறகு, செஞ்சேனை இதர தொடர்ச்சியான இடைவிடாத நடவடிக்கைகளுக்குத் தன்னை வேகமாகத் தயார் செய்ய வேண்டியிருந்தது. இத்தகையக் காரணங்களும், இதரக் காரணங்களும் ஒரு இயக்கத்தில் சீக்கிரமான முடிவு எடுக்க வேண்டிய அவசியத்தை நிர்ணயம் செய்தன. நீண்ட காலம் இழுத்தடிக்கும் போராட்டங்கள் செஞ்சேனையின் நலனுக்கு எதிராக வேலை செய்யும். யுத்தத் தந்திர ரீதியாக பலரைச் சிலரால் முறியடிப்பதும், போர்த் தந்திர ரீதியாக சிலரைப்

பலரால் முறியடிப்பதும், வெற்றிப் பெறும் பொருட்டும், அத னுடைய சொந்தப் பலத்தைப் பாதுகாத்து வைத்திருக்கும் பொருட்டும் மற்றும் நிகழ்ச்சிப் போக்கில் தீர்மானதொரு வெற்றியைப் பெறும் பொருட்டும் ஒவ்வொருப் போராட்டத் திலும் பூரணமான எண்ணிக்கை ரீதியாக (numerical) மேலாதிக் கத்தைப் பெற்றிருக்கும் வகையில் அதனுடைய படைகளைக் குவிக்கும்படி இது (அதாவது, மேற்கூறிய கோட்பாடு—மொழிப் பெயர்பாளர்) செஞ்சேனையைத் தேவைப்படுத்திற்று.

சீனப் புரட்சி யுத்தத்தின் இத்தகைய குணாம்சங்களைக் கண்டுப் பிடித்தவரும், அவற்றிலிருந்து ஆரம்பித்து, புரட்சி யுத்தத்திற்கான யுத்தத் தந்திரத்தையும், போர்த் தந்திரங்களை யும் வகுத்தவரும் தோழர் மாசே - துங் தான்.

இத்தகைய சரியான யுத்தத் தந்திர மற்றும், போர்த் தந்திர கோட்பாடுகள் போராட்டங்களின் போக்கில் படிப்படியாக வடி வம் பெற்றன. சிங்காங் மலைகளில் நடைபெற்ற போராட்டத் தின்பொழுது, கொரில்லா யுத்தமுறையின் யுத்தத் தந்திர மற்றும் போர் தந்திரங்கள் சம்பந்தமாக, "மக்களைத் தட்டி எழுப்பு வதற்கு, வெகு ஜனங்களிடையேப் படைகளைச் சிதறடியுங்கள், மற்றும், எதிரியைச் சமாளிப்பதற்குப் படைகளைக் குவியுங்கள்", மற்றும், "எதிரி முன்னேறுகிற பொழுது, நாம் பின் வாங்கு கிறோம்; எதிரி நிற்கிற பொழுது, நாம் துன்புறுத்துகிறோம்; எதிரி களைப்படைகிற பொழுது, நாம் தாக்குகிறோம்; எதிரி பின் வாங்கும்பொழுது, நாம் துரத்துகிறோம்" போன்ற இப்படிப்பட்ட எண்ணற்ற நன்கு பிரசித்திப் பெற்ற கோட்பாடு களை தோழர் மாசே-துங் ஏற்கனவே உருவாக்கி இருந்தார். முன்னால் சொல்லப்பட்டக் கோட்பாடு, சிறிய தளப் பிரதேசங் களிலிருந்து ஒரு கொரில்லா யுத்தத்தை நடத்தும் சிறு படைப் பிரிவுகளாகப் பின்பற்றப்பட வேண்டிய ஒரு கோட்பாடாகும். அதனுடைய அழுத்தம் "முழுமையைப் பகுதிகளாக உடைக்கும்" முறையின் மீதும் மற்றும், "பகுதிகளை முழுமைக்குள் சேர்க்கும்" முறையின் மீதும் உள்ளது. பின்னால் கூறப்பட்டக் கோட்பாடு யுத்தத் தந்திர ரீதியான தற்காப்பையும் (Strategic Defnsrive) மற்றும், யுத்தத் தந்திர ரீதியான முன்னேறித் தாக்குதலையும் (Strategic Offensive) கொண்ட இரு உப கட்டங்களை உள்ளடக்கியுள்ளது; மேலும், தற்காப்பில் யுத்தத் தந்திர ரீதியான பின் வாங்குதவலயும், மற்றும், யுத்தத் தந்திர ரீதியான எதிர் முன்னேறித் தாக்குதலையும் (Counter Offensive) கொண்ட

இரண்டு உபகட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது. இவை காலத்தின் நிலைமைகளை ஒட்டிய எளிய அடிப்படையான கோட்பாடுகளாக இருந்தன; செஞ்சேனையின் கொரில்லா யுத்தமுறை சம்பந்தப்பட்ட இக்கோட்பாடுகள் அறிவிக்கப்பட்டிருந்தன. சிறு கொரில்லாப் படை யூனிட்களில் இருந்து பெரிய கொரிலாப் படைப் பிரிவுகளாக செஞ்சேனை வளர்ச்சி அடைந்ததினாலும், மற்றும், கியாங்சி மத்திய பிரதேசத்தினால் துவக்கப்பட்ட எதிர் சுற்றி வளைப்பு இயக்கங்களின் (Counter Encirclement Campaigns) காலக் கட்டத்தில் அடித்தளப் பிரதேசங்களின் விரிவுப் படுத்தலினாலும், கெட்டிப் பட்டமையாலும், இதர அடிப்படையான கோட்பாடுகள் முன்னுக்குக் கொண்டு வரப்பட்டன: "எதிரியை ஆழமாக ஊடுருவச் செய்வதற்கு ஆசை காட்டுவது," படைகளைக் குவித்தல், இயங்கிக் கொண்டிருக்கும் யுத்த முறை, சீக்கிரமாக முடிவு செய்யப்படும். யுத்தம், மற்றும் ஒழித்துக் கட்டும் யுத்தம் (War Of Annihilation) போன்ற இப்படிப்பட்ட அடிப்படையான கோட்பாடுகள் முன்னுக்கு கொண்டு வரப்பட்டன.

முதலாவதாக, எதிரியை ஆழமாக ஊடுருவச் செய்வதற்கு ஆசை காட்டுதல் அல்லது யுத்தத் தந்திரத் ரீதியான பின் வாங்குதல் மேலானதொரு எதிரியின் படைக்கு முன்னால், தாழ்வான நிலையிலுள்ள ஒரு படையை கையாளும் திட்டமிட்டதொரு யுத்த தந்திர நடவடிக்கையாக இது இருந்தது; தாழ்வான நிலையிலுள்ளதொரு படை அதனுடைய சொந்த பலத்தை சேமித்து வைக்கும் நோக்குடனும், மற்றும். எதிர்த் தாக்குதலால் எதிரியை முறியடிப்பதற்கு பொருத்தமானதொரு நேரத்திற்காக காத்துக் கொண்டிருக்கும் நோக்கத்தோடும் கையாளக் கூடியதொரு திட்டமிட்ட யுத்தத் தந்திர நடவடிக்கையாகவும் இது இருந்தது. இன்னும் மிக அதிக விளக்கமாக சொல்ல வேண்டுமென்றால், எதிர்-எதிர் முன்னேறித் தாக்குதல், பின்வரும் நிபந்தனைகளைப் பெற்றிருக்காமல் துவக்கவே கூடாது: வெகு ஜனங்கள் மிகமிக அதிகமாக அல்லது, ஒப்புநோக்கிப் பார்க்கும்பொழுது மிக அதிகமாக ஒத்துழைக்கக் கூடிய ஒரு பிரதேசம்; நடவடிக்கைகளுக்கு சாதகமானதொரு இடைவெளி மற்றும் எதிரியினுடைய பலஹீனமான இடங்களைக் கண்டுப் பிடித்தல்.

இரண்டாவதாக, படைகளைக் குவித்தல். முன்னேறுவதற்கான ஒரு நிலைமையையும், பின்வாங்குவதற்கான ஒரு நிலையையும் மாற்றுவதற்காகவும், மற்றும், எதிரிக்கும் மக்கள்

படைகளுக்கும் இடையே நடைபெறும் முன்னேறித் தாக்கு தின்மையும், தற்பாதுகாப்பையும் மாற்றுவதற்கும் இது அவசிய மாக இருந்தது; அப்படி செய்வதன் மூலம் முன்கை எடுத்துள்ள யுத்தத் தந்திர ரீதியாக மேலான நிலையிலுள்ள ஒரு எதிரியை போர்த் தந்திர ரீதியாக கீழானதொரு நிலைக்கும், செயலற்ற நிலைக்கும் குறுக்கிவிட முடியும். இயல்பாகவே, சகலப் படை களும் குவிக்கப்படுவதில்லை. ஏனெனில், படைக் குவிப்பின் குறிக் கோளே, போர்க் களத்தில் நடவடிக்கைகளுக்கான பூரணமாக மேலாதிக்கத் தன்மையை, அல்லது ஒப்பு நோக்கிப் பார்க்கும் மேலாதிக்கத் தன்மையை உத்திரவாதம் செய்வதாகும்; எனவே, எதிரியை குறிப்பிட்ட இடத்திற்குள் நிறுத்தி வைக்கச் செய் வதிலும் அல்லது துணை இயக்கங்களிலும் மக்கள் படைகளின் ஒரு பிரிவை பயன் படுத்த வேண்டியது அவசியமாகவும் இருந்தது.

மூன்றாவதாக, செஞ்சேனையின் நடவடிக்கைகள் 'இயங்கிக் கொண்டே இருக்கும் யுத்த முறை'யினால் குணாம்சப் படுத்தப் பட்டிருந்தன. நிலைக் கொண்டிருக்கும் யுத்த முறையினால் குணாம்சப் படுத்தப் பட்டிருக்கவில்லை. இதற்குக் காரணம் என்னவென்றால், சிவப்புப் பிரதேசம் பரப்பளவில் மிகவும் சிறியதாக இருந்தது. செஞ்சேனை எண்ணிக்கையிலும், தள வாடங்களிலும் எதிரிக்கு மிகவும் கீழ்ப்பட்ட நிலையிலிருந்தது; மற்றும், ஒவ்வொரு அடித்தளப் பிரதேசத்திலும், சகலப் போராட்டத்தையும் செஞ்சேனையின் ஒரு தனியொருப் படைப் பிரிவு மட்டுமே செய்ய வேண்டியிருந்தது. ஆகவே, நிலை கொண்டு இருக்கும் யுத்த முறை செஞ்சேனைக்கு அடிப்படையி லேயே பயனற்றதாக இருந்தது; எனினும், அதனை முற்றிலும் தவிர்த்துவிட முடியாது. எதிரியை ஒரு இடத்திற்குள் நிலை நிறுத்த வேண்டிய நடவடிக்கையில் சில கேந்திரமான நிலை களைப் பிடிவாதமாக பாதுகாத்து நிற்க வேண்டி இருக் கும். ஒரு யுத்தத் தந்திர தற்காப்பு போராட்டத்திலும், மற்றும், தனிமைப் படுத்தப்பட்டிருக்கும் எதிரியின் படையை எதிர் நோக்கியிருக்கும் ஒரு யுத்தத் தந்திர முன்னேறித் தாக்கும் போராட்டத்திலும், நிலைப் பெற்றிருக்கும் யுத்த முறை நிச்சய மாக அவசியமானதாகவும் சாத்தியமானதாகவும் இருந்தது.

நான்காவதாக, சீக்கிரமாக முடிவெடுக்கும் கொள்கை. இக் கொள்கைத் தனித்தனியான போராட்டங்கள் நடக்கும் பொழுது பின்பற்றப்பட வேண்டி இருந்தது. ஒவ்வொருப் போராட்டமும்

ஒரு சில மணிகளில் அல்லது, ஒன்றிரண்டு நாட்களில் முடிக்கப் படவேண்டும். ''எதிரியினுடைய பலப்படுத்தும் அம்சங்களைத் தாக்குவதற்கு எதிரியை முற்றுகையிடுதல்'' என்று அறியப் பட்டிருக்கும் போர்த் தந்திரத்தில் முற்றுகையிடும் நடவடிக்கைகள் ஒரு குறிப்பிட்ட அளவு நீடித்து நடத்துவதற்கு தயாரிக்க வேண்டியது அவசியமாக இருந்தது; ஆனால், இந்த சாகஸத்தின் குறிக்கோள் முற்றுகைபிடப் பட்டிருக்கும் எதிரியை முறியடிப்ப தல்ல. ஆனால், எதிரியைப் பலப்படுத்துவதற்கு செய்யப்படும் எல்லா முயற்சிகளையும் முறியடிப்பதாகும்; மேலும், இந்த முயற்சியோடு சீக்கிரமானதொரு முடிவை எடுக்க வேண்டியது இன்னும் அவசியமாக இருந்தது.

ஐந்தாவதாக, செஞ்சேனை அதனுடைய எல்லா சப்ளைகளையும் எதிரியிடமிருந்து நடைமுறையில் பெற்று வந்தமையால், நிர்மூலமாக்குதல் அவசியமானதாக இருந்தது. எதிரியின் மனித சக்தியை நிர்மூலம் செய்வதனால் மட்டுமே செஞ்சேனை தன்னைப் புதுப்பித்துத் கொள்ள முடியும்.

இவை செஞ்சேனையின் ராணுவக் கோட்பாடுகளில் புதியதொரு முன்னேற்றமாக அமைந்தன. உள்ளடக்கத்தில் செழுமையானதாகவும் உருவத்தில் அபிவிருத்தி அடைந்தவையாகவும் அமைந்தன. ஆனல், சாராம்சத்தில் சிங்காங் மலைகள் போராட்டம் நடைபெற்ற சமயத்தில் உருவாக்கப்பட்ட அதே கோட்பாடுகளாகவே இருந்தன.

நான்கு எதிர்-சுற்றி வளைத்தல் இயக்கங்கள் நடைபெற்ற சமயத்தில் செஞ்சேனையினால் எய்தப்பட்ட வெற்றிகள், தோழர் மாசே-துங்கினால் உருவாக்கப்பட்ட யுத்த தந்திரம் மற்றும் போர்த் தந்திரங்கள் பற்றிய இத்தகைய வழிகாட்டும் கோட்பாடுகள்தான், செஞ்சேனை, போராட்டம் நடத்திக் கொண்டிருந்த யதார்த்தமான நிலைமைகளுக்கு சரியாகப் பொருந்தக் கூடிய ஒரே கோட்பாடுகளாக இருந்தன என்பதை முழுமையாக நிரூபித்தன.

முதல் சுற்றி வளைப்பு இயக்கம் 1930-ஆம் ஆண்டு மழை காலத்தில் நடைபெற்றது; ஒரு புறத்தில் சியாங்காய்-ஷேக்கிற்கும்,மறுபுறத்தில் யென்ஷி-ஷான் மற்றும் பெங்யு-ஷியாங் ஆகியோருக்குமிடையே நடைபெற்ற யுத்தம் முடிந்த பிறகு இந்த இயக்கம் நடைபெற்றது. அந்த சமயத்தில், செஞ்சேனை பல்வேறு அளவுகளைக் கொண்ட புரட்சிகரமான பல அடித்தள ஏரியாக்களை நிறுவி இருந்தது. மக்கள் ஆயுதப் படைகளின் இந்த

வளர்ச்சியினாலும், மக்கள் ஆட்சியின் இந்த வளர்ச்சியினாலும் அலறிப் போயிருந்த சியாங்காய்-ஷேக் மத்திய சிவப்பு ஏரியாவைத் தாக்குவதற்கு 1,00,000 பேர் கொண்டதொரு ஒரு படையை அனுப்பினான்.

லுடி-பிங்கை பிரதம தளபதியாகக் கொண்ட எதிர்ப்படைகள் கியாங்சியில் சியானுக்கும், ஃபுக்கியனில் சியனிங்குக்கு இடையிலும்இருந்த கோட்டிற்கு கீழே தெற்கு நோக்கு முன்னேறின. செஞ்சேனை அப்பொழுது 40,000 பேரைக் கொண்டதாக இருந்தது; மற்றும் கியாங்சியில் நிங்கு மாவட்டத்தில் குவிந்தும் கிடந்தது

பொதுவான நிலைமை மிகவும் அபாயகரமானதாக இருக்கவில்லை; ஏனெனில், எதிரியின் எந்தப் படை டிவிஷன்களும் கியாங்சின் சொந்தப் படைகளாக இருக்கவில்லை. சாங்ஹியு-சான் (அந்த சமயத்தில் போர்க்கள தளபதி) மற்றும், டான்டாவோ-யுவான் ஆகியோரின் கீழிருந்த இரண்டு டிவிஷன்கள் "சுற்றி வளைக்கும் சேனையின்" பிரதானப் படைகளாக அமைந்திருந்தன. அவை முறையே லங்காங் மற்றும் யுவான்போவ் ஆகிய இடங்களில் முகாம் போட்டிருந்தன. செஞ்சேனைக் குவிந்து கிடந்த இடத்திற்கு லங்காங்—யுவான் போவ் பிரதேசம் நெருக்கமாக இருந்தது. மிகமிகப் பெரிய எண்ணிக்கையிலான செம்படைகள் லுங்காங்கில் குவிக்கப்பட்டிருந்தனர். ஏனெனில், அங்கிருந்த மக்கள் புரட்சியின்பால் சாதமாக இருந்தார்கள்; மற்றும் துணை நிலமும் ராணுவ நடவடிக்கைகளுக்கு நல்லதாக இருந்தது.

எதிர் தாக்குதல் 1930 டிசம்பர் 27ஆம் தேதி அன்று ஆரம்பமாயிற்று. தன் சக்தி முழுவதையும் குவித்து, செஞ்சேனை தொடுத்த ஒரு திடீர் தாக்குதலில் சாங்கின் படைகள் முற்றிலும் அழித்தொழிக்கப் பட்டன. டானுடைய படைகள் தொடர்ந்து துரத்தப்பட்டன. 1931 ஜனவரி 1ஆம் தேதி அன்று எதிர் தாக்குதல் ஒரு முடிவுக்கு வந்தது, எதிரியினுடைய ஒன்றரை டிவிஷன் செயலற்றதாக்கப் பட்டது. சாங்ஹியு-சான் கைது செய்யப்பட்டான். முதல் சுற்றி வளைக்கும் இயக்கம் இந்த முறையில் ஒரு முடிவுக்கு வந்தது.

1931 ஏப்ரலில், மத்திய ஏரியாவுக்கு எதிராக 2,00,000 பேரைக் கொண்ட மற்றொரு படையை சியாங்காய்-ஷேக் அனுப்பினான். ஹோயிங் - சின்னைத் தளபதியாகக் கொண்ட எதிர்ப்படை "ஒவ்வொரு அடியிலும் பலப்படுத்தும்" யுத்த

தந்திரத்தைக் கையாண்டது; மற்றும், சியானிலிருந்து சியன்னிங் வரையிலும் விஸ்தலத்திலிருந்த 400 கிலோ மீட்டர் போர் அரங்கத்தையும் நிர்மாணித்தது.

முதல் இயக்கத்திலிருந்ததைப் போலவே படையில் எதுவுமே சியாங்கின் சொந்தப் படைகள் (Persanal Troops) அல்ல. முப்பதினாயிரம் பேரைக் கொண்ட செஞ்சேனை முற்றுகையிட்டுக் கொண்டிருக்கும் படைகளின், அதாவது, வாங்கின்—யுவின் படைகளின் பலவீனமான இடத்தில் தாக்குவதற்கு முடிவு செய்தது. பூட்டியன் பகுதியை வாங்விட்டுச் செல்லும் வரையிலும் காத்திருந்து. பிறகு அவனது படைகள் நகர்ந்து செல்லும் பொழுது அவனது படைகளை ஒழிப்பது என்பது திட்டம்.

இயக்கம் 1931 மே மாதம் 16ம் தேதி ஆரம்பமாயிற்று. வாங்சின்—யு பூட்டியனிலிருந்தி டுங்குவுக்கு அணி வகுத்துப் போய்க் கொண்டிருந்த சமயத்தில், செஞ்சேனை அவன் மீது பயங்கரமானதொரு தாக்குதலைத் தொடுத்தது. போராட்டம் வென்றது. செஞ்சேனை பூட்டியனிலிருந்து புறப்பட்டுச் சென்று எதிரியின் இதர படைகளையும் வெற்றிகரமாகத் தாக்கி அவற்றை கியாங்சி-பூக்கியன் எல்லையில் சீய்யனிங்- டைனிங் பகுதி வரைக்கும் நெருக்கித் தள்ளி விட்டது. 1931ம் ஆண்டு மே 16ஆம் தேதியிலிருந்து மே 30தேதி வரையிலும், 15 நாட்கள் நடைபெற்ற இயக்கத்தில், செஞ்சேனை 350 கிலோ மீட்டர் தூரத்தை நடந்தே கடந்து சென்றது; ஐந்து போராட்டங்களை நடத்திற்று; 400 கிலோ மீட்டர் போர் அரங்கத்தை நொறுக்கித் தள்ளி, 30,000 பேருக்கும் அதிகமான எதிரிப் படைகளை துரத்தி அடித்தது. இந்த முறையில், இராண்டவது சுற்றி வளைத்தல் சுக்குநூறாக உடைத்தெறியப்பட்டது.

1931 ஜூலையில், செஞ்சேனையை சுற்றி வளைப்பதற்கு மூன்றாவது ஒரு முயற்சியையும் சியாங்கை - ஷேக் செய்தான். இந்த இயக்கத்தில் ஈடுபடுத்தப்பட்ட எதிரிப் படைகளின் எண்ணிக்கை மூன்று லட்சம் பேராகும். மாபெரும் தளபதியாக இந்த இயக்கத்திற்கு சியாங்கை - ஷேக்கே இருந்தான். ஹோயின் சின், சென்மின் - ஷி மற்றும் கஷாவோ - லியாங் ஆகிய மூன்று பேரின் தலைமையின் கீழ் மூன்று படைப் பிரிவுகள் மத்திய சிவப்பு ஏரியாவிற்குள் ஊடுருவினார்கள். இதில் மொத்தம் ஒரு லட்சம் பேரைக் கொண்ட பிரதான படைகள் சியாங்கின் சொந்தப் படைகளாகும். இவர்களுக்கு அடுத்தபடியாக சென்மிங்ஷீவின்

படைகள் இருந்தன. இதர எல்லாப் படைகளும் சம்பந்தப் படுத்திப் பார்க்கும்பொழுது பலஹீனமாக இருந்தது.

கான்நதிக்கு எதிராக பின் பக்கமாக செஞ்சேனையைத் தள்ளி, அதனை அங்கே நிர்மூலமாக்க முடியும் என்று நம்பிக் கொண்டு, அதில் நேரடியாகச் சென்று தாக்கும் ஒரு யுத்தத் தந்திரத்தை கையாண்டான். அதிகக் கடினமான போராட்டத் திற்குப் பிறகு, ஒரு நொடிப்பொழுது ஓய்வுக்காகவும், தளவாடங் களைச் சேர்ப்பதற்காகவும் காத்திராமல், செஞ்சேனை சீயன்னிங் கில் ஒரு சுற்று வழியாகச் சென்று மீண்டும் கிஸிங்கிகுவாவோவில் மீண்டும் கூடிற்று; இன்னும் அது எதிரியின் பிரதான படைகளை தவிர்க்கும் கொள்கையையும், எதிரியை அதனுடைய பலஹீன மான இடங்களில் தாக்கும் கொள்கையையும் பின்பற்றிக் கொண்டிருந்தது.

எதிரியைத் துன்புறுத்துவதற்கு அடித்தள ஏரியாக்களின் சாதகமான நிலைமைகளை செஞ்சேனையினால் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டன. ஆகஸ்ட் ஆரம்பத்தில். எதிரியின் பிரதான படைகளிடமிருந்து தெளிவாக விலகிச் சென்ற பிறகு செஞ்சேனை லியன்டாங்கிற்கு திசைமாறிச் சென்று, மூன்று வெற்றிகரமான போராட்டங்களை நடத்திற்று. எதிரிக்கு 30,000 பேருக்கும் அதிகமாக நஷ்டமேற்பட்டது.

அந்த சமயத்தில், மேற்கு நோக்கியும், தெற்கு நோக்கியும் முன்னேறிக் கொண்டிருந்த எதிரியின் பிரதான படைகள் அனைத்தும் பெரியதொரு, இறுக்கமான சுற்றி வளைத்தலுக்காக கிழக்கு நோக்கி திசை திரும்பிச் சென்றது; ஆனால், செஞ்சேனை மீண்டும் ஒருமுறை அவர்களுக்கு 'டிமிக்கி' கொடுத்து ஓய்வெடுப் பதற்காக சிங்குவாவோ எல்லைக்குள் மீண்டும் கூடிற்று. அந்த சமயத்தில் எதிரிப்படைகள் ஏற்கனவேப் பட்டினியாகவும், களைப்படைந்தும் தெம்பற்றும் இருந்தார்கள். பின்வாங்கி செல்வதைத் தவிர அவர்களால் எதுவும் செய்ய முடியாது. அவர்கள் பின்வாங்கிச் செல்லும்பொழுது, செஞ்சேனையினால் அவர்கள் சக்தி வாய்ந்த முறையில் பின் தொடரப்பட்டு தாக்கப் பட்டார்கள். செப்டம்பரில், அதற்கு முந்திய சுற்றி வளைத்தல் இயக்கங்களைப் போலவே, மூன்றாவது சுற்றி வளைத்துத் தாக்கும் இயக்கமும் முழுமையான தோல்வியில் முடிவடைந்தது.

எதிரியின் மூன்று சுற்றி வளைத்துத் தாக்கும் இயக்கங்களை யும் எதிர்த்துப் போராடும்பொழுது, சிவப்பு ஆட்சி, சியாங்காய்-ஷேக்கினால் திரும்பத் திரும்ப தொடுக்கப்பட்ட தாக்குதல்களை

நொறுக்கித் தள்ளிற்று; இத்தாக்குதல்களில், பல லட்சக்கணக்கான நவீனமயமான துருப்புகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். செஞ்சேனை உறுதியாக நின்றதினாலும், விரிவுபடுத்திக் கொண்டதினாலும், தன்னை பலபடுத்திக் கொண்டதினாலும் அது தன்னுடைய சிறப்பை நிரூபித்தது.

பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின்கீழ், கிராமப்புறங்களில் புரட்சிகரமான தளங்களை நிறுவதினால் நீடித்தவொரு போராட்டத்தில் ஈடுபடுவது, சிவப்பு ஆட்சியை நிலைநாட்டுவது பற்றிய மா சே-துங்கின் அடிப்படையான கருத்தாக இருந்தது. பலம் குவிந்திருக்கும்பொழுது, செஞ்சேனை நகரங்களைச் சுற்றி வளைப்பதற்கு கிராமப்புற மாவட்டங்களிலிருந்து போய்ச்சேரும்; அப்படிச் செய்வதின் மூலம் நாடு முழுவதும் புரட்சியின் இறுதி வெற்றியை சித்திபெறச் செய்ய முடியும்.

நாடு தழுவியவொரு புரட்சிகரமான தருணம் ஏற்கெனவே வந்துவிட்டது என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு, புரட்சிகரமான அரசாங்கத்தை நிறுவுவதற்கு முன்பு வெகுஜனங்களை வென்று பெறவேண்டும் என்று வக்காலத்து வாங்கிப் பேசிய தத்துவத்தை, வேறு வார்த்தைகளில் சொன்னால், வெகு ஜனங்களை தேசிய ரீதியில் ஆயுதமேந்திய பேரெழுச்சிக்காக ஸ்தாபன ரீதியாகத் திரட்டி ஒரு தேசிய அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்காக வெகு ஜனங்களைவென்று பெறவேண்டுமென்று வக்காலத்து வாங்கிப் பேசிய தத்துவத்தை, தோழர் மா சே-துங் நிராகரித்தார். பல ஏகாதிபத்திய அரசுகளால் ஆதிக்கத்திற்காக மோதிக் கொண்டிருக்கப்பட்ட ஒரு அரைக் காலனியாக சீனா அப்பொழுது இருந்தது என்பதைப் புரிந்து கொள்ளத் தவறியதிலிருந்து இந்த தவறான தத்துவம் பிரதானமாக தோன்றி எழுந்தது.

ஒரு அரைக்காலனி நாட்டில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் நடைபெறும் விவசாயப் போராட்டத்தின் மிக மிக உயர்ந்த உருவமாக தோழர் மாசே-துங் சிவப்பு ஆட்சியை கருதினார்; மற்றும் நாடு முழுவதிலும் புரட்சி அலையின் எழுச்சியை வேகப்படுத்துவதில் மிக மிக உயிரோட்டமான அம்சமாகவும் அவர் சிவப்பு ஆட்சியைச் கருதினார். "ஒரு சிறு பொறி காட்டுத்தீயை உருவாக்கும்" என்று தலைப்பிட்டு அவர் எழுதிய கட்டுரையில், இந்த விஷயம் பூரணமாகத் தெளிவாக்கப் பட்டுள்ளது.

உலகம் முழுவதிலும் சோவியத்யூனியன் செய்திருப்பதுபோல் இந்த முறையில் மட்டுமே நாடு முழுவதிலுமுள்ள புரட்சிகர

வெகுஜனங்களின் நம்பிக்கையை நாம் வென்று பெற முடியும்: இந்த முறையினால் மட்டுமே பிற்போக்கான ஆளும் வர்க்கங்களுக்கு ஏராளமான கஷ்டங்களை நாம் உண்டாக்க முடியும், அவர்களது அடித்தளங்களை குலுங்க வைக்க முடியும், அவர்கள் உள்ளார்ந்த சீர்குலைவினை விரைவுபடுத்த முடியும். மேலும், இந்த முறையினால் மட்டுமே, வரவிருக்கும் மாபெரும் புரட்சியில் நம்முடைய பிரதானமான ஆயுதமாக இருக்கப்போகும் ஒரு செஞ்சேனையை நாம் உண்மையிலேயே உருவாக்க முடியும். சுருக்கமாகச் சொன்னால், இந்த முறையினால் மட்டுமே புரட்சிகரமான பேரெழுச்சியை நாம் வேகப்படுத்த முடியும்.[1]

இந்த முறையில் சிவப்பு ஆட்சி 1927 அக்டோபரிலிருந்து 1931-ஆம் ஆண்டுவரையிலுமிருந்த காலகட்டத்தில் சோதனைகளை வெற்றிகரமாக எதிர்நோக்கி நின்றது; மேலும், இன்னும் அதிகமாகச் சொல்வதென்றால், தன்னை விஸ்தரித்து, பலப்படுத்திக்கொண்டு புரட்சியின் ஏற்றத்திற்கு பெரியதொரு ஊக்குவிப்பதாகவும் அமைந்து கொண்டது. ''சிறு பொறி''யிலிருந்து, ''காட்டுத்தீயாக'' வளர்ந்தது.

எதிர்-சுற்றி வளைத்தல் இயக்கங்களில் பெற்ற வெற்றிகள் சீனப்புரட்சி புதிய உச்சிகளை நோக்கி முன்னேறுவதற்கு காரணமாகவிருந்தன.

## அடிக் குறிப்புக்கள்

1. மாசே-துங் தேர்வு நூல்கள், கட்டுரை, பாகம் 1 பக்கம் 63.
2. மேற் குறிப்பிட்ட நூல், பக்கம் 99
3. ஷியாடு-யின், வூகான் அரசாங்கத்தை எதிர்த்து கலகம் செய்தான். ஆனால் நொறுக்கப்பட்டபின் தொழிலாளி மற்றும் விவசாயிகளின் சேனையில் இணைத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பு, அவனது எஞ்சியபடைகள் தெற்கு ஹூனானில் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார்கள்.
4. சிறு நிலச்சுவான்களும், பணக்கார விவசாயிகளும்.

5. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியின் ஒரு உறுப்பினராக அதனுடைய ஆறாவது தேசியக் காங்கிரஸில் தேர்ந்தெடுக்கப்பட்டார். வடகிழக்கு கியாங்ஸியில் சிவப்பு ஏரியாவை ஸ்தாபித்தவர். சிவப்பு பத்தாவது சேனையை ஸ்தாபித்தவர். 1934-ஆம் ஆண்டில் செஞ்சேனையின் ஜப்பானிய எதிர்ப்பு முன்னணிப் படைப்பிரிவுகளை பாங்சியின் வடக்கு நோக்கி தலைமை தாங்கிச் சென்றார். 1935 ஜனவரி மாதத்தில் ஒரு மோதலில் கோமிங்டாங் பிற்போக்குப் படைகளால் கைது செய்யப்பட்டார். பின்னர் கியாங்ஸியில், நான் காங்கில் ஆறு மாதத்திற்கு பிறகு தியாகியாக மரண மடைந்தார்.

6. மாசே-துங் தேர்வு நூல்கள், பாகம் 3, பக்கம் 60-61

7. மேற் குறிப்பிட்ட நூல், பாகம் 1, பக்கம் 117.

அத்தியாயம் ஆறு

## ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக இயக்கத்தின் எழுச்சி. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ''இடதுசாரி'' திரிபுகளைக் களைந்தெடுத்தல். போல்ஷ்வியமாக்கும் பாதையை உறுதியுடன் கடைப்பிடித்தல்.

(செப்டெம்பர் 1931-டிசம்பர் 1935)

### 1929 இலிருந்து 1932 வரை சர்வதேச நிலைமையும். ஒரு புதிய யுத்த அபாயமும்

1929 ஆம் ஆண்டு இறுதியில், முன்கண்டிராத அளவில் நாசகரமானதொரு உலகப் பொருளாதார நெருக்கடி எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் வெடித்தது. இந்த நெருக்கடி மூன்றாண்டுகளாக மிக மோசமாக நீடித்துக் கொண்டிருந்தது. தொழில் நெருக்கடி ஒரு விவசாய நெருக்கடியோடு பின்னிக் கிடந்தது. மேலும், உற்பத்தியால் ஏற்பட்ட நெருக்கடி, வியாபாரத்திலும், நிதியிலும் பின்னிக்கிடந்தது, இந்த நிலைமை முதலாளித்துவ நாடுகளில் பொருளாதார நிலைமையை மிகவும் கடுமையாக்கிற்று.

1932 ஆம் ஆண்டு இறுதிவாக்கில், அமெரிக்காவில் தொழில் உற்பத்தி 1929 ஆம் ஆண்டிலிருந்ததில் 53·8 சதவீதத்திற்கு விழுந்துவிட்டது; பிரிட்டனின் தொழில் உற்பத்தி 83.8 சதவீதத்திற்கு விழுந்துவிட்டது; பிரான்சின் தொழில் உற்பத்தி 69.1 சதவீதத்திற்கு விழுந்து விட்டது. இந்த நெருக்கடி நீடித்த காலமும் ஆழமும் கடந்த காலத்தில் ஏற்பட்ட இதர எல்லா நெருக்கடிகளிலிருந்தும் இந்த நெருக்கடியை வேறுபடுத்தி வைத்தது. முந்திய நெருக்கடிகள் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் நீடித்தன; ஆனால் இந்த நெருக்கடி 1932 இறுதி வரையிலும் தளரவில்லை. நீண்டதொரு கால கட்டத்தில் முதலாளித்துவம் மக்களைக் கசக்கிப்பிழிந்து குவித்து வைத்திருந்த செல்வமனைத்

தையும் ஒன்றுமில்லாதபடி அது குறுக்கிவிட்டது. அதுவரை ஏற்பட்டிருந்த எல்லா நெருக்கடிகளிலும், அந்த நெருக்கடி மிகமிக கடுமையான நெருக்கடியாக இருந்தது.

இந்தப் பொருளாதார நெருக்கடி முன்கண்டிராத அளவிற்கு தாமதப்படுத்தும் சக்தியை காட்டிற்று; ஏனெனில், முதலாளித் துவத்தின் பொது நெருக்கடியின் நிலைமைகளில் அது வெடித் திருந்தது. பொதுநெருக்கடியின் முதல் தீர்மானமான குணாம்சம் என்னவென்றால், அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றி யின் காரணமாக, முதலாளித்துவப் பொருளாதாரம் இனியும் ஒரே, சர்வாம்சரீதியான உலக அமைப்பாக இருக்கவில்லை; மற் றும் அதற்கு எதிராக நின்று கொண்டிருந்த புதிய தொரு சோஷ லிசப் பொருளாதார அமைப்பு, நாள்தோறும் அதிக பலமாக வளர்ந்து கொண்டிருந்தது என்பது தான். இரண்டாவது குணாம் சம், ஏகாதிபத்திய காலனி ஆதிக்க முறையில் ஏற்பட்ட நெருக் கடியாகும். காலனி நாடுகளிலும், அரைக் காலனி நாடுகளிலும் அபரிமிதமான தொரு தேச விடுதலை இயக்கம் வெடிந்திருந்தது. பல காலனி நாடுகளின் இந்த தேசவிடுதலை இயக்கத்தின் தலைமை, பாட்டாளி வர்க்கத்தின் மற்றும் அதனுடைய அரசியல் கட்சியின் கரங்களுக்குள் மாறிச்செல்ல ஆரம்பித்திருந்தது. அதே சமயத்தில், இத்தகைய காலனி மற்றும் அரைக்காலனி நாடுகளில் தேசிய முதாளித்துவம் தோன்றி அபிவிருத்தி அடைந்தது. மேலும், முதலாளித்துவ நாடுகளோடு அது நடத்திய போட்டி, காலனிச் சந்தைக்கான போராட்டத்தைத் தீவிரமாகிற்று முதலாளித்துவ நாடுகளின் தொழில் போக்குவரத்து, மற்றும் விவசாயம், அந்நாடுகளின் உற்பத்தித் திறனுக்குக் கீழாகவே இயங்கிக் கொண்டிருந்தன என்ற விவரத்திலும், அங்கே பெரிய தொரு வேலையில்லாதோர் பட்டாளம் இருந்தது என்ற விவரத் திலும், மூன்றாவது குணாம்சம் அடங்கியுள்ளது. முதலாளித்துவ பொது நெருக்கடிக்கு முன்பு, தொழில் செழிப்பு இருக்கும் கால கட்ட ஆண்டுகளில் தங்களுடைய உற்பத்தி நிறுவனங்களின் முழு உற்பத்தித்திறனை இயக்குவதும், வேலையில்லாதவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதும் முதாளித்துவ நாடுகளுக்குச் சாத்தியமாக இருந்தது; ஆனால் பொது நெருக்கடியின் பொழுது சம்பந்தப்படுத்திப் பார்க்கும் பொழுது, சுறுசுறுப்பான பொருளா தார நடவடிக்கை இருக்கும் ஆண்டுகளிலும் கூட, பல்வேறு நிறுவனங்களின் உற்பத்தி சக்திகள் முழுமையாகப் பயன் படுத்தப்பட முடியவில்லை; மற்றும், வேலையில்லாதோர் பட்டாளம் படிப்படியாக அதிகரிப்பதைக் காட்டிற்று.

இந்தப் பொருளாதார நெருக்கடி ஏன் கூர்மை அடைந்து, நீடித்துக் கொண்டிருந்தது என்பதற்கு கூடுதலான காரணங்களும் உண்டு. முதலாவதாக, இந்த நெருக்கடி எல்லா முதலாளித்துவ நாடுகளையும் பாதித்தது; உலகத்தின் உற்பத்தியிலும் நுகர்தலிலும், பாதிக்கும் அதிகமாக கணக்கிடப்பட்ட அமெரிக்காவிற்கு, குறிப்பாக, கடுமையானதொரு அடியைக் கொடுத்தது. அதன் விளைவாக, இதர சில நாடுகளின் செலவில் சாகசம் செய்வதற்கு சில நாடுகளுக்கு கஷ்டமாக இருந்தது. இரண்டாவதாக, எல்லா விவசாய நாடுகளிலும் இந்த நெருக்கடி விவசாய நெருக்கடியோடு பின்னிப் பிணைந்திருந்தது; இது அந்த நெருக்கடியை மிக அதிக சிக்கலானதும் அழகானதாகவும் செய்வதை தவிர்க்க முடியாததாகிற்று. மூன்றாவதாக, தொழிலில் ஆதிக்கம் வகித்த ஏகபோக கார்ட்டல்கள் தங்களுடைய சரக்குகளின் ஏகபோக விலைகளை நிலைநிறுத்தி வைப்பதற்கு தங்களால் இயன்ற அதிக பட்ச முயற்சிகளைச் செய்தன. கார்ட்டல்களுக்கு (Cartels) வெளியே இருந்த உற்பத்தியாளர்களுக்கிடையே இது மொத்தமான வெறுமையை உண்டாக்கிற்று. பரவலான நுகர்வோர் வெகு ஜனங்களுக்கு, மாபெரும் கலக்கத்தை கொண்டு வந்தது; சரக்கு குவியல்களை சந்தைக்கு கொண்டு வருவதையும் தடுத்துக் கொண்டிருந்தது.

முதலாளித்துவ சமுதாயத்தின் உற்பத்தி உறவுகள், உற்பத்தி சக்திகளின் சமுதாயத் தன்மைக்கு இப்படிபட்ட முரண்பாட்டில் ஒரு பொழுதுமிருந்ததில்லை.

இந்த காலகட்டத்தில், சோவியத் யூனியன் சோஷலிச நிர்மாணத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்தது. சோவியத் யூனியனின் தொழிலும், விவசாயமும் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருந்தன.

சோவியத் யூனியனின் தொழில் சோஷலிச தொழில் மயமாதல் பாதையின் வழியாக முன்பின் முரணற்ற முறையில் முன்னேறிற்று. அந்நாட்டு கன இயந்திரத் தொழில் கெட்டிப் படுத்தும் பாதையின் வழியாகவும், அபிவிருத்தி செய்யும் பாதையின் வழியாகவும் முன்னேறிற்று. சீனாவுக்கு எதிராக ஆக்கிரமிப்பு யுத்தத்தை ஜப்பான் துவக்கிய 1931ஆம் ஆண்டு வாக்கில் சோவியத் யூனியனில் தொழில் உற்பத்தி, யுத்த முற்கால 1913 ஆம் ஆண்டின் மட்டத்தை, ஒப்பு நோக்கிப் பார்க்கும் பொழுது, 214.7 சதவீதம் அதிகரித்திருந்தது. தேசிய பொருளாதாரத்தின் மொத்த உற்பத்தியில் தொழிலின் விகிதாச்சாரம்

1913இல் 42.1 சதவீதமாக இருந்தது; 1931இல் 66.7 சதவீதமாக உயர்ந்தது. ஆகவே, தொழில், தேசியப் பொருளாதாரத்தில் மேலாதிக்கம் வகிக்கும் பாத்திரத்தை வகித்தது. மொத்த தொழில் உற்பத்தியில், கன இயந்திரத் தொழில் 55.4 சதவீதமாக கணக்கிடப்பட்டது. ஆகவே, ஒட்டு மொத்தமாக தொழிலில் அது தலைமையிடத்தை வகித்தது. சோஷலிச தொழில் மயமாக்குதலின் தெளிவான அறிகுறி, முதலாளித்துவ மற்றும் சிறு அளவிலான சரக்கு உற்பத்தித் துறையின் வெற்றியேயாகும். இந்தத் திசை வழியில் சோவியத் யூனியன் முழுமையானதொரு வெற்றியைப் பெற்றிருந்தது. 1930இல், பெரும் அளவிலான தொழில்களின் மொத்த உற்பத்தியில், சோஷலிசத் துறையின் உற்பத்தி 99.7 சதவீதமாக இருந்தது. தொழிலில் முதலாளித்துவ மிச்சசொச்சங்கள் ஒழிக்கப் பட்டிருந்தன.

விவசாயமும் சோவியத் யூனியனில் குறிப்பிடத்தக்கதொரு மாற்றத்தை அடைந்திருந்தது; விவசாயத்தை கூட்டுமயமாக்குதல் மகத்தானதொரு வெற்றியை பெற்றிருந்தது. கிராமப்புற பொருளாதாரம் முன்னேற கூடிய ஒரே பொரு வழிதான் இருந்தது. அதாவது, அரசு பண்ணைகளை ஏற்பாடு செய்வதன் மூலம், பெரும் அளவிலான சோஷலிச விவசாயத்திற்கு ஏற்பாடு செய்வது, தனித்தனியான சிறுவிவசாயிகளைக் கூட்டு பண்ணைகளுக்கு ஆகிர்ஷிப்பது, மற்றும் நவீன விவசாய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவது என்று சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி கருதிற்று.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பதினைந்தாவது மகாநாட்டிலிருந்து. குறிப்பாக, தானியபிரச்சினை கடுமையாகிவிட்ட 1928-ஆம் ஆண்டின் ஆரம்பத்திற்கு பிறகு, கட்சி அதனுடைய நடைமுறை வேலையில் இந்த பாதையை முன்பின் முரண் அற்ற முறையில் பின்பற்றி வந்தது.

இந்த மாபெரும் கடமை நிறைவேற்றப்பட்டது. நாட்டிருந்த மொத்த விவசாயக் குடும்பங்களில், கூட்டுமயமாக்கப்பட்ட விவசாயக் குடும்பங்களின் விகிதாச்சாரம் 1929-இல் 3.9 சதவீதமாக இருந்ததிலிருந்து, 1930-இல் 23.6 சதவீதத்திற்கும், 1931-இல் 52 சதவீதத்திற்கும் உயர்ந்தது. 1930-லிருந்து 1931-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டம் சோவியத் யூனியனின் கிராமப்புறங்களில் மகத்தானதொரு மாற்றத்தைக் கண்டது; மற்றும் விவசாய கூட்டுமயமாவதன் வெற்றியையும்

கண்டது.

இந்தக் காலகட்டம், உலகின் எல்லா நாடுகளின் பொருளாதார வாழ்க்கையிலும் ஒரு மாற்றத்தைக் கண்டது, சோவியத் யூனியனிலும் மாற்றத்தைக் கண்டது, ஆனால் சோவியத் யூனியனில் மாற்றம் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தி இருந்தது; அதே சமயத்தில், முதலாளித்துவ நாடுகளில் அது கடுமையானதொரு பொருளாதார நெருக்கடிக்கு வழி நடத்திச் சென்றது.

உலகப் பொருளாதார நெருக்கடி, ஏகாதிபத்திய அரசுகளுக்கிடையேயும், வெற்றிபெற்ற நாடுகளுக்கும் தோல்வி அடைந்த நாடுகளுக்குமிடையேயும், ஏகாதிபத்திய நாடுகளுக்கும் காலனி மற்றும் அரைகாலனி நாடுகளுக்கிடையேயும், தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்குமிடையேயுய, விவசாயிகளுக்கும் நிலச்சுவான்தார்களுக்குமிடையேயும் முரண்பாடுகளை மேலும் தீவிரமடையச் செய்தது.

இரண்டு திசைவழிகளில் மிகப் பிற்போக்கான பாசிஸ சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதின் மூலம் தங்களுடைய சொந்த நாட்டிலுள்ள பாட்டாளி வர்க்கத்தையும் இதர உழைப்பாளி மக்களையும் ஒடுக்குவது மற்றும் பாதுகாப்பு பலஹீனமாக இருக்கும் நாடுகளின் செலவில் காலனிகளையும், செல்வாக்கு மண்டலங்களையும் மறுபங்கீடு செய்வதற்காக யுத்தத்தை தூண்டி விடுவதாலும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாணுவதற்கு பூர்ஷுவா வர்ககம் முயற்சிக்குமென்று தோழர் ஸ்டாலின் சுட்டிக் காட்டினார்.

அதனுடைய குறுகிய உள்நாட்டுச் சந்தையின் காரணமாக, ஜப்பான் பொருளாதார நெருக்கடியினால் கடுமையாகத் தாக்கப்பட்டிருந்தது. ஜப்பானின் ஆளும் வர்க்கம் ஒரு ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தங்களுடைய ஒரே பரிகாசமாகப் பார்த்தது. சீனாவிலிருந்து ஐரோப்பிய மற்றும் அமெரிக்க ஏகாதிபத்திய அரசுகளைத் துரத்தி அடிக்கும் நோக்கத்தோடும், சீனாவைத் தன்னுடைய சொந்தக் காலனி நாடக மாற்றிக் கொள்ளும் நோக்கத்தோடும் ஒன்பது நாட்டு உடன்படிக்கையை கிழித்தெறிந்துவிட்டு, ஜப்பானிய ராணுவ வெறியர்கள் சீனாவுக்கு எதிராக யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டார்கள்.

பாட்டாளி வர்க்கத்திற்கான பரிகாரத்தை புரட்சியில்தான் காண வேண்டுமென்று தோழர் ஸ்டாலின் மேலும் சுட்டிக் காட்டினார். ‘‘முதலாளித்துவச் சுரண்டலையும், யுத்த

அபாயத்தையும் எதிர்த்துப் போராடுவதில், பாட்டாளி வர்க்கம் புரட்சியின் மூலமாக ஒரு வழியினைக் கண்டு பிடிக்கும்''[1]

ஜப்பானிய ஏகாதிபத்திய வாதிகளால் தொடுக்கப்பட்ட ஆக்கிரமிப்பு யுத்தத்தை எதிர்த்துப் போராடுவதற்கு, சீனப்பாட்டாளி வர்க்கமும் அதனுடைய அரசியல் கட்சியும் தலைமை தாங்கியபொழுது, ஒரு தேசிய புரட்சி யுத்தத்தின்மூலம் அவர்கள் தங்களுக்கானதொரு வழியைத் தேடிக் கொண்டிருந்தார்கள்.

### 2. ஜப்பானிய ஏகாதிபத்திய வாதிகளால் வடக்கிழக்குச் சீனா ஆக்கிரமிக்கப்படுதல். நாடு முழுவதிலும் தேசிய ஜனநாயக இயக்கத்தின் எழுச்சி.

ஐரோப்பிய நாடுகளும் மற்றும், அமெரிக்காவும் பொருளாதார நெருக்கடியில் உள்நாட்டுத் தொல்லைகளில் சிக்குண்டு கிடந்த சமயத்தில், சியாங்காய்-ஷேக் அரசாங்கம் ஏகாதிபத்திய வாதிகளுக்கு முற்றிலும் சரணடைந்த பிறகு, ஆங்கிலோ அமெரிக்க உதவியோடு பிற்போக்கானதொரு உள்நாட்டு யுத்தத்தை நடத்திக் கொண்டிருந்த சமயத்தில், ஜப்பானிய ஏகாதிபத்திய வாதிகள் சீனாவைத் தாக்குவதற்கு இந்த சந்தர்ப்பத்தைப் பற்றிப்பிடித்துக் கொண்டார்கள். சீனா அப்பொழுது தேசிய பாதுகாப்பில் பலஹீனமாகவும் பெரியதொரு சந்தையைக் கொண்ட நாடாகவும் இருந்தது. நாடு முழுவதையும், காலனி ஆக்குவதற்கு ஓர் அடித்தளமாக, அவர்கள் வடகிழக்குச் சீனாவை ஆக்கிரமித்து, தங்கள் வேலையை ஆரம்பித்தார்கள்.

1931-செப்டெம்பர் 18-ல் வடகிழக்கில் முகாமிட்டிருந்த ஜப்பானிய சேனை ஷென்யாங் (முக்டென்) மீது திடீர் தாக்குதலைத் தொடுத்தது. எந்தவிதமான எதிர்ப்பையும் கொடுக்க வேண்டாமென்று சியாங்காய்-ஷேக் சீன ராணுவத்திற்கு கட்டளையிட்டான். சியாங்கின் கட்டளை ஏற்று, ஷென்யாங்கிலும், வடகிழக்கில் இதர பகுதிகளிலுமிருந்த சீனத்துருப்புகள் பெரும் சுவருக்கு தெற்கே பின்வாங்கினார்கள்; இந்த முறையில், மூன்று மாதங்களுக்கும் குறைவான காலத்திற்குள்ளே ஜப்பானியப் படைகள் வடகிழக்குப் பகுதி முழுவதையும் கைப்பற்றுவதைச் சாத்தியமாகச் செய்தது.

1932 ஜனவரி 28-ஆம் தேதி இரவில், ஜப்பானிய ராணுவம் ஷாங்காய் நகரத்தைத் தாக்கி, நகரத்தைக் கைப்பற்றி சீனாவைக்

காலனியாக்குவதற்கு அதனை இரண்டாவது தளமாக்க முயற்சித்துக் கொண்டிருந்தது. ஷாங்காயிலிருந்து ராணுவமும், குடிமக்களும் வீரமிக்க போராட்டத்தில் எழும்பி, படையெடுப்பாளர்களைத் திரும்பத் திரும்ப எதிர்த்துப் போராடினார்கள். ஆனால், சியாங்காய்-ஷேக், எதிர்ப்புப் போராட்டத்தை அலட்சியம் செய்வதில் எந்த முயற்சியையும் விட்டு வைக்கவில்லை. அப்பொழுது ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து போராடிக் கொண்டிருந்த 19ஆவது வழிச்சேனையை ஷாங்காயிலிருந்து வாபஸ் வாங்கும்படி நிர்பந்தித்த பிறகு, அவன் ஜப்பானோடு ஷாங்காய் யுத்த நிறுத்த உடன்பாட்டைச் செய்தான்; இந்த உடன்பாடு சீனா ஷாங்காயில் துருப்புகளை நிறுத்தக் கூடாது என்றும், நாடு முழுவதிலும் ஜப்பானிய எதிர்ப்பு இயக்கத்தைத் தடை செய்ய வேண்டுமென்றும் நிபந்தனையைக் கொண்டிருந்தது.

ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் உறுமும் துப்பாக்கிகள் சீனாவின் பரந்துபட்ட வெகுஜனங்களை விழிப்புறச் செய்து, தேசபக்த உணர்வுகளைத் தட்டி எழுப்பிற்று. சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் அறைகூவலை ஏற்று, ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளையும், சியாங்காய்-ஷேக்கையும் எதிர்த்து அவர்கள் தீவிரமானதொரு இக்கத்தில் குதித்தார்கள்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினால் தலைமை தாங்கப்பட்ட, உதவி செய்யப்பட்ட, வடகிழக்குப் பகுதியிலிருந்த மக்களும் தேசபக்த துருப்புகளின் ஒரு பகுதியும் ஜப்பானிய எதிர்ப்புத் தொண்டர்களை ஏற்பாடு செய்து, வீரமிக்கதொரு போராட்டத்தை தொடர்ந்து நடத்தினார்கள். ஒரு சமயத்தில் தொண்டர்களால் நடத்தப்பட்ட கொரில்லா யுத்தம் பெரிய அளவுகளுக்கு வளர்ந்து பின்னடைவுகள் இருந்த போதிலும், அவர்களை ஒழித்துக் கட்டுவதற்கு எதிரிசெய்த முயற்சியை முறியடிப்பதில் கொரில்லாக்கள் வெற்றி பெற்றார்கள்; மேலும் வடகிழக்கில், ஜப்பானிய ராணுவ வெறியர்களின் ஆட்சி காலனி ஆதிக்க ஆட்சி முடிவுக்கு வரும்வரையிலும் அவர்கள் போராடிக் கொண்டேயிருந்தார்கள்.

1931 அக்டோபர் ஆரம்பத்தில், எட்டு லட்சம் ஷாங்காய் தொழிலாளர்கள் ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்கும், மற்றும் சீனாவைக் காப்பாற்றுவதற்குமான சங்கத்தை அமைத்து நான்கின்ற்கு பிரதிநிதிகளை அனுப்பி ஜப்பானை எதிர்த்து போராடுவதற்கு அரசாங்கம் உடனடியாகப் படை

களை அனுப்ப வேண்டுமென்றும், அவர்கள் அமைந்திருந்த தொண்டர் படைக்கு ஆயுதங்களை சப்ளை செய்ய வேண்டுமென்றும் கோரினார்கள். பீகிங்கிலிருந்த தொழிலாளர்களும் ஜப்பானை எதிர்க்கவும் மற்றும், சீனாவை பாதுகாப்பதற்குமான சங்கத்தையும் தொண்டர்படைப் பிரிவுகளையும், மற்றும், தபால் தொழிலாளிகளிடையே பிரச்சாரக் குழுக்களையும் நிறுவினார்கள், இதர நகரங்களிலும் கூட, ஜப்பானிய எதிர்ப்பு நடவடிக்கைகள் தொழிலாளர்களால் நடத்தப்பட்டன.

1931 செப்டெம்பர் 28-இல் நான்கிங்லிருந்த மாணவர்கள், கோமிங்டாங் அரசாங்கத்தின் அயல் நாட்டு அமைச்சரவை காரியாயலத்தை நொறுக்கித் தள்ளி, அமைச்சரையும் தாக்கினார்கள். 1931 இறுதியில், பீகிங், டியன்சின், ஷாங்காய், ஹான்கோவ், மற்றும் காண்டனிலிருந்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதற்காக நான்கிற்கு வந்தார்கள்; அங்கு, கோமிங்டாங் கட்சி, தேசிய அரசாங்கம் மற்றும் அயல் நாட்டு விவகார அமைச்சரவை ஆகியவற்றின் தலைமைச் செயலக கட்டிடங்களை நொறுக்கித் தள்ளினார்கள். ஷாங்காய் மாணவர்கள் கோமிங்டாங்கின் நகர்மன்ற தலைமை அலுவலகத்தை நொறுக்கித் தள்ளினார்கள்; மற்றும், மேயரையும், பிரதான போலீஸ் அதிகாரியையும் விசாரிப்பதற்கு மக்கள் நீதி மன்றம் ஒன்றையும் நிறுவினார்கள். நாடுமுழுவதிலும் இன்னும் இதர இடங்களில், ஸ்தல கோமிங்டாங் தலைமைக் காரியாலயக் கட்டிடங்களும், அரசாங்க கட்டிடங்களும் மாணவர்களால் தாக்கப்பட்டன.

செப்டம்பர் 18-ஆம் தேதி சம்பவத்திற்குப் பிறகு நகர்புற தொழிலதிபர்கள், வியாபாரிகள் உட்பட நாட்டு மக்கள் ஜப்பானிய சரக்குகளை பகிஷ்கரிக்கவும் மற்றும், ஜப்பானுடன் இருந்த பொருளாதார உறவுகளை துண்டிபதற்குமான ஒரு இயக்கத்தை துவக்கினார்கள். 1932-இல் ஷாங்காய் வியாபாரச் சங்கம், வங்கி முதலாளிகள் சங்கம், சுதேசிவங்கி முதலாளிகள் சங்கம் ஆகியவை தங்களுடைய தொழிலை தற்காலிகமாக நிறுத்தி வைத்தன.

ஷென்பாவோ போன்ற இப்படிப்பட்ட தேசிய முதலாளிகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய செய்தித்தாள்கள் கோமிங்டாங் அதனுடைய அரசியல் போக்கினை மாற்றிக் கொள்ளக் கோரியும், சோவியத் யூனியனோடு ராஜதந்திர உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ளக் கோரியும் உள்நாட்டு யுத்தத்

திற்கு முற்றுப்புள்ளி வைக்கவும், ஒரு கட்சி சர்வாதிகாரத்தை ஒழிக்கவும், இதர கட்சி நடவடிக்கைகளின் மீதிருந்த தடையை ரத்துசெய்யவும் கோரி அப்படிச் செய்தால்தான் தேசம் முழுவதும் ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக ஒன்றுபட முடியும் என்றும் விமர்சனக் குறிப்புகளைத் தாங்கி வந்தன.

ஜப்பானுடைய முழுக்க முழுக்க பிரத்தியேக ஆட்சியின்கீழ் சீனாவை ஒரு காலனியாக மாற்றுவதற்கு ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் செய்த முயற்சி சீனாவின் ஆளும வர்க்கங்களில் கடுமையான பிளவுகளுக்கு வழிநடத்திச் சென்றது.

1931-அக்டோபர் ஆரம்பத்தில், லையோனிங்கையும், கிரினையும் ஆக்கிரமித்தபின், ஜப்பானிய துருப்புகள் ஹெல்லங்கியாங்கை தாக்கியபொழுது மாசான்-ஷான் தலைமையின் கீழிருந்த சீன ராணுவம் எதிர்த்துப் போராடுவதற்கு கிளம்பிற்று.

ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளை எதிர்த்துப் போராடும்படி சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியால் விடுக்கப்பட்ட அறைகூவலை ஏற்று, செஞ்சேனையைத் தாக்குவதற்கு கியாங்ஸிக்கு, சியாங்காய்-ஷேக்கினால் அனுப்பட்டிருந்த பத்தாயிரத்திற்கும் அதிகமானவர்களைக் கொண்டிருந்த 26-வது வழிச்சேனை சாவோபோ-ஹெங் மற்றும் துங்சென்-டாங் ஆகியோரின் தலைமையின் கீழ், நீங்டுவில் 1931 டிசம்பரில் ஒரு பேரெழுச்சியைத் துவக்கி செஞ்சேனையோடு சேர்ந்து கொண்டது.

1932 ஜனவரி 28-இல், 19-வது வழிச்சேனை, ஷாங்காய் மீது நடைபெற்ற ஜப்பானிய படையெடுப்பை எதிர்த்துப் போராட ஆரம்பித்தது. ஷாங்காயின் தொழிலாளிகள், மாணவர்கள், மற்றும் இதர குடிமக்களின் உதவியோடும் நாட்டின் இதர மக்களின் ஆதரவோடும் அவர்கள் ஜப்பானிய ஆக்கிரமிப்புப் படைகளைப் பிடிவாதமாக எதிர்த்துப் போராடி, ஒரு சிலமணி நேரங்களில் ஷாங்காயைப் பிடிக்கும் ஜப்பானிய ராணுவ வெறியர்களின் திட்டத்தை முறியடித்தார்கள்.

சியாங்காய்-ஷேக், வாங்சிங்-வெய், மற்றும் ஹீகான்-மான் ஆகியோர்களால் தலைமை தாங்கப்பட்டிருந்த கோமிங்டாங் கும்பல்களுக்கிடையே இருந்த மோதல்கள் மற்றும் முரண்பாடுகளின் காரணமாக, நான்கிங்-காண்டன்யுத்தம் 1931 செப்டெம்பரில் வெடித்துக்கிளம்பி, அதே ஆண்டு டிசம்பரில் சியாங்காய்-ஷேக் நிர்ப்பந்தமாக பதவியைத் துறப்பதில் முடிவடைந்தது.

ஜப்பானின் பயமுறுத்தலால, நான்கிங் அரசாங்கம் 1932 ஜனவரி 30ல் லோய்கிற்கு பெயர்ந்து சென்றது.

துரோகத்தனமான நான்கிங் அரசங்கத்தின் ஆட்சி—சியாங்காய்-ஷேக்கின் ஆதிக்கத்திலிருந்த ஆட்சி—ஆடிக் கொண்டிருந்தது.

1931 ஆகஸ்டில், சிவப்பு ஏரியாவில், கியாங்ஸியில் மத்திய செஞ்சேனை சியாங்காய்-ஷேக்கின் மூன்றாவது சுற்றிவளைக்கும் இயக்கதினைச் சிதறடித்தது; மற்றும் ஹூப்பே-ஹோனான்-அன்வெய்தளத்திலும் செஞ்சேனை கோமிங்டாங் படைகளை ஒரு எதிர்-சுற்றிவளைப்பு இயக்கத்தில் முறியடித்து, புரட்சித் தளங்களை விஸ்தரித்துக் கொண்டது. ஹூப்பேயில் குன்கூ தளம் மீட்கப்பட்டது. சென்சி மற்றும் கான்சு எல்லைகளில், சிவப்பு கொரில்லாபடைப் பிரிவுகள் தோன்றின.

1931 நவம்பர் 7இல், தொழிலாளிகள், விவசாயிகள் மற்றும் ராணுவ வீரர்களின் முதல் தேசிய காங்கிரஸ் கியாங்ஸியில் ஜீக்சினில் கூட்டப்பட்டு, மத்திய தொழிளர்கள் மற்றும் விவசாயிகளின் ஜனநாயக அரசாங்கம் பிரகடனம் செய்யப்பட்டது. அரசாங்கத்தின் தலைவராக தோழர் மாசே-துங்கும், செஞ்சேனையின் பிரதம சேனாதிபதியாக தோழர் சூடேயும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் ஜனநாகக் குடியரசின் அடிப்படைச் சட்டத்தையும், தொழிலளார் சட்டத்தையும் மற்றும், பொருளாதாரக் கொள்கைகள் சம்பந்தமான கட்டளைகளையும் மாநாடு நிறைவேற்றிற்று.

1935 ஏப்ரல் 15ஆம் தேதி அன்று தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் மத்திய அரசாங்கம், ஜப்பானுக்கு எதிராக யுத்தப் பிரகடனம் ஒன்றை விடுத்தது. அந்த பிரகடனத்தில், ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளைச் சீனாவிலிருந்து துரத்தி அடிப்பதற்கு ஒரு தேசிய புரட்சி யுத்தத்தை நடத்தும்படி செஞ்சேனைக்கும், பரந்துபட்ட ஒடுக்கப்பட்ட வெகுஜனங்களுக்கும் அது அறை கூவல் விட்டது.

1931-ல் வடகிழக்கில் ஜப்பானியப்படையெடுப்புக்குப் பிறகு உள்நாட்டு அரசியல் நிலைமையில் ஒரு மாபெரும் மாற்றம் ஏற்பட்டது; கோமிங்டாங் கட்டுப்பாட்டிலிருந்த ஏரியாக்களில் மக்களின் ஜப்பானிய எதிர்ப்பு மற்றும், சியாங்காய்-ஷேக் எதிர்ப்பு இயக்கத்தின் எழுச்சியின் காரணமாகவும், கோமிங்டாங்கிற்குள் ஏற்பட்ட பிளவின் காரணமாகவும், தேசிய பூர்ஷுவாவர்கத்தின்

ஜப்பானிய எதிர்ப்புப் போக்கின் காரணமாகவும், மூன்றாவது எதிர் சுற்றிவளைத்தல் இயக்கத்தில் தொழிலாளிகள், விவசாயிகளின் செஞ்சேனையின் வெற்றியின் விளைவாகவும், சீனத் தொழிலாளிகள் மற்றும விவசாயிகளின் ஜனநாயக அரசாங்கம் நிறுவப்பட்டு ஜப்பான்மீது யுத்தம் தொடுத்து, அது விடுத்த பிரகடனத்தின் விளைவாகவும் இந்த மாபெரும் மாற்றம் ஏற்பட்டது.

ஜப்பானிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு, புரட்சி முகாம் மற்றும் எதிர்புரட்சி முகாம் ஆகியவற்றின் சம்பந்தப்படுத்திப் பார்க்கும் நிலைகளில், மாற்றங்களை உருவாக்கிற்று. சீன மக்களின் ஜப்பானிய் எதிர்ப்பு இயக்கம் மிகுந்த துன்பகரமான ஒரு பாதையின் வழியாக அபிவிருத்தி அடைந்து கொண்டிருந்த பொழுது, நாடு முழுவதிலும் நிலைமை புரட்சிசக்திகள், இன்னும் புரட்சி சக்திகளைக் காட்டிலும் மிகவும் மிதமிஞ்சியதாக இருந்த போதிலும், மக்கள் கடந்த காலத்தைப் போல் ஆளப்படுவதற்கு விருப்பமற்றவர்களாக இருந்தார்கள்;சியாங்காய்-ஷேக் கும்பலும் பழைய முறையில் ஆளமுடியாமல் இருந்தார்கள். பல எதிர்க் கட்சிகளும், சியாங் எதிர்ப்பு கோஷ்டிகளும், சியாங்காய்-ஷேக் கும்பலின் ஆட்சியைத் தூக்கி ஏறியவேண்டும் என்பதை ஒப்புக் கொண்டார்கள்; அல்லது தங்களது நடுநிலைமையைப் பிரகடனம் செய்தார்கள். இந்த அரசியல் நிலைமை, புரட்சிக்கு சாதகமாகவும். எதிர்ப்புரட்சிக்கு பாதகமாகவும் இருந்தது.

புதியதொரு புரட்சிகரமான நிலைமை வேகமாகத் தோன்றிற்று. ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணி என்ற கோஷம் முன்னுக்கு வைக்கப்பட்டது. இந்த கோஷம் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போராட வேண்டுமென்றும் சியாங்காய் - ஷேக்கை எதிர்க்க வேண்டுமென்றும், தேசிய பாதுகாப்பு அரசாங்கத்தை அமைக்க வேண்டுமென்றும் மற்றும் ஜப்பானிய எதிர்ப்பு நேச ராணுவம் ஒன்றினை ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கோரிற்று. மக்களைச் சரியாக அணிதிரட்டி, அவர்களது போராட்டத்தைத் தலைமைத் தாங்கி நடத்துவதினாலும் சகல ஜப்பானிய எதிர்ப்பு, சியாங் எதிர்ப்பு கோஷ்டிகளையும் ஒன்றுபடுத்தி, 19 ஆவது வழிச்சேனையை உற்சாகமூட்டி மற்றும் தொழிலாளி, விவசாயிகளின் செஞ்சேனையைக் கூட்டு நடவடிக்கை எடுக்கும்படி தலைமை தாங்கவும் சரியான போர்த் தந்திரங்களைக் கட்சி கையாண்டிருந்திருக்குமேயானால், சியாங்காய்-ஷேக், அவனது அதிகாரத்தை மீண்டும் பெறுவதைத்

தடுப்பது சாத்தியமாக இருந்திருக்கும்; தேசிய பாதுகாப்பு அரசாங்கத்தை ஏற்படுத்துவதும், ஜப்பானிய எதிர்ப்பு ராணுவத்தை அமைப்பதும், மற்றும் ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்கு நாடு தழுவிய ரீதியில் புரட்சிப்படைகளைத் தலைமை தாங்குவதும் சாத்தியமாக இருந்திருக்கும்.

### 3. மூன்றாவது ''இடதுசாரி''ப் பாதை உருவதால். ''இடதுசாரி''ப் பாதையின்கீழ், புரட்சிக்கு சாதகமானதொரு நிலைமையை இழத்தல்.

சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் ஆறாவதுமத்தியக் கமிட்டியின் மூன்றாவது விரிவடைந்த கூட்டம் லீலீ-சான் பாதையை நிறைவேற்றுவதற்கு முற்றுப்புள்ளி வைத்த பிறகு, தோழர்கள் வாங்மிங் மற்றும் சின்பாங்-சியன் ஆகியோரால் தலைமைதாங்கப்பட்ட ஒரு வறட்டு தத்துவ கேஷ்டி மத்தியக் கமிட்டியை எதிர்ப்பதற்கு கிளம்பிற்று. லீலீ-சான்பாதை என்பது ''இடதுசாரி'' வாய்வீச்சு என்ற போர்வையின்கீழ் ''ஒருவகைப்பட்ட'' வலதுசாரி சந்தர்ப்பவாதமாக இருந்தது என்று அவர்கள் அடித்துக் கூறினார்கள்; மற்றும் லீலீ-சான் பாதையின் விடாபிடியான வலதுசாரி சந்தர்ப்பவாத தத்துவத்தையும், நடைமுறையையும் எதிர்த்துப் போராடுவதற்கோ ''மூன்றாவது விரிவடைந்த கூட்டம்'' எதுவுமே செய்யவில்லை என்றும் குற்றம் சாட்டினார்கள்; மேலும், ''தற்சமயத்தில், கட்சியில் வலது சாரித்திர்பு பிரதான அபாயமாக இருந்தது'' என்று குறிப்பிடத்தவறியதற்காக, அது மத்தியக் கமிட்டியைக் கண்டனமும் செய்தது. முதலாளிகளையும், பணக்கார விவசாயிகளையும் எதிர்த்துப் போராடுவதின் முக்கியத்துவத்தை அவர்கள் மிகைப்படுத்திக் கூறினார்கள்; மற்றும் 'பூர்ஷுவா-ஜனநாயகப் புரட்சியின் அம்சங்கள்'' என்று சொல்லப்பட்டவற்றின் முக்கியத்துவத்தையும் மிகைப்படுத்தி கூறினார்கள்; இடைத் தட்டு (intermediate) வர்க்கங்கள் இருப்பதை மறுத்துக் கூறினார்கள்; புரட்சிஅலை இன்னும் நாடு முழுவதிலும் எழும்பிக் கொண்டிருந்தது என்று கூறினார்கள்; மற்றும், கட்சிக்கு முன்னேறித் தாக்குதலின் நாடு தழுவியதொரு பாதையின் தேவையையும் அழுத்திக் கூறினார்கள்.

புரட்சிக் கடமைகள் சம்பந்தப்பட்ட மட்டில், இந்தப் பாதையை விளக்கிக்கூறியவர்கள், பூர்ஷ்வா வர்க்கத்தைத் தீர்

மானமாக எதிர்த்துப் போராடுவதின்மூலம் மட்டுமே ஜனநாயகப் புரட்சியில் பூர்த்தியான வெற்றியைப் பெற முடியும் என்று அடித்துக் கூறிக் கொண்டு, சீனாவில் முதலாளித்துவத்தின் அபி விருத்தியை மிகைப்படுத்தி மதிப்பிடுவதிலிருந்து ஆரம்பித்து பூர்ஷ்வா வர்க்கத்திற்கு எதிரான போராட்டத்தை,ஏகாதிபத்திய எதிர்ப்பு தேச விடுதலைப் போராட்டத்தோடும் மற்றும் நிலப் பிரபுத்துவ சக்திகளுக்கு எதிரான போராட்டத்தோடும் சமநிலை யில் வைத்தார்கள். பணக்கார விவசாயிகளின் நிலத்தை மறு விநியோகம் செய்ய வேண்டும் என்று அவர்கள் வக்காலத்து வாங்கி பேசினார்கள்; அந்த நிலத்தில், குறைந்த தரமுள்ள ஒரு குறிப்பிட்ட அளவுள்ள நிலம் பணக்கார விவசாயிகளுக்கே ஒதுக்கீடு செய்ய வேண்டியிருந்தது. தொழிலாளி-விவசாயி ஆட்சியின்கீழ், பணக்கார விவசாயிகளும் முதலாளிகளும் அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டவர்களாக்கப்பட வேண்டு மென்ற கருத்தோட்டதையும் அவர்கள் கொண்டிருந்தார்கள்.

நடுத்தர பூர்ஷுவாக்களும், குட்டிபூர்ஷுவாக்களின் மேல் தட்டுப் பகுதியும் எதிர்ப்புரட்சிக் கோட்டையின் பகுதியாக இருந் தார்கள் என்று அடித்துக்கூறிக் கொண்டு,அவர்கள் இடைத்தட்டு வர்க்கங்கள் இருப்பதை மறுத்துக் கூறினார்கள். ஆகவே, ''ஒரு மூன்றாவது கோஷ்டி,' அல்லது. ''ஒரு இடைத்தட்டு முகாம்'' போன்ற இப்படிப்பட்டதொரு விஷயம் இருக்கவேண்டும் என்பது சத்தியமற்றது என்று அவர்கள் சாதித்தார்கள். அப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருந்த ஜனநாயகப் புரட்சியில், பூர்ஷுவா வர்க்கத்தின் பாத்திரம் எந்தவகையிலும் முற்போக்கானதல்ல வென்றும், சீனப்புரட்சி சக்திகளில் தொழிலாளி வர்க்கம், விவசாயத் தொழிலாளிகள், ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் மற்றும் நகர்ப்புற குட்டி முதலாளிகளில் மிகவும் கீழ்த்தட்டிலுள்ள பகுதியினர் ஆகியோர் மட்டுமே அடங்கு வார்கள் என்றும் அவர்கள் கூறினார்கள்.

நாடு தழுவிய புரட்சிகரமான எழுச்சி தொடர்ந்து இருந்தது என்று அவர்கள் கூறினார்கள். மேலும், நாடு முழுவதிலும் கட்சி முன்னேறித் தாக்குதலை ஆரம்பிக்க வேண்டிய அவசியத்தையும் அவர்கள் வலியுறுத்தினார்கள். நாடு தழுவியதொரு புரட்சிகர மான எழுச்சியின் நிலைமைகளின் கீழ், அல்லது பல மாகாணங் களில் புரட்சி வெற்றி பெறுவது சாத்தியமாக இருக்கும் என்றும், இந்த வெற்றி ஒரு அல்லது பல அரசியல் கேந்திரங்களையோ அல்லது பொருளாதார கேந்திரங்களையோ கைப்பற்றுவதுடன்,

ஆரம்பமாகும் என்றும் அவர்கள் நம்பினார்கள். ஆகவே, நாடு முழுவதிலும் பல்வேறு பகுதிகளில் அல்லது பெரிய நகரங்களில் பொதுவேலை நிறுத்தங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்துவதற்கு தயாரிப்புகளை செய்ய வேண்டியது அவசியமாக இருந்தது என்றும் அவர்கள் கூறினார்கள். இரண்டு ஆட்சிக்களுக்கிடையே தீர்மானமானதொரு போராட்டம் இருக்கும் என்று அடித்துக் கூறிக் கொண்டு கட்சியின் யுத்த தந்திரம் முன்னேறித் தாக்குதலாக இருக்க வேண்டுமென்று வக்காலத்து வாங்கிப் பேசினார்கள்.

''இடது சாரி'' வறட்டு தத்துவவாதிகளின் நிர்பந்தத்தின் கீழ், கட்சியின் ஆறாவது மத்தியக் கமிட்டியின் நாலாவது விரிவடைந்த கூட்டம், 1931 ஜனவரியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் தத்துவ வாதிகள் கட்சியின் மத்தியக் கமிட்டியில் தலைமை தாங்கும் நிலையைப் பெற்றார்கள். மற்றும் ''இடது சாரி''ப் பாதை ஏற்றுக் கொள்ளப்பட்டது; இந்த முறையில், ''இடது சாரி''ப் பாதையின் ஆதிக்க கால கட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த சமயத்தில், சங்கிலித் தொடர் போன்ற பெரும் நிகழ்ச்சிகள் சீனாவில் நடைபெற்றன. எதிரியின் இரண்டாவது மற்றும் மூன்றாவது சுற்றி வளைத்தல் இயக்கங்களை வெற்றிகரமாக நொறுக்கித் தள்ளுவதில் கியாங்சியில் மத்திய ஏரியாவின் செஞ்சேனை மகத்தான வெற்றிகளைப் பெற்றது. இடைக் காலத்தில், ஜப்பானிய ஏகாதிபத்திய வாதிகளால் வடகிழக்குப் பகுதி ஆக்கிரமிக்கப் பட்டதால், ஜனநாயகம் மற்றும் தேசிய சுதந்திரத்திற்கான இயக்கங்கள் நாடு முழுவதிலும் புதியதொரு உச்சியை எட்டிப் பிடித்தன.

ஆனால் கட்சியின் தலைமை தாங்கும் உறுப்பு மூன்றாவது ''இடதுசாரி''ப் பாதையின் தவறுகளில் தான் சிக்குண்டு கிடப்பதைக் கண்டது, ''இடதுசாரிகள்'' ஒரு செக்டேரியின் போக்கினைக் கையாண்டு, ஐக்கிய முன்னணிக் கொள்கையை எதிர்த்தார்கள். இந்த முறையில், விரிவானதொரு அளவில் வெகு ஜனங்களை அணி திரட்டுவதை கட்சிக்கு சாத்தியமற்ற தாக்கினார்கள். மேலும் ஜப்பானுக்கு எதிராகவும், சியாங்காய்-ஷேக்கிற்கு எதிராகவும் சகலசக்தி வாய்ந்த நேச சக்திகளையும் அணி திரட்டுவதையும் கட்சிக்கு சாத்தியமற்றதாக ஆக்கினார்கள். சாதகமான நிலைமையில், புரட்சி முன்னுக்கு கொண்டு போகப் படவில்லை; மாறாக தவறானதொரு தலைமையின்

விளைவாக, அது புதிய பின்னடைவுகளால் கஷ்டப்பட்டது.

(1) ஜப்பானிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு உள்நாட்டு வர்க்க உறவுகளில் மாற்றங்களை உருவாக்கிற்று. வர்க்க முரண்பாடுகளின் மீது, தேசிய முரண்பாடுகளுக்கு இருந்த ஏற்றம் ஜப்பானுக்கு எதிராகவும், சியாங்காய்-ஷேக்கிற்கு எதிராகவும் ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்குவதை சாத்தியமாக்கிற்று. ஆனால்,ஏகாதிபத்திய அரசுகள் கூட்டாக சோவியத் யூனியனைத் தாக்குமென்றும், பல்வேறு கோமிங்டாங் கும்பல்கள் கூட்டாக சீனப் புரட்சியைத் தாக்குமென்றும் ''இடதுசாரிகள்'' வலியுறுத்திக் கூறினார்கள். வடகிழக்கில் ஜப்பானின் ராணுவ சாகஸங்கள் சோவியத் யூனியனுக்கு எதிரான பகிரங்க யுத்தத்தை ஆரம்பிப்பதற்கான ஒரு முன் நடவடிக்கையாக இருக்குமென்று அவர்கள் அடித்துப் பேசினார்கள்; மேலும், அப்போது நிலவிக் கொண்டிருந்த நிலைமைகள், கோமிங்டாங்கின் பல்வேறு கும்பல்களுக்கிடையே மோதல்களையும், பிளவுகளையும் உண்டாக்குவதற்கு பதிலாக புரட்சியை எதிர்க்கும் அவர்களது முயற்சியில், அவர்களது ஒற்றுமைக்கு வழி நடத்திச் செல்லுமென்றும் அவர்கள் அடித்துக் கூறினார்கள்.

நடப்பு நிலையைப்பற்றி ''இடதுசாரி''களின் தவறான பார்வை இப்படி இருந்தது. சோவியத் யூனியன் மீது அவர்களது தாக்குதலால் ஏகாதிபத்தியவாதிகளின் ஒருமனதான தன்மையை மிகைப்படுத்திப் பார்த்தது. முதலில் வட கிழக்குப் பகுதியையும் பின்னர் சீனாவின் எஞ்கிய பகுதிகளையும் காலனியாக்குவதற்கு ஜப்பான் செய்த முயற்சியை அலட்சியம் செய்யும்படியும், சீனாவின் பிரதேச ஆதிபத்திய உரிமையை பாதுகாக்கும் முக்கிய துவத்தையும்—அந்த சமயத்திலிருந்த விரிவான ஜப்பானிய எதிர்ப்பு இயக்கத்திலிருந்து கட்சியை அந்நியப்படுத்துவதற்கு காரணமாக இருந்த ஒரு தவறான கணிப்பு — ''இடதுசாரிகள்'' அலட்சியப்படுத்றுவதற்கு காரணமாக இருந்தது.

மறுபுறத்தில், ஏகாதிபத்திய அரசுகளுக்கும் வரவிருக்கும் ஏகாதிபத்திய யுத்த நெருக்கடிக்குமிடையே தீவிரமாகிக் கொண்டிருந்த முரண்பாடுகளையும் மோதல்களையும் அவர்கள் அலட்சியப் படுத்தினார்கள். இந்த முறையில், ஜப்பானுக்கும் இதர ஏகாதிபத்திய அரசுகளுக்குமிடையே இருந்த முரண்பாடுகளையும் பிளவுகளையும் ஜப்பானிய எதிர்ப்புப் போராட்டத்திற்கு சாதகமாகப் பயன்படுத்தவில்லை.

சீனப் புரட்சியின் மீது தொடுத்த அவர்களது தாக்குதலால்

உள்நாட்டு ஆளும் வர்க்கங்களின் ஒருமித்த தன்மையின்மீது அவர்களது அதிகமான அழுத்தத்தின் காரணமாகவும், மற்றும் எதிர்ப் புரட்சி கோஷ்டிகளின் ஒற்றுமையின் மீது அவர்களது அதிகமான அழுத்தத்தின் காரணமாகவும், அவர்கள் எல்லா ஆளுங்கோஷ்டிகளையும் சம அளவுக்கு பிற்போக்குவாதிகளாகக் கருதினார்கள். ஆளுங்கோஷ்டிகள் அரசியல் பொருளாதாச் மாற்றங்களுக்கு உள்ளாக்கிக் கொண்டிருந்தார்கள். என்ற விவரத்தை அவர்கள் அலட்சியப்படுத்தினார்கள் அதிகாரத்திற்கு வெளியே இருந்த தேசிய பூர்ஷ்வாக்களுக்கும், அதிகாரத்திலிருந்த தரகு முதலாளி மற்றும் நிலப்பிரபு வர்க்கங்களுக்கும் இடையேயும், மற்றும் தேசிய பூர்ஷ்வாக்களுக்கும் ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளுக்குமிடையேயும் இருந்த எல்லா முரண்பாடுகளையும், ஆளும் வர்க்கங்களுக்கிடையே இருந்த எல்லா முரண்பாடுகளையும் அவர்கள் ஒதுக்கித் தள்ளினார்கள். ஒரு நெளிவு சுளிவான கொள்கையை மிகமிக மூர்க்கத்தனமான மற்றும் மிகமிகச் சக்திவாய்ந்த எதிரியைத் தனிமைப்படுத்தித் தாக்குவதற்கு இத்தகைய முரண்பாடுகளைப் பயன்படுத்துவதால் புரட்சி சக்திகளைப் பலப்படுத்தும் ஒரு கொள்கையை கையாளுவதைச் சாத்தியமற்றதாகச் செய்தது.

2. கோமிங்டாங் ஆட்சியின் நெருக்கடிகையும் புரட்சி சக்திகளின் உணர்ச்சியையும் ''இடதுசாரி''ப் பாதையின் தலைவர்கள் அதிகமாக மதிப்பிட்டார்கள். இதன் விளைவாக இரண்டு ஆட்சிகளுக்கிடையே இருந்த விரோத குரோதத்தையும் வர்க்கங்களுக்கிடையே தீர்மானமான ஒரு போராட்டத்திற்கான தேவையையும் அவர்கள் ஒருபக்கவாட்டில் வலியுறுத்திக் கூறினார்கள். சீனாவில் இரண்டு ஆட்சிகள் கோமிங்டாங் ஆட்சியும். சிவப்பு ஆட்சியும் மட்டுமே இருந்தனவென்று அடித்துக் கூறினார்கள். மற்றும், நான்கிங்திற்கு விரோதமாக இருந்த மூன்றாவது ஒரு ஆட்சி இருப்பதின் சாத்தியப்பாட்டையும் மறுத்துக் கூறினார்கள்.

அதனால்தான், ''இடதுசாரி''ப் பாதையின் தலைவர்கள் தேசியப் பாதுகாப்பு அரசாங்க கோஷத்தை நிராகரித்தார்கள். தேசியப் பாதுகாப்பு அரசாங்கம் துரோகத் தனமான நான்கிங் அரசாங்கமாகவும் இருக்காது. அல்லது, சகல அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல் கோஷ்டிகளின் கூட்டணியின் மீது உருவாக்கப் பட்டதெரு ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக அரசாங்கமாக அது இருக்கும். அந்த சமயத்தில், துரோகத்தனமான நான்கிங் அரசாங்கத்தை, பறந்து பட்ட வெகுஜனங்கள் எதிர்த்த போத

லும், ஒரு தொழிலாளி விவசாயி ஜனநாயக அரசாங்கத்தை நிறுவுவதற்கு அவர்கள் இன்னும் தயங்கவில்லை. இரண்டு விரோதகுரோத அரசாங்கங்களுக்கிடையே நடுவழியில் எங்கோ இத்தகைய மக்கள் இன்னும் காத்துக் கொண்டிருந்தார்கள் என்ற விவரத்தையும் அவர்கள் ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக அரசாங்கம் ஒன்றினைக் கோரினாாகள் என்ற விவரத்தையும் கணக்கெடுத்துக் கொள்வதற்கு, ''இடதுசாரிகள்'' தவறினார்கள். இதன் விளைவாக, துரோகத்தனமான நான்கிங் அரசாங்கத்தினை, ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக அரசாங்கத்தால் அகற்றப்பட வேண்டும் என்ற கோஷத்தை ''இடதுசாரிகள்'' முன் வைக்கவில்லை.

இந்தத் தவறு இயற்கையாகவே இன்னொரு தவறுக்கு வழிநடத்திச் சென்றது; ஹுன்னான், ஹுப்பே, கியாங்சி ஆகிய மாகாணங்களில் ஒரு மாகாணம் அல்லது மூன்று மாகாணங்களின் புரட்சியின் வெற்றியைப் பெறும் பொருட்டு, ஒரு அல்லது சிறு பெறும் நகரங்களைக் கைப்பற்றும் முயற்சிக்கு வழி நடத்திச் சென்றது. மூன்றாவது எதிர் சுற்றி வளைக்கும் இயக்கத்திற்குப் பிறகு, ''இடதுசாரிகள்'' துருப்புகளுக்கு ஓய்வு எடுப்பதற்கு அவகாசமோ, மாற்றிக்கொள்வதற்கு அவகாசமோ அனுமதிப்பதற்கு மறுத்தார்கள். மேலும், ஒன்று அல்லது இரண்டு பெரிய அல்லது இரண்டாந்தர நகரங்களைக் கைப்பற்றும் பொருட்டு எதிரியைத் துரத்திக கொண்டே இருககும்படியும் சச்சரவுகளைக் கொடுத்தார்கள். நிலைமையைப் பற்றி சரியற்ற ஆய்வின் விளைவாக ஒரு அல்லது பல மகாணங்களில் புரட்சிகரமான வெற்றியைப் பெறும் சாத்தியப்பாட்டினை அவர்கள் வலியுறுத்தினார்கள். மேலும் கட்சியினுடைய கேந்திரமான ஒரு கடமையாக அதனை நிறைவேற்றுவதற்கும் அவர்கள் முயற்சித்தார்கள்.

### 4. புரட்சியின் தணிவான அலை இருந்த காலக் கட்டத்தில் ஜப்பானுக்கும் சியாங்காய்-ஷேக்கிற்கும் எதிரான போராட்டம்.

சியாங்காய்-ஷேக் நீண்ட காலத்திற்கு பதவின்றி இருக்கவில்லை. ஜப்பானித் ஏகாதிபத்திய வாதிகளின் உதவியோடும் வாங்சிங்-வெய் கும்பலின் ஒத்துழைப்பினாலும், அவன் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டான். 1932 ஜனவரியில், அரசியல் அரங்கத்தில் அவர்கள் மீண்டும் தோன்றிய உடனேயே,

சியாங்காய் - ஷேக்கும், வாங்சிங்-வெய்யும் நாடு தழுவிய ஜப்பானிய எதிர்ப்பு இயக்கத்தை ஒடுக்கவும், ஷாங்காயில் ஜப்பானிய படையெடுப்பாளர்களுக்கு எதிராக நடைபெற்றுக் கொண்டிருந்த போராட்டத்தை நாசப்படுத்தவும் ஆரம்பித்தார்கள். ஷாங்காய் யுத்த நிறுத்த உடன்பாடு கையெழுத்தான உடன் ஹூப்பே - ஹோனான் - அன்வெய் ஏரியாவில் செஞ்சேனைக்கு எதிராக, சியாங் அவனுடைய சுற்றி வளைக்கும் இயக்கங்களை உடனடியாக மீண்டும் ஆரம்பித்தான். சி.சி. கும்பலோடு[2] கூடவே தேசிய மீட்சிக்கான கழகத்தையும் (அல்லது நீலச் சட்டை கழகத்தையும்)—இவ்விரண்டு ஸ்தாபனங்களும் கம்யூனிஸ்ட் கட்சியைப் புறக்கணிக்கவும், தேசபக்த ஜனநாயக இயக்கங்களை ஒடுக்கவும் மற்றும் கோமிங்டாங்கிற்குள்ளே இருந்த சியாங் எதிர்ப்பு கோஷ்டிகளை சீர்குலைக்கவும் மிகமிக நயவஞ்சகமான, மிகமிக காட்டுமிராண்டித் தனமான முறைகளை கையாண்டார்கள்.—அவன் நிறுவினான். கம்யூனிஸ்ட் கட்சியை எதிர்ப்பது என்ற கோஷத்தின் கீழ், "தேசிய அவசர நிலை மாநாடு" என்று சொல்லப்பட்ட மாநாட்டைக் கூட்டி அவனுடைய பிற்போக்கு ஆட்சியைப் பலப்படுத்துவதற்காக, எதிர்ப்புரட்சி ஐக்கிய முன்னணி ஒன்றை சியாங் அமைத்தான், இந்தக் காலக்கட்டத்தில், புரட்சி தற்காலிகமாக தாழ்வான தொரு அலையில் மூழ்கியிருந்தது.

புரட்சி அலை குறைந்து கொண்டிருந்த இந்தக் காலக்கட்டத்திலும் கூட, சீன மக்கள் ஜப்பானிய ஆக்கிரமிம்பாளர்களுக்கு எதிராகவும், சியாங்காய் - ஷேக்கிற்கு எதிராகவும் தங்களது போராட்டத்தை தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தார்கள்.

ஷாங்காய் யுத்த நிறுத்த உடன்பாடு கையெழுத்தான பிறகு, ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருந்தார்கள். 1933 ஜனவரியில் ஷான்ஹைகுவான் கணவாயை ஊடுருவிக்கொண்டு ஜப்பானிய ராணுவ ஜிஹோலின்மீது ஒரு தாக்குதலைத் தொடுத்தது. மேலும் கோமிங்டாங் ராணுவம் எந்த விதமான எதிர்ப்பையும் கொடுக்காமல் தப்பு ஓடியதால், ஜிஹோல் மற்றும் வடகிழக்கு சகார் மாகாணங்கள் முழுதும் ஜப்பானியர்களின் பிடிக்குள் சீக்கிரத்திலேயே விழுந்து விட்டன. மார்ச் மத்தியில், பெரும் சுவரிலிருந்த கணவாய்களின் மீது முழுமையானதொரு தாக்குதலை அவர்கள் கட்டவிழ்த்து விட்டார்கள். அப்பொழுது பீகிங் - டியன்ட்ஸின் ஏரியாவில் முகாமிட்டிருந்த கோமிண்டாங்

துருப்புக்ர்ள் எதிரிப்படைகளைக் காட்டிலும் எண்ணிக்கையில் பத்து மடங்குக்கும் அதிகமாக இருந்தன. ஆனால், சியாங்காய்-ஷேக்கின் ராணுவத்தை போராடாதபடி தடுத்து விட்டான்.

அதன் விளைவாக, சீனப்பெருஞ்சுவரில் இருந்த எல்லாக் கணவாய்களையும் கைப்பற்றியதும் ஜப்பானிய துருப்புக்கள் முன்னோக்கி விரைந்து சென்று பீகிங்கையும், டீயன்ட்ஸின்னையும் நெருங்கி வந்தன. மே 31-ஆம் தேதியன்று கோமிங்டாங் அரசாங்கம் ஜப்பானியர்களோடு டான்கு உடன்பாட்டில் கையொப்பமிட்டது; இந்த உடன்பாட்டின்படி, மூன்று வடகிழக்கு மாநிலங்களையும் ஜிஹோலையும் ஜப்பான் ஆக்கிரமித்ததை நடைமுறையில் அங்கீகரித்தது; மேலும், கிழக்கத்திய ஹோப்பெய்யை ஒரு ராணுவ நடவடிக்கையுள்ள பிரதேசமாக வரையறுத்துக் கொண்டு. இந்த முறையில் வடசீனா முழுவதிலும் ஜப்பான் அதனுடைய கட்டுப்பாட்டினை விரிவுபடுத்துவதைச் சாத்தியமானதாகவும் செய்தது.

அதனுடைய துரோகத்தனமான நடவடிக்கைகளை மூடி மறைப்பதற்கு, சியாங்காய்-ஷேக் அரசாங்கம், செஞ்சேனைபின் அணி தளத்தைச் சீர்குலைப்பதாக அவதூறாக குற்றஞ் சாட்டிற்று; மேலும், "ஒரு அந்நிய எதிரியை எதிர்த்துப் போராடுவதற்கு முன்பு உள்நாட்டுக் கலகம் ஒடுக்கப்பட்டாக வேண்டும்." என்ற எதிர்ப் புரட்சி கோஷத்தையும் பரப்பிற்று. சியாங்காய் - ஷேக் அரசாங்கத்தின் அபாயகரமான பிரச்சாரத்தை தவிடு பொடியாக்குவதற்கும், ஜப்பானை எதிர்ப்பதற்கு செஞ்சேனைக்கு இருந்த உறுதியினைக் காட்டுவதற்கும் மத்திய தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் ஜனநாயக அரசாங்கமும், புரட்சி ராணுவக் குழுவும் 1933 ஜனவரி, 17இல் ஒரு பிரகடனத்தை விடுத்தன. அதன்படி சிவப்பு ஏரியாக்களின் மீது தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும், மக்களின் ஜனநாயக உரிமைக்ள் உத்திரவாதம் செய்யப்பட வேண்டும், பரந்துபட்ட வெகு ஜனங்கள் ஆயுதபாணிகளாக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில், எந்த ராணுவத்தோடும் ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்கு ஒரு உடன்பாடு செய்து கொள்வதற்கு அவர்கள் விரும்பிக் கொண்டிருந்தார்கள் என்பதை அறிவித்தது.

கோமிங்டாங் கட்சியின் அவதூறான பொய்கள் இந்த முறையில் முற்றிலும் அம்பலப் படுத்தப்பட்டிருந்தன. அதனுடைய கம்யூனிஸ்ட் எதிர்ப்புற உள்நாட்டு யுத்தக் கொள்கையினால், கோமிங்டாங் உறுப்பினர்களிடையே அதிருப்தி வளர்ந்துக்

கொண்டிருந்தது. மேலும், அப்பொழுது செஞ்சேனையைச் சுற்றி வளைத்துக் கொண்டிருந்த கோமிங்டாங் துருப்புகளின் தெம்பினைப் பிரகடனம் புறக்கணிக்கச் செய்தது.

சியாங்காய்-ஷேக் மித மிஞ்சியதொருக் கடினமான நிலைமையில் தான் இருப்பதைக் கண்டான்.

சீனாவைத் தன்னுடைய ஒரே ஆதிக்கத்தின் கீழ் ஒரு காலனி ஆக்குவதற்கு ஜப்பான் செய்த முயற்சிகள் பிற்போக்கு சியாங் காய்-ஷேக் கும்பலின் துரோகத்தனமான நடவடிக்கைகளும் சீனாவின் ஆளும் முகாமில் பிளவினை விரிவடையச் செய்தன. 1933 ஆம் ஆண்டில் பெங் யூ - ஷியாங்கும், சாய் டிங் - காயும் ஜப்பானுக்கு எதிரான பொதுவானதொரு போராட்டத்தில் கம்யூனிஸ்டுகளோடு ஒன்று படுவதற்கு நடவடிக்கைகளை எடுத்தார்கள்.

பெருஞ்சுவரின் எல்லாக் கணவாய்களையும் கைப்பற்றிக் கொண்டும், மற்றும் லுவான் நதியின் கிழக்கே உள்ள ஏரியாவை கைப்பற்றிக் கொண்டும், சகாரைக் தாக்குவதற்கும் அந்த மாகாணத்தின் கிழக்குப் பகுதியிலிருந்த இதர சிராமப் பிரதேசங் களையும், டோலூனையும் கைப்பற்றுவதற்குப் ஜப்பானியர்கள் பொம்மை படைகளைத் தூண்டி விட்டார்கள். 1933 மே மாதத்தில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கின் கீழும் மற்றும் அதன் உதவியோடும் ஃபெங் யூ-ஷியாங்கும் மற்றவர் களும், சான்ஷிபாசோ, மற்றும் சகார் ஆகிய பிர தேசங்களில் ஜப்பானிய எதிர்ப்பு நேச ராணுவத்தை அமைத்து, ஜப்பானின் மீது யுத்தப் பிரகடனம் செய்தார்கள். கடினமான போராட்டத் திற்குப்பிறகு, அவர்கள் சகாரின் வடக்குப் பகுதியை மீட்டார் கள். அதற்குப் பிறகு, ஜப்பானிய எதிர்ப்பு நேச ராணுவத்தைத் தாக்குவதில் சியாங்காய்-ஷேக், ஜப்பானிய படைகளோடு அவனது படைகளை ஒன்று சேர்த்துக் கொண்டான். ஃபெங் - யு - ஷியாங் சகாரை விட்டுச் செல்லும்படி நிர்ப்பந்திக்கப் பட்டான்; அப்போது கிழக்கு ஹோப்பையை நோக்கிச் சென்று கொண்டிருந்த சீ-ஹங்-சாங்கினால் தலைமைத் தாங்கப்பட்ட ஜப்பானிய எதிர்ப்புப் படைகள், ஜப்பானியப் படைகளாலும், மற்றும் கியாங்சின் படைகளாலும் மிதமிஞ்சப்பட்டு, அக்டோபர் மாதத்தில் முறியடிக்கப்பட்டது.

பத்தொன்பதாவது வழி சேனையைச் சேர்ந்த சாங் டிங் - காய்யும் மற்றும் இதர அதிகாரிகளும், ''கம்யூனிஸ்டுகளை

ஒழித்துக் கட்டுவதற்கு" ஃபூக்கியனுக்கு அனுப்பப்பட்டிருந்தார்கள்; செஞ்சேனையை எதிர்த்து போராடுவதினால் எதையும் உண்டாக்க முடியாது என்பதை அவர்கள் படிப்படியாக உணர ஆரம்பித்தார்கள். ஆகவே, 1933 நவம்பரில், லீசீ-சென்னினால் தலைமைத் தாங்கப்பட்ட கோமிங்டாங் பகுதியோடு சேர்ந்துக் கொண்டு, அவர்கள் ஃபூக்கியனில் மக்கள் அரசாங்கத்தை ஏற்படுத்தினார்கள்; சியாங்காய் - ஷேக்கின் அரசாங்கத்தோடு பகிரங்கமாக உறவை முறித்துக் கொண்டார்கள்; மேலும் ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்காகவும் சியாங்காய் - ஷேக்கை எதிர்த்துப் போராடுவதற்காகவும் அவர்கள் செஞ்சேனையோடுஒரு உடன் பாட்டினைச் செய்து கொண்டார்கள்.

ஃபூக்கியன் நிகழ்ச்சி சிவப்பு ஏரியாவில் ஐந்தாவது எதிர் சுற்றிவளைத்தல் இயக்கத்தோடு ஏககாலத்தில் நடந்தது. ஃபூக்கியனில் மக்கள் அரசாங்கம் இருந்ததை, எதிரியின் சுற்றி வளைத்தலை நொறுக்கித் தள்ளுவதற்கும், மற்றும் அதனுடைய புரட்சிதளத்தை விஸ்தரிப்பதற்குமான அதனுடைய போராட்டத்தில் செஞ்சேனையினால் நல்ல முறையில் பயன்படுத்தியிருக்க முடியும். ஆகவே, பத்தொன்பதாவது வழி சேனையோடு ஒரு யுத்தநிருத்த உடன்பாடு செய்துக் கொண்டதிலும், ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்கு அந்த சேனையை ஊக்குவித்ததிலும், மற்றும், சியாங்காய்-ஷேக்கை எதிர்ப்பதற்கு, அந்தச் சேனையைக் கட்சி ஊக்குவித்ததிலும், கட்சி சரியாகவே நடந்துக் கொண்டது.

ஆனால், யுத்த தந்திர ரீதியாகப் பார்த்தால், "இடதுசாரி" பாதையை வெளிப்படுத்தியவர்கள் முற்றிலும் வேறுபட்டதொரு கொள்கையைப் பின் பற்றினார்கள். பத்தொன்பதாவது வழி சேனையின் சாகசங்களோடு ஒருங்கிணைந்து கிழக்கத்திய அரங்கில் சியாங்கின் படைகளின்மீது அவர்கள் ஒரு திடீர்தாக்குதலை, தொடுத்திருக்க முடியும்: இப்படிப்பட்டதொரு தாக்குதல் மத்திய ஏரியாவில் சியாங்கினுடைய ஐந்தாவது சுற்றிவளைத்தலை நொறுக்கித் தள்ளியிருக்கும். ஆனால், அவர்கள் இதைச் செய்யவில்லை.

1931ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் தேதி தோழர் சின்பாங்-ஷியனால் தலைமை தாங்கப்பட்ட தாற்காலிக மத்தியக்கமிட்டி ஸ்தாபிக்கப்பட்ட கால கட்டத்திலிருந்து 1935 ஜனவரியில் சுன்யீ மகாநாடு வரையிலும், மூன்றாவது "இடதுசாரி" பாதையின், தொடர்ச்சியான அபிவிருத்தியின் ஒரு கால கட்டமாக இருந்தது.

1933 ஆரம்பத்தில், கட்சியின் தலைமைக் காரியாலயம் ஷாங்காயிலிருந்து தெற்கு கியாங்சியிலிருந்த புரட்சி தளத்திற்கு மாற்றப்பட்டது. இதற்கு முன்பு, ''இடதுசாரி'' பானதயின் தலைவர்கள் புரட்சிகரமான இயக்கத்திற்கும் மற்றும் செப்டம்பர் 18-ஆம் தேதி சம்பவத்திற்குப் பிறகு கோமிங்டாங் கட்டுப்பாட்டி லிருந்த ஜனசெல்வாக்குமிக்க ஜப்பானிய எதிர்ப்பு இயக்கத்திற்கும் அவர்கள் உண்டாக்கியிருந்த நாசநஷ்டத்தை அலட்சியப்படுத்தி விட்டு, புரட்சிகரமான நிலைமை கடந்துச் சென்று வளர்ந்து கொண்டிருப்பதாக ஒவ்வொரு நாளும் குறுட்டுத்தனமாக மதிப்பிட்டிருந்தார்கள். சீனப்புரட்சியின் சீரற்ற அபிவிருத்தி விதியை அவர்கள் மறுத்துக் கூறினார்கள்; மேலும், தொழிலாளி வர்க்க இயக்கம். விவசாயி இயக்கத்திற்குப்பின்னால் பின்தாங்கிக் கொண்டிருந்தது என்ற கருத்தோட்டத்தையும் மற்றும் வடக்கி லிருந்த புரட்சி இயக்கம் தெற்கிலிருந்த புரட்சி இயக்கத்தைக் காட்டிலும் பின்னாலிருந்தது என்ற கருத்தோட்டத்தையும், ''வலதுசாரி சந்தர்ப்பவாதம்'' என்ற கருத்தோட்டம் என்று முத்திரை குத்தினார்கள். நாட்டின் எல்லா பெரிய நகரங்களிலும் வேலைநிறுத்த அலை வேகப்பட்டுக் கொண்டிருந்தது என்றும் மற்றும் வடசீனாமுழுவதிலும் சிவப்பு ஆட்சியை நிர்மாணிப்பது சாத்தியமாக இருந்தது என்றும் அவர்கள் பிரகடனம்செய்தார் கள். அந்த சமயத்தில், புரட்சிப் போராட்டம் இரண்டு பாதை களுக்கு இடையே ஆன—சிவப்பு ஆட்சி பாதைக்கும் சீனாவை காலனி ஆக்குவதற்கு வழிநடத்திச் செல்லும் பாதைக்கு மிடையே—ஒரு போராட்டமாக இருந்ததென்று மிகமிகச் சிறிதள வேனும் அஸ்திவாரமில்லாமல் அவர்கள் அடித்துக் கூறினார்கள்; வேறு வார்த்தைகளில் சொன்னால், ''வர்க்கங்களுக்கிடையே ஒரு தீர்மானமானதொரு போராட்டமாக'' என்று அவர்களால் அழைக்கப் பெற்ற ஒரு போராட்டமாக அது இருந்தது. ''தீவிர மான முன்னேறித் தாக்குதலையும்'' மற்றும் பெரிய நகரங்களைக் கைப்பற்றுவதுமான ஒரு கொள்கையை இன்னும் கையாளுவது மிகமிக முக்கியமான கடமையாக அப்பொழுது இருந்தது என்று அவர்கள் கருதினார்கள். சட்டபூர்வமான போராட்ட உருவங் களை பயன்படுத்துவதை அவர்கள் எதிர்த்தார்கள்; மற்றும், பகிரங்க வேலையைத் தலைமறைவான வேலையோடு சேர்த்து குழப்பிக் கொண்டார்கள், மாறாக, எதிரிக்கு புரட்சி சக்தி களுக்குமிடையே வலிமையில் இருந்து அபரிமிதமான அசமத் துவத்தை அலட்சியப்படுத்திக் கொண்டு, அவர்கள், தொழி

லாளர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே வேலை நிறுத்தங்களை அடிக்கடி ஏற்பாடு செய்தார்கள், ஆர்ப்பாட்டங்களையும், மற்றும் ஆயுதமேந்திய பேரெழுச்சிகளையும்கூட ஏற்பாடு செய்தார்கள். இந்த வீரச் செயல்வாத கொள்கையின் காரணமாக, கோமிங்டாங் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்களில் கட்சி கடுமையான நஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்தது.

மறுபுறத்தில், கட்சிக்குள் "வலதுசாரித்திரிபு" என்று சொல்லப்பட்ட திரிபுதான், பிரதான அபாயம் என்று அவர்கள் கூறினார்கள். மற்றும் மத்திய ஏரியாவில் பின்பற்றப்பட்ட சரியான பாதையைப் "பணக்கார விவசாயிகளின் பாதை" என்று அவதூறாக முத்திரை குத்தினார்கள். கியாங்சியில் புரட்சி தளத்திற்குள் நுழைந்தபிறகு மத்திய ஏரியாவில் செயல்பட்டுக் கொண்டிருந்த சரியான கட்சித் தலைமையையும் ராணுவத் தலைமையையும் அவர்கள் மாற்றினார்கள். அவர்கள், தோழர் மாசே-துங்கின் சரியான விவசாயக் கொள்கையை நிராகரித்தார்கள். நிலச் சுவான்தார்களுக்கு எந்தவிதமான நிலத்தையும் ஒதுக்கீடு செய்யாத ஒரு மிதமிஞ்சிய "இடதுசாரி" கொள்கையையும், பணக்கார விவசாயிகளுக்கு மோசமான நிலத்தைமட்டும் ஒதுக்கீடு செய்யும் ஒரு மிதமிஞ்சிய "இடதுசாரி" கொள்கையையும் அவர்கள் சிவப்பு ஏரியாக்களில் அமல் நடத்தினார்கள். நிலச் சுவான்தார்களுடைய நிலத்தைப் பறிமுதல் செய்த பிறகு, நிலச் சுவான்தார்களுக்கு நிலத்தில் எந்த விதமான பங்குபெறும் உரிமையும் பறிக்கப்பட வேண்டுமென்றும் பணக்கார விவசாயிகள் சம்பந்தப்பட்ட மட்டில், ஒப்பு நோக்கி பார்க்கும்பொழுது, மோசமான தரமுடைய சாகுபடிக்கு லாயக்கான நிலம் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்றும் அவர்களுடைய விவசாய சட்டத்தில் வரையறுக்கப்பட்டிருந்தது. பணக்கார விவசாயிகள் சம்பந்தப்பட்ட மட்டில் அவர்களுக்கு புதிதாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலத்தைப் பயிர் செய்வதற்குத் தேவையான கருவிகளும், பிராணிகளும் மட்டுமே, வைத்திருக்க முடியும்; அதற்கு உபரியான எல்லா கருவிகளும் பிராணிகளும் பறிமுதல் செய்யப்படுவதாக இருந்தன. "அரசியல் விளக்கத்தில" பணக்கார விவசாயிகளுக்கு எந்த விதமான ஜனநாயக உரிமைகளும் அனுமதிக்கப்படக் கூடாது என்று வரையறுக்கப்பட்டிருந்தது. சிவப்பு ஆட்சியின் கீழ் முதலாளித்துவத் தன்மை வாய்ந்த சமுதாயப் பகுதியினர் அனைவரின்பாலும், உழைப்பு, பொருளாதாரம், மற்றும் அரசியல் அதிகாரம் சம்பந்தப்பட்ட

மட்டில் அவர்கள் அதிதீவிர 'இடதுசாரி'' கொள்கைகளைக் கடை பிடித்தார்கள். அதாவது, விவசாயிகள் நகர்ப்புற குட்டிமுதலாளி வர்க்கத்தின் மிக கீழ்மட்ட பகுதியைச் சேர்ந்தவர் களைத் தவிர, இதர எல்லா சமுதாய நபர்களுக்கு எதிராகவும் வித்தியாசப்படுத்தப்படாத ஒரு போராட்டம் நடத்தப்பட்டது. மத்திய ஏரியாவிற்கும் எல்லைப்புற ஏரியாக்களுக்கும் இடையே அபிவிருத்தியிலுள்ள சீரற்ற தன்மையை மறுத்துக் கொண்டு கட்சியின் கொள்கை பல்வேறு ஏரியாக்களிலும் வேறுபட்டிருக்க வேண்டும் என்ற முன்மொழிவை அவர்கள் நிராகரித்தார்கள். தொழிலாளர்கள்—விவசாயிகளின் ஜனநாயக அரசாங்கத்தின் அடிப்படையான கலாச்சாரக் கொள்கையும், கல்வி கொள்கை யும் கம்யூனிஸ்டு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டி ருக்க வேண்டும் என்று அவர்கள் பிரகடனம் செய்துள்ளார்கள். மேலும், எதிர்ப்புரட்சி வாதிகளை ஒழித்துக் கட்டுவதிலும் இன்னும் பல இதர விஷயங்களிலும் அவர்கள் மிதமிஞ்சியதொரு ''இடது சாரி''க் கொள்கையை நிறைவேற்றினார்கள். இந்த முறையில், அவர்களுடைய தவறான பாதை மத்திய ஏரியா விலும், சுற்றுப்புற பிரதேசங்களிலும் மேலும் அமல்படுத்தப் பட்டது.

''இடதுசாரிகள்'' ஃபூக்கியன் நிகழ்ச்சியின்பாலும், முற்றிலும் தவறானதொருக் கொள்கையைக் கையாண்டார்கள்.

கோமிங்டாங்கிற்குள்ளும் அதனுடைய அரசாங்கத்திற் குள்ளும் எல்லா கோஷ்டிகளையும் கும்பல்களையும் வித்தியாசப் படுத்திப் பார்க்காமல், எதிர்ப்புரட்சி வாதிகளாக அவர்கள் கருதினார்கள். கோமிங்டாங்கிற்குள் ஏற்பட்ட பிளவின் வெளிப் படுத்தலாக இருந்த ஃபூக்கியனியில் அமைந்த மக்கள் அரசாங் கத்தை அவர்கள் புதியதொரு தந்திரமாகத்தான் கருதினார்கள். சியாங்காய்-ஷேக் அரசாங்கத்திற்கும் ஃபூக்கியன் அரசாங்கத்திற் கும் மற்றும் மூன்றாவது வகைப்பட்டதொரு அரசாங்கம் இருந்ததற்குமிடையே எந்தவித வேறுபாட்டையும் அவர்கள் மறுத்தார்கள் ஃபூக்கியனில் இருந்த மக்கள் அரசாங்கத்திற்கு சுறுசுறுப்பான உதவியைக் கொடுப்பதற்குப் பதிலாக, சிவப்பு ஆட்சியிலிருந்து வேறுபட்டதொரு அரசியல் திட்டத்தைக் கடை பிடித்ததற்காக, அவர்கள் அந்த அரசாங்கத்தை கண்டனம் செய்தார்கள். ஃபூக்கியனில் இருந்து பரந்துபட்ட வெகுஜனங் கள் வீருகொண்டு எழுந்து, ''மூன்றாவது ஒரு பாதையை தேடுபவர்களின் வீழ்ச்சியை வேகப்படுத்துவதற்கு'' சுயேச்சை

யான நடவடிக்கை எடுக்கும்படி அவர்கள் அறைகூவல் கூட விடுத்தார்கள்;

எனவே, ஃபூக்கியனில் இருந்த மக்கள் அரசாங்கம் மூன்று அம்சங்களின் காரணமாக, 1934-ஆம் ஆண்டில் வீழ்ச்சி அடைந்தது. சியாங்காய்-ஷேக்கின் அதிகபலம் வாய்ந்த படைகளால் தொடுக்கப்பட்ட தாக்குதல்; அதனுடைய சொந்த அணிகளுக்குள்ளே இருந்த பிளவுகள்; மூன்றாவது, "இடது சாரி" பாதையின் தவறான கொள்கை.

"இடதுசாரிகள்" மத்திய ஏரியாவில் இருந்த சரியானகட்டுத் தலைமையையும் ராணுவத் தலைமையையும் ஒதுக்கி தள்ளினார்கள். ஆனால், தோழர் மா சே-துங்கின் சரியான யுத்த தந்திர கோட்பாடுகளின் ஆழமான செல்வாக்கின் காரணமாக, தவறான "இடதுசாரி"ப் பாதையைச் செல்வாக்கு ஊடுறுவுவதற்கு முன்பாக, 1933-ஆம் ஆண்டு வசந்த காலத்தில், நான்காவது எதிர்சுற்றி வளைத்தல் இயக்கத்தைச் செஞ்சேனை இன்னும் வெற்றி பெற முடிந்தது.

மூன்றாவது எதிர்சுற்றி வளைத்தல் இயக்கத்தின் வெற்றிககு பிறகு, புரட்சி தளங்களுக்குள் இருந்த எதிர்புரட்சி கோட்டைகள் ஒழித்துக் கட்டப்பட்டு, புரட்சி சக்திகளின் பின்னணி தளம் கெட்டிப்படுத்தப்பட்டது.

மத்திய ஏரியாவில், செஞ்சேனைக்கு எதிராக சியாங்காய்-ஷேக் தற்பாதுகாப்புப் போருக்கு மாற்றிக் கொண்டான்; ஆனால் அவனுடைய படைகளை ஹூப்பே-ஹோனான்—அன்வெய் ஏரியாவையும் மற்றும் ஹூங்கு ஏரியாவையும் தாக்குவதில் அவனது படைகளைக் குவித்தான்.

1932 ஜனவரியில், ஹூப்பே-ஹோனான்-அன்வெய் ஏரியாவுக்கு எதிராக அவனது தாக்குதலை தொடுத்த பொழுது, நான்காவது அரங்க ராணுவம் ஹூவாங்சுவானில் அவனுடைய அணி வரிசைகளை உடைத்தெறிந்து, அவனது பலமான படைகளை விரட்டி அடித்தது. அடித்தளப் பிரதேசம் ஷாங்செங், குஷி மற்றும் ஹோனானில் சின்சி, சின்-சியா-சாய் மற்றும் அன்வெய்யில் யூகி வரையிலும் விரிவுபடுத்தப்பட்டது. ஹூப்பே-ஹோனான் - அன்வெய் ஏரியா மகத்தான யுத்ததந்திர முக்கியத்துவமுடையதாக இருந்தது; அது யாங்ட்சி நதியின்மீது ஆதிக்கம் செலுத்திற்று. ஹாங்கோவ் மற்றும் வூச்சாங் அருகில் நிர்ப்பந்தம் கொண்டு வந்தது. அதனுடைய படைகள் பீகிங்—ஹாங்கோ ரயில்வேயையும் பயமுறுத்த முடிந்தது. ஜூலையில் சியாங்காய்-

ஷேக், ஹூப்பே - ஹோனான் - அன்வெய் ஏரியாவிற்கு எதிராக அவனுடைய நான்காவது சுற்றி வளைத்தல் இயக்கத்தை ஆரம்பித்தான். சிலிப்பிங் போராட்டத்தில் அவனது பிரதானப் படை முறியடிக்கப் பட்டது. ஆனால், கோமிங்டாங் படைகள் மிகவும் பலகீனமடைந்து விட்டன என்று நினைத்துக் கொண்டும் தங்களது கண்டிப்பான கவனம் அதன்பால் நான்காவது அரங்க ராணுவத்தின் தலைவர்கள் வெற்றி பெற்ற பிறகு, எதிர் சுற்றி வளைத்தலுக்கு தங்களது தயாரிப்புகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு தவறி விட்டார்கள். ஆகவே, எதிரி மற்றொரு தாக்கு தலை தொடுத்த பொழுது, சாதகமற்றதொரு நிலைமையில் அவர்கள் விடாப்பிடியானதொரு எதிர்ப்பைக் கொடுக்கும்படி நிர்ப்பந்திக்கப் பட்டிருந்தார்கள். இந்த முறையில், அவர்கள் கடுமையான நஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு 1932 அக்டோபரில், ஹூப்பே-ஹோனான்—அன்வெய் ஏரியாவிலிருந்து, அவர்கள் ஹோனான் வழியாகவும் ஷென்சி வழியாகவும் வடக்கு செச்சுனுக்குள் பின் வாங்க வேண்டியிருந்தது.

1932 இலையுதிர் காலத்தில் ஹோலாங் தலைமையின்கீழ் இருந்த செஞ்சேனையின் இரண்டாவது படை பிரிவு ஹீங்கு ஏரியாவிலிருந்து வடக்கு நோக்கிச் சென்றது. அதனுடைய முன்னணிப்படை சீக்கிரத்திலேயே ஹன்யாங்கிற்கு அருகில் நெருங்கி, வூகாங் மீது நிர்ப்பந்தம் கொண்டு வருவதற்கு ஒரு சாகசப் போராட்டத்தில் நான்காவது அரங்க சேனையோடு ஒருங்கிணைத்துக் கொண்டது. நான்காவது அரங்க ராணுவம் மேற்கு நோக்கி வளைந்துச் சென்ற பொழுது, இரண்டாவது படைப்பிரிவு ஹீங்கு ஏரியாவிலிருந்து வெளியேற்றியது. பின்னர் அது ஹூன்னான்—ஹூப்பே-செச்சுவான்-குவைச் சோவ் எல்லைகளுக்கு நகர்ந்து சென்று அங்கு புதியதொரு தள ஏரியாவை ஏற்படுத்திற்று.

1932 ஆம் ஆண்டு கோடையில் சியாங்காய்-ஷேக் ஐந்து லட்சம் பேர் கொண்ட பலமானதொரு படையைத் தயார் செய்து மத்திய ஏரியாவுக்கு எதிராக நான்காவது சுற்றி வளைத்தல் இயக்கத்தைத் துவக்கினான்.

இந்த இயக்கம், 1932 ஜூன் மாதத்திலிருந்து 1933 பிப்ரவரி வரையிலும் எட்டு மாதங்களுக்கு நீடித்தது, சின்னியில், பல பாதைகளில் வடக்கிலிருந்து தெற்கிற்கு முன்னேறுவதற்கான தந்திரங்களை எதிரியை சுற்றி வளைப்பதிலும் பெரிய படைகளை ஈடுபடுத்திற்று. ஹூவானில் (சின்ஷிக்கு மேற்கே) நடைபெற்ற

போராட்டத்தில், எதிரியினுடைய முழுமையானதொரு படைப் பிரிவு செயலற்றதாக்கப்பட்டது. அதற்குப் பிறகு, எதிரி அவனுடைய படைகளை மீண்டும் ஒழுங்குபடுத்தி மூன்று அணி வரிசைகளில் நான்பெங்கின் மீதும், குவாங்சாங் மீதும் அணி வகுத்துச் சென்றான். எதிரியின் பிரதானப்படை கிழக்கு அணி வரிசையாக இருந்தது; மேற்கத்திய படைப்பிரிவாக அமைந் திருந்த இரண்டு டிவிஷன்கள் செஞ்சேனையின் தாக்குதலுக்கு அம்பலமாகி இருந்தன. அதனுடைய நிலையை மாற்றிக் கொண்டபிறகும், ரகசியமாக படைகளை பலப்படுத்திக் கொண்டபிறகும், செஞ்சேனை, யீஹூவாங்கின் தென் பகுதியில் ஹூவாங்பீயின் இரண்டு எதிரிப் படைப் பிரிவுகளை முதலில் தாக்கி அவற்றைச் செயலற்றதாக்கிற்று. எதிரியின் பெரிய பல மான படைகள் வந்து சேர்ந்த பொழுது, செஞ்சேனை டன்பீ பக்கத்திலும் யீஹூவாங்கிற்குத் தெற்கே சாவோடாய்காங் கிற்குப் பக்கத்திலும் பிலிஷானிலும் லெய்துங்ஷேங்கிலும் செஞ் சேனை அதனுடையப் படைகளை ஈடுபடுத்தி எதிரிப் படைகளின் முழுமையானதொரு டிவிஷனை அழித்தொழிந்தது. இத்தகைய இரண்டு மோதல்களால் செஞ்சேனை, நான்காவது சுற்றி வளைத்தல் இயக்கத்தை முற்றிலும் நொறுக்கித் தள்ளியது.

செஞ்சேனையை விரிவு படுத்தி வெற்றிக்குப்பிறகு மத்திய ஏரியாவில் ஒரு இயக்கம் துவக்கப்பட்டது. ஸ்தல ஆயுதப் படை கள் உள்பட முதல் அரங்க ராணுவத்தில் அந்த சமயத்தில் சுமார் ஒரு லட்சம் பேர் கொண்டதாக இருந்தது. அடித்தள ஏரியாக் கள் ஹூன்னான், கியாங்சி, ஃபுக்கியன், குவாங்டுங் ஆகிய மாகாணங்களின் பகுதிகள்வரை விரிவுபடுத்தப் பட்டு முப்பது லட்சம் மக்கள் தொகையைக் கொண்டதாக இருந்தது.

1934 ஜனவரி 22 ஆம் தேதியன்று தொழிலாளிகள், விவசாயிகள், ராணுவ வீரர்களின் இரண்டாவது தேசிய காங்கிரஸ் ஜூசினில் கூட்டப்பட்டது. இந்தக் காங்கிரசில், அது வரை நிறைவேற்றப்பட்டிருந்த வேலையைத் தொகுத்துக் கூறும் ஓர் அறிக்கையை தோழர் மாசே-துங் சமர்ப்பித்தார்.

1933 ஆம் ஆண்டு கோடையில் அவனது ஐந்தவது சுற்றிவளைக் கும் இயக்கத்தின் தீவிரமான தயாரிப்புகளை, சியாய்காய்-ஷேக் ஆரம்பித்தான். ஜூசின்னை மையமாகக் கொண்டிருந்த சிவப்பு ஏரியாவைச் சுற்றிலும் படைவரிசை வீடுகளை நிர்மாணிக்கும் புதியதொரு யுத்த தந்திரத்தை அவன் நடைமுறைக்குக் கொண்டுவந்தான். அதேசமயத்தில், அவன் காட்டுமிரண்டித்

தனமானதொரு பொருளாதார முற்றுகையையும் திணித்தான். இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு தொழிலாளிகள் விவசாயிகள் மற்றும் ராணுவ வீரர்களின் இரண்டாவது தேசிய காங்கிரஸிற்கு முன்பு பொருளாதார நிர்மாணம் பற்றியப் பிரச்சினையைத் தோழர் மாசே-துங் முன்னுக்கு வைத்தார்.

புரட்சி யுத்தத்தில் பொருளாதார நிர்மாணத்தின் முக்கிய பாத்திரத்தைத் தோழர் மாசே-துங் சரியாக பகுத்து ஆராய்ந்தார். செஞ்சேனைக்கு யுத்த சப்ளைகளை உத்திரவாதம் செய்வதற்கும் மற்றும் மக்களின் வாழ்க்கை நிலைமைகளை அபிவிருத்தி செய்வதற்கும் பொருளாதார அரங்கத்தில் ஒரு போராட்டம் நடத்தப்பட வேண்டும் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இந்தக் கோட்பாட்டின் கீழ் குறிப்பிடத் தக்கப் பலன்கள் பெறப்பட்டன.

முதலாவதாக, செஞ்சேனைக்குச் சப்ளைகள் உத்தரவாதம் செய்யப்பட்டதனால், புரட்சி யுத்தத்திற்கு பொருளாதார நிர்மாணம் ஆதரவைக் கொடுத்தது.

சிவப்பு ஏரியாவின் பொருளாதார நிர்மாணத்தின் ஆரம்ப வேலை, விவசாய அபிவிருத்தியில் அடங்கியிருந்தது. மனித சக்தியையும் உழுபடைப் பிராணிகளையும் அறிவு பூர்வமாக பயன்படுத்துவது கேந்திரமானதொரு பிரச்சினையாக மாறியிருந்தது.

புரட்சி யுத்தம் நடைபெற்ற சமயத்தில் பல இளைஞர்களும் நடுத்தரவயதானவர்களும் முன்னணிக்குச் சென்றார்கள். ஆகவே, மனித சக்தியை ஸ்தாபன ரீதியாகச் செலுத்துவது, விசேஷமாக பெண்களிடையே ஸ்தாபனத்தை உருவாக்குவது, மகத்தான முக்கியத்துவத்தைப் பெற்றது. பரஸ்பர நலன் என்ற இஷ்டபூர்வமான கோட்பாட்டிற்கு ஏற்பவும் மற்றும், தனிப்பட்ட பொருளாதாரத்தின் அடிப்படையின் மீதும் மத்திய ஏரியாவில் பரஸ்பர உதவி சங்கங்கள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு சங்கமும் ஒரு கிராமம் அல்லது நகரிகத்தின் அனைத்து விவசாயிகளையும் கொண்டதாக இருந்தது. இந்த முறையில் பெருவாரியான எண்ணிக்கையில் பெண்கள் உற்பத்திப் பணியில் பங்கெடுப்பது சாத்தியமாக இருந்தது.

பரஸ்பர உதவியை ஏற்பாடு செய்வது தவிர, இத்தகைய சங்கங்கள் செஞ்சேனை வீரர்களின் குடும்பங்களுக்கும் மற்றும் அநாதையாக்கப்பட்டவர்களுக்கும் தங்களை ஆதரிப்பதற்கு குழந்தைகள் இல்லாத வயதானவர்களுக்கும் உதவியை விரிவுப்

படுத்தின.

மிகக்குறைவான உழுப்படை பிராணகளைப் பெற்றிருந்த அல்லது எந்தவிதமான உழுபடை பிராணிகளையும் பெற்றிராத விவாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுவதற்கு, மத்திய ஏரியாவில் கூட்டுறவு நிறுவனங்களும் அமைக்கப்பட்டன, கூட்டுறவு நிறுவணங்களின் உறுப்பினர்கள் பொதுவான உபயோகத்திற்கு பிராணிகளை வாங்குவதற்குத் தங்களுடைய நிதிகளை ஒன்றாகக் குவித்தார்கள். சிவப்பு ஏரியாக்களில் இத்தகைய பரஸ்பர உதவி அமைப்புகள் அமைக்கப்பட்டவுடன், சில இடங்களில் விவசாய உற்பத்தி புரட்சிக்கு முந்திய மட்டத்தை எட்டிப் பிடித்ததோடு மட்டுமின்றி, அதைத் தாண்டவும் செய்தன. இந்த முறையில் செஞ்சேனைக்குத் தேவையான பொருட்கள் உத்தரவாதம் செய்யப்பட்டன.

தொழில், (காகிதம், புகையிலை, டங்ஸ்டன், கற்பூரம், விவசாயக் கருவிகள், ரசாயண உரம், துணிமணிகள், மருந்துப் பொருட்கள், சர்க்கரை, உப்புப் பொருள்கள், உப்பு) பொருளாதாரத்தின் மூன்று வெவ்வேறு பகுதிகளில் அபிவிருத்தி செய்யப்பட்டது; அரசு, கூட்டுறவு மற்றும் தனியார் துறையில் அபிவிருத்தி செய்யப்பட்டன. முதலாவது குறிக்கோள்: சுயத்தேவைப் பூர்த்தியை அடைவது; இரண்டாவது குறிக்கோள்: வெளிப்பிரதேசங்களோடு வியாபாரம் செய்வதற்கான சரக்குகளை உற்பத்தி செய்வது. புரட்சி யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு-இவை இரண்டும் முக்கியமாக இருந்தன.

பொருளாதாரப் பணியில் கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களோடு வியாபராம் செய்வது முக்கியமானதொரு அம்சமாக இருந்தது. சராசரி ஒவ்வொரு நபருக்கும் ஒரு டான் அரிசி வீதம் ஒவ்வொறு ஆண்டிலும் முப்பது லட்சம் டான் குத்தப்படாத நெல் மத்திய ஏரியாவிலிருந்து அன்றாட தேவைகளுக்காக பரிவர்த்தனை செய்துக் கொள்வதில் வெளியே அனுப்பப்பட்டன. டங்ஸ்டனும் வெளியே அனுப்பட்டது. மத்திய ஏரியாவில் இருந்த முப்பது லட்சம் மக்களுக்கு தொன்னூறு லட்சம் யுவானுக்கு சமமான உப்பும் மற்றும் அறுபது லட்சம் யுவான் மதிப்புடைய பருத்தித் துணியும் ஒவ்வொரு ஆண்டும் தேவைப்பட்டது. சரியான விலைகளில் விற்பதற்காகவும் மற்றும் வெளிப்புற ஏரியாக்களிலிருந்து உப்பையும் துணியையும் பெற்றுத் தருவதற்காகவும் மத்திய தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் ஜனநாயக அரசாங்கம்

வியாபாரத்தை கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்தது. அரசாங்கம் பாத்திரங்களையும்கூட விநியோகித்திருந்தது.

சிவப்பு ஏரியாக்களில் தேசியப் பொருளாதாரம் மூன்று துறைகளாக அமைந்திருந்தது என்று தோழர் மாசே-துங் சுட்டிக் காட்டினார். அரசு, கூட்டுறவு, மற்றும் தனியார் துறைகளே அவை. சாத்தியமான எல்லா நடவடிக்கைகளாலும் பொருளாதாரத்தின் அரசு துறையை முதலாவதாகவும் முன்னுரிமைக் கொடுத்து அபிவிருத்தி செய்வதும் கூட்டுறவுத்துறையை விரிவானதொரு அளவில் அபிவிருத்தி செய்வதும் அவசியமாக இருந்தது என்றும், அவர் வலியுறுத்திக் கூறினார். தனியார் துறை சம்பந்தப்பட்ட மட்டில், சட்டப்பூர்வமான வரம்புகளுக்குள் ஊக்குவிக்கப் படுவதாகவும் வளர்க்கப்படுவதாகவும் இருந்தது. தனியார் துறையின்மீது அரசுத்துறையின் தலைமை வருங்காலத்தில் சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்கு ஒரு நிபந்தனையாக அமையும் என்று அவர் அழுத்தமாகக் கூறினார்.

இரண்டாவதாக, பொருளாதார நிர்மாணம் மக்களின் வாழ்க்கை நிலைமைகளை அபிவிருத்தி செய்வதையும் புரட்சி யுத்தத்தைப் பற்றிய அவர்களது அறிவினை உயர்த்துவதையும் குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

மக்களின், வாழ்க்கையின் ஓர் அமைப்பாளன் என்ற முறையில், தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் ஜனநாயக அரசாங்கம் அவர்களது கஷ்டங்களுக்குத் தீர்வு காண்பதற்கும் அவர்களது வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதற்கும் அதனால் இயன்ற அனைத்தையும் செய்தது.

நல்ல முறையில் வேலை செய்யப்பட்ட சிவப்பு ஏரியாக்களின் அப்படிப்பட்ட இடங்களில் மக்களின் வாழ்க்கை நிலைமைகள் நன்கு அபிவிருத்தி அடைந்திருந்தன, உதாரணத்திற்கு, சாங்காங் மற்றும் சாய்ஷி ஆகிய நகரியங்களை எடுத்துக் கொள்ளுங்கள்; அவை ''மாதிரி நகரியம்'' என்ற பட்டத்தால் கௌரவிக்கப் பட்டிருந்தன. புரட்சிக்கு முன்பு சாய்ஷியில் வசித்த ஏழை விவசாயத் தொழிலாளிகளும் ஒரு ஆண்டில் மூன்று மாதங்களுக்கு மட்டுமே சாப்பிடுவதற்கு அரிசியைப் பெற்றிருந்தார்கள். எஞ்சிய எல்லா மாதங்களுக்கும் அவர்கள் மக்காச் சோளம் மற்றும் சோளம் சார்ந்த பயிர்களைப் போன்ற இதர தானியங்களையே சாப்பிட வேண்டியிருந்தது; அதுவும் குறைவான அளவுகளிலேயே சாப்பிட வேண்டியிருந்தது. ஆனால் 1934இல் விஷயங்கள் வேறு விதமாக

இருந்தன. பாதி ஆண்டு முழுவதும் அவர்கள் அரிசி சாப்பிட முடிந்தது மற்றும் இதரபாதி ஆண்டில் மக்காச்சோளம் மற்றும் சோள வகைப்பட்ட தானியங்களை போதிய அளவுகளில் சாப்பிட முடிந்தது. சாங்காங்கில், இறைச்சியை சாப்பிடும் ஏழை விவசாயிகள் இரண்டு மடங்காக இருந்தார்கள்; விவசாயத் தொழிலாளர்கள் மூன்று மடங்காக இருந்தார்கள். கடந்த காலத்தில் வாங்கியதைப் போல் இரு மடங்கு துணிகளை விவசாயிகள் வாங்கினார்கள்; மற்றும் அனைவருக்கும் ஏராள மான சமையல் எண்ணெய் கிடைத்தது.

யுத்தத்திற்காக, மக்களை அணி திரட்டுவதில் சாங்காங்கும், சாய்ஷியும் மகத்தான சாதனைகளைச் சாதித்தன. சாங்காங்கில் எண்பது சதவீதம் இளைஞர்களும் நடுத்தர வயதுடையோரும் மேல் சால்ஷியில் எண்பத்தெட்டு சதவீதம் பேரும் கீழ் சாய் ஷியில் எழுபது சதவீதம் பேரும் செஞ்சேனையில் சேருவதற்காக அல்லது இதர வகைப்பட்ட புரட்சியின்பணியில் ஈடுபடுவதற்காக தத்தம் வீடுகளை விட்டுச் சென்றார்கள்.

இந்த சாதனை மக்களின் வாழ்க்கை நிலைமைகளின் அபிவிருத்தியிலிருந்து பிரிக்கப் பட முடியாததாக இருந்தது. தங்களுடைய சொந்த அனுபவத்திலிருந்து புரட்சி யுத்தத்தின் அர்த்தத்தை வெகுஜனங்கள் உணர ஆரம்பித்தார்கள். எனவே, அவர்கள் அனைவரும் கட்சியின் அரசியல் அறைகூவலுக்குச் செவி சாய்த்தார்கள். ஏனெனில் புரட்சியை அவர்களது சொந்த வாழ்க்கையாகவே அவர்கள் கருதினார்கள்.

### 5. மூன்றாவது ''இடதுசாரி''ப் பாதையின் திசை வழியின் கீழ் ஐந்தாவது எதிர் சுற்றி வளைத்தல் இயக்கத்தின் தோல்வி. சீனத் தொழிலாளர்கள், விவசாயிகளின் செஞ்சேனையின் மாபெரும் யுத்த தந்திர மாற்றம்.

நான்காவது சுற்றி வளைதல் இயக்கத்தின் தோல்விக்குப் பிறகு சியாங்காய்-ஷேக் ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவோடு ஐந்தாவது இயக்கத்திற்கு தயாரிக்க ஆரம்பித்தான். சிவப்பு ஏரியாக்களைத் தாக்குவதில் படைப் பிரிவுகளைக் குவித்து, குவிந்த தாக்குதல்களை நடத்தும் போர்த் தந்திரம் பயனற்றதாக நிரூபிக்கப்பட்டதைக் கண்டுபிடித்துக் கொண்டு அவன் பொதுவானதொரு முன்னேற்றத் தாக்குதலை, ராணுவ, அரசியல், பொருளாதார, மற்றும் சித்தாந்த ரீதியான தாக்குதலை,

புரட்சி தளத்திற்கு எதிராக திட்டமிட்டான். கியாங்சி மாகாணத்தில் லீ லூஷனின், அவனது அதிகாரிகளின் பயிற்சி முகாமை ஏற்பாடு செய்தான்; அங்கு வரிசை வீடுகளின் உதவி களுடன் மலைப் பிரதேசங்களிலும் போராடும் முறைகள் உள்பட பாசிஸ அரசியல் பயிற்சியையும் ராணுவப் பயிற்சியையும் அதி காரிகள் பெற்றார்கள். அவன் ஸ்தல பாதுகாப்பு காவலர்களை யும் ஸ்தாபித்தான். பிற்போக்கு பாசிஸ ஆட்சியை பயன்படுத் தினான், அன்னிய கடன்களை வாங்கினான். மற்றும் சிவப்பு ஏரியாக்களுக்கு எதிராக கடுமையானதொரு பொருளாதார முற்றுகையையும் திணித்தான்.

யுத்த தந்திர ரீதியாக நீடித்ததாகவும் போர்த் தந்திர ரீதியாக வரிசை வீடுகளை சார்ந்திருந்ததாகவும் இருந்த, ஒரு யுத்தத்தை நடத்தியதால், செஞ்சேனையின் மனித செல் வாதாரங்களையும் பொருளாதார செல்வாதாரங்களையும் காலி செய்வதற்கு சியாங்காங் - ஷேக் முயற்சித்தான். இறுதி யானதொரு அழித்தொழிக்கும் இயக்கத்திற்காக செஞ்சேனை யின் பிரதான படைகளைத் தேடுவதற்குமுன்பு புரட்சி தளத்தை நிர்மூலமாக்கவும் முயற்சித்தான்.

சிவப்புப் பிரதேசங்களுக்கு எதிரான அவனது ராணுவ முன்னேறித் தாக்குதலோடு கூடவே, சியாங் ஒரு கலாச்சார சுற்றி வளைத்தல் இயக்கத்தையும் நடத்தினான். இது கோமிங் டாங் கட்டுப்பாட்டிலிருந்த ஏரியாக்களில் புரட்சிகரமான கலாச் சார இயக்கத்தை இதற்குமுன் கண்டிராத ஓர் அளவிற்கு காட்டு மிராண்டித்தனமான ஒடுக்கும் உருவத்தை எடுத்தது.

புரட்சிகரமான கலாச்சாரத்திற்கு எதிரான "சுற்றி வளைத்தல் மற்றும் ஒழித்துக்கட்டும்" ஓர் இயக்கத்தில் கலாச் சார ஆயுதங்கள் தேவைப்பட்டன. ஆனால் கோமிங்டாங் கினால் வக்காலத்து வாங்கப்பட்ட விசேஷமான "காலாச்சார" பாணி அதனுடைய மிகச் சாதுர்ரியமான பேச்சாளர்களை மித மிஞ்சிய பிற்போக்கு அரசாங்க அதிகாரிகளிடமும் மற்றும் துப்பறி யும் சேனைப்பிரிவின் தலைவர்களிடமும் கண்டது. குறிப்பிடு வதற்கு தகுதி படைத்த எதையும் உற்பத்தி செய்வதற்கு திறமை படைத்த எந்த விதமான எழுத்தாளர்களையும் கலைஞர்களை யும் கோமிங்டாங் பெற்றிருக்கவில்லை. புரட்சிகரமான கலாச் சாரத்தை எதிர்ப்பதற்கு, புரட்சிகரமான எழுத்தாளர்களையும், கலைஞர்களையும், அவதூறு செய்யவும், துன்புறுத்தவும் சிறைப் படுத்தவும் கொலைச் செய்யவும் கோமிங்டாங் முயற்சி செய்தது

மற்றும் அவர்களுக்கு எதிராக திருடர்களையும் உளவாளிகளை யும் கொலைகாரர்களையும் அது அனுப்பிற்று.

கோமிங்டாங் சகலமுற்போக்கு நூல்களையும் சஞ்சிகைகளை யும் தடை செய்தது. புரட்சிகரமான உணர்வின் வாடையே மிகமிகச் சிறிய அளவிலேனும் பெற்றிருந்தாலும் கூட அல்லது சிவப்பு எழுத்துக்களைக் கொண்ட அட்டையைப் பெற்றிருந் தாலும், அல்லது ஒரு இடது சாரிக் கருத்துடையவரால் எழுதப் பட்டிருந்தாலோ அல்லது ஒரு ரஷிய எழுத்தாளரால் எழுதப் பட்டிருந்தாலோ எந்தப் புத்தகமும் தடை செய்யப்படலாம். முற்போக்கு புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் பிரசுரித்த அல்லது விற்பனை செய்த எண்ணற்ற புத்திகக்கடைகள் மூடப் பட்டன. அதே சமயத்தில், மக்களைக் குழப்புவதற்கும் அவர் களுடைய போராட்ட உணர்வுகளை முடமாக்குவதற்கும் கோமிங்டாங் அதனுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட அனைத் தையும் செய்தது. அது கன்ஃபூசியஸை வணங்குவதை ஊக்கு வித்தது; மற்றும் பழைய 'சாஸ்திரிய நூல்களை'' கற்பதையும் ஊக்குவித்தது. மற்றும், பாசிஸத்தைப் போதித்து வந்தது. புரட்சிகரமான எழுத்தாளர்களையும் இளம் முற் போக்காளர்களையும் ஒடுக்கியதும் கொலை செய்ததும் வரலாற்றில் ஈடற்றதாக இருந்தது. 1927இல், புரட்சியைக் கோமிங்டாங் கட்சி காட்டிக்கொடுத்ததிலிருந்து 1935 ஆம் ஆண்டு வரையிலும் மூனறு லட்சத்திற்கும் குறையாத இளைஞர் கள் கொன்று குவிக்கப்பட்டார்கள்; இந்த எண்ணிக்கையில் காணாமல் போனவர்களும் சிறைபடுத்தப்பட்டவர்களும் சேர்க் கப்படவில்லை.

புரட்சிகரமான கலாச்சாரத்தின் கழுத்தை நெறிக்கவும், கம்யூனிஸ்ட் மற்றும் ஜனநாயக கருத்தக்களை ''ஒழித்துக் கட்ட வும்'' அதனுடைய முயற்சிகளில் கோமிங்டாங் மிதமிஞ்சிய தொரு கொடுமை நிறைந்த வெள்ளை பயங்கரத்தை கட்ட விழ்த்து விட்டபொழுது, புரட்சிகரமான கலாச்சார முகாம் முழுவதற்கும் மிகப் பெரிய உறுதியான போர் வீரரான லூ-சுன், சீன மக்களின் சார்பில், எதிரியை கசப்பானதொரு போராட்டத் தில் ஈடுபடுத்தினார். கலாச்சார அரங்கில், அவர் புரட்சியின் பதாகையாக இருந்தார். கோமிங்டாங் கலாச்சார ''சுற்றி வளைத்தல் இயக்கம்'' தோல்வியில் முடிவடைந்தது. இவை யனைத்தும் கோமிங்டாங்கினை மிக இருண்ட காட்டுமிராண்டி தனமான ஒரு ஆளும் கும்பலாகக் காட்டிற்று; மேலும், சீன

பாட்டாளி வர்க்க, புரட்சிகரமான கலாச்சாரம் அழிக்கப்பட முடியாதது என்பதையும் நிருபித்தது. படுகொலை கொள்கை கோமிங்டாங் கலாச்சாரத்தின் வேற்றுத் தன்மையை மட்டுமே அம்பலப்படுத்த முடிந்தது. புரட்சிகரமான கலாசார இயக்கம், ஒழிக்கப்படுவதற்குப் பதிலாக, அந்த சமயத்தில் ஒரே கலாசார இயக்கமாக மாறி இருந்தது.

**1933** அக்டோபரில், சகல தயாரிப்புகளும் செய்யப்பட்டிருந்த பொழுது, சியாங்காய்-ஷேக் 5-ஆவது சுற்றி வளைத்தலுக்காக பத்துலட்சம் துருப்புகளை அணிதிரட்டியிருந்தான். பாதித் துருப்புகள் மத்திய சிவப்பு ஏரியாவின் மீது கோடியானதொரு தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. ஐந்தாவது எதிர் சுற்றி வளைத்தல் இயக்கத்திற்குமுன்பு, செஞ்சேனையை விஸ்தரிப்பதற்காக, மத்திய சிவப்பு ஏரியாவில் ஓர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது; இந்த இயக்கம் வெற்றிகரமானதாக நிருபிக்கப்பட்டு, ஒரு லட்சம் தொழிலாளிகளும் விவசாயிகளும் போர் அரங்கத்திற்குச் சென்றார்கள். பொருளாதார மீட்சியும் அபிவிருத்தியும் செஞ்சேனைக்கு ராணுவ சப்ளைகளை உறுதிப்படுத்திற்று; மற்றும், மக்களின் வாழ்க்கை நிலைமைகளில் சிறிது அபிவிருத்தியும் கொண்டுவந்தது. தோழர் மாசே-துங்கின் யுத்த தந்திரத்தையும் போர் தந்திரங்களையும் பயன்படுத்தியதன் விளைவாக, எதிர் சுற்றிவளைத்தல் இயக்கங்களில் பல வெற்றிகள் ஏற்கனவே பெறப்பட்டிருந்தன. கோமிங்டாங் கட்டுப்பாட்டிலிருந்த ஏரியாக்களைப் புரட்சிகரமான கலாச்சார இயக்கத்தினால் செஞ்சேனைக்கு பலமான ஆதரவும் கொடுக்கப்பட்டிருந்தது. மேலும், கோமிங்-டாங் ஏரியாக்களில் ஜப்பான் மற்றும் சியாங்காய்-ஷேக்கிற்கு எதிரான மக்கள் இயக்கம் முன்னோக்கிப் போய்க் கொண்டிருந்தது; மேலும், ஃபூக்கியன் சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஒன்றுக்கும் அதிகமான அரங்கங்களில் போராடும்படி சியாங்காய்-ஷேக் நிர்ப்பந்திக்கப் பட்டிருந்தான். கட்சியின் தலைமையின் கீழ், ஷியாங்கிலும் மற்றும் இதர பெரிய நகரங்களிலும் ஆயுதமேந்திய தற்பாதுகாப்பிற்கான சீன மக்கள் கமிட்டியை உருவாக்குவதற்கு தயாரிப்புக் கமிட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டன; சகல சமுதாய பகுதியையும் சேர்ந்த பல குறிப்பிடத்தக்க நபர்களால், இக்கமிட்டிகள் முன்மொழியப்பட்டன; இக்கமிட்டிகளுக்கு சூங்சிங்-லிங், மாஷியாங்-போ ஆகியோரால் தலைமைத் தாங்கப்பட்டன. சீன மக்களின் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்திற்கான ஓர் அடிப்படையான திட்டத்தினை அவர்கள் முன்வைத்தார்கள்.

இத்தகைய சாதகமான நிலைமைகளின் கீழ் செஞ்சேனைக்கு ஐந்தாவது சுற்றி வளைத்தலை நொருக்கித் தள்ளுவது சாத்திய மாக இருந்திருக்க வேண்டும். எனினும், "இடதுசாரி" சந்தர்ப்ப வாதத் தலைவர்கள் இத்தகைய நிலைமைகளைப் பயன்படுத்தத் தவறிவிட்டார்கள்; குறிப்பாக, முற்றிலும் தவறானதொரு ராணுவப் பாதையின் காரணமாக செஞ்சேனை கடுமையான நஷ்டங்களை அனுபவிக்கவும் காரணமாக இருந்தார்கள்.

ஏகாதிபத்திய அரசுகள் கூட்டாக சோவியத் யூனியனைத் தாக்கும் என்ற அவர்களது கருத்தோட்டத்தை இன்னும் பலமாக தொங்கிக் கொண்டும், கோமிங்டாங்கிலிருந்த பல்வேறு கும்பல் கள் சீனப் புரட்சியினைக் கூட்டாகத் தாக்கும் என்ற அவர்களது கருத்தினை இன்னும் தொங்கிக் கொண்டும், "இடதுசாரி" பாதையின் தலைவர்கள் ஜப்பானிய ஆக்கிரமிப்பினால் உண்டாக் கப்பட்ட சீன தேசிய நெருக்கடியினை அலட்சியமாகப் பார்த் தார்கள்; மற்றும் கோமிங்-டாங் ஆட்சியின் நெருக்கடியின் அளவினையும் சீனப்புரட்சி சக்திகளின் வளர்ச்சியின் அளவினை யும் தொடர்ந்து மிகைபடுத்திப் பார்த்தார்கள். எந்த விதமான விவரப்பூர்வமான காரணமும் இல்லாமலேயே, ஐந்தாவது எதிர் சுற்றி வளைத்தல் இயக்கம் கோமிங்டாங்கிற்கும் சிவப்பு ஆட்சிக்குமிடையே நடைபெறும் யுத்தத்தில் தீர்மான போராட்ட மாக இருக்குமென்று அவர்கள் கூறினார்கள், இந்தப் போராட் டத்தில் கிடைக்கும் வெற்றி, ஒன்று அல்லது பல மாகாணங்களில் அல்லது நாடு முழுவதிலும்கூட கிடைக்கவிருக்கும் வெற்றிக்குக் கேந்திரமாக அமையும் என்று கருதினார்கள். இன்னும் மிக மிக அதிக முட்டாள்தனமாக இருந்தது என்னவென்றால், சில முக்கியமான ஏரியாக்களில் தொழிலாளர்கள் மற்றும் விவசாயி களின் ஜனநாயக சர்வாதிகாரம் உருப்பெற்ற உடனேயே, சோஷலிசப்புரட்சி ஆரம்பமாகிவிடும் என்றும் அவர்கள் கருதினார்கள்.

ராணுவக் கொள்கை விஷயத்தில் அவர்கள் கொரில்லா யுத்த முறையையும் மற்றும் கொரில்லா தன்மை வாய்ந்த நகரும் யுத்த முறையையும் அவர்கள் எதிர்த்தார்கள்; மற்றும், "செஞ்சேனை எதிர் சுற்றிவளைத்தல் இயக்கத்தில் அதனுடைய நிலைகளை உறுதியாக பற்றிப் பிடித்திருக்க வேண்டுமென்றும் எதிரிக்கு சிவப்புப் பிரதேசத்தில் ஒரு அங்குலத்தைக்கூட விட்டுக் கொடுக்கக்கூடாது" என்பது போன்ற இப்படிப்பட்ட கோஷங் களையும் முன்வைத்தார்கள்.

மத்திய சிவப்பு ஏரியாவிற்குள் மற்றும் ஃபுக்கியன்-சிகியாங்-கியாஸ்சி ஏரியாவிற்கும் இடையே உள்ள பிணைப்புகளை துண்டிக்கும் பொருட்டு எதிரி முதலில் லிச்சுவானைத் தாக்கினான். அதற்குப் பிறகு, செஞ்சேனை எதிரியை சுன்கோவில் தாக்கி, அவர்களது படைகளின் முழுமையானதொரு டிவிஷனை நிர்மூலம் செய்தது. முதலாவது, போராட்டத்தில் செஞ்சேனை எப்பொழுதுமே மிகுந்த வேதனைகளோடு நடத்திற்று. எல்லா முறைகளையும் பயன்படுத்தி முதல் போராட்டத்தில் வெற்றி பெறுவது குறிக்கோளாக இருந்தது. ஏனெனில், அதனுடைய வெற்றி அல்லது தோல்வி முழுமையான நிலைமையின் மீதும் மற்றும், இறுதியான மோதலின் மீதும்கூட அபரிதமானதொரு விளைவினைப் பெற்றிருக்கும் என்பதினால்தான், சுன்கோவ் போராட்டம் வெற்றி அடைந்திருந்த போதிலும் முற்றிலும் தற்பாதுகாப்பு ராணுவப் பாதையைப் பின்பற்றி வந்த இந்த இயக்கத்தின் இயக்குனர்கள், எதிர் சுற்றி வளைத்தல் இயக்கத்தின் முதல் போராட்டமாக அதனைக் கருதவில்லை; அல்லது அந்த இயக்கம் உருவாக்கிய சகல மாற்றங்களையும் யுத்தத்தை வெற்றிப் பாதையை நோக்கி வழி நடத்துவதற்கு அவர்களை பயன்படுத்தவும் இல்லை. மாறாக, ஒரு பட்டிணம் இழக்கப் பட்டதைக் கண்டு அவர்கள் அலரிப்புடைத்தார்கள்; லிச்சுவானை மீட்பதற்கு முயற்சித்தார்கள். மற்றும் அடித்தள ஏரியாவில் எல்லைக்கு அப்பால் எதிரியை தடுத்து நிறுத்துவதற்கும் முயற்சித்தார்கள். முதலில் லிச்சுவானுக்கு வடக்கே இருந்த வெள்ளை ஏரியாவில் செம்படைகள் ஷியாவோஷியை தாக்கினார்கள். அந்தப் போராட்டத்தில் எதிர்த்துத் தாக்கப் பட்டமையால் அவர்கள் ஷியாவோஷிக்குத் தென் கிழக்கே இருந்த ஷீஷிசியாவோவின் மீது அவர்களது தாக்குதலை மாற்றினார்கள்; ஆனால், மீண்டும் அவர்களுக்கு எந்த விதமான தளமும் கிடைக்கவில்லை. பிறகு அவர்கள், எதிரியின் பாதாள படைகளுக்கும் வரிசை வீடுகளுக்கும் இடையே அங்குமிங்குமாக அலைந்து முற்றிலும் செயலற்ற நிலைக்கு தள்ளப்பட்டிருந்தார்கள்.

டிசம்பரில், லிச்சுவானுக்குத் தெற்கே இருந்த டுவான் சென்னை எதிரி தாக்கினான். இந்தப் போராட்டத்தில் செஞ்சேனையின் பலம் பிளவுண்டு இருந்தமையால் அது எதிரியை நிர்மூலமாக்கத் தவறிவிட்டது. எதிரிப்படைகள் மீண்டும் ஒன்று

கூடி, தெற்கு நோக்கி குவிந்து முன்னேறி அடித்தள ஏரியாவைத் தாக்கிய போது செஞ்சேனை ஃபுக்கியன்-சியாங்சி எல்லையி லிருந்த டெக்வுங், குவான், டாஷான்லிங் ஆகிய இடங்களுக்கு திரும்பி சியன்னிங்-டைனிங் பாதையைப் பாதுகாத்துக் கொண்டிருந்தது.

ஃபுக்கியன் சம்பவம் நடைபெற்ற சமயத்தில், பத்தொன் பதாவது வழிச் சேனையைத் தாக்குவதற்கு எதிரி தன்னுடையத் துருப்புக்களை திரும்பப் பெற்று மத்திய ஏரியா அரங்கில் தற்பாதுகாப்புப் போராட்டத்திற்கு மாறிச் சென்று, பாதை நெடுகிலும், தற்பாதுகாப்புப் பணிகளை நிர்மரணித்துக் கொண் டிருந்தான். எதிரியை ஒழித்துக் கட்டுவதற்கு செஞ்சேனைக்கு இது ஒரு நேர்த்தியான சந்தர்ப்பமாக அமைந்திருந்தது. ஆனால், "இடதுசாரி" பாதையின் திசை வழியின்கீழ் எதிரிக்கு எதிராக ஓர் எதிர் முன்னேறித் தாக்குதலைத் தொடுப்பதற்கு பதிலாக, செஞ்சேனை உக்கியாங் (ஷிஷீயிக்குத் தென் கிழக்கே) ஷென்காங் மற்றும் டாங்கோவ் ஆகியவற்றின்மீது முன்னேறிக் கொண் டிருந்தது. ஃபுக்கியன் மக்கள் அரசாங்கம் தாக்கும் படைகளின் கூடுதல் வலிமை காரணமாகவும், மற்றும் பத்தொன்பதாவது வழிச் சேனையின் உட்பூசல் காரணமாகவும் வீழ்ச்சி அடைந்தது.

பிறகு, எதிரி செஞ்சேனையைத் தாக்குவதில் அதனுடைய படைகளைக் குவித்தான். காங்டு ஏரியாவில் (சியென்னிங்கிற்கு வடமேற்கே), சியென்னிங்கிலும், டைன்னிங்கிலும் ஒன்பது மாதங்கள் தாக்கப்பட்ட பிறகு, செஞ்சேனை இறுதியில் பின் வாங்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டது. பிறகு, எதிரியின் பிரதானப் படை, மத்திய சிவப்பு ஏரியாவிற்கு வடக்கு நுழைவாயிலான காங்சூவிலிருந்து குவாங்சாங்கிற்கு முன்னோக்கித் தள்ளப் பட்டது. குவாங்சாங்கைக் கைப்பற்றுவதில் எதிரிப் படைகளின் வடக்கு அணிவரிசையின் குறிக்கோள், மத்திய சிவப்பு ஏரியா விற்கு எதிராக இதர எல்லா எதிரிப் படை வரிசைகளையும் ஓர் ஒருங்கிணைந்த தாக்குதலுக்கு வசதி செய்து கொடுப்பதாக இருந்தது. "இடதுசாரி" தலைவர்கள் நிலை நிற்கும் யுத்த முறை யுத்தத் தந்திரத்தைக் கையாண்டார்கள்; எதிரியைப் போலவே அவர்கள் அதே தந்திரங்களை அனுஷ்டித்தார்கள்; தங்களுடைய படைகளைக் குவித்துக் கொண்டும் வரிசை வீடு களை எழுப்பிக் கொண்டும் எதிரியின் தந்திரங்களையே அனுஷ் டித்துக் கொண்டிருந்தார்கள். குறைவான ஆயுதமே தரித்திருந்த

போதிலும் செஞ்சேனை எதிரிகளின் மீது கடுமையான நஷ்டங்களை உண்டாக்கிற்று. ஆனால் அது அதனுடைய நிலையில் கட்டுண்டு கிடந்தது; அதன் விளைவாக நெளிவு சுளிவுத் தன்மையை இழந்து நின்றது. அதன் விளைவாக அது கடுமையான நஷ்டங்களை அடைந்து, எதிரியைத் தடுத்து நிறுத்தத் தவறியது.

குவாங்சாங் போராட்டத்திற்குப் பிறகு. எதிரிப் படைகளின் முதல் அணிவரிசை டாய்ஹோவிலிருந்து சின்கோவிற்கு முன்னேறிற்று; இரண்டாவது அணி வரிசை டெங்ஷனியலிருந்து குவாங்காங்கிற்கு முன்னேறிற்று. மற்றும், மூன்றாவது அணி வரிசை நீங்டூ, ஷிசெங்கை நோக்கி குவிந்து முன்னேறிற்று. இத்தகைய பாதைகளில், முக்கியமான நிலைகளைப் பாதுகாப்பதற்கு செஞ்சேனைச் சிதறிச் சென்று, எதிரியின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தது குவாங்சாங்கின் தெற்குப் பகுதியில் காவோஹுவான் வோவிலும் வான்னியென்டிங்கிலும் நடைபெற்ற போராட்டங்களில் செஞ்சேனை முற்றிலும் நிலை நிற்கும் யுத்த முறைத் தந்திரங்களையே கையாண்டு ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலையில் தாக்கிக் கொண்டிருந்த எதிரியை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தது. இங்கு ஐந்தாவது எதிர் சுற்றி வளைத்தல் இயக்கத்தின் நிலைநிற்கும் யுத்தமுறை அதனுடைய உச்சக் கட்டத்தை எட்டிப்பிடித்தது. எதிரியின் மீது கடுமையான நஷ்டங்கள் உண்டாக்கப்பட்ட போதிலும் கடுமையான நஷ்டங்களினால் செஞ்சேனை மிகவும் அதிகமான பலகீனம் அடைந்திருந்தது. பிறகு, இச்சியன் (ஷீசெங்கிற்கு வடக்கே) போராட்டம் நடைபெற்றது. செஞ்சேனை ஒன்றுக்குப் பின் ஒன்றாக பின் வாங்குதலை நடத்திற்று. அடித்தள ஏரியா படிப் படியாக சுருங்கிற்று.

இச்சியன் போராட்டத்தைப் பின் தொடர்ந்து, ஷிங்குவோ-கவோ ஷிங்சிகுயூ - லாவேஇங்பான் பாதையில் இருந்த செஞ்சேனை, இதைப் போலவே சிங்குவோவிற்குத் தெற்கே பின்வாங்கிற்று.

எல்லாவற்றையும், ஐந்தாவது எதிர் சுற்றி வளைத்தல் இயக்கத்தின் போக்கில், "இடதுசாரி" சந்தர்ப்பவாத பாதையின் தலைவர்கள் தொடர்ச்சியாக பல மோசமான தவறுகளைச் செய்தார்கள், சுன்கோவில் ஆரம்பத்தில் கிடைத் வெற்றியின் சாதகமான நிலைமையை அவர்கள் பயன்படுத்தத் தவறிவிட்டார்கள். ஃபுக்கியன் மக்கள் அரசாங்கத்தை ஆதரிக்க மறுத்தார்கள்;

மற்றும், புரட்சிப் படைகளைக் குவிப்பதினாலும் எல்லா நிலைகளையும் பாதுகாப்பதாக செஞ்சேனையைப் பிரிப்பதினாலும் எதிரியின் படைக்குவிப்பை எதிர்த்தும் போராடுவதில், "இரண்டு முஷ்டிகளாலும் எதிரியைத் தாக்குவதை" அவர்கள வலியுறுத்தினார்கள். இத்தகைய தவறுகளும் இதைப் போன்ற இதர தவறுகளும் சாரம்சத்தில் எதிர் மறைவான நடவடிக்கைகளாவும் அல்லது செயலற்ற யுத்த தந்திரங்களாகவும் இருந்தன. இவை செஞ்சேனைக்கு மாபெரும் நஷ்டங்களை உண்டாக்கி எதிரியைத் தடுத்து நிறுத்தத் தவறிவிட்டது. இதன் விளைவாக, ஓராண்டுக்கும் அதிகமாகப் போராடியப் பிறகும், செஞ்சேனை சுற்றி வளைத்தலை இன்னும் உடைத்தெறிய முடியாமலிருந்தது; இறுதியாக, கியாங்சியில் தளத்திலிருந்து வாபஸ் பெற நேரிட்டது.

சியாங்காய்-ஷேக்கின் சுற்றி வளைத்தலை உடைத்தெறியும் பொருட்டும், புதிய வெற்றிகளைப் பெரும் பொருட்டும், சீனத் தொழிலாளர், விவசாயிகளின் செஞ்சேனை 1935 அக்டோபரில் நீண்ட பயணம் என்று பிரசித்தி பெற்ற உலகைக் குலுக்கிய யுத்த தந்திர மாற்றத்தை ஆரம்பித்தது.

வடசீனாவில் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக கட்சி 1934 ஜூலையில், ஏழாவது ராணுவ படைப்பிரிவை ஒரு முன்னணிப்படைப் பிரிவாக அனுப்பி வைத்தது. இந்தப் படைப் பிரிவு ஃபூக்கியனிலிருந்து சிக்கியாங், அன்வெய் வழியாக கியாங்சிக்குள் போய்ச் சேர்ந்தது. அங்கு ஃபாங் சீ-மின் தலைமையின் கீழிருந்த பத்தாவது சேனையோடு சேர்ந்து பத்தாவது சேனையின் படைப்பிரிவாக அமைந்து விட்டது. எண்ணற்ற போராட்டங்களுக்குப் பிறகு, இந்தப் புதிய படைப்பிரிவு 1934ஆம் ஆண்டில் ஹூவாயூமலைகளுக்குள் போய்ச் சேர்ந்தது. அங்கு அது கோமிங்டாங் துருப்புகளோடு, ஒரு மோதலில் ஈடுபட்டது. தோழர் ஃபாங் சீ-மின் 1935 ஜனவரியில் பிடிபட்டார். அவர் நான்சாங்கில் ஜூலையில் வீரமரணம் அடைந்தார். தோழர் சூயூ தலைமையின் இருந்த எஞ்சிய துருப்புகள் ஃபூக்கியன்-சிக்கியாங்-கியாங்சி எல்லையில் தொடர்ந்து கொரில்லா யுத்தத்தை நடத்தி வந்தன.

கட்சியின் மத்தியக் கமிட்டியின் உத்தரவுகளின் பேரில் செயல் செயல்பட்டு, ஜென்பீ-ஷியினால் தலைமை தாங்கப்பட்ட ஆறாவது படைப்பிரிவு ஹூன்னான் - கியான்சி தள ஏரியாவை 1934 ஆகஸ்டின் காலி செய்தது. செஞ்சேனையின் பிரதான படைகளின் முன்னேறியதொரு காவற்படை என்ற

முறையில், அது சுற்றி வளைத்தலை உடைத்தெறிந்து முன்னேறு வதற்கான ஒரு பாதையைத் திறந்து எதிரியை வேவு பார்த்தது டிசம்பரில், ஆறாவது படைப்பிரிவும் ஹோலங் தலைமையில் இருந்த இரண்டாவது படைப்பிரிவும், குவெய்சோவின் கிழக்குப் பகுதியில் இணைந்து, இரண்டாவது அரங்கு ராணுவமாக அமைந்து, ஹூன்னான்-ஹூப்பே-செச்சுவான்—குவெச்சோவ் தளம் ஆரம்பிக்கப்பட்டது.

செப்டம்பரில், ஹூப்பே - ஹோனான் அன்வெய்-ஏரியாவில் போராடிக் கொண்டிருந்த இருபத்தைந்தாவது ராணுவம் ஹோனான் மாகாணத்தில் லோஷானில் சுற்றி வளைத்தலை உடைத்தெறிந்து ஷென்சியின் தெற்குப் பகுதிக்குள் ஊடுருவிச் சென்று, ஹோனான் - ஹூப்பே - ஷென்சி தளத்தை உண்டாக்கிற்று.

ஜப்பானிய எதிர்ப்பு முன்னேறிய படைப் பிரிவின் வடக்கு நோக்கிய இயக்கம் ஆறாவது படைப்பிரிவின் மேற்கத்திய அணி வகுப்பு, மற்றும் இருபத்தைந்தாவது மாநிலத்தின் மேற்கத்திய இயக்கம் ஆகியவை மத்திய தள ஏரியாவில் முதலாவது அரங்க ராணுவத்தின் மாபெரும் யுத்த தந்திர மாற்றத்திற்கும், நாடு முழுவதிலும் இருந்த இதர செஞ்சேனைப் பிரிவுகளுக்கும் பலமான ஆதரவைக் கொடுத்தது.

1934-அக்டோபரில், செஞ்சேனையின் பிரதானப்படைகள் பின்னணி தளத்திலிருந்த அமைப்புகளின் சிப்பந்திகளோடு சேர்த்து மொத்தம் ஒரு லட்சம் ஆட்களைக் கொண்டதாக இருந்தது இந்த செஞ்சேனை நீண்ட பயணத்தை ஃபூக்கியனில் சாங்டிங்கிலிருந்தும் நிங்குவாவிலிருந்தும் மற்றும் கியாங்சியில் ஜூசின் மற்றும் யூடூவிலிருந்தும் ஆரம்பித்தது. கியாங்சியில் அன்யுவானுக்கும், ஷின் ஃபெங்கிற்கும் இடையில், எதிரியின் முதலாவது வளையத்தை உடைத்தெறிந்த பிறகு, அவர்கள் குவாங்டுங்கின் வடக்குப்பகுதியில் நுழைந்தார்கள் ஹூன்னானில் குவெய்டுங், ஜூசெங்சிற்கும் இடையில் அவர்கள் எதிரியின் இரண்டாவது வளையத்தை உடைத்தெறிந்து, ஈசாங்கைக் கைப்பற்றினார்கள். பிறகு, கான்டன்—ஹாங்கோவ் ரயில்வே வழிநெடுகிலும் மூன்றாவது வளையத்தை அவர்கள் உடைத்தெறிந்து லின்வூவையும் இதர கிராமப் புறங்களையும் கைப்பற்றினார்கள். அதற்குப் பிறகு செஞ்சேனை தனித்தனியான பாதைகளில் மேற்கு நோக்கிச் சென்று ஷியாவோ நதியைக் கடந்து சென்று குவாங்சி எல்லை அடைந்தது.

நவம்பர் இறுதி வாக்கில், செஞ்சேனை ஷியாங் நதியின்

கிழக்குக் கரையை அடைந்து விரைவாக அதை கடந்து எதிரியின் நான்காவது வளையத்தை ஊடுருவிச் சென்றது; பின்னர், குவாங்சியில் ஷீயென் மலைகளின் வழியாக முன்னேறிச் சென்று, குவெய்ச்சோவின் கிழக்குப் பகுதியில் நுழைந்தது; அங்கு, லிபிங், சிங்பிங், ஷீபிங், யூசிங் மற்றும் இதர கிராமப்புறங்களையும் கைப்பற்றிற்று.

பிறகு, அது சுன்யீ நோக்கி விரைந்தது, வழியில் அது வாங்கிச்யா-லீ தலைமையில் இருந்த கோமிங்டாங் துருப்புக்களை முறியடித்தது. ஊகியாங் நதியைக் கடந்து சென்று, அது 1935 ஜனவரி 6-இல் சுன்யீயைக் கைப்பற்றிற்று. இங்கு கட்சியின் மத்தியக் கமிட்டியின் அரசியல் தலைமைக் குழுவின் விரிவடைந்த ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. இதுதான் புகழ் பெற்ற சுன்யீ மாநாடு ஆகும்.

**6. சுன்யீ மாநாடு ஜப்பானுக்கு எதிரான செஞ்சேனையின் வடகத்திய அணிவகுப்பில் சாங்குவா-டாவோவின் தவறான பாதைக்கு எதிர்ப்பு. நீண்ட பயணத்தில் செஞ்சேனையின் வெற்றி.**

1935 ஜனவரியில், செஞ்சேனை சுன்யீயைக் கைப்பற்றியப் பிறகு கட்சியின் மத்தியக் கட்மிடியின் அரசியல் குழுவின், ஒரு விரிவடைத்த கூட்டம், அபாயத்திற்கு உள்ளாகியிருந்த செஞ்சேனையைக் காப்பாற்றவும், சீனாவின் புரட்சி லட்சியத்தை காப்பாற்றவும் நடத்தப்பட்டது. அந்த சமயத்தில், "இடது சாரி", சந்தர்ப்பவாதத்தின் தவறுகள் ஊழியர்களிடையே கடுமையான அதிருப்தியை உண்டாக்கியிருந்தது. அணிகளிடையேயும் கடுமையான அதிருப்தியை உண்டாக்கியிருந்தது. ஒரு காலத்தில் "இடது சாரி" தவறுகளைச் செய்திருந்த பல தோழர்கள் விழித்து எழ ஆரம்பித்து அவர்களுக்கு எதிராகத் திரும்பினார்கள். இந்த முறையில் தோழர் மாசே-துங்கினாலும் இதர பல தோழர்களாலும் நடத்தப்பட்ட உறுதியான போராட்டத்திலும், மற்றும் பெரும்பாலான தோழர்களின் ஆதரவினாலும் சின்யீ மாநாடு தவறான "இடது சாரி" ராணுவப் பாதையை நிராகரித்து, தோழர் மாசே-துங்கின் சரியான பாதையை ஏற்றுக் கொண்டது. "இடது சாரி" சந்தர்ப்பவாதிகள் தலைமைப் பதவிகளிலிருந்து அகற்றப்பட்டு தோழர் மாசே-துங்கினால் தலைமை தாங்கப்பட்ட புதியதொரு தலைமை நிறுவப்பட்டது.

சுன்யீ மாநாடு கட்சியின் மத்தியக் கமிட்டியில் நிலவிய "இடதுசாரி" பாதையின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது; குறிப்பாக, "இடது சாரி" சந்தர்ப்பவாதத்தின் ராணுவத் தவறுகளை முடிவுக்குக் கொண்டு வந்தது; தோழர் மாசே-துங்கினை கட்சி முழுமைத்தின் தலைவராக்கிற்று. இந்த முறையில், நீண்ட பயண காலகட்டத்தின் மிதமிஞ்சிய கஷ்டமான மற்றும் அபாயகரமான நிலையில் செஞ்சேனையின் கேந்திரமான பகுதியை பாதுகாப்பதிலும் புடம் போட்டு எடுப்பதிலும் கட்சி வெற்றி பெற்றது; இந்த முறையில், கட்சி தன்னையும், புரட்சியையும் அபாயத்திலிருந்து காப்பாற்றிக் கொண்டது. தோழர் மாசே-துங்கினால் தலைமை தாங்கப்பட்ட மத்திய கமிட்டியில் புதியதொரு தலைமையின் ஆரம்பம், கட்சியில் மகத்தான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாற்றமாக இருந்தது. அதற்குப்பிறகு, மாபெரும், இணையற்ற, முற்றிலும் நம்பகமான இந்த தலைவரின் மார்க்சிய-லெனினிய தலைமையின் கீழ், சீன கம்யூனிஸ்ட் கட்சியும் சீனப்புரட்சியும் வெற்றி, மாபெரும் வெற்றி என முன்னேறிச் சென்றது.

சுன்யீ மாநாட்டுக்குப் பிறகு கட்சி, இயங்கும் யுத்த முறையின் (Mobile Warfare) ராணுவப் பாதையைக் கையாண்டது; ராணுவம் திருத்தி அமைக்கப்பட்டு, அதன் மூட்டை முடிச்சுகளும் சாதனங்களும் குறுக்கப்பட்டு, பீடமான, முன் கூட்டியே அறிய முடியாத சாகஸங்களாலும், எதிரியைக் குழப்பவும், ஏமாற்றவும் முடிந்தது.

செஞ்சேனை அதனுடைய வடக்கத்திய பயணத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று சுன்யீ மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. எனவே, செச்சுவானில் யாங்ட்சி நதியை செஞ்சேனைக் கடப்பதினின்றும் தடுப்பதற்கும், செச்சுவான்-ஷென்ஸி ஏரியாவின் நான்காவது அரங்க ராணுவத்தோடு ஓர் இணைப்பை ஏற்படுத்திக் கொள்வதைத் தடுப்பதற்காகவும் கோமிங்டாங் அவசரமாக அதனுடைய படைகளை மீண்டும் குவித்தது. செஞ்சேனை முதலில் செச்சுவானிலிருந்து யுன்னான் மாகாணத்திலுள்ள வெய்சினுக்கு முதலில் மேற்கு நோக்கி அணிவகுத்தது. பிறகு குவெய்ச்சோவிற்கு மீண்டும் திரும்பி அதனுடைய பிரதான படைகளை சுன்யீக்கு அருகாமையில் குவித்து, அதனைப்பின் தொடர்ந்து வந்த பல கோமிங்டாங் படைப் பிரிவுகளைத் துரத்தி அடித்தது. இந்தப் போராட்டத்திற்குப் பிறகு, செஞ்சேனை வடமேற்கு

திசையில் அணிவகுத்துச் சென்று, சியாங்காய்-ஷேக் துருப்புகள் அதனுடைய முன்னேறும் பாதையை தடுத்து, அதனை இரண்டாவது அரங்க சேனையிலிருந்து துண்டித்தது, பிறகு, செஞ்சேனை குவெய்யாங்கை நோக்கி திரும்பிற்று. அங்கிருந்து யுன்னானை நோக்கிச் சென்றது. அது வெற்றிகரமாக சன்மிங்கையும் ஷன்டியனையும் கைப்பற்றி குன்மிங்கை நெறுங்கிக் கொண்டிருந்தது. அந்த சமயத்தில் செஞ்சேனை கோமிங்டாங் துருப்புகளை மிகவும் பின்னால் விட்டுவிட்டது. சின்ஷா நதியைக் கடக்கும் கட்சி ராணுவத்திற்கு கட்டளையிட்டது. யுத்த தந்திர மாற்றத்தின் போக்கில், இது ஒரு கேந்திரமான ஏற்பாடாக இருந்தது, சின்-ஷா நதியைக் கடந்த பிறகு, செஞ்சேனை வடக்கு நோக்கித் தொடர்ந்து அணி வகுத்தது. அதனுடைய முன்னணி காவல்படை மே 15இல் டாட்டு நதியின் தெற்கே அன்ஷன்சாங்கை அடைந்தது. அந்த நதியை அப்பொழுது நிர்ப்பந்தமாக கடக்க வேண்டி வந்தது; துருப்புகள் இரண்டு கரைகளின் வழியாகவும் லூட்டிங்கிற்கு கடந்து சென்றன.

யாங்ட்சி நதியின் ஒரு உபநதியான டாட்டு நதி பல செங்குத்தான மலைகளின் வழியாக பாய்ந்து ஓடுகிறது. அது முன்னூறு மீட்டருக்கும் அதிகமாக அகலமாக இருந்தது. ஏழு மீட்டர் முதல் பன்னிரண்டு மீட்டர் வரை ஆழமாகவும் இருந்தது. இடைவிடாமல் எதிரியினால் கண்காணிக்கப் பட்டும், துரத்தப்பட்டும் இருந்த போதும், செஞ்சேனை மே 29 ஆம் தேதியன்று ஒரு யுத்த தந்திர ரீதியான இடத்தை நதியின் குறுக்கே அன்ஷான்காங்கிற்கு வடக்கே லூட்டிங் பாலத்தை கைப்பற்றிற்று. பிறகு டியன்சுவான் வழியாகவும் லூஷான் வழியாகவும் கடந்து சென்ற பிறகு ராணுவம் சியாங்ஷின்ஷான் உச்சியை நோக்கி ஏற ஆரம்பித்தது. இது ஒரு உயர்ந்த சிகரம்; செச்சுவான்-சிகாங் எல்லையில் மாபெரும் பனிமலைகளின் மிகவும் தென் கோடியிலுள்ள ஒரு உயர்ந்த சிகரமாகும். ஜூன் 16ல், மத்திய செஞ்சேனையும் நான்காவது அரங்க ராணுவமும் மேற்கு செச்சுவானில் மாவோகுங்கில் ஒன்று சேர்ந்து அவற்றின் வடக்கு நோக்கிய அணிவகுப்பைத் தொடர்ந்து நடத்தின; மெங்பிஷான் சிகரத்தில் ஏறினார்கள். இந்தச் சிகரம் மாபெரும் பனிமலைகளில் மற்றொரு உயர்ந்த சிகரமாகும். ஜூலை 10'ஆம் தேதியன்று சங்பான் கிராமப்புறத்தின் தென்மேற்குப் பகுதியில் உள்ள மாவோயெர்க்காயை அது அடைந்தது,

அப்பொழுதுதான், நான்காவது அரங்க ராணுவத்தில்

பணியாற்றிக் கொண்டிருந்த சாங்குவா-டாவோ, எதிரியின் தாக்குதலுக்கு முன்னால் கடுமையானதொரு தப்பி ஓடும் போக்கினையும் யுத்தரபிரபுத்துவ போக்கினையும் காட்டினான். அவன் புரட்சியின் வருங்காலத்தில் எல்லா நம்பிக்கையும் இழந்திருந்தான். ஏனெனில், நாடு தழுவிய ஜப்பானிய எதிர்ப்பு ஜன நாயக இயக்கத்தின் எழுச்சியை அவன் மறுத்தான்; புரட்சிப் படைகளின் பலத்தைக் குறைத்து மதிப்பிடும் அதே சமயத்தில் ஜப்பானிய எதிர்ப்பு இயக்கத்தையும் கடுமையாக பலஹீனப் படுத்தித்தான் இருக்கும். புரட்சிகரமான லட்சியத்தை முற்றிலும் குழப்பமடையச் செய்வதில் முடிவடைந்திருக்கும்.

செஞ்சேனை, மாபெரும் பனிமலைகள் ஏரியாவில் ஒரு மாதம் ஓய்வு எடுத்தது. இந்த இடைவேளையில் கட்சியின் மத்திய கமிட்டி மாவோகாங்கிலும் மாவோயெர்காயிலும் இரண்டு முக்கியமான மாநாடுகளை நடத்திற்று; இவ்விரு மகாநாடுகளும் வெற்றிகரமாக முடிந்தன. இவை சாங்குவோ-டாவோவின் தப்பிச் செல்லும் போக்கை நிராகரித்தன.

பிறகு, செஞ்சேனை இரண்டு அணிகளாக தன்னை பிரித்துக் கொண்டது. ஒரு அணி கிழக்கத்திய பாதையையும் மற்றொரு அணி மேற்குப் பாதையையும் மேற்கொண்டு, தொடர்ந்து வடக்கு நோக்கிச் சென்றது. கிழக்குப் பாதையில் சென்ற அணி சங்பானுக்கு எதிரியின் பலத்தை மிகைப்படுத்தியும் கூறினான். இந்த முறையில், அவனுக்கும் கட்சியின் மத்தியக் கமிட்டிக்கும் இடையே கடுமையானதொரு தகறாறு எழுந்தது. செஞ்சேனை வடக்கு நோக்கி அணி வகுத்துச் சென்று, நாள்தோறும் வளர்ந்து கொண்டிருந்த நாடு தழுவிய ஜப்பானிய எதிர்ப்பு இயக்கத்தோடு ஒருங்கிணைப்பதற்கு ஷென்ஸி - கான்ஸு-நிங்சியாவில் ஒரு தளத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று மத்தியக் கமிட்டி முடிவு செய்தது. ஆனால் சாங்குவா-டாவோ இந்த கொள்கையை எதிர்த்தான். அதற்குப் பதிலாக தேசிய சிறுபான்மையோர்கள் வசித்து வந்த சிகாங் மற்றும் திபெத் ஏரியாக்களுக்கு வாபஸ் வாங்க வேண்டுமென்ற தோல்விப் பாதையை வக்காலத்து வாங்கிப் பேசினான்.

தேசிய சிறுபான்மையோர் வசித்த பிரதேசங்களுக்குச் செஞ்சேனையை வாபஸ் பெறுவது என்ற சாங்குவோ-டாவோவின் இந்தத் தவறானப்பாதை, செஞ்சேனையையும் நாடு தழுவிய மேற்கே உள்ள சகதி நிறைந்த புல் நிலங்களையும் பாலைவன நிலங்களையும் கடந்து சென்று ஆகஸ்ட் 28இல் பாஷியை

அடைந்தது. ஆனால், மேற்கு அணி, அப்பாவை அடைந்த பொழுது, தெற்கே திரும்பி டியென்சுவானுக்கும் லூஷானுக்கும் செல்லும்படி சாங்குவா - டாவோவினால் எதேர்ச்சதிகாரமாக உத்தரவிட்டது. மேலும், கிழக்கு பாதையினைப் பின்பற்றிக் கொண்டிருந்த நான்காவது அரங்க சேனையின் துருப்புக்களை, புல் நிலங்களை மீண்டும் கடந்து, தன்னோடு தெற்கு நோக்கி அணிவகுத்து வரும்படி அவன் சிகாங்கில் உள்ள காண்சி ஏரியாவிற்கு தன்னுடைய துருப்புகளை அழைத்துச் சென்று போலித்தனமானதொரு ''கட்சி மையத்தை'' ஸ்தாபித்து, கட்சி மற்றும் செஞ்சேனையின் ஒருமைப்பாட்டினை அலட்சியம் செய்தான். மேலும், கட்சியின் மத்தியக் கமிட்டியை அபாயத்தில் வைப்பதற்கு அவன் சூழ்ச்சி செய்தான்.

தோழர் மாசே-துங்கினால் தலைமை தாங்கப் பட்ட செஞ்சேனையின் பகுதி கான்சூ மற்றும் ஷென்சி திசை வழியே வடக்கு நோக்கி உறுதியாக அணிவகுத்துச் சென்றது. செப்டம்பர் 5-இல், மாவோலங்கிலிருந்து ஆரம்பித்து, கான்சூவின் தென்பகுதியிலுள்ள மின்ஷியனில் அவர்கள் புகுந்து டங்வெய்யினைக் கைப்பற்றினார்கள், லியூபான்ஷானில் எதிரியின் வளையத்தை முறித்துக்கொண்டு, அவர்கள் குயுவான் கிராமப் பிரதேசத்தின் வழியாக ஹுவான்ஷியன் கிராமப்புற பிரதேசத்திற்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். 1935 ஆம் ஆண்டு அக்டோபர் 19 ஆம் தேதியன்று அவர்கள் வடக்கு ஷென்சியில் உள்ள ப்ாவோ ஆன் கிராமப்புரப் பிரதேசத்திலுள்ள வூச்சி சென்னை அவர்கள் அடைந்தார்கள். அங்கு அவர்கள் லியூசீ-டானால் தலைமை தாங்கப்பட்ட வடக்கு ஷென்சி செஞ்சேனையைச்சந்தித்தார்கள்.

1935 நவம்பரில், தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் செஞ்சேனையின் இரண்டாவது அரங்க ராணுவம் ஹுன்னான்-ஹுப்பே-செச்சுவான்-குவெய்சோ எல்லைப்புர ஏரியாவில் சுற்றி வளைத்தலை உடைத்தெறிந்தார்கள்; மற்றும் 1936 ஜூனில் சிகாங்கில் உள்ள கான்சியில் நாலாவது அரங்க ராணுவத்தோடு தங்களது படைகளை இணைத்துக் கொண்டார்கள். சாங்கோ-சாவோவின் எதிர்ப்புக்கு முன்னே சூடே, ஜென்பி-ஷி, ஹோலங், குவான் ஷியாங்-இங் மற்றும் இதர தோழர்களின் இடைவிடாத முயற்சிகளின் காரணமாக, நான்காவது அரங்க ராணுவம் இரண்டாவது அரங்க ராணுவத்தோடு ஒன்று சேர்ந்து வடக்கு நோக்கிச் சென்றது. எனினும், ஒன்றிணைந்த படைகள் 1936 அக்டோபரில், கான்சூவில் ஹுயினிங் மற்றும் சிங்நிங்கை

அடைந்த பொழுது, அங்கு அவர்கள் முதல் அரங்க ராணுவத்தின் படைகளோடு சேர்ந்து கொண்டார்கள். அப்பொழுது சாங் குவோ-டாவோ நாலாவது அரங்க ராணுவத்தை, சிங்கியாங்கை நோக்கி மேற்குப் புறமாக அணி வகுத்துச் செல்லும்படி மீண்டும் கட்டளையிட்டான். இதன் விளைவாக ஒரு சிறு பகுதி நீங்கலாக நான்காவது அரங்க ராணுவம் சாங் குவோ - டாவோவின் தவறான பாதைக்கு இரையாகி, சிங்கியாங்கிற்குச் செல்லும் பாதையில் நிர்மூலம் செய்யப்பட்டன. இது, செஞ்சேனைக்குக் கிடைத்த கடுமையானதொரு நஷ்டமாகும்.

மாவோகங், மாவோயெர்க்காய் ஆகிய இடங்களிலும், பின்னர், ஏனானில் நடைபெற்ற மாநாட்டிலும், சாங் குவோ-டாவோவின் கட்சி விரோத நடவடிக்கைகள் எதிர்த்து போராடப் பட்டன; கட்சியினாலும் தோழர் மாசே-துங்கினாலும் கடைப்பிடிக்கப் பட்ட உள் கட்சிப் போராட்டத்தின் சரியான கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. நான்காவது அரங்க ராணுவம் சீக்கிரத்திலேயே மத்தியக் கமிட்டியின் சரியான தலைமையை ஏற்றுக் கொள்வதற்கு முன் வந்தது. சாங்குவோடாவோவின் தவறுகளைக் களைவதில், மத்தியக் கமிட்டி, முன்பின் முரணற்ற முறையில், கற்றுக் கொடுக்கும் முறைகளையும், தூண்டுகோல் செய்யும் முறைகளையும், பயன் படுத்திற்று. போலித்தனமானதொரு "கட்சி மையத்தை" ஏற்பாடு செய்த பிறகும்கூட, இளகிய உணர்வின் காரணமாக அவரது தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. ஆனால் இத்தகைய முறைகள், தாராள மானவையாகவும் மிகவும் நியாயமானவையாகவும் இருந்த போதிலும், இந்த சந்தர்ப்பவாதியின் சீரழிவை கட்டுப்படுத்து வதற்கு இவை தவறிவிட்டன. அவன் புரட்சியை உதறித் தள்ளி, முடிவில், கோமிங்டாங்கிற்கு தன்னை விற்றுக் கொண்டான்.

1934-அக்டோபரிலிருந்து 1935-அக்டோபர் வரையிலும் பன்னிரெண்டு மாதங்களில், மத்திய செஞ்சேனை பதினொரு மாகாணங்கள் வழியாக (ஃபூக்கியன், கியாங்சி, குவாங்டுங், ஹூனான், ஹூவாங்ஸி, குவெச்சோ, செச்சுவான், யுன்னான் சிக்காங், கான்ஸூ, ஷென்ஸி) அணிவகுத்துச் சென்று உயர்ந்த பனிமுடிய மலைகளின் மீது ஏறி, உயிரினங்களின் அடையாளமே நடைமுறையில் தெரியாத புல்வெளியில் நிலங்களைக் கடந்து சென்று எதிரியினால் முயற்சிக்கப்பட்ட சுற்றி வளைத்தல், பின் தொடர்தல், தடுத்தல் மற்றும் இடைமறித்தல் ஆகியவற்றை

நெருக்கித் தள்ளிற்று. அது 12,600 கிலோ மீட்டர்கள் அணி வகுத்துச் சென்றது; எண்ணற்ற ராணுவக் கஷ்டங்களையும் அரசியல் கஷ்டங்களையும், இயற்கையான தடங்கல்களையும் சமாளித்து இறுதியாக வடக்கு ஷென்ஸியிலுள்ள புரட்சிதளத்தை வெற்றிகரமாக அடைந்து, அங்கிருந்து செஞ்சேனையின் படைகளோடு சேர்ந்து கொண்டது. ஐந்தாவது எதிர் சுற்றிவளைத்தல் இயக்கத்திற்கு முன்பு, செஞ்சேனை மூன்று லட்சம் பேரைக் கொண்ட ஒரு படையாக வளர்ந்திருந்தது. ஆனால், ''இடது சாரிகளின்'' தவறான தலைமையின் விளைவாகவும் மற்றும் சாங்குவோ-டாவோவின் பிளவு நடவடிக்கைகள், நாசவேலை ஆகிய வற்றின் விளைவாகவும் ஏற்பட்ட மாபெரும் நஷ்டங்களால் வடக்கு ஷென்சியில் வந்து சேர்ந்த சமயத்தில், செஞ்சேனை 30,000 பேர்களுக்கும் குறைவானதாக குறுகிப் போயிருந்தது. எனினும்,இவர்கள் செஞ்சேனை, கட்சி ஆகியவற்றின் மலராகவும் சீனகக்களின் மிகப்பெரிய பொக்கிஷமாகவும் அமைந்தார்கள்.

செஞ்சேனையின் மூன்று பிரதான படைப்பிரிவுகளும் இந்த பிரமாண்டமான நிலைமைகளின் மாற்றங்களை நிறைவேற்றி படைகளை வெற்றிகரமாக இணைத்தது மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் உடையதாகும். தோழர் மாசே-துங்கின் வார்த்தைகளில் கூறுவதெனில், ''நீண்ட பயணம் வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட, அதன் வகையைச் சேர்ந்த, முதல் அணி வகுப்பு; இது ஓர் அறிக்கை; ஒரு கிளர்ச்சிப் படை ஒரு விதை விதைக்கும் இயந்திரம்.''[3] இது ஒரு புதிய வரலாற்று ரீதியான ஆவணம்; ஏனெனில், நீண்ட பயணம் உலக வரலாற்றில் ஈடு இணையற்ற ஒரு நிகழ்ச்சியாக இருந்தது; இது ஓர் அறிக்கை; ஏனென்றால், அது செஞ்சேனையின் வெல்ல முடியாத தன்மையை ஊர்ஜிதம் செய்து, ஏகாதிபத்திய—சியாங் சுற்றி வளைத்தல் இயக்கங்களின் தோல்வியை பிரகடனம் செய்தது; இது ஒரு கிளர்ச்சிப்படை; ஏனெனில் செஞ்சேனையின் பாதை மக்களின் விடுதலைக்கு வழி நடத்திச் சென்றது என்பதை சீனாவின் பரந்த ஒரு பிரதேசத்தில் அது பிரகடனம் செய்தது; கடைசியாக, இது ஒரு விதை விதைக்கும் இயந்திரம்; ஏனெனில் இது பதினொரு மாகாணங்களில் புரட்சியின் விதைகளை விதைத்தது.

இந்த முறையின், நீண்ட பயணம் செஞ்சேனையின் வெற்றியிலும் எதிரியின் தோல்வியிலும் முடிவடைந்தது.

## அடிக் குறிப்புகள்

1. ஜே. வி. ஸ்டாலின் நூல்கள், வெளிநாட்டு மொழி நூல்கள் பதிப்பு நிலையம், மாஸ்கோ-1955 தொகுதி 12 பக், 262. (ஆங்கில பதிப்பு)
2. சகோதரர்கள் சென்குவா-ஃபூ மற்றும் சென்லீ-ஃபூ வினால் தலைமை தாங்கப்பட்ட பாசிச உளவாளிகளின் ஒரு நிறுவனம். 1929-இல் அமைக்கப்பட்டது.
3. மா சே-துங் முன்னூல் தொகுதி I பக். 161.

அத்தியாயம் ஏழு

# ஜப்பானிய எதிர்ப்பு
# ஜனநாயக இயக்கத்தின் புதிய எழுச்சி.
# உள்நாட்டு அமைதி நிலைநாட்டப்படுதல்.

*(டிசம்பர் 1935-ஜூலை 1937)*

## 1. 1933-லிருந்து 1935 வரையிலும் சர்வதேச நிலைமை. ஒரு புதிய ஏகாதிபத்திய யுத்தத்தின் ஆரம்பம்.

1929-ஆம் ஆண்டு பின்பாதியில், முதலாளித்துவ நாடுகளில் வெடித்துக் கிளம்பிய பொருளாதார நெருக்கடி, 1932-ஆம் ஆண்டு இறுதி வரையிலும் நீடித்தது. அப்பொழுது தொழில் வீழ்ச்சி நின்று விட்டது; நெருக்கடி ஒரு தேக்கத்திற்குள் கடந்து சென்று விட்டது; இதைப்பின் தொடர்ந்து தொழிலில் குறிப்பிட்டதொரு முன்னோக்கிச் செல்லும் போக்கு இருந்தது. 1938-இல் முதலாளித்துவ நாடுகளில், தொழில் மீட்சி பெற ஆரம்பித்து, சற்று முன்னேறிற்று. 1933க்குப் பிறகு ஒரு சில ஆண்டுகளுக்கு அது தொடர்ந்து முன்னேறிற்று. முதலாளித்துவ நாடுகளில் தொழில் உற்பத்தி 1929இல் 100 என்று வைத்துக் கொண்டால், 1935இல், வட சீனாவின் மீது ஜப்பான் படையெடுத்த ஆண்டில், அது அமெரிக்காவில் 75.6% ஆகவும், பிரிட்டனில் 105.8% ஆகவும், பிரான்ஸில் 67.4% ஆகவும், இத்தாலியில் 93.8% ஆகவும், ஜெர்மனயில் 94% ஆகவும், ஜப்பானில் 141.8% ஆகவும் இருந்தன. ஜப்பானும் பிரிட்டனும் நெருக்கடிக்கு முந்திய மட்டத்தைத் தாண்டி இருந்தன. அதே சமயத்தில், ஜெர்மனியும் இத்தாலியும் கிட்டதட்ட அதற்கு நெருக்கமாக வந்திருந்தன; ஆனால் அமெரிக்காவும், பிரான்ஸும் சராசரி சுமார் 25%த்திற்கும் குறைவாகவே இருந்தன.

முதலாளித்துவ நெருக்கடியின் இந்த சிறிய தளர்த்தலுக்கு காரணம் என்ன? முதலாவதாக, முதலாளித்துவத்தின் உள்நாட்டுப் பொருளாதார சக்திகளின் மீது சிறிது விளைவு ஏற்

பட்டிருந்தது; முதலாளித்துவ நாடுகளில் ஏகபோக முதலாளிகள் தொழிலாளிகளின் சுரண்டல்களை தீவிரப் படுத்தியிருந்தார்கள். தங்களுடைய சொந்த நாடுகளிலும் மற்றும் காலனிப, அறைக் காலனிய நாடுகளிலும் விவசாய விளைப் பொருள்களின் விலைகளை குறைக்கவும் செய்தார்கள். இரண்டாவதாக, ஒரு ஏகாதிபத்திய யுத்தத்திற்காக நடைபெற்ற செயற்கையான அம்சங்கள் போன்ற இப்படிப்பட்ட அம்சங்கள் காரணமாகவும் முதலாளித்துவ நாடுகளினால் பின்பற்றப்பட்ட பணவீக்கக் கொள்கை காரணமாகவும் இந்தத் தளர்ச்சி ஏற்பட்டது.

இந்தக் காலக்கட்டத்தில் ஜப்பான், வட கிழக்கிலிருந்து வட சீனாவிற்கு தனது ஆக்கிரமிப்பை விஸ்தரித்தது. சீனாவிலிருந்து சுரண்டப்பட்ட அபரிமிதமான லாபங்களோடு, ஜப்பான் அதனுடைய ஆயுத தளவாடங்களை விஸ்தரித்து, ஆக்ரமிப்பு யுத்தத்தை முன்னுக்குக் கொண்டு சென்றது; இந்த முறையில், நெருக்கடிக் காலக்கட்டத்தில் அடைந்த நஷ்டங்களில் ஒரு பகுதியைச் சரிக் கட்டிக் கொண்டது. மேலும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மீட்சி பெற்று தொழிலில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு முன்னோக்கிச் செல்லும் போக்கினைப் பெற்றது.

முதலாளித்துவம் நாடுகளுக்குள்ளேயும், அவற்றிற்குக்கிடையேயும் முரண்பாடுகளைப் பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரப்படுத்திற்று.

தங்களது அயல் நாட்டுக் கொள்கையை இனவெறி வாதத்தின் மீதும், யுத்தத் தயாரிப்புகளின் மீதும் அடிப்படையாகக் கொண்டிருந்த சமயத்தில், ஏகாதிபத்திய நாடுகள், அவற்றின் உள்நாட்டு நிர்வாகத்தில், வரக்கூடிய யுத்தத்தில் பின்னணி தளத்தைக் கெட்டிப் படுத்துவதற்காக அவசியமான சாதனங்களாக தொழிலாளி மற்றும் விவசாய வெகு ஜனங்களின் மீது ஒடுக்கு முறையையும் எதிர்ப்புரட்சிகர பயங்கரத்தையும் நிறைவேற்றின. அவை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முரண்பாடுகளின் குழப்பத்தில் மூழ்கிக் கொண்டு இருந்தன; இந்த முரண்பாடுகளைச் சமாளிக்க முடியவில்லை.

நிலவிக் கொண்டிருந்த நிலைமைக்கு ஒரு பரிகாரம் காண, ஒரு புதிய ஏகாதிபத்திய யுத்தத்தை ஆரம்பிப்பது என்பது தெட்டதெளிவாகிக் கொண்டிருந்தது,

யுத்தத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த ஏகாதிபத்திய நாடுகளான ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளில், முதலாளித்துவ ஜனநாயக அமைப்பு, முற்றிலும் ஒழிக்கப்பட்டு.

ஒரு பாசிச சர்வாதிகாரத்தை அமல் நடத்துவதற்கு பயங்கரமான முறைகள் கையாளப்பட்டன.

அவற்றின் அயல் நாட்டுக் கொள்கையில், இந்த மூன்று நாடுகளும் ஒன்பது அரசு உடன்படிக்கையோடும் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையோடும் அதிருப்தி அடைந்து இருந்தன. தங்களுடைய ஆக்ரமிப்பு செயல்களுக்கு அவற்றை தடங்கல்களாகக் கருதிக் கொண்டுருந்தன. இந்த முறையில் மூன்று ஆக்ரமிப்பு நாடுகளும் ஒரு புதிய யுத்தத்தின் தோற்றுவாயாக மாறின. இத்தாலி எத்தியோப்பாவை ஆக்ரமித்துக் கொண்டது; அப்படிச் செய்ததின் மூலம் பிரிட்டனுக்கும், இத்தாலிக்கும் இடையே முரண்பாடுகள் பிரிவடைந்தன. ஜெர்மனி அண்டை நாடுகளோடு எல்லைக் கோடுகளைத் திருத்தி அமைக்க விரும்பிற்று; மேலும், ஆஸ்திரியா செக்கோஸ்லோவாக்கியா மற்றும் போலந்து ஆகிய நாடுகளை ஆக்ரமிப்பதற்கு தயாரிப்புகளைச் செய்தது. வடகிழக்குச் சீனாவை ஆக்ரமித்துக் கொண்ட பிறகு, வடசீனாவின் மீதும் சீனாவின் இதர பகுதியின் மீதும் ஜப்பான் புதியதொரு தாக்குதலைத் தொடுத்தது. ஜெர்மனியும் இத்தாலியும் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையை கிழித்தெரிந்தன; ஜப்பான் 9 அரசு உடன்படிக்கையைக் கிழித்தெரிந்தது; இந்த மூன்று நாடுகளும் லீக் ஆஃப் நேஷன்ஸ்ஸிலிருந்து வாபஸ் வாங்கிக் கொண்டன.

யுத்தத்தின் மூலம் உலகத்தைப் புதியதொரு புனர்ப் பங்கீடு செய்தது உடனடியாக வெளிப்பட்டது.

ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் ஆட்சியாளர்களால் உலகின் பல்வேறு இடங்களில் புதிய யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. அது தேசிய விடுதலை இயக்கங்களுக்கு எதிரான ஒரு யுத்தமாகவும் மற்றும் பிரிட்டிஷ், பிரான்சு, அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் நலன்களுக்கு எதிரானதொரு யுத்தமாகவும் இருந்தது; உலகம் முழுவதிலும் பிரதேசங்களை புனர்பங்கீடு செய்வதையும் மற்றும் செல்வாக்கு மண்டலங்களைப் புனர்ப்பங்கீடு செய்வதையும் அந்த யுத்த குறிக்கோளாகக் கொண்டிருந்தது,

இந்த முறையில் மூன்று ஆக்ரமிப்பு அரசுகளின் கூட்டணி உருவெடுக்க ஆரம்பித்தது.

இந்தக் காலக்கட்டத்தில் சோவியத் யூனியனின் தொழில் உற்பத்தி கிட்டத்தட்ட மூன்று மடங்கு ஆகியிருந்தது; 1935 ஆம் ஆண்டு வாக்கில் 1929 ஆம் ஆண்டைக் காட்டிலும் தொழில் உற்பத்தி 293.4%ஆக உயர்ந்துக் கொண்டிருந்தது. மிக அதிக முக்கிய

மான விஷயம் என்னவென்றால் சோவியத் யூனியனின் பொருளாதார, சமுதாய அமைப்பில் உருவாக்கப்பட்டிருந்த தொழில் வளர்ச்சியின் அடிப்படையான மாற்றந்தான், அந்தக் காலக் கட்டத்தில், சோவியத் யூனியன் ஒரு விவசாய நாடாக இருந்ததிலிருந்து தொழில் வளர்ச்சி பெற்ற ஒரு நாடாக மாறி இருந்தது. தனிநபர் பண்ணை விவசாயம் செய்து கொண்டிருந்த ஒரு நாடாக இருந்ததிலிருந்து, இயந்திரமயமாக்கப்பட்ட கூட்டுப் பண்ணை விவசாயம் நடைபெறும் ஒரு நாடாக மாறி இருந்தது.

சோவியத் யூனியனில் தொழில் மயமாக்குவதில் துரிதமான அபிவிருத்தியின் விளைவாக, அந்நாட்டின் தேசிய பொருளாதாரத்தின் மொத்த உற்பத்தியில், தொழில் உற்பத்தி முதலிடத்தை வகித்தது. 1933இல் தொழில் மற்றும் விவசாயம் ஆகியவற்றின் மொத்த உற்பத்தியில் அது 70.4% ஆக இருந்தது. சோவியத் யூனியன் தொழில் வளர்ச்சி பெற்ற ஒரு நாடாக இருந்தது.

சோவியத் யூனியன் ஒரு விவசாய நாடாக இருந்ததிலிருந்து தொழில் வளர்ச்சி பெற்ற ஒரு நாடாக மாறி இருந்தது என்பது முதலாளித்துவம் ஒழிக்கப்பட்டிருந்ததையும் குறித்தது. சோஷலிச அமைப்பு, தொழிலில் மிதமிஞ்சியதொரு மேலாதிக்கத்தையும் பெற்றிருந்தது. 1935இல் சோவியத் யூனியனில் சகல தொழில் உற்பத்திப் பொருட்களிலும் 99.96% பொருட்கள் சோஷலிச தொழிலில் இருந்து வந்தன. முதலாளித்துவம் ஒழிக்கப்பட்டதோடு சோவியத் யூனியனில் தொழிலில், சோசலிச அமைப்பு ஒரே அமைப்பாக ஆகியிருந்தது.

விவசாயத்தில், 1933இல் தானியங்கள் விதைக்கப்பட்டிருந்த ஏரியாவின் கணக்குப்படி, சோஷலிச பொருளாதார அமைப்பு மொத்தப் பொருளாதாரத்தில் 84.5%ஐ பிரதிநிதித்துவப்படுத்திற்று; அதே சமயத்தில், தனி நபர் விவசாயப் பொருளாதாரம் 15.5% மட்டுமே இருந்தது. கூட்டுப் பண்ணைகள் ஒரு நிரந்தர வெற்றியைப் பெற்றிருந்தன; சோவியத் யூனியனிலிருந்த விவசாயிகள் இறுதியாக சோஷலிசத்தின் பக்கத்திற்கு மாறி இருந்தார்கள்.

அயல் நாட்டுக் கொள்கையில், சோவியத் யூனியன் முன்பின் முரண்யற்ற முறையில் யுத்தத்தை எதிர்த்தும் சமாதானத்தைப் பாதுகாத்தும் வந்தது. ஆகவே, சமாதானத்தைப் முறிப்பதற்கு விருப்பமில்லாத நாடுகளோடு மிக நெருக்கமான உறவிற்குள் வருவது அந்நாட்டின் நலன்களுக்கு தேவையாக இருந்தன.

1934 இறுதியில், ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் லீக் ஆஃப் நேஷன்ஸ்ஸிலிருந்து வாபஸ் வாங்கிக் கொண்ட பிறகு சோவியத் அதில் சேர்ந்தது. அதனுடைய பல ஹீனங்கள் ஒரு புறம் இருந்த போதிலும் ஆக்ரமிப்பாளர் களை அம்பலப்படுத்துவதற்கு, லீக் ஒரு மேடையாக பயன்பட முடிந்தது. ஆகவே, ஆக்கிரமிப்பிற்கு எதிராக அதனுடைய போராட்டத்தில் சோவியத் யூனியன் லீகை பயன்படுத்திக் கொண்டது. இதர நாடுகளோடு பரஸ்பர உதவி ஒப்பந்தங்கள் சோவியத் யூனியனால் செய்து கொள்ளப்பட்டன; 1935 மே மாதத்தில் பிரான்ஸ்சோடும் செக்கோஸ்லோவாக்கியாவோடும், 1936 மார்ச்சில் மங்கோலிய மக்கள் குடியரசோடும் உடன் படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டது.

**2. சீன அதிகார வர்க்க முதலாளித்துவம் உருவாதல் கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்கள் காலனியாக்கப்படுதல். சீனாவில் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஜப்பானுக்குமிடையே போராட்டம்.**

நான்கிங்கில் ஒரு பாசிச ராணுவ சர்வாதிகாரத்தை நிலை நிறுத்திக் கொண்ட பிறகு, கோமிங்டாங் பிற்போக்கு வாதிகள் அதிகார வர்க்க முதலாளிகளின் ஒரு பொருளாதார ஏக போகத்தை ஏற்பாடு செய்வதற்கு ஆரம்பித்தார்கள்; இந்த ஏக போகம், சியாங்காய் - ஷேக், டி.வி.சூங், எச்.எச். குங்,செண் சகோதரர்கள் (சென் குவோ-ஃபூ, சென் லீ-ஃபூ) ஆகிய, ''நான்கு பெரிய குடும்பங்களால்,'' பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டது.

''நான்கு பெரிய குடும்பங்களின்'' ஏகபோக நடவடிக்கைகள் நான்கு வங்கிகளைச் சுற்றிலும் குவிந்திருந்தன; சீன மத்திய வங்சி, சீன வங்கி, செய்தித் தொடர்புகள் வங்கி, சீன குடியான வர்களின் வங்கி ஆகிய நான்குமே இந்த வங்கிகள். சீன மத்திய வங்கி, 1928 நவம்பரில் துவக்கப்பட்டது. ''அரசு வங்கி'' என்று அழைக்கப்பட்ட அந்த வங்கி, வங்கி நோட்டுகளை வினியோகிப் பதற்கும், அச்சடிப்பதற்கும் மற்றும் தேசிய பணத்தின் நாணயங் களை சுற்றுக்கு விடுவதற்கும் மற்றும் அரசாங்கப் பத்திரங்களை வெளியிடுவதற்கும் அது உரிமை பெற்றிருந்தது. அரசாங்க கரு வூலத்திற்கும் அது பொறுப்பாக இருந்தது. 1928லிருந்து 1935 வரையிலும், சியாங் அரசாங்கம், அரசாங்க மூலதனத்தை அதி கரித்ததின் மூலம் சீன வங்கி மற்றும் செய்தித் தொடர்புகள்

வங்கி ஆகியவற்றின் மீது ஆதிக்கத்தைப் பெற்றது; சீன வங்கியும் செய்தித் தொடர்புகள் வங்கியும் முன்பு வடக்கத்திய யுத்தபிரபு அரசாங்கத்தின் நிதித்தூண்களாக விளங்கின. சீனக் குடியானவர் வங்கி 1935 இல் நிறுவப்பட்டது.

சீனாவின் அனைத்து வங்கிகளுக்கிடையேயும் நான்கு பெரிய வங்கிகள் ஏகபோகமானதொரு நிலையைப் பெற்றிருந்தன. 1936 வாக்கில், சீனாவிலிருந்த அனைத்து வங்கிகளின் சொத்து 59%, அவை பெற்றுருந்தன, சேமிப்பு நிதிகளில் 59% பெற்றிருந்தன; மற்றும் நாடு முழுவதிலும் புழக்கத்திலிருந்த வங்கி நோட்டுகளில் 78% அவை விநியோகம் செய்தன. உண்மையிலேயே, இதர எல்லா வங்கிகளுக்கும் அவை வங்கிகளாக செயல்பட்டன; மற்றும் சீனாவின் வியாபாரம் தொழில் மற்றும் விவசாயம் ஆகியவற்றின் மீது ஏகபோகமானதொரு ஆதிக்கத்தையும் அவை செலுத்தின,

1935 நவம்பரில், சியாங் அரசாங்கம், "சட்டபூர்வமான ஏல"க் கொள்கை என்று சொல்லப்பட்ட கொள்கையைப் பின்பற்றி, மக்களிடமிருந்து அவர்களது செல்வத்தைப் பறிக்கும் பொருட்டும் அப்படிப் பறிக்கப்பட்டதை "நான்கு பெரிய குடும்பங்களின்" தனிச் சொத்தாக மாற்றும் பொருட்டும் மாற்றப்படமுடியாத நோட்டுகளை விநியோகித்தது. இது கொள்ளையின் மிகமிக ஈவிரக்கமற்ற உருவமாக இருந்தது. 1937 ஜூலையில், ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் வெடிக்கும் வரையிலும், விநியோகிக்கப்பட்ட "சட்டபூர்வமான ஏலத் தொகை" 140 கோடி சீன டாலர்களாக இருந்தன.

தங்களது நடவடிக்கைகளின் மையமாக நான்கு பெரிய வங்கிகளை வைத்துத்துக் கொண்டு, "நான்கு பெரிய குடும்பங்களும்" வர்த்தகத்துறையில் தங்களுடைய ஏகபோகத்தையும் கொள்ளையடித்தலையும் ஆரம்பித்தன. சூங் குடும்பத்தினர் பருத்தி, அரிசி மற்றும் இதர அன்றாடத் தேவைப் பொருள்களில் பெரிய அளவிலானதொரு வர்த்தக நிறுவனத்தை ஏற்பாடு செய்து, தேசத்தின் வியாபாரத்தை ஏகபோகம் ஆக்கிக் கொண்டது.

1935-ஆம் வருடமும் 1936-ஆம் வருடமும் தேசியத் தொழில் மற்றும் வியாபாரத்திற்கு நெருக்கடியானதொரு காலக் கட்டமாக இருந்தன. நிதிக்கட்டுப்பாட்டினைப் பெற்றுக் கொண்ட பிறகு "நான்கு பெரிய குடும்பங்களும்" தொழில் ஆதிக்கம் செலுத்தவும் ஏகபோகத்தைப் பெறவும் முயற்சிக்க

ஆரம்பித்தன. அரசு நிர்வாகம் என்ற போர்வையின் கீழ், ''நான்கு பெரிய குடும்பங்களும்'', நிலவியிலிருந்து வந்த அதிகார வர்க்கத் தொழில்களை இணைத்துக் கொண்டதோடு கூடவே, தேசத்தின் தொழில்களின் மீது ஏகபோக ஆதிக்கம் செலுத்து வதற்கு தங்களுடைய பிரதான அமைப்பாக தேசிய செல்வா தாரங்களின் கமிஷனையும் ஏற்படுத்திக் கொண்டார்கள். அவர்களது சுரங்கங்கள், உருக்கு மற்றும் பொறியியல் தொழிற் சாலைகள் ஏகாதிபத்தியவாதிகளோடு கூட்டாக நடத்தப் பட்டன. தனிப்பட்ட முதலாளிகள் என்ற போர்வையிலும் மற்றும் கூடுதல் மூலதன முதலீடு செய்வது என்ற இப்படிப்பட்ட முறைகளாலும், புனரமைத்தல் மற்றும் மிதமிஞ்சிய வட்டிகளில் கடன்களை வழங்குவது என்ற இப்படிப்பட்ட முறைகளாலும் ''நான்கு பெரிய குடும்பங்களும்'' தனியாருக்குச் சொந்தமான தொழில்கள் பணத்திற்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தபோது, அவற்றின் ஆதிக்கத்தையும் உடைமையையும் கைப்பற்றின. இது குறிப்பாக, பஞ்சாலைத் தொழில் தெளிவாக இருந்தது. 1937-ஆம் ஆண்டு முதல்பாதியில், ''நான்கு பெரிய குடும்பங் களால்'' இணைத்துக் கொள்ளப்பட்ட அல்லது நிர்வகிக்கப்பட்ட பஞ்சாலைகளிலுள்ள கதிர்களின் எண்ணிக்கை, சீனாவில் மொத்தமிருந்த கதிர்களின் எண்ணிக்கையில் 13 % இருந்தது.

விவசாயத்தில், ''நான்கு பெரிய குடும்பங்களும்'' நாட்டில் மிகமிகப் பெரிய நிலச்சுவான்தாரர்களாக இருந்தன மேலும், மிகவும் ஈவிரக்கமற்ற முறையில் விவசாயிகளை சுரண்டுபவர்களா கவும் இருந்தார்கள். பிற்போக்கு ஆட்சியினால் ஆதரிக்கப்பட்ட அவர்கள் நாடு முழுவதிலுமுள்ள விவசாயிகளின் மீது கடுமை யான வரியையும் திணித்தார்கள். அவர்களை கட்டாய வேலை செய்யும்படி நிர்ப்பந்தப்படுத்தினார்கள். அவர்களை பட்டாளத் திற்கு சேர்த்தார்கள்; மற்றும் அவர்களது நிலத்தை நஷ்டஈடு இல்லாமல் எடுத்துக் கொள்ளவும் செய்தார்கள்.

நிதி, வியாபாரம், தொழில் மற்றும் விவசாயம் ஆகியவற்றின் மீது அவர்களுக்கு இருந்த ஏகபோக கட்டுப்பாட்டின் மூலம் ''நான்கு பெரிய குடும்பங்களும்'' மக்களைக் கொள்ளையடித் தார்கள்; மேலும் நாட்டின் மிகமிகப் பெரிய ரத்தம் உறிஞ்சும் பிசாசுகள் என்று பெயரையும் பெற்றார்கள்.

அந்நிய உதவிக்கு பரிவர்த்தனையாக சீனாவில் ஆதிபத்திய உரிமையை விற்று சியாங்காய்-ஷேக் கும்பல் அதனுடைய பிற்போக்கு ஆதிக்கத்தை வைத்துக் கொண்டு இருந்தது. அந்தக்

கும்பலின் பிற்போக்கு ஆட்சிக் காலத்தில்தான் ஏகாதிபத்திய வாதிகள் சீனாவை ஒரு காலனி ஆதிக்க சந்தையாக மாற்று வதைப் பூர்த்தி செய்தார்கள்.

ஏகாதிபத்திய ஏகபோக மூலதனம் சீனாவின் தேசிய பொருளாதாரத்தின் சகலபிரிவுகளிலும் ஊடுருவி அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்திற்று. 1936-இல் சீனாவின் நிலக்கரி உற்பத்தி யின் அந்நிய மூலதனம் 55.7% ஆக இருந்தது, அதே சமயத்தில் அந்த நாட்டின் இரும்புச் சுரங்கங்கள், அநேகமாக முழுவதும், ஜப்பானிய மூலதனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. 1937-இல், சீனாவில் ரயில்வே முதலீட்டில் 90.7% ஏகபத்திய வாதிகளிடமிருந்தது. 1936இல் யாங்ட்சி நதியில் ஓடிக் கொண் டிருந்த கப்பல்களில் மொத்த எடையில் அயல் நாட்டுக் கப்பல் களில் எடை 81.9% ஆக இருந்தது; நாடுமுழுவதிலும் பயன் படுத்தப்பட்ட மின்சாரத்தில் (கிலோவாட், மணிகள் அளவில்) 55% அந்நிய தொழிற்சாலைகளின் உற்பத்தி செய்யப்பட்டன. அனைத்து வாங்கிகளின் சொத்துக்களில் அந்நிய மூலதனம் 20.8% ஆக இருந்தது. எனினும், சீனாவில் அந்நியவங்கிகள் போட்டிருந்த மூலதனத் தொகையில் இருந்து மட்டும் அந்நிய வங்கிகளின் பொருளாதார வலிமையைப் பற்றி சரியான மதிப்பீடு செய்யப்பட முடியவில்லை, ஏனெனில் அவை வங்கி நோட்டுகளை விநியோகிக்கும் சலுகைகள் மற்றும் சுங்கவரி. உப்புவரி ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் சலுகைகளையும் அனுபவித்துவந்தன. பரிவர்த்தனை விகிதாச்சாரமும் கூட அவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. 1936இல், சீனாவின் நூற்புக் கதிர்களில் 46.2% மும், அந்நாட்டின் முறுக்கு நூல் கதிர்களில் 67.4%மும் அந்நாட்டின் தறிகளில் 56.4%மும் அந்நிய மூலதனத்தால் உடைமையாக்கப் பட்டிருந்தன. 1935இல், சிகரெட்டுகளின் மொத்த உற்பத்தியில் 58% அந்நிய தொழில் நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்பட்டது.

சுருக்கமாக சொன்னால் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்திற்கு முன்பு கோமிங்டாங் கட்டுப்பாட்டிலிருந்த ஏரியாக்களில், ஏகாதிபத்திய வாதிகள் நிலக்கரி மற்றும் இரும்புத் தொழில்கள், ரயில்வே, நதிப் போக்குவரத்து மற்றும் இதர நிறுவனங்களில் ஏகபோகமாக ஆதிக்கம் செலுத்தினார்கள். அவர்கள் சீனாவின் நிதியையும் கூட கட்டுப்படுத்தினார்கள். சில தொழில் பிரிவு களில், குறிப்பாக பஞ்சாலைகளிலும், சிகரெட் உற்பத்திகளிலும் அந்நிய மூலதனம் மிதமிஞ்சி ஆதிக்கம் செலுத்திற்று.

ஏகாதிபத்திய முதலீடுகள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதைக் காட்டிலும் மிகப் பெரும்பாலும் சீனாவிலிருந்து கசக்கிப் பிழியப்பட்டன. ஏகாதிபத்திய வாதிகள் யுத்தக் கடன்களை வற்புறுத்தி வசூலித்தார்கள்; பலாத்காரமாக நிலத்தை ஆக்ரமித்துக் கொண்டார்கள்; தொழில் நிறுவனங்களின் உடைமையை சூழ்ச்சிகளால் கைப்பற்றிக் கொண்டார்கள். சீன மூலதனத்தைப் பறித்து கொண்டார்கள். இவ்வாறு ஏகாதிபத்தியவாதிகள் சீனாவைக் கொள்ளையடித்தார்கள். சீனாவில் சிறு அளவிலான மூலதனத்தை இறக்குமதி செய்ததற்குப் பரிவர்த்தனையாக ஏகாதிபத்திய நாடுகள் பெரும் லாபங்களை எடுத்துச் சென்றார்கள்; இப்படிப்பட்ட ஏகாதிபத்திய பொருளாதார ஆக்கிரமிப்பின் விளைவாக, சீனா அதனுடைய சர்வதேசப் பட்டுவாடாக்களில் சாதகமற்ற மிச்சத்தை (Balance) பெற்று இருந்தது. 1894 ஆம் ஆண்டிலிருந்து 1937-ஆம் ஆண்டு வரையிலும் 43 ஆண்டுகளுக்குள் சீனாவிற்கு உள்ளேயிருந்தும் வெளியே இருந்தும் வந்து போகும் மூலதனம் (Flow of Capital), 1736 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் அதிகமாக இருந்ததாக வரவுகளைக் காட்டின; ஆனால் செலவுகள், 3,437 மில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்ததையும் காட்டின. இந்த வித்தியாசத்திற்கு சீனாவில் சாதகமற்ற சர்வாதச வர்த்தக மிச்சம் (Balance of International Trade) பகுதி காரணமாகவும் மற்றும் ஏகாதிபத்திய மூலதனத்தால் கொள்ளை அடிக்கப்பட்டது பகுதி காரணமாகவும் இருந்தது.

சீனாவில் ஏதாதிபத்திய ஏகபோக மூலதனத்தின் விஸ்தரிப்பு கடுமையானதொரு போராட்டத்தின் போக்கில் அமுலாக்கப்பட்டது.

முதலாவதாக, 1936-இல் சீனாவில் ஏகாதிகத்திய முதலீடுகளின் மொத்தத் தொகை, 4285 மில்லியன் அமெரிக்க டாலர்களாகும். இதில் பிரிட்டனின் முதலீடுகள் 1045 மில்லியன் டாலர்களாகும். 1930-இல் பிரிட்டனின் முதலீடுகளின் தொகை 1047 மில்லியன் டாலர்களாக இருந்த தொகையுடன் ஒப்பு நோக்கிப் பாரிக்கும்போது பிரிட்டிஷ் முதலீடுகள் நடைமுறையில் அப்படியே இருந்தன. 1936-இல் அமெரிக்க முதலீடுகள் 340 மில்லியன் டாலர்களுக்கும் அதிகமாக இருந்தன. இந்தத் தொகை 1930லிருந்த 285 மில்லியன் டாலர்களாடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது கிட்டத்தட்ட 20% அதிகரிப்பைக் காட்டிற்று. எனினும், அமெரிக்க முதலீடுகளின் மொத்தத் தொகை இன்னும்

சிறிதாகவே இருந்தது. 1936-இல் ஜப்பானிய முதலீடுகளின் மொத்தத் தொகை 2096 மில்லியன் டாலர்களுக்கும் அதிகமாக இருந்தது. இந்த தொகை 1930-லிருந்த 1411 மில்லியன் டாலர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது 48% அதிகரிப்பைக் காட்டின. ஆகவே இந்தக் காலகட்டத்தில் ஜப்பானிய முதலீடு கள் துரிதமாக அதிகரித்து முதலிடத்தை வகித்தன. மேலும், இது சீனாவில் போடப்பட்டிருந்த அந்நிய முதலீடுகளின் மொத்த தொகையில் பாதியாகவும் இருந்தது.

இரண்டாவதாக, 1939-இல் வடகிழக்குச் சீனாவில் ஜப்பானிய முதலீடுகள் 1455 மில்லியன் டாலர்களாக இருந்தன. சீனாவில், அதனுடைய முதலீடுகளின் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமாக இருந்தன. ஆனால் இந்தக் காலக்கட்டத் தில், சீனாவின் இதர பாகங்களில் ஜப்பானிய முதலீடுகள் மிகவும் சிறு அளவிலேயே இருந்தன; அல்லது அவை குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டவில்லை. சீனாவின் இதர பகுதிகளில் அமெரிக்கா மட்டுமே அதனுடைய முதலீடுகளில் மிகப்பெரிய அதிகரிப்பை செய்தது; அதிகரிப்பின் விகிதாச்சாரம் 40% எட்டிப் பிடித்தது. கோமிங்டாங் அரசாங்கத்தின் நிதிக்கடன்களில் மூன்றில் இரண்டு பகுதிகள் அமெரிக்காவிடமிருந்து பெறப் பட்டன.

மூன்றாவதாக, 1936-இல் சீனாவில் (வடகிழக்கு சீனா தவிர) தொழில்களில் (Enterprises) ஏகாதிபத்திய முதலீடுகள் 1,369 மில்லியன் டாலர்களுக்கும் அதிகமாக இருந்தன. இதில் பிரிட்டன் மிகப்பெரிய பங்கினை — 651 மில்லியன் டாலர்களுக் கும் அதிகமாக — பெற்றிருந்தது. ஜப்பான் 305 மில்லியன் டாலர்களோடு இரண்டாவது மிகப்பெரிய பங்கினைப் பெற்றிருந்தது. அமெரிக்கா 210 மில்லியன் டாலர்களுக்கும் அதிகமாக, முதலீடுகளைப் பெற்றிருந்த போதிலும், மிகச்சிறிய பங்கினைப் பெற்றிருந்தது. சீனாவின் (வடகிழக்கு சீனா தவிர) உற்பத்தித் தொழில்களில் (Manufacturing Industries) போடப் பட்டிருந்த ஏகாதிபத்திய மூலதன முதலீடுகளான 281 மில்லியன் டாலர்களுக்கும் அதிகமான தொகையில், ஜப்பான் மிகப்பெரிய பங்கினை, 140 மில்லியன் டாலர்களுக்கும் அதிகமாக பெற்றி ருந்தது. பிரிட்டன் இரண்டாவது மிகப்பெரிய பங்கினை, 107 மில்லியன் டாலர்களுக்கும் அதிகமாகப் பெற்றிருந்தது; அமெரிக்கா 20 மில்லியன் டாலர்களுக்கும் அதிகமாக முதலீடு களைச் செய்திருந்த போதிலும், மிக மிகச் சிறிய முதலீட்டையே பெற்றிருந்தது.

சீனாவில், ஏகாதிபத்திய ஏகபோக மூலதனத்தின் அபிவிருத்தி மிகமிகச் சீரற்றதாக இருந்தது.

இந்தக் காலக் கட்டத்தில், ஜப்பான் அதனுடைய ஆக்கிரப்பினை பெரும் சுவருக்கும் தெற்கே தொடர்ந்து நடத்தி பருத்தித் தொழில், மின் விசை, வங்கித் தொழில், சுரகங்கங்கள், ரயில்வேக்கள் மற்றும் துறை முகங்கள் ஆகியவற்றை வடசீனாவில் ஏகபோகமாக்கிக் கொண்டு, சீனாவில் அதனுடைய சரக்குகளை குவித்துக் கொண்டும் கள்ளக் கடத்தல் செய்து கொணடும் கூட இருந்தது. ஷாங்காய் ஜப்பானிய பஞ்சாலைகள், மேலும் விஸ்தரிககப்பட்டன. சீன மில்களைக் கைப்பற்றி அவற்றின் லாபங்களைக் கொள்ளை அடிக்கவும் செய்தன. சீனாவை வெற்றிக் கொள்ளும் ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளின் கொள்கை வடசீனாவிலும், மத்திய சீனாவிலும் பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் நலன்களை கடுமையாக பாதிக்கச் செய்தது; மற்றும் ''நான்கு பெரிய குடும்பங்களின்'' பொருளாதார அடித்தளத்தை சிதறடிக்கவும் செய்தது.

இந்த முறையில் ஒரு புறத்தில் பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் மற்றும் சினாவிலிருந்த அவர்களது தொங்கு சதைகள்—''நான்கு பெரிய குடும்பங்கள்''—ஆகியோருக்கும் மறுபுறத்தில் ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கும் இடையே இருந்த முரண்பாடும், பிளவும் ஒவ்வொரு நாளும் விரிவடைந்துக் கொண்டும் ஆழமாகிக் கொண்டும் இருந்தன.

1935ஆம் ஆண்டு கோடைக் காலத்தில், அமெரிக்க பொருளாதார கமிஷன் சீனாவிற்கு வந்தது; அதனுடைய விஜயம் அதே ஆண்டு மழை காலத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு பிரதான பொருளாதார ஆலோசகரமான சர். பிரடிரிக் லீத் ரோஸின் விஜயத்தால், பின்தொடரப் பட்டது. பிரிட்டன் மற்றும் அமெரிக்காவின் தூண்டுதலின் பேரில் சியபங்காய்-ஷேக் அரசாங்கம் ''பணச் சீர்திருத்தம்'' என்று சொல்லப்பட்ட சீர்திருத்தத்தை அமலுக்குக் கொண்டு வந்தது; சீன வங்கி, சீன மத்திய வங்கி மற்றும் செய்தித் தொடர்புகள் வாங்கி ஆகியவற்றினால் வெளியிடப்பட்ட நோட்டுகளை மட்டும் ஒரே ''சட்டப் பூர்வமான டெண்டராக'' செய்து, வெள்ளியை தேசிய மயமாக்குவதாகவும் பிரகடனம் செய்தது. அந்நியச் செலவாணியை அதனுடைய அடிப்படையாகக் கொண்டு, ''சட்டபூர்வமான டெண்டர்'', பவுண்டு ஸ்டர்லிங்கோடு இணைக்கப்பட்டது.

பரிவர்த்தனை விகிதத்தினால் கடன் நிர்ணயிக்கப்பட்டது. அது ஒரு யுவானுக்கு ஒரு ஷில்லிங் 2½ பென்ஸ் சமம் என்று நிர்ணயிக்கப் பட்டது. இந்த விகிதத்தை நிலைநிறுத்தி வைக்கும் முயற்சியில், பெரும் அளவிலான சீன வெள்ளி அமெரிக்காவிற்குள் பாய்ந்து ஓடிற்று; இதன் மூலம் அமெரிக்காவின் லாபம் மிகப்பெருமளவிற்கு அதிகரித்தது. "சட்டபூர்வமான டெண்டர்" கொள்கை அனுஷ்டிக்கப் பட்டதன் விளைவாக, சியாங்காய்-ஷேக் அரசாங் கத்தின் நாணயப் பழக்கம் அமெரிக்கா டாலர் மற்றும் இங்கிலீஷ் பவுண்டு ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் முற்றிலும் வந்து சேர்ந்தது.

ஏகாதிபத்தியவாதிகளுக்கிடையே நடைபெற்ற போராட்டம் கோமிங்டாங்கிற்குள் பிளவை உண்டாக்கிற்று; மற்றும் நான்கிங் அரசாங்கம் ஜப்பானின்பால் அனுஷ்டித்த அதனுடைய கொள்கை யில் ஊசலாடும்படிச் செய்தது. கோமிங்டாங் தலைவர்களிடையே இருந்த பிரிட்டிஷ் ஆதரவு மற்றும் அமெரிக்க ஆதரவு கும்பலுக் கும் ஜப்பானிய ஆதரவுக் கும்பலுக்கும் இடையே இருந்த பிளவு படிப்படியாக வளர ஆரம்பித்தது. மக்களிடையே இருந்த எதிர்ப்பு வளர்ந்து கொண்டிருந்ததின் அழுத்தத் தின்கீழும் மற்றும் அமெரிக்க, பிரிட்டிஷ் அரசாங்கங் களின் செல்வாக்கின் கீழும் பிரிட்டிஷ் ஆதரவு, நான்கிங் அரசாங்கத்திலிருந்த பிரிட்டிஷ் ஆதரவு, அமெரிக்க ஆதரவு கும்பல் ஜப்பானின்பால் தங்களுடைய கொள்கையை மாற்ற ஆரம்பித்தார்கள்.

1935 இறுதியில், ஜப்பானிய ஆதரவுக் கும்பலின் தலைவரான வாங்சிங் - வெய்யையும் மற்றும் அக்கும்பலின் ஒரு உறுப்பின ரான டாங்சியு-ஜென்னையும் தீர்த்துக் கட்டுவதற்கு முயற்சிகள் செய்யப்பட்டன. அதைப் பின்தொடர்ந்து கோமிங்டாங் அரசாங்கம் திருத்தி அமைக்கப்பட்டது; இதன் விளைவாக ஜப்பானிய ஆதரவுக் கும்பலால் அகற்றப்பட்ட வாங்கிற்கும் சியாங்கிற்கும் இடையே ஒரு முறிவு ஏற்படுவதில் கொண்டு முடிந்தது. 1936 செப்டம்பரிலிருந்து டிசம்பர் வரையிலும், சீனாவில் ஜப்பானிய தூதுவராக இருந்த காவோஜோவிற்கும், சியாங் அரசாங்கத்தின் அயல் நாட்டு அமைச்சரான சாங்-சுன் னிற்குமிடையே பல பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. ஆனால் சியாங் வேண்டுமென்றே பேச்சு வார்த்தைகளை இழுத்தடித்து அவற்றை பயனற்றதாக செய்தான்.

1935இல் வட சீனாவின் மீது நடத்தப்பட்ட ஜப்பானிய

படையெடுப்போடு, சீனாவுக்கும் ஜப்பானுக்குமிடையே இருந்த முரண்பாடாக மாறிற்று. இது சர்வதேச உறவுகளிலும் மற்றும் சீனாவில் உள்நாட்டு வர்க்க உறவுகளிலும் முக்கியமான மாற்றங்களை உருவாக்கிற்று. இத்தகைய மாற்றங்களின் காரணமாக, ஜப்பானை எதிர்த்துப் போராடும்படி சியாங்காய்-ஷேக்கை நிர்ப்பந்திக்கும் ஒரு கொள்கையை 1936 மே மாதத்திற்குப் பிறகு கட்சி கடைபிடித்தது; மேலும் கட்சி சீனாவின் ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியை உலக பாசிச எதிர்ப்பு முன்னணியோடு இணைக்கும் குறிக்கோளையும் முன்னிலைப் படுத்திற்று.

### 3. வடசீனாவின் மீது ஜப்பானிய ஏகாதிபத்திய படையெடுப்பு. ஜப்பானை எதிர்த்துப் போராடுவது மற்றும் தேசத்தைப் பாதுகாப்பது பற்றிய சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் பிரகடனம். ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்கான நாடு தழுவிய இயக்கத்தின் புதிய எழுச்சி.

1935இல் ஜப்பானிய படையெடுப்பாளர்கள் வடசீனாவின் மீது புதியதொரு தாக்குதலைத் தொடுத்தார்கள்.

இதற்கு முன்பு ஜப்பான் ஆசியாவின் எஜமானன் என்றும் சீனாவின் பாதுகாப்பாளன் என்றும் இதர எந்த நாடும் சீனாவின் விவகாரங்களில் தலையிடுவதற்கு உரிமை பெற்றிருக்கவில்லை என்றும் ஜப்பானைத் தவிர இதர எந்த நாட்டோடும் சீனா தொடர்பு வைத்துக் கொண்டிருக்கக் கூடாது என்றும் ஜப்பானிய அரசாங்கம் பிரகடனம் செய்திருந்தது. தன்னுடைய ஒரே ஆதிக்கத்தின் கீழ் சீனா ஒரு காலனியாக இருந்தது என்று பிரகடனம் செய்து கொண்டு, ஜப்பான் பகிரங்கரமாக இதர ஏகாதிபத்தியவாதிகளை விலக்கிற்று. 1934 ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் தேதியன்று ஜப்பானிய அயல்நாட்டு அமைச்சகத்தால் சீனாவைப் பற்றி வெளியிடப் பட்ட அறிக்கையின் பிரதான குறிக்கோள் இப்படிப்பட்டதாக இருந்தது.

அந்தசமயத்தில், மஞ்சள் நதிக்குத் தெற்கு இருந்த பிரதேசத்தில் தன்னுடைய அதிகாரம் சவால் விடப்படாமலிருக்கும் என்ற பிரமையை சியாங்காய்-ஷேக் இன்னும் வைத்துக் கொண்டிருந்தான். எனினும் 1935 மே 29 ஆந் தேதி அன்று சீனா, வடகிழக்கில் தொண்டர்களுக்கு உதவி செய்யப்பட்டுக் கொண்டிருந்தது என்ற சாக்கின் கீழ், ஜப்பானிய யுத்த பிரபுக்களால் மித மிஞ்சிய முட்டாள்தனமான கோரிக்கைகள் எழுப்பப்பட்டன

ஜப்பானிய துருப்புக்கள் வட சீனாவிற்குள் குவிய ஆரம்பித்தன, பீகிங்கிற்கும் டியன்சின்னிற்கும் உண்மையானதொரு அபாயத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தது; மற்றும் ஜப்பானிய யுத்தப் பிரபுக்கள் தங்களுடைய நிபந்தனைகள் ஒப்புக் கொள்ளப் படாவிடில், "சுயேச்சையான நடவடிக்கை" எடுக்கப்போவதாக பயமுறுத்தவும் செய்தார்கள்.

இந்தப் புதிய ராணுவ முன்னேறித் தாக்குதலால் நான்கிங் அரசாங்கம் முற்றிலும் பயமுறுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவுதான் "கோ-உமேசு"[1] உடன்பாடு; இந்தஉடன்பாட்டின் கீழ் சீனா அதனுடைய ஆதிபத்திய உரிமைகளை இழந்து, தேசம் முழுவதின் மேலும் அவமானத்தைக் கொண்டு வந்தது. இந்த உடன்பாட்டின் படி, ஹோப்பேய் மகாணத்தில், பீகிங் மற்றும் டியன்சின் ஆகிய இடங்களிலுள்ள கோமிங்டாங் தலைமைக் காரியாலயங்கள் மூடப்பட்டது; போலீஸ் படைகள், மத்திய ராணுவம் மற்றும் வட கிழக்கு ராணுவம் ஆகியவை ஹோப்பேய் மாகாணத்தில் இருந்து திரும்பப் பெறப்பட்டன. பழைய கவர்னர்கள் இருந்த இடத்தில் ஹோப்பேய் மாகாணத்தில், ஒரு புதிய கவர்னரும் பீகிங் மற்றும் டியன்சின் ஆகிய நகரங்களில் பழைய மேயர்களுக்குப் பதிலாக புதிய மேயர்களும் நியமிக்கப் பட்டனர்; ராணுவ கவுன்சிலின் பீகிங் பிரிவின் அரசியல் இலாகா ஒழிக்கப்பட்டது. ஜப்பானிய எதிர்ப்பு இயக்கம் நசுக்கப்பட்டது. நான்கிங் அரசாங்கம் தங்களுடைய எல்லா விருப்பங்களுக்கும் செவிசாய்ப்பதைக் கருத்தில் கொண்டு ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் சீனாவை முழுமையாக வெற்றி கொள்ள வேண்டும் என்ற தங்களுடைய கொள்கையை நிறைவேற்ற ஆரம்பித்தார்கள்.

ஜூன் 5 ஆம் தேதியன்று சகார் மாககணத்தின் ஆளுனரான சுங் சே - யுவானை அகற்றும்படி ஜப்பான் கோரிற்று; சாங்பெய்யில் சில ஜப்பானிய ரகசிய ஏஜெண்டுகளைச் சீனத் துருப்புகள் கைது செய்துள்ளார்கள் என்ற சாக்கின் கீழ், ஜப்பான் இந்த கோரிக்கையை வைத்தது.

அக்டோபரில், ஜப்பானியர்களின் தூண்டுதலின் பேரில் சியாங்கோ, சாங்டாங், ஊசிங், சான்ஹோ மற்றும் இதர கிழக்கத்திய ஹோப்பெய் கிராமப்புறங்களிலிருந்த ஆத்திரமூட்டல் காரர்களின் ஒரு கோஷ்டி, ஒரு கலகத்தை ஏற்பாடு செய்தது; கிராமப்புற பட்டிணமான சியாங்கோவில் "அமைதிப் பாதுகாப்புக் கமிட்டி" ஒன்றை அமைத்தார்கள். இதைப் போலவே

துரோகி இன் ஜு-கெங் நவம்பரில் போலித் தனமான ''கிழக்கத்திய ஹோப்பெயின் கம்யூனிஸ்டு எதிர்ப்பு சுய ஆட்சி அரசாங்கத்தை'' நிறுவினான். பொம்மை அதிகாரிகளான லீஷு-வ்ஷின் மற்றும் டெம்சிக்டான்ரோப் ஆகியோர் போலித்தனமான ''உள் மங்கோலியாவின் சுயஆட்சி அரசாங்கத்தை'' நிறுவினார்கள்.

''வடசீனாவில் ஒரு சிறப்பு அரசாங்கத்தை'' அமைப்பதற்கான ஜப்பானியர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதற்கு நான்கிங் அரசரங்கம், ''ஹோப்பெய் - சகார் அரசியல் கவுன்சிலை'' அமைப்பதற்கு சிங்சே - யுவாங், வாங்-யி-டாங் மற்றும் வாங்கோ-மின் ஆகியோரை நியமித்தது; இந்த முறையில் இந்த மாகாணங்களை அதனுடைய சொந்த அதிகார வரம்பிற்கு அப்பால் வைத்தது; மற்றும், அவற்றை ஒரு பொம்மை அரசின் அந்தஸ்திற்கு குறைத்துக் கொள்ளவும் செய்தது.

தேசிய நெருக்கடி கூர்மையானதினால், சீனாவில், ஜப்பானிய எதிர்ப்பு இயக்கம் புதிய எழுச்சிகளை எட்டிப் பிடித்தது.

1935 ஆகஸ்ட் 1இல், சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் மத்திய கமிட்டி ''ஜப்பானை எதிர்த்துப் போரிடுவது சம்பந்தமாகவும் மற்றும் தேசிய மீட்சிக்காகவும் சக நாட்டு மக்களுக்கு வேண்டுகோளை'' வெளியிட்டது; அரசியல் அபிப்ராயங்களிலும் மற்றும் நலன்களிலும் கடந்த காலத்திலோ அல்லது நிகழ்காலத்திலோ என்ன வேறுபாடுகள் இருந்த போதிலும் சீனா உடனடியான அழிவினால் பயமுறுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு சமயத்தில் பொது எதிரிக்கு எதிராக ஒன்றுபடும்படி அந்த வேண்டுகோள் அவர்களை அறைகூவி அழைத்தது.

தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் அரசாங்கத்தினாலும், செஞ்சேனையாலும், இதர ஜப்பானிய எதிர்ப்பு துருப்புகளாலும் மற்றும் ஜப்பானை எதிர்த்துப் போரிடுவதற்கும் சீனாவைக் காப்பாற்றுவதற்கும் விரும்பிக் கொண்டிருக்கும் அனைத்து மக்களாலும் ஒரு ஒன்றுபட்ட தேசிய பாதுகாப்பு அரசாங்கத்தையும் ஜப்பானிய எதிர்ப்பு ராணுவத்தையும் கூட்டாக நிலைநிறுத்தும்படி இந்தப் பிரகடனம் வலியுறுத்திக் கூறிற்று,

சீனக் கம்யூனிஸ்டு கட்சியும் மத்திய கமிட்டியும் செஞ்சேனையும் பிரதானப் படையும் வடகிழக்கில் வந்து சேர்ந்து சென்சியிலும், காங்சூவிலும் இருந்த செஞ்சேனையோடு இணைந்து கொண்ட பிறகு, 1935 நவம்பர் 13இல் ஒரு பிரகடனம் கொடுக்கப்பட்டது. சீனாவை ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளின் காலனியாக்கும் அபாயத்தையும் சியாங்காய் - ஷேக்

தேசிய நலன்களைக் காட்டிக் கொடுக்கும் அபாயத்தையும் அது சுட்டிக் காட்டிற்று. எனவே, தேசிய மீட்சிக்காக அவர்கள் நடத்தும் போராட்டத்தில் சீன மக்களுக்கு இருந்த ஒரே வழி ஜப்பானை எதிர்த்துப் போராடுவதும் சியாங்கை எதிர்ப்பதும் ஆகும். இந்தப் போராட்டம் சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் தலைமையின்கீழ் நடத்தப்பட்டது என்றும் அது வலியுறுத்திக் கூறிற்று. தேசத்தை அழிவிலிருந்து பாதுகாப்பதற்காகவும் மற்றும் அது நீடித்து இருப்பதை உறுதிபடுத்துவதற்காகவும் இந்த ஒரே சரியான கருத்தோட்டத்தை ஆதரிப்பதற்கு மக்கள் அனைவரும் வீறுகொண்டு எழுந்து, ஸ்தாபன ரீதியாகத் திரள வேண்டும் என்று அது வேண்டுகோள் விடுத்தது.

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ், பீகிங் மாணவர் சங்கம் 1935 நவம்பரில் அமைக்கப்பட்டது. இந்த சங்கம், வட சீனாவில் பொம்மை "சுயாட்சி" எதிர்ப்புக்கு பெரும் அளவிலான மகஜர் இயக்கத்தைத் துவக்கிற்று. டிசம்பர் 9இல் சுமார் 6 ஆயிரம் மாணவர்களைக் கொண்ட மகத்தானதொரு தேசபக்த ஆர்ப்பாட்டம் ஜப்பானை எதிர்த்து போராடுவதற்கும் மற்றும் சீனாவைக் காப்பாற்றுவதற்கும் அடிப்படையான நிபந்தனைகளை முன்னுக்கு வைத்தது; மேலும் சியாங்காய் - ஷேக் அரசாங்கம் உள்நாட்டு யுத்தத்தை முடித்துக் கொண்டு ஆக்கிரமிப்பை எதிர்க்க வேண்டுமென்றும் கூறிற்று. படுகொலை, கைதுகள் போன்ற இப்படிப்பட்ட காட்டு மிராண்டித்தனமான நடவடிக்கைகளால் இந்த தேசபக்தி இயக்கத்தை ஒடுக்குவதற்கு கோமிங்டாங் அரசாங்கம் முயற்சித்தது; ஆனால் இந்த இயக்கம் பெரும் அளவில் வளர்ந்துக் கொண்டிருந்ததை மட்டுமே அது காண முடிந்தது. பெருமளவில் கூடுதலான போராட்டங்களை நடத்துவதற்கான சுறுசுறுப்பான தயாரிப்புகள் தங்கு தடையின்றி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தன. டிசம்பர் 10ஆந் தேதியன்று பீகிங்கிலிருந்த எல்லா பள்ளிக்கூடங்களும் கற்றுக் கொடுப்பதை நிறுத்தின. இத்தகைய பள்ளிகளில் அப்போது மாணவர் சங்கங்கள் அமைக்கப்பட்டன. பிரச்சாரம் செய்வதற் ஸ்தாபன வேலையைச் செய்வதற்காகவும் இந்த சங்கங்கள் அமைக்கப் பட்டன.

டிசம்பர் 16இல், "ஹோப்பேய்-சகார் அரசியல் கவுன்சில்" துவக்கப்படுவதற்கு திட்டமிட்டிருந்த பொழுது, பீகிங் நகரத்து 30 ஆயிரம் மாணவர்களும், குடிமக்களும் கட்சியின் தலைமையின் கீழ் பிரமாண்டமானதொரு தேசபக்த ஆர்ப்பாட்டத்தை

நடத்தினார்கள். கோமிங்டாங்கின் ஆயுதப்படைகள் மற்றும் போலீஸ்காரர்களின் வளையத்தை உடைத்தெறிந்து கொண்டும் அவர்களது தாக்குதல்களை முறியடித்துக் கொண்டும், நகரத்தின் தெற்கில் டியன்சியாயோவில் ஒரு வெகுஜன கூட்டத்தை அவர்கள் நடத்தினார்கள்; இதைப் பின்தொடர்ந்து பெரிய தொரு அணி வகுப்பும் நடைபெற்றது. வெகுஜனங்களின் நிர்ப்பந்தத்தின் கீழ் அந்த "கவுன்சில்" அமைக்கப்படுவதை ஒத்தி வைப்பதாக அறிவிக்கும்படி பொம்மைகள் நிர்ப்பந்திக்கப் பட்டார்கள்.

டிசம்பர் 9, 16 தேதிகளில் நடைபெற்ற தேசபக்த ஆர்ப் பாட்டங்கள் கோமிங்டாங் அரசாங்கம் மற்றும் ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் ஆகியோரின் கூட்டு பயங்கர ஆட்சியை மீறி நடத்தப் பட்டன. இந்த ஆர்ப்பாட்டம் சீனாவின் இதரப் பகுதிகளிலிருந்த மாணவர்களின் உடனடியான ஆதரவைத் தட்டியெழுப்பி இந்த இயக்கம் நாடு முழுவதும் பரவிற்று.

இத்தகைய ஆர்பாட்டங்களுக்குப் பிறகு, ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்கும் மற்றும் சீனாவைக் காப்பாற்று வதற்குமான இயக்கத்தின் அடிப்படையை விரிவுபடுத்துவதற்கு பல மாணவர்கள், தொழிலாளர்கள், மற்றும் விவசாயிகள் மத்தியில் சென்றார்கள். உழைக்கும் மக்களோடு நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். அவர்களுக்குக் கற்றுக் கொள்ளவும், தங்களைப் புடம்போட்டு எடுத்துக் கொள்ளவும் ஒரு நேர்த்தியான சந்தர்ப்பத்தைக் கொடுத்தது.

விவசாயிகளிடையே விரிவான கிளர்ச்சியைச் செய்யவும் ஸ்தாபன வேலையைச் செய்யவும் பீகிங் மற்றும் டியன்ட்சென்ட் ஆகிய நகரத்து மாணவர்கள் பிரச்சார படைப் பிரிவுகளை அமைத்தார்கள். மேலும், தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளுக் காக இரவு பள்ளிகளையும் அமைத்தார்கள். வெகுஜனங்களோடு மிக நெருக்கமான உறவுகளின் அடிப்படையில் கட்சியினால் தலைமை தாங்கப்பட்ட தேசிய விடுதலையின் முன்னணிப் படை[2] சீனாவின் எல்லா பாகங்களிலும் சீக்கிரத்திலேயே நிறுவப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்கும் குறைவான காலத்திற் குள்ளேயே ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கு எதிரான யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பொழுது, மாணவர்கள் பெரும் எண்ணிக்கை யில் கொரில்லா யுத்தத்தில் பங்கு கொண்டார்கள். இதன் விளைவாக புத்தி ஜீவிகளுக்கும் உழைக்கும் வெகுஜனங்களுக்கு மிடையே மிக நெருக்கமான தொடர்புகள் நிலை நாட்டப்

பட்டன.

1936இல் தேசிய மீட்சிக்கான கழகங்கள் நாடு முழுவதிலும் பல்வேறு வட்டாரங்களால் அமைக்கப்பட்டன. அதே ஆண்டு மே மாதத்தில் ஷாங்காயில் தேசிய மீட்சிக்கான அகில சீன சங்கம் உருப்பெற்றது.

இந்த சமயத்தில், சொல்லிலும், செயலிலும் அனைத்துச் சீன மக்களாலும் ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்கும் சீனாவைக் காப்பாற்றுவதற்குமான அறைகூவல் ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தது. புரட்சி இயக்கத்தின் புதியதொரு எழுச்சி நாடு முழுவதிலும் பரவி இருந்தது,

## 4. சீனக் கம்யூனிஸ்டு கட்சி மத்திய கமிட்டியின் டிசம்பர் மாநாடு. ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணியின் போர்த் தந்திரங்களைக் கட்சி ஏற்றல்.

மீண்டும் புரட்சி வளர்ந்துக் கொண்டு இருந்தமையால் சீனாவின் மீது ஜப்பானிய தாக்குதலுக்குப் பிறகு, நிலவிய உள்நாட்டு நிலைமை பற்றி, சரியானதொரு மதிப்பீடு செய்வதும் கட்சியின் கொள்கையைத் தீர்மானிப்பதும் அவசியமாக இருந்தது. ஆகவே, 1935 டிசம்பர் 25ல், நீண்ட பயண செஞ் சேனையை வடக்கு ஷென்சிக்கு கொண்டு வந்திருந்த பிறகு, கட்சியின் மத்தியக்கமிட்டியின் அரசியல் குழு வாயாவோபாவோ வில் ஒரு மாநாட்டை நடத்திற்று. இந்த மாநாடு ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணியை நிலை நிறுத்தும் தந்திரத்தை உருவாககிற்று; ''தற்கால அரசியல் நிலைமையும் கட்சியின் கடமைகளும் பற்றிய தீர்மானத்தை''யும் நிறை வேற்றிற்று. அத்தீர்மானம் அரசியல் நிலைமை பற்றிய முழுமை யானதொரு பகுப்பாய்வையும் உள்நாட்டு வர்க்க உறவுகளில் ஏற்பட்டிருந்த மாற்றங்களைப் பற்றிய முழுமையானதொரு பகுப்பாய்வையும் கொண்டதாக இருந்தது. கட்சியின் நடை முறைத் தந்திரங்களையும் வரையறுத்துக் கூறியிருந்தது; நிலைமையில் தலைதூக்கி நிற்கும் அம்சம், சீனாவை தன்னுடைய காலனியாக மாற்றுவதற்கு ஜப்பானின் உறுதிதான் என்று தீர்மானம் சுட்டிக் காட்டிற்று. உள்நாட்டு அரசியல் வாழ்க்கை யில் பல்வேறு வர்க்கங்கள், கட்சிகள், அவர்களது ஆயுதப் படைகள் ஆகியவற்றிற்கு இடையேயிருந்த உறவுகளில் ஒரு மாற்றம் உருவாகிக் கொண்டிருந்தது; தொழிலாளிகள்

விவசாயிகள் மற்றும் குட்டி முதலாளி வர்க்கம் மட்டுமின்றி ஆளும் வர்க்கங்களின் ஒரு பிரிவும் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடும் கோரிக்கையை முன் வைத்திருந்தன. மோதல்களும் பிளவுகளும் ஆளும் முகாமிற்குள்ளே தோன்றியிருந்தன. ஆகவே ஆக்ரமிப்பாளர்களை எதிர்த்துப் போராடுவதற்கு நாட்டிலிருந்த அனைத்து ஜப்பானிய எதிர்ப்பு சக்திகளையும் சாத்தியமான அளவிற்கு மிகமிக விரிவான தேசிய ஐக்கிய முன்னணியின் மூலம் அணி திரட்டுவது கட்சியின் கடமையாக இருந்தது. அப்பொழுது கட்சியில் அபாயமாக இருந்த ''இடது சாரி'', ''வலது சாரி'' போக்குகளை தீர்மானம் நிராகரித்தது. அந்தத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு டிசம்பர் 27ந் தேதியன்று, ''ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடும் தந்திரங்கள்பற்றி'' என்ற தலைப்பில் தோழர் மாசே-துங் கட்சியின் தீவிர ஊழியர்களுக்கு ஒரு மாநாட்டில் சொற்பொழிவாற்றினார். இந்த சொற்பொழிவு கட்சியினால் முன் மொழியப்பட்ட ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணிக்குத் தத்துவார்த்த அடிப்படையை அமைத்துக் கொடுத்தது,

(1) அந்தச் சமயத்தில் ஜப்பானிய ஏகாதிபத்தியம் சீனாவை அதனுடைய காலனியாக குறுக்குவதற்கு விரும்பிற்று என்பது நிலைமையின் பிரதான குணாதிசயமாக இருந்தது என்று தோழர் மாசே-துங் சுட்டிக் காட்டினார். குறிப்பாக 1935-ல் ஜப்பான் வடசீனாவின்மீது படையெடுத்த பிறகு, ஜப்பானிய ஆக்ரமிப்பு நாடு முழுவதிலுமுள்ள மக்களின் வாழ்வையே பயமுறுத்திற்று. அதன் விளைவாக சீனாவிற்கும், ஜப்பானுக்கும் இடையே இருந்த தேசிய முரண்பாடு அடிப்படையான முரண்பாடாக மாறி இருந்தது; அதே சமயத்தில் உள்நாட்டு வர்க்க முரண்பாடு இரண்டாந்தரமான ஒரு இடத்திற்கு பின்னுக்குத்தளப்பட்டிருந்தது. ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கு எதிரே தொழிலாளிகள், விவசாயிகள், குட்டி முதலாளிகள் அனைவரும் ஜப்பானிய எதிர்ப்புப் போராட்டம் நடத்த வேண்டுமென்று கோரினார்கள், தொழிலாளிகளும் விவசாயிகளும், மற்ற எல்லோரைக் காட்டிலும் மிகமிக உறுதியாகக் கோரினார்கள். தேசிய முதலாளிகள் சம்பந்தப்பட்டமட்டில், 1927க்குப் பிறகு அவர்கள் சியாங்காய்-ஷேக்கின் பக்கத்திற்குப் போயிருந்தார்கள் என்பது உண்மைதான்; ஆனால் தங்களுடைய நேச சக்தியான தொழிலாளி வர்க்கத்தை உதறித் தள்ளிவிட்டு நிலப்பிரபுக்

களோடும் தரகர் வர்க்கங்ளோடும் நேச உறவு வைத்துக் கொண்டதிலிருந்து அவர்களுக்கு எந்தவிதமான சாதக்மும் கிடைக்கவில்லை.

1931 செப்டம்பர் 18-ஆந் தேதி சம்பவத்திற்குப் பிறகு, தேசிய பூர்ஷ்வா வர்க்கம் கடுமையான பொருளாதார அடிகளை வாங்கி இருந்தது. ஆரம்பத்தில், 1926லிருந்து 1930வது வருடம் முடிய 5 ஆண்டு காலக் கட்டத்தில், வடசீனாவிற்குள் ஆண்டு தோறும் உற்பத்தி செய்யப்பட்டிருந்த பருத்தி நூல் மற்றும் துணியின் இறக்குமதிகள் மதிப்பில் 12,888,977 மற்றும் 53,199,255 ஹைக்வான் (Haikwan) நோட்டுகளை முறையே எட்டிப் பிடித்திருந்தது. இவற்றில், 9,906,183 ஹைக்வான் நோட்டுகளுக்குச் சமமான பருத்திநூல் அல்லது மொத்தத்தில் 77%, மற்றும் 13,857,174 ஹைக்வான் நோட்டுகளுக்குச் சமமான பருத்தித் துணி அல்லது மொத்தத்தில் 26% பெரும் சுவருக்கு தெற்கே இருந்த சீனாவின் பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. வடகிழக்குச் சீனாவை ஜப்பானியர்களுக்கு இழந்திருந்த காரணத்தினாலும், மற்றும் இதர காரணங்களாலும், பெரும் சுவருக்கு தெற்கிலிருந்த மாகாணங்களிலுள்ள பஞ்சாலைகளில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட கதிர்கள் 1931-ஆம் ஆண்டிலிருந்து இடைவிடாமல் முடங்கிக்கிடந்தன. சம்பவத்திற்கு முன்பு ஆண்டு ஒன்றிற்கு சுமார் 10 லட்சம் டன் நிலக்கரியை உற்பத்தி செய்து வந்த வடகிழக்குச் சீனா, சீனாவின் பிரதான நிலக்கரி உற்பத்தி ஏரியாக்களில் ஒன்றாக இருந்தது. சுமார் பாதி நிலக்கரி உற்பத்தி ஏற்றுமதி செய்யபட்டது; பெரும் சுவருக்கு தெற்கிலிருந்த மாகாணங்களின் பல தொழிற்சாலைகள், அவற்றின் நிலக்கரி சப்ளைக்கு வடகிழக்கு சீனாவைச் சார்ந்து இருந்தது. ஆனால், 1931 ஆரம்பத்திலிருந்து, வடகிழக்குச் சீனாவிலிருந்த நிலக்கரி சுரங்கங்களின் முழுமையான ஆதிக்கத்தை ஜப்பான் பெற்று விட்டது; இந்த முறையில் சீனாவின் தொழில்களுக்கு மூலப் பொருள் சப்ளை பாதித்துக் கொண்டிருந்தது. கடைசியாக, வடகிழக்குச் சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட சோயா பீன்ஸ், அயல் நாட்டு வர்த்தகத்தில் மிக முக்கியமான ஒரு பொருளாக இருந்தது. வருடாந்திர உற்பத்தியில் கிட்டத்தட்ட பாதி அளவாக இருந்த 4 முதல் 5 மில்லியன் டன் சோயா பீன்ஸ்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால் வடகிழக்குச் சீனா ஆக்கிர

மிக்கப்பட்ட பிறகு, இந்த முக்கியமான விவசாய உற்பத்திப் பொருள் ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளால், பறிமுதல் செய்யப்பட்டிருந்தது. இது சீனாவின் சர்வதேச வருவாய்களையும் மற்றும் அந்நாட்டின்அந்நியச் செலாவணியின் விகிதத்தையும் கடுமையாக பாதித்தது; மொத்த ஏற்றுமதிகளிலிருந்து வந்த சர்வதேச வருமானங்களின் விகிதாச்சாரம் 1930-இல் 61% ஆக இருந்ததிருந்து 1933-இல் 42% ஆக விழுந்து விட்டது. சீனாவின் தொழில் அதிபர்களும் வியாபாரிகளும் அயல்நாட்டு வியாபாத்ரதிலும் சர்வதேச சந்தையிலும் மாபெரும் நஷ்டங்களைச் சந்தித்தார்கள்.

1931-இலிருந்து 1936 வரையிலும், பெரும் சுவருக்கு தெற்கேயிருந்த மாநிலங்களில் ஜப்பான் அதனுடைய தொழிற்சாலைகளை சுறுசுறுப்பாக் விரிவுப்படுத்தியது. மிகவும் விசேஷயாக பஞ்சாலைகளை விஸ்தரித்தது. இதன் விளைவாக, பல சீனப் பஞ்சாலைகள் விழுங்கப்பட்டன. சிங்டாவோ மற்றும் டியன்சின் ஆகிய நகரங்கள் வடசீனாவில் இருபெரும் பஞ்சாலை மையங்களாக இருந்தன. சிங்டாவோவில் ஜப்பானிய பஞ்சாலைகள் நீண்ட காலமாக மேலாதிக்கமானதொரு நிலையை வகுத்து வந்தன. டியன்சினில், முழுக்க முழுக்க ஜப்பானிய முதலாளிகளுக்கு சொந்தமான பஞ்சாலைகள் எதுவுமே 1931 வரை கிடையாது. ஆனால் 1936-வாக்கில் மொத்த கதிர்களில் 2 சதவிகிதம் ஏற்கனவே ஜப்பானிய மில்களுக்கு சொந்தமாக இருந்தன. மற்றும் மொத்ததறிகளில் 39.2 சதவீதம் ஜப்பானிய மில்களுக்கு சொந்தமாக இருந்தன. சீனாவின் பஞ்சாலைத் தொழிலின் மிகப் பெரிய கேந்திரமான ஷாங்காயில், மொத்த கதிர்களில் ஜப்பானிய மில்களுக்கு சொந்தமான கதிர்களின் விகிதாச்சாரம் 1931-இல் 51 சதவிகிதமாக இருந்ததிலிருந்து 1936-இல் 49.9 சதவீதமாக விழுந்து விட்டது; ஆனால் ஜப்பானுடைய தறிகள் 52.8 சதவீதத்திலிருந்து 57.7 சதவீதத்திற்கு அதிகரித்தது; சீனமில்களின் கதிர்களின் விகிதாச்சாரம் கிட்டத்தட்ட ஸ்திரமாக (41.9 சதவீதத்திலிருந்து 41.8 சதவீதமாக) இருந்தது. ஆனால் சீனாவின் தறிகள் 34 சதவீதத்திலிருந்து 29.1 சதவீதத்திற்கு விழுந்து விட்டது. ஒரே வார்த்தையில் சொன்னால் சீனாவின் மூன்று மிகப் பெரிய பஞ்சாலை கேந்திரங்களிலும்ஜப்பானின் கை ஓங்கியிருந்தது.

சீனாவின், காலனிமையமாக்குவதினால் ஏற்பட்ட நெருக்கடியும் மற்றும் சீனாவின் தேசிய தொழிலுக்கும்

வியாபாரத்திற்கும் ஏற்பட்ட சூன்ய நிலைமை அல்லது அரை சூன்ய நிலைமையும் பயமுறுத்தலும் தேசிய முதலாளி வர்க்கத்தின் அரசியல் போக்கில் ஒரு மாற்றத்தினை—அதனை ஜப்பானிய எதிர்ப்பு போராட்டத்திற்குள் கவரப்படக் கூடிய அல்லது நடுநிலை வகிக்கச் செய்யக்கூடிய ஒரு மாற்றத்தினை—சாத்தியமாக்கிற்று. தோழர் மாசே-துங் அறிக்கையில் கூறியதுபோல் "நிலப்பிரபுக்கள் மற்றும் தரகர்களின் முகாமிற்கு உள்ளேகூட முழுமையான ஒற்றுமையில்லை."[3] சீனா பல ஏகாதிபத்திய அரசுகளின் கூட்டு கட்டுப்பாட்டின் கீழ் ஒரு அரை காலனியாக இருந்தது. சீனாவை இணைத்துக் கொள்வதற்கு ஜப்பான் செய்த முயற்சிகள் இயல்பாகவே ஏகாதிபத்தியவாதிகளுக்கிடையே பிளவினை விரிவுப்படுத்தும். தோழர் மா சே-துங்கை மீண்டும் மேற் கோள் காட்டுவோம்;

"நம்முடைய போராட்டம் ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கெதிரான திசை திருப்பப்படும்பொழுது, அமெரிக்க அல்லது பிரிட்டனின் வளர்ப்பு நாய்கள் கூட, தங்களது எஜமானர்களின் கட்டளையின் பல்வேறு தொணிகளிக்கு கீழ் படிந்து, திரைமறைவானதொரு மோதலில் ஈடுபடுகின்றன; அல்லது ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளோடும் அவர்களது வளர்ப்பு நாய்களோடும் பகிரங்கமானதொரு மோதலில் கூட ஈடுபடுகின்றன."[4]

ஜப்பானுடைய ஆக்கிரமிப்பு செயல்களின் விளைவால் எழுந்த, சீனாவின் வர்க்க உறவுகளில் ஏற்பட்ட இத்தகைய மாறுதல்களும் ஏகாதிபத்திய அரசுகளுக்கிடையே இருந்த உறவுகளில் ஏற்பட்ட இந்தகைய மாறுதல்களும் சீனாவில் புரட்சி முன்னணியும் எதிர்ப்புரட்சி முன்னணியும் ஒரு மாற்றத்திற்கு உள்ளாகிக் கொண்டிருந்தன என்பதற்கு போதுமானதொரு அறிகுறியாக இருந்தன. தேசீய புரட்சி முகாம் மிக அதிக சக்தி வாய்ந்ததாக வளர்ந்திருந்தது. அதே சமயத்தில், எதிர்புரட்சி முகாம் பலஹீனமடைந்திருந்தது. இந்த முறையில் ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணி ஒன்றினை ஏற்படுத்துவது சாத்தியமாக இருந்தது.

செஞ்சேனையின் நெடும் பயணத்தின் மகத்தான வெற்றியினால், சீன மக்களின் ஜப்பானிய எதிர்ப்பு இயக்கத்தின் சீரான வளர்ச்சியினாலும் உலக முழுவதிலும் உள்ள புரட்சி இயக்கங்களின் சீரான வளர்ச்சியினாலும் புரட்சிகரமான நிலைமை அப்போது ஸ்தல நிலைமையிலிருந்து நாடு தழுவிய ஒன்றாக மாறிக் கொண்டிருந்தது. மேலும் சீரற்ற ஒரு நிலையிலிருந்து, சம்பந்தப்படுத்திப் பார்க்கும்பொழுது, சீரானதொரு நிலைக்குப்

படிப்படியாக மாறிக் கொண்டிருந்தது. எனினும், மொத்தததில் சீனப்புரட்சியின் அணிவகுப்பு சீரற்றதாகவே இருந்தது. மேலும் புரட்சி சக்திகள் எதிர்புரட்சி சக்திகளைக் காட்டிலும் இன்னும் மிகவும் பலம் குறைந்ததாகவே இருந்தன. பரவலானதொரு ஐக்கிய முன்னணியை நிலை நாட்டுவதற்காக, நாட்டிலிருந்த அனைத்து ஜப்பானிய எதிர்ப்புச் சக்திகளையும் அணிதிரட்டுவதற்கு, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அவசர, அவசியம் இங்கு தான் இருந்தது, ஜப்பானிய எதிர்ப்பு தேசீய ஐக்கிய முன்னணிக்கு கோடிக் கோடியாக வெகு ஜனங்களை வென்றெடுக்க முயற்சிப்பது கட்சிக்கு அவசியமானதாகவும், சாத்தியமானதாகவும் இருந்தது. தோழர் மா சே-துங் அறிக்கையில் கூறியதுபோல்,

"செஞ்சேனையின் நடவடிக்கைகளை நாடு முழுவதிலுமுள்ள தொழிலாளிகள், விவசாயிகள், குட்டி முதலாளிகள், தேசிய முதலாளிகள் ஆகியோரின் அனைத்து நடவடிக்கைகளோடு ஒருங்கிணைத்து ஒரு ஐக்கிய தேசியப் புரட்சி முன்னணியை அமைப்பது தான் கட்சியின் கடமையாகும்." [5]

(2) அறிக்கையில் தோழர் மா சே-துங் "மக்கள் குடியரசு" என்ற ஒரு கோஷத்தை முன் வைத்தார். மற்றும் இப்படிப் பட்டதொரு குடியரசின் தன்மையையும், கொள்கைகளையும் கோடிட்டுக் காட்டினார். மக்கள் குடியரசு தெளிவாக வரையறுக்கப்பட்ட ஜனரஞ்சகத் தன்மையையும், ஆழமானதொரு தேசியத் தன்மையையும் பெற்றிருக்க வேண்டும். மக்கள் குடியரசின் அரசாங்கம் பிரதானமாக தொழிலாளிகளையும், விவசாயிகளையும் அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும்; ஆனால் அதே சமயத்தில் ஏகாதிபத்தியத்தையும், நிலப்பிரத்துவ சக்திகளையும் எதிர்க்கும் எல்லா வர்க்கங்களின் பிரதிநிதிகளையும் அனுமதித்துக் கொள்ளும்; தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் நலன்களுக்கு முதலாவதாகவும், மிக முக்கியமானதாகவும் பாதுகாப்பு கொடுக்கும். அதே சமயத்தில் தேசியத் தொழில் மற்றும் வியாபாரம் நீடித்திருக்கவும் அபிவிருத்தி அடையவும் அது அனுமதிக்கும். இதைப் போலவே, பணக்கார விவசாயிகளின் நிலம் மற்றும் இதர சொத்துக்களின் பால் ஒரு பாதுகாப்பு கொள்கை கடைபிடிக்கப்படும்; நிலப் பிரபுத்துவச் சுரண்டல் சம்பந்தமான அந்தப் பகுதிகள் மட்டும் இதிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருக்கும்.

1935-டிசம்பர் 6-இல் வாயாவோபாவோ மாநாட்டிற்கு சற்று முன்பு, பணக்கார விவசாயிகளின்பால் போர்த் தந்திரத்தை

மாற்றுவது பற்றிய ஒரு தீர்மானத்தை மத்தியக் கமிட்டி பிரகடனம் செய்திருந்தது. தேசிய நெருக்கடி நிலைமைகளின் கீழ், பணக்கார விவசாயிகள் ஏகாதிபத்தியம் மற்றும் கோமிங்டாங் துரோகத்தனமான அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தில் பங்கெடுக்க ஆரம்பித்தார்கள் அல்லது ஒரு அனுதாபமான நடுநிலையை எடுத்துக் கொண்டிருந்தார்கள். கடந்த காலத்தில் ஒரு சிவப்பு ஆட்சிக்கான இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பணக்கார விவசாயிகளுக்கு எதிரான போராட்டத்தைத் தீவிரப்படுத்தியது. ஒரு வர்க்கம் என்ற முறையில் அவாகளை ஒழித்துக் கட்டுவதற்கான ஒரு போக்கினைத் தோற்றுவித்திருந்தது என்று மேலும் சுட்டிக் காட்டப்பட்டது. அது நடுத்தர விவசாயிகளைப் பாதித்தது. ஆகவே அவர்கள் தங்களுடைய உற்பத்தியைமேலும் அபிவிருத்தி செய்து எந்தவிதமான அதிகமான அக்கறையும் காட்டவில்லை. ஆகவே பணக்கார விவசாயிகளின் பால் போர்த் தந்திரங்களை மாற்றுவதற்கு மத்தியக் கமிட்டி தீர்மானித்தது. பணக்கார விவசாயிகளின் நிலப்பிரபுத்துவ சுரண்டல் மட்டுமே ஒழிக்கப்பட வேண்டும் என்றும், கூலி உழைப்பினால் அவர்களால் நிர்வகிக்கப் பட்டு வந்த நிலம், வியாபார நிறுவனங்கள் மற்றும் இதர சொத்துக்கள் பறிமுதல் செய்வதன் மூலம் விதி விலக்கு கொடுக்கப்பட வேண்டுமென்றும், மற்றும் தொழிலும் வியாபாரத்திலும் மறு உற்பத்தி செய்வதையும், செயல்படுவதையும் விஸ்தரிப்பதற்கு அவர்களுக்கு இருந்த சுதந்திரம் ஜனநாயக அரசாங்கத்தினால் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானம் வரையறுத்து இருந்தது. மீண்டும், 1936 ஜூலையில், இந்த மகாநாட்டிற்கு சுமார் அரை ஆண்டிற்குப் பிறகு, ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்கும் தேசிய விடுதலைக்காகவும் நடைபெற்ற இயக்கத்தின் கேந்திரமாக சிவப்பு ஆட்சியை உண்டாக்கும் ஒரு நோக்கத்தோடு, நிலக் கொள்கை பற்றிய அறிவுரைகளை மத்தியக் கமிட்டி கொடுத்தது. துரோகிகளின் நிலம், சொத்துக்கள், நிலச் சுவான்தார் வர்க்கத்தின் நிலம், உணவுப் பொருட்கள், வீடுகள் மற்றும் இதர சொத்துக்கள் பறிமுதல் செய்யப் படுவதற்கும், ஆனால் சகல சிறு உடைமையாளர்களின் (தொழில் செய்யும் தொழிலாளர்கள் சிறு வியாரிகள், கைவினைஞர்கள், சிறு நிலச் சுவான்தார்கள் அதாவது, தேவையைப் பூர்த்திச் செய்ய முடியாமல் வாழ்க்கை நடத்தியவர்கள் மற்றும் நிலத்தின் சிறு பகுதிகளை மற்றவர்களுக்கு குத்தகைக்கு விட்டிருந்தவர்களின்) ஆகியோரின் நிலம் பறிமுதல் செய்யப்

படாது என்றும் விதிவிலக்கு அளிக்கப் படுவதற்கு அறிவுரைகள் வகை செய்தன.

(3) ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணி தந்திரம் ஒரு மார்க்சிய - லெனினிய தந்திரமாக இருந்தது. செக்டேரியனிய தந்திரத்திற்கு நேர் எதிராக இருந்தது. சீனாவை காலனி ஆக்கு வதற்கு ஜப்பானியர் செய்த முயற்சி சீனாவிலிருந்த புரட்சி மற்றும் எதிர்ப்புரட்சி சக்திகளின் அணிவரிசையில் ஒரு மாற்றத் தைக் கொண்டு வரும் என்பதனை செக்டேரியன்கள் மறுத்தார் கள். நிலச் சுவான்தார் வர்க்கம் மற்றும் பூர்ஷ்வா வர்க்கம் ஆகியோரின் முகாம் முழுவதும் ஒற்றுமையாகவும் கெட்டுப் பட்டும் இருந்தது என்று அவர்கள் கூறினார்கள். மேலும் அந்த சமயத்தில் சுறுசுறுப்பாக கிளர்ச்சி செய்து கொண்டிருந்த இடைத் தட்டு கோஷ்டிகளை மிக அபாயகரமான எதிரியாகவும், அவர்கள் தான்தோன்றித்தனமாக கருதினார்கள். செக்டேரி யன்களின் கூற்றுப்படி, புரட்சி சக்திகள் தூய்மையாகவும் முற்றிலும் தூய்மையாகவும் இருக்க வேண்டுமென்றும் புரட்சிப் பாதை நேரானதாகவும் முற்றிலும் நேரானதாகவும் இருக்க வேண்டும் என்பதாகும். எனினும் உண்மை திட்டவட்டமாக எதிராக இருந்தது. புரட்சிப் பாதை, உலகிலுள்ள ஒவ்வொரு நடவடிக்கையின் பாதையை போலவே, எப்பொழுதுமே நேரான தாக இருந்ததில்லை. புரட்சி, மற்றும் எதிர்ப்புரட்சிகளின் அணி வரிசை, மாற்றம் ஏற்படுவதின் சாத்தியப்பட்டினைத் தவிர்க்க வில்லை, கோடிக்கணக்கான மக்களை ஸ்தாபன ரீதியாக திரட்டுவதில் பிரம்மாண்டமானதொரு புரட்சிகரமான ராணு வத்தை அணி சேர்ப்பதும் புரட்சிகரமான சக்திகளுக்கு அவசிய மானதாக இருந்தது. இப்படிப்பட்டதொரு சக்தி மட்டுமே, ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளையும் துரோகிகளின் கும்பலை யும் நெருக்கித் தள்ள முடியும். பெரும் படைகளைக் குவித்து எதிரியைச் சுற்றி வளைத்து ஒழித்துக் கட்டுவது ஐக்கிய முன்னணி யின் போர்த் தந்திரமாக இருந்தது. இது ஒரு மார்க்சிய லெனினிய நடைமுறை தந்திரம். இதற்கு மாறாக, செக்டேரியன் களின் தந்திரம் ''பிரம்மாண்டமானதொரு எதிரியோடு ஒரு தனி யொரு குதிரைப் படைவீரன் வெறித்தனமாக சண்டை போடு வதை சார்ந்து நிற்ப்பதாக'' இருந்தது. புரட்சியின் நண்பர் களாக மாறக்கூடிய அனைவரையும் அவர்கள் எதிரியின் தரப் பிற்கு துரத்தி விடுவார்கள். உண்மையிலேயே அவர்கள் எதிரிக்கு உதவி செய்து கொண்டிருப்பார்கள், புரட்சியை பின்னுக்குத்

தள்ளிக் கொண்டும், தனிமைப் படுத்திக் கொண்டும் இருப்பார்கள். புரட்சியை சுருங்கச் செய்யவும், வீழ்ச்சியடையச் செய்யவும், தோல்வியடையச் செய்யவும் கூட அவர்கள் ஆரம்பமாக இருந்து கொண்டிருந்தார்கள்.

முதல் புரட்சிகரமான உள்நாட்டு காலயுந்தத்தில் ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணிக்கும் புரட்சிகரமான ஐக்கிய முன்னணிக்கும் இடையே அபரிமிதமானதொரு வேறுபாடு இருந்தது. அந்தக் கால கட்டத்தில் கட்சியில் நீடித்து கொண்டிருந்த சந்தர்ப்பவாத தலைமை அதனுடைய அணிகளை விஸ்தரிப்பதற்கு துணியவில்லை; ஆனால் அதனுடைய தற்காலிக நேச சக்தியாயிருந்த கோமிங்டாங் மீது மட்டுமே சார்ந்திருந்தது. எனவே, புரட்சிகரமான ஐக்கிய முன்னணி, ஒரு பிரதான அடித்தளம்கிடைக்காததால் நொறுங்கிவிட்டது. ஆனால் 1935ல், உள்நாட்டு நிலைமை முற்றிலும் வேறு பட்டதாக இருந்தது. இப்பொழுது நன்கு புடம் போட்டு எடுக்கப்பட்டதொரு கம்யூனிஸ்ட் கட்சியும் மற்றும் நன்கு புடம் போட்டு எடுக்கப்பட்டதொரு செஞ்சேனையும் இருந்தது. செஞ்சேனை அதனுடைய மாபெரும் நீண்ட பயணத்தை வெற்றிகரமாக முடித்திருந்தது. கட்சியும் சேனையும், ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணியின் சக்தி வாய்ந்த பிரதான தளமாகவும் அதனுடைய உறுதியான தலைவர்களாகவும் தவிர்க்க முடியாதபடி மாறுவார்கள்.

இந்த ஐக்கிய முன்னணியில், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை தீர்மானமானதொரு முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது. சீனாவின் ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் நிலப்பிரபுத்துவ எதிர்ப்புரட்சி தொழிலாளி வர்க்கத்தினால் தலைமை தாங்கப்படவேண்டுமே அன்றி பூர்ஷ்வா வர்க்கத்தினால் அல்ல என்பதை வரலாறு ஊர்ஜிதம் செய்தது. ஐக்கிய முன்னணியில் கட்சியின் தலைமை புரட்சியின் வெற்றியை உறுதிப்படுத்திற்று.

திட்டவட்டமாக இந்த காரணத்திற்காக, கட்சி அதனுடைய சொந்த அணிகளை விஸ்தரிக்க வேண்டுவதும், ஐக்கிய முன்னணியில் அதனுடைய தலைமையினை உறுதிபடுத்த வேண்டியதும் கட்டாயமாக இருந்தது; கட்சி ஸ்தாபனங்கள், கட்சியினால் தலைமை தாங்கப்பட்ட நிறுவனம் மற்றும் புரட்சிகரமான தளங்களை விரிவு படுத்த வேண்டுவதும் அதற்கு கட்டாயமாக இருந்தது. பலமானதொரு கம்யூனிஸ்ட் கட்சி, செஞ்சேனை, புரட்சி தளங்கள் ஆகியவை ஐக்கிய முன்னணியின் பிரதான அடித்தள

மாக அமைத்தன.

(4) ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடு வதற்கு சீன மக்களுக்கு இருந்த வளைந்து கொடுக்காத உறுதியை யும், இறுதி வெற்றியில் அவர்களுக்கு இருந்த நம்பிக்கையையும் தோழர் மாசே-துங் அச்சமற்ற போர் குணத்தோடு எதிரொலித் தார். அதே சமயத்தில், சர்வதேச ஆதரவுக்கான அவசியத்தை யும் அவர் சுட்டிக் காட்டினார். சீனாவின் ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணி தனிமைப்பட்டிருக்கவில்லை; சோவியத் யூனிய னால் தலைமை தாங்கப்பட்ட உலக மக்களிடமிருந்து அது நிச்சய மாக உதவி பெறும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். தோழர் மாசே - துங் அறிக்கையில் கூறியது போல்,

''நம்முடைய ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்திற்கு உலக மக்களின் ஆதரவு, எல்லாவற்றிற்கும் மேலாக, சோவியத்யூனியன் மக்களின் ஆதரவு தேவைப்படுகிறது. அவர்கள் நிச்சயமாக நம்மை ஆதரிப்பார்கள். ஏனெனில் நாமும் அவர்களும் ஒருவர் மற்றொருவருடைய சுகத்தோடும் துக்கத்தோடும் அக்கறை உள்ளவர்களாக இருக்கிறோம்.'' 6

சோவியத் மக்களின் ஆதரவு, ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத் திலும் மற்றும் சீனாவின் புரட்சியிலும் வெற்றி பெறுவதற்கு சீனாவிற்கு முக்கியமானதொரு நிபந்தனையாக இருந்தது. மறுபுறத்தில், இந்தப் புதிய ஆக்கிரமிப்பு யுத்தத்தை எதிர்ப் பதற்கு, ஜப்பானோடு முரண்பாடுகளைக் கொண்டிருந்த அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலுமிருந்து இதர எல்லா முதலாளித்துவ நாடுகளோடும் முறையான உறவுகளை ஏற் படுத்துவதற்கான சாத்திய உறவுகளோடும் சீனா பரிசீலிக்க வேண்டும். சுருக்கமாக சொல்லுவது என்றால், சீனா அதனுடைய ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியை உலக சமாதான முன்னணியோடு இணைத்துக் கொள்ள வேண்டும்; மற்றும் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை முற்றிலும் தனிமைப் படுத்தவும் வேண்டும்.

## 5. ஜப்பானை எதிர்த்து போராடுவதற்கு சியாங்காய் ஷேக்கை நிர்ப்பந்திக்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை. சியாங் சம்பவம், நிலைமையின் திரும்பு முனை. ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியின் ஆரம்பங்கள். வடகிழக்கு ஜப்பானிய எதிர்ப்பு நேச ராணுவத்தின் போராட்டம்.

மத்திய கமிட்டி மற்றும் தோழர் மாசே-துங்கின் சரியான தலைமையின் கீழ் ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணியைக் கட்டுவதற்கு கட்சி முழுவதும் சுறுசுறுப்பாக வேலை செய்து ஒரு ஆரம்ப உருவத்தில் அதனை படிப்படியாக உருவகமாக்கிற்று.

முதல் நடவடிக்கையாக ஒரு கம்யூனிஸ்ட் எதிர்ப்பு யுத்தத்தை நடத்துவதற்கு 1936இல் சென்சிக்கு பிற்போக்கு கோமிங்டாங் அரசாங்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட வடகிழக்கு ராணுவத் தோடும் 17ஆவது வழி ராணுவத்தோடும் யுத்த நிறுத்தம் செய்து கொள்வதும் ஜப்பானிய எதிர்ப்பு உடன்படிக்கை செய்து கொள்வதும் அவசியம் என்று கட்சி நினைத்தது. 1936 ஜனவரி 25இல் செஞ்சேனை வடகிழக்கு ராணுவத்தின் அதிகாரிகளுக்கும் ஜவான்களுக்கும் ஒரு கடிதத்தை அனுப்பி வைத்தது. ஜப்பானை எதிர்த்து போராடுவதற்கு தயாராக இருந்த வடகிழக்கு ராணுவத்தை அதே லட்சியத்திற்காக உறுதியாக போராட தயாராக இருந்த செஞ்சேனைக்கு எதிராக சியாங்காய்-ஷேக் அனுப்பி வைத்தான் என்றும் இரு சாராரையும் அழிக்கும் பொருட்டும் அல்லது பலஹீனப் படுத்தும் பொருட்டும் சியாங்-காய்-ஷேக் வடகிழக்கு ராணுவத்தை, அனுப்பி வைத்தான் என்றும் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டது; வடகிழக்கு ராணுவத்தை வறுமை நிறைந்த மாகாணங்களான சென்சிக்கும் கான்சூக்கும் அனுப்பி வைத்ததினாலும் மற்றும் ஒப்பு நோக்கிப் பார்க்கும்போது, பணக்கார மாகாணங்களான தெற்கு சென்சி, தெற்கு கான்சூ ஆகியவற்றை ஒதுக்கி வைத்ததினாலும் வடகிழக்கு ராணுவத்தின்பால் சியாங்கின் பாரபட்சம் முற்றிலும் தெளிவாக தெரிந்தது; வடகிழக்கு ராணுவத்தில் உளவு வேலையையும் பிளவு நடவடிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கு தன்னுடைய சொந்த தொங்கு சதைகளை சியாங் வைத்திருந் தான்; மற்றும் ஜப்பானை எதிர்த்துப் போராடுவதும் மற்றும் சியாங்காய்-ஷேக்கை எதிர்ப்பதுதான் அவர்களுக்கு முன்னா லிருந்த ஒரேவழி என்றும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. ஜப்பானுக்கு எதிராக ஒன்று சேர்ந்து போராடும் பொருட்டு, தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் ஜனநாயக அரசாங்கமும் செஞ்சேனையும் ஒரு தேசிய பாதுகாப்பு அரசாங்கத்தையும் ஜப்பானிய எதிர்ப்பு நேச ராணுவத்தை அமைப்பதில் அவர் களோடு ஒன்று படுவதற்கு தயாராக இருந்தன.

ஜப்பானை எதிர்த்துப் போராடுவது மற்றும் தேசத்தைப்

பாதுகாப்பது என்ற மக்களின் அவசர கோரிக்கையை ஏற்று, செஞ்சேனையின் ஜப்பானிய எதிர்ப்பு முன்னணிப்படை அமைக்கப்பட்டு மார்ச் 10இல் மஞ்சள் நதியைக் கடக்கும்படி உத்தரவிடப்பட்டது. ஆனால், டாடுங்-புகோவ் ரயில்வேயை கைப்பற்றி கோடுபயிலும் சகாரிலும் முன்னணிக்குச் செல்லத் தயாராக இருந்த சமயத்தில், அதனுடைய பாதையைத் தடுப்பதற்கு சியாங்காய்-ஷேக் பெரியதொரு படையை அனுப்பினான். செஞ்சேனையின் பின்னணிப் படையை துன்புறுத்துவதற்கு வடகிழக்கு ராணுவத்தையும் வடமேற்கு ராணுவத்தையும் வடக்கு நோக்கி அணிவகுத்து செல்லும்படியும் அவன் உத்தர விட்டான்.

தேசிய நெருக்கடியில், தீர்மானமானதொரு போராட்டத்தில் எந்தத் தரப்பு வெற்றி பெறும் என்பதைப் பற்றி பொருட்படுத் தாமலிருப்பது, ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு மகிழ்ச்சி யைக்கொடுப்பதற்குதான். தேசிய பாதுகாப்பிற்கான சீனாவின் மதத்தை குறுக்குவதாய் இருக்கும் என்று கருதிக் கொண்டு. செஞ்சேனையின் புரட்சி ராணுவ கமிஷன் ஜப்பானிய எதிர்ப்பு முன்னணிப்படை மஞ்சள் நதிக்கு மேற்கே வாபஸ் வாங்கிற்று. மே 5-இல் கமிஷன் ஒரு சுற்றிக்கை தந்தியினை அனுப்பிற்று. அத்தந்தியில் நாடுதழுவிய உள்நாட்டு யுத்தத்தை நிறுத்தும்படி நான்கிங் அரசாங்கத்திற்கு அறிவுரை கூறிற்று, எல்லாவற்றிற்கும் முதலாவதாக ஷென்சி, கான்சூ மற்றும் கான்சி ஆகிய மாகாணங் களில் யுத்தத்தை நிறுத்தும்படியும், அப்படிச் செய்வதினால் ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்கும் மற்றும் தேசத்தைப் பாதுகாப்பதற்குமான திட்டவட்டமான நடவடிக்கைகளை விவாதிப்பதற்கு இரு தரப்புகளும் பிரதிநிதிகளை அனுப்பி வைக்க முடியும் என்றும் அத்தந்தியில் ஆலோசனைக் கூறப்பட்டிருந்தது. மேலும், நாடு முழுவதும் உள்நாட்டு யுத்தத்தை நிறுத்துவதை வேகப்படுத்துவதற்கு ஒரு கமிட்டியை அமைப்பதற்கு நாடு முழுவதிலுமுள்ள மக்களை தந்தி அறைகூவி அழைத்தது; இரண்டு தரப்புகளிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதை நிறுத்தவும் மற்றும் இந்தப் பிரரேபனை முற்றிலும் நிறைவேற்றப்படுவதைப் பார்த்துக் கொள்ளவும் யுத்த அரசாங்கதிற்கு பிரதிநிதிகளை அனுப்பும்படி தந்தி மக்களை அறைகூவி அழைத்தது.

இதற்கு முன்பாக சியாங்காய்-ஷேக் வடகிழக்கு சீனாவையும் வடக்கு சீனாவையும் தொடர்ந்து விற்பதற்கு முயற்சித்துக்

கொண்டிருந்தமையால் கட்சியின் மத்திய கமிட்டி ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியில் அவனை சேர்த்துக் கொள்ள வில்லை ஆனால் வடசீனாவின் மீது ஜப்பானியர்களின் தாக்குதல் ஜப்பானியர்களுக்கும், ஆங்கிலோ-அமெரிக்க ஏகாதிபத்தியவாதி களுக்கும் இடையே நலன்களின் கடுமையானதொரு மோதலை உண்டாக்கி இருந்தமையால், ஆங்கிலோ அமெரிக்க நலன்களோடு நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்த சியாங்காய்-ஷேக் கும்பல் இரண்டு நாடுகளின் அரசாங்கங்களின் வழிகாட்டுதலின் கீழ் ஜப்பானின்பால் அதனுடைய போக்கினை மாற்றிக்கொள்ள லாம். ஆகவே, ஜப்பானை எதிர்க்கும்படி சியாங்காய்-ஷேக்கை நிர்ப்பந்திக்கும் ஒரு கொள்கை, கட்சியின் மத்திய கொள்கை தந்தியில் தெளிவாக்கியிருந்தது.

கட்சியின் கொள்கைகள் பின்வருமாறு இருந்தன : 1. சியாங் காய்-ஷேக் கும்பலை ஐக்கிய முன்னணிக்கு வென்றெடுப்பது; அதே சமயத்தில் சீனாவின் ஆதிபத்திய உரிமை தேசிய கௌரவம் ஆகியவற்றிற்கு எதிராக ஜப்பானோடு சமரசம் செய்துகொள் வதற்கு கோமிங்டாங் அரசாங்கம் செய்யும் அனைத்து முயற்சி களையும் அம்பலப்படுத்துவது; 2. ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்கு சியாங்காய்-ஷேக்கை நிர்ப்பந்திப்பதற்கு முயற்சி கள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் அதே சமயத்தில், கோமிங் டாங் அவர்களது ராணுவங்கள் ஆகியவற்றின் பல்வேறு கோஷ்டி களோடு ஒன்றுபடுவது; ஏனெனில் எவ்வளவுக்கு அதிகமாக ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக சக்திகள் ஈர்க்கப் படுகின்றனவோ அந்த அளவிற்கு சியாங்காய்-ஷேக்கிற்கு அவனுடைய மனதை மாற்றிக் கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப் படுவது சாத்தியமாக இருக்கும்; 3. நாடுமுழுவதிலுள்ள மக்களின் முன்பு ஐக்கிய முன்னணியின் தலைவராகவும் அமைப்பாளராகவும் செயல்பட்டு உள்நாட்டு அமைதியையும் ஒற்றுமையையும் வளர்ப்பதற்கு முயற்சிப்பது.

''மக்களின் குடியரசு'' என்ற கோஷம் சியாங்காய்-ஷேக்கிற்கு ஏற்றுக் கொள்ள முடியாததாக இருக்கும் என்பதனைத் தெரிந்து கொண்டு, கட்சியின் மத்திய கமிட்டி ஜப்பானுக்கு எதிரான போராட்டத்தில் நான்கிங் அரசாங்கமும் அதனுடைய ராணுவ மும் பங்கெடுப்பதைத் தூண்ட வேண்டும் என்ற ஒரு விருப்பத்தி னால் உந்தப்பட்டு, மக்கள் குடியரசு என்ற கோஷத்தை, ''ஒரு ஜனநாயகக் குடியரசு'' என்ற கோஷத்தினால் அகற்றி ஒரு கடிதத்தில் 1936 ஆகஸ்ட் 25ல் கோமிங்டாங் கட்சிக்கு தெரிவித்தது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினால் பிரேரேபிக்கப்பட்ட

ஜப்பானை எதிர்ப்பதாகவும் தேசிய மீட்சிக்காகவுமான அகில காங்கிரசுக்கு பதிலாக ஒரு சில உயர் அதிகாரிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட கோமிங்டாங் அரசாங்கத்தின் வெறும் ஒரு ஆலோசனை உறுப்பான தேசிய பாதுகாப்பு கவுன்சிலை வைப்பதற்குக் கோமிங்டாங் செய்த முயற்சியை மத்திய கமிட்டி கடுமையாக விமர்சித்தது; கட்சியினால் முன் வைக்கப்பட்ட சீன ஜனநாயக குடியரசு, அதனுடைய பாராளுமன்றம் ஆகியவற்றுக்குப் பதிலாக கோமிங்டாங் அதிகாரிகளால் அதிகமாக நிரப்பப்பட்டிருந்த தேசிய சட்டசபையையும் மத்திய கமிட்டி கடுமையாக விமர்சித்தது; வாழ்க்கையின் சகல துறையிலும் கோமிங்டாங்கிலிருந்த எண்ணற்ற தேசபக்த மக்களோடு கை கோர்த்து நிற்கவும் ஒரு ஐக்கிய முன்னணியை அமைத்துக் கொள்ளவும் சீனக்கம்யூனிஸ்ட் கட்சி எப்பொழுதுமே தயாராக இருந்தது என்று மத்திய கமிட்டி சுட்டிக்காட்டிற்று; மற்றும் கோமிங்டாங்கில் தேசபக்த உறுப்பினர்கள் ஆதிக்க சக்தியாக வருவார்கள் என்ற நம்பிக்கையையும் தெரிவித்தது. ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணியை அமைக்கும் கட்சியின் கொள்கையையும் கோமிங்டாங்குடன் அதனுடைய ஒத்துழைப்பினைப் புதுப்பிக்கும் கட்சியின் கொள்கையையும் மத்தியக் கமிட்டி மீண்டும் ஊர்ஜிதம் செய்தது.

1936 செப்டம்பரில், கட்சியின் மத்திய கமிட்டியால் நிறைவேற்றப்பட்ட, ''ஜப்பானை எதிர்த்து போராடுவதற்காகவும் மற்றும் தேசத்தை பாதுகாப்பதற்குமான இயக்கத்தை புதிய நிலைமை, ஜனநாயக குடியரசு ஆகியவை பற்றிய தீர்மானத்தில்,'' ''ஒரு ஜனநாயக குடியரசு'' பற்றிய கோஷம் சம்பந்தமாக திட்டவட்டமான விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருந்தன; தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் ஜனநாயக சர்வாதிகாரத்தின் கீழ் அனுஷ்டிக்கப்பட்டதைக் காட்டிலும், பூகோள ரீதியாக மிக விரிவான ஒரு ஜன நாயகத்தை இது அர்த்தப்படுத்தியது என்றும் கோமிங்டாங்கின் ஒரு கட்சி சர்வாதிகாரத்தைக் காட்டிலும் மிக அதிகமான முற்போக்கானதொரு அரசியலமைப்பை இது அர்த்தப்படுத்தியது என்றும் தீர்மானம் சுட்டிக் காட்டிற்று. இது மக்கள் அரசியல் நடவடிக்கைகளில் பங்கெடுப்பதை சாத்தியமாக்கும். மற்றும் எதிர்காலத்தில் சோஷலிசத்தை உருவாக்குவதற்காக பணியாற்றும் சுதந்திரத்தையும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கு வழங்கும். இந்த கோஷத்தை ஒரு யதார்த்தமாக மாற்றுவதற்கு, கட்சியின் தலைமையைப் புலப்படுத்துவதும் வெகு

ஜனங்களை அணி திரட்டுவதும் அவசியமாக இருந்தது என்று தீர்மானம் வலியுறுத்திக் கூறிற்று. ஜனநாயக குடியரசு ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, ஜப்பானை எதிர்ப்பதற்காகவும் மற்றும் தேசத்தை மீட்பதற்காகவுமான கட்சியின் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அது தொடர்ந்து செல்ல வேண்டும் என்றும் தீர்மானம் தெளிவு படுத்திற்று. ''ஒரு மக்கள் குடியரசு'' மற்றும். ''ஒரு ஜனநாயக குடியரசு'' என்ற இரு கோஷங்களும் வார்த்தையில் வேறுபாடு இருந்தபோதிலும் சாரம்சத்தில் ஒரே விஷயத்தைதான் அர்த்தப்படுத்தின.

ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்காகவும் தேசத்தை காப்பாற்றுவதற்காகவும் சீன கம்யூனிஸ்ட் கட்சி முன் வைத்த கொள்கைகள் நாடு முழுவதிலுமுள்ள மக்களின் உற்சாகமான ஆதரவைப் பெற்றது. தோழர் லியூசாவோ - சீ தலைமையின் கீழ், கோமிங்டாங் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த ஏரியாக்களில் கட்சி மற்றும் மக்களின் ஜப்பானிய எதிர்ப்பு இயக்கம் ஆகியவற்றின் பணி புத்துயிர் பெற்று விஸ்தரிக்கப்பட்டன. 1936 ஆகஸ்டில், சிவப்பு வாலின் மீது ஜப்பானிய துருப்புகளும் பொம்மைப் படைகளும் அவர்களது படையெடுப்பை ஆரம்பித்த பொழுது, அங்கிருந்த சீன படைப் பிரிவுகள் திரும்பித் தாக்கின. மற்றும் நாடு முழுவதிலுமுள்ள மக்கள் எதிர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவாக ஒரு இயக்கத்தை ஆரம்பித்தார்கள். நவம்பரிலும், டிசம்பரிலும் ஜப்பானிய எதிர்ப்பு வேலை நிறுத்தம் ஷாங்காயிலும் மற்றும் சீடா வோவிலும் பஞ்சாலைத் தொழிலாளர்களால் நடத்தப்பட்டன. 1936 ஜூனில் ஆளும் கும்பலுக்கு உள்ளேயிருந்த குவாங்சி மற்றும் குவாங்டுங் யுத்த பிரபுக்களும் கூட, ''ஜப்பானை எதிர்த்துப் போராடுவது மற்றும் தேசத்தைப் பாதுகாப்பது என்ற பெயரில் சியாங்காய் - ஷேக்கை எதிர்ப்பதற்கு கை கோர்த்து நின்றார்கள்.

நாடு முழுவதிலும் இருந்த ஜப்பானிய எதிர்ப்பு இயக்கத்தின் சீரான வளர்ச்சியைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் சியாங்காய்-ஷேக் கம்யூனிஸ்ட் கட்சியையும் மக்களையும் எதிர்க்கும் கொள்கையை இன்னும் உறுதியாக இன்னும் பற்றிப் பிடித்துக் கொண்டிருந்தான். மற்றும் செஞ்சேனையின் மீது அவனது தாக்குதலை தொடர்ந்து நடத்திக் கொண்டு வந்தான். சாங்சுய்லியாங் தலைமையிலிருந்த வடகிழக்கு ராணுவம் யாங்கு - செங் தலைமையிலிருந்த வடமேற்கு ராணுவமும் செஞ்சேனை மற்றும் மக்களின் ஜப்பானிய எதிர்ப்பு இயக்கம் ஆகியவற்றின் செல்வாக்

கின் கீழ் வந்திருந்தன. மற்றும் செஞ்சேனைக்கு எதிராக போராடுவதையும் நிறுத்தி விட்டன. ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணியை அமைப்பதற்கான கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையை ஏற்றுக் கொண்டு, ஜப்பானுக்கு எதிராக கம்யூனிஸ்டுகளோடு ஒன்றுபடும்படி சாங்கும்-யாங்கும், சியாங்காய்-ஷேக்கை வலியுறுத்தினார்கள். சியாங்காய் - ஷேக் அவர்களது கோரிக்கையை நிராகரித்தான். "கம்யூனிஸ்ட்களை ஒழித்துக் கட்டுவதற்காக" ராணுவத் தயாரிப்புகளை அதிகப்படுத்தினான். அவர்களை அவர்களது பதவியில் இருந்தும்கூட அகற்றுவதற்கும் அவன் நினைத்தான். சியானிலிருந்த கட்சி ஸ்தாபனத்தின் செல்வாக்கின் கீழும் ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்கும் மற்றும் தேசிய வீழ்ச்சிக்காவும், வென்று கொண்டிருந்த பல்வேறு வட்டாரங்களைக் கொண்ட வடமேற்கு சங்கத்தின் செல்வாக்கின் கீழும் தேசிய வீழ்ச்சிக்கான வடகிழக்கு சீன சங்கம், மாணவர் சங்கம் மற்றும் இதர ஜப்பானிய எதிர்ப்பு ஸ்தாபனங்கள் கோமிங்டாங்கின் துருப்புகள், போலீஸ், ஆயுதப்படை மற்றும் உளவாளிகளையும் மீறி வெகுஜன ஆர்ப்பாட்டங்களை நடத்தின. ஜப்பானிய எதிர்ப்பு மக்கள் இயக்கத்தினால் ஊக்குவிக்கப்பட்டு, சாங்கும்—யாங்கும் 1936 டிசம்பர் 12-இல் சியாங்காய்-ஷேக்கை கைது செய்தார்கள் மற்றும் நாட்டில் அழிவில் மட்டுமே முடியக்கூடிய கம்யூனிஸ்ட் எதிர்ப்பு உள்நாட்டு யுத்தத்தை நிறுத்தும்படி அவனை நிர்ப்பந்தித்தார்கள். சியாங்காய்-ஷேக் கைதானவுடன், ஜப்பானிய ஆதரவு பேர்வழிகளான வாங்சிங்—வெய்யும் கோய்ங்-சிங்கும் நான்சிங் அரசாங்கத்தின் ஆதிக்கத்தை மேற்கொண்டார்கள். சியாங் மீது ஒரு தாக்குதலை நடத்துவதற்கான தயாரிப்பில் பெரும் படைகள் குவிக்கப்பட்டன; மற்றும் சியாங்காய்-ஷேக்கிடமிருந்து அரசியல் அதிகாரத்தைப் பறிக்கவும் திட்டங்கள் தீட்டப்பட்டன. ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளும்கூட இந்த நிலைமையில் இருந்து முதல் எடுக்கவும் சீனாவின் உள்நாட்டு யுத்தத்தை விரிவுபடுத்த ஆவலோடு இருந்தார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள், வாங்சிங்—வெய் மற்றும் கோய்ங்—சிங் ஆகியோரின் சூழ்ச்சியை முறியடிப்பதற்கு கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி தீர்மானித்தது. மற்றும் தேசத்தின் ஒட்டு மொத்தமான நலன்களைக் கவனத்தில் கொண்டு சியாங் சம்பவத்திற்கு ஒரு சமாதானப் பூர்வமான தீர்வு காணுவதற்கு ஆதரவாக நின்றது.

இதன் விளைவாக கம்யூனிஸ்டுகளோடு ஒன்றுபடுவதற்கு, ஜப்பானை எதிர்த்துப் போரடுவதற்குமான நிபந்தனைகளை சியாங்காய்-ஷேக் ஒப்புக் கொண்ட பிறகு, சியாங்கும், யாங்கும் அவனை விடுதலை செய்தார்கள்.

1937-பிப்ரவரியில், நடைபெற்ற கோமிங்டாங்கின் கட்சியின் மத்திய நிர்வாகக் கமிட்டியின் மூன்றாவது விரிவடைந்தக் கூட்டத்தில், கோமிங்டாங்கின் ஜனநாயகப் பிரிவின் சார்பில் டாக்டர் சன்யாட்சன்னின் மூன்று கேந்திரமான கொள்கைகளை பின்பற்றும்படி சூங்சிங்-லிங் கோமிங்டாங்கை வலியுறுத்தினான். வெகு ஜனங்களை அணி திரட்டுவதையும் மக்களின் வாழ்க்கை நிலைமைகளை அபிவிருத்தி செய்வதையும் கம்யூனிஸ்ட் கட்சி யோடும் எல்லா ஜனநாயக சக்திகளோடு ஒத்துழைப்பதையும் உள்நாட்டு யுத்தத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வந்து சீன மக்களை சமமானதொரு அந்தஸ்தில் வைத்திருக்கும் சோவியத் யூனியனால் தலைமைத் தாக்கப்படும் எல்லாத் தேசங்களோடும் ஆக்கிரமிப்புக்கு எதிராக நடைபெறும் போராட்டத்தில் ஒன்றுபட வேண்டும் என்றும் அவன் வலியுறுத்தினான். ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணி நிலைநாட்டப்படுவதை வசதி செய்யும் நோக்குடன் பின்வரும் நான்கு நிபந்தனைகளை நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்து கோமிங்டாங்கின் விரிவடைந்தக் கூட்டத் திற்கு சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தந்தியை அனுப்பி வைத்தது. சென்சி-கான்சூ-லிங்சியா புரட்சி தளத்திலிருந்த கம்யூனிஸ்ட் தலைமைத் தாங்கிய அரசாங்கத்தை விசேஷப் பிராந்தியத்தின் அரசாங்கம் என்று பெயர் கொடுப்பது என்றும், செஞ்சேனைக்கு வேறு பெயர் கொடுப்பது என்றும் ஆயுதப் பேரெழுச்சிக் கொள்கையை கைவிடுவதென்றும் மற்றும் நில சுவான்தார்களின் நிலத்தை பறிமுதல் செய்வதை விட்டுவிடுவதென்பதும் ஆகும். அதே சமயத்தில், கட்சி கோமிங்டாங்கிடம் பின்வரும் ஐந்து கோரிக்கைகளை வைத்தது. உள்நாட்டு யுத்தத்தை நிறுத்துவது பேச்சு சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம் மற்றும் சங்கம் வைக்கும் சுதந்திரம் ஆகியவற்றை உத்திரவாதம் செய்வது, ஜப்பானிய எதிர்ப்பு மக்கள் காங்கிரசை கூட்டுவது, ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்கான தயாரிப்புகளைப் பூர்த்தி செய்வது, மற்றும் மக்களின் வாழ்க்கை நிலைமைகளை அபிவிருத்திசெய்வது.

சீனாவின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முரண்பாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இணக்கமான முறையில் இரண்டு

ஆட்சிகளுக்கிடையேயிருந்த விரோத குரோத நிலையை மாற்று வதற்கு வாக்குறுதிகள் அவசியமாக இருந்தன. அவை உருப்படி யான நிபந்தனையுடன் கூடிய மற்றும் கோட்பாடு ரீதியான சலுகைகளாக இருந்தன. விசேஷ பிராந்தியத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையை வைத்துக் கொள்வது மற்றும் செஞ் சேனையை வைத்துக் கொள்வது என்ற நிபந்தனையோடும் மற்றும் கோமிங்டாங்கோடு இருந்த அதனுடைய உறவுகளில் கட்சியின் தனித் தன்மையையும் விமர்சன சுதந்திரத்தையும் வைத்துக் கொள்வது என்ற நிபந்தனையின் பேரில் தேசிய எதிர்ப்பு யுத்தத்தில் பங்கு பெறுவது என்றக் குறிக்கோளுடன் இச்சலுகைகள் கொடுக்கப்பட்டன.

1937-மே மாதத்தில், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மகாநாடு ஏனானில் நடைப்பெற்றது. இந்த மகாநாடு 1935-லிருந்து கட்சி கடைப்பிடித்த அரசியல் பாதையை விவாதித்து ஏற்றுக் கொண்டது.

இந்த மகாநாட்டில் தோழர் மாசே-துங் ''ஜப்பானிய எதிர்ப்புப் போராட்டக் காலக் கட்டத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கடமைகள்'' என்ற தலலப்பில் ஒரு அறிக்கையை சமர்ப்பித்தார். 1935 டிசம்பர் 9-லிருந்து கோமிங் டாங்கின் மத்திய நிர்வாக கமிட்டி அதனுடைய மூன்றாவது விரிவடைந்த கூட்டத்தை நடத்திய 1937 பிப்ரவரி வரையிலும் கட்சியின் கடமை உள் நாட்டு அமைதிக்காகப் போராடுவதும் மற்றும் உள்நாட்டு ஆயுத மோதல்களை நிறுத்துவதற்காக போராடுவதுமாக இருந்து வந்தது என்று அவர் சுட்டிக் காட்டி னார். அந்தக் காலக் கட்டத்தில், ஒரு ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணியின் உண்மையான அமைப்பிற்கு உள் நாட்டு அமைதிக்கான போராட்டம் முதல் அவசியமான நிபந்தனையாக இருந்தது. கோமிங்டாங்கின் மூன்றாவது விரிவடைந்தக் கூட்டத்திற்குப் பிறகு சீனப் புரட்சி ஜப்பானிய எதிர்ப்புக் காலக்கட்டத்திற்குள் போய்க் கொண்டிருந்தது. கட்சியின் பிரதான கடமை நாட்டில் ஜனநாயகத்திற்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடுவதாக இருந்தது ஜப்பானுக்கு எதிரான யுத்தத்திற்கு உள் நாட்டு அமைதியும் மக்களின் அணி திரட்டலும் தேவையாக இருந்தன. ஆனால் ஜனநாயகம் இல்லாமல் சமாதானம் வென்று பெறப்பட்ட போதிலும் கட்டுப் படுத்தப்பட முடியவில்லை. மற்றும் மக்களின் அணி திரட்டலைத் தொடர்ந்து நடத்துவதற்கு வேறு வழியும் இல்லை. அரசியல்

ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்திற்கான போராட்டம் ஆயுதம் ஏந்திய எதிர்ப்புப் போராட்டத்தில் வெற்றியை உறுதிப்படுத்துவதில் கேந்திரமானதொரு கன்னியாக இருந்தது.

அரசியல் அமைப்பு உடனடியாக ஜனநாயக சீர்திருத்தங்களை அமுலாக்குவது அவசியமாக இருந்தது. முதலாவதாக அனைத்துக் கட்சிகள் மற்றும் அனைத்து வர்க்கங்களும் ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டதொரு ஜனநாயக வடிய அரசாங்கம் நிலைநாட்டப்பட வேண்டும். தேசிய சட்டசபைக்கான தேர்தல்களின் ஜனநாயகமற்ற நடைமுறை மாற்றப்பட வேண்டும். மற்றும் சட்டப் பேரவைக்கான ஜனநாயக பூர்வமான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். இதனைப் பின் தொடர்ந்து ஒரு ஜனநாயக அரசியல் சட்டம் உருவாக்கப்பட வேண்டும். ஒரு ஜனநாயக பாராளுமன்றம் கூட்டப்பட்டு ஒரு ஜனநாயக அரசாங்கம் தேர்வு செய்யப்பட வேண்டும். இரண்டாவதாக, சுதந்தர மக்களின் சுதந்திர உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். மிகவும் விசேஷமாக அவர்களது பேச்சு சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம், சங்கம் சேரும் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஐக்கிய முன்னணியை அமைத்து கெட்டிப்படுத்தும் பொருட்டும் மற்றும் ஜனநாயகக் குடியரசை உருவாக்கும் பொருட்டும், வெகுஜனங்களை வென்று எடுப்பதற்கு, அதாவது தொழிலாளிகள் விவசாயிகள் மற்றும் நகர்ப்புற குட்டி முதலாளிகள் ஆகியோர்களை அணி திரட்டுவதற்கும் மற்றும் பூர்ஷ்வா வர்க்கத்தின் ஜப்பானிய எதிர்ப்பு பிரிவினரை வென்றெடுக்கவும் அதிக பட்சமான முயற்சிகளைச் செய்வது அவசியமாக இருந்தது. ஆகவே, ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணிக்கு கோடான கோடி மக்களை வென்றெடுக்க முயற்சிப்பதும், ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை தூக்கி எறிவதும் மற்றும் தேசிய விடுதலையையும், சமுதாய விடுதலையையும் யதார்த்தமாக்குவதையும் கட்சியின் அடிப்படைக் கடமையாக இருந்தது.

ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் சீனத் தொழிலாளி வர்க்கத்தின் தலைமைப் பற்றிய பிரச்சினைக்கு அறிக்கையில் விசேஷ அழுத்தம் கொடுக்கப் பட்டிருந்தது.

பாட்டாளி வர்க்கம் பூர்ஷ்வா வர்க்கத்தைப் பின்பற்றுவதா அல்லது பூர்ஷ்வா வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தைப் பின்பற்றுவதா? சீனப் புரட்சியில் தலைமையின் பொறுப்புப் பற்றிய இந்தக்

கேள்வி கேந்திரமானதாக உள்ளது. இதன் மீதுதான் புரட்சியின் வெற்றி சார்ந்து நிற்கிறது. தோழர் மாசே-துங்கினால் கொடுக்கப் பட்ட இந்த முடிவின் சரியானத் தன்மை சீனப்புரட்சியின் வரலாற்று அனுபவத்தினால் நிரூபிக்கப் பட்டுள்ளது. பூர்ஷ்வா வர்க்கத்தின் உட்கிடைக்கையான ஊசலாட்டமும் முழுத் தன்மை இல்லாமையும் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் முழுமைத் தன்மை மற்றும் விடா முயற்சி திரட்டுவதினால் தான் வெற்றி கொள்ளப்பட முடியும். ஐப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியின்பால் பெரும்பாலும் செயலற்றதொரு போக்கினை கோமிங்டாங் அனுஷ்டித்தது என்ற விவரம் பாட்டாளி வர்க்த்தினுடையவும் கட்சியினுடையவும் அரசியல் தலைமையும் பொறுப்பினை அதிகமாக்கிற்று. அதனுடைய கட்சியின் மூலம் இந்த அரசியல் தலைமையைப் பிரயோகிப்பதற்கு பாட்டாளி வர்க்கத்திற்கு முக்கியமான விஷயங்களாக இருந்ததை அதனுடைய அரசியல் திட்டத்தை முன் வைப்பதும் புரட்சிகரமான நடவடிக்கைகளில் கட்சியின் அலாதியான உதாரணம் நேச சக்திகளோடு முறையான உறவுகளை ஸ்தாபிப்பது மற்றும் கட்சியின் அணிகளை விஸ்தரிப்பது ஆகியவையாக இருந்தன.

இந்த அறிக்கையில் உருவாக்கப் பட்டிருந்த ஜனநாயக பிரச்சினை முழுமையான எதிர்ப்பு என்றக் கட்சியின் கொள்கைக்கும் பகுதி எதிர்ப்பு என்ற கோமிங்டாங் கொள்கைகளுக்குமிடையே நடைபெற்ற போராட்டத்தில் பின்னர் குவி மையமாக மாறவிருந்தது. தலைமையை வென்று பெறும் பிரச்சினையும்கூட கட்சியின் சரியான பாதைக்கும் ஐப்பானிய எதிர்ப்பு யுத்தத்தின் ஆரம்ப கட்டங்களில் கடைப்பிடிக்கப் பட்ட சரணாகதி பாதைக்குமிடையே அடிப்படை விஷயமாக ஆகயிருந்தது.

வடகிழக்கு சீனாவை ஐப்பானியர்கள் ஆக்கிரமித்து காலனியாக ஆக்கியதோடு, ஒரு அரைக்காலனி, அரை நிலப்பிப்புத்துவ சமுதாயத்திலிருந்து சீனா ஒரு காலனி, அரைக்காலனி மற்றும் அரை நிலப்பிரபுத்துவ சமுதாயமாக இருந்தது.

1931 செப்டம்பர் 18ந்தேதி சம்பவத்திற்கு முன்பு, வடகிழக்கு சீனாவில் ஐப்பான் தனக்கு உறுதியானதொரு அரசியல் அஸ்திவாரத்தையும் போட்டு வைத்திருந்தது. வடகிழக்கு சீனாவில் ஐப்பானுடைய குவாங்டுங் ராணுவத் தலைமைக் காரியாலயமும், அதனுடைய குவாங்டுங் அரசாங்கமும் ராணுவ மற்றும் அரசியல் விவகாரங்களைக் கட்டுப்பாட்டில் வைத் திருந்தன. மற்றும் ஐப்பானுடைய தெற்கு மஞ்சூரியா ரயில்வே

கம்பெனி தொழிலிலும் செய்திப் போக்குவரத்திலும் ஆதிக்கம் செலுத்திற்று 1932 மார்ச் 9-ந்தேதியன்று ஒரு பொம்மை "மாஞ்சூவோ" ஜப்பான் ஆக்கிரமித்திருந்த வடகிழக்கு சீனாவில் அமைக்கப்பட்டிருந்தது.

ஜப்பானிய ஏகாதிபத்தியத்தினால் வடகிழக்கு சீனா ஆட்சி செய்யப்பட்ட காலத்தில் அங்கு ஜப்பானிய முதலீடுகள் 1932இல் 550 மில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்ததில் இருந்து 1936இல் 1455 மில்லியன் டாலர்களாக அதிகரித்தது. (அந்த சமயத்தில் சீனாவில் ஜப்பானிய மொத்த முதலீடுகள் இரண்டாயிரம் மில்லியன் டாலர்களாக இருந்தன. 1937இல் வடகிழக்கு சீனாவில் தேனிரும்பு உற்பத்தி 8,11,000 டன்களாக இருந்தது. உருக்குப் பொருள்கள் 2,46,000 டன்களுக்கு அதிகமாக இருந்தன. வடகிழக்கு சீனாவில் ஜப்பானுக்குச் சொந்தமான ரயில்வே பாதைகள், நாடு முழுவதிலுமிருந்த 19,028 கி. மீட்டர்களில், 8,296 கி. மீட்டர்களாக இருந்தன.

ஆயுதம் ஏந்திய வெளியேற்றுதல்கள் மூலமும் நிலத்தைப் பறிப்பதன் மூலமும், கொடுவட்டி விகிதத்தில் கடன்கள் வழங்குவதின் மூலமும் ஜப்பானி வங்கிகளால் உணவுப் பொருட்களைக் கட்டுப்படுத்துவதின் மூலமும், ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் வடகிழக்கு சீனாவில் உச்சக்கட்ட பத்தாம் பசலி நிலப்பிரபுக்களாக மாறினார்கள்.

வடகிழக்கு சீனாவில், சந்தையிலும், நிலத்திலும் ஜப்பான் ஏகபோகம் ஆதிக்கம் வைத்தது. மற்றும் தொழிற்சாலைகளிலும் சுரங்கங்களிலும், யந்திரத் தொழில் மூலப் பொருட்களிலும், செய்திப் போக்குவரத்துகளிலும் போக்குவரத்து துறையிலும், ஜப்பான் ஏகபோக ஆதிக்கம் வைத்தது. இந்த முறையில் முழுக்க முழுக்க அதனுடைய பிரத்யோக கட்டுப்பாட்டின்கீழ் வடகிழக்கு சீனாவை ஒரு காலனி ஆக்கிக்கொண்டிருந்தது.

வடகிழக்கு சீனாவின் மக்களும் ஆயுதப் படைகளின் ஒரு தேசபக்த பகுதியும் ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கு எதிராக தைரியமானதொரு கொரில்லா யுத்தத்தை நடத்தினார்கள். இந்த யுத்தம் ஒரு சமயத்தில் மிகவும் கணிசமானதொரு அளவிற்கு விரிவடைந்தது. ஆனால் ஜப்பானியர்களுடைய "படைகளைக் குவிக்கும்" இயக்கங்களின் காரணமாகவும், எல்லாவற்றிற்கும் மேலாக நெளிவு சுளிவானதொரு யுத்த தந்திரத்தையும், போர் தந்திரங்களையும் கடைபிடிக்கத் தவறியதாலும் கொரில்லா படைப் பிரிவுகள் ஒன்றன்பின் ஒன்றாக 1933 வசந்தகால

வாக்கில் தோற்கடிக்கப்பட்டன.

1933 இறுதி வாக்கில் வடகிழக்கு சீனாவில் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் புதியதொரு கட்டத்தை அடைந்தது; அக்கட்டத்தின் தலைதூக்கி நிற்கும் குணாம்சம் என்னவென்றால், சீன கம்யூனிஸ்ட் கட்சியினால் தலைமை தாங்கப்பட்ட ராணுவங்கள் எதிர்ப்பு யுத்தத்தின் முதுகெலும்பாக மாறிவிட்டன என்பது தான். பல இடங்களில் கட்சி தலைமை தாங்கிய கொரில்லா படைப்பிரிவுகள் நன்கு அமைக்கப்பட்டு கண்டிப்பான கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டன. தங்களது கொரில்லா யுத்தத்திற்கு வெகு ஜனங்களின் மீது சார்ந்து கொண்டு, அவை முக்கியமான வெற்றிகளைப் பெற்றன. இந்த வெற்றிகள் கட்சியின் மதிப்பை உயர்த்தின. ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணிக் கொள்கையை அமுல் நடத்தியதின் விளைவாக மக்களின் சிதறிக் கிடந்த மற்றும் முறியடிக்கப்பட்டிருந்த ஆயுதப் படைகளும், பழைய வகைப்பட்ட ராணுவங்களில் ஒரு பகுதியைக் கட்சியைச் சுற்றிலும் அணி திரண்டன. அவை கட்சியின் தலைமையை ஏற்றுக்கொண்டன; அல்லது திருத்தி அமைக்கப்பட்டன.

பல்வேறு மாவட்டங்களில் ஜப்பானிய எதிர்ப்பு படைப் பிரிவுகளில் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்ததில் ஆரம்ப வெற்றிகள் கிடைத்த பொழுது, வடகிழக்கு சீனா முழுவதிலும் அவற்றின் ஒன்றுபடுத்தப்பட்ட தலைமைப் பற்றிய பிரச்சினை முன்னுக்குக் கொண்டுவரப்பட்டது. இந்த முறையில் கட்சியின் வழி காட்டுதலின் கீழ், வடகிழக்கு ஜப்பானிய எதிர்ப்பு நேச ராணுவம் அமைக்கப்பட்டு, 1935 பிப்ரவரியில் ராணுவத்தின் ஒரு அரசியல் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஜப்பானிய எதிர்ப்புப் போராடும் நிலைமையின் அபிவிருத்திக்கு ஏற்படும் மற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் அறிவுரைகளின்படி செயல்பட்டுக் கொண்டும் ஜப்பானிய எதிர்ப்பு நேச ராணுவம் 1937இல் மூன்று படைப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. முதல் வழிச் சேனை கிழக்கு லயோனிங் இல்லத்தில் மலைப்பாங்கான மாவட்டங்களில் செயல்படுவது, இரண்டாவது வழிச்சேனை கிழக்கு கிரீன் மாகாணத்தின் மலைப் பிரதேச மாவட்டங்களில் செயல்படுவது, மூன்றாவது வழிச்சேனை ஹெய்லுங் கியாங்கின் சமவெளிகளிலும் மலைகளிலும் செயல்படுவது. சீனாவின் இதரப் பகுதிகளுக்கு எதிராக முழுமூச்சான தங்களது தாக்குதலை ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் துவக்கும் பொழுது பெரும் அளவிலான

கொரில்லா யுத்தத்திற்கு தயாரிப்புகள் செய்யப் பட்டிருந்தன. இது எதிரியின் மீது சக்திவாய்ந்ததொரு தடுப்பாக செயல்படும் மற்றும் தேசிய எதிர்ப்புப் போராட்டத்தின் ஒட்டு மொத்தமான திட்டத்திற்குள் பொருந்துவதாகவும் இருக்கும்.

வடகிழக்கு சீனாவில் கொரிய தேசிய இனத்தைச் சேர்ந்த மக்களும் தங்களுடைய கொரில்லா படைப்பிரிவுகளை நிலை நாட்டி, ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து வீரதீரமாக போராடிக் கொண்டிருந்தார்கள். சாங்பை மலைகளிலும் சங்காரி நதிப் பள்ளத்தாக்கிலும் ஜப்பானிய எதிர்ப்பு அடித்தள ஏரியாக்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. கொரிய மக்கள் புரட்சிப் படையும் தாய் நாட்டை மீட்பதற்கான சங்கமும் முறையே 1934-லிலும் 1935லிலும் அமைக்கப் பட்டிருந்தன. சீன மக்களும் கொரிய மக்களும் தங்களது பொது எதிரியை எதிர்த்துத் தோளோடு தோள் நின்று போராடினார்கள்.

இந்த முறையில் ஜப்பானுக்கு எதிராக முழுமையான யுத்தத்தில் தேசம் முழுவதும் குதிப்பதற்கு முன்பு, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் வடகிழக்கு சீன மக்கள் தைரியமானதொரு எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தி ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களின் ஆட்சியைப் பலவீனப்படுத்திக் கொண்டும் சீனாவின் இதரப் பகுதிகளின் மீது அவர்களது தாக்குதலைத் தாமதப் படுத்திக் கொண்டும் இருந்தார்கள்.

## இரண்டாவது புரட்சிகரமான உள்நாட்டு யுத்தக் காலக் கட்டம் பற்றி சுருக்கமான தொகுப்புரை.

1927-37ஆம் வருடங்களில் மிதமிஞ்சிய பயங்கரமான பிற்போக்குக் காலக் கட்டத்தில் கட்சி நீடித்திருந்து சமாளித்தது. இந்தக் காலக் கட்டத்தில் ஒரு புறத்தில், கட்சிகளையும் புரட்சிப் படைகளையும் முழுமையாக ஒழித்துக் கட்டுவதற்கு முயற்சித்துக் கொண்டு எதிரி எண்ணற்ற ராணுவத் தாக்குதல்களைத் தொடுத்தான். மறுபுறத்தில் கட்சி, சென்டு-ஷியுவின் வலதுசாரி சந்தர்ப்பத்தை முறியடித்துக் கொண்டு இடது சாரி சந்தர்ப்பவாதத்தினால் திரும்பத் திரும்பத் தாக்கப் பட்டுக் கொண்டும் மற்றும் சாங் குவோ-டாவோவின் தோல்விப் பாதையினாலும் அவனது பிளவுப்படுத்தும் மற்றும் நாசவேலை நடவடிக்கைகளினாலும் துன்புறுத்தப்பட்டுக் கொண்டுமிருந்தது.

அது கடுமையான அபாயத்தில் வைக்கப்பட்டிருந்தது. அப்பொழுதுதான் கட்சித் தோழர் மாசே-துங்கை அதனுடைய மாபெரும் பிராாசமான மற்றும் முற்றிலும் நம்பத் தகுந்த தலைவராக கட்சி அங்கீகரித்தது. அதன் விளைவாக, அவரால் தலைமைத் தாங்கப்பட்ட புதியதொரு கட்சித் தலைமை நிலை நாட்டப்பட்டது.

தோழர் மாசே-துங்கின் தலைமையின் கீழ் புரட்சி, ஆயுதப் போராட்டத்தின் பாதை வழியாக கிராமப்புரங்களிலிருந்து ஆரம்பம் ஆகி, அடித்தள ஏரியாக்களில் அதனை நிலை நிறுத்திக் கொண்டது. இத்தகைய தள ஏரியாக்கள் படிப்படியாக எண்ணிக்கையிலும், அளவிலும் விஸ்தரிக்கப்பட்டன. இந்த வழியில் எதிர்ப்புரட்சியினால் ஆக்கிரமிககப் பட்டிருந்த நகரங்களை சுற்றி வளைக்கப்பட முடிந்தது. மற்றும் இறுதியாக, கிராமப்புற மாவட்டங்களில் ஆயுதம் ஏந்தியப் புரட்சிப் படைகளால் இறுதியாக கைப்பற்ற முடிந்தது. சீனப்புரட்சி நகரங்களில் சக்தி வாய்ந்த எதிரிகளால் தோற்கடிக்கப்பட்டிருந்த ஒரு சமயத்தில் சீனப் புரட்சியின் அபிவிருத்திக்கு இதுதான் ஒரே சரியான விதியாக இருந்தது. இந்த முறையில், கட்சி செஞ்சேனையையும் புரட்சித் தளத்தையும் உருவாக்கிப் புரட்சி யுத்தத்தையும் விவசாயப் புரட்சியையும் தலைமை தாங்குவதற்கும், அரசியல் அதிகாரத்தை நிலைநாட்டவும் கற்றுக் கொண்டது.

1931-செப்டம்பர் 18-ந்தேதி சம்பவத்தில் இருந்து, குறிப்பாக 1935-இல் வடசீனாவிற்குள் அவர்களது ஊடுருவலை நடத்தியதிலிருந்து ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் சீனாவை முழுமையாக வெற்றிக் கொள்ளும் ஒரு கொள்கையைப் பின்பற்றி இருந்தார்கள். இது சீனாவிற்கும் ஜப்பானுக்கும் இடையே இருந்த முரண்பாட்டினை அடிப்படையானதொரு முரண்பாடாக செய்தது. மற்றும் சீனாவின் உள்நாட்டு முரண்பாட்டினை இரண்டாந்தரமானதொரு நிலைக்குப் பின்னுக்குத் தள்ளிற்று. சீனாவின் உள்நாட்டு வர்க்க உறவுகளிலும் சர்வதேச உறவுகளிலும் தொடர்ச்சியான மாற்றங்கள் ஏற்பட்டன. அதற்கேற்ப கட்சியின் மத்திய கமிட்டியின் தோழர் மாசே-துங்கும் ஜப்பானிய எதிர்ப்பு தேசிய முன்னணியை அமைக்கும் கடமைகளையும், மற்றும் ஐக்கிய முன்னணியை உலக சமாதான முன்னணியோடு இணைக்கும் கடமைகளையும் முன் வைத்தார்கள். தோழர் மா சே-துங்கின் தலைமையின் கீழ், கட்சி சரியற்ற ''இடதுசாரி''

பாதையையும் மற்றும் சிவப்பு ஆட்சி ஏற்படுத்துவதற்கான போராட்டத்தின் போக்கில் சாங்குவோடவோவின் கட்சிவிரோத நடவடிக்கைகளையும் முற்றிலும் வெற்றிக் கொண்டு ஜப்பானிய ராணுவ வெறித்தனத்திற்கு எதிரான போராட்டத்தின் போக்கின் ''இடதுசாரி'' செக்டேரியன் தந்திரங்களையும் களைந்திருந்தது.

இந்த முறையில், பத்தாண்டு பிற்போக்கு காலக்கட்டத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சி, சரியானதொரு ஆக்கப்பூர்வமான மார்க்ஸிச-லெனினிசத் தலைமையின் கீழ், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு எதிரிகளின் தாக்குதல்களை எதிர்த்துப் போராடி சந்தர்ப்பவாதத்தின் தாக்குதல்களை முறியடித்து, கேந்திரமான சக்தியான செஞ்சேனையும், புரட்சித் தளங்களின் பகுதியையும் மற்றும் பெரும் எண்ணிக்கையிலான நேர்த்தியான ஊழியர்களையும் பாதுகாத்து செழுமையான புரட்சிகரமான அனுபவத்தையும் குவித்து வைத்திருந்தது. 1935 இறுதியில் ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணிக்கான கட்சியின் தந்திரங்களையும் உறுதியாக நிலைநாட்டியப் பிறகு, உள்நாட்டு யுத்தம் ஒரு முடிவுக்கு வந்தது. மற்றும் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்திற்கு மாறிச் செல்வது ஆரம்பமாயிற்று.

இரண்டாவது புரட்சிகரமான உள்நாட்டு யுத்த காலக்கட்டம், மிதமிஞ்சிய கடினமான சூழ்நிலைமைகளின் கீழ், கட்சி சித்தாந்த பக்குவத்தையும் அரசியல் பக்குவத்தையும் எய்திய ஒரு காலக் கட்டமாக இருந்தது. ஆகவே இரண்டாவது புரட்சிகரமான உள்நாட்டு யுத்தம் மிகமிக முக்கியமான அரசியல் தயாரிப்புகளைப் பூர்த்தி செய்து, சீனப்புரட்சியின் அபிவிருத்திக்கு அவசியமான ஊழியர்களையும் வளர்த்தெடுத்தது.

## அடிக்குறிப்புகள்

1. இந்த உடன்பாடு வடசீனாவின் கோமிங்டாங் அரசாங்கத்தின் பிரதிநிதியான ஹோயின்-சின்னாலும் மற்றும் வடசீனாவில் ஜப்பானிய ஆயுதப் படைகளின் தளபதியான யோசிஜீரோ உமேசுவினாலும் 1935-ஜூனில் கையெழுத்திடப்பட்டது. இந்த உடன்பாட்டில் ஜப்பானால் முன் வைக்கப்பட்ட கோரிக்கை கோமிங்

டான் அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் மூலம் ஹோப்பெய் மற்றும் சகார் மாகாணங்களில் சீனாவின் ஆதிபத்திய உரிமைகள் கணிசமாக விட்டுக் கொடுக்கப்பட்டன.

2. அதற்கு முந்திய ஆண்டு டிசம்பர் 9-ந்தேதி இயக்கத்தில் பங்கெடுத்திருந்த முற்போக்கு இளைஞர்களால் 1936 செப்டம்பரில் கம்யூனிஸ்ட் தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட புரட்சிகரமானதொரு இளைஞர் ஸ்தாபனம் ஆகும். இது ஜப்பானிய ஆக்கிரமிப்பை எதிர்த்து யுத்தம் வெடித்தப் பிறகு, அதனுடைய பல உறுப்பினர்கள் யுத்த அரங்கத்திற்கு சென்று, எதிரியின் பின்னணி ஏரியாக்களில் அடித்தள ஏரியாக்களை நிர்மாணிப்பதில் பங்குக் கொண்டார்கள்.

3. மா சே-துங், முன்பு மேற்கோள் காட்டிய நூல், பக்கம் : 159.

4. மேலே குறிப்பிட்ட நூல்,

5. மேலே குறிப்பிட்ட நூல்., பக்கம் 163

6. மேலே குறிப்பிட்ட நூல்., பக்கம் 174.

7. மேலே குறிப்பிட்ட நூல்., பாகம் 1 பக்கம் 269.

அத்தியாயம் எட்டு

# ஜப்பானிய ஆக்ரமிப்பிற்கு எதிர்ப்பு யுத்தம் நடைபெற்ற ஆரம்ப காலக் கட்டம். ஐக்கிய முன்னணிக்குள்ளும் மற்றும் ஜப்பானிய எதிர்ப்புத் தளங்களை நிலைநாட்டுவதிலும் பட்டாளி வர்க்கத்தின் சுதந்திரத்தையும் முன்கை எடுத்தலையும் சீன கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.

*(ஜூலை 1937-டிசம்பர் 1940)*

## 1. 1937-லிருந்து 1939 வரை சர்வதேசீய நிலைமை. இரண்டாவது உலக யுத்த ஆரம்பம்.

ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கு எதிர்ப்பான யுத்தம் சிக்கலானதொரு சர்வதேசிய நிலைமையில் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்றது.

1929-லிருந்து 1932 வரை நீடித்த உலக பொருளாதார நெருக்கடி நீடித்த காலத்திலும், ஆழத்திலும் மற்றும் அழிவு சக்தியிலும் முன் கண்டிராத அளவிலாக இருந்தது. 1933-இல் அது ஒரு பொருளாதார தேக்கமாக மாறிவிட்டது. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி நிலைமைகளின் கீழ் இந்தத் தேக்கம் கடந்த கால தேக்கங்களைப் போல் இல்லாமல் தொழில் செழிப்பை புகுத்துவதற்கு தவறி விட்டது.

பல்வேறு முதலாளித்துவ நாடுகளில் தொழில் உற்பத்தி 1929-இல் 100 என்று வைத்துக் கொண்டால், 1937-இல் இந்த உற்பத்திக்களை புள்ளி விபரங்கள் அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன்-இவை மூன்றும் ஜனநாயக நாடுகள் என்று அழைக்கப் பட்டன-முறையே 92.2, 82.8, மற்றும் 123.7 ஆக இருந்தன. அமெரிக்காவும் பிரான்சும் நெருக்கடிக்கு முந்தியகால மட்டத்திற்கு குறைந்து விட்டது. அதே சமயத்தில் பிரிட்டன் ஒரு அதிகரிப்பினைக் காட்டிற்று. ஜெர்மனி, ஜப்பான் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் தொழில் உற்பத்திக்கான இதே கால

கட்டத்திற்குரிய புள்ளி விவரங்கள்— இவை மூன்று ஆக்ரமிப்பு நாடுகள்-முறையே 117.2, 170.8 மற்றும் 99.6 ஆக இருந்தன. ஜெர்மனியும் ஜப்பானும் 1929-ஆம் ஆண்டு மட்டத்தை மிஞ்சி விட்டன. அதே சமயத்தில் இத்தாலி அந்த மட்டத்தை கிட்டத்தட்ட எட்டி இருந்தது.

1937-ஆம் ஆண்டின் இரண்டாவது பாதியில் மற்றொரு பொருளாதார நெருக்கடி வெடித்தது. 1929-இன் மட்டத்தோடு ஒப்பு நோக்கிப் பார்க்கும்போது அமெரிக்காவின் தொழில் உற்பத்தி 1938-இல் 72% ஆக இருந்தது; பிரிட்டனின் உற்பத்தி 112% ஆக இருந்தது; பிரான்ஸின் உற்பத்தி 70% ஆக இருந்தது. இத்தாலியின் உற்பத்தி 96 சதவீதம் ஆக இருந்தது; ஜப்பானின் உற்பத்தி 165 சதவீதம் ஆகவும் ஜெர்மனியின் உற்பத்தி 125 ஆகவும் இருந்தது. ஜெர்மனியத் தவிர எல்லா நாடுகளிலும் தொழில் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. ஜெர்மனியில் அது மேல் நோக்கிச் செல்லும் ஒரு போக்கினைப் பெற்றிருந்தது. ஆனால் ஜெர்மனி, அதனுடைய தேசிய பொருளாதாரத்தை ஒரு யுத்த அடிப்படையில் வைத்திருந்தமையால், ஒரு பொருளாதார நெருக்கடிக்குள் விழுவது நிச்சயமாக இருந்தது.

இந்த கால கட்டத்தில் நெருக்கடிகளே தெரியாமலிருந்த ஒரே நாடு சோவியத் யூனியன்தான். அதனுடைய இரண்டாவது 5 ஆண்டு திட்டத்தை தொழில் உற்பத்தி விலக்கு நிர்ணயிக்கப் பட்ட காலத்திற்கு முன்கூட்டியே பூர்த்தி செய்யப்பட்டது. 1937 இறுதி வாக்கில், சோவியத் தொழில் உற்பத்தி 1919ம் ஆண்டு மட்டத்தில் 428% எட்டிப் பிடித்திருந்தது. இதைவிட வேறு முக்கியமானது என்னவென்றால், தொழில் வளர்ச்சி சோஷலிசத்தல் மாபெரும் வெற்றிதான். 1937ல் சோஷலிஸ்ட் தொழில் உற்பத்தியில் 99.97 சதவீதம் ஆக இருந்தது-சோவியத் யூனியனில் சோஷலிச அமைப்பு தொழிலில் ஒரே அமைப்பாக ஆகிவிட்டது என்பதனை இது காட்டிக் கொண்டு இருந்தது. விவசாய கூட்டுமயமாக்குதலும் மகத்தானதொரு வெற்றியாக இருந்தது. 1937 வாக்கில், 18,500,000 விவசாய குடும்பங்கள் மொத்தத்தில் 93 சதவீத குடும்பங்கள், கூட்டுப் பண்ணைகளில் சேர்ந்திருந்தார்கள். இது விவசாய கூட்டுமயமாக்குதலின் பூர்த்தியைக் குறித்தது.

முதலாளித்துவ நாடுகளில் புதிய பொருளாதார நெருக்கடியின் வெடிப்பு, உலகச் சந்தை மூலப் பொருட்களின் மூலாதாரங்கள் செல்வாக்குப் பிரதேசங்கள் மற்றும் மண்டலங்கள் ஆகிய

வற்றினை ராணுவ நடவடிக்கைகளால் அவர்கள் புனர்ப் பங்கீடு செய்வதை வேகப்படுத்தின.

ஜப்பான் 1937ல் வட சீனாவின் மீதும் மத்திய சீனாவின் மீதும் மத்திய சீனாவின் மீதும் படையெடுத்தது. ஜெர்மனி 1937 ஆரம்பத்தில் ஆஸ்திரியாவை கைப்பற்றிக் கொண்டது; மற்றும் செக்கோஸ்லோவாக்கியா 1939ல் கைப்பற்றிக் கொண்டது. 1939 வசந்த காலத்தில், இத்தாலி அல்பேனியாவை கைப்பற்றிற்று. மற்றும் ஜெர்மனியோடு சேர்ந்து கொண்டு ஸ்பெயினில் ஒரு பாஸிச ஆட்சியை நிலைநாட்டுவதற்கு பிராங்கோவிற்கு உதவி செய்தது. இதைப் பின் தொடர்ந்து ஜெர்மனி போலந்தின்மீது படையெடுத்தது; பின்னர் பிரிட்டனாலும் பிரான்ஸாலும் ஜெர்மனியின் மீது யுத்தப் பிரகடனம் செய்யப்பட்டது. இந்த முறையில் இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமாயிற்று.

இது தேசிய விடுதலை இயக்கத்திற்கு எதிரான ஒரு யுத்தமாக இருந்தது, மற்றும் சோவியத் யூனியனுக்கு எதிரான ஒரு யுத்தமாகவும் இருந்தது: மேலும் பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகியவற்றின் ஏகாதிபத்திய நலன்களுக்கு எதிரான ஒரு யுத்தமாகவும் இருந்தது. இரண்டாவது உலக யுத்தம் வெடிப்பதற்கு முன்பு, ஜெர்மனி, இத்தாலி, மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் பல சந்தர்ப்பங்களில் பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவின் நலன்களின் மீது தாக்கியுள்ளன. ஆனால் இந்த மூன்று நாடுகளும் முன்பின் முரணற்ற முறையில் பின் வாங்கி உள்ளன. இம் மூன்று நாடுகளும் ஒரு தலையிடாக் கொள்கையை பின்பற்றியும் ஆக்கிரமிப்பாளர்களை கூட்டாக எதிர்ப்பதற்கும் அவர்களுக்கு எதிராக கூட்டுப் பாதுகாப்பை நிராகரிக்கும் ஒரு கொள்கையைப் பின்பற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு பல்வேறு வழிகளில் உதவி செய்யக் கூடிய அளவுக்குக்கூட இம் மூன்று நாடுகளும் சென்றன.

அமெரிக்க, பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவோடுதான் ஜெர்மன் ஏகபோக முதலாளிகள் ஜெர்மன் ராணுவ வெறித்தனத்தைப் புத்துயிர்ப் பெறச் செய்வதில் வெற்றிப் பெறச் செய்தார்கள். குறிப்பாக, அமெரிக்க அரசாங்கத் தலைவர்கள் ஜெர்மனியின் கன யந்திரப் தொழிலையும் யுத்தத் தொழிலையும் புனரமைக்கவும் உதவி செய்தார்கள். 1924க்கும் 1929-க்குமிடையே. அமெரிக்க ஏகபோக முதலாளிகள் ஜெர்மன் யுத்தத் தொழிலை அமைக்கும் நோக்குடன் ஜெர்மனிக்கு

20,000 மில்லியன் மார்க்குகளுக்கும் சமமான மொத்த மூல தனத்தை ஏற்றுமதி செய்தார்கள். அமெரிக்க நிதியுதவி ஜெர்மன் ராணுவ வெறித்தனத்தைப் புத்துயிர் பெறச் செய்வதற்கு ஒரு அடிப்படையை ஏற்படுத்திக் கொடுத்தது. ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்த பிறகு, பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு அரசாங்கங்கள் அவன்பால் திருப்திப்படுத்தும் ஒரு கொள்கையை அனுசரித்தார்கள். 1933-ல் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் ரோமாபுரியில் நான்கு அரசு ஒப்பந்தத்தை செய்துக் கொண்டன. 1934-ல் பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் மத்தியஸ்தத்தின் மூலம் போலந்து ஒரு பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தத்தை நாஜி ஜெர்மனி செய்துக் கொண்டது. பிரிட்டனும் பிரான்சும் ஜெர்மனியை மீண்டும் ஆயுத பாணியாக ஆக்குவதிலும் எத்தியோப்பாவை இத்தாலி ஆக்கிரமித்ததிலும் மற்றும் ஸ்பெயின் மீது நடத்திய ஜெர்மன் இத்தாலியின் ஆக்கிரமிப்பிலும் மறை முகமாக ஒத்துழைத்தார்கள். 1937-இல் ஆஸ்திரியா, செக்கோசுலோவோகியா மற்றும் டான்சிக் ஆகியவை நாஜி ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்டதைப் பிரிட்டன் ஏற்றுக் கொண்டது. மற்றும் பிரிட்டனையும் பிரான்சையும் கூட "பெர்லின் ரோம் அச்சில்" சேர்த்துக் கொள்ளும்படி கூட ஹிட்லரைக் கேட்டுக் கொண்டது. பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு ஆளும் வட்டாரங்கள் / கண்ணிருந்தும் குருடர்களாக இருந்தார்கள். அவர்கள் சோவியத் யூனியனுக்கு எதிராக கிழக்கு நோக்கி பாசிச ஆக்கிரமிப்பைத் திசை திருப்பி விடுவதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தார்கள்.

பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஐக்கிய நாடுகள் சீனாவில் அவர்களின் நலன்களின் மீது ஜப்பான் கைப்பற்றியிருந்ததால் அதிருப்தி அடைந்திருந்த போதிலும் சோவியத் யூனியனின் சோசலிச வெற்றியையும், ஐரோப்பாவில் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் எழுச்சியையும் மற்றும் ஆசியாவில் தேசிய விடுதலை இயக்கத்தின் எழுச்சியையும் கண்டு அவர்கள் பயந்திருந்தார்கள். எனவே, அவர்களுக்கு உலகப் புரட்சிக்கு எதிராக பாசிசம் சக்தி வாய்ந்ததொரு ஆயுதமாக இருந்தது. அவர்கள் "மதில் மேல் பூனை" போன்ற ஒரு கொள்கையை கையாண்டார்கள். யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் சளைக்கும் வரையிலும் போராடுவதைப் பார்த்துக் கொண்டு இருந்து விட்டு, வெளியே வந்து இரண்டு தரப்பினருக்கும் நிபந்தனைகளைக் கட்டளையிடலாம் என்றும்

நம்பிக்கைக் கொண்டிருந்தார்கள்.

ஆக்கிரமிப்பாளர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட எந்த யுத்தமும் சமாதானத்தை விரும்பும் எல்லா நாடுகளுக்கும் தெளிவான ஒரு அபாயமாக இருந்தது. பத்துக் கோடிக் கணக் கான மக்களைச் சம்பந்தப்படுத்தும் ஒரு யுத்தம் கடுமையான தொரு பயமுறுத்தலாக அமையும் என்பதும் மிகவும் விசேஷமாக சோவியத் யூனியனுக்கு அமையும் என்பதும் மிகவும் தெளிவாக இருந்தது.

நிகழ்ச்சிகளின் இப்படிப்பட்டதொரு அபாயகரமான திருப்பத்தை சோவியத் யூனியன் அலட்சியப்படுத்த முடியாது. அதனுடைய சமாதானக் கொள்கையைப் பின்பற்றிக் கொண் டிருக்கும் அதே சமயத்தில், சகல நாடுகளோடும் அதனுடைய வர்த்தக உறவுகளைக் கெட்டிப்படுத்திக் கொண்டும், அதனுடைய அண்டை நாடுகளோடு சமாதானப் பூர்வமான உறவுகளை நீடித்துக் கொண்டும் மற்றும் ஆக்கிரமிப்பை எதிர்த்து சுதந்திரத் திற்காகப் போராடிக் கொண்டிருக்கும் தேசங்களை ஆதரித்துக் கொண்டிருக்கும் அதே சமயத்தில், சோவியத் யூனியன் செஞ் சேனை மற்றும் கடற்படையின் போராடும் வலிமையை உயர்த்து வதற்கு கடுமையான முயற்சிகளையும் செய்தது; எந்த யுத்த ஆத்திர மூட்டல்காரர்களும் சோவியத் யூனியனைத் தாக்கத் துணியும் போது இரட்டிப்பு சக்தியோடு திருப்பித் தாக்குவதற்கு சோவியத் யூனியன் உறுதியாக இருந்தது.

பொருளாதார நெருக்கடியின் அழுத்தத்தின் கீழ் ஜெர்மன் இத்தாலிய மற்றும் ஜப்பானிய ஏகாதிபத்திய அரசுகள் இரண் டாவது உலக யுத்தத்தை துவக்கின. எனினும், பாசிச எதிர்ப்பு நேச சக்திகளுக்கிடையே, யுத்தத்தின் குறிக்கோள் சம்பந்த மாகவும் மற்றும் யுத்த பிற்கால உலகத்தில் அமைதியைப் பாது காக்கும் கடமை சம்பந்தமாகவும் தீவிரமான வேறுபாடுகள் இருந்தன.

சோவியத் யூனியனாலும் உலகில் இருந்த சகல சுதந்திரம் விரும்பும் மக்களாலும் பாதுகாக்கப் பட்ட அச்சு எதிர்ப்பு யுத்தத்தின் குறிக்கோள் ஜனநாயகத்தையும் மீண்டும் பெற்று பலப்படுத்துவதும், பாசிசத்தை ஒழித்துக் கட்டுவதையும், அரசு நாடுகளின் தரப்பில் புதுப்பிக்கப்பட்ட ஆக்கிரமிப்பினை நடத்தும் எந்த சாத்தியப்பாட்டையும் ஒழித்துக் கட்டுவது மற்றும் சகல நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பைப் பெறுவது ஆகியவன வாக இருந்தது. ஆனால் அதற்கு மாறாக, பிரிட்டிஷ், பிரெஞ்சு

மற்றும் அமெரிக்க ஏகாதிபத்திய அரசுகளால் பார்க்கப் பட்டது போல், ஜெர்மனியையும் உலகச் சந்தையில் இருந்து விலக்கி விட்டு உலகத்தின் மீது அவர்களது சொந்த ஆதிக்கத்தை நீடித் திருக்கச் செய்வதாக இருந்தது. யுத்தம் பாசிசத்தை நசுக்கிவிடும். பாசிஸ்ட் அரசுகளால் அடிமைப்படுத்தப்பட்ட நாடுகளை விடுதலை செய்யும்; மற்றும் இத்தகைய நாடுகளில் ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான நிலைமையை இந்த முறையில் ஏற்பாடு செய்யும் என்பது அவர்களுக்கு ஒரு பொழுதுமே ஏற்படவில்லை.

### 2. எதிர்ப்புப் போராட்டத்தின் தேசிய யுத்தம் வெடித்தப் பிறகு ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணி அமைக்கப் படுதல். எதிர்ப்பு யுத்தத்தில் சீனாவிற்கு சோவியத் யூனியனின் ஆதரவு.

1937 ஜூலை 7-ல், ஜப்பானிய பாசிசப் படைகள் பீகிங் கிற்கு தென் மேற்கே 10 கிலோ மீட்டர் தொலைவில் இருந்து லூகோசியாவோவின் மீது (மார்கோ-போலோ பாலம்) ஒரு தாக்குதலைத் தொடுத்தது. வளர்ந்து கொண்டிருந்த ஜப்பானிய எதிர்ப்பு இயக்கத்தின் செல்வாக்கின் கீழ் ஸ்தல சீனப் படைப் பிரிவு கோமின்டாங்கின் நோக்கங்களையும் மீறி உறுதியான எதிர்ப்பினைக் கொடுத்தது. ஆகஸ்டு 13-ல் மத்திய சீனா மீது படையெடுப்பதற்கு ஒரு தயாரிப்பு நடவடிக்கையாக ஜப்பானிய துருப்புகள் ஷாங்காயைத் தாக்கின. அங்கிருந்து சீனத் துருப்புக் கள் திருப்பித் தாக்கின. இந்த முறையில் ஜப்பானிய ஆக்கிர மிப்புக்கு சீனாவின் எதிர்ப்பு யுத்தம் ஆரம்பமாயிற்று.

அவர்களது உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு முரண்பாடுகள் தீவிரமடைந்து இருந்தமையால், ஜப்பானிய ஏகாதிபத்திய வாதிகள் பெரும் அளவிலான, வெறித்தனமான வெறிச் செயல் வாத யுத்தத்தை அதிகபட்ச காட்டுமிராண்டித் தனமான ஒரு ஏகாதிபத்திய யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டார்கள். ஜப்பானிய பாசிச துருப்புகளால் புரியப்பட்ட படுகொலைகள், கற்பழிப்புகள், கொள்ளை, தீ வைத்தல், அழிப்புகள் மற்றும் இதர அக்கிரமங் கள் மனித வரலாற்றின் மீது அழிக்க முடியாத ஒரு கறையை விட்டு வைத்துள்ளனர்.

எதிரி கண்மூடித்தனமாக மக்களைக் கொன்று குவித்தான். நான்கின் வீழ்ச்சிக்குப் பிறகு நடைபெற்ற படுகொலையில்-இப்

படுகொலை ஒரு மாதத்திற்கும் அதிகமாகவே தொடர்ந்து நடைபெற்றது—3,00,000 அதிகமான பாதுகாப்பற்ற குடிமக்கள் கொல்லப்பட்டார்கள். தங்களது ஆயுதங்களைக் கீழே போட்டு விட்ட பெருவாரியான சிப்பாய்கள் கோஷ்டி கோஷ்டியாக நிறுத்தப்பட்டு யந்திரத் துப்பாக்கிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் அல்லது உயிரோடு எரிக்கப்பட்டார்கள்.

கற்பழிப்புகள் இன்னும் மிக அதிகமாக பரிதாபகரமாக கூட இருந்தன. இளம் வயது பெண்களோ அல்லது வயதான மாதர்களோ, ஸ்தீரிகளோ தப்பிக்க முடியவில்லை. பல சந்தர்ப்பங்களில் கற்பழிப்பைப் பின் தொடர்ந்து அங்கஹீனமாக்குதல், கொலை மற்றும் விவரிக்கப்பட முடியாத மிருகத்தனமான செயல்களும் நடைப்பெற்றன.

இத்தகைய அக்கிரமங்களின் மூலம், எதிரி, சீன மக்களை அடிபணியச் செய்ய நினைத்தான் என்பது தெளிவு. மற்றும் ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்கு அவர்களுக்கு இருந்த உறுதியை உடைத்து எறியலாம் என்று எதிரி நினைத்தான் என்பதும் தெளிவு.

ஜப்பானிய ஆக்ரமிப்பாளர்கள், அவர்களது கொள்ளைக்கும் அழிவு வேலைகளுக்கும் எந்த விதமான வரம்பையும் வைத்துக் கொள்ளவில்லை. அவர்கள் சென்ற இடங்களில் எல்லாம் வாகனங்களையும், கால் நடைகளையும், உணவுப் பொருட்களையும், துணிமணிகளையும் கொள்ளையடித்தார்கள். மரச் சாமான்கள், கதவுகள், ஜன்னல் கோப்புகள் முதலியன விறகாகப் பயன்படுத்தப்பட்டன. எண்ணற்ற வீடுகள் எரிக்கப்பட்டன. சீனாவின் தொழிலையும், வியாபாரத்தையும் அழிப்பதற்கு முயற்சித்ததில் எதிரி சாத்தியமான ஒவ்வொரு ஸ்தானத்தையும் பயன்படுத்தினார்கள். சீனா தேசிய தொழில் மற்றும் வர்த்தக கேந்திர மாட கியாங்சு மற்றும் சிக்கியாங் மிக மிக அதிகமாக அவதிக்குள்ளாயின. 1937 ஆகஸ்ட் 13-லிருந்து நவம்பர் வரையிலும் ஷாங்காயில் ஏற்பட்ட மொத்த நஷ்டங்கள் சீன தேசிய நாணயத்தில் 3,000 மில்லியன் டாலர்களுக்கும் (யுத்த முற்கால தேசிய நாணயம்) அதிகமாகயிருந்தன. இதரப் பல நகரங்கள் கிட்டத்தட்ட இதே அளவிற்கு மோசமாக நஷ்டமடைந்தன.

சீன மக்களின் செல்வம், அவை நவீன தொழிற்சாலைகளாக இருந்தாலும் சரி அல்லது விவசாயிகளின் குடிசைகளானாலும் சரி, மிக மிக படு பயங்கரமான அழிவிற்கும் கொள்ளைக்கும் உள்ளாக்கப்பட்டன.

இந்தக் காட்டுமிராண்டித் தனமான கொள்ளை எல்லாப்

பகுதிகளிலும் பலமானதொரு ஜப்பானிய எதிர்ப்பு போராட்டத்திற்குள் குதிக்கச் செய்தது. வட சீனாவில் ஜப்பானியர்களின் முன்னேறிய தாக்குதலுக்குப் பிறகு உடனடியாகவே, ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்கும் தேசீய மீட்சிக்காகவும் நடைபெற்ற இயக்கம் மீண்டும் முன்னெப்போவதைக் காட்டிலும் மீண்டும் பெரியதொரு அலைவில் ஆரம்பிக்கப்பட்டமி. எதிர்ப்பு யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு மக்கள் தங்களால் இயன்றது அனைத்தையும் கொடுத்தார்கள். தேசத்தைக் காப்பாற்றுவதற்கான ஸ்தாபனங்கள் சீனா முழுவதிலும் உதயமாயின. சீன மக்கள் அனைவரும் உறுதியான எதிர்ப்பைக் கொடுப்பதற்காகவும், சகல அரசியல் உறுப்புகளிலும் தீவிரமான சீர்திருத்திற்காகவும் மற்றும் ஜன நாயகத்தை அமல்படுத்துவதற்காகவும் நின்றார்கள். அவர்சள் எந்த ஊசலாட்டத்தையும் சமரசத்தையும் எதிர்த்தார்கள். கோமிங்டாங் ராணுவத்தின் பல அதிகாரிகளும் பல ஸ்தல கோமிங்டாங் கிளைகளும் கூட எதிர்ப்புப் போராட்டத்திற்கு அறை கூவின. இந்த முறையில் ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்கா■வும் தேசிய மீட்சிக்கான இயக்கம் முன்னெப்போதைக் காட்டிலும் வேகத்தை அடைந்தது.

1937 ஜுலை 15-ல் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கோமிங்டாங்கிற்குமிடையே ஒத்துழைப்பிற்கு அறைகூவி ஒரு அறிக்கையை விடுத்தது. அந்த அறிக்கையை விடுத்தது. அந்த அறிக்கை பின் வருமாறு கூறிற்று : ''இன்றைக்கு சீனாவுக்கு தேவைப்படுவது மக்களின் மூன்று கோட்பாடுகளாகும். இந்த மூன்று கோட்பாடுகளை முழுமையாக வெற்றிப் பெற செய்வதற்கு, போராடுவதற்கு நம்முடைய கட்சி வாக்குறுதி அளிக்கிறது.'' கோமிங்டாங்கின் மத்திய நிர்வாக கமிட்டியின் மூன்றாவது விரிவடைந்த கூட்டத்திற்கு அனுப்பப்பட்ட ஒரு தந்தியில் கொடுக்கப்பட்ட 4 வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதற்கு கட்சியை தயார் நிலையையும் அறிக்கை மீண்டும் உறுதிப்படுத்திற்று. அப்படி செய்வதில், கட்சி தேசிய இலட்சியத்திற்கு அதனுடைய தன்னலமற்ற அர்ப்பணிப்பைக் காட்டிற்று.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினால் செய்யப்பட்ட முயற்சிகள், மக்களின் கோரிக்கையை நிர்ப்பந்தத்தோடு பிணைந்து நின்று இறுதியில் பலன் அளித்தது. வடமேற்கு சீனாவிலிருந்து செஞ்சேனை பிரதானப் படைகள் தேசியப் புரட்சி ராணுவத்தின் 8-வது வழிச் சேனையாக மீண்டும் புனரமைக்கப்படும் என்று

கோமிங்டாங் அரசாங்கம் 1937 ஆகஸ்ட் 22-இல் அறிவித்தது. (பின்னர், தெற்கு மாகாணங்களில் செஞ்சேனையினால் விட்டுச் செல்லப்பட்டிருந்த கொரில்லாப் படைப் பிரிவுகள் புதிய 4-வது ராணுவமாக புனரமைக்கப்பட்டன) செப்டம்பர் 22-இலும், 23-இலும், ஜூலையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினால் வெளியிடப்பட்ட அறிக்கையை கோமிங்டாங் அதிகாரப் பூர்வமாக பிரசுரித்தது; மற்றும் சியாங்கே-ஷேக். ஒரு பகிரங்க அறிக்கையில், கட்சியில் சட்டப் பூர்வமான அந்தஸ்தை அங்கீகரிக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டான். இந்த முறையில் கட்சியினால் துவக்கி வைக்கப்பட்ட ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணி — அளவில் பரவலானதும் தன்மையில் சிக்கலானதாகவும் இருந்த ஒரு ஐக்கிய முன்னணி; இம் முன்னணியில் தொழிலாளிகள், விவசாயிகள், நகர்ப்புறக் குட்டி முதலாளிகள், தேசிய முதலாளிகள் மற்றும் பிரிட்டனுக்கும் அமெரிக்காவிற்கும் ஆதரவாக இருந்த பெரும் முதலாளிகளும் கூட சேர்ந்திருந்தார்கள்— ஸ்தாபிக்கப்பட்டது.

எதிர்ப்பு யுத்தம் நடைபெற்ற காலம் முழுவதிலும், சீனா சோவியத் யூனியனிடம் இருந்து மகத்தான ஆதரவைப் பெற்றது.

யுத்தத்தில் சீனாவிற்கு உதவக்கூடிய மிகமிக நம்பத் தகுந்த மற்றும் சக்தி வாய்ந்த நாடாக மாபெரும் சோவியத் யூனியன் வழங்கிற்று. அந்த நாடு சீன மக்களின் இன்ப துன்பங்களோடு எப்பொழுதுமே ஆழமாக அக்கறைக் கொண்டிருந்தது; சகல ஒதுக்கப்பட்ட தேசங்களுக்கும் சகல புரட்சிகரமான யுத்தங்களுக்கும் ஆதரவு கொடுப்பது அவர்களுடைய கடமை என்று சோவியத் யூனியன் கருதிற்று. 1937 ஆகஸ்ட் 21-இல் சோவியத் யூனியன் சீனாவோடு ஒரு அனக்கிரமிப்பு ஒப்பந்தத்தை செய்து கொண்டது. இரண்டு நாடுகளுக்குமிடையே உள்ள உறவுகளில் அரசியல் முடிவுகளை நிறைவேற்றுவதற்கு யுத்தம் தவிர்க்கப்பட வேண்டும் என்றும், மற்றும் மூன்றாவது ஒரு அரசினால் சீனா தாக்கப்பட நேரிட்டால், சோவியத் யூனியன் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ, ஆக்ரமிப்பாளனுக்கு எவ்வித உதவியும் கொடுப்பதற்கு மறுத்து விடுமென்று பிரகடனம் செய்தது.

இந்த உடன்படிக்கை சீன மக்களுக்கு தார்மீக ஆதரவினைக் கொடுத்தது; மற்றும் ஆக்ரமிப்பாளர்களுக்கு ஒரு அடியையும் கொடுத்தது. சோவியத் யூனியன் பொருள் ஆதாய உதவியை

யும் கொடுத்தது. ஏராளமான ஆயுதங்கள், பெட்ரோல் மற்றும் லாரிகள் வடமேற்கு பாதை வழியாக சீனாவிற்கு அனுப்பப் பட்டன. சோவியத் ஆகாயப் படை வீரர்கள் சீனாவின் பாது காப்பில் பங்கெடுத்தார்கள்.

சீன மக்களுக்கு, மிகவும் நெருக்கடியாக இருந்த ஒருகாலத்தில் கொடுக்கப்பட்ட இந்த மாபெரும் நட்புறவு ரீதியான உதவி, சீன தேசிய விடுதலையும் லட்சியத்திற்கு மதிப்பிட முடியாத தொரு காணிக்கையாக அமைந்தது.

யுத்தத்தின் ஆரம்பத்தில் மேற்கத்திய முதலாளித்துவ நாடுகள் எதுவும் சீனாவிற்கு எந்தவிதமான உதவியையும் கொடுக்கவில்லை. லுக்கோ சியாவோ சம்பவத்துக்கு முன்பு தாக்குதலை எதிர்த்துப் போராடுவதற்கு சீனாவின் தேசிய பாதுகாப்பு சக்திகள் சக்தியற்றதையாக இருந்தது என்றும், ஒரு சில மாதங்களுக்குள் சீனா முழுவதையும் ஜப்பான் கைப்பற்றி விடுமென்றும் மேற்கத்திய பத்திரிகைகள் பலமாக அடித்துக் கூறின. மேற்கத்திய பூர்ஷ்வாக்கின் ஆளும் வட்டாரங்கள், "பொறுத்திருந்து பார்ப்போம்" என்றதொரு போக்கினை கடைபிடித்தார்கள். ஜப்பான் அதனுடையத் தாக்குதலைத் தொடுத்த போது, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஷாங்காயி லிருந்து வாபஸ் பெற்றுக் கொண்டது. அப்பொழுது ஷாங்காய் மத்திய சீனாவில் அந்த மூன்று நாடுகளில் ஆதிக்கக் கேந்திரமாக இருந்தது; தெற்கு சீனாவில் பிரிட்டனில் முழுச்க முழுக்க அதனுடைய ஆட்சியின் கீழிருந்த ஒரு தளமான காண்ட்டனி லிருந்தும் கூட பிரிட்டன் வாபஸ் வாங்கிக் கொண்டது. மற்றும் பிரான்ஸ் ஹைனான் தீவிலிருந்து வாபஸ் வாங்கிக் கொண்டது.

சீன-ஜப்பான் யுத்தத்தில், சீனாவில் தேசிய விடுதலை இயக்கத்தின் தீப்பிழம்புகள் அணைந்துவிடும் என்றும் அதே சமயத்தில் ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் பலஹீனப்பட்டு விடுவார்கள் என்ற நம்பிக்கையில், ஆங்கிலோ — அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், "பாதுகாப்பான ஒரு தூரத்திலிருந்து புலிகள் சண்டையிடுவதை கவனித்துக் கொண்டிருக்கும்" அவர் களது கொள்கைத் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தார்கள். பிரிட்டன் மற்றும் குறிப்பாக அமெரிக்காவும் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் வெடித்த பிறகும் கூட ஜப்பானுக்கும் ஏராளமான அளவில் யுத்தத் தளவாடங்களைத் தொடர்ந்து சப்ளைச் செய்து கொண்டிருந்தார்கள். சீனாவுக்கு எதிராக ஜப்பானால் பயன்

படுத்தப்பட்ட பெரும்பாலான பெட்ரோல், விமானங்கள், இரும்பு, உருக்கு மற்றும் இதர யுத்தத் தளவாடங்கள் அமெரிக்காவினால் சப்ளைச் செய்யப்பட்டன. அமெரிக்காவில் அதிகாரப் பூர்வமான புள்ளி விவரங்களின்படி, அமெரிக்கா ஜப்பானோடு செய்த வியாபாரத்தில், யுத்த சாதனங்கள் 1937-இல் அமெரிக்கா ஜப்பானுக்கு செய்த ஏற்றுமதிகளில் 58 சதவீதம் ஆக இருந்தது. 1939-இல் 81 சதவீதம் ஆக இருந்தது.

சீனாவுக்கு எதிராக நடத்தப்பட்ட ஜப்பானிய ஆக்ரமிப் யுத்தம் பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க நலன்களில் கிழக்கில் பாதித் தமையால், அது இயல்பாகவே ஒரு பிளவை உண்டாக்கிற்று. ஆனால் சீன மக்களின் பலத்தில் வளர்ச்சியைத் தடுக்கும் பொருட்டு, யுத்தத்தை சோவியத் யூனியனுக்கு எதிராக திருப்பும் பொருட்டும் மற்றும் ஐரோப்பாவில் ஹிட்லரால் உருவாக்கப் பட்ட பதட்ட நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டும், ஆங்கிலோ அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஜப்பானோடு அவர் களுக்கு இருந்த மோதலைக் குறைப்பதற்கு ஆவலோடு இருந்தார் கள். ஜப்பானிய ஆக்ரமிப்பினை ஊக்குவிக்கும் அளவிற்குக் கூட அவர்கள் சென்றார்கள். 1941-இல் பசிபிக் யுத்தம் வெடிப்பதற்கு முன்பு, அவர்கள் ஜப்பானோடு ஒரு சமரசம் செய்து கொள் வதற்கு கடுமையாக முயற்சித்தார்கள். அல்லது சீனாவும் ஜப்பானும் யுத்தத்தில் சலித்துப் போய்விடும் என்ற நம்பிக்கை யில் திரும்பி உட்கார்ந்து கொண்டார்கள்.

அப்பொழுது பிரிட்டாலும் அமெரிக்காவாலும் பின்பற்றிய "தலையிடாக்" கொள்கையின் உண்மையானத் தன்மை இப்படிப்பட்டதாக இருந்தது.

**3. ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணிக்குள் சுயேச்சைத் தன்மை மற்றும் முன்கை எடுத்தல் சம்பந்த மாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை. எதிரியின் படை வரிசைகளுக்குப் பின்னால் கட்சி கொரில்லா யுத்தத்தை நடத்தி ஜப்பானிய எதிர்ப்பு தளங்களை நிலை நாட்டுகிறது.**

ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் ஆரம்பமானதிலிருந்தே 2 எதிரிடையான எதிரும் புதிருமான கொள்கைகள் தோன்றின. ஒரு கொள்கை கோமிங்டாங்கினால் பிரதிநிதித்துவப்படுத்தப்

பட்ட பெரு நிலச் சுவான்தார்களாலும் பெரும் முதலாளி களாலும் பின்பற்றப் பட்டக் கொள்கை; மற்றது, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட தொழிலாளி வர்க்கம் மற்றும் பரந்துபட்ட வெகு ஜனங்களால் பின்பற்றப்பட்டக் கொள்கை.

ஜப்பானிய ஆக்ரமிப்பு சீனாவில் பிரிட்டிஷ் அமெரிக்க ஏகாதிபத்திய நலன்களையும் மற்றும் "நான்கு பெரிய குடும்பங்களால்" பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட பெரும் நிலச்சுவான் தார்கள், மற்றும் பெரும் முதலாளிகள் ஆகியோர் நலன்களையும் கடுமையாக ஜப்பானிய ஆக்ரமிப்பு பாதித்தது என்ற விவரத்தினாலும் பொது ஜன நிர்ப்பந்தத்தினாலும் கோமிங்டாங் எதிர்ப்பைக் கொடுக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தது.

ஜப்பானிய ஆக்ரமிப்பிற்கு வேண்டா வெறுப்பாக அவனது எதிர்ப்பை தெரிவித்தது., 1937-ஜூலை 17-ந்தேதி அன்றுதான் சியாங்காய்-ஷேக் லூசானில் ஒரு அறிக்கை விடுத்தான். எனினும் யுத்தத்தின்பால் அவனது போக்கில் அவன் தொடர்ந்து ஊசலாடிக் கொண்டிருந்தான்.

லுக்கோச்சியாவோ சம்பவத்திற்குப் பிறகு உடனடியாக கோமிண்டாங் அரசாங்கம் சரணாகதி அடைவதற்குத் தயாராகி ஜப்பானோடு பேச்சு வார்த்தைகள் நடத்த பிரேரேபித்தது. சீனத் துருப்புகளும் ஜப்பானியத் துருப்புகளும் லுக்கோச்சியாவுக்கு அருகில் சீனப் பிராந்தியத்தில், வரையறுக்கப் பட்டதொரு ஏரியாவிலிருந்து ஏககாலத்தில் வாபஸ் ஆகவேண்டும் என்ற நிபந்தனைகளைப் பிரரேபித்தது. ஆனால் இந்த பிரேரேரனை ஜப்பானிய அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டது. பிறகு வடசீனாவிலிருந்த ஜப்பானிய பிரதிநிதிகளாலும் ஸ்தல அதிகாரிகளின் பிரதிநிதிகளாலும் உருவாக்கப்பட்டிருந்த அமைதியான உடன்பாட்டிற்கான திட்டம் என்று சொல்லப்பட்ட திட்டத்தைக் கோமின்டாங் அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. பிரதான நிபந்தனைகள் பின்வருமாறு இருந்தன:- பீகிங், டியன்ட்சின், லூக்கோச்சியாவொ மற்றும் யுங்டிங் நதிக்குக் கிழக்கே இருந்த பிரதேசங்களிலிருந்து சீனத் துருப்புகள் வாபஸ் வாங்குதல் மற்றும் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே கம்யூனிஸ்ட் எதிர்ப்பு அணி ஒன்றினைச் செய்து கொள்ளுதல், இத்தகைய பேச்சு வார்த்தைகள் பெரும் அளவிலானதொரு முன்னேறித் தாக்குதலை நடத்துவதற்கு, அதனுடைய துருப்புகளைக் கொண்டு வருவதற்கு தேவையான நேரத்தை ஜப்பானுக்குக்

கொடுத்தது.

ஆகஸ்ட் 13-ஆம் தேதியன்று சியாங்கே நகரத்தை ஜப்பானியத் துருப்புகள் தாக்கும் வரையிலும் மற்றும் தென் கிழக்கு சீனாவின் மீது 'நான்கு பெரிய குடும்பங்களின்' ஆட்சி ஆட்ட ஆரம்பிக்கும் வரையிலும் எதிர்ப்பு யுத்தத்தை நடத்துவதைத் தவிர கோமின்டாங்கிற்கு வேறு வழியே இல்லை.

நான்கிங் வீழ்ச்சிக்கு முன்பு கோமின்டாங் அரசாங்கம் ஜப்பானோடு திரும்ப திரும்ப நடத்திய பேச்சு வார்த்தைகளில் சரணாகதி அடைவதற்கு தயாராக இருந்தது; எல்லோருக்கும் தெரிந்திருந்தது போல் இத்தகைய பேச்சு வார்த்தைகள் ஒன்றில் சீனாவிற்கான பாஸிஸ ஜெர்மன் தூதுவர் நடுவராக செயல் பட்டார். அவர் மூலம் ஜப்பானால் முன் வைக்கப்பட்ட நிபந்தனைகள், வடகிழக்குச் சீனாவில் ஜப்பானால் நிலைநாட்டப் பட்டிருந்த பொம்மை அரசான மஞ்சுகுவோவை சீனா அங்கீகரித்தல், உள் மங்கோலியாவின் சுதந்திரத்தை அங்கீரித்தல், சீன ஜப்பானிய "பொருளாதார ஒத்துழைப்பை" அங்கீகரித்தல், பொதுவுடமைக்கு எதிராக சீன ஜப்பானியக் கூட்டுப் பாதுகாப்பினை அங்கீகரித்தல், சீனாவின் ஜப்பானிய எதிர்ப்பு இயக்கத்தைத் தடைசெய்தல், மற்றும் வட சீனாவின் எந்த துருப்புகளும் வைத்திருக்கக் கூடாது என்ற கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளுதல் ஆகியவை சேர்க்கப்பட்டிருந்தன. இத்தகைய நிபந்தனைகளைச் சீனாவை அடிமைப்படுத்துவதை தெளிவாக அர்த்தம் படுத்திய போதிலும் பேச்சு வார்த்தைக்கு அடிப்படையாக அவற்றை ஏற்றுக் கொள்வதற்கு கோமிண்டாங் அதனுடைய தயார் நிலையைத் தெரிவித்தது. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சீனா முழுவதிலும் உள்ள மக்கள் ஜப்பானிய படையெடுப்பை எதிர்த்துப் போராடுவதற்கு வளைந்து கொண்டிருந்த உறுதி ஜப்பான் மற்றும் கோமிண்டாங்கின் சூழ்ச்சிகளைத் தவிடு பொடியாக்கின.

ஜப்பானின்பால் கோமிண்டாங்கின் கொள்கை ஒரு சமரசக் கொள்கையாகவும் சரணாகதிக் கொள்கையாகவும் இருந்தமையால் அது மக்களின் முழுமையான யுத்தத்திற்கு எதிராக இயல்பாகவே இருந்தது; ஆனால் அரசாங்கத்தினால் மாத்திரம் நடத்தப்பட்டதொரு பகுதி யுத்தத்தை மட்டும் நம்பியிருந்தது. தேசிய மீட்சி இயக்கம் அதன் கட்டுப்பாட்டிலிருந்து போய்விடும் என்று பயந்து கொண்டு, அந்த இயக்கத்தைக் மட்டுப்படுத்து

வதற்கு கோமிங்டாங் ஜன்னி வேகத்தில் முயற்சித்தது; மற்றும் ஒவ்வொரு விஷயத்தையும் தன் கரங்களுக்குள் எடுத்துக் கொள்ளவும் முயற்சித்தது. எதிர்ப்பு போருக்கு ஆதரவாக அதனுடைய சொந்த சங்கங்களை கோமின்டாங் அரசாங்கம் அமைத்த போதிலும், உண்மையான நோக்கம் இயக்கத்தை ஊக்குவதைக் காட்டிலும் குறுக்குவதாகவே இருந்தது. ஒன்று படுத்தப்பட்ட தலைமை என்ற நொண்டிச் சாக்கின் பேரில் தேசிய மீட்சிக்கான பல மக்கள் ஸ்தாபனங்கள் தடை செய்யப் பட்டு ஜப்பானிய எதிர்ப்பு இயக்கத்தில் பங்கெடுத்தவர்கள் சட்ட பூர்வமான தந்திரோபாய நடவடிக்கைகளால் துன்புறுத்தவும் பட்டனர்.

இந்த மக்கள் விரோதக் கொள்கையின் விளைவாக கோமின் டாங் துருப்புகள் சகல முனைகளிலும் தோல்வியை சந்தித்தன.

லூக்கோச்சியாவோ சம்பவம் நடைபெற்ற ஒரு மாதத்திற் குள் கோமின்டாங் பீக்கிங்கையும் டியன்சின்னையும் விட்டு விட்டது. மற்றும் அதற்குப் பிறகு சீக்சிரத்திலேயே சகார் மற்றும் சுய்யுவான் மாகாணங்களையும் விட்டு விட்டது. சியாங்க் 1937 நவம்பரில் விழுந்தது. நான்கிங் டிஸம்பரில் விழுந்தது. 1938 மார்ச் மாத வாக்கில், யுத்தம் வெடித்த ஆறு மாதத்திற்கு பிறகு மட்டுமே, சான்சியில் பெங்லிங்ட்ரு வரையிலும், ஹோனா னில் குவிட்டே வரையிலும் மற்றும் சாங்டுங்கில் டிகாவோகவாங் வரையிலும் எதிரி போய் சேர்ந்திருந்தான். 1938 ஜூனில் யாங்ட்சி நதியின் மீதிருந்த மட்டாங் கோட்டையை விட்டு விட்டது; இந்த முறையில் வடக்கிலிருந்து, கிழக்கிலிருந்து எதிரியை தாக்குவதற்கு வூஹானை திறந்து வைத்தது. ஜப்பானியத் துருப்புகளின் தொடர்ச்சியான தாக்குதலுக்கு எதிரே கோமின்டாங் துருப்புகள் ஒன்றன் பின் ஒன்றாக பல்டி அடித்தன. 1938 அக்டோபரில், காண்டனும் வூகானும் விழுந்தன. இந்த முறையில் ஹியாங்சுக், சுபன்வே ஹோனான். ஹிலாங்கி, குவான்டுங், மற்றும் ஹூப்பே ஆகிய மாகாணங்கள் அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக விழுந்தன. சுருக்கமாகச் சொன்னால் சீனமக்களை எதிர்க்கும் அதே சமயத்தில் ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கு பகுதி எதிர்ப்பினைக் கொடுக்கும் பாதையைப் பின்பற்றிக் கொண்டிருந்த கோமின்டாங் துருப்புகள் சுருக்க மான பதினைந்து மாத இடைவெளிக்குள் பீகிங், டியென்ட்சிங்- ஷியாங்கே, ஹான்டன் மற்றும் வூகாங் ஆகியவற்றிலிருந்து செய்சுவான வரையிலும் வாபஸ் வாங்கிக் கொண்டன.

மறுபுறத்தில், லூக்கோச்சியாவோ சம்பவம் நடைபெற்ற அதேநாளில் முழுமையான எதிர்ப்பினைக் கொடுக்கும்படி தேசம் முழுவதையும் ஒரு தந்தியின் மூலம் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவி அழைத்தது.

1937 ஜூலை 23-இல், "ஜப்பானிய படையெடுப்பினை எதிர்த்துப்போராடுவதின் கொள்கைகள், நடவடிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புகள்" என்ற தலைப்பில் தோழர் மாசே-துங் ஒரு கட்டுரையைப்பிரசுரித்தார், அக்கட்டுரையில் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்திற்கு இரண்டு கொள்கைகள், இருவகை நடவடிக்கைகள் மற்றும் இரண்டு எதிர்பார்ப்புகள் இருந்தன. கம்யூனிஸ்ட் கட்சியினால் கடைபிடிக்கப்பட்ட கொள்கை உறுதியான எதிர்ப்பை கொடுக்கும் ஒரு கொள்கையாக இருந்தது; மற்றும் இந்த லட்சியத்தை ஈடேறச் செய்வதற்கான நடவடிக்கைகளில் வெகு ஜனங்களின்மீது சார்ந்து நிற்பது அடங்கியிருந்தது. இதன் விளைவாக எதிர்பார்ப்பது தேசிய விடுதலையாக இருக்கும். மறுபுறத்தில், கோமிங்டாங்கினால் கடைபிடிக்கப்பட்ட கொள்கை சமரசம் மற்றும் சரணாகதியினைக் கொண்ட ஒரு கொள்கையாக இருந்தது. மற்றும் அது பிரயோகித்த நடவடிக்கைகள் மக்களை ஒடுக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது, இதன் விளைவாக, எதிர்பார்ப்பது ஒரு தோல்வியாக இருக்கும். இந்த வேறுபாட்டிலிருந்து, ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கோமிங்டாங்கிற்கும் இடையேயிருந்த கொள்கை போராட்டம் எழுந்தது.

ஆகஸ்ட் 25-இல், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியின் அரசியல் குழு, வடக்கு ஷென்சியில் லோசுவானில் ஒரு விரிவடைந்த கூட்டத்தை நடத்திற்று. இந்த கூட்டத்தில், ஜப்பானுக்கு எதிர்ப்பினைக் கொடுக்கும் பிரச்சினையின் மீது கம்யூனிஸ்ட் கட்சிக்கும், கோமிங்டாங்கிற்கும் இடையே இருந்த வேறுபாடு மோதலும் யுத்தத்தை வெல்வதின் வழிமுறையைச் சுற்றிலும் மையமாகக் கொண்டிருந்தது என்று சுட்டிக் காட்டப்பட்டது. எனவே, யார் தலைமை தாங்கவேண்டும் என்ற பிரச்சினை விசேஷ முக்கியத்துவத்தைப் பெற்றது. இந்தக் கூட்டம் 10 அம்சம் கொண்ட தேசிய மீட்சி திட்டத்தைப்[1] பெற்றுக் கொண்டது; இந்தத் திட்டம் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு நாடு முழுவதிலும் மக்களுக்கு கம்யூனிஸ்ட் கட்சி தலைமையை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. மற்றும் கோமிங்டாங்கின் மக்கள்

விரோதக் கொள்கையை எதிர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. இத்திட்டத்தினை முழுமையாக அமுல் நடத்துவதினால் மட்டுமே தாய்நாட்டை பாதுகாக்கும் குறிக்கோளும் மற்றும் எதிரியை தோற்கடிக்கும் குறிக்கோளும் சித்தி பெறச் செய்ய முடியும் என்பது கட்சியின் உறுதியான கொள்கை பிடிப்பாக இருந்தது.

அதனுடைய கொள்கையை முழுமையாக அமுல் நடத்தும் பொருட்டும் மற்றும் தோன்றியிருந்த அல்லது தோன்றக்கூடிய எந்தவிதமான சரணாகதி போக்குகளும் தடுத்து நிறுத்தும் பொருட்டும் அல்லது சரிப்படுத்தும் பொருட்டும், அரசாங்கத்தில் பங்கெடுக்கும் பிரச்சினை சம்பந்தமாக மத்தியகமிட்டி செப்டம்பர் 25-ல் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிற்று. அப்பொழுது பதவியிலிருந்த அரசாங்கம் ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியின் ஒரு அரசாங்கம் அல்ல என்றும், ஆனால் அது இன்னும் கோமின்டாங் ஒரு கட்சி சர்வாதிகாரத்தின் கீழ் இருந்தது என்றும் அத் தீர்மானம் சுட்டிக் காட்டிற்று. எனவே, அந்த அரசாங்கத்தில் எந்த கம்யூனிஸ்டுகளும் பங்கெடுக்க முடியாது. ஏனெனில் இப்படிப்பட்டதொரு நடவடிக்கை கட்சியின் நிலைபாட்டினை இருட்டடிப்பு செய்து கோமின்டாங்கின் பிற்போக்கு ஆட்சியினை நீடிக்கச் செய்யும் என்பதினால்தான்.

இராணுவ விவகாரங்களில் சுயேட்சை தன்மை, மற்றும் முன்கையெடுத்தல் என்ற கொள்கையின் அர்த்தம் என்னவென்றால், மலைப் பிரதேசங்களில் சுயேச்சையான கொரில்லா யுத்தத்தை தொடர்ந்து நடத்துவது என்பதில் நிலைகொள்வது; ஆனால் சாதகதான நிலைமைகளின் கீழ் இயங்கும் யுத்த முறையை நடத்துவதற்குக் கிடைக்கும் எந்த சந்தர்ப்பத்தையும் இழக்காமலிருப்பது; அதாவது, எதிரியின் அணி வரிசைகளுக்குப் பின்னால் ஜப்பானிய எதிர்ப்பு தளங்களை நிறுவுவது மற்றும் எதிரியின் பக்கவாட்டுகளில் விரிவான அளவில் கொரில்லா யுத்தத்தை நடத்துவது என்பதாகும்.

யுத்தத்தின் ஆரம்ப கால கட்டத்தில், கட்சிக்கு உள்ளேயும், வெளியேயும் இருந்த பலர் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் கொரில்லா யுத்த முறையும் யுத்த தந்திர பாத்திரத்தை குறைத்து மதிப்பிட்டார்கள்; மற்றும் கோமிங்டாங்கால் நடத்தப்பட்ட ஒழுங்கான யுத்தத்தின் மீதும், கோமிங்டாங் துருப்புகளின் நடவடிக்கைகளின் மீதும் வெற்றி பெறுவதற்கான நம்பிக்கையை வைத்திருந்தார்கள். சீன கம்யூனிஸ்ட் கட்சியும், தோழர் மாசே-துங்கும் இக் கருத்தினை நிராகரித்தார்கள்; மேலும்,

எதிரியின் அணி வரிசைகளுக்குப் பின்னால் மக்களின் படைகளை ஸ்தாபன ரீதியாக அமைப்பதின் மூலமாகவும் சுயேச்சையான கொரில்லா யுத்த முறையும் ஒரு ஆரம்ப யுத்த தந்திர கால கட்டத்திற்கு சென்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நிச்சயமாக யுத்தத்தினை வெற்றிகரமானதொரு முடிவிற்கு கொண்டுவரும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

நாடு தழுவிய எதிர்ப்பு யுத்தம் வெடித்த பிறகு உடனடியாக, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியும், தோழர் மா-சே-துங்கும் சுயேச்சையான கொரில்லா யுத்தம் நடத்துவது சம்பந்தமாகவும் எதிரியின் பின்னணி தளத்தின் ஜப்பானிய எதிர்ப்பு தளங்களை நிலை நிறுத்துவது சம்பந்தமாகவும் பல வழி காட்டுதல்களை கொடுத்தார்கள்.

முதலாவதாக சுயேச்சையாகவும் மற்றும் அதன் சொந்த முன் முயற்சியிலும் கொரில்லா யுத்தத்தை நடத்துவதற்கு, ராணுவம் பல தனித்தனியான படைப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு மக்களை அணி திரட்டுவதற்கும் ஜப்பானிய எதிர்ப்பு தளங்களை நிலைபெறச் செய்வதற்கும் எதிரியின் பின்னணிக் குழு ஆழமாக ஊடுருவிச் செல்ல வேண்டும்.

இரண்டாவதாக வட சீனாவில் கட்சி வேலை கொரில்லா யுத்தத்தை நடத்துவதை அதனுடைய ஒரே குறிக்கோளகக் கொண்டிருக்க வேண்டும். அதனைச் சுற்றிலும் இதர எல்லா நடவடிக்கைகளும் மையம் படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஸ்தலக் கட்சி கிளைகள் வெகு ஜனங்களை அணி திரட்ட வேண்டும். சிதறிக் கிடக்கும் ஆயுதங்களைச் சேகரிக்க வேண்டும். அங்குமிங்கும் அலைந்து கொண்டிருக்டிம் சிப்பாய்களை அணி சேர்த்து ஒரு திட்டத்திற்கேற்ப சகல ஏரியாக்களிலும் கொரில்லா படைப் பிரிவுகளை அமைக்க வேண்டும்.

மூன்றாவதாக ஏற்கெனவே உருவாகியிருந்த ஜப்பானிய எதிர்ப்பு தளங்களை (உதாரணமாக ஷான்சி—சகார்—ஹோப் பெய் தள ஏரியா) கெட்டிப்படுத்துவதற்கு மிகமிக சக்தி வாய்ந்த நடவடிக்கைகள், துருப்புகளைப் புனரமைப்பதும், பயிற்சி கொடுப்பதும் அதிகரிக்கப்பப்படுவதும், மற்றும் கட்சிப் பணியை அதிகரிப்பது, அடித்தள ஏரியாக்களில் கொள்ளைக்காரர்களை விரட்டியடிப்பது, ஆக்ரமிப்பாளனை எதிர்த்து போராட வேண்டிய ஒழுங்கற்றவர்களாக இருக்கும் அனைவருக்கும் கல்வி கற்றுக் கொடுப்பதற்கு மிகுந்த சிரமம் எடுத்துக்கொள்வது. மற்றும் ஸ்தல ஒத்துழைப்பாளர்களை ஒழிப்பது ஆகியவையாகும்.

இத்தகைய நடவடிக்கைகளின் வெற்றியோடு, ஷான்சி-சாகார்-ஹோப்பெய் அடித்தள ஏரியாவை மேற்கத்திய மற்றும் மத்திய ஹோப்பெயிலிருந்து கிழக்கத்திய ஹோப்பெய்க்கு விரிவுபடுத்துவதற்கு முயற்சிகள் செய்யப்பட வேண்டும்.

நான்காவதாக தேசம் முழுவதும் எதிர்ப்பு யுத்தத்தில் விடாப்பிடியாக ஈடுபட்டிருந்தால், வெகு ஜனங்களைத் தட்டி எழுப்பும் வேலை முழுமையாக செய்யப் பட்டிருந்தால் ஷாங்டுங் மற்றும் ஹோப்பே மாகாணங்களின் சமவெளிகளின் மீது விரிவான ஜப்பானிய எதிர்ப்பு கொரில்லா யுத்தத்தை துவக்குவதும் நீடிப்பதும் முற்றிலும் சாத்தியமாக இருந்திருக்கும். கொரில்லா பிரதேசங்கள் இத்தகைய சமவெளிகளில் உடனடியாக குறிக்கப் பட்டிருக்க வேண்டும். மற்றும் கட்டளையிடும் தலைமைக் காரியாலயங்கள் ஸ்தாபிக்கப் பட்டு படிப்படியாக கொரில்லா நடவடிக்கைகளை விஸ்தரித்துக் கொண்டிருக்க வேண்டும். எதிரியிடமிருந்து மீட்கப் பட்ட ஏரியாக்கள், ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக அரசாங்கங்கள், அமைக்கப் பட வேண்டும், சிதறிக்கிடக்கும் ஆயுதங்கள் சேகரிக்கப்பட வேண்டும். மற்றும் கொரில்லா படைப் பிரிவுகளில் அல்லது ஒழுங்கான ராணுவத்தில் சேருவதற்கு மக்கள் அணு திரட்டப்பட வேண்டும்.

மத்திய சீனாவில் புதிய நாலாவது சேனை வெகு ஜனங்களை அணிதிரட்டி, குவாஸ்டெ, சூச்சௌ, செங்கியோ, நான்கிங் மற்றும் ஊ டு ஆகியவற்றிற்கு இடையேயுள்ள பரந்த பிரதேசத்தில் ஜப்பானிய எதிர்ப்புத் தளங்களை ஸ்தாபிப்பது சாத்தியமென்று கட்சியின் மத்தியக் கமிட்டி கருதிற்று. மாவோகாங் அடித்தள ஏரியா நிறுவப்பட்ட பிறகு, சூச்சொவ், சென்கியான் மற்றும் ஊகு ஆகியவற்றிற்கு இடையேயுள்ள முக்கோண ஏரியாவிற்கு துருப்புகளை அனுப்பி வைப்பதற்கு தயாரிப்புகள் செய்யப்பட வேண்டும்; மேலும், யாங்ட்சி நதிக்கு வடக்கேயுள்ள பிரதேசங்களுக்கு ஒரு படைப்பிரிவு அனுப்பப்பட வேண்டும், புதிய நான்காவது சேனை அந்த சமயத்தில் எதிரியின் அணி வரிசைகளுக்குப் பின்னால் ஊடுருவிச் செல்வதற்கு சந்தர்ப்பத்தைப் பற்றிப் பிடித்து நதியின் இரண்டு பக்கங்களிலும் கொரில்லா தளங்களை ஏற்படுத்த வேண்டும். போராட்டத்தின் அபிவிருத்தியிலும் வேலையின் முறைகளிலும் ஜப்பானிய எதிர்ப்பிற்கும் உள்நாட்டு யுத்தத்திற்கும் இடையே இருந்த தீவிரமான வேறுபாட்டை உறுப்பினர்களுக்கு விளக்கிக் கூறும்படி புதிய நான்கா

வது சேனையின் தலைவர்களுக்கு அறிவுரை கூறப்பட்டிருந்தது: கட்சியின் விரிவாக்கத்திலும் மற்றும் புரட்சி சேனையின் விரிவு படுத்தும் ஐக்கிய முன்னணி விரிவாக்கப்பட்டு கட்டுப்படுத்தப் படும் என்றும் மற்றும் புரட்சிப் படைகளைக் கட்டுப்படுத்தும் கோமின்டானின் இறகிப்போன கொள்கை சிதறடிக்கப் படும் என்றும் அவர்களுக்குச் சுட்டிக் காட்டப்பட்டது.

ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் யுத்த தந்திர ரீதியான தற்பாதுகாப்புக் கட்டத்தின் போக்கில், சீன கம்யூனிஸ்ட் கட்சி. கோமிங்டாங் கொள்கைக்கு எதிராக, மக்களின் மொத்த எதிர்ப்புப் பாதையைப் பின்பற்றி, சுயேச்சையானதொரு கொரில்லா யுத்தத்தை நடத்தி, எதிரியின் பின்னணியில் பல ஜப்பானிய எதிர்ப்புத் தளங்களை ஸ்தாபித்தது.

1937 ஆகஸ்டில் எட்டாவது வழிச் சேனையும் புதிய நான்காவது சேனையும் மொத்தம் 40,000 ஜவான்களுக்கும் அதிகமாகிக் கொண்டிருந்தன; இவ்விரண்டு சேனைகளையும் யுத்த அரங்கிற்கு அணி வகுத்துச் சென்றன; முன்னால் கூறப் பட்ட சேனை வடசீனாவிற்கு அணிவகுத்துச்சென்றது. பின்னால் கூறப்பட்ட சேனை யாங்ட்சி நதியின் வடக்கு மற்றும் தெற்கு பிர தேசங்களுக்கு அணிவகுத்துச் சென்றது. சூடேயை பிரதம சேனாதி பதியாகக் கொண்டிருந்த எட்டாவது வழிச் சேனை மூன்று டிவி ஷன்களை (115 ஆவது, 120 ஆவது மற்றும் 129 ஆவது டிவிஷன் களைக்) கொண்டதாக இருந்தது; இவற்றில் 30,000க்கும் அதிக மான ஜவான்கள் இருந்தார்கள். ஏடியங்கை தளபதியாகவும் ஷியாங்சிங்யை உபதளபதியாகவும் கொண்டிருந்த புதிய நான் காவது சேனை 12,000 ஜவான்களை கொண்டதாக இருந்தது. இரண்டு சேனைகளும் கோமிங்டாங் துருப்புகளுக்கு எண்ணிக்கை யில் குறைவானதாக இருந்த போதிலும், அவை தரத்தில் மிகவும் உயர்ந்தவையாக இருந்தன; ஏனெனில் அவை மிகவும் உயர்வான தொரு அரசியல் அறிவு மட்டத்தைப் பெற்றிருந்தன. மக்களோடு நெருக்கமான பிணைப்புகளைப் பெற்றிருந்தன. மற்றும் தேசம் முழுவதின் நலன்களுக்காகப் போராடிக் கொண்டிருந்தன. இந்த விஷயங்ள் எதிலும் கோமிங்டாங் துருப்புகள் அவர்களுக்கு ஈடாக முடியாது. இதன் விளைவாக, உடனேயே, எட்டாவது வழிச் சேனையும் புதிய நான்காவது சேனையும், கோமிங்டாங் துருப்புகளுக்கு வேறுபட்ட வகையில், தொடர்ச்சியான வெற்றி களைப் பெற்று கோமிங்டாங் துருப்புகள் இழந்திருந்த பரந்த பிரதேசங்களை மீட்டு விட்டது.

யுத்த அரங்கில் அது வந்து சேர்ந்த பிறகு உடனடியாக, எட்டாவது வழிசேனையும் பிரதான படையான 115 வது படைப் பிரிவு ஜப்பானியர்கள் தையுவானை நோக்கி தெற்கே அணிவகுத்துச் செல்வதை தடுக்கும் நோக்குடன், பிங்சின் குவான் கணவாயை நோக்கி முன்னேறிற்று. செப்டம்பர் 25-இல் லின்பியாவோ தலைமையின்கீழ் எதிரியை எதிர்த்து முதல் அழித்தொழிப்பு போரை அவர்கள் துவக்கினார்கள். மற்றும் எதிரியின் அதிருப்தி துருப்புகள் 3000 பேரை விரட்டியடித்தார்கள். இந்த வெற்றி ராணுவத்தின் கவுரவத்தை பெருமளவுக்கு உயர்த்திற்று. மற்றும் இறுதி வெற்றியில் மக்களுக்கு இருந்த நம்பிக்கையைத் தட்டி எழுப்பிற்று.

கோமின்டாங் துருப்புகள் அவர்களது ஒழுங்கற்ற பின்வாங்குதலைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்த சமயத்தில் எட்டாவது வழிச்சேனை சின்கோவிலும் தையுவானிலும் அடுத்தடுத்து நடைபெற்ற இரண்டு இயக்கங்களில, செங்டிங்-தையுவாங் மற்றும் டாவுங், பூசேன் ரயில்வேக்களின் வழியாக முன்னேறிக்கொண்டிருந்த ஜப்பானியர்களை மடக்கி நிறுத்துவது வெற்றி பெற்றது.

தையுவான் ஜப்பானியர்களிடம் 1937 நவம்பர் 8இல் விழுந்தது. கோமிங்டாங் துருப்புகள் ஷான்சியின் தென்மேற்கு பகுதியை நோக்கி பின்வாங்கின. ஆனால் ஷான்சியும் வடகிழக்கில் உடாய்ஷாய் ஏரியாவிலிருந்த எட்டாவது வழிசேனையின் பல்வேறு படைபிரிவுகளில் மற்றும் செங்டிங் டையுவாங் ரயில்வே பாதையின் வழியாக குழுமியிருந்த எதிரி அணி வரிசைகளின் பின்னாலும் இருந்த எட்டாவது வழிச் சேனையின் பல படை பிரிவுகளும் ஜப்பானிய படைப் பிரிவுகளைத் தொடர்ந்து துன்புறுத்திக் கொண்டும் மஞ்சள் நதியை கடப்பதினின்றும் அவர்களை தடுப்பதிலும், மேற்கு நோக்கி முன்னேறிக் கொண்டும் இருந்தது; இந்த முறையில் மகத்தானதொரு யுத்த தந்திர ரீதியான பாதுகாப்பு சாதனையால் பல லட்சக் கணக்கான பின்வாங்கிக் கொண்டிருந்த கோமிங்டாங் துருப்புகளை வீழ்ச்சி அடைவதிலிருந்து காப்பாற்றிக் கொண்டிருந்தது.

அப்பொழுதிலிருந்து எட்டாவது வழிச்சேனை எதிரியின் அணி வரிசைகளுக்குப் பின்னால் ஆழமாக ஊடுருவிச் சென்று, பல ஜப்பானிய எதிர்ப்புத் தளங்களை நிலைநாட்ட ஆரம்பித்தது.

ஷான்சி-சகார் - ஹோபேய் ஜப்பானிய எதிர்ப்பு அடித்தள

ஏரியா—பின்சின்குவாங் போராட்டத்திற்கு பிறகு, 115வது டிவிஷனின் ஒரு பகுதி உடாய்ஷா ஏரியாவில் தங்கியிருந்தது. அப்பொழுது ஷான்சி, சகார் - மற்றும் ஹோபேய் ஆகிய மாநிலங்களின் எல்லைகள் சந்தித்த பிரதேசத்தில் விஷயங்கள் குழப்பமான ஒரு நிலையில் இருந்தன. சில சமயங்களில், விரல் விட்டு எண்ணக்கூடிய ஜப்பானிய கொலைக்காரர்கள் ஒரு ஜப்பானிய கொடியைப் பிடித்துக் கொண்டு ஒரு நாட்டுப்புற பட்டினத்தைக் கைப்பற்ற முடிந்தது; எதிரி வருவதைப் பார்ப்பதற்கு முன்பே கோமிங்டாங் துருப்புகள் தெற்கு நோக்கி பாய்ந்து ஓடுவார்கள். ஸ்தல கோமிங்டாங் ஆட்சியின் வீழ்ச்சியின் விளைவாக ஏற்பட்ட இந்த நிலைமை எட்டாவது வழி சேனையின் 1937 இலையுதிர் காலத்தில் ஒரு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது; அப்பொழுது அது உடாய்ஷானை அதனுடைய மையமாகக் கொண்டு ஷான்சி - சாகார் — ஹோபேய் ராணுவ பிரதேசத்தை நிலைநாட்டியிருந்தது. வடகிழக்கு சேனையின் ஒரு படைப்பிரிவு அன்குவோ, கோச்சியன், சியன்சியன், காவோயாங் மற்றும் இதர கிராமப்புறங்களில் இருந்த பொம்மையாட்சியை நசுக்கி விட்டு, மத்திய ஹோப்பேய் சம்வெளிகளில் ஜப்பானிய எதிர்ப்பு அடித்தள ஏரியாவை நிலை நாட்டிற்று. 1938 ஜனவரி 15இல் எல்லைப் பிரதேசத்தைச் சேர்ந்த சிப்பாய்கள், அதிகாரிகள், குடிமக்கள் ஆகியோரின் பிரதிநிதிகளின் ஒரு மகாநாடு ஹோப்பேய் மாகாணத்தில் பூபிங்கில் நடைபெற்றது. மற்றும் ஷான்சி-சாகார்-ஹோபேய் எல்லை பிரதேசத்தின் நிர்வாக சபை அமைக்கப்பட்டது. 1938 ஜூனில் 8வது வழிசேனை, கிழக்கு ஹோப்பேயில் ஜப்பானிய எதிர்ப்பு பேரெழுச்சி ஒன்றினை தலைமை தாங்கி, அங்கும்கூட ஒரு அடித்தளத்தை நிலை நாட்டிற்று.

ஷான்சி - ஹோபேய் - ஷான்டுங் - ஹோனான் ஜப்பானிய எதிர்ப்பு அடித்தள ஏரியா—தையுவான் வீழ்ச்சிக்குப் பிறகு கோமிங்டாங் துருப்புகள் தெற்கு நோக்கி பின்வாங்கிக் கொண்டிருந்த அதே சமயத்தில் எட்டாவது வழிச் சேனையின் 129வது டிவிஷன், கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தலத்தில் உள்ள ஸ்தாபனங்களோடும் மற்றும் புதிதாக அமைக்கப்பட்டிருந்த ஸ்தலத்தில் ஜப்பானிய எதிர்ப்பு சக்திகளோடும் ஒருங்கிணைந்து நின்று, டைகாங்டையுவே தளத்தை நிலை நாட்டிற்று; இத்தளத்திற்கு டைகாங் மலைகள் அதனுடைய மையமாக இருந்தன. 1937 இறுதியிலும் 1938லும், 129வது டிவிஷன், பீகிங்-ஷான்கோ

ரயில்வேயைக் கடந்தபிறகு ஹோப்பை-ஷாங்குங்-ஹோனான் சமவெளிகளுக்கு வந்து வெகு ஜனங்களைக் கொரில்லா யுத்தத் திற்கு ஸ்தாபன ரீதியாக திரட்டிக் கொண்டிருந்தது. ஹோபேய்-ஷான்டுங்-ஹோனான் ராணுவப் பிரதேசம் 1939 மார்ச்சில் அமைக்கப்பட்டது. மற்றும் இந்த அடித்தள ஏரியா பரந்த சமவெளியில் ஸ்தாபிக்கப்பட்டது.

ஷான்சி-சுய்யுவாங் ஜப்பானிய எதிர்ப்பு அடித்தள ஏரியா—ஏட்டாவது வழிச் சேனையின் 120வது டிவிஷன் ஷான்சியின் வடமேற்கு பகுதிக்குள் 1937 மழை காலத்தில் அணிவகுத்துச் சென்றது. 1938 பிப்ரவரியில் தையுவானின்மீது கட்டவிழ்த்து விடுவதாக, கோமிங்டாங் கூறிக் கொண்டிருந்த எதிர்த் தாக்குதலோடு ஒருங்கிணைத்துக் கொள்ளும் பொருட்டு இந்த டிவிஷன் டாடுங்-பூச்சோ ரயில்வேயின் வடக்குப் பகுதியை துண்டிப்பதற்கு ஏற்றுக் கொண்டது. பெரும் எண்ணிக்கை யிலான எதிரி துருப்புகள் லின்பெனை நோக்கி தெற்கு நோக்கி முண்டியடித்துக் கொண்டிருந்த சமயத்தில் டாடுங்கில் நிலை பெற்றிருந்த படையினர் ஷான்சியின் வடமேற்கு பகுதியின்மீது ஒரு தாக்குதலைத் தொடுத்தார்கள். அந்த சமயத்தில் 120வது டிவிஷன் திரும்பி வந்து எதிர்த்துப் போராடி ஏழு கிராமப்புற பிரதேசங்களை மீட்டது. வடமேற்கு ஷான்சி ஜப்பானிய எதிர்ப்புதளம் மார்ச்சில் அமைக்கப்பட்டது. ஆகஸ்டில் அந்த டிவிஷனின் ஒரு படைப் பிரிவு வடக்கு ஷியாவானில் இருந்த டாசிங் மலைகளை நோக்கி முன்னேறி, செப்டம்பரில் டவோ வின்னையும், அக்டோபரில் உலாங்குவாவையும் மீட்டது.

ஷாங்குங் ஜப்பானிய எதிர்ப்பு அடித்தள ஏரியா :—

அப்பொழுது ஷாங்குங்கின் ஆளுனராக இருந்த ஹன்பூ-சு ஒரு குண்டுகூட சுடாமல் 1937 இறுதியில் பின்வாங்கிய பொழுது, கம்யூனிஸ்ட் கட்சியின் ஷாங்குங் மாகாணக் கமிட்டி யின் டைஆன் கிராமப்புற கமிட்டியின் ஸ்தலத்தில் இருந்த விவசாயிகளையும் பீகிங்கில் இருந்தும் டியெர்ச்சின்னில் இருந்தும் தேசிய மீட்சி இயக்கத்தில் சேர்ந்திருந்த மாணவர்களையும், ஸ்தாபன ரீதியாக அணிதிரட்டி, டிசுலாய் மலைகளில் ஒரு ஜப்பானிய எதிர்ப்பு பேரெழுச்சியினை நடத்தினார்கள். 1938 இலையுதிர்கால வாக்கில், ஷான்டுங் படை ஒன்பது படைப் பிரிவுகளாக விஸ்தரிக்கப்பட்டு ஹுவா-சிங், பெங்லாய், மற்றும் ஷான்டுங் தீபகற்பத்தின் ரஷியன் பிராந்தியத்தில் ஒரு கொரில்லா தளத்தை ஸ்தாபித்தது. கட்சியின் லியாவோ-செங் ஸ்தல

ஸ்தாபனம் வடமேற்கு ஷான்டுங் மாகாணத்தில் ஜப்பானிய எதிர்ப்பு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு, ஸ்தலத்திலுள்ள ஒரு பொதுஜன பிரமுகரான பான்-சு-ஷியன் என்பவருக்கு உதவி செய்தது.

மத்திய சீன ஜப்பானிய எதிர்ப்பு அடித்தள ஏரியா-தெற்கி லிருந்த சிவப்பு கொரில்லாப் படைப் பிரிவுகளிலிருந்து புரைமைக் கப்பட்டிருந்த புதிய நான்காவது சேனை அதனுடைய தலைமை காரியாலத்தை 1938-ஜனவரியில் நான்சாங்கில் அமைத்துக் கொண்டது. பின்னர், அது மத்திய சீனாவில் இரண்டு பாதை களின் வழியாக எதிரியின் படை வரிசைகளுக்குப் பின்னால் ஊடுருவிச் சென்றது. ஒன்று யாங்ட்சி நதிக்கு தெற்கேயும், மற்றொன்று வடக்கேயும் சென்றது. தெற்கு நோக்கிச் சென்ற படைப் பிரிவு 1938 ஜூனில் நான்கிங், ஷாங்காய் ரயில்வேயை நெருங்கி தெற்கு கியாங்சு விடுதலை ஏரியாவை ஸ்தாபித்தது; அதனுடைய மையமாக மாவோஷாங் மலை இருந்தது. வடக்கு நோக்கிச் சென்ற படைப் பிரிவு 1938 மே மாதத்தில் அன்வெய் மாகாணத்தில் சாவோ-ஹூ, உவெய் மற்றும் டிங்-யுவாங் பிரதேசத்தில் நுழைந்து விடுதலை செய்யப்பட்டதொரு ஏரியாவை அமைத்தது; இந்த ஏரியாவிற்கு அவுட்டாங் மைய மாக இருந்தது.

### 4. துரிதமானதொரு வெற்றியில் நம்பிக்கைக் கொண்ட வர்களிடமிருந்தும் தேசிய சரணாகதி வாதிகளிடமிருந்தும் முணுமுணுப்பு. சீன ஜப்பானிய யுத்தத்தின் அபிவிருத்தி சம்பந்தமாக மாசே-துங்கின் முன்னோக்கியப் பார்வை.

1938 மே மாத வாக்கில், ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் பத்து மாதங்களாக நடைபெற்றிருந்த பொழுது, யுத்தத்தின் வேதனை களை அனுபவித்துக் கொண்டும் தங்களது தேசம் புத்துயிர் பெற வேண்டும் என்பதற்காக போராடிக் கொண்டும் இருந்த சீன மக்கள் வெற்றி பெறுவதற்கான நாட்களை எண்ணிக் கொண் டிருந்தார்கள். ஆனால் யுத்தம் எப்படி அபிவிருத்தியடையும்? சீனமக்கள் அதில் வெற்றி பெற முடியுமா? வெற்றிக்காக அவர்கள் எப்படி முயற்சிக்க வேண்டும்? மக்களில் பலருக்கு இத்தகைய கேள்விகள் பதில் கிடைக்காத கேள்விகளாகவே இருந்தன, யுத்தம் வெடிப்பதற்கு முன்பும் பின்பும், சீனா தவிர்க்க முடியாத

படி சரணடைய வேண்டும் என்று பலமாக பிரகடனம் செய்து கொண்டிருந்தவர்கள் கோமின்டாங்கில் இருந்தார்கள். உண்மையில் லுகோசியாவோ சம்பவத்திற்கு முன்பு ஜப்பானை எதிர்த்து போராடுவதற்கு, மறுத்துக் கொண்டிருப்பதற்கு இந்த தத்துவம் கோமின்டாங்கிற்கு ஒரு நொண்டிச் சாக்கினை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. அந்த சம்பவம் ஷியாங்காய்-ஷேக்கும்பலை யுத்தத்திற்குச் செல்லும்படி நிர்பந்தித்த பொழுது. வாங்கிங்வெய்-கும்பல் இந்த தத்துவத்தின் ஊதுகுழலாக இருந்தவர்கள் சரணாகதிக்கு தயாரானார்கள். யுத்தத்தின் ஆரம்ப கட்டங்களில் கோமின்டாங் துருப்புகளால் அடையப்பட்ட தொடர்ச்சியான தோல்விகள் மக்களின் ஒரு பகுதியினரிடையே நம்பிக்கையின்மையையும் அங்கலாயப்பையும் தோற்றுவித்தது.

மறுபுறத்தில், யுத்தம் வெடித்த பிறகு துரிதமாக வெற்றி கிடைக்கும் என்ற முற்றிலும் காரணமில்லாத, நம்பிக்கையை உண்டாக்கும் தத்துவமும் கூட சுற்றறிக்கைபோல் போய்க் கொண்டிருந்தது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சில உறுப்பினர்கள் எதிரியைக் குறைத்து மதிப்பிட்டு கோமின்டாங்கின் ஒரே ஒரு அம்சத்தை மட்டுமே அவர்கள் பார்த்தார்கள். அதாவது அதை எதிர்த்து போராடிக் கொண்டிருந்தது என்பதை மட்டுமே அவர்கள் பார்த்தார்கள். ஆனால் மற்றொரு அம்சத்தை பிற்போக்கானதாகவும், ஊழல் நிறைந்ததாகவும் அது இருந்தது என்பதை புறக்கணித்துவிட்டார்கள். கோமிங்டாங்கின் மீது மட்டும் சார்ந்திருப்பதினால் துரிதமானதொரு வெற்றியை சீனா பெறமுடியுமென்று அவர்கள் நினைத்தார்கள். சியாங்காய்-ஷேக் கும்பல் அவர்கள் சம்பந்தபட்டமட்டில் அவர்களது எல்லா நம்பிக்கைகளையும் அந்நிய ஆதரவின்மீது வைத்திருந்தார்கள்; அவர்களுக்காக பிரிட்டனும் அமெரிக்காவும் ஜப்பானை எதிர்த்துப் போராடும் என்பதற்காக காத்துக் கொண்டு பின்னால் தொங்கிக் கொண்டிருந்தார்கள். அப்படிச் செய்வதினால் அவர்கள் தாங்களே சீனாவில் பிற்போக்கு ஆட்சியைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்க முடியும் என்று நினைத்தார்கள். கோமிங்டாங் அரசியல் விஞ்ஞான கோஷ்டியின்[2] பத்தரிகையான டாகன்பாவோ-வினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட கோமிங்டாங்கில் இருந்த பலர் 1938 மார்ச்சில், டையர்-சுவாங், சூசோங் போராட்டங்கள் ஜப்பானுக்கு எதிரான எதிர் முன்னேறித்தாக்குதலின் ஆரம்பத்தைக் குறித்தன என்ற சந்தர்ப்பவாத கருத்தோட்டத்தைக் கொண்டிருந்தார்கள்.

தவறான தத்துவங்களை மறுக்கவும் தேசம் முழுவதற்கும் யுத்தத்தின் சரியான போக்கு என்னவாயிருக்கவேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டவும், தோழர் மாசே-துங் 1938 மே மாதத்தில் **நீடித்த யுத்தம்** என்ற அவரது நூலைப் பிரசுரித்தார். இயக்க இயல் பொருள் முதல் வாதம், வரலாற்று இயல் பொருள் முதல் வாதம் ஆகியவற்றின் வெளிச்சத்தில்; சீனா, ஜப்பான் ஆகியவற்றின் சம்பந்தப்படுத்திப்பார்க்கும் வலிமை பற்றிய விரிவானதொரு யதார்த்தமான பகுத்து ஆய்விலிருந்து, ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் பற்றிய திசைவழி சம்பந்தமாகவும் அவர் பின்வரும் முடிவுகளுக்கு வந்தார்.

முதலாவதாக, தேசிய சரணாகதி தத்துவமோ அல்லது துரித மான வெற்றி பற்றிய தத்துவமோ உண்மையில் எந்தவிதமான அஸ்திவாரத்தையும் பெற்றிருக்கவில்லை. உள் நாடு மற்றும் சர்வதேசிய உறவுகளின் ஒரு பகுத்தாய்விலிருந்து ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் நீடித்த ஒரு போராட்டமாக (துரமான வெற்றி பற்றிய தத்துவத்திற்கு எதிராக) இருக்குமென்றும், ஆனால் இறுதி வெற்றி சீனாவினுடைய (தேசிய சரணாகதி பற்றிய தத்துவத்திற்கு எதிராக) இருக்குமென்றும் தோழர் மாசே-துங் தீர்க்கத்தரிசனமாகக் கூறினார். இப்படிப்பட்டதொரு கருத் தோட்டத்திற்கு அடிப்படை என்ன அவர் கூறினார் :-

"சீன — ஜப்பானிய யுத்தம் இருபதாவது நூண்றாண்டின் முப்பதாவது ஆண்டில் ஆரம்பமாகும். பத்தாண்டுகளில், ஒரு அரைக்காலனி அரை நிலப்பிரபுத்துவ சீனாவிற்கும் ஓர் ஏகாதி பத்திய ஜப்பானுக்கும் இடையே நடைபெறும் ஒரு ஜீவ மரண யுத்தம் அன்றி வேறு எதுவும் அல்ல. இங்குதான் பிரச்சினை முழுவதின் அடிப்படை அடங்கியுள்ளது." [3]

இந்த அடிப்படையிலிருந்து யுத்தம் செய்து கொண்டிருக்கும் தரப்பினர்களிடையே மோதிக் கொண்டிருக்கும் நான்கு விஷயங் கள் எழுந்தன. ஜப்பான் சக்தி வாய்ந்ததாக இருந்தது. ஆனால் சிறியதாகவும் பின் நோக்கிச் செல்வதாகவும் சர்வதேச ஆதரவு இல்லாததாகவும் இருந்தது; சீனா பலஹீனமாக இருந்தது, ஆனால் பெரியதாகவும், முற்போக்கானதாகவும் அபரிமிதமான சர்வதேச ஆதரவைக் கொண்டதாகவும் இருந்தது. இத்தகைய நான்கு அம்சங்களில், ஒரே ஓர் அம்சம் மட்டும் ஜப்பானுக்குச் சாதகமாக இருந்தது. அதாவது, ஜப்பான் சக்தி வாய்ந்ததாக இருந்தது, அதே சமயத்தில் சீனா பலஹீனமாக இருந்தது.

இதனுடைய அர்த்தம் என்னவென்றால் யுத்தம் தவிர்க்க முடியாததாக இருந்தது. சீனா எதிர்ப்பு யுத்ததந்திரம்—அந்த யுத்தம் ஒரு நீடித்த யுத்தமாக இருக்கும்; துரிதமாக முடிவுக்கு வரக்கூடிய ஒரு யுத்தமாக இருக்காது — கடினமானதொரு காலக் கட்டத்தின் வழியாக சீனா அவசியமாகவே கடந்து செல்லும் என்பதும் ஆகும். இந்த அம்சத்தை மறந்து விடுவதோ அல்லது உதறி தள்ளுவதோ தவறாக இருக்கும்; 'துரிதமான வெற்றி' பற்றிய தத்துவத்தைப் பின்பற்றியவர்கள் செய்திருந்ததுபோல், இதர மூன்று அம்சங்களை மட்டும் பரிசீலனை செய்வதோ அல்லது மிகைப்படுத்துவதோ தவறாக இருக்கும்.

இதர மூன்று வித்தியாசங்கள் சம்பந்தமாக சங்கடங்கள் திட்டவட்டமாக ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கு எதிராகவும் சீனாவின் எதிர்ப்புப் போராட்டத்திற்கு சாதகமாகவும், இருந்தன. எல்லாவற்றிற்கும் முதலாவதாக ஒரு சிறிய நாடான ஜப்பான், சீனா போன்ற பெரியதொரு நாட்டின் மீது படையெடுத்தது ஜப்பானுக்கு பாதகமாக இருந்தது. ஆனால் இது மட்டும் சரணாகதியிலிருந்து சீனாவைக் காப்பாற்றிவிடாது. ஏனெனில், சில சமயங்களில் ஒரு சிறிய ஆனால் பலமான நாடு ஒரு பெரிய, ஆனால் பலஹீனமான நாட்டை வெல்ல முடியும்—பிரிட்டன், இந்தியாவை வென்றிருப்பதுபோல் — என்பதை வரலாறு காட்டுகிறது. சகாப்தத்தின் குணாம்சங்களின் காரண மாக சீனாவைச் சரணடையச் செய்ய முடியாது. சீனா அதனுடைய ஆயுதமேந்திய எதிர்ப்புப் போராட்டத்தினை இறுதி வரை தொடர்ந்து நடத்தும் வரையிலும், இறுதி வெற்றி சீனாவினுடையதாக இருக்கும். இத்தகைய குணாம்சங்கள் ஜப்பானுடைய பின்னோக்கிச் செல்லும் சீரழிவிலும் ஆதரவு இன்மையிலும் பிரதிபலித்தன: சீனாவின் முன்னேற்றத்திலும் அபிரிமிதமான ஆதரவிலும், பிரதிபலித்தன. சீனாவுக்கு எதிரான ஜப்பானிய யுத்தம் பிற்போக்கானதாகவும் காட்டு மிராண்டித்தனமானதாகவும், ஆக்கிரமிப்பானதாகவும் இருந் தது. அதே சமயத்தில், சீனாவில் எதிர்ப்பு யுத்தம் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினால் தலைமைத் தாங்கப்பட்ட ஒரு நியாய மான, முற்போக்கான தேசிய புரட்சி யுத்தமாக இருந்தது; சீனாவுக்கு எதிராக ஜப்பானால் நடத்தப்பட்ட யுத்தத்தில் அநியாயமான கொள்ளைக்காரத் தன்மை, ஜப்பானில் வர்க்கங் களுக்கிடையே மிக பலாத்காரமான விரோதக் குரோதத்தைத் தட்டியெழுப்பும். ஜப்பானிய மக்களுக்கும் சீன மக்களுக்கும்

இடையேயும், ஜப்பானுக்கும் உலகத்தின் பெரும்பாலான நாடுகளுக்கு இடையேயும் மிகப் பலாத்காரமான விரோத குரோதத்தைத் தட்டி எழுப்பும். இவை அனைத்தும் ஜப்பானுக்கான ஆதரவை இழக்கும்படி செய்யும். மறுபுறத்தில் சீனாவினுடைய எதிர்ப்பு யுத்தத்தின் நியாயமான முற்போக்கான தன்மையின் காரணமாக, சீனதேசம் முழுவதையும் ஒருமைப்பாட்டில் ஒருசேர அணித்திரட்டி விரிவான சர்வதேச ஆதரவினைக் குறிப்பாக, சோவியத்யூனியனுடையே ஆதரவினை பெற முடியும். ஜப்பானுடைய பலத்தையும் சீனாவினுடைய பலஹீனத்தையும் மிகைப்படுத்துவதும், தேசிய சரணாகதி தத்துவத்திற்கு வக்காலத்து வாங்கிப் பேசுவோர்கள் செய்திருந்தது போல் இதர எல்லா அம்சங்களையும் புறக்கணிப்பதும் முற்றிலும் தவறாக இருக்கும்.

நீடித்த யுத்தத்தின் போக்கு சம்பந்தப்பட்ட மட்டில், சீனாவின் எதிர்ப்பு யுத்தம்,யுத்த தந்திரரீதியான தற்பாதுகாப்பு, யுத்த தந்திர ரீதியான தேக்கம் மற்றும் யுத்த தந்திர ரீதியான எதிர் முன்னேறி தாக்குதல் ஆகிய மூன்று கட்டங்களின் வழியாக சீனாவின் கடந்து செல்லுமென்று தோழர் மாசே-துங் முன்னோக்கிப் பார்த்தார்.

முதலாவது கட்டம், எதிரியின் யுத்த தந்திர ரீதியான முன்னேறித் தாக்குதல் மற்றும் சீனாவின் யுத்த தந்திர ரீதியான தாற்பாதுகாப்பின் ஒரு கட்டமாக இருக்கும். சீனா முழுவதிலும் கையாளப்பட வேண்டிய பிரதான போராட்ட வடிவம் இயங்கும் யுத்த முறையாகவும், கொரில்லா யுத்த முறையினாலும் நிலைபெற்றுள்ள யுத்த முறையினாலும் கூடுதலாக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும். எதிரியின் அணிவரிசைகளுகக்குப் பின்னர் கொரில்லா யுத்த முறை முக்கியத்துவம் உடையதாக இருக்கும்; ஆனால் சாதகமான நிலைமையின்கீழ் இயங்கும் யுத்த முறை தவிர்க்கப்பட்டதாக இருக்கக் கூடாது.

இரண்டாவது கட்டம், யுத்த தத்திர ரீதியான தேக்கத்தின் ஒரு கட்டமாக இருக்கும். எதிரி யுத்ததந்திர ரீதியானதொரு முன்னேறித் தாக்குதலிலிருந்து அவனுடைய நிலைகளைத் தற்பாதுகாப்பிற்கு மாற்றிக் கொள்வான்; அவன் ஆக்கிரமித்துள்ள பிரதேசங்களைத் தன்வசம் வைத்துக் கொள்வதற்கு ஒன்றுபடுத்தப்பட்டதொரு பொம்மை ஆட்சியையும் ஏற்பாடு செய்வான். ஆனால் விரிவான மற்றும் பிடிவாதமானதொரு கொரில்லா யுத்தத்தினால் அவன் எதிர் நோக்கப்படுவான்.

சீனாவின் போராட்ட உருவம் பிரதானமாக கொரில்லா யுத்த முறையாகவும் இயங்கும் யுத்த முறையினாலும் மற்றும் நிலை பெற்றிருக்கும் யுத்த முறையினாலும் கூடுதலாக்கப்பட்டதாகவும் இருக்கும். எதிரி முன்னேறித் தாக்குதலுக்கான தயாரிப்புகளைச் செய்வது கடமை ஆக இருக்க வேண்டும். இந்தக் கட்டம் சீனா விற்கு மிக சோதனையானக்காலக்கட்டமாக இருக்கும். ஆனால் அது மாற்றத்தின் கேந்திரமானதாகவும் இருக்கும்.

மூன்றாவது கட்டம், சீனாவின் யுத்த தந்திர ரீதியான எதிர் முன்னேறித் தாக்கும் கட்டமாக இருக்கும். முந்திய கட்டத்தில் வளர்க்கப்பட்டு இந்த கட்டத்தில் தொடர்ந்து வளர்ந்து கொண் டிருக்கும் அதனுடைய சொந்த பலத்தின் மீது சீனா பிரதான மாக சார்ந்து நிற்கும். சீனா சர்வதேச ஆதரவினைப் பெறுவ தற்கு முயற்சிகளைச் செய்ய வேண்டும்; எதிரி நாட்டிற்குள் ஏற் பட்டுள்ள மாற்றங்களைப் பயன்படுத்தவும் வேண்டும். பிரதான போராட்ட உருவம் இயங்கும் யுத்த முறையாக இருக்கும்; ஆனால் நிலைபெற்றிருக்கும் யுத்த முறை முக்கியமானதொரு பாத்திரத்தை வகிக்கும். மூன்றாவது கட்டம் நீடித்த யுத்தத்தின் கடைசி கட்டமாக இருக்கும். இறுதிவரை போராடுவது என்பது இத்தகைய எல்லா உபகட்டங்களின் வழியாகச் செல்வது என்று அர்த்தப்படும்.

இரண்டாவதாக, முதலாவது பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட இரண்டு இதர மிகமுக்கியமான பிரச்சனைகளும்கூட உள்ளன:—

யுத்தத்தில் தலைமை பாத்திரம் மற்றும் உள்நாட்டு மற்றும் சர்வதேச உறவுகள் இரண்டிலும் ஏற்படக் கூடிய சாத்தியமான மாற்றங்கள்.

இராணுவ பலத்தில் ஏற்படும் மேல் ஆதிக்கத் தன்மை அல்லது குறைவான தன்மை, முன்கை எடுத்தல் அல்லது செயலற்ற தன்மை ஆகியவற்றில் யதார்த்தமான அடிப்படை யாக அமைகிறது. முன்கை எடுத்தல் அல்லது செயலற்ற தன்மை ஒரு யாதர்த்தமாக ஆவதற்கு முன்பு இரண்டு தரப்புக்களுக்கும் மிடையே நடைபெறும் ஒரு யுத்தத்தை வழி நடத்திச் செல்வ தற்கும் போராட்டம் இருக்க வேண்டும். திறமையில் ஒரு போட்டி இருக்க வேண்டும். ஒரு யுத்தத்தை சரியாக வழிநடத்திச் செல்வது குறைவான தன்மையை மேலான தன்மை யாக திருப்பலாம்; அல்லது செயலற்ற தன்மையை முன்னக யெடுத்தலாக மாற்றலாம். மற்றும் மறுதலை ஆகவும் இருக்கலாம்.

பலத்திற்கும் பலஹீனத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு, மேலான தன்மைக்கும் குறைபாடு தன்மைக்கும் இடையே உள்ள வேறுபாடு, சம்பந்தப்படுத்திப் பார்க்கக் கூடிய வேறுபாடாக இருந்தது; பரிபூரணமான வேறுபடாக இருக்கவில்லை. நான்கு அடிப்படையான வித்தியாசங்களில் ஒன்றாக எண்ணப்பட்ட இந்த வேறுபாடு ஒரு உண்மையான விவரந்தான்; இந்த வேறு பாட்டின் விளைவாக எதிரி சீனாவின் பிரதேசத்தை தாக்கவும் படையெடுக்கவும் முடிந்தது. எதிரி முன்னேறித் தாக்குதலில் இருந்தான்; அதே சமயத்தில் சீனா தற்பாதுகாப்பில் இருந்தது. மற்ற வித்தியாசங்கள் (அதாவது, பெரிய தன்மைக்கு எதிரான சிறிய தன்மை, முற்போக்குத் தன்மைக்கு எதிரான பிற்போக்குத் தன்மை, மற்றும் அபரிமிதமான ஆதரவுக்கு எதிரான ஆதரவு இன்மை), சம்பந்தபட்ட மட்டில் அவை ஆரம்ப திசையில் உள்ள வித்தியாசங்களாக இருந்தன. அல்லது மறைந்து கிடந்த வித்தி யாசங்களாக இருந்தன. அலையை மாற்றுவற்கு எதிரியினுடைய முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தி, நிகழ்ச்சிப் போக்கில், எதிர் முன்னேறித் தாக்குதலுக்கான தயாரிப்பைச் செய்வதற்கு, எதிரியின் மீது தாக்குதல்களை, திருப்புவது சுவாசியமாக இருக்கும்; மற்றும் ஆரம்பமான ஒரு கட்டத்தில் இருந்து ஆதிக்கம் செலுத்தும் ஒரு கட்டத்திற்கு, சாத்தியப்பாடு என்ற நிலையில் இருந்து உண்மையான நிலைக்கு, நிலைமைகளை சீனாவிற்கு சாதகமாக மாற்றுவதும் அவசியமாக இருக்கும். இது திறமையான தலைமையின் மீது சார்ந்து நிற்கும். தோழர் மாங்சே-துங் சுட்டிக் காட்டியது போல்,

''ஒரு யுத்தத்தை வழிநடத்துபவர்கள் புற நிலைகளால் அனுமதிக்கப்படும் வரம்புகளுக்கு அப்பால் வெற்றிகளுக்கும் முயற்சிக்க முடியாது. ஆனால் அந்த வரம்புக்குள் தங்களுடைய உணர்வுப் பூர்வமான நடவடிக்கையின் மூலம் அவர்கள் வெற்றி களுக்கு முயற்சிக்க முடியும்; முயற்சிக்கவும் வேண்டும்.''[4]

எதிரி வலிமையின் காரணமாகவும் மற்றும் சீனாவின் பலஹீனம் காரணமாகவும் எதிரியின் யுத்த தந்திர கொள்கை, முன்னேறித் தாக்கும் ஒரு கொள்கை யாகவும், துரிதமான முடிவு மற்றும் நடவடிக்கைகளின் வெளிப் புறப்பாதைத் நடவடிக்கை களின் ஒரு கொள்கையாகவும் இருந்தது; அதே சமயத்தில் சீனாவின் யுத்த தந்திரக் கொள்கை தற்பாதுகாப்பு கொள்கை யாகவும், நீடித்த யுத்தம் மற்றும் உட்புறபாதை நடவடிக்கை களின் ஒரு கொள்கையாகவும் இருந்தது. ஆனால், வரம்புக்கு

உட்பட்ட சக்திகளைக் கொண்ட ஒரு சிறு நாடாக இருந்த ஜப்பான் சீனாவின் மீது மிகப் பெரிய சக்திகளைக் கொண்ட ஒரு பெரிய நாட்டின் மீது படையெடுக்கத் துணிந்தமையால், அது சீனாவின் பிரதேசத்தின் ஒரு பகுதியை மட்டுமே கைபற்ற முடிந்தது; மற்றும் கைப்பற்றப்பட்ட பல ஏரியாவின் பல பகுதி களைத் துருப்புகள் இல்லாத ஏரியாக்களாக விட்டு விட வேண்டி யிருந்தது; இப்படிப்பட்ட ஏரியாக்கள் சீனாவின் இயங்கும் யுத்த நடவடிக்கைகளுக்கும் மற்றும் கொரில்லா நடவடிக்கைகளுக்கும் பரந்த ஒரு இடத்தை விட்டு வைத்துக் கொண்டுருந்தது. இந்த முறையில் இயக்கங்களிலும் போராட்டங்களிலும், துரிதமான முடிவெடுப்பதற்கான வெளிப்புறப் பாதை தாக்குவதற்கு முன்கை எடுப்பது சீனாவிக்குத் சாதகமாக வரலாம்; அதே சமயத்தில் எதிரி ஒரு உட்புறப்பாதைக்குள், நீடித்த தற்பாது காப்புப் பாதைக்குள் நிரந்தரமாக தள்ளப்படலாம். துரிதமான முடிவெடுக்கும் ஒரு வெளிப்புறப் பாதை தாக்குதலின், ''தாக்குதல்'' அம்சம் பிரதான முக்கியத்துவம் உடையதாக இருந்தது; மேலே குறிப்பிடப்பட்ட ''வெளிப்புறப் பாதை'' தாக் குதலின் கட்டுக்கோப்பிற்கும் மற்றும், ''துரிதமான முடிவு'' அத னுடைய காலத்தின் அளவையும் குறித்தது. இந்தமுறையில் தனித் தனியான போராட்டங்களில்; எதிரியின் முன்கை எடுத்தல் செய லற்ற தன்மையாக மாற்றப்படும், எதிரியின் பலம், பலஹீன மாகவும் மற்றும் எதிரியின் மேலான தன்மை, கீழான தன்மை யாகவும் மாற்றப்படும். அதேசமயத்தில் சீனாவின் நிலை நேர் எதிரிடையானதாக இருக்கும். இத்தகைய தனித்தனியான போராட்டங்களில் தொடர்ச்சியான வெற்றிகளுக்குப் பிறகு பலத்தின் சமநிலை மாறும். சீனா மிகவும் பலமானதாக மாறும். மற்றும்எதிரி மிகவும் பலஹீனமாக மாறுவான்.

பல வெற்றிகளின் குவிந்த பலன், சீனாவிற்கு சாதகமான இதர நிபந்தனைகளோடு (அதாவது, எதிரியின் முகாமிற்கு உள்ளேயும் மற்றும் சர்வதேச நிலைமையிலும் ஏற்படும் மாற்றங் கள்) இணைந்து நின்று முதலில் சீனாவை எதிரிக்கு சமமான நிலையில் வைப்பதினாலும், பின்னர் மேலானதொரு நிலைமை யில் வைப்பதினாலும் நிலைமையை மாற்றும். தோழர் மாசே-துங் சொன்னது போல் ''இங்கு மேலும் அதிகமான வெற்றிகளைப் பெறுவதற்கு ஒருவர் செய்யும் முயற்சிகளும் மற்றும் மிகவும் குறைவானதொரு தவறுகளும் தீர்மானமான அம்சமாக உள்ளன.''[5]

ஜப்பானிய எதிர்ப்பு யுத்ததில் இயங்கும் யுத்த முறை பிரதான போராட்ட உருவமாக இருந்த போதிலும் மற்றும் கொரில்லா யுத்தமுறை இரண்டாம் தரமானதாக கருதப்பட வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்டிக் கொண்டு, எனினும் யுத்தத்தில் கொரில்லா யுத்த முறை அதனுடைய முக்கியமான யுத்த தந்திர ரீதியான பாத்திரத்தை வகித்தது என்பதையும் சுட்டிக் காட்டி, தோழர் மாசே-துங் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் கொரில்லா யுத்த முறையின் யுத்த தந்திர ரீதியான முக்கியத்தை வலியுறுத்திக் கூறினார். அது ஒழுங்கான யுத்த முறைக்கு ஆதரவு நல்கும் மற்றும் அதனை ஒழுங்கான யுத்த முறைக்கு மாற்றமடைய செய்யும்.

மூன்றாவதாக யுத்தத்திற்காக மக்களை அணி திரட்டுவது தலையாய முக்கியத்துவம் உடையதாக இருந்தது. யுத்தம் குறிப்பிட்டதொரு அரசியல் முடிவுக்கு ஒரு சாதனமாக இருந்தது வேறு வார்த்தைகளில் சொன்னால், ஜப்பானிய ஏகாதிபத்திய வாதிகளை விரட்டியடிப்பது. மற்றும் சுதந்திரம். சமத்துவம் ஆகியவற்றைக் கொண்டதொரு நவசீனாவை நிர்மாணிப்பதும் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தின் குறிக்கோளாக இருந்தது. **நீடித்த யுத்தம்** என்ற அவரது நூலில் ''ராணுவமும் மக்களும் வெற்றியின் அஸ்திவாரமாக உள்ளனர்.''[6] என்று தோழர் மாசே-துங் சுட்டிக் காட்டினார். ''யுத்தத்தின் ஏராளமான சக்தியின் மிகமிக ஆழமான மூலாதாரம் மக்களின் வெகுஜனங் களில் அடங்கியுள்ளது.''[7] ''நாடு முழுவதிலும் உள்ள பொது மக்களை அணிதிரட்டியவுடன், நாம் மனித இனத்தின் விரிவான தொரு கடலை உருவாக்கி அதில் எதிரியை மூழ்கடிப்போம், ஆயுதங்கள் மற்றும் இதர விஷயங்களில் நமக்கிருக்கும் பற்றாக் குறையை சரி செய்து யுத்தத்தின் ஏற்படும் ஒவ்வொரு கஷ்டத்தை யும் வெல்வதற்கான முன் தேவைகளைப் பெறுவோம்.''[8] யுத்தத் தில் வெற்றி பெறுவதற்கு நாடு முழுவதிலுமுள்ள மக்களை அணி திரட்டுவது, மற்றும் ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணியை விஸ்தரிப்பதும் கெட்டிப் படுத்துவதும் கட்டாய மாக இருந்தது. இது யுத்தத்தை வெற்றிக்கான அடிப்படையான நிபந்தனையாக இருந்தது.

**நீடித்த யுத்தம்** என்ற நூல் ஜப்பான் அதனுடைய பெருமளவி லான தாக்குதலை வூகானுக்கு எதிராக துவக்கிக் கொண்டிருந்த பொழுது மற்றும் தேசிய சரணாகதி மற்றும் துரிதமான வெற்றி, ஆகிய முட்டாள்தனமான தத்துவங்கள் அதிகமாக அடிபட்டுக்

கொண்டிருந்த பொழுது பிரசுரிக்கப்பட்டது. மார்க்சிய-லெனினிய பொருள் முதல்வாத தத்துவங்கள் பிரயோகித்துக் கொண்டு, தோழர் மாசே-துங் இத்தகைய தத்துவங்களை முழுமையாக மறுத்துரைத்து, ஒரு நீடித்த யுத்தத்திற்கான யுத்த தந்திரப் பாதையை வகுத்து, இந்த யுத்தத்தின் போக்கை பற்றி விஞ்ஞான ரீதியான பார்வையோடு தீர்க்க தரிசனமாகக் கூறினார். இந்த முறையில் இறுதி வெற்றியில் மக்களின் நம்பிக்கையை மகத்தான அளவில் உயர்த்திக் கொண்டும் பலப்படுத்திக் கொண்டும் மற்றும் யுத்தத்தை விஞ்ஞான ரீதியான கோட்பாடுகளின் வழிகாட்டுதலின் கீழ் வைத்துக் கொண்டும் இருந்தார். ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தின் முழுமையான போக்கும் அதனுடைய பார்வையும் சரியான தன்மையை முழுமையாக ஊர்ஜிதம் செய்தது.

**5, யுத்த தந்திர ரீதியான தேக்கத்தின் ஆரம்பக் காலக் கட்டத்தில் நடைபெற்ற எதிர்ப்பு யுத்தம். முதல் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு பேரெழுச்சி. அதன் தோல்வி. சீனப் புரட்சியின் அடிப்படை விதிகள். ஒரு புதிய சீனாவை நிர்மாணிப்பதற்கான திட்டம்.**

யுத்தத்தின் முதலாவது கட்டத்தில் எட்டாவது வழிச் சேனையும் புதிய நாலாவது சேனையும் எதிரியின் அணி வரிசைகளுக்குப் பின்னால் நகர்ந்து சென்று, விரிவானதொரு கொரில்லா யுத்தத்தை நடத்தி, வடசீனாவிலும் மத்திய சீனாவிலும் பல ஜப்பானிய எதிர்ப்புத் தளங்களை உருவாக்கின.

சீனாவின் உறுதியான எதிர்ப்பின் காரணமாகவும் ஜப்பானுடைய ஆயுதப்படைகளின் பற்றாக்குறையின் காரணமாகவும், ஜப்பானியப் படையெடுப்பாளர்கள் கான்டனையும் ஊகானையும் அவர்கள் கைபற்றிய பிறகு அவர்களது முன்னேறித் தாக்குதலை நிறுத்தும்படி நிர்பந்திக்கப்பட்டிருந்தார்கள். அவர்களது பின்னணி வரிசைகள் சீனாவின் சக்திவாய்ந்த கொரில்லா படைப்பிரிவுகளால் தாக்குதலுக்கு இடைவிடாமல் அம்பலமாகி இருந்தமையால் அவர்கள் கைப்பற்றியிருந்த ஏரியாக்களைப் பாதுகாப்பதற்கு அவர்கள் திரும்பிப் போக வேண்டியிருந்தது. இந்த முறையில் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம், யுத்த தந்திர ரீதியான தேக்கநிலைக் கட்டத்திற்கு கடந்து சென்றது.

1938 மழைககலத்தில் இருந்து 1940 இறுதி வரைக்கும் இந்த கட்டத்தின் ஆரம்பகாலகட்டத்தில், எதிரி வரிசைகளுக்குப்

பின்னால் இருந்த தளங்களும், மக்களின் ஆயுதப்படைகளும் தொடர்ந்து வளர்ந்துக் கொண்டிருந்தன. ஆகவே, கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக எதிரி படிப்படியாக அவனது பிரதான படைகளை திருப்புவதற்கு ஆரம்பித்தான்; அதே சமயத்தில் கோமிங்டாங்கை சரணடையச் செய்ய தூண்டுவதற்கு முக்கியமாக அரசியல் சாதனங்களைப் பயன்படுத்திக் கொண்டு இருந்தான். இடைக் காலத்தில் ஐரோப்பாவில் மாபெரும் பதட்டத்தினால் எதிர்நோக்கபட்டு, அமெரிக்கா பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் சரணடையும்படி கோமின்டாங் அரசாங்கத்தை நிர்பந்திக்க முயற்சித்தன; சீனாவின் நலன்களைப் பாதிக்கச் செய்து சோவியத் யூனியன் மீது படையெடுக்கும்படி ஜப்பானை தூண்டுவதற்கு அந்நாடுகள் நம்பிக் கொண்டு இருந்தன.

மக்களின் ஜப்பானிய எதிர்ப்பு சக்திகளின் வளர்ச்சியின் விளைவாக, சரணடையும்படி கோமிங்டாங் அரசாங்கத்தை-தூண்டுவதற்கு ஜப்பானால்செய்யப்பட்ட முயற்சிகளாலும் அதே குறிக்கோள்களுடனும் அமெரிக்காவினாலும் பிரிட்டனாலும் செய்யப்பட்ட முயற்சிகளாலும் கோமிங்டாங், கம்யூனிஸ்ட் கட்சியின்பால் தீவிர எதிர்ப்பைக் காட்டும் ஒரு கொள்கையையும் ஜப்பானின்பால் செயலற்ற எதிர்ப்பினைக் காட்டும் ஒரு கொள்கையினையும் அனுசரித்தது.

*(1)* மக்களின் ஜப்பானிய எதிர்ப்பு சக்திகளின் வளர்ச்சி, ஊகான் வீழ்ச்சிக்கு முன்பு, வடசீனாவில் எதிரியின் படை வரிசைகளுக்குப் பின்னால் நான்கு அடித்தள ஏரியாக்கள் அமைக்கப் பட்டிருந்தன. ஷான்சி-சகார்-ஹோப்பேய், ஷான்சி- ஹோப்பே ஷான்டுங்-ஷான்சி-சியூவான் மற்றும் ஷாட்டுங் அடித்தள ஏரியாக்கள், இந்த நகரம் இழக்கப்பட்டதைப் பின் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளில், இந்த தளங்கள் சீராக விரிவுபடுத்தப் பட்டன.

எதிரியின் அணிவரிசைகளுக்குப் பின்னால் ஸ்தாபிக்கப்பட்ட முதல்தளம் ஷான்சி-சகார்-ஹோபேய்-அடித்தள ஏரியாவாக இருந்தது. அது ஐந்து பிரதான ரயில்வேக்களான பீகிங்-ஹான்கோ, பீகிங்-பாலோடேன், டாடுங்-பூச்சே, செங்டிங்-தையுவான், மற்றும் பீகிங்-சென்யாங்-ஆகியவை சந்திக்கும் ஒரு ஏரியாவில் இருந்தது. இந்த முறையில் பீகிங், டியென்சின், சீசியா-சுவாங், பாவோடிங், டாடுங், சாங்சியாகோவ் மற்றும் செங்டே ஆகிய இப்படிப்பட்ட யுத்ததந்திர ரீதியான மையங்களையும் மற்றும் செய்திப் போக்குவரத்தின் பிரதான பாதை

களையும் வீழ்ச்சி பெறச் செய்வதற்கு இவற்றில் இருந்து நேர்த்தியான ஒரு சாதகமான தளத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

1940 ஆகஸ்டில், ஷான்சி, ஹோப்பே, ஷான்டுங் மற்றும் ஹோனான் ஆகிய மாகாணங்களில் இருந்த அடித்தள ஏரியாக்கள் ஒன்று படுத்தப்பட்டு டைகாங் மலைகளில் இருந்த அதன் முதல் அடித்தளத்தில் இருந்து கொரில்லா யுத்தம் பரந்த ஒரு பிரதேசத்திற்கு பரவிற்று; மேற்கில் டாடுங்-பூச்சோ ரயில்வே மற்றும் ஃபென் நதியில் இருந்து கிழக்கில் போஹை குடாவின் கரைக்கும், மற்றும் வடக்கில் செங்டிங்-தையுவான் மற்றும் சாங்ஷியன்-சிசியாசுவாங் ரயில்வேக்களில் இருந்து தெற்கில் மஞ்சள் நதி வரைக்கும் பரந்த ஒரு பிரதேசத்திற்கு விஸ்திரித்துக் கொண்டிருந்தது.

ஷான்சியிலும் சியூவானிலும் இருந்த பலவேறு தளங்கள் ஷான்சி-சியுவான் அடித்தள ஏரியாவாக ஒன்று படுத்தப்பட்டு 1940 பிப்ரவரியில் ஒரு ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக அரசாங்கம் அமைக்கப்பட்டது. வடசீனாவில் எதிர்ப்பு யுத்தத்தை ஆதரிப்பதற்கும் வடமேற்கு சீனாவை எதிரிக்கு எதிராக பாதுகாப்பதற்கும் இந்த ஏரியா ஒரு யுத்த தந்திர ரீதியான கோட்டையாக மாறி இருந்தது.

115ஆவது டிவிஷனின் பிரதான படைகள் ஷான்சியில் இருந்து ஷாங்டுங்கிற்கு நகர்ந்து சென்று ஸ்தலத்தில் உள்ள கொரில்லா படைப் பிரிவுகளோடு சேர்த்துக் கொண்டது. 1940 இறுதியில் ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக அரசாங்கங்கள் பல கிராமப்புற பிரதேசங்களில் அமைக்கப்பட்டன. பல அடித்தள ஏரியாக்கள் மத்திய ஷாங்டுங்கிலும், தெற்கு ஷாங்டுங்கிலும், போஹை ஏரியாவிலும், மற்றும் இதர இடங்களிலும் நிலைநாட்டப்பட்டன.

மத்திய சீனாவை, புதிய நான்காவது சேனை தெற்கு கியாங்சுவிலும் வடக்கு கியான்சுவிலும், மத்திய அன்வெயிலும் குவாய் நதிக்கு வடக்கிலும் மற்றும் ஹூப்பே, ஹோனான் மற்றும் அன்வெய் ஆகிய மாநிலங்களின் எல்லைகளிலும் அடித்தள ஏரியாக்களை ஸ்தாபித்து, இரண்டு தலைமை காரியாலயங்களையும் ஏற்பாடு செய்து, யாங்ட்சி நதியின் இரு பக்கத்திலும் கெரில்லா யுத்தத்தை ஒரு ஒன்றுபடுத்தப்பட்ட தலைமையின் கீழ் கொண்டு வந்தது. மத்திய சீனா அடித்தள ஏரியா பரந்த ஒரு பிரதேசத்தைக் கொண்டிருந்தது; இந்த பிரதேசம் கிழக்கில் கடலை எல்லையாகவும், மேற்கில் ஊடாங்கி மலைகளால் திரை

போல் மறைக்கப்பட்டும், வடக்கில் ஹுங்காய் ரயில்வேயில் இருந்து தெற்கில் சிங்கியாங் கியாங்சி ரயில்வே வரையிலும் விஸ்தரித்துக் கொண்டிருந்தது. கியாங்சு, சிகியாங், அன்வெய் ஹோனான் மற்றும் ஹுப்பேய் மாகாணங்களின் பல பகுதிகளை உள்ளடக்கிக் கொண்டு அது ஒரு சாதகமான வசதியான இடத்தைக் கொண்டிருந்தது; அந்த இடத்தில் இருந்து, நான்கிங், ஷாங்காய், சூசோ, ஊகங் மற்றும் ஹாங்கோவ் போன்ற எதிரியின் யுத்த தந்திர ரீதியான முக்கியமான மீட்பதற்கும் மத்திய சீனாவை கட்டுப்படுத்தி மேற்கு நோக்கி முன்னேறுவதற்கும் ஜப்பானிய ராணுவம் வைத்திருந்த சூழ்ச்சியான திட்டத்திற்கு கடுமையான அடி கொடுக்க வசதியாக இருந்தது.

கான்டன் வீழ்ச்சிக்குப் பிறகு தெற்கு சீன ஜப்பானிய எதிர்ப்புத்தளம் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தல ஸ்தாபனங்களின் தலைமையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது.

யுத்த ஆரம்பத்தில் இருந்து 1940 இறுதி வரையிலும், மக்கள் படை 150 கிராமப்புறங்களை மீட்டது; மற்றும் ஜப்பானிய துருப்புகளுக்கும் பொம்மை துருப்புகளுக்கும் மொத்தத்தில் 4லட்சம் பேர்களுக்கு தேசங்களை உண்டாக்கிற்று. அது சீனாவில் இருந்த ஜப்பானிய துருப்புகளில் பாதிப் பேரைப் பெற்றிருந்தது. விடுதலை பெற்ற மற்றும் கொரில்லா ஏரியாக்கள் 100 மில்லியன் ஜனத்தொகையைக் கொண்டிருந்தது. மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை 8 லட்சமாக அதிகரித்து இருந்தது. தேக்கநிலை கட்டத்தில், எதிரியின் அணி வரிசைகளுக்குப் பின்னால் இருந்த மக்களின் ஆயுதப் படைகள் தான் உண்மையிலேயே ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளை தடுத்து நிறுத்தி வைத்து இருந்தது. வேறு வார்த்தையில் சொன்னால் அடித்தள ஏரியாக்கள் எதிர்ப்பின் மையமாக இருந்தன. மற்றும் மக்கள் படை அதனுடைய பிர்தான சக்தியாக இருந்தது.

மக்கள் படை வீரம் செறிந்த முறையில் எதிரியின் எண்ணற்ற துடைத்தெறியும் முயற்சிகளையும் சுற்றி வளைக்கும் நடவடிக்கைகளையும் நொறுக்கித் தள்ளிற்று. இத்தகைய வெற்றிகளில் இருந்து அடித்தள ஏரியாக்களின் சீரானதொரு வளர்ச்சி ஏற்பட்டது.

1939-செப்டம்பரில் இருந்து நவம்பர் வரையிலும், ஷான்சி-சகார்-ஹோப்பே எல்லைப் பிரதேசத்தின் 50,000 எதிரித் துருப்புகளில் செய்யப்பட்டிருந்த முற்றுகையை மக்கள் படை நொறுக்கி

தள்ளிற்று.

100 படை பிரிவுகளின் இயக்கம், (Hundred Regiments Campaign) மாபெரும் நடவடிக்கையாக இருந்தது; இந்த நடவடிக்கை ஆகஸ்டில் இருந்து டிசம்பர் வரையிலும் மூன்றரை மாதங்கள் வரையிலும் நீடித்தது. மொத்தத்தில் 4 லட்சம் பேரைக் கொண்ட 115 மக்கள் படைப்பிரிவுகள் அதில் ஈடுபட்டு இருந்தன.

இயக்கத்தின் முதல் கட்டத்தில், மக்கள் படையின் குறிக்கோள் எதிரியின் செய்திப் போக்குவரத்து பாதைகளைத் தகர்த்து எறிவதாக இருந்தது. செங்டிங்-டையுவான் ரயில்வேயை அதனுடைய பிரதான இலக்காகக் கொண்டு, வடசீனாவில் அனைத்து ரயில்வேக்களுக்கும் எதிராக தாக்குதல் திசை திருப்பப் பட்டு இருந்தது. இரண்டாவது கட்டத்தில் எதிரியின் பலமான தளங்களைக் தாக்குவது குறிக்கோளாக இருந்தது; பிரதான இலக்கு ரயில்வேக்களை ஒட்டி இருந்த நிலைகளும் மற்றும் அடித்தள ஏரியாக்களில் இருந்த எதிரியின் நிலைகளும் ஆகும். மூன்றாவது கட்டத்தில், மக்கள் படை எதிரியின் "முற்றுகை" இயக்கங்களை எதிர் நோக்கிற்று, டைகாங் மலைகள், வட மேற்கு ஷான்சி, ஷான்சி-சகார்—ஹோப்பே மத்திய ஹோப்பேய் மற்றும் டாசிங் மலைகள் ஆகிய 5 அடித்தள ஏரியாக்களில் எதிரியின் துருப்புகளை நிர்மூலம் செய்தது. இந்த இயக்கங்கள் மூன்று பிரதான விளைவுகளை உண்டாக்கின. தளங்களை பிளவுபடுத்தும் மற்றும் முற்றுகை இடும் எதிரியின் கொள்கை தோற்கடிக்கப்பட்டது; பெரும் எண்ணிக்கையிலான எதிரி துருப்புகள் தடுத்து நிறுத்தப்பட்டு பிரதான அரங்கில் ஒரு முன்னேறித் தாக்குதலை தொடுப்பதினின்றும் தடுக்கப்பட்டன; மற்றும் சமரசம் செய்து கொள்வதற்கும் சரணாகதி அடைவதற்கும் விரும்பிய வெறி பிடித்தவர்களின் சூழ்ச்சிகள் முறியடிக்கப் பட்டன. மக்கள் படையினால் காட்டப்பட்ட பலமான சக்தியினால் எதிரி மிகவும் அலறிப் போயிருந்தான். அப்பொழுதிலிருந்து தாக்குதலுக்கான அதனுடைய திட்டங்களை ஜப்பான் சரி செய்து கொண்டு, வடசீனாவில் இருந்த அடித்தள ஏரியாக்களுக்கு எதிராக அதனுடைய சகல படைகளையும் குவித்து அவைகளுக்கு எதிராக முழுமையான யுத்தத்தை — ராணுவ பொருளாதார மற்றும் கலாச்சார யுத்தத்தை—நடத்திற்று.

யுத்த ஆரம்பத்தில் இருந்து ஜப்பானின் உதவியோடு கம்யூனிஸ்ட் கட்சியையும் மக்களின் ஆயுதப் படைகளையும்

பலஹீனப்படுத்தவும் ஒழித்துக் கட்டவும் கோமிங்டாங் நினைத்திருந்தது. ஆனால், அவர்களது நம்பிக்கைக்கு முரணாக, மக்கள் படைகள் சீராக வளர்ந்தன. விடுதலை பெற்ற ஏரியாக்களில் போராட்ட அரங்கில் பெறப்பட்ட வெற்றிகள் கோமிங்டாங் துருப்புகளுக்கு கிடைத்த பயன்களோடு ஒப்பு நோக்கிப் பார்க்கும் போது கூர்மையானதொரு வேறுபாட்டினைக் கொண்டிருந்தன; இது சியாங்காய்-ஷேக்கிற்கு அதிகமான அதிர்ச்சியையும் மானக்கேடான இழிவையும் உண்டாக்கிற்று, யுத்தத்தில் ஏற்பட்ட இடைவிடாத தோல்விகளும் மற்றும் வளர்ந்து கொண்டிருந்த கம்யூனிஸ்ட் எதிர்ப்பு உணர்வும் கோமிங்டாங்கினை இன்னும் அதிக மூர்க்கத்தனமானதாக்கும். மிகவும் அதிகமான கண்மூடித்தனமான கம்யூனிஸ்ட் எதிர்ப்பு நடவடிக்கைகளும் மக்கள் விரோத நடவடிக்கைகளிலும் ஈடுபடும்படி கோமிங்டாங்கினை துரத்திச் சென்றது.

(2) கோமின்ங்டாங்கை சரணடையத் தூண்டுவதற்கு ஜப்பானின் முயற்சி.

யுத்தத்தின் ஆரம்பகால கட்டத்தில், ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் கோமிங்டாங் அதிகாரிகள் பலத்தை மட்டுமே கவனத்தில் எடுத்துக் கொண்டு, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பலத்தை அலட்சியபடுத்தினர். ஆகவே கோமிங்டாங்கின்பால் அவர்களது கொள்கை ராணுவ ரீதியாக முன்னேறித் தாக்கும் ஒரு கொள்கையாகவும் மற்றும் அதனுடைய சரணாகதியை தூண்டுவதற்கு அரசியல் சாதனங்களைக் கூடுதலாகப் பயன்படுத்தும் ஒரு கொள்கையாகவுமிருந்தது. ஆனால் தேக்கநிலை கட்டத்தில் கோமிங்டாங்கைக் காட்டிலும் கம்யூனிட்டு கட்சியின்பால் எதிரி மிக் அதிகமாக கவனத்தைச் செலுத்தி அவனது பிரதான படைகளை அவனது பின்னணி தளங்களில் இருந்த போர் அரங்கங்களுக்கு எதிராக திரும்பினான். அதே சமயத்தில் கோமிங்டாங் பிடிப்பிலிருந்த ஏரியாக்களில் அவனது யுத்த தந்திர ரீதியான முன்னேறித் தாக்குதலைக் கொண்டிருந்தான். கோமிங்டாங்கின்பால் அனுஷ்டித்த அவனது கொள்கையில், எதிரி அதனைச் சரணடையும்படி தூண்டுவதற்கு பிரதானமாக அரசியல் உபாயங்களை நம்பிருந்தான். ராணுவ ரீதியான அடிகளைக் கொடுப்பது இரண்டாந்தரமானதாக ஆகி இருந்தது.

1938 டிசம்பரில் ஜப்பானிய பிரதம மந்திரி கோனோ-யீசினாவின்பால் ஜப்பானுடைய அடிப்படையான கொள்கை

சம்பந்தமாக ஒரு அறிக்கையை வெளிவிட்டார். அது சீனாவை அடிமைப்படுத்துவதை நோக்கமாக கொள்ளுகின்ற ஒரு கொள்கையாகும். அவருடைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த ''சீன ஜப்பானிய பொருளாதார ஒத்துழைப்பு'' பின்வருமாறு பின்னர் வரையறுத்துக் கூறிற்று. மத்திய சீனாவிலும் தெற்கு சீனாவிலும் போடப்படும் மொத்த முதலீடுகளில் சீன முதலாளிகளால் 51 சதவீதமும் ஜப்பானிய முதலாளிகளால் 49 சதவீதமும் செய்யப்படும். அதே சமயத்தில் வட சீனாவில் போடப்படும் சீன மற்றும் ஜப்பானிய முதலீடுகளின் மாற்றப்படும் சில பொருளாதார சலுகைகளை ஆசையாக காட்டுவதன் மூலம் சீனாவின் ஜப்பானிய எதிர்ப்பு முகாமினைப் பிளவு படுத்துவது ஜப்பானுடைய குறிக்கோளாக இருந்தது; மற்றும் அப்படிச் செய்வதன் மூலம் நாட்டை அடிமைப் படுத்தும் அதனுடைய குறிக்கோளை எய்துவதாகவும் இருந்தது. கோனோ-யி மந்திரிசபையின் வீழ்ச்சிக்குப் பிறகு, புதிய பிரதம மந்திரியான கிச்சி ரோ ஹிரானுமா, 1939-மார்ச்சில் நிகழ்த்திய ஒரு உரையில் மோதல்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கு சீனாவோடு பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு ஜப்பான் தயாராக இருந்தது என பிரகடனம் செய்தான். கோமிங்டாங் அரசாங்கம் ஜப்பானின்பால் அதனுடைய போக்கினைமறுபரிசீலனை செய்து ஜப்பானோடு ஒத்துழைப்பதற்கு ஒப்புக்கொள்ளும் நிபந்தனையின் பேரில் சீனாவோடு பேச்சுவார்தை நடத்துவதற்கு ஜப்பான் தயார் என்று அப்பிரகடனத்தில் கூறி இருந்தான். இந்த பகிரங்க அறிக்கையில் ஜப்பானிய அரசாங்கம் அதனுடைய கொள்கையை மாற்றிவிட்டது என்பதை தெளிவுபடுத்திற்று. சியாங்காய்-ஷேக்கின் ராஜினாமாவை வலியுறுத்துவதற்கு பதிலாக அது இப்பொழுது அவனைச் சரணடையும்படி தூண்டிக் கொண்டிருந்தது.

(3) கோமிங்டாங் அரசாங்கத்தினைச் சரணடைய தூண்டுவதற்கு பிரிட்டன் மற்றும் அமெரிக்காவின் சூழ்ச்சிகள், அமெரிக்கா பிரிட்டன், மற்றும் ஐரோப்பாவில் பிரான்ஸ் ஆகிய நாடுகளால் பின்பற்றப்பட்ட ''தலையிடாக் கொள்கை'' சாராம்சத்தில், தங்களுடைய சொந்த லாபத்திற்காக ஒரு ஆக்கிரமிப்பு யுத்தத்தை மறைமுகமாக தூண்டும் ஒரு கொள்கையாக இருந்தது. ஆனால் பாசிஸ்டு நாடுகளின் பேராசைக்கு எல்லையே கிடையாது. இந்த கொள்கைக்கு முதலில் இறையாக விழுந்தது ஸ்பெயின்; ஆஸ்திரியாவும் செக்கோஸ்லோவாகியாவும் அதனை பின் தொடர்ந்தன.

ஒரு விவரம் என்ற முறையில் இந்த கொள்கையைப் பின்பற்று வதில், அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் ''தங்களுடைய சொந்த பெருவிரலை நசுக்கிக் கொள்வதற்காக மட்டுமே ஒரு பாறையை தூக்கிக் கொண்டு'' தங்களையும் மற்ற வர்களையும் துன்புறுத்திக் கொண்டிருந்தார்கள்.

1938 மார்ச்சில் ஆஸ்திரியாவை கபளீகரம் செய்த பிறகு நாஜி-ஜெர்மனி செக்கோஸ்லோவாகியாவை சுடேற்றன் பிர தேசத்திற்கும் உரிமை கொண்டாடிற்று. ஆக்கிரமிப்பிற்கு கூட்டு முறையில் எதிர்ப்பு கொடுப்பதற்கு சோவியத் யூனியன் முன் வைத்த முன்மொழிவு பிரான்சும் செக்கோஸ்லோவாகியாவும் நிராகரித்தன. 1938 செப்டம்பர் 30இல், மியூனிச் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று; சுடேற்றன் பிரதேசத்தை ஜெர்மனுக்கு விட்டுக் கொடுப்பதற்கு செக்கோஸ்லோவாகியா நிர்ப்பந்திக்கப் பட்டது.

1939 மார்ச் 15-இல் ஜெர்மனி செக்கோசுலோவாகியா முழு வதையும் கைப்பற்றி மேலும் கிழக்கே போலந்திற்குள் முண்டி யடித்துக் செல்வதற்கு தயாராக இருந்தது. இந்த நெருக்கடி யான சமயத்தில், பாசிஸ்டு அரசுகளால் அபாயமுறுத்தப் பட்ட நாடுகளின் கூட்டு பாதுகாப்பிற்காக பிரான்சோடும், பிரிட்டனோடும் ஒரு மூன்று நாட்டு கூட்டணி வைத்துக்கொள்வ தற்கு சோவியத் யூனியன் பிரேரேபித்தது. மூன்று அரசுகளுக் கிடையே பேச்சுவார்த்தைகள் 1939 மார்ச்சிலிருந்து ஆகஸ்டு வரையிலும் தொடர்ந்து நடைபெற்றது. பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு அரசாங்கங்கள் சமத்துவத்தின் அடிப்படையில் சோவி யத் யூனியனோடு ஒரு உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கு அவர்களுக்கு இருந்த அலட்சியத்தை வெளிப்படுத்தின. போலந்து, ருமேனியா, துருக்கி. கிரீஸ் மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகளின் (இத்தகைய நாடுகளை பாதுகாப்பதில் பிரிட்டனும், பிரான்சும் அக்கறை கொண்டிருந்தன) பாதுகாப்பிற்கு சோவி யத் யூனியன் பொறுப்பேற்க வேண்டுமென்று அவர்கள் கோரி னார்கள்; ஆனால் சோவியத் யூனியனுடைய அண்டை நாடு களான, அதாவது லாட்வியா, எஸ்டோனியா மற்றும் பின் லாந்து ஆகிய நாடுகளின் பாதுகாப்பிற்கு பொறுப்பேற்க மறுத் தார்கள். அவர்கள் தங்களுடைய சொந்த பாதுகாப்பை மட்டும் பாதுகாத்துக்கொள்ள விரும்பினார்கள். ஆனால் சோவியத் யூனியனைப் பாதுகாக்க விரும்பவில்லை. ஆகவே பேச்சுவார்த்தை கள் தோல்வியுற்றது இயல்பாகவே இருந்தது.

சோவியத் யூனியனோடு பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு அரசாங்கங்கள் பேச்சுவார்த்தையினை நடத்திக் கொண்டிருந்த அதே சமயததில் பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு அரசாங்கங்கள் நாஜி - ஜெர்மனியோடும் ராஜ தந்திர பேச்சுக்களை நடத்திக் கொண்டிருந்தார்கள். உலகம் முழுவதும் செல்வாக்கு மண்டலங்களை மறு பங்கீடு செய்வதற்காக ஜெர்மனியோடு ஒரு உடன்பாட்டிற்கு வருவதற்கு அவர்கள் தயார் செய்து கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்டதொரு உடன்பாடு வெற்றிகரமாக முடியும் பட்சத்தில் போலந்தின் பந்தோபஸ்தை உத்திர வாதம் செய்வதற்கு பிரிட்டன் மறுத்திருக்கும். இந்த முறையில் ஜெர்மன் ஆக்கிரமிப்பைக் கிழக்கு நோக்கி திருப்பியிருக்கும். இத்தகைய சூழ்நிலைமைகளின் கீழ், தனக்கு எதிராக முடுக்கிவிடப்பட்டிருக்கும் ஒரு யுத்தத்தில் பிணைக்கப்படும் ஒரு அபாயத்திற்கு எதிராக சோவியத் யூனியன் தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருந்தது. ஆகவே. ஒரு ஜெர்மன் பிரேரேபணையை ஏற்றுக்கொண்டு 1939 ஆகஸ்டு 23-இல் ஜெர்மனியோடு ஒரு பரஸ்பர அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் ஒன்றினைச் சோவியத் யூனியன் செய்து கொண்டது; அப்படிச் செய்து கொண்டதின் மூலம் 1941 ஜூன் 21-ந் தேதி வரையிலும் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்கு அது தனக்கு சமாதானத்தை வென்று பெற முடிந்தது

1939 செப்டம்பர் 1-ல், ஜெர்மனி போலந்தின் மீது படையெடுத்தது. இரண்டு நாட்களுக்கு பிறகு பிரான்சும், பிரிட்டனும் ஜெர்மனியின் மீது யுத்தத்தைப் பிரகடனம் செய்தன. இந்த முறையில் இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமாயிற்று.

ஐரோப்பாவில் பதட்டமான நிலைமையான சமாளுக்கும் பொருட்டு, பிரெஞ்சு, பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள், ''தூரகிழக்கில் ஒரு மியூனிச்சை'' உண்டாக்குவதற்கு சதி செய்தார்கள். 1939 ஜூனில் ஒரு பசிபிக் மகாநாட்டை கூட்டுவதற்கு அவர்கள் பிரேரேபித்தனர். சுடேற்றன் பிரதேசத்தை ஜெர்மனி ஆக்கிரமித்ததை அங்கீகரித்ததினால் செக்கோசுலோவாகியா மற்றும் சோவியத் யூனியன் ஆகிய நாடுகளின் மக்கள்களின் நலன்களை அடகு வைத்து ஜெர்மனியோடும், இத்தாலியோடும் மியூனிச்சில் பிரான்சும், பிரிட்டனும் சமரசம் செய்ய முயற்சித்தது போல், பசுபிக் மகாநாட்டிலும் அமெரிக்காவும், பிரிட்டனும், பிரான்சும் சீன மக்

களின் நலன்களை அடகுவைத்து ஜப்பானோடு சமரசம் செய்ய முயற்சித்தார்கள். மற்றும் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் ஈட்டி முனையைச் சோவியத் யூனியனுக்கெதிராகக் திருப்புவதற்கும் முயற்சித்தார்கள்.

ஒரு புறம் பிரிட்டன் மற்றும் பிரான்சுக்கும் மறுபுறம் ஜெர்மனிக்குமிடையே யுத்தம் வெடித்தபொழுது, அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஜெர்மனிக்கு எதிராகத் தங்களது சக்திகளைக் குவிக்கும் பொருட்டு, ஜப்பானோடு சமரசம் செய்து கொள்வதற்கு ஆவலோடு இருந்தார்கள். ஆகவே, சீன அரசாங்கத்தைச் சரணடையச் செய்ய நிர்ப்பந்திப்பதற்கு அவை முயற்சித்தன.

இத்தகைய சூழ்நிலைமைகளில் கோமிங்டாங்கிலிருந்த ஜப்பானிய ஆதரவு வாங்-சின்வெய் கும்பல் பகிரங்கமாக எதிரியிடம் செல்வதில் முதலாவதாக இருந்தது. வாங்-சின்வெய் 1938 டிசம்பர் 18-இல் சுங்கிங்கிலிருந்து தப்பி ஓடி, கோனோயி-யின் கருத்துக்களை ஆதரித்து ஒரு அறிக்கையை ஹனோயிலிருந்து வெளியிட்டான். சிறிது காலத்திற்கு பிறகு நான்கிங்கில் அவன் ஒரு பொம்மை அரசாங்கத்தை அமைத்தான். இந்த முறையில், சீன பெரு முதலாளித்துவ வர்க்கத்தின் ஒரு பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்திய வாங்கிங்-வெய் கும்பல் பகிரங்கமாக துரோகியாக மாறி மக்களின் எதிரியானது.

இடைக்காலத்தில் அமெரிக்க ஆதரவு பெருமுதலாளி வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்திக் கொண்டு கோமின்டாங்கிலிருந்த சியாங்காய்-ஷேக் கும்பலும் சரணாகதியின் விளிம்பில் இருந்தது.

1939 ஜனவரியில், கோமின்டாங் கட்சியின் மத்திய நிர்வாகக் கமிட்டியின் ஒரு கூட்டத்தில் கடைசி வரையிலும் எதிர்த்துப் போராடும் அவனது விருப்பத்தை சியாங்காய்-ஷேக் பிரகடனம் செய்தான். ஆனால், ''கடைசி வரையிலும்'' என்பதினால் அவன் அர்த்தப்படுத்தியது என்னவென்றால், லூகோஷியாவோ சம்பவத்திற்கு முன்பிருந்த நிலையை மீட்பதைக் காட்டிலும் அதிகமானது எதுவுமல்ல. தெற்கு சீனாவிலும் மத்திய சீனாவிலும், ''நான்கு பெரிய குடும்பங்களின்'' நலன்களையும் ஆதிக்கத்தையும் அப்படியே வைத்துக் கொள்வதற்கும் மற்றும் அமெரிக்க, பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளின் நலன்களையும் ஆதிக்கத்தையும் அப்படியே வைத்துக் கொள்வதற்கும்

ஜப்பான் ஒப்புக்கொள்ளுமேயானால், சியாங்காய்-ஷேக் கும்பல் சரணடையவும் துரோகியாகமாறவும் தயாராக இருந்தது. கோமிங்டாங் அரசாங்கத்தின் அயல்நாட்டு அமைச்சராக இருந்த வாங்-சுங்-ஹி 1939-செப்டம்பரில் பின்வருமாறு பிரகடனம் செய்தான்:

"யுத்தம் வெடித்ததிலிருந்து சமாதான பூர்வமான தீர்விற்கான எந்த சந்தர்ப்பத்தையும் சீனா ஒருபோதுமே நிராகரிக்கவில்லை." வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், சமரசம் செய்து கொள்வதற்கும் சரணாகதி அடைவதற்கும் கோமின்டாங் அரசாங்கம் ஒருபொழுதும் அதன் நடவடிக்கைகளை நிறுத்தவில்லை.

சரணாகதி அடைவதற்காக பாதையை ஒழுங்குபடுத்தும் பொருட்டு, சியாங்காய்-ஷேக் கும்பல் கம்யூனிஸ்டு கட்சியையும் மக்களையும் எதிர்ப்பதில் அதனுடைய சக்திகளை குவித்தது. ஏனெனில், சீனக் கம்யூனிஸ்டு கட்சியும் அதன் தலைமையின் கீழிருந்த மக்களின் ஜப்பானிய எதிர்ப்பு சக்திகளும் சமரசத்தையும் சரணாகதியையும் மிக உறுதியாக எதிர்த்துக் கொண்டிருந்தார்கள். விடாக்கண்டர்கள் ஒரு கம்யூனிஸ்டு எதிர்ப்பு உள்நாட்டு யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட முயற்சித்தார்கள்; ஏனெனில், இது தவிர்க்க முடியாதபடி எதிர்ப்பு யுத்தத்திற்கு ஒரு முடிவு கட்டி அவர்களது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு, ஜப்பானோடு சரணாகதிக்கான ஒரு உடன்பாட்டினைச் செய்து கொள்வதற்கு வழி நடத்திச் செல்லும்.

இந்த குறிக்கோளுடன், சியாங் கும்பல் அதனுடைய கம்யூனிஸ்டு எதிர்ப்பு நடவடிக்கைகளை அதிகரித்தது. முதலாவதாக, கோமின்டாங் மத்திய நிர்வாக கமிட்டியின் தொடர்ச்சியான மாநாடுகளில் கம்யூனிஸ்டு எதிர்ப்பு மற்றும் மக்கள் விரோத தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன; "கம்யூனிஸ்டு பிரச்னையை சமாளிப்பதற்கான நடவடிக்கைகள்," "எதிரி ஆக்கிரமித்துள்ள ஏரியாக்களில் கம்யூனிஸ்டு நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான நகல்திட்டம்", "அந்நிய கட்சி பிரச்னையைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் அந்நிய கட்சி பிரச்சினையைச் சமாளிப்பதற்கான வழிகாட்டுதல்கள்" போன்ற இப்படிப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அடித்தள ஏரியாக்களுக்கு எதிராக ஒரு ராணுவ ரீதியான முன்னேறித் தாக்குதலைத் துவங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

ஷென் சி-ஹான் சூநிங்சியா எல்லைப் பிரதேசத்தையும் மற்றும் வட சீன அடித்தள ஏரியாக்களிலிருந்த சகல ஜப்பானிய எதிர்ப்பு ராணுவ மற்றும் சிவில் ஸ்தாபனங்களையும் ஒழித்துக் கட்டி, இத்தகைய ஏரியாக்களில் கம்யூனிஸ்டு எதிர்ப்பு தளங்களை அமைத்து பாவோசியா அமைப்பை* பிரயோகிக்கவும் கோமின்டாங் விடாக்கண்டர்கள் முயற்சித்தார்கள். அரசியல், ராணுவ மற்றும் பொருளாதார விவகாரங்களில் கட்சியினால் தலைமை தாங்கப்பட்ட மக்களின் ஜப்பானிய எதிர்ப்பு சக்திகளைக் கட்டுப்படுத்துவதும், நாசவேலை செய்வதும், ஒழித்துக் கட்டுவதும் அவர்களது நோக்கமாக இருந்தது; மற்றும் வெகுஜன இயக்கங்களிலும் பிரச்சாரத்திலும் கட்சியினால் தலைமை தாங்கப்பட்ட மக்களின் ஜப்பானிய விரோத சக்திகளைக் கட்டுப்படுத்துவதும் நாசவேலை செய்வதும் ஒழித்துக்கட்டுவதும் கூட அவர்களுடைய நோக்கமாக இருந்தது. இதை நாடு முழுவதிலும் நிறைவேற்ற முடியுமென்றும், ஆனால் முதலில் வடக்கு ஷென்சியிலும் வட சீனாவிலும் நிறைவேற்ற முடியுமென்றும் அவர்கள் நம்பினார்கள்.

இந்தப் பிற்போக்குத் திட்டம் சீக்கிரத்திலேயே நடைமுறையில் வெளிப்பட்டது. ஷென்சி - காங்சூ - நிங்சியா எல்லைப் பிரதேசம் முற்றுகையிடப்பட்டது. எட்டாவது வழிச் சேனை மிசாங்-ஷியன்-ஷிசியா ஷியாங் மற்றும் செங்டிங்-டையுவான் ரயில்வேக்களுக்கு வடக்கேயிருந்த ஏரியாக்களுக்குப் பின்வாங்கும்படி உத்தரவிடப்பட்டது; மற்றும் கோமின்டாங்கின் பெரும் படைகள் ஷாங்சியில் அடித்தள ஏரியாக்களில் ஒன்றின் மீது வடக்கு நோக்கிய தாக்குதலுக்காக குவிக்கப்பட்டிருந்தன. சாங்சியாஹோ-பீகிங் பாதையின் வழியாக மக்களின் ஆயுதப் படைகளுக்கு எதிராக "முற்றுகை இடுவதற்கான" ஒரு இயக்கத்தில் ஈடுபட்டிருந்த ஜப்பானியத் துருப்புகளின் தெற்கு நோக்கிய அணிவகுப்போடு ஒருங்கிணைப்பதை இந்த ராணுவ சாகசம் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. 1938 இலையுதிர் காலத்தில் தெற்கு ஹோப்பெய் நிர்வாக அலுவலகத்தை ஒழித்துவிடும்படி சியாங்காங்-ஷேக் கட்டளையிட்டான். சியாங்கின் இரகசிய உத்தரவுகளின்படி செயல்பட்டு, பிற்போக்குவாதிகள் எல்லா இடங்களிலும் தொல்லையை உண்டாக்கினார்கள். கோமின்டாங் துருப்புகள் 1939 ஏப்ரலில் போஷானில் எட்டாவது வழி சேனையின் ஷாங்டுங் படைப்பிரிவினைத் தாக்கின. ஏப்ரலுக்கும் மே மாதத்துக்கும் இடையே, கோமிங்டாங் துருப்புகள் ஹோப்பெயில் ஷென்ஷியனில் எட்டாவது வழிச் சேனையின் பின்

னணித் தலைமைக் காரியாலயத்தையும் தாக்கினார்கள்; அதே சமயத்தில் மற்றப்படைகள் ஹூனானில் பிங்கியாங்கில் புதிய நாலாவது சேனையின் தொடர்பு அலுவலகத்தைத் தாக்கினார்கள். செப்டம்பரில் கோமின்டாங் துருப்புகள் ஹோப்பெயில் புதிய நான்காவது சேனையின் பின்னணி காரியாலயத்தை முற்றுகையிட்டன. மற்றும் நவம்பரில் கோமின்டாங் ஏஜெண்டுகளும் துருப்புகளும் ஹோனானில் ஷோசனில் புதிய நான்காவது ராணுவத்தின் பின்னணி சேவை அலுவலகத்தைத் தாக்கினார்கள்.

கம்யூனிஸ்டுக் கட்சிக்கெதிராக கோமிங்டாங் பிடாக்கண்டர்களால் ஆரம்பிக்கப்பட்ட அரசியல் ஒடுக்கு முறையும் ராணுவ முன்னேறித் தாக்குதலும் 1939 டிசம்பரிலிருந்து 1940 மார்ச் வரையிலும் இருந்த காலகட்டத்தில் ஒரு உச்ச கட்டத்தை எட்டிப் பிடித்தன. இது, முதல் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு இயக்கமென்று அறியப்படலாயிற்று.

இந்தக் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு இயக்கம் முக்கியமாக ஷென்சி-கான்ஸு-நிங்ஷியா எல்லைப் பிரதேசத்திற்கு எதிராகவும் மற்றும் ஷாங்சியின் மேற்கத்திய, தென்கிழக்குப் பகுதிகளுக்கு எதிராகவும் திசைதிருப்பப்பட்டிருந்தது. 1939 டிசம்பரில் ஷென்சி-கான்ஸு-நிங்ஷியா எல்லைப் பிரதேசத்தை முற்றுகையிட்டுக் கொண்டிருந்த கோமிங்டாங் துருப்புகளை ஒரு முன்னணித் தாக்குதலைத் தொடுக்கும்படி சியாங்காய்-ஷேக் கட்டளையிட்டான். ஷியாங்ஷிக்கு மேற்கில் கோமின்டாங் யுத்தப்பிரபு யென் சி-ஷாங் "ஜப்பானிய எதிர்ப்பு சாகத் துணிந்த படைப்பிரிவுகளை"[10]யும் மற்றும் "ஷாங்ஷி மாகாணத்தில் தேசீய மீட்சிக்கான சுய தியாகக்கழகத்தையும்"[11] தாக்குவதற்கு ஆறு ராணுவங்களின் ஒரு படையைக் குவித்தான். 1940 வசந்த காலத்தில், டைஹாங் மலை ஏரியாவில் எட்டாவது வழிச் சேனையின் பொதுத் தலைமைக் காரியாலயத்தை தாக்கும்படி சியாங்காய்-ஷேக் அவனது துருப்புகளுக்கு கட்டளையிட்டான்.

1939 ஜூலையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி பின்வரும் கோஷத்தை முன்வைத்தது: "எதிர்ப்புப் போரை விடாப்பிடியாக நடத்தி சரணாகதியை எதிர்த்துப் போராடுங்கள்; ஒற்றுமைப்பாட்டினை விடாப்பிடியாகக் கொண்டு பிளவை எதிர்த்துப் போராடுங்கள்; முன்னேற்றத்தில் விடாப்பிடியாக இருந்து பின்நோக்கிச் செல்வதை எதிர்த்துப் போராடுங்

கள்.'' அதனுடைய தலைமையின்கீழ், பிற்போக்கை நோக்கியும் சமரசத்தை நோக்கியும் சென்று கொண்டிருந்த கோமின்டாங்கின் போக்கினை எதிர்த்து தேசம்முழுவதும் உறுதியாக போராடிற்று. ''நாங்கள் தாக்கப்படாவிடில் நாங்கள் ஒருபொழுதும் தாக்க மாட்டோம்; தாக்கப்பட்டால் நாங்கள் நிச்சயமாகத் திருப்பித் தாக்குவோம்'' என்ற கட்டளையில் பொதிந்து கிடந்த உறுதி யான தற்பாதுகாப்புக் கோட்பாட்டினைப் பின்பற்றி, பிற்போக்கு வாதிகளின் முன்னேறிய தாக்குதல்களுக்கு கட்சி கடுமையான எதிர்ப்புகளைக் கொடுத்தது. ஷென்ஷி-கான் — நிகுங்சியா எல்லைப் பிரதேசத்தின்மீது படையெடுத்திருந்த கோமின்டாங் கின் கம்யூனிஸ்ட் எதிர்புத் துருப்புகள் விரட்டியடிக்கப்பட்டன. யென்ஷி-ஷானின் துருப்புகளின்மீது கடுமையான சேதங்களை உண்டாக்கியபிறகு, மக்கள் படை ஷாங்ஷிக்கு வடமேற்கே சென்றுவிட்டது. டைகாங் மலைஏரியாவில் கோமின்டாங் துருப்பு களின் மூன்று படைப்பிரிவுகள் செயல்படாதபடி செய்யப்பட்டன. இந்த முறையில் கம்யூனிஸ்ட் எதிர்ப்புப் படைகள் வீர்ஞ்செறிந்த எதிர்த்தாக்குதல்களின்கீழ் சகல அரங்கங்களிலும் வீழ்ச்சி யடைந்தன.

முதல் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு பேரெழுச்சிக் காலகட்டத்தில் கோமின்டாங் விடாக்கண்டர்களால் தொடுக்கப்பட்ட முன்னேறித் தாக்குதல், அரசியல் மற்றும் ராணுவத் துறை களோடு மட்டும் நின்றுவிடவில்லை; ஆனால் சித்தாந்த அரங்கத் திற்கும்கூட விஸ்தரிக்கப்பட்டிருந்தது. பெரும் பூர்ஷ்வாக்களின் சர்வாதிகாரமாக மட்டுமே இருந்த கோமின்டாங் ஆட்சியின் உண்மையான தன்மையை மூடிமறைப்பதற்கு, அவர்கள் கெமாலிசத்தைப்[12] பற்றியும் பூர்ஷ்வா சர்வாதிகாரத்தைப் பற்றி யும் டமாரமடித்தார்கள். ஜனநாயகப் புரட்சி, சோசலிசப் புரட்சி ஆகிய இரு வெவ்வேறு புரட்சி கட்டங்களைப்பற்றி வேண்டு மென்றே குழப்பிக்கொண்டு, ''ஒரு தனியொரு புரட்சியின்'' முட்டாள்தனமான தத்துவத்தை அவர்கள் விடாப்பிடியாகக் கூறிக் கொண்டிருந்தார்கள்; மக்களின் மூன்று கோட்பாடுகள் சகலவகைப்பட்ட புரட்சிகளுக்கும் பிரயோகமாகும் என்று அடித்துக் கூறியதால் அவர்கள் பொதுவுடமையின் சாத்தியப் பாட்டையே மறுத்துக் கூறினார்கள். எதிர்ப்பு யுத்தத்துக்காக நின்ற கம்யூனிஸ்ட் கட்சியையும் மக்களையும் எதிர்ப்பதற்காகவும் மற்றும் விடாக்கண்டர்கள் விரும்பிய சரணாகதிக்காக மக்களின் உள்ளங்களை தயார்படுத்தவும் இவை அனைத்தும் பயன்

படுத்தப்பட்டன.

ஜப்பானோடு சமரசம் செய்து கொள்வதற்காக கோமின் டாங்கின் முணுமுணுப்பும் மற்றும் ராணுவ, அரசியல், சித்தாந்தத் துறைகளில் அதனுடைய ;கம்யூனிஸ்ட் எதிர்ப்பு நடவடிக்கைகளும், யுத்தம் வெடித்ததில் இருந்து கோமின்டாங்-கம்யூனிஸ்ட் ஒத்துழைப்பு ஏற்பட்டதின் விளைவாக தோன்றிய மகிழ்ச்சி மற்றும் நம்பிக்கை ஆகியவற்றுள் பொதுவான உணர்ச்சியைப் புறக்கணிக்க மட்டுமே பயன்படும்; மற்றும் தேசம் முழுவதையும் மீண்டும் கவலைக்குள்ளும் அங்கலாய்ப்புக்குள்ளும் விழும்படிச் செய்ய மட்டுமே பயன்படும். மேலும், யுத்தம் எப்படி தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் மற்றும் வெற்றி கிடைத்த பிறகு எந்த வகைப்பட்ட அரசு ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்ற இப்படிப்பட்ட பாரமான பிரச்சனைகள் பற்றி மக்களுக்கு விளக்கிக்கூற வேண்டியது சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அவசியமாக இருந்தது. இந்த நெருக்கடியான நேரத்தில் தான் தோழர் மாசே-துங், 1940 ஜனவரியில், **புதிய ஜனநாயகம்** எனும் மகத்தான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போர்க் குணம் மிக்கதொரு நூலை எழுதினார். காலனி மற்றும் அரைக் காலனி புரட்சி பற்றிய லெனினிய தத்துவத்தின் வெளிச்சத் திலும் மற்றும் சீனாவின் வரலாற்று ரீதியான குணாம்சங்கள் மற்றும் புரட்சிகரமான அனுபவங்கள் ஆகியவற்றின் அடிப்படை யிலும், சீனப்புரட்சி சம்பந்தமான அடிப்படை விதிகளைப்பற்றி விரிவானதொரு அலசி ஆராய்தலை செய்து, ஒரு புதிய ஜனநாயக ஆட்சியின்கீழ் நிறைவேற்றப்பட வேண்டிய அரசியல், பொருளா தார மற்றும் கலாச்சார அபிவிருத்திக்கான ஸ்தூலமானதொரு திட்டத்தை அவர் உருவாக்கினார்.

அரைக் காலனி மற்றும் அரை நிலப்பிரபுத்துவ சீனாவின் புரட்சியின் கடமை பொதுவாக முதலாளித்துவத்தை ஒழிப்ப தைக் காட்டிலும், ஏகாதிபத்திய ஆட்சியையும் நிலப்பிரபுவத்துவ ஆட்சியையும் தூக்கி எறிவதாக இருந்தது. இந்தக் காரணத்திற் காக, சீனப் புரட்சியில் இரண்டு நடவடிக்கைகள் எடுக்கவேண்டி இருந்தன. முதல் நடவடிக்கை, அரைக்காலனி மற்றும் அரை நிலப்பிரபுத்துவ சமுதாயமாக இருந்ததை ஒரு சுதந்திரமான, ஜனநாயக சமுதாயமாக மாற்றுவதாகும். இரண்டாவது நடவடிக்கை, புரட்சியை அபிவிருத்தி செய்து, ஒரு சோசலிச சமுதாயத்தை நிர்மாணிப்பதாகும்.

சீனப் புரட்சியின் முதல் கட்டம், அதனுடைய சமுதாயத்

தன்மை இன்னும் அடிப்படையாக பூர்ஷ்வா ஜனநாயககட்டமாக இருந்த போதிலும், ஒரு முதலாளித்துவ சமுதாயத்தை ஸ்தாபிக்கும் நோக்கத்தோடு மற்றும் பூர்ஷ்வா சர்வாதிகாரத்தின் கீழ் ஓர் அரசை ஸ்தாபிக்கும் நோக்கத்தோடும் பூர்ஷ்வாக்களால் தலைமை தாங்கப்பட்ட பழைய வகைப்பட்ட புரட்சியைச் சோந்ததல்ல; ஆனால் முதலில் ஒரு புதிய ஜனநாயக சமுதாயத்தை ஸ்தாபிக்கும் நோக்கத்தோடும் மற்றும் சகல புரட்சிகரமான வர்க்கங்களின் கூட்டுசர்வாதிகாரத்தின் கீழ் ஓர் அரசை ஸ்தாபிக்கும் நோக்கத்தோடும், பாட்டாளிவர்க்கத்தால் தலைமை தாங்கப்படும் ஒரு புதுவகைப்பட்ட புரட்சியைச் சேர்ந்ததாகும். புரட்சியின் எதார்த்தமான கோரிக்கை முதலாளித்துவத்தின் அபிவிருத்திக்கான பாதையைச் சப்பணிடுவதாக இருந்த போதிலும், அது சோசலிசத்தின் வெற்றிக்கான நிலைமைகளை சிருஷ்டிப்பதற்கு பயன்பட்டது. புரட்சி முன்னணி சம்பந்தப்பட்டமட்டில், இந்தப் புரட்சி பழைய பூர்ஷ்வா ஜனநாயக உலகப் புரட்சியின் ஒரு பகுதியாக இருக்காது, ஆனால் அதற்கு மாறாக, புதிய பாட்டாளிவர்க்க சோசலிச உலகப் புரட்சியின் பகுதியாக இருக்கும்.

எனவே, ஜனநாயகப் புரட்சி பூர்த்தியான பிறகு, சீனா நிச்சயமாக ஒரு சோசலிச சமுதாயமாக, சோசலிச அம்சங்களில்-நாட்டின் அரசியல் வாழ்க்கை கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் வளர்ந்துவரும் செல்வாக்கு மற்றும் தேசிய பொருளாதாரத்தின் அரசுக்கு சொந்தமான பகுதிகள், கூட்டுறவு பகுதிகள் ஆகியவற்றின் விஸ்தரிப்பு — சீரான அதிகரிப்பின் ஒரு விளைவாகவும் மற்றும் சாதகமான உலக நிலைமையின் விளைவாகவும் சீனா நிச்சயமாக ஒரு சோஷலிச சமுதாயமாக அபிவிருத்தி அடையும். இந்த புதிய ஜனநாயகப் புரட்சி அரைக்காலனி மற்றும் அரை நிலப்பிரத்துவ சமுதாயத்திற்கும் மற்றும் சோஷலிச சமுதாயத்திற்கும் இடையை ஒரு மாறிச் செல்லும் காலகட்டமாக இருக்கும்.

எல்லாவற்றிற்கும் முதலாவதாக ஒரு பூர்ஷ்வா சர்வாதிகாரம் பற்றிய கோமின்டாங் விடாக்கண்டர்களின் முட்டாள்தனமான அடித்துக் கூறல்களை தோழர் மாசே-துங் மறுத்துக் கூறினார். இருபதாம் நூற்றாண்டின் நாற்பதாம் ஆண்டில் இருந்து ஆரம்பமாகும் பத்து ஆண்டுகளில், முதலாளித்துவம் செத்துக் கொண்டும், சோசலிசம் வளர்ந்து கொண்டும் இருக்கும்போது சீனாவில் பூர்சுவா சர்வாதிகாரத்தின் கீழ் ஒரு முதலாளித்துவ

சமுதாயத்தினை நிலை நாட்டுவது பற்றிய எந்தக் கருத்தும் முற்றிலும் நடைமுறை சாத்தியமற்றதும் பிரமை ஆனதுமாக இருக்கும். உள்நாட்டு நிலைமையும் வெளிநாட்டு நிலைமையும் இப்படிப்பட்டதொரு பாதையில் செல்வதற்கு சீனாவை அனுமதிக்காது. கெமாலின் பாத்திரத்தை வைப்பதற்கு சியாங் காய்-ஷேக் செய்த முயற்சியை தோழர் மாசே-துங் ஏளனம் செய்தார். மற்றும் புரட்சியைக் காட்டிக் கொடுத்த பிறகு சியாங் செய்தது என்னவென்றால் ஒரு சுதந்திரமான, முதலாளித்துவ சமுதாயத்தை நிர்மாணித்தது அல்ல; ஆனால் அரைக்காலனி, அரை நிலப்பிரபுத்துவ சமுதாயத்தை பாதுகாப்பதாக இருந்தது; எந்தவிதமான பூர்சுவா சர்வாதிகாரத்தையும் உருவாக்கவில்லை; ஆனால் பரிதாபகரமானதொரு அரைக்காலனி, அரைநிலப் பிரபுத்துவ சர்வாதிகாரத்தை உருவாக்கினார் என்றும் சுட்டிக் காட்டினார். அப்படிச் செய்ததின் மூலம் சியாங் தன்னை ஒரு தரகனாகவும் ஏகாதிபத்தியவாதிகளின் வேலைக்காரனாகவும் செய்திருந்தான்.

சீனப்புரட்சியின் முதல்கட்டம் நீண்டகாலம் பிடிக்கும். ஏகாதிபத்தியத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் எதிர்க்கும் கடமை நிறைவேற்றப்படாமல் இருக்கும் வரையிலும் சோசலிசப் புரட்சி என்ற கேள்விக்கு இடமில்லை. ஜனநாயகப்புரட்சியும் சோசலிசப் புரட்சியும் ஒவ்வொன்றும் அவற்றிற்கே உரித்தான திட்டவட்டமான கடமையையும் மற்றும் அவற்றின் சரியான காலத்தையும் பெற்றிருந்தமையால் ஜனநாயகக் கடமைகளோடு வேறு சமயத்தில் மட்டுமே நிறைவேற்றக் கூடிய சோலிசக் கடமைகளை இணைப்பதும் மற்றும் இரண்டு கடமைகளையும் ஏககாலத்தில் இணைக்க முயற்சிப்பதும் தவறானதாகும். இரண்டு புரட்சிகரமான கட்டங்களில், முதல் கட்டம் இரண்டாவது கட்டத்திற்கான நிலைமைகளை ஏற்பாடு செய்தது. இப்படிப்பட்டதொரு அபிவிருத்திப் பாதையின் வழியாகவும் மாறிச் செல்லும் பாதையின் வழியாகவும் சீனப்புரட்சி இயக்கம் செல்ல வேண்டும்.

''ஒரு தனியொரு புரட்சி'' தத்துவம், ''உத்திரங்களையும் தூண்களையும் திருடிக்கொண்டு அவற்றிற்குப் பதிலாக உளுத்துப் போன மரக்கட்டைகளை வைப்பதாக'' இருந்தது; அது உண்மையில் ஒரு மிதமிஞ்சிய பிற்போக்கான திட்டமாக, புரட்சியை முற்றிலும் ஒழித்துக் கட்டுவதைக் குறிக்கோளாகக் கொண்ட ஒரு திட்டமாக இருந்தது.

தோழர் மாசே-துங் சீனப்புரட்சியின் அடிப்படை விதிகளை

விரிவாக விளக்கிக் கூறியதுமின்றி பல்வேறு பிற்போக்கான தத்துவங்களை மறுத்துக் கூறியதுமின்றி, ஸ்தூலமானதொரு புதிய ஜனநாயக அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார திட்டங்களையும் உருவாக்கினார்; இந்த முறையில் ஒரு புதிய சீனாவை நிர்மாணிப்பதற்கான வரைப்படங்களையும் உருவாக்கி கொடுத்தார்.

(1) அரசியல் திட்டம் புதிய ஜனநாயகக் குடியரசினை நிலைநாட்டுவதற்கு வகைசெய்தது. இந்தக் குடியரசு ஐரோப்பிய, அமெரிக்க உருவத்திலான பூர்சுவா சர்வாதிகாரத்தின கீழ் உள்ள ஒரு முதலாளித்துவ குடியரசில் இருந்தும் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் சோவியத் யூனியனில் உள்ள சோசலிசக் குடியரசின் ரகத்தில் இருந்தும் வேறுபட்டதாக இருக்கும். அது பாட்டாளி வர்க்கத்தினால் தலைமை தாங்கப் பட்டு தொழிலாளி — விவசாயி கூட்டணியை அடிப்படையாகக் கொண்டும் மற்றும் சகல ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் புரட்சிகர வர்க்கங்களின் கூட்டு சர்வாதிகாரத்தின் கீழ் செயல்படும் ஒரு மக்கள் ஜனநாயகக் குடியரசாக இருக்கும். இந்த முறையில் அரசியல் துறையில் பாட்டாளி வர்க்கத்தின் பரிபூரணமான தலைமை உறுதிப் படுத்தப்படும்.

(2) பொருளாதாரத் திட்டம் பெரிய வங்கிகள் மற்றும் பெரும் தொழில், வர்த்தக நிறுவனங்களையும் தேசியமயமாக்கு வதற்கு வகை செய்திருந்தது. ஆனால் குடியரசு இதர உருவங் களில் இருந்த முதலாளித்துவ தனியார் சொத்தை எடுத்துக் கொள்ளாது, அல்லது மக்களின் வாழ்வின் மீது ஆதிக்கம் செலுத்தாதை முதலாளித்துவ உற்பத்தியின் அபிவிருத்தியைத் தடுக்கவும் செய்யாது. கிராமப்புரங்களில் நிலச்சுவான் தார்கள் நிலம் பறிமுதல் செய்யப்பட்டு, நிலமற்ற அல்லது சிறு நிலம் மட்டுமே வைத்திருக்கும் விவசாயிகளுக்கு மீண்டும் விநியோகம் செய்யவேண்டும். இந்த முறையில் நாட்டுப் புறத்தில் நிலப் பிரபுத்துவ உறவுகளை முற்றிலும் பெருக்கித் தள்ளிவிட்டு, நிலத்தை விவசாயிகளின் தனியார் சொத்தாக மாற்றிக் கொடுக்க வேண்டும். ஒரு பணக்கார விவசாயப் பொருளாதாரம் சகித்துக் கொள்ளப்படும். பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் புதிய ஜனநாயக குடியரசின் கீழ் அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் சோசலிசத் தன்மை உடையதாக இருக்கும். மற்றும் தேசிய பொருளாதாரத்தில் தலைமை தாங்கும்

சக்தியையும், அதே சமயத்தில் சகல உருவங்களிலும் உள்ள கூட்டுறவு நிறுவனங்களும் கூட சில சோசலிச அம்சங்களைக் கொண்டதாக இருக்கும். இந்த முறையில் சோசலிச அம்சங்களும் பரிபூரணமான தலைமை தாங்கும் பாத்திரம் பொருளாதாரத்தில் உறுதிப் படுத்தப்படும்.

(3) கலாச்சாரத்திட்டம் புதிய ஜனநாயக கலாச்சாரத்தை ஒரு தேசிய, விஞ்ஞான ரீதியான வெகுஜன கலாச்சாரமாக வரையறுத்த ". இந்தக் கலாச்சாரம் ஏகாதிபத்திய ஒடுக்கு முறையை எதிர்ப்பதாகவும், சீன தேசத்தின் கவுரவத்தையும் சுதந்திரத்தையும் உயர்த்திப் பிடிப்பதாகவும், தேசிய குணாதிசயங்களை கொண்டதாகவும் இருந்தது. அதே சமயத்தில், அதனுடைய சொந்த கலாச்சாரத்தைச் செழுமைப்படுத்துவதற்கு, அயல்நாடுகளின் முற்போக்கான கலாச்சாரங்களை பெரியதொரு அளவில் கிரகித்துக் கொள்ளவும் வேண்டும். எனினும் முழுமையான விமர்சனமற்ற கிரகித்தில் கண்டனம் செய்யப்பட வேண்டும். அந்நிய விஷயங்கள் தேசிய குணாதிசயங்களுக்கு ஏற்புடையதாக செய்யப்பட்டு, அவை பயனுள்ளவையாக இருப்பதற்கு முன்பு திட்டவட்டமானதொரு தேசிய உருவம் கொடுக்கப்படவும் வேண்டும்.

புதிய ஜனநாயக கலாச்சாரம் விஞ்ஞான ரீதியான கலாச்சாரமாக இருக்க வேண்டும். அது சகல பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவ கருத்துக்களையும் மூட நம்பிக்கையான கருத்துக்களையும் எதிர்க்கும். மற்றும் விபரங்களில் இருந்து உண்மையைத் தேடுவதற்காகவும் மற்றும் தத்துவம், நடைமுறை ஆகியவற்றின் ஒற்றுமைக்காகவும் நிற்கும். கலாச்சார பாரம்பரியத்தை பரிசீலிப்பதில், ஒரு சரியான போக்கும் விஞ்ஞான ரீதியான முறையும் கையாளப்படும். பண்டைய கலாச்சாரம் எதேச்சாதிகாரமாக நிராகரிக்கப்படவும் மாட்டாது அல்லது விமர்சனமற்ற முறையில் ஏற்றுக் கொள்ளப்படவும் மாட்டாது. அதனுடைய ஜனநாயக சாராம்சம் கிரகித்துக் கொள்ளப்பட்டு அதனுடைய நிலப்பிரபுத்துவ சாரம்சம் அறுத்தெறியப்பட வேண்டும். இந்த வழியில் மட்டுமே ஒரு புதிய கலாச்சாரத்தைப் படைக்க முடியும்.

புதிய ஜனநாயக கலாச்சாரம் பரவலான வெகுஜனங்களுக்கு சொந்தமாக இருக்க வேண்டும். அது எடுக்க வேண்டிய ஒரே சரியான திசை வழி சேவையாக இருந்தது. முதலாவதாகவும் மிக முக்கியமானதாகவும் தேசத்தின் மக்கள் தொகையின் தொண்ணூறு சதவீதத்திற்கும் அதிகமாக இருந்த உழைக்கும்

வெகுஜனங்களான தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளுக்கு சேவை செய்வதாக இருந்தது.

கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தின் வழிகாட்டும் பாத்திரத்தின் காரணமாகவும், புதிய ஜனநாயக புரட்சி காலகட்டத்தில் அரசியலிலும் பொருளாதாரத்திலும் சோசலிச அம்சங்கள் இருப்பதன் காரணமாகவும், பொது உடைமையைப் பரப்புவதை விஸ்தரிப்பதற்கும் மற்றும் மார்க்சிய—லெனினிய படிப்பைத் தீவிரப்படுத்துவதற்கும் முயற்சிகள் செய்யப்பட வேண்டும். ஆனால் தேசிய கலாச்சாரத்திற்கான பாதை, புதிய ஜனநாயகப் பாதை என்பது தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும். பொதுவுடைமையைப் பரப்புவது என்பது அதனை ஒரு உடனடியான செயல் காலதிட்டமாக நடைமுறைப் படுத்துவது என்று அர்த்தமல்ல. மார்க்சியத்தைப் போதிப்பதின் குறிக்கோள் பல்வேறு பிரச்சினைகளைப் பகுத்து ஆய்வதற்கும் விஞ்ஞான படிப்புகளை தொடர்ந்து நடத்துவதற்கும், வேலையை ஸ்தாபன ரீதியாக செய்வதற்கும் ஊழியர்களை பயிற்றுவிப்பதற்கும், தேசிய கலாச்சாரத்திற்கான திசை வழிப்பாதையை உண்டாக்குவது அதனுடைய நோக்கமல்ல.

சித்தாந்த ரீதியாக **புதிய ஜனநாயகம்** பற்றிய தோழர் மாசே-துங்கின் போர்க்குணம் மிக்க நூல் கோமின்டாங் பிற்போக்குவாதிகளையும் அவர்களைப் பின்பற்றியவர்களையும் முற்றிலும் நிராயுதபாணியாக்கி, சீனத் தொழிலாளி வர்க்கத்தினருக்கும் சீன மக்களுக்கும் ஆன்மீக ரீதியான ஆயுதங்களைச் சப்ளை செய்தது. அது கட்சியின் மற்றும் தேசம் முழுவதின் சித்தாந்த ரீதியான ஒற்றுமைக்கும், சகல விடுவிக்கப்பட்ட ஏரியாக்களின் கொள்கைகளின் ஒற்றுமைக்கும் அந்த முறையில் சீனப்புரட்சியின் முன்னேற்றத்திற்கும் மகத்தான பங்கை செலுத்திற்று.

### 6. ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியின் போர்த் தந்திரப் பாதையை பின்பற்றி செல்லுதல். இரண்டாவது கம்யூனிஸ்டு எதிர்ப்புப் பேரெழுச்சியும் அதன் தோல்வியும்.

கோமின்டாங் விடாக்கண்டர்கள் இடையே சரணாகதி அபாயம் அந்த சமயத்தில் மிகவும் கடுமையாக இருந்தது. பிரிட்டிஷ் ஆதரவு மற்றும் அமெரிக்க ஆதரவு பெரும் பூர்சுவாச்

களின் சரணாகதிப் பாதைக்கும் மற்றும் மக்களின் ஆயுதம் ஏந்திய எதிர்ப்புப் பாதைக்கும் இடையே மோதல் மேலும் மேலும் கூர்மையாகிக் கொண்டிருந்தது. இத்தகைய இரண்டு வெவ்வேறு பாதைகளும், இரண்டு வெவ்வேறு விளைவுகளுக்கு வழி நடத்திச் செல்லும் கோமின்டாங்கின் கம்யூனிஸ்ட் எதிர்ப்புக் கொள்கை கட்டுப்படுத்தப் படாமல் அபிவிருத்தி அடைவதற்கு அனுமதிக்கப் பட்டிருக்கப்படுமேயானால் சரணாகதிவாத நடவடிக்கைகளும் கம்யூனிஸ்டு எதிர்ப்பு நடவடிக்கைகளும் நாடு முழுவதிற்கும் பரவி, இதர விசயங்களுக்கிடையே, ஐக்கிய முன்னணியில் ஒரு பிளவை உண்டாக்கும் அபாயத்தைக் கொண்டு வந்திருக்கும். ஆகவே சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் கடமை ஆயுதமேந்திய எதிர்ப்புப் பாதையை பின்பற்றுவதும் சரணாகதியைத் தடுப்பது மாக இருந்தது. கட்சியின் மத்திய கமிட்டியும் தோழர் மாசே-துங்கும் யுத்த நிலைமை பற்றிய முழுமையானதொரு பகுத்தாய்வினை நடத்தி கட்சியின் கடமைகளைச் சரியாக வரையறுத்தனர். உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் பல சாதகமான நிலைமைகள் இருந்தன. இந்த நிலைமைகள் நிலைமையை அபிவிருத்திச் செய்வதையும் எதிர்ப்பினை விடாப்பிடியாக நடத்துவதையும், தேசிய ஒருமைப்பாட்டினை வைத்திருப்பதையும் மற்றும் முன்னேற்றத்திற்காக போராடுவதையும் கட்சிக்கு சாத்தியமாகச் செய்தன. இத்தகைய நிலைமைகள் பின் வருமாறு:

1. ஜப்பான் கடுமையான பின்டைவுகளை அனுபவித்திருந்தமையால், யுத்தம் யுத்தத்தந்திர ரீதியான தேக்க நிலைக் கட்டத்திற்குள் கடந்து சென்றிருந்தது. ஆனால் ஜப்பான் சீனாவை அடிமைப்படுத்த வேண்டும் என்ற அதனுடைய அடிப்படையான கொள்கையை இன்னும் வைத்துக் கொண்டிருந்தது.

2. ஒருபுறம் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கும் மறுபுறம் ஜப்பானுக்கும் இடையே முரண்பாடுகள் படிப்படியாகக் குறைய ஆரம்பித்திருந்தபோதிலும், அவை எந்த விதமான உண்மையான சமரசத்தையும் இன்னும் அனுமதிக்கவில்லை. மேலும், ஐரோப்பாவில் நடைபெற்ற யுத்தத்தினால் பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகியவற்றின் நிலைமை கிழக்கில் பலஹீனமடைந்து இருந்தமையால், ‘‘கிழக்கத்திய மியூனிச் மாநாட்டை’’ கூட்டுவது சாத்தியமற்றதாக இருந்தது.

3. சோவியத் யூனியன் அதனுடைய அயல் நாட்டுக் கொள்கையில் கூடுதலான வெற்றிகளைப் பெற்று இருந்தது; அது இன்னும் சீனாவின் எதிர்ப்பு யுத்தத்திற்கு சுறுசுறுப்பான ஆதரவைக் கொடுக்கும் ஒரு கொள்கையைப் பின்பற்றி வந்தது.

4. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் முற்போக்கு சக்திகள் பிரம்மாண்டமான அளவிற்கு அபிவிருத்தி அடைந்து எதிர்ப்பின் முதுகெலும்பாக அமைந்திருந்தன.

5. பெரும் பூர்சுவாக்களின் ஜப்பானிய ஆதரவு பகுதி துரோகியாக மாறி எதிரியின் பக்கம் போய்ச் சேர்ந்திருந்த போதிலும், பிரிட்டிஷ் ஆதரவு பகுதியும் அமெரிக்க ஆதரவு பகுதியும் எதிர்ப்பு முகாமில் நீடித்து இருந்தன. இந்தப்பகுதி முற்போக்கு சட்டங்களை தொடர்ந்து ஒடுக்கி வந்தது; மற்றும் சரணாகதி அடைவதற்கு தயார் செய்து கொண்டும் இருந்தது. ஆனால் அது உண்மையில் சரணாகதி அடையவில்லை. எந்த விதத்திலும் இத்தகைய பூர்சுவா விடாக்கண்டர்கள் கோமிங்டாங்கில் ஒரு சிறுபான்மையோராக மட்டுமே இருந்தார்கள்.

6. நடுவாந்திரப் பாதையில் இருந்த சக்திகள் சரணாகதியை எதிர்த்துக் கொண்டிருந்தார்கள். வெளிநாட்டு மற்றும் உள் நாட்டு நிலைமைகள் சம்பந்தப்பட்டமட்டில், ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியை நீடித்து இருக்கும் சாத்தியப்பாடும் மற்றும் நிலைமையை அபிவிருத்தி செய்யும் சாத்தியப்பாடும் அல்லது, குறைந்தபட்சம், நிலைமை மோசமாவதினின்றும் தடுக்கும் சாத்தியப்பாடும் இருந்தன. 1939-ல் இருந்து கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக கோமின்டாங் விடாக்கண்டர்களால் தொடுக்கப்பட்ட சகல ராணுவ நடவடிக்கைகளும் அளவில் ஸ்தல ரீதியாகவே இருந்தன. அவை யுத்த தந்திர ரீதியான வேவுபார்த்தலின் வழியில் வெறும் ஆரம்ப நடவடிக்கைகளாகவே இருந்தன; மற்றும் உடனடியான சர்வாம்ச ரீதியான கம்யூனிஸ்ட் எதிர்ப்பு யுத்தத்தை அவை சுட்டிக் காட்டவில்லை. சரணாகதிக்கான பாதையைச் செப்பனிடுவதை அவை குறிக்கோளாகக் கொண்டிருந்தன. ஆனால் உடனடியான சரணாகதியை அவை சுட்டிக் காட்டவில்லை.

1940 மார்ச்சில் கட்சியின் மூத்த ஊழியர்களின் ஒரு கூட்டத்தில் தோழர் மாசே-துங்கினால் செய்யப்பட்ட "தற்போதைய ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியின் போர்த்தந்திரங்கள் பற்றிய கேள்விகள்" என்ற அறிக்கையிலும், அதே விசயம் குறித்து அவர் எழுதிய உள்கட்சி வழிகாட்டுதலிலும் ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணி சம்மந்தமாக பொதுவான கொள்

கையை மேலும் வரையறுத்துக் கூறின; மற்றும் கோமின்டாங் விடாக்கண்டர்களுக்கு எதிரான போராட்டத்தில் பின்பற்றப்பட வேண்டிய போர்த்தந்திர ரீதியான கோட்பாடுகளையும் வரை யறுத்துக் கூறின.

ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணி சம்பந்தமாக கட்சி யின் மத்திய கமிட்டியினால் உருவாக்கப்பட்டிருந்த பொதுவான கொள்கை முற்போக்கு சக்திகளை அபிவிருத்தி செய்வதும், நடு வாந்திரப்பாதை சக்திகளை வென்றுவருவதும் மற்றும் விடாக் கண்டர்களைத் தனிமைப்படுத்துவதுமாக இருந்தது.

முற்போக்கு சக்திகளை அபிவிருத்தி செய்வது என்பதின் அர்த்தம் என்னவென்றால், பாட்டாளி வர்க்கம் விவசாயிகள் மற்றும் நகர்ப்புற குட்டிபூர்சுவா சக்திகளை அபிவிருத்தி செய் வது என்பதாகும். எட்டாவது வழிச்சேனை மற்றும் புதிய நான்காவது சேனை ஆகியவற்றின் விஸ்தரிப்பிற்கு முழுமையான சுதந்தரம் கொடுப்பது; ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக தளங் களை நிலைநாட்டுவது; மற்றும் இத்தகைய தளங்களில் கம்யூ னிஸ்ட் கட்சியின் ஸ்தாபனங்களை மற்றும் மக்களின் ஜப்பானிய எதிர்ப்பு அரசியல் அதிகாரத்தை ஏற்பாடு செய்வதற்கும், வெகு ஜனங்களை அணி திரட்டுவதற்கும் முழுமையான சுதந்திரம் கொடுப்பது. ஜப்பானிய எதிர்ப்பு கட்சிகள், கோஷ்டிகள் மற்றும் ஸ்தாபனங்களின் சட்டபூர்வமான அந்தஸ்தைக் கோமின் டாங் அங்கீகரிக்கும்படி கோரி, வெகுஜன இயக்கங்களைத் துவக்குவதற்கு கோமிண்டாங் ஏரியாக்களில் சகல சாத்தியமான முயற்சிகளும் செய்யப்படவேண்டும். முற்போக்கு சக்திகள் ஐக்கிய முன்னணியின் முதுகெலும்பாக அமைந்திருந்தன. அவற்றை படிப்படியாக அபிவிருத்தி செய்வதினால் மட்டுமே நடுவாந்திரப்பாதை சக்திகளை கட்சி மிகவும் சக்தி வாய்ந்த முறையில் வென்றெடுத்து, விடாக்கண்டர் சக்திகளைத் தனிமைப் படுத்தி, சரணாகதி அடைவதையும் நடுவாந்திர சக்திகள் பிளவு படுவதையும் தடுத்து நிறுத்தி, ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கான ஒரு கெட்டியான அஸ்திவாரத்தை போடவும் முடியும்.

நடுவாந்திர சக்திகளை வென்று எடுப்பது என்பதின் அர்த்தம் என்னவென்றால், நடுத்தர பூர்சுவாக்களையும், விழிப்புற்ற கனதனவான் கூட்டத்தையும் மற்றும் செல்வாக்கு மிக்க ஸ்தல கோஷ்டிகளையும் வென்றெடுப்பது என்பதாகும். முற்போக்கு சக்திகளைப்போல் இல்லாமல், நடுவாந்திரப் பாதைக்காரர்கள்

ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தில் மட்டுமே நேசசக்திகளாக இருந்தார்கள். நடுத்தர பூர்சுவாக்களும் விழிப்புற்ற பிரபுத்துவ கூட்டமும் ஜப்பானுக்கு எதிரான பொதுவான கூட்டத்திலும் பங்கு எடுக்கலாம். ஆனால் அவர்கள் விவசாய சீர்திருத்தத்தை நிலைநாட்டுவதிலும் பங்கு எடுக்கலாம். ஆனால் அவர்கள் விவசாயத் சீர்திருத்தத்தைக் கண்டு பயந்து இருந்தார்கள். விடாக்கண்டர்களுக்கு எதிரான போராட்டங்களில் அவர்களில் சிலர் பங்கெடுக்கலாம் அல்லது நடுநிலை வகிக்கலாம். செல்வாக்கு மிக்க ஸ்தல கோஷ்டிகள் பெரும் நிலப்பிரபுத்துவ வர்க்கத்தையும் பெரும் பூர்சுவாக்களையும் சேர்ந்தவர்கள். அவர்கள் ஜப்பானுக்கு எதிரான போராட்டத்தில் சேரலாம். ஆனால் ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக அரசாங்கத்தை அமைப்பதில் சேராமல் இருக்கலாம். விடாக்கண்டர்களுக்கு எதிரான போராட்டங்களில் அவர்கள் தற்காலிகமானதொரு நடுநிலையை மட்டுமே கடைபிடிப்பார்கள். நடுவாந்திர பாதைக்காரர்கள் தவிர்க்க முடியாதபடி ஊசலாட்டம் கொண்டவர்களாக இருந்தார்கள்; மற்றும் விடாக்கண்டர்களும்கூட அவர்களை வென்றெடுப்பதற்கு சக்திவாய்ந்த முயற்சிகளை செய்து கொண்டிருந்தார்கள். சீனாவில் கணிசமான செல்வாக்கை பெற்றிருந்த அவர்கள் விடாக்கண்டர்களுக்கு எதிரான போராட்டங்களில் அடிக்கடி தீர்மானமான அம்சமாக இருக்கமுடியும். ஆகவே அவர்களோடு உறவு கொள்வதில் எச்சரிக்கையானதொரு போக்கும் சக்திவாய்ந்த நடவடிக்கைகளும் தேவையாக இருந்தன.

விடாக்கண்டர் சக்திகளை தனிமைப்படுத்துவது என்பதின் அர்த்தம் என்னவென்றால் ஒரு இரட்டைத் தனமைவாய்ந்த எதிர்ப்புரட்சித் தன்மைவாய்ந்த கொள்கையை பின்பற்றிவந்த சியாங்காய்-ஷேக்கினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட பெருநிலப்பிரபுத்துவ சக்திகளையும் பெரும் பூர்சுவாக்களையும் 'தனிமைப்படுத்துவது என்பதாகும். ஒருபுறத்தில் அவர்கள் ஜப்பானை எதிர்த்தார்கள், மறுபுறத்தில் வருங்காலத்தில் சரணாகதிக்கு தயார் செய்வதில், முற்போக்கு சக்திகளை அழிக்கும் ஒரு மிதமிஞ்சிய பிற்போக்கு கொள்கையை நிறைவேற்றிக் கொள்கின்றார்கள். அவர்கள் ஜப்பானை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தார்கள், ஆனால் சுறுசுறுப்பாக அல்ல; அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியை எதிர்த்தார்கள், ஆனால் பகிரங்கமானதொரு பிளவிற்கு செல்வதற்கு அவர்கள் இன்னும் துணியவில்லை. விடாக்கண்டர்களின் இந்த இரட்டைத் தன்மைவாய்ந்த எதிர்ப்

புரட்சிக் கொள்கையை சமாளிப்பதற்கு, ஒரு இரட்டைத் தன்மை வாய்ந்த புரட்சிகரமான கொள்கையை கையாளுவது அவசிய மாக இருந்தது. அவர்கள் ஜப்பானை எதிர்த்த அளவிற்கும் மற்றும் முழுமையானதொரு பிளவிற்குப் போகத் துணியாமல் இருந்த அளவிற்கும், அவர்களோடு ஒன்று படுவதற்கும் ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியில் ஒப்பு நோக்கிப் பார்க்கும்போது நீண்டதொரு காலகட்டத்திற்கு அவர்களை வைத்திருப்பதற்கும் முயற்சிகள் செய்யப்பட வேண்டும்; ஆனால் ஜப்பானின்பால் செயலற்ற எதிர்ப்பிற்கும், கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மக்களின்பால் சுறுசுறுப்பான எதிர்ப்பிற்கும் அவர்கள் நிற்கும் வரையிலும், அவர்களுக்கு எதிராக அரசியல், ராணுவ, மற்றும் சித்தாந்த அரங்கங்களில் உறுதியானதொரு போராட்டம் நடத்தப்பட வேண்டும். இப்படிப்பட்டதொரு இரட்டைக் கொள்கையை கையாளுவதினால் மட்டுமே அவர் களது பிற்போக்கான கொள்கை பின்பற்றப்படும் அளவை வரம்புக்கு உட்படுத்தவும், முற்போக்கு சக்திகளை அபிவிருத்தி செய்வதும், நடுவாந்திரப்பாதை சக்திகளை வென்றெடுப்பதும் மற்றும் விடாக்கண்டர்களைத் தனிமைப்படுத்துவதும் கட்சிக்கு சாத்தியமாயிற்று. அப்படிச் செய்வதினால் மட்டுமே அவர்களை ஐக்கிய முன்னணியில் வைத்திருக்கவும் மற்றும் பெரும் அளவிலானதொரு உள்நாட்டு யுத்தத்தை தவிர்ப்பதும் கட்சிக்கு முடிந்தது.

ஐக்கிய முன்னணி சம்பந்தமாக பொதுவான போர்த்தந்திர பாதையை உருவாக்குவதோடு கூடவே, கட்சியின் மத்தியக் கமிட்டி கோமின்டாங் விடாக்கண்டர்களுக்கு எதிரான போராட்டத்திற்கு, "நியாயப்படுத்தக்கூடிய தன்மை," அவரசத் தன்மை" மற்றும் "கட்டுப்படுத்தல்," ஆகிய மூன்று வழிகாட்டும் கோட்பாடுகளை [13] உருவாக்கிற்று.

சர்வதேச ரீதியாக மூன்று வகைப்பட்ட சக்திகள் இருந்தன: ஜப்பான், அமெரிக்காவும் பிரிட்டனும். சோவியத்யூனியன், கட்சி இத்தகைய சக்திகளுக்குநிடையே கண்டிப்பான வேறுபாட்டினை செய்தது. அதில் சோவியத் யூனியனுக்கும், அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய இப்படிப்பட்ட முதலாளித்துவ அரசுகளுக்கும் இடையே வேறுபடுத்திப் பார்த்தது; சீனாவை படை எடுத்துக் கொண்டிருந்த ஜப்பானிய ஏகாதிபத்யதிற்கும் மற்றும் சீனாவின் மீதுபடை எடுக்காமல் இருந்த இதர ஏகாதிபத்திய அரசுகளுக்கும் இடையே வேறுபடுத்திப் பார்த்தது;

ஜப்பானோடு ஒரு கூட்டணியை அமைத்திருந்த ஜெர்மனி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் ஒரு புறத்திலும் மறுபுறத்தில் ஜப்பானை எதிர்த்து நின்ற பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகியவற்றிற்கு இடையே வேறுபடுத்தி பார்த்தது. தூரகிழக்கிற்கு மியூனிச் கொள்கையை கையாண்டிருந்த கடந்த கால பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகியவற்றிற்கும், அந்தக் கொள்கையை விட்டுவிட்ட இன்றைய பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகியவற்றிற்கும் இடையே அது வேறுபடுத்தி பார்த்தது; பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் மக்களுக்கும் இத்தகைய நாடுகளின் ஆளும் வர்க்கங்களுக்கு இடையேயும் வேறுபடுத்தி பார்த்தது. இத்தகைய வேறுபாடுகளின் மீது கட்சி அதனுடைய அயல் நாட்டுக் கொள்கையை அடிப்படையாகக்கொண்டிருந்தது; எதிர்ப்பு யுத்தத்தை மேலும் தொடர்ந்து நடத்துவதற்கு சர்வதேச துறையில் சகல ஜப்பானிய எதிர்ப்பு சக்திகளையும் அணிதிரட்டும் பொருட்டு கட்சி அதனுடைய அயல் நாட்டுக் கொள்கையை இத்தகைய வேறுபாடுகளின் மீது அடிப்படையாகக் கொண்டிருந்தது.

நாடு தழுவிய அளவில் ஒரு திடீர் சம்பவத்தை கோமின்டாங் விடாக்கண்டர்கள் சிருஷ்டிக்கும் சாத்தியப்பாட்டிற்கு எதிராக கட்சி முழுவதையும் மத்தியக்கமிட்டி எச்சரித்தது, மற்றும். கட்சியும் புரட்சியும் எதிர்பாராத சேதங்களால் அவதிப்படாமல் இருக்கும் பொருட்டு, தாக்குதலை ஈடுகொடுப்பதற்கு சகல சாத்தியமான தயாரிப்புகளையும் செய்ய வேண்டிய அவசியத்தையும் சுட்டிக் காட்டி இருந்தது.

பின்னர் இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடைபெற்றது. அது தான் 1941 ஜனவரியில் நடைபெற்ற தெற்கு அன்வெய் சம்பவமாகும். அந்த சமயத்தில் சர்வதேச நிலைமை பதட்டமாகி இருந்தது. ஐரோப்பாவில் ஜெர்மன் பாசிஸ்டுகள் வெறித்தனமாக ஓடிக் கொண்டிருந்தார்கள். நாஜிதுருப்புகள் 1940ல் டென்மார்க்கையும். நார்வேயையும் கைப்பற்றி மே மாதத்தில் இங்கிலீஷ் கால்வாயில் அவர்களது தாக்குதலை ஆரம்பித்தார்கள் மற்றும் ஆகஸ்டில் ஹாலந்து, பெல்ஜியம், லக்சம்பர்க் ஆகிய நாடுகளின் மீது படை எடுத்தது. ஜூன்மாதத்தில் பாரிசின் வீழ்ச்சியோடு பிரான்ஸ் சரணாகதி அடைந்தது. சீனா- ஜப்பானிய யுத்தத்தை ஒரு உடனடியான முடிவிற்கு கொண்டுவருவது ஜப்பானுடைய எண்ணமாக இருந்தது.

அப்படிச் செய்வதன் மூலம் ஜெர்மன் மற்றும் இத்தாலி யோடு இணைந்து நின்று அது செயல்பட முடியும்; மற்றும் அதனுடைய படைகளை வடக்கே சோவியத்யூனிய னுக்கு எதிராகவும், தெற்கே தென்பசிபிக் பெருங்கடலுக் குள்ளும் திருப்ப முடியும். ஆகவே, சியாங்-கை-ஷேக் கும்பலை சரணடையும்படி தூண்டும் அதனுடைய முயற்சியை அது தீவிரப்படுத்த ஆரம்பித்தது. அது சீனாவின் பிளவையும் வெறுப்பையும் எதிர்த்தது; உள்நாட்டு சண்டையின் மூலம் சீனாவின் ஜப்பானிய எதிர்ப்பு இயக்கத்தை பலஹீனப்படுத்த முடியும் என்று நம்பிக் கொண்டு கோமின்டாங்கிற்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையே ஒரு உள்நாட்டு யுத்தத்தை தூண்டுவதற்கு அது முயற்சித்தது. ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் மும்முனைக் கூட்டணி ஒப்பந்தத்தை செய்து கொண்ட பிறகு, பிரிட்டன், அமெரிக்க சோவியத் யூனியன் ஆகிய நாடுகள் அனைத்திலும் சீனாவிற்கு அவற்றின் நிதி உதவியையும், இராணுவ உதவியையும் அதிகரித்தன. ஆகவே சியாங்-கை சேக்கின் கீழிருந்த கோமின்டாங், சர்வதேச நிலைமை சாதகமாக இருந்தது என்றும் மற்றும் அவர்களுடைய கம்யூனிஸ்ட் எதிர்ப்பு நடவடிக்கைகள் பிரிட்டனிடமிருந்தும், அமெரிக்காவிடமிருந்தும் எந்த விதமான எதிர்ப்பையும் சந்திக் காது என்பதோடு மட்டுமின்றி, ஜப்பானிடமிருந்து ஆதரவையும் பெறும் என்று கருதிற்று. உள்நாட்டு அபிவிருத்திகளின் சிறு வேறுபாடுகளுக்கு மேலாக ஒருமைப்பாட்டினை வைத்ததினால் தேசத்தை பாதுகாப்பதற்கான கம்யூனிஸ்ட் கட்சியின் நேர்மை யான விருப்பத்தை அவர்கள் பலஹீனத்தின் ஒரு அறிகுறியாக எடுத்துக் கொண்டார்கள். கம்யூனிஸ்டுகள் அவர்களோடு பகிரங்கமானதொரு பிளவை ஏற்படுத்த துணிய மாட்டார்கள் என்று அவர்கள் நினைத்தார்கள். எனவே சலுகைகளை கொடுக்கும்படி அவர்களை நிர்ப்பந்திப்பதற்கு அவர்கள் (கோமிங்டாங்) முயற்சித்தார்கள் அல்லது அவர்களது (கம்யூனிஸ்டுகளது) ஆயுதப்படை பிரிவுகளை ஒன்றன்பின் ஒன்றாக தோற்கடிக்க முயற்சித்தார்கள். சியாங்காய்-ஷேக்கின் அபிப்பிராயத்தை, பெரும் அளவிலானதொரு கம்யூனிஸ்ட் எதிர்ப்பு இயக்கத்தின் காலம் பக்குவமாக இருந்தது; ஆகவே விரிவானதொரு உள்நாட்டு யுத்தத்திற்கான தயாரிப்புகளை அவன் செய்தான் அப்படி செய்வதின் மூலம் நிகழ்ச்சிப் போக்கில் ஜப்பானோடு ஒரு சமரசத்தைச் செய்து கொள்ளலாம் என்று

நம்பிக் கொண்டிருந்தான்.

1940 அக்டோபரில், கோமிங்டாங் விடாக்கண்டார்கள் எட்டாவது வழிச் சேனையின் பிரதம சேனாதிபதி சூடேயிக்கும், புதிய நாலாவது சேனையின் தளபதி ஏடிங்கிற்கும் கோமின்டாங் இராணுவக் குழுவின் பேரில் ஒரு செய்தியை அனுப்பினார்கள்; மஞ்சள் நதிக்குத் தெற்கே செயல்பட்டுக் கொண்டிருந்த இரண்டு இராணுவங்களின் சகல படைப்பிரிவுகளும் ஒரு மாதத்தில் ஆற்றிற்கு வடக்கே மாற்றப்பட வேண்டுமென்று, அச்செய்தியில் உத்தரவிடப் பட்டிருந்தது. மத்திய சீனாவில் இருந்து மக்களின் ஜப்பானிய எதிர்ப்பு துருப்புகளை அப்புறப்படுத்துவதினால் ஜப்பானின் பக்கத்தில் இருந்த ஒரு முள்ளை எடுப்பது அவர் களுக்கு குறிக்கோளாக இருந்தது. மேலும், தயாரிப்பு இல்லாமல் இருந்த மக்கள் படையின் மீதும் பயணத்தில் இருந்த மக்கள் படையின் மீதும் ஒரு திடீர்த் தாக்குதலை தொடுப்பதற்கு அவர்கள் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள். இதனை எதிர்ப்பதற்கு, கம்யூனிஸ்டு கட்சிக்கு எதிர்ப்பைக் கொடுக்கும் கோமிங்டாங்கின் துரோகத்தனமான திட்டத்தை யும் ஜப்பானுக்கு சரணாகதி அடையும் கோமிங்டாங்கின் துரோகத்தனமான திட்டத்தையும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அம்பலப்படுத்திற்று; இந்த முறையில் நாடு முழுவதிலும் உள்ள மக்களை எச்சரிக்கையாக இருக்கும்படி வைத்துக் கொண்டிருந் தது. 1940 நவம்பர் 9-ஆம் தேதியில் வெளியிட்ட ஒரு பகிரங்க மான செய்தியை கோமிங்டாங்கிற்கும், தேசம் முழுவதற்கும் சூடே, ஏடின் ஆகியோரும் மற்றவர்களும் பின்வருமாறு சுட்டிக் காட்டினர். "சரணாகதிக்கான பாதையைச் செப்பனிடும் முயற்சியில் உள்நாட்டில் உள்ள ஒருபகுதியினர் 'புதிய கம்யூனிஸ்டு எதிர்ப்பு பேரெழுச்சி' என்று அழைக்கப்படும் ஒரு எழுச்சியை முடுக்கி விட்டுக் கொண்டிருக்கிறார்கள்."[14] ஆனால் ஐக்கிய முன்னணியில் பிளவு ஏற்படுவதைத் தவிர்க்கவும் மற்றும் எதிர்ப்பு யுத்தத்தை விடாப்பிடியாக நடத்தவும், புதிய நான்காவது சேனையின் சில பிரிவுகளை யாங்ட்சி நதிக்கு வடக்கே மாற்றவும் கம்யூனிஸ்ட் கட்சி ஒப்புக் கொண்டது. 1941-ஜனவரி 4-இல் சுமார் பத்தாயிரம் பேரைக் கொண்ட ஒரு படையோடு புதிய நாலாவது சேனையின் தலைமைக் காரியாலயம் வடக்கு நோக்கி நகர்ந்தபோது அவர்கள் 80,000 கோமின்டாங் துருப்புகளால் மோதப்பட்டனர். அவர்கள் வீரமிக்க முறையில் ஏழு பகல்களும், ஏழு இரவுகளும் போராடினார்கள். ஆனால் அவர்கள் எதிரியின்

எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் தயாரற்ற நிலைமையில் பிடிக்கப்பட்டமையாலும் ஆயிரம் ஜவான்களைத் தவிர அனைவரும் அவர்களது உயிர்களை இழந்தரர்கள்: ஆயிரம் ஜவான்கள் மட்டும் முற்றுகையை உடைப்பதில் வெற்றி பெற்றார்கள். ஏடின் பிடிக்கப்பட்டார் மற்றும் ஷியான்இங் கொல்லப்பட்டார். அவர்களது துரோகத்தனமான திட்டத்தை நிறைவேற்றிக் கொண்ட பிறகு உடனேயே கோமிங்டாங் விடாக்கண்டார்கள் புதிய நான்காவது இராணுவம் என்ற பெயரை ரத்து செய்ததாக அறிவித்து, அதனுடைய எழுச்சியை படைப் பிரிவுகளைத் தாக்குவதற்கு பகிரங்கமாக உத்திரவு களைக் கொடுத்தார்கள்.

இப்படிப்பட்டதொரு அபாயகரமானதொரு நிலைமையை எதிர் நோக்கிக் கொண்டு கட்சி அதனுடைய மத்தியக் கமிட்டி யின் தலைமையின் கீழ் உறுதியானதொரு போராட்டக் கொள்கையை அனுஷ்டித்து, ''நியாயப்படுத்தும் தன்மை, அவசரத் தன்மை மற்றும் கட்டுப்படுத்தல்'' ஆகிய போர்த் தந்திரக் கோட்பாடுகளைத் திறமையான முறையில் பிரயோகத்த தினால் சியாங்காய்-ஷேக்கிற்கும் கோமிங்டாங்கிற்கும் கடுமை யானதொரு எதிரடியைக் கொடுத்தது.

கட்சியின் மத்தியக் கமிட்டியின் புரட்சிகர இராணுவ கமிஷனின் பிரதிநிதியால் ஒரு அறிக்கை கொடுக்கப்பட்டது: கம்யூனிஸ்டு கட்சியை எதிர்ப்பது ஜப்பானுக்கு சரணடைவது என்ற கோமிங்டாங் விடாக்கண்டர்களின் துரோகத்தனமான திட்டத்தில் தெற்கு அன்வைய் சம்பவம் முதல் நடவடிக்கையாக மட்டுமே இருந்தது என்றும், யாங்ட்சி நதிக்கு வடக்கேயிருந்த புதிய நான்காவது சேனையின் பிரிவுகளின் மீது தாக்குதலைத் தொடுப்பது; எட்டாவது வழிச் சேனையின் பெயரை ரத்து செய்வது; சென்சிறைபன், கான்சு, ஷைபன், நிங்சியா எல்லைப் பிரதேசத்தின் மீது படை எடுப்பது மற்றும் இறுதியாக நாடு முழுவதிலும் உள்ள சகல கம்யூனிஸ்ட் ஸ்தாபனங்களையும் ஒழிப்பது அவர்களுடைய அடுத்த நடவடிக்கைகளாக இருக்கும் என்றும் இத்தகைய பிற்போக்கு நடவடிக்கைகளுக்கு பரிவர்தனை யாக மத்திய சீனாவில் இருந்தும் தெற்கு சீனாவில் இருந்தும் வாபஸ் பெறுவதற்கு ஜப்பான் ஒப்புக் கொள்ளும் என்றும், இத்தகைய பிரதேசங்களைக் கோமிங்டாங் துருப்புகளுக்கு விட்டு விடும் என்றும், மற்றும் எட்டாவது வழிச்சேனையைச் சமாளிப் பதற்கு அதனுடைய படைகளை ஜப்பான் வடசீனாவில் குவிக்கும் என்றும் அந்த அறிக்கை சுட்டிக் காட்டிற்று. இவை அனைத்தும்

நிறைவேற்றப்பட்டிருக்கும் பொழுது கோமிங்டாங் அச்சு நாடு களின் கம்யூனிஸ்டு எதிர்ப்பு கூட்டணியில் சேருவதற்கு கோமிங் டாங் அதனுடைய முடிவினை பிரகடனம் செய்யும். கட்சியினுடைய மத்தியக் கமிட்டி இந்த அபாயகரமான சதியை அம்பலப்படுத்தி ,அதனைத் தடுப்பதற்கு தேசம் முழுவதையும் அறைகூவி அழைத்தது.

1941 ஜனவரி 20இல், கட்சியின் மத்தியக் கமிட்டியின் புரட்சி ராணுவ கமிஷனின் உத்தரவினால், சென்யி புதிய நான்காவது சேனையின் தற்காலிக தளபதியாக நியமிக்கப் பட்டார். சாங்யுன்-பி உபதளபதியாகவும், லியூசாவோ-சீ அரசியல் காமிசாராகவும் நியமிக்கப் பட்டார்கள். புதிய நான்காவது ராணுவ தலைமைக் காரியாலயம் அதனுடைய தலைமையின்கீழ் 90,000 துருப்புகளோடு மீண்டும் நிலைநாட்டப் பட்டது; இந்த ராணுவம் மத்திய சீனாவிலும் கிழக்கு சீனாவிலும் ஜப்பானிய படை எடுப்பாளர்களை எதிர்த்துப் போராடுவதற்கு ஏழு டிவிஷன்களாக புனரமைக்கப் பட்டிருந்தது.

இத்தகைய புரட்சிகரமான நடவடிக்கைகள் கோமிங்டாங் விடாக்கண்டர்களின் தாக்கும் திட்டத்தை முறியடித்தது. புதிய நான்காவது ராணுவத்தில் பிரதானப் படை மிகவும் அதிகமாக கெட்டிப்படுத்தப் பட்டு, தெற்கு அன்வெய் சம்பவத்திற்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் மிக அதிக வேகமாக அபிவிருத்தி அடைந்தது.

கோமிங்டாங் மற்றும் சியாங்காய்-ஷேக் ஆகியோரின் எதிர் புரட்சி கொள்கையின்பால் கம்யூனிஸ்டு கட்சியினால் அனுஷடிக்கப் பட்ட உறுதியான போக்கு, தேசத்தை முழுமையாக பிளவுபடுத்து வது, அவர்களுக்கு கொண்டு வரும் அபாயத்தை பரிசீலிக்கும்படி விடாக்கண்டர்களை நிர்ப்பந்தித்து.

தெற்கு அன்வெய் சம்பவத்திற்கு பிறகு, கோமிங்டாங்கின் ஜனநாயகப் பகுதி சியாங்காய்-ஷேக்கை, அவனது பிற்போக்கான நடவடிக்கைகளுக்காக கண்டித்தது. இந்தக் காலக்கட்டத்தில் தான் ஜனநாயக அரசியல் கோஷ்டியின் கழகம் அமைக்கப் பட்டது. சகல ''அந்நிய'' பேர்வழிகளையும் ஒழிக்கும் சியாங்காய்-ஷேக்கின் முயற்சிகளால் சில செல்வாக்கு மிக்க ஸ்தல கோஷ்டி களும்கூட அதிருப்தி அடைந்தார்கள். விடாக் கண்டர்களின் அணிகளுக்கு உள்ளேயும்கூட தகராறுகள் இருந்தன. நாடு முழு வதிலும் இருந்த முற்போக்கு மக்கள் மற்றும் நடுவாந்திர மான வர்களில் மிகப் பெரும்பாலோனோர்கள் சியாங்காய்-ஷேக்கின்

பிற்போக்கு நடவடிக்கைகளின் எதிர்ப்பு ஒருமைப்பாட்டோடு இருந்தார்கள்.

அமெரிக்காவிலும் பிரிட்டனிலும்கூட பொது ஜன அபிப்பிராயம் இந்த சம்பவத்திற்கு பலமான எதிர்ப்பாக இருந்தது. இவ்விரு நாடுகளின் அரசாங்கங்களும் கோமிங்டாங் ஒரு உள்நாட்டு யுத்தத்தை ஆரம்பிப்பதையும், ஜப்பானுக்கு எதிரான எதிர்ப்பினைத் தளர்த்துவதையும் விரும்பவில்லை. சீனாவிற்கு சோவியத் யூனியன் செய்த உதவியும் மற்றும் அதன் போக்கும் விடாக்கண்டர்கள் கவனமாக சிந்திக்க வேண்டி இருந்ததற்கு மற்றொரு அம்சமாகவும் அமைந்து இருந்தன.

தெற்கு அன்வெய் சம்பவத்திற்கு பிறகு ஜப்பான், கோமிங்டாங்கை சரணடையும்படி நிர்ப்பந்திக்க முயற்சித்தது. ஆனால் உடனடியாக வெற்றி கிடைக்கவில்லை. இந்த முனையில் ஜப்பானுக்கும் கோமிங்டாங்கிற்கும் இடையே இருந்த முரண்பாடு தீர்க்கப்படாமலேயே இருந்தது. கம்யூனிஸ்டுகளை ஒடுக்குவதற்கு மத்திய சீனாவிற்கு அனுப்பப்பட்டிருந்த கோமிங்டாங் துருப்புகள் ஜப்பானிய இராணுவத்தால் ''முற்றுகையிடும்'' ஒரு இயக்கத்தின் இலக்காக செய்யப்பட்டிருந்தன.

உள்நாட்டு நிலைமையும் வெளிநாட்டு நிலைமையும் விடாக்கண்டர்களை அவர்களது கம்யூனிஸ்டு எதிர்ப்பு 'இயக்கத்தை அந்த சமயத்திற்கு தளர்த்தும்படி நிர்ப்பந்தித்தது. தெற்கு அன்வெய் சம்பவத்திற்குப் பிறகு, சியாங்காய்-ஷேக் அவனுடைய சொந்த நிலைமை பற்றி கவலையோடு இருந்தான் மற்றும் மீண்டும் ஒருமுறை இரட்டை வேடம் போட்டான். அவன் ,'தேசிய பாதுகாப்பு'', ''தேசிய மற்றும் அந்நிய எதிரியோடு மோதுவது'' ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி பேசினான்; மற்றும் ஒரு தரப்பான கருத்துக்களை காலாவதியாகி விட்டன என்று கூறி கண்டனம் செய்தான். எந்த குறிப்பிட்ட கட்சியையும் அல்லது கோஷ்டியையும் குறிப்பாக ஒரு ''தேசியத் தலைவர்'' போல் காட்டிக் கொண்டு அரசியல் மோசடியை நடத்துவது அவனது எண்ணமாக இருந்தது.

இந்த கம்யூனிஸ்டு எதிர்ப்பு பேரெழுச்சியை முறியடித்தது. சீனாவின் உள்நாட்டு அரசியல் வாழ்க்கையில் உயர்வானதொரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாக இருந்தது. ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணிக்குள், வர்க்கங்களின் சம்மந்தப்படுத்திப் பார்க்கும் பலத்தில், முக்கியமானதொரு மாற்றத்தை மக்களின் இலட்சியமான எதிர்ப்புப் போராட்டத்திற்கு சாதகமானதாக

நிறுவிக்கப்பட்டதொரு மாற்றத்தை அது பிரதிநிதித்துவப் படுத்திற்று.

## அடிக்குறிப்புகள்

1. பத்து அம்சங்கள் வருமாறு: 1. ஜப்பானிய ஏகாதி பத்தியத்தின் தோல்வி; 2. பொதுவான அணிதிரட்டல்; 3. நாடு முழுவதிலும் மக்களை அணிதிரட்டல்; 4. அரசாங்க அமைப்பு சீர்திருத்தம்; 5. ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கு எதிர்ப்பை கொடுக்கும் அயல் நாட்டுக் கொள்கை; 6. ஒரு யுத்த காலநிதி மற்றும் பொரு ளாதார கொள்கை; 7. மக்களின் வாழ்க்கை நிலைமை களை அபிவிருத்தி செய்தல்; 8. ஜப்பானிய ஏகாதி பத்தியத்தியத்திற்கு எதிராக திசை திருப்பப் பட்டிருந்த ஒரு கல்விக் கொள்கை; 9. பின்னணியைக் கெட்டிப் படுத்தும் பொருட்டு ஒத்துழைப்பாளர்கள், துரோகிகள் மற்றும் ஜப்பானிய ஆதரவு பேர்வழிகளை ஒழுத்தல். 10. ஜப்பானை எதிர்ப்பதற்காக தேசிய ஒருமைப்பாடு.
2. அரசாங்க பதவிகளுக்காக வேட்டையாடும் பொருட்டு, யுத்த பிரபுக்களின் தெற்கத்திய கும்பல்களுக்கும் மற்றும் யுத்தப்பிரபுக்களின் வடக்கத்திய கும்பலுக்கும் இடையே அரசியல் இலாபக் சூதாட்டத்தினால் ஈடுபட்டிருந்த எண்ணற்ற அதிகார வர்க்கத்தினர் மற்றும் அரசியல் வாதிகளால் 1916இல் நிறுவப்பட்ட ஒரு மித மிஞ்சிய வலதுசாரி அரசியல் கோஷ்டி. 1926இல் இருந்து 1927 வரை வடக்கத்திப படையெடுப்பு நடைபெற்ற காலத் தில் அரசியல் விஞ்ஞான கோஷ்டிகள் ஒரு பகுதி சியாங்காய்-ஷேக்கின் பக்கம் சென்று, அவனுடைய எதிர் புரட்சி ஆட்சியைக் கெட்டிப்படுத்த சியாங்கிற்கு உதவி செய்ய அவர்களது பிற்போக்கு அரசியல் அனுபவத்தைப் பயன்படுத்தினார்கள்.
3. மாசே-துங், மேலே குறிப்பிட்ட நூல் பாகம் 2. பக்கம் 166.
4. மேலே குறிப்பிட்ட நூல், பக்கம். 201
5. மேலே குறிப்பிட்ட நூல், பக்கம் 211
6. மேலே குறிப்பிட்ட நூல், பக்கம் 237

7. மேலே குறிப்பிட்ட நூல், பக்கம் 239

8. மேலே குறிப்பிட்ட நூல், பக்கம் 204

9. பாவோ-சியா-; கூட்டுப் பொறுப்பின் மீது நிறுவப்பட்ட ஒரு அமைப்பு; நிர்வாக உறுப்புகளின் சங்கிலியில் மிக மிகத் தாழ்வான கண்ணியாக அமைந்தது; இதன் மூலம் கோமிங்டாங் கும்பல் அதனுடைய பாசிச ஆட்சியை வைத்துக்கொண்டிருந்தது. 1932 ஆகஸ்டு 1இல், சியாங்கை-ஷேக் ஹோனான், ஹூப்யே மற்றும் அன்வெய் மாகாணங்களுக்கு ''கிராமப்புறங்களில் ஜனத் தொகை கணக்கு எடுப்பதற்காகவும் மற்றும் பாவோசியா ஆகியவற்றை அமைப்பதற்குமான ஒழுங்கு விதிகளை'' பிரகடனம் செய்தான்; இந்த ஒழுங்கு விதிகள், ''பாவோவும் சியாவோவும் ஒரு குடும்ப அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும்; மூன்றில் ஒவ்வொன்றும் குடும்பம், சியா (பத்து குடும்பங்களை கொண்டது) மற்றும் பாவோ (பத்து சியாக்களைக் கொண்டது)— அதற்கு உரித்தான பொருப்பானதொரு தலைவரைக் கொண்டிருப்பதற்கு வகை செய்தது. அண்டை வீட்டுக்காரர்கள் ஒருவர் மற்றொருவரின்மீது கண்காணித்து வரும் படியும் மற்றும் ஒருவர் மற்றொருவரின் நடவடிக்கைகளைப் பற்றி அதிகாரிகளுக்கு அறிக்கை கொடுக்கும் படியும் ஒழுங்கு விதிகள் வகை செய்தன. ஒருவர் குற்றவாளி எனக் கண்டுபிடிக்கப்படும் பொழுது அனைவரும் தண்டனைக்குள்ளாவார்கள். மேலும், இந்த ஒழுங்கு விதிகள் கட்டாய உழைப்பைக் கொடுக்கும்படி மக்களை நிப்பந்திப்பதற்கும் பயன்பட்டன. 1934 நவம்பர் 7இல், இந்த பாசிச அமைப்பு அதன் ஆட்சியின் கீழிருந்த சகல மாகாணங்களிலும் நகர் மன்றங்களிலும் நிலை நாட்டப்படவிருந்தது என்று கோமின்டாங் அரசாங்கம் அதிகார பூர்வமாக அறிவித்தது.

10. ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தின் ஆரம்பத்தில் கம்யூனிஸ்டு கட்சியின் தலைமையின்கீழும் செல்வாக்கின் கீழும் வளர்ந்திருந்த ஷான்சியின் மக்கள் ஆயுதப் படைகள்.

11. ஒரு ஸ்தல வெகுஜன ஸ்தாபனம்; இது கட்சியோடு நெருங்கி ஒத்துழைத்துக் கொண்டு ஷான்சியில் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்

டத்தில் குறிப்பிடத்தக்கதொரு பாத்திரத்தை வகித்தது.

12. கெமால் (1881-1938) துருக்கியின் வர்த்தக பூர்சுவாக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். 1922இல், துருக்கி மக்கள், சோவியத் யூனியனால் உதவி செய்யப்பட்டு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினால் தூண்டிவிடப்பட்ட கிரேக்க ஆக்கிரமிப்பாளர்களை முறியடித்தார்கள், 1923ல் கெமால் துருக்கியின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். சன்யாட்-சென் பல்கலைக் கழக மாணவர்களோடு நடத்திய அவரது பேச்சில் ஸ்டாலின் பின்வருமாறு குறிப்பிட்டார், ''கெமாலிஸ்டு புரட்சி உச்சியில் இருந்து நடைபெற்ற ஒரு புரட்சி தேசிய வர்த்தக பூர்சுவாக்களின் ஒரு புரட்சி, அந்நிய ஏகாதிபத்திய வாதிகளுக்கு எதிராக நடைபெறும் போராட்டத்தில் தோன்றுகிற ஒரு புரட்கி மற்றும் அதனுடைய கூடுதலான அபிவிருத்தியில் முக்கியமாக விவசாயிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் எதிராக திசை திருப்பப்பட்டிருக்கும் ஒரு புரட்சி; மற்றும் ஒரு விவசாயப் புரட்சியின் சாத்தியப் பாட்டிற்கே எதிரான ஒரு புரட்சி.'' (ஜோசப் ஸ்டாலின், சீனப் புரட்சி பற்றி, பக்கம். 53. 'புக்ஸ் & பீரியாடிக்கல்ஸ்' கல்கத்தா, 1977)

13. ''நியாயப்படுத்தும் தன்மை என்ற கோட்பாட்டின் அர்த்தம் என்ன வென்றால், காரணம் இல்லாமல் அல்லது நியாயப் படுத்தல் இல்லாமல் ஒரு பொழுதும் போராடக்கூடாது என்பதாகும். வேறு வார்த்தைகளில் சொன்னால், தற்பாதுகாப்பிற்காக மட்டுமே போராடுவது மற்றும் தாக்குதல்களைத் தொடுப்பதில் ஒரு பொழுதும் முன்கை எடுக்கக்கூடாது, ஆனால் மற்றவர்கள் தாக்கும் பொழுது ஒரு பொழுதும் திருப்பித் தாக்க தவறுவதில்லை என்பதாகும். ''அவசரத்தன்மை'' வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாக இருந்தது, இதன் மூலம் அர்த்தப் படுத்தியது என்ன வென்றால், ஒவ்வொரு மோதலின் விளைவு குறித்தும் மற்றும் வெற்றியின் விளைவு குறித்தும் நிச்சயமாக இருக்கும் பொருட்டு இப்படிப்பட்டதொரு அவசரமான விழியில் எதிர்த் தாக்குதலை நன்றாக திட்டமிடுவதும் படைகளை

ஒழுங்குபடுத்துவதற்கு முயற்சிப்பதும் ஆகும். "கட்டுப்படுத்தல்" கோட்பாடு போர் நிறுத்தங்கள் செய்யும் ஒரு கோட்பாடாகும். கோமின்டாங் பிற்போக்கு வாதிகளை எதிர்த்துவிரட்டிய பிறகும் மற்றும் அவர்கள் புதியதொரு தாக்குதலைத் தொடுப்பதற்கு முன்பும் மிகமிகப் பொருத்தமான நேரத்தில் மோதல்கள் ஒரு முடிவுக்கு கொண்டுவரப்படும்.

14. மாசே-துங், முன்னால் குறிப்பிட்டநூல், பாகம் 3, பக்கம் 233.

அத்தியாயம் ஒன்பது

# எதிர்ப்பு யுத்தத்தில் மிகமிக கடுமையான கட்டம். போராட்டத்தின் போக்கில் எதிரியின் படை வரிசைகளுக்குப் பின்னால் இருந்த ஜப்பானிய எதிர்ப்புத் தளங்களை கெட்டிப்படுத்தல்.

(ஜனவரி 1941—டிசம்பர் 1942).

## 1. இரண்டாவது உலக யுத்தத்தின் ஆரம்ப கால கட்டத்தில் பாசிஸ்டு முகாமின் குறுகியகால இராணுவ மேலாதிக்கம். மக்களின் எதிர்ப்பு யுத்தத்தின் மிதமிஞ்சிய கடினமான சூழ்நிலைமைகள்.

சோவியத் யூனியன் எப்பொழுதும் ஒரு சமாதனக் கொள்கையைப் பின்பற்றி வந்தது. இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன்பு, அது உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு இடைவிடாத முயற்சிகளைச் செய்துவந்தது. மேலும் ஒரு புதிய யுத்தத்தைத் தடுப்பதற்கு பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா மற்றும் இதர முதலாளித்துவ நாடுகளை ஒன்று சேரும்படி அது அறைகூவி இருந்தது. ஆனால், சோவியத் யூனியனுடைய யோசனையை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, இத்தகைய நாடுகள் சோவியத் யூனியனைத் தாக்கும்படி பாசிச அரசுகளைத் தூண்டுவதற்கு முயற்சித்தன. அப்பொழுது நிலவியிருந்து ஒரே சோசலிஸ்டு நாடு என்ற முறையில் சோவியத் யூனியன், இதர நாடுகளில் உள்ள சமாதானத்தை விரும்பும் மக்களின் ஆதரவோடு கூட, ஒரு ஏகாதிபத்திய யுத்தத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு போதுமான அளவிற்கு பலமுடையதாக இருக்கவில்லை.

இரண்டாவது உலகயுத்தம் 1934 செப்டம்பரில் ஆரம்பமாயிற்று. 1940இல் இருந்து 1941 வரையிலும், நாஜி ஜெர்மனி வெற்றிகரமாக டென்மார்க், நார்வே, ஹாலாந்து, பெல்ஜியம், பிரான்ஸ், கிரீஸ் மற்றும் யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளை கைப்பற்றிக் கொண்டது. ஐரோப்பிய நாடுகளில் மிகப் பெரும்

பாலானவற்றை நாசிகளின் இரும்புக் கால்களுக்கு கீழ் போட்டு வைத்துக்கொண்டு ஹிட்லர் சோவியத் யூனியனுக்கு எதிராக ஒரு யுத்தத்தை நடத்துவதற்கு தயார் செய்ய ஆரம்பித்தார்.

இந்தத் துரோகத்தனமான தாக்குதல் 1941 ஜூன் 22-இல் துவக்கப்பட்டது.

முதலில் நிலைமைகள் சோவியத் யூனியனுக்கு சாதகமற்ற தாக இருந்தன. யுத்தத்தின் ஆரம்பகாலகட்டத்தில் ஜெர்மன் துருப்புகளால் சோவியத் யூனியனுடைய பிரதேசத்தின் கணிச மான பகுதி கைப்பற்றப்பட்டது. உக்ரேனின் மிகப்பெரும் பகுதியைக் கைப்பற்றிய பிறகு மற்றும் பைலோ ராஷ்யா, மால்டாவியா லித்துவேனியா, லாட்வியா மற்றும் எஸ்டோனியா ஆகியவற்றையும் ஆக்கிரமித்துக் கொண்டபிறகு, எதிரி டோம்பாசின் மீது படை எடுத்து லெனின் கிராடை முற்றுகையிட்டு, மாஸ்கோவின்மீது பயங்கரமாகச் சாடினான்.

பொருளாதார சிக்கல்களைச் சமாளிக்கும் பொருட்டு சோவியத் அரசாங்கம் யுத்தத்தின் ஆரம்பகால கட்டத்தில் எதிரியினால் அபாயத்திற்கு உள்ளாக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து பல பெரிய தொழிற்சாலைகளைப் பின்னணிப் பிரதேசங்களுக்கு அகற்றிவிட்டது. மற்றும் சக்திவாய்ந்த தொழில் தளங்களை கிழக்குப் பிரதேசங்களில் ஸ்தாபித்து இருந்தது. பாசிஸ்டு ஜெர்மனி மற்றும் இத்தாலி ஆகியவற்றோடு அவர்களுக்கு இருந்த முரண்பாடுகளின் காரணமாகவும் மற்றும் அவர்களுடைய சொந்த மக்களின் நிர்ப்பந்தத்தின் காரணமாகவும் பிரிட்டனும் அமெரிக்காவும் சோவியத் யூனியனோடு ஒரு கூட்டணி வைத்துக் கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட்டன.

ஜெர்மனிக்கு எதிராக குவிந்த நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஒரு உடன்படிக்கை 1941 ஜூலையில், பிரிட்டனுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்டது. ஜெர்மனிக்கு எதிரான யுத்தத்தில் பரஸ்பர உதவிக்கான ஒரு உடன்பாடு அமெரிக்காவிற்கும் சோவித் யூனியனுக்கும் இடையே 1942 ஜூனில் செய்து கொள்ளப்பட்டது.

சோவியத் ராணுவம் உறுதியானதொரு போராட்டத்தை நடத்திற்று. எதிரித் துருப்புகளைக் களைப்படையும்படி செய்தது; அவர்களின்மீது கடுமையான சேதங்களை விளைவித்து அவர்களது சாதனங்களை காலியாகும்படிச் செய்தது. பலமான சேமிப்புப் படைகள், பின்னணியில் குவிக்கப்பட்டு பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களைத் திருப்பித் தாக்குவதற்கு தயாரான

நிலையில் வைக்கப்பட்டிருந்தன. ஒளிந்து நின்று தாக்கும் போராட்டங்கள், பல சோவியத் நகரங்களைச்சுற்றிலும் நடத்தப் பட்டன. இவற்றில் மிகமிக வீரம் செறிந்த போராட்டங்கள் லெனின்கிராடு மற்றும் மாஸ்கோ ஆகிய நகரங்களில் பாதுகாப் தற்காக நடத்தப்பட்ட போராட்டங்கள் ஆகும். செஞ்சேனை இரண்டு நகரங்களையும் வெற்றிகரமாக பாதுகாத்து ஹிட்லரின் "கிடுக்கித் தாக்குதலை" நொறுக்கித் தள்ளிற்று.

1941 டிசம்பர் 8இல், முத்துத் துறை முகத்தில் அமெரிக்க கடற்படைத் தளத்தின்மீது ஜப்பான் ஒரு திடீர்த் தாக்குதலைத் தொடுத்து, பல அமெரிக்க யுத்த கப்பல்களை நாசம் செய்தது. அதே சமயத்தில், பசிபிக் பிரதேசத்தில் இருந்த அமெரிக்க பிரிட்டிஷ் காலனிகள் மீதும் படை எடுக்கப்பட்டன. பசிபிக் யுத்தம் தொடர்ந்து நடந்தது.

பசிபிக் யுத்தம் வெடித்ததில் இருந்து 1942 ஏப்ரல் வரையிலும், ஜப்பான் அடுத்தடுத்து பிலிப்பைன், பூவாங், வேக் தீவு, ஆகியவற்றை இவையனைத்தும் அமெரிக்க ஆட்சியின் கீழ் இருந்தன. — பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்தஹாங்காங், மலேயா, சிங்கப்பூர் மற்றும் பர்மா ஆகிய நாடுகளையும் கைப்பற்றிற்று; டச்சுக் கிழக்கந்திய தீவுகளையும் மற்றும் பிரெஞ்சு இந்தோசீனாவையும் கைப்பற்றிற்று. பிறகு, அது அதனுடைய தாக்குதலை இந்தியாவிற்கு எதிராகவும் ஆஸ்திரேலியாவிற்கு எதிராகவும் திருப்புவதற்கு ஆரம்பித்தது. ஒரு சில மாதங்களில், உஷ்ண மண்டலத்திற்கு 15,000.00 சதுர கிலோமீட்டர்கள் உள்ள ஒரு ஏரியாவை ஜப்பான் கைப்பற்றிற்று: இந்த ஏரியா உற்பத்திப் பொருள்களிலும் மூலப்பொருள்களிலும் செழுமையானதொரு ஏரியா. இந்த ஏரியா சுமார் 12 கோடி மக்கள் தொகையைக் கொண்டதாகும். அதனுடைய செல்வாக்கு பிரதேசம் கிழக்கில் மிட்வே தீவில் இருந்து மேற்கில் இந்தியாவின் கிழக்கு கடற்கரை வரையிலும், வடக்கில் சைபீரிய எல்லையில் இருந்து தெற்கில் ஆஸ்திரேலியாவின் வடக்கு கடற்கரை வரையிலும் பரந்த பிரதேசத்தின் மீது வியாபித்திருந்தது. ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக பிரிட்டிஷ், அமெரிக்க, பிரெஞ்சு மற்றும் டச்சு ஏகாதிபத்தியவாதிகளின் கைவசமிருந்த காலனிகள் அனைத்தும் இப்போது ஜப்பானின் ஆதிக்கத்தின்கீழ் வந்து விட்டன.

இந்த முறையில், பிரிட்டனும் அமெரிக்காவும் பசிபிக் யுத்தத்தின் ஆரம்பக் கட்டங்களில் அவற்றின் மிகமிக மோசமான

அடித்தள ஏரியாக்களில் ஒரு ஜப்பானிய எதிர்ப்பு 'ஜன நாயக ஆட்சியினைக் கட்சி நிலை நாட்டிற்று. இது, ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியின் ஆட்சியாக, ஜப்பானை எதிர்ப்பதற்காகவும் மற்றும் ஜனநாயகத்திற் காகவும் நின்ற அனைவரின் ஆட்சியாக ஒத்துழைப்புக்கள் மற்றும், பிற்போக்குவாதிகள் ஆகியோரின் மீது பல்வேறு புரட்சிகரமான வர்க்கங்களின் கூட்டு சர்வாதிகார ஆட்சியாக இருந்தது. ஒரு "முத்தரப்பு அமைப்பு" ஜனநாயக ஆட்சியின் கீழ் நிறைவேற்றப்பட்டது; அதில் கம்யூனிஸ்டுகள் (தொழி லாளி வர்க்கத்தையும், ஏழை விவசாயியையும் பிரதிநிதித்துவப் படுத்திக்கொண்டிருந்தவர்கள்) முற்போக்காளர்கள் (குட்டி முத லாளிவர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டிருந்தவர் கள்) நடுவாந்திர பாதைக்காரர்கள் (நடுத்தர பூர்ஷ்வாக் களையும், விழிப்படைந்த கனதனவான் கூட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டிருந்தவர்கள்) ஆகிய ஒவ் வொருவரும் சகல அரசாங்க உறுப்புகளிலும் மக்களின் பிரதிநிதித்துவ உறுப்புகளிலும் மூன்றில் ஒரு பங்கு பதவிகளை வகித்துக் கொண்டிருந்தார்கள். ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக ஆட்சியின் இந்த நிர்வாக திட்டம் அதனுடைய அடிப்படையி லான ஆரம்பப் புள்ளியாக "ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிர்ப்பு, ஜப்பானிய எதிர்ப்பு மக்களுக்கு பாதுகாப்பு, ஜப்பா னிய எதிர்ப்பு சமுதாயப் பகுதிகள் அனைத்தின் நலன்களையும். மீண்டும் சரிசெய்தல், தொழிலாளிகள் மற்றும் விவசாயிகள் ஆகியோரின் வாழ்க்கை நிலைமைகளை அபிவிருத்திச் செய்தல், மற்றும் எதிரியோடு ஒத்துழைப்பவர்கள், பிற்போக்குவாதிகள் ஆகியோரை ஒடுக்குதல்"[1] ஆகியவற்றைக் கொண்டிருந்தது.

ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக அரசாங்கத்தின் விவசாயக் கொள்கை, நிலச்சுவான்தார்களால் வசூலிக்கப்பட்ட குத்தகை யையும், வட்டியையும் குறைப்பதற்கு வகை செய்திருந்தது. மற்றும் இந்தக் குத்தகையையும் வட்டியையும் விவசாயிகளால் கொடுக்கப்படுவதையும் உறுதிப்படுத்தி இருந்தது. குத்தகை 25% பொதுவாக குறைக்கப்படவேண்டுமென்று போடப்பட்டி ருந்தது; சமுதாயத்தில் கடன்களைக் கொடுப்பதற்கு யாரும் விருப்பப்படாமல் இருக்கும் அளவிற்கு வட்டி விகிதம் குறைக்கப் படக்கூடாது என்றும் மற்றும் இந்தக் குறைப்பிற்கு பிறகு, குத்தகையும் வட்டியும் முறையாக கொடுக்கப்படவேண்டுமென் றும் போடப்பட்டிருந்தது. இந்த முறையில், நிலச்சுவான்தார்

களுடைய உடமையும், விவசாயிகளின் கட்டுக்குத்தகை உரிமைகளும் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக அரசாங்கத்தில் தொழிலாளர் கொள்கை, தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமைகளில் பொருத்தமானதொரு அபிவிருத்தியைக் கொண்டுவருவதற்கும் வேலை நேரங்களை நிர்ணயிப்பதற்கும் வகை செய்திருந்தது. ஆனால், ஊழியருக்கும் வேலை கொடுப்பவருக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு இருக்குமேயானால் தொழிலாளர்கள் கட்டுப்பாட்டினைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் போடப்பட்டு இருந்தது. அப்படிச் செய்வதினால் முதலாளிகளுக்குக் கொஞ்சம் லாபத்தை உறுதிப்படுத்துவதாகவும் இருந்தது.

பொருளாதார சுய தேவையை எய்தும் பொருட்டு தொழில் மற்றும் விவசாயத்தில் சுறுசுறுப்பான அபிவிருத்தியையும் மற்றும் வியாபாரத்தின் வளர்ச்சியையும் பொருளாதாரக் கொள்கை அறைகூவி அழைத்தது. அரசு மற்றும் கூட்டுறவு நிறுவனங்களை அபிவிருத்தி செய்யும் அதே சமயத்தில், அரசாங்கம் தனியார் நிறுவனங்களையும், அடித்தள ஏரியாக்களுக்கு வெளியே இருந்து வரும் முதலாளிகளால் போடப்படும் முதலீடுகளையும் ஊக்குவித்தது.

வரிக்கொள்கை வருமானத்தை அடிப்படையாக கொண்டிருந்தது. மிகமிக ஏழையானவர்களைத் தவிர வருமானம் உள்ள அனைத்து மக்களும் அரசாங்கத்திற்கு வரி கொடுக்குமபடி எதிர்பார்க்கப்பட்டார்கள். வரிச்சுமை முழுக்க முழுக்க நிலச் சுவான்தார்களின் மீது போடப்படவில்லை. ஆனால் மக்கள் தொகையின் எண்பது சதவீதத்திற்கும் அதிகமானவர்களால் பகிர்ந்துக் கொள்ளப்பட்டது.

ஜப்பானை எதிர்ப்பதற்காக நின்ற சகல நிலப்பிரபுகளுக்கும் முதலாளிகளுக்கும் ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக அரசாங்கம் தனிநபர் உரிமை வழங்கி இருந்தது. அரசியல் வாழ்க்கையை பங்கெடுக்கும் உரிமை மற்றும் சொத்து வைத்திருக்கும் உரிமை ஆகியவற்றை வழங்கிற்று. ஆனுல் அதேசமயத்தில் அவர்களுடைய சாத்தியப்பாடான எதிர்புரட்சி நடவடிக்கைகளுக்கு எதிராக கண்காணிப்பு செய்யப்பட்டிருந்தது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியின் நேரடியான தலைமையின் கீழ், சென்சிஹான்சி-நிங்சியா எல்லைப்பிரதேசம் ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயகத்தின் ஒரு முன் மாதிரியாக இருக்கிறது. இந்தப் பிரதேசத்தில் 1937-ல் ஒரு பொதுத்தேர்தல் நடத்தப்பட்டு எல்லா

நிர்வாக மட்டங்களிலும் மக்கள் ஜனநாயக அரசாங்கங்கள் நிலைநாட்டப்பட்டிருந்தன. 1941-இல், ''முத்தரப்பு முறையோடு'' இணக்கமான முறையில் மற்றொரு தேர்தல் நடத்தப்பட்டது.

வடசீனாவில் எதிரியின் பின்னணி ஏரியாவில் அடித்தளங்கள் நிலைநாட்டப்பட்டப் பிறகு உடனடியாக கிராம மற்றும் கிராமப் புற சட்டப் பேரவைகள் அமைக்கப்பட்டிருந்தன. 1940- ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஷாங்சி-சகார்-ஹோப் பெய் எல்லைப் பிரதேசத்தில் குடிமக்கள் எழுபது சத வீதத்திற்கும் அதிகமானவர்கள் ஓட்டு போடச் சென்றார்கள். 1941க்கும் 1942க்கும் இடையே சட்டப் பேரவைகள் சகல அடித்தள ஏரியாக்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஷாங்சி-ஹோப் பெய்-ஷான்டுங்-ஹோனான் தற்காலிக சட்டப்பேரவை 1941இல் தேர்ந்தெடுக்கப்பட்டது. மற்றும் ஷாங்சி-சகார் - ஹோப்பெய் எல்லைப் பிரதேச சட்டப் பேரவை 1943 ஜனவரியில் தேர்ந்தெடுக்கப்பட்டது. இத்தகைய சட்டப் பேரவைகள் நிர்வாக திட்டங்களை, விவாதித்து பிரகடனம் செய்தன; மற்றும் அடிப் படைச் சட்டங்களை நிறைவேற்றின. மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்ட ஒரு பிரதிநிதித்துவ உறுப்பு என்ற முறையில், சட்டப் பேரவை அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தையும் சட்டங்களைச் செய்யும் அதிகாரத்தையும் பெற்றிருந்தது. சகல அரசாங்க உறுப்புகளிலும் மக்களின் பிரதிநிதித்துவ உறுப்புகளிலும் தலைமை தாங்கும் நபர்களில், கம்யூனிஸ்டுகள் மூன்றில் ஒரு பங்கினராகவே இருக்கவேண்டும் என்ற நடைமுறையில் கம்யூனிஸ்டு கட்சி கண்டிப்பாகக் கடைபிடித்தது.

ஜப்பானிய படை எடுப்பாளர்களுக்கு எதிராக கடுமையான போராட்ட கால கட்டத்தில் களை எடுப்பு இயக்கம் என்று அறியப்பட்டிருந்த ஒரு மார்க்சிய - லெனினிய கல்வி இயக்கம் மத்தியக் கமிட்டியின் தலைமையின்கீழும் தோழர் மாசே-துங்கின் தலைமையின் கீழும் கட்சி முழுவதிலும் நடத்தப்பட்டது. ஒரு காலத்தில் கட்சியில் முற்றிலும் கடுமையானதொரு அளவிற்கு இருந்த பாட்டாளி வர்க்கத்திற்கு ஒவ்வாத கருத்துக்களை ஒழித்துக் கட்டுவது என்ற இயக்கத்தின் குறிக்கோளாக இருந்தது; மற்றும் கட்சியின் சரியான பாதையையும் கொள்கைகளையும் அமல் நடத்துவதை இன்னும் தடைச் செய்து கொண்டிருந்த பாட்டாளி வர்க்கத்திற்கு ஒவ்வாத கருத்துக்களை எதிர்த்துப் போராடுவதும் இந்த இயக்கத்தின் நோக்கமாக இருந்தது.

இந்த இயக்கத்திற்கு முன்பு, கட்சி ஏற்கனவே ஒரு ஒன்று படுத்தப்பட்ட கட்சியாகவும் பரவலான வெகுஜன மக்களை அதனுடைய அடிப்படையாகக் கொண்ட கெட்டியான கட்சியாக வும் மாறி இருந்தது. கம்யூனிஸ்டு கட்சி நாட்டின் இரண்டாவது மிகமிகப் பெரிய கட்சியாக இருந்தது. உறுப்பினர்களின் எண் ணிக்கை பல பத்து ஆயிரங்களில் இருந்து 8,00,000 ஆக அதிகரித்திருந்தது. சித்தாந்த ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் மற்றும் ஸ்தாபன ரீதியாகவும் அது ஒன்றுபட்டதாகவும் வலுவானதாகவும் இருந்தது. சித்தாந்த ரீதியாக, மார்க்சிய-லெனினியத்தின் வெளிச்சத்தில் சீனப் புரட்சியின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுவதற்கு அது கற்று அறிந்து இருந்தது. அரசியல் ரீதியாக அது ஒரு மார்சிய-லெனினிய அரசியல் பாதையையும் ராணுவப் பாதையையும் உரு வாக்கி இருந்தது. மற்றும் ஸ்தாபன ரீதியாக அது ஒரு போல்ஷ்விக் தலைமைத் தாங்கும் படைப் பிரிவைப் பெற் றிருந்தது.

களை எடுப்பு இயக்கத்திற்கு முன்பு கட்சியின் பொதுவான நிலைமை இப்படிப்பட்டதாக இருந்தது. ஆனால் எண்ணற்ற கடுமையான பிரச்சினைகளால் கட்சி இன்னும் எதிர்நோக்கப் பட்டிருந்தது என்பது முழுமையாக உணரப்பட வேண்டும். கட்சி கிராமப்புற ஏரியாக்களில் பணியாற்றிக் கொண்டிருந்த மையால், அதைச் சூழ்ந்துக் கொண்டுருந்த பரவலான குட்டி பூர்சுவா வர்க்கமும்கூட கட்சியைச் செல்வாக்கிற்கு உட்படுத்து வதற்கு சகல முறைகளிலும் முயற்சித்தது. ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் வெடித்தப்பிறகு, விவசாயி அல்லது நகர்புற குட்டி முதலாளித்துவ பூர்வோத்திரத்தைக் கொண்ட பெருவாரியான முற்போக்காளர்கள் கட்சியில் சேர்ந்தார்கள். கட்சி தேசம் முழுவதின் நலன்களையும் மற்றும் தொழிலாளி வர்க் கத்தின் நலன்களையும் பிரதிநிதித்துவப்படுத்தியதாலும், மக்களிடையே மிக உயர்ந்த மதிப்பைப் பெற்றிருந்தமையாலும் குட்டி முதலாளித்துவ பூர்வோத்திரத்தைக் கொண்டிருந்த பெருவாரியான முற்போக்காளர்கள் சீனத் தொழிலாளி வர்க் கத்தின் கட்சியில் சேர்வதும், அதனுடைய உறுப்பினர் எண் ணிக்கையில் பெரும்பான்மையாக அமைந்தும் தவிர்க்க முடியாத தாகவும் நியாயமானதாகவும் இருந்தது.

சித்தாந்த ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் இன்னும் போதுமான அளவிற்கு புடம்போட்டு எடுக்கப்படாமலிருக்கும்

குட்டி முதலாளித்துவ பூர்வோத்திரத்தைக் கொண்ட அத்தகைய உறுப்பினர்கள் தங்களுடைய சித்தாந்தத்தினாலும் வேலை செய்யும் பாணியாலும் கட்சியைச் செல்வாக்கிற்கு உட்படுத்துவதற்கு பல்வேறு வழிகளில் முயற்சிப்பதும், மற்றும் சில சமயங்களில், குட்டி முதலாளித்துவ சிந்தாந்தத்திற்கு ஏற்பவும், மற்றும் குட்டி முதலாளித்துவ சிந்தனை வழிகளுக்கு ஏற்பவும் கட்சியை ''சீர்திருத்துவதற்கும்'', கூட முயற்சிப்பதும் தவிர்க்க முடியாததாக இருந்தது. இது கட்சிக்குள் பாட்டாளி வர்க்க சித்தாந்தங்களுக்கும் பாட்டாளி வர்க்கத்திற்கு ஒவ்வாத சிந்தாந்தங்களுக்கும் இடையே, மிகவும் குறிப்பாக பாட்டாளி வர்க்க சித்தாந்தங்களுக்கும் குட்டி முதலாளித்துவ சித்தாந்தங்களுக்கும் இடையே உள்ள ஒரு முரண்பாட்டிற்கு வழி நடத்திச் சென்றது. அதனுடைய அணிகளுக்குள்ளே இந்த கடுமையான பிரச்சினையால் எதிர் நோக்கப்பட்டதால், இத்தகைய உறுப்பினர்களுக்கு மார்க்சிய-லெனினியத்தில் கல்விக் கற்றுக் கொடுக்கும் அவசரக் கடமையை மேற்கொள்ள கட்சி தீர்மானித்தது.

கல்விக் கற்கும் முறையில் அகநிலைவாதத்தின்பாலும் கட்சி வேலையின் பாணியில் செக்டேரியனிஸத்தின்பாலும்—மற்றும் அவற்றை வெளிப்படுத்தும் உருவத்தின்பாலும் இலக்கிய பணியில் திரும்பத் திரும்ப ஒரே மாதிரியாக கூறும் கட்சி பாஷையின் பாலும்— இருந்த போக்குகளுக்கு எதிராக களை எடுப்பு இயக்கம் பிரதானமாக திசைத் திருப்பப்பட்டிருந்தது.

1. கல்வி கற்கும் அணுகும் முறையைக் களை எடுத்தல்—அகநிலை வாதத்தை எதிர்த்தல்.

கல்வி கற்கும் அணுகுமுறை பற்றிய பிரச்சனை மார்க்சிய-லெனினியத்தின்பால் உள்ள போக்குப்பற்றிய ஒரு பிரச்சினையாக இருந்தது. கல்வி கற்று உணருவதை அணுகுவதை திருத்துவது என்பதின் அர்த்தம், மார்க்சிய-லெனினியத்தின்பால் சரியானதொரு போக்கினைக் கையாளும்படி கட்சி முழுவதிற்கும் கற்றுக் கொடுப்பதாகும்.

கட்சியில் அகநிலைவாதத்தின் இரண்டு உருவங்கள்—குருட்டுத்தத்துவவாதமும் மற்றும் தன்அனுபவவாதமும்—இருந்தன. கட்சிக்கும் புரட்சிக்கும் மிக அதிகமான அபாயகமாக அமைந்திருந்த குருட்டு தத்துவவாதத்திற்கு எதிரான போராட்டத்தின் மீது பிரதான அழுத்தம் வைக்கப்பட்டிருந்தது.

களை எடுப்பு இயக்கத்திற்கு முன்பு, கட்சியின் வரலரற்று ரீதியான அனுபவங்களை அறியாமல் இருந்த பலகட்சி உறுப்

பினர்களிடையே உண்மையானதொரு மார்சியவாதியை எது உண்டாக்கிற்று என்பது பற்றிய குழப்பமான கருத்துக்கள் நில வின. நீண்டதொரு காலகட்டமாக, தோழர் பாங்பின்னினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட குருட்டு தத்துவவாதிகள் தங் களை ''முழுமையான மார்சியவாதிகள்'' என்று முத்திரைகுத்தி இருந்தார்கள். அவர்கள் மார்க்சியத்தை மானசீகமான முறையில் எந்தவிதமான குறிக்கோள் இன்றியும் கற்றிருந் தார்கள். புரட்சிகரமான நடைமுறையின் தேவைகளைச் சந் திக்கும் குறிக்கோளுடன் அவர்கள் அதனைக் கற்கவில்லை. இந்த முறையில், சீனப்புரட்சியின் பிரச்சனைகளின் ஸ்தூலமான பகுத்தாய்விற்கவும், தீர்விற்காகவும் மார்க்சிய வர்க்க நிலைபாட் அதன் கருத்தோட்டத்தையும் முறைகளையும் பிரயோகிப்பதற் கும்அவர்கள் முடியாதவர்களாக இருந்தார்கள். ஆனால் மார்க் சிய கட்டுரைகளில் இருந்து சொற்றொடர்களின் வார்த்தைகள் மட்டுமே அவர்களால் மேற்கொள்ளப்பட்டதொரு போக்கு மித மிஞ்சிய அளவிற்கு புண்படுத்துவதாக இருந்தது. மார்க்சியம் என்பது புத்தகங்களில் இருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட மேற் கோள்களால் உண்டாக்கப்பட்ட கன்னுபின்னுவென்ற ஒரு ஒட்டுப் பிளாஸ்திரி வேலையைக் காட்டிலும் வேறு எதுவுமல்ல என்ற ஒரு தவறான கண்ணோட்டம் கட்சி உறுப்பினர்களின் ஒரு பகுதியினரிடையே நடமாட ஆரம்பித்தது. எனவே, பாடப் புத்தகவாதத்தை எதிர்ப்பதில் சில கண்ணோட்டங்களைப் பற்றி பின்வரும் சரியான விளக்கங்களைக் கொடுப்பது முதல் முக்கியத்துவம் உடையதாக இருந்தது. ஒரு தத்துவம் என்றால் என்ன? ஒரு தத்துவார்த்தவாதியை உண்டாக்குவது எது? மார்க்சிய-லெனினிஸத்தின் சாராம்சம் என்ன? மற்றும் மார்க் சிய-லெனினியத்தைக் கற்று உணர்வதில் முறையான போக்கு எது? மற்றும் இதுபோன்ற கேள்விகள்.

ஒரு தத்துவம் என்றால் என்ன? ஒரு தத்துவம் என்பது உண்மையான பிரச்சினைகளைப் பொதுமைப்படுத்துவதாகும் ''உலகத்தில் ஒரே ஒரு வகைப்பட்ட உண்மையான தத்துவம் தான் உள்ளது. ஒருபுற நிலை ரீதியான உண்மைத் தன்மை யில் இருந்து பெறப்பட்ட தத்துவமும் மற்றும் பின்னர் திருப்பத் தில் அதனால் நிரூபிக்கப்பட்டுள்ள தத்துவமும்,[2] தத்துவத் திற்கும் நடைமுறைக்கும் இடையே உள்ள ஒற்றுமை மார்க்சிய - லெனினியத்தின் அடிப்படையான கோட்பாடுகளில் ஒன்றாகும்.

ஒருவர் உண்மையானப் பிரச்சினைகளைக்கற்று உணர வேண்டும். விவரங்களை வகைப்படுத்தி அலசி ஆராயவேண்டும். மற்றும் அவற்றில் இருந்து ஒரு தத்துவத்தை உருவாக்கவேண்டும். அடுத்த நடவடிக்கை இத்தகைய தத்துவங்களை நடைமுறையில் சோதித்துப் பார்ப்பதாகும். அதனால்தான் கட்சியின் மத்திய கமிட்டியின் உண்மையான போராட்டங்களில் பங்கெடுக்கும்படியும் உண்மையான பிரச்சினைகளைக்கற்று உணரும்படியும் அதனுடைய எல்லா உறுப்பினர்களையும் அறைகூவி அழைத்தது.

கட்சியின் தத்துவார்த்தவாதிகள் யார்? ''மார்க்சிய-லெனினியத்தின் நினைவாற்றலின் மீதும் கருத்தோட்டமும் மற்றும் முறையின் மீதும் தங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு, வரலாற்றிலும் புரட்சியிலும் தோன்றுகிற உண்மையான பிரச்சினைகளைச் சரியாக வியாக்கியானம் செய்பவர்களும் மற்றும் பொருளாதாரம், அரசியல் இராணுவ விவகாரங்கள் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றில் சீனாவின் பல்வேறு பிரச்சினைகளுக்கு விஞ்ஞான ரீதியானதொரு விளக்கமும் தத்துவார்த்த ரீதியான தெளிவும் கொடுப்பவர்களும்''[3] தான் அப்படிப்பட்ட தத்துவார்த்தவாதிகள். புரட்சியின் லட்சியத்திற்கு சேவை செய்யும்படி தத்துவங்கள் செய்யப்பட வேண்டும். ஒரு கட்சி உறுப்பினர் மார்க்சிய நூல்களில் இருந்து சில முடிவுகளையும் கோட்பாடுகளையும் மட்டுமே திரும்பத் திரும்பப் பெறக்கூடிய ஒருவர் மற்றும் அவருடைய நேருக்கு நேராக இருக்கும் சீனாவின் பிரச்சனைகளைப் புறக்கணிக்கும் ஒருவர் மார்க்சிய—லெனினிய தத்துவார்த்தவாதியாக கருதப்பட முடியாது.

மார்க்சிய—லெனினியத்தைக் கற்பதின் நோக்கம் அதில் பாண்டித்தியம் பெறுவதும் அதனைப் பிரயோகிப்பதுமாகும். இந்த நோக்கத்திற்காக சீனப் புரட்சியின் நடைமுறையில் இருந்து எழும் பிரச்சினைகளில் சரியாகத் தீர்வுகாண கற்றுக் கொள்வது அவசியமாகும். மற்றும் மார்க்சிய வர்க்க நிலைபாடு கருத்தோட்டம் மற்றும் முறையில் இருந்து சீன வரலாற்றின் பிரச்சினைகளை கற்று உணர்வதும் அவசியமாகும். மார்க்சிய லெனினியத்தைக் கற்றுக் கொள்வதில் கட்சிக் கையாளவேண்டிய போக்கினைபற்றி, ''அம்பை இலக்கின் மீது குறி வைத்து எய்தல்'' என்று தோழர் மாசேதுங் சிலேடையாக விளக்கி கூறினர்.

அகநிலை வாதத்தை வெற்றி கொள்வதற்கு புத்தக

அறிவுடன் கூடியவர்கள் நடைமுறையில் இருந்து கற்றுக் கொள்ளும்படி வலியுறுத்தப்பட்டார்கள். அப்படிச் செய்வதன் மூலம் அவர்கள் தங்களைப் புத்தக அறிவோடு மட்டும் நிறுத்திக் கொள்ளமாட்டார்கள்; அல்லது பாடப் புத்தகமாக தவறை செய்யவும் மாட்டார்கள். அதே சமயத்தில் நடைமுறை அனுப வத்துடன் கூடியவர்கள். தத்துவார்த்த நூல்களைக் கற்கும்படி வலியுறுத்தப்பட்டிருந்தனர். அப்படிச் செய்வதினால் அவர் களுடைய அனுபவத்தை ஒரு தத்துவார்த்த மட்டத்திற்கு உயர்த்திக் கொள்ளவும், தன் அனுபவவாத தவறுகளைத் தவிர்க்கவும் முடியும்.

2. கட்சி வேலையின் பாணியைக் களைந்து எறிதல்— செக்டேரியனிசத்தை எதிர்த்தல்.

குட்டி முதலாளி வர்க்கத்தின் குறுகிய மனோபாவம் சித் தாந்தத்தில் அகநிலைவாதமாக மட்டும் வெளிப்படுத்திக் கொள்வதோடு மட்டுமின்றி அரசியல் வாழ்க்கையிலும் ஸ்தாபன விஷயங்களிலும் செக்டேரியனிசமாகவும்கூட வெளிப்படுத்தி கொண்டது. உண்மையானதொரு ஒற்றுமையான மற்றும் கெட்டிப்படுத்தப்பட்டு கட்சியைக் கட்டுவதற்கு, சிந்தாந்தத்தில் அகநிலைவாதம் எல்லாவற்றிற்கும் முதலாவதாக எதிர்க்கப்பட வேண்டும். கட்சியில் மார்க்சியத்தின் தலைமையை ஸ்தாபிக் கும் பொருட்டும், கெட்டிப்படுத்தும் பொருட்டும் சித்தாந்தத் தில் அகநிலைவாதம் எல்லாவற்றிற்கும் முதலாவதாக எதிர்க் கப்படவேண்டும். ஏக காலத்தில் ஸ்தாபனம் செய்யவும் செக்டேரியனிஸத்தை எதிர்த்துப் போராட வேண்டும். களை எடுப்பு இயக்க காலத்தில் கட்சியில் செக்டேரியனிஸம் ஆதிக்க பாத்திரத்தை வகிக்கவில்லை என்ற போதிலும் அதனுடைய புத்துயிர் பெற்றும் எழுதல்கள் இன்னும் அங்கே இருந்தன. உதாரணமாக, ''நடவடிக்கையின் சுயேச்சைத் தன்மையை'' அடித்துக் கூறுவது மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக ''மலை போன்ற உறுதி''[4] அடித்துக் கூறுவது போன்றவை ஆகும். ''மலை போன்ற உறுதி'' அடித்தள ஏரியாக்களைப் பிரித்தலின் ஒரு விளைவாகவும் கட்சியின் குட்டி பூர்ஷ்வா பூர்வோத்தி ரத்தை கொண்ட உறுப்பினர்கள் உயர்ந்த சதவீதத்தில் இருந்ததின் ஒரு விளைவாகவும் ஏற்பட்டது.

கட்சியின் தலைமை தாங்கும் உறுப்புகளைக் கட்சி முழு வதின் சித்தத்தை மையப்படுத்துவதாக கருதுவதற்கு பதி லாக சில உறுப்பினர்கள் கட்சிக்குள் அவர்களது உறவினர்

கள் ஒரு செக்டேரியன் போக்கினைக் காட்டினார்கள். இப் போக்கு அதனுடைய ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டினை யும் தடைச் செய்து தலைமைத் தாங்கும் உறுப்புகளைக் கட்சி உறுப்பினர்களிடமிருந்து பாராதீனம் செய்யவும் பயமுறுத்திற்று. கட்சியில் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டின் அடிப்படையாக எது இருக்க வேண்டி இருந்தது? சித்தாந்த ரீதியாக அது பாட்டாளி வர்க்கத்தின் சித்தாந்தத்தின் தலைமையாக இருக்க வேண்டி இருந்தது. கட்சியின் பாதைகளும் தந்திரங்களும் மார்சி யத்தின் மீது அடிப்படையாக இருக்கவேண்டி இருந்தது. ஏன் னெனில் ஒரு பாட்டாளி வர்க்க சித்தாந்தம் மட்டுமே கட்சி முழு வதின் சித்தத்தையும் தேசம் முழுவதின் சித்தத்தையும் உள் ளடக்கி இருக்க முடியும். ஸ்தாபன ரீதியாக கட்சியின் கோட் பாடான ஜனநாயக மத்தியத்துவம், கண்டிப்பாக கடைபிடிக்கப் படவேண்டி இருந்தது. மேலும், எந்தவிதமான முடிவுகளும் செய் யப்படுவதற்கு முன்பு கட்சியின் திட்டங்களையும் கொள்கைகளை யும் சுதந்திரமாகவும் முழுமையாகவும் விவாதிப்பதற்கு ஒவ் வொரு உறுப்பினருக்கும் உரிமை இருந்தது. பிறகு, கட்சி எல்லா அபிப்பிராயங்களையும் மத்தியத்துவப்படுத்தி முடிவுகளை எடுத் தது. ஜனநாயக ரீதியானதொரு அடிப்படையில் செய்யப்படும் இத்தகைய முடிவுகள் மாபெரும் பெரும்பான்மையினரின் அபிப் பிராயங்களைப் பிரதிநிதித்துவப் படுத்திற்று. ஒருமுறை முடிவு செய்யப்பட்டுவிட்டால், சிறுபான்மை பெரும்பான்மைக்கு கட்டுப் பட வேண்டும். கீழ் மட்டம் மேல் மட்டத்திற்கு கட்டுப்பட வேண்டும், பகுதி முழுவதிற்கும் கட்டுப்பட வேண்டும். மற்றும் கட்சி முழுவதும் மத்தியக் கமிட்டிக்கு கட்டுப்படவேண்டும் என்ற கோட்பாட்டினைப் பின்பற்றி ஒவ்வொருவரும் கட்சி முடிவின்படி நடந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு உறுப்பினரும் அவரது சொந்த அபிப்பிராயத்தை வைத்துக் கொள்வதற்கு அனுமதிக் கப்பட்டிருந்த போதிலும், அவர், முடிவுகளை உறுதியாக நிறை வேற்ற வேண்டும். மேலும், செயல்வீரர் சரியானதொரு உறவு நிலைநாட்டப்பட வேண்டி இருந்தது. கட்சி செயல்வீரர்கள் பல்வேறு நேரங்களிலும் இடங்களிலும் பல்வேறு வகைப்பட்ட புரட்சிப் பணியை மேற்கொள்ள வேண்டி இருந்தமையால் பழைய செயல்வீரர்களுக்கும் புதிய செயல் வீரர்களுக்கும் இடையே உள்ள உறவில் பிரச்சினைகள் தோன்றின. ஒரு பிர தேசத்திற்கு சுதேசியான ஊழியர்களுக்கும் பிரதேசத்திற்கு வெளியே இருந்து வந்த ஊழியர்களுக்கும் இடையே உறவுகளி உ-

பிரச்சினைகள் தோன்றின. இராணுவ, சேவைகளில் உள்ள ஊழியர்களுக்கும் சிவிலியன் வேலையில் உள்ள செயல்வீரர்களுக்கும் இடையே உள்ள உறவில் பிரச்சினைகள் தோன்றின. மற்றும் பல்வேறு இலாகாக்களிலும், பிரதேசங்களிலும் உள்ள செயல் வீரர்களுக்கு இடையே உள்ள உறவிலும் பிரச்சினைகள் தோன்றின. இத்தகைய செயல்வீரர்கள் அனைவருக்கும் இடையே யானதொரு உறவு நிலைநாட்டப்பட வேண்டி இருந்தது. அவர்கள் ஒருவரிடமிருந்து மற்றொருவர் கற்றுக் கொள்ள வேண்டி இருந்தது. ஒருவர் மற்றவர்களுடைய பலமான அம்சங்களில் இருந்து தங்களுடைய சொந்த பலகீனத்தைப் போக்குவதற்கு கற்றுக்கொள்ள வேண்டி இருந்தது. கட்சி முழுவதின் ஒருமைப்பாட்டினை மற்றும் புரட்சிகரமான அணிகளின் ஒருமைப்பாட்டினைப் பலப்படுத்துவதற்காகவும் செக்டேரியனிஸத்தின் மிச்சசொச்சங்களை ஒழித்துக்கட்டி, ஸ்தாபனத்தில் ஒற்றுமையை உறுதிப்படுத்துவதற்கும் அவர்கள் ஒருவர் மற்றவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டி இருந்தது.

கட்சிக்கு வெளியே இருந்த மக்களோடு கட்சியினுடைய உறவுகளில் செக்டேரியனிஸம் புத்துயிர் பெறுதல், கட்சி சார்பற்ற மக்களின் முன்பு கட்சியின் ஒரு பகுதி உறுப்பினர்கள் வீராப்பாக பேசிக் கொள்கிறார்கள். கட்சியோடு ஒத்துழைக்க விரும்பிக் கொண்டிருப்பார்கள். அல்லாதவர்களை தவிர்த்துக் கொண்டும் ஏராளமாகப் பார்த்துக் கொண்டும், மற்றும் அவர்களது நல்ல குணங்களை மதிப்பீடு செய்வதற்கு மறுத்துக் கொண்டு வருபவர்கள் இருக்கிறார்கள் என்ற விபரவத்தினால் காட்டப் படுகிறது. கட்சியோடு ஒத்துழைப்பதற்கு விரும்பிக் கொண்டிருக்கும் அனைவரோடும், அல்லது கட்சியோடு ஒத்துழைப்பதற்கு சகல சாத்தியப் பாடும் உள்ளவர்களோடும் கட்சி உறுப்பினர்கள் அப்படிப்பட்டவர்களோடு ஒத்துழைப்பதற்கு கடமை உண்டு. மற்றும் அவர்களை விலக்கி வைப்பதற்கு கட்சி உறுப்பினர்களுக்கு முற்றிலும் எந்த விதமான உரிமையும் கிடையாது. மற்றபடி மக்களின் நலன்களின் பிரதிநிதி என்ற முறையில் மற்றும் அவர்களுடைய சித்தத்தை மையப்படுத்துபவர் என்ற முறையிலும் அவர்கள் கட்சியின் அலுவலை அலட்சியப்படுத்திக் கொண்டிருப்பார்கள். இது அவர்களை, வெகுஜனங்களிடமிருந்து தனிமைப்படுத்தும் மற்றும் கட்சியின் பாதையை அமுலாக்குவதை தடைப்படுத்தவும் செய்யும்.

3. இலக்கிய பாணியைக் கலைந்தெடுத்தல் கட்சியின்

''எட்டுக்கால் கட்டுரை'' (eight - legged essay) அல்லது ஒரே மாதிரியாக திரும்பத் திரும்ப சொல்லும் கட்சி பாதையை எதிர்ப்பது.

கட்சியின் ''எட்டுக்கால் கட்டுரை'' எப்படித் தோன்றிற்று?

நிலப்பிரபுத்துவ சீனாவில், ''எட்டுக்கால் கட்டுரை'' ஒரு வகையான இலக்கிய கலைக் கூத்தாடியாக இருந்தது; அது உள்ளடக்கத்தின் செலவில் உருவத்தை வலியுறுத்திற்று. அது வரட்டுத் தனமாகவும் சம்பிரதாயமானதாகவும் இருந்தது. பழைய பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவ ''எட்டுக்கால் கட்டுரையை யும்'' வறட்டுத் தத்துவத்தையும் எதிர்ப்பதில், மே 4 ஆம் தேதிய இயக்கம் முற்போக்கானதாகவும் புரட்சிகரமானதாகவும் இருப்பதாக தன்னைக் காட்டிக் கொண்டது. சீன மார்க்சியவாதிகள் அந்த இயக்கத்தின் விமர்சன ரீதியான உணர்வினை சுவீகரித்துக் கொண்டு, மார்க்சியத்தின் அடிப்படையில் அதனை மீண்டும் வார்த்தெடுத்து, ஒரு ஜீவனுள்ள, புதிய மற்றும் சக்தி வாய்ந்த மார்க்சிய இலக்கிய பாணியை படைத்தார்கள். ஆனால் பூர்சுவா மற்றும் குட்டி பூர்சுவா, குட்டி அறிவு ஜீவிகளால் மற்றொரு பாதைமேற்கொள்ளப் பட்டது; பூர்சுவா மற்றும் குட்டி பூர்சுவா குட்டி அறிவு ஜீவிகள் பிரச்சினைகளின்பால் ஒரு சம்பிரதாய ரீதியான மற்றும்கால வரிசைக்கு ஒத்து வராத ரீதியான அணுகு முறையை கையாண்டார்கள், மற்றும் பழைய ''எட்டுக்கால் கட்டுரையை'' எதிர்ப்பதில்அவர்களுடைய சொந்தமான ஒரு அந்நிய ''எட்டுக்கால் கட்டுரையைப்''படைத்து அபிவிருத்திசெய்தார்கள். பல மார்க்சியவாதிகளும்கூட, மார்க்சியத்தை உறுதியாக பற்றிப் பிடிப்பதற்கு தவறி சம்பிரதாயவாத தவறினைச் செய்து, கட்சி யின் ''எட்டுக்கால் கட்டுரைகளை'' அபிவிருத்தி செய்தார்கள். புரட்சிகரமான கலாச்சார வட்டாரங்களுக்குள் இத்தகைய இலக்கிய பாணிகளின் தொடர்ந்து நீடிப்பு, கட்சி முழுவதிற்கும் மகத்தான தொல்லையை உண்டாக்கிற்று.

கட்சியின் ''எட்டுக்கால் கட்டுரை'' அகநிலைவாதம் மற்றும் செக்டேரியனிஸம் ஆகியவற்றின் ஒரு வெளிப் படுத்தலாக இருந்தது. இப்படிப்பட்டதொரு பாணியால் பீடிக்கப்பட்டிருந் தவர்கள், தங்களுடைய கட்டுரைகளில் ஏராளமான ஜீரணிக்க முடியாத புரட்சிகரமான பதங்களையும் சொற்றொடர்களையும் குவித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களது கட்டுரைகளில் எந்த விதமான பிரச்சினையும் எழுப்பப்பட்டு, அலசி ஆராயப்படவும் இல்லை; அல்லது தீர்வுக் காணப்படவும் இல்லை. ஆகவே, புரட்சி

கரமான உணர்வினை வெளிப்படுத்துவதற்கான முறையான சாதனமாக இருப்பதற்கு பதிலாக, கட்சி ''எட்டுக்கால் கட்டுரை'' அதனைத் தெறிப்பதாக இருந்தது. எழுதுவதற்கும் பேசுவதற்கும் மார்க்சிய முறையைப் பிரயோகிக்க கற்றுக்கொள் வதின் அவசியமாக இருந்தது. பொருட்களின் முரண்பாடுகளின் பிரச்சினைகளைக் கண்டுபிடிப்பதற்கான நிகழ்ச்சிப் போக்கு இருக்க வேண்டி இருந்தது. இத்தகையப் பிரச்சினைகளைக் சவன மானதொரு முறையான அலசி ஆராய்தலுக்கும் சேர்த்தலுக்கும் உள்ளாக்கிக் கொண்டு, அவற்றின் தன்மையை வரையறுத்துக் கொண்டும் அவற்றிற்கு தீர்வு காணுவதற்கான வழியை ஆலோசனையாகக் கூறிக் கொண்டும் நிகழ்ச்சிப் போக்கு இருக்க வேண்டியதாக இருந்தது. முடிவற்று பக்கங்களை வெற்றுப் பேச்சால் நிரப்பிக் கொண்டிருப்பதும், இனங்களை மேலெழுந்த வாரியாக ஒழுங்குபடுத்தி வைத்திருப்பதும், ஒரு வறட்சியான சுவையற்ற பாணியை உபயோகித்துக் கொண்டிருப்பதும் ''குருட்டுத்தனமாக சுட்டுக் கொண்டிருப்பதும்'' அல்லது பாசாங்குத்தனமான. பாஷையோடு மக்களை ஏமாற்றிக் கொண் டிருப்பதும் எதிர்க்கப்பட வேண்டி இருந்தது. ஒரு மார்க்சிய இலக்கிய பாணி மட்டுமே மார்க்சியத்தைக் கற்றுக் கொடுத்து, மக்களை உற்சாகமூட்டி அதன்மூலம் மக்களின் புரட்சி லட்சி யத்தை முன்னுக்குக் கொண்டு செல்ல முடியும்.

களை எடுப்பு இயக்கம் நடைபெற்ற காலத்தில் கையாளப் பட்ட, கற்கும் முறை முதலாவதாக, சில பிரதான மார்க்சிய—லெனினிய நூல்களை ஆழமாக படிப்பதும், அவற்றின் சாரம்ச மான கருத்துக்களைப் பற்றிப்பிடிப்பதும் மற்றும் அவற்றை ஒரு அளவுகோலாக பயன்படுத்தி, ஒருவருடைய சொந்த சித்தாந்தத்தை அல்லது வேலையைப் பரிசீலிப்பதில், கடுமையான தொரு, நடைமுறை விமர்சனத்தையும் சுயவிமர்சனத்தையும் செய்வதாக இருந்தது. அடுத்த நடவடிக்கை எது சரியானது அல்லது தவறானது என்பதை அலசி ஆராய்ந்து, ஒருவருடைய தவறுகளின் காரணங்கள் சுற்றுப்புற சூழ்நிலைமைகள் மற்றும் சமுதாய வேர்கள் ஆகியவற்றைச் சரிபடுத்துவதற்கான சக்தி வாய்ந்த நடவடிக்கைகளை வரையறுப்பதுமாகும்.

கட்சியின் வரலாற்று ரீதியான பிரச்சினைகளைக் கற்று உணர் வதில் இதைப் போன்ற ஒரு முறை கையாளப்பட்டது. முதலாவ தாக, பல பிரதான மார்க்சிய—லெனினிய நூல்கள் கற்று உணரப் பட்டன; பிறகு இத்தகைய நூல்களின் பிரதானமான கருத்து

களை வழிகாட்டும் கோட்பாடுகளாகக் கொண்டு, சரியான கொள்கைகள் பொதிந்து கிடந்த கட்சியின் வரலாற்று ரீதியான தஸ்தாவேஜுகளையும் மற்றும் சரியற்ற கொள்கைகள் பொதிந்துகிடந்த கட்சியின் வரலாற்று ரீதியான தஸ்தாவேஜு களையும் பற்றி ஒரு ஒப்பு நோக்குதல் நடத்தப்பட்டது.

களை எடுப்பு இயக்கம் ஒரு மார்ச்சிய-லெனினிய கல்வி இயக்கமாக இருந்தமையால், முடிவெடுப்பதில் ஏற்பட்ட பிழைகள் மூலம் அவர்களது வேலையில் தவறுகளைச் செய்திருந்த வர்கள் சம்பந்தமாக சித்தாந்தக் கல்வியினை வலியுறுத்துவது கட்சியின் கொள்கையாக இருந்தது. ஒழுங்கு நடவடிக்கைகள் அபூர்வமாகவே எடுக்கப்பட்டன. வேறு வார்த்தைகளில் சொன்னால், கட்சி ''கருத்துக்களைத் தெளிவுபடுத்த மற்றும் தோழமையான ஒருமைப்பாட்டினை வைத்திருக்கும்'' கொள்கை களையும் மற்றும் ''எதிர்காலத் தவறுகளைத் தவிர்க்கும் பொருட்டு கடந்தகால அனுபவத்திலிருந்து கற்றுக் கொள்ளுதல் மற்றும் நோயாளியைக் காப்பாற்றும் பொருட்டு வியாதிக்கு சிகிச்சை அளித்தல்'' கொள்கைகளையும் அனுஷ்டித்தது. ''வருங் கால தவறுகளைத் தவிர்க்கும் பொருட்டு கடந்த கால அனுபவத் திலிருந்து கற்றுக் கொள்ளுதல்'' என்ற கொள்கையின் அர்த்தம் என்ன வென்றால் சகல பிழையான கருத்துகளும் அம்பலப் படுத்தப்பட்டு, பின்னர் அலசி ஆராயப்பட்டு, ''விவரங்களில் இருந்து உண்மையைக் கண்டுபிடிப்பது'' என்ற விஞ்ஞான ரீதி யான போக்கினால் விமர்சிக்கப்பட வேண்டும் என்பதாகும். அப்படிச் செய்வதினால் குப்பையைச் சுத்தம் செய்தபிறகு, சம்மந்தப்பட்ட நபர் அவருடய சித்தாந்தத் தரத்தை உயர்த்தி மிகவும் அதிக கவனமாக இருக்கமுடியும் என்று வருங்காலத்தில் அவருடைய வேலையைச் சிறப்பாக செய்யமுடியும் என்பதும் ஆகும். ''நோயாளியை காப்பாற்றும் பொருட்டு வியாதிக்கு சிகிச்சை அளித்தல்'' என்பதின் அர்த்தம் என்ன வென்றால், கட்சித் தோழர்கள் இடையே ஒருமைப்பாட்டினை நிலை பெறச் செய்வதில் மனசாட்சி பூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாகும். பாட்டாளி வர்க்கமற்ற பூர்வோத் திரத்தை கொண்ட எல்லா தோழர்களும், அவர்கள் மனப்பூர்வ மாக தங்களுடைய பூர்வோத்திரமான நிலைபாட்டினை உதறித் தள்ளிவிட்டு, பாட்டாளி வர்க்கத்தின் தலைமையை ஏற்று கட்சி யில் சேர்ந்திருந்தால், அவர்களது சித்தாந்த தரத்தினை உயர்த்து வதற்கு உதவி செய்யப்பட வேண்டும். தவறு செய்திருந்தவர்கள்

விஷயத்திலும்கூட தனிப்பட்ட தாக்குதலைத்தொடுக்கும் போக்கு கையாளப்படக்கூடாது. மாறாக, அந்தத் தவறுகளைப் பிடிவாத மாக செய்யாமல் இருக்கும் வரையிலும் அவர்களது பிழைகளைத் திருத்துவதற்கு அவர்களுக்கு உதவி செய்யப்பட வேண்டும். சித்தாந்த பிரச்சினைகளை அனுகுவதில் சீனக்கம்யூனிஸ்ட் கட்சி யினால் கையாளப்பட்ட இந்தக் கொள்கை மற்றும் தவறுகளைச் செய்திருந்தவர்களின்பால் சீனக் கம்யூனிஸ்டு கட்சியினால் கையாளப்பட்ட கொள்கை, ஒரே சரியான கொள்கையாகவும் உயர்வானதொரு மதிப்பு மிக்க அனுபவமாகவும் இருந்தது.

1942இல் ஆரம்பிக்கப்பட்ட கட்சியின் முதல் களை எடுப்பு இயக்கம், 1931இல் இருந்து கட்சியில் நீடித்திருந்த குருட்டுதத்துவ செல்வாக்குகளைத் துடைத்தெறிந்து, குட்டி முதலாளித்துவ பூர்வோத்திரத்தைக் கொண்டிருந்த பல புதிய கட்சி உறுப்பினர் கள் அவர்களது பூர்வோத்திர நிலைபாட்டினை முறித்துக் கொள்வதற்கு உதவி செய்தது. கட்சியின் சித்தாந்த மட்டத்தை வெகுவாக உயர்த்திற்று மற்றும் மத்தியக் கமிட்டியைச் சுற்றிலும் தோழர் மாசே-துங்கை சுற்றிலும் கட்சி முழுவதின் முன் கண்டிராத ஒரு ஒற்றுமையை அடையும்படியும் செய்தது. இவை அனைத்தும் சகல அரங்கங்களிலும் மத்தியக் கமிட்டி யின் அரசியல் வழியை அமுல் நடத்துவதை உறுதிப் படுத்திற்று. ஜப்பானிய எதிர்ப்பு யுத்தகால கட்டத்தில் மிதமிஞ்சிய கஷ்டங்களை சமாளிப்பதை கட்சிக்கு சாத்தியமாக செய்வது; மற்றும் கட்சியின் ஏழாவது காங்கிரஸைக் கூட்டுவதற் கான சித்தாந்த அடிப்படையை போடுவதையும் உறுதி செய்தது

இந்தக் கால கட்டத்தில், ஜப்பானிய துருப்புகளாலும் கைக் கூலித் துருப்புகளாலும் மற்றும் கோமின்டாங் பிற்போக்கு வாதிகளாலும் தொடுக்கப்பட்டதாக்குதல் மற்றும் முற்றுகை யால் உண்டாக்கப்பட்ட கடுமையான பொருளாதாரக் கஷ்டங் களையும் நிதிக் கஷ்டங்களையும் சமாளிக்கும் பொருட்டு, பொறுக்கி எடுக்கப்பட்ட துருப்புகள் பற்றிய ஒரு கொள்கையை யும் எளிமையாக்கப்பட்ட நிர்வாகம் பற்றிய ஒரு கொள்கையை யும் நிறைவேற்றி விரிவானதொரு உற்பத்தி இயக்கத்தை ஆரம்பிக்கும்படி விடுதலை பெற்ற ஏரியாக்களில் உள்ள மக்களை யும், துருப்புகளையும் மத்தியக்கமிட்டி அறைகூவி அழைத்தது.

இந்தக் கொள்கையின் விளைாக உற்பத்தியில் ஈடுபடாமல் இருந்த மக்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது, மக்களின் சுமைகள் எளிதாக்கப் பட்டன. மற்றும் சப்ளைகளின் பற்றாக்

குறை நிவர்த்தி செய்யப்பட்டது; மேலும், இராணுவ உறுப்புகள் எளிமையாக்கப் பட்டதோடு, எதிரிக்கு எதிரான போராட்டத்தில் மிக அதிகமானதொரு நகர்ந்து செல்லும் தன்மையையும் துரிதத் தன்மையையும் எய்தப்பட்டன. இந்த முறையில், பிரம்மாண்டமான யுத்த எந்திரத்திற்கும் உண்மை யான யுத்த நிலைமைக்கும் இடையே இருந்த முரண்பாடு அகற்றப்பட்டது; இராணுவ உறுப்புகள் கைமேல் இருந்த நிலைமைக்கு சிறப்பாக இணக்கமாகும்படி செய்யப்பட்டன. ஆகவே, மிகவும் திறமையாகவும் ஆக்கப்பட்டன.

பொருளாதார பிரச்சினைகள் சம்மந்தமாக தொடர்ச்சி யான பல கட்டுரைகள் தோழர் மாசே-துங்கால் எழுதப்பட்டன. அவரால் எழுதப்பட்ட ''ஜப்பானிய எதிர்ப்பு யுத்த காலகட்டத் தில் பொருளாதார பிரச்சினைகளும் நிதிப்பிரச்சினைகளும்,'' ''குத்தகை குறைப்பிற்காகவும். உற்பத்திக்காகவும், மற்றும் அரசாங்கத்திற்கு ராணுவத்தின் ஆதரவிற்காகவும் மற்றும் மக்களின் பாதுகாப்பிற்காகவும் ஆன இயக்கத்தை அடித்தள ஏரியாக்களில் பரப்புக!'' ''நாம் ஸ்தாபனரீதியாக ஒன்று படுவோம்,'' மற்றும் ''பொருளாதார வேலை செய்வதற்கு நாம் கற்றுக் கொள்ளவேண்டும்.'' ஆகியவை விடுதலைபெற்ற ஏரியாக்களில் உற்பத்தி இயக்கத்திற்கான கட்சியின் மத்திய கமிட்டியின் அடிப்படைத்திட்டங்களாக அமைந்தன. விடுதலை பெற்ற ஏரியாக்களில் பொருளாதாரக் கொள்கை ஒரு அபிவிருத்திக் கொள்கையாகஇருந்தது. அதாவது, பொருளாதார அபிவிருத்தியின் மீது சப்ளைகளைப் பெறும் ஒரு கொள்கையாக இருந்தது. பொதுத்துறை பொருளாதார நிறுவனங்களையும் தனியார் துறை பொருளாதார நிறுவனங்களையும் அபிவிருத்தி செய்வது நிதி மூலதாரங்களைக் குவிப்பதற்கு சிறப்பான உத்திர வாதமாக இருந்தது. ஆகவே கட்சியின் மத்திய கமிட்டியின் பொருளாதார அரங்கில் ஒரு இருபக்க போராட்டத்தை நடத்திற்று: பொருளாதார அபிவிருத்தியைப் புறக்கணித்த பிற்போக்குக் கருத்தோட்டத்தை எதிர்த்தும் மற்றும் தவிர்க்க முடியாத செலவினத்தை வெட்டுவதால் நிதிக்கஷ்டங்களை சமாளிப்பதை வலியுறுத்தும் பிற்போக்குப் பத்தாம்பசலிக் கருத் தோட்டத்தை எதிர்த்தும் மற்றும் திட்டவட்டமான நிலைமை களுக்கு சம்பந்தமல்லாமல் நடைமுறை சாத்தியமற்ற கம்பீர மான திட்டங்களை வக்காலத்துவாங்கி பேசிய கண்மூடித்தன

மான கருத் தோட்டத்தை எதிர்த்தும் ஒரு இருபக்க போராட்டத்தைக் கட்சி நடத்திற்று.

இந்த அடிப்படையான கொள்கைக்கு இணங்க, பொதுத் துறைக்கு சம்பந்தமான விவசாயத்திலும் தனியார் துறைக்கு சம்பந்தமான விவசாயத்திலும் தொழில், கைவினைத் தொழில், போக்குவரத்து, கால்நடை வளர்ப்பு மற்றும் வியாபாரம் ஆகியவற்றில் விரிவானதொரு உற்பத்தி இயக்கத்தை ஆரம்பிக்கும்படி மத்தியக் கமிட்டி துருப்புகளையும், குடிமக்களையும் அறைகூவி அழைத்தது; விவசாயத்தின் மீது விசேஷ அழுத்தம் கொடுத்து, ஒரு விரிவானதொரு உற்பத்தி இயக்கத்தை ஆரம்பிக்கும்படி துருப்புகளையும், மக்களையும் மத்திய கமிட்டி அறைகூவி அழைத்தது. கஷ்டங்களைச் சமாளிக்கும் பொருட்டு ஒவ்வொருவரும் உற்பத்தியில் பங்கு கொள்ள வேண்டும்.

யுத்தம் இடைவிடாமல் வளர்ந்து கொண்டும், எதிரி அடிக்கடி நாசத்தை விளைவித்துக்கொண்டும் இருந்த கிராமப்புற ஏரியாக்களில், துருப்புகளும் அரசாங்க உறுப்புகளும் உற்பத்தி பணியில் ஈடுபட்டன. உணவுப் பொருட்களிலும் முழுமையான அல்லது பகுதியான சுயபலத்தைப் படிப்படியாக பெறும் பொருட்டு மேற்கூறிய உற்பத்தி பணியில் ஈடுபட்டன.

மக்களின் வாழ்க்கை நிலைமைகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டும் புரட்சியுத்தத்தை ஆதரிக்கும் பொருட்டும், மக்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கட்சி, அரசாங்கம் மற்றும் ராணுவம் ஆகியவை அவர்களது உற்பத்தியை உயர்த்துவதற்கு மக்களுக்கு உதவி செய்வதற்கு அவற்றின் சிறப்பான முயற்சிகளைச் செய்தன. சகலஊழியர்களும் வெகுஜனங்களுக்கு அவர்களது அன்றாட வாழ்க்கையில் உதவி செய்தார்கள். விவசாய உற்பத்தியில் விவசாயிகளின் உற்சாகத்தை உயர்த்தும் பொருட்டு, குத்தகை குறைப்பதற்காகவும் வட்டிக் குறைப்பிற்காகவும் ஒரு விரிவான, முழுமையான இயக்கம் விடுதலை பெற்ற ஏரியாக்களில் நடத்தப்பட்டது. விவசாய உற்பத்திச் சக்தியை அபிவிருத்தி செய்யும் பொருட்டும் மற்றும் கூட்டுமயமாக்குவதற்கு படிப்படியாக மாறிக் கொள்வதற்கான பாதையைச் செப்பனிடும் பொருட்டும், விவசாயிகளைப் பரஸ்பர உதவிக்குழுக்களின் அல்லது கூட்டுறவு ஸ்தாபனங்களில் ஸ்தாபன ரீதியாக திரட்டுவது அடுத்த நடவடிக்கையாக இருந்தது. உற்பத்தி

பட்ட நிர்வாகம் மத்றும் உற்பத்தி இயக்கம் ஆகிய கொள்கையின் ஒரு விளைவாக பொதுஜன தானிய கட்டாய வசூல் பெருமள விற்கு குறைக்கப்பட்டிருந்தது. உதாரணமாக, டைகாங் பிரதேசத்தில், 1944ஆம் ஆண்டு பொதுதானிய வசூல், 1941னை ஒப்பு நோக்கிப் பார்க்கும் போது கிட்டத்தட்ட ஐம்பது சதவீதம் இருந்து விட்டது.

ஷாங்சி-ஹோப்பேய்-ஷாங்டுங்-ஹோனான் ஏரியாவில், துருப்பு கள் மற்றும் மக்களின் கூட்டு முயற்சிகள் 1939இல் ஒரு பெரும் வெள்ளத்தையும், 1942 மற்றும் 1943இல் வறட்சிகளையும், மற்றும் 1944இல் வெட்டுப் பூச்சிகளின் தொல்லையையும் வெற்றி கண்டன.

ஒரு பெரிய அளவிற்கு அல்லது சிறிய அளவிற்கு சுய ஆதரவை எய்தும் பொருட்டு துருப்புகளும் மக்களும் உற்பத்திக்குக் கடுமை யான முயற்சிகளை அர்ப்பணித்தார்கள். 1943இல் ஒவ்வொரு சிப்பாயும் மூன்று **மோவ்** நிலத்தைப் பயிர் செய்யும்படியும் ஒரு சீசனுக்கு அவருக்குத் தேவைபடும் போதுமான தானியத்தை உற்பத்தி செய்யும்படியும் வேண்டிக் கொள்ளப்பட்டிருந் தார். தொழில் வளர்ச்சிகளின் குறுக்கே, நிலக்கரி சுரங்கத் தொழில், இரும்பு உருக்குத்தொழில் தளவாட உற்பத்தி காகிதப் பொருட்கள் மற்றும் அன்றாடத் தேவைகளை உற்பத்தி செய்யும் தொழில் ஆகியவை குறுக்கே நின்றன. காகிதப் பொருட்கள் மற்றும் அன்றாட தேவைகளை உற்பத்தி செய்யும் தொழில்கள் ஸ்தலதேவையை முழுமையாக சந்திக்கக்கூடியவை களாக இருந்தன. பொருளாதார அரங்கில் எதிரியை எதிர்த்துப் போராடுவதற்கு, எதிரி கைப்பற்றி இருந்த ஏரியாக் களோடு நடைபெற்ற வியாபாரத்தின் மீது கட்டுப்பாடுகள் திணிக்கப்பட்டிருந்தன; தானியம், பருத்தி, கரும்பு மற்றும், தோல் ஏற்றுமதி தடை செய்யப்பட்டிருந்தது. அதே சமயத்தில், உப்பு, நெருப்புப் பெட்டிகள், துணி, மின்சார சாதனங்கள், இராணுவ சாதனம் மற்றும் தேவைப்பட்ட இதர பொருட்களின் இறக்குமதியும் ஊக்குவிக்கப்பட்டது.

பொருளாதார அரங்கில் பெறப் பெற்ற வெற்றி ஜப்பானியர் களாலும், பொம்மைப் படைகளாலும் மாற்றும் கோமிங்டாங் துருப்புகளாலும் உண்டாக்கப் பட்ட அழிவு, கொள்ளை மற்றும் முற்றுகை ஆகியவற்றை எதிர்த்து வெற்றிகரமாக செயல்படும்படி செய்தது. அடித்தள ஏரியாக்களில் செல்வாதாரங்களைப் பாது காப்பதற்கும் உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்கும் அது உதவி செய்தது.

அரசியல் சித்தாந்த மற்றும் பொருளாதார அரங்கங்களில் விடுதலை பெற்ற ஏரியாக்களால், பெறப்பட்ட இத்தகைய மகத்தான வெற்றிகள், குறிப்பாக, களை எடுப்பு இயக்கமும் விரிவான உற்பத்தி இயக்கமும் பெற்ற மாபெரும் வெற்றிகள், கட்சியை பொருளாதார ரீதியிலும் ஊடுருவப்பட முடியாததாக செய்திருந்தது. ஜப்பானிய எதிர்ப்பு யுத்த காலத்தில், மிதமிஞ்சிய நெருக்கங்கள் சமாளிக்கப் பட்டதற்கு இதுதான் முக்கியமான காரணமாக இருந்தது.

**3. ஜப்பானிய எதிர்ப்பு அடித்தள ஏரியாக்களில் எதிரியை எதிர்த்துப் போராடுவதற்கான யுத்த தந்திரம். எதிரியினுடைய "முற்றுகையிடும்", "கிள்ளி எறியும்" மற்றும் "கிராமங்களை ஊடுருவிப் பார்க்கும்" இயக்கங்களுக்கு எதிரானப் போராட்டம்.**

மக்களின் அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள், களை எடுப்பு இயக்கம் மற்றும் விரிவான உற்பத்தி இயக்கம் ஆகியவை எதிரிக்கு எதிராக மிகவும் அதிகமான சக்திவாய்ந்த போராட்டத்தை நடத்துவதை விடுதலை பெற்ற ஏரியாக்களுக்கு சாத்தியமாகச் செய்தது.

அடித்தள ஏரியாக்களில், எதிரியின் "முற்றுகையிடும்" இயக்கத்திற்கு எதிராக வெற்றிகரமானதொரு கொள்கை கையாளப்பட்டது.

துருப்புகளும் மக்களும் மிகவும் ஒன்றுபட்டிருந்தார்கள்; ஒழுங்கமைந்த இராணுவம்,கொரில்லாப் படைப்பிரிவுகள் மற்றும் ஆயுதமேந்திய மக்கள் படை ஆகியோர் நெருக்கமாக ஒருங்கிணைந்து போராடினார்கள். அடித்தள ஏரியாக்களை எதிரி தாக்கிய ஒவ்வொரு சமயத்திலும் கட்சி, "முழுமையைப் பகுதிகளாக பிரித்துக் கொள்ளும்" கொள்கையைக் கையாண்டு அதனுடைய ஆயுதப் படைகளைப் பிரித்துக் கொண்டும் எதிரியை நசுக்குவதற்கு ஒரு சந்தர்ப்பத்திற்காக காத்துக் கொண்டும் அல்லது ஒரு திடீர்த்தாக்குதலுக்காக எதிரியின் பின்னணிக்கு நகர்ந்துகொண்டிருக்கும் ஒருகொள்கையைக் கட்சி கையாண்டது. பிறகு எதிரிக்கு அவனது நிலைமையைப் பலப்படுத்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைப்பதற்கு முன்பு கட்சி "பகுதிகளை முழுமையாக ஒன்று சேர்த்து" எதிரியினுடைய ஒரு தனியான படைப்பிரிவினை நசுக்கித் தள்ளுவதற்கு மிக உயர்ந்த படைகளையும் குவித்தது.

கைகள் அடித்தள ஏரியாக்களில் உள்ள ரரணுவத்தையும் மக்களையும் உறுதியான தளத்தின் மீது வைத்து, மிகமிக கஷ்டமான காலத்தை, அவர்களைச் சமாளிக்கும்படி செய்தது.

எதிரியின் படை வரிசைகளுக்கு பின்னால் இருந்த எல்லா அடித்தள ஏரியாக்களிலும் இத்தகைய நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய முறையில் வீரம் செறிந்த இயக்கங்கள் நடத்தப்பட்டன.

ஷான்சி - சகார் - ஹோப்பெய் எல்லைப் பிரதேசத்தில், 1941 - ஆகஸ்டு 15இல் எதிரி ஒரு முன்னேறிய தாக்குதலில் 1,30,000 பேர்களைக் கொண்ட ஒரு படையை ஈடுபடுத்தினான்; அவனுடைய திட்டம் பெரும் சுவருக்கு இரண்டு பக்கங்களிலும் இருந்த மக்கள் படையின் பிரதான படைகளைச் சுற்றி வளைத்து நிர்மூலம் செய்வதாக இருந்தது. ஆனால் பிரதான படைகள் எதிரியின் படை வரிசைகளுக்குப் பின்னால் நகர்ந்து செல்வதில் கொஞ்ச நேரத்தையும் இழக்கவில்லை. அந்த சமயத்தில், எண்ணற்ற கொரில்லாப் படை பிரிவுகளும் ஆயுதமேந்திய ஊர்க்காவல் படைபிரிவுகளும் இவனைத் துன்புறுத்திக் கொண்டும் தடுத்துக் கொண்டும் இருந்தன. பல்வேறு திசைகளில் ''முற்றுகையிடுவதற்காக'' அவனது படைகளை எதிரி களைத்துவிட்ட பிறகும் மற்றும் முற்றிலும் களைத்துபோன பிறகும், வெளிப்புற வரிசையில் இயங்கிக் கொண்டிருந்த துருப்புகள் மீண்டும் திரும்பி வந்து உள்புற வரிசையில் இயங்கிக் கொண்டிருந்த துருப்புகளோடு ஒருங்கிணைந்து நின்று தாக்கின. எதிரியினுடைய ''முற்றுகையிடும்'' இயக்கத்தை இந்தப் பிரதேசத்தில் எதிர்த்து நடத்தும் இயக்கத்தை ஆதரிப்பதற்கு, வடசீனாவில் உள்ள இதர எல்லா ஜப்பானிய எதிர்ப்பு தள ஏரியாக்களாலும் குவிந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. எதிரியினுடைய பிரதானப் படைகள் செப்டம்பர் மத்தியில், பின்வாங்கும்படி நிகழ்ச்சிப் போக்கில் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். எல்லைப் பிரதேசத்தில் ஒரு சில படைப் பிரிவுகளை விட்டுவிட்டு பின்வாங்கும்படி எதிரியின் பிரதானப் படைகள் நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தார்கள். அதற்கு பிறகு எதிரித் துருப்புகளில் எஞ்சி இருந்தவற்றை எதிர்த்துப் போராடுவதற்கு மக்கள் படையின்,சில பிரிவுகள் உள்புறப்பாதையின் மீது காத்திருந்தார்கள். அதே சமயத்தில் அதனுடைய பிரதானப் படைகள் எதிரியினுடைய பலமான தளங்களைத் தாக்குவதற்காகவும் எதிரியின் பின் வாங்குதலைத் துண்டிப்பதற்காகவும் எதிரி கைப்பற்றி இருந்த பிரதேசங்களுக்கு முன்னேறிச் சென்றது. உடனடியாக நிர்மூலம் செய்யப்படும் அபாயத்தினை

எதிர் நோக்கிய உள்புற வரிசையின் பின்னால், விட்டுவிடப் பட்டிருந்த எதிரித் துருப்புகள் அக்டோர் மத்தியில் பின் வாங்கிச் செல்லும்படி நிர்ப்பந்திக்கப்பட்டன. வழி நெடுகிலும் அவர்கள் திரும்பத்திரும்ப மோதப்பட்டு கூடுதலான நஷ்டங்களை அனுபவித்தார்கள்.

இந்த முறையில் எதிரியின் ''முற்றுகையிடும்'' இயக்கம் முழுமையான தோல்வியில் முடிவடைந்தது.

1942-இல் வடசீனாவில் எதிரியால் துவக்கப்பட்ட எல்லா ''முற்றுகையிடும்'' இயக்கங்களிலும், மிகமிக மூர்க்கத்தனமான ஒரு இயக்கம் மே மாதம் 1ஆம் தேதியன்று மத்திய ஹோப்பெய் சமவெளிப் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டது. எதிரி அந்த ஏரியாவை 1500க்கும் மேற்பட்ட பலமான தளங்களில் வளைத்து 700 லாரிகளோடு கண்காணித்து வந்நான் என்றும். எதிரிப்படைகள் தாக்குதலுக்காகக்கூடி இருந்த பொழுது, மக்கள் படை, எதிரி கைப்பற்றி இருந்த பிரதேசங்களின் நன்கு திட்ட மிடப்பட்ட சரியானதொரு நேரத்தில் நடுமையமான இடத்திற்கு மாறிச் சென்றும் மற்றும் ரயில்வேப் பாதைகளின் வழியாக அணி வகுத்துச் சென்றும் திடீர் தாக்குதல்களைத் தொடுத்தது. இத் தாக்குதல்கள் பின்னணியல் இருந்த அவனது துருப்புகளைக் காப்பாற்றும் பொருட்டு எதிரியைப் பின்வாங்கும்படி செய்தது. இந்த இயக்கத்தின் பிந்திய பகுதியில், எதிரி விரிவானதொரு ''முற்றுகையிடுதல்'' ஆரம்பித்த பொழுது, மக்கள் படையின் பிரதானப் படைகள் வெளிப்புற பாதையின் மீது அபரிதமான தொரு மாற்றத்தினை உண்டாக்கி, ஸ்தல கொரில்லாப் படைக ளோடும் மற்றும் ஆயுதம் ஏந்திய ஊர்க்காவல் படைகளோடும் ஒருங்கிணைந்து நின்று எதிரியை எதிர்த்தும் போராடுவதற்கு சில சிதறுண்டு கிடந்த படைப் பிரிவுகளை மட்டும் விட்டு வைத்தது. எதிரி இந்த இயக்கத்தில் அவனுடைய காட்டு மிராண்டித்தனமான ''எல்லாமுன்று'' கொள்கையையும் கையாண்டாண்டான்; 50,000த்திற்கும் குறையாத குடிமக்கள் கைது செய்யப்பட்டாரிகள்; அல்லது கொன்றுக் குவிக்கப்பட்டார் கள். என்றாலும், அந்த ஏரியாவில் இருந்த ராணுவ மக்களும் இரண்டு மாதங்கள் வீரம் செறிந்த போராட்டம் நடத்திய பிறகு, எதிரியின் தாக்குதலை எதிர்த்து முறியடிப்பதில் வெற்றி பெற்றார்கள்.

ஷாங்சி-சகார்-ஹோப்பெய் எல்லைப் பிரதேசத்தின் பெய்யும் ஏரியாவில், 1943 செப்டம்பர் 16இல் இருந்து டிசம்பர்

15 வரையிலும் நீடித்த "அழிக்கக்கூடிய முற்றுகை" இயக்கம் என்று அழைக்கப்பட்ட ஒரு இயக்கத்தில் 40.000த்திற்கும் மேற்பட்ட துருப்புகளை எதிரி ஈடுபடுத்தினான்,

இந்த இயக்கத்தின் ஒவ்வொரு கட்டத்திலும், மக்கள் படை எதிரிக்கு கடுமையான அடிகளைக் கொடுத்தது. முதல் கட்டத்தில் எதிரி, மத்திய ஏரியாவைப் பிடித்த பிறகு, அவனது படைகளைத் திரும்பத் திரும்ப "நிர்மூலம் செய்யும்" இயக்கங்களில் ஈடுபடுத்துவதற்கு பிரித்த பொழுது, ராணுவம் தனிமைப் படுத்தப்பட்டிருந்த எதிரிப் படைப் பிரிவிற்கு எதிராக போதுமான படைகளை குவித்து அவர்களை (எதிரியின் படைப் பிரிவுகளைத்) தற்பாது காப்பிற்குள் செல்லும்படி நிர்ப்பந்தித்தது. இரண்டாவது கட்டத்தில், எதிரி ஹீட்டோ நதி வழியாக ஆழாமாக நுழைந்து சென்று தாணியத்தை கொள்ளையடித்துக் கொண்டிருந்த பொழுது, ராணுவம் நதியின் இரண்டு பக்கங்களிலும் பாய்ந்து சென்று ஆயுதமேந்திய ஊர்க்காவல் படையோடு ஒருங்கிணைந்து இயங்கி, கொள்ளையடிக்கப்பட்ட தானியத்தை மீட்டது. மூன்றாவது கட்டத்தில், பின்னணியில் இருந்த அரசாங்க அலுவலகங்களின் மீது எதிரி ஒரு ஊடுருவல் தாக்குதலை நடத்தினான். ஆனால் அவனது முயற்சிகள் பயனற்றதாக நிரூபிக்கப்பட்டன. இத்தகைய அலுவலகங்களில் இருந்தவர்கள் தயாரற்றவர்களாக பிடிபடவில்லை. அவர்கள் எதிரியை எதிர்த்து திறமையாகப் போராடினார்கள். அல்லது எதிரியிடம் பிடிபடாமல் இருந்தார்கள். பொறுக்கி எடுக்கப்பட்ட துருப்புகள் மற்றும் எளிமையாக்கப்பட்ட நிர்வாகம் என்ற கொள்கை ஏற்றுச் கொள்ளப்பட்ட பிறகு எண்ணிக்கையில் குறைவாக இருந்த போதிலும் அவர்கள், இயக்கத்தின் அதிகமான துரிதத் தன்மையை அனுபவித்தார்கள்.

இந்த இயக்கம் முழுவதிலும், மக்கள் படையால் கையாளப்பட்ட யுத்த தந்திரம் பிரதான படைகளின் நடவடிக்கைகளை ஆயுதமேந்திய ஊர்க்காவல் படையின் நடவடிக்கைகளோடு ஒருங்கிணைப்பதும், வெளிப்பாதை நடவடிக்கைகளை உள் பாதை நடவடிக்கைகளோடு ஒருங்கிணைப்பதுமாக இருந்தது; மற்றும் அரசியல் ரீதியான முன்னேறித் தாக்குதலோடு எதிரியின் "முற்றுகைக்கு" எதிரான ஒரு இயக்கமாகவும் இருந்தது. பிரதான படைகள் எப்போதுமே ஆயுதமேந்திய ஊர்க்காவல் படையோடு நெருங்கிய ஒத்துழைப்போடு போராடின. இந்தப் பிரதேசத்தில் போரட்டம் கூர்மையான பொழுது, வெளிப்புற

பாதையில் இருந்த துருப்புகள் எதிரியின் அணிவரிசைகளுக்கு பின்னால் ஊடுருவி ஒரு தாக்குதலைத் தொடுத்தார்கள். அதே சமயத்தில், பொம்மைத் துருப்புகள் மற்றும் ஸ்தாபனங்களிடம் பொதுவான சோர்வினை உருவாக்குவதற்கு ஆயுதமேந்திய பணிக் குழுக்கள் எதிரி கைப்பற்றி இருந்த பிரதேசங்களின் மத்தியில் ஒரு அரசியல் ரீதியான முன்னேறித் தாக்குதலை ஆரம்பித்தன.

இத்தகைகைய நடவடிக்கைகளின் விளைவாக, பெரும் அளவலான "முற்றுகையிடும்" இயக்கமும் கூட எதிர்த்துப் போராடி முறியடிக்கப்பட்டன.

ஷான்சி-ஹோப்பெய்-ஷான்டுங்-ஹோனான் பிரதேசத்தில், 1947 இல், தென்கிழக்கு ஷான்சியில் ஹுவாங்யென்டுங்கில் ஒரு ஆயுத தளவாட ரிப்பேர் ஷாப்பை எதிரி முற்றுகை இட்டான். கடுமையான கஷ்டங்களை எதிர்த்து வீரஞ் செறிந்த முறையில் போராடிய பிறகு, பாதுகாப்பாளர்கள் பின் வாங்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தார்கள்; ஆனால், வெளிப்புற வரிசை படைகளின் நடவடிக்கைகள் அதிகமான நிர்ப்பந்தத்தை எதிரிகள் மீது கொண்டு வந்து அவனும் கூட ஒரு அவசரத்தில் பின் வாங்கினான். அவன் பின் வாங்கும் வழியில், மோதப்பட்டு கடுமையாக சேதத்திற்கு ஆளானான்.

ஹுவாங்யென்டுங் இயக்கம் ஒரு தற்பாதுகாப்பு யுத்தத்தின் குறிப்பிடத்தக்க மாதிரியாக இருந்தது. அந்த யுத்தத்தில் மிகச் சிலர் பலரை எதிர்த்து போராடி விரட்டி அடித்தார்கள்.

1942 ஜூனில், எதிரி துருப்புகள் 30,000 பேர்களால் ஒரு "முற்றுகை" இயக்கம் தென்கிழக்கு ஷான்சியில் ஆரம்பிக்கப் பட்டது. மக்கள் படை திருப்பித் தாக்கி அவர்களிடம் ஐயாயிரத் துக்கும் அதிகமானவர்களைக் கொன்றது.

டையூயெ ஏரியாவுக்கு எதிராக 20,000 எதிரித் துருப்புகள் 1943 அக்டோபர் 1 இலிருந்து நவம்பர் 19-வரையிலும் கடுமை யானதொரு "முற்றுகை" இயக்கத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந் தார்கள். எதிரி அவனது துருப்புகளை வடக்கிலிருந்து தெற்கு நோக்கி போய்க் கொண்டிருந்த ஒரு பாதை நெடுகிலும் குவித்து முன்னும் பின்னுமாக நகர்ந்து கொண்டு அந்த ஏரியாவை திரும்ப திரும்ப "முற்றுகை" இட்டான்; சென்ற இடங்களில் எல்லாம் அவன் மக்களைக் கொன்றான். மற்றும் அவன் கை வைக்கக் கூடிய அனைத்தையும் அழித்தான், அல்லது கொள்ளை அடித்தான். எதிரியின் குறிக்கோள் டையூயெ அடித்தள ஏரி

யாவை நாசமாக்குவதோடு மட்டுமின்றி, இதர ஏரியாக்களில் இதைப் போன்ற இயக்கங்களை நடத்துவதற்கு அனுபவத்தைப் பெறுவதுமாக இருந்தது.

பல்வேறு இடங்களிலிருந்து எதிரிப்படை அதிகாரிகளும் பிரதான தளபதிகளும், எதிரிப் படையின் தலைமைத் தளபதியான ஒஹமுரா-நெய்ஜியினால், அந்த இயக்கத்தை ஸ்தலத்திலிருந்து கவனிக்கும்படி, அழைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் இந்த ''பார்வையாளர் கோஷ்டி'' அக்டோபர் 23-இல் ஷான்டுங் பெருவழியின் மீதிருந்த ஹுங்னுஇய கிராமத்திற்கு அருகில் ஒரு மோதலால் சந்திக்கப்பட்டு அதனுடைய எல்லா உறுப்பினர்களும் கொல்லப்பட்டார்கள். இந்தப் பிரதேசத்தில் எல்லா அரங்கங்களிலும் எதிரியின் ஒரு பொதுவான பல்டி இதனைப் பின் தொடர்ந்தது.

மத்திய சீனாவில் புதிய நான்காவது சேனையின்பால், எதிரி வடசீனாவில் கையாளப்பட்டிருந்தது போன்ற அதே மாதிரியான, ''முற்றுகையிடும்'', ''கிள்ளியெறியும்'' மற்றும் ''கிராமத்தை ஊடுருவும்'' கொள்கைகளைக் கையாண்டான்.

எதிரியின் முன்னேறித் தாக்குதல் வடக்கு ஹியாங்கவில் ஆரம்பமாயிற்று. 1941 ஜூலையில், 25,000 ஜப்பானியத்துருப்புகளும் கைக்கூலித் துருப்புகளும் யெங்டெங் மீதும், பூனிங் மீதும் ஒரு கூட்டுத் தாக்குதலைத் துவக்கினர். இந்த ஏரியாவிலிருந்த புதிய நான்காவது ராணுவத்தின் தலைமைக் காரியாலயத்தையும் மற்றும் அதன் பிரதானப் படைகளையும் ஒழிக்கும் குறிக்கோளுடன் இக்கூட்டுத் தாக்குதலைத் தொடுத்தன. சரியான நேரத்தில் இராணுவம் எதிரியின் முற்றுகையை உடைத்தெரிந்து கொண்டு, எதிரிக்கு அடி கொடுப்பதற்கு வெளிப்புற வரிசைக்கு நகர்ந்து சென்றது. மத்திய ஹியாங்கில், ராணுவத்தின் துருப்புகளோடு குவிந்து நின்று போராடியதால், எதிரி தெற்கு நோக்கி அவனாக பின்வாங்கிச் செல்லும்படி நிர்ப்பந்திக்கப்பட்டான்.

பசிபிக் யுத்தம் வெடித்த பிறகு மத்திய சீன ஏரியாவின்பால் எதிரி மிகமிக ஈவிரக்கமற்ற, ''கிராமத்தை ஊடுருவும்'' ஒரு யுத்த தந்திரத்தைக் கையாண்டான். செஞ்சேனைக்கு எதிராக கோமிங்டாங்கினால் அதனுடைய ஐந்தாவது சுற்றி வளைக்கும் இயக்கத்தில் பயன்படுத்தப்பட்ட சகலமுறைகளையும் அவன் இரவல் வாங்கியிருந்தான். விசேஷமான ஏரியாக்கள் ''கிராமத்தை ஊடுருவதற்காக'' குறியிடப்பட்டிருந்தன. இந்த அக்

கிரமம் தெற்கு கியாங்சுவில் ஆரம்பிக்கப்பட்டு மத்திய கியாங்சுவிற்கும், மத்திய அன்வெய்யுக்கும் மற்றும் ஹுகான் மாகாணத்தின் விளிம்புகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருந்தது. மேலான ஆதிக்கம் கொண்ட படைகளுடன் கூடிய ஒரு ஏரியாவைக் கைப்பற்றிக் கொண்ட பிறகு, எதிரி மூங்கில் அல்லது மரவேலிகளை நிர்மானித்தான்; அடிக்கடி நூற்றுக்கணக்கான லீ* நீளமுள்ள வேலிகளை அமைத்து அந்த ஏரியாவை மற்ற ஏரியாக்களிலிருந்து தனிமைப்படுத்தினான்; பிறகு, கிராமம் கிராமமாக வீடு வீடாக புதிய நான்காவது சேனையின் அதிகாரிகளுக்காகவும் சிப்பாய்களுக்காகவும் சோதனைப் போட்டான்.

இத்தகைய சூழ்நிலைமைகளில், புதிய நான்காவது சேனை பின்வரும் யுத்த தந்திரங்களைக் கையாண்டது: (1) எதிரி இவனது படைகளை ஒரு ஏரியாவை ''ஊடுருவுவதற்கு'' குவித்துக் கொண்டிருந்த பொழுது, மற்ற ஏரியாக்களிலிருந்த ராணுவத்தின் துருப்புகள், எதிரியின் பின்னணி வரிசைகளைத் துன்புறுத்துவதற்கு ஏககாலத் தாக்குதல்களைத் துவக்குவார்கள்; (2) ''கிராமத்தை ஊடுருவும்'' ஏரியாவின் பிரதான படைகள் எதிரியின் அணி வரிசைகளுக்குப் பின்னும் நகர்வார்கள்; அல்லது அவனைப் பக்கவாட்டுகளில் தாக்குவார்கள்; அல்லது இரவில் வேலிகளை எரிப்பதற்கும் அல்லது கீழே இழுத்துப் போடுவதற்கும் கிராமத்து வெகு ஜனங்களை அணிதிரட்டுவார்கள்.

''கிள்ளியெறியும்'' இயக்கங்களுக்கு எதிரான போராட்டத்தில், எதிரி அவனது நிலைகளிலிருந்து அடித்தள ஏரியாக்களுக்குள் படிப்படியாக முன்னோக்கிச் சென்றுக் கொண்டிருக்கும் பொழுது, புதிய நான்காவது சேனை எல்லையோரத்தில் தற்பாதுகாப்பைப் பலப்படுத்தி, குகைப் பாதைகளைத் தோண்டி, கிராமங்கள் முழுவதையும் காலிச் செய்தது. எதிரிகள் மீது நடத்தப்பட்ட திடீர்ப் பாய்ச்சல் தாக்குதல்களால் கடுமையான சேதங்கள் விளைவிக்கப்பட்டன; மற்றும் அவனுடைய பாதையில் கண்ணிகளைப் போட்டு வைப்பதாலும் எதிரிக்கு கடுமையான சேதங்கள் உண்டாக்கப்பட்டன. இது அவனுடைய முன்னேற்றத்தை மிகவும் பாதித்தது.

''முற்றுகையிடுவது'', ''கிள்ளியெறிவது'' மற்றும் ''கிராமத்தை ஊடுருவுவது ஆகியவற்றுக்கு எதிரான இத்தகைய எதிர் நடவடிக்கைகளின் விளைவாக, ஜப்பானியத் துருப்புகளிடமிருந்தும் வந்த எண்ணற்ற காட்டுமிராண்டித்தனமான தாக்கு

* ஒரு லீ=0.5 கிலோ மீட்டர் அல்லது 0.3107 மைல்.

தல்கள் எதிர்த்துப் போராடி முறியடிக்கப்பட்டு, விடுதலை பெற்ற ஏரியாக்கள் அளவிட முடியாத அளவிற்கு பலப்படுத்தப் பட்டன. இந்த அபாயகரமான நிலைமையில் அலையைத் திருப்பிய பிறகும் மிதமிஞ்சிய கஷ்டங்களைச் சமாளித்த பிறகும்: விடுதலை செய்யப்பட்ட ஏரியாக்கள் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில், வெற்றி வரையிலும் அதற்குப் பிறகும் துரிதமாக வளர ஆரம்பித்தன.

### 4. எதிரிக்கு எதிரான போராட்டத்தில் ஊர்க்காவல் படை.

ஜப்பானிய எதிர்பபு அடித்தள ஏரியாக்களில் நடைபெற்ற யுத்தம்,ஒரு மக்கள் யுத்தமாக இருத்தது; அந்த யுத்தத்தில் ஒழுங்கான ராணுவம், கொரில்லாப் படைப் பிரிவுகள் மற்றும் ஊர்க்காவல் படை ஆகியவை நெருக்கமாக ஒருங்கிணைந்து போராடின. ஒழுங்கான ராணுவம் ஒட்டுமொத்தமாக அடித்தள ஏரியாக்களைப் பாதுகாத்து நின்றது; கொரில்லாப் படைப் பிரிவுகள் கிராமப்புறங்களையும் மாவட்டங்களையும் பாதுகாத்து நின்றது; மற்றும் ஊர்காவல் படை கிராமங்களையும் நகரியங்களையும் பாதுகாத்து நின்றது.

யுத்தத்தின் ஆரம்பத்திலேயே கட்சி ஸ்தாபனங்கள் எதிரி அணி வரிசைகளுக்குப் பின்னால் ஊடுருவிச் சென்று, வெகுஜனங்களைத்தட்டி எழுப்பி, மக்களின் ஆயுதப்படைகளையும் மக்களின் தற்பாதுகாப்புப் படைகளையும் நிர்மாணித்திருந்தன. யுத்தத்தின் ஆரம்ப கட்டங்களில், படைப் பிரிவுகள் எதிரியின் உளவு நடவடிக்கைகளை கண்காணித்தும் மற்றும் ஒழுங்கான சேனைக்காக இதர யுத்தகால சேவையையும் செய்தன.

1941-இலிருந்து 43-வரையிலும், ஜப்பானியப் படையெடுப்பாளர்கள் பின்னணியிலும் ஈவிரக்கமற்ற முற்றுகையிடும் இயக்கங்களை நடத்தினார்கள். வடசீனாவில் பல மாதங்கள் நீடித்துக் கொண்டிருந்த பல இயக்கங்கள், குறிப்பாக அறிவுபூர்வமாக இருந்தன. எட்டாவது வழிச் சேனையும் புதிய நான்காவது சேனையும் பரந்த நிலப்பிரதேசங்களுக்காகவும் சிறிய பிரதேசங்களுக்காகவும் எதிரித் துருப்புகளோடு மோதின; நடவடிக்கையின் உருவங்களில் நிலைநின்ற போராட்டங்களும் மற்றும் நபருக்கு நபர் நடத்தும் போராட்டங்களும் சேர்ந்திருந்தன.

இப்படிப்பட்ட சூழ்நிலைமைகளின் கீழ், ஒழுங்கான படைகள் மிகுந்த நெளிவு சுளிவோடு அடிக்கடி நகர்ந்து கொண்டிருந்தன; அதேசமயத்தில், எதிரியை நிர்மூலம் செய்வதற்கு ஒரு சந்தர்ப்பத்திற்காகவும் பார்த்துக் கொண்டிருந்தன. ஆகவே, யுத்தத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு, மக்களின் தற்பாதுகாப்பு படைகளின் ஒரு பிரிவு உண்மையான போராட்டத்தில் ஆயுதமேந்திய கிராமப்புற காவல் படையோடுச் சேர்ந்துக் கொண்டது.

ஜப்பானிய யுத்தம் நடந்துக் கொண்டிருந்த பொழுது விடுதலை பெற்ற ஏரியாக்களில் ஒட்டு மொத்தமாக சுமார் 25,00,000கிராமப்புற காவல்படையினர் இருந்தார்கள். அரசியல் வேலை முழுமையாகச் செய்யப்பட்டிருந்த ஜனநெருக்கம் அதிகமாக இருந்த இடங்களில், கிராமப்புற காவல்படையினர் ஜனத்தொகையில் எட்டு சதவீதம் பேர்களாக இருந்தார்கள். அவர்களது சொந்தத் தலைமைத் தாங்கும் உறுப்புகளின் வழிகாட்டுதலின்கீழ், பல்வேறு மட்டங்களிலிருந்து மக்களின் ஆயுதப்படைகள் ஆயுதமேந்திய கிராமப்புறக் காவல்படை நன்கு அமையப்பெற்றதொரு போராட்டப் படைப்பிரிவாகவும், கொரில்லாப் படைப் பிரிவுகளுக்கு சக்திவாய்ந்ததொரு உதவியாளனாகவும் மற்றும் ஒழுங்கான துருப்புகளாகவும் ஆகியிருந்தன. கிராமப்புற ஆயுதமேந்திய காவல்படையும், பங்கெடுப்போடு எதிரியின் அணிவரிசைகளுக்குப் பின்னர் ஏகாதிய யுத்தம் ஒரு உண்மையான வெகுஜனப் போராட்டமாக ஆகியிருந்தது.

1. எதிரியின் 'முற்றுகையின்' எதிர்த்துப் போராடும் இயக்கங்களில் கிராமப்புற காவல்படை.

ஆயுதமேந்திய கிராமப்புற காவல்படையினரின் வழக்கமான வேலைகளில் ஊரைச் சுற்றிக் காவல் காப்பதும், வேவு பார்ப்பதும் அடங்கியிருந்தன. ஊரைச் சுற்றிக் காவல் காக்கும் காவற்படையினர் பக்கத்தில் இருக்கும் எதிரியின் பலமான தளங்களுக்கு அனுப்பப்படுவார்கள்; மற்றும் சாரணர்கள் அடிக்கடி எதிரி நிலைகளுக்குள் ஊடுருவுவார்கள். ஊர்க்காவல் படையினர் உளவாளிகளைத் தேடுவதற்காகவும் துரோகிகளைத் தேடுவதற்காகவும் ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தின் மீது ராணுவச் சட்டத்தைத் திணிப்பதற்கு மேலும் அதிகாரம் பெற்றிருந்தார்கள். அவர்களது நடவடிக்கைகள் ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக ஆட்சியைப் பலப்படுத்துவதற்கு மகத்தான பங்கினைச் செலுத்தின.

சில சமயங்களில், எதிரித் துருப்புகள் நெருங்கிக் கொண்டிருந்த பொழுது, கிராமப்புற காவல் படையினரும்கூட கிராமத்துக் குடிமக்களை அவர்களது எல்லாத் தானியத்தையும் விறகையும் மற்றும் கால்நடைகளின் தீவனத்தையும் புதைத்து வைக்கவும், மறைத்து வைக்கவும், தலைமை தாங்கிச் சென்று, காலி வீடுகளையும், காலி வயல்களையும் தவிர எதிரிக்கு எதுவுமே விட்டு வைக்காமல் இருந்தார்கள்.

அவர்கள் கண்ணியுத்த முறையில், பாண்டித்தியம் பெற்றார்கள். எதிரியின் ''முற்றுகைக்கு'' எதிராக நடைபெற்ற இயக்கங்களில், அவர்கள் எதிரியின் முன்னேற்றப் பாதையில் அடித்தள ஏரியாக்களின் எல்லைகள் அல்லது மத்திய பகுதிகள், ரஸ்தாக்களின் வழியாக அல்லது கிராமங்களின் நுழைவுகளில் குன்றுகளின் உச்சிகளில் அல்லது தோண்டப் பட்டிருந்த குழிகளில் ஒவ்வொரு இடத்திலும் கண்ணிகளைப் போட்டிருந்தார்கள். எதிரி எங்கு அடியெடுத்து வைத்தாலும் அவன்மீது மரணம் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

2. ''கிள்ளியெறியும்'' இயக்கங்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் கிராமப்புறக் காவல்படை.

எதிரியின் ''கிள்ளியெறியும்'' கொள்கை ஐப்பானிய எதிர்ப்பு அடித்தள ஏரியாக்களைத் துண்டு போட்டு, தனித்தனித் துண்டு போட்டு வளைப்பின்னல் போன்ற செய்திப் போக்குவரத்துப் பாதைகளாலும், வரிசை வீடுகளாலும், அகழிகளாலும் சுவர்களாலும், மற்றும் பின்னர் இப்படித் தனிமைப்படுத்தப்பட்ட ஏரியாக்களை ''ஊடுருவுவதும்'' மற்றும் ''முற்றுகையிடவும்'' ஆரம்பிப்பதாக இருந்தது. இதனை எதிர்த்துப் போராடுவதற்கு, எதிரியின் சகல போக்குவரத்துச் சாதனங்களையும் பிரிவினையையும் ஒழிப்பது மகத்தான முக்கியத்துவம் உடையதாக இருந்தது.

பெரும் அளவிலான போராட்டங்கள் ஒழுங்கான படைகளால், கிராமப்புறக் காவல் படைகளோடு இணைந்து நின்று நடத்தப்பட்டன. ஒழுங்கான படைகள் எதிரியைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு, எதிரியின் நிலைகளைத் தாக்கின. அதே சமயத்தில், கிராமப்புறக் காவல் படைகள், எதிரியின் போக்குவரத்துப் பாதைகளை, மக்கள் உடைத்து எறிந்து கொண்டிருந்த பொழுது, மக்களுக்கு பாதுகாப்பைக் கொடுத்தன.

சமவெளிகளில், கிராமப்புறக் காவல் படை, ரஸ்தாக்களைத் தோண்டுவதிலும் அவற்றை அகழிகளாக மாற்றுவதிலும், இந்த முறையில் அந்த இடத்தின் அமைப்பையே மாற்றுவதிலும் வெகு

ஜனங்களுக்கு தலைமைத் தாங்கிற்று. அகழிகள், வேகமாக நகர்ந்து கொண்டிருக்கும் எதிரியின் படைப்பிரிவுகளை தடுத்து நிறுத்தின. ஆனால் அடித்தள ஏரியாக்களின் துருப்புகளும் மக்களும் நகர்வதற்கு சொற்பமான பாதுகாப்பாகவும் பயன் பட்டன. இந்த முறையில், எதிரியின் செய்திப் போக்குவரத்து பாதைகளை அழிப்பதற்கு தோண்டப்படும் அகழிகள் எதிரிக்கு எதிரான போராட்டத்தில் கிராமப்புற காவல் படையும் பிரதான கடமையாக மாறியிருந்தது.

அகழி யுத்த முறையைக் காட்டிலும் குகை யுத்தமுறை மிகவும் கடினமாக இருந்தது. சமவெளிகளின் குகைகள் கிராமங் களையும் மாவட்டங்களையும் மற்றும் கிராமப்புற பிரதேசங் களையும் இணைத்தன; இந்த முறையும் வலைப்பின்னல் போன்ற பாதாள செய்திப் போக்குவரத்துப் பாதைகளாக அமைந்தன; இந்தப் பாதைகளின் வழியாக மக்களும் ராணுவமும் எதிரிக்கு தங்களை அம்பலப்படுத்திக் கொள்ளாமல் நகர்ந்தன. மலைப் பிரதேச ஏரியாக்களில், மலைகளுக்கு ஊடே குகைகள் தோண்டப் பட்டன. வெகுஜனங்களின் வலிமையும் புத்திக் கூர்மையும் இப்படிப்பட்ட நீண்ட குகைகளை நிர்மாணிப்பதைச் சாத்திய மாகச் செய்தன.

அபரிமிதமான எண்ணிக்கையில் பலமான தளங்களை நிர்மாணிப்பதின் மூலம் எதிரி அடித்தள ஏரியாக்களை சுற்றி வளைக்க முயற்சித்தான்; ஆனால், இது பயனற்றது என நிரூபிக்கப்பட்டது. இத்தகைய பலமான தளங்கள் ஜப்பானிய எதிர்ப்பு ஆயுதப் படைகளினால் முற்றுகையிடப் பட்டதை அடித்தள ஏரியாக்களுக்கும் முன்பு அடித்துச் செல்வதற்கு எதிரி செய்த ஒவ்வொரு முயற்சியும் உடனடியாக முறியடிக்கப்பட்டன. எதிரியை முற்றுகையிடுவதில், கிராமப்புற காவல் படை வெளிப்புற அணி வரிசையில் இருந்து உட்புற அணி வரிசைக்கு நகர்ந்து சென்று எதிரி துரத்தப்படும் வரையிலும் எதிரியை இரவும் பகலும் துன்புறுத்தும்.

3. ''கிராமத்தை ஊடுருவதை'' எதிர்த்துப் போராடும் இயக்கத்தில் கிராமப்புற காவல் படை.

''கிராமப்புறத்தை ஊடுருவதை'' எதிர்த்துப் போராடும் இயக்கத்தில், பிரதான யுத்ததந்திரம் எதிரியின் அணிவரிசை களுக்குப் பின்னால் ஆழமாக ஊடுருவச் செய்வதாக இருந்தது. கிராமப்புற காவல் படையின் போராட்ட வலிமையின் சீரான

வளர்ச்சியோடு, கிராமப்புற காவல்படை வீரர்கள் எதிரியின் ஏஜண்டுகள் மற்றும் ஒத்துழைப்பாளர்களைப்பிடிக்கவும் கைக்கூலி ஸ்தாபனங்களை அழிக்கவும் எதிரி கைப்பற்றி இருந்த ஏரியாக் களுக்குள் நுழைந்தார்கள். மேலும், தலைமறைவான கிராமப்புற காவல்படைகளும் எதிரி கைப்பற்றி இருந்த ஏரியாக்களில் இருந்தன. இவை மிதமிஞ்சிய ரகசிய ஸ்தாபனங்களாக இயங்கி வந்தன; அல்லது இவை ஊடுருவி இருந்த எதிரி ஸ்தாபனங்களின் அல்லது கைக்கூலி ஸ்தாபனங்களின் முகமூடியின்கீழ் இயங்கி வந்தன. இவர்களுடைய கடமைகளில் எதிரியின் ஏஜெண்டுகள் அல்லது ஒத்துழைப்பாளர்களின் மிகமிக அபகீர்த்தி வாய்ந்தவர் களையும் ஒழித்துக் கட்டுவதினால் எதிரியின் ஏஜெண்டுகளுக்கும் ஒத்துழைப்பாளர்களுக்கும் ஒரு எச்சரிக்கையைக் கொடுப்பதும் எதிரியைப் பற்றி தகவல் சேகரிப்பதும், வெகுஜன கூட்டங்களை நடத்துவது முதலியனவும் அடங்கி இருந்தன. எதிரி கைப்பற்றி இருந்த பிரதேசங்களில் இயங்குவதற்காக அனுப்பப்பட்டிருந்த ஆயுதமேந்திய பணிக்குழுக்களோடு கூட்டாக இயங்கி, அவர்கள் ஜப்பானிய எதிர்ப்பு நடவடிக்கைகளை நடத்தினார்கள். எதிரி கைப்பற்றி இருந்த ஏரியாவில், செயல்படும் தளங்களை ஸ்தாபிப் பதிலும் மக்களின் மன உறுதியைப் பாதுகாத்துக் கொண்டிருப் பதிலும், மற்றும் எதிரியையும் கைக்கூலிகளையும் துன்புறுத்திக் கொண்டிருப்பதிலும் தலைமறைவான கிராமப்புற காவல்படை பிரதான சக்தியாக விளங்கிற்று. தலைமறைவான கிராமப்புற காவல் படைகள் மற்றும் ஆயுதமேந்திய பணிக் குழுக்கள் ஆகிய வற்றின் கூட்டு முயற்சிகளோடுதான் நன்கு முகமூடி அணிந்த ஜப்பானிய எதிர்ப்பு தளங்கள் எதிரியின் அணிவரிசைகளுக்குப் பின்னால் அமைக்கப்பட்டிருந்தன.

4. உற்பத்தி பெருக்கு இயக்கத்தில் கிராமப்புற காவல் படை.

எதிரியின் "எல்லா மூன்று" கொள்கையை முறியடிக்கும் பொருட்டு மக்களின் ஆயுதப் படைகளைப் பலப்படுத்துவதோடு கூடவே, உற்பத்தியை அதிகரிப்பதனால் மக்களின் சுமையைக் குறைப்பது அவசியமாக இருந்தது. எதிரியின் பின்னணி யில் நடத்திய அவர்களது போராட்டங்களில், கிராமப் புற காவல் படையினர் போராட்டத்திற்கு செலுத்தியது போலவே அதே அளவு கவனத்தை, உற்பத்தியை உயர்த்து வதற்கும் செலுத்தினார்கள். ஸ்தலத்தில் உள்ள உழைக்கும் மக்களோடு அவர்கள் பரஸ்பர உதவிக் குழுக்களை

அமைத்தார்கள். குழுக்களில் அவர்களது போராடும் மணி நேரங்கள், வேலை நாட்களாகக் கணக்கிடப்பட்டன. எந்தவித மான போராட்டமும் இல்லாமல் இருந்த பொழுது, குழுக்களில் இதர உறுப்பினர்களோடு ஒன்று கூடி அவர்கள் வேலை செய் வார்கள்.

எதிரியின் அணிவரிசைகளுக்கு பின்னால் யுத்த நிலைமை களை எதிர்நோக்கும் பொருட்டு, கிராமப்புற படைவீரர்கள் கூடுதலான நடவடிக்கைகளையும் கையாண்டார்கள். 1. "ஒவ்வொரு குடிமகனும் ஒரு ராணுவ வீரன்" என்ற கோஷத்தின்கீழ் பரஸ்பர உதவி குழுக்களின் ஒவ்வொரு உறுப் பினருக்கும் கண்ணிகளை வைப்பதற்கு அவர்கள் கற்றுக் கொடுத் தார்கள். 2. கட்டளைக் கொடுக்கும் தலைமைக் காரியாலயங் கள் யுத்தம் நடத்துவதற்காகவும் உற்பத்தியை பெருக்குவதற் காகவும் ஏற்பாடு செய்யப்பட்டன. இந்த முறையில், அவற்றை ஒரே ஸ்தாபனத் தலைமையின்கீழ் வைப்பதினால் இரண்டும் ஒருங்கிணைக்கப்பட்டன. 3. பல்வேறு கிராமங்களில் கூட்டு பாதுகாப்பு அணிவரிசைகள், போராட்ட தளத்தின் நிலைமைக்கு ஏற்பவும் யுத்த தந்திரரீதியான தேவைகளுக்கு ஏற்பவும் அமைக்கப்பட்டன. இத்தகைய கிராமங்களில் கிராமப்புற காவற்படை வீரர்கள் ஒருஉடன்பாட்டைச் செய்துக்கொண்டார் கள்; அந்த உடன்பாட்டின்படி எதிரியினால் ஒரு கிராமம் தாக்கப் பட்டால் மற்ற கிராமங்கள் குவிந்த தாக்குதல்களைத் தொடுப் பதற்குக் கூடுதலான படைகளை அனுப்பிவைக்கும்.

ஜப்பானிய எதிர்ப்பு யுத்த காலம் முழுவதிலும், ஒழுங்கான படைகளோடும் கொரில்லா படைகளோடும் ஒருங்கிணைந்து நின்று போராடியதால், கிராமப்புற காவல்படையும் மக்களின் சுயபாதுகாப்பு படைகளும் ஜப்பானிய எதிர்ப்புத் தளங்களைப் பலப்படுத்துவதிலும் ஜப்பானிய படை எடுப்பாளர்களை முறி யடிப்பதிலும் மதிப்பு மிக்க பங்கைச் செலுத்தின.

## அடிக் குறிப்புகள்

1. மாசே-துங், முன்குறிப்பிட்ட நூல், பாகம் 3, பக்கம் 192
2. மேலே குறிப்பிட்ட நூல், பாகம் 4, பக்கம். 34.

3. மேலே குறிப்பிட்ட நூல், பக்கம் 31.

4. மிகப்பெரும்பாலான அடித்தள ஏரியாக்கள் முதலில் தனிமைப்படுத்தப்பட்ட மலைப்பிரதேசங்களில் நிலை நாட்டப்பட்டு இருந்தமையால், கட்சி உறுப்பினர்கள் இயல்பாகவே நெருக்கமாக அமைக்கப்பட்டிருந்த் குழுக்களில் சேர்ந்திருந்தார்கள். இந்த முறையில், இந்த குழுப் போக்கு, ''மலைத்தன உணர்வு'' என்று அறியப்படலாயிற்று.

அத்தியாயம் பத்து

# விடுதலை பெற்ற ஏரியாக்கள் ஒருபகுதியான முன்னேறித் தாக்குதலை ஆரம்பிக்கின்றன. எதிர்ப்பு யுத்தத்தில் இறுதி வெற்றி.

(ஜனவரி 1943—செப்டம்பர் 1945)

## 1. பாஸிஸ எதிர்ப்பு யுத்தத்தில் தற்பாதுகாப்பிலிருந்து முன்னேறித் தாக்குதலுக்குத் திருப்பம். எதிரி கைப்பற்றியிருந்த ஏரியாக்களில் மக்களின் ஜப்பானிய எதிர்ப்புப் போராட்டங்கள். விடுதலை பெற்ற ஏரியக்களின் மீட்சியும் அபிவிருத்தியும்.

ஸ்டாலின் கிராடு போராட்டம், சோவியத் யூனியனின் பாஸிஸ எதிர்ப்பு யுத்தத்தில், யுத்த தந்திர ரீதியான தற்பாது காப்பு நிலையிலிருந்து, யுத்த தந்திர ரீதியான முன்னேறித் தாக்கும் நிலைக்கு மாறிச் செல்லும், ஒரு திருப்பு முனையைக் குறித்தது.

அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளின் அரசாங்கத் தலைவர்களை, ஐரோப்பாவில் ஒரு இரண்டாவது அரங்கத்தைத் திறப்பதைத் தாமதிப்புதற்கு ஒவ்வொரு முயற்சியும் செய்தமையால், ஜெர்மனி அதனுடைய எல்லா சேமிப்புப் படைகளையும் மற்றும் அதனுடைய நேச சக்திகளின் படைகளையும் தென் கிழக்கு அரங்கத்தில் சோவியத் யூனியனுக்கு எதிராக குவிக்கும்படி, சாத்தியமாக்கப்பட்டிருந்தது. ஜெர்மன் துருப்புகள் கிழக்கிலிருந்து மாஸ்கோவின்மீது பாயும் நோக்குடன் ஸ்டாலின் கிராடை நோக்கியும் காகஸஸை நோக்கியும் விரைந்தன.

சோவியத் ராணுவம், படையெடுப்பாளர்களை முதலில் களைப்படையச் செய்தது. பிறகு ஸ்டாலின் கிராடை தாக்கிக் கொண்டிருந்த ஜெர்மன் அதிர்ச்சிப் படைப்பிரிவுகள் அனைத்தையும் சுற்றி வளைத்தது. 1942-நவம்பரிலிருந்து 1943-பிப்ரவரி வரையிலும் நீடித்த இந்த நகரத்தைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தில், சோவியத் ராணுவம் 3,30,000 ஜெர்மன்

துருப்புகளை நிர்மூலம் செய்து முழுமையானதொரு வெற்றியைப் பெற்றது.

1942-நவம்பரிலிருந்து 1943-நவம்பர் வரையிலும் 12 மாதங்களில், சோவியத் யூனியன் எதிரியினல் பிடிக்கப்பட்டிருந்த பிரதேசங்களில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பகுதிகளை மீட்டது. 1943-ஆம் வருடம் பாசிஸ எதிர்ப்பு யுத்தத்தில் அடிப் படையான மாற்றத்தைக் கொண்டு வந்த ஒரு வருடமாக இருந்தது.

அந்த ஆண்டில், சோவியத் ராணுவம் வடக்கிலிருந்து தெற்கு வரையிலும் யுத்த அரங்கம் முழுவதின் வழியாக ஜெர்மன் துருப்புகளுக்கு நொறுக்கித் தள்ளும் அடிகளைத் தொடர்ச்சியாகக் கொடுத்தது; மற்றும், கருங்கடலுக்கும் பேரன்ஸ் கடலுக்கும் இடையே இழக்கப்பட்டிருந்த சகல பிரதேசங்களையும் மீட்டுக்கொண்டு, யுத்தத்தை எதிரியின் சொந்த பிரதேசத்துக்குள் கொண்டு சென்றது.

பிறகு பல ஐரோப்பிய தேசங்களில், விடுதலை பின் தொடர்ந்தது.

நாஜி ஜெர்மனியின் தோல்வி, பாஸிஸ கும்பலின் வீழ்ச் சிக்கு வழி நடத்திச் சென்றது.

முதலில், முஸோலினியின் சர்வாதிகார ஆட்சி தூக்கி யெறியப்பட்டது. இத்தாலி யுத்தத்திலிருந்து பின்வாங்கிக் கொண்டது. பிறகு, அடுத்தடுத்து ருமேனியா, பல்கேரியா. பின்லாந்து, ஹங்கேரி, போலந்து, யூகோஸ்லேவியா, செக்கோஸ் லோவாகியா மற்றும் நார்வே ஆகிய நாடுகள் 1944இல் சோவியத் துருப்புகளால் விடுதலை செய்யப்பட்டன. சோவியத் யூனியனால் நடத்தப்பட்ட பாஸிஸ எதிர்ப்பு யுத்தம் ஐரோப்பிய மக்கள்களின் விடுதலைப் போராட்டத்தோடும் சுதந்திரப் போராட்டத்தோடும் ஒன்றாக இருந்தது.

சோவியத் வெற்றி பிரிட்டனையும் அமெரிக்காவையும் 1944-ஜூனில் அவற்றின் படைகளைப் பிரான்ஸில் வடகரையில் இறக்கி ஒரு இரண்டாவது அரங்கத்தை திறக்கும்படி நிர்ப்பந்திக் கப்பட்டன. ஆனால், இது ஒரு புறமிருக்க, ஜெர்மன் ராணுவத் தின் பிரதான படை, இன்னும் சோவியத் ஜெர்மன் அரங்கத்தில் இருந்தது.

பாஸிச எதிர்ப்பு யுத்தத்தில் சோவியத் யூனியனுக்கு கிடைத்த வெற்றி கிழக்கிலிருந்த நாடுகளை உற்சாகப்படுத் திற்று; மற்றும் ஜப்பானை ராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதி

யாகவும் தனிமைப்படுத்தவும் செய்தது. அது சீன மக்களின் எதிரி முன்னேறித் தாக்குதலுக்கு சாதகமானதொரு சர்வதேச நிலைமையை உண்டாக்கிற்று. மற்றும் எதிர்ப்பு யுத்தத்தில் வேகமானதொரு வெற்றியைக் கொண்டு வருவதற்கும் காரண மாக இருந்தது.

யுத்தம் வெடித்த பிறகு, கைக்கூலி அரசாங்கங்கள், வடக்கு, மத்திய, தெற்கு சீனாவில் எதிரி கைப்பற்றியிருந்த ஏரி யாக்களில் அமைக்கப்பட்டிருந்தன. இத்தகைய ஏரியாக்கள் ஜப்பானுடைய காலனிகளாக ஆகியிருந்தன. ''சுயாட்சி உரிமை பெற்ற மங்கோலிய அரசாங்கத்தோடு'' கூடவே வட சீனாவில் ''சீனக் குடியரசின் தற்காலிக அரசாங்கத்தையும்'', மற்றும், ''சீர் திருத்திய அரசாங்கத்தை'', நான்கிங்கிலும் ஜப்பான் ஏற்பாடு செய்திருந்தது. சீன ஐக்கிய முன்னணியைப் பிளவுபடுத்துவதற் கும் மற்றும் கைப்பற்றியிருந்த ஏரியாக்களைக் கொள்ளையடிப் பதற்கும் 1940-மார்ச்சில் நான்கிங்கில் வாங்கிங்-வெய் கும்ப லினால் அமைக்கப்பட்டிருந்த ''தேசிய அரசாங்கத்தை'' ஜப்பான் இத்தகைய பொம்மை ஸ்தாபனங்களை ஒரு ''ஐக்கிய அரசாங்கத்திற்குள்'' இணைத்திருந்தது. முந்திய ஆண்டின் இறுதியில், ''வாங்கிங்வெய் கும்பல்'' ஜப்பானோடு ரகசியமாக ஒரு துரோகத்தனமான உடன்பாட்டை செய்திருந்தது; இந்த உடன்பாடு, ''ஜப்பானுக்கும் சீனாவுக்கும் இடையே புதிய உறவை ஒழுங்குபடுத்துவதற்கான திட்டத்தின் உத்தேச வரைபடம் என்று அறியப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தில், வடகிழக்கு சீனா ஜப்பானுக்கு விட்டுக் கொடுக்கப்பட வேண்டும் என்றும், அதே சமயத்தில் மங்கோலியா, வடசீனா, கீழ்யாங்ட்சி பள்ளத்தாக்கு மற்றும் தென் சீனாவிலிருந்த தீவுகள் நிரந்தரமாக ஜப்பானியத் துருப்புகளால் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் ஜப்பான், கைக்கூலி அரசாங்கத்தை மேற்பார்வை செய்வதென்றும் அவனுடைய நிதிக் கொள்கைகளையும் பொருளாதாரக் கொள்கைகளையும் கட்டுப்படுத்துமென்றும் சீனாவின் இயற் கைச் செல்வாதாரங்களைப் பயன்படுத்துமென்றும் கைக்கூலி ராணுவத்தையும் போலீஸையும் பயிற்றுவிக்கும் என்றும், அவர் களுக்கு ஆயுதங்களைக் கொடுக்குமென்றும் எழுதப்பட்டிருந்தது. ஜப்பானிய எதிர்ப்பு இயக்கத்தின் ஒவ்வொரு உருவமும் தடை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

நான்கிங்கின் பொம்மை அரசாங்கம் நிலை நாட்டப்பட்ட

தோடு அதே சம காலத்தில் வாங்கிங்-வெய் மற்றொரு கோமிங்டாங்கை அமைத்து அதனுடைய கடமை, "மக்களின் மூன்று கோட்பாடுகளை," அமுல் நடத்துவதாகும், என்றும் கூறினான். அவனுடைய "தேசியக் கோட்பாடு" உண்மையில் அகண்ட ஜப்பானிசத்தோடும் அல்லது ஜப்பானியர்களின் மேலாதிக்கத்தின் கீழ் அகண்ட ஆசியனிஸத்தோடும் ஒரே மாதிரி யானதாக இருந்தது. அவனுடைய கருத்தோட்டத்தில், ஜப்பான் ஆசியாவின் பிரபுவாக இருந்தது என்றும் சீனா ஒரு ஜப்பானிய அடிவருடியாக இருந்தது என்றும் ஒத்துக் கொள்வது வெட்கமானது அல்ல என்று நினைக்கும் அளவுக்கு வாங்கி னுடைய தார்மீக கடமை இப்படிப்பட்டதாக இருந்தது. இந்த முறையில், "தேசியம்" என அவன் முத்திரை குத்தியது, தேசிய சரணாகதிவாதத்தைத் தவிர வேறு எதுவும் அல்ல. அவனுடைய "ஜனநாயக கோட்பாடு," என்பது எதிரி கைப்பற்றியிருந்த ஏரியாக்களில், எதிரியின் பாஸிஸ ஆட்சியையும் பொம்மை அரசாங்கத்தின் பாஸிஸ ஆட்சியையும் நிப்பந்தனையற்ற முறையில் ஏற்றுக் கொள்ளுதல் என்று அர்த்தமாயிற்று. அவனுடைய, "மக்கள் யுத்த கோட்பாடு" கைக்கூலி அரசாங்கத்தின் நிதி சேமிப்புகளை, "படிப்படியான சேகரத்தினால்," "அபிவிருத்தி செய்ய," உதவுவதற்கு மக்களை நிர்ப்பந்திப்பதில் திசை திருப்பப்பட்டிருந்தது. பசிபிக் யுத்தம் 1941 மழை காலத்தில் வெடித்த பொழுது, நான்கிங் கைக்கூலி அரசாங்கம், "புதிய தேசிய இயக்கத்தை" துவக்கி, அதனுடைய ஆட்சியின் கீழ் இருந்த மக்களை, "உலகத்தைக் காப்பாற்றுவதற்கு தியாகங் களைச் செய்யவும்," மற்றும், "உடல் ரீதியாகவும் மனரீதியாக வும் தங்களால் இயன்ற அதிக பட்ச அளவிற்கு தங்களை அர்ப் பணிக்கவும்," அறைகூவி அழைத்தது, உண்மையில், அவை அனைத்தும் மக்களை, கடைசி எல்லைக்கு விரட்டி அடிப்பதாக இருந்தது.

எதிரி கைப்பற்றியிருந்த ஏரியாக்கள் ஜப்பானியப் படை யெடுப்பால், ஈவிரக்கமற்ற முறையில் கொள்ளையடிக்கப் பட்டன.

யுத்தத்தின் ஆரம்பகால கட்டத்தில், நேரிடையான ராணுவ கட்டுப்பாட்டின் மூலமாகவோ அல்லது அவனுக்காக இந்த அசிங்கமான வேலையைச் செய்வதற்கு மற்றவர்களை நிர்ண யித்ததின் மூலமாகவோ அவனது சுரண்டலால் எதிரி, வடக்கு, மத்திய மற்றும் தெற்கு சீனாவில் சகல சீனப் பொருளாதார

நிறுவனங்களையும் அழித்தான். அவனது எண்ணம், ''யுத்தம் நடப்பது போன்ற நடவடிக்கைகளால் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பதாக,'' இருந்தது. இந்தக் குறிக் கோளுடன், ''சீன - ஜப்பானிய ஒத்துழைப்பு,'' என்று சொல்லப் பட்ட ஒரு கொள்கையை அவன் கையாண்டான்; மற்றும், ''வட சீனா அபிவிருத்திக் கம்பெனி,'' ஆகியவற்றின் மூலம் சீன ஒத்துழைப்பாளர்களால் செய்யப்பட்டிருந்த முதலீடுகளை எடுத் துக் கொண்டதின் மூலம், சீனாவின் செல்வாதாரங்களை மேலும் கொள்ளையடித்தான்.

கைப்பற்றிருந்த ஏரியாக்களின் ஜப்பான் அடித்த கைக்கூலி ஆட்சியின்கீழ் பெரியதொரு அதிகரிப்பைக் காட்டிற்று. உதாரண மாக, ஜப்பான் எடுத்துச் சென்ற இரும்புத் தாது 1939-ல் 4,50,222டன்களாக இருந்ததிலிருந்து 1943-ல் 10,654,325டன் களாக அதிகரித்தது; தேனிரும்பு, 1938இல் 868,485டன்களாக இருந்ததிலிருந்து 1943இல் 18,18,517 டன்களாக அதிகரித்தது; மற்றும் நிலக்கரி 1938இல் 27,451,968 டன்களாக இருந்த திலிருந்து 1943இல் 50,075,141 டன்களாக அதிகரித்தது.

1936க்கும் 1938க்கும் இடையே வடசீனாவிலும் மத்திய சீனாவிலும், சீனப்பஞ்சாலைகளிலிருந்து சுமார் 13,30,000 கதிர் களை ஜப்பான் கைப்பற்றியது. வடகிழக்கு சீனாவிலும். வட சீனாவிலும் கைப்பற்றியிருந்த ஏரியாக்களின் பருத்திநூல், துணி, மாவு மற்றும் சிகரெட் ஆகியவற்றின் உற்பத்தி படிப்படியாக விழுந்திருந்தது.

பெரும் சுவருக்கு தெற்கேயிருந்த நாட்டுப் புறத்தில், ஜப்பானிய படையெடுப்பாளர்கள் நிலத்தை ஈவிரக்கமற்ற முறை களில் கைப்பற்றினார்கள். ஜப்பானிய எதிர்ப்பு கொரில்லா யுத்தத்தைச் சமாளிப்பதற்கு அவர்கள் குழிகளைத் தோண்டிய பொழுதும், கற்சுவர்களைக் கட்டிய பொழுதும், அவர்கள் நிலத்தைப் பலாத்காரமாகக் கைப்பற்றினார்கள்; அல்லது அதைக் குறைவானதொரு விலையில் வாங்கினார்கள்; அல்லது வெறுமனே பறிமுதல் செய்தார்கள்; அதிகமான பருத்தி மற்றும் தானியத்தை வளர்ப்பதற்கு அவர்களது விவசாயக் கம்பெனி களையும் பண்ணைகளையும் ஏற்பாடு செய்த பொழுது, அவர்கள் குறைவானதொரு விலையில் நிலத்தை வாங்கினார்கள் அல்லது அதனை அப்படியே பறிமுதல் செய்தார்கள். இந்த முறையில் நிலத்தைக் கைப்பற்றிய பொழுதெல்லாம், சகல குடிமக்களும் நிலச்சுவான்தார்களும் மற்றும் விவசாயிகளும் வெளியேற்றப்

பட்டார்கள். அங்கே தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த விவாசாயிகள் பண்ணை அடிமைகளைப் போல் நடத்தப் பட்டார்கள்.

எதிரி கைப்பற்றியிருந்த நகரங்களிலும் கிராமங்களிலும் ஜப்பானிய எதிர்ப்பு இயக்கம், பசிபிக் யுத்தம் வெடித்த பிறகு மிகவும் பரவலானதாகவும் தீவிரமானதாகவும் மாறிற்று. எதிரியினாலும் அவனது ஒத்துழைப்பாளர்களாலும் "கிராமத்தை ஊடுருவும்" இயக்கத்தின் மையமென கருதப்பட்ட பிரதேசமான கியாங்சுவின் பல பகுதிகளிலும் விவசாயிகளின் பெரும் அளவிலான ஆயுதமேந்திய பேரெழுச்சிகள் வெடித்தன. அரிசிச்சந்தைக் குப்புகழ்பெற்றிருந்த ஒருபட்டினமான ஊகு, பட்டினிக் கலகத்தின் காட்சியாக இருந்தது. இதில் சுமார் ஒருலட்சம் மக்கள் சம்பந்தப்பட்டிருந்தார்கள். சிங்டாவோ, தையுவான், டியன்சின், பீகிங் மற்றும் இதர நகரங்களில் பஞ்சத்தால் வாடிய மக்கள் அரிசி கடைகளை உடைத்து உள்ளே நுழைந்தார்கள். வட சீனாவில், ஜப்பானிய எதிர்ப்பு தளங்களுக்கு அருகாமையில் எதிரி கைப்பற்றி இருந்த பிரதேசங்களில் இருந்த மக்கள், குத்தகை குறைப்பிற்காகவும் வட்டிக் குறைப்பிற்காகவும் போராடிக் கொண்டிருந்ததோடு கூடவே, வேவு பார்க்கவும், மக்களின் சொத்தை பாதுகாக்கவும் மற்றும் ராணுவ நடவடிக்கைகளில் சேரவும் தலைமறைவு படைகளை அமைத்தார்கள். மத்திய சீனாவில், எதிரியுடைய ஆட்சியின் இதயமான ஷாங்சாவில், பத்து லட்சத்திற்கும் அதிகமான வேலை இல்லாதவர்கள் இருந்தார்கள்; அவர்கள், அவர்களுடைய குடும்பங்களோடு ஒன்றுகூடி நகரத்தின் மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்களாக இருந்தார்கள். ரிக்ஷாக்காரர்கள் அங்கு அடிக்கடி வேலை நிறுத்தங்களை நடத்தினார்கள்; ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் வகுப்புகளைத் தற்காலிமாக நிறுத்தி வைத்தார்கள்; அதே சமயத்தில், தொழிற்சாலைத் தொழிலாளர்கள் மெதுவாக வேலை செய்தார்கள், அல்லது கருவிகளைக் கீழே வைத்து விட்டார்கள். எதிரி கைப்பற்றி இருந்த பகுதிகளில் ரயில்வே தொழிலாளர்கள் சம்பந்தபட்ட மட்டில், "மெதுவாக வேலை செய்வதினாலும்," நாசவேலையினாலும் ரகசியமாக சாமான்களை அகற்றுவதினாலும் போராடுவது அவர்களது இடைவிடாத பழக்கமாக இருந்தது.

தொகுத்துக் கூறுவதென்றால், 1943இல் இருந்து 1944வரையிலும் நாஜி ஜெர்மனியின் மீது சோவியத் யூனியன் பெற்ற

வெற்றிகள் சீன மக்களுக்கு அவர்களுடைய எதிர்ப்பு யுத்தத்தில் இறுதி வெற்றிக்காக முயற்சிப்பதற்குச் சாதகமானதொரு நிலைமையை உண்டாக்கிற்று. பசிபிக் யுத்தம் வெடித்த பிறகு, ஜப்பானியர்களின் கட்டுப்பாட்டின் கீழிருந்த எல்லா ஏரியாக்களிலும், ஜப்பானிய எதிர்ப்பு இயக்கத்தின் கூடுதலானதொரு எழுச்சி இருந்தது; மற்றும் ஜப்பானின் ஆட்சியும், பொம்மை அரசாங்கத்தின் ஆட்சியும் ஆட ஆரம்பித்தன.

இத்தகைய சூழ்நிலைகளின் கீழ், தொடர்ச்சியான பகுதி முன்னேறித் தாக்குதல்கள் வடசீனாவில் ஷான்டுங், ஷாங்சி-சகார்-ஹோப்பெய்-ஹோனான் ஆகிய எல்லா விடுதலை பெற்ற ஏரியாக்களிலும் துவக்கப்பட்டன; வடக்கு கியாங்சு, தெற்கு கியாங்சு, ஹுவாய்பெய் மற்றும் ஹுப்பே-ஹோனான்-அன்வெய்—இவை அனைத்தும் மத்திய சீனாவில் உள்ளன—மற்றும் தெற்கு சீனாவில் சிங்கியாங் நதி ஏரியாக்களிலும் மற்றும் ஹைனான் தீவிலும் தொடர்ச்சியான பகுதி முன்னேறித் தாக்குதல்கள் துவக்கப்பட்டன.

1944இல், ஷான்டுங் ஏரியாவில் மாத்திரம் 36,000 எதிரித் துருப்புகளும் கைக்கூலித் துருப்புகளும் செயலற்ற தாக்கப்பட்டன. 10,000த்திற்கும் அதிகமான கைக்கூலித் துருப்புகள் வென்றெடுக்கப்பட்டனர்; எட்டு கிராமப் புற பட்டிணங்களும் 1,18,000 சதுர கிலோ மீட்டர்கள் கொண்ட பிரதேசம் மீட்கப்பட்டு 74,00,000க்கும் அதிகமான மக்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

அதே ஆண்டில், ஷான்சி-ஹோப்பெய்-ஷான்டுங்-ஹோனான் ஏரியாவில், ஆயிரத்திற்கும் அதிகமான எதிரியின் பலமான தளங்கள் கைப்பற்றப்பட்டு 50,00,000த்திற்கும் அதிகமான ஜனத்தொகையுடன் கூடிய எட்டு கிராமப்புற பட்டினங்களும் 2,00,000 சதுர கிலோ மீட்டர்களுக்கும் அதிகமான ஒரு பிரதேசமும் மீட்கப்பட்டன.

ஷாங்சி-சகார்-ஹோப்பெய் ஏரியாவில் 1,500க்கும் அதிகமான எதிரியின் பலமான தளங்கள் கைப்பற்றப்பட்டன. 24 கிராமப்புற பட்டிணங்கள் தற்காலிகமாக மீட்கப்பட்டன மற்றும் ஷியா-சுவாங் மற்றும் பாவோ-டிங் போன்ற இப்படிப்பட்ட முக்கியமான நகரங்களும் ஒரு குறுகிய காலத்திற்குள் இரண்டு முறை விடுதலை செய்யப்பட்டன. மத்திய ஹோப்பெய் சமவெளியில். பரந்தபிரதேசம் மீட்கப்பட்டது. பெய்யுயே ஏரியாவில் எதிரி வரிசைவீடுகளின் முதல்வரிசை முற்றிலும் தரைமட்ட

மாக்கப்பட்டது.

ஷாங்சி-சுய்யுவான் ஏரியாவில் 97,000 சதுர கிலோ மீட்டர்களுக்கும் அதிகமான ஒரு பிரதேசம் மீட்கப்பட்டு, 3,70,000 மக்கள் விடுதலை செய்யப்பட்டனர். இந்த முறையில், மஞ்சள் நதி ஓரமாக இருந்த தற்பாதுகாப்பு அணிவரிசை பலப்படுத்தப்பட்டது.

பகுதி எதிர்-முன்னேறித் தாக்குதலின் விளைவாக, மத்திய சீனாவில் விடுதலை பெற்ற ஏரியா அளவில் வளர்ந்தது. வடக்கு மற்றும் மத்திய கியாங்சு ஏரியாக்களின் நதியில் இருந்த சின்செங், ஷாங்குவாங் மற்றும் ஷிகாங் ஆகிய துறைமுகங்களும் மற்றும் மஞ்சள் கடற்கரையில் இருந்த சென்ஷியா துறைமுகமும் கைப்பற்றப்பட்டு, எதிரியின் நதிப்போக்குவரத்தைப் பயமுறுத்திக் கொண்டிருந்தன. யூனிங்பிடிபட்டதோடு வடக்கு மற்றும் மத்திய கியாங்சு ஏரியாக்கள் இணைக்கப் பட்டன. தெற்கு கியாங்சு ஏரியாவில், தூங்சிங், லையாங் மற்றும் லிங்கு ஆகியவை ஒன்றன் பின் ஒன்றாகக் கைப்பற்றப்பட்டன. மற்றும் கொரில்லா படைப் பிரிவுகளின் சிதறிக் கிடந்த தளங்கள் ஒரு பெரிய அடித்தள ஏரியாவிற்குள் ஒன்றுபடுத்தப்பட்டிருந்தன. கிழக்கில், மத்திய அன்வெய் ஏரியா கியாங்சு எல்லை வரையிலும் மற்றும் மேற்கில் ஹூப்பெய் எல்லை வரையிலும் விரிந்து இருந்தது. ஹூப்பெய்-ஹோனான்-ஹூன்னான்-கியாங்சி எல்லைப்பிரதேசம் 3,90,000 சதுர கிலோ மீட்டர்கள் கொண்ட ஒரு ஏரியாவையும் 90,00,000க்கும் அதிகமான மக்கள் தொகையையும் கொண்டதாக இருந்தது.

தென்சீன விடுவிக்கப்பட்ட ஏரியாவும் விஸ்தரிக்கப்பட்டிருந்தது. டுங்கியாங் நதி ஏரியா கிழக்கில் ஹூயாங் வரையிலும், மேற்கில் சான்சு மற்றும் சீன்ஹீ வரையிலும், வடக்கில் சென் செங் வரையிலும் மற்றும் தெற்கில் கடற்கரை வரையிலும் வியாபித்திருந்தது. அது காண்டனிலும் ஹாங்காங்கிலும் இருந்த எதிரிக்கு நேரடியானதொரு அபாயகரமாக இருந்தது. ஹைனானிலிருந்த துருப்புகளின் ஒரு படைப்பிரிவு அவர்களது கொரில்லா யுத்தத்தைப் பிடிவாதமாக நடத்தி, பரந்த கிராமப்புற ஏரியாவை அவர்களது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தது.

1944இல், எட்டாவது வழிச்சேனை, புதிய நான்காவது சேனை மற்றும் தென்சீன ஜப்பானிய எதிர்ப்பு அணி ஆகியவை மொத்தம் 20,000த்திற்கும் அதிகமான போராட்டங்களில்

எதிர்பையும் கைக்கூலித் துருப்புகளுடன் மோதி, அவர்களுக்கு 2,60,000 பேருக்கும் அதிகமான சேதங்களை உண்டாக்கி, 30,000த்திற்கும் அதிகமான கைக்கூலித் துருப்புகளை வென்றெடுத்து, 16கிராமப்புற பட்டிணங்களை மீட்டு,5,000 எதிரியின் பலமான தளங்களைக் கைப்பற்றி, 80,000 சதுர கிலோமீட்டர்கள் உள்ள ஒரு பிரதேசத்தை மீட்டு, 1,20,00,000 மக்களை விடுதலை செய்தது.

**2. சீன அதிகார வர்க்க முதலாளித்துவத்தின் ஊழல் மலிந்த பிற்போக்கு ஆட்சி. மூன்றாவது கம்யூனிஸ்டு எதிர்ப்பு பேரெழுச்சி தடுத்து நிறுத்தப்பட்டது. நாடு முழுவதிலும் ஜனநாயக இயக்கத்தின் எழுச்சி. சீனாவின் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கத் தலையீடு.**

விடுதலை பெற்ற ஏரியாக்களில் மறுவாழ்வும் அபிவிருத்தியும் முன்னேறிக் கொண்டிருந்த அதே சமயத்தில், கோமிங்டாங் ஏரியாக்களில் கடுமையானதொரு நெருக்கடி நிகழ்ந்தது.

அரை நிலப் பிரபுத்துவ சீனா, அதனுடைய பொருளாதாரத்தில் பின்தங்கி இருந்தது. தென்மேற்கு மாகாணங்களும் வடமேற்கு மாகாணங்களும்கூட தென்கிழக்கு மாகாணங்களைக் காட்டிலும் மிகவும் அதிகமாகக் கூட பின் தங்கி இருந்தது. எதிர்ப்பு யுத்தம் வெடித்தபிறகு, கடற்கரையோர மாகாணங்களில் இருந்த தொழில் நிறுவனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக உள்நாட்டிற்குள் நகர்ந்தன. இது 1940 வரையிலும் தொடர்ந்து நடைபெற்றது. யுத்த பிரதேசங்களில் இருந்து நகர்த்தப்பட்ட தொழிற்சாலைகளோடு கூடவே எண்ணற்ற புதிய தொழிற்சாலைகளும் தென்மேற்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களில் ஏற்படுத்தபட்டன. இத்தகைய தொழிற்சாலைகளில் பெரும்பாலனவை—மற்ற ஏரியாக்களில் இருந்து நகர்த்தப்பட்டவை அல்லது புதிதாக கட்டப்பட்டவை—செச்சுவானில் இருந்தன; எஞ்சிய தொழிற்சாலைகள் ஹூனானிலும், ஷென்சியிலும், குவாங்சியிலும், யூன்னானிலும் இதர மாகாணங்களிலும் இருந்தன. தென்மேற்கு மற்றும் வடமேற்கு சீனாவின் பரந்த பிரதேசங்கள் பெரும் மனித சக்தியையும் செழிப்புமிக்க இயற்கை செல்வாதாரங்களையும் பெற்றிருந்தன. ஆக்கிரமிப்பிற்கு எதிர்ப்பின் சக்தியை அதிகரிப்பதற்கு அவற்றை முழுமையாக பயன்படுத்துவதற்கு பதிலாக, கோமிங்டாங் பிடாக்கண்டர்கள்

அவர்களுக்கு சாத்தியமான அனைத்தையும் ஈவு இரக்கமற்ற முறையில் கொள்ளை அடித்தார்கள். "நான்கு பெரிய குடும்பங்கள்" தங்களுடைய சொந்த செல்வத்தை அதிகரிப்பதற்கு தேசிய நெருக்கடியைச் சாதகமாக பயன்படுத்தின.

"நான்கு பெரிய குடும்பங்களால்" பிரதிநிதித்துவப் படுத்தப் பட்டிருந்த சீன அதிகாரவர்க்க முதலாளித்துவம் எதிர்ப்பு யுத்தம் நடைபெற்ற காலத்தில் மிகவும் துரிதமாக விரிவடைந்தது. ஜப்பானை எதிர்த்துப் போராடுவது என்ற நொண்டிச் சாக்கின் கீழ், அதிகாரவர்க்க முதலாளிகள் மிதமிஞ்சி உபரிப் பொருளாதார கட்டாயத்தினால் மிகமிகக் காட்டுமிரண்டித்தனமான சுரண்டல் முறைகளைக் கையாண்டு, தங்களுக்கு ஏராளமான செல்வத்தைக் கொண்டு, குவித்துக் கொண்டும் நாட்டின் சகல பொருளாதார நடவடிக்கைகளையும் ஏகபோகமாக்கிக் கொண்டும் இருந்தார்கள்.

நான்கு அரசாங்க வங்கிகளின் கூட்டுவாரியம் கோமிங்டாங் அரசாங்கத்தின் நிதி ஏகபோகத்தின் கருவியாக மாறி இருந்தது. "தேசிய நாணயம்" என்று அழைக்கப்பட்ட நாணயத்தை அது பறிப்பதற்கான ஒரு சாதனமாகவும், ஏகபோகத்தின் ஒரு சாதனமாகவும் பயன்படுத்திற்று. எதிர்ப்பு யுத்தகாலத்தில் கோமிங்டாங் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட "தேசிய நாணயத்தின்" தொகை 1,03,18,000 மில்லியன் சீன டாலர்களை எட்டிப் பிடித்தது. மக்கள் தங்களுடைய சொத்திற்கும் சாமான்களுக்கும் பதிலாக மதிப்பற்ற காகிதத்தை ஏற்றுக் கொள்ளும்படி நிர்பந்திக்கப்பட்டிருந்தார்கள். "நான்கு பெரிய குடும்பங்கள்" சீன மக்களைக் கொள்ளையடிப்பதற்கும் சீனாவின் நிதிகளை ஏகபோகமாக்குவதற்கும் பிரதான சாதனமாக "தேசிய நாணயம்" இருந்தது. யுத்த காலத்தில் நான்கு பெரிய வங்கிகளின் முக்கிய தொழில் லாப சூதாட்டமாக இருந்தது. வழங்கப்பட்டக் கடன்களின் மொத்த தொகையில் வியாபாரிக் கடன்கள் மிகப் பெரும் பங்காக இருந்தன; அதே சமயத்தில் தொழில் கடன்களும் சுரங்கக் கடன்களும் மிகவும் குறைவானதாகவே இருந்தன; 1937இல் இருந்து 1942வரையிலும் வழங்கப்பட்டக் கடன்களின் மொத்தத் தொகையில், 19.7 சதவீதம் மட்டுமே தொழிற்சங்கங்களுக்கும் சுரங்கங்களுக்கும் கொடுக்கப் பட்டிருந்தன; எஞ்சியுள்ள 80·3 சதவீத கடன்கள் அனைத்துமே வியாபார நிறுவனங்களுக்கு கொடுக்கப் பட்டிருந்தன. வியாபார ஏகபோகத்தின் அதிகார பூர்வமானதொரு உறுப்பான வர்த்தக் கமிட்டியை, "நான்கு

பெரிய குடும்பங்கள்'' அவர்கள் அமைத்திருந்தன. இது தவிர, அநேக தனியார் வியாபார நிறுவனங்களையும் சொந்தமாக வைத்திருந்தார்கள். பட்டு, தேயிலை, துங் எண்ணெய், பன்றி மயிர், உலோகத் தாதுக்கள் மற்றும் அஞ்சனக்கல் போன்ற இப் படிப்பட்ட ஏற்றுமதி சாமான்களின் கொள்முதலையும் விற்பனை யையும் அவர்கள் ஏகபோகமாக்கி இருந்தார்கள்; மற்றும், பஞ்சு, பஞ்சுநூல், துணி, மேஜை, உப்பு, சர்க்கரை, சிகரெட்டுகள் மற்றும் தீப்பெட்டிகள் போன்ற அன்றாட தேவை பொருட்களின் விற்பனையையும் அவர்கள் ஏகபோகமாக்கி இருந்தார்கள். அவர் களது கொள்கையற்ற குறைந்த விலையில் வாங்கும் பழக்கத்தின் மூலமும் உயர்ந்த விலையில் விற்கும் பழக்கத்தின் மூலமும் அவர்கள் விவசாயிகளையும், கைவினைஞர்களையும் மற்றும் தொழில் அதிபர்களையும் அவர்களுக்கே கிடைக்ககூடிய நியாய மான லாபத்தைக் கொள்ளை அடித்தார்கள்; மற்றும் நாடு முழுவதிலுமுள்ள நுகர்வோர்களையும் கசக்கிப் பிழிந்தார்கள்.

''நான்கு பெரிய குடும்பங்களால்'' நடத்தப்பட்டத் தொழில், ஏகபோகத்தின் ஒரு உறுப்பாக, தொழில் மற்றும் சுரங்க ஒழுங்கு படுத்தும் கமிஷன் இருந்தது. அது கையாண்ட முறை, அதிகாரி களால் நடத்தப்பட்டத் தொழில்களுக்கு மானியம் வழங்குவதும், சாதாரண பிரஜைகளால் சொந்தமாக வைக்கப்பட்டிருந்த தொழில்களைக் கட்டாயமாக இணைத்துக் கொள்வதாகவும் இருந்தது. தேசிய செல்வாதாரங்களின் கமிஷன் மற்றும் இராணுவத்தளவாடங்களின் நிர்வாக காரியாலயம் ஆகியவற்றின் நிர்வாகத்தின்கீழ்,பெயரளவிற்கு வந்த தொழில்கள் உண்மையில், ''நான்கு பெரிய குடும்பங்களின்'' சொத்தாக மாறி இருந்தது மேலும் ''நான்கு பெரிய குடும்பங்களால்'' தனிப்பட்ட முறையில் நடத்தப்பட்ட தொழில்களும் உண்டு. 1945இல் தேசிய செல்வாதாரங்கள் கமிஷன்கீழ் இருந்த தொழில் நிறுவனங்களுக்கு சொந்தமான கனஇயந்திரத் தொழிலின் உற்பத்திப் பொருட் களின் விகிதாச்சாரங்கள், கோமிங்டாங் ஏரியாக்களின் உற்பத்திப் பொருட்களின் மொத்த தொகையோடு ஒப்புநோக்கிப் பார்க்கும் போது பின் வருமாறு இருந்தன; நிலக்கரி 11.5 சதவீதம், மின்சாரம் 35.9 சதவீதம், தேனிரும்பு 46.6 சதவீதம், உருக்கு 56சதவீதம் மற்றும் பெட்ரோல், மண்ணெண் ணெய். இரும்பு, தாதுக்கள், அஞ்சனக்கல் மற்றும் தகரம் அனைத் தும் 100 சதவீதம், மின்விசை நிலையங்களிலும் உற்பத்தியிலும் செய்யப்பட்டிருந்த முதலீட்டில், அதிகார வர்க்கத் தொழில்கள்

உன்னதமான அளவில் ஆதிக்கம் செலுத்தின. மொத்த மூலதனத்தில் அதிகார வர்க்க மூலதனம் சுமார் 70 சதவீதம் அடங்கி இருந்ததாக மதிப்பிடப்பட்டிருந்தது. ''நான்கு பெரிய குடும்பங்களின்'' தொழில் ஏகபோகம், தேசிய தொழில் மற்றும் வியாபாரம் ஆகியவற்றின் குரல்வளையை நெறித்தன

விவசாயத்தில், ''நான்கு பெரிய குடும்பங்களும்'' பெரும் நிலப் பிரபுக்களாகவும் கொடுவட்டி லேவாதேவிக்காரர்களாகவும் விளங்கினர். அவர்களால் பயன்படுத்தப்பட்ட சுரண்டலின் மிகமிக கொடிய உருவம் நிலவரியைத் தானியமாக வசூலித்தது ஆகும். உதாரணமாக, செச்சுவான் மாகாணத்தில், மொத்த விவசாய உற்பத்தியில் பாதிக்கும் அதிகமான பகுதி நிலவரியாகக் கொடுக்கப் பட்டிருந்தது. இந்தக் கடுமையான சுமை முற்றிலும் விவசாயிகளின் தோள்களின் மீது விழுந்தது. ''நான்கு பெரிய குடும்பங்களால்'' கட்டுப்படுத்தப்பட்டிருந்த சீனாவின் விவசாயிகளின் வங்கி பண்டைய கால கொடுவட்டி லேவாதேவிக்காரர்களின் இடத்தைப் பிடித்திருந்தது. அதனுடைய விவசாயக் கடன்கள், தன்மையில் கொடுவட்டி லேவாதேவியாக இருந்தது, ஏனெனில், கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டிய காலம் ஒரு வருடமாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது; மற்றும் தானியத்தின் விலைவாசிகள் மிகவும் உயர்ந்திருந்த காலத்தில் விவசாயிகள் கடன்வாங்கும்படியும், விவசாய உற்பத்தி பொருட்களின் விலைகள் பிரமாண்டமான அளவில் விழுந்திருக்கும் பொழுதில், அறுவடை காலத்தில், வாங்கியிருந்த கடனைத் திரும்பிக் கொடுக்கும்படியும் நிர்பந்திக்கப்பட்டிருந்தார்கள். இந்த முறையில், இரண்டு சந்தர்ப்பங்களிலும் அவர்கள் ஈவிரக்கமற்ற முறையில் சுரண்டப்பட்டிருந்தார்கள். மேலும், கடன்கள் கிராமப்பறத்தில் உள்ள கொடுவட்டி லேவாதேவிக்காரர்களின் மூலம் கொடுக்கப்பட்டிருந்தன. ஆகவே, விவசாயிகள் சுரண்டப்படுதல் மேலும் தீவிரமாக்கப்பட்டிருந்தது. இந்த முறையில் விவசாயிகளின் வங்கி ஒரே சமயத்தில், இரண்டு குற்றங்களைச் செய்தன; அவை : பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவ சக்திகளை வளர்த்தலும் மற்றும் விவசாயிகளின் ரத்தத்தை உறிஞ்சுதலும் ஆகும்.

யுத்த காலத்தில் தேசிய பொருளாதாரத்தை ஏகபோகமாக்கவும், தங்களுடைய சொந்த கரங்களில் ஏராளமான செல்வத்தைக்குவிக்கவும் அதிகாரவர்க்க முதலாளிகளால்செய்யப்பட்டிருந்த தீவிரமான முயற்சிகள் சீனாவின் உற்பத்தி நிறுவனங்

களை அழித்துவிட்டன. கோமிங்டாங் பிற்போக்கு ஆட்சியின் பொருளாதார அடிப்படை உளுத்துப்போய் இருந்தது. தங்களுடைய சர்வாதிகார ஆட்சியை நிலைநாட்டுவதற்கு ஜனநாயகத்தின் குரல்வளையை நெறிக்கும் கொள்கைகளையும் மற்றும் ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கு செயலற்ற எதிர்ப்பினை காட்டும் கொள்கைகளையும் கோமின்டாங் விடாக்கண்டர்கள் கையாளுவதற்கு இதுதான் பிரதானக் காரணமாக இருந்தது.

அதனுடைய பிற்போக்கான உள்நாட்டுக் கொள்கையை நிறைவேற்றுவதற்கு, கோமிங்டாங் அதனுடைய பாசிச ஆட்சியை தீவிரப்படுத்திற்று. சி. சி. கும்பலும் மற்றும் தேசிய மீட்சிக்கான கழகமும் அதனுடைய பாசிச சர்வாதிகார ஆட்சியின் சக்திவாய்ந்த தூண்களாகவும், ஜனநாயகத்தின் குரல்வளையை நெறிப்பதற்கான அதனுடைய மிகமிக வசதியான கருவிகளாகவும் இருந்தன. கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராகவும் மற்றும் அதன் தலைமையின் கீழிருந்த ஜப்பானிய எதிர்ப்பு துருப்புகளுக்கு எதிராகவும், தேசபக்த ஜனநாயகவாதிகளுக்கு எதிராகவும் மற்றும் கோமிங்டாங்கிற்கு உள்ளேயே இருந்த சியாங்காய்-ஷேக் எதிர்ப்பு கோஷ்டிகளுக்கு எதிராகவும் ஒடுக்கு முறை நடவடிக்கைகளில் அவர்கள் அதிக கவனம் செலுத்தினார். கள். முதலாவதாக, அவர்கள் ரகசியமாக கம்யூனிஸ்டுகளையும் முற்போக்குவாதிகளையும் கொலை செய்தார்கள்; மற்றும் கோமிங்டாங் ஏரியாக்களில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமறைவு ஸ்தாபனங்களை அழிக்கவும் செய்தார்கள். இரண்டாவதாக அவர்கள் ஏராளமான எண்ணிக்கையில் ரகசிய ஏஜெண்டுகளைப் பயிற்றுவித்தார்கள்; இந்த ரகசிய ஏஜெண்டுகள், ஷென்சி-கான்சு-நிங்சியா எல்லைப் பிரதேசத்திற்குள்ளும் மற்றும் எதிரியின் அணிவரிசைகளுக்கு பின்னால் இருந்த அடித்தள ஏரியாக்களுக்குள்ளும் உளவு வேலை செய்வதற்காகவும், நாச வேலை செய்வதற்காகவும், ஊடுருவதற்கு கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பற்றிப் பிடித்தார்கள். மூன்றாவதாக, கம்யூனிஸ்டு கட்சியின் தலைமறைவு ஸ்தாபனங்களையும் மற்றும் எதிரி கைப்பற்றியிருந்த ஏரியாக்களில் உள்ள இதர ஜப்பானிய எதிர்ப்பு கோஷ்டிகளையும் அழிப்பதற்கு, அவர்கள் ஜப்பானியர் களின் ஸ்தாபனங்களோடும் கைக்கூலி ஸ்தாபனங்களோடும் ஒத்துழைத்தார்கள். ஒரு வார்த்தையில் கூறுவது என்றால், சியாங்காய்-ஷேக்கின் பிற்போக்கு கொள்கைக்கு இணங்க, இவ் விரு ஸ்தாபனங்களும் யுத்தத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் சகல

வகைப்பட்ட அசிங்கமான வேலைகளைச் செய்தன.

1943இல், பாசிச எதிர்ப்பு உலகயுத்தம் வெற்றியை நோக்கி தீர்மானமானதொரு திருப்பத்தை எடுக்கவிருந்த பொழுது, கோமிங்டாங் விடாக்கண்டர்கள், ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களின் தோல்விக்கு பிறகு, யுத்தத்தின் ஆதாயங்களை அறுவடை செய்வதற்கும் மற்றும் மக்கள் படைகளை ஒடுக்குவதற்குமான அவர்களது முயற்சியில் மூன்றாவது ஒரு கம்யூனிஸ்ட் எதிர்ப்பு இயக்கத்தினை நடத்தினார்கள்.

இந்த இயக்கத்தைத் துவக்குவதற்கு முன்பு, பொதுவான அபிப்பிராயத்தின் உதவியை தேடும் பொருட்டு, சியாங்காய்-ஷேக் சித்தாந்தத் துறையில் தயாரிப்புகளைச் செய்தான்.

1943 மார்ச்சில், சியாங்கை-ஷேக் அவனது **சீனாவின் எதிர்காலம்** என்ற இழி புகழ்வாய்ந்த நூலை வெளியிட்டான்; அந்த நூலில் உள்நாட்டில் இருந்த பிரச்சனைகளைத் தீர்வுகாண்பதற்கான அவனது எண்ணத்தை வெளியிட்டான். அதாவது, கம்யூனிஸ்ட் கட்சியையும் சகல புரட்சிகரமான சக்திகளையும் இரண்டு ஆண்டுகளுக்குள் ஒழித்துக்கட்டுவது என்ற அவனது எண்ணத்தை வெளியிட்டான். மேலும், கோமின்டர்ன் (உலகக் கம்யூனிஸ்ட் கட்சி) கலைக்கப்பட்டதை வசதியாக பயன்படுத்திக் கொண்டு, கோமிங்டாங் ஏரியாக்களில் இருந்த அவனது ரகசிய ஏஜெண்டுகளை "ஜன ரஞ்சிதமான ஸ்தாபனங்களாக" நடித்து, கம்யூனிஸ்ட் கட்சியைக் கலைக்கும்படி கோரவேண்டும் என்று அவன் உத்தரவிட்டான்.

1943-ஜூனில். எல்லாம் சரியாக இருந்தது என்று அவன் நினைத்துக் கொண்டிருந்த போது, மஞ்சள் நதியின் மீதிருந்த கோமிங்டாங் படைகளை ஷென்சி-கான்சு-நிங்சியா எல்லைப் பிராந்தியத்தை நோக்கி நகரும்படி சியாங்கை-ஷேக் உத்தரவிட்டான். அவை ஜூலை 7இல் அந்தப் பிரதேசத்தின்மீது பிரங்கித்தாக்குதலை ஆரம்பித்தன; மற்றும் ஒரு மின்னல் தாக்குதலைத் தொடுத்து ஏனானைக் கைப்பற்றுவதற்கு ஒன்பது வெவ்வேறு. பாதைகளின் வழியாக முன்னேறுவதற்கும் திட்டமிட்டன. மஞ்சள் நதியில் இருந்து படைகளை பின்வாங்கும் சியாங்கை-ஷேக்கின் பிற்போக்கான சூழ்ச்சிகளைக் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் கமிட்டி சரியான நேரத்தில் அம்பலப்படுத்திறறு; மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியைக் கலைக்கவேண்டும் என்று கோரும் சியாங்கை-ஷேக்கின் பிற்போக்கு சூழ்ச்சிகளையும் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி சரியான நேரத்தில் அம்பலப்

படுத்திற்று. மேலும் சமாதானத்தைப்பாதுகாக்கும்படியும் தேசம் முழுவதையும் அறைகூவி அழைத்து. அது ஒரு சுற்றறிக்கை தந்தியையும் அனுப்பிவைத்தது. இடைக்காலத்தில், எல்லைப்பிரதேசம் மற்றும் விடுவிக்கப்பட்ட ஏரியாக்களைச் சேர்ந்த துருப்புகளும் மக்களும் கூட்டங்களை நடத்தினார்கள். ஆட்சேபிக்கும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள். மற்றும் ஒரு எதிர்த்தாக்குதலுக்கான தயாரிப்புகயையும் செய்தார்கள். அவர்களது சூழ்ச்சிகளை அம்பலப் படுத்தியதினாலும் கண்டனம் செய்ததினாலும் கோமிங்டாங் விடாக்கண்டர்களின் செயலைக் கம்யூனிஸ்ட் கட்சி தடுத்து நிறுத்தி இருந்தமையாலும் மற்றும் அவர்களது எதிர் புரட்சிக் கொள்கைக்கு எதிராக தீர்மானமானதொரு போராட்டத்தைக் கம்யூனிஸ்ட் கட்சி நடத்தி இருந்தமையாலும் மற்றும் நாடுமுழுவதிலும் இருந்த மக்கள் அவர்களது எதிர்ப்பினைத் தெரிவித்து இருந்தமையாலும் கோமிங்டாங் பிற்போக்காளர்கள் அவர்களது மூன்றாவது கம்யூனிஸ்ட் எதிர்ப்பு இயக்கத்தினை நிறுத்தி வைக்கும்படி நிர்ப்பந்திக்கப் பட்டிருந்தார்கள்.

பாசிச எதிர்ப்பு யுத்தம் தீர்மானமனதொரு திருப்பத்தை எடுத்துக் கொண்டிருந்தமையால், ஜப்பான், தான் ஒரு வலையில் இருப்பதைக் கண்டுக்கொண்டது. ஐரோப்பிய அரங்கில் சோவியத் ராணுவத்தால் வென்றுபெறப்பெற்றிருந்த மாபெரும் வெற்றிகள், பிரிட்டனையும், அமெரிக்காவையும் அவர்களது துருப்புகளின் ஒரு பகுதியைப் பசிபிக் அரங்கிற்கு நகரும்படி செய்வதையும் ஒரு முன்னேறிய தாக்குதலை ஆரம்பிக்கச் செய்வதையும் சாத்தியமாகச் செய்தன. விடுதலை பெற்ற ஏரியாக்களில் இருந்து தொடுக்கப்பட்ட சீன மக்களின் வெற்றிசரமான எதிர்த்தாக்குதலின் ஒரு விளைவாக, ஆக்கிரமிப்பாளர்களின் துன்பங்கள் மேலும் வளர்ந்தன. ஆகவே, ஜப்பானியர்கள், பீகிங்கில் இருந்து காண்டனுக்கும், நான்னிங்கிற்கும் தரை மீதான செய்திப் போக்குவரத்துப் பாதையைத் திறப்பதற்கு திட்டமிட்டார்கள். இந்தப் பாதை, சீனப் பிரதான பூமியின்மீது இருந்த அவர்களது துருப்புகளை, நிலைமை மிகவும் அதிக கடினமாகிக் கொண்டிருந்த பசிபிக்கில் இருந்த, அவர்களது துருப்புகளுடன் இணைக்கும். இது சீனாவில், அவர்களது இதர ராணுவ நடவடிக்கைகளை வசதி செய்வதற்காகவும் திட்டமிடப்பட்டது. 1944இல், கோமிங்டாங் ஏரியாக்களின் மீது ஒரு முன்னேறிய தாக்குதல்களை அவர்கள் தொடுத்தார்கள். இது ஹோனான் - ஹுன்னான்-குவாங்சி இயக்கமென்று அறியப்பட்டிருந்தது.

1944 மார்ச்சில், ஜப்பானிய இராணுவம் ஹோனானில் கோமிங்டாங் துருப்புகளை தாக்கின. மே மாதத்தில் அது வடக்கு ஹோனான் மீதும், ஆகஸ்டில் தெற்கு ஹுன்னான்மீதும் முன்னேறிற்று. டிசம்பர் 2ஆம் தேதி வாக்கில் அது குவைச்சோவ் மாகாணத்தில் டுசான் கிராமப்புற பிரதேசத்தைக் கைப்பற்றிற்று. இந்த முறையில், சுருக்கமான காலமான எட்டு மாதங்களுக்குள், ஜப்பானிய படை எடுப்பாளர்கள் ஹோனான், ஹுன்னான், குவாங்சி, குவாங்டுங் மற்றும் ஃபுக்கியன் ஆகிய மாகாணங்களின் பெரும் பகுதியையும், மற்றும் குவேய்ச்சோவின் ஒரு பகுதியையும் கைப்பற்றி, வடகிழக்கு சீனாவில் இருந்து இந்தோசீனா வரை தரை மீதானதொரு செய்திப் போக்குவரத்து பாதையை அவர்களுக்குப் பெற்றிருந்தார்கள். கோமிங்டாங் ராணுவம், ஐந்து லட்சத்திற்கும் அதிகமான துருப்புகளையும் பல்வேறு அளவுகளைக் கொண்ட 146 நகரங்களையும் இழந்திருந்தது; மற்றும் ஆறு கோடிக்கும் அதிகமானதொரு மக்கள் தொகையையும் அது எதிரியிடம் விட்டுவிட்டது. ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்த பதட்டமானதொரு குழப்பத்தை ஓடிச் சென்றுவிட்ட கோமிங்டாங் துருப்புகளின் அபாயகரமான வீழ்ச்சி மீண்டுமொரு முறை மக்களுக்கு சொல்லவொனாத கஷ்டங்களைக் கொண்டு வந்தது.

இப்படிப்பட்ட ஊழலும் கையாலாகாதத் தனமும் கோமிங்டாங்கின் பிற்போக்கு பாசிசக் கொள்கையின் இயல்பான விளைவாக இருந்தது.

நாடு முழுவதிலும் இருந்த மக்கள், கோமிங்டாங் பிற்போக்காளர்களின் பொருளாதாரக் கொள்ளை, அரசியல் பிற்போக்குதனம் மற்றும் ராணுவ தோல்விகளை மேலும் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. எதிர் முன்னேறித் தாசகுதலுக்கான தயாரிப்புக்கும் மற்றும் யுத்தத்தை வேகமானதொரு முடிவுக்கு கொண்டு வருவதற்கும் ஒரே வழி பிற்போக்கு கோமிங்டாங் அரசாங்கத்திற்கு எதிரான தீவிரமானதொரு சீர்திருத்தத்தை நிறைவேற்றுவதுதான் என்று அவர்களுக்கு தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

1944 ஏப்ரலில் இருந்து ஆகஸ்டு வரையிலும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி கோமிங்டாங்கோடு பேச்சு வார்த்தைகளை நடத்திற்று. மக்களின் விருப்பங்களையும் சித்தத்தையும் பிரதிநிதித்துவப் படுத்திக் கொண்டு கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதி, லின்போ-சு, கோமிங்டாங் அரசியல் ஜனநாயகத்தை

நடைமுறைக்கு கொண்டு வர வேண்டுமென்றும் மற்றும் இரண்டு கட்சிகளுக்கும் இடையே தீர்க்கப்பட வேண்டியிருந்த பிரச்சனையை ஜப்பானிய எதிர்ப்பு துருப்புகளின் மற்றும் ஜப்பானிய எதிர்ப்பு அடித்தள ஏரியாக்கள் ஆகியவற்றின் சட்டப் பூர்வமான அந்தஸ்தை அங்கீகரிக்கும் பிரச்சினைக்குத் தீர்வுக் காண வேண்டுமென்றும் கோரினார். எனினும், அரசியல் ஜனநாயகத்தை அறிமுகப்படுத்தும் பிரச்சினையைக் கோமிங்டாங் விவாதிப்பதற்கு மறுத்தோடு, மட்டுமின்றி எட்டாவது வழிச் சேனைகள் மற்றும் புதிய நான்காவது சேனைகள் (மற்ற சேனைகள் திட்டவட்டமானதொரு கால கட்டத்திற்குள் கூட்டப்பட வேண்டும்) ஆகியவற்றின் நான்கில் மூன்று பகுதிகளைக் கலைப்பதற்குக்கூட முயற்சித்தது; மற்றும் எதிரியின் அணி வரிசைகளுக்குப் பின்னாலிருந்த ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக அரசாங்கத்தை ஒழிக்கவும் முயற்சித்தது. கோமிங்டாங் விடாக் கண்டர்களின் இடைஞ்சலின் காரணமாக, பேச்சு வார்த்தைகள் எந்த விளைவையும் உண்டாக்குவதற்கு தவறி விட்டன.

கோமிங்டாங்கினால் சுன்கிங்கில் 1944 செப்டம்பரில், கூட்டப்பட்ட தேசிய அரசியல் மன்றக் கூட்டத்தில், சகல ஜப்பானிய எதிர்ப்புக் கட்சிகள் மற்றும் கோஷ்டிகள், ஜப்பானிய எதிர்ப்பு துருப்புகள், ஸ்தல அரசாங்கங்கள் மற்றும் மக்களின் ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துக் கொள்ளக் அரசு விவகாரங்கள் பற்றிய ஒரு அவசரமான மகாநாட்டை கூட்ட வேண்டுமென்று லின்போ-சு முன் மொழிந்தார்; கோமிங்டாங்கின் ஒரு கட்சி சர்வாதிகாரத்தை ஒழிக்க வேண்டுமென்றும் ஒரு ஜனநாயகக்கூட்டுஅரசாங்கத்தை அமைக்கவேண்டுமென்றும் அவர் மேலும் கூறினார். இத்தகைய பிரேரேபனைகள் நாடு முழுவதிலுமிருந்த மக்களிடமிருந்து அன்பானதொரு வரவேற்பினை பெற்று: மற்றும் ஜனநாயக அரசியல் குழுக்களின் கழகத்தின் அடுத்த வழித்தோன்றலான ஜனநாயகக் கழகத்தின் ஆதரவையும் மற்றும் கோமிங்டாங்கின் ஜனநாயகப் பகுதியின் ஆதரவையும் வென்றுப் பெற்றிருந்தது.

1944 செப்டம்பரில், ஜனநாயகக் கழகம் அதனுடைய அரசியல் திட்டத்தை அறிவித்தது. அரசு விவகாரங்கள் பற்றிய ஒரு மாநாட்டை உடனடியாக கூட்டுவதற்காகவும் மற்றும் அரசியல் சீர்திருத்தத்தை நிறைவேற்றும் நோக்கத்திற்காக ஒரு கூட்டு அரசாங்கத்தை அமைப்பதற்காகவும் யுத்தத்தில் ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளிப்பதற்காகவும் அது நின்றது. கோமிங்

டாங்கிற்கு உள்ளே இருந்த பல ஜனநாயகவாதிகளும்கூட, விடாக்கண்டர்களின் சர்வாதிகார ஆட்சியினால் அதிருப்தி அடைந்து, அரசாங்கத்தையும், கோமிங்டாங்கையும் ஜனநாயகப் படுத்த கோரினார்கள். மக்களின் மூன்று கோட்பாடுகளை உயர்த்திப் பிடிப்பவர்களின் சங்கமாக அவர்கள் தங்களை அமைத்துக் கொண்டார்கள்.

கோமிங்டாங்கிற்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையே பேச்சு வார்த்தைகள் ஆரம்பமானப் பிறகு, சுங்கிங், செங்டு, குன்மிங் மற்றும் இதர இடங்களில் இருந்த தேசபக்த ஜனநாயக வாதிகள் ஜனநாயகம், அரசியல் சீர்திருத்தங்கள் ஆகியவை வேண்டுமென்றும் மற்றும் பாசிசத்திற்கு ஒரு முடிவு காணப்பட வேண்டுமென்றும் ஒரு மனதாக கோரினார்கள். 1944 செப்டம்பரில், ஒரு ஜனநாயகக் கூட்டு அரசாங்கம் அமைக்கப்பட வேண்டுமென்று ஒரு அறைகூவல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி விடுத்த போது பல்வேறு ஜனநாயகக் கட்சிகளாலும் கோஷ்டிகளாலும் தேசிய தொழில் அதிபர்களாலும் வர்த்தகர்களாலும், ஒரு கட்சி சர்வாதிகாரத்தை ஒழிப்பதற்கு ஒரு மனதாக விரும்பிய கோமிங்டாங் கட்டுப்பாட்டு ஏரியாக்களில் இருந்த ஆசிரியர்கள்' மாணவர்கள் மற்றும் பத்திரிகையாளர்களால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. ஷென்சி-கான்சு - நிங்சியா எல்லைப் பிரதேசத்திலும் மற்றும் எதிரியின் அணிவரிசைகளுக்குப் பின்னா லிருந்து அடித்தள ஏரியாக்களில் இருந்த வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் சேர்ந்த மக்கள், கோமிங்டாங் அரசாங்கத்தையும் ராணுவத் தலைமையும் புனரமைக்க வேண்டுமென்று ஒரே குரலில் கோரினார்கள். சுங்கிங், செங்டு மற்றும் குன்மிங் ஆகிய நகரங்களில் இருந்த ஜனநாயகவாதிகள் ஜனநாயகத்தை வளர்ப் பதற்கான சங்கத்தை அமைத்து, கூட்டங்களையும் ஆர்ப்பாட்டங் களையும் நடத்தினார்கள். ஒரு ஜனநாயக அரசாங்கம் வேண்டு மென்ற அறைகூவல் கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்களில் ஜனநாயகத்திற்கான இயக்கத்தின் பேரெழுச்சிக்கு வழி நடத்திச் சென்றது.

ஆனால் சீன மக்களின் இந்த இயக்கம் ஒரு அந்நிய ஆக்கிர மிப்பு தன்மை வாய்ந்த அரசின் தலையீட்டினைச் சந்தித்தது. பசிபிக் யுத்தத்தில், ஜப்பானின் மீது ஏற்றத்தைப் பெற்றிருந்த அமெரிக்க ஐக்கிய நாடுகள் சீனச் சந்தையின் மீது ஜப்பானுக் கிருந்த ஏகபோகத்தை எடுத்துக் கொள்ளும் பொருட்டும் மற்றும் சீனாவை ஒரு அமெரிக்க காலனியாக மாற்றும் பொருட்டும்

அதனுடைய ஆக்கிரமிப்புத் தன்மை வாய்ந்த செல்வாக்கினைச் சீனாவிற்கு இப்பொழுது விஸ்தரிக்க முயற்சித்தது. இந்த குறிக்கோளோடு, கடன் கொடுக்கும் குத்தகைச் சட்டத்தின் மூலமாக்வும் மற்றும் ஜப்பானை எதிர்த்துப் போராடும் நொண்டிச் சாக்கின் கீழும் கோமிங்டாங் பிற்போக்கு ஆட்சிக்கு அங்கு தடையற்ற ஆதரவை அமெரிக்கா கொடுத்தது. அமெரிக்க "நிபுணர்கள்" பெரும் எண்ணிக்கையில் கோமிங்டாங் அரசாங்கத்தில் ஊடுருவினார்கள். கோமிங்டாங் துருப்புகள் அமெரிக்க அதிகாரிகாளால் பயிற்றுவிக்கப் பட்ட ராணுவத் தளவாடங்கள் பெரும் அளவில் சப்ளைச் செய்யப்பட்டன மற்றும் ராணுவ போக்குவரத்துப் பாதைகள் அமெரிக்காவினால் திறந்து வைக்கப் பட்டன.

சீன மக்கள் ஒரு ஜனநாயக கூட்டு அரசாங்கத்தை அமைப்பதற்காக கிளர்ச்சி செய்து கொண்டிருந்த அதே சமயத்தில், அமெரிக்க ஐக்கிய நாடுகள், பாரபட்சமற்றதாக பாசாங்கு செய்து கொண்டு கோமிங்டாங்கிற்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையே மத்தியஸ்தம் செய்து வைக்க முன் வந்தது ஒரு "மூன்றாவது கட்சி" என்ற சாக்கில் அமெரிக்காவின் பிரதிநிதி, பிட்ரிக் ஜே. ஹர்லே, ஏனானுக்குப் பறந்துச் சென்று. கம்யூனிஸ்ட் கட்சியோடு பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தான், ஒரு ஜனநாயக கூட்டு அரசாங்கத்தை நிலைநிறுத்துவது சம்பந்த மாகவும் மற்றும் ஒரு ஒன்றுபட்ட மிக உயர்ந்த இராணுவ தலைமையை நிலை நாட்டுவது சம்பந்தமாகவும் ஒரு உடன்பாடு ஏற்பட்டது.

ஆனால், சியாங்கை-ஷேக்கின் பக்கத்தில் அது நின்றது என்ற விபரத்தை அமெரிக்க அரசாங்கம் காட்டிக்கொள்வதற்கு வெகு காலம் பிடிக்கவில்லை. ஹர்லே, சுங்கிங்கிற்கு திரும்பிய பொழுது, ஏனெனில் அவர் செய்த உடன்பாட்டைத் தூக்கி எறிந்து விட்டு, சியாங்கை-ஷேக்கை ஊக்குவிப்பதற்கு சுறுசுறுப் பாக வேலை செய்தார். சியாங்கை-ஷேக்கின் கட்டுப்பாட்டின் கீழிருந்த கோமிங்டாங் ராணுவக் குழுவின் தலைமையின் கீழோ அல்லது அமெரிக்கப் பிரதிநிதி தலைமைப் பதவியை வகித்துக் கொண்டிருக்கும் கோமின்டாங் மற்றும் சீனக் கம்யூனிஸ்டு கட்சி மற்றும் அமெரிக்காவின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு மூவர் கமிட்டியின் கீழோ சீனக் கம்யூனிஸ்ட்டு கட்சி துருப்பு களை வகிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. இதற்கு பதிலாக, சியாங்கை-ஷேக் கம்யூனிஸ்டு கட்சியின் சட்டபூர்வமான

அந்தஸ்தை அங்கீகரித்துக் கோமிடாங் அரசாங்கத்தில் நிர்வாக யுவானில் சில கம்யூனிஸ்டுகளை உறுப்பினர்களாக நியமித்தான்.

இந்தத் துரோகத்தனமான சூழ்ச்சியினால், ஒரு கூட்டு அரசாங்கத்திற்கான கம்யூனிஸ்ட் கட்சியின் கோரிக்கையை எதிர்ப்பதற்கும், எட்டாவது வழிச் சேனையையும் புதிய நான்காவது சேனையையும் ஒழித்துக் கட்டுவதற்கும், விடுதலைப் பெற்றிருந்த ஏரியாக்களைக் கைப்பற்றுவதற்கும் அமெரிக்காவும் சியாங்கும், குறிக்கோளாக கொண்டிருந்தார்கள். கம்யூனிஸ்டு கட்சியினால் இத்தகைய நிபந்தனைகள் நிராகரிக்கப்பட்டபோது, அமெரிக்க அரசாங்கம் சியாங் கை-ஷேக்கோடு மட்டுமே ஒத்துழைக்கும் என்றும், ஆனால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியோடு ஒத்துழைக்காது என்றும் மற்றும் பலாத்கரத்தினால் சீனாவை ஒற்றுமைப்படுத்துவதற்கு அது சியாங்கை-ஷேக்கிற்கு உதவி செய்யும் என்று ஹர்லே பயமுறுத்தினான். சீனாவில், அமெரிக்க துருப்புகளின் தளபதியான ஆல்பெர்ட்சி வெடிமெயர், கோமின்டாங் அரசாங்கத்தைச் சேர்ந்திராத எந்தத் தனிநபர்களுக்கும் அல்லது கோஷ்டிகளுக்கும் உதவி செய்யக் கூடாதென்று அவனுடைய சகல கீழ்மட்ட அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டான். அமெரிக்க அரசாங்கம் பெரும் அளவிலான ஆயுதங்களைக் கோமிங்டாங்கிற்கு தொடர்ந்து சப்ளைச் செய்தது; கோமிடாங் துருப்புகளை ஆயுதபாணியாக்கி, இந்த முறையில் அவர்களது ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் பெற்றிருந்த வெற்றிக் கனிகளை சீன மக்களிடமிருந்து திருடுவதற்குச் சுறுசுறுப்பாக தயாரித்துக் கொண்டிருந்தது.

சீனாவின்பால் அமெரிக்கா அனுஷ்டித்துக் கொண்டிருந்த கொள்கை ''தற்சமயத்தில் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்திற்கு ஒரு தடையாக மாறுமென்றும் மற்றும் வருங்காலத்தில் உலக சமாதானத்திற்கு ஒரு தடையாக மாறுமென்றும்''[1] சுட்டிக் காட்டி, தோழர் மாசே-துங் சீனாவின்பால் அமெரிக்கா கடைபிடித்துக் கொண்டிருந்த கொள்கையின் பின்னாலிருந்து விஷமத்தனமான எண்ணத்தை சரியாக அம்பலப்படுத்தினார். இப்படிப்பட்டதொரு கொள்கையை அமுல் நடத்துவது, அமெரிக்க அரசாங்கத்தின் மீது கடுமையானதொரு பளுவைச் சுமத்தும் என்றும், ஏனெனில் ''அது விழிப்புற்று எழுந்துள்ள அல்லது விழிப்புற்று எழுந்து கொண்டிருக்கும் பத்து கோடி கணக்கான சீன மக்களுக்கு எதிராக தன்னை வைத்திருக்கும்''[2] என்றும் அவர் எச்சரித்தார். அவர்களது அரசாங்கத்தின் பிற்போக்கு

கொள்கை ''அவர்களை முடிவற்ற கவலைகளுக்கு உள்ளும் தொல்லைகளுக்கு உள்ளும் வீசி எரியும்'' [3] என்று அமெரிக்க மக்களையும் அவர் எச்சரித்தார்; ஏனெனில், வெளி நாடுகளில் ஒரு ஆக்கிரமிப்புக் கொள்கையை பின்பற்றிக் கொண்டிருக்கும் ஒரு அரசாங்கம் அதனுடைய சொந்த மக்களின் பால், எதேச் சாதிகரமான நடவடிக்கைகளை நிச்சயமாக கையாளும் என்றும் அவர் அமெரிக்க மக்களையும் எச்சரித்தார்.

**3. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏழாவது தேசிய காங்கிரசி னால் வரையறுக்கப்பட்டிருந்த ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் இறுதி வெற்றியைப் பெறுவதற்கான அடிப்படைக் கொள்கை களும் யுத்தத்திற்கு பிறகு நிறைவேற்ற வேண்டிய அடிப்படை கடமைகளும்.**

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏழாவது தேசிய காங்கிரஸ் 1945 ஏப்ரல் 23இல் ஏனானில் ஆரம்பமாயிற்று. அதில் 544 பிரதி நிதிகளும், 208 மாற்றுப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்; இவர்கள் 12,10,000 கட்சி உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தினார்கள்.

இந்த காங்கிரஸில் தோழர் மாது-சேங், ''கூட்டு அரசாங்கம் பற்றி'' என்ற தலைப்பில் ஒரு அரசியல் அறிக்கையைச் சமர்ப் பித்தார்.

தற்போதைய சர்வதேச நிலமை பற்றிய ஸ்தூலமானதொரு அலசி ஆராய்தலோடு தோழர் மாது-சேங் அவரது அறிக்கையை ஆரம்பித்தார். இரண்டாவது உலக யுத்தத்திற்கு பிறகு, பாசிச எதிர்ப்பு மக்களுக்கும், எஞ்சி இருந்த பாசிச சக்திகளுக்கும் இடையேயும், ஜனநாயகத்திற்கும் ஜனநாயக எதிர்ப்பிற்கும் இடையேயும், மற்றும் தேசிய விடுதலைக்கும் தேசிய ஒடுக்கு முறைக்கும் இடையேயும் மேலும் ஒரு போராட்டம் இருக்குமென்று அவர் முன் கூட்டியே பார்த் தார். ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் இரண்டு பாதை களுக்கு இடையேயும் மற்றும் இரண்டு வருங்கால எதிர்ப் பார்ப்புகளுக்கு இடையேயும் நடைபெற்றுக் கொண்டிருந்த போராட்டத்தை மிக்வும் தெளிவாகவும் அவர் தொகுத்துக் கூறினார்.

இந்த நிலைமையின் காரணமாக கட்சியின் பொதுவான அரசியல் கடமையைக் காங்கிரஸ் பின்வருமாறு வரையறுத்திருந்

தது: "...ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடித்து, நமது கட்சியின் தலைமையின்கீழ் மக்கள் முழுவதையும் விடுதலை செய்து, புதியதொரு ஜனநாயக சீனாவை நிர்மானிக்கும் பொருட்டு, வெகுஜனங்களை தைரியமாக செயலுக்கு தட்டி எழுப்பி மக்களின் படைகளை பலப்படுத்த வேண்டும்."[4] சீனா, சீன மக்களுக்கு சொந்தமானதே ஒழிய, பிற்போக்காளர்களுக்கு சொந்தமானதல்ல. சீன மக்கள்தான் சீனாவின் தலைவிதியை நிர்ணயிப்பார்கள். காங்கிரஸில் அவர் நிகழ்த்திய முடிவுரையில், ஏகாதிபத்தியமும் நிலப் பிரபுத்துவமும் சீன மக்களின் மீது ஒரு செத்துப்போன சுமையைப் போல் படுத்துக் கொண்டிருக்கும். இவை, பெரும் மலைகளாக இருந்தன வென்றும் மற்றும் சீன சமுதாயத்தின் அபிவிருத்தியைத் தடுத்துக் கொண்டிருந்தனவென்றும், ஆனால் சீனா முழுவதிலும் இருந்த பரவலான வெகுஜனங்கள் கம்யூனிஸ்ட்களோடு முயற்சிகளில் கூட்டாக ஈடுபடுவார்களேயானால், இவ்விரு பெரும் மலைகளும் நிச்சயமாக அகற்றப்பட முடியும் என்றும் பயமற்றதொரு, போர்க்குணமிக்கதொரு உணர்வோடு தோழர் மாசே-துங் சுட்டிக் காட்டினார்.

முதலாவதாக, முன்னணிப் படைக்குள், ஒற்றுமை இருக்க வேண்டும். மார்க்சிய - லெனினியத்தால் ஆயுதபாணியாக்கப் பட்டிருந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, சீன மக்களிடையே புதிய வேலை பாணியை, தத்துவத்தை நடைமுறையோடு நெருக்கமாக பிணைக்கப்பட்டிருந்ததால், பிரதானமாக குணாதிசயப் படுத்தப்பட்டிருந்ததும், வெகுஜனங்களோடு நெருக்கமான உறவைக் கொண்டிருந்ததும் மற்றும் சுயவிமர்சன நடைமுறையைக் கொண்டிருந்ததுமான புதியதொரு வேலை பாணியை உருவாக்கி இருந்தது. இந்த வேலை பாணியின் மீதுதான் கட்சி வளர்ந்து, முன்னேறி, மற்றும் மாபெரும் அரசியல் போராட்டத்தில் ஒற்றுமையையும் சாதித்திருந்தது. இந்த பாணி, கம்யூனிஸ்ட் கட்சினை இதர எல்லா அரசியல் கட்சிகளிடமிருந்தும் தெளிவாக வேறு படுத்திக் காட்டும் ஒரு தலைத் தூக்கி நிற்கும் அம்சமாக இருந்தது. பலமானதொரு கம்யூனிஸ்ட் கட்சியோடும், அதனுடைய சொந்த அணிகளில் ஒற்றுமையோடும் மறறும் நாடு முழுவதிலும் இருந்த மக்களோடும் ஒருமைப் பாட்டோடும், மற்றும் சாதகமானதொரு சர்வதேச நிலைமையோடும், ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தையும் ஜனநாயக புரட்சியையும் வெற்றி பெறுவது நிச்சயமாக சாத்தியமாக இருந்தது,

தோழர் மாசே-துங் அவரது அரசியல் அறிக்கையில் பின்வருமாறு கூறினார்:

"நம் மக்களின் மீது சார்ந்து நிற்கும் வரையிலும் அவர்களுடைய தீராத (inehaustible) படைப்புச் சக்தியில் உறுதியாக நம்பி நிற்கும் வரையிலும் மற்றும் அதன் விளைவாக அவர்களே உறுதியாக நம்பி அவர்களோடு ஒன்றாக ஆகி இருக்கும் வரையிலும் எந்த எதிரியும் நம்மை நசுக்க முடியாது; ஆனால் நாம் எந்த எதிரியையும் நசுக்க முடியும். மற்றும் எந்த கஷ்டத்தையும் சமாளிக்கவும் முடியும் என்பது ஒவ்வொரு தோழருக்கும் தெளிவுபடுத்தப்படவும் வேண்டும்."[5]

திட்டவட்டமான திட்டம் கேந்திரமான யுத்தகால பிரச்சினைகளையும் மற்றும் யுத்த பிற்கால பிரச்சினைகளையும் ஆராய்ந்திருந்தது. அவற்றில், ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களின் முழுமையான தோல்வியும் சேர்ந்திருந்தது, ஒரு ஜனநாயக கூட்டு அரசாங்கத்தை அமைத்தல், மக்களுக்கு பிரஜா உரிமைகளை உத்தரவாதம் செய்தல், தேசிய ஒற்றுமையை அமுலாக்குதல், மக்கள் படையை நிலை நாட்டுதல், விவசாய சீர்திருத்தத்தை நிறைவேற்றுதல், நவீன இயந்திர தொழிலை அபிவிருத்தி செய்தல்; மக்களின் கலாச்சாரத்தை வளர்ப்பது; சீனாவில் உள்ள அனைத்துத் தேசிய இனங்களின் சமத்துவத்தை உருவாக்குதல், சுதந்திரமானதொரு சமாதானப் பூர்வமான அயல் நாட்டு கொள்கை ஆகிய பிரச்சனைகளும் அவற்றில் அடங்கும்.

ஆனால், கோமிங்டாங்கின் ஒரு கட்சி சர்வாதிகாரத்தை ஒழிக்காமலும், ஒரு ஜனநாயக கூட்டு அரசாங்கத்தை நிறுவாமலும் இத்தகைய நடவடிக்கைகளை ஒரு பொழுதும் நிறைவேற்ற முடியாது.

கோமிங்டாங்கின் ஒரு கட்சி சர்வாதிகாரம் உண்மையில், பெருநிலச்சுவான்தார்கள் மற்றும் பெருமுதலாளிகளின் ஒரு சர்வாதிகாரமாக இருந்தது. இந்தச் சர்வாதிகாரம் சீனாவின் தேசிய ஒற்றுமையைச் சீர்குலைத்து, ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் கோமிங்டாங் அரங்கில் தோல்விகளை உண்டாக்கின; மற்றும் உள்நாட்டு யுத்தத்திற்கு மூலகாரணமாகவும் இருந்தது. ஆகவே, அதை ஒழித்துக் கட்டுவது சீன மக்களின் ஏகமனதான கோரிக்கையாக மாறி இருந்தது. எனினும், "அரசு அதிகாரத்தை மக்களிடம் திருப்பிக் கொடுப்பது" என்ற பாசாங்கின் கீழ், "ஒரு அரசியல் சட்டத்தை" உருவாக்குவதற்கு "தேசிய சட்ட பேரவை" என்று அழைக்கப்பட்ட ஒரு பேரவையைக் கூட்டுவதினால் மக்களின் கோரிக்கையை ஒத்திப் போடச் செய்யவும்

எதிர்த்துப் போராடவும் கோமிங்டாங் பிற்போக்கு கும்பல் முயற்சித்தது; அதே சமயத்தில், அதனுடைய பிற்போக்கு ஆட்சியினை நிலைநிறுத்தி வைப்பதற்காக அரசு அதிகாரத்தை உண்மையிலேயே கோமிங்டாங் பிற்போக்கு கும்பலிடத்திடமே ''திருப்பிக் கொடுத்துக் கொண்டு'' இருந்தது. இது ஒற்றுமையின்மையின், உள்நாட்டு யுத்தத்தின் ஒரு பாதையாக இருந்தது; இறுதியில், பிற்போக்குவாதிகள் தங்களுடைய குரல்வளைகளை நெறித்துக் கொள்ளும் ஒரு தடைப் பாதையாக இருந்தது. தோழர் மாசே-துங் கூறியதுபோல், ''அவர்கள் தங்களது சொந்தக் கழுத்துகளின்மீது ஒரு தடையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்; ஒரு பொழுதும் தளர்த்தப்படக்கூடாத தடையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்; மற்றும் இந்தத் தடைதான் 'தேசிய சட்ட பேரவை' என்று அழைக்கப் படுகிறது.''[6]

இந்தக் காங்கிரசில், ''விடுதலை பெற்ற ஏரியாக்களின் போர் அரங்கம்'' என்ற தலைப்பில், ஒரு ராணுவ அறிக்கையை தோழர் சூடே கொடுத்தார். அது மக்கள்படை, மக்கள் யுத்தம் மற்றும் சீன மக்களின் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் ஆகியவற்றின் வெற்றிகரமானது ராணுவ பாதையின்விரிவானதொரு முறையான விளக்கமாக இருந்தது; அந்த அறிக்கை தோழர் மாசே-துங்கின் ராணுவ தத்துவத்தையும் மற்றும் புரட்சிகரமான யுத்தங்களில் அதனுடைய தலைமை சேகரித்திருந்த பதினேழு வருட அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஒரு ராணுவத்தை நிர்மாணிப்பது, ராணுவத்திற்கு ஆள் சேர்த்தல், ராணுவத்தின் பராமரிப்பு தலைமை மற்றும் பயிற்சி. யுத்தத்தை நடத்துவது, ராணுவத்தில் அரசியல் வேலை, ராணுவ தலைமையும் சாதனங்களும் பிரதான படைகளை ஸ்தல துருப்புகளோடு அல்லது ஆயுதமேந்திய ஊர்க் காவல் படையோடும் ஒருங்கிணைத்தல், மற்றும் கூலித் துருப்புகளை உடைத்தெறிதல் போன்ற இப்படிப்பட்ட கோட்பாடுகளை, இந்தப் பாதையை அமுல் நடத்துவதற்கு அவசியமான வேலையின் பல்வேறு அம்சங்களை, இந்த அறிக்கை பரிசீலினைச் செய்திருந்தது. மக்கள் யுத்தத்தின் இராணுவ பாதையை நிறைவேற்றியதின் விளைவாக, கம்யூனிஸ்ட் கட்சி பரந்த விடுதலை செய்யப்பட்டிருந்த ஏரியாக்களின் வழியாக ஒரு போர் அரங்கத்தை திறந்து, ஜப்பானிய எதிர்ப்புத் தளங்களை நிறுவி, ஜப்பானின் யுத்த தந்திர ரீதியான முன்னேறித் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தி, எதிரியினுடையவும் மற்றும் கைக்கூலித்

துருப்புகளினுடையயும் பிரதான படைகளால் தொகுக்கப்பட்ட தாக்குதலின் கூர்முனையைச் சந்தித்தது; மற்றும் எதிர்ப்பு யுத்தத்தில் விடுவிக்கப்பட்ட ஏரியாக்களைக் கேந்திர மையமாகவும் செய்தது.

இந்த காங்கிரஸில், கட்சியின் சட்ட திட்டத்தைத் திருத்துவது பற்றிய ஒரு அறிக்கையை தோழர் லியூசாவோ-சி சமர்ப்பித்தார். பின்னர் புதியதொரு சட்ட திட்டம் உருவாக்கப்பட்டது.

கட்சியின் புதிய சட்ட திட்டம், கட்சியின் அடிப்படையான அரசியல் பாதையாகவும் மற்றும் ஸ்தாபன பாதையாகவும், வெகுஜன பாதையின்மீது விஷேமான அழுத்தத்தை வைத்தது. கட்சியின் ஸ்தாபனமும் வேலையும் மக்களின் பரவலான வெகு ஜனங்களோடு நெருக்கமாக இணைந்திருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தது. வெகுஜனப் பாதையை அமுலுக்கு கொண்டு வருவதற்கு புதிய சட்ட திட்டம் பல அடிப்படையான கோட்பாடுகளை வலியுறுத்திக் கூறி இருந்தது; அதாவது, ஒவ்வொரு விஷயமும் வெகுஜனங்களின் சார்பில் செய்யப்பட வேண்டுமென்றும், பொறுப்பு அவர்களுக்கு முற்றாக நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டுமென்றும், அவர்களது சுய விடுதலையில் நம்பிக்கை வைத்திருக்க வேண்டுமென்றும், மற்றும் ஒருவர் அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டுமென்றும் புதிய சட்ட திட்டம் வலியுறுத்திக் கூறி இருந்தது. வெகு ஜனங்களின்பால் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படை கையாள வேண்டிய அடிப்படையானக் கோட்பாடுகள் இவையாகும். வெகுஜனங்களிடமிருந்து அந்நியமாக்குதலுக்கு வழி நடத்தி செல்லும் குருட்டு தத்துவவாதம் மற்றும் தன் அனுபவ வாதம் ஆகிய தவறான போக்குகளைக் கட்சி எப்பொழுதுமே ஒழித்துக் கட்டுவதற்கு அவை உத்திரவாதம் செய்கின்றன.

இறுதியில், காங்கிரஸ், தோழர் மாசே-துங்கை தலைவராகக் கொண்ட ஒரு புதிய மத்திய கமிட்டியைத் தேர்ந்தெடுத்தது.

காங்கிரஸிற்கு பிறகு, அதனுடைய எதிர் முன்னேறித் தாக்குதலிலும், ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் கைப்பற்றி இருந்த நகரங்களில் அவர்களை உள்ளடக்கி வைத்திருப்பதிலும் மற்றும் அவர்களது செய்திப் போக்குவரத்தின் நலிந்த பாதைகளின் வழியாக ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை உள்ளடக்க வைத்திருப்பதிலும் மக்கள் விடுதலை சேனை இன்னும் மிக அதிகமான முன்னேற்றத்தை உண்டாக்கிற்று.

**4. எதிர்-முன்னேறித் தாக்குதலின் பிரதான சக்தியாக மக்களின் விடுதலை செய்யப்பட்ட ஏரியாக்கள். நட்புறவு மற்றும் கூட்டணி பற்றிய சீன-சோவியத் உடன்படிக்கை கையெழுத்தால்**

பகுதியான எதிர்-முன்னேறித் தாக்குதல்கள் நடைபெற்ற காலத்தில் மக்கள் படை 9,10,000 பேராகவும் கிராமப்புற காவல் படை 22,00,000 பேர்களாகவும் மற்றும் தற்பாதுகாப்பு படைகள் 1,00,00,000 பேராகவும் விரிவடைந்திருந்தது. 19 விடுதலை செய்யப்பட்ட ஏரியாக்கள் நிலைநாட்டப் பட்டிருந்தன. இவை 9,50,000 சதுர கிலோமீட்டர்களைக் கொண்ட ஒரு ஏரியாவை உள்ளடக்கி இருந்தன. இந்த ஏரியாவின் மக்கள் தொகை 9,55,00,000 ஆக இருந்தது.

19 விடுதலை செய்யப்பட்ட ஏரியாக்கள் பின் வருமாறு ஷென்சி-கான்சு-நிங்சியா ஏரியா, ஷான்சி-சகார்-ஹோப்பெய் ஏரியா, ஷான்சி-ஹோப்பெய்-ஹோனான் ஏரியா, ஹோப்பெய்-ஷான்டுங்-ஹோனான் ஏரியா, ஷான்சி-சுய்யுவான் ஏரியா, ஹோப்பெய்-ஜிகோல்-லயோனைங் ஏரியா, ஷான்டுங் ஏரியா, வடக்கு கியாங்சு ஏரியா, மத்திய கியாங்சு ஏரியா, கியாங்சு-சிக்கியாங்-அன்வெய் ஏரியா, கிழக்கு சிக்கியாங் ஏரியா, ஹூப் பெய் ஏரியா (ஹூவாய் நதிக்கு வடக்கே), ஹூயின்னான் ஏரியா (ஹூவாய் நதிக்கு தெற்கே), மத்திய அன்வெய் ஏரியா; ஹோனான் ஏரியா, ஹூப்பே-ஹோனான்-அன்வெய் ஏரியா, ஹூன்னான்-ஹூப்பே ஏரியா, துங்கியாங் நதி ஏரியா மற்றும் ஹைனான் தீவு ஏரியா.

விடுதலை பெற்ற ஏரியாக்கள் மிக முக்கியமான யுத்ததந்திர ரீதியான நிலைகளைப் பெற்றிருந்தன. ஜப்பானியர்கள் கைப்பற்றி இருந்த பெரிய நகரங்கள், செய்திப் போக்குவரத்துப் பாதைகள், கடற்கரையோரப் பாதைகள் ஆகியவற்றில் பெரும் பாலானவை, மக்களின் துருப்புகளால் சுற்றி வளைக்கப் பட்டிருந்தன.

எதிர்ப்பு யுத்தம் நடைபெற்ற காலம் முழுவதிலும், ஷென்சி-கான்சு-நிங்சியா எல்லைப் பிரதேசம் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி மற்றும் மத்திய புரட்சி ராணுவக் கமிஷன் ஆகிய வற்றின் இருப்பிடமாக இருந்தது; எனவே. இந்தப் பிரதேசமும் அதன் தலைநகரான ஏனானும் சீனமக்களின் ஜப்பானிய எதிர்ப்பு துருப்புகளின் பொதுவான பிரிவினையாகவும், எதிரிவரிசைகளுக்கு

பின்னாலிருந்த எல்லா தளங்களின் அரசியல் மையமாகவும் மற்றும் நாடுமுழுவதிலும் இருந்த மக்களின் புரட்சி போராட்டத்தின் அரசியல் மையமாகவும் மாறி இருந்தன. ஏனானில்தான் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியும் தோழர் மாசேதுங்கும், அவர்களுடைய ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் சீன மக்களுக்கு வழிகாட்டிய பல்வேறு முக்கியமான அரசியல், ராணுவ,பொருளாதார மற்றும் கலாச்சார பிரச்சினைகளுக்கான வழிகாட்டுதல்களை உருவாக்கினார்கள்.

வடசீனாவில் இருந்த, விடுவிக்கப்பட்டிருந்த ஏரியாக்களில் யுத்த தந்திரரீதியான ஏரியாக்களான ஷான்சி-சகார்-ஹோப்பெய், ஷான்சி-ஹோப்பெய்-ஹோனான், ஹோப்பெய்-ஷாங்டுங், ஹோனான், ஷான்சி - சுய்யுவான், ஹோப்பெய் - சுகோவ் லயோனிங் மற்றும் ஷான்டுங் ஆகியவை அடங்கி இருந்தன. அவை கிழக்கில் போஹை சிறுகுடாவிற்கும் மஞ்சள் கடலுக்கும், மேற்கில் மஞ்சள் நதிக்கும், தெற்கில் லுங்காய் ரயில்வேக்கும், மற்றும் வடக்கில் பாவோடோங், டோலுன் மற்றும் சின்சோன் நகரங்களுக்கும் வியாபித்திருந்தன. அவை. பீகிங்-சுய்யுவாங், பீகிங்-ஷான்கோ, டாட்டுங்-பூச்சோ, செங்டின், தையுவான் பீகிங்-லயோனின் ரயில்வேக்களைக் கட்டுப்படுத்தும் ஒரு நிலையில் இருந்தன; மற்றும் பீகிங், டியன்சின், சிசியாயுவாங், பாவோடிங், டாட்டுங், தையுவான், ஷாங்சியாகோ மற்றும் ஷெங்டே ஆகிய எதிரியினுடைய பலமான மையங்களையும் பயமுறுத்தின.

மத்திய சீனாவில் விடுவிக்கப்பட்ட ஏரியாக்களில் வடக்கு கியாங்சு, மத்திய கியாங்சு, கியாங்சு-சிக்கியாங்-அன்வெய், கிழக்கு சிக்கியாங், குவாய்ப்பெய், குவாய்நான், மத்திய அன்வெய் ஹோனான், ஹூப்பே ஆகிய யுத்த தந்திர ரீதியான ஏரியாக்கள் அடங்கி இருந்தன. யாங்ட்சி, குவாய், ஹன், மற்றும் மஞ்சள் நதிகளால் அவை குறுக்கே கடந்து சென்றன; கிழக்கில், கடலை எதிர் நோக்கி சென்றும் மேற்கே ஊடாங் மலைகளை எல்லையாகக் கொண்டும் தெற்கில் சிக்கியாங் மற்றும் கியாங்சி வரையிலும் வியாபித்துக் கொண்டும், வடக்கில் லுங்காய் ரயில்வேயை எட்டிப் பிடித்துக் கொண்டும் இருந்தன. கியாங்சியின் மிகப் பெரும்பாலான பிரதேசத்தையும், அன்வெய் மற்றும் ஹூப்பே ஆகியவற்றின் பெரும் பகுதிகளையும், ஹோனான் மற்றும் சிக்கியாங்கின் பகுதிகளையும் மற்றும் ஹூனானின் ஒரு சிறிய பகுதியையும் அவை அரவணைத்துக் கொண்டிருந்தன. எதிரியினுடைய பலமான மையங்களான நான்கின், ஷாங்காய்,

ஊகான், சுசோ மற்றும் ஹான்சோ ஆகிய நகரங்களுக்கு அவை ஒரு பயமுறுத்தலாக அமைந்தன; மற்றும் பீன்யன் சின்-பூக்கோ ரயில்வே, பீகிங்-ஹாங்கோ ரயில்வேயின் தென் பகுதி, குவாய்தான் ரயில்வே மற்றும் இந்த ஏரியாக்களில் இருந்த வலைப்பின்னல் போன்ற நிலப் போக்குவரத்து மற்றும் நதிப் போக்குவரத்து ஆகியவற்றின் மீதும் அவை ஆதிக்கம் செலுத்தின.

தென் சீனாவில் விடுவிக்கப்பட்ட ஏரியாக்களில் துங்கியாங் நதி ஏரியாக்களும் ஹைகுன் தீவும் அடங்கி இருந்தன. குங்சியாங் நதி ஏரியா எதிரி கைப்பற்றி இருந்த ஹான்டன்-ஹாங்காங், ஹான்டன்-கோவ்லுன் ரயில்வே மற்றும் காண்டன்-காங்கோவ் ரயில்வேயின் தெற்கு பகுதியையும் அபாயத்திற்கு உள்ளாக்கினார்கள்.

வியட்நாம், மலேயா, டச்சு போர்னியோ மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு செல்வதற்கான எதிரியினுடைய பாதைகளை ஹைனான் தீவு ஏரியா பயமுறுத்திற்று.

''கூட்டு அரசாங்கம்'' பற்றிய அவரது அரசியல் அறிக்கையில், தோழர் மாசே-துங் பின்வருமாறு கூறினார் :

''எல்லா விடுவிக்கப்பட்ட ஏரியாக்களிலும், ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணியின் முக்கியமான கொள்கை முழுமையாக நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டன; மற்றும் கம்யூனிஸ்ட்களுக்கும் இதர ஜப்பானிய எதிர்ப்பு கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் எந்த விதமான கட்சி இணைப்பும் இல்லாத மக்களுக்கும் இடையே கூட்டுறவை அடிப்படையாக கொண்ட அரசாங்கங்கள், அதாவது ஸ்தல கூட்டு அரசாங்கங்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன, அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றன. விடுவிக்கப்பட்ட ஏரியாக்களில், சகல மக்களும் அணிதிரட்டப்பட்டுள்ளனர். இத்தகைய எல்லா அம்சங்களின் காரணமாகவும் பிரம்மாண்டமானதொரு எதிரியின் நிர்ப்பந்தம், கோமிங்டாங் துருப்புகளின் மூற்றுகை மற்றும் தாக்குதல்கள் மற்றும் வெளி உதவி முற்றிலும் இல்லாமை ஆகிய கஷ்டங்கள் இருந்தபோதிலும், சீனாவின் விடுவிக்கப்பட்ட ஏரியாக்கள் அசைக்க முடியாதபடி நிற்பதற்கு முடிந்துள்ளன. எதிரி கைப்பற்றி இருந்த ஏரியாக்களைக் குறுக்குவதினால் அன்றாடம் அபிவிருத்தி அடையவும் அவற்றை விஸ்தரித்துக் கொள்ளவும் முடிந்து உள்ளன. மற்றும், ஜனநாயக சீனாவின் மாதிரியாக ஆவதற்கும் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை வெளியே விரட்டுவ

தற்கு நேச நாடுகளோடு ஒருங்கிணைந்த நடவடிக்கையின் ஒரு பிரதான சக்தியாக ஆவதற்கும் மற்றும் சீன மக்களை விடுதலை செய்வதற்கும் முடிந்திருந்தன."[7]

1944 இறுதி வாக்கில், சோவியத் துருப்புகள் ஜெர்மன் பாசிஸ்ட்களின் பிரதான தளமான கிழக்கு பிரஷ்யாவிற்குள் நுழைந்தன; இங்கிருந்துதான் ஜெர்மனி கடந்த சில நூற்றாண்டுகளில், இதர நாடுகளுக்கு எதிராக பல ஆக்கிரமிப்பு யுத்தங்களை ஆரம்பித்திருந்தது.

1945 ஜனவரிக்கும் பிப்ரவரிக்கும் இடையே, எதிரிக்கு எதிரான சோவியத் தாக்குதல் மிகவும் மூர்க்கத்தனமானதாக ஆகி இருந்தது. பால்டிக் கடலில் இருந்து கார்ப்பேரியன் மலைகள் வரையிலும், முழுமையான பாதை நெடுகிலும், சக்தி வாய்ந்த முற்றுகை நடவடிக்கைகள் நடத்தப்பட்டன. இரண்டு மாதங்களுக்குள், சோவியத் ராணுவம் போலந்து முழுவதையும் செக்கோஸ்லோவாக்கியாவின் பெரும் பகுதியையும் விடுதலை செய்து, ஐரோப்பாவில் ஜெர்மனியின் கடைக் கூட்டாளியான ஹங்கேரியைத் தோற்கடித்த பிறகு புடாபெஸ்டை கைப்பற்றி, ஹங்கேரிய மக்கள் தங்களுடைய சொந்த அரசியல் அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கு உதவி செய்தது; கிழக்கு பிரஷ்யாவையும் ஜெர்மன் சைலீஷியாவின் பெரும் பகுதியையும் கைப்பற்றியது; மற்றும் பிராண்டன்பர்க், போமரேனியா, மற்றும் பெர்லின் நகரத்து சுற்றுப்புறங்களுக்கு செல்லும் பாதையையும் திறந்து விட்டது.

இடைக்காலத்தில் பிரிட்டிஷ் துருப்புகளும் அமெரிக்க துருப்புகளும் கூட மேற்கு அரங்கில் தாக்குதல்களை ஆரம்பித்தன. பிரான்ஸின் வழியாக கடந்து சென்று ரைன் நதியைக் கடந்து, அவர்கள் மேற்கு ஜெர்மனியில் நுழைந்து, எல்ப் நதியை நெருங்கினார்கள். ஜெர்மன் துருப்புகளின் பிரதான பலம் இன்னும் கிழக்கு அரங்கில் குவிந்து கிடந்தமையால், அவர்கள் தீவிரமான எதிர்ப்பை எதிர்நோக்கவில்லை. கிழக்கில் இருந்து சோவியத் துருப்புகளும் மேற்கில் இருந்து பிரிட்டிஷ், அமெரிக்க துருப்புகளும் எதிரியின்மீது குவிந்து, ஏப்ரல் 25-ம் தேதியன்று மத்திய ஜெர்மனியில் டோர்காவிற்கு அருகில் இரண்டு படைகளும் ஒன்று சேர்ந்தன; இந்த முறையில் வடக்கில் இருந்த ஜெர்மன் துருப்புகள் தெற்கிலிருந்த ஜெர்மன் துருப்புகளிடமிருந்து துண்டிக்கப்பட்டன.

பாசிச ஜெர்மனியின் இறுதித் தோல்விக்கான நேரம் வந்து விட்டது.

அதனுடைய கடைசி நிமிட-மிகமிக விஷமத்தனமான சூழ்ச்சியைக் கையாண்டு, ஒரு சோவியத் எதிர்ப்புக் கூட்டணிக்காக பிரிட்டிஷ், அமெரிக்க பிற்போக்குவாதிகளோடு ஜெர்மன் ரகசிய-பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருந்தது. ஆனால், சோவியத் ராணுவத்தின் வேகமான முன்னேற்றத்தின் காரணமாக இந்த குற்றத்தன்மை வாய்ந்த திட்டம் உருவாகாமல் போயிற்று.

1945 ஏப்ரலில்,சோவியத் ராணுவம் பெர்லினைப்பிடிப்பதற்கான இயக்கத்தை ஆரம்பித்தது. இந்த இயக்கத்தின் கடைசி போராட்டத்தில், 41,000 துப்பாக்கிகளும் மற்றும் குழி பீரங்கிகளும் குறையாமல் உபயோகிக்கப்பட்டன. பாசிச மிருகத்தை அதனுடயச் சொந்த குகையிலேயே ஒழித்துக் கட்டும்படியும் மற்றும் வெற்றிக் கொடியை பெர்லின் மீது பறக்க விடும்படியும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் ஆயுதபடைகளுக்கு அறைகூவல் விடுத்தது. மே-2இல், சோவியத் ராணுவம் பெர்லினைக் கைப்பற்றி ஹிட்லரின் பாராளுமன்றத்தின்மீது செங்கொடியை ஏற்றி, ஜெர்மன் அதனுடைய தோல்வியை ஏற்றுக்கொண்டு, நிபந்தனையற்ற முறையில் சரணடைந்தது.

ஜெர்மன் சரணாகதிக்கான உடன்பாடு மே7-ல் ரெய்யிம்ஸில் கையெழுத்தாயிற்று. மறுநாள், ஜெர்மன் மேலிடத்தின் பிரதிநிதி பெர்லினில் சோவியத் தலைமை தளபதியின் பிரதிநிதிகளின் முன்னிலையில், இறுதி சரணாகதி அறிக்கையில் கையெழுத்திட்டான். ஜெர்மன் பாசிஸத்தின் மீது சோவியத் மக்களின் முழுமையான வெற்றியின் மாபெரும் நாள் வந்து விட்டது, மே 9-இல், அவருடைய "மக்களுக்கு விடுத்த பிரகடனத்தில்" இனி அந்த நாள் சோவியத் யூனியனுடைய மாபெரும் தேசபக்த யுத்தத்தின் வெற்றி தினமாக கொண்டாடப்படும் என்று ஸ்டாலின் அறிவித்தார்.

இரண்டாவது உலகயுத்தத்தின் ஆரம்பத்தில், மேற்கில் ஜெர்மனியும் கிழக்கில் ஜப்பானும் உலக பாசிசத்தின் இரு பெரும் தளங்களையும் மற்றும் ஆக்கிரமிப்புப் படைகளையும் அமைத்திருந்தார்கள். அவர்கள்தான், இரண்டாவது உலக யுத்தத்தை ஆரம்பித்தவர்கள்; அவர்கள்தான், மனித இன நாகரீகத்தை அழிவின் விளிம்பிற்குக் கொண்டுவந்தார்கள்.

ஹிட்லர் ஜெர்மனியை போலவே, ஏகாதிபத்திய ஜப்பானும் சீனமக்களின், சோவியத் மக்களின், கிழக்கத்திய மக்கள்களின் எதிரியாக இருந்தது; உண்மையில் அனைத்து மனித இனத்தின்

மிகமிக மூர்க்கத்தனமான எதிரியாகவும் இருந்தது.

அதனுடைய ஆக்கிரமிப்பு குற்றத்தன்மை வாய்ந்த திட்டங்களில், சீனாவின்மீதும் சோவியத் யூனியனின்மீதும் படை எடுப்பதை ஜப்பான் அதனுடைய பிரதானக் கடமைகளாக கருதி இருந்தது. சீனாவை வெல்லுவதற்கான அதனுடைய முயற்சி சோவியத் யூனியனின்மீது படை எடுப்பதற்கான ஒரு தயாரிப்பு நடவடிக்கையாக இருந்தது. 1935-இல், ஹசான் ஏரிக்கு அருகாமையில் விலாடிவோஸ்டாக்கில் சோவியத் பிரதேசத்தின் மீது ஜப்பான் நுழைந்தது. 1939-இல், ஜப்பானிய படைகள் மங்கோலிய மக்கள் குடியரசிற்குள் வேகமாக நுழைந்து, கால்சின்-கோல் நதியை நெருங்கியபொழுது, அவர்கள் சோவியத் எல்லையை கடந்து, சைபீரிய ரயில்வேயின் பிரதான பாதையைத் துண்டிக்க முயற்சித்தார்கள். ஆனால், இரண்டு படை எடுப்புகளுமே சோவியத் ராணுவத்தால் முற்றிலும் நசுக்கப்பட்டன. 1943 கோடை காலத்தில், ஸ்டாலின்கிராடு விழுந்துவிடும் பட்சத்தில் சோவியத் யூனியனைத் தாக்குவதற்கு, ஜப்பான் தயாரித்துக் கொண்டிருந்தது. இயல்பாகவே, இந்த திட்டமும் கூட எதுவுமில்லாமல் போயிற்று. 1937-இல் சீனாவுக்கு எதிராக ஜப்பானிய ஆக்கிரமிப்பு யுத்தம் ஆரம்பத்தில் இருந்து, மிகவும் குறிப்பாக பாசிச எதிர்ப்பு யுத்தம் நடைபெற்ற நாலாண்டு காலத்தில், ஜப்பானிடமிருந்து தாக்குதல்கள் வரும் சாத்தியப்பாட்டை எதிர்ப்பார்த்து தூரகிழக்கில் பலமான தற்பாதுகாப்பு படைகளைச் சோவியத் யூனியன் எப்போதுமே வைத்துக் கொண்டிருந்தது.

ஹிட்லருடைய ஜெர்மனியின் படுதோல்விக்கு பிறகு, சோவியத் யூனியனுடைய பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்காகவும், சீன மக்களின் விடுதலை இயக்கத்திற்கு உதவி செய்வதற்காகவும், இந்த கிழக்கத்திய ஆக்கிரமிப்பு தளத்தை ஒழிப்பது கட்டாயமாக இருந்தது.

ஜெர்மனியின் முழுமையான தோல்வியும் அதனுடைய நிபந்தனையற்ற சரணாகதியும் ஜப்பானை முழுமையான தனிமையில் வைத்தது. ஆனால் ஜப்பானிய ஏகாதிபத்தியம், அதனுடைய தலைவிதியை ஒப்புக் கொள்வதற்கு விருப்பமில்லாமல், சீனப் பிரதான பூமியை, எல்லாவற்றிற்கும் முதலாவதாக வடகிழக்குச் சீனாவை அதனுடைய யுத்ததந்திர ரீதியான அடித்தளமாக பயன்படுத்துவதினாலும், மற்றும் வடகிழக்கில் முகாமிட்டிருந்த குவாங்டுங் அதிர்ச்சிப் படைகள் 10,00,000

பேரையும் அதனுடைய பிரதான படையாக பயன்படுத்துவதி னாலும் ஆக்கிரமிப்பு யுத்தத்தை இன்னும் தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பதற்கு கனவு கண்டது.

1945 ஆரம்பத்தில், பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க அரசாங் கங்கள், பசிபிக்கில் ஜப்பானைத் தோற்கடிப்பதற்கு முயற்சிப்ப தில்அவர்கள் எதிர்நோக்கவிருக்கும் கஷ்டங்களை உணர்ந்து கொண்டு, ஜப்பானுக்கு எதிரான யுத்தத்தில், பிரிட்டிஷ் மற்றும் சோவியத் அரசாங்கங்கள் பங்கு கொள்ளப் பற்றி யால்டா மாநாட்டில், சோவியத் யூனியனோடு ஒரு உடன்படிக்கையைச் செய்துகொண்டார்கள். கிழக்கில் யுத்தத்தின் இந்த ஆதாரத்தை ஒழித்துக்கட்டும் பொருட்டும் மற்றும் உலகத்தை மேலும் அழிவினின்றும், தியாகத்தினின்றும் காப்பாற்றும் பொருட்டும் ஜெர்மனி தோற்கடிக்கப்பட்ட மூன்று மாதங்களுக்கு பிறகு, சோவியத் யூனியன் ஜப்பானின் மீது யுத்த பிரகடனம் செய்ய தீர்மானித்தது.

இந்த மாநாட்டில், ரஷ்ய-ஜப்பானிய யுத்தத்தில் ஜப்பான் பிடித்திருந்த சிகாலின் தீவின் தென் பகுதியையும் குரைல் தீவு களையும் ஜப்பான் சோவியத் யூனியனுக்கு திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. ஜப்பானிய ஆக்கிர மிப்புச் சக்திகள் புத்துயிர் பெறுவதைத் தடுப்பதற்கு, சீனாவும் சோவியத் யூனியனும் ஷாங்சுன் ரயில்வேயை அவர்களது கூட்டு நிர்வாகத்தின் கீழ் வைக்க வேண்டுமென்றும் மற்றும் லூசன் துறைமுகத்தை (ஆர்தர் துறைமுகம்) அவர்களது பொதுவான பைசலுக்கு விட்டுவிட வேண்டுமென்றும், மற்றும் டாலியனை (டைரன்) ஒரு சுதந்திர துறைமுகமாக ஆக்க வேண்டுமென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது. இத்தகைய உடன்பாடுகள் ஒரு உடன்படிக்கையில் வரையறுக்கப்படவிருந்தன.

ஆகஸ்டி 14-இல் நட்புறவு மற்றும் கூட்டணி பற்றிய சீன சோவியத் உடன்படிக்கை கையெழுத்தாயிற்று.

உடன்படிக்கையில் கையெழுத்திட்ட இரு சாராரும் இறுதியாக தோற்கடிக்கப்படும் வரையிலும், ஜப்பானை எதிர்த்துப் போராடுவதில் இதர நேச நாடுகளோடு ஒத்துழைப்ப தற்கு இந்த உடன்படிக்கை வகை செய்தது; இவர்களில் எந்த சாராரும் ஜப்பானோடு ஒரு யுத்த நிறுத்த உடன்படிக்கை யையோ அல்லது சமாதான உடன்படிக்கையோ செய்துக் கொள்வதற்கு தனியாக பேச்சு வார்த்தைகள் நடத்தக் கூடாது என்றும் இந்த உடன்படிக்கை வகை செய்தது; மற்றும் மீண்டும் ஜப்பான் தரப்பில் இருந்து வரும் புதுப்பிக்கப்

பட்ட ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு, ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் முடிந்த பிறகு, அவர்கள் கூட்டாக சாத்தியமான சகல நடவடிக்கைகளையும் எடுப்பதற்கும் வகை செய்தது.

மேலும், சாங்சுன் ரயில்வே, டாலியன் மற்றும் லூசன் துறைமுகம் சம்பந்தமாக சீன-சோவியத் உடன்பாடுகளும் இருந்தன. யுத்தத்தில் சோவியத் யூனியன் பங்கெடுத்ததின் காரணமாக, ஒரு கடைசி நேர தற்பாதுகாப்பான ஜப்பானின் திட்டம் முழுமையாக முறியடிக்கப்பட்டது.

**5. சோவியத் யூனியன் ஜப்பான்மீது யுத்த பிரகடனம் செய்தல். விடுவிக்கப்பட்ட ஏரியாக்களில் இருந்து சீன ராணுவம் எதிர்-முன்னேறித் தாக்குதலை ஆரம்பித்தல். ஜப்பானுக்கு எதிரான எதிர்ப்பு யுத்தத்தின் வெற்றி கரமான முடிவு.**

1945 ஆகஸ்டு 8இல், சோவியத் யூனியன் ஜப்பானின் மீது யுத்த பிரகடனம் செய்தது. உலக ரீதியான பாசிச எதிர்ப்பு யுத்தத்தில் பிரதான படையான, தைரியமான சோவியத் செஞ்சேனை வடகிழக்கு சீனாவிற்குள் நான்கு படை பிரிவுகளை வேகமாக அனுப்பி, எதிர் துருப்புகள், ஆழமாக அவர்களது புதிய தற்காப்பு நிலைகளில் அமர்வதற்கு நேரம் கிடைப்பதற்கு முன்பு, எதிரி துருப்புகளின் மீது பாய்ந்து தாக்கின.

இந்த முறையில், ஒரு அடியில், ஜப்பானிய ஏகாதிபத்திய வாதிகள் அவர்களது பிடிவாதமான எதிர்ப்பினைத் தொடர்ந்து, நடத்துவதற்கு முயற்சித்திருந்த சகல யுத்த தந்திர ரீதியான தளங்களும் அழிக்கப்பட்டன. மற்றும் ஜப்பானியர்களின் அதிர்ச்சி குவாங்டுன் படை முழுவதும் செயலற்றதாக்கப் பட்டது.

ஜப்பானுக்கு எதிரான யுத்தத்தில், சோவியத் யூனியனின் பிரதேசம் சீனாவின் எதிர்ப்பு யுத்தத்தில் அதனுடைய கடைசி கட்டத்திற்கு — யுத்த தந்திர ரீதியான எதிர்-முன்னேறித் தாக்குதலின் கட்டத்திற்கு — கொண்டு வந்தது.

ஆகஸ்டு 9இல், சோவியத் யுத்தபிரகடனம் செய்த மறுநாள், தோழர் மாசே-துங் ''ஜப்பானிய படை எடுப்பாளர்களோடு கடைசிச்சுற்று'' என்று தலைப்பிட்ட ஒரு அறிக்கையால், சீனாவில் இருந்த சகல ஜப்பானிய எதிர்ப்பு சக்திகளும் நாடு தழுவிய ஒரு

எதிர்-முன்னேறித் தாக்குதலை ஆரம்பிக்கும் படியும், விடுவிக்கப்பட்ட ஏரியாக்களை விரிவாக்கும் படியும், சோவியத் யூனியன் மற்றும் இதர நேச நாடுகளின் நடவடிக்கைகளோடு நெருக்கமாகவும் சக்தி வாய்ந்த முறையில் ஒருங்கிணைந்தும், எதிரியை எதிர்த்துப் போராடி எதிரியின் கைவசம் இருந்த ஏரியாக்களைக் குறுக்கவும் அறைகூவி அழைத்தார். எதிரியின் செய்திப் போக்குவரத்துப் பாதைகளை உடைத்தெறியவும், ஒழுங்கான ராணுவங்களின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு கொடுக்கவும் மக்களை அணி திரட்டுவதற்கு எதிரி கைப்பற்றி இருந்த ஏரியாக்களின் பின்னணிக்குள், ஆழமாக ஊடுருவி செல்லக் கூடிய ஆயுதமேந்திய ஸ்குவர்டுகளை அமைக்கும் படி அவர் அறை கூவல் விடுத்தார். எதிரி கைப்பற்றி இருத்த ஏரியாக்களில் இருந்த மக்களை உடனடியாக தலை மறைவு படைகளை அமைக்கும் படியும், ஆயுதமேந்திய பேரெழுச்சிகளுக்கு தயார் செய்யும் படியும் மற்றும் வெளியில் இருந்து தாக்கிக் கொண்டிருக்கும் ஒழுங்கான படைகளோடு ஒருங்கிணைந்து நின்று எதிரியை நிர்மூலம் செய்யும் படியும் அவர் அறை கூவல் விடுத்தார். அதே சமயத்தில், உள்நாட்டு யுத்த அபாயத்தை தடுப்பதற்கான அவசியத்தையும் சீன மக்களுக்கு, அறிக்கை மீண்டும் தெரியப்படுத்திற்று.

ஆகஸ்டு 10இல், எதிரியை எதிர்த்து முன்னேறும்படி ஒரு உத்தரவு விடுவிக்கப்பட்டிருந்த ஏரியாக்களில் இருந்த சகல ஆயுதப் படைகளுக்கும் பிரதம சேனாதிபதி சூட்டேயினால் ஒரு உத்தரவு கொடுக்கப்பட்டது. முன்னணியில் இருந்த ஜப்பானிய எதிர்ப்பு ராணுவங்கள் போட்ஸ்டாம் பிரகடனத்திற்கு ஏற்ப, அண்டை ஏரியாக்களில் முகாமிட்டிருந்த ஜப்பானியத் துருப்புகளும் மற்றும் கைக் கூலித் துருப்புகளும் தங்களது ஆயுதங்களைக் கீழே போட வேண்டுமென்றும் சரணாகதி அடைய வேண்டுமென்றும் கோரின; மற்றும் எதிரி கைப்பற்றி இருந்த எல்லா நகரங்களையும், பட்டிணங்களையும் மற்றும் செய்திப் போக்குவரத்துப் பாதைகளையும் எடுத்து கொள்வதற்கு தயார் செய்தன. சோவியத் ராணுவத்தின் மகத்தான போராடும் சக்தியின் காரணமாகவும், துரிதமான முன்னேற்றத்தின் காரணமாகவும், ஜப்பானிய படைகளின் சாரம்சம் என்று கருதப்பட்ட குவாடுங் ராணுவம் துரிதமாக செயலற்றதாக்கப்பட்டது. இது ஜப்பானின் நிபந்தனையற்ற சரணாகதியை ஆகஸ்டு 14இல் கொண்டு வந்தது.

எனினும், ஜப்பானிய சரணாகதிக்கு பிறகு, சியாங்காய் ஷேக், அமெரிக்காவின் ஆதரவோடு, ஸ்தலத்தில் "ஒழுங்கை நிலை நிறுத்துவதற்குத்" தத்தம் நிலைகளில் இருக்கும் படியும், அவர்களைச் சுற்றி வளைத்துக் கொண்டிருந்த சீன மக்கள் விடுதலை சேனைக்கு[8] தொடர்ந்து எதிர்ப்பை கொடுக்கும் படியும் சீன மக்களுக்கு சரணாகதி அடையாமல் இருக்கும் படியும் ஜப்பானிய துருப்புகளுக்கும் கைக் கூலித் துருப்புகளுக்கும் உத்தர விட்டான். எனவே, எதிரியினால் பிடிக்கப்பட்டிருந்த பிரதேசங்களை மீட்பதற்கு, மக்கள் விடுதலை சேனை கடமை பட்டிருப்பதை உணர்ந்தது, எதிரித் துருப்புகளின் சரணாகதியைச் சுதந்திரமாக ஏற்றுக் கொள்வதையும் மற்றும் சரணாகதி அடைய மறுத்தவர்களை நிர்மூலம் செய்வதற்கும் மக்கள் விடுதலை சேனை கடமை உள்ளதாக உணர்ந்தது.

சீன மக்களின் ஒவ்வொரு வெற்றியும் கசப்பானதொரு போராட்டத்திற்குள் வென்றுபெற வேண்டி இருந்தது.

ஹோப்பெய்-ஜிகோல்-லயோனின் ஏரியாவில், மக்கள் விடுதலை சேனை பீகிங்-ஷென்யாங் ரயில்வேப் பாதையின் வழியாக முன்னேறி, சோவியத் ராணுவத்தோடும், வடகிழக்கு ஜப்பானிய எதிர்ப்பு நேச ராணுவத்தோடும், ஒத்துழைத்து வடகிழக்கு சீனாவை விடுதலை செய்தது. ஷான்சி-சகார்-ஹோப்பெய் ஏரியாவில் இருந்த சேனை சகாரை விடுதலை செய்து, பீகிங், டியன்சின் மற்றும் பாவோடிங்கை சுற்றி வளைத்தது. ஷாங்சி-சுய்யுவான் ஏரியாவில் இருந்த விடுதலை சேனை சுய்யுவான் மற்றும் ஷான்சியின் பரந்த பகுதிகளை விடுதலை செய்தது. ஷான்சி - ஹோப்பெய் - ஷான்டுங்-ஹோனான் ஏரியாவின் விடுதலை சேனை மஞ்சள் நதியை ஒட்டி இருந்த பரந்த பிரதேசங்களை விடுதலை செய்தது. ஷாண்டுங் விடுதலை சேனை, அந்த மாகாணத்தின் நூறு கிராமப்புற பிரதேசங்களை விடுதலை செய்தது. மத்திய சீனா விடுதலை சேனை, ஷாங்காய்-ஹாங்சோவ்-நிங்போ, நான்கின், வூ ஹூ, சிக்கியாங்-கியாங்சி மற்றும் ஹூயின்னான் நான் ரயில்வேயின் கிழக்கு பிரிவிலும் இருந்த எதிரியை எதிர்த்துப் போராடி முன்னேறிற்று. தெற்கு சீன ஜப்பானிய எதிர்ப்புப் படைபிரிவு, காண்டன், கோவ்லூன் மற்றும் சாவோசோவ்—சுவட்டோ ரயில்வேக்கள் நெடுகிலும் இருந்த எதிரியைத் தாக்கிற்று.

இரண்டு மாதங்களுக்குள், ஆகஸ்டு 11இல் இருந்து அக்டோபர் 10 வரையிலும், மக்கள் விடுதலை சேனை

1,87,17,000 மக்கள் தொகையைக் கொண்ட 3,15,200 சதுர கிலோமீட்டர் பிரதேசத்தை விடுதலை செய்து, 190 நகரங்களை மீட்டு, 2,30,000யத்திற்கும் அதிகமான எதிரி துருப்புகளையும் கைக்கூலித் துருப்புகளையும் கொன்றது, அல்லது காயப்படுத்தி இருந்தது. இந்த முறையில் விடுதலை பெற்ற ஏரியாக்கள் மிகவும் விரிவாக்கப்பட்டிருந்தன. பெரிய நகரங்கள் மக்கள் விடுதலை சேனையால் முற்றுகையிடப்பட்டிருந்தன; ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சுறுசுறுப்பான தலையீட்டின் காரணமாகவும், கோமிங்டாங்கின் தடையின் காரணமாகவும் அவை அனைத்தையும் விடுதலை செய்து இருந்தது. இப்படிப்பட்ட விசேஷமான சூழ்நிலைமைகளில்,ஜப்பானிய ஆக்கிரமிப்பை எதிர்த்து நடத்தப்பட்ட எதிர்ப்பு யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டது.

ஜப்பானின் சரணாகதி 1945 செப்டம்பர் 2இல் கையெழுத்திடப்பட்டது.

## ஜப்பானை எதிர்த்து நடத்திய எதிர்ப்பு யுத்தம் பற்றிய சுருக்கமான தொகுப்புகள்

"சீன ஜப்பானிய யுத்தம் இருபதாம் நூற்றாண்டின் முப்பதாவது ஆண்டுகளில் இருந்து ஆரம்பமாகும் பத்து ஆண்டுகளில் ஏகாதிபத்திய ஜப்பானுக்கும் மற்றும் அரைக் காலனி, அரைநிலப்பிரபுத்துவ சீனாவிற்கும் இடையே நடைபெற்ற ஜீவமரண யுத்தத்தைக் காட்டிலும் வேறு எதுவுமில்லை"[9]

சீன-ஜப்பானிய யுத்தம். சீனா மக்களுக்கு வெற்றியாகவும் ஜப்பானின் ஏகாதிபத்திய வாதிகளுக்கு தோல்வியாகவும் முடிவடைந்தது.

கஷ்டங்கள், பின்னடைவுகள் இருந்த போதும், சீன மக்களின் ஜப்பானிய எதிர்ப்பு சக்திகள் எதிர்ப்பு யுத்த காலத்தில் வளர்ந்தன. அவை "எழுச்சி, வீழ்ச்சி, மற்றும் மீண்டும் எழுச்சி" ஆகிய மூன்று கட்டங்களின் வழியாக கடந்து சென்றன. ஆக்கிரமிப்பின் மீது இறுதி வெற்றி சீன கம்யூனிஸ்டு கட்சியின் தலைமையின்கீழ் தொழிலாளிவர்க்கம், விவாசாயிகள், குட்டி முதலாளி வர்க்கம், தேசிய முதலாளி வர்க்கம் மற்றும் நிலச்சுவான்தார்கள், தரகு முதலாளிகளின் ஒரு பிரிவினர் ஆகியோரின் ஒன்றுபட்ட முயற்சியினால் வென்று பெறப்பட்டது.

கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் கமிட்டியினாலும் தோழர் மாசே-துங்கினாலும் வரையறுக்கப்பட்டிருந்த சிக்கலான நிலமைகளுக்கு இணக்கமான முறையில் விடுவிக்கப்பட்ட ஏரியாக்களின் கட்சி முழுவதும், ராணுவமும் மக்களும் சரியான அரசியல் பாதைகளையும் பின்பற்றின. ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தை மக்களின் வெற்றியை நோக்கி வழி நடத்தி செல்வ தற்கு, ஐக்கிய முன்னணிக்குள் பாட்டாளி வர்க்கம் அதனுடைய சுதந்திரத்தையும் முன் கை எடுத்தலையும் வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற மார்க்கிய-லெனியை கோட்பாடு பின்பற்றப்பட்டது; மற்றும் முற்போக்கு சக்திகளை அபிவிருத்தி செய்து. நடுவாந்திர பாதை சக்திகளை வென்று பெறுவது, மற்றும் விடாக்கண்ட சக்திகளைத் தனிமைப்படுத்துவது என்ற கொள்கை நடைமுறையில் அமலாக்கப்பட்டது. கொரில்லா யுத்தமுறை, எதிரியின் அணிவரிசைகளுக்குப்பின்னால், சுயேச்சையாகவும் சுதந்திரமாகவும் அபிவிருத்தி செய்யப்பட்டது; அப்படி செய்வதினால் ஜப்பானிய எதிர்ப்பு ஆயுதப் படைகள் வளர்ந்தன; மற்றும் ஜப்பானிய எதிர்ப்புத்தளங்கள் உண்மையாக்கப்பட்டன: இத்தளங்களில், கம்யூனிஸ்ட் தலைமை தாங்கிய ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக அரசாங்கங்கள், மக்களின் நன்மைக்காக அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார சீர்திருத்தங்களை நிறைவேற்றின

இத்தகைய வழிகாட்டுதல்களை நிறைவேற்றியதின் விளைவாக, 1937இல் இருந்தது. 1940 வரையிலும் கட்சி விடுதலை பெற்ற ஏரியாக்களில் இருந்தது. பரந்த ஒரு போர் அரங்கத்தை ஆரம்பித்திருந்தது. அது இந்த முறையில் நெருக்கடியை சமாளித்து, மிதமிஞ்சிய கடினமான ஆண்டுகளான 1941இலும் மற்றும் 1942லும் உறுதியானதொரு அடித்தளத்தை வைத்திருந்தது: அந்தக் கால கட்டத்தில் அது ஜப்பானிய கைக்கூலி மற்றும் கோமிங்டாங் துருப்புகளிடம் இருந்து மூன்று பக்க தாக்குதலின் கீழ் கொண்டு வரப்பட்டிருந்தன.

1943இல் இருந்து பகுதி எதிர்-முன்னேறித் தாக்குதல்கள் துவக்கப்பட்டிருந்ததன. இறுதி முன்னேறித் தாக்குதலுக்காக, எதிரி கைப்பற்றி இருந்த ஏரியாக்களைச் சமநிலைபடுத்திக் கொண்டும், விடுவிக்கப்பட்ட ஏரியாக்களை யுத்த தந்திர ரீதியான அடித்தளங்களாக மாற்றிக் கொண்டும், பகுதியான எதிர் முன்னேறித் தாக்குதல்கள் துவக்கப்பட்டிருந்தன.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் சீன

மக்களால், எதிர்ப்பு யுத்தத்தில் வெற்றிபெறப்பட்டிருந்தது. ஒரு காலனி அல்லது அரைக்காலனி நாடு ஒரு லெனினிய கட்சியினால் வழி நடத்தப்படும் வரையிலும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிற்கு எதிரான் போராட்டத்தில் வெற்றி பெறுவது முற்றிலும் திறமை வாய்ந்ததாக உள்ளது என்பதனை, இது மிகவும் தெளிவாக நிரூபணம் செய்கிறது.

சீன மக்களின் வெற்றி, சோவியத் யூனியன் மற்றும் இதர சர்வதேச புரட்சி சக்திகளின் மாபெரும் உதவியோடும் வென்று பெறப்பட்டிருந்தது.

எதிர்ப்பு யுத்த காலத்தில், சீன மக்களுக்கு சோவியத் யூனியனால் கொடுக்கப்பட்ட அபரிமிதமான உதவியும், மற்றும் சோவியத் செஞ்சேனையால் ஜப்பானிய குவான்டுங் ராணுவம் நிர்மூலம் செய்யப்பட்டதும், அவர்களது எதிரியின் மீது சீன மக்களுக்கு கிடைத்த வெற்றிக்கு பிரம்மாண்டமான அளவில் பங்காற்றி இருந்தது. சீனாவிற்கு அதனுடைய கஷ்டமான நாட்களில், சோவியத் யூனியனுடைய மக்களும் அரசாங்கமும் வைத்திருந்த மாபெரும் நட்புறவு, சீன மக்களின் புரட்சியை வெற்றிக்குக் கொண்டு வருவதில் கருவியாக இருந்ததென்பது நிரூபிக்கப்பட்டது.

சீன மக்களுக்கும் சோவியத் மக்களுக்கும் இடையே இருந்த நட்புறவு, கூட்டணி மற்றும் பரஸ்பர உதவி, தூரகிழக்கில் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிற்கு எதிரான கொத்தளமாக உள்ளது.

## அடிக்குறிப்புகள்

1. மாசே-துங், முன்னால் குறிப்பிட்ட நூல், பாகம். 4. பக்கம். 329.
2. முன்னால் குறிப்பிட்ட நூல்.
3. முன்னால் குறிப்பிட்ட நூல்.
4. முன்னால் குறிப்பிட்ட நூல்; பக்கம் 316.
5. மேலே குறிப்பிட்ட நூல்; பக்கம் 313.
6. மேலே குறிப்பிட்ட நூல்; பக்கம் 284.
7. மேலே குறிப்பிட்ட நூல்; பக்கம் 260.
8. எட்டாவது வழி சேனை, புதிய நான்காவது சேனை மற்றும் இதர ஜப்பானிய எதிர்ப்பு மக்களின் ஆயுதப் படைகளால் உண்டாக்கப்பட்டது.
9. மாசே-துங், மேலே குறிப்பிட்ட நூல்; பாகம். 2. பக்கம் 167,

அத்தியாயம் பதினொன்று

# ஜப்பானியர்களின் சரணாகதிக்குப் பிறகு உள்நாட்டு சமாதானத்திற்காகவும் ஜனநாயகத்திற்காகவும் சீன மக்களின் போராட்டம்.

*(செப்டம்பர் 1945—ஜூன் 1946)*

## 1. இரண்டாவது உலக யுத்தத்திற்கு பிறகு சர்வதேச நிலைமை

1945 செப்டம்பர் 2இல் ஜப்பானின் நிபந்தனையற்ற சரணாகதி ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கு எதிரான சீனாவின் எதிர்ப்பு யுத்தத்தின் முடிவையும் இரண்டாவது உலக யுத்தத்தின் முடிவையும் குறித்தது; சீனாவிற்கும் உலகத்தின் இதர பகுதிகளுக்கும் இது புதியதொரு சகாப்தத்தை அறிமுகப்படுத்திற்று.

உலக நிலைமையில் மாபெரும் மாற்றங்கள் நடைபெற்றன. ஒரு புறத்தில், ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் தோற்கடிக்கப்பட்டிருந்தன; பிரிட்டனும், பிரான்சும் பலவீனப்படுத்தப்பட்டிருந்தன; மற்றும் ஏகாதிபத்திய முகாம் முழுவதிலும் அமெரிக்கா மேலாதிக்கம் பெற்றிருந்தது. மறு புறத்தில், சோவியத் யூனியன், பாசிச எதிர்ப்பு யுத்தத்தில் மகத்தானதொரு வெற்றியைப் பெற்று, முன் எப்போதைக் காட்டிலும் மிகவும் அதிக பலம் வாய்ந்ததாக மாறி இருந்தது; ஐரோப்பாவில், பல மக்கள் ஜனநாயக நாடுகள் தோன்றின. அவை முதலாளித்துவ அமைப்பிலிருந்து முறித்துக் கொண்டு, சோவியத் யூனியனோடு ஒரு ஒன்றுபட்ட சக்தி வாய்ந்த சோஷலிஸ்ட் முகாமை அமைத்தன; காலனி நாடுகளிலும் சார்பு நாடுகளிலும் தேசிய விடுதலை இயக்கங்கள் புதியதொரு உச்சியை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்தன. முதலாளித்துவ உலகம் முழுவதற்கும் கடுமையானதொரு அடி கொடுக்கப்பட்டிருந்தது; சோஷலிஸ்ட் முகாமிற்கும் முதலாளித்துவ முகாமிற்கும் இடையே இருந்த பலத்தின் மிச்சத்தில், சோஷலிஸ்ட் முகாமிற்கு சாதகமாக பிரம்மாண்டமான ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்தது. சுருக்கமாக சொன்னால், யுத்த பிற்கால கட்டத்தில் உலக முதலாளித்துவம் மேலும் பலவீனமடைந்து சோஷலிஸம் படிப்படியாக பலப்பட்டிருந்தது. நிலைமை

முழுவதும் பிற்போக்கு சக்திகளுக்கு பாதகமாக இருந்தது; ஆனால் உலக மக்களுக்கு சாதகமாக இருந்தது.

1929-இல், உலகத்திலுள்ள நாடுகளில் தொழில் உற்பத்தி 100 என்று வைத்துக் கொண்டால், முதலாளித்துவ நாடுகளில் சராசரி உற்பத்தி 1946இல் 107 ஆகவும் 1949-இல் 130 ஆகவும் இருந்தது. அமெரிக்காவில் 1946-ஆம் ஆண்டின் உற்பத்தி 153 ஆக இருந்தது; பிரிட்டனுடைய உற்பத்தி 118 ஆக இருந்தது; பிரான்சினுடைய உற்பத்தி 63 ஆக இருந்தது; இத்தாலியினுடைய உற்பத்தி 72 ஆக இருந்தது; மேற்கு ஜெர்மனியின் உற்பத்தி 35 ஆக இருந்தது; மற்றும் ஜப்பானின் உற்பத்தி 51 ஆக இருந்தது. 1929-லிருந்து 1946 வரையிலும் 17 ஆண்டுகளில் முதலாளித்துவ நாடுகளின் தொழில் உற்பத்தி உலகப் பொருளாதார நெருக்கத்துக்கு முன்பு இருந்த அதே மட்டத்திலேயே கிட்டத்தட்ட இருந்தது. அமெரிக்கா மட்டுமே, கணிசமான அதிகரிப்பைக் காட்டிற்று; ஆனால் யுத்த காலத்தில், ராணுவத் தொழில்களில் வெறித்தனமான விஸ்தரிப்பின் விளைவாக இது ஏற்பட்டிருந்தது. பிரிட்டனுடைய அதிகரிப்பு, மிகவும் சிறிதாகவே இருந்தது. அதே சமயத்தில் பிரான்சின் உற்பத்தி 37 சதவீதம் விழுந்து விட்டது. 3 தோற்கடிக்கப்பட்ட நாடுகளும் பொதுவானதொரு குறைப்பினைக் காட்டின. இத்தாலி 28 சதவீத குறைப்பையும், மேற்கு ஜெர்மனு 65 சதவீத குறைப்பையும் மற்றும் ஜப்பான் 49 சதவீத குறைப்பினையும் காட்டின. ஆனால் 1946-இல், சோவியத் யூனியனுடைய மொத்த தொழில் உற்பத்தி 466ஐ எட்டிப் பிடித்திருந்தது. அந்த நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு யுத்தத்தினால் கடுமையான சேதம் ஏற்பட்டிருந்த பொழுதிலும், இவ்வளவு பெரிய அதிகரிப்பை எட்டிப் பிடித்திருந்தது.

2ஆவது உலக யுத்த காலத்திலும் அதற்கும் பிறகும் அதனுடைய பொருளாதார நிலைமையைக் கெட்டிப்படுத்துவதற்கும் மற்றவர்களின் செலவில் நெருக்கடியை உதறித் தள்ளுவதற்கும் ஒவ்வொரு ஏகாதிபத்திய அரசினாலும் செய்யப்பட்ட முயற்சிகள் பயனற்றுப் போயின.

பல்வேறு முதலாளித்துவ நாடுகளின் மீது யுத்தத்தால் உண்டாக்கப்பட்டிருந்த பல்வேறு விளைவுகள் அவற்றின் பொருளாதார உறவுகளில் முக்கியமான மாற்றங்களுக்கு வழிநடத்திச் சென்றன. ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் பொருளாதாரம் கடுமையான பாதிப்புகளுக்குள்ளாகியிருந்தன. பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் பொருளா

தாரம் மாபெரும் நஷ்டங்களுக்குள்ளாகியிருந்தன. அமெரிக்கா மட்டுமே யுத்தத்திலிருந்து பிரம்மாண்டமானதொரு லாபத்தைச் சம்பாதித்திருந்தது. யுத்தம் முடிந்தபிறகு உலகச் சந்தையில் அவர்களுடைய செல்வாக்கினை பரப்பும் பொருட்டு, அமெரிக்க ஏகபோக முதலாளிகள் தங்களுடைய போட்டியாளர்களின் திவாலாத் தன்மை அல்லது வீழ்ச்சியைப் பயன்படுத்திக்கொண்டு, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் காலனிச் சந்தைகளின் ஒரு பெரும் பகுதியையும், "மார்ஷல் திட்டம்" என்று அழைக்கப்பட்ட திட்டத்தின் மூலம் முதலாளித்துவ உலகத்தின் சந்தைகளையும் கைப்பற்றிற்று. அமெரிக்காவிலிருந்து இத்தகைய நாடுகள் பெற்ற உதவியால், 16 சதவிகிதம் மட்டுமே யுத்தத்திற்கு பிறகு அவர்களுக்கு அவசரமாக தேவைப்பட்ட தொழில் கருவிகளாக இருந்தது; அந்த உதவியால் மிகமிகப் பெரிய பகுதி உபரியான உணவுப் பொருட்களாகவும் மற்றும் நிலக்கரி, மாவு, மற்றும் பருத்தி துணிகள் ஆக இருந்தது. 1949-இலிருந்து, மேற்கு ஐரோப்பாவுக்கு அமெரிக்கா செய்த உதவி பொருளாதார தன்மையுடையதாக இருந்ததைக் காட்டிலும் ஒரு ராணுவத் தன்மைக் கொண்டதாக இருந்தது.

பெருமளவில் அமெரிக்காவின் சரக்குகளைக் குவித்ததின் மூலமும் மற்றும் அதனுடையச் சொந்த சந்தைக்குள் அன்னிய சரக்குகள் வருவதை தடுத்ததன் மூலமும் முதலாளித்துவ உலகச் சந்தையைச் சீர்குலைத்து. அமெரிக்கா அதனுடைய ஏற்றுமதிகளை அதிகரித்தது. மேலும் உணவுப் பொருட்களுக்கும் மூலப் பொருட்களுக்கும் பரிவர்த்தனையாக கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு இயந்திரத் தொழில் உற்பத்தி பொருட்களை மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஏற்றுமதி செய்வதையும் அமெரிக்கா தடுத்தது.

அமெரிக்காவின் தரப்பில் கையாளப்பட்ட இப்படிப்பட்டதொரு எதேச்சாதிகாரமான கொள்கை பிரிட்டன், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளோடு இருந்த அதனுடைய முரண்பாடுகளைத் தீவிரமடையச் செய்வதற்கு வழி நடத்திச் சென்றது. அதன் விளைவாக முதலாளித்துவ பொருளாதார அமைப்பு யுத்தத்திற்கு முன்பிருந்ததைக் காட்டிலும் மிக அதிகமாக குழப்பமானதாகவும், ஸ்திரமற்றதாகவும் ஆகி இருந்தது.

முதலாளித்துவ நாடுகளில் தொழில் உற்பத்தியில் ஏற்பட்டிருந்த சிறு வளர்ச்சி, யுத்த தயாரிப்புகளின் காரணமாக ஏற்பட்

டிருந்தது. அமெரிக்காவும், மேற்கு ஐரோப்பிய நாடுகளும் அவற்றின் பொருளாதாரத்தை ஒரு யுத்த அடிப்படையில் வைத்திருந்தன. ஆயுத தளவாட விரிவாக்குவதற்கான செலவு அந்நாடுகளின் அரசு வரவு-செலவு கணக்குகளில் அதிகமான தொரு பெரும் விகிதாச்சாரத்தை வகித்திருந்தன. அந்நாடுகளின் பிரதான தொழில் பிரிவுகளில், ராணுவ தளவாடங்களின் சேகரிப்புக்கான உத்தரவுகள் தீர்மானமானதொரு பாத்திரத்தை வகித்தன. ராணுவ செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு இயல்பாகவே கடுமையான வரிப் பளுவையும் படிப்படியாக நாணயத்தின் தேய்மானத்தையும் உண்டாக்கின. யுத்த தயாரிப்பின் ஊக்குவிப்பிலிருந்தும நாணயத்தின் பணவீக்க ஊக்குவிப்பிலிருந்தும் ஏற்பட்ட ஒரு குறுகிய கால பொருளாதார ஏற்றத்தைப் பின்தொடர்ந்து நுகர்வோர் பொருள்களின்உற்பத்தியில் கூர்மையானதொரு குறைவு ஏற்பட்டிருந்தது; ஏனெனில், உற்பத்தி செய்யப்பட்டிருந்த பொருட்களில் ராணுவ சப்ளைகளாக மாற்றப்பட்டிருந்தன, அல்லது யுத்த தந்திரரீதியான பொருட்களாகக் குவித்து வைக்கப்பட்டிருந்தன. ராணுவ உற்பத்தியின் பெருக்கம் கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்கானப் பாதையைச் செப்பனிடுவதற்கு மட்டுமே பயன் பட்டன.

2-ஆவது உலக யுத்தத்தின் விளைவு, ஏகாதிபத்திய அரசுகளுக்கு ஒரு மாபெரும் ஏமாற்றமாக இருந்தது. எனவே, யுத்தம் முடிந்தவுடனேயே, அமெரிக்க பிற்போக்காளர்களால் தலைமை தாங்கப்பட்ட ஏகாதிபத்திய முகாம் புதியதொரு யுத்தத்திற்கான தயாரிப்பை நடத்துவதற்கு ஆரம்பித்தன. சமாதான பூர்வமான வழிகளின் மூலம், உலக மேலாதிக்கத்தைப் பெற முடியாது என்பது அமெரிக்க ஆளும் கும்பலுக்கு நன்றாகத் தெரியும்; மற்றும் மற்றொரு யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடமால் உலகம் முழுவதையும் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற அவர்களது நம்பிக்கையும் இதர எல்லா நாடுகளையும் வெல்ல வேண்டும் என்ற அவர்களது நம்பிக்கையும் நிறைவேறாமல் போய்விடும் என்பதும் அமெரிக்க ஆளும் கும்பலுக்கு மிகவும் நன்றாகத் தெரியும். எனவே, அவர்கள், புதியதொரு யுத்தத்திற்கான காச்சல் வேக தயாரிப்புகளைச்செய்தார்கள். புதியதொரு யுத்தத்திற்கான பிரதான எதிரியாகவும் சமாதானத்தின் பிரதான கொத்தளமாகவும் சோவியத் யூனியன் எப்பொழுதுமே இருந்து வந்தமையால், தங்களுடைய தாக்குதலின் கூட்டி முனை சோவியத் யூனியனுக்கெதிராகவும் இதர சமாதானத்தை விரும்பும் நாடுகளுக்கு எதி

ராகவும் திசை திருப்பப்பட வேண்டுமென்று அமெரிக்க ஆளும் கும்பல் இயற்கையாகவே முடிவு செய்திருந்தது. அதனால் தான் யுத்தத்திற்கு பிறகு அமெரிக்கா 'நேட்டோ'வை அமைத்தது. சோவியத் யூனியனைச் சுற்றிலும் ராணுவ தளங்களை ஸ்தாபித்தது. மேற்கு ஜெர்மனியையும் ஜப்பானையும் மீண்டும் ஆயுத பாணியாக்க செய்தது. தன்னுடைய சொந்த ஆயுத தளவாடங்களைப் பெருக்கியது. மற்றும் ஒரு சமாதான உடன்படிக்கைக்கான ஆலோசனையையும் நிராகரித்தது.

"கம்யூனிசத்தை எதிர்த்துப் போராடுவது" என்ற போர்வையின்கீழ், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் மேற்கு ஜெர்மனி, ஜப்பான் மற்றும் பிரிட்டன், பிரான்சு ஆகிய நாடுகள் உட்பட இதர நாடுகளின் பிரதேசங்களையும் ஆயுதப் படைகளையும் பயன்படுத்துவதில் தங்களுடைய யுத்தத் திட்டங்களை அடிப்படையாக கொண்டிருந்தார்கள். நேட்டோ கூட்டணி நாடுகளையும் மற்றும் இரண்டாவது உலக யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டிருந்த தேசங்களையும் இணைக்கும் யுத்த தயாரிப்புகள் சம்பந்தமாக அமெரிக்க ஆளும் கும்பல், சில ஒழுங்கு முறைகளைத் தயாரித்திருந்தது. அந்த நாடுகளின் சொந்த தேசிய நலன்களுக்கு பாதகமான முறையில், அமெரிக்க ஏகாதிபத்தியக் கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு அந்த நாடுகளை, கருவிகளாக பயன்படுத்துவதற்கு அமெரிக்க ஆளும் கும்பல் சில ஒழுங்கு விதிகளைத் தயாரித்திருந்தது.

இந்த முறையில் பிரிட்டனையும் பிரான்ஸையும் சார்பு நாடுகளாக மாற்றுவதிலும் அந்நாடுகளின் காலனிகளை அவர்களிடமிருந்து பறிப்பதிலும், கைப்பற்றியிருக்கும் அமைப்பைப் பயன்படுத்திக் கொண்டு மேற்கு ஜெர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் பொருளாதாரத்தை முழுமையாக கழுத்தை நெறிப்பதிலும், மற்றும் அந்த நாடுகளின் அயல் நாட்டுக் கொள்கைகளையும் உள் நாட்டுக் கொள்கைகளையும் கட்டுப்படுத்துவதினாலும் அமெரிக்கா இத்தகைய நாடுகளின் மக்களின் தரப்பில் தீவிரமான அமெரிக்க எதிர்ப்புப்போராட்டங்களைத் தூண்டிவிடுவது என்பது எதிர்பார்க்கப்படக்கூடியதாக மட்டுமே இருந்தது.

ஒரு புதிய யுத்த பயமுறுத்தல், சகல நாடுகளிலுமுள்ள மக்களை, சமாதான இயக்கத்திற்குள் செல்லும்படி கட்டாயப் படுத்திற்று. யுத்த பிற்காலக் கட்டத்தில் சமாதான இயக்கம் யுத்தத்தை எதிர்ப்பதிலும் சமாதானப் பாதுகாவலர்களின் அமைப்புகளைப் பலப்படுத்துவதையும் சமாதானத்தைப் பாது

காத்து ஒரு புதிய யுத்தத்தைத் தவிர்க்கும் பொருட்டு யுத்தத்திற்கு தூபம் போடுபவர்களின் சூழ்ச்சிகளை அம்பலப்படுத்துவதையும் பரந்துபட்ட வெகு ஜனங்களின் உற்சாகத்தை உயர்த்துவதையும் குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

2-ஆவது உலக யுத்தத்தில் ஜெர்மனி இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய மூன்று ஏகாதிபத்திய அரசுகளின் தோல்வி அவற்றின் ராணுவ மயமாக்கப்பட்ட பொருளாதாரத்திலிருந்து தோன்றிக் கொண்டிருந்த யுத்த பிற்கால ஆண்டுகளின் கடுமையான பளுவைக் காலனிகளுக்கு மாற்றுவதற்கு பிரிட்டன் மற்றும் பிரான்சு போன்ற இப்படிப்பட்ட காலனி ஆதிக்க நாடுகள் செய்த முயற்சிகள் மற்றும் அமெரிக்காவின் விஸ்தரிப்புக் கொள்கை, காலனிகளுக்குள் அமெரிக்காவின் ஊடுருவல் மற்றும் அவற்றில் பல காலனிகளில், அமெரிக்கா அதனுடைய ராணுவ தளங்களை நிலைநாட்டியது. மற்றும் நூற்றாண்டு காலமாக நடைபெற்ற ஏகாதிபத்திய மற்றும் பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறை, சுரண்டல் ஆகியவற்றின் விளைவாக காலனிகளின் பொருளாதாரத்தில், ஏற்பட்டிருந்த கூடுதலான சீரழிவு இவை அனைத்தும் காலனி அமைப்பில், ஒரு நெருக்கடியை உண்டாக்கி தேசிய விடுதலை இயக்கங்களின் எழுச்சியை வேகப்படுத்திற்று. அதிகரித்துக் கொண்டிருந்த உறுதியோடு, காலனி மக்கள் அவர்களது ஏகாதிபத்திய அடிமை எஜமானர்களை எதிர்த்தார்கள். உதாரணமாக, கொரியா மற்றும் வியத்நாம் மக்கள்கள், அவர்களது விடுதலையை வென்று பெற்றார்கள்; இந்தியா பர்மா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகள் சுதந்திரத்தைப் பெற்றன. யுத்தத்திற்கு பிறகு தேசிய விடுதலை இயக்கங்கள் பரவியதோடு ஏகாதிபத்திய அரசுகள் பின்னணித் தளங்களின் இருந்து கடுமையாக பயமுறுத்தப்பட்டிருந்தன.

சோவியத் யூனியன் முன்பின் முரணற்றதொரு சமாதானக் கொள்கையையும் சர்வதேச நட்புறவு கொள்கையையும் பின்பற்றி வந்தது. சமாதான லட்சியத்தைப் பாதுகாக்கவும் ஆக்கிரமிப்பு யுத்தங்களை எதிர்க்கவும் மற்றும் இதர நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் எந்த விதமான தலையீட்டையும் எதிர்க்கவும் அது சலியாத முயற்சிகளைச் செய்தது. யுத்தத்திற்கு பிறகு அது கையாண்ட பல உறுப்படியான நடவடிக்கைகளில் அதனுடைய ஆயுதப்படைகளைக் கடுமையாகக் குறைத்தது. சீனா கொரியா, செக்கோஸ்லோவாகியா மற்றும் யூகோஸ்லோவியா ஆகிய பிரதேசங்களில் இருந்து சாத்தியமான அளவிற்கு மிகமிக

குறுகிய காலத்தில், செஞ்சேனை வாய்ப்பைப் பெற்றது. சமாதான பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றியது. மற்றும் சர்வதேச தகராறுகளின் சமாதானப் பூர்வமான தீர்விற்கான ஆலோசனைகளைத் திரும்பத் திரும்ப முன்வைத்தது ஆகியவையும்அடங்கும்.

சமாதானத்தைப் பாதுகாப்பதில், சோவியத் யூனியன் அமெரிக்காவோடும், பிரிட்டன் மற்றும் பிரான்ஸோடும் ஒத்துழைப்பதற்கு விரும்பிக் கொண்டிருந்தது. ஜெர்மனி இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய தோற்கடிக்கப்பட்ட நாடுகளில் மக்களின்பால் எந்த விதமான பழிவாங்கும் போக்கினையும் எடுப்பதை அது எதிர்த்தது. நிபந்தனையற்றச் சரணாகதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்த அந்த நாடுகள், சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் அனுபவிப்பதையும், அவற்றின் சிவில் தொழிலையும், விவசாயத்தையும் அபிவிருத்தி செய்வதையும், அந்நாடுகளின் சரக்குகளை அந்நிய நாட்டு சந்தையில் விற்பதையும், மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு அவசியமான ஆயுதப் படைகளை ஏற்பாடு செய்வதையும் சாத்தியமாகும்படி செய்வது அதனுடையக் கொள்கையாக இருந்தது.

அதே சமயத்தில், உயர்வானதொரு கண்காணிப்பையும் வைத்துக் கொண்டு, சமாதானத்தின் விரோதிகளை தலைமறைவான நடவடிக்கைகளை பொருத்தமான சமயத்தில் அம்பலப்படுத்தியும் வந்தது. எந்தவிதமான ஆக்கிரமிப்பு தாக்குதல் ஏற்பாடும் சமயத்தில் முற்றிலும் தயாராக இருக்கும் பொருட்டு, அது தன்னுடைய தேசியப் பாதுகாப்பையும் பலபடுத்திற்று.

யுத்தம் முடிந்தவுடன் பல மக்கள் ஜனநாயக நாடுகள் தோன்றின. அவை முதலாளித்துவ அமைப்பை முறித்துக் கொண்டு, சோவியத் யூனியனோடு ஒரு சோஷலிச முகாம் அமைத்தது. இந்த முறையில், சோஷலிசம் ஒரு தேசத்தின் எல்லைகளைத் தாண்டி ஒரு உலக அமைப்பாக மாறிற்து. மக்கள் ஜனநாயக நாடுகளோடு அதனுடைய நட்புறவுகளைப் பலப்படுத்துவதில், சோவியத் யூனியனுக்கு உன்னதமான சர்வதேசக் கடமையாக இருந்தது.

தொகுத்துக் கூறுவதென்றால், இரண்டாவது உலக யுத்தத்தில் சோவியத் யூனியனுக்குக் கிடைத்த மாபெருப் வெற்றி, ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய மூன்று பாசிஸ்டு

நாடுகளின் தோல்வி, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் பலகீனமடைதல், அமெரிக்க ஏகாதிபத்தியம் தனிமைப் படுத்தப் படுதல், கிழக்கு ஐரோப்பாவில் மக்கள் ஜனநாயக நாடுகளின் உதயம், காலனி நாடுகளில் தேசிய விடுதலை இயக்கங்களின் எழுச்சி மற்றும் உலகின் எல்லா நாடுகளிலும் சமாதான இயக்கத்தின் விஸ்தரிப்பு—இவை அனைத்தும் சீன மக்கள் புரட்சியின் வெற்றிற்கு பங்காற்றிய சர்வதேச நிலைமையின் முக்கியமான அம்சங்களாக இருந்தன. ஆகவே, யுத்த பிற்கால சர்வதேச நிலைமை அமெரிக்க தலையிட்டாளர்களுக்கு எதிராகவும் சீன பிற்போககுவாதிகளுக்கு எதிராகவும் சீன மக்கள் நடத்திய அவர்களது போராட்டத்தில், சீன மக்களுக்குச் சாதகமாக இருந்தது.

## 2. ஒரு புதிய உள்நாட்டு யுத்தப் பயமுறுத்தல்.

1945 ஆகஸ்ட் 14இல், ஜப்பானிய அரசாங்கம் அதனுடைய நிபந்தனயற்ற சரணாகதியை அறிவித்தபோது, ஏனானில் இருந்த மக்கள் விடுதலை சேனையின் பொதுத் தலைமை காரியாலயம் ஒரு திட்டவட்டமான கால வரம்பிற்குள் எதிரியின் கைக்கூலி படைகளும் சரணடைய வேண்டுமென்று கோரி அவர்களுக்கு உடனடியான உத்திரவுகளைக் கொடுத்தது. அதே சமயத்தில், வடசீனாவிலும் மத்திய சீனாவிலும் இருந்த மக்கள் விடுதலை சேனை துரிதமாக முன்னேறும் படியும், எதிரியையும் கைக் கூலி படைகளையும் நிராயுதபாணிகளாக செய்து அவர்களது சரணாகதியை ஒப்புக் கொள்ளும் படியும் உத்தரவுகள் கொடுக்கப்பட்டன. மக்கள் விடுதலை சேனை பிரதான ஜப்பானிய எதிர்ப்புப் படையாக இருந்தமையாலும் மற்றும் மக்கள் உண்மையான வெற்றியாளர்களாக இருந்தமையாலும், இந்த நடவடிக்கையை எடுப்பதற்கு ஒவ்வொரு காரணமும் இருந்தது.

கோமிங்டாங் துருப்புகள் வடமேற்கு, தென்மேற்கு சீனாவில் வெகு தொலைவில் இருந்தன. வடக்கு, மத்திய மற்றும் வடகிழக்கு சீனாவிலும் முழுக்க முழுக்க மக்களின் துருப்புகளால், எதிரியைச் சுற்றி வளைத்துக் கொண்டும், தாக்கிக் கொண்டும் இருந்தன. மக்களின் கரங்களில் இருந்து வெற்றிக் கனிகளை பறிப்பதற்கு, ''தளத்திலேயே உத்தரவுக்களுக்காக காத்திருக்கும் படி'' மக்கள் விடுதலை சேனையின் பல்வேறு

பிரிவுகளுக்கு சியாங்காய்-ஷேக் ''உத்தரவிட்டான்''. மற்றும் எதிரிக்கும் கைக்கூலி படைகளுக்கும் ஏனான் தலைமைக் காரியா லயத்தால் கொடுக்கப்பட்ட உத்தரவுகளை ''ஒரு முரட்டுத் தன மான சட்ட விரோதமான செயல்'' என்று அப்பட்டமாக அவ தூறு செய்தான். மக்கள் விடுதலை சேனையினை ''மக்களின் எதிரி'' என்று அழைக்கும் அளவிற்கு கூட அவன் போனான்; ''ராணுவக் கட்டுப்பாட்டை அமல் நடத்தப் போவதாகவும்'' அவன் பயமுறுத்தினான். ஒரு பகிரங்கமான உள்நாட்டு யுத்தத்தைத் துவக்குவதற்கு கோமிங்டாங்கிற்கு இருந்த எண்ணத்திற்கு, இது ஒரு தவறாக கருதப்பட முடியாத ஒரு அடையாளமாக இருந்தது.

''ராணுவ நடவடிக்கைகளை வேகப்படுத்தும் படியும்,'' மற்றும் ''தீவிரமாக முன்னேறிச் செல்லும் படியும் அவனது சொந்த படைகளுக்கு சியாங்கை-ஷேக்கினால் ஒரு உத்தரவு கொடுக்கப்பட்டது. ஆனால் கோமிங்டாங் படைகள் தென் மேற்கிலும், வடமேற்கிலும் இன்னும் தொலைவிலேயே இருந் தமையால். ''ஸ்தல ஒழுங்கை பாதுகாக்கும் படியும் மக்களை பாதுகாக்கும் படியும்,'' அவன் எதிரிப் படைகளுக்கும் கைக்கூலி படைகளுக்கும் உத்தரவிட்டான். அவன் உண்மையிலேயே செய்ய நினைத்தது என்னவென்றால் நிலப்பிரபுத்துவ, தரகு முதலாளித்துவ மற்றும் பாசிச ஆட்சியின் ''ஒழுங்கினை'' நிலை நாட்டுவதும் மற்றும், துரோகிகள் ஒத்துழைப்புவாதிகள் ஆகி யோரின் ''நலன்களை'' பாதுகாப்பதுமாக இருந்தது.

1945 ஆகஸ்டு 15இல், ஜப்பானிய பிரதம தளபதி ஒக்காமுரா நெய்ஜிசி, சியாங்கை-ஷேக்கிற்கு தந்தி கொடுத்தான். அத்தந்தி யில் ஜப்பானிய துருப்புகள் நான்கிங்கில் இருந்து வெளியேறிக் கொண்டிருந்தன என்றும் அவன் வந்து சேருவதற்கு முன்பு ஒழுங்கை பராமரிப்பதற்கு, ''படையின் ஒரு சிறு பகுதியை'' விட்டுச் செல்வதாகவும் கூறி இருந்தது. இதை போலவே, கோமிங்டாங் அரசாங்கம் நான்கிங்கிற்கு திரும்பும் வரையிலும், அவர்கள் ''ஸ்தல ஒழுங்கைப் பராமரிப்பார்கள்'' என்றும், ''நான்கிங் கைக்கூலிகள் பகிரங்கமானதொரு அறிக்கையை வெளி யிட்டார்கள். பீகிங்கில் இருந்த துரோகிகள் சியாங்கை-ஷேக்கின் உத்தரவுகளை நிறைவேற்றுவதற்கு, ''அமைதியை பராமரிப்பதற்கான கமிட்டியை'' அமைத்தார்கள்.

மக்கள் விடுதலை சேனையால் கைப்பற்றப்பட்டிருந்த ஏரியாக்கள் சம்பந்தமாக, ''அவற்றை மீட்டு, நம்முடைய(சியாங்

னுடைய) துருப்புகளிடம் திருப்பிக் கொடுக்கும்படி'' எதிரி துருப்புகளுக்கும், கைக்கூலித் துருப்புகளுக்கும் சியாங்கை-ஷேக் உத்தரவிட்டான். சரணாகதி அடைந்திருந்த ஜப்பானிய துருப்புகளை உடனடியாக ஆயுதங்களைப் பறிப்பதற்கு பதிலாக, விடுவிக்கப்பட்டிருந்த ஏரியாக்களில் இருந்த மக்களையும் துருப்பு களையும் தாக்கும்படி சியாங் அவர்களுக்கு உத்தரவுகளைக் கொடுத்தான். அந்த ஏரியாக்களை எதிரி துருப்புகளும் கைக் கூலி துருப்புகளும் தாக்கிய பொழுது, அவர்கள், ''பெறப்பட்ட உத்தரவுகளின்படி செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள்'' என்று அவர்கள் கூறினார்கள். அதாவது, சியாங்கிடம் இருந்து பெறப் பட்ட உத்தரவுகளை அவர்கள் அர்த்தப் படுத்தினார்கள்.

கோமிங்டாங் துருப்புகளால் கைப்பற்றப்பட்டிருந்த ஏரியாக் களில் 6% ஜப்பானிய துருப்புகள் மட்டுமே ஆயுதமற்றவர்களாக செய்யப் பட்டிருந்தார்கள். கைக்கூலி துருப்புகள் சம்மந்தப் பட்ட மட்டில், அவர்கள் அவர்களது ஆயுதங்களை வைத்து கொள்ளும்படி அனுமதிக்கப்பட்டிருந்தார்கள் என்பதோடு மட்டுமன்றி, அவர்கள் ''தேசிய ராணுவத்தின்'' (1) படை பிரிவு களாகவும்கூட பெயர் சூட்டப்பட்டிருந்தார்கள். இந்த முறை யில், ஜப்பானிய துருப்புகளும் கைக்கூலித் துருப்புகளும் கோமிங் டாங் துருப்புகளாக மாற்றப்பட்டிருந்தார்கள்.

சீனாவை வெல்ல வேண்டுமென்ற அதனுடைய நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு, அமெரிக்கா ஒரு உள்நாட்டு யுத்தத் திற்கான ஆயுத தளவாடங்களைக் கோமிங்டாங்கிற்குச் சப்ளை செய்வதோடு இன்னும் ஜப்பானிய ஆக்கிரமிப்பின் கீழிருந்த பெரிய நகரங்களுக்கும், விடுவிக்கப்பட்டிருந்த பிரதேசங் களைச் சுற்றிலும் இருந்த முன்னணி வரிசைகளுக்கும் கோமிங் டாங் துருப்புகளை அனுப்பி வைப்பதற்கும் உதவி செய்தது. ஜப்பானிய ராணுவத்தை ஆயுதமற்றதாக செய்வதற்கு சீனா விற்கு ''உதவி செய்வது'' என்ற நொண்டிச் சாக்கின்கீழ், சிங்டாவோ, டியன்சின் மற்றும் இதர நகரங்களிலும் அமெரிக்க படையை நிறுத்தி வைத்தது. சின்வாங்டாவோ, ஷான்டுங் தீபகற்பம் மற்றும் இதர இடங்களில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த அமெரிக்க படைகள் சீனாவின் விடுவிக்கப்பட்டிருந்த ஏரியாக்களை பகிரங்கமாகத் தாக்கி சீனாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டது.

அமெரிக்க அரசாங்கத்தின் ஆதரவோடு, கோமிங்டாங் பிற் போக்காளர்கள் எதிரியினுடைய, அவனது கைக்கூலியினுடைய

"ஒழுங்கினை" அப்படியே வைத்திருந்தார்கள்; மற்றும் அவர்களது எல்லா பாசிச ராணுவ, அரசியல் மற்றும் பொருளாதார ஸ்தாபனங்களை எவ்வித மாற்றமும் இன்றி எடுத்துக் கொண்டார்கள். இதன் விளைவாக எதிரி மற்றும் அவனது கைக்கூலிகளின் பாசிச படைகள் பகிரங்கமாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதுகாக்கப்பட்டு, சீன மக்களைஎதிர்க்கவும் மற்றும் தூரக்கிழக்கில் புதியதொருயுத்தத்தை ஆரம்பிக்கும் அதனுடைய முயற்சியில் கோமிங்டாங்கின் கருவிகளாக மாற்றப்பட்டன.

இந்த முறையில், தூரக்கிழக்கில், யுத்தம் உண்மையிலேயே ஒரு முடிவிற்கு வருவதற்கு முன்பு, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கோமிங்டாங் பிற்போக்குவாதிகள், துரோகிகள் மற்றும் ஜப்பானிய பாசிஸ்டுகள் ஆகியோர் இப்படிப்பட்ட ஒத்துழைப்பின் மூலமும் பங்காளித்துவத்தின் (Partnership) மூலமும் புதியதொரு யுத்தத்திற்கான விதைகளை விதைத்திருந்தார்கள்.

ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் முடிந்தவுடன், சீனாவில் உள்நாட்டு முரண்பாடுகள் மகத்தானதொரு மாற்றத்திற்கு உள்ளாயின. சீனாவிற்கும் ஜப்பானிற்கும் இடையே இருந்த முரண்பாடு, ஒரு புறம் கம்யூனிஸ்ட் கட்சியினால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டிருந்த சீன மக்களின் பரந்துபட்ட வெகுஜனங்களுக்கும், மறுபுறம் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவோடு கோமிங்டாங் பிற்போக்குவாதிகளால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டிருந்த பெருநிலசுவான்தார் வர்க்கம் மற்றும் பெரும் முதலாளி வர்க்கம் ஆகியோர்களுக்கு இடையே இருந்த முரண்பாட்டிற்கு—உள்நாட்டு நிலைமையில் ஆதிக்கம் வைத்துக் கொண்டிருந்த பிரதான அம்சமான முரண்பாட்டிற்கு—வழி விட்டுக் கொடுத்தது. தேசிய சுதந்திரத்திற்காகவும், மக்கள் ஜனநாயகத்திற்காகவும் மற்றும் சமுதாய விடுதலைக்காகவும் மக்களுக்கு இருந்த அபிலாஷைகளைச் சித்தி பெறச் செய்வதைக் கோமிங்டாங் பிற்போக்குவாதிகள் தடுத்ததோடு மட்டுமன்றி, அவர்களை உள்நாட்டு யுத்தம் மற்றும் வேதனை ஆகிய நரகத்திற்குள் குதிக்கும்படி செய்தார்கள்.

பிற்போக்குவாதிகள் ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டிருந்த உள்நாட்டு யுத்தத்தை எதிர்க்கக்கூடியதும் தடுக்கக்கூடியதுமான தெளிவானதொரு கொள்கையை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி கடைபிடித்தது. இப்படிப்பட்டதொரு யுத்தத்தின் உடனடியான அபாயத்தை கட்சி முழுமையாக அறிந்திருந்தது. ஆனால் கோமிங்டாங் பிற்போக்குவாதிகள் மக்களின் வெற்றிக்

கனிகளைத் திருடுவதற்கு முயற்சித்துக்கொண்டிருந்த அதேசமயத்தில், பிற்போக்குவாதிகளால் தங்களுக்குப் புதிதாக கிடைத்திருந்த உரிமைகள் இந்த விதத்தில் பறிக்கப்படுவதை எதிர்த்து, பாதுகாப்பதற்கு, மக்கள் உறுதியோடு இருந்தார்கள். பிற்போக்குவாதிகள் அவர்களின் மீது ஒரு யுத்தத்தைத் திணிப்பார்களேயானால், ஆயுதங்களை எடுத்து போராடுவதைத் தவிர மாற்று வழியே இல்லை. ஆகவே, கோமிங்டாங் தாக்குதல்களை நொறுக்கித் தள்ளுவதில் எந்த முயற்சிகளையும் விட்டு வைக்காமல் இருப்பதை அதனுடைய மத்திய தலைமையாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சி கருதிற்று. அது தற்பாதுகாப்பு பற்றிய ஒரு பிரச்சினையாக இருந்தது.

இந்தக் கால கட்டத்தில், கட்சி விடுவிக்கப்பட்ட ஏரியாக்களில் விவசாய சீர்திருத்தத்திற்கான ஒரு இயக்கத்தை, சீனக் கம்யூனிஸ்ட் கட்சி துவக்கிற்று. ஜப்பானியர்களின் சரணாகதிக்குப் பிறகு, ஷாங்சி, ஹோப்பெய், ஷான்டுங் மற்றும் மத்திய சீனாவில் பல்வேறு விடுதலை பெற்ற ஏரியாக்களில் இருந்த விவசாயிகள், துரோகிகளை ஒழித்துக் கட்டும் போக்கிலும், கணக்குகளை தீர்க்கும் போக்கிலும் மற்றும் குத்தகைகள், வட்டிகள் ஆகியவற்றை குறைக்கும் போக்கிலும் நிலச்சுவான்தார்களிடம் இருந்து நிலத்தைப் பெற்றார்கள். துரோகிகள், ஸ்தல எதேச்சாதிகாரவாதிகள் மற்றும் நிலச்சுவான்தார்கள் விவசாயிகளின் போராட்டத்தின்மீது வசைமாரி பொழிந்து கொண்டு நகரங்களுக்குத் தப்பி ஓடினார்கள்; நடுவாந்திர பாதைகாரர்கள் சந்தேகங்களை வெளிப்படுத்தினார்கள்; கட்சியிலிருந்த பலரும் ஊசலாடினார்கள்; 1946 மே 4ஆம் தேதியன்று, கொடுக்கப்பட்ட ஒரு வழிகாட்டுதலும், கட்சி விவசாயிகளின் சகல நியாயமான கோரிக்கைகளையும் நடவடிக்கைகளையும் உறுதியாக ஆதரித்தது; அவர்கள் பெற்றிருந்த நிலத்தில் அவர்களது உடைமையை அங்கீகரித்தது, அல்லது அவர்கள் பெறவிருந்த நிலத்தின் உடைமையை அங்கீகரித்தது; மற்றும் குத்தகை, வட்டி குறைப்புக் கொள்கையில் இருந்து, நிலச்சுவான்தார்களின் நிலத்தைப் பறிமுதல் செய்து, அதனை விவசாயிகளிடையே விநியோகிக்கும் ஒரு கொள்கையாக மாற்றுவதைப் பிரகடனம் செய்தது. துரோகிகள், ஸ்தல ஏதேச்சாதிகாரவாதிகள் மற்றும் நிலச்சுவான்தார்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன; நடுவாந்திரப் பாதைகாரர்களின் சந்தேகங்கள் நிவர்த்திக்கப்பட்டன; கட்சியிலிருந்த தவறான கருத்துகள் களைந்து

எறியப்பட்டன. விவசாய சீர்திருத்தம் விவசாயிகளால் உற்சாக மாக ஆதரிக்கப்பட்டன; மற்றும் விடுவிக்கப்பட்ட ஏரியாக்களை பாதுகாப்பதற்கான அவர்களது உறுதியையும் மற்றும் சமாதனம், ஜனநாயகம் ஆகியவற்றிற்காக போராடுவதற்கான அவர்களது உறுதியையும் அதிகரித்தது. அதன் மூலம் பிற் போக்குவாதிகளை எதிர்த்து போராடுவதில் அவர்கள் கட்சியின் அடிப்படையான சக்திகளாக மாறி இருந்தார்கள்.

**3. சமாதானம், ஜனநாயகம், ஒருமைப்பாடு மற்றும் ஒன்று படுதலுக்கான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை. கோமின்டாங்கிற்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையே பேச்சு வார்த்தைகள். யுத்த நிறுத்த உடன்பாடும் அரசியல் ஆலோசனை மகாநாடும்.**

நீண்ட கால யுத்தத்தினால் மாபெரும் துயரங்களை அனுபவித்தவர்களும் இப்போது புதியதொரு உள் நாட்டு யுத்தத் தினால் அபாயத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்தவர்களுமான நாடு முழுவதிலும் இருந்த மக்கள் சமாதானத்திற்காகவும், தேசிய சுதந்திரத்திற்காகவும், அரசியல் ஜனநாயகத்திற்காவும் மற்றும் சமுதாய விடுதலைக்காகவும் பலமானதொரு விருப்பத்தைக் கொண்டிருந்தார்கள். ஜப்பானிய ராணுவ வெறித்தனம் புத்துயிர் பெற்று எழுவதைத் தடுப்பதற்கும், யுத்த புண்களை குணப்படுத்துவதற்கும், சீனாவின் சமுதாய உற்பத்திச் சக்தியை மீட்டு, அபிவிருத்தி செய்வதற்கும், தூரகிழக்கிலும் உலகின் இதர பாகங்களிலும் அவர்களதுகேந்திரமான நிலமைகளைப் பாதுகாப் பதற்கும், சமாதானத்தைப் பலப்படுத்துவதற்கும் அவர்களது ஒரே வழியாக, சீன மக்கள் அனைவரும் அமைதியான தேசிய நிர்மாணத்தை அவசரமாகக் கோரினார்கள். இடைத்தட்டு வர்க்கமும் அதனுடைய அரசியல் கட்சிகளும் அமெரிக்க அரசாங் கத்தைப் பற்றியும் கோமிங்டங்கைப் பற்றியும் இன்னும் பிரமை களைக் கொண்டிருந்தார்கள். அவர்கள், "அமெரிக்க ஜனநாய கத்தை" பாராட்டினார்கள்; அமெரிக்க அரசங்கத்தின் போலி, "நடுநிலைமையினாலும்" மற்றும் "மத்தியஸ்தத்தினாலும்" ஏமாற்றப்பட்டிருந்தார்கள்; மற்றும் கோமிங்டாங் ஆட்சியின் "நியாயத்தன்மையில்" தவறாக நம்பி இருந்தார்கள்.

மக்களின் சித்தத்தையும் அபிலாஷைகளையும் பிரதிநிதித்

துவப்படுத்திக் கொண்டு, சீனக் கம்யூனிஸ்டு கட்சி சமாதான பதாகையையும், ஜனநாயக பதாகையையும் உறுதியாக உயர்த்திப் பிடித்து, உள்நாட்டு யுத்தத்தைத் தவிர்க்கவும், சமாதானத்தை உருப்பெறச்செய்யவும் ஒரு வழியைக் கண்டுபிடிப்பதில் மக்களுக்கு வழி காட்டுவதற்கும் மிகப் பெரிய முயற்சிகளை செய்தது.

1945 ஆகஸ்டு 25இல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, ''தற்போதைய நிலமை சம்பந்தமாக'' ஒரு பிரகடணத்தை விடுத்தது; சமாதானம், ஜனநாயகம் மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் நாடு முழுவதின் ஒற்றுமையை உருவாக்கும்படி அப்பிரகடனம் மக்களை அறைகூவி அழைத்தது; சமாதானம், ஜனநாயகம், ஒருமைப்பாடு மற்றும் ஒன்றுபடுத்தல் ஆகியவற்றை சித்திப் பெறச் செய்வதற்கான போராட்டத்தை கட்சியின் முதன்மையான கொள்கையாக முதல் குறிகோளாகவும் வைத்துக் கொண்டும் மற்றும் உள்நாட்டு யுத்தத்தைத் தவிர்ப்பதற்கு அவசரமான நடவடிக்கைகளை முன் வைத்துக் கொண்டும் அப்பிரகடனம் மக்களை அறைகூவி அழைத்தது.

இந்தக் குறிக்கோளோடு தோழர் மாசே-துங், கோமிங்டாங்குடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு ஆகஸ்ட் 28ஆம் தேதி சுங்கிங்கிற்கு போனார். பேச்சு வார்த்தைகள் 1944 அக்டோபர் 10 வரையிலும் நாற்பது நாட்களுககும் அதிகமாக நீடித்தன; அப்பொழுது சீனக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரநிதிகளும் மற்றும் கோமிங்டாங் பிரதிநிதிகளும், "கோமின்டாங் பிரதிநிதிகளுக்கும் கம்யூனிஸ்ட் பிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சு வார்த்தையின் குறிப்புகள்'' என்பதில் கையொப்பமிட்டார்கள்; இதுதான் அக்டோபர் 10 உடன்பாடு என்று அறியப்படலாயிற்று இரண்டு தினங்களுக்கு பின்னர் பிரசுரிக்கப்பட்ட இந்த உடன்பாடு. இரு தரப்புகளும் உள்நாட்டு யுத்தத்தை உறுதியாக தவிர்க்க வேண்டுமென்று வரையறுத்திருந்தது. மற்றும் சமாதானம், ஜனநாயகம், ஒருமைப்பாடு, மற்றும் ஒன்றுபடுத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு சுயேச்சையான, சுதந்திரமான, செழுமையான மற்றும் சக்திவாய்ந்த புதிய சீனாவை நிர்மாணிப்பது என்றும் வரையறுத்துக் கூறி இருநதது. நாட்டின் சமாதானப் பூர்வமான நிர்மாணம் பற்றி விவாதிப்பதற்கு ஒரு அரசியல் கலந்தா ஆலோசனை மகாநாட்டைக் கூட்டுவது போன்ற இப்படிப்பட்ட

உள்நாட்டு அமைதியைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளையும் உடன்பாடு உள்ளடக்கி இருந்தது.

நாட்டின் சமாதானப் பூர்வமான நிர்மாணக் கொள்கை என்பது மக்களின் மிகமிக விசுவாசமான பிரதிநிதியான கம்யூனிஸ்ட் கட்சியினால் வரையறுக்கப் பட்டிருந்த சமாதானம், ஒருமைப்பாடு, ஜனநாயகம் மற்றும் ஒன்று படுத்துதலுக்கான கொள்கையைத் தவிர வேறேதும் இல்லை; ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தின் வெற்றியில் இருந்து மிகமிக அழுத்தமான மக்களின் கோரிக்கையாக இருந்த அந்த கோரிக்கையைச் சந்திக்கும் கொள்கையைத் தவிர வேறெந்த கொள்கையும் இல்லை.

பேச்சுவார்த்தை நடந்த சமயத்தில் சீனக் கம்யூனிஸ்ட் பல சலுகைகளைக் கொடுத்தது. குவாங்டுங், சிக்கியாங், தெற்கு கியாங்சு, தெற்கு அன்வெய், மத்திய அன்வெய், ஹூன்னான், ஹூப்பெய் மற்றும் ஹோனான் ஆகிய எட்டு விடுவிக்கப்பட்ட ஏரியாக்களில் இருந்து விடுதலை படையை வாபஸ் பெறுவது மற்றும் 13,00,000 பேரைக் கொண்ட விடுதலை படையை 20 முதல் 24 வரை டிவிஷன்களாக புனரமைப்பது போன்ற இப்படிப் பட்ட சலுகைகளை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி கொடுத்தது. பேச்சு வார்த்தைகளின் போக்கிலும் அதற்கு பிறகு குறுகிய காலத்திலும், புதிய நான்காவது சேனை, யாங்ட்சி நதியை ஒட்டி இருந்த பல மாவட்டங்களில் இருந்து வாபஸ் பெற்று லுங்காய் ரயில்வேக்கு வடக்கே இருந்த விடுதலை பெற்ற ஏரியாக்களிலும், வடக்கு கியாங்சுவிலும் மற்றும் வடக்கு அன்வெய்யிலும் ஒன்று கூடிற்று.

அது நிறை வேற்றுவதற்கு ஒத்துக் கொண்டிருந்த உடன்பாட்டினை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி விசுவாசமாக நிறைவேற்றிற்று. தேசம் முழுவதும் நாட்டின் நலன்களுக்கும் மக்களின்நலன்களுக்கும் அதனுடைய எல்லையற்ற அர்பணிப்பைப் பார்த்தது; மற்றும் சமாதான லட்சியத்திற்காகவும் தேசியப் ஒருமைப் பாட்டிற்காகவும் அதனுடைய சரியான முயற்சிகளையும் தேசம் முழுவதும் பார்த்தது.

எனினும், கோமிங்டாங் பிற்போக்குவாதிகள், ஒரு உள்நாட்டு யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு அந்த உடன்பாட்டினை ஒரு புகைத் திரையாக மட்டுமே பயன்படுத்தினார்கள். 1945 செப்டம்பர் 17இல், பேச்சுவார்த்தைகள் இன்னும் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில், சியாங்கை-ஷேக் அவனது கையாட்களிடையே "கொள்ளைகாரர்களை ஒடுக்குவது" பற்றிய அறிக்

கையை ரகசியமாக விநியோகித்திருந்தார்கள். அக்டோபர் 13-லும் 15லும், அந்த உடன்படிக்கை அப்பொழுதுதான் பிரசுரிக்கப்பட்டிருந்தபோது, மக்கள் விடுதலை சேனையைத் தாக்கும்படி அவன் கோமிங்டாங் துருப்புகளுக்கு உத்தரவிட்டான். 1945 நவம்பரில், அவன் சுங்கிங்கில் ஒரு ராணுவ மகாநாட்டினைக் கூட்டினான். அந்த மாநாட்டில் விடுவிக்கப்பட்ட ஏரியாக்களுக்கு எதிராக ராணுவ நடவடிக்கைகளை நடத்துவதற்கு விரிவானதொரு திட்டம் திட்டப்பட்டது.

உள்நாட்டு யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்கு, கோமின்டாங் பிற்போக்காளர்கள் தங்களுடைய சொந்த துருப்புகள் 12,70,000 பேரை அணிதிரட்டினார்கள், மற்றும் 5,00,000. ஜப்பானிய துருப்புகளையும் கைக்கூலி துருப்புகளையும் திசை திருப்பினார்கள், அல்லது புனரமைத்தார்கள். ஹோப்பெய், ஷாங்ஸி, ஷாங்டுங், சுய்யுவான், சகார், கியாங்சு, சிக்கியாங், ஹோனான், ஹுப்பெய், அன்வெய் மற்றும் குவாங்டுங் ஆகிய பதினொரு மாகாணங்களில் விடுவிக்கப்பட்ட ஏரியாக்களுக்கு எதிராக பொதுவானதொரு முன்னேறித் தாக்குதல் துவக்குதல் துவக்கப்பட்டது. புதிய நான்காவது சேனை, வடக்கு நோக்கி வாபஸ் வாங்கும்படி உத்திரவுகளை நிறைவேற்றிக் கொண்டிருந்த அதேசமயத்தில், கோமிங்டாங் துருப்புகள் திரும்ப திரும்ப அவர்களை இடை மறித்து, பின் தொடர்ந்தது.

1945 செப்டம்பரில், மக்கள் விடுதலை சேனை சாங்சியாகோவிற்கு எதிராக கோமிங்டாங் நடத்திய முன்னேறி தாக்குதலை தடுத்து நிறுத்துவதில் வெற்றி பெற்றது; மற்றும், அடுத்த மாதத்தின் முடிவில் எதிரி துருப்புகளை முற்றிலும் முறியடித்தது. 1945 அக்டோபர் மத்தியில், சயாங்யுவான், ஷாங்சி, டுன்லியு, மற்றும இதர சுற்றுப்புற கிராம புறங்கள், ஷாங்சி மாகாணம் ஆகியவற்றில் நடைபெற்ற பிரபலமான போராட்டத்தில், 30,000 த்திற்கும் அதிகமான ஜவான்களோடு தாக்கிக் கொண்டிருந்த படையை செயலற்றதாக செய்தது. மாத இறுதியில், பீகிங்-ஹாங்கோங் ரெயில்வே நெடுகிலும் ஷாங்டேயில் இருந்து வடக்கு நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த 70,000 ஜவான்களுக்கும் அதிகமான மற்றொரு கோமின்டாங் படைக்கும் இதை போன்றதொரு கதி ஏற்பட்டது. மொத்தம் 1,10,000 எதிரி துருப்புகள் அல்லது கோமின்டாங்கின் தாக்கும் படையில் பத்தில் ஒரு பங்கினர் நிர்மூலம் செய்யப்பட்டனர் இத்தகைய தாக்குதல்கள் அனைத்தும் கூர்மையான கண்காணிப்பின் காரணமாக

எதிர்த்து முறியடிக்கப்பட்டன; இத்தகைய கண்காணிப்பை, சீன கம்யூனிஸ்டு கட்சி சமாதானத்திற்காகவும் ஜனநாயகத்திற்காகவும் முயற்சித்து கொண்டிருக்கும் போக்கில் எதிரியினுடைய முன்னேறித் தாக்குதல் நிகழ்ச்சிக்கு எதிராகவும் மற்றும் கோமிங்டாங் துருப்புகளிடையே நிலவிக் கொண்டிருந்த யுத்தக் களைப்பிற்கு எதிராகவும் முன்பின் முரணற்ற முறையில் நிலைநாட்டப்பட்டு வந்தது.

கோமிங்டாங்கின் உள் நாட்டு யுத்தக் கொள்கை நாடு முழுவதிலும் இருந்த மக்களால் எதிர்க்கப்பட்டது. 1945 நவம்பரில் உள்நாட்டு யுத்த எதிர்ப்புச் சங்கம் சுங்கிங்கில் அமைக்கப்பட்டது. இப்படிப் பட்டதொரு யுத்தத்தை நிறுத்தும்படி வாழ்க்கையின் எல்லா துறைகளிலும் இருந்த மக்களை அச்சங்கம் அறைகூவி அழைத்தது. அதே ஆண்டு டிசம்பர் 1இல், குன்மிங்கில் மாணவர்கள் உள்நாட்டு யுத்தத்திற்கு எதிராக பிரம்மாண்டமானதொரு ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள்.

அவர்களது துருப்புகளை மீண்டும் அணி திரட்டுவதற்கு நேரத்தை கடத்தும் பொருட்டும் மற்றும் மக்களின் மாபெரும் நிர்ப்பந்தத்திற்கு விட்டுக் கொடுப்பதற்கு சில சமிக்ஞைகளைக் காட்டுவதற்கும் கோமிங்டாங்கும் அதனுடைய அமெரிக்க எஜமானர்களும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினாலும் இதர ஜனநாயக கட்சிகளாலும் வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஒப்புக் கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தார்கள். போர் நிறுத்த உடன்பாடு 1946 ஜனவரி 10இல் கையொப்பமிடப்பட்டது. அதே நாளில், கோமிங்டாங்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் போர் நிறுத்த உத்தரவுகளைக் கொடுத்தன. அந்த உத்தரவுகள் ஜனவரி 13ஆம் தேதி நள்ளிரவில் இருந்து அமலுக்கு வருமென்று இருந்தது. இந்த உடன்பாட்டின்படி, ராணுவ மத்தியஸ்தத்திற்காக ஒரு நிர்வாக தலைமை காரியாலயம் பீகிங்கில் ஏற்படுத்தப்பட்டது; அங்கு கோமிங்டாங் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அமெரிக்க அரசாங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட மூன்று கமிஷ்னர்கள் இருப்பார்கள். ஜார்ஜ் சி. மார்ஷல் சீனாவிற்கு அமெரிக்கக் குடியரசு தலைவரின் விசேஷ பிரதிநிதியாக வந்திருந்தார், கோமிங்டாங் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு இடையே ''மத்தியஸ்த்தம்செய்வதற்காக'' வந்திருந்தார். ஆனால் உண்மையில் ''மத்தியஸ்த்தங்கள்'' என்ற புகைத் திரைக்குப் பின்னால், யுத்த தயாரிப்புகளை வேகப்படுத்துவதற்கு கோமிங்டாங்கிற்கு உதவி செய்வதற்காகத்தான் வந்திருந்

தார்.

அதே சமயததில், யுத்த நிறுத்த உத்தரவுகள் கொடுக்கப் பட்டிருந்த பொழுது, அவற்றின் கலந்தாலோசனை மகாநாடு சுங்கிங்கில் ஆரம்பமாயிற்று. இந்த மாநாட்டில், கோமிங்டாங், கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயக கழகம், இளைஞர் கட்சி ஆகிய வற்றின் பிரதிநிதிகளும் மற்றும் நாட்டில் இருந்த இடதுசாரி, வலதுசாரி, நடுவாந்திர பாதை அரசியல் கோஷ்டிகளைப் பிரதி நிதித்துவப் படுத்திக் கொண்டிருந்த கட்சி இணைப்பு இல்லாத தனி நபர்களும் கலந்துக் கொண்டார்கள். பிற்போக்குவாதிகள் பெரும்பான்மையாக இருந்தார்கள் என்ற போதிலும், மாநாடு ஐந்து தீர்மானங்களை நிறைவேற்றிற்று. இத்தீர்மானங்கள் சமாதானம், ஒருமைப்பாடு, ஜனநாயகம், மற்றும் ஒன்றுபடுத்தல் அதாவது, அரசாங்கத்தைப்புரனமைத்தல் தேசிய சட்டப்பேரவை நாட்டை சமாதானப் பூர்வமாக நிர்மாணிப்பதற்கான திட்டம், நகல் அரசியல் சட்டம் மற்றும் ராணுவ பிரச்சனைகள் ஆகிய வற்றிற்கு தங்களது பங்கினைச் செலுத்தின. மக்களின் மாபெரும் நிர்ப்பந்தத்தின் கீழும் மூர்க்கமான போராட்டங்களின் விளைவாக மட்டுமேதான் இத்தகைய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ராணுவ பிரச்சனைகளும் நகல் அரசியல் சட்டமும் மிகவும் விசேஷமாக கசப்பான சர்ச்சைக்கு உள்ளாக்கப்பட்டிருந்த விஷயங்களாக இருந்தன.

ராணுவ பிரச்சனைகள் சம்பந்தமாக கோமிங்டாங் பிற்போக்குவாதிகளும் அவர்களைப் பின்பற்றிய இளைஞர் கட்சி யினரும், "ஆயுதப்படைகளை தேசிய மயமாக்குவது" பற்றிய ஒரு பிரேரேபணையை முன் வைத்தார்கள். கோமிங்டாங்கிற்கு வால்பிடித்துக் கொண்டிருந்த இளைஞர் கட்சியின் பிரதிநிதியான சென்சி-டியன், "அரசியல் ஜனநாயகமாக்குதல் பிரச்சனைக்கு முன்பு ஆயுதப் படைகளை தேசிய மயமாக்கும் பிரச்சனை வர வேண்டும்" என்றும் மற்றும் "முதலில் ஆயுதங்களைக் கீழே வைக்காமல், ஜனநாயகம் பற்றிய எந்த பேச்சும் அல்லது அரசியல் சட்டப்படியான அரசாங்கம் பற்றிய எந்தப் பேச்சும் இருக்க முடியாது" என்றும் கூறினார், இதனுடைய அர்த்தம்என்னவென்றால் ஜனநாயகத்தை நடைமுறைபடுத்துவது என்ற பெயரில் கோமிங்டாங் பிற்போக்குவாதிகள் மக்களின் ஆயுத படைகளைக் கைப்பற்ற நினைத்தார்கள் என்பதுதான்.

தேசிய பூர்சுவா வர்க்கத்தின் பிரதிநிதிகள், அரசியல் கலந்தாலோசனை மாநாட்டில், கம்யூனிஸ்ட் கட்சி எடுத்த

அதே போக்கினைத்தான் பெரும்பாலும் எடுத்தார்கள். அவர்கள் சமாதனத்திற்காகவும் ஜனநாயக்திற்காகவும் நின்றார்கள். மற்றும் உள்நாட்டு யுத்தத்திற்கு எதிராகவும், சர்வாதிகாரத் திற்கு எதிராகவும் நின்றார்கள். ஆனால் அவர்கள் பிரேரேபித்த கூட்டு அரசாங்கம் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க வகைப்பட்ட ஒரு நாடாளுமன்றத்தைத் தவிர வேறெதுவுமில்லை. மேலும் ஆயுதப் படைகளை தேசிய மயமாக்குவதை அவர்கள் மானசீக மாக பார்த்தார்கள்; துருப்புகள் ஏந்த வகைப்பட்ட அரசுக்கு சொந்தமாக இருக்க வேண்டும் என்பதை ஸ்தூலமாக அலசி ஆராய்ந்து பார்க்காமல், ஒரு ஜனநாயக அரசுக்குச் சொந்தமாக இருக்க வேண்டுமா அல்லது ஒரு சர்வாதிகார அரசுக்குச் சொந்த மாக இருக்க வேண்டுமா என்பதை ஸ்தூலமாக அலசி ஆராய்ந்து பார்க்காமல், ஆயுதப்படைகளை தேசிய மயமாக்குவதை மானசீக மாக அவர்கள் பார்த்தார்கள்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஆயுதப்படைகளைத் தேசியமயமாக்கு வதற்கான அடிப்படையான திட்டத்தையும் அஸ்திவாரமான கோட்பாடுகளையும் முன் வைத்தது உலகில் எந்த அரசும் எப்பொழுதும் மானசீகமாக இருந்ததில்லை என்ற விபரத்தைக் கருத்தில் கொண்டு, ஆயுதப்படைகளைச் சொந்தமாக கொண் டிருந்த இரு வகைப்பட்ட அரசுகள் இருந்தன என்று அது சுட்டிக் காட்டிற்று. ஒரு ஜனநாயக அரசில் ஆயுதப் படைகள் தேசிய மயமாக்கப்படும் போது, ஜனநாயகஅரசு இயந்திரத்தின் ஒருபகுதி யாக மாறிவிடுகிறது; ஆனால் ஒரு சர்வாதிகாரத்தில் அது சர்வாதி கார அரசு இயந்திரத்தின் ஒரு பகுதியாக மாறிவிடுகிறது. இதில் கம்யூனிஸ்ட் கட்சி தேசிய மயமாக்குதலின் முதல் பாதைக்காக நின்றது.

முதலாவதாக, ஆயுதப் படைகள் தேசிய மயமாக்கப்படு வதற்கு முன்பு, அரசு ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும்; அதாவது, கோமிங்டாங்கினுடைய ஒரு கட்சி சர்வாதிகாரம் ஒழிக்கப்பட்டு, ஒரு ஜனநாயக கூட்டு அரசாங்கத்தினால் அகற்றப் படவேண்டும். ஆயுத படைகளும்கூட ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும். ராணுவத்திற்கும் மக்களுக்கும் இடையே ஒத்துழைப்பு என்ற கோட்பாட்டின் அடிப்படையில் மற்றும் அதிகாரிகளுக்கும் ராணுவ வீரர்களுக்கும் இடையே ஒத்துழைப்பு என்ற கோட் பாட்டின் அடிப்படையிலும் ஆயுதப் படைகளும் ஜனநாயகப் படுத்தப்பட வேண்டும் அரசையும் ஆயுத படைகளையும் ஜனநாயகப்படுத்துதல்-ஆயுத படைகளை தேசிய மயமாக்கு

வதற்கும் முன் தேவைகளாக இருந்தன.

இரண்டாவதாக, ஒரு ஜனநாயக கூட்டு அரசாங்கம் மற்றும் ஒரு ஒன்றுபட்ட தலைமை தளபதி நிலை நாட்டப் படுவதை, பின்தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சி உடனடியாக மக்கள் விடுதலை சேனையை ஒப்படைத்தல், கோமிங்டாங் அதனுடைய எல்லா ஆயுதப் படைகளையும் அதே மாதிரி ஒப்படைக்கும் என்ற நிபந்தனையின்பேரில், கம்யூனிஸ்ட் கட்சி மக்கள் விடுதலை சேனையை உடனடியாக ஒப்படைக்கும். உண்மையில் ஆயுதப் படைகளின் பிரச்சினையின் தீர்விற்கான அடிப்படையான திட்டம் கோமிங்டாங்கினாலும் விடுவிக்கப் பட்ட ஏரியாக்களினாலும் ஒரு ஜனநாயகக் கூட்டு அரசாங்கத் திடம் ஏக காலத்தில் ஒப்படைப்பதில் அடங்கி இருந்தது.

ராணுவப் பிரச்னைகள் பற்றிய தீர்மானத்தில், பல கோட் பாடுகள் வரையறுக்கப்பட்டிருந்தன. ''ராணுவத்தையும் கட்சி யையும் பிரிப்பது'' என்ற முதல் கோட்பாடு எந்த கட்சியோ அல்லது தனி நபரோ, ராணுவத்தை அரசியல் போராட்டத்தில் ஒரு கருவியாக உபயோகிக்கக் கூடாது என்பதற்கு வகை செய் திருந்தது. ''ராணுவ நிர்வாகத்தையும் சிவில் நிர்வாகத்தையும் பிரிப்பது'' என்ற இரண்டாவது கோட்பாடு சுறுசுறுப்பாக ராணுவ சேவையில் இருக்கும் அதிகாரி சிவில் பதவிகளை அதே சமயத்தில் வைத்திருக்கக் கூடாது என்பதற்கு வகை செய்திருந் தது. மூன்றாவது கோட்பாடான, ''ராணுவத்தின் மீது அரசியல் ஆதிக்கம் செலுத்துவது'' என்பது கோமிங்டாங் ராணுவக் குழு தேசிய பாதுகாப்பு அமைச்சரகமாக திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்றும், அந்த அமைச்சரக நிர்வாகம் யுவானின் கீழ் வருமென்றும், நாட்டின் எல்லா ஆயுதப் படைகளுக்கும் கட்டளையிடும் என்றும் வரையறுத்துக் கூறிற்று. நான் காவது கோட்பாடான ''ஒரு நியாயமான மற்றும் சமத் துவவான அடிப்படையில் நாடு முழுவதிலும் உள்ள ஆயுத படைகளைத்திருத்தி அமைப்பது'' என்பது புனரமைப்பிற்குபிறகு நாடு முழுவதிலும் உள்ள துருப்புகள், தேசிய பாதுகாப்பு ராணுவமாக மாற வேண்டும் என்பதற்கு வகை செய்தது.

நகல் அரசியல் சட்டம் சம்பந்தப்பட்ட மட்டில் கோமிங் டாங் பிற்போக்குவாதிகளும் அவர்களது தொங்குசதை களும் ஒவ்வொரு விஷயமும் சரியாக இருந்தது என்று நினைத் தார்கள். கோமிங்டாங் பிற்போக்குவாதிகளின் பாசிச ''அரசியல் அடிவருடி தனத்தில் இருந்தது.'' ஒரு பாசிச

அரசியல் சட்ட ரீதியான் அரசாங்கத்திற்கு''[1] மாறிச் செல்வதை அமுலாக்கும் பொருட்டு, கோமிங்டாங் ஏக போகத்தில் உள்ள''தேசிய சட்டப்பேரவையைக்''கோமிங்டாங் ஜோடித்தன. ''மே 5 நகல் அரசியல் சட்டத்தை''[2] நிறைவேற்றும் படி செய்வதற்கு அவர்கள் முயற்சித்தார்கள். இப்படிப்பட்டதொரு பிற்போக்கான முயற்சிக்கு எதிராக சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உறுதியானதொரு நிலையை எடுத்தது.

நகல் அரசியல் சட்டம் பற்றிய தீர்மானத்தில், ஒரு ஜனநாயக அரசும் பாராளுமன்றத்திற்கு இணைக்கமானதும் மக்களால் நேரடியாக தேர்ந்து எடுக்கப்பட்டதுமான சட்ட சபை, யுவான் அரசு அதிகாரத்தில் அதி உன்னதமான உறுப்பாக இருப்பதற்கும் மந்திரி சபைக்கு இணக்கமாக இருக்கும் நிர்வாக யுவான், அரசின் மிகமிக உயர்ந்த நிர்வாக உறுப்பாக இருப்பதற்கும் வகை செய்யப்பட்டிருந்தது. நிர்வாக யுவான், சட்டசபை யுவானுக்கு பொறுப்பாக இருக்கும். சட்டசபை யுவான், நிர்வாக யுவானின் எந்த முடிவையும் ஏற்றுக் கொள்வதற்கும் ரத்து செய்வதற்கும் அல்லது நம்பிக்கையின்மையை தெரிவிப்பதற்கும் அதிகாரம் பெற்றிருக்கும். மாகாண சட்ட பேரவைகளால் மற்றும் தேசிய சுய ஆட்சி பிரதேசங்களாலும் தேர்ந்தெடுக்கப்படும் கட்டுப்பாடு, யுவான் அரசின் மிகமிக உயர்ந்த கட்டுப்பாடு உறுப்பாக இருக்கும்; நிர்வாக யுவானின் வேலையை ஒப்புக் கொள்ளவும் குற்றம் சாட்டவும் மேற்பார்வை செய்யவும் அதிகாரத் உடையதாக இருககும். நிதித்துறை யுவான் தலைமை நீதி மன்றமாக இருக்கும். பரீட்சை யுவான் சிவில் ஊழியர்கள் மற்றும் தொழில் செய்பவர்கள் ஆகியோரின் , பரீட்சைகளுக்கு பொறுப்பாக இருக்கும். தீர்மானம் மாகாண சுயாட்சி முறைக்கும் கூட வகை செய்திருந்தது; இந்த மாகாண சுய ஆட்சியின் மூலம் ஒரு மாகாணம், ஒரு மாகாண அரசியல் சட்டத்தை ஏற்படுத்தி கொள்வதற்கு அதிகாரத்தை பெற்றிருக்கும்; ஆனால் அந்த மாகாண அரசியல் சட்டம், தேசிய அரசியல் சட்டத்திற்கு மேலாக வராமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையும் உண்டு. பாராளுமன்ற முறை, மந்திரி சபை முறை மற்றும் ஸ்தல சுய ஆட்சி முறை ஆகியவற்றை ஏற்றுக் கொள்வது நகல் அரசியல் சட்டத்தின் பிரச்சினைக்கு அடிப்படையிலேயே தீர்வு கண்டுவிடும்.

இதர மூன்று தீர்மானங்கள் அரசாங்கத்தில் பல்வேறு ஜனநாயக கட்சிகள் பங்குக் கொள்வதை அறைகூவி அழைத்தன. மற்றும் கோமிங்டாங்கின் ஒரு கட்சி சர்வாதிகாரத்தை முடிப்

பதையும் அறைகூவி அழைத்தன. ஒரு ஜனநாயக அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்கு ஒரு தேசிய சட்ட பேரவையைக் கூட்ட வேண்டுமென்று கூறிற்று; ஒரு ஜனநாயக கூட்டு அரசாங்கத்தால், சில கொள்கைகள் நிறைவேற்றப் பட வேண்டுமென்று கூறிற்று.

இந்த ஐந்து தீர்மானங்களும் உண்மையிலேயே கோமிங்டாங் சர்வாதிகார ஆட்சியையும் மற்றும் உள்நாட்டு யுத்த கொள்கையையும் மற்றும் நிலப்பிரபுத்துவ, தரகு முதலாளித்துவ மற்றும் பாசிச அரசியல் அடிவருடித்தன அரசாங்க அமைப்பையும் நிராகரிப்பதாக இருந்தன. அப்போது நிலவிக் கொண்டிருந்த நிலைமைகளின் கீழ், சமாதானத்திற்காகவும் ஜனநாயகத்திற்காகவும் நாடு முழுவதும் இருந்த மக்களின் எண்ணங்களுக்கு அவை அடிப்படையிலே இணக்கமாக இருந்தன. அவை மக்களுக்கு ஒரு அரசியல் வெற்றியையும், பிற்போக்குவாதிகளுக்கு ஒரு அரசியல் தோல்வியையும் பிரதி நிதித்துவப்படுத்தின. அதனால்தான், தீர்மானகள் நிறைவேற்றப்பட்டது குறித்து பிற போக்கு வாதிகள் மூர்க்கத்தனமாக இருந்தார்கள். ஆனால். அதே சமயத்தில் எல்லா இடங்களிலும் இருந்த அரசியல் கலந்தாலோசனை மாநாட்டின் வெற்றியினைக் கண்டு மக்கள் உற்சாகத்தோடு வரவேற்றார்கள்.

### 4. அமெரிக்க அரசாங்கத்தின் ஆதரவோடு கம்யூனிஸ்ட் எதிர்ப்பு உள்நாட்டு யுத்தத்திற்காக, கோமிங்டாங் பிற் போக்கு வாதிகளின் தயாரிப்புகள்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, எப்பொழுதும் போலவே அதனுடைய வாக்குறுதிக்கு உண்மையாக நடந்து கொள்வது போல், மக்கள் விடுதலை சேனையின் சகல படைப் பிரிவுகளுக்கும் ஒரு யுத்த நிறுத்த உத்தரவை 1946 ஜனவரி 10இல் கொடுத்தது. அனைத்து மக்களோடு ஒன்று சேர்ந்து அரசியல் கலந்தாலோசனை மாநாட்டின் தீர்மானங்களை அமுல் நடத்துவதற்காக முயற்சி செய்ய ஆரம்பித்தது.

எனினும், கோமின்டாங் பிற்போக்கு வாதிகளின் பார்வையில், யுத்த நிறுத்த உடன்பாடும் அரசியல் கலந்தாலோசனை மாநாட்டின் தீர்மானங்களும் கம்யூனிஸ்ட்களுக்கு எதிராக அவர்களது ராணுவ நடவடிக்கைகைகளை வசதி செய்வதற்கான

அரசியல் சாகசங்களைத் தவிர வேறெதுவுமில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவில் பந்தோபஸ்தோடு இருப்ப தாக உணர்ந்துக் கொண்டு, சீனப் பிற்போக்குவாதிகள் அவர் களது சூழ்ச்சிகளை உருப்பெறச் செய்வதற்கான கம்யூனிஸ்ட் கட்சியின் விடுதலை சேனையின் முக்கியமான தடங்கல்களாக இருப்பதாக கருதினார்கள். எதிர் புரட்சி உள்நாட்டு யுத்தத்திற்கு தயார் செய்வதற்கு நேரத்தைக் கடத்தும் குறிக்கோளுடன் மட்டுமே அவர்கள் சமாதானத்திற்கான மக்களுடைய கோரிக்கை யோடு இணங்குவது போல் பாசாங்கு செய்தார்கள்.

அரசியல் கலந்தாலோசனை மகாநாடு நடைபெற்றுக் கொண் டிருந்த அதே சமயத்தில், கோமிங்டாங் பிற்போக்குவாதிகளின் விசேஷ ஏஜெண்டுகள் சுங்கிங் குடிமக்களின் சங்கத்தின் சாங்யை மண்டபத்தில் கூட்டப்பட்டிருந்த ஒரு கூட்டத்தின் மீது படை எடுத்தார்கள். இக் கூட்டம் வாழ்க்கையின் பல்வேறு துறைக ளிலும் இருந்த மக்களாலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரசியல் கலந்தாலோசனை மாநாட்டிற்கு ஆதரவான ஒரு கூட்டமாகும்; அந்த ஏஜண்டுகள், மாநாட்டிற்கு வந்திருந்த பல்வேறு பிரதிநிதிகள் தங்கி இருந்த இடங்களையும்கூட சோதனைப் போட்டார்கள். பிப்ரவரி 10இல், மாநாடு முடிந்த பிறகு, அரசியல் கலந்தாலோசனை மாநாட்டின் வெற்றி கரமான முடிவைக் கொண்டாடுவதற்காக சுங்கிங்கில் சியாவோ சாங்கோவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தின் மீது கோமிங்டாங் ஏஜண்டுகள் படை எடுத்தார்கள். இக்கூட்டத்தில் பங்கு கொண்ட கோமோ-ஜோ மற்றும் லீகஸ்-போ உள்பட பல பேச்சாளர்கள் காயமடைந்தார்கள். இது சியாவோ ஷாங்கோ சம்பவம் என்று அறியப்படலாயிற்று. பின்னர், கோமிங்டாங் சோவியத் எதிர்ப்பு, கம்யூனிஸ்ட் எதிர்ப்பு மற்றும் ஜனநாயக விரோத ஆர்ப்பாட்டங்களை சீனாவின் பல பகுதிகளிலும் ஏற்பாடு செய்தது. 1946 பிப்ரவரி 20இல், அதனுடைய ஏஜண்டு கள் பீகிங்கில் ராணுவ மத்தியஸ்தத்திற்கான நிர்வாக தலைமை காரியாலயத்தைச் சின்னாபின்னாமாக்கினார்கள். அரசியல் கலந்தாலோசனை மாநாட்டின் தீர்மானங்களுக்கு எதிரான இத்தகைய சகல வெறித்தனமான செயல்களிலும், ஏஜெண்டுகள் தங்களைச் சாதாரண குடிமக்கள் போல் முகமூடி தரித்துக் கொண்டிருந்தார்கள்

1946 மார்சில், கோமின்டாங் மத்திய நிர்வாக குழு ஒரு விரிவடைந்த கூட்டத்தின் நகல் அரசியல் சட்டம் சம்பந்தமான

அடிப்படையான ஜனநாயகக் கோட்பாடுகளைப் பகிரங்கமாக மறுத்துரைத்தது; இந்த அடிப்படையான ஜனநாயகக் கோட்பாடுகள் அரசியல் கலந்தாலோசனை மாநாட்டின் ஒரு தீர்மானத்தில்—வரையறுக்கபட்டியிருந்தது; இக்கோட்பாடுகள் பாராளுமன்ற அமைப்பையும், மந்திரிசபை அமைப்பையும் மற்றும் மாநில சுயாட்சி முறையையும் ஏற்பாடு செய்வதற்கு வகைசெய்திருந்தது. இத்தகைய கோட்பாடுகள் டாக்டர் சன்யாட்-சென்னின் போதனைகளின் ஜனநாயக சாராம்சத்தை உள்ளடக்கி இருந்தன; மற்றும் அப்பொழுது நிலவிக் கொண்டிருந்த நிலமைகளின்கீழ், ஜனநாயக அரசியல் சட்டவாத பாதையில், சீனாவை அழைத்து சென்றிருக்கும் சர்வாதிகாரத்தை, ஒரு ஜனநாயக அரசியல் அமைப்பாக மாற்றுவதற்கு சீனாவைச் சாத்தியமாக செய்வதில் இத்தகைய கோட்பாடுகள் கேந்திரமான முக்கியத்துவம் உடையதாக இருந்தன. எனவே, அவை இயக்க மையமாக மாறின; இந்த இயக்க மையத்தைச் சுற்றிலும் சீன ஜனநாயகவாதிகளுக்கும் பிற்போக்குவாதிகளுக்கும் இடையே போராட்டம் வளர்ந்தது.

கோமிங்டாங் பிற்போக்குவாதிகள், டாக்டர் சன்யாட்-சென்னின் போதனைகளின் ஜனநாயக சாராம்சத்தை முற்றிலும் ஒழித்துக்கட்டிக் கொண்டிருந்தார்கள். அரசியல் சட்டம், அரசு நிலைநாட்டப்படுவ்தற்கான கோட்பாடுகளின் வரைகோட்டின் மீதும் மற்றும் ''ஐந்து அரசு அரசியல் சட்டத்தின்''[3] மீதும் அடிப்படையாக கொண்டிருக்க வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். நகல் அரசியல் சட்டம் சம்பந்தமாக அரசியல் கலந்தாலோசனை மாநாட்டினால் வரையறுக்க பட்டிருந்த கோட்பாடுகளைத் தூக்கி எறிவதற்கு அவர்கள் இதை ஒரு நொண்டிச்சாக்காக பயன்படுத்தினார்கள். நிர்வாக அதிகாரம், ''திறமை உள்ளவர்களிடம்'' இருக்க வேண்டுமென்று வாதித்து கொண்டும், அதே சமயத்தில், ''அரசியல் அதிகாரம்'', ''அதிகாரம் பெற்றிருப்பவர்களுக்கு'' சொந்தமாக வேண்டும் என்றும் வாதித்துக் கொண்டும், ''அதிகாரத்திற்கும் திறமைக்கும் இடையே ஒரு தெளிவான வேறுபாடு'' இருக்க வேண்டும் என்பதற்காகவும் மற்றும் ''ஐந்து அதிகர்ரங்கள் பிரிக்கப்பட வேண்டும்'' என்பதற்காகவும் அவர்கள் முணுமுணுத்து கொண்டிருந்தார்கள். ''எந்த விதமான திறமையும் இல்லாதவர்கள்'' என்று அவர்கள் மக்களை அவதூறு செய்தார்கள். மற்றும் இதன் விளைவாக அவர்கள் நாட்டை ஆளுவதற்குச் சக்தியற்றவர்கள் என்றும் அவதூறு செய்தார்கள். அவர்களது அடித்துக் கூறும்

பேச்சுகள். மக்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனங்களுடன் எந்த விதமான அரசியல் அதிகாரமும் இல்லாதபடி பறிக்க படுவதற்கு வழி நடத்திச் செல்லும் ஒரு விவரம் என்ற முறையில், அரசியல், அதிகாரம் ஸ்தூலமான விஷயமாக உள்ளது. அரசாங்க ஸ்தாபனங்கள், நீதி மன்றங்கள், துருப்புகள், போலீஸ், மற்றும் ஆயுதமேந்திய காவல் படைகள், அதனுடைய திட்டவட்டமான வெளிப்படுதல்களாக உள்ளன. இவற்றை கட்டுப்படுத்துபவர்கள் அரசியல் அதிகாரம் மற்றும் நிர்வாக அதிகாரம் ஆகிய இரண்டையுமே பெற்றிருக்கிறார்கள்; இரண்டுமே ஒரே விஷயமாக உள்ளது. ஒரு உண்மையான ஜனநாயகம் என்பது மக்களின் அதிகாரம் அரசாங்கத்தின் அதிகாரமாக இருக்கும் ஒரு ஜனநாயகமாகும். மக்களும் அவர்களுடைய பிரதிநிதிகளும் நிர்வாக அதிகாரம் பறிக்கப்பட்டிருப்பவர்களாக இருப்பார்களே யானால், அப்பொழுது மக்களுக்கு எந்தவிதமான அரசியல் அதிகாரமும் கிடையாது. திறமையில் இருந்து அதிகாரத்தைப் பிரிப்பது பற்றிய டாக்டர் சன்யாட்-சென்னினுடைய கருத்துக்களை ஒரு சாக்காக பயன்படுத்திக் கொண்டு, கோமிங்டாங் பிற்போக்கு வாதிகள் அரசு இயந்திரத்தை அப்படியே பறித்துக் கொண்டிருந்தார்கள்; நிலப்பிரபுத்துவ சர்வாதிகாரத்தையும் தரகர்களின் சர்வாதிகாரத்தையும் நிலைநாட்டிக் கொண்டிருந்தார்கள்; மற்றும் தேசம் முழுவதையும் பாசிசத்தின் இரும்புப் பிடியின் கீழ் வைத்துக் கொண்டும் இருந்தார்கள்.

1946 ஏப்ரலில், தேசிய அரசியல் குழுவின் ஒரு கூட்டத்தில், சியாங்கை-ஷேக் மீண்டும் ஒரு முறை, "சட்ட பூர்வமான அரசாங்க அமைப்பு" என்று அழைக்கப்பட்ட அமைப்பைப் பற்றி குறிப்பிட்டு, அந்த அமைப்பு தொடர்ந்து நீடிக்க படாமல் இருப்பதற்கு அனுமதிக்கப்படகூடாது என்று கூறினார். "நியாயமான அரசாங்க அமைப்பு" என்பது உண்மையில் "அரசியல் சட்டம்" என்பதைத் தவிர வேறெதுவும் அல்ல; இந்த தற்காலிக அரசியல் சட்டம் 1931ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது; மற்றும் இதன் அடிப்படையில்தான் தேசிய அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டு இருப்பதாக சியாங்கை-ஷேக்கினால் கூறப்பட்டிருந்தது. ஆனால் உண்மையில், தேசிய அரசாங்கத்தின் நியாயமான அமைப்பு சியாங்கை-ஷேக்கும் அவனது கும்பலும் கோமிங்டாங் மத்திய நிர்வாக கமிட்டிற்கு எதிராக திருப்பிய பொழுது, 1927 ஏப்ரல் 12லிருந்து நீண்ட காலமாகவே தொடர்ந்து இருக்கவில்லை. 1931ம் ஆண்டு நடைபெற்ற தேசிய மாநாடு சியாங் கும்பலின் ஒரு

நாடாக மட்டுமே இருந்தது; இந்த மாநாடு கோமிங்டாங்கின் இதர கோஷ்டிகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளாமலேயே நடைபெற்றது; மக்களின் பிரதிநிதிகள் கலந்துக் கொள்ளவில்லை என்று சொல்லத் தேவை இல்லை. அந்த மாநாட்டைக் கூட்டி, சியாங்கை-ஷேக் ஒரு பாசிச அரசிற்கான ஒரு சட்டத்தை உருவாக்குததற்கு முயற்சி செய்திருந்தான்; மற்றும் பாசிச சர்வாதிகாரத்தின் அடிப்படையில், மக்களைக் கொன்று குவிக்கும் நோக்கத்திற்காகவும் அவனுடைய எதிரிகள் அனைவரையும் ஒழித்துக் கட்டுவதற்காகவும் உள்நாட்டு யுத்தத்தை விஸ்தரிப்பதற்காகவும் சியாங்கை-ஷேக் முயற்சி செய்திருந்தான்.

1946 ஜனவரி 10இல், சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் கமிட்டி நாடு முழுவதிலும் இருந்த விடுதலை சேனையின் சகல பிரிவுகளுக்கும் ஒரு யுத்த நிறுத்த உத்தரவினைக் கொடுத்தது. ஆனால் யுத்த நிறுத்த உடன்பாட்டை மீறி, விடுதலை சேனையைத் தொடர்ந்து ஆத்திரமூட்டிக் கொண்டிருந்த ஜப்பானிய துருப்புகளும் கைக்கூலி துருப்புகளும் இன்னும் பெரும் எண்ணிக்கையில் இருந்து கொண்டிருந்தார்கள். சகல மோதல்களையும் முடிவிற்கு கொண்டு வரும் பொருட்டு, சகல ஜப்பானிய துருப்புகளையும் கைக்கூலித் துருப்புகளையும் ஆயுதமற்றவர்களாக செய்வதற்கு கோமிங்டாங்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் கூட்டு நடவடிக்கைகளைச் சீக்கிரமாக எடுக்க வேண்டுமென்று சீனக் கம்யூனிஸ்டு கட்சி மூவர் கமிட்டிக்கும் பீகிங் நிர்வாகத் தலைமை காரியாலயத்திற்கும் பிரேரேபித்தது. இத்தகைய நடவடிக்கைகளை அமல்படுத்துவது உள்நாட்டு சமாதானத்திற்கு நிச்சயமாக பங்கினைச் செலுத்தியிருக்கும். ஆனால், ஒரு ஜனநாயக அரசாங்கத்தினாலும் மற்றும் ஜனநாயக தலைமை கட்டளையினால் மட்டுமே நிறைவேற்றப்படக்கூடிய ஒரு கடமையாக இக்கடமை இருந்தது. ஆகவே கோமின்டாங் அரசாங்கத்தையும் அதனுடைய ராணுவ குழுவையும் சீக்கிரமாக திருத்தி அமைக்க வேண்டுமென்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிற்று.

ஆனால், சியாங்கை-ஷேக்கும் கோமின்டாங்கும் யுத்த நிறுத்த உடன்பாட்டில் கையெழுத்திடுவதில் நேர்மையற்றவர்களாக இருந்தமையால், அவர்கள் அந்த உடன்படிக்கையைத் தொடர்ந்து மீறிக் கொண்டிருந்தார்கள். 1946 ஜனவரி 7இல், ஒரு யுக்த நிறுத்த உத்தரவினைக் கொடுப்பதற்கு முன்பு, சியாங் "கேந்திரமான இடங்களைக்" கைப்பற்றும்படி அவனுடைய

துருப்புகளுக்கு உத்தரவிட்டான். மேலும், அந்த உத்தரவு அமலுக்கு வரும் தினத்தின் முந்தைய நாளில் அவன் அவனது துருப்புகளுக்கு "யுத்த தந்திர ரீதியான மையங்களுக்கு விரைந்து செல்லும்படி" மீண்டும் உத்திரவிட்டான். பகிரங்கமாக அவன் யுத்த நிறுத்த உத்தரவு கொடுத்தான். ஆனால் ரகசியமாக அவன் சுடும்படி உத்தரவுகளைக் கொடுத்தான்.

நாட்டின் எல்லா பகுதிகளிலும் சகல மோதல்களும் உடனடியாக நிறுத்தபட வேண்டும் என்பதற்கு யுத்த நிறுத்த உடன்பாடு வகை செய்திருந்தது. வடகிழக்கு சீனாவிற்கு, சீனாவின் ஒரு பகுதி என்ற முறையில் இயல்பாக எந்த விதமான விதிவிலக்கும் இருக்கவில்லை; எனினும் வடகிழக்கு சீனாவில் இருந்த கோமின்டாங் துருப்புக்கள் யுத்த நிறுத்த உடன்பாட்டை மீறி ஜனநாயக நேச ராணுவத்தைத் தொடர்ந்து தாக்கிக் கொண்டிருந்த யுத்த அரங்கங்களில் கடுமையான நஷ்டங்கள் ஏற்பட்டத்தின் காரணமாகவும் தேசம் முழுவதின் நிர்பந்தத்தின் காரணமாக மட்டுமே அந்த ஏரியாவிற்கு ஒரு விசேஷ யுத்த நிறுத்த உடன்பாட்டில் கையெழுத்திடும்படி கோமிங்டாங் நிர்ப்பந்தப்படுத்தபட்டிருந்தது. ஆனால் அவன் ஜனநாயக நேச ராணுவத்தைத் தாக்குவதில் விடாப்பிடியாக இருந்தமையாலும், வடகிழக்கு சீனாவின் மக்களால் அமைக்கப்பட்டிருந்த ஸ்தலசுய ஆட்சி அரசாங்கத்தைக் கவிழ்ப்பதில் விடாப்படியாக இருந்தமையாலும் சியாங்கை-ஷேக் அந்த யுத்த நிறுத்த உடன் படிக்கையை நிறைவேற்றுவதற்கு அவன் தயராக இல்லை.

சமாதானத்தின் நலனை முன்னிட்டு மக்கள் விடுதலை சேனை இஷ்ட பூர்வமாக சாங்சுன்னை காலி செய்தது. ஆனால் கோமிங்டாங் துருப்புகள் அவர்களுடைய தாக்குதலைத் தொடர்ந்து நடத்திற்று. ஷிபிங்சி போராட்டத்தில், அவர்கள் பெரும் எண்ணிக்கையில் நிர்மூலம் செய்யப்பட்டார்கள். 1946 ஜூன் 6இல் கோமிங்டாங் போரிடுவதை நிறுத்தும்படி நிர்பந்திக்கப்பட்டார்கள்; ஆனால் பின்னர் ஒரு திட்டவட்டமான கால அவகாசத்திற்குள் வடகிழக்கில் ரயில்வே பாதை நெடுகிலும் எல்லா நகரங்களிலும் ஏரியாக்களிலும் இருந்து விடுதலை சேனை பின்வாங்க வேண்டுமென்று அது கோரிற்று.

பெரும் சுவற்றிற்கு தெற்கே, மத்திய சீனாவின் நீண்ட காலமாக வளைக்க பட்டிருந்த 60,000 பேர் கொண்ட விடுதலை சேனையைச் "சுற்றி வளைத்து நிர்மூலம் செய்வதற்காக" கோமிங்டாங் 3,00,000 துருப்புகளை அனுப்பவதற்கு திட்ட

மிட்டதும் இந்த நடவடிக்கை நிறுத்தபடாவிடில், நாடு தழுவிய விளைவுகளை உண்டாக்கும் என்றும் மற்றும் முழுமையான தொரு உள்நாட்டு யுத்தத்தின் ஆரம்பத்தைக் குறிக்கும் என்றும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி கோமிங்டாங்கை எச்சரித்தது. ஆனால் நான்கிங்கில் இன்னும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஜூன் 26 இல் கோமிங்டாங் அதனுடைய திட்டத்தை செயல்படுத்திற்று; விடுதலை சேனை உடன்படிக்கையை முறிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது.

சகல துருப்புகளின் இயக்கத்தையும் நிறுத்துவது யுத்த நிறுத்த உத்தரவின் முக்கியமானதொரு அம்சமாகும். எனினும், யுத்த நிறுத்த உத்தரவு கொடுக்கபட்ட தினத்தில் இருந்து 1946-மே இறுதி வரையிலும் உள்நாட்டு யுத்த தயாரிப்பில் கோமிங்டாங் அதனுடைய துருப்புகளில் 13,00,000 பேரை தயார் நிலையில் வைத்தது; மற்றும் விடுதலை பெற்ற ஏரியாக்களைச் சுற்றி வளைக்கும் குறிக்கோளோடும் முற்றுகையிடும் குறிக்கோளோடும் மேற்கு ஹோப்பெய், தெற்கு ஷான்சி தெற்கு ஹோனான் மற்றும் வடக்கு ஹோப்பெய் ஆகிய பகுதிகளில் வரிசை வீடுகளையும் கட்டி இருந்தது.

1946 ஜனவரியில் இருந்து ஜூன் வரையிலும், கோமிங்டாங் ராணுவம் விடுவிக்கப்பட்ட ஏரியாக்களில் 4,158 இடங்களில் 4365 தாக்குதல்களை நடத்தி, 40 பட்டிணங்களையும் 2577 கிராமங்களையும் கைப்பற்றிற்று. இத்தாக்குதல்களில் உபயோகிக்கப்பட்ட படைகளின் மொத்த எண்ணிக்கை 27,70,000 ஆகும்.

ஜூன் 17இல், அரசியல் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கு முன்பு முற்றிலும் முட்டாள்தனமான நிபந்தனைகளை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஒத்துக் கொள்ளவேண்டும் என்று சியாங்கை-ஷேக் எதேச்சாதிகரமாக கோரினான். வடகிழக்கு சீனாவில் இருந்த கியாங்சு-அன்வெய் ஏரியா, ஜிகோல் மற்றும் ஹோப்பெய் மாகாணங்கள், லுங்காய் மற்றும் டியன்சின்-பூகோய் ரெயில்வேக்கள் மற்றும் வெய்ஹைவெய் மற்றும் என்டாய் துறைமுகங்கள் ஆகிய திட்டத்தை எல்லா ஒன்பது மாகாணங்களையும் எடுத்துக் கொள்வதாக அவன் வலியுறுத்தினான்.

இந்தக் கால கட்டத்திலும் பின்னரும் நடைபெற்ற அமெரிக்க அரசாங்கத்தின் மத்தியஸ்தம், கோமிங்டாங் அதனுடைய யுத்தத் தயாரிப்புகளைப் பலப்படுத்துவதற்குப் பெருமளவிற்கு உதவி செய்தது.

அமெரிக்க ஏகபோக முதலாளிகள் முழுக்கமுழுக்க ஆதிக்கத்தைப் பெற விரும்பிய மிகமிக பெரிய காலனி சந்தையாக

சீனா இருந்தது; மற்றும் சீனாவை ஒரு அமெரிக்க காலனியாக மாற்றுவது அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் பிரதான யுத்த பிற்கால கொள்கைகளில் ஒரு கொள்கையாகவும் இருந்தது. இக் கொள்கையை நிறைவேற்றுவதற்கு, ஒரு உள்நாட்டு யுத்தத்தின் மூலம் சீனமக்களைத் தாக்குவதற்கு அவர்கள் கோமிங்டாங் பிற்போக்குவாதிகளை ஒரு கருவியாக பயன்படுத்தினார்கள். உண்மையில், அவர்களுடைய உதவியோடு மட்டுந்தான் கோமிங்டாங் அதனுடைய கம்யூனிஸ்ட் உள்நாட்டு யுத்தத்தை துவக்க முடியும். இந்த அடிப்படையில் அமெரிக்காவும், கோமிங்டாங் கும் யுத்தத்திற்கான சுறுசுறுப்பான தயாரிப்பில் மேலும் நெருக்க மாக ஒத்துழைத்தார்கள்.

ஜார்ஜ் சி. மார்ஷல் 1945 டிசம்பரில் சீனாவிற்கு வந்தார். பெயரளவில் அவர் சீன உள்நாட்டு யுத்தத்தில் ஒரு மத்தியஸ் தராக இருந்தார். ஆனால் உண்மையில் அவர் கோமிங்டாங் கிற்கு அதனுடைய யுத்த தயாரிப்புகளைத் தீவிரப்படுத்துவதற்கு உதவி செய்தார். அரசியல் கலந்தாலோசனை மாநாடு நடை பெற்றுக் கொண்டிருந்தபொழுது சீன அரசாங்கத்தில் சியாங்கை-ஷேக்கின் நிலையைப் பலப்படுத்துவதற்கு அவர் ஒரு திட்டத்தைத் தயாரித்தார். 1946 பிப்ரவரி 7-இல், அமெரிக்க அரசாங்க இலாகா ஒரு சோவியத் எதிர்ப்பு குறிப்பை கோமிங்டாங்கிற்கு அனுப்பி வைத்தது; இக்குறிப்பு, சோவியத்யூனியன், கம்யூனிஸ்ட் கள் ஜனநாயகம் ஆகியவற்றிற்கு எதிரான அவர்களது நடவடிக்கையில் சீனாவில் இருந்த பிற்போக்குவாதிகளை ஊக்கு வித்தது. அமெரிக்க அரசாங்கம் வடகிழக்கு சீனாவில் இருந்த துறைமுகங்களுக்கு கோமிங்டாங் அரசாங்கம் அதனுடைய துருப்புகளை அனுப்பிவைப்பதற்கு உதவி செய்யும்படி அல்பர்ட்சி வெடிமேயருக்கு உத்தரவு கொடுத்தது; தளவாடங்களைப் பெருமளவில் அமெரிக்க அரசாங்கம் கோமிங்டாங்கிற்குச் சப்ளை செய்தது. 1946 ஜூன் 14-இல், அமெரிக்க அரசாங்க காரியதரிசி ஜேம்ஸ் பைர்னெஸ் பத்தாண்டு காலததிற்கு சியாங்கை-ஷேக் கிற்கு ராணுவ உதவி கொடுப்பதற்காக, ஒரு மசோதாவை காங்கிரஸிற்கு சமர்ப்பித்தார். மற்றும் சீனாவில் இருந்து அமெரிக்கா அதனுடைய படைகளை வாபஸ் பெறாது என்றும் பிரகடணம் செய்தார். சின்வாங்டாவோவிலும் மற்றும் சிங்டாவோவிலும், அமெரிக்க படைகள் சீன மக்கள் விடுதலை சேனையை ஆத்திரமூட்டி கோமிங்டாங் சேனையின் முன்னணி காவலர்கள் போய் சண்டையிட்டனர்.

அமெரிக்காவோடு சீனாவின் உறவுகள் என்ற அமெரிக்க வெள்ளை அறிக்கையில் (1949), அமெரிக்க அரசாங்கம் இரண்டாவது உலக யுத்தத்திற்கு சீனாவில் அதனுடைய ஏகாதிபத்தியக் கொள்கையை ஒப்புக் கொண்டது. யுத்தத்திற்கு பிறகு சீனாவில் மூன்று சாத்தியமான நடவடிக்கை பாதைகளால் அமெரிக்கா எதிர் நோக்கப்பட்டிருந்தது. முதல் பாதை, "முற்றாக வெளியேறுவது" என்பதாகும். அமெரிக்க அரசாங்கம் இதை செய்யாது; ஏனெனில், அதனுடைய "சர்வதேச பொறுப்புகளை" (வேறு வார்த்தைகளில், உலகத்தை ஆதிக்கம் செலுத்துவது) மற்றும் அதனுடைய சீனா பற்றிய "பரம்பரையான" (அதாவது, ஆக்கிரமிப்பு தன்மை வாய்ந்தது) கொள்கையை கைவிடுவதை அது பிரதிநிதித்துவப் படுத்தி இருக்கும் என்று அது அடித்துக் கூறிற்று. இரண்டாவது பாதை, "கம்யூனிஸ்ட்களை ஒழித்துக் கட்டுவதற்கு தேசியவாதிகளுக்கு உதவி செய்வதற்கு பெரியதொரு அளவில் ராணுவ ரீதியாக அமெரிக்க தலையிட்டிருக்க முடியும்" என்பதாகும். ஆனால், சீன மக்கள், பலமான தேச பக்த மக்களாக இருந்தார்கள் என்பதும் மற்றும் சீனாவின் ஆதிபத்திய உரிமையின் மீது எந்த விதமான மீறலும் அவர்களது உறுதியான எதிர்ப்பினைச் சந்திக்கும் என்பதும் அமெரிக்க அரசாங்கத்திற்கு தெளிவாக தெரியும். மேலும், அமெரிக்க மக்கள் சீனாவிற்கு எதிரான ஒரு யுத்தத்திற்கு ஒரு பொழுதும் அனுமதி கொடுத்திருக்க மாட்டார்கள். எனவே, அமெரிக்கா இந்தப் போக்கை மேற்கொள்வதற்கு துணியவில்லை. முதல் போக்கினை எடுப்பதற்கு விரும்பாமல் இருந்தமையாலும் மற்றும் இரண்டாவது போக்கினை எடுப்பதற்கு துணியாததாலும், அமெரிக்க அரசாங்கம் மூன்றாவது பாதைக்கு—சாத்தியமான அளவிற்கு சீனாவின் மீது கோமின்டாங் அதனுடைய அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்கு கோமிங்டாங்கிற்கு உதவி செய்வது என்ற பாதைக்கு—வந்தது. இத்தகைய ஏகாதிபத்திய நோக்கங்களோடுதான் ஜார்ஜ் சி. மார்ஷல் மத்தியஸ்தம் செய்ய சீனாவிற்கு வந்தார். இந்த முறையில், சீனாவின்பால் அதனுடைய கொள்கைக்கு இணக்கமான முறையில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியோடு ஒரு தற்காலிக உடன்பாட்டினைச் செய்து முடிப்பதற்கு கோமிங்டாங்கிற்கு உதவி செய்வதில், அமெரிக்க அரசாங்கம் நேரடி நடவடிக்கை எடுத்தது, "தேசிய அரசாங்கத்தின் செல்வாக்கினைப் பாதுகாக்கவும் அதிகரிக்கவும் கூட" அமெரிக்க அரசாங்கம் கோமின்

டாங்கிற்கு உதவுவதில் நேரடி நடவடிக்கை எடுத்தது. அமெரிக்க அரசாங்கத்தின் மத்தியஸ்தத்தின் நோக்கம் என்னவென்றால், கம்யூனிஸ்ட் எதிர்ப்பு உள்நாட்டு யுத்தத்தைத் துவக்கும் பொருட்டு கோமிங்டாங் பிற்போக்குவாதிகளின் பலத்தை அதிகரிப்பதாகவும் மற்றும் கோமிங்டாங் அதன் இருண்ட ஆட்சியை சீனாவில் நீடிப்பதற்கு உதவி செய்வதாகவும் மற்றும் சீன மக்களை அடிமைப்படுத்துவதற்கு கோமிங்டாங்கை ஒரு கருவியாக பயன்படுத்துவதாகவும் இருந்தது.

கோமிங்டாங் பிற்போக்குவாதிகளுக்கு அமெரிக்க அரசாங்கத்தின் ராணுவ உதவியும் மற்றும் சீனாவின் உள்நாட்டு விவகாரங்களின் தலையீடும், உள்நாட்டு யுத்தம் வெடிப்பதற்கும், விஸ்தரிப்பதற்கும் மற்றும் நிறுத்தப்படுவதற்கு கஷ்டமானதாக மாறியதற்கும் காரணமாக இருந்தது. அமெரிக்க அரசாங்கம் தான் சீனாவை உள்நாட்டு யுத்த பள்ளத்திற்குள்ளும் ஒற்றுமை இன்மைக்கும் பயங்கரத்திற்குள்ளும் வறுமைக்குள்ளும் தள்ளிற்று. சீனாவிலிருந்து பிற்போக்குவாதிகள் தனிமைப்படுத்தபட்டும் கஷ்டங்களில் சிக்குண்டும் கிடந்தார்கள். அந்நிய ஏகாதிபத்தியவர்களின் உதவி இல்லாமல், இரண்டவது உலக யுத்தத்திற்கு பிறகு, ஒரு உள்நாட்டு யுத்தத்தை நடத்துவறற்கு அவர்களுக்கு ஒரு பொழுதுமே பலம் இருந்திருக்க முடியாது. அமெரிக்க அரசாங்கத்திடம் இருந்து சீராக அதிகரித்துக் கொண்டிருந்த பல வகைப்பட்ட நடைமுறை உதவியோடு, சியாங்கை-ஷேக் மேலும் மேலும் கட்டு மீறியவனாக மாறினான். சியாங்கை-ஷேக்கிற்கு உதவி செய்வதற்காக அமெரிக்க மத்தியஸ்த கொள்கை ஒரு சாக்காக இருந்தது- சீனாவில் உள்நாட்டு யுத்தத்திற்கு ஒரு அஸ்திவரமான காரணமாக இருந்தது.

ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்திற்கு பிறகு, ஒரு கம்யூனிஸ்ட் எதிர்ப்பு, மக்கள் விரோத உள் நாட்டு யுத்தத்தைத் துவக்க முயற்சிப்பதில் கோமிங்டாங் விடாப்பிடியாக இருக்கும் என்பது தவிர்க்க முடியாததாக இருந்தது. ஏகாதியபத்தியவாதிகளால் ஆதரிக்கப்பட்ட பிற்போக்கு வர்க்கங்கள் , நிலப் பிரபுத்துவ வர்க்கம்). அதிகார வர்க்கங்கள் (முதலாளி வர்க்கம்) சீனாவில் இருக்கும் வரையிலும், உள்நாட்டு யுத்தத்திற்கான பொருளாதார அடிப்படை அங்கே இருந்தது. எனினும், வர்க்கங்களின் சம்பந்தபடுத்திப் பார்க்கும் பலமும் புரட்சி சக்திகளால் நடத்தப்பட்ட போராட்டமும், சில நிலமைகளின்கீழ், உள்நாட்டு யுத்தம்வெடிக்கக் கூடுமா என்பதைத் தீர்மானிப்பதில்

முக்கியமானதொரு பாத்திரத்தை வகிக்க முடியும். ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்திற்கு பிறகு நாடு முழுவதிலும் இருந்த மக்கள், சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் கோரினார்கள்; மற்றும் உள்நாட்டு யுத்தத்தையும் சர்வாதிகாரத்தையும் எதிர்க்கவும் செய்தார்கள். சமாதானத்தை ஒப்புக் கொள்ளும் படியும் சமாதான பூர்வமான நிலைமைகளின்கீழ் சீர்திருத்தத்தை நிறைவேற்றும் படியும் கோமிங்டாங்கைத் தூண்டுவதற்கு மக்கள் விடாப்பிடியாக முயற்சித்தார்கள். உள்நாட்டு யுத்தம் வெடிப்பதற்கு முன்பு, சமாதானத்தை நிலைநாட்டுவதற்குச் சாத்தியமான ஒவ்வொரு முயற்சியையும் மக்கள் மேற்கொண்டார்கள். சீன மக்களின் நல்லெண்ணங்களையும் கோரிக்கைகளையும் நிறைவேற்றும் பொருட்டும், மற்றும் மக்களின் கண்களில் கோமிங்டாங்கின் யுத்த நோக்கங்களை முழுமையாக அம்பலப்படுத்தும் பொருட்டும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மிகமிகப் பெரிய முயற்சிகளை செய்தது; மற்றும் யுத்தத்தைத் தவிர்ப்பதற்காகவும் மற்றும் சமாதானத்தை உருவாக்குவதற்காகவும் ஒரு போராட்டத்தை நாடு முழுவதிலும் இருந்த மக்களைத் தலைமை தாங்குவதில் மாபெரும் பொறுமையும் காட்டிற்று.

யுத்தம் வெடிப்பதினின்றும் தடுப்பதற்கு போராட்டம் தோல்வியுற்ற போதிலும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்த காலக் கட்டத்தில், நாடு முழுவதிலும் இருந்த மக்களுக்கு விரிவான சக்தி வாய்ந்த போதனையைக் கொடுத்தது. அக்டோபர் 10 ஆம் தேதி உடன்பாட்டின் மூலமும் அரசியல் கலந்தாலோசனை மகாநாட்டின் தீர்மானங்களின் மூலமும், கட்சி அதனுடைய கொள்கைகளை பிரச்சாரம் செய்து, அது சமாதானத்திற்காகவும் ஜனநாயகத்திற்காகவும் சலிக்காமல் போராடிக்கொண்டிருந்தது. என்ற விபரத்தைத் தெறியப்படுத்திற்று. யுத்த நிறுத்த உடன்பாட்டையும் அரசியல் கலந்தாலோசனை மாநாட்டின் தீர்மானங்களையும் கிழித்தெறிவதில் கோமிங்டாங்கின் விசுவாசமற்ற தன்மையை அம்பலப்படுத்தியதாலும் மற்றும் மத்தியஸ்தம் என்ற போர்வையின்கீழ் உள்நாட்டு யுத்தத்தைத் தூண்டிவிடுவதற்கு அமெரிக்க அரசாங்கம் செய்த சூழ்ச்சியை அம்பலப்படுத்தியதாலும், கம்யூனிஸ்ட் கட்சி நாடு முழுவதிலும் உள்ள மக்களுக்கு கற்றுக் கொடுத்தது. சமாதானம், ஜனநாயகம், சுதந்திரம் ஆகியவற்றை அவர்கள் அனுபவிப்பதற்கு முன்பாகவும் கோமிங்டாங் பிற்போக்குவாதிகளைத் தூக்கிஎறியவேண்டிய அவசியத்தை உணரும்படி செய்வதையும் மற்றும் சீனாவில் இருந்து அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளைத் துரத்துவதற்கான அவசியத்தை

உணரும்படி செய்வது மற்றும் சமாதானம் பற்றியும், கோமிங் டாங் பற்றியும், மற்றும் அமெரிக்க அரசாங்கம் பற்றியும் அவர் களுக்கு இருந்த பிரமையைப் படிப்படியாக உதறித் தள்ளும்படி செய்வதையும் கம்யூனிஸ்ட் கட்சி, நாடு முழுவதிலும் உள்ள மக்களுக்கு கற்றுக் கொடுப்பது, சாத்தியமாகும்படி செய்தது. கோமிங்டாங் பிற்போக்குவாதிகள் மற்றும் அமெரிக்க ஏகாதி பத்தியவாதிகள் ஆகியோரின் நயவஞ்சகமான நடவடிக்கைகள் சீன மக்களின் முன்பு தோலுரித்து வைக்கப்பட்டன. சமாதானத் திற்கான மக்களின் கோரிக்கையை எந்த அளவிற்கு அதிகமாக பிற்போக்குவாதிகள் அலட்சியம் செய்தார்களோ அந்த அள விற்கு அதிகமாக அவர்கள் அரசியல் ரீதியாக தனிமைப்படுத்தப் பட்டிருந்தார்கள். கோமிங்டாங் உள்நாட்டு யுத்தத்தைத் துவக்குவதில் அமெரிக்கா ஆதரவு கொடுத்து வந்த சூழ்ச்சிகள் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு நீண்ட காலமாகவே தெரிந்திருந்தது. ஆகவே அது போதுமான அளவிற்கு சித்தாந்த ரீதியான தயாரிப்புகளையும் ஸ்தாபன ரீதியான தயாரிப்புகளையும் செய்திருந்தது. உள்நாட்டு யுத்தத்திற்குத் தயாரித்துக் கொண் டிருந்த கோமிங்டாங்கின் பிற்போக்கு கொள்கையை அம்பலப் படுத்திக் கொண்டிருந்த அதே சமயத்தில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி விடுவிக்கப்பட்ட ஏரியாக்களை விஸ்தரிப்பதற்கு மற்றும் இது வரையிலும் பிரிக்கப்பட்டிருந்த ஒரு ஏரியாவை மற்றொரு ஏரியாவோடு இணைப்பதற்கும் மக்களையும் ராணுவத்தையும் வழி நடத்திச் சென்றது. கோமிங்டாங் ஏஜெண்டுகளுக்கு எதிரான போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கும் மற்றும் குத்தகையையும் வட்டியையும் குறைப்பதற்காகவும், விவசாய சீர்திருத்தத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதிலும், உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும், சிக்கனத்தைக் கையாளுவதற் காகவும் ஒரு இயக்கத்தை கட்டவிழ்த்துவிடுவதிலும் கட்சி, விடுவிக்கப்பட்டிருந்த ஏரியாக்களில் மக்களுக்கு தலைமையைக் கொடுத்தது. இவை அனைத்தும் மற்றும் இதர நடவடிக்கை களும் பிற்போக்குவாதிகள் நாடு தழுவியதொரு உள்நாட்டு யுத்தத்தை துவக்கும்பொழுதும் மற்றும் யுத்தத்தைத் தூண்டிய வர்கள் தங்களுடைய சொந்த ரத்தத்தையே ருசி பார்க்கும் பொழுதும் பிற்போக்குவாதிகள் முற்றிலும் தோற்கடிக்கப் படுவார்கள் என்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்தோடு எடுக்கப் பட்டிருந்தன.

## அடிக்குறிப்புகள்

1. அவருடைய **அரசு நிலைநாட்டப்படுவதற்கான கோட்பாடுகளின் வரைகோடு** என்ற நூலில், டாக்டர் சன்யாட்-சென் "அரசு நிலைநாட்டப் படுதலின் நிகழ்ச்சிப் போக்கினை" மூன்று கால கட்டங்களாக பிரித்தார்; ராணுவ அரசாங்கம் அரசியல் அடிவருடித்தனம்; மற்றும் அரசியல் சட்ட ரீதியான அரசாங்கம் நீண்டதொரு காலத்திற்கு, சியாங்கை-ஷேக்கினால் தலைமை தாங்கப்பட்டிருந்த கோமிங்டாங் பிற்போக்கு வாதிகள், "அரசியல் சட்ட ரீதியான அரசாங்கத்தை" ஒத்திப் போடுவதற்காகவும் மற்றும் ஒரு எதிர் புரட்சிகரமான சர்வாதிகாரத்தை ஏற்படுத்துவதற்காகவும், இந்த முறையில் மக்களின் எல்லா சுதந்திரங்களையும், திருடுவதற்காகவும், "ராணுவ அரசாங்கம்" மற்றும் "அரசியல் அடிவருடித்தனம்" ஆகிய பதங்களை நொண்டிச் சாக்குகளாக உபயோகித்துக் கொண்டிருந்தார்கள்.

2. மக்களை ஏமாற்றும் பொருட்டும் அதனுடைய பாசிச ஆட்சியைக் கெட்டிப்படுத்தும் பொருட்டும், 1936இல் கோமிங்டாங் "சீன குடியரசின் நகல் அரசியல் சட்டத்தை" உருவாக்கிற்று; "மக்களுக்கு அரசு அதிகாரத்தை திருப்பிக் கொடுப்பது" என்று சொல்லப்பட்ட நோக்கத்தோடு அந்த நகல் அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டது. இந்த "நகல் அரசியல் சட்டம்" 1936 மே 5இல் பகிரங்கப்படுத்தப்பட்டது; எனவேதான் அந்தப் பெயர் கொடுக்கப்பட்டது.

3. அவை நிர்வாக, சட்டசபை ரீதியான கட்டுப்பாடு நிதித்துறை பூர்வமான மற்றும் பரீட்சை ஆகிய விஷயங்களை உள்ளடக்கி இருந்தன.

அத்தியாயம் பன்னிரண்டு

## மூன்றாவது புரட்சிகர உள்நாட்டு யுத்ததில் யுத்த தந்திர ரீதியான தற்பாதுகாப்பு. மக்கள் விடுதலை சேனையால் கோமிங்டாங்கின் ராணுவ முன்னேறித் தாக்குதல் முறியடிக்கபடுதல்.

(ஜூலை 1946—ஜூன் 1947)

### 1. ' புரட்சியுத்தத்தின் அரசியல் கோட்பாடுகளும் ராணுவ கோட்பாடுகளும்.

1946 ஜூலையில், உலகத்தின் முதல் எதிரியான சியாங்கை-ஷேக் கும்பல், உலகத்தின் மிகமிகப் பெரிய ஏகாதிபத்திய அரசான அமெரிக்காவின் ஆதரவோடு மக்களின் சித்தத்தை மீறி, மக்களின் விடுதலை பெற்ற ஏரியாக்களின் மீது நாடு தழுவியதொரு யுத்தத்தைத் திணித்தது.

யுத்தம் வெடித்த சமயத்தில் எதிரி பலத்தில் மிஞ்சியவனாக இருந்தான். மொத்தம் 43,00,000 போர் வீரர்களைக் கொண்ட ஒரு ராணுவத்தோடும் 30,00,00,000 மக்களோடும் பலத்தில் மிஞ்சியவனாக இருந்தான். மேலும் பெரிய நகரங்களின் மீதும், பெரும்பாலான ரயில்வே பாதைகளின் மீதும் செழிப்பான செல்வாதிகாரங்களின் மீதும் ஆதிக்கம் கொண்டிருந்தவனாக இருந்தான். மேலும், பத்துலட்சம் ஜப்பானிய துருப்புகளின் முழுமையான சாதனங்களையும் கோமிங்டாங் அரசாங்கம் கைப்பற்றி இருந்தது. ஆனால் எல்லாவாற்றிலும் மிகமிக முக்கியமான அம்சமாக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் தீவிரமான உதவி இருந்தது; அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கோமிங்டாங் துருப்புகளுக்குப் பயிற்சி கொடுத்து, ஆயுதபாணியாக்கி விடுதலை செய்யபட்ட ஏரியாக்களைத் தாக்குவதற்கு அவர்களை முன்னணிக்கு அனுப்பி வைத்தார்கள். கோமிங்டாங்கிற்காக பெரிய நகரங்களைப் பாதுகாப்பதற்காகவும் அல்லது விடுதலை பெற்ற ஏரியாக்களுக்குள் கோமிங்டாங் துருப்புகள் ஊடுருவ உதவி செய்வதற்காகவும் அமெரிக்க துருப்புகள் சீனாவில்

இறக்கபட்டன. உள்நாட்டு யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்காக கோமிங்டாங் பிற்போக்குவாதிகளுக்கு அவசியமான சப்ளைகளை அமெரிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்தது. மற்றும் இப்படிபட்டதொரு கம்யூனிஸ்ட் எதிர்ப்பு உள்நாட்டு யுத்தத்திற்கான தயாரிப்புகள் நீண்டகாலமாகவே நடைபெற்று வந்தது என்பது உண்மைதான். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் திட்டவட்டமான முழு ஆதரவின் காரணமாகத்தான் கோமிங்டாங் பிற்போக்குவாதிகள், ஒரு சில மாதங்களில் விடுதலை பெற்ற ஏரியாக்களை அழித்து விட முடியும் என்ற விருப்பமான நம்பிகையில் முழு அளவிலான அவர்களது உள்நாட்டு யுத்தத்தைத் துவக்குவதற்கு துணிந்தார்கள்.

மறுபுறத்தில் சீன மக்களின் விடுதலை சேனை மொத்தத்தில் 12,00,000 போர் வீரர்களுக்கும் சற்றும் அதிகமானவர்களையே கொண்டிருந்தது. மக்கள் படைகளைப்போல எதிரி துருப்புகள் மூன்றரை மடங்குகள் பெரிதாக இருந்தன. மற்றும் அவர்களது சாதனங்களும்கூட மிக அதிக மேம்பட்டவையாக இருந்தன. அப்பொழுது விடுவிக்கப்பட்டிருந்த ஏரியாக்களின் மக்கள் தொகை 13,00,00,000க்கும் சற்று அதிகமாக மட்டுமே இருந்தது. கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்களில் மக்கள் தொகையில் உத்தேசமாக மூன்றில் ஒரு பங்கு மக்கள் தொகையைக்கொண்டதாக இருந்தது. மேலும்,விடுதலை பெற்ற ஏரியாக்களுக்குள்ளே விவசாய சீர்திருத்தம் இன்னும் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை, அல்லது நிலப்பிரபுத்துவ பிற்போக்கு சக்திகள் முழுமையாக ஒழிக்கப்பட்டிருக்கவும் இல்லை. இதன் விளைவாக, மக்கள் விடுதலை சேனையின் பின்னணித் தளம் இன்னும் முழுமையாக கெட்டிப்படுத்தப்படவில்லை,

ராணுவ பலத்தின் மிச்சத்தில், கோமிங்டாங் ராணுவம் அரசியல்தரம், மக்களோடு உள்ள உறவுகள் ஆகியவற்றைத் தவிர இதர எல்லா அம்சங்களிலும் மேம்பட்டதாக இருந்தது. ஆகவே யுத்தம் ஆரம்பமானவுடனேயே, விடுதலை பெற்ற ஏரியாக்களின் ராணுவத்தையும் மக்களையும் ஒரே அடியில் தொலைத்துக்கட்டும் முயற்சியில் விடுதலை செய்யப்பட்ட ஏரியாக்களின் ராணுவத்திற்கெதிராகவும் மக்களுக்கு எதிராகவும் மூர்க்கத்தனமானதொரு சர்வாம்சரீதியான தாக்குதலை 16,00,000 ராணுவ வீரர்களைக் கொண்ட ஒரு ஒழுங்கான சேனையைக்கொண்டு சியாங்கை-ஷேக் துவக்கினான். விடுதலை பெற்ற ஏரியாக்களின் எல்லா திசைகளில் இருந்தும் எதிரி தாக்கினான். ஆகவே யுத்தத்தின் இந்த ஆரம்பக்

கட்டத்தில், விடுதலை பெற்ற ஏரியாக்களின் ராணுவமே, மக்களும் தற்பாதுகாப்பு ரீதியான யுத்த முறையை கையாளுவதற்கு தீர்மானித்தன.

எனினும் சீன பிற்போக்குவாதிகளும் அவர்களது அமெரிக்க எஜமானர்களும் அவர்களது சொந்த பலத்தை மிகைபடுத்தி மதிப்பிட்டும், விடுதலை பெற்ற ஏரியாக்களின் ராணுவ பலத்தையும் மக்களின் பலத்தையும் குறைத்தும் மதிப்பிட்டுமிருந்தார்கள்.

மக்களின் சித்தத்தை பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டு, ஜப்பானிய எதிர்ப்பு யுத்த முடிவில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி செய்திருந்த சமாதானத்திற்கான முயற்சிகளையும், ஜனநாயகத்திற்கான முயற்சிகளையும் பலஹீனம், பயம் மற்றும் கையாளாகத்தனம் ஆகியவற்றின் அறிகுறிகளாக அவர்கள் தவறாக நினைத்திருந்தார்கள். அவர்கள் எண்ணிக்கையிலும், சாதனங்களிலும் தங்களுடைய சொந்த ராணுவத்தின் மேம்பாட்டினை மட்டுமே, பார்த்தார்கள். ஆகவே, சமாதானத்திற்கான மக்களின் சித்தத்தை மீறி யுத்த நிறுத்த உடன்பாட்டையும், அரசியல் கலந்தாலோசனை மாநாட்டின் தீர்மானங்களையும் அவர்கள் கிழித்தெறிந்தார்கள்; மற்றும் அவர்களது ராணுவ வலிமையின் கோட்பாட்டையும் மிகவும் விசேஷமாக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து கிடைத்த ராணுவ உதவியையும் நம்பி இருந்தமையால், ஒரு உள்நாட்டு யுத்தத்தை ஆரம்பிப்பதற்கும் துணிந்தார்கள். ஆனால் பிற்போக்குவாதிகள் அவர்களது கணிப்புகளில் தவறாக இருந்தார்கள்.

எனினும், சிலர் வெளிப்புறத் தோற்றங்களால் பயமுறுத்தப்பட்டிருந்தார்கள். காலத்தை ஓட்டிக்கொண்டிருப்பதிலும் லாபச் சூதாட்டத்திலும் நீண்ட காலமாக பயிற்சி பெற்றிருந்த இளைஞர் கட்சியைச் சேர்ந்த செங்சி மற்றும் தேசிய சோசலிஸ்ட் கட்சியை சேர்ந்த சாங்சுமாய் போன்ற விரல்விட்டு எண்ணக்கூடிய வெட்கங் கெட்ட அரசியல்வாதிகள் கோமிங்டாங் பிற்போக்குவாதிகளின் பக்கத்திற்கு விரைந்து சென்றதில் இயற்கையாகவே சிறிது நேரத்தைகூட வீணாக்கவில்லை. ஆனால் அரசியல் ரீதியாக அனுபவம் பெற்றிருந்த மக்களிடையேகூட, புரட்சியின் நண்பர்களாக இருந்தவர்கள் உட்பட, இப்படிப்பட்ட, அபரிமிதமான கஷ்டங்களுக்கு எதிராக போராடிக் கொண்டிருக்கும் மக்கள் விடுதலை சேனை, கோமிங்டாங் பிற்போக்குவாதிகளைத் தோற்கடிப்பதற்கு சாத்தியமாகக் கூடுமா என்று சந்தேகிக்க ஆரம்பித்தார்கள்.

இப்படிப்பட்ட அவநம்பிக்கையையும் சந்தேகத்தையும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றிகரமாக சிதறடித்தது. யுத்தத்தின் ஆரம்பத்திலேயே கட்சியின் மத்திய கமிட்டியும் தோழர் மாசே-துங்கும் மார்க்சிய-லெனினிய தத்துவத்தின் வெளிச்சத்தில் உள்நாட்டு நிலைமை பற்றியும் சர்வதேச நிலைமை பற்றியும் விஞ்ஞான ரீதியானதொரு அலசி ஆராய்தலைச் செய்து, கோமிங்டாங் பிற்போக்குவாதிகளை முறியடிக்க வேண்டும் என்பதோடு மட்டுமின்றி முறியடிக்கவும் முடியும் என்று தெளிவாக சுட்டிக் காட்டினார்கள். அவர்கள் கோமிங்டாங்கை முறியடிக்க வேண்டும்; ஏனெனில், கோமிங்டாங் பிற்போக்குவாதிகள் ஆரம்பித்திருந்த யுத்தம், சீனாவின் தேசிய சுதந்திரத்திற்கு எதிராகவும், மக்களின் ஜனநாயகத்திற்கு எதிராகவும் திசை திருப்பப்பட்டிருந்தது. எதிர் புரட்சி யுத்தத்தை, புரட்சிகரமானதொரு யுத்தத்தினால் எதிர்ப்பதற்கு அவர்கள் வீறுகொண்டு எழாமல் இருந்தால், அவர்கள் அமெரிக்க பிற்போக்குவாதிகளாலும் சீன பிற்போக்குவாதிகளாலும் அடிமைப் படுத்தப் பட்டிருப்பார்கள். கோமிங்டாங் பிற்போக்குவாதிகளை மக்கள் தோற்கடிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். ஏனெனில் ராணுவ மேலாதிக்கமும் அமெரிக்க உதவியும் தற்காலிகமானதொரு செல்வாக்கினை மட்டுமே உண்டாக்கக்கூடிய அம்சங்களாக இருந்தன; அதே சமயத்தில், ஒரு யுத்தத்தின் நியாயத் தன்மை அல்லது அநியாய தன்மை மற்றும் பரவலான வெகுஜனங்களின் ஆதரவு அல்லது எதிர்ப்பு ஒரு மாறாத மற்றும் தூரப்பார்வையோடு கூடிய செல்வாக்கினை உண்டாக்கும் அம்சங்களாக இருந்தன.

சீன பிற்போக்குவாதிகளால் துவக்கப்பட்ட உள்நாட்டு யுத்தம் ஒரு எதிர்புரட்சி யுத்தமாக இருந்தது. அந்த யுத்தம் துரோகத்தனமானதாகவும், எதேச்சாதிகாரமானதாவுகம் மற்றும் மக்களுக்கு விரோதமானதாகவும் இருந்தது. கம்யூனிஸ்ட் எதிர்ப்பு யுத்தத்தை நடத்தும் பொருட்டு பிற்போக்குவாதிகள் முன்னைக்காட்டிலும் மக்களை இன்னும் மிக அதிக கொடூரமாக ஒடுக்கவும் சுரண்டவும் வேண்டி இருந்தது. எனவே அவர்களது ஆட்சியின்கீழிருந்த ஏரியாக்களின் ஆயுதமற்ற மக்களுக்கு எதிராக ஒரு யுத்தத்தையும் அவர்களது கரங்களில் வைத்திருப்பார்கள். குடிமக்களை ராணுவ சேவைக்குள் நிர்ப்பந்தமாக தள்ளும் நடைமுறையும், அதன் விளைவாக ராணுவத்தின் தெம்பினைக் குறைப்பதும் ஒரு எதிர்புரட்சி யுத்தத்தின் தப்பிக்க முடியாத

விளைவாக இருந்தன; அந்த எதிர்புரட்சி யுத்தத்தில் ராணுவ வீரர்கள் தங்களுடைய ஆயுதங்களைக் கீழே போடுவதற்கு எல்லா நேரத்திலும் தயாராக இருந்தார்கள். இது கோமிங்டாங் பிற்போக்குவாதிகளின் மரண பலஹீனமாக இருந்தது. இதன் விளைவாக, யுத்த களைப்பு கோமிங்டாங் துருப்புகளின் மீது உண்டாக ஆரம்பித்தது; மற்றும் கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்களில் இருந்த மக்கள் யுத்தத்தை எதிர்த்தார்கள். மேலும், கோமிங்டாகிற்கு உள்ளே இருந்த பல்வேறு கோஷ்டிகளுக்கும் கும்பல்களுக்கும் இடையே கடுமையான முரண்பாடுகளும் இருந்தன; கோமிங்டாங் ராணுவத்தில் அதிகாரிகளுக்கும் ஜவான்களுக்கும் இடையே கூர்மையான விரோதமும் இருந்தது. கோமிங்டாங் பிற்போக்கு ஆட்சியின் பொருளாதாரம் அதிகார வர்க்க-முதலாளித்துவத்தின் மீது நிலைநாட்டப் பட்டிருந்தது. இந்த அதிகாரவர்க்க—முதலாளித்துவம் தேசிய பொருளாதாரத்தை ஏக போகமாக்கி இருந்தது. இந்த அதிகார வர்க்க—முதலாளித்துவம் தொழிலாளிகள், விவசாயிகள் மற்றும் குட்டி முதலாளி வர்க்கம் ஆகியோரை ஒடுக்கியதோடு மட்டுமின்றி, நடுத்தர பூர்சுவா வர்க்கத்தின் நலன்களையும் கூட புண்படுத்திற்று; எனவே கோரிக்கை தொழிலாளிகள், விவசாயிகள் மற்றும் குட்டி முதலாளி வர்க்கத்தோடு மட்டும் நிற்கவில்லை. கோமிங்டாங்கிற்கு எதிரான போராட்டங்களில் நடுத்தர பூர்சுவா வர்க்கமும் சேருவது சாத்தியமாகக் கூட இருந்தது, அல்லது நடுநிலைமை வகிப்பதும் சாத்தியமாக இருந்தது. மறுபுறத்தில், விடுதலை யுத்தம் ஒரு நியாயமான புரட்சி யுத்தமாக இருந்தது; இந்த யுத்தம் அனைத்து மக்களின் ஆதரவையும் பெற்றிருந்தது. இந்த யுத்தத்தில் விடுதலை பெற்ற ஏரியாக்களை ராணுவமும் மக்களும் மிகமிக அதிகமான சாதகமான நிலைமையைப் பெற்றிருந்தார்கள். இடை காலத்தில், கிராமப் புறங்களில் பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவ உடமையை விவசாயிகளுக்கு நிலத்தை உடமையாக்கும் ஒரு கொள்கையை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பின் பற்றிற்று; மற்றும் நகரங்களின் அதிகார வர்க்க மூலதனத்தைப் பறிமுதல் செய்யும் ஒரு கொள்கையையும் தேசிய தொழில் மற்றும் வர்த்தகத்தைப் பாதுகாக்கும் ஒரு கொள்கையையும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பின்பற்றிற்று. எதிரிகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் பொருட்டு, விவசாய

நீர்திருத்தத்தில் கட்சி, ஏழை விவசாயிகளின் மீதும் விவசாய தொழிலாளிகளின் மீதும் சார்ந்து நின்றது; நடுத்தர விவசாயிகளோடு ஒன்று சேர்ந்து நின்றது; மற்றும் ஒரு புறத்தில் பொதுவாக பணக்கார விவசாயிகள், நடுத்தர அல்லது சிறுநில சொந்தக்காரர்கள் ஆகியோருக்கும் மறுபுறத்தில் ஒத்துழைப்புவாதிகள், மோசமான பிரபுக் கூட்டம் மற்றும் ஸ்தல மிரட்டல்காரர்கள் ஆகியோருக்குமிடையே கட்சி தெளிவானதொரு வேறுபாட்டினை வரையறுத்திருந்தது. நகரங்களில் கட்சி தொழிலாளி வர்க்கத்தின் மீது சார்ந்து நின்று, குட்டி முதலாளி வர்க்கத்தின் பரவலான வெகுஜனங்களோடு ஒன்றுபட்டு, பிற்போக்குவாதிகளை தனிமைப்படுத்தும் பொருட்டு நடுவாந்திரப்பாதைக்காரர்களை வென்றுபெறுவதற்கு முயற்சி செய்தது. இத்தகைய கொள்கைகள் அனைத்து மக்களின் ஆதரவையும் வென்றுபெற்று, மக்கள் விடுதலை சேனையின் பின்னணியை கெட்டிப்படுத்திற்று; மற்றும் புரட்சி யுத்தத்தின் நாடு தழுவிய வெற்றிக்கு அரசியல் அஸ்திவாரத்தையும் போட்டது.

கோமிங்டாங் பிற்போக்குவாதிகள் அமெரிக்க உதவியின் மீது அவர்களது நம்பிக்கையை வைத்திருந்தார்கள். இவை அவர்களது உள்ளடங்கியிருந்த பலவீனம், அலறிப்புடைத்தல் மற்றும் நம்பிக்கையை இழந்திருத்தல் ஆகியவற்றின் ஒரு பிரதிபலிப்பாக இருந்தன. அமெரிகக உதவியின் மீது திரும்பவும் சார்ந்திருப்பதைத் தவிர அவர்களுக்கு முற்றிலும் மாற்று வழி எதுவுமே கிடையாது என்பதை அவர்கள் புரிந்து இருந்ததின் ஒரு வெளிப்படுதலாக இவை இருந்தன.

மிகவும் விரிவானதொரு அடிப்படையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின்கீழ் ஒரு மக்கள் ஜனநாயக ஐக்கிய முன்னணியை சீனாவில் அமைப்பது சாத்தியமாக இருந்தது என்பதனை உள்நாட்டு மற்றும் சர்வதேச நிலைமை பற்றிய ஒரு திட்டவட்டமான அலசி ஆராய்தல் காட்டிற்று. இந்த மக்கள் ஜனநாயக ஐக்கிய முன்னணி சீன மக்கள் புரட்சி, வெற்றி பெறுவதில் கேந்திரமானதொரு அம்சமாக இருந்தது. பிற்போக்குவாதிகளின் அடிப்படையான பலவீனம் அவர்களது அரசியல் நிலையின் பிற்போக்கான தன்மையில் அடங்கி இருந்தது. எந்த படையும் அது எவ்வளவு பலமாக இருந்த போதிலும், அது பிற்போக்கானதாகவும் மக்களுக்கு விரோதமானதாகவும இருந்தால் அது தோல்வி அடைவது திண்ணம்.

கோமிங்டாங் முன்னேறி தாக்குதலைத் தோற்கடிக்கும்

பொருட்டு, கட்சியின் மத்திய கமிட்டி சரியானதொரு யுத்த தந்திர திட்டத்தை வகுத்தது; இந்த திட்டம் எந்த குறிப்பிட்ட பட்டிணம் அல்லது ஏரியாவை பாதுகாப்பதைக் காட்டிலும் எதிரியின் மனித சக்தியை நிர்மூலமாக்குவதை முக்கியக் குறிக்கோளாக கொண்டிருந்தது. இந்த காரணத்திற்காக குவிந்த நடவடிக்கையைப் பல்வேறு திசைகளில் இருந்து மக்கள் விடுதலை சேனைக்கு எதிராக கோமிங்டாங் பெரியதொரு அளவில் முன்னேறி தாக்குதலை ஆரம்பித்து, அணிவகுத்துச் செல்லும் ஒரு இயக்கம் நடைபெறும் பொழுது, மக்கள் விடுதலை சேனை எதிர் துருப்புகளின் ஒரு பகுதியின் மீது பரிபூரமான எண்ணிக்கை ரீதியான மேலாதிக்கத்தைப் பெற்று அதனைச் சரியான நேரத்தில் ஒழித்துக்கட்டும் பொருட்டு அதனுடைய படைகளை (மக்கள் விடுதலை சேனையின் படைகளை - மொழிப் பெயர்ப்பாளர்) குவித்துக் கொண்டிருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்பிட்ட பிரிவு, ஒப்பு நோக்கி பார்க்கும் போது, பலவீனமானதொரு பிரிவாக இருக்க வேண்டும், அல்லது குறைவான அளவில் பலம் கொண்ட படையாக இருக்க வேண்டும், அல்லது வெகுஜன ஆதரவு கண்ணோட்டத்தில் இருந்தும் மற்றும் யுத்தம் நடைபெறும் பிரதேச கண்ணோட்டத்தில் இருந்தும் சாதகமற்றதொரு நிலையில் அமைந்திருக்கக் கூடிய பிரிவாக இருக்க வேண்டும். இடைக்காலத்தில் எதிரி படை பிரிவுகள் முற்றுகையிடப்பட்டிருக்கும் பிரிவின் பாதுகாப்பிற்கு வேகமாக வருவதினின்றும் தடுக்கும் பொருட்டு, மக்கள் விடுதலை சேனை இதர எதிரி படை பிரிவுகளைக் தடுத்து நிறுத்தும் பொருட்டு சிறு படைகளை ஈடுபடுத்த வேண்டும். வெற்றிக்குப் பிறகு எடுக்கப்பட வேண்டிய அடுத்த நடவடிக்கையைத் தீர்மானிப்பதில்—எதிரியின் இதர பகுதிகளைத் தொடர்ந்து ஒழித்துக்கட்டி கொண்டிருக்க வேண்டுமா அல்லது போராட்டத்தை மீண்டும் புதிதாக நடத்துவதற்காக தயார்செய்யும் பொருட்டு போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி ஓய்வெடுக்க வேண்டுமா என்பதை தீர்மானிப்பதில்—யுத்தத்தின் உண்மையான அபிவிருத்தியினால் பரிசீலனைகள் வழிகாட்டப்பட வேண்டும். போர்தந்திர ரீதியாக எதிரி துருப்புகளின் ஒரு பிரிவை சுற்றி வளைத்து நிர்மூலம் செய்வதற்கு மேம்பாடுடையதொரு படை குவிக்கப்பட வேண்டி இருந்த பொழுது, முன்னேறித் தாக்குதலில் பங்கு கொண்டிருக்கும் பல்வேறு படை பிரிவுகளும், எதிரிப் படைகள் முழுவதையும் ஒரே அடியில் ஒழித்துக் கட்டும் முயற்சியில் தங்களுடைய

படைகளை எல்லா முனைகளிலும் ஈடுபடுத்தக் கூடாது. இது பல்வேறு தாக்கும் படைபிரிவுகளின் போராடும் வலிமையைத் தவிர்க்க முடியாதபடி பாவித்து, எதிரியை நிர்மூலம் செய்வதைத் தாமதப்படுத்தும் அல்லது இந்தக் குறிக்கோளை நிறைவேறச் செய்வதைக் கடினமானதாகக் கூட செய்யும் இதற்கு பதிலாக, எதிரியின் இந்த பிரிவின் மிகமிக கேந்திரமான முனையை, குவிக்கப் படும்மேலாதிக்கம் கொண்ட படை தேர்ந்தெடுத்து, வெற்றியைப் பரிபூரணமானதொரு நிச்சய தன்மை கொண்டதாக செய்யும் பொருட்டு, அதன் மீது மூர்க்கத்தனமானதொரு தாக்குதலை நடத்த வேண்டும். வெற்றியைப் பெற்ற பிறகு, தாக்குதலின் மண்டலத்தை உடனடியாக பிரிவு படுத்துவதும் எதிரியின் படை பிரிவுகளை ஒன்றன்பின் ஒன்றாக முறியடிப்பதும் அவசியமாக இருந்தது.

இப்படிப்பட்டதொரு யுத்த தந்திரரீதியானதொரு திட்டத் தின் சாதகமான தன்மை இரண்டு விதமாக இருந்தது. முழுமை யான நிர்மூலம் செய்தலும் துரிதமான முடிவும். முழுமையான நிர்மூலமாக்குதலினால் மட்டுமே மக்கள் விடுதலை சேனை எதிரி யினுடைய மனித சக்தியை, சக்தி வாய்ந்த முறையில் அழிப்ப தினால் எதிரியைக் கடினமாக தாக்க முடியும். இது மக்கள் விடு தலை சேனையை மிகமிக முழுமையான அளவிற்கு மீண்டும் புதுப் பித்துக் கொள்ளும் வழியாக இருந்தது; அதனுடைய மனித சக்தி பிரச்சனையையும், தளவாடங்களின் பிரச்சனையையும் தீர்வு காணும் வழியாக இருந்தது; மற்றும் மக்கள் விடுதலை சேனை யின் தெம்பினை உயர்த்தும் அதே சமயத்தில் எதிரி சிப்பாய் களை மிகமிக சக்தி வாய்ந்த முறையில் தெம்பிழக்க செய்யும் வழி யாகவும் இருந்தது. துரிதமானதொரு பைசல்தான். எதிரியை அவனுடைய பலப்படுத்தல்களுக்குள் போக விடாமல் எதிரியை நொறுக்கித் தள்ளமுடியும்.

புரட்சி யுத்தம் நீடித்ததாக இருந்தது, மற்றும் போராட்டங் கள் மிகவும் அடிக்கடி நிகழ்ந்தன. இதன் காரணமாக, துருப்பு களைப் பயிற்றுவிப்பதற்கு இடைவிடாத கவனம் செலுத்தப்பட வேண்டும். போராட்டங்களுக்கு இடையே இருக்கும் இடை வெளிகள் ராணுவ பயிற்சியிலும், அரசியல் பயிற்சியிலும் நன்கு பயன்படுத்தபட வேண்டும். மற்றும் ஒவ்வொரு போராட்டத் திற்கு பிறகும் படை பிரிவு முழுவதிலும் அனுபவத்தை பற்றிய ஒரு தொகுப்புரை நடத்தப்பட வேண்டும்; சிறப்பாக ஆயுத பாணியாக உள்ள எதிரி துருப்புகளை நிர்மூலம் செய்யும்

பொருட்டு இரவில் போராடுவதில் பயிற்சி கொடுப்பதின் மீதும் நபருக்கு நபர் சண்டை போடுவதின்மீதும் மற்றும் இடைவெளி விடாத, நீடித்த, நீடித்து நடைபெறும் போராட்டம் பற்றி பயிற்சி கொடுப்பதின் மீதும் விசேஷ அழுத்தம் வைக்கப்பட வேண்டும். எதிரியின் ஒரு பிரிவை நிர்மூலம் செய்வதற்கு படைகளை குவிக்கும் கோட்பாடும் மற்றும் எதிரியின் பல்வேறு படை பிரிவுகளை ஒன்றன்பின் ஒன்றாக அழிக்கும் கோட்பாடும் மக்கள் விடுதலை சேனை ஸ்தாபிக்கப்பட்ட தினத்திலிருந்தே அச் சேனையின் நேர்த்தியான பரம்பரையின் பகுதியாக இருந்தது. மேலும், மூன்றாவது புரட்சிகர உள்நாட்டு யுத்த காலகட்டத்தில், மக்கள் விடுதலை சேனையின் மகத்தான பலம் அதனுடைய முக்கிய போராட்ட வடிவம் குவிந்த படைகளோடு இயங்கும் யுத்த முறையைக் கையாளுவதை அதற்கு சாத்தியமாகச் செய்திருந்தது; மற்றும் சிதறுண்டு கிடக்கும் படைகளோடு கொரில்லா யுத்த முறையின் மூலம் இயங்கும் யுத்த முறையை கூடுதலாக செய்வதும் மக்கள் விடுதலை சேனைக்கு சாத்தியமாகும்படி செய்தலாகும்.

இந்த வழியில், யுத்த நிலைமை முழுவதிற்கும் எதிராக வைத்து பார்க்கும்பொழுது மக்கள் விடுதலை சேனையின் வலிமை மேம்பாடு அற்றதாக இருக்கும். அதே சமயத்தில், ஒவ்வொரு தனியொரு போராட்டத்திலும் அது எதிரியை எண்ணிக்கையில் பூரணமானதொரு மேம்பாட்டோடு எதிர்ப்பதற்கு சாத்தியமானதாக இருந்தது. மற்றும் இந்த முறையில், அதனுடைய வெற்றியை உறுதிப்படுத்துவதற்கும் சாத்தியமானதாக இருந்தது. காலம் செல்ல செல்ல, யுத்தத்தின் எல்லா அம்சங்களிலும் மேலாதிக்க தன்மை மக்கள் விடுதலை சேனையின் கரங்களுக்குள் மாறிச் செல்லும்; மக்கள் விடுதலை சேனை எதிரியின் முழுமையான ஆயுதங்களோடும் மற்றும் பெரும்பாலான பிடிபட்ட எதிரி துருப்புகளோடும் அதனை மீண்டும் புதுப்பித்து கொண்டது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு எதிரிகளுக்கு எதிராக நடைபெற்ற நீடித்த ஆயுதமேந்திய போராட்டங்களின் போக்கில் கட்சியின் மத்திய கமிட்டியின் தலைமையின் கீழும் மற்றும் தலைவர் மாசே-துங்கின் கீழும் மக்கள் விடுதலை சேனையால் கோமிங்டாங்கை தோற்கடிப்பதற்காக இத்தகைய பெரிய யுத்த தந்திர கோட்பாடுகள் துவக்கி வைக்கப்பட்டிருந்தன. இத்தகைய கோட்பாடுகளோடு சியாங்கை-ஷேக் முற்றிலும் பரிச்சயமாக இருந்தான் மற்றும் அவற்றை எதிர்ப்பதற்கான வழிமுறைகளை

யும் கற்றும் இருந்தான்; ஆனால் இவை அனைத்தும் எந்த நோக்கத்தையும் நிறைவேற்றவில்லை. இதற்கான காரணம் சாதாரணமானதுதான். மக்கள் விடுதலை சேனையின் யுத்த தந்திரமும் போர்த்தந்திரங்களும் ஒரு மக்கள் யுத்தத்தின் போக்கில் வளர்ந்தவையாக இருந்தன; எந்த எதிர் புரட்சி ராணுவமும் அவற்றை எந்தவிதத்திலும் பயன்படுத்த முடியாது.

அது மேலான ராணுவ பலத்தைப் பெற்றிருந்தது என்ற முக்கியமான காரணத்தால், விடுதலை பெற்ற ஏரியாக்களின்மீது ஒரு சர்வாம்சரீதியான தாக்குதலை நடத்தி கம்யூனிஸ்ட் எதிர்ப்பு உள்நாட்டு யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்கு கோமிங்டாங் துணிந்திருந்தது; ஆனால் ஒரு ராணுவ கண்ணோட்டத்தில் இருந்தும் கூட, கோமிங்டாங் எண்ணற்ற திருத்தப்பட முடியாத பலவீனங்களையும் கொண்டிருந்தது. நாடு தழுவியதொரு யுத்தத்தின் தேவைகளால் நிர்ப்பந்திக்கப்பட்டு, அதனுடைய கொள்கை, மத்திய சமவெளி, வடக்கு கியாங்சு மாகாணம், செங்டே, அண்டுங் மற்றும் ஹார்வின் ஆகியவற்றை கைப்பற்றுவதாகவும் சிங்டாவோ-சின்னான் ரயில்வே மற்றும் டாடுங்-டிச்சோவ் ரயில்வே ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதும் தெற்கில், நான்கிங்கில் இருந்து வடகிழக்கில் சாங்சுன்வரையிலும் ஒருசெய்தி போக்குவரத்துப் பாதையைத் திறப்பதுமாக இருந்தது. இந்த செய்தி போக்குவரத்துப் பாதை நீண்டதொரு தூரத்திற்கு விஸ்தரிக்கப்பட்டிருந்தது. மற்றும் மலை விளிம்புகளாலும், உயர்ந்த சிகரங்களாலும் இருபக்கத்திலும் சூழப்பட்டிருந்தன. வடகிழக்கு எல்லை 500 கிலோ மீட்டர்கள் நீளமான ஒரு தொடர்பு வழி பாதையின் முடிவில் இருந்தது. 16,00,000 படைவீரர்களோடு மட்டும் கோமிங்டாங் பல்வேறு ஏரியாக்களைக் கைப்பற்ற முயற்சித்ததினாலும் மற்றும் இப்படிப்பட்ட நீண்ட செய்தி போக்குவரத்துப் பாதைகளையும் அந்தபாதைகளின் நெடுகிலுமிருந்த எல்லா நகரங்களையும் கைப்பற்ற முயற்சித்ததினாலும் அது அதனுடைய படைகளை, பல பிரிவுகளில் சிதறடிக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தது. எனவே அது மனித சக்தியின் பற்றாக்குறையில் இருந்து அவதிப்பட்டு கொண்டிருந்தது. அதனுடைய படைகளை விரிவாக சிதற விட்டதின் காரணமாக, ஒரு ஏரியாவிற்கு எதிராக சற்று மேலாதிக்கம் கொண்ட படைகளை கோமிங்டாங் குவித்த உடனேயே, அதன் கட்டுப்பாட்டின் கீழிருந்த இதர ஏரியாக்களில் பல கேந்திரமான மையங்கள் அம் பலப்படுத்தபட்டது. மற்றும் ஒரு எதிர்தாக்குதலுக்கான ஒரு

லட்சியமான திறப்பு அமைந்தும் இருக்கும்.

அந்நிய பேர்வழிகளை ஒழித்துக் கட்டும் சியாங்கினுடைய கொள்கை அவனுடைய சொந்த துருப்புகளைத் தவிர, இதர எல்லா கோமிங்டாங் துருப்புகளுக்கும் எதிராக முன்பின் மூ ணற்ற முறையில்,வேறுபடுத்தி பார்க்கும்படி அவனை வழிநடத்தி சென்றது. இதன் விளைவாக, கோமின்டாங் முகாமிற்குள் இருந்த மத்திய ராணுவங்களுக்கும் ஸ்தல ராணுவங்களுக்கும் இடையே கூர்மையான முரண்பாடுகள் இருந்தன. நம்பத்தகுந் தவர்கள் என்று அவன் கருதியவர்கள் மட்டுமே முக்கியமான ராணுவ பதவிகளுக்கு நியமிக்கப்பட்டிருந்தார்கள். அதே சமயத் தில், படைகளை பிரித்து அனுப்புவதில் முற்றிலும் அவனுடைய சொந்த கட்டளையின் கீழ் வைக்கப்பட்டு, ஒரு திறமையற்ற பிர தான தளபதியின் மூலம் நிறைவேற்றப்பட்டது. இது இரட்டை அடிப்படையான பலவீனங்களைத் தோற்றுவித்தது. அவை உள்சண்டை மற்றும் ஒன்றுபடுத்தப்பட்ட கட்டளைத் தலைமை இல்லாமை ஆகும்.

அமெரிக்காவில் செய்யப்பட்ட ராணுவ சாதனங்கள் கோமின்டாங் துருப்புகளுக்கு இயல்பாகவே சாதகமாக இருந்தது. ஆனால் மற்றொரு விதத்தில் இது ஒரு பாதக மாகவும் இருந்தது. இயந்திரமாக்கப்பட்ட படைகளுக்கு நல்ல செய்தி போக்குவரத்துப் பாதைகள் தேவையாக இருந்தன; ஆனால் இப்படிபட்ட செய்தி போக்குவரத்துப் பாதைகள் சீனாவில் போதாமல் இருந்தன. இப்படிபட்ட படைகள் விடுதலை பெற்ற ஏரியாக்களின் மலைப்பாங்கான பிரதேசங் களுக்குள் நுழைந்த பொழுது, அப்படைகளின் வாகனங்கள் பயனற்றவையாக இருந்தன. அதன் விளைவாக, அவை முழு பலனோடு இயங்க முடியவில்லை.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை நாடு முழுவதிலும் இருந்த ராணுவத்தின் வெற்றியிலும் மக்களின் வெற்றியிலும் போராட்ட சித்தத்தையும் நம்பிக்கையையும் பலப்படுத்திற்று. மக்கள் அனைவரும் கட்சியைச் சுற்றிலும் நெருக்கமாக அணி திரண்டு, பெருமளவிலான புரட்சி யுத்தத்திற்கு பொருளாதாய ஆதரவையும் தார்மீக ஆதரவையும் கொடுத்தார்கள்.

**2. சுறுசுறுப்பான தற்பாதுகாப்பு யுத்த தந்திரத்தை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொள்ளுதல். கோமிங் டாங்கின் சர்வாம்சரீதியான தாக்குதல்களையும் குவிந்த**

தாக்குதல்களையும் மக்கள் விடுதலை சேனையால் முழுமையாக முறியடிக்கபடுதல்.

கோமிங்டாங் படைகள் பல்வேறு விடுவிக்கப்பட்ட ஏரியாக்களுக்குள் சிதறி சென்ற பொழுது, யுத்தத்தின் ஆரம்ப கட்டங்களில், மக்கள் விடுதலை சேனை பல நகரங்களில் இருந்தும் பிரதேசங்களில் இருந்தும் திரும்பப் பெற்றுக் கொண்டது. பெரும் சுவற்றிற்கு தெற்கே எதிரியின் சர்வம்சரீதியான தாக்குதல் 1946 ஜூன் இறுதியில் ஆரம்ப மாயிற்று; அப்பொழுது மக்கள் விடுதலை சேனை மத்திய சமவெளியில் சுற்றி வளைக்கபட்டு, தாக்கப்பட்டு கொண் டிருந்தது. இதைப் பின்தொடர்ந்து தெற்கு ஷான்சி, வடக்கு கியாங்சு, தென்மேற்கு ஷான்டுங், ஷாங்டுன் தீபகற்பம், கிழக்கு ஹோப்பெய், கிழக்கு சுய்யுவான், தெற்கு சகார், ஜிகோல் மற்றும் தெற்கு லயோனின் ஆகிய வற்றிற்கு எதிரான இயக்கங்கள் நடைபெற்றன. மக்கள் விடுதலை சேனை சுறுசுறுப்பான தற்பாதுகாப்புரீதியான யுத்த தந்திரக் கொள்கையை கடைபிடித்தது. எதிரியை ஆழமாக ஊடுருவச் செய்ய வசீகரிக்கும் பொருட்டு அதனுடைய சொந்த முடிவாகவே பலநகரங்களையும் பிரதேசங்களையும் கைவிட்டது. பிறகு, எதிரியைக் காட்டிலும் பல மடங்கு மிகப்பெரும் அளவிற்கு மேலாதிக்கம் கொண்ட படைகளை அது குவித்தது, சில பலவீனமான அல்லது தனிமைப்படுத்தபட்ட எதிரியின் படைப் பிரிவுகளை, அவற்றைக் குறிவைத்து, ஒன்றன்பின் ஒன்றாக நகரும் யுத்தத்தில் அவற்றை முறியடித்தது. அப்படி செய்வதில் அதனுடைய குறிக்கோள் யுத்த தந்திரரீதியான நிலை மையில் அடிப்படையானதொரு மாற்றத்தை உண்டாக்குவதாக இருந்தது.

எதிரியினுடைய சர்வாம்சரீதியான முன்னேறித் தாக்குதல் 1946 ஜூலையில் இருந்து 1947 பிப்ரவரி வரையிலும் எட்டு மாதங்கள் போராடிய பிறகு தடுத்து நிறுத்தபட்டது. இந்தப் போராட்டத்தில் மக்கள் விடுதலை சேனை எதிரியின் மீது கடுமை யான சேதங்களை உண்டாக்கிற்று.

முதல் நான்கு மாதங்களில், லிசியன்-நியனின் தலைமையின் கீழ் மத்திய சமவெளியில் இருந்த மக்கள் விடுதலை சேனை சுவான்குவாடியனில் எதிரியின் சுற்றி வளைத்தலை உடைத் தெறிவதில் வெற்றி பெற்றது. பிறகு அது தெற்கு ஷென்சிக்கும்

மேற்கு ஹோனானுக்கும் இடையே இருந்த ஏரியாவிற்கும், செச்சுவான் மற்றும் ஷென்சி ஆகியவற்றிற்குஇடையே இருந்த எல்லைப் பிரதேசத்திற்கும் நகர்ந்து சென்று, கிழக்கத்திய ஹூப்பெய்யிக்கும் மேற்கத்திய அன்வெய்யிக்கும் இடையே இருந்த ஏரியாவில் கொரில்லா யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தி கொண்டிருந்தது. வாங்சென் தலைமையின் கீழ் மக்கள் விடுதலை சேனையின் மற்றொரு படைப்பிரிவு, ஹூப்பெய், ஹோனான், ஷென்சி, மற்றும் கான்சு ஆகிய நான்கு மாகாணங்களின் வழியாக அணி வகுத்து சென்ற பிறகும், மற்றும் எதிரியின் சுற்றி வளைத்தல் களைத் திரும்ப திரும்ப முறியடித்துக் கொண்டும், செப்டம்பரில், ஷென்சி-கான்சு-நிங்சியா எல்லைப் பிரதேசத்திற்கு திரும்பிற்று. இந்த முறையில், சுற்றி வளைத்தலின் மூலம் நிர்மூலம் செய்யும் கோமிங்டாங்கின் திட்டம் சூன்ய தன்மைக்குக் குறுக்கப்பட்டது. மக்கள் விடுதலை சேனையின் வடக்கு கியாங்சு பிரிவு கிழக்கு சீனாவில், நகரும் தற்பாதுகாப்பு போரில் பல வெற்றிகரமான போராட்டங்களை நடத்திற்று,முதலில் யாங்ட்சிக்கு வடக்கிலும் கிராண்ட் கால்வாய்க்கு கிழக்கிலும் இருந்த ஏரியாவிலும் பிறகு. ஹூவாயின்,ஹிவாய்யின், லியன்சு மற்றும் சுன்னிங் ஏரியாவிலும் பல வெற்றிகரமான போராட்டங்களை நடத்திற்று. ஷாங்சி-ஹோப்பெய்-ஷான்டுங்-ஹோனான் விடுவிக்கபட்ட ஏரியாவில் இருந்த மக்கள் விடுதலை சேனை, எதிரியை எதிர்த்து முதலில் லுங்காய் ரயில்வேயின் கைஃபெங்-சூச்சோ பிரிவு வழியாகவும், பிறகு தென்மேற்கு ஷான்டுங்கில் டிங்டாவோவிலும் பெரிய அளவிலானதொருபோராட்டத்தை நடத்திற்று. டையுயே மலை படைப்பிரிவுகள் வடக்கு ஷான்சியில் இயங்கிக் கொண்டிருந்த ஷாங்சி சுய்யுவாங் விடுவிக்கபட்ட ஏரியாவின் மக்கள் விடுதலை சேனையின் நெருக்கமாக ஒருங்கிணைந்து தெற்கு ஷான்சியில் போராடின. ஷான்டுங் மாகாணத்தில் மக்கள் விடுதலை சேனை சிங்டாாவா-சின்னான் ரயில்வே நெடுகிலும் எதிரியை எதிர்த்துப் போராடிற்று. ஷாங்சி-சகார்-ஹோப்பெய் விடுவிக்கபட்ட ஏரியாவின் மக்கள் விடுதலை சேனை கிழக்கில் இருந்தும் மேற்கில் இருந்தும் சாங்சியாகோவின் மீது தொடுக்கப்பட்ட எதிரியின் ஒரு தாக்குதலைப் போராடி முறியடித்தது. வடகிழக்கு சீனாவில் ஜனநாயக நேச ராணுவம் தெற்கு லயோனிங்கில் குவான்டியன் ஏரியாவில் எதிரிப்படைகளை நிர்மூலம் செய்தது.

இரண்டாவது நான்கு மாதங்களில், கிழக்கு சீனாவில் இருந்த மக்கள் விடுதலை சேனை கியாங்சுவில் சூச்சியன் இயக்கங்களிலும் தெற்கு ஷான்டுங்கில் சாவோசுவாங் மற்றும்

சூசியன் இயக்கங்களிலும் மற்றும் மத்திய ஷான்டுங்கில் லைவு இயக்கங்களிலும் எதிரியை எதிர்த்து பெரும் அளவிலான நிர்மூலம் செய்யும் இயக்கங்களைத் துவக்கிற்று; மற்றும் வடக்கில் இருந்தும் தெற்கில் இருந்தும் நடத்திய ஒரு திடுக்கிடு தாக்குதல் இயக்கத்தில் ஷாங்டுங்கைப் பிடிப்பதற்கான கோமிங்டாங்கின் திட்டத்தினை முறியடித்தது. ஷாங்சி-ஹோபெய்—ஷான்டுங்-ஹோனான் ஏரியாவின் மக்கள் விடுதலை சேனை வடக்கு ஹோனானிலும், தென் மேற்கு ஷான்டுங்கிலும், கிழக்கு ஹோனானிலும் மற்றும் வடமேற்கு அன்வெய்யிலும் தொடர்ச்சியான பேராட்டங்களில் எதிரியை துவம்சம் செய்தது. தென்மேற்கு ஷாங்சியில் நடைபெற்ற இயக்கத்தில், ஷாங்சி-சுய்யுவான் ஏரியாவின் மக்கள் விடுதலை சேனையும் மற்றும் ஷான்சி-ஹோபெய்-ஷான்டுங்-ஹோனான் ஏரியாவின் மக்கள் விடுதலை சேனையின் டையுயே மலைப்பிரிவுகளும், ஷென்சி-கான்சு-நிங்சியா எல்லைப் பிரதேசத்திற்கு எதிராக மேற்கு நோக்கிவந்த ஒரு அணிவகுப்பில் மஞ்சள் நதியை கடந்து செல்வதற்கு எதிரி செய்த முயற்சியை நொறுக்கித் தள்ளின. ஷாங்சி-சகார்-ஹோபெய் ஏரியாவின் மக்கள் விடுதலை சேனை பீகிங்—ஹாங்கோ ரயில்வே நெடுகிலும் பாவோடிங்கிற்கு தெற்கே இருந்த ஏரியாவின் மீது ஒரு தாக்குதலைக் கொடுத்தது. வடகிழக்கு ஜனநாயக நேச ராணுவத்தின் படைப் பிரிவுகள் வடகிழக்கில், வடக்கு, தெற்கு அரங்கங்களில் ஒருங்கிணைந்து போராடின. வடக்கில், தெற்கில் இருந்த படைபிரிவுகள் சங்காரி பிரதேசத்திற்குள் மூன்று முறைகள் அணிவகுத்து சென்றன; மற்றும் தெற்கே இருந்த படை பிரிவுகளை லிங்கியாங்சின் மீது தொடுக்கப்பட்ட எதிரியின் நான்கு தாக்குதல்களை முறியடித்தன. இந்த முறையில், தெற்கில், எதிரியின் திட்டமான முன்னேறித் தாக்குதலும் மற்றும் வடக்கில் எதிரியின் திட்டமான தற்பாதுகாப்பு போரும் முறியடிக்கப்பட்டன; மற்றும் வடகிழக்கு சீனாவில், எதிரியின் முன்னேறி தாக்குதல் ஒரு முடிவிற்குக் கொண்டு வரப்பட்டது.

மக்கள் விடுதலை சேனை எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட சாதனங்களோடு, அதனை ஆயுத பாணியாக்கிக் கொண்டது; மற்றும் புனர்கல்வி கொடுத்த பிறகு, பிடிபட்ட சிப்பாய்களோடு அதனை மேலும் பலப்படுத்திக் கொண்டது. விடுவிக்கப்பட்ட ஏரியாக்களில், எதிரி பல நகரங்களையும் பிரதேசங்களையும் கைப்பற்றி இருந்தான்; ஆனால், அபரிதமான செலவில் மட்டுமே

கைப்பற்றி இருந்தான். சுறுசுறுப்பான தற்பாதுகாப்புரீதியான முன் கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த யுத்த தந்திரரீதியான தொரு திட்டத்திற்கு ஏற்ப, சில நகரங்களும் பிரதேசங்களும் மனப்பூர்வமாக காலி செய்யப்பட்டிருந்தன; மற்றும் அப்படிபட்ட ஒவ்வொரு நகரத்திற்கும் பிரதேசத்திற்கும் கோமிங்டாங் பாதுகாப்பிற்காக விரிவான அளவில் துருப்புகளை அனுப்ப வேண்டி இருந்தது. அதன் விளைவாக, விடுவிக்கபட்ட ஏரியாக்களை தாக்குவதற்காக ஈடுபடுத்தபட்டிருந்த கோமிங்டாங் துருப்புகளின் கூடுதலான அதிகரிப்பு இருந்த போதிலும், அதனுடைய நகரும் படைகள் (mobile forces) அதிக அளவிற்கு குறுக்கபட்டும் முதல் வரிசை தாக்குதலுக்கான அதனுடைய போராட்ட பலம் மிகவும் பலவீனப்படுத்தபட்டும் இருந்தன. இந்த முறையில். யுத்தத்தின் போக்கில் மக்கள் விடுதலை சேனை பெரியதாவும், வலிமையானதாவும் வளர்ந்தது; அதே சமயத்தில், கோமிங்டாங் ராணுவம் மிகவும் சிறியதாகவும் பலவீனமானதாகவும் ஆயிற்று.

1947 மார்ச்சில் இருந்து குவிந்த முன்னேறிய தாக்குதலுக்கு சாதகமாக சர்வாம் ரீதியான முன்னேறியத் தாக்குதல் கைவிடும் படி எதரி நிர்ப்பந்திக்கப்பட்டான். எதிரியினுடைய, பகுதி அளவான முன்னேறி தாக்குதல், ஒரு பகுதி அளவான எதிர் முன்னேறி தாக்குதலால், சமநிலைபடுத்தபட்ட பாணியான ஒரு யுத்தத்தில் கொண்டு முடிந்தது. எதிரியின் முக்கிய இலக்குகளாக ஷான்டுங்கும் வடக்கு ஷென்சியும் இருந்தன.

எதிரி புதியதொரு யுத்த தந்திரத்தைக் கையாளும்படி நிர்பந்திக்கப்பட்டிருந்தான்; மஞ்சள் நதிக்கு தெற்கிலும் மேற்கிலும் இருந்த ஏரியாக்களில், இயங்கி கொண்டிருந்த மக்கள் விடுதலை சேனையை நோக்கி கிழக்கில் இருந்தும் மேற்கில் இருந்தும் இரண்டு சக்தி வாய்ந்த படை வரிசைகளை முடுக்கி விடுவதில் இந்த புதிய யுத்த தந்திரம் அடங்கி இருந்தது. மக்கள் படைகளை தனித்தனியாக நிர்மூலம் செய்வற்கு முன்பாக அவற்றின் நிலைகளில் இருந்து மக்கள் துருப்புகளை அகற்றுவது எதிரியின் எண்ணமாக இருந்தது. கூசு-டுங் தலைமையின்கீழ் 4,50,000 எதிரி துருப்புகள், கோமிங்டாங்கின் மொத்த தாக்கும் படைகளில் மூன்றில் இரண்டு பங்கினர் ஷான்டுங் விடுவிக்கப்பட்ட ஏரியாவிற்கு எதிராக ஈடுபடுத்தபட்டிருந்தார்கள்; மற்றும் ஹூசுங்-நான் தலைமையின்கீழ் 2,30,000த்திற்கும் அதிகமான எதிரி துருப்புகள் (ஸ்தல மக்கள் விடுதலை சேனையின்

பிரிவுகளைப்போல் பத்து மடங்குகள்) வடக்கு ஷென்சி விடுவிக்க பட்ட ஏரியாவைத் தாக்கின. மிகவும் கடினமான போராட்டத்திற்கு பிறகு, ஷான்டுங் மற்றும் வடக்கு ஷென்சிக்கு எதிரான எதிரியின் குவிந்த முன்னேறிய தாக்குதல்களை நொறுக்கி தள்ளுவதில் மக்கள் விடுதலை சேனை நிகழ்ச்சி போக்கில் வெற்றி பெற்றது.

ஷான்டுங் விடுவிக்கப்பட்ட ஏரியாவிற்கு எதிராக பெருமளவிலான எதிரியின் முன்னேறித்தாக்குதல் 1947 ஏப்ரல் 6இல் ஆரம்பமாயிற்று. ஈமெங், மெங்கின் மற்றும் லைமெங் ஆகிய மூன்று பெரிய இயக்கங்களில், எதிரியின் பிரதான படைகள் அழிக்கப்பட்டன. மெங்கின் இயக்கம் மிகவும் விஷேசமாக தலைதூக்கி நின்யு கொண்டிருந்தது; கோமிங்டாங் முன்னேறி தாக்குதல் நொறுக்கித் தள்ளப்பட்டது என்பதிலும் மற்றும் கோமிங்டாங் அதிர்ச்சிப் படைகள் நசுக்கப்பட்டது என்பதிலும் மென்கிங் இயக்கம் மிகவும் விசேஷமாக தலைதூககி நின்றுக் கொண்டிருந்தது. மக்கள் விடுதலை சேனை யுத்தத்தில் முன்கை எடுத்தலைப் பெறுவதற்கு ஆரம்பித்தது. இது கிழக்கு சீனப் போர்க்களத்தின் வலிமையின் மிச்சத்தில் ஒரு மாற்றத்தின் ஆரம்பத்தைக் குறித்தது; மக்கள் விடுதலை சேனையின் நாடு தழுவிய எதிர்முன்னேறி தாக்குதலுக்கான பாதையை வகுத்தது.

வடக்கு ஷென்சிக்கு எதிரான எதிரியின் பெரும் முன்னேறி தாக்குதல், 1947 மார்ச் 13 இல் ஆரம்பமாயிற்று. இந்த குவிந்த முன்னேறிய தாக்குதல், ஏனானிலும், லேயோவாபாவிலும் யூலினிலும் மற்றும் இதர இடங்களிலும் தொடர்ச்சியான போராட்டங்களுக்குப்பிறகு நொறுக்கித் தள்ளப்பட்டது. இடைக்காலத்தில், வடகிழக்கு சீனாவிலும், ஷான்சி-சகார்-ஹோப்பெய் ஏரியாவிலும் மற்றும் ஷான்சி - ஹோப்பெய் - ஷான்டுங்-ஹோனான் ஏரியாவிலும் அங்கிருந்த எதிரி துருப்புகளுக்கு எதிராக — அங்கு எதிரியின் துருப்புகள் தற்பாதுகாபபு போராட்டத்தில் விழுந்தன. எதிர்-முன்னேறித் தாக்குதல்கள் மக்கள் விடுதலை சேனையால் துவக்கப்பட்டிருந்தன. இது இத்தகைய பல்வேறு போர்களங்களிலும் யுத்த நிலைமையில் அடிப்படையானதொரு மாற்றத்தினை உருவாக்கி இருந்தது.

1947 கோடையில் வடகிழக்கு ஜனநாயக நேச ராணுவம் வடக்கிழக்கிலும் ஜிகோலிலும் கிழக்கு ஹோப்பெய்யிலும் பல்வேறு போர்க்களங்களில் எதிரியைத் தாக்கிற்று. சின ஷாங்சுன் ரயில்வே நெடுகிலும் மற்றும் பீகிங்-சென்யான் ரெயில்வே நெடுகிலும்இருந்த இறுகலான பாதைக்குள் எதிரி தடுத்து நிறுத்தப்

பட்டு, குவிந்த ஒரு தற்பாதுகாப்பு நிலையை எடுக்கும்படி நிர்பந்திக்கப்பட்டிருந்தான்.

ஷான்சி-சகார்-ஹேப்பெய் ஏரியாவில் மக்கள் விடுதலை சேனை டியன்சின் — பூகோவ் ரெயில்வேயின் வடக்கு பிரிவு நெடுகிலும் மற்றும் பாகவாடிங்கிற்கு வடக்கே இருந்த ஏரியாவிலும் சிசியா— சுவாங்கின் வெளிப்புற மண்டலத்தில் முன்னேறிதாக்கும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்திற்று.

இந்த ஒரு வருட காலத்தில், மக்கள் விடுதலை சேனை, எதிரியி னுடைய ஒழுங்கான துருப்புகளையும் ஒழுகற்ற துருப்புகளையும் மொத்தம் 11,20,000 பேரை செயலற்றதாக ஆக்கிற்று. அதே சமயத்தில், அதனுடைய சொந்த, நிலையான ராணுவம் 12லட்சம் பேரிலிருந்து 20லட்சப் பேராக வளர்ந்தது. இந்த முறையில் எதிரியின் யுத்த தந்திரரீதியான முன்னேறித்தாக்குதல் முறியடிக்கப்பட்டது.

கோமிங்டாங் துருப்புகள் ஒவ்வொரு போர்க் களத்திலும் தோல்வியைத் தழுவின; 1946இல் பிற்போக்குவாதிகள் சர்வாம்ச ரீதியான முன்னேறித் தாக்குதலைத் திமிராக இருந்ததுபோல், அல்லது 1947 மார்ச்சில் குவிந்த தாக்குதலை ஆரம்பித்த பொழுது அவர்கள் திமிராக இருந்ததுபோல், பிற்போக்கு வாதி கள் இனியும் அவ்வளவு திமிராக நடந்துகொள்ளவில்லை. மக்கள் விடுதலை சேனையின் யுத்த தந்திரரீதியான பின்வாங்குதலை பயத்தின் ஒருஅறிகுறியாகவும் மற்றும் சில நகரங்களையும் பிரதே சங்களையும் அது தற்காலிகமாக கைவிட்டதை உண்மையான பின்னடைவுகள் என்று கருதிக்கொண்டு பிற்போக்குவாதிகள் மக்கள் விடுதலை சேனையின் பலத்தையும் போர்த் தந்திரங்களை யும் பற்றி தப்புக் கணக்கு போட்டிருந்தார்கள். அவர்களுடைய முழுமையான தோல்வி இந்த மோசமான தப்பு கணக்கின் இயல் பானதொரு தோல்வியாக இருந்தது.

பெருவாரியான எண்ணிக்கையில் ஜவான்களை இழந்து விட்டமையால், கோமிங்டாங் பிற்போக்குவாதிகளுக்கு யுத்த தந்திர ரீதியான முன்னேறித்தாக்குதலில் இருந்து யுத்த தந்திர ரீதியான தற்பாதுகாப்புக்கு கடந்து செல்வதைத் தவிர வேறு மாற்று வழி எதுவும் இருக்கவில்லை.

அதற்கு பிறகு, நாடு முழுவதிலும் யுத்த நிலைமை எதிரியி னுடைய பகுதி எதிர் தாக்குதலில் இருந்தும் மக்கள் விடுதலை சேனையின் பகுதி எதிர் தாக்குதலில் இருந்தும், எதிரியினுடைய ஒட்டு மொத்தமான தற்பாதுகாப்பிற்கும் மற்றும் மக்கள்

விடுதலை சேனையின் ஒட்டு மொத்தமான முன்னேறித் தாக்குத லுக்கும் மாறிச் சென்றது. வேறு வார்த்தைகளில் சொன்னால், மக்கள் விடுதலை சேனை தாக்கிக்கொண்டிருந்த கோமிங்டாங் துருப்புகளை உறுதியாகவும் முழுமையாகவும் மற்றும் முற்றாகவும் நிர்மூலம் செய்வதற்கு இப்போது தயாராக இருந்தது.

### 3. கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்கள் மேலும் காலனிமயமாக்கப்படுதல். கோமிங்டாங் அரசியல் மோசடியின் சூன்னியத் தன்மை.

கோமிங்டாங்கின் ராணுவ நெருக்கடியோடு ஏக காலத்திலேயே, கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்களில் ஒருபொருளாதார நெருக்கடியும் வெடித்தது. கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்களை காலனிமயமாக்குதலின் விளைவாகவும் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு உள் நாட்டு யுத்தத்தின் விளைவாகவும் அது ஏற்பட்டது.

ஜப்பானின் சரணாகதிக்கு பிறகு, அமெரிக்காவில் இருந்து உபரிப் பொருட்களையும், நிவாரண சப்ளைகளையும் மற்றும் தளவாடங்களையும் கடனாக, பெரும் அளவுகளில் கோமின்டாங் பெற்றது; மற்றும் ஜப்பானியர்களிடமிருந்தும் அவர்களது கைக் கூலிகளிடமிருந்தும் ஏராளமான தளவாடங்களையும் எடுத்துக் கொண்டது இது கோமிங்டாங் அரசாங்கத்திற்கு நிதித்துறையின் "பொற்காலமாக" இருந்தது.

ஜப்பானுடைய சரணாகதி ஏற்பட்ட காலத்தில் இருந்து 1947 ஜூலை வரையிலும் அமெரிக்கா, மதிப்பில் நானூறு கோடி அமெரிக்க டாலர்களுக்கும் அதிகமான தொகைக்கு சமமான தளவடாங்களை கோமிங்டாங்கிற்கு அளித்தது. சீனமக்களிடம் இருந்து மிருகபலத்தாலும், காட்டுமிராண்டித்தனமான பொருளாதாரக் கொள்ளையாலும் கொள்ளையடிக்கப்பட்டிருந்த எல்லா தங்கம், வெள்ளி, மற்றும் ரொக்க பணத்தோடும் ஜப்பானியர்களிடம் இருந்தும் அவர்களது கைக்கூலிகளிடம் இருந்தும் கோமிங்டாங் அரசாங்கம் பல்வேறு நிதித்துறை உறுப்புகளையும் எடுத்துக்கொண்டது. மேலும், சீன மக்களிடம் இருந்து ஜப்பானியர்களால் கைப்பற்றப்பட்டிருந்த சகல தளவாடங்களையும், வியாபாரக் கம்பெனிகளையும் மற்றும் வர்த்தக நிறுவனங்களையும் கோமிங்டாங் அரசாங்கம் எடுத்துக் கொண்டது. இவற்றோடு கூடவே, கட்டாய உழைப்பின் மூலமும் கட்டாயமாக

சேர்த்துக் கொண்டதின் மூலமும் சீனாவில் ஜப்பானியர்கள் நீண்டதொரு காலகட்டமாக நிர்மாணித்திருந்த பெரிய தொழில் நிறுவனங்களையும் கோமிங்டாங் அரசாங்கம் எடுத்துக் கொண்டது. இத்தகைய எதிரியினுடைய சொத்துக்கள் மற்றும் கைக்கூலிகளின் ஆஸ்திகள் ஆகியவற்றின் மொத்த மதிப்பை அமெரிக்க அரசாங்கத்தில் 1,80,00,00,000 கோடி அமெரிக்கா டாலர்களாக மதிப்பிடப்பட்டிருந்தது. இந்த முறையில் ''எடுத்துக்கொண்டதின்'' விளைவாக, 1947-ல் நாட்டினுடைய மொத்த உற்பத்தியில், அதிகார வர்க்க-முதலாளித்துவ நிறுவனங்களால் உற்பத்தி செய்யபட்ட உற்பத்தியின் விகிதாச்சாரம் பின் வருமாறு: நிலக்கரி, 38.8%; மின்விசை, 83.3%; உருக்கு 90%, பஞ்சாலை கதிர்கள், 37.6%; தறிகள், 60.1%; எண்ணெய், இருப்பு மற்றும் இருப்பு அல்லது உலோகங்கள், 100%. சுருக்கமாக சொன்னால், ''நான்கு பெரிய குடும்பங்களால்'' உடமையாக்கபட்டிருந்த மூலதனம், நாடு முழுவதிலுமிருந்த மொத்த தொழில் மூலதனத்தில், 70—80% ஆக இருந்தது. மேலும், சீன மக்களிடமிருந்து ஜப்பானியர்கள் பறித்து வைத்திருந்த சகல விவசாய உறுப்புகளையும் மற்றும் இணைந்த நிலத்தையும் சொத்துகளையும் கோமிங்டாங் எடுத்துகொண்டது. சீன மக்கள் தங்களுடைய ரத்தத்தாலும், வேர்வையாலும் படைத்து இருந்த இந்தச் செல்வம் அனைத்தும், இந்த முறையில் ஜப்பானியர்களின் கரங்களில் இருந்து, ''நான்கு பெரிய குடும்பங்களின்'' கரங்களுக்கு மாற்றப்பட்டது.

அமெரிக்க ஏகபோக மூலதனதோடு சீன அதிகாரவர்க்க-மூலதனத்தின் ஒத்துழைப்பு, கோமிங்டாங் காட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்களின் பொருளாதாரத்தைக் காலனிமயமாக்குவதற்கு வழிநடத்தி சென்று, அதனுடையவரவிருந்த நாசத்தைப் பறைசாற்றி கொண்டிருந்தது.

சீனாவை ஒரு அமெரிக்க காலனியாகவும் சோவியத் யூனியனுக்கு எதிரான ஒரு ராணுவ தளமாகவும் மாற்றுவது, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஒரு அடிப்படையான கொள்கையாக இருந்தது. இந்த ஏகாதிபத்திய நோக்கத்திற்காக, அமெரிக்க அரசாங்கம் உள்நாட்டு யுத்தத்தை நடத்துவதில் கோமிங்டாங்கிற்கு ஆதரவு கொடுத்தது; அதே சமயத்தில், அமெரிக்க உதவிக்காக கோமிங்டாங் தேசிய, ஆதிபத்திய உரிமையை அடகுவைத்தது.

அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்து நடத்திய யுத்தம் முடிந்த

தில் இருந்து, கோமிங்டாங் அரசாங்கம் அமெரிக்க அரசாங்கத் தோடு பல துரோகத்தனமான உடன்படிக்கைகளையும் உடன் பாடுகளையும் பகிரங்கமாகவோ அல்லது ரகசியமாகவோ செய்தது. அவற்றில் "நட்புறவு, வர்த்தகம் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய சீன-அமெரிக்க உடன்படிக்கை" மிகமிக அபகீர்த்தி வாய்ந்தது; இந்த உடன்படிக்கை 1946 நவம்பர் 4இல், கையெழுத்திடப்பட்டது. இந்த உடன்படிக்கையால் குடியிருப்பி லும், பிரயாணத்திலும், வியாபாரத்திலும் மற்றும் இதர சகல வகைப்பட்ட தொழில் நிர்வாகத்திலும் சீன மண்ணில் அமெரிக்கர்களுக்கு விசேஷ சலுகைகள் வழங்கபட்டிருந்தன. இந்த முறையில்; அமெரிக்கா, சீனாவின் பொருளாதாரத்தில் தங்கு தடையற்ற சலுகைகளைப் பெற்றிருந்தது.

ஜப்பானுடைய சரணாகதிக்கு பிறகு, அமெரிக்க கார்ப்ப ரேஷன்கள் மூலம் அமெரிக்க சரக்குகளின் குவிதலும், அல்லது அமெரிக்க முதலாளிகளாலும் மற்றும் சீன அதிகாரவர்க்க முதலாளிகளாலும் கூட்டாக நிர்வகிக்கப்பட்ட நிறுவனங்களின் சரக்குகளின் குவிதலும், அல்லது, "நான்கு பெரிய குடும்பங் களால்" நடத்தபுட்டு வந்த நிறுவனங்களின் சரக்குகளின் குவிதலும், சீனாவை ஒரு அமெரிக்க ஏகபோகமயமாக்கப்பட்ட சந்தையாக மாற்றிற்று. சீனாவின் இறக்குமதிகளின் மொத்த மதிப்பில், அமெரிக்க சரக்குகள்—கள்ள கடத்தல் சரக்குகளை சேர்க்காமல்—1936இல் 22·6 சதவீதமாக இருந்ததற்கு எதிராக 1946-ல் 51.2 சதவீதமாக இருந்தது. சீனாவின் மொத்த ஏற்றுமதிகளில், பரிமாணத்தில், அமெரிக்காவின் பங்கு 1937-இல் 19.7 சதவீதமாக இருந்ததற்கு எதிராக 1946-இல் 57·2 சதவீதமாக இருந்தது. ஜப்பானியர்களிடமிருந் தும் கைக்கூலிகளிடமிருந்தும் அவர்கள் கைப்பற்றி இருந்த தொழில்களை "நான்கு பெரிய குடும்பங்கள்" அமெரிக்க ஏக போகமூலதனத்தின் கையில் வைத்தார்கள். இத்தகைய நிறுவனங் களின் சகல மூலதனமும், தொழில் நுட்பமும், நிர்வாகமும் மற் றும் ஊழியர் பயிற்சியும் அமெரிக்க கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப் பட்டன. மேலும், அமெரிக்கா, சீனாவில் தொழிற்சாலைகளை அமைத்தது; அதே சமயத்தில், கோமிங்டாங் அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்டிருந்த "திருத்தபட்ட கம்பெனி சட்டம்" அமெரிக்க மூலதனத்திற்கு சகல வகைப்பட்ட சலுகைகளையும் வழங்கிற்று. அமெரிக்க மூலதனமும் சீன அதிகார வர்க்க மூல தனமும் வரி விதிப்பு, மின்சாரம் மற்றும் மூலப் பொருட்களை ஏகபோகமாக்கியது. மற்றும் சந்தையையும் போக்குவரத்து வசதி

களையும் கட்டுப்படுத்துவது ஆகியவற்றிற்கும், இந்த முறையில் சீனாவின் தேசிய தொழிலையையும் வியாபாரத்தையும் முழுமை யாக முடமாக்குவதற்கும் கோமிங்டாங், அரசு உறுப்புகளை பயன்படுத்தின.

கோமிங்டாங்கினால் கைப்பற்றப்பட்டிருந்த செல்வம் உள் நாட்டு யுத்தத்தில் துரிதமாக செலவழிக்கப்பட்டது; எனினும் உள்நாட்டு யுத்தம் குறைவதற்கான சிறிதளவேனும் அறிகுறி இல்லாமல் வளர்ந்தது. யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு, தானியங்களை கொடுக்கும்படியும், வரிகளைக் கொடுக்கும்படியும் ராணுவ சேவையில் சேரும்படியும், மக்களை நிர்ப்பந்தபடுத்தி யதினாலும், வானளாவ காகித நோட்டுகளை வெளியிட்டதினா லும் மற்றும் சரக்குகளின் விலையை உயர்த்தியதாலும் கோமிங் டாங் அரசாங்கம் மக்களை மிதமிஞ்சிய அளவிற்கு ஈவிரக்கமற்ற முறையில் கொள்ளையடிப்பதை நடைமுறைபடுத்திற்று. இதன் விளைவாக முன் கண்டிராத அளவிற்கு கடுமையானதொரு தன்மை வாய்ந்த ஒரு பொருளாதார நெருக்கடி கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்களில் வெடித்தது. அரிசி மற்றும் இதர சரக்குகளின் விலைகள் ஒரு காற்றாடி போல் உயர்ந்தன; அந்த காற்றாடியின் கயிறு,நோட்டு அச்சடிக்கப்படும் அச்சகத்தில் இருந்து காகிதபணம் வெளியே வந்தவுடன் அறுந்துவிட்டது. யுத்த முற்கால அளவுகோல்களோடு ஒப்புநோக்கி பார்க்கும் பொழுது, ஜப்பானின் சரணாகதி ஏற்படும் தருவாயில், விலை வாசிகள் 1,800 மடங்கு அதிகரித்து இருந்தன. 1947 ஏப்ரல் வாக்கில் விலைவாசிகள் 60,000 மடங்கு உயர்ந்து இருந்தன. கோமிங்டாங் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டிருந்த "தேசிய நாணயத்தின்" தொகை, ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் ஆரம்பிக்கும் தருவாயில், சீன தேசிய டாலர் 140 கோடியாக இருந்தது; ஜப்பானின் சரணாகதி ஏற்படும் தருவாயில், சீன தேசிய டாலர் 50 ஆயிரம் கோடியாகவும், மற்றும் 1947 ஏப்ர லில் சீன தேசிய டாலர் 16,00,000 கோடியாகவும் இருந்தது.

1948 வாக்கில், ஷாங்காயில் விலைவாசிகள் யுத்த முற் காலத்தோடு ஒப்புநோக்கிப் பார்க்கும்போது 30,00,000மடங்கு கள் உயர்ந்திருந்தன. விலைவாசிகள் வானவியல் தொகைகளை எட்டிப் பிடித்திருந்தமையால், "தேசிய நாணயம்" பரிவர்த் தனையின் ஒரு சாதனம் என்ற முறையில், அதனுடைய மதிப் பினை முற்றிலும் இழந்திருந்தது. இதன் விளைவாக, வியாபார நடவடிக்கைகள், கூடைகள் நிறைய காகிதப் பணத்தின் அம்சங்

களில் நடத்தப்பட்டன. ஆகஸ்டு 19இல், கோமிங்டாங் அரசாங்கம், ''தேசிய நாணயத்தை'', ''தங்க-யுவானால்'' அகற்றப்படுவதாக பிரகடனம் செய்தது; ஒரு தங்க யுவான் சீன தேசிய டாலர் 30,00,000த்திற்கு சமம் என்ற பரிவர்த்தனை விகிதத்தையும், அல்லது 0·25 அமெரிக்க டாலருக்கு சமம் என்ற பரிவர்த்தனை விகிதத்தையும் கோமிங்டாங் அரசாங்கம் பிரகடணம் செய்தது; மற்றும் புதிய நாணய நோட்டுகள் வெளியிடப்படுவதின் மொத்த தொகை, 50 கோடி தங்க யுவானின் வரம்பிற்கு உட்படுத்தப்படும் என்றும் அறிவித்தது. எனினும், புதிய நாணயம், புழக்கத்திற்குள் சென்ற முதல் நாளில் இருந்து, யுத்த பற்றாக்குறையை சரிசெய்யும் பொருட்டு அது பிரம்மாண்டமான அளவுகளில் வெளியிடப்பட்டது; மற்றும் மக்கள், அவர்கள் தனிப்பட்ட முறையில் வைத்திருந்த சகல யு. எஸ். டாலர்களுக்கும் மற்றும் இதர அந்நிய நாணயங்களுக்குப் பதிலாக, ''தங்க-யுவானை'' ஏற்றுக் கொள்ளும்படி மக்கள் நிர்ப்பந்திக்க பட்டிருந்தார்கள். கடுமையான பணவீக்கம் ஏற்பட்டு, சரக்குகளை வாங்குவதில், பதட்டமான ஒரு குழப்பமும் பின்தொடர்ந்தது. அக்டோபர் 1ஆம்தேதி வாக்கில், வெளியிடப்பட்டிருந்த ''தங்க-யுவா''னின் தொகை அதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த வரம்பைப் போல் ஆறுமடங்கு அதிகரித்திருந்தது. அதனுடைய தங்கு தடையற்ற காகித நோட்டுகள் வெளியிடுவதின் விளைவாகவும், விலை கட்டுப்பாட்டின் பயனற்ற தன்மையின் காரணமாகவும் ''தங்க யுவான்'' அதனுடைய முன்பிருந்த நாணயத்தைப் போலவே செல்லுபடி ஆகாததாக, இறுதியாக பிரகடணம் செய்யப்பட்டது.[1]

உள்நாட்டு யுத்தத்தை ஆரம்பித்துக் கொண்டு, கோமிங்டாங் தேசிய தொழில் மற்றும் வியாபாரத்திற்கு எதிராக அதனுடைய ஒடுக்கு முறையை அதிகரித்தது. ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்திற்கு முன்பு, ஷாங்காயில் 5,400 தொழிற்சாலைகளுக்கும் அதிகமாக இருந்தன. ஆனால், 1947இல் அவற்றில் 582 தொழிற்சாலைகள் மட்டுமே இயங்கிக் கொண்டிருந்தன. 1949 ஆரம்பத்தில், 80%த்திற்கும் அதிகமான இயந்திர தொழிற்சாலைகள் உற்பத்தியை நிறுத்தி விட்டன. 1947இல் டியன்ட்சின்னில் சுமார் 70%திற்கும் அதிகமான தொழிற்சாலைகளும், சிங்டாவோவில் சுமார் 50% தொழிற்சாலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன.

விவசாய உற்பத்தி கடுமையாக பாதிக்கப்படும் ஒரு அளவிற்கு

கிராமப்புற உழைப்பு சக்தி விவசாய கருவிகள் மற்றும் உழவு பிராணிகள் கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்களில் குறுக்கப்பட்டிருததன. விவசாயம் நாசமானதோடு, பஞ்சம் நாட்டை பயமுறுத்திற்று; பட்டினியால் வாடிய மக்களை ஒவ்வொரு இடத்திலும் பார்க்க முடிந்தது. 1946 இல், ஹோனானில். சாகுபடிக்கு லாயக்கான 30% நிலமும், ஹுனானிலும், ஹுவாங்குங்கிலும் சாகுபடிக்கு லாயக்கான 40 சதவீதம் நிலமும் தரிசாகக் கிடந்தன. இந்த கால கட்டத்தில், கோமிங்டாங்கின் அரசியல் மோசடியும் முற்றிலும் சூன்யமாகி இருந்தது.

1949 மார்ச்சில், கோமிங்டாங் மத்திய நிர்வாக கமிட்டியின் ஒரு விரிவடைந்த கூட்டத்தில், சியாங்கை-ஷேக், அரசியல் கலந்தாலோசனை மாநாட்டின் தீர்மானங்களை ஒத்து செய்வதற்கு தொடர்ச்சியான திட்டங்களை வகுப்பதற்கு அவனது பிற்போக்கு தொங்குசதைகளைத் திரட்டினான். மோசடித் திட்டம் எப்படி இருந்தது என்றால் "தேசிய சட்டசபையை" கூட்டுவதும் மற்றும் வெகு ஜனங்களை மோசடி செய்யும் நோக்கத்திற்காக, போலித்தன்மையானதொரு அரசியல் சட்டத்தை உருவாக்குவதுமாக இருந்தது. அக்டோபர் 11இல், மக்கள் விடுதலை சேனை யுத்த தந்திர நோக்கங்களுக்காக சாங்சியாகோவை காலிசெய்தது. சியாங்கை-ஷேக் "வெற்றியால்" மயங்கி, அதே நாளில் "தேசிய சட்டசபையைக்" கூட்ட ஒரு உத்தர்வைக் கொடுத்தன.

"தேசிய சட்டசபை" என்று அழைக்கப்பட்ட அந்த சபை, கோமிங்டாங்கினால், ஒரு தலைபட்சமாக கூட்டப்பட்டிருந்த அந்தசபை, 1946 நவம்பர் 15இல் இருந்து டிசம்பர் 25வரையிலும் கூடிற்று. இது அரசியல் கலந்தாலோசனை கோட்பாட்டினை முற்றிலும் மீறுவதாக இருந்தது. அந்த சபை ஒரு கோமின்டாங் அரசியல் சட்டத்தை நிறைவேற்றிற்று. பொதுஜன ஆத்திரத்தைத்தவிர்க்கும் பொருட்டு, அவனது கைக்கூலிகள் தயாரித்து இருந்த பகிரங்கமான பாசிச, சர்வாதிகார "மே 5 நகல் அரசியல் சட்டத்தை" நிறை வேற்றாமல் இருக்கும்படி சியாங் அவனது கையாட்களைத் தூண்டி இருந்தான்; ஆனால், முகமூடி போட்டதொரு அரசியல் சட்டத்தை — "சீனக் குடியரசின் அரசியல் சட்டத்தை"— நிறைவேற்றும்படியும் அவனது கையாட்களைத் தூண்டி இருந்தான்.

எனினும், மக்களின் அதிகாரம், ஸ்தல அரசாங்கங்களுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இடையே உள்ள உளவு மற்றும்

சட்டம் செய்யும் உறுப்புகளுக்கும் நிர்வாக உறுப்புகளுக்கும்
இடையே உள்ள உறவு சம்பந்தமான அதன் விதிகள் முழுமை
யாக சர்வாதிகார ரீதியாக போலி அரசியல் சட்டத்தில், திரும்பி
இருந்தன. அதிகாரம் மக்களிடம் ஒப்படைக்க படாமல்,
அரசாங்கத்திடம் மட்டுமே ஒப்படைக்கப் பட்டிருந்தது;
அதிகாரம் ஸ்தல அரசாங்கங்களிடம் ஒப்படைக்கப்படாமல்,
மத்திய அரசாங்கத்திடம் மட்டுமே ஒப்படைக்கப்பட்டிருந்
தது. சட்டம் செய்யும் உறுப்புகளிடம் ஒப்படைக்கப்
படாமல், நிர்வாக உறுப்புகளிடம் மட்டுமே ஒப்படைக்கப்பட்
டிருந்தது. போலி அரசியல் சட்டம் மக்களின் "உரிமைகளுக்கு
வகை செய்திருந்தது. ஆனால் அதே சமயத்தில், அவசர நிலை
காலத்திலும் மற்றும் சமுதாய ஒழுங்கினை நிலை நிறுத்து
வதற்கும், இப்படிப்பட்ட உரிமைகள் சட்டபூர்வமான கட்டுப்
பாட்டிற்கு உட்படுபவையாக இருந்தன என்று வரையறுத்து
கூறுவதற்கு அது கவனமாக இருந்தது. எனவே, மக்களின்
உரிமைகளுக்கான திட்டவட்டமான விதி, ஒரு செத்துப் போன
வாசகத்தை காட்டிலும் வேறு எதுவும் அல்ல என்பது வெளிப்
படையாக இருந்தது; பிற்போக்கு அரசாங்கம் எந்த நேரத்திலும்
மகிழ்ச்சியோடு அறிவுக்கும் எந்த உத்தரவினாலும் குத்தப்படக்
கூடிய ஒரு சோப்புக் குமிழியைத்தவிர வேறெதுவுமில்லை என்பது
வெளிப்படையாக இருந்தது. தலைவர் ஆறு ஆண்டுகளுக்கு ஒரு
முறை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் போலி அரசியல்
சட்டம் மேலும் வகை செய்திருந்தது; மீண்டும் தேர்ந்
தெடுக்கபட்டால், அவர் தொடர்ந்து அவரது பதவியை வகித்துக்
கொண்டிருக்க முடியும் என்றும், நாடு முழுவதின் ராணுவம்
கடற்படை மற்றும் ஆகாயப்படை ஆகியவற்றிற்கு அவர் தளபதி
யாக இருக்க வேண்டும் என்றும், மற்றும் அவசர கால கட்டளை
களைப் பிரகடணம் செய்வதற்கு அவர் உரிமை பெற்றிருக்க
வேண்டும் என்றும் மற்றும் சட்டம் செய்யும் உறுப்பினால் நிறை
வேற்றப்படும் எந்த தீர்மானத்தையும் ரத்து செய்யும் உரிமை
அவருக்கு உண்டு என்றும் போலி அரசியல் சட்டம் மேலும் வகை
செய்திருந்தது. இந்த வழியில், கோமிங்டாங் சர்வாதிகாரி
அனைத்து அரசு அதிகாரத்தையும் கைப்பற்றிக் கொள்ளுவார்;
அதே சமயத்தில், மக்கள் எந்தவிதமான அரசு அதிகாரமும்
இல்லாமல் இருப்பார்கள். மேலும், போலி அரசியல் சட்டம்,
இதர விஷயங்களுக்கு இடையே பிரதேச சுய ஆட்சி கோட்
பாட்டை மறுத்தது; தேசிய சிறுபான்மையினரின் சுய ஆட்சி

உரிமையைச் சட்ட சபைக்கு இருந்த ஊர்ஜிதம் செய்யும் உரிமைகளையும் ரத்து செய்யும் உரிமைகளையும் மறுத்தது.

ஆகவே, இந்த அரசியல் சட்டத்தைப்பற்றி, கோமிங்டாங்கின் அரசியல் விஞ்ஞான கோஷ்டியின் பத்திரிக்கையான டாகங் பாவோ கூட, "அது சகல அதிகாரத்தையும் ஒரு நபரிடத்தில் குவிக்கிறது மற்றும் சகல எண்ணங்களையும் ஒரு தலையில் குவிக்கிறது" என்று கூறாமல் இருக்க முடியவில்லை.

விடுதலைக்கு முந்தய 40 ஆண்டு காலமாக சீனாவில் அடுத்தடுத்து ஆட்சி நடத்திய பிற்போக்கு அரசாங்கங்கள் எதுவுமே ஒரு அரசியல் சட்டத்தை உண்மையாகவே விரும்பியது இல்லை; ஆனால், அந்த அரசாங்கங்கள் ஒவ்வொன்றும், அதனுடைய மரண படுக்கையில் இருக்கும் பொழுது, போலித்தனமானதொரு அரசியல் சட்டத்தால், அதனை காப்பாற்றிக் கொள்ள முயற்சிக்கும். பிற்போக்கு கோமிங்டாங் ஆட்சியும் அதற்கு விதிவிலக்கு அல்ல. புரட்சி சக்திகளின் தாக்குதல்களின் கீழ் தள்ளாடிக் கொண்டிருந்த அது, புரட்சியை எதிர்க்கவும் மக்களை ஏமாற்றவும் ஒரு சாதனமாக, ஒரு போலி அரசியல் சட்டத்தை உருவாக்கி இருந்தது. தங்களுடைய பிற்போக்கான ஆட்சி முற்றிலும் உளுத்துப் போய் இருந்தது என்ற விவரத்தை மூடி மறைப்பதற்கு ஒரு முகமூடியாக கோமிங்டாங் பிற்போக்குவாதிகள் ஒரு பூர்சுவா அரசியல் சட்டத்தைப் பயன்படுத்த முயற்சித்தார்கள். இது நிச்சயமாக, முற்றிலும் விருப்பமான சிந்தனையாகவே இருந்தது. போலி அரசியல் சட்டமும், அதனுடைய ஆசிரியர்களான கோமிங்டாங் பிற்போக்குவாதிகளோடு சேர்த்து ஒழிக்கபடுவதற்கு மூன்றாண்டுகளுக்கு முன்பு வரையிலும் போலி அரசியல் சட்டம் பிரசுரமாக்கப்படவில்லை.

1947 ஏப்ரல் 18இல் கோமிங்டாங் அதனுடைய அரசாங்கத்தை "திருத்தி அமைப்பதாக" அறிவித்தது.

திருத்தி அமைத்த பிறகு, புதிய அரசாங்கம் "தாராளமானதாகவும்" மற்றும் "பல கட்சி" அரசாங்கமாகவும் இருந்தது என்று சியாங்கை-ஷேக் அப்பட்டமாக கூறினான்; மற்றும், "அரசியல் அடிவருடித்தனத்தில் இருந்து அரசியல் சட்டவாதத்திற்கு மாறிச் செல்வதை"க் குறித்தது என்றும் அப்பட்டமாக கூறினான். இந்த மோசடியில் பிரதான நடிகர்களாக சாங்சுன், செங்சி, சாங்சன்-மாய் மற்றும் வாங்ன் இ-ஊவ் ஆகியோர் இருந்தார்கள். சாங்சுன் அதிகாரவர்க்க-தரகர்களின் நலன்களைப் பிரநிதித்துவப்படுத்திக் கொண்டிருந்த அரசியல் விஞ்ஞான

கோஷ்டியின் தலைவராகவும், ஜப்பானிய ஆதரவு கோஷ்டி யின் ஒரு உறுதியான உறுப்பினராகவும் இருந்தார். செங்சி ஒரு புல்லுருவியாக இருந்தான்; இவன் துரோகி வாங்சின்-வெய்யிற்கு சேவை செய்வது பழக்கம். சாங்சுன்-மாய் வடக்கத்திய கும்பலின் இராஜ விசுவாச அதிகார வர்க்கத்தின் புத்துயிர் பெற்றெழுந்த ஒரு நபராகவும் மிதமிஞ்சிய பிற்போக்கு இயக்க மறுப்பு இயல் வெறியனாகவும் இருந்தான், வாங்இன்-ஊவ் ஒரு கோட்பாடற்ற அரசியல் வாதியாக இருந்தான். இத்தகைய கல் நெஞ்சர்களான துரோகி கள், பத்தாம்பசலி, நிலப்பிரபுத்துவத்தின் மிச்ச சொச்சங்கள், மற்றும் வெட்கங்கெட்ட அரசியல்வாதிகள் பிற்போக்கு கோமிங்டாங் ஆட்சியின் ஆதரவாளர்களாகவும் அரசியல் கலந்தாலோசனை மகாநாட்டின் தீர்மானங்களையும் யுத்த நிறுத்த உத்தரவுகளையும் ரத்து செய்வதின் உடந்தையாளர்க ளாகவும்,மற்றும் அமெரிக்க ஆட்சியாளர்களை நேசிப்பவர்களாக வும் இருந்தார்கள்; அவர்கள் திடீரென்று ''தாராளவாதிகளாக'' மாற்றப்பட்டு, ''அந்த நாளின் பிரமுகர்களாக'' மாற்றப்பட்டி ருந்தார்கள். சியாங்கை-சேக்கின் 'பல கட்சி'', அரசாங்கம் கோமிங்டாங்கைத் தவிர இரண்டு இதர ''கட்சிகளைப் பற்றி'', யும், இளைஞர் கட்சியை பற்றியும்,ஜனநாயக சோஷலிஸ்ட் கட்சி பற்றியும் தம்பட்டம் அடித்துக் கொள்ள முடியும். இவ்விரு கட்சி களும் சீனா ஜனநாயக கழகத்தில் ஏற்பட்ட பிளவின் விளைவாக தோன்றிய கட்சிகளாகும்; இவ்விரு கட்சிகளும் தங்களது ஆன்மாக்களை விற்பனைக்கு வைப்பதற்கு தயாராக இருந்தன. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிசள் கோமிங்டாங் அரசாங்கத் திற்கு பின்னால், சூட்சக் கயிற்றை இழுப்பவர்களாக இருந்தார் கள். கோமிங்டாங் யுத்த பிரபுக்கள், கட்சித் தலைவர்கள் மற்றும் நிதித்துறை திமிங்கிலங்கள் கோமிங்டாங் அரசாங்கத்தின் அணு மையமாக அமைந்தார்கள்; அதே சமயத்தில், இளைஞர் கட்சியும் ஜனநாயக சோசலிஸ்ட் கட்சியும் அரசியல் அடிவருடிகளின் ஒரு கோஷ்டியாக மட்டுமே இருந்தார்கள். இந்த அரசியல் அடிவருடி களோடு சேர்ந்து, அவனுடைய சர்வாதிகாரத்தைப் பட்டுத்திரை போடுவதற்கு சியாங் முயற்சித்தான். ''புனரமைப்பிற்கு'' பிறகு, இளைஞர் கட்சியின் உறுப்பினர்களும், ஜனநாயக சோஷலிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களும் மற்றும் பல்வேறு இதர ''பிரமுகர் களும்'' தேசிய அரசாங்கத்தின் உறுப்பினர்களாகவும் நிர்வாக யுவானின் நிர்வாக அதிகாரிகளாகவும் அல்லது மந்திரிகளாகவும்

பதவிகளைப் பெற்றார்கள்; இளைஞர் கட்சியின் உறுப்பினர்கள், விவசாயம் மற்றும் காட்டிலாகா மந்திரி சபையிலும் மற்றும் பொருளாதார மந்திரி சபையிலும் பதவிகளைப்பெற்றுக்கொண்டு செல்வாதாரங்கள் கமிஷனின் கட்டுப்பாட்டிற்காகவும் மற்றும் சீனப் புனர்நிர்மான பஞ்சாலை கம்பெனியின் கட்டுப்பாட்டிற்காக வும், எந்தவிதமான கோமிங்டாங் அதிகாரிகளையும் போலவே, வெட்கங்கெட்ட முறையில் முட்டுக்கொடுத்துக் கொண்டார்கள். 1947 செப்டம்பர் வாக்கில், கோமிங்டாங் அரசாங்கத்தில் பதவி களைப் பெறுவதில் ஏற்பட்ட சண்டையின் விளைவாக,ஜனநாயக சோஷலிஸ்ட் கட்சி இரண்டு கோஷ்டிகளாக பிளவுபட்டு, ஒரு கோஷ்டி மற்றொரு கோஷ்டியின்மீது வசைமாறித் தாக்குதல் களை பொழிந்து கொண்டிருந்தார்கள். திருத்தி அமைக்கப்பட்ட கோமிங்டாங் அரசாங்கத்தில் சேர்ந்திருந்த தனி நபர்கள் மற்றும் கட்சிகள் இவைதான் எனினும், சியாங்கை-ஷேக் அவனது அரசாங்கத்தைத் "தாராளமான" அரசாங்கம் என்றும் மற்றும் "பலகட்சி" அரசாங்கம் என்றும் கூறிக் கொள்வதற்கு திமிரோடு இருந்தான்.

கோமிங்டாங் அரசாங்கம் அதனை ஏன் புனரமைத்துக் கொண்டது? பதில், சாதாரணமானதுதான்; அமெரிக்க பிற் போக்குவாதிகளிடம் இருந்து ஒரு கடனை எழுப்பும் நோக்கத்திற் காகவும் அந்த கடன் தொகையை வைத்துக்கொண்டு உள்நாட்டு யுத்தத்தை தொடர்ந்து நடத்தி, பாசிச சர்வாதிகாரத்தை நிலை நிறுத்தும் நோக்கத்திற்காகவும்தான்.

1947 நவம்பரில் சாங்-சுன் நாலாண்டு காலத்திற்கு உதவி செய்யும்படி அமெரிக்க அரசாங்கத்தை வேண்டினான். அமெரிக்க உதவிக்கு பரிவர்த்தனையாக, கோமிங்டாங் அரசாங்கம் அதனுடைய நிதிகளை மேற்பார்வை செய்யவும் மற்றும் இதர பொருளாதார விவரங்களை மேற்பார்வை செய்யவும் அமெரிக்க ஆலோசகர்களை உளபூர்வமாக வரவேற்கும். மொத்தம் 57 கோடி அமெரிக்க டாலர்களை கோமிங்டாங்கிற்கு உதவி செய் வதற்கான ஒரு மசோதாவை அமெரிக்க காங்கிரஸ் 1948 மார்ச்சில் நிறைவேற்றிற்று.

### 4. தேசபக்த ஜனநாயக இயக்கத்தின் எழுச்சி.

கோமிங்டாங்கின் ராணுவ முன்னேறித் தாக்குதலோடு கூடவே, கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்களின் பொருளாதாரமும் நொறுங்கிப்போய், கோமிங்டாங்கின்

அரசியல் மோசடி சூன்யமாகப் போயிற்று. கோமிங்டாங் பிற் போக்குவாதிகளுக்கு எதிராக, அழியாத விரோதத்தை மறைத்து வைத்திருந்த மக்கள், அவர்களின்பால் ஒருபொழுதும் ஒத்துப் போக முடியாத மக்கள் போராடுவதற்கு எழும்பிக் கொண்டிருந் தார்கள்; அப்படி செல்வதினால் கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்களில், தேசபக்த ஜனநாயக இயக்கம் கடந்து செல்லும் ஒவ்வொரு நாளும் மிக அதிக தீவிரமாக வளர்ந்தது. இத்தகைய ஏரியாக்களில் நடைபெற்ற தேசபக்த இயக்கமும் மற்றும் விடுவிக்கப்பட்ட ஏரியாக்களில் நடைபெற்ற ஆயுத போராட்டங்களும் இரண்டு புரட்சிகர அரங்கங்களாக அமைந்தன.

1946 செப்டம்பரில், முற்போக்கு அமெரிக்க ஸ்தாபனங் களால் ஆரம்பிக்கப்பட்ட, "அமெரிக்க சிப்பாய்களே, சீனாவை விட்டு வெளியேறுங்கள்!" வாரம், உடனடியாக சீனா முழுவதும் பரவி, மிகவும் பரவலானதொரு வெகுஜனஇயக்கமாக அபிவிருத்தி அடைந்தது; இந்த இயக்கத்தின் ஆதரவாளர்கள் சீனாவில் இருந்து சகல அமெரிக்க துருப்புகளும் பின்வாங்கும் வரையிலும் அவர்கள் கிளர்ச்சி செய்துக்கொண்டு இருப்பார்கள் என்று பிரகடனம் செய்தார்கள். கோமிங்டாங்கிற்கு எந்த விதமான உதவி செய்வதையும் அமெரிக்க அரசாங்கம் நிறுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரினார்கள். இந்த இயக்கம் நாடு முழுவதி லும் இருந்த பெரிய நகரங்களில் விரிவடைந்து, மிகவும் விசேஷ மாக ஷாங்காயிலும் சுங்கிங்கிலும் முன் கண்டிராத ஒரு உயரத்தை எட்டிப் பிடித்தது.

டிசம்பர் 1இல், "தேசிய சட்டசபை" கூட்டம் நடைபெற்று கொண்டிருந்த பொழுது, சிறுகடைக்காரர்களின் ஒரு போராட்டம ஷாங்காயில் வெடித்தது. அந்த நகரத்தின் பரந்து பட்ட வெகு ஜனங்கள், அவர்களது அன்றாட தேவைகளுக்கு பாதை ஓரத்தில் இருந்த சிறு கடைகளின் மீது சார்ந்து நிற்க வேண்டி இருந்தமையால், ஷாங்காயில் பல சிறு கடைக்காரர்கள் இருந்தார்கள். சந்தையை ஏக போகமாக்கும் ஒரு முயற்சியும், நடை பாதையில் இருந்து சிறு கடைகளைத் தடை செய்யும் உத்தரவுகளை கோமிங்டாங் அரசாங்கம் கொடுத்தது. அந்த முறையில் சிறு கடைக்காரர்கள் அவர்களது வாழ்க்கையை நடத்துவதை சாத்தியமற்றதாக செய்தது. தங்களது உயிர் வாழும் உரிமைக்காக போராடுவதற்கு, சிறு கடைக் காரர்கள் ஷாங்காய் அதிகாரிகளுக்கு ஒரு மனுவை சமர்ப்

தார்கள்; ஆனால் ஒரு கொடூரமான படுகொலையையும் சந்தித்தார்கள். எனினும், அவர்களது போராட்டங்கள் ஷாங்காய் நகரத்து குடி மக்கள் மற்றும் நாட்டின் இதர பாகங்களில் இருந்த மக்கள் ஆகியோரின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற்றன. சீன-அமெரிக்க பிற்போக்கு சக்திகள் மிகமிக அதிகமாக குவிந்து கிடந்த ஷாங்காயில், அந்த நிகழ்ச்சி நடைபெற்றது சந்தர்ப்பவசமானதே அல்ல; பிற்போக்கு கோமிங்டாங் கட்சியின் கடுமையான நெருக்கடியின் ஒரு அடையாளமாக அது இருந்தது.

1946 டிசம்பர் இறுதியில், நாடு முழுவதிலும் இருந்த மாணவர்கள், அமெரிக்க சிப்பாய்களால் புரியப்பட்ட அக்கிரமங்களுக்கு, எதிர்த்து ஆட்சேபிக்கும் முறையில், ஒரு ஆர்ப்பாட்ட இயக்கத்தைத் துவக்கினார்கள். அமெரிக்க சிப்பாய்கள் புரிந்த அக்கிரமங்களில் பீகிங் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த ஒரு மாணவியின் மீது நடத்தப்பட்ட தாக்குதலும் சேரும். நாட்டின் பெரிய மற்றும் நடுத்தர அளவிலான நகரங்களிலும் இருந்த ஐந்து லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் இத்தகையப் போராட்டங்களில் பங்கு கொண்டார்கள்.

1947 மே மாதத்தில், கோமிங்டாங் அரசாங்கம் அதனை ''புனரமைத்துக் கொண்டு'' இருந்த பொழுது, மாணவர்களின் ஒரு தேச பக்த இயக்கம் இன்னும் மிகப்பெரிய அளவிலும் கூட மற்றும் இன்னும் மிகப்பெரிய, மிகவும் அதிகமான நீண்டகால செல்வாக்கினைக் கொண்ட இயக்கமாக வெடித்தது. இந்த இயக்கத்தில், முன்வைக்கப்பட்ட கோஷம் பட்டினி, உள்நாட்டு யுத்தம் மற்றும் துன்புறுத்தல் ஆகியவற்றை எதிர்த்துப் போராடுவதாக இருந்தது, இந்த மாணவர் இயக்கம் அதனுடைய விரிவான தன்மையின் காரணமாகவும் உறுதியான தன்மையின் காரணமாகவும் தலை தூக்கி நின்று கொண்டிருந்தது; நாட்டின் சகல பகுதிகளிலும் இருந்த மாணவர்களை அது பிணைத்திருந்தது; இந்த மாணவர்கள் ஒவ்வொரு விஷயத்திலும் பிற்போக்கு வாதிகளுக்கு எதிராக உறுதியாக பதிலடி கொடுத்தார்கள். உதாரணமாக, மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்வதைப் பிற்போக்குவாதிகள் தடுத்தாக்கள்,; இதற்கு பதில் கொடுக்கும் வகையில், இன்னும் மிகப்பெரிய அளவில் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். மனு கொடுப்பதற்கு நான்கிங்கிற்கு மாணவர்கள் செல்வதைப் பிற்போச்குவாதிகள் தடுத்தார்கள்; ஆனால், மாணவர்க்ள் ரயில் வண்டியைத்

தாங்களே ஓட்டிக் கொண்டு அங்கு சென்றார்கள். கோமிங்டாங் துருப்புகள், சிவில் மற்றும் ராணுவ, போலீஸ், மற்றும் ரகசிய ஏஜெண்டுகள் ஆகியோர் மாணவர்களை தாக்கினார்கள்; ஆனால் அவர்களது கரங்களில் இருந்து ஆயுதங்களைப் மாணவர்கள் பறித்துக் கொண்டார்கள்.

இந்தக் காலகட்டத்தில், நகரங்களில் எப்பொழுதும் விரிவடைந்து கொண்டிருந்த தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களும் நடைபெற்றன. 1945 ஆகஸ்டில் இருந்து 1946 செப்டம்பர் வரையிலும் தொழிற்சாலைகள் மூடப்பட்டதற்கு எதிராகவும், முதலாளிகளால் தொழிலாளிகள் டிஸ்மிஸ் செய்யப்பட்டதற்கு எதிராகவும் மற்றும் விலைவாசிகள் விஷம் போல் உயர்ந்து கொண்டதற்கு எதிராகவும், ஆட்சேபிக்கும் முறையில், ஷாங்காயில், 1,920 வேலை நிறுத்தங்கள் வெடித்தன. இத்தகைய போராட்டங்களில் மொத்தம் 11,85,000 பேர் பங்கு கொண்டார்கள்; இவர்களில் ரிக்ஷாக்காரர்களின் வேலை நிறுத்தங்களில் சம்பந்தப்பட்டவர்கள் சேர்க்கப்படவில்லை, மற்றும் தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையே நேரடியாக தீர்வு காணப்பட்ட தகராறுகளில் சம்பந்தப்பட்டவர்களும் சேர்க்கப்படவில்லை. 1925இல் மே 30 ஆம்தேதி சம்பவம் நடைபெற்ற சமயத்தில் ஏற்பட்ட வேலை நிறுத்தங்களைக் காட்டிலும் ஷாங்காயில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் இன்னும் மிகப்பெரிய அளவில் இருந்தார்கள். இது போன்ற வேலை நிறுத்தங்கள், தொழிலாளர்களால் சுங்கிங்கிலும், டியன்சின், டாங்ஷன் மற்றும் சின்வாங்டாவோ ஆகிய நகரங்களிலும் துவக்கப்பட்டது.

இதைப் போலவே, விவசாயிகளும் பரவலானதொரு அடிப்படையில், ஸ்தாபன ரீதியாக திரட்டப்பட்டிருந்தார்கள். குத்தகைகள், வரிகள், மற்றும் கூடுதலான செலவுகள் ஆகியவற்றிற்கு எதிரான போராட்டங்களும், பத்திரிக்கைகளை முடமாக்குவது, ஒத்துழைப்பாளர்கள் மற்றும் ஸ்தல மிரட்டல்காரர்கள் ஆகியோருக்கு எதிரான போராட்டங்களும், மற்றும் உணவுக் கழகங்களும், கோமிங்டாங்கின் கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்களில் பரவின. கியாங்சு, சிக்கியாங் தெற்கு அன்வெய் மற்றும் ஹூன்னானின் பரந்த பிரதேசங்கள் ஆகியவற்றில் இருந்த பல லட்சக் கணக்கான விவசாயிகள் ஆயுதங்களை எடுத்து கோமிங்டாங் துருப்புகளுக்கு எதிராக உறுதியாக போராடினார்கள். செச்சுவானில் இருந்த நூற்றி முப்பதிற்கும் அதிகமான கிராமப்புறங்களில், ஒவ்வொரு தனி

யொரு கிராமப் புறமும் ஒரு சமயத்தில் அல்லது மற்றொரு சமயத்தில் விவசாயி எழுச்சிகளைக் கண்டது. சிகாங்கில் விவசாயி படைகளின் எண்ணிக்கை 5,00,000 ஆக இருந்தது. தொழிலாளிகள், கைவினைத் தொழிலாளிகள், நகர்புற ஒட்டாண்டிகள் மற்றும் ராணுவத்தில் இருந்து ஓடி வந்தவர்களும் கூட இத்தகைய போராட்டங்களில் பங்கெடுத்தார்கள்.

தைவான் மக்களின் போராட்டங்கள் இந்த கால கட்டத்தில் பிரபலமாக உருவெடுத்தன. தைவான் சீனாவின் மிகமிக செழிப்பான மாகாணங்களில் ஒன்றாகும். ஐம்பது ஆண்டுகளாக தைவான் மக்கள் ஜப்பானிய படை எடுப்பாளர்களின் ஆட்சியின் கீழ் இருந்து வந்தார்கள். அவர்கள் விடுதலையை விரும்பிக் கொண்டிருந்தார்கள். ஜப்பானின் சரணாகதிக்கு பிறகு, தைவானில் இருந்த ஜப்பானுக்கு சொந்தமான சகல தொழில் நிறுவனங்களையும் ஆஸ்திகளையும் எடுத்துக் கொண்டு, அங்கிருந்த மக்களிடம் இஷ்டம் போல் பணத்தைப் பறித்தது. கோமிங்டாங் தைவானை அதனுடைய காலனியைப் போலவும் தைவான் மக்களை அடிமைகளைப் போலவும் பார்த்தது. தைவான் மாகாண மக்கள் பொருளாதார நிறுவனங்களிலும் அரசாங்க உறுப்புகளிலும் முக்கியமான எல்லா பதவிகளிலும் இருந்து, விலக்கி வைக்கப் பட்டிருந்தார்கள். ஒரு கொடுங் கோலன் மற்றொரு கொடுங்கோலனால் வெறுமனே பரிவர்த்தனைச் செய்யபட்டிருப்பதாக உணர்ந்து கொண்டிருந்த தைவான் மக்கள், சுய ஆட்சியையும் தங்களுடைய சொந்த மாகாணத்தின் பொருளாதார விவகாரங்களை நிர்வகிப்பதற்கான உரிமையையும் கோரினார்கள். மேலும், சில சரக்குகளின் விற்பனைக்கான ஏகபோகத்தை கோமிங்டாங் ஒழிக்க வேண்டும் என்றும், ஸ்தலத்தில் உள்ளவர்கள் தைவானில் நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கபட வேண்டும் என்றும், மற்றும் இதைப் போன்றவற்றையும் அவர்கள் கோமிங்டாங்கிடம் கோரினார்கள். அவர்களது கோரிக்கைகள் சரியானவையாகவும் நியாயமானவையாகவும் இருந்தன. 1947 பிப்ரவரி 28இல், மாகாண ஆட்சிக்காக பெரிய அளவிலானதொரு இயக்கம் அங்கே வெடித்தது. ஒரு தற்காலிக சுய ஆட்சி உரிமை கொண்ட ஆட்சி அமைக்கபட்டு, தைவானின் அரசியல் அமைப்பை சீர்திருத்துவதற்கான ஒரு திட்டமும் ஏற்று கொள்ளப்பட்டது.

பிரதான பூமியின், சகல தேசபக்த ஜனநாயக இயக்கங்களையும் ஒடுக்குவதற்கு பயங்கரமான முறைகளை கோமிங்டாங்

கையாண்டது. 1947-மே 18-இல் "சமுதாய ஒழுங்கினை நிலை நாட்டுவதற்கான தற்காலிக நடவடிக்கைகள்" என்று தலைப்பு கொடுக்கபட்ட ஒரு கட்டளையை கோமின்டாங் அரசாங்கம் வெளியிட்டது. இத்தற்காலிக நடவடிக்கைகள், சகல மாணவர் களின், தொழிலாளர்களின் மற்றும் சிறு வியாபாரிகளின் வேலை நிறுத்தங்களை சமாளிப்பதிலும், மற்றும் பொறுப்பிலிருந்த அதிகாரிகளுக்கும் மிக உயர்ந்த உறுப்புகளுக்கும் செய்யபடும் மேல் முறையீடாக கொடுக்கபடும் சகல மனுக்களையும் சமர்ப்பிக் கும் சகல அணிவகுப்புகளையும் ஆர்ப்பாட்டங்களையும் மற்றும் பத்து நபர்களுக்கும் அதிகமாக பங்கு கொள்ளும் சகல அணி வகுப்புகளையும் ஆர்ப்பாட்டங்களையும் சமாளிப்பதில், "அவசரகால நடவடிக்கைளும், சக்திவாய்ந்த நடவடிக்கை களும்" கையாளப்படும் என்று வரையறுத்து கூறின.

ஒரு புறத்தில், கோமிங்டாங் துருப்புகள் சிவில் மற்றும் ராணுவ போலிஸ் மற்றும் ரகசிய ஏஜெண்டுகள் ஆகியோருக்கும் மறுபுறத்தில் மாணவர்கள் மற்றும் குடிமக்கள் ஆகியோருக்கு மிடையே மோதல்கள் எல்லா இடங்களிலும் காணப்பட்டன. கைதுகள், சிறையில் அடைத்தல், அடிப்பது மற்றும் படுகொலை செய்வது ஆயுதமற்ற மாணவர்கள் மற்றும் குடிமக்கள் ஆகியோரை தாக்குவது போன்ற இப்படிபட்ட சகல வகைப்பட்ட அக்கிரமமான முறைகளையும் பிற்போக்கு அரசாங்கம் கையாண்டது. எனினும், அடக்குமுறை பயனற்றதாக நிரூபிக்கப்பட்டது. மாணவர்களின் தேசபக்த இயக்கம் கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்களில் மக்கள் போராட்டங்களின் முன்னணி படையாக மாறி, நாட்டில் இருந்த அநேகயாக ஒவ்வொருவருடைய அனுதாபத்தையும் ஆதரவையும் பெற்றது.

பெரும் அளவிலான "தண்டனை" படை எடுப்புகளை ஏற்பாடு செய்ததினால் சகல மாகாணங்களிலும் வெடித்திருந்த விவசாயி பேரெழுச்சிகளை ஒடுக்குவதற்கு கோமிங்டாங் வலுவற்ற முயற்சிகளைச் செய்தது. ஆனால், பல இடங்களில் கோமிங்டாங் பாதுகாப்பு படைபிரிவுகளும், அல்லது அதனுடைய ஒழுங்கான ராணுவமும்கூட, கலகம் செய்தன. அதன் விளைவாக, ஒவ்வொரு படை எடுப்போடும், விவசாயி களின் ஆயுதமேந்திய படைகள் இன்னும் மிக பலமானதாகவும், மிக அதிக எண்ணிக்கைக் கொண்டதாகவும் மாறின.

தைவானின் சுய ஆட்சி இயக்கத்திற்கு எதிராக, கோமிங்டாங்

ஒரு ராணுவ பயங்கரமான கொள்கையைப் பின்பற்றியது. தைவானில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்த இயக்கம், ஒடுக்கப்பட்ட போதிலும், கோமிங்டாங் பிற்போக்குவாதிகளுக்கு எதிரான தைவான் மக்களின் விரோதம் மிகவும் ஆழமானதாகவும் மிகவும் கடுமையானதாகவும் மாறிற்று.

மக்கள் விரோத பிற்போக்குவாதிகள் அனைத்து மக்களாலும் அவர்களாலும் எதிர்க்கப்படுவதைக்கண்டார்கள். அரசியல் அரங்கிலும் மற்றும் இராணுவ அரங்கிலும் விஷயங்கள் அவர்களுக்கு எதிராக மோசமாக போய்க் கொண்டிருந்தன. அவர்கள் கடுமையானதொரு அரசியல் நெருக்கடியினால் எதிர்நோக்கப்பட்டிருந்தார்கள்,

தங்களது ஆட்சியை நீடித்து வைப்பதற்கு, இராணுவ முன்னேறி தாக்குதல்களும் அரசியல் மோசடிகளும் பிற்போக்குவாதிகளால் பயன்படுத்தப்பட்ட இரண்டு பிரதான தூண்களாக இருந்தன. எனினும் 1946 ஜூலையில் இருந்தது. 1947 ஜூன் வரையிலுமான காலக்கட்டத்தில், அவர்களது அரசியல் மோசடிகள், அவர்களது ராணுவ முன்னேறி தாக்குதல்களைப் போலவே முழுமையான தோல்வியில் முடிவடைந்தன.

## அடிக்குறிப்பு

1. 1949 ஏப்ரல்-மே மாதவாக்கில், "தங்க யுவான்" தேய்மானம் அடைந்திருந்தது; ஒரு அமெரிக்க டாலருக்கு முப்பது லட்சம் தங்க யுவானுக்கும் ஒரு கோடி தங்க யுவானுக்கும் இடையே போய்க் கொண்டிருந்த அளவிற்கு "தங்க யுவான்" தேய்மானம் அடைந்திருந்தது.

அத்தியாயம் பதிமூன்று

# மூன்றாவது புரட்சிகர உள்நாட்டு யுத்தத்தில், யுத்த தந்திரரீதியான முன்னேறித் தாக்குதல். மக்கள் புரட்சியின் நாடுதழுவிய வெற்றி.

*(ஜூலை 1947-அக்டோபர் 1949)*

## 1. நாடு தழுவிய யுத்த தந்திரரீதியான முன்னேறித் தாக்குதலின் ஆரம்பம். விடுவிக்கப்பட்ட ஏரியாக்களில் விவசாய சீர்திருத்தம். மக்கள் ஜனநாயக ஐக்கிய முன்னணியை அமைத்தல். நாடு தழுவிய வெற்றிக்கு தலைமை தாங்கி செல்வதற்கான கட்சியின் செயல் திட்டம்.

1947 ஜூலை வாக்கில், கோமிங்டாங் பிற்போக்கு படைகளின் மொத்த எண்ணிக்கை, யுத்த ஆரம்பத்தில் இருந்த 43,00,000 இலிருந்து 37,00,000த்திற்கு குறிக்கப்பட்டிருந்தது. அதே சமயத்தில், மக்கள் விடுதலை சேனை 12,00,000 இலிருந்து கிட்டத்தட்ட 20 00,000த்திற்கு வளர்ந்திருந்தது.

யுத்தத்தின் முதலாவது ஆண்டில், எண்ணிக்கையில் அவனுடைய மேலாதிக்கத்தன்மை இருந்த போதிலும், எதிரி தொடர்ச்சியான ராணுவ பின்னடைகளைத் தழுவினான்! இப்பின்னடைவுகள்.பொருளாதார வீழ்ச்சியோடும் அரசியல் சூன்னியத் தன்மையோடும் இணைந்து, அவனுடைய போராட்ட பலத்தின் பொதுவானதொரு பலவீனப் படுத்தலிலும் மற்றும் தென்பினைக் குறைப்பதிலும் முடிவடைந்தது. அவன் பின்னணியில் தாக்குதல்களுக்கு அம்பலப் படுத்தப்பட்டும் மக்களால் எதிர்க்கப்பட்டும் இருந்தான். மறு புறத்தில், மக்கள் விடுதலை சேனை மீண்டும்மீண்டும் பெற்ற வெற்றிகளில் இருந்து பலத்தைப் பெற்றிருந்தது, அதனுடைய தெம்பு உயர்ந்தது; அது மக்களுடைய ஆதரவை பெற்றிருந்தது மற்றும் அதிகமாக கெட்டிப் படுத்தப் பட்ட ஒரு பின்னணியையும் பெற்றிருந்தது. இந்த முறையில் மக்கள் படைகள் இப்ப்டிப்பட்ட அபரிமிதயான

கடுமையான நஷ்டங்களை எதிர்த்து போரிட்ட பொழுது யுத்த ஆரம்பத்தில் இருந்த நிலைமை முற்றிலும் மாறி இருந்தது. மக்கள் விடுதலை சேனை, யுத்தத் தந்திர ரீதியான தற்பாது காப்பில் இருந்து யுத்தத் தந்திர ரீதியான முன்னேறித் தாக்கு தலுக்கு மாறி இருந்தது. அதே சமயத்தில், கோமிங்டாங் படைகள் அதற்கு நேர் எதிரிடையான நிலைமையை எதிர் நோக்கும்படி நிர்பந்திக்கப் பட்டிருந்தன.

இது யுத்த நிலைமையில் அடிப்படையானதொரு மாற்றமாக இருந்தது. யுத்த தந்திர ரீதியாக பார்க்கும் பொழுது, மக்களின் புரட்சிப் படைகள் இருபது ஆண்டுகளுக்கும் அதிகமாக தற்பாது காப்பு போராட்டத்தில் இருந்து வந்துள்ளன. யுத்தத் தந்திர ரீதியான தற்பாதுகாப்பு போராட்டத்தில் இருந்து யுத்ததந்திர ரீதியான முன்னேறித் தாக்குதலுக்கு ஏற்பட்டதொரு மாற்றம் பிற்போக்கு ஆட்சியின் தூக்கி எறிப்போவதை முன்கூட்டியே காட்டிற்று.

மக்கள் விடுதலை சேனை, வெளிப்புற — அணிவரிசை நடவடிக்கைகளில்' ஒரு கொள்கையை பின் பற்றி வந்தது. அது பெரும் அளவிலானதொரு முன்னேறித்தாக்குதலை ஆரம்பித்து கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்களுக்குள் ஊடுருவி யுத்தத்தை யாங்ட்சி பிரதேசங்களுக்கு கொண்டு வந்தது. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களை அழிப்பதற்கு கோமிங்டாங் வைத்திருந்த கொலைகர திட்டத்தை இந்தக் கொள்கை முறியடித்தது. விரிவான் விடுவிக்கப்பட்ட ஏரியாக்களை இணைத்து இத்தகைய ஏரியாக்களின், சம்பந்தபடுத்தி பார்க்கும் ஸ்திர தன்மையை, மீண்டும் ஏற்படுத்திற்று. அதே சமயத்தில், புரட்சிகரமான யுத்தத்தை விஸ்தரித்து எதிரிப்பிரதேசத்திற்குள் ஆழமாகக் கொண்டு சென்றது; மற்றும் புரட்சியின் அளவையும் செல்வாக்கையும் விரிவுபடுத்திற்று; அப்படி செய்ததின் மூலம், அதனுடைய நாடு தழுவிய வெற்றிக்கான அஸ்திவாரத்தையும் போட்டுக் கொண்டிருந்தது.

மஞ்சள் நதியை கடந்து, தெற்கு நோக்கி முன்னேறிக் கொண்டிருந்ததின் மூலம் மக்கள் விடுதலை சேனை அதனுடைய நாடு தழுவிய முன்னேறித் தாக்குதலை ஆரம்பித்தது.

1947ஜூலையில், லியேபோச்-செங் மற்றும் டெங்சியோ—பிங் ஆகியோர் தலைமையின் கீழ்ருந்த ஷான்சி — ஹோப்பெய் ஷான்டுங் — ஹோனான் ஏரியாவின் மக்கள் விடுதலை சேனை அதனுடைய தெற்கு நோக்கிய முன்னேற்ற பாதையில், மஞ்சள்

நதியையும், லுங்காய் ரெயில்வேயையும் கடந்து சென்று, டாப்புர மலைகளை அடைந்து, மத்திய சமவெளி விடுவிக்கப்பட்ட ஏரியரிவை அமைத்தது. இந்த முறையில் கோமிங்டாங் பிற்போக்கு ஆட்சியின் இதயத்திற்குள் ஒரு ஈட்டி பாய்ச்சப் பட்டது; அதாவது ஊகானுக்கும் நான்கிங்கிற்கும் இடையே இருந்த ஏரியாவில் ஒரு ஈட்டி பாய்ச்சப்பட்டது. ஆகஸ்டில், ஷாங்சி-ஹேப்பெய்-ஷான்டுங்-ஹோனான் ஏரியாவில் மக்கள் விடுதலை சேனையின் மற்றொருபிரிவு தெற்கு ஷாங்சியில் இருந்து மஞ்சள் நதியை கடந்து சென்று விரிவானதொரு ஏரியாவை விடுதலை செய்தது. இந்த விரிவான ஏரியாவில் ஹோனானுக்கும் ஷென்சிக்கும் இடையே இருந்த மேற்கு ஹோனானுக்கும் எல்லை பிரதேசங்களும் அடங்கி இருந்தன. இந்த முறையில், மேற்கு ஹோனானில் எதிரியின் பிரதானநகரமான லோயாங்கை தனிமைப்படுத்திக் கொண்டு டுங்குவானை நெருங்கிக் கொண்டிருந்தது.

ஆகஸ்டில், சென்சி மற்றும் ஷீயு ஆகியோர் தலைமையின் கீழ் கிழக்கு சீனாவின் மக்கள் விடுதலை சேனை மத்திய ஷான்டுங்கில் இருந்து, அந்த மாகானத்தின் தென்மேற்குபகுதிக்கு எதிராக ஒரு தாக்குதலை நடத்தி ஷீவாய் நதி வரையிலும் லுங்காய் ரயில்வேக்கு குறுக்கே தெற்கு நோக்கி முன்னேறிக் கொண்டு, எதிரியின் இரண்டு கேந்திரமான இடங்களான கைபெங்கையும், செங்சோவையும் தனிமைப்படுத்தின. அப்பொழுதில் இருந்து மக்கள் விடுதலை சேனை வெளிப்புற பாதை நடவடிக்கைகளுக்கு மாறிச் சென்று, வடக்கில் மஞ்சள் நதி எல்லையையும் தெற்கில் யாங்ட்சியையும், மேற்கில் ஹன் நதியையும் கிழக்கில் கடலையும் எல்லையாகக் கொண்டிருந்ந பரந்த சமவெளியில், எதிரியை எதிர்த்துப் பெரியதொரு அளவிலான முன்னேறித் தாக்குதலைத் துவக்கிற்று.

இடைக் காலத்தில், மக்கள் விடுதலை சேனை இதைப் போலவே ஒருபுற வரிசைகளின் உள்புற வரிசைகள் நெடுகிலும் ஒரு முன்னேறித் தாக்குதலை ஆரம்பித்தது. வடமேற்கில் மக்கள் விடுதலை சேனை ஏனானையும் மற்றும் ஷென்சி-கான்சு-நிங்சியா விடுவிக்கப்பட்ட ஏரியாவின் மிகப் பெரும்பாலான பகுதியையும் மீட்டு, பின்னால் கூறப்பட்ட விடுவிக்கப் பட்ட ஏரியாவை மஞ்சள் நதிக்கு கிழக்கில் இருந்த, விடுவிக்க பட்ட ஏரியாவோடு இணைத்துக் கொண்டது. கிழக்கு சீனாவில், மக்கள் விடுதலை சேனை ஷான்டுங்கில் பெரும்பகுதியை திரும்ப

வும் பிடித்துக் கொண்டது. இந்த முறையில், அந்த பகுதியை ஹோப்பெய்-ஷான்டுங்-ஹோனான் விடுவிக்கபட்ட ஏரியாவோடு இணைத்துக் கொண்டது. மேலும், அது கிழக்கு அன்வெய்யில் விடுவிக்கபட்ட ஏரியாவை மீண்டும் நிலை நிறுத்தி, அந்த ஏரியாவை மத்திய சமவெளி விடுவிக்கப்பட்ட ஏரியாவோடு இணைத்தது. வடகிழக்கில், மக்கள் விடுதலை சேனை, ஓராண்டு போராட்டத்திற்கு பிறகு, வடகிழக்கு பிரதேசத்தின் 99% விடுதலை செய்து, எதிரியை ஒரு சில பலமான மையங்களில் மட்டுமே விட்டு வைத்திருந்தது. வடசீன விடுவிக்கபட்ட ஏரியாவின் தையவான் என்ற ஒரே ஒரு விதிவிலக்கான மையத்தைத் தவிர, எதிரியின் எல்லா கேந்திரமான மையங்களும் பிடிக்கப்பட்டு குடியேற்றப்பட்டன. அதன்மூலம், ஷான்சி-சகார், ஹோப்பெய் விடுவிக்கபட்ட ஏரியாவை ஷான்சி-ஹோப்பெய்-ஷான்டுங்-ஹோனான் விடுவிக்கப்பட்ட ஏரியாவோடு ஒருங்கிணைத்துக் கொள்வது சாத்தியமாக இருந்தது. அவற்றை மேலும் ஷான்டுங் விடுவிக்கப்பட்ட ஏரியாவோடும் மற்றும் ஷான்சி-சுய்யுவான் விடுக்கபட்ட ஏரியாவோடும் ஒருங்கிணைப்பது சாத்தியமாக இருந்தது.

உள்புற அணிவரிசைகள் நெடுகிலும் மற்றும் வெளிப்புற அணிவரிசைகள் நெடுகிலும், இத்தகைய பெரும் அளவிலான முன்னேறித் தாக்குதல்களின்கீழ், கோமிங்டாங் துருப்புகள் விரட்டியடிக்கப்பட்டன. யுத்தத்தின் முதல் ஆண்டில், எதிரி சர்வாம்ச ரீதியான முன்னேறித் தாக்குதலில் இருந்து, குவிந்த முன்னேறித் தாக்குதலுக்கு மாறும்படி நிர்ப்பந்திக்கபட்டான். மற்றும் இரண்டாவது ஆண்டில் சர்வாம்ச ரீதியான தற்பாதுகாப்பு போராட்டத்தில் இருந்து குவிந்த தற்பாதுகாப்பு ரீதியான போராட்டத்திற்கு மாறிச் செல்லும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தான். இந்த முறையில், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் குடையின் கீழ் கோமிங்டாங் பிற்போக்குவாதிகளால் துவக்கப்பட்ட ராணுவ முன்னேறித் தாக்குதல் முழுமையான தோல்வியில் முடிவடைந்தது.

கோமிங்டாங் முன்னேறித் தாக்குதலை வெற்றிகரமாக எதிர்த்துப் போராடி முறியடிக்கவும் மற்றும் ஒரு தற்பாதுகாப்பு யுத்த தந்திரத்தில் இருந்து முன்னேறி தாக்கும் யுத்த தந்திரத்திற்கு மக்கள் விடுதலை சேனை வேகமாக மாறியதற்கும் பங்காற்றிய பிரதம அம்சங்களில் ஒன்று விவசாய சீர்திருத்த

மாகும். விவசாய சீர்திருத்தம் விடுவிக்கப்பட்ட ஏரியாக்களில் ரோக நிறைவேற்றப்பட்டிருந்தது. சீனக்கம்யூனிஸ்ட் கட்சி, "விவசாய சட்டத்தின் வரை கோட்டினை" உருவாக்கி இருந்தது. மற்றும், "வர்க்கங்களை எப்படி அலசி ஆராய்வது" மற்றும் "விவசாய போராட்டங்களில் இருந்து எழுந்து கொண்டிருக்கும் சில பிரச்சினைகள் சம்பந்தமான தீர்மானங்கள்" ஆகியவற்றையும் பிரசரித்தது. தோழர் மாசே-துங்கினால், "ஷான்சி மற்றும் சுய்யுவானில் இருந்து வந்துள்ள ஊழியர்களின் மாநாட்டில் நிகழ்த்திய உரையிலும்" மற்றும் தோழர் ஜென்பி-ஷியினால் "விவசாய சீர்திருத்தத்தின சில பிரச்சினைகள்" என்ற கட்டுரையிலும், மற்றும் இதர கட்டுரைகளிலும், கட்சியின் விவசாயக் கொள்கைகள் தெளிவாக வரையறுக்கப் பட்டிருந்தன.

"விவசாய சட்டத்தின் வரைகோடு" நிலப்பிரபுத்துவ மற்றும் அரை நிலப்பிரபுத்துவ நில அமைப்பை ஒழித்துக் கட்டுவது பற்றியும் மற்றும் உழுபவர்களுக்கே நிலம் என்ற கோட்பாட்டினை உருப்பெறச் செய்வதினையும் வரையறுத்துக் கூறி இருந்தது.

விவசாய சீர்திருத்தத்தில், ஏழை விவசாயிகளின் மீதும் விவசாய தொழிலாளிகளின் மீதும் உறுதியாக சார்ந்து நிற்பதும் மற்றும் அவர்களை ஸ்தாபன ரீதியாக திரட்டுவதற்கு உதவி செய்வதும் பிரதம முக்கியதுவம் உடையதாக இருந்தது; அப்படி செய்வதினால் அவர்கள் இயக்கத்தின் முதுகெலும்பாக மாறுவார்கள். நடுத்தர விவசாயிகளோடு ஒன்றுபடுவதும் ஏழை விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளிகளைச் சுற்றிலும் நெருக்கமாக அவர்களை அணிதிரட்டுவதற்கு உற்சாகப்படுத்துவதும் அவசியமாக இருந்தது. அப்படி செய்வதினால் பலமானதொரு தொழிலாளி-விவசாயி கூட்டணியை உருவாக்க முடிந்தது. விவசாய வெகுஜனங்களை அணிதிரட்டுவதற்கான சரியான நடைமுறை என்னவென்றால், அவர்களது சொந்த அனுபவங்களின் அடிப்படையில் அவர்களிடையே முழுமையான சித்தாந்த பணியையும் கல்விப்பணியையும் நிறைவேற்றுவதாக இருந்தது; அவர்களுக்கு மத்தியிலே சென்று,ஏழை விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளிகளுக்கு இடையே பணியாற்றும் ஊழியர்களோடு மிகமிக நெருக்கமான உறவுகளை, அவர்கள் மூலம் வெகுஜனங்களை நகரவைத்துக் கொண்டிருப்பதும், விவசாய இயக்கத்தை வளர்ப்பதிலும் முன்னேற்றுவதிலும் படிப்படியாக

விஸ்தரித்தல் மற்றும் தீவிரப்படுத்தல் என்ற ஒரு கொள்கையைக் கையாளுவதுமாக இருந்தது. நடுத்தர விவசாயிகளோடு ஒன்றுபடுவதில், பின்வரும் கோட்பாடுகள் கடைபிடிக்கப்பட வேண்டி இருந்தன. விவசாயிகள் வர்க்க அந்தஸ்தைத் திர்மானிப்பதில் மாபெரும் கவனம் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். ஒரு நடுத்தர விவசாயியை ஒரு பணக்கார விவசாயியாக பாகுபடுத்தும் தவறினைச்செய்வதற்கு மாபெரும் கவனம் எடுத்துகொள்ளப்பட வேண்டும். நிலத்தைச் சமமாக விநியோகிப்பதில் நடுத்தர விவசாயிகளின் அபிப்பிராங்களின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு,எந்த விதமான ஏற்பாட்டிற்கும் அவர்கள் ஆட்சேபித்தால், அவர்களுக்கு சலுகைகள் கொடுக்கப்பட்டன. ஏழை விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த சராசரி பகுதியைக் காட்டிலும் அவர்கள் அதிக ஏக்கர் நிலத்தை வைத்துக் கொள்வதற்கு அனுமதிக்கப்படக் கூடும். நடுத்தர விவசாயிகளிடையே சுறுசுறுப்பாக செயல்படுவார்கள். விவசாய சங்கங்களிலும் ஸ்தல அரசாங்கங்களிலும் வேலை செல்வதற்கு ஊக்குவிக்கப்பட்டார்கள்; நிலவரி விதிப்பதிலும் மற்றும் யுத்த வரிகள் மற்றும் சேவைகள் ஒதுக்கீடு செய்வதிலும் நியாயமான நடைமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டி இருந்தது.

பணக்கார விவசாயிகள் சம்மந்தப்பட்ட மட்டில், அவர்களது உபரி நிலமும் சொத்தும் பறிமுதல் செய்யப்பட வேண்டும். ஏனெனில், பழைய வகைப்பட்ட பணக்கார விவசாயிகள் பொதுவாக, நிலப்பிரபுத்துவ சுரண்டலோடு பலமாக கறைபடிந்து இருந்தார்கள். மேலும், அவர்களது தொழிலாளிகள் வேலை செய்த நிலைமைகளும் இதைப் போலவே, நிலப்பிரபுத்துவ தன்மை வாய்ந்தவையாக இருந்தன. அவர்களது அனுபவத்தில், இருந்த நிலம் மிகவும் விரிவானதாகவும் சராசரியான நிலத்தைக் காட்டிலும் சிறந்த நிலமாகவும் இருந்தது. மேலும், அந்த சமயத்தில் புரட்சி யுத்தத்தின் விளைவு இன்னும் நிச்சயமற்றதாக இருந்தது. மற்றும் பணக்கார விவசாயிகள் பிற்போக்குவாதிகளோடு அனுதாபப்படுவதற்கு சாய்ந்து இருந்தார்கள்; அதே சமயத்தில், மக்கள் யுத்தத்தின் தேவைகள் அதனை வெற்றிகரமான முடிவிற்கு கொண்டு வருவதற்கு ராணுவ சேவை, தானிய சப்ளைகள் மற்றும் இஷ்டபூர்வமாக உழைப்பு ஆகியவற்றில் விவசாயிகளிடமிருந்து பெரும் பங்குகளைக் கோரிக் கொண்டிருந்தது.

விவசாய சீர்திருத்தம் நிலப்பிரபுக்களை ஒரு வர்க்கம் என்ற

முறையில், அகற்றுவதை குறிக்கோளாக கொண்டிருந்தது. ஆனால் தனி நபர்கள் என்ற முறையில் அவர்களை ஒழிப்பதைக் குறிக்கோளாக கொண்டிருக்கவில்லை. ஒரு வர்க்கம் என்ற முறையில் அவர்களை அகற்றுவதற்கு, படிப்படியாக நடவடிக்கை எடுப்பதும் வித்தியாசப்படுத்தி நடவடிக்கை எடுப்பதும் அவசியமாக இருந்தது. நிலைமைகள் — அரசியல் சூழ்நிலைமை, வெகுஜனங்கள் மற்றும் ஊழியர்கள் முதலியன— பக்குவமாக இருந்த பொழுது மட்டுமே ஸ்தல மிரட்டல்காரர்களை வீழ்த்துவதினாலும் கணக்குகளை தீர்ப்பதினாலும் மற்றும் குத்தகைகள் வட்டிகள் ஆகியவற்றை குறைப்பதினாலும் மற்றும் விவசாய சீர்திருத்தத்தைத் தொடர்ந்து நிறைவேற்றுவதினாலும் இயக்கம் ஆரம்பமாக இருந்தது. நிலச் சுவான்தாரர்களுக்கும் பணக்கார விவசாயிகளுக்கும் இடையேயும் பெருநில சுவான்தாரர்களுக்கும் மற்றும் நடுத்தர, சிறிய நிலச் சுவான்தாரர்களுக்கும் இடையேயும், மற்றும் நிலச் சுவான்தாரர்களின் பொதுவான ஓட்டத்திற்கும், மற்றும் ஸ்தல மிரட்டல்காரர்களாக இருந்தவர்களின் ஓட்டத்திற்கும் இடையேயும் வித்தியாசப் படுத்தப்பட வேண்டி இருந்தது, ஒவ்வொரு ரகமும் நிலச்சீர்திருத்த கட்டுக் கோப்பிற்குள் வேறுபட்ட முறையில் நடத்தப்பட வேண்டியிருந்தது.

நிலம் பின்வரும் வழியில் விநியோகம் செய்யபடவிருந்தது. எல்லா பொது நிலமும் நிலச் சுவான்தாரர்களால் உடமையாக்கப்பட்டிருந்த நிலமும் ஸ்தல விவசாயி சங்கத்தால் எடுக்கப்பட்டு, ஸ்தலத்தில் உள்ள இதர நிலத்தையும் ஒன்று சேர்த்து ஒரு நபர் விகிதாச்சார அடிப்படையில் சமமாக மீண்டும் விநியோகிக்கப்படும். ஸ்தலத்தில் உள்ள ஒவ்வொரு நபரும் அடுத்து இருப்பவர்க்கு உள்ள அளவிற்கு கிட்டத்தட்ட சமமான அளவு நிலத்தின் சொந்தக்காரராக ஆக வேண்டு என்ற முறையில் அளவு மற்றும் தரம் சம்பந்தமாக நில உடமைகளில் ஒட்டுமொத்தமான மீண்டும் சரி செய்தல் செய்யப்படவிருந்தது.

''விவசாய சட்டத்தின் வரைகோடு'' பிரகடனம் செய்யபட்ட ஒரு ஆண்டிற்குள், விடுவிக்கப்பட்ட ஏரியாக்களில் பத்து கோடி விவசாயிகள் நிலத்தைத் பெற்றார்கள். விவசாய சீர்திருத்ததிற்கு பிறகு,விவசாய உற்பத்தியை மீட்டு, அபிவிருத்தி செய்யும் பொருட்டு, அடிப்படையில் சொந்த விருப்பின் பரஸ்பர உதவிக்காகவும் ஒத்துழைப்பிற்காகவுமான ஒரு இயக்கத்தில் கட்சி விவசாயிகளை வழிநடத்திச் சென்றது. விவசாய சீர்திருத்தம், விவசாய உற்பத்தியை உயர்த்துவதற்கான

அஸ்திவாரத்தைப் போட்டதோடு மட்டுமின்றி, விடுதலை பெற்ற ஏரியாக்களில் தொழில் அபிவிருத்திக்கான நிலைமைகளையும் ஏற்பாடு செய்தது. நிலத்தை பெற்றமையால், விவசாயிகள் யுத்தத்தில் உற்சாகமாக பங்கெடுத்து, விடுதலை யுத்தத்திற்கு சுறுசுறுப்பான ஆதரவையும் கொடுத்தார்கள். இதன் விளைவாக விவசாய சீர்திருத்தம், மக்கள் விடுதலை சேனையின் பின்னணியை மேலும் கெட்டிப்படுத்தி, தற்பாதுகாப்பு போரில் இருந்து முன்னேறி, தாக்குதலுக்கு மாறிச் செல்வதற்குமான பாதையையும் செப்பனிட்டு கொடுத்தது. அதைப் போலவே, புரட்சி யுத்தத்தின் நாடு தழுவிய வெற்றிக்கான அரசியல் அடித் தளத்தையும் அது போட்டது.

விவசாய சீர்திருத்தம் நடைபெற்ற அதே காலத்திலேயே, அடித்தள மட்டத்தில் அதனுடைய ஸ்தாபனங்களை சுத்தப் படுத்துவதற்காகவும், கிராமப்புற ஏரியாக்களில் இருந்த கட்சி உறுப்பினர்களின் செயல்படும் பாணியை அபிவிருத்தி செய்யவும் மற்றும் அந்நிய பேர்வழிகளை விலக்கவும் சீனக்கம்யூனிஸ்டு கட்சி ஒரு களை எடுப்பு இயக்கத்தில் அதனுடைய சகல உறுப்பினர் களையும் வழிநடத்தி சென்றது. விவசாய பிரச்சனைக்குத் தீர்வு காணுவதிலும் மக்கள் விடுதலை யுத்தத்திற்கு ஆதரவு கொடுப் பதிலும் இது ஒரு தீர்மான நடவடிக்கையாக இருந்தது. கட்சியின் பரிசுத்த தன்மையைப் பாதுகாப்பதினாலும், அந்நிய பேர்வழி களை ஒழித்துக்கட்டி மோசமான வேலை செய்யும் பாணியை வெற்றி கொள்ளுவதினாலும் மட்டுமே, கட்சி உழைக்கும் மக்களின் மிக மிக பரவலான வெகுஜனங்களின் பக்கத்தில் நின்று அவர்களை முன்னோக்கி தலைமை தாங்கி செல்ல முடியும். அப்படி செய்வதினால் மட்டுமே, கட்சியின் விவசாயக் கொள்கை கள் உறுதியாகவும் சரியாகவும் நிறைவேற்றபட்டு மக்கள் விடு தலை சேனையின் பின்னணி உறுதியாக கெட்டிப் படுத்தபடவும் முடியும்.

கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்களில், கம்யூனிஸ்ட் கட்சியினாலும் முன்னணியில் இருந்த மாணவர் இயக்கத்தினாலும் ஏற்பாடு செய்யபட்டு, செல்வாக்கிற்கு உள்ளாக்கப்பட்டிருந்த, தேசபக்த, ஜனநாயக இயக்கம், மக்கள் புரட்சிக்கான ஒரு இரண்டாவது அணியை திறந்து, நாடு தழுவிய புரட்சியின் வீறு கொண்டு எழும்பிக் கொண்டிருந்த அலையின் ஒரு பகுதியாக அமைந்தது.

மக்கள் விடுதலை சேனையால் ஆரம்பிக்க பட்டிருந்த

யுத்த தந்திரரீதியான முன்னேறித் தாக்குதலின் முதல் ஆண்டின் போக்கில், கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்களில் தேசபக்த இயக்கம் தொடர்ந்து விஸ்தரித்தது. 1948-மே மாத வாக்கில், ஜப்பானிய ஆக்கிரமிப்பு சக்திகளின் மீண்டும் தோன்றுவதற்கு அமெரிக்கா ஆதரவு கொடுத்ததை எதிர்த்து நடத்திய இயக்கம் நாடு தழுவியதொரு தன்மையை எடுத்திருந்தது. பல லட்சக் கணக்கான மாணவர்களும், ஆசிரியர்களும் மற்றும் சிப்பந்திகளும் போராட்டத்தில் பங்கு கொண்டு, வாழ்க்கையில் சகல துறைகளிலும் உள்ள மக்களின் ஆழமான அனுதாபத்தையும் அன்பான ஆதரவையும் வென்று பெற்றார்கள். நாடுமுழுவதிலும் இருந்த மக்கள் அவர்களது நம்பிக்கைகளை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின்மீது வைத்து, மக்களின் புரட்சி யுத்தத்தின் முழுமையான வெற்றியை முன்னோக்கிப் பார்த்து கொண்டிருந்தார்கள்.

1947 அக்டோபர் 10-இல் சீனமக்கள் விடுதலை சேனை ஒரு அறிக்கையை விடுத்தது. அந்த அறிக்கையில், "சியாங்கை-ஷேக் ஒழிக! நாடுமுழுவதையும் விடுதலை செய்க!" என்ற கோஷம் முன்வைக்கபட்டிருந்தது. பிற்போக்கு கோமிங்டாங் அரசு இயந்திரத்தையும் அதனுடைய முழுமையான அஸ்திவாரத்தையும் ஒழிப்பதை அந்த கோஷம் குறிக்கோளாக கொண்டிருந்தது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் மக்கள் விடுதலை சேனையும் புதிய ஜனநாயக புரட்சியை அதனுடைய வெற்றிகரமான முடிவிற்கு கொண்டு செல்லும்படி நாடுமுழுவதிலும் இருந்த மக்களை அறைகூவி அழைத்தது. முதலாவதாக, நிலப்பிரபுத்துவ-தரகு முதலாளித்துவ ஆட்சியை அகற்றுவதற்கு ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் மற்றும் அதிகாரவர்க்க முதலாளித்துவம் ஆகியவற்றை எதிர்க்கும் அனைவரும் சீன கம்யூனிஸ்ட் கட்சி தலைமையின்கீழ் ஒன்றுபட்டு ஒரு மக்கள் ஜனநாயக ஆட்சியை நிறுவவேண்டும். இரண்டாவதாக, பிற்போக்கு கோமிங்டாங் ஆட்சியின் முழு அடிப்படையும் நொறுக்கித் தள்ளப்படவேண்டும். அதிகாரவார்க்க முதலாளித்துவ நிறுவனங்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும். மற்றும் நிலப்பிரபுத்துவ விவசாய அமைப்பு ஒழிக்கபட வேண்டும்.

இந்த நெருக்கடியான சமயத்தில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினால் பின்பற்றப்பட்ட புதிய ஜனநாயக புரட்சிப் பாதையைப் பற்றி சந்தேகப் பார்வை கொண்டவர்கள் இன்னும் இருந்தார்களா? ஆம், இருந்தார்கள். யுத்தம் வெடித்த சமயத்தில், கோமின்டாங் ஏரியாக்களில் இருந்த தேசிய முதலாளி

வர்க்கத்தின் ஒரு பகுதியும், புத்தி ஜீவிகளின் மேல்தட்டு பகுதியும் சாங்போ-சுன்மற்றும் லோலங்-சி ஆகியோரை அவர்களது அவர்களது பிரதிநிதிகளாக கொண்டிருந்தவர்கள், கட்சியினால் தலைமை தாங்கப்பட்ட புதிய ஜனநாயக புரட்சியின் வருங் காலத்தைப் பற்றி சந்தேகப்பட்டு கட்சியின் கொள்கைகளை எதிர்த்தார்கள்; மற்றும் கோமிங்டாங்கை பற்றியும் அமெரிக்க அரசாங்கத்தைப் பற்றியும் பிரமைகளைக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் ஒரு ''நாடு நிலையான'', ''சுயேச்சையான மற்றும் மூன்றாவது தரப்பு'' நிலைபாட்டினைக் கொண்டிருந் தார்கள். மற்றும் நடுவாந்திர பாதைக்காரரர்கள் முற்றிலும் சுயேட்சையான ஒரு நிலையை வகிப்பார்கள் என்றும், மற்றும் ஒரு சீர்திருத்தவாத அரசியல் பாதையைக் கையாளுவதின்மூலம், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் முழு ஆதரவைப் பெற்று இருந்த கோமின்டாங் பிற்போக்கு ஆட்சியின் கீழ் தேசிய சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் வெற்றி பெற முடியும் என்று ஆசையோடு நம்பிக் கொண்டு புரட்சிக்கும் எதிர்புரட்சிக் கும் இடையே ஒரு சீர்திருத்தவாத நடுநிலை பாதையை அவர்கள் தேடினார்கள். வேறு வார்த்தைகளில் சொன்னால், பிற்போக்கு கோமிங்டாங் அரசு இயந்திரத்தையும் அதனுடைய முழுமை யான அஸ்திவாரத்தையும் அப்படியே வைத்துக் கொண்டிருப் பதினால் அவர்களது குறிக்கோளினை உருப்பெறச் செய்வதற்கு அவர்கள் நம்பி இருந்தார்கள்.

எனினும், மக்கள் விடுதலை சேனை அதனுடைய சர்வாம்ச ரீதியான முன்னேறித் தாக்குததை ஆரம்பித்து, கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இநந்த ஏரியாக்களுக்குள் யுத்தத்தை எடுத்துச் சென்றபோது, கோமிங்டாங் பிற்போக்குவாதிகள் பயங்கரவாத முறைகளை உபயோகிப்பதில், மிகவும் அதிகமான வெறித்தன மாக மாறி, கம்யூனிஸ்ட் கட்சியை மட்டுமின்றி இதர எல்லா ஜனநாயக கட்சிகளுடைய சட்டபூர்வமான அந்தஸ்தைப் பறித்தார்கள். அதற்கு பிறகு மூன்றாவது பாதை சூன்னியமாகப் போயிற்று. 1947 அக்டோபர் 27-இல் கோமிங்டாங் அரசினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, சீனஜனநாயக கழகத்தை கலைத்ததோடு அல்லாமல் மூன்றாவது பாதைக்கு சாவுமணியை யும் அடித்தது.

சீன ஜனநாயக கழகம் கலைக்கப்பட்ட பிறகு; நடுவாந்திர பாதை அரசியல் ஸ்தாபனங்கள் அவைகளை மீண்டும் கோஷ்டிப் படுத்திக்கொண்டன. 1948-ஆம் ஆண்டு வசந்த காலத்தில்

கோமிங்டாங்கிற்கு உள்ளே இருந்த பல ஜனநாயக ஸ்தாபனங்கள் கோமிங்டாங் புரட்சிக் கமிட்டியை அமைப்பதற்கு ஒன்று சேர்ந்தன. ஜனநாயக கழகத்தின் புதியதொரு தலைமை காரியாலயம் சீனக்கம்யூனிஸ்டு கட்சியோடு ஒத்துழைப்பதற்காகவும் கோமின்டாங்கின் பிற்போக்கு கொள்கைகளுக்கு எதிராகவும் மற்றும் சீனாவில் ஆக்கிரமிப்பு செய்யும் அமெரிக்க கொள்கைக்கு எதிராகவும் நின்று கொண்டிருந்த கோமிங்டாங் ஸ்தாபனத்தின் தலைமை தாங்கும் பிரமுகர்களால் ஹாங்காங்கில் நிறுவப்பட்டது. கிட்டகட்ட அதே சமயத்தில், இதர ஜனநாயக கட்சிகளும் கூட, சம்பந்தபடுத்தி பார்க்கும்பொழுது, அதிகமான உருப்படியான அரசியல் போக்கைக் கடைபிடிக்க ஆரம்பித்தன. ஆனால் சாங்போ-சுன், லோலங்-சி மற்றும் அவர்களை ஒத்தவர்கள் இன்னும் பிற்போக்கான மூன்றாவது பாதை நிலையில் தொங்கிக் கொண்டிருந்தார்கள்.

சீனக்கம்யூனிஸ்டு கட்சியின் தலைமையை எடுத்துக்கொண்டு பல்வேறு ஜனநாயக கட்சிகள் மற்றும் கோஷ்டிகள் ஆகியவற்றின் ஒரு தேசிய புரட்சி ஐயக்கிய முன்னணியை அமைப்பதற்கான நிலைமைகள் படிப்படியாக பக்குவமாகிக் கொண்டிருந்தன.

1948 மே 1-இல் சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் மத்திய கமிட்டி அதனுடைய மேதின கோஷங்களில் ஒரு ஜனநாயக கூட்டு அரசாங்கத்தை நிலை நாட்டுவதைப்பற்றி விவாதிப்பதற்கு எந்த விதமான பிற்போக்குவாதிகளும் பங்கெடுக்காத புதியதொரு மக்கள் அரசியல் கலந்தாலோசனை மாநாட்டை கூட்டுவதுபற்றி பிரேரணையை வெளியிட்டது. கட்சியின் பிரேரணை நாடு முழுவதிலும் இருந்த மக்களின் ஆதரவினைப் பெற்றது. சகல ஜனநாயக கட்சிகளும் இப்படிப்பட்டதொரு மாநாட்டினைக் கூட்டுவதற்குச் சாதகமான செய்திகளை அனுப்பின. இந்த முறையில் 1949 செப்டம்பரில் முதன் முறையாக கூட்டப்பட்ட சீன மக்களின் அரசியல் கலந்தாலோசனை மாநாடு, மக்கள் ஜனநாயக ஐக்கிய முன்னணியின் ஸ்தாபன உருவமாக ஆயிற்று.

சீன மக்களின் புரட்சி புதியதொரு கட்டத்தை அடைந்திருந்தது. சீன மக்கள் நாடு தழுவியதொரு வெற்றியைப் பெறுவதற்கு ராணுவ ரீதியிலும் சரி, அரசியல் ரீதியிலும் சரி சரியானதொரு நேரத்தைப் பெற்று இருந்தனர். வரவிருக்கும் புதிய மாபெரும் வெற்றிக்கு தயார் செய்யும் பொருட்டு, 1947 டிசம்பர் 25இல் வடக்கு ஷென்சியில் நடைபெற்ற கட்சியின் மத்திய கமிட்டியின் ஒரு கூட்டத்தில் ‘‘தற்போது நிலைமையும் நமது கடமைகளும்’’ என்ற தலைப்பில் தோழர் மாசே-துங் ஒரு

அறிக்கையைச் சமர்ப்பித்தார். அந்த அறிக்கையில், அவர் புரட்சி யுத்தத்தின் நடப்பு நிலைமையைச் சரியாக அலசி ஆராய்ந்து, புரட்சி யுத்தத்தில் இன்னும் மிகப் பெரியதொரு வெற்றியினைப் பெறுவதற்கு முக்கியமாக இருந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ராணுவ அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைகளை எடுத்துரைத்தார்.

ஆரம்பிக்கும் பொழுது, மக்கள் விடுதலை சேனை யுத்த தந்திர ரீதியான தற்காப்பு யுத்தத்தில் இருந்து யுத்த தந்திரரீதியான முன்னேறித் தாக்கும் யுத்தத்திற்கு கடந்து சென்று விட்டதில் சீன மக்களின் புரட்சி யுத்தம் வரலாற்றுரீதியான ஒரு திருப்பு முனையை எட்டிப் பிடித்திருந்தது என்றார் தோழர் மாசே-துங். மக்கள் விடுதலை சேனையின் பிரதானபடை கோமிங்டாங்கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்களுக்குள் ஏற்கனவேபுகுந்து விட்டது. மற்றும் போராட்டம் விடுவிக்கபட்ட ஏரியாக்களைக் காட்டிலும் கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்களுக்குள் முக்கியமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அமெரிக்க ஏகாதிபத்தியம் மற்றும் கோமிங்டாங் பிற்போக்கு ஆகியவற்றின் எதிர் புரட்சி திட்டங்களை சீன மக்கள் விடுதலை சேனை நொறுக்கித் தள்ளி இருந்தது. அதேசமயத்தில், மக்கள் புரட்சியை வெற்றிப் பாதையின் மீதும் வைத்துக் கொண்டு இருந்தது. சியாங்கை-ஷேக்கின் இருபது ஆண்டு எதிர் புரட்சி ஆட்சியையும் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக சீனாவில் நீடித்திருந்த ஏகாதிபத்திய ஆட்சியையும் அபிவிருத்தி அடைவதில் இருந்து ஒழிக்கும்படியான திருப்பு முனையாக இது இருந்தது. இந்த மாற்றம் மாபெரும் முக்கியத்துவம் உடையதாக இருந்தது. ஆயுதமேந்திய போராட்டம் சீன மக்களின் முக்கிய போராட்ட உருவமாக இருந்தமையால், மக்கள் விடுதலை சேனையால் தற்காப்பு யுத்தத்தில் இருந்து முன்னேறி தாக்கும் யுத்தத்திற்கு யுத்த தந்திர ரீதியாக ஏற்பட்டதொரு மாற்றம் நாடு தழுவியதொரு வெற்றியை சீக்கிரத்திலேயே வென்றுபெறுவது நிச்சயமாக இருந்தது. இது உலகம் முழுவதிலும் இருந்த சகல ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கும் குறிப்பாக, கிழக்கத்திய தேசங்களுக்கும். இது ஒரு மாபெரும் உற்சாகமாகவும், அதே நேரத்தில் மாபெரும் ஆதரவாகவும் இருந்தது.

இரண்டாவதாக மக்கள் விடுதலை சேனை எந்த பிரதான முறையில் கோமிங்டாங்கை தோற்கடிக்கும் என்பதனை அவர் தொகுத்து கூறினார். ஒவ்வொரு இயக்கத்திலும் முழுமையான தயாரிப்போடும் நிச்சயத்தோடும் எதிரியின் மனித சக்தியைப்

படிப்படையாக நடக்கும் யுத்தத்தில் நிர்மூலம் செய்வதற்கு மித மிஞ்சிய எண்ணிக்கையில் படைகளைக் குவிப்பது தேவைப்படும். யுத்தத்தின் இரண்டாவது ஆண்டில், சிசியா-சுவாங், ஷெப்பிங், லோயனிங், கைபெங் போன்ற பல சிறிய மற்றும் நடுத்தர நகரங்களை மக்கள் விடுதலை சேனை ஏற்கனவே கைப்பற்றி பலமான தளங்களை புயல் வேகத்தில் தாக்கும் தந்திரங்களைக் கற்று இருந்தது. மற்றும் அதனுடைய சொந்த பீரங்கிபடை பிரிவுகளையும் பொறி இயல் பிரிவுகளையும் நிர்மாணித்தும் இருந்தது. இத்த அனுபவத்தின் அடிப்படையில் மக்கள் விடுதலை சேனை வருங்காலத்தில் நிலை நின்று போராடும் யுத்த முறையை வலியுறுத்துவதாகவும் மற்றும் அதிகமான நகரங்களைக் கைப்பற்றுவதற்கான தயாரிப்பில் கொத்தளங்களைப் புயல் வேகத்தில் தாக்கும் கலையை வலியுறுத்துவதாகவும் மக்கள் விடுதலை சேனை இருந்தது, என்று தோழர் மாசேதுங் திட்டவட்டமாகவும் சரியான சமயத்திலும் சுட்டிக் காட்டினார். நகரங்கள் படிப்படியாகவும் வித்தியாசப்படுத்தியும் - முதலில், சிறிய நடுத்தர நகரங்களையும் பிறகு பெரிய நகரங்களையும் முதலில் எதிரியினுடைய தற்காப்பு பலகீனமாக இருந்த நகரங்களையும், பிறகு பொருத்தமான சமயத்தில் எதிரியினுடைய தற்காப்பு கனிசமாக பலமாக இருந்த நகரங்களையும் மற்றும் இறுதியாக, நிலைமைகள் பக்குவமாக இருக்கும் பொழுது எதிரியினுடைய தற்காப்பு மிகவும் பலமாக இருந்த நகரங்களையும், கைப்பற்றுவதாக இருந்தது.

மூன்றாவதாக, அப்பொழுது நிறைவேற்றபட்டுக் கொண்டிருந்த கட்சியின் களையெடுப்பு இயக்கம் பற்றியும் விவசாய சீர்திருத்தம் பற்றியும் அவர் முக்கியமான அறிவுரைகளை கொடுத்தார். விவசாய சீர்திருத்தத்தின் அடிப்படை கோட்பாடுகள், ஏழை விவசாய்கள் மற்றும் விவசாய தொழிலாளிகளின் கோரிக்கைகளைத் திருப்தி செய்வதாக இருந்தன; இக்கோரிக்கைகள் விவசாய சீர்திருத்தத்தின் மிகமிக அடிப்படையான கடமையாக இருந்தது; மற்றும் நடுத்தர விவசாயிகளோடு—அவர்களது நலன்கள் பாதிக்கபடக் கூடாது—உறுதியாக ஒன்றுபடுவதாகவும் இருந்தது. இத்தகைய இரண்டு அடிப்படையான கோட்பாடுகளை உறுதியாக பற்றிப் பிடித்து கொண்டிருப்பதினால் மட்டுமே, விவசாய சீர்திருத்தம் வெற்றிகரமாக நிறைவேற்றபட்டு, நடுத்தர விவசாயிகளின் நலன்களைப் புறகணிக்கும் திரிபு—இப்படிப்பட்ட ஒரு திரிபு ஏற்கனவே பார்க்கப்பட்டிருந்தது—தக்க சமயத்தில் சரி செய்யப் படவும்

முடியும்.

கட்சியின் ஸ்தாபனங்களை உறுதிப்படுத்துவதற்கும், மிகப் பரவலான உழைக்கும் வெகுஜனங்களின் அதே பக்கத்தில் நின்று அவர்களது முன்னேற்றத்தில் அவர்களை வழி நடத்தி செல்வதற்கு கட்சிக்கு சாத்தியமாக இருக்கும் பொருட்டு கட்சிக்குள் இருந்த அந்நிய பேர்வழிகளைத் தோண்டி அறிவதும். மற்றும் கட்சிக்குள்ளிருந்த மோசமான வேலை பாணியைக் களை எடுப்பதும் புரட்சிகரமான யுத்தத்திற்கு ஆதரவைத் திரட்டு வதினால், நிலப்பிரச்சினைக்கு தீர்வு காணுவதிலும் இது ஒரு உயிரோட்டமான அம்சமாக இருந்தது.

நான்காவதாக, புரட்சிகரமான யுத்தத்தின் துரிதமான அபிவிருத்தியினால், அதிகமான நகரங்கள் விடுதலை செய்யப் படும். மிகப்பெரும் வெற்றியைப் பெறுவதற்கு சரியானதொரு விவசாய கொள்கையோடு கூடவே, சரியானதொரு நகர்புற கொள்கையையும் கட்சி பெற்றிருக்க வேண்டும், அறிக்கையில் கட்சியின் பொருளாதாரத் திட்டம் தெளிவாக வரையறுக்கப் பட்டு இருந்தது. பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவ வர்க்கத்திட மிருந்து பறிமுதல் செய்யப்பட்டு இருந்த நிலத்தை விவசாயி களுக்கு திரும்ப கொடுப்பது, முக்கியமாக ''நான்கு பெரிய குடும்பங்களால்'' உடமையாக்கப்பட்டிருந்த அதிகார வர்க்க மூலதனத்தை மக்கள் குடியரசிடன் திரும்ப கொடுப்பது, மற்றும் தேசியதொழிலுக்கும் வியாபாரத்திற்கும் பாதுகாப்பு கொடுப்பது புதிய ஜனநாயக புரட்சியின் பொருளாதார திட்டத்தில் மூன்று பிரதான திட்டங்களாக இவை இருந்தன.

''நான்கு பெரிய குடும்பங்களால்'' பிரதிநிதித்துவப் படுத்தியிருந்த அதிகார வர்க்க— முதலாளித்துவம் பிற்போக்கு கோமிங்டாங் ஆட்சியின் பொருளாதார அடிப்படையாக இருந்தது. ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் நடைபெற்ற காலத்திலும் ஜப்பான் சரணாகதி அடைந்த பிறகும் அது அதனுடைய உச்ச கட்டத்தை அடைந்திருந்தது; மற்றும் புதிய ஜனநாயக புரட்சிக்கான போதுமான பொருளாதார நிலைமை களையும் ஏற்பாடு செய்து இருந்தது. ஏனெனில், அதிகாரவர்க்க மூலதனத்தைப் பறிமுதல் செய்து, அதனை மக்கள் குடியரசிற்கு மாற்றுவதும் மற்றும் அதிகார வர்க்க-முதலாளித்துவ பொருளா தாரத்தை சோஷலிச பொருளாதாரமாக மாற்றுவதும் திட்ட வட்டமாக கட்சியின் கொள்கையாக இருந்தது. புதிய ஜனநாயக புரட்சியின் குறிக்கோள் ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத் துவ மற்றும் அதிகார வர்க்க முதலாளித்துவம் ஆகியவற்றைத்

தூக்கி எறிவதாக இருந்தது. ஆனால் பொதுவாக, முதலாளித்துவத்தை ஒழிப்பதாக இல்லை. சீனாவின் பொருளதார பின் தங்கிய நிலையின் காரணமாக, நாடுதழுவிய தொரு வெற்றியைப் புரட்சி வென்றெடுத்தப் பிறகும் கூட சிறு மற்றும் நடுத்தர முதலாளித்துவ நிறுவனங்கள் கனிசமான நீண்ட தொரு காலகட்டத்திற்கு நீடித்திருக்க அனுமதிப்பது அவசிய மாக இருந்தது. மற்றும் தேசிய பொருளாதாரத்தின் வேலைப் பிரிவினைக்கு ஏற்ப, தேசிய நல்வாழ்விற்கும் மக்களின் வாழ்விற் கும் பலன் தரத்தக்கதாக இருந்த, அப்படிப்பட்ட பிரிவுகளும் அபிவிருத்தி செய்வதும் அவசியமாக இருந்தது. சிறு மற்றும் நடுத்தர அளவிலான முதலாளித்துவ தொழில் நிறுவனங்கள் இருப்பதையும், அபிவிருத்தி செய்வதையும் அனுமதிப்பதில் எந்த விதமான அபாயமும் இருக்காது. ஏனெனில், அதிகாரவர்க்க மூலதனத்தின் பறிமுதலின் மூலம், நாடுமுழுவதின் பிரதான பொருளாதார பாதைகளைக் கட்டுப்படுத்தும் ஒரு சோஷலிச தன்மைவாய்ந்த பிரம்மாண்டமான அரசு பொருளாதாரத்தை மக்களரசு அதனுடைய சொந்தக்கரங்களில் வைத்திருக்கும் இந்த அரசு பொருளாதாரம் தீர்மானமான முக்கியத்துவம் உடைய தாக இருக்கும்; மற்றும் மக்களரசின் பொருளாதார வாழ்க் கையில் ஒரு தலைமை தாங்கும் பாத்திரத்தையும் வகிக்கும்.

கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்களில் தேசிய பூர்சுவா வர்க்கம் மற்றும் குட்டி முதலாளி வர்க்கத்தின் மேல் தட்டு பகுதிகளின் பிற்போக்கு அரசியல் போக்கினையும், மற்றும் பொருளாதார துறையில். இத்தகைய வர்க்கங்களின்பால் கட்சி அனுஷ்டித்திருந்த பாதுகாப்பு கொள்கைகளையும் அறிக்கை தெளிவாக சுட்டிக்காட்டிற்று. அவர்களுடைய பிற்போக்கு அரசியல் போக்குகளை எதிர்த்துப் போராடுவது என்பதும் பொளாதார ரீதியாக அவர்களை ஒழித்துக் கட்டுவது என்பதும் ஒரே மாதிரியானதல்ல. இரண்டு விஷயங்களையும் எந்த விதத்திலும் குழப்பக்கூடாது. புதிய ஜனநாயக அரசு அதிகாரம் இருக்கும் எல்லா பிரதேசங்களிலும் இத்தகைய வர்க்கங்கள் உறுதியாக பாதுகாக்கப்பட வேண்டும். சிறு மற்றும் நடுத்தர முதலாளித்துவ தொழில் நிறுவனங்களின்பால் மிதமிஞ்சிய தொரு "இடதுசாரிக்" கொள்கையைக் கையாண்டு கொண் டிருந்த தவறுக்காக கட்சியில் பல ஊழியர்கள் கடுமையாக விமர்சிக்கப்பட்டு இருந்தார்கள்.

ஐந்தாவதாக, புரட்சிகரமான ஐக்கிய முன்னணி மேலும் விரிவடைந்து, முன் எப்போதைக் காட்டிலும் மிக அதிகமாக

கெட்டிப்பட்டிருந்தது என்பதில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் சீன மக்களும்மகத்தானதொரு வெற்றியைப்பெற்றிருந்தார்கள் என்று அவர் சுட்டி காட்டினார். சீன மக்களின கண்களின் முன்னால், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் குற்றங்களும் கோமிங்டாங் பிற்போக்குவாதிகளின் குற்றங்களும் முழுமையாக அம்பலப் படுத்த பட்டிருந்தமையால், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி சரியான விவசாய கொள்கைகளையும் நகர்ப்புற கொள்கைகளையும் நிறைவேற்றி இருந்தமையால், மற்றும் மக்கள் விடுதலை சேனை மகத்தானதொரு வெற்றியைப் பெற்றிருந்தமையாலும், கட்சி நாடு முழுவதிலும் இருந்த மக்களின் நம்பிக்கையைப் பெற்று இருந்தது. புரட்சிகரமான ஐக்கிய முன்னணியின் விஸ்தரிப் பிற்கும், கெட்டிப்படுத்தலுக்கும் இது அடிப்படையாக இருந்தது. அனைத்து மக்களின் மிகப் பெரும்பாலான, பெரும்பான்மை யோரை உள்ளடக்கிக் கொண்டிருக்கும் பரவலானதொரு ஐக்கிய முன்னணி இல்லாமல் சீனாவின் புதிய ஜனநாயக புரட்சி வெற்றி பெறுவது சாத்தியமற்றதாக இருக்கும். மேலும், இந்த ஐக்கிய முன்னணி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுதியான மற்றுப் பலமான தலைமையின் கீழ் வைக்கப்பட்டு இருந்தால், எந்த வெற்றியும் பெறுவது சாத்தியமாக இருந்திருக்க முடியாது. கட்சியின் மத்திய கமிட்டி கட்சி முழுவதையும், கடந்த கால அனுபவத்தில் இருந்து ஒரு படிப்பினையை கற்றுக் கொள்ளும்படி நினைவுபடுத்திற்று. 1947-இல் புரட்சி ஒரு உச்ச நிலைமையில் இருந்த பொழுது, கட்சியின் தலைமை தாங்கும் பொறுப்பில் இருந்த சரணாகதிவாதிகள் புரட்சியின் தலைமையை உதறித் தள்ளி இருந்தார்கள். இந்த முறையில், அது தோல்வி அடை வதற்கு காரணமாகவும் இருந்தார்கள். மறுபுறத்தில் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் நடைபெற்ற காலகட்டத்தில், சரணாகதி வாதம் கட்சியில், எதிர்ந்து போராடப்பட்டு இருந்தமையாலும் மற்றும் ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியில் பாட்டாளி வர்க்கம் அதனுடைய சுதந்திரத்தையும் ஈடுபாட்டையும் வைத் திருக்க வேண்டும் என்ற கோட்பாடு பின்பற்றப் பட்டிருந்தமை யாலும், எதிர்ப்பு யுத்தத்தில், மாபெரும் வெற்றி உறுதிப் பட்டது.

புதிய புரட்சிகரமான நிலைமைகளின் கீழ், நாடு தழுவிய தொரு வெற்றிக்காக முயற்சிப்பதற்கு மக்களை தலைமைத் தாங்கி செல்வதில், சீனக் கம்யூனிஸ்ட் தரப்பில், அந்த அறிக்கை தயாரிப்பு வேலையின் முக்கியமானதொரு பாகமாக இருந்தது.

தற்காப்பு யுத்தத்தில் இருந்து முன்னேறிய தாக்குதலுக்கு யுத்தம் மாறிச் சென்றிருந்த பிறகு, கட்சியினால் கடைபிடிக்கப்பட வேண்டி இருந்த, பல்வேறு அடிப்படையான கொள்கைகளை அது வரையறுத்திருந்தது. ராணுவ விவகாரங்கள் விவசாய சீர் திருத்தம், கட்சியைக் கெட்டிப்படுத்துவது பொருளாதார விஷயங்கள் மற்றும் ஐக்கிய முன்னணி ஆகியவை சம்பந்தமான கொள்கைகளை அது வரையறுத்திருந்தது, இந்த முறையில் அறிக்கை ஒரு செயல் திட்டமாக—அந்த செயல் திட்டத்தின் மீது அனைத்து மக்களையும் கட்சி இறுதி வெற்றிக்கு தலைமை தாங்கிச் செல்ல முடியும்—அமைந்திருந்தது.

**2. புதிதாக விடுவிக்கப்பட்ட ஏரியாக்கள் மற்றும் நகரங்கள் சம்பந்தமாக கட்சியின் கொள்கைகள். கட்சியின் கட்டுப்பாட்டைப் பலப்படுத்துவதும் கட்சி கமிட்டி முறையை உருப்படியானதொரு அடிப்படையின் மீது வைப்பதும்.**

முன்னேறித் தாக்குதலுக்கு அதனுடைய மாற்றம் ஏற்பட்டதைப்பின்தொடர்ந்து, மக்கள் விடுதலை சேனை பரவலான பகுதிகளையும் பல நகரங்களையும் சீக்கிரமாக அடுத்தடுத்து விடுதலை செய்து, மூன்று கோடி மக்கள் தொகையைக் கொண்ட மத்திய சமவெளி விடுவிக்கப் பட்ட பகுதியை நிலை நாட்டிற்று. அந்த சமயத்தில் விடுவிக்கப்பட்ட பகுதிகளின் மொத்த மக்கள் தொகை பதினாறு கோடியாக இருந்தது. கொத்தளங்களைப் புயல் வேகத்தில் தாக்கும் கலையில் மக்கள் விடுதலை சேனையால் செய்யப்பட்டிருந்த மாபெரும் முன்னேற்றத்தினால், பல நடுத்தர நகரங்கள் மீட்கப்பட்டிருந்தன, அல்லது விடுவிக்கப் பட்டு இருந்தன. வடகிழக்கில் அன்ஷான், ஷெப்பிங், ஷான்டுங்கில் வெய்சியன், ஹோப் பெய்யில் சிசியா சுவான், லோங்கியில் யுன்செங் மற்றும் லின்பேன்,ஷென்சியில் பாவோசி, ஹோனானில் கைபெங் மற்றும் லோயாங்,ஹுப்பெய்யில் ஷியாங்யாங் போன்ற இப்படிபட்ட படைகள் குவிக்கப்பட்டிருந்த நகரங்கள் உட்பட பல நடுத்தர நகரங்கள் மீட்கப்பட்டிருந்தன அல்லது விடுவிக்கப் பட்டிருந்தன.

புதிதாக விடுவிக்கப்பட்டிருந்த பகுதிகள் மற்றும், நகரங்களின் பால், கொள்கைகளைச் சரியாக அமல் நடத்தவும், நகரங்களைப் பற்றி தெரிந்துக் கொள்ளவும் மாபெரும் கவனம் செலுத்தும்படி கட்சியின் மத்திய கமிட்டி, கட்சி முழுவதையும் அறைகூவி

அழைத்தது. புதிய பகுதிகளின் பால் கொள்கையை நிர்ணயம் செய்வதற்கும், அந்த கொள்கைகளை நிறைவேற்றுவதற்கும், முழுவதும் பின்பற்ற வேண்டிய பின்வரும் அடிப்படையான வேலை செய்யும் முறையை மத்தியக் கமிட்டி சுட்டிக் காட்டிற்று. பல்வேறு பகுதிகளில் திட்டவட்டமான நிலைமைகளை ஸ்தூல மாக அலசி ஆராய்ந்து, அப்படி செய்வதினால் இத்தகைய நிமைமைகளுக்கு ஏற்ப கடமைகளை நிர்ணயித்துப் பயன்படுத்த வேண்டிய வேலை செய்யும் முறையைத் தீர்மானிப்பது, நகரத் திற்கும் கிராம புறத்திற்கும் இடையே, பழைய விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குள்ளேயும், கொரில்லா பகுதிகளுக்கும் புதிதாக விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கும் இடையேயும் ஒரு தெளிவான வேறுபாடு வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும்.

புதிதாக விடுவிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் நகரங்கள் சம்பந்தமாக, அவற்றை உறுதியாக வைத்துக் கொள்ள முடியும் என்பதைப் பற்றி நிச்சயமாக இருப்பது அவசியமாக இருந்தது. ஆம் என்று பதில் இருக்குமேயானால், பின்வரும் கேள்விகள் எல்லாவற்றிற்கும் முதலாவதாக, கவனிக்கப்பட வேண்டும். ஒரு புறத்தில், மக்கள் ஜனநாயக அரசு அதிகாரத்தை நிலை நிறுத்தும் குறிக்கோளுக்காக, சகல எதிர்புரட்சி ஆயுதபடைகளும் தீர்மானமாக ஒழிக்கப்பட வேண்டும். சகல எதிர்புரட்சி ஸ்தாபனங்களும் கலைக்கப்பட்டு அவற்றின் பிரதான தலைவர் கள் கைது செய்யப்பட வேண்டும்; மற்றும் அதிகார வர்க்க மூலதனமும் முக்கிய எதிர்புரட்சிவாதிகளின் சொத்துகளும் பறி முதல் செய்யப்பட வேண்டும்; மறுபுறத்தில், சகல சட்டத்திற்கு கட்டுபட்டு நடக்கும் தேசிய தொழில் மற்றும் வியாபார நிறுவனங்களுக்கும் மற்றும் பறிமுதல் செய்யப்படும் பட்டியலில் இல்லாத சகல பொது சொத்துக்களுக்கும் தனியார் சொத்துக் களுக்கும் சக்தி வாய்ந்த பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும். சமுதாய ஒழுங்கினைப் பாதுகாக்கவும் குழப்பத்தை தவிர்க்கவும், கோமிங்டாங் அரசாங்கத்தின் பொருளாதார, கல்வி மற்றும் கலாச்சார இலாக்கக்களில் பணியாற்றும் ஊழியர்களில் எவ்வளவு பேர் சாத்தியமோ அவ்வளவு பேரை வைத்துக் கொள்வது. வெகுஜனங்களின் அரசியல் விழிப்பின் அளவிற்கும் ஸ்தாபனத் திற்கும் ஏற்புடைய முறையில் அவசியமான சமுதாய சீர்திருத்தங் கள் படிப்படியாக நிறைவேற்றப்பட வேண்டும்.

நகரங்களில், சமுதாய சீர்திருத்தங்களின் கடமையின் முறை கிராமப்புறத்தில், விவசாய சீர்திருத்தத்தின் கடமையின்

முறையில் இருந்து வேறுபட்டதாக இருக்க வேண்டும். புதிதாக விடுவிக்கப்பட்ட நகரங்களில் சமுதாய சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதில், தலை தூக்கி நிற்கும் கடமை அதிகார வர்க்கமூலதனத்தைப் பறிமுதல் செய்வதாக இருந்தது. பறிமுதல் செய்யப்பட்ட அதிகார வர்க்க முதலாளித்துவ நிறுவனங்கள் உடைக்கப்படாமல் அப்படியே இறுக்கமாக வைக்கப்பட்டு, அவை தொடர்ந்து உற்பத்தியை நடத்துவதையும் அல்லது மீண்டும் உற்பத்தியை ஆரம்பிப்பதையும் உறுதி செய்யும் பொருட்டு, ஒவ்வொரு முயற்சியும் செய்யப்பட வேண்டும். நகரத்தில், உற்பத்தி மீண்டும் துவக்கப்படுவதற்கும் மற்றும் அபிவிருத்தி செய்யப்படுவதற்கும் திறவுகோலாக இருப்பது தொழிலாளி வர்க்கத்தின் மீது சார்ந்து நிற்பதாகும். ஆகவே, சகல பொது நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் ஜனநாயக சீர்திருத்தங்களை நிறைவேற்றுவது கட்டாயமாக இருந்தது. தொழிலாளிகளின் நிலையைப் பொருத்தமாக உயர்த்துவதும் அவர்களது வாழ்வை உறுதிப்படுத்துவதும் கட்டாயமாக இருந்தது.

புதிதாக விடுவிக்கப்பட்ட பகுதிகளில், விவசாய சீர்திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு மூன்று நிபந்தனைகள் தேவையாக இருந்தன : (1) பிற்போக்கு ஆயுதபடைகள் முற்றிலும் எதிர்க்கப்பட வேண்டும். (2) வெகுஜனங்களின் அடிப்படையான பகுதிகளில் மிகப் பெரும்பாலான பெரும் பான்மையோரின் தரப்பில் நிலத்தைப் புனர்விநியோகம் செய்வதற்கான ஒரு கோரிக்கை இருக்க வேண்டும். (3) ஸ்தல விவசாய சீர்திருத்தத்தைச் சரியாக தலைமை தாங்கி நடத்துவதற்குத் திறமை உடைய ஊழியர்களைக் கட்சி போதிய எண்ணிக்கையில் பெற்றிருக்க வேண்டும். விவசாய சீர்திருத்தம் பூர்த்தி அடைந்து இருக்கும்பொழுது, நில உடமையின் உரிமை வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும். மற்றும் மக்களின் சுமை மீண்டும் சரி செய்யப்பட்டு எளிதாக்கப்பட்டு இருக்க வேண்டும். சாத்தியமாக இருக்கும் போதெல்லாம் விவசாய உற்பத்தியை அபிவிருத்தி செய்வதை அவர்கட்கு சாத்தியமாகச் செய்யும் பொருட்டு விவசாயிகளுக்கு உதவி கொடுக்கப்பட வேண்டும். விவசாய சீர்திருத்தத்திற்கான நிலைமைகள் இன்னும் பக்குவமடையாமல் இருக்கும் அப்படிப்பட்ட பகுதிகளில், குத்தகை குறைப்பு மற்றும் வட்டிக் குறைப்பு மற்றும் தானியம் மற்றும் விதை வழங்குவதை மீண்டும் சரி செய்வது

பற்றிய ஒரு சமுதாய கொள்கையும் மற்றும், சம்மான் வரி விதிப்பு பற்றிய ஒரு நீதிக் கொள்கையும், வென்று பெறக்கூடிய அல்லது நடுநிலையாக வைக்கப்படக்கூடிய சகல சமுதாய சக்திகளையும் வென்றெடுக்கும் பொருட்டும், அல்லது நடுநிலை வகிக்கச் செய்யும் பொருட்டும், நிறைவேற்றப்பட வேண்டும். கோமிங்டாங் ஆயுதப்படைகளை வேரொடு பிடுங்கி எறிவதற்காகவும் ஆளும் நிலச்சுவான்தார்களை நொறுக்கித் தள்ளுவதற்காகவும் இது அவசியமாக இருந்தது.

புரட்சி யுத்தத்தில் துரிதமான வெற்றியைப் பின்தொடர்ந்து பதினாறு கோடிக்கும் அதிகமான மொத்த ஜனத் தொகையைக் கொண்ட பல பகுதிகளில் கட்சி அதனுடைய ஆட்சியை நிலை நாட்டி இருந்தது இந்த பகுதிகளில், பலவும் இணைக்கப்பட்டும் இருந்தன. மேலும், தேசம் முழுவதின் மக்கள் ஜனநாயக அரசு அதிகாரத்தின் தலைமை தாங்கும் கட்சியாக கம்யூனிஸ்ட் கட்சி இருக்கப் போகும் நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. ஏற்கனவே, வென்றுபெறப் பெற்றிருந்தவை, பற்றிப்பிடித்துக் கொள்ளும் பொருட்டும், கட்சிக் கட்டுப்பாட்டை பலப்படுத்துவது, பிரதம முக்கியத்துவம் உடையதாக இருந்தது. நாடு முழுவதிலும் நிலவிய புரட்சிகரமான நிலைமை, அரசியல், ராணுவ மற்றும் பொருளாதார விவகாரங்களில் கட்சிக் கொள்கைகளை முழுமையாக ஒருமைப்பாடு உடையதாகச் செய்வதைக் கோரிற்று.

எனவே, கட்சி முழுவதும் கட்டுப்பாட்டைப் பலப்படுத்த வேண்டும் என்றும் ஸ்தலத்தில் உள்ள ஸ்தாபனங்கள் ஒழுங்கான இடை வேளைகளில் மத்திய கமிட்டிக்கு அறிக்கை அனுப்பும் ஒரு முறை நிலைநாட்டபட வேண்டும், என்றும் கோரி 1948 ஜனவரியில் கட்சியின் மத்தியக் கமிட்டி அறிவுரைகளைக் கொடுத்தது.

அதே சமயத்தில், கட்சிக் கமிட்டி முறையை உருப்படியான தொரு அடிப்படையில் வைப்பதற்கும் மத்திய கமிட்டி ஒரு முடிவை எடுத்தது. சகல மட்டங்களிலும் உள்ள கட்சி கமிட்டிகள் கூட்டுத் தலைமையை நடைமுறைபடுத்தவேண்டும் என்றும் மற்றும் தனி நபர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் தங்களுடைய சொந்தக் கரங்களுக்குள் எடுத்துக் கொண்டு முக்கியமான பிரச்சனைகளை முற்றிலும் தங்களுடைய சொந்த பொறுப்பிலேயே தீர்வு கண்டு கொண்டிருப்பதாக கட்சியின் சில தலைமை தாங்கும் உறுப்புகளில் காணப்படும் தவறினை ஒழித்துக்கட்ட வேண்டும் என்றும் அது கோரிற்று. கூட்டுத் தலைமையை உறுதிப் படுத்துவதற்கும் தனி நபர்கள் ஒவ்வொரு விஷயத்தையும்

தங்களுடைய சொந்தக் கரங்களுக்குள் எடுத்துக் கொள்வதைக் கட்சிக் கமிட்டி முறை, முக்கியமானதொரு முறையாக இருந்த தென்று அந்த கமிட்டி முடிவு சுட்டிக்காட்டிற்று. சகல முக்கிய மான பிரச்சினைகளும் கட்சிக் கமிட்டியில் முழுமையாக விவாதிக் கப்பட வேண்டும்; மற்றும் திட்டவட்டமான முடிவுகள் எடுக்கப் பட்ட பிறகு பிரச்சனைகள் தனித் தனியாக தீர்வு காணப்பட வேண்டும். மறுபுறத்தில், கூட்டுத்தலைமையோ அல்லது தனித்த பொறுப்போ ஒன்றை ஒன்று விலக்கக் கூடிய முறையில் வலியுறுத்தப்படக் கூடாது.

கட்சியின் மத்தியக் கமிட்டியின் இத்தகைய அறிவுரைகள் உடனடியாக நிறைவேற்றப்பட்டன. இதன் விளைவாக, கட்சி முழுவதும் பெரும் அளவிற்கு ஒருமைப்பாடு உடையதாக ஆக்கப் பட்டது. அதனுடைய தலைமை, மிக அதிகமாக மத்தியப் படுத்தப்பட்டிருந்தது. மற்றும் வெகுஜனங்களோடு அதற்கிருந்த பிடிப்புகள் மேலும் பலப்படுத்தப்பட்டன.

மத்தியக் கமிட்டியினால், 1947 டிசம்பரில், நடத்தப்பட்ட மாநாடும் பின்னர் கட்சியினால் நிறைவேற்றப்பட்ட வேலை யும் நாடு தழுவிய வெற்றிக்கு, மக்களை தலைமை தாங்கிச் செல்வதற்கு, கட்சிக்கு அவசியமான நிலைமைகளை ஏற்படுத்திக் கொடுத்தது.

### 3. லியா வோசி-சென்யான், யுவாய் - ஹை, பீகிங்-டியன்சின் ஆகிய மூன்று பெரிய இயக்கங்கள் நாடு முழுவதிலும் மக்கள் புரட்சியுத்தத்தின் அடிப்படையான வெற்றி. கட்சி தலைமை தாங்கும் மையத்தை கிராமப்புறத்தில் இருந்து நகரத்திற்கு மாற்றுதல். மக்கள் புரட்சியின் வெற்றிக்குபிறகு சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் அடிப் படையான கொள்கை.

யுத்தத்தின் மூன்றாவது ஆண்டில், யுத்த நிலைமையில் மற் றொரு தீவிரமான மாற்றம் நடைபெற்றது. மக்கள் விடுதலை சேனையால் துவக்கப்பட்ட முப்பெரும் இயக்கங்களின் விளைவாக சீன மக்கள் புரட்சியின் நாடுதழுவிய வெற்றி நிச்சயமானதாக ஆகி இருந்தது. இந்த மூன்று இயக்கங்களில், பிற்போக்கு கோமிங்டாங் ராணுவத்தின் பிரதான படைகள் முற்றிலும் நிர் மூலம் செய்யப்பட்டு இருந்தன. லியோசி - சென்யான் இயக்கம் யுவாங் - ஹை இயக்கம் மற்றும் பீகிக் - டியன்சின் இயக்கம் ஆகிய இயக்கங்களே அந்த இயக்கங்கள் ஆகும்.

முதலாவதாக, கிழக்கு சீனாவில், மக்கள் விடுதலை சேனை ஷான்டுங் மாகாணத்தின் தலைநகரான சின்னானுக்கு எதிராக 1948 செப்டம்பர் 16இல், ஒரு இயக்கத்தை துவக்கிற்று. யுத்த தந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நகரான சின்னான் ஏழு லட்சம் ஜனத்தொகை கொண்டதாக இருந்தது. ஒரு லட்சத்திற்கும் அதிகமான எண்ணிக்கையைக் கொண்ட கோமிங்டாங் படையும் மற்றும் பல நவீன கொத்தளங்களும் இந்நகரை பாதுகாத்து வந்தன. அங்கிருந்து நில அமைப்பு தற்பாதுகாப்பிற்கு சாதகமாகவும், ஆனால் தாக்குதலுககு சாதகமற்றதாகவும் இருந்தது. எனினும், மக்கள் விடுதலை சேனையால் தொடர்ச்சியான எட்டு நாட்கள் தாக்குதலுக்குப் பிறகு நகரம் முற்றிலும் விடுவிக்கப்பட்டது. எதிரியின் பிரதான படைகளைப் பெரும் அளவில் சுற்றி வளைத்து ஒழித்துக் கட்டுவதின் ஆரம்பமாகவும் பெரு நகரங்களின் விடுதலையின் ஆரம்பமாகவும் இது இருந்தது. சின்னானின் விடுதலை எந்த விதமான தற்காப்பு திட்டமும் மக்கள் விடுதலை சேனைக்கு எதிராக தாக்குப்பிடிக்க முடியாது என்பதைத் தெளிவாக நிரூபித்துக் காட்டிற்று.

1948 செப்டம்பர் 12இல், இருந்து நவம்பர் 2 வரையிலும், வடகிழக்கு சீனாவில் மக்கள் விடுதலை சேனை பிரம்மாண்டமான லியோசி - சென்யான் இயக்கத்தை ஆரம்பித்தது. முதலில் அது சின் சோவ்வை விடுதலை செய்தது. வட கிழக்கில் இருந்த எதிரியின் படை பிரிவுகளுக்கும் பெரும் சுவற்றிற்கு தெற்கே இருந்த படை பிரிவுகளுக்கும் இடையே இருந்த ஒன்று சேர்க்கும் இணைப்பினைத் துண்டித்து, நிலத்தின் வழியாக எதிரியின் பின் வாங்குதலைத் தடுத்தது. பிறகு ஷாங்சின்னின் விடுதலையைப் பின் தொடர்ந்து சென்யாங் ஏரியாவில் எதிரி மேற்கு லயோனிங்கிற்கு தப்பி ஓட ஆரம்பித்தான். எதிரி டாகூ ஏரியாவிலும் கருப்பு மலைகளிலும் மொத்தமாக நிர்மூலம் செய்யப்பட்டான். இந்த முறையில், சென்யாங்கும் வடகிழக்கு சீனாவின் முழுமையான பிரதேசம் விடுவிக்கப்பட்டன. நாடு முழுவதின் மிக முக்கியமான தொழில் நகரங்களும் மிக மிக செழிப்பான உற்பத்தி பிரதேசங்களும் அடங்கி இருந்த வட கிழக்கு சீன மக்களின் உடமைகளும் நிரந்தரமாக வந்தது. லியோசி-சென்யாங் இயக்கத்தில் 4,70,000த்திற்கும் அதிகமான கோமிங்டாங் துருப்புகள் செயலற்றதாக செய்யப்பட்டன. மக்களின் புரட்சி யுத்தத்தில் அது ஒரு தீர்மானமான வெற்றியாக இருந்தது. ஏனெனில் எதிரியின் மீது மக்கள் விடுதலை சேனையின் அளவு ரீதியானதும்,

மற்றும் குணாம்சரீதியானதுமான மேலாதிக்க தன்மையின் ஆரம்பத்தை அது குறித்தது. எதிரியின் மொத்த ராணுவ பலம் 29,00,000த்திற்கு குறிக்கப்பட்டிருந்தது, அதே சமயத்தில் மக்கள் விடுதலை சேனையின் பலம் 30,00,000 பேராக வளர்ந்து இருந்தது.

இந்த சமயத்தில், வடகிழக்கு சீனா, மத்திய சமவெளி, கிழக்கு சீனா மற்றும் வடகிழக்கு சீனா ஆகியவற்றில் இருந்த மக்கள் விடுதலை சேனையின் பல்வேறு தள ராணுவப் படை பிரிவுகள் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது தள ராணுவங்களாக புனரமைக்கப்பட்டிருந்தன. அவை ஒவ்வொன்றும் பலராணுவ படைப்பிரிவுகளைத்தலைமைத் தாங்கிக் கொண்டிருந்தன. மக்கள் விடுதலை சேனையில், பொது தலைமை காரியாலயத்தில் நேரடியான கட்டளையின் கீழ், இத்தகைய படைப்பிரிவுகள் வட சீனாவில் இருந்த மூன்று ராணுவ படைப்பிரிவுகளோடு ஒன்று சேர்ந்து ஒன்றுபடுத்தப்பட்ட புனரமைப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

1948 நவம்பர் 7இல் இருந்து 1949 ஜனவரி 10வரையிலும், இரண்டாவது மற்றும் மூன்றாவது தள ராணுவங்கள் கூட்டாக மாபெரும் யுவாங்—ஹை இயக்கத்தைத் துவக்கின. லியாங்சுவில் ஆகோவிற்கு கிழக்கே இருந்த நியன் சுவாங் பகுதிகளில் மக்கள் விடுதலை சேனை, குவாங்—போட் வோவின் தலைமையின் கீழிருந்த 1,70,000 பேர் பலம் கொண்ட எதிரியின் இராணுவ படைகளை முற்றிலும் அழித்தது. நடவடிக்கையில், குவாங்கும் கொல்லப்பட்டான். பிறகு வடக்கு யாங்சுவில் அசியனுக்கு தென் மேற்கே சுவாங் ஆய்சி அருகாமையில் மத்திய சீனாவில் இருந்து பலப்படுத்துவதற்காக முந்தியடித்துக் கொண்டு வெகு வேகமாக வந்திருந்த, குவாங்-வெய்யின் ராணுவ படை பிரிவுகளை, சேர்ந்த 1,20.000 பேர்களுடன் அதிகமான ஜவான்கள் சுற்றி வளைக்கப்பட்டு நொறுக்கித் தள்ளப்பட்டார்கள் குவாங்-வெய் கைதியாகி பிடிபட்டான்; டியு—மிங் தலைமையின் கீழியிருந்த 2,50,000 பேர்களும் அதிகமான பலம் கொண்டிருந்த இதர மூன்று ராணுவ பிரிவுகள் ஆ—சோவ்வை கைவிட்டு கிழக்கு ஹோனானில் யுங்-செங்கை நோக்கி தப்பி ஓடினார்கள். அவர்கள் யுங்—செங்கிங் வடகிழக்கில் அழிக்கப்பட்டார்கள். மற்றும் குயு—மிங் பிடிபட்டான். இந்த இயக்கம் இரண்டு மாதங்களும் ஐந்து நாட்களுப் நீடித்தது. மக்கள் விடுதலை சேனை 5,50,000 பேருக்கும் அதிகமான எதிரியின் அதிர்ச்சித் துருப்புக்களைச் செயலற்றதாக செய்து யுவாங் நதிக்கு தெற்கே இருந்த

பகுதிகளின் மிகப் பெரும் பகுதியை அதன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. இது மக்களின் புரட்சி யுத்தத்தில் மற்றொரு மாபெரும் தீர்மானமான வெற்றியாக இருந்தது. கிழக்கு சீனா விலும் நியாங்சிக்கு வடக்கே மத்திய சமவெளியிலும் இருந்த எதிரியின் மிச்சசொச்ச படைகள் பின் வாங்குவதற்கு அவசரப் பட்டு நதிக்கு தெற்கே தப்பி ஓடினார்கள். இந்த முறையில், கோமிங்டாங்கின் ஆட்சி மையங்கள்-நான்சிங்கும் ஷாங்கையும்—தாக்குதலை எதிர் நோக்கி இருந்தன.

இடை காலத்தில் 1948 டிசம்பர் 5இல் இருந்து 1949ஜனவரி 31 வரையிலும், வட சீனாவில் இருந்து நான்காவது தள ராணுவமும் இரண்டாவது ராணுவப் பிரிவும் மாபெரும் பீகிங்—டியான்சின் இயக்கத்தைத் துவக்கின. இந்த இயக்கத்திற்கு முன்பு மக்கள் விடுதலை சேனை டியான்சின், பீகிங் மற்றும் ஷாங்சியாகோவ் போன்ற இப்படிப்பட்ட சில தனிமைப்படுத்தப்பட்ட நகரங்களின் எதிரியைச் சுற்றி வளைத்து இருந்தது. முதலில், ஷாங்சியாகோவ் பிடிக்கப்பட்டது. பிறகு டியன்சின் நகரத்தைப் பாதுகாத்துக் கொண்டிருந்த எதிரி துருப்புக்களின் தளபதி சென்சாங் சியேவினால் அந்த நகரத்தை அமைதியான முறையில் விடுதலை செய்வது செய்வது பற்றிய ஆலோசனை நிராரிக்கப்பட்ட பிறகு, மக்கள் விடுதலை சேனை டியன்சின்னுக்கு எதிராக பொதுவானதொரு முன்னேறித் தாக்குதலை ஆரம்பித்தது. வட சீனானவில் முதல் தொழில் நகரமும் வியாபார நகரமும் ஆன டியன்சின்னை முற்றிலும் விடுதலை செய்வதற்கு இரண்டு நாட்களைக் காட்டிலும் அதிக காலம் பிடிக்கவில்லை. இந்த நிகழ்ச்சி ஜனவரி 15இல் நடைபெற்றது. 1,30,000 த்திற்கும் அதிகமான பிற்போக்கு கோமிங்டாங் துருப்புகள் விரட்டியடிக்கப் பட்டு, சென் சாங்சியே கைதியாக பிடிக்கப்பட்டான். ம்றுபுறத்தில் பூடிசோ—இ தலைமையின் கீழ் பீகிங்கை பாதுகாத்துக் கொண்டிருந்த 2,00,000 எதிரி துருப்புக்கள் மக்கள் விடுதலை சேனையால் அமைதியான முறையில் புனரமைப்பதற்கான ஆலோசனையை ஏற்றுக் கொண்டன. சீனாவின் புராதன தலை நகரான பீகிங்கின் விடுதலை, 1949 ஜனவரி 31-இல் அறிவிக்கப் பட்டது. பீகிங் டியன்ட்சின் இயக்கத்தில், புனரமைக்கப்பட்ட துருப்புக்களோடு சேர்த்து செயலற்றதாக செய்யப்பட்ட எதிரி துருப்புக்களின் மொத்த எண்ணிக்கை 5,20,000த்தை எட்டிப் பிடித்தது.

பீகிங்கின் அமைதியான விடுதலைக்கான பேச்சு வார்த்தைகள் மக்கள் விடுதலை சேனை அந்த நகரத்தை முற்றுகையிட்ட உடனேயே ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், டியன்சின்னின் விடுதலை ஏற்படும் தருவாய் வரையிலும் பீகிங்கில் இருந்த எதிரி துருப்புகள் அவைகளின் அமைதியான புனரமைப்பின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதற்கு முன்பின் முரணற்ற முறையில் மறுத்து வந்தன. மக்கள் விடுதலை சேனையின் பிரம்பாண்டமான வலிமையின் காரணமாகவும், டியான்சின்னின் துரிதமான விடுதலையின் காரணமாகவும், எதிரி துருப்புகளின் அதிகாரங்கள் மற்றும் ஜவான்களின் குறைவான தெம்பின் காரணமாகவும் மற்றும் பீகிங்கில் இருந்த பரவலான வெகு ஜனங்களால் சமாதானத்திற்காக உறுதியான ஆதரவு கொடுக்கபட்டதின் காரணமாகவும் பீகிங்கின் அமைதியான விடுதலை நிகழ்ச்சி போக்கில் உருவாக்கப்பட்டது. கட்சி ஆதரித்துப் பேசி வந்திருந்த சமாதான பூர்வமான முறைகளால், யுத்தத்தை முடிவு கட்டும் கொள்கையின் மூலம் மாபெரும் வெற்றியாக பீகிங்கின் சமாதான பூர்வமான விடுதலை இருந்தது. யாங்சிக்கு தெற்கே இருந்த பகுதிகளில் விடுதலைக்கும் மற்றும் இதர பகுதிகளின் விடுதலைக்கும் இந்த வெற்றிப் பாதையைச் சுற்றிக் காட்டிற்று.

மூன்று பெரிய இயக்கங்களின் முடிவின் தருவாயில், மக்கள் விடுதலை சேனை 15,00.000 கோமிங்டாங் அதிர்ச்சி துருப்புகளை நொறுக்கித் தள்ளி இருந்தது. மற்றும் வடகிழக்கு சீனா முழுவதையும் வட சீனாவின் மிகப் பெரும் பகுதியையும் கீழ் யாங்ட்சியின் வடக்கிழக்கிலிருந்த பரந்த பகுதிகளையும் விடுதலை செய்தது. இந்த முறையில் தீர்மானமானதொரு ராணுவ வெற்றியை பெற்றிருந்தது. ஒரு அரசியல் கண்ணோட்டத்தில் இருந்தும், பொருளாதார கண்ணோட்டத்தில் இருந்தும், கோமிங்டாங் பிளவுபட்டும், பிய்ந்து போயும் மற்றும் முழுமையான வீழ்ச்சியின் விளிம்பிலும் இருந்தது. விவகாரங்களின் இப்படிப்பட்டதொரு நிலை நாடு முழுவதையும் விடுதலை செய்வதற்கு யாங்ட்சி நதியைக் கடந்து மக்கள் விடுதலை சேனை தெற்கு நோக்கி வேகமாக செல்வதற்கு மிகவும் சாதகமாக இருந்தது. கோமிங்டாங்கின் எஞ்சியிருந்த துருப்புகளுக்கு எதிராக ஒரு சில, பெரும் அளவிலான முன்னேறித் தாக்குதல்களால், கோமிங்டாங்கின் பிற்போக்கு ஆட்சி இயந்திரம் முழுவதும் நொறுக்கித் தள்ளப்படும் என்பது பூரணமாக தெளிவாக இருந்தது.

கோமிங்டாங் ஆட்சியின் நெருக்கடி பிற்போக்குவாதிகளின் அணிகளின் மிக அதிகமான முரண்பாடுகளை தோற்றுவித்தன. ஹோப்பெய், சாகார், ஷாங்டுங், குவாங்டுங், கியாங்சி, குவாங்சி மற்றும் ஹுன்னான் ஆகிய பிரதேசங்களின் ஸ்தல கோமிங்டாங் ராணுவ தலைவர்கள் சுயபாதுகாப்பிற்காக தங்களுடைய சொந்த ஏரியாக்களில் அறைகுறை சுதந்திரத்தை வைத்துக் கொள்வதற்கு நம்பி இருந்தார்கள். மற்றும் இந்த அறைகுறை சுதந்திரத்தின் காரணமாக அமெரிக்க உதவியை பெருவதையும் நம்பி இருந்தார்கள். ஹுசியின் ஆதரவோடும் பல கோமிங்டாங் பெரும் புள்ளிகளின் ஆதரவோடும் 1948 வசந்த கூட்டப் பட்டிருந்த போலி தேசிய சட்டசபையில் லிடிசங்-ஜென் உப தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனினும்,சியாங்கை-ஷேக்கின் கட்டாய ஒப்வு, கோமிங்டாங்கின் சீர்குலைவை மட்டுமே வேகப்படுத்தும் என்பதை அமெரிக்க அரசாங்கம் உணர்ந்தது. அது சியாங்கை-ஷேக்கை ஆதரிக்காமல் இருந்தால் வேறு யார் அதை ஆதரிப்பார்கள்? இந்த கேள்விக்கு அமெரிக்க அரசாங்கத்திடம் திட்டவட்டமான பதில் இல்லை. அல்லது கோமிங்டாங் பிற்போக்கு வாதிகள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்க வேண்டுமா அல்லது சமாதான பேச்சு வார்த்தை களுக்கு கேட்க வேண்டுமா என்பதையும் அதனால் தீர்மானிக்க முடியவில்லை. இந்த முறையில், கோமிங்டாங் பிற்போக்கு அரசரங்கத்தின் சீர்குலைவினாலும் நொறுங்குதலாலும் சீனாவின்பால் அமெரிக்க அனுஷ்டித்த கொள்கையையும் முற்றிலும் சூன்யமாக இருந்தது.

இத்தகைய சிக்கலான சூழ்நிலைமைகளின் கீழ் சியாங்கை-ஷேக் 1949 புத்தாண்டு தினத்தில், சமாதனத்திற்கு வேண்டி ஒரு செய்தியை விடுத்தான். சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்காக பின்வரும் நிபந்தவைகளை ஒரு அடிப்படையாக சீனமக்களுக்கு பிரேரபிதித்தான். பெரும் நிலச்சுவான்தார்கள் மற்றும் பெரு முதலாளி வர்க்கம் ஆகியோரின் அரசு அதிகாரத்தை வைத்திருப் பது, கோமிங்டாங் பிற்போக்கு வாதிகளின் போலி ஆட்சியின் நியாயத்தன்மையையும் மற்றும் போலி அரசியல் சட்டத்தின் நியாயத் தன்மையையும் அங்கீகரித்தல்; பிற்போக்கு கோமிங் டாங் ராணுவத்தை அப்படியே வைத்திருப்பது முதலியன.

புரட்சி படைகளை மிதித்துத் தள்ளும் நோக்கோடு புரட்சி படைகளின் மீது மீண்டும் புதுப்பிக்கப்படும் ஒரு தாக்குதலுக் காக தயாரிப்புகளைச் செய்வதற்கு சியாங்கிற்கு சாத்தியமாக

இருப்பதற்கு ஒரு குறுகிய கால இடைவெளியைப் பெறுவதை இத்தகைய அப்பட்டமாக குறிக்கோள் கொண்டிருந்தன. ஜனவரியில், நடப்பு நிலைமைபற்றிய ஒரு அறிக்கையில் சியாங்கை-ஷேக்கின் நிபந்தனைகள் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதை குறிகோளாக கொண்டிருந்தன என்றும், எனவே அந்த நிபந்தனைகள் இல்லவே இல்லை என்றும் தோழர் மாசேதுங் சுட்டிக் காட்டினார். ஒரு குறுகிய காலத்திற்குள் பிற்போக்கு கோமிங்டாங் அரசாங்கத்தின் எஞ்சியிருந்த ஆயுத படைகளை முற்றிலும் அழித்தொழிப்பதற்கு திறமை வாய்ந்ததாகவும், முற்றிலும் அழித்தொழிப்பதற்கு முழுமையாக நியாயப்படுத்தக் கூடியதாகவும் ஆன நிலைமையில் சீனமக்கள் விடுதலை சேனை இருந்த போதிலும் சீனக் கம்யூனிஸ்டு கட்சி நான்கிங்கில் இருந்த கோமிங்டாங் அரசாங்கத்தோடும் மற்றும் ஸ்தல கோமிங்டாங் அரசாங்களோடும், ராணுவ கோஷ்டிகளோடும் பின்வரும் எட்டு நிபந்தனைகளின் அடிப்படையில் சமாதானம் பற்றி யுத்தத்தின் முடிவை வேகப்படுத்தும் பொருட்டும் உண்மையான சமாதானத்தை எய்தும் பொருட்டும் மற்றும் மக்களின் வேதனைகளை நீக்கும் பொருட்டும் சீனக்கம்யூனிஸ்டு கட்சி அமைதிக்கான பேச்சு வார்த்தை நடத்த விரும்பிக் கொண்டிருந்தது.

1. யுத்த குற்றவாளிகளைத் தண்டிப்பது; 2. போலி ஆட்சியின் நியாத் தன்மையை உதறித்தள்ளுகல்; 3. போலி அரசியல் சட்டத்தை ஒழித்தல்; 4. சகல பிற்போக்கு துருப்புகளும் ஜனநாயக கோட்பாடுகளின் அடிப்படையில் புனரமைத்தல்; 5. அதிகார வர்க்க மூலதனத்தைப் பறிமுதல் செய்தல்; 6. விவசாய சீர்திருத்ததை அமல் நடத்துதல்; 7. தேசிய நலன்களைக் காட்டிக் கொடுக்கும் உடன்பாடுகளை ரத்து செய்தல் மற்றும் 8. பிற்போக்குப் பேர்வழிகள் பங்கு கொள்ளாத ஒரு அரசியல் கலந்தாலோசனை மகாநாட்டை கூட்டுவதும் மற்றும் பிற்போக்கு கோமிங்டாங் நான்கிங் அரசாங்கம் மற்றும் எல்லா மாவட்டங்களிலும் இருந்த அதனுடைய கீழ்மட்ட அரசாங்கங்கள் ஆகியவற்றின் சகல அதிகாரத்தையும் மேற் கொள்ளும் ஒரு ஜனநாயக கூட்டு அரசாங்கத்தை நிலைநாட்டுதல். இத்தகைய எட்டு நிபந்தனைகள் நிறைவேற்றப்படுவதினால் மட்டுமே உண்மையான சமாதானம் இருக்க முடியும் என்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சி கருதிற்று. இத்தகைய நிபந்தனைகள் கோமிங்டாங் பிற்போக்குவாதிகளால் நிராகரிக்கப்படுமேயானால், அவர்கள் விரும்பும் 'சமாதானம்' என்பது ஒரு மோசடியே தவிர வேறு எதுவுமல்ல என்பதை நிரூபிக்கும்.

எதிர்பார்க்கபட்டது போல் இத்தகைய எட்டு நிபந்தனைகளைக் கொண்ட பிரேரேபணையால், சியாங்கை-ஷேக்கின் ''சமாதான முன்னேறி தாக்குதல்'' என்பது எப்படிப்பட்டதாக இருந்தது என்பதை தோலுரித்துக்காட்டப்பட்டிருந்தது. ஜனவரி 21-இல் அமெரிக்காவின் ஆலோசனையின் பேரில், ''அரசு விவகாரங்களை கவனிப்பதற்கு சில கராணங்களால் முடியாமல் இருப்பதாக கூறி ''அவருடைய ஒய்வெடுத்தலை சியாங்கை ஷேக் அறிவித்து, அவருடைய சார்பில், செயல்படும்படி ''உப தலைவன்'' லிடிசங்-ஜென்னிடம் அவனுடைய வேலைகளை ஒப்படைத்தான். இது உண்மையிலேயே அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட ''வேலைப் பிரிவினை'' ஆகும். லிடிசங்-ஜென் இப்பொழுது ''அமைதியை உண்டாக்குபவராக'' நடித்துக் கொண்டிருந்தமையால் சியாங்கை-ஷேக் திரைக்கு பின்னால் இருந்து கொண்டு யுத்த தயாரிப்புகளைச் செய்ய முடியும். அவனுடைய ''பதவியை மூடுவதற்கு'' முன்பு சியாங்கை-ஷேக் எதிர் புரட்சி யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு புதிய ஏற்பாடுகளைச் செய்திருந்தான். மற்றும் அவனுடைய கையாட்களைப் பூக்கியன், கியாங்சி, குவாங்டுங் மற்றும் செச்சுவான் ஆகிய இடங்களில் பதவியிலும் அமர்த்தி இருந்தான். வெய்டாவோ-மிங்கை அகற்றுவதற்கு தைவான் மாகாணத்தின் ஆளுநராக சென் கெங்கை அவன் நியமித்து இருந்தான். கோமிங்டாங் அரசாங்கத்தின் கைவசமிருந்த தங்க கட்டிகளின் பகுதிகளையும் வெள்ளிக் கட்டிகளின் பகுதியும் தைவானுக்கும், அமாய்க்கும் அனுப்பப்பட்டு இருந்தன. மற்றும் தைவானில் இருந்த அரசு கருவூலமும் ஆயுதகளவாட குவியல் அணைத்தும் சியாங்கின் சொந்த கட்டுப்பாட்டின் கீழ்வைக்கப்பட்டன. மேலும், தொடர்ந்து எதிர்ப்பை நடத்துவதற்கு தென்மேற்கு மாகாணங்களில் பிற்போக்கு சக்திகளை ஒன்று திரட்டும்படி அவன் சாங்சுன்னுக்கு உத்தரவிட்டிருந்தான். சிக்கியாங்கில் அவனது சொந்த ஊரான பென்குவாவில் 'ஒய்வில்' வசித்துகொண்டிருந்த சியாங் யுத்தத்திற்கான அதிக வெறித்தனமான தயாரிப்புகளைச் செய்தான். அவனுடைய சிதறடிக்கப்பட்ட துருப்புகளை மீண்டும் புதுப்பிக்கும் நோக்கத்தில், 25.00,000 புதிய ஆட்களைச் சேர்ப்பதற்கான ஒருகுற்றரீதியான திட்டத்தை உருவாக்கும் அளவிற்குகூட அவன் போய்க் கொண்டிருந்தான். சுருக்கமாகச் சொன்னால், கோமிங்டாங் அரசாங்கத்தின் மீது அதன் நதிகள் மற்றும் ராணுவத்தின் மீதும் சியாங்கை-ஷேக் இன்னும்உண்மையான கட்டுப்பாட்டைப் பிரயோகித்துக்கொண்

டிருந்தான்.

மறுபுறத்தில், லிடிசங்-ஜென் சமாதான பேச்சு வார்த்தை களுக்கு அடிப்படையாக தோழர் மாசே-துங்கினால் முன்வைக்கப் பட்ட எட்டு நிபந்தனைகளையும் ஒப்புக் கொள்வதாக பாசாங்கு செய்தான். அந்த அடிப்படையில், கட்சியின் மத்தியக் கமிட்டி இத்தகைய பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு தோழர் சூ என்-லாயினால் தலைமை தாங்கப்பட்ட ஒரு தூது கோஷ்டியை அமைப்பதற்கு தீர்மானித்தது. இந்தப் பேச்சு வார்த்தைகள் ஏப்ரல் 1இல் ஆரம்பமாயிற்று. பிற்போக்கு நான்கிங் அரசாங்கம் எதிர் புரட்சி உள்நாட்டு யுத்தத்தை ஆரம் பிப்பதற்கு அரசாங்கம் மட்டுமே பொறுப்பாக இருந்தமையால், சீன மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு உள்ள உரிமையை வெகுகாலமாகவே அது இழந்து விட்டது. எனினும், சமாதான பேச்சு வார்த்தைகளில் பங்கெடுப்பதற்கு பிரதிநிதிகளை அனுப்பு வதற்கு அது அனுமதிக்கப்பட்டிருந்தது. ஏனெனில், அது இன்னும் சில பிற்போக்கு ஆயுத படைகளை அதன் வசம் வைத்துக் கொண்டிருந்தது. அதனுடைய எஞ்சிய படைகள் இனி எந்த விதமான எதிர்ப்பினையும் கொடுக்க முடியாது என்பதனை அது உணர்ந்திருந்தால் மற்றும் அதன் விளைவாக எட்டு நிபந்தனை களின் அடிப்படையில் பேச்சு வார்த்தைகளின் மூலம் உடன்பாடு காணுவதற்கு ஒப்புதல் தெரிவித்திருந்தால், அப்பொழுது மக்கள் குறைவான கஷ்டத்தையே அனுபவித்திருப்பார்கள்; மற்றும் மக்களின் புரட்சி லட்சியம் பலனடைந்திருக்கும்.

அரை மாதம் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று, இறுதியில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதி கோஷ்டி உள்நாட்டு சமாதானம் பற்றி இறுதியாக திருத்தப்பட்ட உடன்பாட்டை முன் வைத்து, இந்த உடன்பாடு எட்டு நிபந்தனைகளை அடிப் படையாக கொண்டிருந்தது. உடன்பாட்டில் உள்ளடங்கி இருந்த யுத்த குற்றவாளிகளைக் கண்டிப்பது சம்பந்தமான முதல் பிரிவு "சரியானதிற்கும் தவறானதிற்கும் இடையே சரியாக தேர்ந்தெடுப்பதின் மூலம், தாங்கள் உண்மையிலேயே மன்னிப்பு கோருவதை நிரூபிக்கும் எல்லா யுத்த குற்றவாளிகளும் மற்றும் விடுதலை யுத்த லட்சியத்திற்கு பலனளிக்கும் செயல்களைச் செய்யும் எல்லா யுத்த குற்றவாளிகளும் மற்றும் உள்நாட்டு பிரச்சினைகளைச் சமாதான பூர்வமாக தீர்வுகாணுவதற்கு வசதி செய்யும், எல்லா குற்றவாளிகளும், யுத்த குற்றவாளிகளின் பட்டியலில் இருந்த பெயர் அகற்றப்பட்டு லேசான தண்டனை

கொடுக்கப்படுவார்கள்.'' என்று வகை செய்யப்பட்டிருந்தது. சியாங்கை-ஷேக்கையும் அவனது விடாக்கண்டர்களான உடந்தையாளர்களையும் தவிர, சகல யுத்தக் குற்றவாளிகளும் பாராட்டுக்குரிய சேவைகளை செய்வதினால் அவர்களது குற்றங் களுக்காக மன்னிக்கப்படுவதை இந்த மிதமிஞ்சிய தாராளமான நிபந்தனை சாத்தியமாகச் செய்தது. புதியதொரு வாழ்க்கைக்கு திரும்புவதற்கு சீன மக்களால் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட கடைசி சந்தர்ப்பமாக இது இருந்தது. எனினும், நான்கிங் அரசாங்கத்தினால் ஏப்ரல் 21இல் இந்த உடன்பாடு நிராகரிக்கப் பட்டது.

அவர்கள் ஆரம்பித்த எதிர் புரட்சி யுத்தத்தை இறுதி வரை யிலும் நடத்துவதற்கு கோமிங்டாங் பிற்போக்குவாதிகள் தீர்மானித்திருந்தார்கள் என்பதற்கு இந்த நிராகரிப்பு தெளி வான சாட்சியமாக இருந்தது. இந்தமுறையில், கோமிங்டாங்கின் சமாதான சூழ்ச்சி முற்றிலும் அம்பலப்படுத்தப்பட்டிருந்தது.

1949 ஏப்ரல் 21இல், நாடு முழுவதையும் விடுதலை செய்யும் பொருட்டு சீனமக்கள் விடுதலை சேனை யாங்ட்சியின் குறுக்கே யும் மற்றும் வடமேற்கு சீனாவை நோக்கியும் முன்னேறிற்று- யுத்தத்தை நிறுத்துவதற்கு விரும்பிக் கொண்டும் மற்றும் சமா தான முறைகளால், ஒரு தீர்வு காணுவதற்கு வரத் தயாராகவும் இருந்த ஸ்தல கோமிங்டாங் அரசாங்கங்களோடும், ராணுவ கும்பல்களோடும் மக்கள் விடுதலை சேனை பிராந்திய சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கு சம்மதம் தெரிவித்தது 22 ஆண்டுகளாக கோமின்டாங்கின் பிற்போக்கு ஆட்சியின் மையமாகத் திகழ்ந்த நான்கிங்கை விடுதலை செய்யவும், யாங்ட்சி நதியைக் கடப்பதற்கும் வெல்ல முடியாத மக்கள் விடுதலை சேனைக்கு மூன்று நாட்களுக்கும் அதிகமான போராட்டம் தேவைப்படவில்லை. நான்கிங்கின் விடுதலை, பிற்போக்கு கோமிங்டாங் ஆட்சியின் முடிவைக் குறித்தது. பிறகு, மக்கள் விடுதலை சேனை இரண்டு போராட்ட அரங்களின் (யாங்ட்சியின் தெற்கேயும் மற்றும் வடமேற்கே யும்) வழியாக எதிரியின் மிச்ச சொச்சங்களைச் சுற்றி வளைத்துக் கொண்டு வீரதீரமாக முன்னோக்கிச் சென்றது. தையுவான், ஹாங்சோவ், ஊகான், சீயான், ஷாங்காய், லான் சோவ், கான்டன், குவைய்யாங், குவைய்லின், சங்சிங் மற்றும் செங்டு ஆகிய நகரங்கள் அடுத்தடுத்து விடுதலை செய்யப்பட்டன. ஹுன்னான், சுய்யுவான், சிக்கியாங், சிகாங், மற்றும் சின்னான்

வெற்றிக்கு பிறகு கணிசமான நீண்டதொரு காலத்திற்கு எல்லா பிரச்சினைகளையும் பரிசீலிப்பதில் கட்சி ஆரம்பித்துச் செல்ல வேண்டும்.

முதலாவதாக, தேசிய பொருளாதாரத்தின் மொத்த உற்பத்தியில், சுமார் பத்து சதவீதமாக மட்டுமே அதனுடைய உற்பத்தி இருந்த போதிலும், சீனாவின் நவீன தொழில் மிதமிஞ்சிய அளவிற்கு குவிந்து கிடந்தது. மிகமிக முக்கியமான மற்றும் மிகமிக பெரிய மூலதனத்தின் தொகை சீன அதிகார வர்க்க-முதலாளிகளின் கரங்களில் இருந்து கொண்டிருந்தது. புரட்சியின் வெற்றிக்குப் பிறகு, இந்த மூலதனம் பறிமுதல் செய்யப்பட்டு பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின் கீழிருந்த மக்கள் குடியரசிற்கு மாற்றப்பட்டிருந்தமையால், சகல கேந்திர மான தொழில்களும் மக்கள் குடியரசின் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டு, தன்மையின் சோஷலிசமாக இருந்த பொருளா தாரத்தின் ஒரு தலைமை தாங்கும் பகுதி, ஒட்டு மொத்தமாக தேசிய பொருளாதாரத்தில் நிலைநாட்டப்படும். இந்த அம்சத்தை அலட்சியப்படுத்தும் எவரும் வலதுசாரி சந்தர்ப்பவாத தவறுகளைச் செய்வதற்கு இரையாகி இருப்பார்கள்.

இரண்டாவதாக, சிதறுண்டு கிடந்த விவசாயமும் கைத் தொழில்களும் தனியார் உடைமையாக அடிப்படையாக கொண்டி ருந்தன. இவை தேசிய பொருளாதாரத்தின் சுமார் 90% ஆக கணக்கிடப்பட்டிருந்தன. மேலும், இவை கணிசமான நீண்டதொரு காலகட்டத்திற்கு அவற்றின் அடிப்படை யான குணம்சங்களை இன்னும் வைத்துக் கொண்டிருக்கும். இந்த அம்சத்தை புறக்கணிக்கும் எவரும் இடதுசாரி சந்தர்ப்பவாத தவறுகளைச் செய்வதற்கு இரையாகி இருப்பார்கள். மறுபுறத் தில், விஷயங்களை நழுவ விடுவதில் தவறாக இருக்கும். ஏனெனில், தனியார் உடைமையின் மீது அடிப்படையாகக் கொண்டிருந்த சிதறுண்டு கிடந்த விவசாயமும், கைத்தொழில் களும் நவீனமயமாக்கும் திசைவழியாலும், கூட்டுமயமாக்கும் திசைவழியாலும் எச்சரிக்கையாகவும் படிப்படியாகவும் என்றும் சுறுசுறுப்பாகவும் அபிவிருத்தி அடைவதற்கு தூண்டப்பட வேண்டும்; மற்றும் தூண்டப்படவும் முடியும். ஒரு தனிப்பட்ட பொருளாதாரத்தை ஒரு கூட்டு பொருளாதாரமாக படிப்படி யாக மாற்றுவதில், உழைக்கும் மக்களை வழி காட்டும் ஒரு நோக்கத்தோடு கூட்டுறவுப் பொருளாதாரத்தை அமைப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கும்

மாபெரும் முயற்சிகளை செய்வது கட்டாயமாக இருந்தது. இந்த வழியில் மட்டுமே சோஷலிச சமுதாயத்திற்கு படிப்படியாக மாறிச் செல்வதும் மற்றும் அரசு அதிகாரத்தின் பாட்டாளி வர்க்கத் தலைமையைக் கெட்டிப்படுத்துவதையும் அமலாக்க முடியும். இந்த அம்சத்தைப் புறக்கணிக்கும் எவரும் வலதுசாரி சந்தர்ப்பவாத தவறுகளைப்புரிவதற்கு இரையாகி இருப்பார்கள்.

மூன்றாவதாக,சீனாவின் தனியார் முதலாளித்துவம் இதைப் போலவே, கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒரு சக்தியாக இருந்தது. சீனாவின் தேசிய முதலாளி வர்க்கமும் அதனுடைய பிரதிநிதிகளும் மக்கள் ஜனநாயக புரட்சியில் பங்கெடுத்து இருந்தமையாலும் மற்றும் சீனாவின் பொருளாதாரம் பின்தங்கி இருந்தமையாலும், புரட்சிக்கு பிறகு தேசிய பொருளாதாரத்தின் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கு,நகர்ப்புற மற்றும் கிராமப்புற முதலாளி வர்க்கத்தின் சுறுசுறுப்பான சேவை முழுமையான அளவிற்கு ஈடுபடுத்தப்பட வேண்டும். ஆனால், முதலாளித்துவம் சுயேச்சையான போட்டி மற்றும் சுயேச்சையான வர்த்தகம் ஆகியவற்றிற்கு அவை அசாதரணமான விகிதாச்சரங்களுக்கு வளர்பதினின்றும் அப்படியே வைத்திருப்பதற்கு கட்டுப்பாடு தேவைப்பட்டது. தனியார் முதலாளித்துவத்தின்பால், இந்தக் கட்டுப்படுத்தும் கொள்கை பூர்சுவா வர்க்கத்திடம் இருந்து பல்வேறு அளவுகளுக்கும் பல்வேறு வடிவங்களிலும் எதிர்ப்பினைச் சந்திக்க வேண்டி நேரிடும். அதன் விளைவாக, கட்டுப்பாடும் மற்றும் கட்டுப்பாட்டிற்கு எதிர்ப்பும் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தின் கீழ் ஒரு நாட்டிற்குள் வர்க்கப் போராட்டத்தின் பிரதான உருவமாக இருக்கும். முதலாளித்துவத்தைக் கட்டுப்படுத்துவதற்கு தேவை இல்லை என்று நினைப்பது முற்றிலும் தவறானதாக இருக்கும். இது ஒரு வலதுசாரி சந்தர்ப்பவாத கருத்தோட்டமாக இருக்கும். மறுபுறத்தில் தனியார் முதலாளித்துவத்தை மிகவும் சீக்கிரமாக ஒழிக்கப்படமுடியும் என்று நினைப்பதும் தவறானதாக இருந்தது.

அரசுடைமையான சோசலிச பொருளாதாரத்தின் கீழ் தனிப்பட்ட பொருளாதாரத்தைக்கூட்டுறவு பொருளாதாரத்தின் மூலம் மாற்றுவதும் மற்றும் தனியார் முதலாளித்துவத்தினால் மாற்றுவதும்-மக்கள் குடியரசின் ஐந்து பொருளாதார பிரிவுகளுக்கும் இடையே உள்ள உறவு இதுவாக இருந்தது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் தொழிலாளி வர்க்கத்தின்

அரசியல் தலைமை, மற்றும் தேசிய பொருளாதாரத்தில் தொழிலாளி வர்கத்தினால் கட்டுப்படுத்தப்பட்ட அரசுடைமை யான சோசலிச பொருளாதாரத்தின், தலைமை தாங்கும் நிலை மையும் சோஷலிசத்திற்கு சீனவின் சீரான மாறிச் செல்லுதலை உறுதிப்படுத்தும்.

பின்னர், பொதுவான திட்டத்தில் நிர்ணயம் செய்யப்பட்ட பொருளாதார கொள்கைக்கான அஸ்திவாரத்தை இத்தகைய கோட்பாடுகள் போட்டிருந்தன.

இறுதியாக, நாடு தழுவிய வெற்றியின் சாதனை பத்தாயிரம் லி நீண்டதொரு அணி வகுப்பில் முதல் அடியாக மட்டுமே இருக்கும் என்றும் மற்றும் இன்னும் முன்னேக்கிச் செல்ல வேண்டிய பாதை மிகவும் நீண்டதாக இருக்கும் என்றும், செய்ய வேண்டிய வேலை மிகவும் அதிகமானதாகவும், மிக கடினமான தாகவும் இருக்கும் என்றும், இக்கூட்டத்தில் சுட்டிக் காட்டப் பட்டது. புதிய ஜனநாயக புரட்சியின் வெற்றிக்கு பிறகு, சீனவில் இரண்டு அடிப்படையான முரண்பாடுகள், சர்வதேச துறையில், சீன மக்களுக்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் இடை யேயுள்ள முரண்பாடும் மற்றும் நாட்டிற்குள் பாட்டாளி வர்க்கத் திற்கும் பூர்சுவா வர்க்கத்திதிற்கும் இடையே உள்ள முரண்பாடும் தொடர்ந்து நீடிக்கும். ஆகவே, கட்சியின் சகல உறுப்பினர்களும் அவர்களது அரசியல் கண்காணிப்பை உயர்த்துவதற்கும் நிதான மான சிந்தனையை வைத்திருப்பதற்கும், சகல கஷ்டங்களையும் நன்மைகளையும் தாங்ககூடியதொரு அதிகாரவர்க்கமற்ற ஒரு போக்கினையும் வேலை செய்யும் பாணியையும் வைத்திருக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டிருந்தார்கள். ஆயுதமேந்திய சகல எதிரிகளையும் நொறுக்கி தள்ளிய பிறகு, ஆயுதமற்ற எதிரி கள் இன்னும் இருப்பார்கள். அவர்கள் ஒரு வழியில் வெறித்தன மானதொரு போராட்டத்தை தவிர்க்கமுடியாதபடி நடத்துவார் கள். ஆகவே, இத்தகைய எதிரிகளை எந்தவிதத்திலும் குறைவாக மதிப்பிடக்கூடாது. கட்சி உறுப்பினர்களும் பூர்சுவா வர்கத்தின் ''சர்க்கரை தடவிய குண்டுகளுக்கு'' எதிராக இடைவிடாத கண் காணிப்பை வைத்திருக்கும்படி அறை கூவி அழைக்கப்பட்டு இருந்தார்கள். மற்றபடி அவர்களது கோட்பாடற்ற முகஸ்துதி யினால் அவர்கள் பலகீனப்பட்டுடிருப்பார்கள், அல்லது ஊழலுக்கு இரையாகி இருப்பார்கள் என்றும் பூர்சுவா வர்க்கத்தின் ''சர்க்கரை தடவிய குண்டுகளுக்கு'' எதிராக இடைவிடாத கண் காணிப்பை வைத்திருக்க வேண்டுமென்று கட்சி உறுப்பினர் களும் அறைகூவி அழைக்கப்பட்டிருந்தார்கள்.

புரட்சிக்கு பிறகு நாட்டில் இருக்கும் பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளை பற்றியும் இந்தக் கூட்டத்தில் ஒரு அலசி ஆராய்ந்தல் செய்யப்பட்டது. ஒரு தேசிய பொருளாதாரத்தில் ஒரு சோஷலிச தன்மைவாய்ந்த அரசுடைமையாக்கப்பட்ட பொருளாதாரத்தில் தலைமை தாங்கும் நிலைமை வலியுறுத்திக் கூறப்பட்டது. மற்றும் பல்வேறு பொருளாதார பகுதிகளின் பால், கட்சி அனுஷ்டிக்கபடவிருந்த தொடர்ச்சியான திட்டவட்டமான கொள்கைகளும் வரையறுக்கப்பட்டிருந்தன. இந்த அடிப்படையில்தான், சீனா சோஷலிஷத்திற்கு மாறிச் செல்வதற்கான அடிப்படையிலான கோட்பாடுகள் உருவாக்கப்பட்டிருந்தன.

**4. தொழிலாளி வர்க்கத்தினால் தலைமை தாங்கப்பட்ட மக்கள் ஜனநாக சர்வாதிகாரத்தின் கீழ் அரசு பற்றிய கட்சியின் தத்துவம். சீன மக்கள் அரசியல் கலந்தாலோசனை மாநாட்டை கூட்டுவதும் பொதுவான திட்டத்தை உருவாக்குவதும். சீன மக்கள் குடியரசை நிறுவதல். சீன புரட்சியின் வெற்றியின் உலக முக்கியத்துவம்.**

1949 இலையுதிர்காலக் காற்று, விழுந்துவிட்ட இலைகளைப் பெருக்கித் தள்ளுவது போல் வேகமாகவும் எதிர்க்க முடியாத படியும் கோமிங்டாங் பிற்போக்குவாதிகளின் எஞ்சி இருந்த ராணுவ படைகளை மக்கள் விடுதலை சேனை துடைத்து எறிந்தது; நாடு முழுவதிலும் புரட்சி அடிப்படையானதொரு வெற்றியைப் பெற்றிருந்தது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் ஜனநாயக கட்சிகளும் வாழ்க்கையில் பல்வேறு துறைகளிலும் இருந்து வந்த பிரதிநிதிகளும் சீன மக்கள் அரசியல் கலந்தாலோசனை மாநர்ட்டைக் கூட்டுவதற்கான தயாரிப்பு வேலையிலும் மற்றும் சீன மக்கள் குடியரசை நிறுவுவதற்கான தயாரிப்பு வேலையிலும் பங்கு கொண்டார்கள். நிலைமை பல கேள்விகளைத் தோற்றுவித்தது. இக்கேள்விகளுக்கு சீனக் கம்யூனிஸ்டு கட்சி பதில் கூற வேண்டியிருந்தது. சீன மக்கள் குடியரசு எந்த வகைப்பட்ட அரசாக இருக்கும்? இப்படிப்பட்ட ஒரு அரசில் பல்வேறு வர்க்கங்களின் நிலைமைகளும் பரஸ்பர உறவுகளும் எப்படி இருக்கும்? மற்றும் இறுதியாக அதனுடைய வருங்காலம் எப்படி இருக்கும்? இத்தகைய கேள்விகளுக்கு 1949

ஜூலை 1இல் பிரசுரிக்கப்பட்ட ''மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம்'' என்று தலைப்புக் கொடுக்கப்பட்டிருந்த அவரது கட்டுரையில் தோழர் மாசே-துங்கினால் திருப்திகரமான முறையில் பதில்கள் கொடுக்கப்பட்டிருந்தன.

தன்மையில் சீன மக்கள் குடியரசு, கம்யூனிஸ்ட் கட்சியின் மூலம் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் ஒரு மக்கள் ஜனநாயக சர்வாதிகாரமாக இருக்கும்; மற்றும் அது தொழிலாளிகள் விவசாயிகளின் கூட்டணியின் மீது அடிப்படையாக கொண்டிருக்கும். எல்லையற்ற கஷ்டத்தின் வழியாக, கடந்து சென்ற பிறகு மட்டுமே, சீன மக்கள் இந்தப் பாதையை கண்டுபிடித்திருந்தார்கள். 1840ஆம் ஆண்டு அபினி யுத்தத்தில் சீனாவின் தோல்விக்குப்பிறகு, சீன மக்களிடையே இருந்த முற்போக்காளர்கள் மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளில் இருந்த தேசிய விடுதலைக்கான பாதையைக் கற்றுக்கொள்வதற்கு தங்களை ஈடுபடுத்தினார்கள். அந்த காலத்தில் இருந்து 1911ஆம் ஆண்டு புரட்சிக்குப் பிறகு ஒரு சில ஆண்டுகள் வரையிலும் ஒரு பூர்சுவா குடியரசு பாணிக்கு ஏற்ற முறையிலும் மற்றும் முதலாளித்துவ திசை வழியிலும் சீனாவிற்கு ஒரு பரிகாரம் காணுவதற்கு அவர்கள் முன்பின் முரணற்ற முறையில் தேடிப் பார்த்தார்கள். ஆனால் சீனாவில் ஒரு பூர்சுவா குடியரசையும் மற்றும் ஒரு முதலாளித்துவ சமுதாயத்தையும் நிலை நாட்டுவது சாத்தியமற்றது என்பதை அது நிரூபித்திருந்தது. ஏனெனில், சீன பூர்சுவா வர்க்கம் அந்நிய ஏகாதிபத்தியத்தின் மீதும் உள் நாட்டு நிலப் பிரபுத்துவத்தின் மீதும் வெற்றியை நோக்கி மக்களை வழி நடத்தி செல்வதற்கு சக்தி அற்றதாக இருந்தது. இதன் விளைவாக, பூர்சுவா ஜனநாயகத்திற்கான திட்டமும் ஒரு பூர்சுவா குடியரசிற்கான திட்டமும் சீன மக்களின் கண்களில் சூன்னியமானதாக ஆகி இருந்தன.

அக்டோபர் சோஷலிச புரட்சிக்குப் பிறகு, இதுவரையிலும் சீன முற்போக்குவாதிகள் முதலாளித்துவத்தின் வீழ்ச்சியைப் பற்றியும் சோஷலிசத்தின் பெருமைமிக்க வருங்காலத்தைப் பற்றியும் கவனத்தில் எடுக்க ஆரம்பிக்கவில்லை. இது சோஷலிசம்தான்—முதலாளித்துவம் அல்ல—சீனாவிற்கான பாதையாக இருக்கும் என்பதை அவர்களுக்கு புரிய வைத்தது. 1921இல், அது ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து சீனக் கம்யூனிஸ்டு கட்சி மக்கள் ஜனநாயக புரட்சியைத் தலைமைதாங்கும் பொறுப்பினை எடுத்து இருந்தது. நான்கு புரட்சிகரமான யுத்தங்களின் வழியாக கடந்து சென்ற பிறகு, மக்கள் புரட்சியின் மாபெரும் வெற்றி 1949இல் சாதிக்கப்

பட்டது. இந்த மாபெரும் வெற்றி, புதிய ஜனநாயகத்தில் இருந்து சோசலிசத்திற்கு செல்லும் பாதைதான், சீனாவின் விடுதலைக்கான ஒரே பாதை என்பதையும், மற்றும் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் உள்ள ஒரு மக்கள் குடியரசுதான் சீனாவில் அமைக்கப்பட வேண்டிய அரசின் ஒரே உருவாக இருந்தது என்பதையும் காட்டிற்று. பூர்சுவா ஜனநாயகம் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் உள்ள மக்கள் ஜன நாயகத்திற்கு வழி விட்டுக் கொடுக்கும் என்பதையும் பூர்சுவா குடியரசு மக்கள் குடியரசிற்கு வழி விட்டுக் கொடுக்கும் என்பதை யும் வரலாறு நிரூபித்திருந்தது. இந்த காரணத்திற்காக சீனாவின் மக்கள் குடியரசின் தன்மை, தொழிலாளி வர்க்கத்தினால் தலைமை தாங்கப்பட்ட மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தின் தன்மையதாகவும் தொழிலாளி—விவசாயி கூட்டணியை அடிப் படையாக கொண்டதாகவும் இருக்கும்.

மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் திட்டவட்டமானதொரு வகையைச் சேர்ந்த ஒரு வர்க்கக் கூட்டாளியாக இருக்கும். இந்த சர்வாதிகாரத்தின் அடிப்படை தொழிலாளவர்க்கத்திற்கும் விவசாயிகளுக்கும் இடையே ஒரு கூட்டணியாக இருக்கும். விவசாயிகளின் பரந்துபட்ட வெகுஜனங்கள் சோஷலிச புரட்சி யில் மிகவும் சுறுசுறுப்பானதொரு பங்கினை வகிப்பார்கள். மற்றும் சோஷலிச நிர்மாணத்தில், தொழில் அபிவிருத்திக்கான ஒரு அடிப்படையை விவசாயம் அமைத்துக் கொடுக்கும். ஆகவே, முதலாளித்துவத்தில் இருந்து சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் கால கட்டத்தில் இப்படிபட்டதொரு கூட்டணியின் மீது சார்ந்து நிற்பது அவசியமாக இருக்கும். தொழிலாளி-விவசாயி கூட்டணி இல்லாமல் சோஷலிசத்தை உருப்பெறச் செய்வது சாத்திய மற்றதாக இருக்கும்.

மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் என்பதில் உழைக்கும் மக்களுக்கும் உழைக்காமல் இருக்கும் மக்களுக்கும் இடையே, அதாவது தொழிலாளிவர்க்கத்திற்கும் தேசிய பூர்சுவா வர்க்கத் திற்கும் இடையே, ஒருகூட்டணி சேரும் மக்கள் குடியரசு; புரட்சி கரமான தளங்கள் இருந்த காலகட்டங்களைக்காட்டிலும் தேசிய பூர்சுவா வர்க்கம் மற்றும் அதனுடைய கட்சிகள் ஆகியவற்றின் மிக அதிகமான பிரதிநிதிகள் அரசாங்கத்தில் சேருவார்கள்; மற்றும் சோஷலிசத்தை நிர்மாணிப்பதில் தொழிலாளி வர்க்கத் தோடும் கம்யூனிஸ்ட் கட்சியோடும் ஒரு அரசியல் கூட்டணியைத் தொடர்ந்து வைத்திருப்பார்கள். தேசிய பூர்ஷ்வா வர்க்கம் கடந்த காலத்தில், நவீன தொழிலை அபிவிருத்தி செய்து

பழைய வகைப்பட்ட ஜனநாயக புரட்சியைத் தலைமைத் தாங்கி நடத்திற்று. மற்றும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு புதிய ஜனநாயக புரட்சியில் பங்கெடுக்கவும் செய்தது. நாடு தழுவிய வெற்றிக்கு பிறகு, அது தொழிலாளி வர்க்கத்தின் தலைமையை ஏற்றுக் கொள்வதற்கு விருப்பம் தெரிவித்தது. மேலும், இந்த வர்க்கம் மாறிச் செல்லும் கால கட்டத்தில் திட்டவட்டமான பங்கினையும் வகிக்க முடியும். ஏனெனில், நவீன விஞ்ஞானம் மற்றும் கலாச்சாரம் பற்றியும் அது கணிசமானதொரு செழுமையான அறிவைப் பெற்றிருந்தது, மற்றும் அது பெருமளவிற்கு புத்தி ஜீவிகளையும் நிபுணர்களையும் பெற்று இருந்தது. சோஷலிச புரட்சியின் போக்கில் தொழிலாளி வர்க்கத்திற்கும் பூர்சுவா வர்க்கத்திற்கும் இடையே உள்ள கூட்டணி பூர்சுவா வர்க்கத்தின் உறுப்பினர்களுக்கு போதனைக் கொடுப்பதில், மீண்டும் வார்த்தெடுப்பதில் சுறுசுறுப்பானதொரு பங்கினை வகிக்கும்.

ஆனால், தேசிய பூர்சுவா வர்க்கம் புரட்சியைத் தலைமை தாங்க முடியாது, அல்லது அரசு அதிகாரத்தில் முக்கியமான நிலைமையை வகிக்கவும் முடியாது.

மக்கள் ஜனநாயக சர்வாதிகார அரசு மக்களின்பால் ஜனநாயகத்தையும், பிற்போக்குவாதிகளின்பால் சர்வாதிகாரத்தையும் நடைமுறை படுத்தும். அது மக்களைப் பாதுகாத்து அவர்களுக்கு ஜனநாயக உரிமைகளை அளிக்கும். அவர்களுக்கு சொந்தமானதொரு அரசினால் மட்டுமே ஜனநாயக முறைகளின் மூலம் மக்கள் தங்களுக்கு தாங்களே போதனை கொடுக்கவும் மீண்டும் வார்த்தெடுக்க படவும் முடியும்; மற்றும் வெளிநாட்டு பிற்போக்குவாதிகள், சீன பிற்போக்குவாதிகள் ஆகியோரின் செல்வாக்கினை உதறித் தள்ள முடியும்; பழைய சமுதாயத்தில் இருந்து அவர்கள் பெற்றிருந்த மோசமான கருத்துக்களையும் பழக்க வழக்கங்களையும் களை எடுக்கவும் முடியும்; மற்றும் தொடர்ந்து முன்னோக்கி அணி வகுத்து செல்லவும் முடியும். விவசாயிகளின் கல்வி கடுமையானதொரு பிரச்சினையாக இருந்தது. விவசாயிகள் சிறு உடமையாளர்களாக இருந்தார்கள். சோஷலிசப் பாதையை மேற்கொள்ளும்படி அவர்களைத் தூண்டுவதற்கு ஏராளமான பொறுமையான வேலையும் ஏராளமான நேரமும் பிடிக்கும். தேசிய பூர்சுவா வர்க்கத்தின் உறுப்பினர்களுக்கு போதனைக் கொடுக்கவும் மீண்டும் வார்த்தெடுப்பதும் அவசியமானமாக இருக்கும்; மற்றும் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கு சாத்தியமாக்குவதும் அவசியமாக இருக்

கும். பின்னர், தனியார் நிறுவனங்களைத் தேசியமயமாக்குவதற்கான நேரம் வந்து சேரும் பொழுது, நன்மைக்காக முதலாளித்துவத்தை ஒழிக்கும் பொருட்டு அவர்களுக்கு போதனைக் கொடுக்கப்பட்டு மீண்டும் வார்த்தெடுக்கப்படுவார்கள்.

சீனாவில் ஏகாதிபத்திய ஏஜெண்டுகள், அதாவது நிலப்பிரபுத்துவ வர்க்கம், அதிகார வர்க்கம்-முதலாளிவர்க்கம், மற்றும் இத்தகைய இரண்டு வர்க்கங்களின் அரசியல் பிரதிநிதிகளாக இருந்த கோமிங்டாங் பிற்போக்குவாதிகள், மக்கள் ஜனநாயக சர்வாதிகார அரசில் அவர்களது அரசியல் உரிமைகளைப் பறிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். எனினும், இத்தகையவர்கள் கலக நடவடிக்கைகள் அல்லது கவிழ்ப்பு நடவடிக்கைகளில் பங்கு கொள்ளாமல் இருந்தால், அவர்களை வாழச் செய்யும் பொருட்டும் மற்றும் சுய ஆதரவுடன் கூடிய உழைப்பாளர்களாக அவர்களை உழைப்பின் மூலம் மீண்டும் வார்த்தெடுக்கச் செய்யும் பொருட்டும் அவர்களுக்கு நிலம் அல்லது வேறு கொடுக்கப்படும்.

இன்னும் ஏகாதிபத்தியவாதிகளும் உள்நாட்டு பிற்போக்குவாதிகளும் நீடித்து இருந்தமையாலும் நாட்டில் வர்க்கங்கள் இன்னும் நீடித்து இருந்தமையாலும் மக்கள் அரசு இயந்திரத்தின் அதிகாரத்தை அதிகப்படுத்துவது அவசரமானதொரு கடமையாக இருக்கும். அதாவது, மக்கள் சேனை, மக்கள்போலீஸ், மற்றும் மக்கள் நீதிமன்றம் ஆகியவற்றை பலப்படுத்துவது தேசிய பாதுகாப்பைக் கெட்டிப்படுத்து பொருட்டும், மக்கள் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டும் அவசரமானதொரு கடமையாக இருக்கும்; மற்றும் இந்த அடிப்படையில் ஒரு சோஷலிச மற்றும் கம்யூனிஸ்டு சமுதாயத்திற்குள் நிதானமாக படிப்படியாக இந்த அடிப்படையில் சீனாவை முன்னேறச் செய்வதை சாத்தியமாக்குவதும் அவசரமானதொரு கடமையாக இருக்கும். அந்த நேரம் வரும்பொழுது, வர்க்கங்கள் மறையும்; மற்றும் அரசு அதனுடைய பயனுள்ள தன்மை முடித்து விட்டிருக்கும்; ஆதலால், படிப்படியாக உதிர்ந்துவிடும்.

சர்வதேச ரீதியாக, சீன மக்கள் குடியரசு சோவியத் யூனியனோடும் மக்கள் ஜனநாயகநாடுகளோடும் மற்றும் எல்லா நாடுகளிலும் உள்ள மக்கள்களோடும் ஒன்றுபட்டு நிற்கும். அது சோவியத்யூனியனால் தலைமைதாங்கப்படும் சோஷலிசமுகாமை சார்ந்து நிற்கும். சீன மக்களுக்கு அவசியமான உண்மையான

நட்புறவும் உதவியும் இந்த முகாமில் மட்டுமே தேடப்படும்; ஏகாதிபத்திய முகாமில் தேடப்பட மாட்டாது. இரு முகாம் களுக்கு இடையே ஒரு நிலைமை, அல்லது மதில் மேல் நின்று கொண்டிருப்பது என்பது கேள்விக்கு அப்பாற்பட்டது.

ஒரு மக்கள் குடியரசை ஸ்தாபிப்பதற்கான சீனக்கம்யூனிஸ்டு கட்சியின் அடிப்படையான திட்டத்தின் வழி காட்டுதலின் கீழ் மக்களின் அரசியல் கலந்தாலோசனை மாநாடு கூட்டப்பட்டது. சீன மக்களின் தற்காலிகமான சாசனம்—பொதுதிட்டம்—உருவாக்கபட்டது; மற்றும் சீன மக்கள் குடியரசும் ஸ்தாபிக்கவும் பட்டது.

1948 மே 1-ஆம்தேதி ஆரம்பத்தில், எந்த பிற்போக்குவாதி களும் பங்கு கொள்ளாத புதியதொரு அரசியல் கலந்தாலோசனை மகாநாட்டை கூட்டுவதற்காக ஒரு அறை கூவலை கட்சியின் மத்திய கமிட்டி விடுத்திருந்தது. இந்த அறை கூவல் நாட்டில் உள்ள சகல ஜனநாயக வர்க்கங்களிடமிருந்தும் கட்சிகளிடமிருந்தும் உற்சாகமான ஆதரவைப் பெற்றிருந்தது. அதே ஆண்டு நவம்பர் 25-இல், வடகிழக்கில் இருந்த பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள், இப்படிப்பட்டதொரு மாநாட்டை கூட்டும் பிரச்சினைப் பற்றியும் மற்றும் அந்த மாநாட்டில் கொடுக்க வேண்டிய பிரதிநிதித்துவத்தின் கட்டுக்கோப்புபற்றியும் விவாதிப்பதற்காக கூடினார்கள். அப்பிரதிநிதிகள் புதிய சீனாவை நிலை நாட்டுவதற்கான அரசியல் அடிப்படையாகப் புதிய ஜனநாயகம் இருக்க வேண்டுமென்று ஒரு மனதாக ஒப்பு கொண்டார்கள்; மற்றும் இந்த புதிய அரசியல் கலந்தாலோசனை மாநாட்டில் கலந்துக் கொள்ளவிருக்கும் அனைவரும் ஏகாதிபத்தி யத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும் மற்றும் அதிகார வர்க்க முதலாளித்துவத்தையும் எதிர்ப்பவர்களாகவும் இருக்கவேண்டும். எனவே, இந்த மாநாட்டிற்கு வரும் தகுதி பெற்ற பிரதிநிதிகள் பின்வரும் ரகங்களில் இருந்து வரவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது, தொழிலாளி வர்க்கம், விவசாயிகள் குட்டி முதலாளி வர்க்கம், தேசிய முதலாளி வர்க்கம் மற்றும் பிற்போக்கு வர்க்கங்களோடு பிளவுபட்டிருந்த தேசபக்த ஜனநாயக பேர்வழிகள். பீகிங், டியன்சின், நான்கிங், ஷாங்காய் மற்றும் ஊகாங் ஆகிய நகரங்கள் அடுத்தடுத்து விடுவிக்கப்பட்ட பிறகு, எஞ்சி இருந்த கோமிங்டாங் பிற்போக்கு வாதிகளைத் துடைத்தெறிந்து மக்களின் பொருளாதாரத்தையும் கலாச்சாரத்தையும் புனரமைத்து அபிவிருத்தி செய்யும்

பொருட்டும் தேசிய பாதுகாப்பைக் கெட்டிப்படுத்தி, சீனமக்கள் குடியரசை நிலை நாட்டும் பொருட்டும் சீனமக்களின் அரசியல் கலந்தாலோசனை மாநாட்டின் முதல் கூட்டம் 1947 செப்டம்பர் 21-இல் பீகிங்கில் கூட்டப்பட்டது. மக்களின் அரசியல் கலந்தாலோசனை மாநாடு பரவலானதொரு பிரதிநிதித்துவத் தன்மை கொண்டதாக இருந்தது; தேசிய மக்கள் காங்கிரசைக் கூட்டும் வகையாலும் தேசம் முழுவதின் சித்தத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் தேசிய மக்கள் காங்கிரசின் அலுவல்களையும் அதிகாரங்களையும் பிரயோகிக்கும் தன்மைவாய்ந்ததாகவும் இருந்தது.

அந்த மாநாடு சீன மக்களின் அரசியல் கலந்தாலோசனை மாநாட்டின் பொதுவான திட்டத்தையும், மக்கள் சீன குடியரசின் மத்திய மக்கள் அரசாங்கத்தின் உறுப்புச்சட்டத்தையும் மற்றும் சீன மக்களின் அரசியல் கலந்தாலோசனை மாநாட்டின் உறுப்புச் சட்டத்தையும் நிறைவேற்றிற்று.

சீனமக்கள் குடியரசின் தன்மை தொழிலாளி வர்க்கத்தினால் தலைமை தாங்கப்படும் ஒரு மக்கள் ஜனநாயக சர்வாதிகாரமாக இருக்க வேண்டுமென்றும், தொழிலாளி-விவசாயி கூட்டணியை அடிப்படையாக கொண்டதாகவும் மற்றும் நாட்டிலுள்ள சகல ஜனநாயக வர்க்கங்களையும், எல்லா தேசிய இனங்களையும் ஒன்றுபடுத்துவதாகவும் இருக்கவேண்டுமென்றும் பொது திட்டம் ஏற்பாடு செய்திருந்தது. தேசிய பொருளாதாரத்தின் ஐந்து பிரிவுகளுக்கு இடையே உள்ள உறவு பற்றிய பிரச்சினையின் மீது அரசுடைமையான பொருளாதாரத்தின் தலைமையின் கீழ் பொருளாதாரத்தின் ஐந்து பிரிவுகளும் உழைப்பு பிரிவினையையும், உழைப்பு ஒருங்கிணைப்பையும் நிறைவேற்ற வேண்டுமென்றும் மற்றும் ஒட்டு மொத்தமாக சமூகப் பொருளாதாரத்தின் அபிவிருத்தியை ஊக்குவிப்பதில் அவற்றின் முறையான பங்குகளை விகிக்க வேண்டுமென்றும் பொதுத்திட்டம் ஏற்பாடு செய்திருந்தது. இந்த முறையில், அரசியல் துறையில், தொழிலாளி வர்க்கத்தின் தலைமையும், மற்றும் பொருளாதார துறையில் சோஷலிச தன்மைவாய்ந்த அரசுடைமையாக்கபட்ட பொருளாதாரத்தின் தலைமையும் சட்டத்தினால் வரையறுக்கபட்டிருந்தன. சோஷலிசத்தை நோக்கி சீனமக்கள் குடியரசு மாறிச் செல்வதற்கான முக்கிய உத்திரவாதமாக இது அமைந்திருந்தது.

சீன மக்கள் குடியரசின் மத்திய மக்கள் அரசாங்கத்தின் உறுப்புச் சட்டம், ஒரு மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தின்

தன்மையோடு இணக்கமாக இருந்த அரசு அதிகாரத்தின் உருவத்தை ஏற்பாடு செய்திருந்தது; அதாவது, ஜனநாயக மத்தியத்துவத்தின் மீது, அடிப்படையாகக் கொண்டிருந்த மக்களின் காங்கிரஸ்களின் ஒரு அமைப்பினை ஏற்பாடு செய் திருந்தது. இந்த அமைப்பு மக்களுக்கு முழுமையான ஜனநாய கத்தையும்பிற்போக்கு வர்க்கங்களின் மீது சக்தி வாய்ந்த சர்வாதி காரத்தையும் உறுதி செய்திருந்தது; இந்த அமைப்பு பூர்சுவா பாராளுமன்ற அமைப்போடு, ஒப்பு நோக்கி பார்க்க முடியாத அளவிற்கு உன்னதமானதாக இருந்தது.

சீன மக்களின் அரசியல் கலந்தாலோசனை மாநாட்டின் உறுப்புச் சட்டம், அனைத்து மக்களின் ஜனநாயக ஐக்கிய முன்னணியின் ஸ்தாபன உருவமாக மக்களின் அரசியல் கலந் தாலோசனை மகாநாடு இருக்குமென்று வகை செய்திருந்தது. மற்றும் இப்படிப்பட்டதொரு மாநாட்டின் குறிக்கோள் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தின்கீழ்,சீனமக்கள் குடியரசை ஸ்தாபிப் பதற்கும் பலப்படுத்துவதற்கும் பல்வேறு ஜனநாயக கட்சிகளும், மக்கள் ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் மூலம் நாட்டிலுள்ள சகல ஜனநாயக வர்க்கங்களையும் தேசிய இனங்களையும் ஒன்று படுத்துவதாக இருந்தது என்றும் வரையறுத்துக் கூறி இருந்தது.

மக்களின் அரசியல் கலந்தாலோசனை மாநாடு, மாசே-துங்கை மத்திய மக்கள் அரசாங்கத்தின் தலைவராக தேர்ந் தெடுத்து. மற்றும் சூடே, லியூசாவோ-சி,சுங்சிங்-கிங் ஆகியோரை யும் மற்றவர்களையும் உப தலைவர்களாகவும் தேர்ந்தெடுத்தது. புதிய அரசின் துவக்க விழா 1949 அக்டோபர் 7இல் நடைபெற் றது தலைவர் மாசே-துங் உலகம்முழுவதிற்கும் ஒரு செய்தியினை வெளியிட்டார். அச்செய்தியில், சீன மக்கள் குடியரசு ஸ்தாபிக்க பட்டதையும் மத்திய மக்கள் அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டதை யும் பிரகடனம் செய்தார். அதிலிருந்து சீனாவின் வரலாறு புதிய தொரு சகாப்தத்தில் நுழைந்தது.

சீனமக்கள் குடியரசின் நிர்மானம் பிரதானமாக சீனப்புரட்சி யின் முதற் கட்டத்தை, புதிய ஜனநாயக புரட்சியின் கட்டத்தின் முடிவினைக் குறித்தது. மற்றும் அதனுடைய இரண்டாவது கட்டத்தை, சோஷலிச புரட்சி கட்டத்தைப் பறைசாற்றிற்று.

சீன மக்கள் புரட்சியின் வெற்றியும் சீன மக்கள் குடியரசு நிர்மானிக்கப்பட்டதும் சீனாவின் வரலாற்றில் தீவிரமானதொரு மாற்றத்தினைக்கொண்டு வந்தது. 1917 ஆம் ஆண்டு நடைபெற்ற அக்டோபர் சோஷலிச புரட்சிக்கு பிறகும் மற்றும் 1945இல் பாசிச எதிர்ப்பு யுத்தத்தின் வெற்றிக்குப் பிறகும் உலக

வரலாற்றில் அது மிகமிகப் பெரிய நிகழ்ச்சியாக இருந்தது. சீன மக்கள் ஜனநாயக புரட்சியின் வெற்றி, சகல மனித இனத்தின் மீதும் அக்டோபர் புரட்சியினால் பிரயோகிக்கப்பட்ட மாபெரும் செல்வாக்கினை விஸ்தரித்து ஆழப்படுத்திற்று என்பதில் மகத்தானதொரு உலக முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது.

முதலாவதாக, சீன மக்கள் புரட்சியின் வெற்றியினால்-உலகின் மிகமிகப் பெரிய மக்கள் தொகைக் கொண்ட நாட்டில் புரட்சியின் வெற்றியினால், சோவியத் யூனியன் மற்றும் மக்கள் ஜனநாயக நாடுகள் ஆகியவற்றின் எழுச்சியைப் பின்தொடர்ந்து கிடைத்த வெற்றியினால்—உலக முதலாளித்துவதத்தின் சங்கிலிகள் உடைத்து எறிந்து அதனுடைய சொந்த விடுதலையையும் பெற்றிருந்தது. உலக மக்கள் தொகையின் நான்கில் ஒரு பகுதியோடும் அபரிமிதமான செல்வாதாரங்களோடும் இருந்த சீனா முன்பு ஏகாதிபத்தியவாதிகளால் மோசப்பட்டுக் கொண்டிருந்த முக்கியமானதொரு சந்தையாக இருந்தது. சீனப் புரட்சியின் வெற்றி அமெரிக்கா மற்றும் இதர ஏகாதிபத்திய நாடுகளின் ஆக்கிரமிப்புக் கொள்கைகளின் சூன்னியத்தன்மையையும் மற்றும் சீனாவை அடிமைப் படுத்துவதற்கான அவர்களது திட்டங்களின் தோல்வியையும் கூர்மையாக அறிவித்தது. இதன்விளைவாக, இப் புரட்சியின் வெற்றி ஏகாதிபத்தியவாதிகளுக்குக் கடுமையானதொரு அடியைக் கொடுத்து, அவர்களது வலிமையைப் பலகீனப் படுத்தி, முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியைக் கூர்மைப் படுத்தி, பூர்சுவா ஆட்சி அதனுடைய அழிவினை நெருங்கிக் கொண்டிருந்தது என்பதனை நிரூபித்துக் காட்டிற்று; மற்றும் உலகம் முழுவதிலும் உள்ள உழைக்கும் மக்களின் இறுதி வெற்றியையும் வேகப்படுத்திற்று, மேலும், வெற்றியைப் பெற்றிருந்தமையால், சீன மக்கள் சமாதானம், ஜனநாயகம் மற்றும் சோஷலிசம் ஆகியவற்றின் தரப்பில் உறுதியாக நின்று ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஒரு ஜீவனுள்ள சக்தி என்பதையும் நிரூபித்தார்கள்; மற்றும் சமாதானம், ஜனநாயகம் மற்றும் சோஷலிசம் ஆகியவற்றின் முகாமிற்கு சாதகமாகவும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு முகாமிற்கு எதிராக மிகவும் அதிகமாக அரசின் கட்டுகளை சரியச் செய்யும்படியும் செய்து கொண்டிருந்தார்கள்.

இரண்டாவதாக, அறுபது கோடி மக்கள் தொகையைக் கொண்ட ஒரு நாட்டில், கிழக்கில் ஏகாதிபத்திய ஒடுக்குமுறையின் கீழிருந்த மிகமிகப் பெரிய அரைக்காலனி நாட்டில்

நடைபெற்றிருந்த ஒரு புரட்சியாக சீனப் புரட்சி இருந்தது. இந்த புரட்சியின் வெற்றி கிழக்கத்திய ஒடுக்கப்பட்ட தேசங்களை ஊக்கப்படுத்தி, உற்சாகமூட்டி, வெற்றியில் அவர்களுக்கு இருக்கும் நம்பிக்கையைப் பலப்படுத்துவதையும் தவிர்க்க முடியாதது ஆகிற்று. ஏகாதிபத்தியவாதிகள் தங்கள் வாழ்வை வைத்திருப்பதற்கு தங்களது உபரி லாபங்களைப் பெற்று வந்த இடங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சி புயல்களின் மையங்களாக மாறி இருந்தன, அல்லது மாறிக் கொண்டிருந்தன.

மூன்றாவதாக, சீன மக்களின் புரட்சியின் வெற்றி மார்க்சிய-லெனினியத்தின் புதியதொரு வெற்றியாக இருந்தது. சீன மக்களின் விடுதலைக்கும் மற்றும் இதர எல்லா ஒடுக்கப்பட்ட மக்கள்களின் விடுதலைக்கும் மார்க்சிய-லெனினியம்தான் ஒரே உண்மையான வழிகாட்டி என்பதனை அது நிருபித்தது. தோழர் மாசே-துங்கின் தலைமையின்கீழ், மார்க்சிய-லெனினிய நிலைபாட்டையும், கருத்தோட்டத்தையும் மற்றும் முறையையும் அனுஷ்டித்ததால் சீனப் புரட்சியின் பிரச்சினைக்கு சீனக் கம்யூனிஸ்ட் கட்சி விஞ்ஞான பூர்வமாகவும் முறையாகவும் தீர்வுகண்டது. இந்தபுரட்சி அக்டோபர் சோஷலிச புரட்சியைப்பின்பற்றிய மற்றொரு மாபெரும் புரட்சியாக இருந்தது; ஆனால், வேறுபட்டதொரு வகைப்பட்ட புரட்சியாக இருந்தது; ஏனெனில் ஏகாதியபத்தியத்தால் ஒடுக்கப்பட்டிருந்த ஒரு நாட்டில் அது நடைபெற்றது. ஒரு ஏகாதிபத்திய நாட்டில் மட்டுமின்றி, ஆனால் ஒரு காலனி நாட்டில், அல்லது ஒரு அரைக்காலனி நாட்டிலும் கூட, புரட்சிக்கு வெற்றிகரமாக வழிகாட்டுவதற்கு மார்க்சிய லெனினியத்தின் இயக்கும் சக்தி திறன்படைத்ததாக இருந்தது என்பதை அது முற்றிலும் நிருபித்துக் காட்டிற்று.

சீனாவில் மார்க்சிய-லெனினியத்தின் வெற்றி ஆசியாவிலும் உலகத்தின் இதர பகுதியிலும் உள்ள ஒடுக்கப்பட்ட நாடுகளின் தொழிலாளி வர்க்கத்திற்குப் பரவலான வெகுஜனங்களுக்கும் ஜனநாயக புரட்சி பாதையில், உறுதியாக அணிவகுத்து செல்வதற்கு உதவி செய்தது; மற்றும் வெற்றி அடைந்தபிறகு, சோஷலிச பாதையில் மேலும் முன்னேறிச் செல்வதற்கும் உதவி செய்தது.

**மூன்றாவது புரட்சிகர உள்நாட்டு யுத்தம் பற்றிய சுருக்கமான தொகுப்புரை:**

1946 ஜூலையில், சியாங்கை-ஷேக் கும்பல் உலகத்தில் மிக

மிகப் பெரிய துரோகத் தனமான கும்பல், உலகத்தின் மிகமிக பெரிய ஏகாதியபத்திய அரசாங்கம் அமெரிக்காவின் முழுமை யான ஆதரவோடு, முன்கண்டிராத ஒரு அளவிற்கு ஒரு எதிர் புரட்சி உள்நாட்டு யுத்தத்தை—சீன மக்கள் சமாதானத்திற்காக விரும்பிக் கொண்டிருந்த போதிலும், சமாதானத்தைப் பெறு வதற்கு சீனக் கம்யூனிஸ்ட் கட்சி முயற்சிகளை செய்துக் கொண் டிருந்த போதிலும் மற்றும் உலகம் முழுவதிலும் இருந்த ஜனநாயக பொதுஜன அபிப்பிராயத்தினால் எதிர்ப்பு தெரிவிக்க பட்டிருந்தபோதிலும்—ஆரம்பித்தது. சீனக்கம்யூனிஸ்டுகட்சியின் தலைமையின்கீழ் நான்கு ஆண்டுகள் வீரமிக்க போராட்டம் நடத்திய பிறகு, சீனமக்கள் ஏகாதியபத்தியவாதிகள் மற்றும் கோமிங்டாங் ஆகியோரின் (ஏகாதியபத்தியவாதிகள் சீனாவில் நூறு ஆண்டுகளுக்கும் அதிகமாக ஆண்டுக் கொண்டிருந்தார்கள். மற்றும் கோமிங்டாங் கட்சி சீனாவை இருபத்திரண்டு ஆண்டு களாக ஆண்டு கொண்டிருந்தது. இருண்ட, பிற்போக்கு ஆட்சியினைத் தூக்கி எறிந்து, மக்கள் ஜனநாயக சர்வாதி காரத்தின்கீழ் மாபெரும் சீன மக்கள் குடியரசினை நிலை நாட்டினார்கள். அப்பொழுதில் இருந்து சீன மக்கள் தங்களுடைய சொந்த தலைவிதியின் எஜமானர்களாக இருந்து வருகிறார்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகாளால் ஆயுதபாணிகளாக்கப் பட்ட கோமிங்டாங் பிற்போக்குவாதிகளின் மீது சீன மக்கள் அடைந்த வெற்றிக்கு பல அம்சங்கள் காரணமாக இருந்தது. மக்களின் புரட்சி யுத்தம் இரண்டாவது உலக யுத்தத்திற்கும் பிறகு நடத்தப்பட்டது. அப்பொழுது சமாதானம், ஜனநாயகம் மற்றும் சோஷலிசம் ஆகியவற்றின் முகாம் வலிமையில் வளர்ந்து கொண்டும், உலக ஏகாதிபத்தியம் மேலும் வீழ்ச்சியுற்றுக் கொண்டும் இருந்தது. இந்த முறையில் யுத்தபிற்கால சர்வதேச நிலைமை சீன மக்களுக்கு சாதகமாகவும், சீன மற்றும் அமெரிக்க பிற்போக்குவாதிகளுக்கு பாதகமாகவும் இருந்தது. எட்டு ஆண்டுகள் ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கு எதிராக நடத்திய யுத்தத்தின் பொழுது புடம்போட்டு எடுக்கப்பட்ட சீன மக்கள் தங்களுடைய அரசியல் உணர்வினையும் ஸ்தாபன திறமையையும் மிகவும் அதிகரித்து, சக்திவாய்ந்த விடுவிக்கப்பட்ட ஏரியாக்களை யும் மக்கள் விடுதலை சேனையையும் படைத்திருந்தார்கள்; விடுதலை பெற்ற ஏரியாக்களும் மக்கள் விடுதலை சேனையும் அவர்களது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிற்போக்கான

சய்து அவற்றை சோஷலிச நிறுவனங்களாக
சோஷலிச அரசு பொருளாதாரத்தைத்
தரிப்பதற்கும் மற்றும் நகரங்களில் தனியார்
சோஷலிச மாற்றத்தை ஆரம்பிக்கும்
னம் செலுத்துவதும் அவசியமாக இருந்தது.
ளாதாரத்தின் மீட்சிக்கும் மாற்றத்திற்கும்
ளி நாட்டிலும் சாதகமான நிலைமைகள்
ன. இப்படி பட்ட நிலைமைகள் உண்டாக்கப்

டியரசின் ஸ்தாபிதம், உலகம் முழுவதிலும்
ாராட்டப்பட்டது. சீன மக்களின் மிகமிகப்
மிக உறுதியான நண்பனான சோவியத்
கள் குடியரசை அங்கீகரித்து, புதிய தேசம்
ரிலேயே ஸ்தானிக உறவுகளை ஏற்படுத்
னநாயகநாடுகள் — பல்கேரியா, ருமேனியா,
ா, செக்கோஸ்லோவாகியா, போலந்து,
ர்மன் ஜனநாயக குடியரசு, அல்பேனியா
ஜனநாயக குடியரசு — அதனைச் சீக்கிரத்
ாடர்ந்தன; மேலும், இந்த நாடுகளோடு
, டென்மார்க், பர்மா, இந்தோனிஷியா,
ன்லாந்து மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடு
வுகளை ஏற்படுத்திக் கொண்டன,[1]
யன், சீனா மற்றும் இதர மக்கள் ஜனநாயக
யூனியனால் தலைமை தாங்கப்பட்ட ஒரு
றுபட்ட சோஷலிச முகாமாக அமைந்தது.
ந்ததும், மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக,
னின் இருக்கை சீனாவின் பொருளாதார
லிச நிர்மானத்திற்கும் சாதகமான சர்வதேச
றாக இருந்தது.

குடியரசு, சோவியத் யூனியனால் தலைமை
ஷலிச முகாமின் தரப்பில் எப்போழுதுமே
ளது; மற்றும் இரு நாடுகளுக்கும் இடையே
ப் பலப்படுத்துவதற்கு ஒவ்வொரு முயற்சியை
49 டிசம்பர் 16இல், தலைவர் மாசே-துங்
க்கு விஜயம் செய்தார். இரு நாடுகளின்
ரலாற்றில் இது முக்கியமானதொரு நிகழ்ச்சி
லைவர் மாசே-துங்கும் தளபதி ஸ்டாலினும்,

த கெட்டியான
மிக மிக முக்கிய
யாகித்திதனால்
கும் பிற்போக்கு
ட்பாடுகளையும்
செய்தார்கள்;
கிராமப்புறக்
ளையும் சரியாக
மக்கள் விடுதலை
னேறிய தாக்கு
தியமுடையதாக
தாரு நிலையில்
க மாறிச் செல்
து; இந்த முறை
றிகரமானதொரு
றிச்செல்லும் ஒரு
னதாக செய்யப்

நட்புறவு கூட்டணி மற்றும் பரஸ்பர உதவிக்கான சீன-சோவியத் உடன்படிக்கை, சீன சாங்சுன் ரயில்வே, லூசன் (போர்ட் ஆர்தர்) மற்றும் டாலியன் (டைரன்) ஆகியவை சம்பந்தமான சீன-சோவியத் உடன்பாடு மற்றும் சீனாவுக்கு கடன்கள் வழங்குவது சம்பந்தமாக சீன-சோவியத் உடன்பாடு, ஆகிய மூன்று மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உடன்பாடு சம்மந்தமான பேச்சு வார்த்தைகளில் நேரடியாக பங்கு கொண்டார்கள். இந்த மூன்று மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உடன்பாடுகளும் சீன அரசாங்கத்தின் சார்பில், அயல்நாட்டு விவகாரங்களின் அமைச்சர் சூ என்-லாய் யினாலும் மற்றும் சோவியத் யூனியன் அரசாங்கத்தின் சார்பில் அயல் நாட்டு அமைச்சர் ஏ.ஒய். விஷின்ஸ்கவினாலும் 1950 பிப்ரவரி 14-இல், மாஸ்கோவில் கையெழுத்திடப்பட்டன. இத்தகைய தஸ்தாவேஜுகள் கையெழுத்தானதோடு, சீன மக்களும் சோவியத் மக்களும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்க்கும் மாபெரும் லட்சியத்திலும் உலகத்தின் நீடித்த சமாதானத்தைப் பாதுகாக்கும் மாபெரும் லட்சியத்திலும் எப்போதைக் காட்டிலும் மிகவும் அதிகமாக ஒற்றுமையாக இருந்தார்கள்; மற்றும் பொருளாதாரத்திலும் கலாச்சாரத்திலும் இவ்விரு தேசங்களின் சிநேக பூர்வமான ஒத்துழைப்பு மேலும் பலப்பட்டிருந்தது. 1950 பிப்ரவரி 17இல், தோழர் மாசே-துங் அவரது வழியனுப்பு விழா பிரசங்கத்தில் மாஸ்கோ ரயில்வே நிலையத்தில் பின்வருமாறு கூறினார்:

"ஒரு உடன்பாட்டினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சோவியத் மக்களுக்கும் சீன மக்களுக்கும் இடையே உள்ள ஒருமைப்பாடு என்றும் நீடித்ததாகவும், அழிக்க முடியாததாகவும் மற்றும் அந்நியமாக்கப்படாததாகவும் இருக்கும். சீனா மற்றும் சோவியத் யூனியன் ஆகிய இரு பெரும் நாடுகளின் சுபிட்சத்திற்கு மட்டுமின்றி, மனித இனத்தின் வருங்காலத்தின் மீதும் மற்றும் உலக சமாதானத்தின் மற்றும் நீதி ஆகியவற்றின் வெற்றியின் மீதும் அது தவிர்க்க முடியாதபடி அதனுடைய செல்வாக்கினைச் செலுத்திக் கொண்டு வரும்".

ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்கும் சமாதானத்தைப் பாதுகாப்பதற்கும், நட்புறவு கூட்டணி மற்றும் பரஸ்பர உதவி பற்றிய சீன-சோவியத் உடன்படிக்கையும் மற்றும் இதர உடன்படிக்கைகளும் ஜப்பானிய ராணுவ வெறித்தனம் புத்துயிர் பெற்று எழுவதையும் மற்றும் ஜப்பானின் தரப்பில் ஆக்கிரமிப்பை

மீண்டும் ஆரம்பிப்பதையும் சமாதானத்தை மீறுவதையும் அல்லது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில், ஜப்பானுடன் ஒத்துழைக்கும் இதர எந்த அரசும் தடுக்கப்பட வேண்டுமென்றும் வரையறுத்துக் கூறிற்று. உடன்படிக்கை பின்வருமாறு கூறிற்று :

"ஜப்பானாலோ அல்லது ஜப்பானோடு இணைந்து நிற்கும் இதர எந்த அரசினாலோ, ஒப்பந்தம் செய்துள்ள நாடுகளில் ஒன்று தாக்கப்பட்டும், இந்த முறையில் ஒரு யுத்தத்தில் பிணைக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், மற்றொரு நாடு அதனிடமுள்ள சகல சாதனங்களாலும் ராணுவ உதவியும் மற்ற உதவிகளையும் உடனடியாக செய்யும்."

இதனுடைய அர்த்தம் என்னவென்றால் ஜப்பானிய ராணுவ வெறியர்களும் அவர்களது கூட்டாளிகளும் சீனாவைத் தாக்குவதற்கு துணிவார்களேயானால், சீனா மற்றும் சோவியத் யூனியன் ஆகிய இருமாபெரும் நாடுகளில் இருந்து கடுமையான தொரு அடியினை பெறுவார்கள். சீனாவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே இருந்த நட்புறவு கூட்டணி பரஸ்பர உதவி மற்றும் ஒத்துழைப்பு தூரகிழக்கில் சமாதானத்தின் கொத்தளமாகவும், உலக சமாதானத்தைப் பாதுகாப்பதில் மிக மிகக் கேத்திரமான அம்சமாகவும் இருந்தது.

உடன்படிக்கையும் உடன்பாடுகளும் சீனாவில் சோஷலிச நிர்மாணத்தை நிறைவேற்றுவதிலும் தேசிய பொருளாதாரத்தை மீட்சி பெறச் செய்யும் கடமைகளிலும் மகத்தான முக்கியத்துவம் உடையனவாகவும் இருந்தன. சீனாவிற்கு, கடன்கள் வழங்கும் உடன்படிக்கையின்படி, சோவியத்யூனியன் சீனாவிற்கு ஒரு ஐந்தாண்டு கால கட்டத்திற்கும் முப்பது கோடி அமெரிக்க டாலர்களை (ஆண்டு ஒன்றுக்கு 1 சதவீத வட்டி வீதத்தில்) சோவியத் யூனியன் வழங்கும். மின் நிலையங்களுக்குரிய சாதனங்கள், பொறியியல் தொழிற்சாலைகள், சுரங்க மற்றும் ரயில்வே போக்குவரத்துத் தண்டவாளங்கள், மற்றும் இப்படிப்பட்ட சாதனங்கள் சம்பந்தமாக பல்வேறு இதர பொருளாதார மற்றும் தொழில் நுட்ப உதவி வடிவங்களும் இருந்தன. சீன அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் பல சோவியத் நிபுணர்கள் சீனாவிற்கு வந்தார்கள். உன்னதமான சர்வதேச உணர்வினால் நிரப்பப்பட்டு, தொழில், போக்குவரத்து, விவசாயம், நீர்சேமிப்பு மற்றும் மருந்துவகையறாக்களில் அவர்களுடைய முன்னேறிய தொழில் நுட்ப விஞ்ஞான அனுபவங்களை தயக்கமில்லாமல் சீனாவிற்கு

கற்றுக் கொடுத்து, தன்னலமற்ற முறையில் அவர்கள் பணியாற்றினார்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளால், சீனாவிற்கு எதிராக தொடர்ந்து நடத்தப்பட்ட ஆக்கிரமிப்பும் ஜப்பானிய ராணுவ வெறித்தனத்தைப் புத்துயிர் பெறச் செய்வதை வேகப்படுத்துவதற்கு ஜப்பானிய பிற்போக்குக் கும்பலோடு ஒத்துழைக்கும் அவர்களது முயற்சியும் மற்றுப் புதியதொரு யுத்தத்தை துவக்குவதற்கு ஜப்பானிய பிற்போக்குக் கும்பலோடு ஒத்துழைக்கும் அவர்களது முயற்சியும் சீனாவின் பாதுகாப்பை, கடுமையான அபாயத்திற்கு உள்ளாக்கி, ஆசியாவின் சமாதானத்தையும், உலகை சீர்குலைக்கவும் செய்தது.

1952-செப்டம்பரில், இரு நாடுகளின் ஜீவாதாரமான அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து சீன-சோவியத் அரசாங்களின் பிரதிநிதிகள் மாஸ்கோவில் ஒரு பேச்சு வார்த்தையை நடத்தினார்கள். இந்த பேச்சு வார்த்தையில், 1950 பிப்ரவரி 14-இல், கையெழுத்தான சீன சாங்சுன் ரயில்வே, லூசன் (போர்ட் ஆர்தர்), மற்றும் டாலியன் (டைரன்) சம்பந்தமான சீன-சோவியத் உடன்பாடு பற்றியும் விவாதிக்கப்பட்டது. உடன்பாட்டில், ஏற்கனவே பூர்வாங்கமாக வரையறுக்கப்பட்டிருந்த தேதியில், கூட்டாக நிர்வகிக்கப்பட்டு வந்த சீன சாங்சுன் ரயில்வேயில் சோவியத்யூனியனுக்கு இருந்த சகல உரிமைகளையும் நஷ்டஈடு இல்லாமல் சோவியத் அரசாங்கம் சீனாவிற்கு மாற்றி கொடுக்க வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. அதே சமயத்தில், உடன்படிக்கையில் வரையறுக்கப்பட்டிருந்த சீனாவின் லூசன் கப்பல் தளத்தை கூட்டாக உபயோகிக்கப்பட்டு வந்ததிலிருந்து சோவியத் துருப்புகள் திரும்பப் பெற வேண்டுமென்பது ஒத்தி வைக்கப்பட வேண்டும் என்ற சீன அரசாங்கத்தின் பிரேரேபணைக்கு சோவியத் அரசாங்கம் ஒப்புதல் அளித்தது.[2] சீனாவின் தேசிய பாதுகாப்பிற்கும் மற்றும் ஜப்பானிய ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கும் லூசன் ஏரியா மகத்தான யுத்த தந்திர முக்கியத்துவம் உடையதாக இருந்தமையால், இந்த புதிய உடன்பாடு வடசீனாவின் கடற்கரைகளைப் பாதுகாத்து, மேற்கு பசிபிக்கில் ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் அவர்களது கூட்டாளியின் ஆக்கிரமிப்பு நோக்கங்களுக்குக் கடுமையானதொரு அடியினைக் கொடுத்தது.

இரண்டாவது உலக மகா யுத்தத்திற்கு பிறகு, இரண்டு எதிரிடையான முகாம்கள் இருப்பதின் பொருளாதார விளைவு, தனியொரு, சர்வாம்சரீதியான உலகச் சந்தையின் சீர்குலைவாகவும் மற்றும் இரண்டு இணையான (Parallel) மற்றும் எதிரிடையான உலகச் சந்தைகளின் உதயமாகவும், அதாவது, சோவியத் யூனியன், சீன மக்கள் குடியரசு மற்றும் இதர மக்கள் ஜனநாயக நாடுகள் ஆகியவற்றைக் கொண்ட சோஷலிச முகாமின் சந்தையின் தோற்றமாகவும் மற்றும் முதலாளித்துவ நாடுகள் மற்றும் அவர்களது பல பொருளா தாரத்தில் பின்தங்கிய காலனிகள் மற்றும் சார்பு நாடுகளைக் கொண்ட ஏகாதிபத்திய முகாம் ஆகிய இரு முகாம்களின் தோற்றமாகவும் இருந்தது.

யுத்த பிற்கால காலகட்டத்தில், சோஷலிச முகாமின் நாடுகள் ஒரு நாடுமற்றொரு நாட்டோடு பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி உடன்பாடுகளின் மூலம், பொருளாதார உறவுகளை அமைத்துக் கொண்டன; ஆனால், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் முற்றுகை இடுதல் மற்றும் தடை செய்தல் ஆகியதொரு கொள்கையைப் பின்பற்றினார்கள். அப்படிச் செய்வதின் மூலம், சீனா, சோவியத் யூனியன் மற்றும் இதரமக்கள் ஜனநாயக நாடுகளை மூச்சுத் திணற செய்யலாம் என்று நம்பிக் கொண்டிருந்தார்கள். எனினும், அதனுடைய விளைவு முற்றிலும் எதிரிடையானதாக இருந்தது. புதிய சோஷலிச சந்தை மேலும் பலப்படுத்தப்பட்டு அவதிப்படுத்தப்பட்டது.

சோஷலிச சந்தையின் நாடுகளுக்கு இடையே இருந்த பொருளாதார உறவுகளைப் புதியதொரு வகைப்பட்ட உறவுகளாக இருந்தன. அந்த உறவுகள் சம்மந்தப்பட்ட சகல நாடுகளின் முழுமையான சமத்துவத்தினாலும், ஒருவர் மற்றொருவருடைய ஆதிபத்திய உரிமையையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதினாலும், ஒருவர் மற்றொருவருடைய தேசிய நலன்களை மதிப்பதினாலும், பரஸ்பர நம்பிக்கை நட்புறவு ஆகியவற்றை மதிப்பதினாலும், நெருக்கமான பொருளாதார ஒத்துழைப்பினாலும் மற்றும் அவர்களுக்கு இடையே இருந்த பொருளாதார, கலாச்சார உறவுகளை மீட்பதற்கும் மேலும் அபிவிருத்தி செய்வதற்கும் பொதுவான முயற்சியைச் செய்வதினாலும் குணாதிசயப்படுத்தப்பட்டிருந்தன.

1949இல் இருந்து 1952 வரையிலும் இருந்த கால கட்டத்தில், சோவியத் யூனியனோடும் மற்றும் இதர மக்கள் ஜன

நாயகநாடுகளோடும் சீனாவின் வர்த்தகம் துரிதமானதொரு வளர்ச்சியைக் காட்டிற்று. சீனாவின் மொத்த அயல் நாட்டு வர்த்தகத்தில், இத்தகைய நாடுகளோடு சீனாவின் வர்த்தகத்தின் சதவீதம் 1950 இல் இருபத்தி ஆறில் இருந்து, 1952 இல் எழுபத்தி இரண்டாக உயர்ந்தது; இத்தகைய நாடுகளில் இருந்து செய்யப் பட்ட இறக்குமதிகள் சீனாவின் பொருளாதார நிர்மானத்திற்கு மகத்தானதொரு உதவியாக இருந்தன. தொழில் சாதனமும் மற்றும் பொருட்களும் முற்றிலும் இத்தகைய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன; அதேசமயத்தில், சீனாவின் விவசாய உற்பத்தி பொருட்கள், பிராணி உற்பத்தி பொருட்கள் கிட்டத் தட்ட அனைத்துமே இத்தகைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டன.

சோஷலிச முகாமின் வளமான செல்வாதாரங்கள், அந்த முகாமிற்குள் இருந்த ஒவ்வொரு நாடும் அந்த நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையாக இருந்ததைக் கண்டு பிடிப்பதைச் சாத்தியமாக்கிற்று. இந்த முகாமில் இருந்த நாடு களுக்கு இடையே செய்யப்பட்ட நீண்டகால பொருளாதார உடன்பாடுகள், அவற்றின் ஒத்துழைப்பில் புதியதொரு கட்டத்தை அறிமுகம் செய்தன. இத்தகைய நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக பொருளாதார நிர்மானத்திற்கான, நீண்டகால திட்டங்களை உருவாக்கி நடைமுறைக்குக் கொண்டு வந்தன என்ற விபரத்தி னால், இப்படிப்பட்ட நீண்டகால பொருளாதார உடன்பாடு களைச் செய்தது சாத்தியமாக்கப் பட்டிருந்தது. இப்படிப்பட்ட உடன்பாடுகள் இத்தகைய நாடுகளுக்கிடையே சாதனங்கள், மூலப்பொருட்கள் மற்றும் சரக்குகள் தொடர்ச்சியாக வந்து சேர் வதை உறுதிப்படுத்தின.

யுத்தபிற்கால காலகட்டத்தில் சோவியத் யூனியனின் பெரும் பகுதி வர்த்தகம் (1952-இல் 80%) சோஷலிஸ்ட் முகாம் நாடுக ளோடு நடத்தப்பட்டது என்பதில் சோவியத் யூனியனின் அந்நிய நாட்டு வர்த்தகத்தில் மகத்தானதொரு மாற்றம் நடை பெற்றிருந்தது. பெரிய அளவிற்கு சோவியத் யூனியன் செய்த மாபெரும் உதவியின் காரணமாகத்தான் சீனாவும் இதர மக்கள் ஜனநாயக நாடுகளும் அவற்றின் நிலைகளைப் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் துரிதமாக கெட்டிப் படுத்தின.

சோஷலிச முகாம் நாடுகளுக்கு இடையே இருந்த பொருளா தார உறவுகள் கூர்மையாக வேறுபட்டு இருப்பது ஏகாதிபத்திய சந்தையினால் விரும்பப்பட்டிருந்தது; ஏகாதிபத்திய சந்தையில்

அமெரிக்காவின் ஆளும் கும்பல், மூலப் பொருட்களைப் பேராசையோடு கொள்ளை அடித்தது, சரக்குசந்தைகளைக் கைப்பற்றிற்று மற்றும் இதர நாடுகளின் மக்களை அடிமைப்படுத்தவும் செய்தது. தங்களுடைய சொந்த பொருளாதார நெருக்கடியை விடுவிக்கும் பொருட்டு அமெரிக்கா அயல் நாட்டு சந்தைகளில் பெரும் அளவில் அதனுடைய ஏற்றுமதிகளை அதிகரிக்கும் ஒரு கொள்கையையும், மற்றும் பதிலுக்கு மிகக் குறைவாக கொள்முதல் செய்யும் ஒரு கொள்கையையும் கையாண்டது. யுத்தம் முடிந்ததில் இருந்து 1952 வரையிலும், அமெரிக்காவின் வருடாந்திர ஏற்றுமதிகள் சராசரியாக 1,250 கோடி டாலர்களாக இருந்தது. அதே சமயத்தில் அதனுடைப் வருடாந்திர இறக்குமதிகள் சராசரியாக 720 கோடி டாலர்களாக மட்டுமே இருந்தன. இறக்குமதிகளின் மீது ஏற்றுமதிகளின் உபரி சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 500 கோடி டாலர்களாக இருந்தன. இலத்தின் அமெரிக்க நாடுகளோடு, ஆசிய நாடுகளோடும் இருந்த அசமத்துவ வர்த்தக உறவுகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. உதாரணமாக, அமெரிக்கா, சிலியில் செம்பு உற்பத்தியையும், பொலிவியாவில் தகர உற்பத்தியையும், பிரேசிலில் காப்பி உற்பத்தியையும் கட்டுப்படுத்தி, இத்தகைய உற்பத்தி பொருட்களை மிதமிஞ்சியதொரு குறைந்த விலைக்குக் கொண்டுவந்தது. அதே சமயத்தில், அந்த நாடுகளுக்கு அதனுடைய சொந்த சாமன்களை மிக உயர்வானதொரு விலையில் அமெரிக்கா விற்றது; இந்த முறையில், இதர முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரத்தையும் அபிவிருத்தி குன்றிய நாடுகளின் பொருளாதாரத்தையும் முடமாக்கிக் கொண்டிருந்தது. ஆகவே, ஏகாதிபத்திய முகாமின் நாடுகளுக்கு இடையே இருந்தவர்த்தக உறவுகள், சோஷலிச முகாமின் நாடுகளுக்கிடையே இருந்த வர்த்தக உறவுகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டிருந்தது. இது ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையேயும், ஏகாதிதத்திய நாடுகளுக்கும், காலனி நாடுகளுக்குமிடையேயும், முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்தி ஏகாதிபத்திய சந்தையின் சீர்குலைவினை வேகப்படுத்திற்று.

சோஷலிச முகாமின் வலிமை மிக்க பலமும் சோஷலிச சந்தையின் தோற்றமும் அபிவிருத்தியும் சீனாவின் தேசிய பொருளாதாரத்தின் மீட்சிக்கும் மாற்றததிற்கும் மித மிஞ்சிய சாதனமானதொரு சர்வதேச நிலைமையை உண்டாக்கின.

### 2. விடுதலைக்கு பிறகு ஆரம்ப ஆண்டுகளில் பொருளாதார நிலைமை. அரசின் நிதித்துறை வேலை

யிலும் பொருளாதார வேலையிலும் ஒன்றுபட்ட நிர்வாகத்தையும் தலைமையும் அமலாக்குதல் அரசின் நீதியிலும் பொருளாதாரத்திலும் சிறபபடைய செய்வதற்காக அஸதி வாரமான திருப்பத்திற்கான அடிப்படைக் கொள்கை.

புனருக்தாரன கடமையைச் சமாளிப்பதிலும் அதனுடைய தேசிய பொருளாதாரத்தை மாற்றமடையச் செய்வதிலும் சீன மக்கள் குடியரசு நிதி விஷயத்திலும் பொருளாதாரத்திலும் மாபெரும் கஷ்டங்களைச் சந்தித்தது. இத்தகைய கஷ்டங்கள் இரண்டு மூலா தாரங்களில் இருந்து வந்தன. முதலாவதாக. கோமிங்டாங் பிற்போக்குவாதிகள் விஷயங்களைப் பெரியதொரு குழப்பத்தில் விட்டுச் சென்றிருந்தார்கள். தொழில் மொத்தமாக சூன்னியத்தின் விளிம்பில் இருந்தது. பெரும்பாலான தொழிலாளிகள் வேலை இல்லாமல் இருந்தார்கள். கிட்டத்தட்ட எல்லா சுரங்கங்களும் தண்ணீர் வெள்ளத்தால் நிரம்பி இருந்தன. ரயில்வே போக்குவரத்து முடமாக்கப்பட்டு இருந்தது. விவசாயமும் அதே அளவிற்கு வருந்தத் தக்கதொரு நிலையில் இருந்தது, கோமின் டாங் ஆட்சியின் கீழ், சீனா, ஒரு விவசாய நாடு என்ற முறையில், அதற்கு தேவையான தானியம் மற்றும் பருத்தியின் பெரும்பகுதிக்கு அந்நிய இறக்குமதிகளை சார்ந்திருந்தது. விடுதலைக்கு முந்திய ஆண்டுகளில் மிக உயர்வாக பதிவு செய்யப்பட்ட உற்பத்தியோடு ஒப்பு நோக்கிப் பார்க்கும்போது நிலகரியின் 1949 ஆம் ஆண்டின் உற்பத்தி 50% த்திற்கும் குறைவாக இருந்தது; இரும்பு பொருட்களின் உற்பத்தி 80% த்திற்கும் குறைவாக இருந்தது: பருத்தி பொருட்களின் உற்பத்தி 25%த்திற்கும் குறைவாக இருந்தது; தானிய உற்பத்தி 26%த்திற்கும் குறைவ்வாகவும் மற்றும் பருத்தியின் உற்பத்தி 48%த்திற்கும் குறைவாக இருந்தது. யுத்த முற்கால உயர்ந்த பட்டத்தோடு ஒப்பு நோக்கிப் பார்க்கும் பொழுது, உழுபடை பிராணிகளின் எண்ணிக்கை பதினாறு சதவீதம் குறைந்திருந்தது; மற்றும் முக்கிய விவசாய கருவிகளின் எண்ணிக்கை முப்பது சதவீதம் குறைந்திருந்தது. பணவீக்கத்தின் தீப்பிழம்புகள் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக நடமாடின; தொழில் மற்றும் வியாபார சந்தை லாபச் சூதாடிகளின் கருணையால் செயல்பட வேண்டி இருந்தன. 1937 ஆகஸ்டில் இருந்து 1948 ஆகஸ்டு வரையிலும், கோமிங்டாங் கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்களில் விலைவாசிகள் 60 இலட்சம் மடங்குகள் பெருகி இருந்தன. மற்றும் நாணய தேய்மாணத்தின் அபாயகரமான நிழல்களும் விலைவாசி

களின் வானளாவிய உயர்வும் பொது மக்களின் வாழ்வின் மீது வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

வெற்றியைப் பின்தொடர்ந்து பொருளாதார கஷ்டங்களும் இருந்தன. 1949 இல், விடுதலை யுத்தம் மிகவும் வேகமாக நடைபெற்றது. மேலும் பல இடங்கள் ஒரு போராட்டம் இன்றியே விடுவிக்கப்பட்டன. எதிர்ப்பைக் கொடுப்பதினின்றும் விலகி நின்றிருந்த எல்லா பழைய ராணுவ ஊழியர்களையும் சிவில் ஊழியர்களையும் எடுத்துக் கொள்ளும் கொள்கை அரசாங்கத்தின் செலவை மிகவும் அதிகரித்திருந்தது. வருவாய் விஷயத்தில், யுத்தத்திற்கு ஆதரவாக புதிதாக விடுவிக்கப்பட்டிருந்த நகரங்களுக்கும் ஆதரவாகவும் பழைய விடுதலை பெற்ற ஏரியாக்கள் பெரும் அளவுகளில் தானியத்தைக் கொடுக்க வேண்டி இருந்தது; அதே சமயத்தில், புதிதாக விடுவிக்கப்பட்டிருந்த ஏரியாக்களில் ஒரு சிறு பகுதியில் மட்டுமே பொது தானிய வசூல் புகுத்தப் பட்டிருந்தது. புதிதாக விடுதலை பெற்ற ஏரியாக்களில் யுத்தம் அப்பொழுதுதான் முடிவிற்கு வந்திருந்தமையால், நகரத்திற்கும் கிராமப்புறத்திற்கும் இடையே சரக்குகளின் வர்த்தனையை மீட்சி பெறச் செய்வதற்கு கொஞ்ச காலம் பிடித்தது. எனவே, நகரங்களில் வரி விதிப்பால் கிடைக்கப்பெற்ற வருவாய் மிகவும் குறைவாகவே இருந்தது. இதனுடைய அர்த்தம் என்னவென்றால், அரசாங்கத்தின் வருவாய் மற்றும் செலவு சமநிலைபடுத்தப்படுவதினின்றும் தொலைவில் இருந்தன என்பதுதான்.

இப்படிப்பட்ட பொருளாதார கஷ்டங்களைச் சமாளிக்கும் பொருட்டு, வருவாயையும் செலவையும் சமநிலைப்படுத்துவதற்கும் மற்றும் நாணயத்தை ஸ்திரப்படுத்துவதற்கும், சரக்கு விலைகளை ஸ்திரப்படுத்துவதற்கும்—தேசிய பொருளாதாரத்தின் மீட்சிக்கும் அபிவிருத்திக்கும் இவை முன் தேவைகளாக இருந்தன—கட்சியும் அரசாங்கமும் அவற்றின் முதல்கவனத்தைக் கொடுத்தன.

கட்சியும் அரசாங்கமும் முதலாளிகளின் சீர்குலைவு நடவடிக்கைகளுக்கு எதிராக மூர்க்கத்தனமான போராட்டங்களை நடத்தின. 1949 பின்பகுதியில் இருந்து 1950 வரையிலும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்த லாபச் சூதாட்டத்திற்கு எதிரானதொரு போராட்டத்திற்கு, பல சந்தர்ப்பங்களில் விலைவாசிகளை உயர்த்தி இருந்த லாபச்சூதாடிகளுக்கு கடுமையானதொரு அடி கொடுக்கப்பட்டது.

1950 மார்ச்சில், தேசியப் பொருளாதாரம் மற்றும் நிதி ஆகியவற்றின் ஒன்றுபட்ட கட்டுப்பாடு பற்றிய முடிவு மத்திய மக்கள் அரசாங்கத்தினால் பிரசுரிக்கப்பட்டது; அதனுடைய சாராம்சம் வருவாய் மற்றும் செலவு ஆகியவற்றின் ஒன்றுபட்ட கட்டுப்பாடு, நாடு தழுவியதொரு அளவில் பொருட்களை ஒன்று பட்ட முறையில் பயன்படுத்தல், மற்றும் நாணயத்தின் ஒன்று படுத்தபபட்ட கட்டுப்பாடு ஆகியவையாக இருந்தது. வருவாய் மற்றும் செலவு ஆகியவற்றின் ஒன்றுபடுத்தப் பட்ட கட்டுப்பாட்டின் விளைவாக, தேசிய வருமானத் தின் முக்கிய பகுதி, அதாவது, மத்திய மக்கள் அரசாங்கத்தின் வருமானம் (அரசினால் வசூலிக்கப்படும தானியம், வரிகள், சேமிப்புக் கிடங்குகளில் உள்ள பொருட்கள், அரசுடமை ஆக்கப் பட்ட நிறுவனங்களால் தேடப்பட்ட லாபம் மற்றும் அந்த நிறுவனங்களின் தேய்மான நிதிகளின் பகுதி) தேசிய பாதுகாப் பின் அரசு செலவின் பிரதான இனங்களையும் மற்றும் பெரும் நிர்மாண திட்டங்களில் அரசு செலவின் பிரதான இனங்களை யும் சந்திப்பதற்கு ஒதுக்கப்பட்டது. ஒன்றுப்படுத்தப்பட்ட பயன் படுத்தலால், நாட்டின் சகல பிரதான பொருட்களும் (தானியம், பருத்தித்துணி, தொழில் சாதனம்) குவிக்கப்பட்டு சக்தி வாய்ந்த உபயோகத்திற்கு திருப்பபப்பட்டிருத்தன. நாணயத்தின் ஒன்று படுத்தப்பட்ட கட்டுப்பாடு உடனடியாக உபயோகத்திற்கு என்று குறியிடப்பட்டிருந்த அந்தப் பகுதியைத் தவிர, இது வரை யிலும் அரசுடைஸ்மயாக்கப்பட்ட நிறுவனங்களிலும், அரசாங்க ஸ்தாபனங்களிலும் மற்றும் இராணுவப் பிரிவுகளிலும் இதுவரை யிலும் சிதறிக் கிடந்திருந்த சகல ரொக்க பணமும் அரசுடைமை யாக்கப்பட்ட வங்கிகளில் சேமிப்பில் போடப்பட்டு சீனாவின் மக்கள் வங்கியின் ஒன்றுபடுத்தப்பட்ட கட்டுப்பாட்டின்கீழ் உபயோகிக்கப்பட வேண்டுமென்றும் பங்கிடப்பட வேண்டு மென்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிதிக் கஷ்டங்களை யும் பொருளாதார கஷ்டங்களையும் சமாளிப்பதற்கு இந்த முடிவு காரணமாக இருந்தது; அதாவது வருமானத்தையும் செலவீனத்தையும் சமநிலைப்படுபடுத்துவதிலும் சரக்கு விலை களை ஸ்திரப்படுத்துவதிலும் இந்த முடிவு காரணியாக இருந்தது. அது நாட்டின் நிதி மூலாதாரங்களையும் பொருட் களையும் பகுத்தறிவுப் பூர்வமான உபயோகத்திற்காகவும் பங்கீட்டிற்காகவும் குவித்து வைத்திருந்தது மற்றும் வருமானத் திற்கும் செலவீனத்திற்கும் இடையே ஒரு உத்தேசமான சம

நிலையை உருவாக்கியும் இருந்தது. இதன் விளைவாக, நாணயமும் சரக்கு விலைகளும் படிப்படிப்படியாக ஸ்திரப்படுத்தப் பட்டன.

1950 ஜூனில், சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் ஏழாவது மத்தியக் கமிட்டியின் மூன்றாவது விரிவடைந்த கூட்டம் பீகிங்கில் கூட்டப் பட்டது. இக்கூட்டத்தின் முக்கியக்குறிக்கோள்,தேசியநிதி மற்றும் பொருளாதாரத்தின் தற்கால நிலைமைக்கு ஏற்புடைய முறையில், அடுத்த மூன்று ஆண்டுகளில் கட்சி மற்றும் மக்களின் அடிப்படை கடமைகளை வகுப்பதாக இருந்தது. இக்கூட்டம், "அரசின் நிதி நிலைமையிலும் பொருளாதார நிலைமையிலும் சிறப்பான நிலைமைக்கான அடிப்படையானதொரு திருப்பத்திற்கு முயற்சி செய்தல்" என்று தலைப்பு இடப்பட்டிருந்த தோழர் மாசே-துங்கின் அறிக்கையை விவாதித்து ஏற்றுக் கொண்டது.

அந்த சமயத்தில், சீனாவில், "பொருளாதார நிர்மாணத்தைத் திட்டமிட்டதொரு வழியில் நிறைவேற்றுவதற்கான நிலைமைகள் இன்னும் எய்தப்பட்டிருக்க வில்லை," என்று தோழர் மாசே-துங் சுட்டிக் காட்டினார். நிதியிலும் பொருளாதாரதிலும் சிறப்பான நிலைமைக்கான அடிப்படையானதொரு திருப்பத்தைக் கொண்டு வருவதற்கு, அதாவது, தேசிய பொருளாதாரத்தின் புனருதாரணத்தைச் சித்தி பெறச் செய்வதற்கு, மூன்று நிபந்தனைகள் தேவையாக இருந்தன: (1) விவசாய சீர்திருத்தத்தைப் பூர்த்திசெய்தல்,(2) தற்போது உள்ள தொழில் மற்றும் வியாபார நிறுவனங்களை முறையாக திருத்தி அமைத்தல், மற்றும் (3) அரசாங்க உறுப்புகளில் செலவீனங்களைப் பெரிய அளவிற்குக் குறைத்தல். அவர் முழுநம்பிக்கையோடு பின்வருமாறு பிரகடனம் செய்தார்:

"உங்கள் அனைவரையும் போலவே, கடினமாக வேலைசெய்வதினால் இத்தகைய நிலைமைகளைச் சுமார்மூன்று ஆண்டுகளில் கொண்டு வருவது நமக்கு சாத்தியமாக இருக்கும் என்று நான் முற்றிலும் நிச்சயமாக இருக்கிறேன். அப்பொழுது நம் நாட்டின் நிதி மற்றும் பொருளாதார நிலைமை முழுவதும் அடிப்படையிலேயே அபிவிருத்தி அடைந்திருப்பதை நாம் பார்ப்போம்."

மூன்றாவது விரிவடைந்த கூட்டம் தோழர் மாசே-துங்கின் அறிக்கையை ஏகமனதாக ஏற்றுக்கொண்டு, இக்குறிக்கோளை உருப்பெறச் செய்வதற்கு முயற்சி செய்யும்படி, கட்சி முழுவதையும் அனைத்து மக்களையும் அறைகூவி அழைத்தது.

### 3. பாபெரும் அமெரிக்க எதிர்ப்பு மற்றும் கொரியா விற்கு உதவி செய்யும்—இயக்கம். மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தைக் கெட்டிப்படுத்துதல்.

தங்களுடைய தேசிய பொருளாதாரத்தை மீட்பதிலும் மாற்றம் செல்வதிலும் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருக்கும் சீன மக்களுக்கு, பொதுவான பந்தோபஸ்தும் நீடித்த சமாதானமும் கொண்டிருக்கும் ஒரு சர்வதேச நிலைமை தவிர்க்க முடியாததாக இருந்தது.

1950 ஜூனில், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் அவர்களது ஆக்கிரமிப்பு யுத்தத்தை கொரியாவிற்கு எதிராக துவக்கினார்கள். மேலும் அமெரிக்க ஏழாவது கடற்படை ஏக காலத்தில் தைவானையும் கைப்பற்றிற்று. கொரியா முழுவதையும் வென்று, பிறகு சீனாவின் மீது படை எடுப்பது, உலகம் முழுவதையும் ஆதிக்கம் செலுத்துவது என்ற அவர்களது பேராசைத்தனமான குறிக்கோளின் பகுதியாக இருந்தது. கொரிய யுத்தத்தின் ஆரம்பத்தில் இருந்தே, சீன மக்கள் ஒரு சமாதான பூர்வமான உடன்பாட்டைப் பற்றி வற்புறுத்தி வந்தார்சள்; கொரியாவிற்கு எதிரான அதனுடைய ஆக்கிரமிப்பை உடனடியாக நிறுத்த கோரிக்கொண்டும் மற்றும் தைவானில் இருந்து அதனுடைய ஆயுதப் படைகளை வாபஸ் பெற கோரிக் கொண்டும் இருந்தார்கள். இந்த ஆலோசனையையும் எச்சரிக்கையையும் அலட்சியப்படுத்திக் கொண்டு அமெரிக்க ஆக்ரமிப்பாளர்கள் கொரியாவில் முண்டியடித்துச் சென்று அவர்களது ஈட்டிமுனையை சீனாவின் வடகிழக்கு எல்லைகளை நோக்கி திசை திருப்பி, சீனாவின் பாதுகாப்பை கடுமையாக அபாயத்திற்கு உள்ளாக்கி கொண்டிருந்தார்கள். சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு சீன மக்கள் ஆயுதங்களோடு வீறுகொண்டு எழுந்தார்கள். சீன மக்களின் தொண்டர்கள் ஸ்தாபன ரீதியாக திரட்டப்பட்டு, தூர கிழக்கில் சமாதானத்தைப் பாதுகாப்பதற்கும், ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்கும் கொரிய மக்கள் படையோடு தோளோடு தோள் நின்று போராடுவதற்கு அக்டோபர் 25-இல் எல்லையைக் கடந்தார்கள். சீன மக்களின் உற்சாகமான ஆதரவோடு 1951 மே மாத வாக்கில் எதிரி துருப்புகள் முப்பத்தி எட்டாவது அட்ச ரேகைக்கு அருகில் மீண்டும் துரத்தி அடிக்கப்படும் வரையிலும்—அங்குதான் ஆக்கிரமிப்பு யுத்தத்தை அவர்கள் முதலில் ஆரம்பித்திருந்தார்கள்—சீன மக்களின் தொண்டர்கள் ஒரு வெற்றிக்கு பின் மற்றொரு வெற்றியை பெற்றுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுதில் இருந்து.

சீன மக்களின் தொண்டர்களும், கொரிய மக்கள் படையும் சுறு சுறுப்பான பாதுகாப்பின் ஒரு நிலைநின்று போராடும் யுத்த முறையைக் கையாண்டு கொரியா முழுவதிலும் குறுக்கே கொத்தளங்களின் ஊடுருவப்பட முடியாத அணி ஒன்றினை நிர்மானித்தார்கள்; இந்த முறையில், உத்தேசமாக முப்பத்தி எட்டாவது அட்ச ரேகை நெடுகிலும் முன்னணியை நிர்ணயமாக வைத்துக் கொண்டிருந்தார்கள்; எனினும், 1951 டிசம்பர் ஆரம்பத்தில் இருந்து அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள், சர்வதேச சட்டத்தையும் மனித இனத்தையும் மீறி, பெரும் அளவிலான கிருமி யுத்த முறையைக் கையாண்டார்கள். ஆனால் இந்தக் கடுமையான அக்கிரமம் அவர்களது ராணுவ நடவடிக்கைகளைக் காட்டிலும் எந்த விதத்திலும் அதிக சக்தி வாய்ந்ததாக நிரூபிக்கப்பட முடியவில்லை.

ஒரு நியாயமான, நேர்மையான அடிப்படையில் கொரியப் பிரச்சனைக்குச் சமாதான பூர்வமான தீர்வு காணுவதற்காக நிலைமைகளை உருவாக்கும் ஒரு நோக்கோடு சீன மக்களும் கொரிய மக்களும் ஆக்கிரமிப்பிற்கு எதிரானதொரு யுத்தத்தில் ஈடுபடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தமையால், அவர்களும் அவர்களது அரசாங்கங்களும் 1951 ஜூனில் சோவியத் யூனியனால் கொடுக்கப்பட்ட ஒரு யுத்த நிறுத்த ஆலோசனைக்கு உடனடியாக இணக்கம் தெரிவித்தார்கள். கொரிய மற்றும் சீன ஆயுதப் படைகளின் வலுவான பலத்தின் எதிரிலும் மற்றும் அவர்களது தோல்வியில் இருந்து ஏற்பட்டிருந்த ஏகாதிபத்திய முகாமிற்கு உள்ளே இருந்த கடுமையான முரண்பாடுகளின் முன்பாகவும், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் இதைப் போலவே இணக்கம் தெரிவிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், உலகத்தை ஆதிக்கம் செலுத்துவதற்கு எண்ணம் கொண்டிருந்தமையால், சமாதான நிபந்தனைகளுக்கு இணங்கி வருவதற்கு உண்மையான எண்ணம் இல்லாமல் இருந்தார்கள். அப்பொழுது கொரியாவில் யுத்த நிறுத்த பேச்சு வார்த்தைகள் மூர்க்கதனமானதொரு ராணுவ போரட்டமாகவும் ராஜ தந்திர போராட்டமாகவும், சிக்கலான போராட்டமாகவும் நீடித்த போராட்டமாகவும், மாற வேண்டியது முற்றிலும் இயல்பானதாகவே இருந்தது. ஒரு ராணுவ எல்லைக்கோடு நிறுவப்படுவது பற்றியும் மோதல்களைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பது பற்றியும் பேச்சு வார்த்தைகள் நடை பெற்றுக் கொண்டிருந்த அதே சமயத்தில், அமெரிக்க

ஏகாதிபத்திய வாதிகள் ஆயுத நிர்பந்தத்தினாலும் மற்றும் இதர திமிரான நடவடிக்கைகளாலும் பேச்சு வார்த்தைகளை அவர்களுக்கு சாதகமாக ஆக்குவதற்கு முயற்சித்தார்கள். அப்பொழுது உடன்பாடு அநேகமாக எய்தப்படும் என்ற நிலைமை ஏற்பட்டபொழுது, யுத்த கைதிகளைப் பரிவர்த்தனை செய்யும் பிரச்சினையின் மீது அவர்கள் வெட்கங்கெட்ட முறையில் தாமதப் படுத்தும் தந்திரங்களையும் தடைப்படுத்தும் தந்திரங்களையும் கையாண்டார்கள். சீனாவும் கொரியாவும் திரும்பத் திரும்ப எதிரியின் "ராணுவ நிர்பந்தத்தையும்" மற்றும் விஷமத்தனமான சூழ்ச்சிகளையும் நொறுக்கித் தள்ளி, அவர்களது விடாப்பிடியான திமிருக்கு கடுமையான அடிகளைக் கொடுத்து அவர்களது சூழ்ச்சிகளை முறியடித்தார்கள்; இந்த முறையில் போர்க்களத்தில் அவர்கள் எதைப் பெறுவதற்கு தவறினார்களோ அதனை மாநாட்டு மேஜையில் பெறுவதை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு சாத்தியமற்றதாகச் செய்தார்கள். அதே சமயத்தில், சமாதான பூர்வமான தீர்வுக் கொள்கையைப் பின்பற்றுவதில் சீனாவும் கொரியாவும் மகத்தான உறுதியையும் பொறுமையையும் காட்டினார்கள். இறுதியாக, கொரிய தற்காலிய யுத்த நிறுத்தப் பேச்சு வார்த்தைகளில் ஒரு உடன்பாடு காணப்பட்டது; இந்த உடன்பாடு இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்திருந்தது. யுத்த நிறுத்த உடன்பாடு 1953 ஜூலை 27-இல் கொரியாவில் பான்முன்ஜாமில் கையெழுத்தாயிற்று.

பல்வேறு இதர நாடுகளின் துருப்புகளோடு கூடவே அமெரிக்க, கொரிய யுத்தத்தில் அதனுடைய ஆயுதப் படைகளின் நல்லதொரு பகுதியைக் குவித்திருந்த போதிலும், பத்துலட்சம் பேர்களுக்கு அதிகமாக இழப்பை விலையாக கொடுத்திருந்த போதிலும் மற்றும் இரண்டாயிரம் கோடி அமெரிக்க டாலர்களுக்கும் அதிகமாக செலவு செய்தபோதிலும், அமெரிக்கா அதனுடைய இலட்சியத்தை அடைவதற்கு இன்னும் தவறி இருந்தது; அதே சமயத்தில், கொரிய, சீன மக்கள்களின் ஆயுதப்படைகள் யுத்தத்தில் சீராக பலமடைந்து தொடர்ந்து பிரகாசமான வெற்றிகளைப் பெற்றது. இந்த வெற்றிகள் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளைப் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடும்படி நிர்ப்பந்தித்தது. சீன மற்றும் கொரிய மக்கள்களின் இந்த வெற்றி, கொரிய ஜனநாயக மக்கள் குடியரசு பாதுகாப்பதோடும், சீனாவின் தேசியப் பாதுகாப்புகளைப் பலப்படுத்துவதோடும் விழிப்புற்று எழுந்துள்ள ஒரு தேசம்

அதனுடைய சொந்த சுதந்திரத்திற்காகவும் பந்தோபஸ்திற்காக வும் போராடும்பொழுது வெல்ல முடியாததாக உள்ளது என்பதனையும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்தது. இந்த வெற்றி அமெரிக்காவிற்கும் ஏகாதிபத்திய முகாம் முழுமைக்கும் கடுமையானதொரு அடியாக இருந்தது; மற்றும் தூரகிழக்கிலும் உலகத்திலும் சமாதானத்தையும் உறுதிப் படுத்திற்று. இவை அனைத்தும் சீனாவில் பொருளாதார புனருத்துவராணம் மற்றும் நிர்மானம் ஆகியவற்றின் சுமுகமான முன்னேற்றத் திற்கு இன்றியமையாததாக இருந்தது.

அதனுடைய சோஷலிச நிர்மானத்திற்கு சீனாவிற்கு நீடித்த சமாதானமும் தேவையாக இருந்தது; இந்த நிலைமையையும் சமாளிப்பதற்கும் அதனுடைய சோஷலிச நிர்மானத்தைப் பாது காப்பதற்கும் நவீன சாதனங்களோடு கூடியதொரு ராணுவமும் அதற்கு தேவைப்பட்டது. இந்த காரணத்திற்காக, கட்சி மக்கள் விடுதலை சேனையை அதனுடைய பூர்வோத்திர அடிப்படையின் மீது நவீனப்படுத்திற்று. அமெரிக்க ஆக்கிரமிப்பைஎதிர்ப்பதற்கும் கொரியவிற்கு உதவி செய்வதற்குமான இயக்கம், முன்னேறிக் கொண்டிருந்த சமயத்தில், கட்சி, மக்கள் விடுதலை சேனையை நவீனப்படுத்திற்று. மக்கள் விடுதலை சேனை தரையிலும் கடலிலும் ஆகாயத்திலும் வலிமை மிக்கதொரு ராணுவப்படை யாக மாற்றப்பட்டிருந்தது. நவீன விஞ்ஞானத்தையும், தொழில் நுட்ப விஞ்ஞானத்தையும் மற்றும் நவீன ராணுவ விஞ்ஞானத்தையும் கற்றுணர்வதற்கான ஒரு இயக்கம் மக்கள் விடுதலை சேனையில் தொடர்ந்து நடத்தப்பட்டது. ராணுவம் ஒழுங்குப் படுத்தப்பட்டது. அதனுடைய தலைமையிலும், ஸ்தாபனத்திலும், பயிற்சியிலும் மற்றும் கட்டுப்பாட்டிலும் ஒன்று படுத்தப்பட்டது. ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து சாத்தியமான திடீர்த் தாக்குதலுக்கு எதிராக எச்சரிக்கையாக இருக்கும் பொருட்டு, அரசாங்கம் தேசிய பாதுகாப்பிற் கான அவசியமான கொத்தளங்களையும் நிர்மாணித் திருந்தது; மற்றும் ஒரு சேமிப்பு படைக்கான திட்டங்களையும் தீட்டி இருந்தது. ஏகாதிபத்திய தாக்குதலுக்கு எதிராக நாட்டை பாதுகாக்கும் கடமையும் மற்றும் சோஷலிச நிர் மானத்தை பாதுகாத்துக் கொண்டிருக்கும் கடமையும் மக்கள் விடுதலை சேனையின் மிகமிக முன்னணியான ஒரு கடமையாக அங்கம் வகித்தது.

நாட்டுற்குள் இருந்த பிற்போக்கு வர்க்கங்கள் தூக்கி எறியப் பட்டிருந்த போதிலும், எந்த விதத்திலும் தோல்விக்கு அடி

பணிய விரும்பாமல் இருந்தன. விடுதலைக்குப் பிறகு ஆரம்ப ஆண்டுகளில், பெருவாரியான எதிர்ப்புரட்சிவாதிகள் இன்னும் புதிதாக விடுவிக்கப்பட்ட ஏரியாக்களில் மொய்த்துக் கொண்டிருந் தார்கள். பழைய விடுதலை பெற்ற ஏரியாக்களிலும் கூட ஒழிந்து கொண்டிருந்த எதிர்ப்புரட்சிவாதிகள் இருந்தார்கள். கலகங்களை ஆரம்பிப்பதற்கும், பல்வேறு நாச வேலை நடவடிக் கைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கும் மற்றும் வெகுஜனங்கள் இடையே பணியாற்றிக் கொண்டிருந்த புரட்சிகரமான ஊழியர் களையும் தீவிரவாதிகளையும் கொலை செய்வதற்கும் அவர்கள் எதிர்ப்புரட்சிவாத தலைமறைவு ஸ்குவாரீடுகளையும் மற்றும், "அரசியல்," கொள்ளைக்காரர்களின் கும்பல்களையும் அமைத் திருந்தார்கள். மக்களாட்சியைக் கெட்டிப்படுத்துவதற்கும் பொருளாதார நிர்மாணத்தைப் பாதுகாப்பதற்கும், 1950 டிசம்ப ரில் சீன மக்கள் எதிர்ப் புரட்சிவாதிகளை நசுக்குவதற்கான நாடு தழுவியதொரு இயக்கத்தைத் துவக்கினார்கள். கட்சியின் மத்திய கமிட்டியாலும் தோழர் மாசே-துங்கினாலும் வகுக்கப்பட்டிருந்த கொள்கையைச் சரியாக அனுஷ்டித்ததின் விளைவாக, முக்கியப் தலைவர்களுக்கு தண்டனையும் நிர்ப்பந்திக்கப்பட்டிருந்த உடந்தையாளர்களுக்கு மன்னிப்பும், மனம்திறந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுப்பவர்களின்பால் தயவு காட்டுவதும், அப்படி செய்ய மறுப்பவர்களின்பால் கடுமை காட்டுவதும், செய்த சேவைக்காக குற்றங்களை மன்னிப்பதும் மற்றும் விஷேசமாக தலை தூக்கி நிற்கும் சேவைக்காக வெகுமதி அளிப்பதும் மற்றும் மத்தியமக்கள் அரசாங்கத்தினால் பிரகடணம் செய்யப்பட்டிருந்த எதிர்ப்புரட்சி வாதிகளுக்கு தண்டனை வழங்குவது சம்மந்தமான ஒழுங்கு விதிகளின் படியும், சகல கொள்ளைக்காரர்களுக்கும் ரகசிய ஏஜெண்டுகளுக்கும் பிற்போக்கு கட்சிகள், குழுக்கள் ஆகியவற்றின் முக்கிய உறுப்பினர்கள் மற்றும் பிற்போக்கு ரகசிய கழகங்களின் தலைவர்கள்—இன்னும் மக்களின் மீது முரட்டுத்தன மாக சவாரி செய்துக் கொண்டிருந்தவர்கள்—ஆகியோருக்கு தண் டணை வழங்கப்பட்டது; மற்றும் நாட்டிற்கு எதிராகவும் மக் களுக்கு எதிராகவும் கடுமையான குற்றங்களைப் புரிந்திருந்த அப கீர்த்திவாய்ந்த முக்கிய தலைவர்களுக்கு கடுமையான தண்டனை யும் கொடுக்கப்பட்டது.

எதிர்ப்புரட்சிவாதிகளை ஒடுக்குவதில் அபரிமிதமான வெற்றி கிட்டியதால். கட்சி மற்றும் மக்கள் அரசாங்கத்தின் அந்தஸ்து உயர்த்தப்பட்டது; மக்களின் ஒருமைப்பாடு பலப்

படுத்தப்பட்டது; மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் கெட்டிப் படுத்தப்பட்டது; மற்றும் தேசிய பொருளாதாரத்தின் மீட்சியும் அபிவிருத்தியும் உறுதிப்படுத்தப் பட்டது.

இதைப் போலவே மக்கள் ஜனநாயக ஆட்சியை, நிர்மாணிப் பதிலும் மாபெரும் சாதனைகள் பெறப்பட்டிருந்தன.

பொதுவான திட்டத்திற்கு ஏற்புடைய முறையில் நாட்டின் அடிப்படையான அரசியல் அமைப்பு சர்வஜன வாக்குரிமையால் தேர்ந்தெடுக்கப்பட்ட உண்மையான ஜனநாயக மக்களின் காங்கிரசுகளின் ஒரு அமைப்பாக இருந்தது. சீன மக்களின் குடியரசின் ஆரம்ப ஆண்டுகளில், பிரதான பூமி இன்னும் விடுதலை அடையாமல் இருந்த பொழுது, நாட்டின் பெரும் பகுதியில் விவசாய சீர்திருத்தம் இன்னும் முழுமையாக நிறைவேற்றப் படாமலும் மற்றும் பரந்துபட்ட வெகுஜனங்கள் இன்னும் முழுமையாக ஸ்தாபன ரீதியாக திரட்டப்படாமலும் இருந்த பொழுது, நாடு தழுவியதொரு அளவில் சர்வஜன வாக்குரிமையினால் தேர்தல்களை நடத்துவது சாத்தியமற்றதாக இருந்தது. இத்தகைய சூழ்நிலைமைகளின் கீழ், மக்களின் அரசியல் கலந்தாலோசனை மாநாடு தேசிய மக்கள் காங்கிரசின் அலுவல்களையும் அதிகாரங்களையும் பிரயோகிக்க வேண்டும் என்றும், மற்றும் ஸ்தல மக்களின் பிரதிநிதித்துவ மாநாடுகள் ஸ்தல மக்கள் காங்கிரசுகளின் அலுவல்களையும் அதிகாரங்களையும் படிப்படியாக பிரயோகிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப் பட்டது. மாறிச் செல்லும் காலகட்டத்தில், இப்படிப்பட்ட தற்காலிக நடவடிக்கைகள் முற்றிலும் அவசியமாக இருந்தன.

விடுதலைக்குப் பிறகு முதல் மூன்று ஆண்டுகளில், மக்களின் பிரதிநிதித்துவ மகாநாடுகள் பல்வேறு மாகாணங்களிலும், நாடு முழுவதிலும் இருந்த நகர் மன்றங்கள், கிராமப் புறங்கள் மற்றும் நகரியங்கள் ஆகியவற்றில் கூட்டப்பட்டு நிலைநாட்டப்பட்டன. நகரிய மக்கள் பிரதிநிதித்துவ மாநாடுகளின் பிரதிநிதிகளின் பரவலான பெரும்பான்மையோா மக்களால் நேரிடையாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்; கிராமப்புறங்கள் மற்றும் நகர் மன்றங்களின் மக்கள் பிரதிநிதித்துவ மாநாடுகளின் பிரதிநிதிகள் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்த முறையில் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொதுவாக மொத்தத்தில் 80%த் திற்கும் அதிகமாக இருந்தார்கள்.

விவசாய சீர்திருத்தம், அமெரிக்காவை எதிர்த்து போராடு

வதும் மற்றும் கொரியாவிற்கு உதவி செய்வதுமான இயக்கம், எதிர்ப்புரட்சிவாதிகளை ஒடுக்குதல், ஜனநாயக சீர்திருத்தத்திற்கான இயக்கம் மற்றும் உற்பத்தி அதிகரிப்பிற்கான தேசபக்த இயக்கம் போன்ற இப்படிப்பட்ட, மக்களாலும் அவர்களது அரசு அதிகாரத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட, கிட்டத்தட்ட சகல முக்கியமான வேலையும் மக்களின் மாநாடுகளில் தீர்க்கமாக விவாதிக்கப்பட்டு இப்படிப்பட்ட இயக்கங்களில் பங்கெடுப்பதற்கு வெகுஜனங்கள் அணி திரட்டப்பட்டிருந்தார்கள். இந்த முறையில், மக்களின் அரசியல் உணர்வு,தேசபக்தி, புரட்சிகரமான கண்காணிப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிப்பதற்கான முன்கை எடுத்தல் ஆகியவை மிகவும் உயர்த்தப்பட்டிருந்தன.

இந்தக் காலகட்டத்தில் ஜனநாயக சீர்திருத்தங்கள் தொழிலாளிகள் மற்றும் உழைக்கும் மக்களின் இதர பகுதியினரிடையே நிறைவேற்றப்பட்டிருந்தன. அவர்களது அணிகளின் மறைந்திருந்த மிச்சசொச்ச நிலப்பிரபுத்துவ பேர்வழிகள் ஒழிக்கப்பட்டார்கள். எதிர்ப்புரட்சிவாதிகள் வேரோடு பிடுங்கி எறியப்பட்டார்கள். பழைய தொழில் நுட்பவாதிகள் ஒன்றுபடுத்தப்பட்டு மீண்டும் வார்த்தெடுக்கப்பட்டார்கள். காலவதியாகி போயிருந்த பகுத்தறிவிற்கு ஒவ்வாத முறைகள் ஒழிக்கப்பட்டு, புதிய ஜனநாயக முறைகள் கையாளப்பட்டன. இத்தகைய சீர்திருத்தங்கள் தொழிலாளிகள் மற்றும் இதர உழைக்கும் மக்களின் அரசியல் உணர்வையும் உற்பத்தியை அதிகரிப்பதற்கான முன்கை எடுத்தலையும் உயர்த்துவதற்கு உதவி செய்தன.

இந்தக் காலகட்டத்தில் அறிவு, ஜீவிகளிடையே சித்தாந்த ரீதியான மீண்டும் வார்த்தெடுப்பதற்கான ஒரு இயக்கம் துவக்கப்பட்டது. சோஷலிச நிர்மாணத்தின் மாபெரும் கடினமான கடமைக்குச் சாத்தியமான அளவிற்கு பலபுத்தி ஜீவிகளின் சேவை தேவைப்பட்டது. எனவே அறிவு ஜீவிகள் தங்களை முழுமையாக மீண்டும் வார்த்தெடுப்பதும் மற்றும் வாழ்க்கையைப் பற்றிய ஒரு பாட்டாளி வர்க்ககண்ணோட்டத்தைப் படிப்படியாக பெறுவதும் அவசியமாக இருந்தது. அந்த இயக்கம் ஒரு வெகுஜன இயக்கத்தின் உருவத்தை எடுத்தது; அந்த வெகுஜன இயக்கம் அறிவு ஜீவிகளின் சுயகருவிக்காகவும் மற்றும் சுய புனர் வார்த்தெடுப்பிற்காகவுமான விமர்சனம் மற்றும் சுய விமர்சனம் ஆகிய கல்வி கற்கும் முறையின் மீதும் சார்ந்து நின்றது. அந்த இயக்கத்தில் புத்தி ஜீவிகளின்மீது இருந்த ஏகாதிபத்திய, பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவ மற்றும் அதிகார வர்க்க-முதலாளித்துவ செல்வாக்குகள் முற்றி

லும் அம்பலப்படுத்தப்பட்டு பெரும் அளவில் பெருக்கித் தள்ளப் பட்டது; பூர்சுவா மற்றும் குட்டி பூர்சுவா கருத்துக்கள் விமர்சிக்க பட்டன மற்றும், "அறிவு ஜீவிகள் யாருக்கு சேவை செய்ய வேண்டும்?" என்ற கேள்விக்கு சரியானதொரு பூர்வாங்கமான பதில் கொடுக்கப்பட்டிருந்தது. மிகப் பெரும்பாலான அறிவு ஜீவிகள் சோஷலிச அமைப்பின் ஆதரவாளர்களாக மாறி' மார்சிய-லெனினியத்தை கற்று உணர்வதற்கு சக்தி வாய்ந்த முறையில் தங்களை ஈடுபடுத்தினார்கள். காலப் போக்கில், ஒரு சிறு எண்ணிக்கையிலான புத்தி ஜீவிகள் கம்யூனிஸ்ட்களாக மாறினார்கள். புத்தி ஜீவிகளிடையே பாட்டாளி வர்க்க கருத்துக்களின் தலைமை தாங்கும் பாத்திரம் அதன் மூலம் மிகவும் அதிகமாக உறுதியாக நிலை நாட்டப்பட்டு மேலும் கெட்டிப்படுத்தப்பட்டது.

இதைப்போலவே, இந்தக் கால கட்டத்தில் தேசிய இனங்கள் சம்மந்தமான வேலையில், மாபெரும் வெற்றிகள் பெறப் பட்டன.

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் சிறுபான்மை மக்கள் ஆறு சதவீதமாக இருந்தார்கள்; ஆனால் அவர்கள் வசித்து வந்த ஏரியாக்கள் சீனாவின் மொத்த பிரதேசத்தில் கிட்டத் தட்ட 60 சதவிதமாக இருந்தது; இந்தப் பிரதேசத்தில் அதிக பான பகுதி தொழில் செல்வாதாரங்களில் மூலாதாரங்களில் செழிப்பாக இருந்தது.

மார்க்சிய-லெனினியத்தின்படி, முழுமையான ஜனநாயக மாக்குதல் தேசிய பிரச்சினையின் தீர்விற்கு அடிப்படையாக இருந்தது. பல தேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாட்டில் பின்பற்றப் படவேண்டிய அடிப்படையான பாதை, பல்வேறு தேசிய இனங்களிடையே உண்மையான ஒத்துழைப்பை அடிப் படையாகக் கொண்ட பிரதேச சுய ஆட்சி உரிமையை ஸ்தாபிப் பதாகவும், அரசியலிலும், பொருளாதாரத்திலும் தேசிய சமத்துவ கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பதாகவும் மற்றும் பல் வேறு தேசிய இனங்களின் வரலாற்று ரீதியான சிறப்புத் தன்மை களையும் வேறுபாடுகளையும் கணக்கில் எடுத்துக் கொள்வதுமாக இருந்தது. முதலாவதாக, தொழிலாளி வர்க்கத்தினால் தலைமை தாங்கப்பட்ட ஒரு மக்கள் ஜனநாயக அரசாக சீனா இருந்தமை யால், முற்றிலும் ஜனநாயக முறைகளால் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணுவது அதற்கு சாத்தியமாக இருந்தது. இரண்டாவ தாக, தேசிய இனங்களிடையே சமத்துவம், நட்புறவு மற்றும்

பரஸ்பர உதவி என்ற கருத்திலிருந்து ஆரம்பித்து, தேசிய பிரதேச சுய ஆட்சி கோட்பாட்டினைப் பிரயோகிப்பதின் மூலம் சுய ஆட்சி உரிமைக்கான சிறுபான்மையோரின் உரிமை பாதுகாக்கப் பட்டது. தேசிய பிரதேச சுய ஆட்சியின் சாதகங்கள் இருவகைப் பட்டவை; அவர்களது திட்டவட்டமான நிலைமைகளுக்கு ஏற் புடைய முறையில் அது சிறுபான்மை மக்கள்களுக்கு அவர்களது சொந்த விவகாரங்களை நிர்வகிக்கும் அதிகாரத்தையும் அவர் களது சொந்த வளர்ச்சியை அபிவிருத்தி செய்வதற்கான அதி காரத்தையும் கொடுத்தது; மற்றும் சகல சகோதர தேசிய இனங் களையும் சம அந்தஸ்தின் அடிப்படையிலும், சம உரிமைகளின் அடிப்படையிலும் ஒரு பெரிய குடும்பமாக அது ஒன்றுபடுத் திற்று. அப்படிச் செய்ததினால், நாட்டின் கூட்டு நிர்வாகத்திலும் அபிவிருத்தியிலும் அவர்கள் பங்கெடுக்க முடியும். தாய் நாட்டின் பெரிய குடும்பத்தில் ஒன்று கூடி வாழ்வது சகல தேசிய இனங்களின் பொதுவான விருப்பமாகவும் வரலாற்று ரீதியான அபிவிருத்தியைத் தவிர்க்க முடியாததின் விளைவாகவும் இருந்தது. மூன்றாவதாக, ஹன் தேசிய இனம், சம்மந்தப்படுத்தி பார்க்கும் பொழுது, மிக உயர்வானதொரு பொருளாதார அரசியல் மற்றும் கலாச்சார மட்டத்தைப் பெற்றிருந்த ஒரு தேசிய இனமாக இருந் தமையால், அந்த இனம் இதர தேசிய இனங்களுக்கு உதவி செய்ய வேண்டும். அதே சமயத்தில், இதர தேசிய இனங்கள் இந்த உதவியின் முக்கியத்துவத்தை உணரவும் வேண்டும். ஹன் இன வெறிவாதம் மற்றும் ஸ்தல தேசியவாதம் ஆகிய இரண்டுமே தவறானவை. ஹன் இனவெறிவாதம், தேசிய சிறுபான்மை களின் விசேஷ குணாம்சங்களைப் புறக்கணிக்கும் போக்குடைய தாகவும் நாட்டின் சோஷலிச நிர்மாணத்தில், அவர்கள் வகிக்கக் கூடிய பாத்திரத்தைப் புறக்கணிக்கக் கூடியதாகவும் அவர்களது அபிவிருத்தியையும் முன்னேற்றத்தையும் மற்றும் சமத்துவத்திற் கும் சுய ஆட்சிக்கும் அவர்களுக்கு இருக்கவேண்டிய உரிமைகளைப் புறக்கணிக்கும் போக்குடையதாகவும் இருந்தது. ஸ்தல தேசிய வாதம் பல்வேறு தேசிய இனங்களின் பொதுவான நீண்டகால நலன்களை அலட்சியப் படுத்தும் போக்குடையதாகவும், ஒட்டு மொத்தமாக தேசத்தின் நலன்களையும் மற்றும் ஒரு தேசிய இனம் மற்றொரு தேசிய இனத்திடமிருந்து பெறக்கூடிய மதிப்பு மிக்க அனுபவத்தையும் உதவியையும் புறக்கணிக்கும் போக்குடை யதாகவும் இருந்தது. நான்காவதாக, ஜனநாயக சீர்திருத்தங்

களையும் சோஷலிச மாற்றத்தையும் நிறைவேற்றுவதில் அனுஷ்டிக்கப்படும் முறைகளும் நடவடிக்கைகளும் சகல தேசிய இனங்களுக்கும் ஒரே மாதிரியானதாக இருக்க முடியாது. ஏனெனில், ஒவ்வொரு தேசிய இனமும் அதற்கே உரித்தான வரலாற்று ரீதியான பின்னணியைப் பெற்றிருந்தது. அவர்களது வேறுபாடுகள் அவர்களது சித்தங்கள் மற்றும் அரசியல் உணர்வு மற்றும் அவர்களுக்கு இடையே இருந்த கடந்தகால தடங்கல் களின் சொச்சமாக இருப்பவையும்கூட பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டி இருந்தது. தேசிய சிறுபான்மையின ரிடையே சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதில் சமாதான பூர்வமான முறைகளைக் கண்டிப்பாக கடைபிடிப்பது அவசியமாக இருந்தது. மற்றும் அவர்களது சொந்த பிரச்சினைகளின் மீது சிந்திக்கும்படி, சிறுபான்மையோர்களை அனுமதிப்பதும் அவசிய மாக இருந்தது. நீண்டதொரு காலகட்டத்திற்கு தேசிய சிறு பான்மையோர்களின் மேல்தட்டு மக்களோடு ஒன்றுபட்டு ஒத்துழைப்பதும் வேலை சம்பந்தமாக அவர்களோடு இடை விடாது கலந்தாலோசிப்பதும்கூட அவசியமாக இருந்தது. நிதானமான நடவடிக்கைகளினால் தேசிய சிறுபான்மையோர் களிடையே சீர்திருத்தங்களை நிறைவேற்றும் இந்தக் கொள்கை சீனாவில்தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணுவதில் உண்மை யான நிலைமையின் தேவைகளைப் பிரதிபலித்தது.

விடுதலைக்கு பிறகு, தேசிய சிறுபான்மையர்களுக்கு உற்பத்திக் கருவிகளை அளிக்க செய்யவும் மற்றும் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்யவும் மற்றும் விசேஷ ஸ்தல உற்பத்தி பொருட்களை அவர்களிடமிருந்து கொள்முதல் செய்யவும், கொள்முதல் செய்வதும் விற்பதும் நியாயமான விலைகளில் செய்யப்படுவதற்கும், தேசிய சிறுபான்மையோர்கள் குடியிருக்கும் தொலைவில் உள்ள, பாதை ஓரத்தில் இல்லாத மாவட்டங்களில் அரசினால் நடத்தப்படும் வியாபார நிறுவனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. சிறுபான்மை மக்கள் விரும்பியபடி விவசாய சீர்திருத்தம் அவர்களது விவசாய ஏரியாக்களில் நிறைவேற்றப் பட்டது. இதர அவசியமான சீர்திருத்தங்கள் அவர்களது மேய்ச்சல் ஏரியாக்களில் நிறைவேற்றப்பட்டன. மக்கள் அரசாங்கம், அவர்களது விவசாயமும் கால்நடை வளர்ப்பும் அபிவிருத்தி அடைவதற்கு பல்வேறு வழிகளில் உதவி செய்தது. சுகாதார நிலையங்கள் ஒவ்வொரு கிராமப்புற பிரதேசத்திலும் ஏற்பாடு செய்யப்பட்டன. அதன் விளைவாக

மக்கள் தொகை சீராக அதிகரிக்க ஆரம்பித்தது. சிறு பான்மையோர் வாழ்ந்த ஏரியாக்களில் செய்திப் போக்கு வரத்துகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. மற்றும் சில இடங்களில் நவீன தொழில்கள் நிர்மாணிக்கப்பட்டன. உள் மங்கோலியாவிலும், சிங்கியாங்கிலும் இரும்பு மற்றும் உருக்கு உற்பத்திக்கான பெரும் தளங்களும், இரும்பு அல்லாத உலோகத் தொழில்கள் மற்றும் எண்ணெய் தொழில்களும் நிர்மாணிக்கப்பட்டன. கட்சி உறுப்பினர்களை சுறுசுறுப்பாகவும், புத்திசாலித்தனமாகவும் சேர்க்கும் கொள்கையை பின்பற்றியும், மற்றும் பெரும் எண்ணிக்கைகளிலும் பரவலானதொரு அடிப்படையிலும் சிறுபான்மை இனத்தோர்களின் பயிற்றுவிக்கும் கொள்கையைப் பின்பற்றியும், கட்சி சிறுபான்மையோர் வாழ்ந்த பகுதிகளில் தன்னை நிலைநாட்டிக் கொண்டு பல ஸ்தல ஊழியர்களைப் பயிற்றுவித்தது. மக்கள் அரசாங்கம் சிறுபான்மை இனமக்களுக்கு அவர்களது கல்வியிலும் உதவி செய்தது. மற்றும் அவர்களது எழுதுவதற்கான மொழிகளை வகுப்பதிலும் அல்லது அபிவிருத்தி செய்வதிலும் அவர்களில் பல தேசிய இனத்தவரோடு ஒத்துழைப்பதற்கும் மாபெரும் கவனத்தையும் செலுத்திற்று. அவர்களது வழக்கங்கள், பழக்கங்கள் மற்றும் மதங்களுக்கும் முழுமையான மரியாதை கொடுக்கப்பட்டன. இந்த முறையில், சகல தேசிய இனங்களும் நாட்டின் ஒரு பெரிய குடும்பமாக ஒன்றுபடுத்தப்பட்டன. மற்றும் அரசியலிலும், பொருளாதாரத்திலும் மற்றும் கலாச்சாரத்திலும் குறிப்பிடத்தக்க மற்றும் ஈடு இணையற்ற முன்னேற்றங்களும் சாதிக்கப்பட்டிருந்தன. மார்க்சிய-லெனினிய தேசிய இன தத்துவமும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய இனக்கொள்கையும் சீனாவிலிருந்த சகல தேசியஇனங்களும் முன்னேறிச் செல்லக்கூடிய பாதையை ஒளிமயமாக்கின.

1951 மே மாதத்தில் திபெத்தை சமாதான பூர்வமாக விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகள் பற்றிய உடன்பாடு மத்திய மக்கள் அரசாங்கத்திற்கும் திபெத்தின் ஸ்தல அரசாங்கத்திற்கும் இடையே கையெழுத்து ஆயிற்று.

திபெத்தின் ஸ்தல அரசாங்கம் ஏகாதிபத்திய செல்வாக்குகளை உறுதியாக ஒழித்துக்கட்ட வேண்டும் என்றும் மக்கள் விடுதலை சேனை திபெத்தில் நுழைவதற்கு சுறுசுறுப்பாக உதவி செய்ய வேண்டும் என்றும்; திபெத்தின் சகல அந்நிய விவகாரங்களும் மத்திய மக்கள் அரசாங்கத்தினால் கையாளப்பட வேண்டும் என்றும்,வேறுவார்த்தைகளில் சொன்னால்,திபெத்திய

ஸ்தல அரசாங்கம் ஏகாதிபத்தியவாதிகளோடு உள்ள உறவுகளை முறித்துக்கொள்ள வேண்டும் என்றும் மற்றும் சீன மக்கள் குடியரசின் பெரும் குடும்பத்தோடு மீண்டும் சேர வேண்டும் என்றும் உடன்பாடு வரையறுத்திருந்தது. திபெத்தினுடைய உள் நாட்டு விவகாரங்கள் சம்மந்தப்பட்டமட்டில் அதனுடைய தற்போதுள்ள அரசியல் அமைப்பும் நிலைமையும் மற்றும் தலாய் லாமாவின் அதிகாரமும் மாற்றப்படாமல் இருக்கும் என்றும் மற்றும் திபெத்திய மக்களின் மதநம்பிக்கைகள் முற்றிலும் பாதுகாப்பாக இருக்கும் என்றும் உடன்பாடு வரையறுத் கூறி இருந்தது. திபெத்தில் சமுதாய சீர்திருத்தங்களின்பால் உருப்படியானதொரு போக்கு அனுஷ்டிக்கப்பட்டிருந்தது; ஆனால், எந்த விதமான நிர்ப்பந்தமும் அங்கு இருக்காது. ஓரளவிற்கு திபெத்தின் ஸ்தல அரசாங்கமும் அதனுடைய சொந்த விருப்பத்திற்கு ஏற்ப சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. மக்கள் சீர்திருத்தங்களைக் கோரும் பட்சத்தில்,விஷயம் கலந்தாலோசிப்பதினால் தீர்வுக் காணப்படும்.

இந்த உடன்பாடு, திபெத்திய மக்களை ஏகாதிபத்திய அடிமைத்தனத்தில் இருந்து இறுதியாக விடுவித்தது. மற்றும் தேசிய சமத்துவம், பிரதேச சுய ஆட்சி ஆகிய உரிமைகளை அவர்கள் முழுமையாக அனுபவிப்பதற்கும் ஏற்படுத்திக் கொடுத் தது. விடுதலைக்குப் பிறகு, நாட்டில் இதர தேசிய இனங்களுக் கும் திபெத்திய மக்களுக்கும் இடையே இருந்த உறவுகள், திபெத் தில் ஒரு தேசபக்த, ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியை ஸ்தாபிக்கும் கட்சி வேலையின் விளைவாக பலப் படுத்தப்பட்டன. தேசிய நிர்மாணத்திற்காகவும் மற்றும் புதிய திபெத்தின் நிர்மாணத்திற்காகவும், சிகாங்-திபெத் மற்றும் சிங்காய்-திபெத் பெருவழிகள் முன்னால் போகமுடியாமல் இருந்த திபெத்திய பீடபூமியின் குறுக்கே நிர்மாணிக்கபட்டன. கூடுதலான பெருவழிகளும், திபெத்தின் பெரிய நகரங்களுக்கு இடையே நிர்மாணிக்கப்பட்டன; மற்றும் ஒரு ஆகாயவிமான பாதையும் திறக்கப்பட்டது. திபெத்தின் செல்வாதாரங்கள் பற்றிய துப்புத்துலக்களும் விரிவாக நடத்தப்பட்டன. திபெத்தின் சமாதான பூர்வமான விடுதலையின் விளைவாக, திபெத்திய மக்கள் இருட்டில் இருந்து வெளிச்சத்திற்கு வெளியேறி வருவார் கள் என்றும், திபெத்தின் மக்கள் தொகை படிப்படியாக வளரும் என்றும் மற்றும் அதனுடைய பொருளாதாரமும் கலாச்சாரமும் மேலும் அபிவிருத்தி அடையும் என்றும் எதிர்பார்க்கப் பட்டது.

இது திபெத்திய மக்களுக்கும், ஒட்டு மொத்தமாக சீன மக்களுக்கும் ஒரு வெற்றியாக இருந்தது; மார்க்சிய லெனினியத்தின் தேசிய இனதத்துவத்திற்கும்,மற்றும் சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் தேசிய இனக் கொள்கைக்கும் ஒரு வெற்றியாகவும் இருந்தது.

சீனாவில் தேசியஇன வேலையில் கிடைத்த வெற்றியும் மற்றும் பலவேறு தேசிய இனங்களின் மாபெரும் ஒற்றுமையும் சீனாவின் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தி, சீனமக்கள் குடியரசில், மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தைக் கெட்டிப் படுத்திற்று.

**4. விவசாய சீர்திருத்தத்தின் பூர்த்தி. தொழில் மற்றும் வர்த்தகம் மாற்றமடைதல். சன்ஃபான் மற்றும் ஊஃபான் இயக்கங்கள். தேசிய பொருளாதாரத்தின் புனருத்தாரத்தின் பூர்த்தி.**

அமெரிக்காவை எதிர்த்துப் போராடுதல் மற்றும் கொரியாவிற்கு உதவி செய்தல் இயக்கம், வெற்றியினால் வாகை சூடி இருந்தபிறகும், மக்களின் அரசு அதிகாரம் மேலும் உறுதிப் படுத்தப்பட்டிருந்த பிறகும், சீனமக்கள் கட்சியின் வழிகாட்டுதலின் கீழ் விவசாய அமைப்பைச் சீர்திருத்துவதற்குச் சென்றார்கள்.

மக்களின் புரட்சி யுத்தம் பிரதானமாக பூர்த்தி அடைந்திருந்தது என்பதனைக் கருத்தில் கொண்டும், மற்றும் ஏழை விவசாயிகளின் நிலமின்மையும் உற்பத்தி சாதனங்களின் பற்றாக் குறையும் அரசிடமிருந்து கிடைக்கும் கடன்களால் அகற்றப்பட முடியும் என்பதையும் கருத்தில் கொண்டு. கட்சியின் ஏழாவது மத்திய கமிட்டியின் மூன்றாவது விரிவடைந்த கூட்டம் பணக்கார விவசாயிகளை நடுநிலைமைப்படுத்தும் கொள்கையை ஏற்றுக் கொண்டது. பணக்கார விவசாயிகளின் உபரி நிலத்தையும் சொத்தையும் பறிமுதல் செய்யும் கொள்கையினிடத்தில், விரிவடைந்த கூட்டம் அவர்களது பொருளாதாரத்தை அப்படியே வைத்திருக்கும் ஒரு கொள்கையை ஏற்றுக் கொண்டது. அதன் விளைவாக, நிலச்சுவான்தார்கள் மேலும் தனிமைப் படுத்தபட்டு கிராமப்புற மாவட்டங்களில் உற்பத்தியின் மீட்சி வேகப்படுத்தப்பட்டது.

1950-ஜூன் 30-இல், மத்திய மக்கள் அரசாங்கம், சீனமக்கள் குடியரசின் விவசாய சீர்திருத்த சட்டம் பிரகடனம் செய்யப்

பட்டது; இந்த சட்டத்தின் வழிகாட்டுதலின் கீழ், சகல புதிதாக விடுவிக்கப்பட்ட ஏரியாக்களில் உள்ள மக்கள் விவசாய சீர் திருத்தத்திற்கான போராட்டத்தில் குதித்தார்கள். 1952 இறுதி வாக்கில், விவசாய சீர்திருத்தம் நாடுமுழுவதிலும் அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட்டது; இதற்கு சிறுபான்மை மக்களால் குடியேற்றப்பட்டிருந்த ஏரியாக்கள் மட்டுமே விதிவிலக்காக இருந்தது. சீர்திருத்தத்தின் விளைவாக, எழுபது கோடி மோவ் நிலம், முப்பது கோடி விவசாயிகளிடையே விநியோகிக்கப்பட்டு இருந்தது; மற்றும் முன்பு நிலச்சுவான்தார்கள் வருடாந்திர குத்தகையாக போய் கொண்டிருந்த மூன்று கோடி டன் தானியம் இப்பொழுது விவசாயிகளால் அவர்களதுசொந்த உபயோகத்திற் காக எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. விவசாய சீர்திருத்ததிற்கு பிறகு, விவசாயிகள், கட்சியின் தலைமையின்கீழ், ஒரு இஷ்ட பூர்வமான அடிப்படையிலும் மற்றும் பரஸ்பர பலன் அடிப்படை யிலும் கூட்டுறவிற்காகவும் பரஸ்பர உதவிக்காகவும் நாடுதழுவிய தொரு இயக்கத்தை ஆரம்பித்தார்கள். விவசாயிகளிடையே கூட்டுறவு ஏற்கனவே நீண்டதொரு வரலாற்றினைப் பெற்றி ருந்தது; ஆனால் கட்சியினால் தலைமை தாங்கப்பட்ட ஒரு வெகுஜன இயக்கம் என்ற முறையில் பரஸ்பர உதவியும் ஒத்துழைப்பும் மக்சள் குடியரசு ஸ்தாபிக்கபட்ட பிறகு மட்டுமே தான் நடைமுறைக்கு வந்தது. 1951 இறுதியில், 300க்கும் அதிக மான கூட்டுறவு ஸ்தாபனங்கள் இருந்தன. அந்த எண்ணிக்கை, 1952-இல் 4,000த்திற்கு அதிகரித்தது. விவசாயச் சீர்திருத்தம், பரஸ்பர உதவி மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படை யிலும், மற்றும் கட்சி, அரசாங்கம் ஆகியவற்றின் பலமான தலைமையின் கீழும் உதவியின் கீழும், விவசாயிகள் உற்பத்தி அதிகரிப்பிற்கான விரிவானதொரு தேசபக்த இயக்கத்தில் குதித் தார்கள். இப்பொழுது அவர்கள் தங்களுடைய சொந்த நல்வாழ்விற்காகவும் மற்றும் தேசிய நிர்மாணத்திற்காகவும் பணி யாற்றிக் கொண்டிருந்தார்கள். பெரும் எண்ணிக்கையிலான புதிய விவசாய கருவிகளும் மற்றும் உழுபடை பிராணிகளும் விவசாயிகளின் உடமைகளுக்குள் சேர்க்கப்பட்டன. விவசாய தொழில்நுட்பம் படிப்படியாக அபிவிருத்திச் செய்யப்பட்டது. மற்றும் ஒட்டு மொத்தமாக விவசாய உற்பத்தி வேகமாக மீட்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டது. கட்சியின் மத்திய கமிட்டியினால் வகுக்கப்பட்டிருந்த சரியான பாதையை அமல் நடத்தியது; விவசாய சீர்திருத்தத்தில் மாபெரும் வெற்றிக்கு வழி

நடத்திச் சென்றது; ஏழை விவசாயிகளின் மீதும் விவசாயத் தொழிலாளிகளின் மீதும் சார்ந்து நிற்கும் பாதை மாபெரும் வெற்றிக்கு வழிநடத்தி சென்றது; அதே சமயத்தில், நடுத்தர விவசாயிகளோடு ஒன்றுபடுவதும் மற்றும் பணக்கார விவசாயி களை நடுநிலை வகிக்கச் செய்வதும், நிலப்பிரபுத்துவ சுரண்டல் முறையைப் படிப்படியாக ஒழித்துக்கட்டுவதும் மற்றும் விவசாய உற்பத்தியை அபிவிருத்திச் செய்வதும் விவசாய சீர்திருத்தத்தில் மாபெரும் வெற்றிக்கு வழிநடத்திச் சென்றது. விவசாய சீர்திருத்தம் மூர்க்கத்தனமானதொரு வர்க்கப் போராட்டமாக இருந்தது. விவசாயிகள் தங்களுடைய சொந்த முழுமுயற்சியில் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, விவசாயிகளை முழு மையாக அணிதிரட்டுவது அவசியமாக இருந்தது. வெகு ஜனங்களை நெருக்கமாகவும் விரிவாகவும் அணி திரட்டு வதற்கு கிராமப்புறங்களுக்கு செல்லுவதற்கும் ஏழை விவசாயி கள் மற்றும் விவசாயத் தொழிலாளிகள் ஆகியோரின் விவசாய சங்கங்களை படிப்படியாக அமைப்பதற்கு உதவி செய்வதற்கும் பணிக்குழுக்கள் அமைக்கப்பட்டன; பின்னர், இந்த விவசாய சங்கங்கள் நடுத்தர விவசாயிகளையும் சேர்த்துக் கொள்ளும்படி விஸ்தரிக்கப்பட்டன. நடுத்தர விவசாயிகள் நலன்களை உறுதி யாக பாதுகாப்பதே கட்சியின் கொள்கையாக இருந்தது. ஸ்தலத்தில் சராசரி தனிநபர் விகிதாச்சார நிலவுடைமையைக் காட்டிலும் அதிகமாக வைத்திருந்த நடுத்தர விவசாயிகளின் ஒரு பகுதி அவர்களது நிலத்தை வைத்துக் கொள்ளுவதற்கு அனு மதிக்கப்பட்டிருந்தார்கள். பற்றாக்குறையாக நிலம் வைத் திருந்த மற்றொரு பகுதியினர் நில விநியோகத்தின் பங்குகள் கொடுக்கப்பட்டிருந்தார்கள். இந்த வழியில், ஒட்டுமொத்தமாக நடுத்தர விவசாயிகளின் சராசரி நிலவுடைமை விவசாய சீர்திருத் தத்திற்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் மிகவும் பெரியதாக இருந்தது. பணக்கார விவசாயிகளைப் பாதுகாப்பதும் கட்சியின் கொள்கையாக இருந்தது. விவசாய சீர்திருத்தச் சட்டம் பின் வரும் ஏற்பாடுகளை உள்ளடக்கி இருந்தது; (1) பணக்கார விவசாயிகளால் சொந்தமாக வைக்கப்பட்டிருந்த நிலமும் மற்றும் அவர்களால் பயிர் செய்யப்பட்ட அல்லது கூலி உழைப் பினால் பயிர் செய்யப்பட்ட நிலம் மற்றும் அவர்களது சொத்துக்கள் தாக்கப்படுவதினின்றும் பாதுகாக்கப்பட வேண்டும்; (2) பணக்கார விவசாயிகளால் குத்தகைக்கு விடப்பட்டிருந்த சிறுபகுதிகளான நிலம் தொடப்படாமல் வைக் கப்பட்டிருக்கும். ஆனால் சில விசேஷ ஏரியாக்களில், இந்த

முறையில் குத்தகைக்கு விடப்பட்டிருக்கும் நிலம் பகுதியாக அல்லது முழுமையாக சட்டப்படி எடுத்துக் கொள்ளப்படலாம். (3) பெரும் பகுதிகளான நிலத்தைக் குத்தகைக்கு விட்டிருக்கும் ஒரு அரை நிலப் பிரபு வகைப்பட்ட பணக்கார விவசாயிகளின் குத்தகைக்கு விடப்பட்டிருக்கும் பகுதிகள் சட்டப்படி எடுத்துக் கொள்ளப்படலாம். இந்த வழியில் விவசாய சீர்திருத்தத்திற்கு பிறகு, ஒவ்வொரு பணக்கார விவசாயினாலும் உடமையாக வைக்கப்பட்டிருந்த நிலம், பொதுவாக ஸ்தலத்தில் உள்ள சராசரி தனிநபர் விகிதாச்சார நிலஉடமையைப்போல் இரு மடங்காக இருந்தது.

விவசாய சீர்திருத்தம் உத்தேசமாக பின்வரும் நிகழ்ச்சிப் போக்கினால் அமலாக்கப்பட்டது; முதலாவதாக, விவசாயிகளின் அரசியல் உணர்வினை உயர்த்தும் பொருட்டும் கட்சிக் கொள்கையை அவர்கள் புரிந்துக் கொள்ளும் பொருட்டும், விவசாய சங்கத்தினால் அல்லது விவசாயிகளின் மாநாட்டினால் விவசாயிகளிடையே பிரச்சாரம் நடத்தப்பட்டது. இரண்டாவதாக, பரந்துபட்ட வெகுஜனங்கள் தங்களுடைய சொந்த விருப்பப்படி வீறுகொண்டு எழுந்து நிலச்சுவான்தார்களுக்கு எதிராக இறுதியான போராட்டங்களை நடத்தினார்கள். ஸ்தல எதேச்சாதிகாரிகளுக்கு எதிரான போராட்டத்திற்கு பிறகும் மற்றும் குத்தகை குறைப்பிற்காகவும் வைப்புத் தொகைகளைத் திரும்பப் பெறுவதற்காகவும் நடைபெற்ற போராட்டத்திற்கு பிறகு, நிலச்சுவான்தார்களின் நிலமும் சொத்தும் பறிமுதல் செய்யப்பட்டு, நிலமும் உற்பத்திக் கருவிகளும் பற்றாக் குறையாக இருந்த விவசாயிகளிடையே விநியோகம் செய்யப்பட்டது; இந்த முறையில், சீர்திருத்தம் அதனுடைய கடைசி கட்டத்திற்கு கொண்டு வரப்பட்டது. ஒவ்வொரு விவசாயினாலும் மற்றும் விவசாய தொழிலாளியினாலும் இப்பொழுது உடமையாக பெற்றிருந்த நிலம் ஸ்தலத்தில் உள்ள சராசரி தனிநபர் விகிதாச்சரம் நிலவுடமையில் தொண்ணூறு சதவீதமாக இருந்தது. இந்த முறையில், அவர்களது அவசரத் தேவைகள் அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

விவசாய சீர்திருத்தம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக சீனாவை ஆண்டு கொண்டிருந்த நிலப்பிரபுத்துவ அமைப்பை ஒழித்து, சீனாவில் பிற்போக்கு சக்திகள் மற்றும் ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் பிரதான தளமாக இருந்த நிலப்

பிரபுத்துவ வர்க்கத்தையும் ஒழித்து, கிராமப்புற உற்பத்தி சக்திகளையும் விடுதலை செய்தது; இந்த முறையில், நாட்டைத் தொழில் மயமாக்குவதற்கான பாதையைச் செப்பனிட்டுக் கொண்டிருந்தது.

அதே கால கட்டத்தில், கட்சியின் வழிகாட்டுதலின் கீழ், சீன மக்களால் தொழில் மற்றும் வர்க்கத்தின் மாற்றமும் நிறைவேற்றப்பட்டது.

இந்த மாற்றம் மூன்று அடிப்படையான பிரச்சினைகளைச் சுற்றிலும் மையம் கொண்டிருந்தது: பொது நலன்களுக்கும் தனியார் நலன்களுக்கும் இடையே உள்ள உறவுகள்; மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் இடையே உள்ள உறவுகள்; மற்றும் உற்பத்திக்கும் சந்தைக்கும் இடையே உள்ள உறவுகள். இவை அனைத்தும் மீண்டும் சரி செய்யப்பட வேண்டியது தேவையாக இருந்தது.

பொது நலன்களுக்கும் தனியார் நலன்களுக்கும் இடையே உள்ள உறவுகளை மீண்டும் சரிசெய்வது என்பதின் அர்த்தம் என்னவென்றால், தனியார் பொருளாதாரம் அரசு பொருளாதாரத்தின் வழி காட்டுதலின்கீழ் அபிவிருத்தி அடைவதற்கு ஒரு சந்தர்ப்பத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்பதுதான். இந்த அம்சத்தில், தாங்களாகவே சமாளித்துக் கொள்வதற்கு சக்தி பெற்றிருந்த தனியாருக்குச் சொந்தமான தொழிற்சாலைகளுக்கு உதவி செய்வதும் மற்றும் உற்பத்தி செய்வதற்காகவும் பதனிடுவதற்காகவும் அல்லது இதர சில முறைகளாலும் அத்தொழிற்சாலைகளுக்கு உற்பத்தி செய்வதற்கான உத்திரவுகளைக் கொடுப்பதினாலும், தேசிய பொருளாதாரத்தினால் தேவைப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்வதற்கு அத்தொழிற்சாலைகளை ஊக்குவித்துக் கொண்டிருப்பதினாலும், மற்றும் சட்டத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த லாபங்களைப் பெறுவதற்கு அவற்றை அனுமதித்துக் கொண்டிருப்பதினாலும் தேசிய நல்வாழ்விற்கும் மக்களின் வாழ்க்கைக்கும் பலன் தரத்தக்கதாக இருந்த தனியாருக்குச் சொந்தமான தொழிற்சாலைகளுக்கு உதவும் கொள்கையும் அரசாங்கத்தினால் பின்பற்றப்பட்டது. அத்தொழிற்சாலைகளுக்கு உற்பத்தி செய்வதற்கான உத்திரவுகளைக் கொடுப்பதினாலும், பதனிடுவதற்கான உத்தரவுகளைக் கொடுப்பதினாலும் அரசு தனியார் நிறுவனங்களின்மீது அரசு பொருளாதாரத்தின் தலைமையைப் பலப்படுத்திற்று; மற்றும் உற்பத்தி செய்வதற்காகவும் சந்தையைக் கண்டுபிடிப்ப

தற்காகவும் திட்டப்படுவதினாலும் அரசுப் பொருளாதாரத்தின் தலைமையை அரசு பலப்படுத்திற்று; மற்றும் தனியார் நிறுவனங்களை எதிர்நோக்கி இருந்த எண்ணற்ற பிரச்சினைகளுக்கும் மூலப் பொருட்களைச் சப்ளை செய்வதில் உற்பத்தி பொருட்களுக்கு சந்தையைக் கண்டு பிடிப்பது போன்ற இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டது. அதே சமயத்தில், நியாயமான லாபத்தைப் பெறுவதினின்றும் தனியார் நிறுவனங்கள் தடை செய்யப்படவில்லை. முதலாளித்துவ பொருளாதாரத்தின் சோஷலிச மாற்றத்தில், இது முதல் நடவடிக்கையாக இருந்தது.

1952 ஜூனில், ஷாங்காயில், தனியாருக்குச் சொந்தமான தொழிற்சாலைகளால் நடத்தப்பட்ட தொழிலின் மொத்த அளவில் பதனிடுவதற்காகவும், உற்பத்தி செய்வதற்காகவும் கொள்முதல் செய்வதற்காகவும் கொடுக்கப்பட்ட அரசு உத்திரவுகள் (எண்பது சதவீதமாக) இருந்தன. டியன்சினிலும் மற்றும் கான்டனிலும் இந்த விகிதாச்சாரம் முறையே 60% ஆகவும் 50%த்திற்கு அதிகமானதாகவும் இருந்தது.

மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் இடையே உள்ள உறவுகளில் விடுதலைக்கு பிறகு, ஆரம்ப ஆண்டுகளில் இரண்டு தரப்புகளிலும் திரிபுகள் ஏற்பட்டிருந்தன. ஒரு புறத்தில், சில முதலாளிகள் தொழிலாளிகளுக்கு அவர்களது முக்கியமான ஜனநாயக உரிமைகளை வழங்குவதற்கு பிடிவாதமாக மறுத்திருந்தார்கள்; மறுபுறத்தில், சில தொழிலாளிகள் அத்து மீறிய கோரிக்கைகளை முன் வைத்திருந்தார்கள். இவ்விரண்டையுமே சரிப்படுவதற்கு, தொழிலாளிகளின் முக்கியமான ஜனநாயக உரிமைகளை அங்கீகரிப்பதற்கு, முதலாளிகளைத் தூண்டுவது அவசியமாக இருந்தது; மற்றும் உற்பத்தியின் அபிவிருத்தி மக்களின் பொருளாதாரத்திற்குக் கொண்டு வரும் சாதகமான பலனைப் பற்றியும் முதலாளிகளைத் தூண்டுவது அவசியமாக இருந்தது. மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் இடையே இருந்த மோதல் கலந்து ஆலோசிப்பதால் சுலபமாக்கப்பட்டது; மற்றும் அவர்களுக்கு இடையே இருந்த உறவுகள் ஒப்பந்தங்களினால் மாமூல் ஆக்கவும் பட்டது.

உற்பத்திக்கும் சந்தை தேடுவதற்கு இடையே இருந்த உறவுகளை மீண்டும் சரிபடுத்துவதற்கு, பொருளாதாரத்தின் சகல தனியார் துறைகளும் பொதுத் துறைகளும் அவற்றின் திட்டமிடுதலைப் பலப்படுத்துவதற்கும், உற்பத்தி செய்வதில் குருட்டுத்

தனத்தையும் அராஜகத்தையும் சமாளிப்பதற்கும் மற்றும் உற்பத்தி செய்வதற்கும் சத்தையைக் கண்டு பிடிப்பதற்கும் இடையே இருந்த ஒரு சமநிலையை வைத்திருப்பதற்கும் வலி யுறுத்தப்பட்டன.

1951 அக்டோபரில், கூட்டப்பட்ட, மக்கள் அரசியல் கலந்தாலோசனை மாநாட்டின் முதல் தேசியக் கமிட்டியின் மூன்றாவது கூட்டத்தில், பெருமளவில் ஆன பொருளாதார நிர்மாணத்தில் ஈடுபடும் பொருட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும் சிக்கனத்தைக் கையாளுவதற்காகவும் நாடுதழுவியதொரு இயக்கத்தைத் துவக்குவதற்கு மக்கள் அரசாங்கம் அதனுடைய பிரதான முயற்சிகளை அர்ப்பணிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

இப்படிப்பட்டதொரு இயக்கத்தை மேலும், வளர்ப்பதற்கு, ஊழலுக்கும் வீணாக்குவதற்கும் அதிகார வர்க்கத்தனத்திற்கும் எதிராக விட்டுக் கொடுக்காததொரு போராட்டத்தை நடத்த வேண்டி இருந்தது; ஏனெனில், ஊழலும், விரயமும் உற்பத்தி அதிகரிப்பையும் சிக்கனத்தைக் கையாளுவதையும் தடுத்து வைத்திருந்தன; அதே சமயத்தில், அதிகாரவர்க்கம் ஊழலையும், விரயத்தையும் வளர்த்த அடிதளமாக இருந்தது. இத்தகைய தீய பழக்கங்களை ஒழிப்பதற்கு, 1951 மழை காலத்திலும், 1952 முதல் பாதியிலும் அரசாங்க ஊழியர்களிடையே சன்ஃபான் இயக்கம்[3] நடத்தப்பட்டது.

ஊழல், விரயம் மற்றும் அதிகார வர்க்கத்தனம் ஆகியவை புரட்சி ஆட்சியின் கீழ் தொடர்ந்து நீடித்திருந்தன. இதற்கு இரண்டு பிரதான காரணங்கள் இருந்தன. முதலாவதாக, புரட்சியின் வெற்றிக்கு பிறகு, கோமிங்டாங் அரசாங்கத்தின் நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், சகல ஊழியர்களையும் எடுத்துக்கொள்ளும் ஒரு கொள்கையைக்கட்சி அனுஷ்டியிருந்தது. அவர்களில் பலர் தங்களை சித்தாந்த ரீதியாக மீண்டும் வார்த்தெடுத்துக் கொள்வதற்கு நேரம் கிடைக்காமல் இருந்தார்கள். பிறகு, ஒரு கணிசமான எண்ணிக்கையில் இருந்த ஊழியர்கள் புரட்சியின் வெற்றிக்கு பிறகு, வர்க்க உறவுகளில் ஏற்பட்டிருந்த மாற்றத்தைப் பற்றி தெளிவானதொரு பார்வையைப் பெற்றிருப்பதற்கு தவறி இருந்தார்கள்; மற்றும் சீரழிந்து போன பூர்சுவா கருத்துக்களால் ஏற்பட்ட தாக்குதல்களுக்கு எதிராகவும் அழிப்புக்கு எதிராகவும் போதிய அளவிற்கு கண்காணிப்பு இல்லாமலும் இருந்தார்கள். பூர்சுவா வர்க்கத்தின் "சீனி

தடவப்பட்ட குண்டுகளுக்கு'' எதிராக எச்சரிக்கையாக இருப்பது கட்டாயமாகும் என்று கட்சியின் ஏழாவது மத்தியக் கமிட்டின் இரண்டாவது விரிவடைந்த கூட்டத்தால் கொடுக்கபட்ட எச்சரிக்கையை அவர்கள் அலட்சியப் படுத்தினார்கள் அல்லது புறக்கணித்தார்கள். ஊழல், விரயம் மற்றும் அதிகார வர்க்கத்தனம் ஆகியவை சீரழிந்து போனதொரு பூர்சுவா கண்ணோட்டத்தின் வெளிப்படுத்தல்களாக இருந்தன; சன்ஃபான் இயக்கம் இந்த கண்ணோட்டத்திற்கு எதிரானதொரு போராட்டமாக நடைமுறையில் இருந்தது.

சன்ஃபான் இயக்கத்திற்கு சமாந்திரமாகவே, ஊஃபான் இயக்கம்[4] தொழில் அதிபர்களிடையேயும், வியாபாரிகளிடையே நடத்தப்பட்டது. விடுதலைக்கு பிறகு மூன்று ஆண்டுகளில், தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராக பூர்சுவா வர்க்கத்தினால் திரும்பத் திரும்ப நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு இது ஒரு எதிரடியாக இருந்தது. முதலாளித்துவ தொழிலையும், வியாபாரத்தையும் கட்டுப்படுத்தும் கட்சியின் கொள்கையைப் பல முதலாளிகள் உடைத்துக்கொண்டிருந்தார்கள். சந்தை மந்தமாக இருந்த பொழுதும்மூலப் பொருட்களின் சப்ளைப் பற்றாக்குறையாக இருந்த பொழுதும் பதனிடுவதற்கான அரசாங்க உத்திரவுகளையும் உற்பத்தி செய்வதற்கான உத்திரவுகளையும் மட்டுமே நிறைவேற்றுவதற்கு தயாராக இருந்தார்கள். ஆனால், சந்தை சுறுசுறுப்பாக இருந்த போதும் மற்றும் மூலப் பொருட்கள் சுலபமாகபெறக் கூடியனவாக இருந்த போதும்,அவர்கள் சகல கட்டுப்பாடுகளையும் உதறித் தள்ளுவதற்கு முயற்சிப்பார்கள்; மற்றும் சுதந்திரமான சந்தையில் உயர்ந்த லாபத்தைத் தேடுவதற்கும் முயற்சிப்பார்கள். அவர்களில் சிலர் சட்ட விரோதமான முறைகளால் உபரிலாபங்களைத் தேடும் அளவிற்கும் உண்மையிலேயே போயிருந்தார்கள். ''ஐந்து தீமைகளை'' அவர்களது ஆயுதங்களாக பயன்படுத்திக் கொண்டு, அரசாங்க உறுப்புகளிலும் நிறுவனங்களிலும் இருந்த ஊழியர்களின் மீது அவர்கள் பயங்கரமானதொரு தாக்குதலை நடத்தினார்கள். சட்டத்தை மீறும் முதலாளிகளோடு கூட்டு சேர்ந்துக்கொண்டு அரசாங்க உறுப்புகளில் அல்லது நிறுவனங்களில் இருந்த பூர்சுவா வர்க்கத்தின் ஏஜண்டுகளால் பெருமளவிலான ஊழல் மற்றும் சுருட்டல் ஆகியவற்றின் பெரும்பாலான தவறுகள் நடத்தப்பட்டன. குற்றம் புரிந்தவர்களின் தரப்பில், விவகாரங்களில் இந்த நிலை சட்டத்தையும் கட்டுப்பாட்டையும் மீறும் ஒரு பிரச்சினையாக

மட்டும் இருக்கவில்லை. ஆனால், பிரதானமாக பூர்சுவா வர்க்கத்தின் பாசி படிந்த செல்வாக்கின் பிரதான மேல் நோக்கி தாக்குதல்களாகவும் மற்றும் புரட்சி முகாமின் மீது அவர்களது மூர்க்கத்தனமான தாக்குதல்களாகவும் இருந்தது. பூர்சுவா வர்க்கம் மக்களிடம் இருந்து அவர்களது புரட்சியின் பலன்களைக் கொள்ளையடிப்பதற்கு ஆசையோடு நம்பிக் கொண்டிருந்தது. இது தொழிலாளி வர்க்கத்தின் தலையின் மீது நேரடியான தொரு தாக்குதலைத் தொடுப்பதற்குச் சமமாக இருந்தது. எனவே, **சன்ஃபான்** மற்றும் **ஊஃபான்** இயக்கங்கள் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையைப் பாதுகாப்பதற்காகவும் கெட்டிப் படுத்துவதற்காகவும் நடத்தப்பட்ட முக்கியமான போராட்டங்களாக இருந்தன.

**சன்ஃபான்** இயக்கம் அரசாங்க உறுப்புகளைச் சுத்தப்படுத்திற்று அரசாங்கத்திற்கும் வெகுஜனங்களுக்கும் இடையே நெருக்கமான உறவுகளை ஸ்தாபித்தது; அரசாங்க வேலையில் கட்டுப் பாட்டைப் பலப்படுத்தி திறமையை அதிகரித்தது; மற்றும் அரசாங்கசெலவினத்தைப் பெரிதும் குறைத்தது. **ஊஃபான்** இயக்கம் முதலாளித்துவ தொழிலதிபர்கள் மற்றும் வியபாரிகளிடையே சட்ட விரோதமான நடவடிக்கைகளைக் கணிசமாக குறைத்தது; மற்றும் அரசு திட்டங்களின் சுற்று வட்டத்திற்குள் முதலாளித்துவ தொழிலையும் வியாபாரத்தையும் கொண்டு வந்தது.

1949விருந்து 1952 வரையிலும் முன்றாண்டு கால கட்டத்தில், மக்கள் அரசாங்கம் பல பெரிய நிர்மாண திட்டங்களை நிறைவேற்றிற்று. ரயில்வே நிர்மாணம் மற்றும் தண்ணீர் சேமிப்பு ஆகிய துறைகளில் முக்கியமான முன்னேற்றங்கள் குறிப்பாக சாதிக்கப்பட்டிருந்தன.

சீனாவைப் போன்ற மிகவும் பரந்த ஒரு நாட்டில் அந்நாட்டின் தொழில் ஏரியாக்களும் விவசாய ஏரியாக்களும் தனி ஒரு பொருளாதார அம்சமாக பின்னிப் பிணைந்திருக்க வேண்டுமேயானால், செய்திப் போக்குவரத்து வசதிகளும், போக்குவரத்து வசதிகளும் முக்கியமானவையாக இருந்தன. இந்தக் காரணத்திற்காக, பழைய இருப்புப் பாதைகள் அனைத்தும் பழுது பார்க்கப்பட்டு 1950ஆம் ஆண்டின் முதல் பாதியில் போக்குவரத்திற்கு மீண்டும் திறக்கப்பட்ட பிறகு, புதிய இருப்புப் பாதைகளின் நிர்மாணத்திற்காக பெரும் தொகைகளை அரசாங்கம் ஒதுக்கிற்று. நிர்மாணிக்கப்பட்ட இருப்புப் பாதைகளிடையே மிக மிக குறிப்பிட்டத்தக்க இருப்புப் பாதைகளாக லுங்காய்

ரயில்வே லாங்சோவிற்கு விஸ்தரித்ததும் மற்றும் செங்டு—சுங்கிங் ரயில்வேயைப் பூர்த்தி செய்ததும் இருந்தன. பின்னால் கூறப்பட்ட ரயில்வேயின் பூர்த்தி சிங் வம்சா வழியின் கடைசி ஆண்டுகளில் இருந்து விடுதலை அடையும் வரையிலும் பல பத்தாண்டுகளாக செச்சுவான் மக்களின் கனவாக இருந்துள்ளது. ஆனால், விடுதலைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு, இந்தப் பாதை பூர்த்தி செய்யபட்டது. இத்தகைய ரயில்வேக்கள் தென் மேற்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களின் பொருளாதார அபிவிருத்திக்குப் பெரிதும் உதவி செய்தன.

அதே காலகட்டத்தில், நாட்டில் இருந்த 42,000 கிலோ மீட்டர் நீளமுள்ள தடுப்புச் சுவர்களின் பெரும் பகுதியைப் பழுது பார்ப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்தது. கடுமையாக வெள்ளத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த ஹுவாய், யுங்டிங் போன்ற இப்படிப்பட்ட நதிகளின போக்குகளின் முழுவதற்கும் கட்டுப்படுத்தும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஹுவாய் நதித் திட்டம் மற்றும் சிங்கியாங் வெள்ள திருப்பு திட்டமும் அவற்றின் கட்டுகோப்பின் மற்றும் அளவிலும் அவற்றை நிறைவேற்றுவதில் இருந்த வேகத்தின் அளவிலும் சீன வரலாற்றிலேயே உண்மையில் முன் கண்டிராதவையாக இருந்தன. குறுகிய கால தண்ணீர் சேமிப்பு திட்டங்களுக்கு தங்களை விட்டுக் கொடுக்காமல் இருக்கும் மஞ்சள் நதி மற்றும் யாங்ட்சிநதி போன்ற பெரிய நதிகள் சம்மந்தப்பட்ட மட்டில் வெள்ளத் தடுப்பிற்காக தற்காலிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஒட்டுமொத்தத்தில், 170 கோடி கன மீட்டர்கள் மண்வேலை இந்த மூன்று ஆண்டுகளில் தண்ணீர் சேமிப்பில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன; இந்த மண் வேலை 10 பனாமா கால்வாய்களையும் அல்லது 23 சூயஸ் கால் வாய்களையும் தோண்டுவதற்கு சமமாக இருந்தது. பிற்போக்கு கோமிங்டாங் ஆட்சியின் கீழ் தண்ணீர் சேமிப்பு விழுந்து போயிருந்த அலட்சியத்தின் வருந்தத்தக்க நிலைமைகள் இத்தகைய வெற்றிகள் மாற்றின. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சீன மக்களைத் துன்புறுத்திக் கொண்டிருந்த வெள்ள பயமுறுத்தல் பெருமளவிற்கு ஒழிக்கப்பட்டு விவசாய உற்பத்தியின் மீட்சியும்பரந்த கிராமப்புற பிரதேசங்களில் பந்தோபஸ்தும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன.

கட்சியின் சரியான தலைமையின் காரணமாகவும், நாடு முழுவதிலும் உள்ள மக்களால் செய்யப்பட்ட மாபெரும் முயற்சிகளின் காரணமாகவும், மிகவும் விசேஷமாக தொழிலாளி

களாலும் விவசாயிகளாலும் செய்யப்பட்ட மாபெரும் முயற்சி களின் காரணமாகவும், மற்றும் சோவியத் யூனியனாலும் மக்கள் ஜனநாயகநாடுகளாலும் கொடுக்கப்பட்ட தன்னலமற்ற உதவி யின் காரணமாகவும், தேசிய பொருளாதாரத்தின் புனருத்தார ணமும் அடிப்படையிலேயே புரட்சிக்குப் பிறகு மூன்று ஆண்டு களுக்குள் நிறைவேற்றப்பட்டது. சீனாவின் தேசிய நிதியின் பொருளாதாரமும் சிறப்படைவதற்கான அடிப்படையானதொரு திருப்பத்தைச் செய்தன; மற்றும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏழாவது மத்தியக்கமிட்டியின் மூன்றாவது விரிவடைந்த கூட்டத் தின் அறைகூவல் வெற்றிகரமாக உருவாக்கப்பட்டது. அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடுவதற்காகவும் மற்றும் கொரி யாவிற்கு உதவி செய்வதற்குமான இயக்கத்தை சீன மக்கள் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்த சமயத்தில் இந்த வெற்றி சாதிக்கப்பட்டது.

நிதியிலும் பொருளாதாரத்திலும் சிறப்படைவதற்கான அடிப்படையான திருப்பம் பொருளாதாரத்தின் புனருத்தாரத்தி லும், வருவாய் மற்றும் செலவினம் சமநிலை அடைந்ததிலும் மற்றும் சரக்கு விலை ஸ்திரம் அடைந்ததிலும் காட்டப்பட்டது.

(1) பொருளாதாரத்தின் புனருத்தாரணம், 1952 இறுதி வாக்கில், தொழில் உற்பத்தியும விவசாய உற்பத்தியும் மீட்சி பெற்றிருந்தது என்பதோடு மட்டுமின்றி யுத்த முற்கால உச்ச மட்டத்தையும் தாண்டி இருந்தது. அந்த ஆண்டில், அதனுடைய மொத்த மதிப்பு 1949ஆம் ஆண்டில் புள்ளி விவரத்தில் 77.5 சத வீதமாக இருந்தது. மற்றும் நவீன தொழிலின் உற்பத்தி மதிப்பு 278.6%' உயர்ந்தது. 1949இல், நவீன தொழிலின் உற்பத்தி மதிப்பு, விவசாய மற்றும் தொழில் உற்பத்தியின் மொத்த மதிப் பில் 17% ஆக இருந்தது; அது 1952இல் 26.7%த்திற்கு தாவி இருந்தது, மூலதன சரக்குகளின் உற்பத்தி உபயோகிப்போர் சரக்குகளைக் காட்டிலும் மிக அதிக துரிதமாக அபிவிருத்தி அடைந்தது, மற்றும் மூலதன சரக்குகளின் மதிப்பு தொழில் உற்பத்தியின் மொத்தமதிப்பில்,1949இல் 29சதவீதமாக இருந்த தில் இருந்து 1952இல் 39.7சதவீதத்திற்கு உயர்ந்தது. சோஷலிச தொழிலில் துரிதமானதொரு அபிவிருத்தியும் இருந்தது. ஒட்டு மொத்தமாக தொழில், சோஷலிச மற்றும் அரை சோஷலிச பிரிவின் விகிதாச்சாரம் 1949இல் 36·7 சதவீதமாக இருந்ததில் இருந்து 1952இல் 61 சதவீதமாக உயர்ந்தது; அதே சமயத்தில், தனியார் முதலாளித்துவ துறையின் விகிதாச்சாரம் 63.3 சத

வீதத்தில் இருந்து 39 சதவீதத்திற்கு விழுந்திருந்தது.

1952இல் விவசாய உற்பத்தியின் மொத்தமதிப்பு 1949-ஆம் ஆண்டின் உற்பத்தியில் 48.5% ஆக இருந்தது. தானியத்தின் மதிப்பு 44.8% அதிகமாக இருந்தது மற்றும் பருத்தியின் மதிப்பு 193.4% அதிகமாக இருந்தது. உள்நாட்டு தேவைக்கு போதிய தானியம் இருந்தது என்பதோடு மட்டுமின்றி, ஏற்றுமதி செய்வதற்கான ஒரு உபரியும் இருந்தது. பருத்தி உற்பத்தியும் கூட உள்நாட்டு தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குப் போதுமானதாக இருந்தது. துரிதமாக அபிவிருத்தி அடைந்து கொண்டிருந்த தொழிலுக்கு மூலப் பொருட்களை அதிகரித்துக் கொண்டிருந்த அளவுகளில் விவசாயம் சப்ளை செய்தது. தானியத்திற்கான வளர்ந்து கொண்டுருந்த மக்களின் தேவையோடு அது சமநடை போட்டது. மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளின் சீராக அதிகரித்துக் கொண்டிருந்த உற்பத்திக்கும் அது ஒரு சந்தையையும் ஏற்பாடு செய்தது.

(2) பட்ஜெட்டைச் சமநிலைப்படுத்த புரட்சிக்குப் பிறகு மூன்றாண்டுகளில், அரசு வருமானம் சீராக அதிகரித்தது. மற்றும் பட்ஜெட் 1952இல் முற்றிலும் சமநிலையாக இருந்தது. 1946 ஆம்ஆண்டில் அரசு வருமானத்தை நூறு என்று வைத்துக்கொண்டால் 1952ல் அது இருநூற்று முப்பத்து ஒன்பதாக இருந்தது. வருவாயில் இந்த அதிகரிப்பு உற்பத்தியின் விஸ்தரிப்பில் இருந்து வந்தது. உதாரணமாக, 1950இல் அரசுக்குச் சொந்தமான தொழில் நிறுவனங்களில் இருந்தும் மற்றும் கூட்டுறவு ஸ்தாபனங்களில் இருந்தும் கிடைத்த வரிகளும் லாபங்களும் அரசாங்கத்தின் மொத்த வருவாயில், 34% ஆக மட்டுமே இருந்தது; 1952இல், இந்த விகிதாச்சாரம் 56% ஆக இருந்தது. அப்பொழுது தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காகவும் அமெரிக்காவை எதிர்ப்பது மற்றும் கொரியாவிற்கு உதவி செய்வது என்ற இயக்கத்தை ஆதரிப்பதற்காகவும் பெரும் தொகைகளை ஒதுக்கீடு செய்வது அவசியமாக இருந்த பொழுதிலு 1952-ஆம் ஆண்டு பட்ஜெட்டில் செலவினத்தில் பாதிக்கும் அதிகமான தொகையில் பொருளாதார அபிவிருத்திக்காகவும் கலாச்சார அபிவிருத்திக்காகவும் போயிற்று.

(3) சரக்கு விலைகளை ஸ்திரப்படுத்தல்; 1950 மார்ச்சில் மொத்த விற்பனை விலை வாசிகளின் குறியீட்டு எண் 100 என்று வைத்துக் கொண்டால், பொருளாதார மற்றும் நிதி வேலையின் ஒன்றுபட்ட கட்டுப்பாடு முதலில் அமலுக்கு

கொண்டு வரப்பட்ட பொழுது, 1950 டிசம்பரில் குறியீட்டு எண் 85.4 ஆக இருந்தது, 1951 ஜூனில், 91 ஆக இருந்தது; 1951 டிசம்பரில்; 96.6 ஆக இருந்த; 1952 ஜூனில் 92.4 ஆக இருந்தது; 1952 டிசம்பரில் 90.6 ஆக இருந்தது. இரண்டரை ஆண்டுகளுக்கும் சற்று அதிகமானதொரு காலகட்டத்தில், சரக்கு விலைகள் கிட்டத்தட்ட ஸ்திரமாக இருந்தன என்பதை இது காட்டிற்று. முழுமையான ஸ்திரப்படுத்தல் 1953இல் அமலாக்கப் பட்டது. பத்து ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்திருந்த வானளாவிய விலைவாசிகளின் பயமுறுத்தல் இறுதியாக முறிக்கப்பட்டிருந்தது.

பொருளாதார புனருத்தாரணம், வருவாய் மற்றும் செல வினத்தின் சமநிலைப் படுத்தலும் சரக்கு விலைகளின் ஸ்திரப் படுத்தலும் பெரிய அளவிலான பொருளாதார நிர்மாணத்திற்கு, கெட்டியானதொரு அடித்தளத்தைப் போட்டு தேசிய பொருளா தாரத்தின் புனருத்தாரணக் கால கட்டத்தின் முடிவைக் குறித்தது. 1953-ஆம் ஆண்டு புதியதொரு வரலாற்று கால கட்டத்தை, பொருளாதார நிர்மாணத்திற்கான முதல் ஐந்தாண்டு திட்ட காலகட்டத்தினை அறிமுகம் செய்தது.

### 5. தொழிற்சங்க இயக்கத்தின் புதிய அபிவிருத்தி. கட்சியைக் கெட்டிப்படுத்தலும் நிர்மாணித்தலும்.

சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ், தொழிலாளி வர்க்கம், சீனமக்கள் புரட்சியில் மட்டுமின்றி, புதிய சீனாவின் நிர்மாணத்திலும் கூட நீண்ட கால வீரம்மிக்க போராட்டத்தின் வழியாக, தலைமை தாங்கும் சக்தியாக இருப்பதை நிரூபித் திருந்தது.

தொழிலாளர்களின் ஆறாவது தேசிய காங்கிரஸ் 1948-இல் கூட்டபட்ட பொழுது, மக்கள் விடுதலை சேனை நாடு முழுவ தையும் விடுவிப்பதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்தது. இதன் காரணமாக, விடுவிக்கப்பட்டிருந்த ஏரியாக்களிலும், கோமிங் டாங் கட்டுப்பாட்டில் இருந்த ஏரியாக்களிலும் தொழிலாளி வர்க்கத்தின் திட்டவட்டமான கடமைகளைக் கட்சி வகுத் திருந்தது. காங்கிரஸிற்கு பிறகு, கட்சியினால் சுட்டிக் காட்டப் பட்டிருந்த பாதையின் வழியாக, சீனத் தொழிலாளி வர்க்கம் அணிவகுத்து முன்னேறி செல்வதற்கு ஆரம்பித்தது. விடுவிக்கப்

அத்தியாயம் பதினைந்து

# பொருளாதார அரங்கத்தில் சோஷலிச புரட்சியின் அடிப்படையான வெற்றி.

*(1953—ஜூன் 1956)*

## 1. மாறிச் செல்லும் கால கட்டத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுவானபாதை. தேசிய பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கான முதல் ஐந்தாண்டு திட்டம் (1953 1957). காவோகாங் மற்றும் ஜாவோ சூ-ஷி ஆகியோரின் கட்சி விரோதக் கும்பல் கட்சியால் நசுக்கப்படல்.

சீன மக்கள் குடியரசு ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, சீனப் புரட்சி, பூர்சுவா-ஜனநாயக புரட்சி கட்டத்தில் இருந்து சோஷலிச புரட்சி கட்டத்திற்கு கடந்து சென்றது. அதாவது, அது முதலாளித்துவத்தில் இருந்து சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் கால கட்டத்தில் நுழைந்தது. முதலாளித்துவ சமுதாயத்திற்கும் சோஷலிச சமுதாயத்திற்கும் இடையே ஒரு மாறிச் செல்லும் காலகட்டம் இருக்க வேண்டுமென்று மார்க்சிய-லெனினியம் கூறுகிறது. இப்படிப்பட்டதொரு காலகட்டம் இருப்பது அவசியமாக உள்ளது. ஏனெனில், சோஷலிசத்தின் முழுமையான வெற்றிக்குத் தேவையான பொருளாதார நிலைமைகளையும் கலாச்சார நிலைமைகளையும் உருவாக்குவதற்கு நேரம் தேவைப்படுகிறது. மற்றும் சோஷலிசம் அல்லாத பொருளாதார அம்சங்களை, சோஷலிசக் கோட்பாடுகளுக்கு ஏற்ப மாற்றுவதற்கு நேரம் தேவைப்படுகிறது. ஒரு நாடு எந்த அளவிற்கு அதிகமாக பொருளாதார ரீதியிலும் கலாச்சார ரீதியிலும் பின்தங்கியதாக உள்ளதோ, அந்த அளவிற்கு மாறிச் செல்லும் கால கட்டம் நீண்டதாக இருக்கும். சோஷலிசத்தின் முழுமையான வெற்றிக்கு முக்கியமாக இருக்கும் பொருளாதார மற்றும் கலாச்சார நிலைமைகளைச் சீனா உருவாக்குவதற்கு முன்பு அதற்கு கணிசமான நீண்டதொரு மாறிச் செல்லும் கால கட்டம் தேவைப்படுகிறது. மற்றும் தனிநபர் பொருளாதாரத்தின்

மீதும், முதலாளித்துவ தொழில் மற்றும் வியாபாரத்தின் மீதும், அடிப்படையாக கொண்டுள்ள பரந்த விவசாயத்தையும் கைவினைத் தொழிலையும் மாற்றுவதற்கும் சீனாவிற்கு கணிசமான நீண்டதொரு மாறிச் செல்லும் கால கட்டம் தேவைப்படுகிறது.

1952இன் ஆரம்பத்திலேயே, கட்சியின் மத்தியக் கமிட்டி மாறிச்செல்லும் காலகட்டத்திற்கான பொதுவான பாதையை முன் வைத்தது. 1954இல், இந்தப் பாதை தேசிய மக்கள் காங்கிரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அரசியல் சட்டத்தில் எழுதப்பட்டது. ஆகவே, மாறிச் செல்லும் காலகட்டத்தில் அதனை உருப்பெறச் செய்வது, நாட்டின் அடிப்படையான கடமையாக மாறி இருந்தது.

மாறிச் செல்லும் கால கட்டத்தில், நாட்டின் பொதுவான பாதை நாட்டின் சோஷலிச தொழில் மயமாக்குதலைப் படிப்படியாக உருப்பெறச் செய்வதும் மற்றும், ஒப்புநோக்கிப் பார்க்கும் பொழுது, நீண்டதொரு கால அவகாசத்தில் விவசாயம், கைவினைத் தொழில்கள், முதலாளித்துவ தொழில் மற்றும் வியாபாரம் ஆகியவற்றின் சோஷலிச மாற்றமடையச் செய்தலும் ஆக இருந்தது.

சோஷலிச தொழில் மயமாக்குதல் இல்லாமல், நாட்டில் ஒரு சோஷலிச சமுதாயத்தை நிர்மாணிப்பது சாத்தியமற்றதாக இருந்திருக்கும். ஏனெனில், சீனா, பொருளாதார ரீதியில் முற்றிலும் பின் தங்கியதாக இருந்தது. கடந்த காலத்தில் அது பெற்றிருந்த குறைவான தொழில், தேசிய பொருளாதாரத்தின் ஒரு மிகச் சிறிய பகுதியாக மட்டுமே அமைந்திருந்தது. கனத் தொழிலின் விகிதாச்சாரம் மிகவும் குறைவானதாகக் கூட இருந்தது. சீனாவின் பொருளாதாரம் புனருத்தாரன கால கட்டத்திற்கு பிறகு முன்னோக்கி அடியெடுத்து வைத்திருந்தது என்பது உண்மைதான். ஆனால் அது இன்னும் ஒரு ஏழையான. பின்தங்கிய விவசாய நாடாகவே இருந்தது. சோஷலிச தொழில் மயமாக்குதல் நிறைவேற்றுவது கட்டாயமாக இருந்தது; அப்படிச் செய்வதினால் சகல வகைப்பட்ட தொழில் சாதனங்களையும் உற்பத்தி செய்வதற்கு திறன் படைத்த சக்திமிக்கதொரு தொழிலையும் தன்மையில், முழுக்க முழுக்க சோஷலிச மயமான சக்தி மிக்கதொரு தொழிலையும் சீனா பெற்றிருக்கும்.

ஒட்டுமொத்தமான தொழிலின் அபிவிருத்தி கனத் தொழிலின் மீது சார்ந்துள்ளது; கனத் தொழிலின் அபிவிருத்தி விகிதம்

தொழில் முன்னேற்றத்தின் பொதுவான விகிதத்தை தீர்மானிக்கிறது. ஆகவே, ஒருநாட்டின் சோஷலிச தொழில்மயமாக்குதலின் திறவுகோல், கன இயந்திரத் தொழிலின் அபிவிருத்தியாக உள்ளது. உலகில் மிகமிகப் பெரிய மக்கள் தொகையைக் கொண்ட ஒரு நாட்டில், அறுபது கோடி மக்கள் தொகையைக் கொண்ட ஒரு நடான சீனாவில், சோசலிச தொழில் மயமாக்குதலை நிறைவேற்றுவதற்கும், மற்றும் அதற்கு விரிவானதொரு இயந்திரத் தொழில் அமைப்பினைத் தொடுப்பதற்கும், கன இயந்திரத் தொழிலின் அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுக்கப் படவேண்டி இருந்தது.

தேசிய பொருளாதாரம் முழுமையானதொரு சிக்கலான இணைந்த உறுப்பாகும். அதில் கன இயந்திரத் தொழிலோடு கூடவே, விவசாயம், நுகர்பொருள் உற்பத்தி செய்யும் தொழில், வியாபாரம், செய்திப் போக்குவரத்துகள் மற்றும் போக்குவரத்து முதலியன போன்ற மக்களின் தேவைகளை சப்ளை செய்யும் இதர பல பொருளாதார பிரிவுகளையும், உள்ளடங்கி உள்ளது. இப்பிரிவுகள் நிர்மாணத்திற்காக நிதிகளைக் குவிக்கின்றன, அல்லது சமுதாயம் முழுவதோடும் ஒருங்கிணைந்து புனர் உற்பத்தியில் ஈடுபடுகின்றன. ஆகவே, கன இயந்திரத் தொழிலின் அபிவிருத்தியின் மீது பிரதான அழுத்தம் வைக்கப் படும். அதே சமயத்தில், மேலே குறிப்பிடப்பட்ட பிரிவுகள் ஒவ்வொன்றும் மற்றும் கலாச்சார பணியும், கல்விப் பணியும் திட்டப்படி இணக்கமானதொரு அபிவிருத்தியையும் பெற்றிருக்க வேண்டும்.

விவசாயம் மற்றும் கைவினைத் தொழில்களின் சோஷலிச மற்றும் மாறிச் செல்லும் கால கட்டத்தில், அடிப்படையான கடமையின் முக்கியமானதொரு பகுதியாக இருந்தது ஏனெனில், விவசாய சீர்திருத்தத்தின் பூர்த்திக்குப் பிறகு, சிறு விவசாய பொருளாதாரம் விவசாயத்தில் மிதமிஞ்சியதொரு ஆதிக்க நிலைமையை இன்னும் வைத்துக் கொண்டிருந்தது. சிதறுண்டும் பின் தங்கியும் இருந்தமையால், சிறு விவசாய பொருளாதாரம் விவசாய உற்பத்தி சக்திகளின் அபிவிருத்தியைத் தடுத்து நிறுத்தி இருந்தது; மற்றும் இப்படிப்பட்டதொரு பொருளாதாரத்தால் உற்பத்தி செய்யப்பட்ட சிறு சரக்குகளின் சிதறுண்டு கிடந்த தன்மை, நாட்டின் திட்டமிடப்பட்ட பொருளாதார நிர்மாணத் தோடு இணக்கமற்றதாக இருந்தது. மேலும், சிறு விவசாய பொருளாதாரம் நிலையற்றதாகவும் இருந்தது. ஏனெனில், அது

இடைவிடாமல் வர்க்க வேறுபாட்டிற்கும் வழி நடத்தி சென்றது.

சீனாவில் விவசாயம் தேசிய பொருளாதாரத்தின் மிகமுக்கிய மானதொரு பிரிவாக இருந்தது. அது தொழிலுக்கு மூலப் பொருட்களையும் தானியத்தையும் சப்ளை செய்தது. விவசாயிகள், உற்பத்தி செய்யப்பட்ட சாமான்களுக்கு மிகமிகப் பெரிய சந்தையாக அமைந்தார்கள். மற்றும் விவசாய உற்பத்தி பொருட்கள் சீனாவின் ஏற்றுமதிகளில் பெரும் பகுதியாக அமைந்திருந்தன. எனவே, விவசாயத்தின் அபிவிருத்தி, தொழிலின் வளர்ச்சியின்மீது அதிகமான செல்வாக்கினைக் கொண்டுவந்தது.

சிறு விவசாய பொருளாதாரம் அரசின் தேவைகளையும் மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு போதுமான அளவிற்கு உற்பத்தி செய்ய முடியவில்லை என்பது தெளிவு. புனர் உற்பத்தி பற்றிய மார்க்சிய தத்துவத்தின்படி, ஆண்டு தோறும் அதிகரித்துக் கொண்டிருக்கும் சேகரமில்லாமல் —சேகரம் அதனுடைய திருப்பத்தில் ஆண்டு தோறும் விஸ்தரித்துக் கொண்டிருக்கும் புனர் உற்பத்தியின்மீது சார்ந்து நிற்கிறது—அந்தநவீன சமுதாயம் முன்னேறமுடியாது. நாட்டின் தொழில், விஸ்தரிக்கபட்ட புனர் உற்பத்தியின் மார்க்சிய தத்துவத்திற்கு ஏற்புடைய முறையில் அபிவிருத்தி செய்யபட்டது. மற்றும் உற்பத்தி ஒவ்வொரு ஆண்டும் அதிகரிக்கப்பட்டது. எனினும், சிறு விவசாய பொருளாதாரத்தின் பெரும்பகுதிக்கு, புனர் உற்பத்தியின் வருடாந்திர விஸ்தரிப்பு சாத்தியமற்றதாக இருந்தது. தேசிய பொருளாதாரத்தின் சரியானதொரு விகிதம் தொழிக்கும் விவசாயத்திற்கும் இடையே வைக்கப்பட்டிருக்க வேண்டுமென்பது நன்கு தெரிந்தது. சோஷலிச நிர்மாணம் என்பதில் தொழில், விவசாயம் ஆகிய இரண்டுமே சேர்கிறது. சோஷலிசத்தை உருப் பெறச்செய்வதற்கு இவ்விரு பொருளாதார பிரிவுகளும் நெருக்கமாக இணைக்கப்பட வேண்டி இருந்தது. இப்படிப்பட்டதொரு சரியான விகிதாச்சாரம் இல்லாமல், குறிப்பாக தொழிலும் விவசாயமும் இரண்டு நேர் எதிரிடையான பொருளாதார அடித்தளங்களின்மீது வைக்கப் பட்டிருந்த பொழுது—ஒரு புறத்தில் முன்னேறிய சோஷலிச தொழிலும், மறுபுறத்தில் சிறு விவசாய பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட சிதறுண்டுகிடக்கும் பின்தங்கிய விவசாயத்தையும்— தேசிய பொருளாதாரம் முழுவதும் சிதறி விழுந்துவிடக்கூடிய அபாயத்தில் இருந்தது. மற்றும் சோஷலிசத்தை நிர்மாணிக்கும் எந்தக் கருத்தும் கேள்விக்கு

அப்பாற்பட்டதாக இருந்தது.

சிறு விவசாய பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு விவசாயத்தை, நவீனமயமாக்கப்பட்ட விவசாயமாக மாற்றமடையச் செய்வதில் சீன மக்களுக்கு இரண்டு பாதைகள்—முதலாளித்துவ பாதையும் சோசலிச பாதையும்—திறந்து வைக்கப்பட்டிருந்தன. முதலாளித்துவ பாதை விவசாயிகளிடையே துருவமயமாக்கும் நிகழ்ச்சிப் போக்கினை வேகமடையச்செய்திருக்கும். விரல்விட்டு எண்ணக்கூடிய லாபச்சூதாடிகளையும் சுரண்டல்காரர்களையும் பூர்சுவா வர்க்கத்திற்கு வளர்த்துக் கொடுத்திருக்கும்; அதே சமயத்தில், மிகப்பெரும்பாலான பெரும்பான்மை மக்களைச்சுரண்டப்பட்டவர்களின் நிலைக்கும் ஒடுக்கப்பட்டவர்களின் நிலைக்கும் தள்ளிக் கொண்டிருக்கும். சோஷலிச பாதை தனிப்பட்ட விவசாயக் குடும்பங்களைப் புதிய தொழில் நுட்பங்களுடன்கூடிய முன்னேறிய கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குள் ஒன்றுபடுத்துவதிலும் அவர்களை தன்மையில் முற்றிலும் சோஷலிசமயமாக்கப்பட்ட முன்னேறிய கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குள் ஒன்றுபடுத்துவதிலும் அடங்கி இருந்தது. இந்த முறையில், பொருளாதாய நல்வாழ்விலும், கலாச்சாரத்திலும் சீராக அபிவிருத்தி அடைந்துக்கொண்டிருந்த ஒரு வாழ்க்கையை நடத்துவதற்கு விவசாய வெகுஜனங்களைச் சாத்தியமாக்கிக் கொண்டிருக்கும். அதனுடைய கிராமப்புற பொருளாதாரத்தை ஒரு சிறு விவசாய பொருளாதாரமாக நீண்டகாலத்திற்கு வைத்திருப்பதை சீனா அனுமதிக்க முடியாததாலும் அல்லது அதனுடைய கிராமப்புற பொருளாதாரத்தை ஒரு முதலாளித்துவ பொருளாதாரமாக தன்னெழுச்சியாக வளர்வதற்கு சீனா அனுமதிக்க முடியாததாலும் ஒரே சாத்தியமான வழி விவசாயத்தை சோஷலிச மாற்றமடையச் செய்வதை நிறைவேற்றுவதும் மற்றும் அதனை சோஷலிச பாதையின் வழியாக வழிநடத்திச் செல்வதுமாக இருந்தது.

விவசாயத்தின் சோஷலிச மாற்றமடைதலை நிறைவேற்றுவதற்கு ஒரே ஒரு வழிதான்—கூட்டுறவு வழிதான்—இருந்தது. முதலாவதாக, சோஷலிசத்தின் ஒரு கருவுடன் கூடிய பரஸ்பர உதவிக் குழுக்கள் அமைக்கப்படவிருந்தன. இவை பின்னர் அரை சோஷலிச கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு முன்னேறி, அதற்கு பிறகு முழுமையான சோஷலிச கூட்டுறவு ஸ்தாபனங்களாக முன்னேறும். முழுமையான சோஷலிச கூட்டுறவு கட்டத்திற்கு சோஷலிச அம்சங்களில் சீராக அதிகரிப்பதை குறிக்கச் செய்யும்

இந்த அபிவிருத்தி, நாட்டின் சிறு விவசாய பொருளாதாரத்தை மாற்றமடையச் செய்வதற்கான வழியாக இருந்தது.

கைவினைத் தொழில்கள் தேசிய பொருளாதாரத்தின் முக்கியமானதொரு பாத்திரத்தை வகித்தன. மற்றும் இன்னும் வகித்துக் கொண்டும் இருக்கின்றன. கைவினைத் தொழிலாளர்கள் பரந்த விவசாய வெகுஜனங்களோடு நெருக்கமாக இணைந்திருந்தார்கள். மற்றும் அவர்களுக்கு உற்பத்திக்கான முக்கிய கருவிகளையும் நுகர்பொருள் சப்ளையும் செய்தார்கள். ஆனால், கைவினைத் தொழில் உற்பத்தி, உற்பத்திசாதனங்களின் தனியார் உடைமையை அடிப்படையாகக் கொண்டிருந்த தனிநபர் பொருளாதாரத்தின் ஒரு உருவமாக இருந்தமையால், நிதிகளில் பற்றாக்குறையாகவும் அளவில் வரம்புக்கு உட்பட்டதாகவும் மற்றும் பத்தாம்பசலித் தனத்தோடும் தொழில் வாதத்தோடும் கடுமையாக கறைபடிந்ததாக இருந்தது. இதன் விளைவாக, அதனுடைய உற்பத்தித் திறன் மிகவும் தாழ்வானதாக இருந்தது. தனிப்பட்ட கைவினைத் தொழிலாளி திட்டமிட்ட உற்பத்தியைத் தொடர்ந்து நடத்தவும் முடியவில்லை, அல்லது தொழில் நுட்ப அபிவிருத்திகளை மேற்கொள்ளவும் முடியவில்லை. இது இயல்பாகவே குருட்டுத்தனமான உற்பத்திக்கும் லாபச் சூதாட்டத்திற்கும் வழிநடத்திச் சென்றது; மேலும், உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் பாதகமாக இருந்தமையால், தேசிய நிர்மாண திட்டத்தையும் எதிர்மறையாகவும் பாதித்தது.

தனிநபர் பொருளாதாரத்தை அடிப்படையாக கொண்டிருந்த கைவினைத் தொழில்களின் சோஷலிச மாற்றமடைதலும் கூட்டுறவு பாதையின் வழியாக நிறைவேற்றப்பட வேண்டி இருந்தது. அதாவது, அவை தனி நபர்களின் கைவினைத் தொழிலாளர்களால் வைக்கப்பட்டிருந்த தனியார் உடைமை கூட்டு உடைமையினால் அகற்றப்படுவதற்கு முன்பு சப்ளை மற்றும் சந்தை தேடும் கோஷ்டிகள், சப்ளை மற்றும் சந்தை தேடும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மற்றும் உற்பத்தியாளர் கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஆகிய மூன்று கட்டங்களின் வழியாக் போக வேண்டி இருந்தன.

முதலாளித்துவ தொழில் மற்றும் வியாபாரம் ஆகியவற்றின் சோஷலிச மாற்றமடைவதும் சீனாவில் மாறிச் செல்லும் காலகட்டத்தில் அடிப்படையான கடமையில் முக்கியமானதொரு பகுதியாக அமைந்திருந்தது. முதலாளித்துவ தொழில்

மற்றும் வியாபாரத்தின்பால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை அவற்றை உபயோகிப்பதும் கட்டுப் படுத்துவதும், மற்றும் மாற்றுவதாகவும் இருந்தது. முதலாளித்துவ தொழிலையும் வியாபாரத்தையும் உபயோகிப்பது அவசியமாக இருந்தது. ஏனென்றால், உற்பத்திசெய்யப்பட்ட சாமான்களின் சப்ளையை அதிகரிப்பதற்கும், நாட்டின் தொழில்மயமாக்குவதற்கான நிதிகளைக் குவிப்பதற்கும், சரக்குகளின் புழக்கத்தை விஸ்தரிப்பதற்கும், வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கும் மற்றும் திறமையான தொழிலாளர்களையும் நிர்வாக ஊழியர்களையும் பயிற்றுவிப்பதற்கும் அவை உதவி செய்யும். எனினும், கட்டுப் படுத்தலும் அவசியமாக இருந்தது. ஏனென்றால், முதலாளித்துவம் எப்பொழுதுமே லாபத்திற்காக வேட்டையாடிக் கொண்டிருந்தது. மற்றும் அதனுடைய உள்ளடங்கி இருக்கும் கூலிக்காரத் தன்மை இயல்பாகவே லாபச் சூதாட்ட நடவடிக்கைகளுக்கும், ''ஐந்து தீமை'' 'களுக்கும் வழி நடத்தி செல்லும். இறுதியாக, மாற்றமடைதல் மகத்தான முக்கியத்துவம் உடையதாக இருந்தது. ஏனென்றால், முதலாளித்துவத்தின் உற்பத்தி உறவுகள், உற்பத்தி சக்திகளின் அபிவிருத்தியோடு மோதலில் இருந்தன. மற்றும் உற்பத்தியில் அதனுடைய அராஜகம் சோஷலிச பொருளாதாரத்தின் திட்டமிடப்பட்ட அபிவிருத்தியோடு ஒத்துப்போக முடியாததாகவும் இருந்தது. ஆகவே, முதலாளித்துவ உடமையை அனைத்து மக்களின் உடமையினால் படிப்படியாக அகற்றுவதும் கட்டாயமாக இருந்தது.

முதலாளித்துவ தொழிலையும் வியாபாரத்தையும் மாற்றமடையச் செய்வதற்கான வழி அரசு முதலாளித்துவத்தின் மூலமாக போக வேண்டி இருந்தது. அரசின் நிர்வாக உறுப்புகளால் பிரயோகிக்கப்பட்ட கட்டுப்பாட்டின் மூலமாகவும், அரசுடைமையாக்கப்பட்ட பொருளாதாரத்தின் தலைமையின் மூலமாகவும் மற்றும் தொழிலாளிகளின் மேற்பார்வையின் மூலமாகவும் தனியார் முதலாளித்துவம் அரசு முதலாளித்துவத்தின் கால்வாய்க்குள் வழி நடத்திச் செல்ல முடியும். அரசு முதலாளித்துவம் முதலாளித்துவத்தின் ஒரு விசேஷ உருவமாக இருந்தது; அதில் உற்பத்தியின் முக்கிய நோக்கம் அரசு மற்றும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக இருந்தது; மற்றும் முதலாளிகள் லாபத்தை தேடும் அவர்களது முயற்சியில் வரம்பற்ற சுதந்திரத்தை அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை, அது

மூன்று உருவங்களைப் பெற்றிருந்தது. ஆரம்ப உருவம் அரசினால் ஒரு தனியார் நிறுவனத்தின் உற்பத்தி பொருட்களை முழுக்க முழுக்க வாங்குவதிலும் சந்தை தேடிக் கொடுப்பதிலும் அடங்கி இருந்தது. நடுத்தர உருவம் பதனிடுவதற்காகவும் உற்பத்திக்காகவும் தனியார் நிறுவனங்களுக்கு உத்திரவுகளைக் கொடுப்பதிலும், மற்றும் முன்னேறிய உருவம் கூட்டு அரசு மற்றும் தனியார் உடமையிலும்,இயங்குதலிலும் அடங்கி இருந்தன.

தனிப்பட்ட முதலாளி மற்றும் அவரது ஏஜெண்டுகளை மீண்டும் வார்த்தெடுப்பதோடு இணைத்து, தொழில் நிறுவனங்களின் மாற்றமடைதலை நிறைவேற்ற வேண்டி இருந்தது. ஒரு புறத்தில், முதலாளித்துவ நிறுவனங்கள் படிப்படியாக முற்போக்கான சோஷலிச நிறுவனங்களாக மாற்றப் படவேண்டி இருந்தன; மறுபுறத்தில், முதலாளிகளும் அவர்களது ஏஜெண்டுகளும் சித்தாந்த ரீதியாக மீண்டும் வார்த்தெடுக்கப்பட வேண்டியவர்களாக இருந்தார்கள்; அப்படிச் செய்வதினால் அவர்கள் நாட்டின் சோஷலிச மாற்றமடைதலின், சாத்தியமான அளவிற்கு, சுறுசுறுப்பானதொரு பாத்திரத்தையும் உபயோகமானதொரு பாத்திரத்தையும் வகிப்பார்கள்.

முதலாளித்துவ தொழிலையும் வியாபாரத்தையும், பயன்படுத்தலும் கட்டுப்படுத்தலும் மற்றும் மாற்றமடையச் செய்தலும், மாறிச் செல்லும் கால கட்டத்தில் தொழிலாளி வர்க்கத்திற்கும் பூர்சுவா வர்க்கத்திற்கும் இடையே வர்க்கப் போராட்டத்தின் புதியதொரு உருவமாக இருந்தது. சோஷலிச பொருளாதாரத்தின் அபிவிருத்தியும் தொழிலாளி வர்க்கத்தின் வளர்ந்து கொண்டிருக்கும் பலமும் சோஷலிச நிர்மாணத்தையும் பூர்சுவா வர்க்கத்தை ஒரு வர்க்கம் என்ற முறையில் ஒழிப்பதையும் வேகப்படுத்துவதற்கு நிச்சயமாக உதவி செய்யும்.

தேசிய பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கான முதல் ஐந்தாண்டு திட்டம் (1953-57) மாறிச் செல்லும் கால கட்டத்தில் கட்சியினால் வகுக்கப்பட்டிருந்த பொதுவானப் பாதையை உருப்பெறச் செய்வதில் முக்கியமான நடவடிக்கையாக இருந்தது.

1951 ஆரம்பத்தில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி முதல் ஐந்தாண்டு திட்டத்தைத் தீட்டுவதற்கு ஆரம்பித்தது, மற்றும் திட்டமிடப்பட்ட பொருளாதார நிர்மாணம் 1953இல் ஆரம்பமாயிற்று. இந்த நீண்ட கால நிர்மாண திட்டத்தை உருவாக்கும் போக்கில் பல கஷ்டங்கள் எதிர்நோக்கப்பட்ட போதிலும்,

எனினும், பொருளாதார நிர்மாணத்தில் இரண்டு ஆண்டுகளின் நடைமுறையின் ஒரு விளைவாக, ஏராளமான அனுபவம் பெறப்பட்டிருந்தது. பல சேர்க்கைகளுக்கும் மாற்றங்களுக்கும் பிறகு, ஒரு நகல் ஐந்தாண்டு திட்டம் நிகழ்ச்சிப் போக்கில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 1955 மார்ச்சில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாடு அதை கவனமாக பரிசீலனை செய்தது; மற்றும் மத்திய கமிட்டியினால் அவசியமான திருத்தங்கள் செய்யப்பட்ட பிறகு, நாட்டின் ஒரு திட்டமாக பரிசீலனை செய்யப்படுவதற்காகவும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்காகவும் தேசிய மக்கள் காங்கிரசிற்கு அது சமர்பிக்க படலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது. 1955 ஜூலை 30இல், முதல் தேசிய மக்கள் காங்கிரசின் இரண்டாவது கூட்டத்தில் திட்டம் சம்பிரதயமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

முதல் ஐந்தாண்டு திட்டத்தில் வரையறுக்கப் பட்டிருந்த அடிப்படையான கடமைகள் இரண்டு தலைப்புகளில் இருந்தன: நாட்டின் சோஷலிச மாற்றமடைதலும் மற்றும் சோஷலிசம் அல்லாத பொருளாதார அம்சங்களின் மாற்றமடைதலும் என்ற தலைப்புகளின் கீழ் இருந்தன. கன இயந்திர தொழிலின் மீது முக்கியமான அழுத்தம் கொடுத்து, தொழில் நிர்மாணத்தை நிறைவேற்றுவதினால், சீனாவின் சோஷலிச தொழில் மயமாக்குதலுக்கான பூர்வாங்கமான அடித்தள வேலையும் நிறைவேற்றுவது; முதலாவதாக, அவசியமாக இருந்தது; அதாவது, மின்விசை, நிலக்கரி, எண்ணெய், இரும்பு, மற்றும் உருக்கு மற்றும் இரும்பில்லாத உலோகங்கள் மற்றும் அடிப்படையான ரசாயனத் தொழில்கள், மற்றும் இயந்திரங்களை நிர்மாணிக்கும் தொழில்களை ஸ்தாபித்தல் முதலியன போன்ற இப்படிப்பட்ட தொழில்களை ஸ்தாபிப்பதும் விஸ்தரிப்பதும் அவசியமாக இருந்தது. நிலைமை இப்படி இருந்தமையால், மொத்த முதலீட்டில் 40.9 % தொழிலுக்குள் போக வேண்டுமென்று அது ஏற்பாடு செய்திருந்தது. மற்றும் இயந்திர தொழிலின் மூலதன நிர்மாணத்தில் முதலீட்டின் 88.8 சதவீதம் உற்பத்தி செய்யும் தொழில்களுக்கு அர்ப்பணிக்கப்படவேண்டியிருந்தது. கன இயந்திர தொழிலின் அபிவிருத்தி பஞ்சாலை மற்றும் இதர லேசான தொழில்கள், செய்திப் போக்குவரத்துகள் மற்றும் போக்குவரத்து மற்றும் விவசாயத்திற்கு பணி புரிவதற்கு நடுத்தர மற்றும் சிறு தொழில் நிறுவனங்களையும் ஏற்பாடு செய்வதோடு ஏக காலத்தில் ஆரம்பமாக இருந்தது.

சோஷலிச தொழில் மயமாக்குதலின் இந்த தொழில் கொள்கையை அமல் நடத்தியதன் ஒரு விளைவாக, தொழில் உற்பத்தி மிகவும் துரிதமாக அபிவிருத்தி அடைந்தது. ஐந்தாண்டு காலத்தில் தொழில் உற்பத்தியில், வருடாந்திர அதிகரிப்பின் சராசரி 14.7 சதவீதம் ஆக இருக்கும் 1957 வாக்கில் இரண்டு மடங்கு அதிகரிப்பை ஏற்படுத்தி இருக்கும். அபிவிருத்தியின் இந்த விகிதாச்சாரம், சோஷலிச /நாடுகளில் மட்டுமே சாத்தியமாக இருக்கும். இந்த விகிதாச்சாரம், முதலாளித்துவ நாடுகளால் கனவுகூட காணப்பட முடியாத விகிதாச்சாரமாக இருந்தது.

பிறகு, தனிநபர் பொருளாதாரத்தின் மீது அடிப்படையாகக் கொண்டிருந்த விவசாயத்தையும் கைவினைத் தொழில்களையும் மாற்றமடையச் செய்தலும், மற்றும் தனியார் தொழிலையும் வியாபாரத்தையும் மாற்றமடையச் செய்தலும் இருந்தது, விவசாயத்தில் கூட்டுறவு இயக்கம் ஊக்கிவிக்கப்பட இருந்தது மற்றும் அரை சோஷலிச கூட்டுறவு ஸ்தாபனங்கள், சிறுவிவசாய பொருளாதாரத்தைப் பூர்வர்ங்மானதொரு மாற்றமடைதலுக்கு கொண்டுவருவதற்கு முக்கிய உருவமாக பயன்படுத்தப்பட விருந்தன. இந்த அடிப்படையில், விவசாயத்தில் தொழில் நுட்ப சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்படும். ஒரு யூனிட் பரப்பின் உற்பத்தி அதிகரிக்கப்படும். மற்றும் மிகமிகப் பெரிய சாத்திய மான அளவு காலி நிலம் விவசாய உற்பத்தியின் கூடுதலான அபி விருத்தியை உறுதிப்படுத்துவதற்கு சீர்திருத்தப்படும் இடைக் காலத்தில் தங்களுடைய சொந்த வேலையையே செய்து கொண் டிருந்த விவசாயிகளின் சாத்தியப்பாடான திறமைகளை அபிவிருத்தி செய்வதற்கு கவனம் செலுத்தப்படும். விவசாய உற்பத்தி மற்றும் அதனுடைய பக்கவாட்டு வரிசைகளின் உற்பத்தி ஆகியவற்றின் சராசரி வருடாந்திர அதிகரிப்பு 4.3 சதவீதம் ஆக இருக்கும்மடியாக திட்டமிடப்பட்டது. சாத்தியப்பாட்டின் தேவைகளுக்கும் அளவுகளுக்கும் ஏற்புடைய முறையில், முதலாளித்துவ தொழிலையும் வியாபாரத்தையும் மாற்றமடையச் செய்வதற்கான நடவடிக்கைகள், கூட்டு அரசு — தனியார் நிறுவனங்களை படிப்படியாக விஸ்தரிப்பதாகவும், பதனிடுவதற்காகவும், உற்பத்திக்காகவும் தனியார் நிறுவனங் களுக்கு கொடுக்கும் உத்திரவிகளை அதிகரிப்பதற்காகவும், அவற் றின் உற்பத்தி பொருட்களை முழுக்க முழுக்க கொள்முதல் செய் வதாகவும் சந்தை தேடிக் கொடுப்பதாகவும் மற்றும் அரசு நிறு வனங்களுக்கும் அரசு கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் கமிஷன்

ஏஜண்டுகளாக செயல்படும்படி, தனியார் உடமையான கடைகளை,செய்வதாகவும், இந்தமுறையில் தனியார் தொழில் மற்றும் வியாபாரத்தின் சோஷலிச மாற்றமடைதலுக்கான அடித்தளத்தைப் போடுவதாகவும் இருந்தன. தனியார் தொழில் மற்றும் வியாபாரத்தையும் ஒரு ஐந்தாண்டு காலகட்டத்திற்குள் அரசு முதலாளித்துவத்தின் பல்வேறு உருவங்களுக்குள் மாற்றமடையச் செய்தல் நாடுமுழுவதிலும் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்க வேண்டுமென்று திட்டத்தில் வரையறுக்கப்பட்டிருந்தது.

திட்டம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருப்பதோடு நவீன தொழில் உற்பத்தியின் மதிப்பு, தொழில் மற்றும் விவசாய உற்பத்தியின் மொத்த மதிப்பில், 1952-இல் 26.7% ஆக இருந்ததில் இருந்து 1957-இல் 36 சதவீதத்திற்கு உயர்ந்திருக்கும். மொத்தத் தொழில் உற்பத்தியில் உற்பத்தி சாதனங்களின்மதிப்பு 1952-இல் 39.7 சதவீதம் ஆக இருந்ததில் இருந்து 1957-இல் 45.4 சதவீதம் ஆக உயர்ந்திருக்கும். பொருளாதாரத்தின் சோஷலிச அம்சத்திலும் கணிசமான அதிகரிப்பும் இருக்கும். நாட்டின் தொழில் உற்பத்தியின் மொத்த மதிப்பில், அரசுடமையான, கூட்டுறவு உடமையான மற்றும் கூட்டு அரசு-தனியார் உடமையான தொழில்களின் உற்பத்தியின்மதிப்பு 1952-இல் 61 சதவீதம் ஆக இருந்ததில் இருந்து 1957-இல் 87.8 சதவீதம் ஆக இருக்கும். 1957-இல் சில்லறை வியாபாரத்தின் மொத்த மதிப்பில், அரசுடமையான கூட்டுறவு ஸ்தாபனங்களாலும் மற்றும் கூட்டு அரசு-தனியார் நிறுவனங்களாலும் நடத்தப்படும் வியாபாரத்தின் மதிப்பு 78.9 சதவீதம் ஆக இருக்கும். மாறிச் செல்லும் கால கட்டத்தில், பொதுவான பாதையை உருப்பெறச் செய்வதற்காக போராடுவதற்கு சீன மக்களைத் தலைமை தாங்கிச்செல்வதில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, சீனாவில் ஒரு மாபெரும் சோஷலிச சமுதாயத்தை நிர்மாணிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. இது பூர்சுவா ஜனநாயக புரட்சியைக் காட்டிலும் மிகவும் விரிவானதொரு புரட்சியாகவும், மிகவும் ஆழமானதொரு புரட்சியாகவும் இருக்கும். ஏனெனில், அது நாட்டின் சுரண்டலை முற்றிலும் ஒழித்துக் கட்டுவதில் கொண்டு போய் விட்டிருக்கும். ஆகவே, கூர்மையானதொரு வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாததாக இருந்தது.

மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படையில், கட்சியின் தலைமை தாங்கும் பாத்திரத்தைப் பலப்படுத்துவதும் மற்றும் அதனுடைய ஒருமைப் பாட்டையும் ஒற்றுமையையும் கெட்டிப்

படுத்துவதும் மாறிச் செல்லும் காலகட்டத்தில் பொதுவான பாதையை உருப்பெறச் செய்வதற்கான அடிப்படையான உத்திர வாதமாக இருந்தது.

1954 பிப்ரவரியில், நடைபெற்ற சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் ஏழாவது மத்தியக் கமிட்டியின் நான்காவது விரிவடைந்தக் கூட்டத்தில், ஏகாதிபத்தியவாதிகள், ஒழிக்கப்பட்டிருந்த அல்லது ஒழிக்கப்பட்டுக் கொண்டிருந்த வர்க்கங்களைச் சேர்ந்த, உள்நாட்டில் இருந்த பிற்போக்குவாதிகளோடு ஒன்று சேர்ந்துக் கொண்டு, சீனப் புரட்சியின் லட்சியத்தை நாசம் செய்வதற்கு அவர்களிடம் இருக்கும் சகல முறைகளையும் கையாளுவார்கள் என்று கட்சி உறுப்பினர்களுக்கும் கட்சி சார்பற்ற மக்களுக்கும் எச்சரிக்கைக் கொடுக்கப்பட்டிருந்தது.

கட்சியில் ஊசலாடிக் கொண்டிருக்கும் பேர்வழிகளையும், நம்பத் தகாத பேர்வழிகளையும் பயன்படுத்துவதனால், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியைத் தாக்குவது சீன மக்களின் லட்சியத்தைத் தகர்ப்பதற்கு மிகமிக சக்தி வாய்ந்த வழியாக இருக்கும் என்பது இந்த வருங்கால நாசவேலைக்காரர்களுக்கு நன்றாகத் தெரியும். கட்சியில் ஒரு பிளவு ஏற்படுவதின் மீதும் மற்றும் கட்சியின் சீர் குலைவின் மீதும் அவர்கள் மிகமிகப் பெரிய நம்பிக்கை வைத்திருந் தார்கள்.

நான்காவது விரிவடைந்த கூட்டம், புரட்சிக்கு, அவர்களுக்கு இருக்கும் புரட்சி உணர்வினை உயர்த்தும்படியும் மற்றும் எதிரி களின் சூழ்ச்சிகளுக்கு எதிராக அவர்களது கண்காணிப்பை உயர்த்தும்படியும் மற்றும் கட்சியில் அரசியல் வாழ்க்கை ஒட்டிகள் உதயமாவதன் சாத்தியப்பாட்டிற்கு எதிராக அவர் களது பொறுப்புணர்ச்சியை உயர்த்தவும் கட்சியின் சகல உறுப்பினர்களையும் அறைகூவி அழைத்தது. கட்சியை நாசம் செய்வதையும், பிளவுபடுத்துவதையும் குறிக்கோளாகக் கொண் டிருந்த எதிரிகளின் சூழ்ச்சியை நசுக்கவும், கட்சியைப் பலப்படுத்தவும், தனிநபர்வாதம், தாராளவாதம், செக் டேரியனிசம், இலாக்காவாதம் மற்றும் பிராந்தியவாதம் போன்ற இப்படிப்பட்ட தவறான சித்தாந்த போக்குகளுக்கு எதிராக கட்சிக்குள் ஒரு போராட்டம் நடத்தப்பட வேண்டி யிருந்தது; ஏனெனில், இப்படிப்பட்ட தவறான கருத்துகளுடன் கூடிய உறுப்பினர்கள் எதிரியினால் வென்றெடுக்கப்பட்டு கருவி களாக செயல்படுவதற்கு ஏதுவாக இருந்தார்கள். நான்காவது

விரிவடைந்தக் கூட்டத்தில் கட்சி விரோத பேர்வழிகளுக்கு ஒரு இறுதி எச்சரிக்கைக் கொடுக்கப்பட்டது. கட்சியின் ஒருமைப் பாட்டினை வேண்டுமென்றே யார் கெடுத்தாலும், கட்சியை உறுதியாக எதிர்த்துப் போராடினாலும், மற்றும் அவர்களது சொந்தத் தவறுகளைப் பிடிவாதமாக பற்றிப் பிடித்துக் கொண் டிருந்தாலும் அல்லது செக்டோரியன் நடவடிக்கைகளிலும் பிளவு நடவடிக்கைகளிலும் ஈடுபடும் அளவிற்கு மட்டமாகப் போயிருந் தாலும் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள்; மற்றும் கட்சியில் இருந்து நீக்கப்படவும் செய்வார்கள்.

இரண்டு அரசியல் வாழ்க்கை ஒட்டிகளான காவோகாங் மற்றும் ஜாவோசூ-ஷி ஆகியோரால் அமைக்கப்படிருந்த ஒரு கட்சி விரோத கும்பலின் சூழ்ச்சி நான்காவது விரிவடைந்த கூட் டத்திற்கு முன்பும் பின்பும் அம்பலப்படுத்தப்பட்டிருந்தது; இப்படி அம்பலப்பட்டிருந்த, சூழ்ச்சி கட்சிக்குள் கடுமையான வர்க்கப் போராட்டத்தின் கூர்மையானதொரு பிரதிபலிப்பாக இருந்தது.

இந்தக் கட்சி விரோதக் கும்பல், கட்சியின் மத்தியக்கமிட்டிக்கு எதிராக எந்த விதமான திட்டத்தையும் முன் வைக்கவில்லை; ஆனால், சதிகார முறைகளின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சித்தார்கள் என்பது இந்தக் கட்சி விரோத கும்பலின் குணாதிசயமாக இருந்தது. அவர்கள் நன்கு உணர்ந்திருந்தது போலவே, நாட்டில் இருந்த அனைத்து மக்களும் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் தோழர் மாசே-துங்கினால்தலைமை தாங்கப்பட்ட மத்தியக் கமிட்டியை முழுமையாக நம்பி இருந் தார்கள். மத்தியக் கமிட்டியின் தலைமையை எதிர்ப்பதற்கு அவர்கள் பகிரங்கமாக முன்வந்திருந்தால் அவர்களது உண்மை யான பிற்போக்குத் தன்மை கட்சி முழுவதின் முன்பும் தேசம் முழுவதின் முன்பும் உடனடியாக அம்பலப்படுத்தப்பட்டு, அவர்கள் பரிதாபகரமான தோல்வியைச் சந்தித்திருப்பார்கள்.

ஆகவே, கட்சியைச் சீர்குலைப்பதிலும் பிளவுபடுத்துவதிலும் பகிங்கரமாக ஈடுபடுவதற்கு அவர்கள் துணியவில்லை. மாறாக, அவர்கள் இரட்டை வேட முறையைக் கையாண்டார்கள். கட்சி யினால் வகுக்கப்பட்டிருந்த சரியான பாதைக்கு விசுவாசமாக இருப்பதாக பாசாங்கு செய்துகொண்டும், ஆனால் உண்மையில் தங்களுடைய சொந்த அரசியல் ஆசைகளை உருப்பெறச் செய் வதற்கு ரகசியமாக முயற்சி செய்து கொண்டும் இருந்தார்கள். அவர்கள் செக்டோரியன் நடவடிக்கைகளைத்தொடர்ந்து நடத்தி

னார்கள். வதந்திகளைப் பரப்பி பொய்யான குற்றச்சாட்டுகளை தொடுத்தார்கள். மக்களில் ஒருவரை மற்றொருவருக்கு எதிராக தூண்டிவிட்டு, விரோதத்தை உண்டாக்கினார்கள். லஞ்சம் கொடுப்பதில் ஆதரவாளர்களைப் பெற்று வருவதற்கு முயற்சித்தார்கள். மற்றும் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம், கட்சிக்குள் பிளவினை விதைத்தார்கள். அவர்கள் கட்சியின் ஒன்றுபட்ட தலைமையை எதிர்த்தார்கள். மற்றும் தங்கள் தலைமையின் கீழிருந்த ஏரியாக்களை அல்லது இலாக்காக்களை ''சுயேச்சையான ராஜ்ஜியங்களாக'' கருதினார்கள். இவை அனைத்தும் அரசின் உன்னத அதிகாரத்தையும் பறிப்பதற்கான தயாரிப்பாக இருந்தது. நிலப்பிரபுக்களாலும், பூர்சுவா வர்க்கத்தாலும் கையாளப்பட்ட வகையைச் சேர்ந்த சூழ்ச்சியையும், சாகசங்களையும் கையாண்டதால், முற்றிலும் கோட்பாடற்ற சதிகாரர்களின் ஒரு கும்பலாக இருப்பதாக அவர்கள் தங்களை நிரூபித்துக் கொண்டார்கள். இந்தச் சதிகாரர்கள், அந்தச்சமயத்தில், வர்க்க போராட்டத்தின் விசேஷ நிலைமைகளின்கீழ் கட்சிக்குள் தோன்றினார்கள். அவர்களது கட்சி விரோத நடவடிக்கைகள் ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் பூர்சுவா பிற்போக்குவாதிகளின் விருப்பங்களுக்குப் பொருத்தமாக இருந்தன என்ற விவரத்தில் இருந்து தப்பித்துச் செல்லமுடியாது. மேலும், கட்சியின் உன்னதமான அதிகாரமும் இத்தகைய சதிகாரங்களின் கரங்களுக்குள் விழுந்திருக்குமேயானால், பிற்போக்கு ஆட்சி மீட்சி பெறுவதற்கான பாதையை அது செப்பனிட்டு இருந்திருக்கும். எனவே, அவர்கள் உண்மையில் கட்சிக்குள் ஏகாதிபத்தியவாதிகளின் ஏஜெண்டுகளாகவும் பூர்சுவா வர்க்கத்தின் ஏஜெண்டுகளாகவும் செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

1954 பிப்ரவரியில், நடைபெற்றகட்சியின் ஏழாவது மத்தியக் கமிட்டியின் நான்காவது விரிவடைந்த கூட்டத்தில் இருந்து 1954 மார்ச்சில் நடைபெற்ற கட்சியின் தேசிய மாநாடு வரையிலும், கட்சி முழுவதும், தோழர் மாசே-துங்கினால் தலைமை தாங்கப்பட்ட மத்தியக் கமிட்டியின் தலைமையின் கீழ், காவோகாங் மற்றும் ஜாவோசூ-ஷி ஆகியோரின் இந்தக் கட்சி விரோதக் கும்பலின் சூழ்ச்சியை முற்றிலும் அம்பலப்படுத்தி அதனை தூள் தூளாக உடைத்தெறிந்தது.

**2. சீனாவின் சமாதானக் கொள்கை. தைவானின் விடுதலைக்கான சீனமக்களின் போராட்டம். முதல் தேசிய**

மக்கள் காங்கிரஸ். சீனமக்கள் குடியரசின் அரசியல் சட்டம்.

சீனமக்கள் தங்களது தாய் நாட்டை ஒரு மாபெரும் சோஷலிச நாடாக நிர்மாணிப்பதற்கு விரும்புகிறார்கள். அவர்கள் சமாதான பூர்வமான உழைப்பில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களுக்கு சமாதான பூர்வமானதொரு சர்வதேச நிலைமை தேவைப்படுகிறது.

சீனமக்கள் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டதில் இருந்து, உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்காகவும் ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தடுப்பதற்காகவும் பொதுவானதொரு முயற்சியில் மாபெரும் சோவியத்யூனியனோடும் மற்றும் இதர மக்கள் ஜனநாயக நாடுகளோடும் நெருக்கமாக அது இணைந்துள்ளது. தென்கிழக்கு ஆசியாவில் உள்ள நாடுகளோடும் மற்றும் இதர அண்மை நாடுகளோடும் அது சமாதான பூர்வமான ஒத்துழைப்பை பலப்படுத்தியுள்ளது. மற்றும் சில மேற்கத்திய நாடுகளோடும் மாமூலான உறவுகளை நிலைநாட்டி உள்ளது. ஜப்பானோடு உறவுகளை மாமூலாக்கவும் வியாபாரத்தை அபிவிருத்திச் செய்யவும் அது விரும்பிக் கொண்டுள்ளது; மற்றும் ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்ரேலியா மற்றும் ஆப்ரிக்காவில் உள்ள சகலநாடுகளோடும் சமாதான பூர்வமான ஒத்துழைப்பு உறவுகளை நிலைநாட்டுவதற்கு அது விரும்பிக் கொண்டிருக்கிறது.

உலக சமாதானத்தைப் பாதுகாக்கவும், சர்வதேச மோதல்களைக் குறைக்கவும் சீனா விட்டுக் கொடுக்காத முயற்சிகளைச் செய்துள்ளது. கொரியாவிற்கு எதிரான ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடுவதற்கு, சீன மக்கள் அமெரிக்காவை எதிர்த்துப் போராடும் மற்றும் கொரியாவிற்கு உதவி செய்யும் மாபெரும் இயக்கத்தைத் துவக்கிற்று; மற்றும் சீன மக்களின் தொண்டர்களாலும் கொரியமக்கள் படையினாலும் நடத்தப்பட்ட போராட்டம் 1953 ஜூலையில், ஒருபோர் நிறுத்தத்தை ஒப்புக்கொள்ளும்படி அமெரிக்காவை நிர்பந்தித்தது. சீனா, சோவியத் யூனியன் மற்றும் இதர நாடுகள் ஜெனீவா மாநாட்டில் பங்கெடுத்தன. மற்றும் அமெரிக்க அரசாங்கத்தினால் போடப்பட்டிருந்த தடையை விலக்கிக் கொண்டு, இந்தோனேசியாவில் சமாதானத்தை மீட்சி பெறச் செய்யும் பிரச்சினையில் ஒரு உடன்பாட்டை இறுதியாகக் கொண்டு வந்தன. இந்த மாநாடு சர்வதேச மோதலைத்

தணித்து உலக சமாதானத்தைக் கெட்டிப்படுத்திற்று. 1954 ஜூனில், சீன பிரதமர் இந்திய மற்றும் பர்மிய பிரதமர்களோடு தனித்தனியாக பேச்சு வார்த்தைகளை நடத்தினார்; மற்றும் ஆதிபத்திய உரிமை மற்றும் பிரதேச ஒருமைப்பாட்டிற்கான பரஸ்பர மரியாதை, ஒருவர் மற்றொருவருடைய உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல், ஆக்கிரமிப்பு செய்யாமை, சமத்துவம் மற்றும் பரஸ்பர நலன் மற்றும் சமாதான சகவாழ்வு ஆகிய ஐந்து கோட்பாடுகள் உருவாக்கப்பட்டு, சீன -இந்திய மற்றும் சீன—பர்மிய உறவுகளுக்கு வழிகாட்டும் அடிப்படை கோட்பாடுகளாக ஊர்ஜிதம் செய்யப்பட்டது. இக்கோட்பாடு கள் உலகம் முழுவதிலும் மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளன.

எனினும், அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் ஒரு யுத்த கொள்கையையும் ஆக்கிரமிப்புக் கொள்கையையும் முன்பின் முரணற்ற முறையில் பின்பற்றி வந்தார்கள். ஆக்கிரமிப்பிற்கான பல்வேறு அரசியல், ராணுவ கோஷ்டிகளையும் கூட்டணிகளை யும் அவர்கள் உருவாக்கினார்கள். ஐரோப்பாவில் அமெரிக்க, பிரிட்டிஷ் மற்றும் பிரஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் ஆக்கிரமிப்பு தன்மை வாய்ந்த வட அட்லாண்டிக் ஒப்பந்த ஸ்தாபனத்தை நிலை நிறுத்தினார்கள். மற்றும் ஜெர்மன் ராணுவ வெறித்தனத் திற்கு புத்துயிர் அளிப்பதற்கான பாதையை வகுத்த ஒரு உடன் பாட்டை பாரீசில் செய்து முடித்தார்கள்; மற்றும் மேற்கத்திய நாடுகளின் ஆக்கிரமிப்புத்தன்மை வாய்ந்த ராணுவகோஷ்டிக்குள் மேற்கு ஜெர்மனியையும் சேர்த்துக் கொண்டார்கள். ஆசியா வில், அமெரிக்கா எட்டுதேச மாநாடு ஒன்றினை மணிலாவில் கூட்டிற்று. அந்த மாநாட்டில் தென்கிழக்கு ஆசிய கூட்டுப்பாது காப்பு ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டது. உண்மையில், இது காலனி ஆதிக்க நாடுகளிடையே ஒரு ராணுவ கூட்டணியாக இருந்தது. சீன மக்கள் குடியரசிற்கு எதிராக விரோதமான உணர்ச்சிகளைப் பரப்புவதையும் ஆசிய நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதையும் மற்றும் புது மோதலை உண்டாக்குவதையும் இது குறிக்கோளாகக் கொண்டிருந்தது. இந்த ராணுவக் கூட்டணியால் ஆதரிக்கப்பட்டு, அமெரிக்க ஆக் கிரமிப்பாளர்கள் ஆசிய மக்களின் மீது தங்களது சித்தத்தை திணிப்பதற்கும் மற்றும் அவர்களது விடுதலை இயக்கங்களை ஒடுக்குவதற்கும் முயற்சித்தார்கள்.

அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள், மூன்று தளங்களில் இருந்து—தைவான் கொரியா மற்றும் இந்தோ சீனா—சீனாவின்

ஆயுதத் தலையீட்டிற்கு முயற்சி செய்தார்கள். கொரியாவிலும் இந்தோசீனாவிலும் யுத்த தீப்பிழம்புகள் தணிக்கப்பட்டு விட்ட பிறகு, அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் தைவானில் வேரூன்றி யிருந்த சியாங்கை-ஷேக் கும்பலின் மூலம், சீனாவுக்கு எதிரான அவர்களது யுத்த தயாரிப்புகளையும் கவிழ்ப்பு நடவடிக்கைகளை யும் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் தீவிரப்படுத்தினார்கள். 1954 டிசம்பர் 2-இல், துரோகத்தனமாக, சியாங்கை-ஷேக் கும்பலோடு, 'பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தத்தில்' அவர்கள் கையெழுத்திட்டார்கள்; மற்றும் துரோகத் தனமான சியாங்கை-ஷேக் கும்பலோடு கூடவே, ஜப்பானிலும் தென் கொரியாவிலும் உள்ள பிற்போக்கு பேர்வழிகளையும், சீனாவில் ஆயுதமேந்திய தலையீட்டை ஊக்குவிக்கும் ஒரு நோக்கத்தோடு, தென் கிழக்கு ஆசியக் கூட்டு பாதுகாப்பு ஒப்பந்த ஸ்தாபனத்தோடு இணைப் பதற்கு, 'வடகிழக்கு ஆசிய பாதுகாப்பு கூட்டணி ஒன்றிற்குள்'' அணி திரட்டுவதற்குக்கூட முயற்சித்தார்கள்.

தைவான் சீனாவின் பிரிக்கப்பட முடியாததொரு பகுதி யாகும்; அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளால் நடத்தப்படும் எந்த ஆக்கிரமிப்பும் சகித்துக் கொள்ளப்படமாட்டாது. தைவானை விடுவிப்பதற்கு சீன மக்கள் தீர்மானித்துள்ளார்கள். தைவான் விடுதலை செய்யப்படாமல் இருக்கும் வரையிலும், சீனாவில் பிரதேச ஒருமைப்பாடு இருக்காது. அதனுடைய சமாதான பூர்வமான தீர்மானத்திற்கான அமைதியான சூழ்நிலையும் இருக்காது. மற்றும் தூரக் கிழக்கில் அல்லது உலகம் முழுவதும் சமாதானத்திற்கான எந்த பந்தோபஸ்தும் இருக் காது. இதர நாடுகளின் ஆதிபத்திய உரிமைகளை மீறுவதும், அவற்றின் பிரதேசத்தைக் கைப்பற்றி அவற்றின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதும் உலக சமாதானத்தை அபாயத் திற்குள்ளாக்குவதாகும்; அதே சமயத்தில், தைவானின் விடுதலைக்கான சீன மக்களின் நியாயமான போராட்டமும் அமெரிக்க ஆக்கிரமிப்பிற்கு எதிரான சீன மக்களின் நியாயமான போராட்டமும் உலக அமைதியைப் பாதுகாப்பதாக உள்ளது. 1954 ஆகஸ்டு 13இல், சீனாவின் மத்திய மக்கள் அரசாங்கம் தைவானின் விடுதலைக்காக போராடி, விடுதலையின் புனிதமான லட்சியத்தை வெற்றிகரமானதொரு முடிவிற்குக் கொண்டுவரும் படியும் தேசம் முழுவதையும் அறைகூவி அழைத்தது. இந்த அறைகூவலுக்கு இணங்க, சீனாவின் சலக ஜனநாயக கட்சிகளும், மக்களின் ஸ்தாபனங்களும் ஆகஸ்டு 22இல் ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டன; அக்கூட்டறிக்கையில் தைவான் சீனப் பிரதேசத்

தின் ஒரு பகுதி என்றும், தைவானை விடுவிப்பதற்கு சீன மக்கள் தீர்மானித்துள்ளார்கள் என்றும் உலகம் முழுவதற்கும் பிரகடணம் செய்தார்கள். இது அறுபது கோடி சீன மக்களின் தீர்மானம் மற்றும் உறுதியான நிலை ஆகியவற்றின் ஒரு வெளிப்படுத்தலாக இருந்தது.

தைவானின் விடுதலைக்காக தயார் செய்வதற்கும் சமாதானத்தைப் பாதுகாப்பதற்கும் சீன மக்கள் விடுதலைச் சேனை 1954-இல் இருந்து டாச்சென், குமாய் மற்றும் இகியாங் சென் தீவுகளில் இருந்த சியாங்கை-ஷேக் துருப்புகளின் நிலைகளின்மீது மூர்க்கத்தனமாக தாக்குதல்களைத் துவக்கி இருந்தது. இகியாங்சென் தீவு 1955 ஜனவரி 19-இல் விடுதலை செய்யப் பட்டது. மற்றும் டாச்சென் தீவு பிப்ரவரி 13-இல் விடுதலை செய்யப்பட்டது. இந்த வெற்றிகள் தைவானின் இறுதி விடுதலைக்கு மகத்தான முக்கியத்துவம் உடையவைகளாக இருந்தன; மற்றும் தைவானின் விடுதலைக்காகவும் பிரதான பூமிக்கு அப்பால் இருந்த இதர தீவுகளின் விடுதலைக்காகவும் சீன மக்கள் நடத்தும் அவர்களது நியாயமான போராட்டத்தில், சீன மக்களைத் தடுப்பதற்குப் போதுமான பலங்கொண்ட எந்த சக்தியும் கிடையாது என்ற விபரத்தை முழுமையாக உறுதிப் படுத்திற்று.

சீனமக்கள் எப்போதுமே சமாதானத்தை ஆதரித்தார்கள், மற்றும் சமாதானத்தை அடைவதற்கு எல்லா முயற்சிகளையும் செய்தார்கள். பலாத்காரத்தைப் பயன்படுத்தும் அதேசமயத்தில், தைவானை விடுவிப்பதற்கு சமாதான முறைகளால் ஆன சாத்தியப்பாடும் இருந்தது என்று சீன அரசாங்கம் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டிற்று. தைவனில் இருந்த கோமிங்டாங்கின் சகலபொறுப்பான ராணுவ ஊழியர்கள் மற்றும் நிர்வாக ஊழியர் களின் தேசபக்திக்கு வேண்டுகோள் விடுத்து, தைவானின் சமாதான பூர்வமான விடுதலையை உருவாக்குவதற்கு உதவிசெய்யும் படி அவர்களை அது அறைகூவி அழைத்தது. எனினும், ஒரு விஷயம் தெளிவாக்கப்பட்டது. எந்த முறைகள் கையாளப் பட்டாலும் சரி, தைவானின் விடுதலை சீனாவின் உள்நாட்டு விவகாரமாக இருந்தது. மூன்றாவது ஒரு தரப்பில் இருந்து எந்தவிதமான தலையீடும் சகித்துக் கொள்ளப்பட மாட்டாது.

சீனாவின் பொருளாதார நிர்மாணத்தின் அபிவிருத்தியும் மற்றும் மக்களின் வாழ்க்கையின் அபிவிருத்தியும், மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தின் எப்பொழுதும் அதிகரித்துக் கொண்

டிருக்கும் உறுதிப்படுத்தலில் இருந்தும் மற்றும் அரசு இயந்திரத்தின் வளர்ந்துக் கொண்டிருக்கும் விரிவான தன்மையில் இருந்தும் பிரிக்கப்பட முடியாது.

புரட்சிக்குப் பிறகு முதல் சில ஆண்டுகளில், பல்வேறு மட்டங்களில் மக்களின் காங்கிரசுகளைக் கூட்டுவதற்கு நிலைமைகள் இன்னும் பக்குவம் அடையாமல் இருந்த பொழுது, ஸ்தல மக்களின் காங்கிரசுகளாக, படிப்படியாக பல்வேறு மட்டங்களில் செயல்படுவதற்கு, ஸ்தலமக்களின் பிரதிநிதித்துவ மாநாடுகளை கூட்டுவதற்கான தற்காலிக நடவடிக்கையை சீன அரசாங்கம் மேற்கொண்டது. மற்றும் பல்வேறு மட்டங்களில் ஸ்தல மக்களின் அரசாங்கங்களைத் தேர்த்தெடுப்பதற்கான தற்காலிக நடவடிக்கையை சீன அரசாங்கம் மேற்கொண்டது. 1953-இல் சர்வஜன வாக்குரிமையை அடிப்படையாகக் கொண்ட தேர்தல்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்டன. அடித்தள மட்டத்தில் தேர்தல்கள்[2] நடத்தி முடிக்கப்பட்ட பிறகு, பல்வேறு மட்டங்களில் ஸ்தல மக்களின் காங்கிரசுகள் கூட்டப்பட்டன; இக்கூட்டங்களில் கிராமப்புற மட்டத்திற்கான காங்கிரசுகளுக்கும் மற்றும் அதற்கு மேல்மட்ட காங்கிரசுகளுக்கும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தேசிய மக்களின் காங்கிரசிற்கு பிரதிநிதிகள் இந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

1954 செப்டம்பர் 15-இல், சீன மக்கள் குடியரசின் முதல் தேசிய மக்கள் காங்கிரஸின் முதல் கூட்டம் பீகிங்கில் நடைபெற்றது. சீனாவை ஒரு சோஷலிச நாடாக நிர்மாணிக்கும் கடமைக்கு சட்ட பூர்வமான உருவம் கொடுக்கப்பட்டு, சீன மக்கள் குடியரசின் அரசியல் சட்டத்தில் எழுதப்பட்டது. மாறிச் செல்லும் காலகட்டத்தில், சீனாவின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் அமைப்புகளை அரசியல் சட்டம் தெளிவாக வரையறுக்கிறது; இந்த முறையில், நாட்டின் சோஷலிச நிர்மாணத்தின் முழுமையான வெற்றியை உறுதி படுத்தியது. அரசியல் சட்டம் சீனாவில் சோஷலிசத்தை உருப்பெறச் செய்வதை நோக்கி திசை திருப்பப்பட்டுள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்லவதென்றால், சோஷலிசத்தை நிர்மாணிப்பதற்கான ஒரு அரசியல் சட்டமாக அது உள்ளது; சீனமக்களின் அடிப்படையான நலன்களும் அபிலாஷைகளும் சட்ட உருவத்தில், அதில் பொதிந்து கிடக்கின்றன.

(1) நாட்டில் சோஷலிசத்திற்கு மாறிச் செல்வதற்கான

யடிகளையும் நடவடிக்கைகளையும் அரசியல் சட்டம் வரையறுக்கிறது. அரசியல் சட்டத்தின் நான்காவது விதி பின்வருமாறு கூறுகிறது :—

சீன மக்கள் குடியரசு, அரசு உறுப்புக்களின் மீதும் சமுதாய சக்திகளின் மீதும் சார்ந்து நிற்பதினாலும் மற்றும் சோஷலிச தொழில்மயமாக்குதலின் மூலமாகவும், சோஷலிச மாற்றமடைதலின் மூலமாகவும், சுரண்டும் அமைப்புகளைப் படிப்படியாக ஒழிப்பதையும், ஒரு சோஷலிச சமுதாயத்தை நிர்மாணிப்பதையும் உறுதிப்படுத்துகிறது.

இந்த விதியில் வரையறுக்கப்பட்டுள்ள கொள்கையை அமல் நடத்துவதற்கு, அரசியல் சட்டத்தின் முக்கியமான பகுதியாக அமைந்துள்ள ஒன்றாவது அத்தியாயத்தில் இதர விதிகளில் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விவசாயம், கைவினைத் தொழில்கள் மற்றும் முதலாளித்துவ தொழில்கள் மற்றும் வியாபாரம் ஆகியவற்றின் சோஷலிச மாற்றமடைதலில் மாறிச் செல்லும் முறையான உருவத்தைச் சுற்றிலும் பிரச்சினை சுற்றி வருகிறது. மற்றும் சமாதான பூர்வமான முறைகளினால் சோஷலிசத்தை உருப்பெறச் செய்வதைச் சுற்றிலும் பிரச்சினை சுற்றி வருகிறது.

முதலாவதாக, ஒரு சோஷலிச சமுதாயத்தை நிர்மாணிப்பது என்பதின் அர்த்தம் என்னவென்றால், சோஷலிசம் அல்லாத உடமையின் சகல உருவங்களையும் சோஷலிச உடமையால் அகற்றுவது என்பதாகும்; சோஷலிச உடமை நாட்டில், உடமையின் ஒரே உருவமாக இறுதியாக மாற வேண்டியுள்ளது என்பதாகும். அனைத்து மக்களும் உடமையாகக் கொண்டுள்ள மற்றும் தன்மையில் சோஷலிசமயமாகவும் உள்ள பொருளாதாரத்தின் அரசு துறையோடு கூடவே, மற்றும் உழைக்கும் வெகுஜனங்களால் கூட்டுடமையாக்கபபட்டுள்ள அளவிற்கு ஏற்ப தன்மையின் சோஷலிசமயமாகவோ அல்லது அரை சோஷலிசமயமாகவோ உள்ள பொருளாதாரத்தின் கூட்டுறவு துறையோடும் கூடவே தனியார் உடமையின் உருவங்களாக இருக்கும் தனிப்பட்ட உழைக்கும் மக்களின் உடமையும் மற்றும் முதலாளித்துவ உடமையும் நாட்டில் நீடிக்கின்றன. நிலம், உற்பத்தி சாதனங்கள், மற்றும் இதர சொத்தையும் சட்டத்திற்கு ஏற்புடைய முறையில் சொந்தமாக வைத்துக்கொள்வதற்கு தனிப்பட்ட உழைக்கும் மக்களுக்குள்ள உரிமையை அரசு பாதுகாக்கிறது என்று அரசியல் சட்டம் வரையறுத்துக் கூறு

கிறது. அதே சமயத்தில், சுய விருப்பக் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குள் படிப்படியாக தங்களை ஸ்தாபன ரீதியாக அமைத்துக் கொள்வதற்கும், மற்றும் பகுதிக் கூட்டு உடைமையில் இருந்து முழுமையான கூட்டு உடைமைக்கு கடந்து செல்வதற்கும் அது அவர்களை ஊக்குவிக்கிறது. சட்டத்திற்கு ஏற்புடைய முறையில், உற்பத்தி சாதனங்களையும் இதர சொத்தையும் சொந்தமாக வைத்துக் கொள்வதற்கு முதலாளிகளுக்கு உள்ள உரிமையை அரசு பாதுகாக்கிறது. அதே சமயத்தில், முதலாளித்துவ தொழிலும் வியாபாரமும் அரசு முதலாளித்துவ பொருளாதாரத்தின் பல்வேறு உருவங்களுக்கும் அவற்றை மாற்றி அமைத்துக் கொள்வதை அது ஊக்குவிக்கிறது. மற்றும் இறுதியாக, அனைத்து மக்களாலும் உடைமையாக்கப்பட்டுள்ள சோஷலிச பொருளாதாரத்திற்குள் மாற்றி அமைத்து கொள்வதையும் அது ஊக்குவிக்கிறது.

விவசாயம் மற்றும் கைவினைத் தொழில்கள் ஆகியவற்றின் சோஷலிச மாற்றமடைவதற்கு, நிலத்தைக் குவிப்பதினாலும், ஒன்று படுத்தப்பட்ட நிர்வாகத்தினாலும் குணாம்சப்படுத்தப் பட்ட ஆரம்ப விவசாய உற்பத்தியாளர்களின் கூட்டுறவு ஸ்தாபனத்தைப் போலவே, உழைக்கும் வெகுஜனங்களால் பகுதி கூட்டு உடைமையின் மீது அடிப்படையாகக் கொண்டுள்ள கூட்டுறவு ஸ்தாபனம் முக்கிய, மாறிச் செல்லும் உருவமாக உள்ளது. முதலாளித்துவ தொழில் மற்றும் வியாபாரம் ஆகியவற்றின் சோஷலிச மாற்றமடைதலுக்கான மாறிச் செல்லும் உருவம் அரசு முதலாளித்துவம் ஆகும். இந்த மாறிச் செல்லும் உருவங்கள் அரசியல் சட்டத்தில் எழுதப்பட்டுள்ளன என்பது நாட்டின் சோஷலிச மாற்றமடைதலின் மீது ஆழமான முத்திரையைப் பெற்றிருந்தது. இரண்டாவதாக, அரசியல் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது போல் நாட்டின் தேசிய பொருளாதாரத்தின் சோஷலிச மாற்றமடைதல் சமாதான பூர்வமான முறைகள் உருப்பெறச் செய்யப்படும். அரசியல் சட்டத்தின் பொதுவான கோட்பாடுகளில், "சீன மக்கள் குடியரசு தொழிலாளி வர்க்கத்தினால் தலைமை தாங்கப்பட்டும் மற்றும் தொழிலாளிகள், விவசாயிகளின் கூட்டணி மீது அடிப் படையாகவும் கொண்டுள்ள ஒரு மக்கள் ஜனநாயக அரசாகும்" என்று கூறப்பட்டுள்ளது. இது நாட்டில் அடிப்படையான சமுதாய உறவுகளையும், வர்க்க உறவுகளையும் தெளிவாக காட்டுகிறது. சோஷலிசத்திற்கு சீனா சமாதான பூர்வமாக மாறிச் செல்வதற்கான மிகமிக முக்கியமான உத்திரவாதமாக

மக்கள் ஜனநாயக அரசு உள்ளது. தொழிலாளி வர்க்கத்தினால் தலைமை தாங்கப்பட்ட மக்கள் ஜனநாயக அரசு அமைப்பு நிலைநாட்டப்பட்டு, சீனாவின் சோஷலிச அரசு பொருளாதாரம் தினந்தோறும் விஸ்தரித்துக் கொண்டிருந்தது; தேசிய பொருளாதாரத்தின் முழுமையான துறையிலும் தலைமை தாங்கும் சக்தியாக மாறிக் கொண்டும் ஆதிக்க நிலையில் இருந்து முதலாளித்துவத்தை வெளியேற்றிக் கொண்டும் இருந்தது. மேலும், தொழிலாளி வர்க்கத்திற்கும், தேசிய பூர்சுவா வர்க்கத்திற்கும் இடையே கூட்டணி நீடித்திருந்தது; இப்படிப்பட்டதொரு அரசு இயந்திரமும் மற்றும் சமுதாய சக்திகளும் நாட்டின் சோஷலிச மாற்றமடையச் செய்தலைப் படிப்படையாக உருப்பெறச் செய்வதற்கு நம்பிக் கொண்டிருக்கப்பட முடியும். நிச்சயமாக, முதலாளித்துவத்தைக் கட்டுப்படுத்தும் போக்கிலும், பின்னர் ஒழிக்கும் போக்கிலும் வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாததாக இருக்கும். ஆனால் அரசாங்க நிர்வாகத்தினால் பிரயோகிக்கப்படும் கட்டுப்பாடு, அரசுடமையாக்கப்பட்ட பொருளாதாரத்தின் தலைமை மற்றும் உழைக்கும் வெகுஜனங்களால் நடத்தப்படும் மேற்பார்வை ஆகியவை சமாதானப்பூர்வமான போராட்டத்தின் குறிக்கோளை உருப்பெறச் செய்வதைச் சாத்தியமாகச் செய்தன.

(2) அரசு அமைப்பு மக்களின் காங்கிரசுகளின் அமைப்பாகும் என்று அரசியல் சட்டம் வரையறுத்துக் கூறுகிறது. முதல் அத்தியாயத்தில் முதல் இரண்டு விதிகளும், "சீனமக்கள் குடியரசு ஒரு மக்கள் ஜனநாயக அரசாகும்" என்றும் மற்றும் "அரசின் சகல அதிகாரமும் மக்களுக்கு சொந்தமாகும்" என்றும் கூறுகின்றன. ஆளும் அதிகாரம் மக்களின் கரங்களில் வைக்கப்பட்டு இருப்பதால், அரசு உறுப்புக்களை நிலைநாட்டுவதற்கும் மற்றும் இந்த அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கும் முறையான ஸ்தாபன உருவங்களைக் கையாளுவதும் அவர்களுக்கு அவசியமாக இருந்தது.

தேசியமக்கள் காங்கிரஸ், அரசு அதிகாரத்தின் மிகமிக உயர்ந்த உறுப்பாகவும் மற்றும் ஒரே கட்டளையிடும் உறுப்பாகவும் உள்ளது. அரசின் சகல மத்திய உறுப்புகளும் அதனால் உண்டாக்கப்பட்டு அதனால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. மற்றும் அதனால் அகற்றப்படவும் செய்யலாம். அது தேசிய பொருளாதார திட்டங்களைத் தீர்மானிக்கிறது. அரசு பட்ஜெட்டையும் நிதி அறிக்கையையும் பரிசீலித்து ஒப்புதல் கொடுக்கிறது. பொது

மன்னிப்புகளையும், யுத்தம் மற்றும் சமாதானம் பற்றிய பிரச்சினைகளையும், மற்றும் இதர அரசின் முக்கிய விஷயங்களையும் தீர்மானிக்கிறது. அரசின் சட்டம் உண்டாக்கும் அதிகாரங்களையும் நிர்வாக அதிகாரங்களையும் அது ஒன்றுபடுத்துகிறது. அரசு அதிகாரத்தின் குவிதலை உயர்வானதொரு அளவில் அது சாதிக்கிறது.

மக்களின் காங்கிரசுகளால் பிரயோகிக்கப்படும் அதிகாரம் மக்களிடமிருந்து நேரிடையாக வருகிறது. ஏனெனில் பிரதிநிதிகள் சர்வஜன வாக்குரிமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இத்தகைய காங்கிரசுகள் மக்களின் சித்தத்தை முழுமையாக பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. மற்றும் சகல அதிகாரமும் மக்களுக்கு உரித்தாவதையும் உறுதிப்படுத்துகின்றன.

மக்களின் காங்கிரசுகளில் இருந்து உதயமாகும் சகல அரசு உறுப்புகளிலும், ஸ்தல அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்திற்கு கீழ்படிந்திருப்பவையாக உள்ளன என்ற கோட்பாடும் மற்றும் கீழ்மட்டங்களில் உள்ள அரசாங்கங்கள் உயர்ந்த மட்டங்களில் உள்ள அரசாங்கங்களுக்கு கீழ்படிந்திருப்பவையாக உள்ளன என்ற கோட்பாடும் பின்பற்றப்படுகிறது. அப்படி இருப்பதனால் நாடு முழுவதும் மத்திய அரசாங்கத்தின் மையத்துவப்படுத்தப்பட்ட மற்றும் ஒன்றுபடுத்தப்பட்ட தலைமையின் இக்கோட்பாட்டிற்கு ஏற்ப, தேசிய மக்கள் காங்கிரசினால் நிறைவேற்றப்படும் சகல சட்டங்களும், கட்டளைகளும் மற்றும் அதனால் தீர்மானிக்கப்படும் சகல சட்டங்களும், கட்டளைகளும் மற்றும் அதனால் தீர்மானிக்கப்படும் சகல தேசிய பொருளாதார திட்டங்களும் மற்றும் தேசிய நிர்மாணத்திற்கான கொள்கைகளும் கண்டிப்பாக பின்பற்றப்பட்டு சகல அரசு உறுப்புகளாலும் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

ஸ்தல மக்கள் காங்கிரசுகளின் அலுவல்களைப் பற்றியும் அதிகாரங்களைப்பற்றியும் மற்றும் பல்வேறு மட்டங்களில் உள்ள ஸ்தல மக்கள் மன்றங்களின் அலுவல்களைப் பற்றியும் அதிகாரங்களைப்பற்றியும் மற்றும் சுய ஆட்சிப்பிரதேசங்களின் சுய அரசாங்க உறுப்புகளின் அலுவல்களைப்பற்றியும் அதிகாரங்களைப்பற்றியும் பொருத்தமான ஏற்பாடுகளையும் அரசியல்சட்டம் செய்கிறது. தேசம் முழுவதற்குமாக நிர்ணயிக்கப்படும் கடமைகளையும் திட்டங்களையும் நிறைவேற்றுவதில், பல்வேறு ஸ்தலங்களின் முன்கை எடுத்தலை முழுமையாக செயல்படுவதற்குக் கொண்டு

வரப்படமுடியும் என்பதனை இது உறுதிப்படுத்துவதாக உள்ளது. அரசு உறுப்புக்கள் மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதாக உள்ளன; அரசாங்க ஊழியர்கள் மக்களுக்கு விசுவாசமாக சேவை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்; மற்றும் அவர்களின் நல்வாழ்வை முற்றிலும் புறக்கணிப்பதனால், அவர்கள்மீது ஆதிக்கம் செலுத்துபவர்களாகவோ அல்லது அதிகார வர்க்கவாதியைப்போல் நடந்து கொள்ளவோ கூடாது. இவை அனைத்தும் பொதுவான கோட்பாடுகளைப் பற்றிய அரசியல் சட்டத்தின் ஒன்றாவது அத்தியாயத்தில் முழுமையான உத்திரவாதம் கொடுக்கப்பட்டுள்ளது.

அரசு அமைப்பும், முறைகளும் அதிகமாக பூர்த்தியாகி உள்ளன என்பதையும், மக்களின் ஜனநாயக வாழ்க்கை மிக அதிகமாக அபிவிருத்தி அடைந்துள்ளது என்பதையும் இத்தகைய ஏற்பாடுகள் காட்டுகின்றன. நாட்டின் சோஷலிச நிர்மாண மாபெரும் லட்சியத்தில் சகல சமுதாய சக்திகளையும் ஒன்றுபடுத்தவும் அணிதிரட்டவும் முடியும் என்பதையும், வெகுஜனங்கள் மற்றும் சகல ஸ்தல அரசியல் உறுப்புக்களின் உற்சாகத்திற்கும், சிருஷ்டித் தன்மைக்கும் சுதந்திரம் கொடுக்க முடியும் என்பதையும் மற்றும் இந்த அடிப்படையில், மிகவும் மத்தியத்துவப்படுத்தப்பட்ட மற்றும் ஒன்றுபடுத்தப்பட்ட தலைமையைப் பிரயோகிக்க முடியும் என்பதையும் அவை உறுதிப்படுத்துகின்றன.

அரசியல் சட்டத்தின் பல பிரிவுகள், மக்களால் அனுபவிக்கப்படும் உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் சம்மந்தமாக ஏற்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. அரசியல் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள் மக்கள் ஜனநாயக அமைப்பின் உன்னதமான தன்மையைக் காட்டுகின்றன. அரசு விவகாரங்களின் நிர்வாகத்தில் பங்கெடுக்கும் சமயத்திலும் மற்றும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் சமயத்திலும், மக்களின் பின்வரும் உரிமைகளையும், சுதந்திரத்தையும் அரசியல் சட்டம் வரையறுத்துக் கூறுகிறது. அவர்கள் பேச்சு சுதந்திரத்தையும் பத்திரிக்கை சுதந்திரத்தையும், கூட்டம் கூடும் சுதந்திரத்தையும், சங்கம் வைக்கும் சுதந்திரத்தையும், ஆர்ப்பாட்டம் செய்யும் சுதந்திரத்தையும் அனுபவிக்கிறார்கள். சட்டத்தை மீறியதற்காக அல்லது கடமையை அலட்சியப்படுத்தியதற்காக எந்த அரசாங்க ஊழியருக்கும் எதிராக புகார்களைத்தாக்கல் செய்வதற்கு அவர்களுக்கு

உரிமை உண்டு. வாக்களிப்பதற்கும், தேர்தலில் நிற்பதற்கும் அவர்களுக்கு உரிமை உண்டு. அவர்களின் தனிநபர் சுதந்திரமும் மற்றும் அவர்களது இல்லங்களின் சுதந்திரமும் மீறப்பட முடியாதவை. உற்பத்தி உழைப்பிலும், கலாச்சார நடவடிக்கைகளிலும் பங்கு எடுப்பதற்கு அவர்களுக்கு உள்ள உரிமைகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. வேலை செய்யும் உரிமையும், கல்வி பெறும் உரிமையும் அவர்களுக்கு உண்டு. ஓய்வு பெறுவதற்கும், பொழுதுபோக்குவதற்கும் உழைக்கும் மக்களுக்கு உரிமை உண்டு. மற்றும் வயதான காலத்தில் பொருளாதார உதவி பெறுவதற்கும் வியாதியாக இருக்கும்பொழுதும் அல்லது உடல் ஊனப்பட்டாலும் பொருளாதார உதவி பெறுவதற்கும் உரிமை பெற்றிருக்கிறார்கள். சகல குடிமக்களும் மத சுதந்திரத்தை அனுபவிக்கிறார்கள்.

மறுபுறத்தில், ஒவ்வொரு குடிமகனும் அவனது கடமைகளை மனப்பூர்வமாக நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறான். அரசியல் சட்டத்தையும், மற்றும் சட்டத்தையும் கடைபிடிப்பது; உழைப்புக் கட்டுப்பாட்டை அனுஷ்டிப்பது; பொது ஒழுங்கைப் பாதுகாப்பது; சமுதாய நேர்த்திகளை மதிப்பது; சட்டத்திற்கு ஏற்ப தியாகங்களைச் செய்வது; ராணுவ சேவைசெய்வது மற்றும் தாய் நாட்டைப் பாதுகாப்பது; இவை இக்கடமைகளில் அடங்கும்.

குடிமக்களின் உரிமைகளும், கடமைகளும் ஒன்றுபட்டவையாகவும், பிரிக்க முடியாதவையாகவும் உள்ளன. கடமைகள் இல்லாத உரிமைகள் பற்றி எப்படி நினைத்துப்பார்க்க முடியாதோ, அதே போல் உரிமைகள் இல்லாத கடமைகளும் நினைத்துப் பார்க்க முடியாதவையாக உள்ளன. ஒவ்வொரு குடிமகனும் அவனது உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதற்கு உரிமை பெற்றிருக்கிறான்; ஆனால் அவனது கடமைகளை மனசாட்சி பூர்வமாக நிறைவேற்றுவதற்கும் அவன் கடன்பட்டிருக்கிறான்.

(3) நட்புறவின் அடிப்படையிலும், சமத்துவத்தின் அடிப்படையிலும் சகல தேசிய இனங்களும் ஒன்று மற்றொன்றோடு ஒத்துழைத்து உதவி செய்ய வேண்டும் என்று அரசியல் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. சுய ஆட்சிக்கான தேசிய சிறுபான்மையோரின் உரிமைகளும் மற்றும் தாய் நாட்டின் தேசிய நிர்மாணத்திற்கு இணக்கமான முறையில், அவர்களது சொந்த தேசிய இனங்களின் அரசியல், பொருளதார மற்றும் கலாச்சார

அபிவிருத்திக்கான உரிமைகளும் பாதுகாக்கப்படும்.

பொதுக்கோட்பாடுகளின் மூன்றாவது விதி சகல தேசிய இனங்களும் சமமானவை என்று வரையறுத்துக் கூறுகிறது. எந்த தேசிய இனத்திற்கு எதிரான வித்தியாசப் படுத்தலும், அல்லது எந்த தேசிய இனமும் ஒடுக்கப்படுவதும் மற்றும் தேசிய இனங்களின் ஒற்றுமையை அலட்சியம் செய்யும் நடவடிக்கைகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

சீன மக்கள் குடியரசு நிலை நிறுத்தப்பட்ட பிறகு, நாட்டில் உள்ள சகல தேசிய இனங்களும் சுதந்திரமான மற்றும் சமத்துவமான தேசங்களின் ஒரு மாபெரும் குடும்பமாக ஒருமைப் படுத்தப்பட்டுள்ளன. அவற்றிற்கு இடையே புதிய நட்புறவுகளும், ஒத்துழைப்பு உறவுகளும் நிலை நாட்டப்பட்டுள்ளன. இந்தத் துறையில் கிடைத்துள்ள வெற்றிகள் அரசியல் சட்டத்தில் பிரதிபலித்துள்ளன. அரசியல் கொள்கை (Preamble) அதனுடைய முன்னுரையில் பின்வருமாறு கூறுகிறது :

"சீனாவின் தேசிய இனங்களின் இந்த ஒற்றுமை மேலும் தொடர்ந்து பலமடையும். ஏனெனில், அந்த ஒற்றுமை அவற்றிற்கு இடையே உள்ள, எப்பொழுதும் வளர்ந்து கொண்டிருக்கும், நட்புறவின் மீதும் பரஸ்பர உதவியின் மீதும் நிலை நாட்டப்பட்டுள்ளன. மற்றும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தின் மீதும் தேசிய இனங்களுக்கு உள்ளே இருக்கும் மக்களின் பொது எதிரிகளுக்கு எதிரான போராட்டத்தின் மீதும், மற்றும் ஆதிக்க தேசிய இனவெறிவாதம் மற்றும் ஸ்தல தேசியம் ஆகியவற்றிற்கு எதிரான போராட்டத்தின் மீதும் நிலைநாட்டப்பட்டுள்ளது."

சமத்துவத்தின் அடிப்படையில் தேசிய இனங்களுக்கு இடையே இருக்கும் நட்புறவு, பரஸ்பர உதவி மற்றும் ஒத்துழைப்பினை அரசியல் சட்டம் உத்திரவாதம் செய்கிறது.

அரசியல் சட்டத்தின் இரண்டாவது அத்தியாயத்தின் ஐந்தாவது பிரிவு தேசிய சிறுபான்மையினர்களுக்கு பிரதேச ஆட்சிக்கு வகை செய்கிறது. அதாவது, சுய ஆட்சி பெற்ற பிரதேசங்கள் அல்லது தேசிய சிறுபான்மையோர்கள் இறுக்கமான சமுதாயங்களாக வாழும் ஏரியாக்களில் சுய ஆட்சி பெற்ற கிராமப்புறங்களை ஸ்தாபிப்பதற்கும் மற்றும் சுய அரசாங்க உறுப்புகளை ஏற்பாடு செய்வதற்கும் வகை செய்கிறது; அப்படி செய்வதனால், இத்தகைய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் அரசியல் சட்டத்தினால் வரையறுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்

வரம்புகளுக்குள் அவர்களது சுய ஆட்சி உரிமையைப் பிரயோகிக்கலாம். மற்றும் அவர்களுக்கு ஏற்புடைய நடவடிக்கைகளாலும் அவர்களுக்கே உரித்தான தேசிய குணாசதியங்களுக்கு ஏற்புடைய முறையில் அவர்களது அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார அபிவிருத்தியை வளர்த்துக் கொள்ளவும் செய்யலாம்.

நாட்டிற்குள் இருக்கும் சகல தேசிய இனங்களின் இறுக்கமான ஒற்றுமை, மாறிச்செல்லும் கால கட்டத்தில், நாட்டின் அடிப்படையான கடமையை நிறைவேற்றுவதற்கு முக்கியமானதொரு நிபந்தனையாக உள்ளது என்று அரசியல் சட்டத்தின் முன்னுரையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பல்வேறு தேசிய இனங்களுக்கு இடையே நட்புறவு, பரஸ்பர உதவி மற்றும் கூட்டுறவு ஆகியவற்றின் அபிவிருத்தியும், கெட்டிப்படுத்தலும் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை மேலும் பலப்படுத்தி சோஷலிச லட்சியத்தை முன்னோக்கி கொண்டுச் செல்லும்.

ஒரு சமுதாயத்தின் மேலமைப்பு, அதனுடைய பொருளாதார அடித்தளத்தின் ஒரு விளைபொருளாக இருக்கிறது என்று மார்க்சிய-லெனினியம் போதிக்கிறது. ஆனால் அது ஒரு முறை அமைக்கப்பட்டு விட்டால், அது பொருளாதார அடித்தளத்தின் மீது எதிர் செயல்பட்டு அதன் கூடுதலான அபிவிருத்தியை உண்டாக்க முடியும் என்றும் மார்க்சிய-லெனினியம் போதிக்கிறது ஒரு நாட்டின் அரசியல் சட்டம் மேலமைப்பின் முக்கியமானதொரு உருவமாக உள்ளது; இந்த மேலமைப்பு நிலைநாட்டப்பட்டிருக்கும் பொருளாதார அடித்தளத்தைத் தீவிரமாக பாதுகாத்து அபிவிருத்தி செய்கிறது. அதனால்தான், சீனமக்கள் குடியரசின் அரசியல் சட்டம், சோஷலிசத்தை நிர்மாணிப்பதற்கான போராட்டத்திலும் மற்றும் மக்களின் இனபமானதொரு வாழ்விற்கான போராட்டத்திலும் மிகமிக சக்திவாய்ந்ததொரு ஆயுதமாக மாறி உள்ளது.

தேசிய மக்கள் காங்கிரசில், சீனமக்களின் மாபெரும் தலைவர் தோழர் மாசே-துங், சீனமக்கள் குடியரசின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்; தோழர்கள் லியூசாவோ-சி சுஎன்-லாய், சுடே, சென்யுன், மற்றும் பல்வேறு தேசிய இனங்கள், ஜனநாயக வர்க்கங்கள் மற்றும் ஜனநாயக கட்சிகள் ஆகியவற்றின் இதர தலைமை தாங்கும் உறுப்பினர்களும் அரசாங்கத்தில் முக்கியமான தலைமை பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் அல்லது ஒதுக்கீடு செய்யப்பட்டார்கள்.

### 3. சோஷலிச புரட்சியில் நாடு தழுவிய எழுச்சி.

1955-ஆம் ஆண்டின் மழை காலமும், 1956-ஆம் ஆண்டின் முதல் பாதியும் சோஷலிச புரட்சியின் ஒரு எழுச்சியைக் கண்ணுற்றன. இந்த சோஷலிச புரட்சி நாட்டுப் புறத்தில் முதலில் தோன்றிற்று.

நாட்டின் தொழில் அபிவிருத்தியின் துரிதமான வேகம் விவசாயத்தில் முக்கியமானதொரு வேகத்தை அறைகூவி அழைத்தது. ஏனெனில், சோஷலிச தொழில் மயமாக்குதல் விவசாய ஒத்துழைப்பைச் சார்ந்திராமல் நிறைவேற்றப்பட முடியாது. ஆகவே, சோஷலிசத் தொழில் மயமாக்குதலோடு தேசத்தின் விவசாய ஒத்துழைப்பை ஒருங்கிணைப்பதற்கானதொரு கொள்கை கையாளப்பட வேண்டியிருந்தது. ஐம்பது கோடிக்கும் அதிகமான விவசாயிகள் சோஷலிச நிர்மாணத்தில் பங்குகொள்வதற்கு திரட்டப்படாமல் இருந்தால், தானிய உற்பத்தியிலும் தொழிலுக்கான மூலப்பொருட்களின் உற்பத்தியிலும் ஒரு இடைவெளி இருந்திருக்கும். மற்றும் நாட்டின் தொழில் மயமாதல், கஷ்டங்களுக்குள் ஓடிச் சென்றிருக்கும்.

விவசாய ஒத்துழைப்பின் உயர்ந்த அலை ஆரம்பமாவதற்கு முன்பு, விவசாயிகளில் பெரும்பாலோர் சோஷலிச பாதையை மேற்கொள்வதில் ஏற்கனவே முன்முயற்சியை வெளிப்படுத்தி இருந்தார்கள். முதலாவதாக, பரவலான விவசாய வெகு ஜனங்களின் வாழ்க்கை விவசாய சீர்திருத்தற்குப் பிறகு சற்று அபிவிருத்தி அடைந்திருந்த அதே சமயத்தில், அவர்களிடையே இன்னும் பலர் பயிர் செய்யப்பட்ட நிலத்தின் பற்றாக்குறையின் காரணமாகவும், அடிக்கடி ஏற்பட்ட இயற்கையின் சேதங்களின் காரணமாகவும், விவசாய முறைகளின் பின் தங்கிய நிலைமை முதலியவற்றின் காரணமாகவும் வசதியற்றவர்களாக இருந்தார்கள். விவசாயிகளில் மிகப் பெரும்பான்மையோர் சோஷலிச பாதையை மேற் கொள்ளுவதற்கு மிகவும் கூர்மையான கவனத்தோடு ஏன் இருந்தார்கள் என்பதனை இது விளக்கிக் கூறுகிறது. இரண்டாவதாக, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் திசைவழியின் கீழ், நாட்டின் தேசிய பொருளாதாரம் பிரம்மாண்டமான முன்னேற்றங்களைச் செய்துக் கொண்டிருந்தது. மிகவும் விசேஷமாக சோஷலிச தொழில் மயமாக்குதல் பிரம்மாண்டமான முன்னேற்றங்களைச் செய்துக் கொண்டிருந்தது. அதுவும்கூட விவசாய கூட்டுறவிற்கு ஒரு உந்துதலைக் கொடுத்திருந்தது மூன்றாவதாக, பாஸ்பர உதவிக்காகவும் கூட்டுறவிற்காகவு

மான இயக்கம் ஏற்கனவே பல ஆண்டுகளாக தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. பல்வேறு இடங்களில் நிலை நாட்டப்பட்டிருந்த பல கூட்டுறவு ஸ்தாபனங்கள் உற்பத்தி அதிகரிப்பில் அவற்றின் மேன்மை தன்மையை நிருபணம் செய்துகாட்டியிருந்தன. மற்றும் விவசாயிகளின் பெரும்பகுதியோரின் பாராட்டுதலையும் வென்று பெற்றிருந்தது. நாடு முழுவதிலும் பரவிக் கொண்டிருந்த பரஸ்பர உதவிக்காகவும் கூட்டுறவிற்காகவுமான இயக்கம், கூட்டுறவு ஸ்தாபனங்களின் அபிவிருத்திக்கான ஒரு ஸ்தாபன அடிப்படையை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. இத்தகைய கூட்டுறவு ஸ்தானங்களை ஏற்பாடு செய்வதில், விவசாயிகள் மகத்தான உற்சாகத்தை வெளிப்படுத்தினார்கள். சில சமயங்களில் தலைமைடயிமிருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ளாமலேயே, தன்னெழுச்சியாக இத்தகைய கூட்டுறவு ஸ்தானங்கள் முன்னேறிக் கொண்டிருந்தன. விவசாய கூட்டுறவின் எழுச்சியைச் சாத்தியமாகச் செய்த புற நிலைமைகள் இத்தகையதாக இருந்தன.

எனினும், விவசாய கூட்டுறவின் இந்த பிரச்சனையில், கட்சியில் சில வலதுசாரி கருத்துக்கள் இருந்தன. இக்கருத்துக்கள் சோஷலிச பாதையை மேற்கொள்ளுவதில் விவசாயிகளின் முன்கை எடுத்தலின் நம்பிக்கை இல்லாமையைக் காட்டிற்று; அல்லது கிராமப்புறத்தில், கட்சி தலைமையின் பலத்தில் நம்பிக்கை இல்லாமையைக் காட்டிற்று. இப்படிப்பட்ட பழமைமையான கருத்துக்களைக் கொண்டிருந்த உறுப்பினர்கள் சோஷலிச தொழில் மயமாக்குதலின் அபிவிருத்தியோடு தேசத்தின் விவசாய கூட்டுறவு பொருத்தமான தூரத்தில் போய்க் கொண்டிருக்க வேண்டும் என்று கோரிய கட்சியின் மத்தியக் கமிட்டியின் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்கு பதிலாக, விவசாய கூட்டுறவு, தொழில்மயமாக்குதலைக் காட்டிலும்மிகவும் மெதுவானதொரு அளவில் அபிவிருத்திச்செய்யப்பட வேண்டும் என்று அவர்கள் கோரினார்கள். இந்த முறையில், அவர்களது நடைமுறை வேலையில் அவர்கள் 'இறுக்கமான' ஒரு பாதையைக் கையாண்டார்கள்; மற்றும் விவசாய உற்பத்தியாளர்களின் கூட்டுறவு ஸ்தாபனங்கள் பலவற்றையும் கலைக்கவும் செய்தார்கள்.

1955 ஜுலையில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாகாண நகர்மன்ற மற்றும் சுய ஆட்சி உரிமைப்பெற்ற பிரதேச கமிட்டிகளின் செயலாளர்களின் ஒரு மாநாட்டில் ''விவசாய கூட்டுறவு பற்றிய பிரச்சினை'' என்ற தலைப்பில் கொடுக்கப்பட்ட

அவரது அறிக்கையில், தோழர் மாசே-துங் இந்த வகைப்பட்ட வலதுசாரி தவறான கருத்துக்களையும் மற்றும் செயல்களையும் அலசி பார்க்கும் விரிவானதொரு விமர்சனத்திற்கு உட்படுத்தி, விவசாய கூட்டுறவு இயக்கத்தின் அபிவிருத்திக்கான சரியான் கொள்கையையும் முறையையும் வகுத்துக் கொடுத்தார். இந்தக் கொள்கையும் முறையும் அக்டோபரில் கூடிய ஏழாவது மத்தியக் கமிட்டியின் ஆறாவது விரிவடைந்த கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, கட்சியின் முடிவுகளாக எழுதப்பட்டன.

விவசாயத்தில், கூட்டுறவு இயக்கத்தின் அபிவிருத்திக்கான கொள்கை சம்பந்தமாக, விரிவான திட்டமிடுதலும், மிக அதிக மான சுறுசுறுப்பான தலைமையும் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தது. விரிவான திட்டமிடுதலை நடைமுறைக்குள் கொண்டு வருவதற்கு கட்சியின் மத்தியக் கமிட்டி நாட்டை மூன்று வெவ்வேறு வகைப்பட்ட பிரதேசங்களாகப் பிரித்தது. முதல் பிரதேசம், ஒப்பு நோக்கிப் பார்க்கும் பொழுது, பரஸ்பர உதவி மற்றும் கூட்டுறவு இயக்கத்தின் அபிவிருத்தி, முன்னேறி இருந்த பிரதேசமாகும்; இரண்டாவது பிரதேசம், அப்பொழுதுதான் இயக்கம் அபிவிருத்தி அடைய ஆரம்பித்திருந்த பிரதேசமாகும்; மற்றும் மூன்றாவது பிரதேசம், இயக்கம் சற்று பலவீனமாக இருந்த பிரதேசம் ஆகும். இத்தகைய பிரதேசங்களுக்கு இடையே இருந்த வேறுபாடுகளில் கவனம் செலுத்தப்பட வேண்டியிருந்தது. மற்றும் கூட்டுறவு இயக்கத்தின் அபிவிருத்தியின் வேகம், பல்வேறு நிலைமைகளுக்கு இணக்கமாக்கப்பட வேண்டியும் இருந்தது.

தலைமயைப் பலப்படுத்துவதற்கு, கட்சியின் மத்தியக்கமிட்டி விவசாய கூட்டுறவு இயக்கத்தைத் தலைமை தாங்குவதில் அவர்களது முயற்சிகளைக் குவிக்கவேண்டுமென்று சகலமட்டங்களிலும் உள்ள ஸ்தல கட்சிக் கமிட்டிகளுக்கு அறிவுரை வழங்கிற்று. கிராமப்புற பிரச்சினைகளின் மாபெரும் முக்கியத்துவத்தை அவை உணரவேண்டியிருந்தது; மற்றும் கிராமப்புற வேலையில் தலைமை தாங்கும் கலையை நேர்மையாக அபிவிருத்தி செய்யவேண்டியும் இருந்தது.

விவசாய கூட்டுறவு இயக்கத்தின் அபிவிருத்திக்கான நடைமுறை சம்பந்தமான, ஏழை விவசாயிகள் மற்றும் புதியமத்தியதர விவசாயிகளின் மிகவும் கீழ்த்தட்டு பகுதி மற்றும் பழைய நடுத்தர விவசாயிகளின்[3] மிகவும் கீழ்த்தட்டு பகுதியிடம் இருந்து எடுக்கப்படும் சில தீவிர ஊழியர்கள் உட்பட, ஊழியர்களைக்

கொண்ட பலமானதொரு அணுமையம் இருக்கவேண்டியிருந்தது. பின்வரும் முறையில், விவசாய வெகுஜனங்கள் ஸ்தாபனரீதியாக திரட்டப்பட வேண்டியிருந்தது. முதலாவதாக, முழுமையான பேச்சும், விவாதமும்; பிறகு அவர்களது அரசியல் உணர்வின் மட்டத்திற்கு ஏற்ப குழுக்களாகப்பிரித்து, அக்குழுக்கள் கூட்டுறவு ஸ்தாபனங்களை ஏற்படுத்தும் அல்லது ஏற்கனவே இருந்து வரும் கூட்டுறவு ஸ்தாபனங்களை ஏற்றுக்கொள்ளும். தற்சமயத்திற்கு ஒரு கூட்டுறவு ஸ்தாபனத்தில் சேர்வதற்கு ஒரு விருப்பம் இல்லாமல் இருப்பவர்கள், வெளியே இருப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். கூட்டுறவு ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்ட பொழுது, பணக்கார நடுத்தர விவசாயிகள் தங்களிடைய சொந்த விருப்பப்படி உண்மையிலேயே சேர விரும்பியவர்களை தவிர — தற்சமயத்திற்கு சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை; எல்லாவற்றிற்கும் மேலாக, மிகச்சிறிதளவேனும் நிர்ப்பந்திக்கப்படுவதும் இல்லை. அவர்கள் கூட்டுறவு ஸ்தாபனத்தில் சேர்ந்திருக்கிறார்களோ அல்லது இல்லையோ, நடுத்தர விவசாயிகளோடு நல்ல உறவுகள் நிலைநாட்டப்பட்டிருக்கப்பட வேண்டும். மற்றும் அவர்களது நலன்கள் ஒருபொழுதும் நாசமாக்கப்பட மாட்டாது.

கூட்டுறவு ஸ்தாபனங்கள் அமைக்கப்படுவதற்கு முன்பு, வெகுஜனங்களிடையே சித்தாந்த ரீதியானதொரு அடித்தளத்தைப் போடுவதிலும் மற்றும் ஸ்தாபன விஷயத்திலும் ஊழியர்களின் விஷயத்திலும் தயாரிப்புகள் செய்யப்பட வேண்டியிருந்தன. கூட்டுறவு ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டவுடன், கண்காணிக்கும் வேலையும் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது. ஆண்டொன்றுக்கு ஒரே முறையல்லாமல் இரண்டு அல்லது மூன்று முறைகள் கண்காணிக்கப்பட வேண்டியிருந்தன. அப்படி செய்ததினால், அவை சீராக அபிவிருத்தி அடைந்ததாகவும் கெட்டிப்பட்டதாகவும் இருக்கும். ஒரு கூட்டுறவு ஸ்தாபனத்தை அமைக்கும் பொழுதும், அல்லது கண்காணிக்கும் பொழுதும், உறுப்பினர்களின் தனிச் சொத்து (நிலம், உழுபடை பிராணிகள் மற்றும் விவசாயக் கருவிகள்) கூட்டுறவு ஸ்தாபனத்தின் அபிவிருத்தியும், கெட்டிப்படுதலும் பலனடையத்தக்கதொரு வழியில் கண்காணிக்கப்பட்டது.

விவசாய உற்பத்தியாளர்களின் கூட்டுறவு ஸ்தாபனங்கள், உற்பத்தி திட்டங்கள், உழைப்பை ஸ்தாபன ரீதியாக ஏற்பாடு செய்தல், விவசாய உற்பத்தி சக்திகளின் அபிவிருத்தியை உறுதிப்

படுத்துவதற்கு நிதி நிர்வாகம் மற்றும் சித்தாந்த வேலை ஆகியவை சம்மந்தமாக தொடர்ச்சியான நடவடிக்கைகளை உருவாக்க வேண்டி இருந்தன.

ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில், கூட்டுறவு பெருமளவிற்கு வெற்றி பெற்றிருந்தபொழுது மட்டுமே மற்றும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஏற்கனவே கெட்டிபட்டிருந்தபோது மட்டுமே, தங்களுடைய சுரண்டலை நீண்டகாலமாக விட்டுவிட்ட முன்னாளைய நிலச்சுவான்தார்களும், பணக்கார விவசாயிகளும் மற்றும் நேர்மையான உழைப்பில் ஈடுபட்டிருந்த முன்னாளைய நிலச்சுவான்தார்களும் பணக்கார விவசாயிகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார்கள்; மற்றும் இது தனித்தனியான கோஷ்டிகளிலும் பல்வேறு காலகட்டங்களிலும் மற்றும் திட்ட வட்டமான நிலைமைகளின் கீழும் செய்யப்படவிருந்தது.

வலதுசாரி தவறான கருத்துக்கள் ஒடுக்கப்பட்டபிறகு, கட்சியின் சரியான கொள்கையும் நடைமுறையும் வெகுஜனங் களைப் பற்றிப்பிடித்தது. ஒரு சில மாதங்களுக்குள் விவசாய கூட்டுறவில், நாட்டுப்புறம் உயர்வானதொரு அலையைக் கண்ணுற்றது. 1956 ஜூனில், சீன விவசாயக் குடும்பங்களில் 91.7% கூட்டுறவு ஸ்தாபனங்களில் சேர்ந்திருந்தார்கள். மற்றும் அவர்களின் மிகமிக பெரும்பகுதி முன்னேறிய கூட்டுறவு ஸ்தாபனங்களில் சேர்ந்திருந்தார்கள். இயக்கத்தின் பரந்த விஸ்தரிப்பில் கூட்டுறவு ஸ்தாபனங்களில், சுறுசுறுப்பாக சேர்ந்த ஏழை விவசாயிகளின் பரவலான வெகுஜனங்கள் மட்டுமின்றி பல நடுத்தர விவசாயிகளும் இருந்தார்கள். தனிப்பட்ட விவசாய குடும்பங்களோடு மட்டும் இது நின்றுவிடவில்லை. மற்றும் முழுமையான கிராமங்களிலும் மாவட்டங்களிலும், பொதுவாக, கூட்டுறவு ஸ்தாபனங்களில் சேர்வதற்கான கோரிக்கை அடிக்கடி வைக்கப்பட்டது. மற்றும் ஏழை விவசாயிகள், கீழ்தட்டு நடுத்தர விவாசயிகள் ஆகியோரின் முழுமையான பகுதிகளாலும் கூட்டுறவு ஸ்தாபனங்களில் சேர்வதற்கான கோரிக்கை வைக்கப் பட்டது. கூட்டுறவு இயக்கம் முன் கண்டிராத அளவிற்கு உயர்ந்து வளர்ந்தது.

விவசாய கூட்டுறவின் எழுச்சி ஏற்பட்டதோடு, நகரத்தில் இருந்த தனியார் முதலாளித்துவ தொழிலிலும் வியாபாரத் திலும் சோஷலிச மாற்றமடைதலில் உயர்வானதொரு அலை வந்தது. அவர்கள் சோஷலிச மாற்றமடைதலை மேலும் ஒப்புக் கொண்டு, அவர்களது நலனை நாட்டின்நலன்களோடு இணைத்த

பொழுது மட்டுமே அவர்களது தலைவிதியின் எஜமானர்களாக மாற முடியும் என்ற உண்மையை பூர்சுவா வர்க்கத்திற்கு அந்த நாளின் நிகழ்ச்சிகள் கொண்டு வந்தன. நிலைமை பின்வருமாறு அபிவிருத்தி அடைந்திருந்தது.

(1) 1953-இல் இருந்து, தானியம், மற்றும் இதர முக்கிய மான விவசாய உற்பத்தி பொருட்களின் திட்டமிடப்பட்ட கொள்முதலையும், சப்ளையையும் அரசு நிறைவேற்றி இருந்தது; மற்றும் அவற்றிற்கு நியாயமான விலைகளையும் நிர்ணயித்து, இத்தகைய சரக்குகளில் முதலாளித்துவ லாப சூதாட்டத்தை ஒழித்துக் கட்டியது.

(2) நாட்டின் தொழில் மயமாக்குதலில் ஏற்பட்டுருந்த அபரிமிதமான முன்னேற்றம், பொருளாதாரத்தின் சோஷலிச துறையைத் துரிதமாக விஸ்தரிப்பதைச் சாத்தியமாக்கிற்று. அதே சமயத்தில், ஒட்டு மொத்தமாக தேசிய பொருளாதாரத்தில் முதலாளித்துவ துறையின் விகிதாச்சாரம் ஒவ்வொரு நாளும் மிகவும் சிறியதாக மாறிக் கொண்டு வந்தது.

(3) விவசாய கூட்டுறவு இயக்கத்தின் அபிவிருத்தியோடு, பரவலான விவசாய வெகுஜனங்கள், சோஷலிச பாதைக்காக முதலாளித்துவ பாதையை இறுதியாக கைவிட்டிருந்தார்கள். இத்தகைய சூழ்நிலைமைகளின் கீழ், முதலாளித்துவ தொழில் மற்றும் வியாபாரத்தின் சோஷலிச மாற்றமடைதலின் உயர்ந்த அலை 1956 ஆரம்பத்தில் உருவாகி இருந்தது.

முதலாளித்துவ தொழில் மற்றும் வியாபாரத்தின் சோஷலிச மாற்றமடைதலின் முதல் சில ஆண்டுகளில், பொருள்களின் உற்பத்திக்காகவும் பதனிடுவதற்காகவுமான அரசாங்க ஒப்பந்த புள்ளிகளை ஏற்றுக்கொண்டதினால், மிகப் பெரும்பாலான தனியார் நிறுவனங்கள் அரசு-முதலாளித்துவத்தின் இடைத் தட்டு உருவத்தை மேற்கொண்டன. 1954 ஆரம்பத்தில் இருந்து, கூட்டு அரசு - தனியார் நிறுவனங்களின்[4] உருவத்தின் மூலம், முதலாளித்துவ தொழிலை, அரசு, முறையாக மாற்ற மடையச் செய்திருந்தது. மிகப்பெரும்பாலான தனியார் நிறுவனங்கள் இந்த முறையில், கூட்டு நிறுவனங்களாக மாறி இருந்தன. ஆனால் இது இன்னும் போதுமானதாக இல்லை. தனிப்பட்ட தொழிற்சாலைகள் மற்றும் கடைகள் ஆகியவை இப்பொழுது மாற்றமடைந்திருந்தன என்பதோடு மட்டுமின்றி தொழில், வர்த்தகம் ஆகியவற்றின் மொத்த வியாபாரங்களும் மாற்றமடைந்திருந்தது. கூட்டு அரசு - தனியார் உடைமையின்

கீழ் மொத்த வர்த்தகம் இப்படி வைக்கப்பட்டிருந்தது, முதலாளித்துவ தொழில் மற்றும் வியாபாரத்தின் சோஷலிச மாற்றமடைதலில் ஒரு புதிய உருவமாக இருந்தது. முதலவதாக, மொத்த வியாபாரங்கள் கூட்டு அரசு-தனியார் தொழில் நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டது. தனிப்பட்ட தொழிற்சாலையும் கடைகளையும் காட்டிலும் மேம்பட்டதாக இருந்தது. ஏனெனில்,, தொழிற்சாலைகளுக்கு இடையே இருந்த எல்லைகளை வெட்டிவிட்டு, அவற்றில் பல தொழிற்சாலைகளை ஒரே நிறுவனமாக இணைத்தது; அதன் விளைவாக, ஒன்றுபட்ட திட்டமிடுதல் மற்றும் ஒட்டு மொத்தமான ஏற்பாடு ஆகிய அரசின் கொள்கையை இப்படிபட்டதொரு நிறுவனத்தின் உற்பத்திக்கு பிரயோகிக்கப்பட முடியும். சோஷலிச கோட்பாட்டிற்கு ஏற்புடைய முறையில், மொத்த வியாபாரங்களை மாற்றமடைய செய்வதை நிறைவேற்றுவதில், உழைக்கும் சக்தி, தொழில் நுட்ப ஊழியர்களும், சாதனமும், தளவாடங்களும், பல்வேறு நிறுவனங்களின் நிதிகளும் ஊழியர்களும் ஒன்றுபட்டதொரு முறையில் பங்கீடு செய்யப்பட்டு, பகுத்தறிவுக்கு ஏற்ற முறையில் பயன்படுத்தப்பட முடியும். அப்படி செய்வதனால் உழைப்பு உற்பத்தித் திறனை உயர்த்த முடியும். சுருக்கமாக சொன்னால், மொத்த வியாபாரங்களைக்கூட்டு அரசு—தனியார் நிறுவனங்களுக்கு மாற்றமடையச் செய்தல், அரசு முதலாளித்துவத்தின் மிக மிக உயர்ந்த உருவமாக இருந்தது.

இரண்டாவதாக, கூட்டு அரசு-தனியார் உடமையின் உருவத்தின் அபிவிருத்தியினால், உரிமை விலைப்பண முறை (பரிகார முறை) மாற்றப்பட்டது. மொத்த வியாபாரங்கள் கூட்டு அரசு-தனியார் நிறுவனங்களுக்கு மாற்றமடைவதற்கு முன்பு, உரிமை விலைப்பணமுறை (method of redemption) விநியோக உருவத்தை எடுத்திருந்தது. மாற்றமடைந்த பிறகு, அது நிர்ணயமான வட்டியின் உருவத்தை எடுத்தது. கூட்டு அரசு-தனியார் நிர்வாக காலகட்டத்தில், முதலாளிகளின் தனிப்பட்ட பங்குகளின் வட்டி திட்டவட்டமானதொரு விகிதத்தில் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1956 பிப்ரவரி 8-இல், வருடாந்திர வட்டி 1 முதல் 6 சதவீதமாக இருக்க வேண்டுமென்று அரசு சபை (State Council) வரையறுத்தது. ஜூன் 18-இல் அரசு சபை வருடாந்திர வட்டியை ஒரேமாதிரியாக 5 சதவீதமாக நிர்ணயித்தது. நிர்ணயமான வட்டி அறிமுகம் செய்யப்பட்டதால், தொழிலில் பணத்தைச் சம்பாத்தியம் செய்தாலும் அல்லது இழந்தாலும்,

முதலாளி ஒரு திட்டவட்டமான தொகையை டிவிடண்டாக (லாப்பங்கிடு) பெறுவான். இந்த வழியில், தேசியமயமாக்குவதற்கு நிலைமைகள் பக்குவமாகும் வரையிலும், அவர்களது நிறுவனங்களை வாங்குவதற்கு ஒரு விலையாக முதலாளிகளுக்கு அரசு ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்டத் தொகையை (லாப பங்கீடுகளை) கொடுக்கும். மறுபுறத்தில், வேலை செய்யக்கூடிய முதலாளிகளும் மற்றும் அவர்களது சகாக்களும் அரசியல் பதவிகளுக்கு ஒதுக்கப்படுவார்கள். மற்றும் வேலை செய்ய முடியாதவர்களுக்கு, பொருத்தமான ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. இது விலைக்கு வாங்குவதின் அவசியமானதொரு பகுதியாக அமைந்தது.

நிர்ணயமான வட்டிமுறை தொழிலாளி வர்க்கத்தை முதலாளிகளின் சுரண்டலின்மீது கடுமையான கட்டுப்படுத்தலைத் திணித்தது இந்தமுறையில், மேற்கூறிய நிர்ணய வட்டிமுறையைக் கையாண்டிருந்தக் கூட்டு அரசு-தனியார் நிறுவனங்களில், உற்பத்தி உறவுகளில் ஆழமான மாற்றம் இருந்தது. கூட்டு நிறுவனங்களில் முதலாளிகளின் உடமை அவர்கள் பெற்றுவந்த நிர்ணயமான வட்டியில் மட்டுமே அதனை வெளிப்படுத்திற்று. கூட்டு நிறுவனங்களின் நேரிடையான கட்டுப்பாட்டை அவர்கள் மேற்கொள்ள முடியவில்லை. உற்பத்தி சாதனங்கள் அரசின் நேரிடையான கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. முதலாளி என்ற முறையில், தொழில் நிறுவனங்களின் நிர்வாகத்தில் முதலாளி பங்கெடுக்கவில்லை, ஆனால் அரசின் தலைமையின்கீழ் சாதாரண ஊழியராக முதலாளி பங்கெடுத்தார்.

நிறுவனங்களின் உற்பத்திச் சாதனங்கள் அரசின் நேரடியான கட்டுப்பாடு, சோஷலிச கோட்பாடுகளுக்கு ஏற்புடைய முறையில், நிறுவனங்களின் நிர்வாகமும் மற்றும் திட்டவட்டமானதொரு விகிதத்தில் முதலாளிகள் லாபப்பங்கீடுகளை நிர்ணயிப்பதும், இந்த வகைப்பட்ட நிறுவனங்களை அரை சோஷலிசத்தன்மை வாய்ந்ததாகச் செய்தன. முதலாளித்துவ தொழிலும் வியாபாரமும் இந்த தீர்மானமான நடவடிக்கையை எடுத்த போது, சோஷலிசமும் முதலாளித்துவத்தை அகற்றியிருந்தது என்று அர்த்தமாயிற்று.

மூன்றாவதாக, மொத்த வியாபாரங்களையும் கூட்டு அரசு-தனியார் உடமையின்கீழ் வைத்த பிறகு, சில பொருளாதார மற்றும் அரசியல் கடமைகளை நிறைவேற்றுவதற்கு விசேஷமான அரசுடமையாக்கப்பட்ட கம்பெனிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அவற்றின் பொருளாதார கடமை, சொத்துக்கள் பற்றிய ஒரு

பட்டியலைத் தயாரிப்பதும் மற்றும் நிறுவனங்களைப் புனரமைப்பதுமாக இருந்தது. 1956 பிப்ரவரி 8-இல், அரசு சபையால் கொடுக்கப்பட்ட ஒரு கட்டளையில் கூட்டு அரசு-தனியார் நிறுவனங்களின் தற்போதைய சொத்துக்களின் பட்டியலும் மதிப்பீடும் நியாயமான நேர்மையான கோட்பாடுகளுக்கு ஏற்ப செய்யப்பட வேண்டுமென்று வரையறுக்கப்பட்டிருந்தது. தனியார் நிறுவனங்கள், கூட்டு அரசு-தனியார் நிறுவனங்களாக மாறுவதற்கு ஒப்புதலைப் பெற்றிருந்த பொழுது, உற்பத்தி மற்றும் நிர்வாகத்தின் பூர்வாங்கமான முறையை மாற்றுவதற்கு முன்பு போதுமான தயாரிப்புகள் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்றும் மேலும் வரையறுத்துக் கூறப்பட்டிருந்தது. கம்பெனிகளின் விசேஷமான அரசியல் கடமை பூர்சுவா பேர்வழிகளை மீண்டும் வார்த்தெடுப்பதாக இருந்தது. முதலாளிகளின் பால் கல்வி கற்றுக்கொடுக்கும் உருப்படியானதொரு முறை கையாளப்பட்டது. அவர்கள் மார்க்சிய-லெனினியத்தைக் கற்று உணர்வதற்கு ஊக்குவிக்கப்பட்டார்கள். சமுதாய சீர்திருத்த இயக்கங்களில் பங்கெடுப்பதற்கும் மற்றும் அவர்களுக்கிடையே விமர்சனத்தையும், சுய விமர்சனத்தையும் நடைமுறை படுத்துவதற்கும் ஊக்குவிக்கப்பட்டார்கள். அப்படி செய்வதினால் தங்களுடைய சொந்த உழைப்பினால் வாழ்க்கை நடத்தும் உழைக்கும் மக்களின் கண்ணோட்டத்திற்கு, சுரண்டல்காரர்களின் கண்ணோட்டத்தில் இருந்து அவர்களது கண்ணோட்டத்தைப் படிப்படியாக மாற்றமடையச் செய்யப்பட்டார்கள்.

நிறுவனங்களின் மாற்றமடைதல், சித்தாந்த ரீதியான புனர் வார்த்தெடுத்தலோடு இணைக்கப்பட்டிருந்தது. நிறுவனங்கள் மாற்றமடையச் செய்யப்பட்டிருந்தபொழுது மட்டுமே பூர்சுவா பேர்வழிகள் முதலாளித்துவ நிர்வாகத்தின் தீமைகளையும் முதலாளித்துவ கட்டுப்பாட்டின் தீமைகளையும் உணர ஆரம்பிக்கிறார்கள். மேலும், சித்தாந்த ரீதியான மீண்டும் வார்த்தெடுத்தலுக்கு குறைவான எதுவும் அவர்களது சுரண்டல் கருத்துக்களைக் கைவிடும்படி செய்யாது. சுரண்டல்காரர்களாக இருப்பதில் இருந்து, தொழிலாளர்களாக மாறும்படி செய்யாது. மற்றும் நிறுவனங்களை மாற்றமடையச் செய்வதில், சுறுசுறுப்பாக சேரும்படி செய்யாது. வருங்கால தேசியமயமாக்கும் பாதையில் இருக்கும் தடைகளைக் குறுக்கும்படியும் செய்யாது.

தொழிலாளி வர்க்கத்தினால் பூர்சுவா வர்க்கத்தோடு நீண்டகால ஐக்கிய முன்னணி நிலைநாட்டப்பட்டிருப்பதன் விளைவாக,

மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தின் அதிகரித்துக் கொண்டிருக்கும் கெட்டிப்படுத்தலும், மற்றும் படிப்படியாக மாறுதலடையச் செய்வதும் விலைக்கு வாங்குவதுமான ஒரு கொள்கையைக் கட்சி கடைபிடிப்பதும் நிகழ்ச்சிகளின் பொதுவான போக்கும், சமாதானபூர்வமான மாற்றமடைதலைத் தேசிய பூர்சுவா வர்க்கம் ஏற்றுக் கொள்வதற்கு சாதகமாக இருந்தது.

1956 ஜனவரி ஆரம்பத்தில் இருந்து, நாட்டில் முதலாளித்துவ தொழில் மற்றும் வியாபாரத்தின் சோஷலிச மாற்றமடைதலுக்கான இயக்கம் வியப்படையத் தக்கதொரு வேகத்தில் முன்னேறி சென்றது. ஒரு சில மாதங்களுக்குள் நாடு முழுவதிலும் பெரு நகரங்களிலும், நடுத்தர நகரங்களிலும் சகல தனியார் தொழில் நிறுவனங்களும் வியாபார நிறுவனங்களும் கூட்டு அரசு-தனியார் நிறுவனங்களாக மாறி இருந்தன. மற்றும் இந்த ஏரியாக்களில் இருந்த சகல கைவினைத் தொழில்களும் கூட்டுறவு ஸ்தாபனங்களை உருவாக்கி இருந்தன. இந்த முறையில், நாட்டுப்புறத்தில் விவசாயத்தின் சோஷலிச மாற்றமடைதலின் எழுச்சியோடு, நாட்டின் மொத்த விவசாயக் குடும்பங்களில் 91 சதவீதம் அதிகமான குடுங்பங்கள், விவசாய உற்பத்தியாளர்களின் கூட்டுறவு ஸ்தாபனங்களில் சேர்ந்தார்கள். முதலாளித்துவ தொழில் மற்றும் வியாபாரம் ஆகியவற்றின் சோஷலிச மாற்றமடைதலின் உயர்ந்த அலையோடு மற்றும் தனியார் கைவினைத் தொழில்களின் சோஷலிச மாற்றமடைதலின் உயர்ந்த அலையோடும் பெருநகரங்களிலும் மற்றும் நடுத்தர நகரங்களிலும் இருந்த சகல தனியார் தொழிலும் வியாபாரமும் கூட்டு அரசு-தனியார் உடமையின்கீழ் வைக்கப்பட்டன. மற்றும் சகல தனியார் கைவினைத் தொழில்களும் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குள் ஸ்தாபன ரீதியாக அமைக்கப்பட்டன.

இத்தகைய மாபெரும் வெற்றிகளின் அர்த்தம் என்னவென்றால், சிறுவிவசாயப் பொருளாதாரம், நாட்டுப்புறத்தில் மறைந்த உடன், முதலாளித்துவம் நாட்டுப்புறத்தில் அதனுடைய அடித்தளத்தை இழந்துவிட்டது என்பதோடு மட்டுமின்றி, நகரங்களிலும் அது பெற்றிருந்த நிலையையும் இழந்துவிட்டது, என்பதேயாகும். உற்பத்தி சாதனங்களின் உடமையில் சோசலிசப் புரட்சி, பிரதானமாக நாட்டில் பூர்த்தியாக இருந்தது. இந்த சமாதானபூர்வமான முறைகளில், முதலாளித்துவத்தை ஒழித்துக் கட்டும் புரட்சி உருப்பெற்றிருந்தது. இந்த மாபெரும் காணிக்கை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினால் சமாதான பூர்வமான மாற்ற

மடைதலுக்கான மார்க்சிய - லெனினிய தத்துவத்தைப் பிரகாச மாக பிரயோகிப்பதற்கு ஒரு உதாரணமாக திகழ்ந்தது.

பொருளாதார அரங்கில் சோஷலிசப் புரட்சியின் அடிப்படை யான வெற்றி, புரட்சியின் பூர்த்தியை அர்த்தப்படுத்தவில்லை. இன்னும் குறைவாகச் சொன்னால், வர்க்கப் போராட்டம் முடிவுக்கு வந்திருந்தது என்று அதற்கு அர்த்தமல்ல. சோஷலிச புரட்சி வரலாற்றில், மிகமிக ஆழமான மற்றும் வெகுதூரம் செல்லக்கூடிய புரட்சியாகும்; அது அரசியல் ரீதியாகவும், பொரு ளாதார ரீதியாகவும் மற்றும் சித்தாந்த ரீதியாகவும் மிகமிக முழுமையான புரட்சியாகும். உடமை முறையில் ஏற்பட்ட மாற்றம் பூர்சுவா வர்க்கத்திற்கும் தொழிலாளி வர்க்கத்திற்கும் இடையே வர்க்கப் போராட்டத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவர வில்லை. 'இரண்டு பாதைகளுக்கும் இடையிலான போராட்டம், முதலாளித்துவப் பாதைக்கு எதிரான சோஷலிச பாதையின் போராட்டம், ஒரு நீண்டகால போராட்டமாக இருக்கிறது. அதனால்தான் பொருளாதார தொழிலில் சோஷலிசப் புரட்சி பூர்த்தியானதில் இருந்து,சோஷலிச அமைப்பைக் கெட்டிப்படுத்து வதற்காகவும் மற்றும் சோஷலிச புரட்சியின் முழுமையான வெற்றியைச் சித்திப்பெறச் செய்வதற்காகவும் அரசியல் மற்றும் சித்தாந்த அரங்கங்களில் முழுமையானதொரு சோஷலிசப்புரட்சி நிறைவேற்றப்படவேண்டியிருந்தது. மாறிச்செல்லும் காலக் கட்டம் முழுவதிலும், இது கட்சியின் வரலாற்று ரீதியான பெரும் பணியாக உள்ளது.

## அடிக்குறிப்புகள்

1. முந்திய அத்தியாயத்தின் அடிக்குறிப்புஎண் 4ஐப்பார்க்க.
2. சீன மக்கள் குடியரசின் தேர்தல் சட்டம், நகரியங்கள், பட்டிணங்கள், நகர்மன்ற மாவட்டங்கள் மற்றும் மாவட்டங்களாக பிரிக்கப்படாமலிருக்கும் நகர் மன்றங் கள் ஆகியவற்றின் அரசு அதிகாரத்தின் அடிப்படை யான மட்டத்தில், நேரடியான தேர்தல்களுக்கு வகை செய்கிறது; மற்றும் கிராமப்புற மட்டத்தில் இருந்து

மேல் மட்டங்களுக்கு மறைமுகமான தேர்தல்களுக்கும் வகை செய்கிறது.

3. பழைய நடுத்தர விவசாயிகள், விவசாய சீர்திருத்தத்திற்கு முன்பு நடுத்தர விவசாயிகளாக இருந்தவர்கள். புதிய நடுத்தர விவசாயிகள், விவசாய சீர்திருத்தத்திற்கு பிறகு நடுத்தர விவசாயிகளின் தரத்திற்கு உயர்ந்திருக்கும் விவசாயிகள்.

# நவ சீனப் புரட்சியின் வரலாறு

## ஹோ கான்-சி

*1919-ஆம் ஆண்டு நிகழ்ந்த மே 4-ஆம் தேதிய இயக்கத்திலிருந்து 1956-ஆம் ஆண்டின் முற்பகுதி வரையிலான காலப் பகுதியில் சீன மக்கள் மேற்கொண்ட புரட்சி நடவடிக்கைகளைப் பற்றிய விரிவான சித்திரம் இந்நூலில் கொடுக்கப் பட்டுள்ளது. ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், அதிகார வர்க்க முதலாளித்துவம் ஆகியவைகளுக்கு எதிராக, சீன மக்கள் எவ்வாறு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து நின்று போராடினார்கள் என்பதையும், புரட்சிகரமான மூன்று உள்நாட்டு யுத்தங்களையும், ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கு எதிரான யுத்தத்தையும் வெற்றிகரமாக நடத்தி முடித்த பின்பு, ஏகாதிபத்தியவாதிகள், கோமிங்டாங் ஆகியோரின் பிற்போக்குவாத ஆட்சியை எவ்வாறு தூக்கியெறிந்து சீன மக்கள் குடியரசை உருவாக்கினார்கள் என்பதையும் இந்நூல் விவரிக்கிறது. விடுதலைக்குப் பின்னர் தேசப் பொருளாதாரத்திற்கு உயிரூட்டப்பட்டதையும், விவசாயம், கைத்தொழில், தனியார் துறை, வியாபாரம் ஆகியவை சோஷலிசப் பாதைக்கு மாற்றப்பட்டதையும் குறிப்பிடுகிறது. பல்வேறு வரலாற்று காலகட்டங்களிலும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி எடுத்த கொள்கை நிலைப்பாடுகளை பற்றிய விரிவான செய்திகளும் சீனப் புரட்சியின் பிரத்தியேக தன்மைகளுக்கு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தலைவரான மாசே-துங்கும் மார்க்சிய-லெனினிய கொள்கை அடிப்படையில் வகுத்தளித்த நடைமுறை கொள்கைகள் இந்நூலின் உயிரோட்டமான பகுதியாக விளங்குகிறது.*

**சென்னை புக்ஸ்**
6 மேட்லி ரோடு
தி. நகர் சென்னை-600 017